ஆன்மீகம்

மகா... ...
பாரதம்... ...

எழுத்துச் சித்தர்

பாலகுமாரன்

வழங்குகிறார்

அடுத்த இதழ் முதல்...

மகாபாரதம்

ஒரு முன்னோட்டம்

நண்பர்களே,

ஒரு மர்ம நாவலை படிப்பது போலவோ, ஒரு காதல் கதையை படிப்பது போலவோ இதிகாசங்கள் எளிமையானவை அல்ல. குறிப்பாய் மகாபாரதம் என்கிற இந்த இதிகாசம் கடினமானது. பல பெயர்களும், பல இடங்களும் பல சம்பவங்களும் அதிகமாகப் புழங்கும் இதிகாசம் இது. வெறும் சுவாரஸ்யத்திற்காக எந்த நிகழ்வும் சொல்லப்படவில்லை.

மாறாக, ஒவ்வொரு அசைவும் நீதி நெறியை தன்னுள் கொண்டது. எனவே, பெயர்களை, இடங்களை நினைவில் வைத்துக்கொள்ளும் தன்மை தேவைப்படுகிறது.

இந்த என் எழுத்திற்கு ஆதரவாக ஸ்ரீசக்ரா பப்ளிகேஷன்ஸ் மகரிஷி ஸ்ரீவேத வியாஸ பகவானின் மகாபாரதம், வர்த்தமான பதிப்பகத்தின் வியாஸ பாரதம், பகவான் நாமா பப்ளிகேஷனின் மகாபாரதம் மூலம், திரு.சோ அவர்களின் மகாபாரதம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

இவருடைய பார்வையில் மகாபாரதம், அவருடைய எண்ணத்தில் மகாபாரதம் என்று எண்ணற்ற நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. நான் முடிந்தவரை மூலத்தை ஒட்டியே நடக்கிறேன். ஆனால், அதன் வசனங்கள் மிக நீண்டவை. இன்றைய பத்திரிகை உலகில் அவற்றை அடக்கி வைப்பது சிரமம்.

இது கடினமான பணி. இன்னும் இளம் வயதிலேயே நான் ஆரம்பித்திருக்க வேண்டும். இருப்பினும் இன்றைய என் மனோநிலை இதை எழுத உவப்பாய் இருக்கிறது. விவாதம் எளிது. விமர்சனம் சுலபம். என்ன சொல்கிறது என்பதை அறிந்து கொள்வதற்குத்தான் அமைதி தேவைப்படுகிறது.

பரத கண்டத்தின் மிகப்பெரிய பிரமாண்டமான வரலாற்றுச் சாயலை ஒரு துகளாக நான் நின்று அறிய முற்படுகிறேன். என் அறிதலின் முயற்சியே என் எழுத்து. உங்களுக்கும் அவ்விதமே ஆகட்டும்.

வாருங்கள், 50ம் பக்கம் போவோம்.

- பாலகுமாரன்

பாலகுமாரன்

“உங்களுக்கு நான் ஒரு கதை சொல்லட்டுமா?'' பரதகண்டத்தின் மிகச்சிறந்த காவியம் இப்படித்தான் துவங்குகிறது: ''உங்களுக்கு நான் ஒரு கதை சொல்லட்டுமா?''

நைமிசாரண்யம் என்ற இடத்தில் சௌனகர் என்ற ரிஷி மிகப்பெரிய யாகம் செய்து கொண்டிருந்தபோது, அன்றைய யாகத்தை முடித்துவிட்டு மற்ற எல்லா ரிஷிகளும் ஓய்வாக அமர்ந்திருந்த போது அவர்களுக்கு நடுவே வந்து நின்ற சூதர் என்ற முனிவர் பேச ஆரம்பித்தார். ''உங்களுக்கு நான் ஒரு கதை சொல்லட்டுமா.''

மகாபாரதம்

பரதகண்டம் கதை சொல்லிகளின் உலகம். தர்மத்தை அழுத்தமான வாக்கியங்களாக சொல்லியிருப்பினும் வேத விஷயமாக போற்றியிருப்பினும் எல்லோருக்கும் மனதில் பதியும் வண்ணம் அந்த தர்மத்தை கதைகளின் மூலம் சொன்னார்கள். இதிகாசம் என்றால் எங்கோ என்றோ நடந்தது என்று அர்த்தம். ஆக, இது வெறும் கற்பனை கதையாக இல்லாது ஏதோ ஒரு காலத்தில் எங்கோ சில மனிதர்களுடைய நடவடிக்கையால் ஏற்பட்ட விஷயங்கள் என்பதால் செய்திகள் தெள்ளத் தெளிவாக மனதில் பதிகின்றன.

அந்த முனிவரை ரிஷிகள் வரவேற்று நல்ல ஆசனம் கொடுத்து, சௌகரியமாக உட்காரவைத்து, ''எங்கிருந்து வருகிறீர்கள்? என்ன கதை சொல்லப் போகிறீர்கள்?'' என்று வினவினார்கள்.

நான், குருவம்சத்து அரசனான ஜனமேஜயன் நடத்திய சர்ப்ப யாகத்திலிருந்து வருகிறேன். அங்கிருந்து பல இடங்களுக்குப் போய்விட்டு இப்பொழுது இங்கு யாகம் நடப்பதை கேள்விப்பட்டு வந்திருக்கிறேன். நான் உங்களுக்கு மகான்களின் கதைகள் பற்றி சொல்லட்டுமா அல்லது மகாபாரதத்தைப் பற்றி சொல்லட்டுமா என்று வினவினார்.

''வியாஸரால் எழுதப்பட்டதும், நல்ல தர்ம நெறிகளை உள்ளடக்கியதும், வேத சம்பந்தம் உள்ளதும், சரித்திரத்தில் இடம் பெற்றதுமான மகாபாரதக் கதையை கேட்க விரும்புகிறோம். ஜனமேஜயன் சர்ப்ப யாகம் நடத்தியதாக கூறினீர்களே, அது என்ன விஷயம்?'' என்று ரிஷிகள் ஆவலாகக் கேட்டார்கள்.

"சத்ரியனை தண்டித்துவிட்டால் நீ உத்தமன் ஆகிவிடுவாயா? ஒரு தேசத்துக்கு சத்ரியன் எவ்வளவு முக்கியம் என்பதை நீ உணரவில்லையா? சத்ரியன் வலிமையுள்ளவனாக இருந்தால்தானே எதிரிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும்? மக்கள் பயமின்றி சௌக்கியமாக இருந்தால்தானே விவசாயம் போன்ற நல்ல விஷயங்கள் நடைபெறும்? அவை சிறந்த முறையில் நடைபெற்றால்தானே உணவுத் தட்டுப்பாடு இல்லாத உயர்ந்த நாகரிகம் வளரும். அப்படி இருந்தால்தானே மகான்களும் ரிஷிகளும் கொண்டாடப்படுவார்கள்? அப்பொழுதுதானே தர்மம் நிலைக்கும்?"

குரு வம்சத்து அரசனாகிய ஜனமேஜயன் மிகப் பெரிய சர்ப்ப யாகம் நடத்தினான். அந்த இடத்தில் வைசம்பாயனர் என்கிற ஒரு ரிஷி, ஜனமேஜயனுக்கு மகாபாரதக் கதையை சொன்னார். நான் அருகேயிருந்து கேட்டதால் அதை உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

''வியாஸர் மகாபாரதத்தை எழுதினார். அவர் தன்னுடைய மகனான சுகருக்கு உபதேசித்தார். மற்ற சீடர்களுக்கும் சொன்னார். வியாஸருடைய சீடர்களில் ஒருவரான வைசம்பாயனர் என்பவர்தான் இந்தக் கதையை ஜனமேஜயனுக்கு எடுத்துரைத்தார்.''

''அதென்ன சர்ப்ப யாகம்?'' ரிஷிகள் ஆவலோடு கேட்டார்கள்.

''ஜனமேஜயனுடைய தகப்பன் பரீட்சித். பரீட்சித் அபிமன்யுவின் பிள்ளை. இளம்பிராயத்தில் பரீட்சித் இறந்து போனதால் குழந்தையாக இருந்த ஜனமேஜயனை அரசனாக்கினார்கள். தன் தகப்பனைப் பற்றிய அதிக விவரங்கள் தெரியாமல் ஜனமேஜயன் ஆண்டு வந்தான். அப்போது உத்தங்கர் என்கிற முனிவர் ஜனமேஜயனிடம் வந்து, ''எல்லாம் வல்ல அரசனாகிய நீ ஏன் இன்னும் யாகம் செய்யாமல் இருக்கிறாய்? உன் தந்தை மிக அநியாயமாக, பாம்புகளின் அரசனான தட்சகனால் கடிக்கப்பட்டு உயிர் துறந்ததை உனக்கு எவரும் சொல்லவில்லையா? எந்த பாவமும் அறியாத உன் தந்தை விபரீதமாக மரணம் அடைந்ததை யாரும் உனக்கு விளக்கவில்லையா? தட்சகனைக் கொல்வதற்காக நீ யாகம் செய்ய வேண்டாமா? எனவே, உடனடியாக யாகம் செய்,'' என்று கோபத்தோடும், கண்களில் நீரோடும் கூறினார்.

உத்தமமான அந்த முனிவரைப் பார்த்து ஜனமேஜயன் திகைத்தான். தன் மந்திரிகளிடம் தன் தந்தையைப் பற்றி விசாரித்தான்.

''உத்தங்கர் சொல்வது உண்மை. உன் தந்தை மிகச் சிறிய ஒரு குற்றத்திற்காக தட்சன் என்ற பாம்பு கடித்து இறந்தார். நடந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. எல்லா அரசர்களும் செய்வது போல உன் தந்தையும் காட்டிற்கு வேட்டையாடப் போக, அங்கு ஒரு மானைக் கண்டு வில் வளைத்து அம்பால் அடிக்க, அம்பு தைத்த மான் வேகமாக ஓடியது. காணாமல் போனது. மானைத் தேடி இங்கும் அங்கும் ஓடிய அரசன் களைப்புற்றான். காட்டுப் பசுக்களின் கன்றுகளின் வாயில் எஞ்சியிருந்த பால் நுரையை அருந்தி சோர்வு நீக்கிக் கொண்டான். பசுக்கள் நிறைந்த ஒரு பர்ணசாலைக்கு அருகே போனான். அங்கு சமீகர் என்ற முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். ஆழ்ந்த நிஷ்டையில் இருந்தார். அவருக்கு அருகே போய், ''நான் அடித்த மான் இந்தப் பக்கம் வந்ததா?'' என்று பலமுறை கேட்டான். ஆனால், சமீகர் எந்த பதிலும் சொல்லாது இருந்தார். அதனால் எரிச்சலுற்ற அந்த மன்னன் அருகில் இருந்த செத்த பாம்பை எடுத்து அவர் கழுத்தில் போட்டு விட்டு போனான்.

சமீகருடைய மகன் சிருங்கி, நல்ல தபஸ்வி, கூர்ந்த மதியாளர். கடுமையான வார்த்தைகளுடையவர். அவர் பர்ணசாலைக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது அவருடைய சிநேகிதன் ஒருவன் அவரைப் பார்த்து வாய்விட்டு சிரித்தான். சிரித்ததின் காரணத்தைக் கேட்க, ''உன் தந்தை பிணத்தை தூக்கிக்கொண்டிருக்கிறார். நீ மிகப்பெரிய அறிவாளி என்றும் கோபக்காரன் என்றும் அலட்டிக் கொண்டிருக்கிறாய். ஆனால், அவன் தந்தையோ

பிணந்தூக்கி. இப்பேர்பட்ட தந்தைக்கு பிறந்தவனுக்கு கோபம் என்ன வேண்டிக்கிடக்கிறது?'' என்று கேலி பேசினான். சிருங்கி, ''நடந்ததைச் சொல்,'' என்று அதட்ட, அவருடைய நண்பன், பரீட்சித் என்ற ராஜா, மானை அடித்து அதை தேடி வந்து அதைப் பற்றி உன் தந்தையிடம் விசாரிக்க, அவர் பதில் சொல்லாமல் ஆழ்ந்த நிஷ்டையில் இருந்தபடியால் அவர் கழுத்தில் செத்த பாம்பை போட்டு விட்டு போனான். பதில் சொல்லாத ரிஷியும் செத்த பாம்பும் ஒன்றே என்று காட்டிவிட்டு போனான்,'' என்று நடந்ததை விவரித்தான்.

சிருங்கி கோபம் கொண்டார்.

நிஷ்டையில் உள்ளவர் பதில் சொல்லவில்லை என்றால் கழுத்தில் இறந்த பாம்பை போட்டு விடுவதா. என்ன திமிர் அந்த சத்ரியனுக்கு என்று கோபத்தால் கால் உதைத்தான். முஷ்டி மடக்கினான். பல் கடித்தான். தந்தை அவ்விதமே அசையாமல் இருப்பதைக் கண்டு கண்களில் நீர் பொங்கியது. உட்கார்ந்து ஆசமனம் செய்தார். மனம் குவித்தார். 'எவனொருவன் இந்த படுபாதகச் செயலைச் செய்தானோ அவன் இன்றிலிருந்து ஏழு நாட்களுக்குள் மிகக் கொடிய விஷ சக்தியுள்ள தட்சகன் என்கிற பாம்பால் கொத்தப்பட்டு, பிழைக்கவே முடியாதபடி அகால மரணம் அடைவான்.' என்று சபித்தார்.

கண் விழித்த சமீகர் தன்னுடைய மகன் சிருங்கி செய்த கடுமையான சாபத்தைக் கேட்டு மனம் வருத்தப்பட்டார். ''இப்பொழுது என்ன நடந்து விட்டது என்று நீ இவ்வளவு கோபப்படுகிறாய்? தன் கேள்விக்கு பதில் சொல்லவில்லை என்றால் ஒருவன் ஆத்திரப்படுவது இயல்புதானே? சத்ரியன் போன்றவர்கள் உடனடியாக கோபத்தில் இறங்குவதும் இயல்புதானே? சத்ரியனை தண்டித்து விட்டால் நீ உத்தமன் ஆகிவிடுவாயா? ஒரு தேசத்திற்கு சத்ரியன் எவ்வளவு முக்கியம் என்பதை நீ உணரவில்லையா? சத்ரியன் வலிமையுள்ளவனாக இருந்தால்தானே எதிரிகளிடமிருந்து மக்களை காப்பாற்ற முடியும். மக்கள் பயமின்றி சௌகரியமாக இருந்தால்தானே விவசாயம் போன்ற நல்ல விஷயங்கள் நடைபெறும். அவை சிறந்த முறையில் நடைபெற்றால்தானே உணவுத்தட்டுப்பாடு இல்லாது உயர்ந்த நாகரீகம் வரும். அப்படி இருந்தால்தானே மகான்களும், ரிஷிகளும் கொண்டாடப்படுவார்கள். அப்பொழுதுதானே தர்மம் நிலைக்கும். எனவே தர்மத்தின் காவலன் அரசன் என்பதை நீ புரிந்து கொள்ளவில்லை. அவனை சபிப்பதன் மூலம் தர்மத்திற்கு எதிரான ஒரு விஷயத்தை நீ செய்து விட்டாய். இப்படிப்பட்ட கோபங்கள் யாருக்கும் உபயோகம் இல்லாதவை. எனவே நீ காடுகளுக்குப் போய் கிழங்குகளையும், காய்களையும் உண்டு உன் கோபத்தை குறைத்துக்கொள்,'' என்று அறிவுறுத்தினார்.



பரீட்சித்திற்கு இந்த சாபம் உடனடியாக தெரிவிக்கப்பட்டது. அவன் பயந்தான்.

மிக உயரமான ஒரு தூண் எழுப்பி அதன்மீது ஏழு மாளிகைகள் கட்டி, ஏழாவது மாளிகையில் அவன் பாம்பிற்கு பயந்து குடியிருந்தான். சுற்றிலும் முள்வேலிகள் போடப்பட்டிருந்தன. வலிமையான வீரர்கள் காவல் இருந்தார்கள். விஷத்தை இறக்கக் கூடிய வைத்தியர்களும், மந்திரவாதிகளும் உடன் இருந்தார்கள். மந்திரிகளும், அந்தணர்களும், விவரம் அறிந்த முனிவர்களும் அந்த வளையத்திற்குள் இருந்தார்கள்.

இதற்கிடையே காஸ்யபர் என்ற பண்டிதருக்கு, அரசருக்கு ஏற்படும் வேதனை குறித்த செய்தி வந்தது. எந்தவித விஷத்தையும் முறிக்கக்கூடிய வல்லமை பெற்ற அவர் அரசனை நோக்கி நடந்தார். அவரிடம் தன் பலத்தைச் சொல்லி வேண்டும் திரவியம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில் இருந்தார். தட்சகன் ஒரு அந்தணர் வடிவத்தில் அவரை வழி மறித்தான்.

''நீர் யார்? எங்கு போகிறீர்?'' என்று கேட்க, அவர் விவரம் சொன்னார். தட்சன் என்ற நாகத்தால் அரசன் மரணமடையப் போகும் சாபத்தைச் சொன்னார். தட்சன் சுய உருவம் எடுத்தான். ''நான்தான் அந்த தட்சகன். உம்மால் என்னுடைய விஷத்தை இறக்க முடியாது. அதோ அங்கு ஒரு உயர்ந்த ஆலமரம் இருக்கிறதே, இதை நான் விஷமேற்றி தீய்த்து விடுவேன். உம்மால் அதை துளிர்க்க வைக்க முடியுமா?'' என்று தட்சகன் கேட்க, ''முடியும்,'' என்று காஸ்யபர் பதில் சொன்னார்.

ஆலமரத்தில் தட்சகனுடைய விஷம் இறக்கப்பட்டது. மரம் விஷம் தாங்காமல் பொசுங்கி சாம்பலாயிற்று. அந்த சாம்பலை ஒன்று திரட்டிய காஸ்யபர் மந்திரங்கள் சொல்லி புடம் போட்டு அதை உயிர்ப்பித்தார். மரம் சிறு செடியாகி, மெல்ல வளர்ந்து கிளைகள் பரப்பி இலைகள் விட்டு பெரும் மரமாக மாறிற்று. பழைய நிலைக்கு வந்தது. தட்சகன் திகைத்தான்.

''பரீட்சித்தின் ஆயுள் முடியப்போகிறது. அதை யாராலும் பிடித்துவைத்து நீட்டிக்க முடியாது. பரீட்சித் தருகின்ற திரவியத்தை நான் தருகிறேன். திரும்ப உன்னுடைய இடத்திற்கு போய்விடும்,'' என்று சொல்லி, காசியபரிடம் திரவியம் கொடுத்து விலகியிருக்குமாறு தட்சகன் சொன்னான். பரீட்சித்தின் ஆயுள் முடியப்போவதை ஞான திருஷ்டியால் அறிந்த காஸ்யபர் திரவியம் வாங்கிக் கொண்டார். பரீட்சித்தின் மரணம் உறுதியாயிற்று.

நாகங்களை அந்தணர்கள் உருவத்தில் அனுப்பி, உள்ளே காவல் இருப்பவர்களுக்கு பழங்கள் கொடுத்தனுப்புவதற்காக தட்சகன் ஏற்பாடு செய்தான். பழங்கள் கூடை கூடையாக உள்ளே போயின. அவற்றில் ஒரு பழத்தினுள் தட்சகன் அமர்ந்து கொண்டான். சிறு புழுவாக நெளிந்தான்.

பழங்கள் விநியோகிக்கப்பட்டன. விதி வசத்தால் புழுவாக இருந்த தட்சகன் இருந்த பழம் பரீட்சித்திடம் போயிற்று. பரீட்சித் பழத்தைப் பிளந்தார். உள்ளேயிருந்து புழு வெளியே வந்தது. 'அட, பழத்திற்குள் புழு இருக்கிறதே. இது ருசியாக இருக்குமே. ஆனால், இந்த புழுதான் தட்சகன். இன்று ஏழாவது நாள். அந்தி சாயப்போகிறது. தட்சகனை இன்னும் காணோம். எனவே இந்தப் புழுவையே தட்சகன் என்று நினைத்து என்மீது விட்டுக்கொள்கிறேன்,'' என்று விளையாட்டாகச் சொல்லி, புழுவை எடுத்து தன் நெஞ்சில் விட்டுக்கொண்டான். தட்சகன் உடனே சுயரூபம் எடுத்து பரீட்சித்தின் நெற்றியில் கொட்டினான். பரீட்சித் அந்த கணமே இறந்து போனான்.

ஜனமேஜயனுக்கு இந்தக் கதை சொல்லப்பட்டது. ஜனமேஜயன் துக்கப்பட்டான். கண்ணீர் பெருக்கினான். கோபம் அடைந்தான். உத்தங்கர் அவன் கோபத்தை தூண்டிவிட்டார்: ''தட்சகன் முதற்கொண்டு சகல சர்ப்பத்தையும் நீ பொசுக்கி விடு. பூமியிலிருக்கும் இந்தப் பாம்புகள் மரணமடையட்டும். பூமி சௌக்கியமடையட்டும்,'' என்று அவனுக்கு அறிவுரை சொன்னார். அந்தணர்களையும், முனிவர்களையும் அழைத்து மிகப்பெரிய சர்ப்ப யாகத்திற்கு ஏற்பாடு செய்யச் சொன்னார்.

யாகத்திற்கான குண்டங்கள் அமைக்கப்பட்டன. மிகப் பெரிய யாகசாலை உயரமாக நிறுவப்பட்டது. அந்த யாகசாலையை சுற்றி வந்த ஸ்தபதியில் ஒருவன் அதை கூர்ந்து கவனித்துவிட்டு, ''இந்த யாகம் பூர்த்தி அடையாது. இந்த கட்டமைப்பில் ஒரு குறை இருக்கிறது. யாகம் ஒரு அந்தணரால் நிறுத்தப்படும்'' என்று தெரிவித்தான். ஆனால், காலம் கடந்து விட்டது. வேறு வழியில்லை. யாகசாலையை இனிமேல் திருத்தி அமைக்க முடியாது. எனவே, குறிப்பிட்ட நேரத்தில் யாகம் ஆரம்பிக்கும்படி ஜனமேஜயன் கட்டளையிட்டான்.

மகாபாரதம் வெறும் கதையல்ல. அது நீதி சாஸ்திரம். எப்பேர்ப்பட்ட சக்தியுள்ள முனிவராக இருந்தாலும் ஒரு அரசனுக்கு எதிராக இயங்கக் கூடாது என்பது மிகத் தெளிவாக சமீகர் மூலம் சொல்லப்பட்டது. நீ எவ்வளவு கவனமாக இருந்தாலும் விதி தீர்மானிக்குமானால் எப்படியாவது உன் முடிவு வந்து சேரும். ஏனெனில் விதி வலியது என்றும் நிலைநிறுத்தப்பட்டது.

அரசனுக்கு பொறுமை முக்கியம். மௌனமாகவும், அமைதியாகவும் இருந்த ஒரு முனிவரை வலுவுள்ள ஒரு அரசன் அவமானப்படுத்தியதால் மோசமான ஒரு மரணத்தை அடைந்தான் என்று பல்வேறு விதமான விஷயங்களை மகாபாரதம் ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் மகாபாரதம், தர்மத்தைச் சொல்கிறது.

மந்திரங்கள் சொல்லச் சொல்ல ஜனமேஜயன் யாகத்தில் பாம்புகள் ஊர்ந்து வந்து தீயில் விழுந்து கருகின. இடையறாது நெய் வார்க்கப்பட்டு பெரும் தழல் எரிக்கப்பட்டது. தட்சகன் வரவேண்டும் என்று மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டன. தட்சன் பயந்து போய் இந்திரனை சரணடைந்தான். இந்திரன் தட்சகனை அழைத்து அடைக்கலம் கொடுத்தான். இந்திரன் அடைக்கலம் கொடுத்தது தெரிய வந்தது. இந்திரனோடு வந்து தட்சகன் விழட்டும் என்று மந்திரங்கள் ஓதப்பட்டன. இந்திரன் தட்சகனை விலக்கினான். தட்சகன் தலைகீழாக யாகத்தீயை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

அப்போது ஆஸ்தீகர் என்ற முனிவர் அங்கு வந்தார். ஜனமேஜயனிடம் கை கூப்பி தனக்கு வேண்டுவன தரவேண்டும் என்று வினவினார். நிச்சயம் தருகிறேன் என்று வாக்கு கொடுத்த ஜனமேஜயன் தொடர்ந்து யாகத்தை நடத்தும்படி சொன்னான். இன்னும் விரைவாக தட்சகன் யாகத்தீயை நோக்கி வந்து கொண்டிருந்தான். யாகம் முடியப்போகிறது என்பதால் ஆஸ்தீகர் கேட்ட தட்சணையை கொடுக்கும்படி அந்தணர்கள் அரசனுக்குச் சொன்னார்கள். ''என்ன வேண்டும்?'' என்று ஜயமேஜயன் கேட்டபோது, அந்த யாகத்தை உடனடியாக நிறுத்தும்படி ஆஸ்தீகர் சொன்னார்.

தன்னுடைய தாய் நாக கன்னியின் விருப்பத்திற்கேற்ப மீதியுள்ள சர்ப்பங்களை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அவ்விதம் கேட்டார். ஜனமேஜயன் வேறு ஏதேனும் கேளுங்கள் என்று வற்புறுத்த, இதுவே வேண்டும் என்று உறுதியாக நின்றார். ஜனமேஜயன் யாகத்தை நிறுத்தினான். தட்சகன் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடினான். தன்னுடைய வேண்டுகோளுக்கேற்ப ஜனமேஜயன் யாகத்தை நிறுத்தியதால் ஆஸ்தீகர் என்ற ரிஷி அவனுக்கு அஸ்வமேத யாகம் நடத்தித்தர சம்மதித்தார்.

ஜனமேஜயனுடைய இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மகாபாரதம் அதனுடைய ஆரம்ப கட்டத்தை தொட்டுக் காண்பிக்கிறது. அதாவது, ஃப்ளாஷ்பேக் சொல்லப்படுகிறது.

மகாபாரதத்தை பல்வேறு கிளைக் கதைகள் அலங்கரிக்கின்றன. ஒரு விஷயத்திற்கு எதிரொலியாக இன்னொரு விஷயம் நடக்கிறது என்பதைச் சொல்லி, எதனால் இவ்விதம் நடந்தது, அப்படி நடக்காதிருக்க என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணங்களையும் நமக்குள் தோற்றுவிக்கிறது. இதையெல்லாம்விட இந்த பரதகண்டத்தில் மிக ஆச்சரியமான மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். விதவிதமான வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்கிற திகைப்பையும் நமக்கு கொடுக்கிறது. பரத கண்டத்தின் கலாசாரம் மிக நீண்டது. இவையெல்லாம் விவாதத்திற்கான விஷயங்களா என்று யோசிப்பதைவிட, இப்படி நடந்தது என்பதாகவே சொல்லப்படுகிறது.

ஜரத்காரு என்கிற முனிவர் தன்னுடைய உடம்பின் சக்தியை ஒன்று திரட்டி அதை உச்சிக்கு ஏற்றி மனிதருள் மிகச் சிறந்த ஒரு நிலையை அடைய வேண்டும் என்று கடுமையான விரதங்கள் மேற்கொண்டிருந்தார். கிடைத்ததை உண்டார். எந்த இடத்தில் இரவு வந்துவிட்டதோ, எந்த இடத்தில் மேற்கொண்டு பயணம் செய்ய முடியாதோ, அது என்ன இடமாக இருந்தாலும் தங்கினார். வீடோ, மாளிகையோ, கிராமமோ, நகரமோ, அடர்ந்த வனமோ, பாலையோ, ஆற்றங்கரையோ, மலை உச்சியோ எதுவாக இருந்தாலும் அதைப்பற்றி கவலையில்லாது இரவு நேரத்தை அவரால் அமைதியாக கழிக்க முடிந்தது. விடிந்ததும் பயணம் தொடர்ந்தது. எந்த இலக்கும் இன்றி அலைந்தார். எந்த தொடர்பும் இன்றி சுற்றி வந்தார்.

ஒரு மலை உச்சியிலிருந்து கீழே இறங்கும்



போது தீனமான குரல்கள் கேட்டன. என்ன என்று அந்த சரிவில் எட்டிப் பார்த்தபோது ஒரு மிகப்பெரிய பள்ளத்தாக்கில் விளாமிச்சை வேரை பிடித்தபடி சிலர் தொங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த வேரை அதன் ருசிக்காக ஒரு எலி தன் கூரியபற்களால் அரித்துக் கொண்டிருந்தது. எந்த நேரம் வேண்டுமானாலும் அவர்கள் அதளபாதாளத்தில் விழுந்து விடுவார்கள் என்று தோன்றியது.

நல்லவரான ஜரத்காரு பதறினார். ‘‘யார் நீங்கள்? எதற்காக இப்படி ஒரு வேரை பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள்? இந்த வேரும் ஒரு எலியினால் அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறதே. எப்பொழுது வேண்டுமானாலும் அதள பாதாளத்தில் விழுந்து விடுவீர்களே. மிகவும் இருட்டாக அல்லவா இருக்கிறது. உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்? இது ஏதேனும் புதியவகை தவமா? அல்லது விதியா? என்னுடைய தவத்தின் பாதியை உங்களுக்கு தரட்டுமா? அல்லது முழுவதையும் கொடுத்து விடட்டுமா? உங்களது நிலைமையை பார்க்க எனக்கு பதறுகிறது. பயமாக இருக்கிறது. நான் கவலையோடு இதை உங்களிடம் கேட்கிறேன். தயவு செய்து சொல்லுங்கள் ஏன் இது. யார் நீங்கள்?’’

‘‘ஐயா நாங்கள் பித்ருக்கள். அழகான வார்த்தை சொல்லுகின்ற உத்தமரே. நாங்கள் வம்சவிருத்தி இல்லாத பித்ருக்கள். இந்த ஒரே ஒரு வேர்தான் எங்களுக்கு பிடிமானம். ஒரே ஒரு மகன்தான், எங்கள் வம்சத்தை சேர்ந்த ஒரே ஒரு மனிதன்தான் எங்கள் பிடிமானம். அவனுடைய ஆயுளையும் மெல்ல மெல்ல காலம் அரித்துக்கொண்டிருக்கிறது. அதுதான் அந்த எலி. அந்த மனிதன்தான் இந்த வேர். காலம் அவனை அழித்துச் சாய்த்துவிட, நாங்கள் இந்தப் பெரிய நரகக் குழியில் விழுந்து விடுவோம். எங்களுக்கு நீர் வார்க்க யாரும் இல்லாது மிக மோசமான நிலையை அடைவோம்.’’

‘‘இதைத் தடுக்க என்ன வழி?’’

‘‘இதோ இந்த விளாமிச்சை வேருக்கு சொந்தக்காரரான எங்கள் சந்ததியை கண்டுபிடித்து அவரை திருமணம் செய்து கொள்ளச் சொன்னால் நாங்கள் மேலேறுவோம். இல்லையெனில் நரகம்தான்.’’

‘‘அப்படியா யார் அவர்? இவ்வளவு தீனமான நிலையில் உங்களை விட்டு விட்டு போன மனிதர் யார்? எனக்கு சொல்லுங்கள். அவரை நான் தேடிக் கண்டுபிடித்து திருமணம் செய்விக்கிறேன்.’’

‘‘அவர் பெயர் ஜாரக்ருது. மிக சந்துஷ்டியான மனிதன். கடுமையான விரதங்கள் உள்ளவன். உத்தமமானவன். ஞானவான். ஆனால், அவன் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதால் நீர் வார்க்க வழியில்லாது எங்களுடைய பித்ரு வாழ்க்கை மோசமான இடத்திற்கு போகப்போகிறது. சுபிட்சமான இடத்தை நாங்கள் தொடப்போவதேயில்லை. முடிந்தால் அந்த ஜாரக்ருதுவை சந்தித்து அவனை திருமணம் செய்துகொள்ளச் சொல்லுங்கள். சந்ததியை வளர்க்கச் சொல்லுங்கள். இதுபோதும் எங்களுக்கு.’’

ஜாரக்ருது திகைத்துப் போனார். பித்ருக்களுக்கும் வேதனை உண்டு என்பது அதிர்ச்சியாக இருந்தது.

(தொடரும்)

மகாபாரதம்

2

> ‘‘ஐயன்மீர் உங்களுக்கு என் நமஸ்காரம். என் பித்ருக்களே உங்களை நான் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குகிறேன். நான்தான் ஜரத்காரு. நான் நைஷ்டிக பிரம்மச்சாரியாக இருந்து என் ரேதஸை உச்சிக்கு ஏற்றி மிக உன்னதமான நிலையை அடையவேண்டும் என்ற குறிக்கோளோடு வாழ்ந்து வருகிறேன். ஆனால், உங்கள் நிலைமை இப்படி இருக்கும் என்று தெரிகிறபோது என் விரதம் முக்கியமில்லை என்று தோன்றுகிறது. உங்களை கரையேற்றுவதுதான் உத்தமம் என்று படுகிறது. உங்களை அழவைத்துவிட்டு நாம் மட்டும் மனிதனில் சிறந்தவனாக வேண்டும் என்று ஆசைப்படுவது மிகப்பெரிய தவறு.’’

‘‘பித்ருக்களே, வெகு நிச்சயமாக என் பிரம்மச்சரிய விரதத்தை நீக்கி நான் திருமணம் செய்து கொள்வேன். ஆனால், தயை செய்யுங்கள். என் பெயர் கொண்ட பெண்ணாக இருக்க வேண்டும். எனக்கு ஏற்ற துணையாக இருக்க வேண்டும். எனக்கு எதிராக பேசக் கூடாது. நான் எது செய்கிறேனோ அதை மறிக்கக் கூடாது. என்னை என் சுபாவத்தோடு விட்டுவிட வேண்டுமே தவிர எனக்கு போதனை செய்யக்கூடாது. இப்படிப்பட்ட பெண்ணாக இருந்தால் சொல்லுங்கள். நான் திருமணம் செய்து வம்சத்தை விருத்தி செய்கிறேன்’’ என்று சொன்னார்.

அவர்கள் விதியின் மீது பாரத்தைப் போட்டு மௌனமாக இருந்தார்கள்.

ஜரத்காரு அந்த இடம் விட்டு நீங்கினார். ஆனால், உள்ளுக்குள் அவரின் பித்ருக்களின் நிலைமை அவரை தொந்தரவு செய்து கொண்டே இருந்தது. வயதானதால் அவருக்குப் பெண் கொடுக்க யாரும் முன்வரவில்லை. ஒரு நாள் நடு வனத்தில் அவர் நின்று வாய்விட்டுப் புலம்பினார்.

‘‘மரங்களே, செடி கொடிகளே, வனத்தின் தெய்வங்களே, உங்கள் எல்லோரையும் கை கூப்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன். எனக்கு ஏற்ற கன்னிகையை நீங்கள் தயவு செய்து தாருங்கள். என் வம்சத்தை விருத்தி செய்யவேண்டும். எனக்கென்று சுகத்தை நாடாது வம்ச விருத்திக்கென்று நான் கேட்கும் லட்சணங்களையுடைய பெண்ணை எனக்குத் தரவேண்டும். தயவு செய்யுங்கள்’’ என்று கை கூப்பி கண்ணீர் மல்க கேட்டுக்கொண்டார். அந்த நல்ல மனிதருக்கு தன் விரதத்தைக் காட்டிலும், தான் மேன்மை அடைவதைக் காட்டிலும் தவித்துக் கொண்டிருந்த தன்னுடைய பித்ருக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கமே பெரிதாக இருந்தது.

அவர் குரலைக்கேட்டு வாசுகி என்ற நாகராஜன் அங்கு வந்தான். அவரை வணங்கினான்.

‘‘தவத்தில் சிறந்த முனிவரே, உங்களுக்கு என் வம்சத்திலிருந்து நான் பெண் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்னுடைய சகோதரியின் பெயர் ஜரத்காரு. அவள் மிகச் சிறந்த குணவதி. அமைதியானவள். பண்பானவள். அறிவானவள். உங்களைப் போன்ற ஞானவான் எங்களோடு சம்பந்தம் வைத்துக்கொள்வது எங்கள் வம்சத்தை பலப்படுத்தும், ஆபத்திலிருந்து காப்பாற்றும். எனவே, எங்கள்

சகோதரி ஜரத்காருவை ஏற்றுக்கொண்டு உங்கள் பிரம்மச்சரிய விரதத்தை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனால் உங்கள் பித்ருக்களும் பயனடைவார்கள். என் குலமும் பலமடையும்.'' என்று பணிவாகச் சொன்னான்.

``நாகராஜனே, உன்னுடைய சகோதரியை நான் கஷ்டப்பட்டு உழைத்து போஷிக்க மாட்டேன். அவளைக் காப்பாற்ற மாட்டேன். எனக்கு எதிராக அவள் பேசினால் அவளை விட்டு நீங்கிவிடுவேன். என்னுடைய சுகத்தைக் கெடுத்தால் அது எனக்கு கடுங்கோபத்தைக் கொடுக்கும். நான் என்ன செய்வதென்று எனக்குத் தெரியும். அவளுடைய போதனைகள் தேவையில்லை. எனவே, எந்தவித எதிர்ப்பும் இல்லாது உன்னுடைய சகோதரி எனக்கு வாழ்க்கைப்பட்டால் அவளை திருமணம் செய்து கொள்ள எனக்கு சம்மதம்.'' என்று தன் பக்கத்து நியமங்களை ஜரத்காரு சொன்னார்.

``ஆஹா, அதற்கென்ன, என் சகோதரியை நான் காப்பாற்றுகிறேன். நான் போற்றுகிறேன். நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் விருப்பம் போல் இருங்கள். உங்களுடைய வாழ்க்கைதான் தவ வாழ்க்கை. அதனால்தான் மிகச்சிறந்த ஞானியாக இருக்கிறீர்கள். உங்கள் ஞான வளர்ச்சிக்கு இடையூறாக ஒருநாளும் என் சகோதரி இருக்கமாட்டாள் என்று நான் உத்தரவாதம் தருகிறேன். மிகுந்த வணக்கத்துடன் என் சகோதரியை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்'' என்று சொல்லி, ஜரத்காரு என்ற தன் சகோதரியை அங்கு வரவழைத்து அந்த வனத்திலே அவருக்கு திருமணம் செய்வித்தான்.

அழகும், அமைதியும், அன்பும், பண்பும் நிறைந்த அந்த நாக கன்னிகையை ஜரத்காரு மணந்து நல்லபடியாக குடித்தனம் நடத்தினார். காலங்கள் உருண்டன. முனிவருடைய ரேதஸ் அந்த நாக கன்னிகையின் வயிற்றில் வந்து நின்றது. அவள் மடியில் தலை வைத்து படுத்து தூங்கிக் கொண்டிருந்தபோது மாலை நேரம் வர, இனிய குரலில் அந்த நாககன்னிகை அவரை எழுப்பினாள்.

``அன்பரே எழுந்திரும். அஸ்தமனத்திற்கு உண்டான நேரம் வந்துவிட்டது. எழுந்திருந்து ஆசமனம் செய்து சந்தியாவந்தனத்தை நடத்துங்கள். நீங்கள் விரதம் பிழறாத பிராம்மணர். நல்ல குணம் உடையவர். உங்கள் உறக்கத்தினால் இந்த நியமம் தடைபடக்கூடாது. எனவே, மெல்ல கண்விழிப்பீராக'' என்று அமைதியாக அவர் தூக்கத்தை நிறுத்தினாள். ஜரத்காரு திடுக்கிட்டு எழுந்தார்.

``நான் உறங்கிக் கொண்டா இருந்தேன். இல்லையே. இது ஒரு நிஷ்டை என்று தெரியாதா? உன் மடியில் தலை வைத்து படுத்ததாலேயே இது உறக்கம் என்ற நினைப்பா? நான் கண் விழிக்காது அஸ்தமனம் முடிந்துவிடுமா? அல்லது அஸ்தமனத்திற்கு முன்பே கண்விழிக்க எனக்குத் தெரியாதா? எனக்கு ஏன் போதனை? எனக்கு ஏன் உத்தரவு? நான் இதை செய்யக்கூடாது என்று தெளிவாகச் சொல்லியிருந்தும் இதை செய்திருக்கிறாயே? ஆழ்ந்து எனக்குள்ளே இருந்த தவம் கலைந்ததே! இது மறுபடியும் கோர்ப்பதற்கு எவ்வளவு நாளாகும். என்னுடைய வார்த்தையை மீறிவிட்டாய். நாககன்னிகையே உன்னிடமிருந்து நான் விடை பெறுகிறேன். என்னுடைய வாழ்க்கைக்கு நீ சரியாக வரமாட்டாய்'' என்று உரத்த குரலில் சொல்ல, அந்த நாககன்னிகை கண்ணீர் சிந்தினாள்.



பாலகுமாரன்

``எந்த காரியத்திற்காக ஒன்று சேர்ந்தோமோ அது நடைபெறவில்லையே? உங்கள் வம்சம் வளர வேண்டும் என்பதற்காகத்தானே நீங்கள் திருமணம் செய்தீர்கள். உங்கள் குரல் கேட்டுத்தானே என்னுடைய தமையன் என்னை உங்களுக்கு திருமணம் செய்து வைத்தான். எங்கள் குலம் பலப்படும் என்றுதானே நான் உங்களை திருமணம் செய்து கொண்டேன். ஞானவானான நீங்கள் இப்படி கோபித்துக் கொண்டு விலகலாமா? இங்கே நல்ல குழந்தை பிறக்காமல், நான் விலகுவதில் என்ன லாபம்'' என்று கேட்டாள்.

``நீ கர்ப்பமாயிருக்கிறாய் பெண்ணே, என்னுடைய ரேதஸ் உன்னுடைய உடம்பில் இருக்கிறது. சரியான காலத்தில் நீ ஒரு மகனைப் பெறுவாய். அவனுக்கு ஆஸ்தீகன் என்று பெயர்வை. பிதா அஸ்தி. அப்பன் இருக்கிறான் என்ற அர்த்தத்தில் ஆஸ்தீகன் என்ற பெயரோடு அவன் துலங்கட்டும்'' என்று சொல்லி, எந்த பதிலையும் எதிர்பார்க்காது அவளை விட்டுப் பிரிந்தார்.

ஜரத்காரு என்ற அந்த நாககன்னிகை தன்னுடைய சகோதரனை அடைய அவன் அவளை மகிழ்ச்சியுடன் வரவேற்றான்.

``நீ கர்ப்பமாய் இருக்கிறாய் என்பதைக் கேட்க சந்தோஷமாய் இருக்கிறது. நம் குலம் நிச்சயமாக இதனால் நன்மை அடையும். எதற்காகவும் கவலைப் படாதே. உனக்கு எல்லாவிதமாகவும் போஷிக்க நான் இருக்கிறேன். எந்த குறையும் இல்லாது உன்னை காப்பாற்றுவேன். நல்லபடி கர்ப்பத்தை வளர்த்து சரியான காலத்தில் குழந்தையை ஈன்றெடுப்பாய்'' என்று ஆசீர்வதித்தான்.

அந்த நாககன்னிகைக்கும், ஜரத்காருவுக்கும் பிறந்த குழந்தைதான் ஆஸ்தீகன். அவருடைய வம்சம் அழியக்கூடாது என்றுதான் தட்சகனை அந்த யாகத்திலிருந்து ஆஸ்தீகன் காப்பாற்றினார். குறிப்பிட்ட சில பாம்புகள் இறந்தனவே தவிர, பாம்புகள் வம்சம் அற்றுப் போகவில்லை, இன்றுவரை தொடர்கிறது.

ஆஸ்தீகருடைய கதையை கேட்டால், பாம்பு பயம் இருக்காது. அவர் பெயரைச் சொன்னால் பாம்பினுடைய தாக்குதல் இருக்காது என்றும் இந்தப் புராணம் சொல்லுகிறது.

``சரி, யாகத்தைத் தடுத்து நிறுத்திய ஆஸ்தீகரைப் பற்றிச் சொன்னீர்கள். சூதரே, உத்தங்கர் ஏன் ஜனமேஜயனை தூண்டினார்? அவர் பாம்புகள் மீது கொண்ட கோபத்திற்கு என்ன காரணம்?'' நைமிசாரண்யத்து ரிஷிகள் வினவ, சூதர் உற்சாகத்துடன் சொல்ல ஆரம்பித்தார்.

தன்னுடைய குருவிற்கு பணிவிடை செய்து நல்ல விஷயங்களை அடைந்த பிறகு குரு அவருக்கு விடை கொடுத்தார். உங்களுக்கு தட்சணையாக

நான் என்ன தரவேண்டும் என்று கேட்டபோது அந்த குரு, ‘‘எனக்கு எதுவும் தேவையில்லை. ஒருவேளை என் மனைவிக்கு தேவைப்படலாம். நீ பலமுறை கேட்டதால் உன்னை அவளிடம் அனுப்புகிறேன். அவளிடம் விசாரித்து அவளுக்கு வேண்டியது கொடு.’’ என்று ஆசீர்வதித்தார்.

குருவின் மனைவி, ‘‘இங்குள்ள அரசியிடம் மிக அழகிய குண்டலங்கள் இருப்பதை கவனித்திருக்கிறேன். விரதகாலம் வரப்போகிறது. அந்த விரதத்தை இந்த குண்டலங்களை அணிந்து கொண்டு வருகின்ற ரிஷிகளுக்கு நான் பரிமாற விரும்புகிறேன். நீ கேட்டதால் சொல்கிறேன். அந்த குண்டலங்கள் வேண்டும்.’’ என்று கேட்டாள். மிகுந்த மகிழ்ச்சியோடு உத்தங்கர் அந்த அரசனிடம் போய் பல்வேறு இன்னல்களுக்குப் பிறகு அவன் மனைவியிடம் யாசித்து அந்த குண்டலங்களைப் பெற்றார். அவற்றைக் குளக்கரையில் வைத்துவிட்டு குளிக்கச் சென்றபோது தட்சகன் என்ற பாம்பு வெகுகாலமாக அந்த குண்டலங்களை விரும்பியதால் அவற்றை சன்னியாசி போல வந்து கவர்ந்து போனான்.

யாரோ காவி உடை அணிந்தவர் அதைக் கவர்ந்து போனதைக் கண்டு உத்தங்கர் அவரைத் தொடர்ந்து போனார். தட்சகன் பாம்பு உரு எடுத்து ஒரு பெரிய புற்றுக்குள் நுழைந்து கொண்டான். கையால் அந்த புற்றுமண்ணைத் தோண்ட முயற்சித்து உத்தங்கர் சோர்ந்து போனார். குறிப்பிட்ட காலத்திற்குள் குண்டலங்களை எப்படி எடுத்து வருவது என்று கவலைப்பட்டார். இந்திரனைத் துதித்தார். இந்திரன் வந்து நின்றான்.

‘‘என்ன வேண்டும் உங்களுக்கு’’?

‘‘என்னுடைய குண்டலங்களை தட்சகன் என்ற நாகராஜன் கவர்ந்து கொண்டு போய்விட்டான். என் குருவின் பத்தினிக்கு அதை கொடுக்கவேண்டும். இந்த புற்றுக்குள் அவன் இருக்கிறான். அதைக் கொண்டு வந்து தரவேண்டும்’’ என்று சொன்னார் உத்தங்கர்.

‘‘என் குதிரையின் அபானத்தில் ஊதும்’’ என்று இந்திரன் கட்டளையிட அவ்விதமே அவர் செய்ய, அந்த குதிரையின் மலதுவாரத்திலிருந்து தீ ஜ்வாலை வந்து அந்த புற்றை தகித்தது. தட்சகன் பயந்து போய் குண்டலங்களை கொடுத்து விட்டுப் போனான்.

குண்டலங்களை எடுத்துக்கொண்டு மிக விரைவாக ஓடி அந்த குறிப்பிட்ட காலத்தின் எல்லை முடிவதற்குள் குரு பத்தினியிடம் கொடுத்து சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். கேட்டபடி குண்டலங்கள் வரவில்லை என்ற கோபத்தில் இருந்த குரு சாந்தமானார். ‘நல்லவேளை வந்து விட்டாய்’ என்று ஆறுதல் கூறினார். மேலும் ஆசீர்வதித்தார். குரு பத்தினியின் ஆசியும் அவருக்கு கிடைத்தன.

மிகுந்த சந்துஷ்டியுடன் அவர் வெளியேறியபோது, தன்னை இப்படி அலைகழித்து கொடுமைப்படுத்திய தட்சகனை பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. ஞான திருஷ்டியால் தட்சகன் செய்த காரியங்களை அறிந்து பரீட்சித்தைக் கொன்றதை உணர்ந்து பரீட்சித்தின் மகன் ஜனமேஜயனிடம் போய் சர்ப்பயாகம் செய்யும்படி தூண்டினார்.

‘‘துவங்கியதும் நின்றதும் நீங்கள் கேட்டீர்கள்,’’ என்று சூதர் கைகளைக் கூப்பினார்.

உலகில் பல காரியங்கள் ஏதோ ஒரு இடத்திலிருந்து எங்கோ போய் விடுகிறது. ஒவ்வொரு மனிதனுடைய சிறிய செய்கையும் மிகப் பெரிய விளைவை ஏற்படுத்துகிறது. தட்சகன் என்ற அந்த நாக அரசனுடைய திருட்டு அவன் வம்சத்தை அழித்தது. அதேநேரம் அவனைக் காப்பாற்றவும் ஒருவர் வந்து சேர்ந்தார். அவர் பிறப்பிற்கும் ஒரு



காரணம் இருந்தது. எதற்காக ஏன் நடந்தது என்ற கேள்வி உலகத்தில் இடையறாது நிற்கும். இதை விசாரிக்க ஒன்றன் பின் ஒன்றாக பலதும் தொடரும். அன்றிலிருந்து இன்றுவரை மனித வாழ்க்கை, ஒன்றின் விளைவாக மற்றொன்று என்று நடப்பது தான். எல்லாமுமே எதிர்வினைதான்.

மகாபாரதத்தின் இந்த இடத்திற்குப் பிறகு சூதர் யயாதி என்பவருடைய கதையை சொல்லத் தொடங்கினார். யயாதியின் கதையை சொல்லுவதற்கு முன்பு சுக்கிராச்சாரியாருடைய கதையையும் விவாதித்தார்.

பிரகஸ்பதி தேவர்களுடைய குரு. சுக்கிராச்சாரியார் அசுரர்களுடைய குரு. சுக்கிராச்சாரியாருக்கு தேவயானி என்ற மகள் இருந்தாள். அவளுக்கு தந்தையின் மீது மிகுந்த பாசம். சுக்கிராச்சாரியாரும் மகள் மீது உயிரையே வைத்திருந்தார். அசுரத் தலைவன் விருஷபருவன் சுக்கிராச்சாரியாரை தன் குருவாகக் கொண்டிருந்தான். அவனுக்கு சர்மிஷ்டை என்ற மகள் இருந்தாள். தேவயானியும், சர்மிஷ்டையும் சிநேகிதிகள். ஒரு முறை அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது பேச்சு விவாதமாகப் போயிற்று.

''நீ யார் தேவயானி?''

''சுக்கிராச்சாரியாருடைய மகள்''

''சுக்கிராச்சாரியார் யார்? என் தந்தைக்கு கீழே வேலை செய்கிறவர். அவரிடம் யாசித்து செல்வம் பெறுகிறவர். அவர் பிச்சைக்காரர். நீ பிச்சைக்காரரின் மகள்.'' என்று கேலியாகச் சொல்ல தேவயானி அழுதபடி தன் தந்தையிடம் போய் இதற்கு விளக்கம் கேட்டாள்.

''இல்லை, நீ யாசிப்பவனின் மகள் இல்லை. விழுந்து யாசிக்கும்படியான நிலையில் உள்ளவன் உன் தந்தை. என் அன்பால் அசுரர்களைப் போற்றிப் பாதுகாக்கிறேன். நான் இல்லையெனில் இந்த அசுரகுலம் இல்லை. அது சர்மிஷ்டைக்குத் தெரியாது. எனவே சண்டை போட வேண்டாம்'' என்று சமாதானம் செய்ய, தேவயானி சர்மிஷ்டையை தண்டிக்க வேண்டும் என்று வீம்பாக இருந்தாள். அரசனிடம் இதைச் சொல்ல, அசுர அரசன் சுக்கிராச்சாரியாரின் காலில் விழுந்தான்.

''நீங்கள் இல்லாவிட்டால் எங்களுக்கு ஏது போக்கிடம். உங்களிடம் இருக்கின்ற அற்புதமான சக்தியால் தானே எங்கள் குலம் தழைத்துக் கொண்டிருக்கிறது. பிரகஸ்பதியிடம் கூட இல்லாத அந்த சஞ்சீவினி வித்தையை நீங்கள் கற்றிருப்பதால்தானே நானே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் குலம் என் மகளால் அழியக்கூடாது. அவள் பேச்சு கர்வமானது. எனவே நீங்கள் என்ன சொன்னாலும் அதற்கு நான் கட்டுப்படுகிறேன். என் மகளை இழக்கத் தயாராக இருக்கிறேன்'' என்று பணிவாகச் சொன்னான்.

தன்னுடைய மகளை விட தன்னுடைய வம்சம் உயர்ந்தது என்று திடமாக இருந்தான் அசுர அரசன். சுக்கிராச்சாரியார் மனம் நெகிழ்ந்தார்.

''என் மகளுக்கு உன் மகளை பணிவிடை செய்யச் சொல். வேலைக்காரியாக இருக்கச்சொல்'' என்று கட்டளையிட, அரசன் அவ்விதமே தன் மகள் சர்மிஷ்டையை தேவயானிக்கு வேலைக்காரியாக அனுப்பினான்.

இந்த சண்டை இவ்வாறு இருக்க பிரகஸ்பதியின் சீடனான கசனை இந்திரன் அழைத்து, ''நீ கெட்டிக்காரன். சூட்சுமம் உள்ளவன். நீ சுக்கிராச்சாரியாரிடம் போய் தந்திரமாக சேர்ந்து அவரிடம் இந்த சஞ்சீவினி மந்திரத்தை தெரிந்து கொண்டு வா.'' என்று உத்தரவிட்டான்.

கசன் சுக்கிராச்சாரியாரிடம் சீடனாக வந்து சேர்ந்தான். சுக்கிராச்சாரியாருக்கு சீடன் எங்கிருந்து வருகிறான் என்று தெரியவில்லை. தெரியும் முனைப்பும் இல்லை. ஆனால், அசுரர்கள் கண்டு கொண்டார்கள். கசன் தேவயானிக்கு பிரியமுள்ளவனாக இருந்தான். அவளை மயக்கித்தான் சுக்கிராச்சாரியாரிடம் சேர்ந்தான். அசுரர்கள் கசனை தனியே மடக்கி அடித்துக் கொன்றார்கள். தேவயானி பதறிப் போய் தந்தையிடம் தெரிவிக்க, அவர் சஞ்சீவினி மந்திரத்தை உச்சரித்து அவனை உயிர்ப்பித்தார். மறுபடியும் அசுரர்கள் அவனைக் கொன்றார்கள். திரும்பவும் உயிர்ப்பித்தார்.

'நானா சொல்லித்தருவேன். நானா அசுரர்களுக்கு எதிராக செயல்படுவேன். என்னை இந்த அசுரர்கள் நம்ப மாட்டேன் என்கிறார்களே' என்று சுக்கிராச்சாரியார் மனதிற்குள் வேதனைப்பட்டார். அடுத்தமுறை அசுரர்கள் கசனைக் கொன்று எரித்து சாம்பலாக்கி அந்த சாம்பலை மதுவில் கலந்து ஒவ்வொரு மாலையும் சுக்கிராச்சாரியார் மது அருந்துகிறபோது அவரைக் குடிக்க வைத்து விட்டார்கள்.

தேவயானி கசனைத் தேடினாள். தந்தையிடம் வந்து முறையிட்டாள். கசன் எங்கிருக்கிறான் என்று அவர் தேட, தன் வயிற்றுக்குள் இருக்கிறான் என்று அவருக்குத் தெரியவந்தது.

''அம்மா தேவயானி, அவனை உயிர்ப்பித்து விடுவேன். ஆனால் நான் இறந்து விடுவேன். தேவயானி அவன் வந்து நான் இறந்தால் பரவாயில்லையா?'' என்று பிரியமுடன் கேட்டார்.

''இல்லை தந்தையே, எனக்கு நீங்களும் வேண்டும். கசனும் வேண்டும்'' என்று அவள் கை கூப்பினாள். என்ன செய்வதென்று யோசித்து ''கசனே, சஞ்சீவினி மந்திரத்தை உபதேசித்து, உன்னை உயிர்ப்பிக்கிறேன். என் வயிற்றை கிழித்துக் கொண்டு வெளியே வா. வந்த பிறகு என்னை உயிர்ப்பித்து விடு.'' என்று சொன்னார். அவ்விதமாகவே நடந்தது. கசன் சஞ்சீவினி மந்திரத்தை உபயோகித்து அவரை உயிர்ப்பித்தான். தேவயானி கசனை தன்னை திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தியபோது, உன் தந்தையின் வயிற்றிலிருந்து வந்தவன் நான். உனக்கு சகோதரனாகிறேன். எனவே உன்னைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று விலகினான். தேவயானி அந்த நியாயத்தை ஏற்றுக்கொண்டாள். தான் மது அருந்தியல்லவா இந்த மந்திரம் இடம் மாறிற்று. இனி அந்தணர் எவரும் மது அருந்தலாகாது என்று விதிமுறையை சுக்கிராச்சாரியார் ஏற்படுத்தினார்.

தேவயானி செய்யும் அட்டகாசங்களை தாங்க முடியாத சர்மிஷ்டை அவளை ஒரு பாழும் கிணற்றில் தள்ளினாள். அப்பொழுது அங்கு வந்த யயாதி என்கிற மன்னன் அழுகுரல் கேட்டு கிணற்றில் எட்டிப் பார்த்து அங்கு தவித்துக் கொண்டிருந்த தேவயானியை நோக்கி குனிந்து

தன் வலக்கையை நீட்டி அவள் வலக்கையைப் பற்றி மெல்ல மெல்ல முழு பலத்தோடு மேலேற்றி அவள் உயிரை காப்பாற்றினான்.

''என் வலக்கையைப் பற்றி என்னை காப்பாற்றிய நீங்களே எனக்கு புருஷனாவீர். உங்களை என் மனதால் வரித்து விட்டேன். எந்த கணம் என்னைத் தொட்டீரோ அப்பொழுதே உங்களை புருஷனாக கொண்டு விட்டேன். தயவு செய்து என்னை ஏற்க வேண்டும்,'' என்று பணிந்து நின்றாள். தன் தந்தையிடம் போய் யயாதியைப் பற்றிச் சொன்னாள்.

''நீ அரசன் என்பது எனக்கு சந்தோஷம். என் மகளை திருமணம் செய்துகொள் என்று கேட்ட போது, எப்படி உங்கள் மகளை திருமணம் செய்து கொள்வேன். நீங்கள் மனோபலம் மிக்கவர். நான் உடல் பலம் மிக்கவன். உங்கள் மனோபலத்திற்கு முன்பு என் உடல் பலம் எதுவும் இல்லை. வெகு நிச்சயமாக விரதங்களைக் காக்கும் ஒரு அந்தணன் சத்ரியனை விட உயர்ந்தவன். எவனொருவன் நியமத்தோடு வாழ்கிறாரோ அவர் எல்லாவற்றிற்கும் தலைவராகிறார். விரதத்தால் ஜொலிக்கின்ற உங்கள் கோபத்தை என்னால் தாங்க முடியாது. நான் சத்ரியன். சத்ரியனாகவே இருக்க விரும்புகின்றேன். ஒரு அந்தணப் பெண்ணை திருமணம் செய்து கொள்ள நான் தகுதியற்றவனாகிறேன்,'' என்று பணிவாக மறுத்தான்.

''உண்மை. ஆனால், நீ கைப்பற்றி தூக்கியதால் அது காந்தர்வ விவாகமாக மாறியது. அவள் உயிரைக் காப்பாற்றியதால் அவள் இருப்பதே உனக்காகத்தான் என்ற நியமம் வந்துவிட்டது. நீ காப்பாற்றவில்லையென்றால் அவள் இறந்திருப்பாள். உயிர் கொடுத்த உனக்கு அவள் தன்னைக் கொடுக்கிறாள். இதில் குலம் கோத்திரம் எதுவும் வரவில்லை. இது மன உணர்வோடு சம்பந்தப்பட்டது. மிக உற்சாகமாக அவள் உன்னை விரும்புகின்றாள். அவளை திருமணம் செய்து கொள். அவள் குணவதி. மிகச்சிறந்த பண்டிதை. உனக்கு அவளால் தர்மம் உபதேசிக்க முடியும். உன் ராஜ்ய பரிபாலனங்களில் அவள் உதவி செய்ய முடியும். யயாதி அவள் உனக்கு தக்க மனைவியாவாள்,'' என்று வற்புறுத்தினார்.

சுக்கிராச்சாரியாருக்கு பயந்து யயாதி சம்மதித்தான்.

''ஒரு விஷயம். தேவயானியைத் தவிர வேறு எந்த பெண்ணையும் நீ மனதாலும் நினைக்கக் கூடாது. தேவயானியோடு சர்மிஷ்டை என்ற அவருடைய வேலைக்காரி வருவாள். அவள் அசுரகுலப் பெண். அவளோடு நீ பழகக் கூடாது. அவளை நீ தொடக்கூடாது. இது என் கட்டளை. மீறினால் என் கோபத்திற்கு ஆளாவாய்'' என்று எச்சரித்தார். யயாதி சம்மதித்தான்.

ஆனால், வாழ்க்கை வேறு விதமாக இருந்தது.

தேவயானிக்கு ஆண் குழந்தை பிறந்தது. சர்மிஷ்டை தனக்கு குழந்தை இல்லாதது நினைத்து வருந்தினாள். வனத்தில் தனியாக இருந்த யயாதியை அணுகி நமஸ்கரித்தாள்.

''என்னை நீங்கள் மனைவியாக ஏற்கவேண்டும். உங்கள் மூலம் எனக்கு குழந்தை பிறக்க வேண்டும். அடிமையாக, திருமணம் ஆகாதவளாக, குழந்தையில்லாதவளாக நான் இருக்கிறேன். நாம் ரகசியமாக சந்திப்போம். ரகசியமாக வாழ்வோம்'' என்று உற்சாகப்படுத்தினாள். சர்மிஷ்டையின் அழகில் ஆசை கொண்ட யயாதி சம்மதித்தான்.

''உன்னைப் பார்த்த நேரத்திலேயே எனக்கு ஆசை வந்து விட்டது. ஆனால், முனிவருக்கு பயந்து விலகியிருந்தேன். நீயாக கேட்கிறபோது மறுக்க முடியவில்லை. நீ சொன்னது போல் ரகசியமாக இருப்போம்'' என்று அவளை காந்தர்வ விவாகம் செய்து கொண்டான்.

தேவயானிக்கு இரண்டாவது குழந்தை பிறந்தது. சர்மிஷ்டைக்கு யயாதி மூலம் மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. மிகக் கவனமாக இருந்தும் அந்த விஷயம் வெளிப்பட்டு விட்டது. ஏது இந்தக் குழந்தைகள், யார் இவர்களுக்குத் தாயார் என்று தேவயானி வினவும்போது, இந்த வனத்தில் உள்ள ஒரு தேவதையினால் எனக்குத் தரப்பட்டது என்று சர்மிஷ்டை பொய் சொன்னாள். ஆனால், அந்த குழந்தைகள் தங்களுக்கு தந்தை யயாதி என்று சொல்லி விட்டன. தேவயானி கோபமடைந்தாள். இந்த விஷயத்தை தந்தையிடம் எடுத்துப் போனாள். தந்தையும் கோபமடைந்தார்.

''தெளிவாகச் சொல்லியிருந்தேன். காரணத்தோடு சொல்லியிருந்தேன். கோபம் இல்லாமல் உனக்கு எச்சரித்தேன். இருந்தும் முட்டாளைப் போல காமவசப்பட்டு என் பெண்ணுக்கு எதிரான பெண்ணோடு நீ வாழ்ந்திருக்கிறாய். இது எவ்வளவு பெரிய மனவேதனையை என் பெண்ணுக்குத் தரும்! தனக்கு சற்றும் பிடிக்காத ஒரு பெண்ணை நீ நேசிக்கிறாய் என்று தெரிந்தால் அவள் எவ்வளவு துன்புறுவாள். அவள் வேதனைப்படவா உனக்கு திருமணம் செய்து வைத்தேன். இதுவா நீ எனக்கு செய்யும் உதவி? என்னைப் பற்றிய பலம் தெரிந்தும் மிக அடக்கமாகப் பேசியும், என்னுடைய கோபத்தைத் தாங்கமுடியாது என்று விவரித்தும் நீ பேசினாய். ஆனால், மாறாக நடந்து கொண்டாய். இளைஞன் என்பதால்தானே இது நடந்தது. வலுவுள்ள ஆண் என்பதால்தானே இது ஏற்பட்டது. யயாதி உன்னை முதுமை வந்து சேரட்டும். இப்பொழுதே இந்த கணமே நீ கிழத்தனம் பெறுக. அப்பொழுதுதான் வாலிப சேட்டைகளெல்லாம் எவ்வளவு அபத்தம் என்று தெரியும். முதுமை அடைவாய்.'' என்று ஆக்ரோஷமாக சபித்தார். அந்த கணமே யயாதி கிழவனானான்.

''இதற்கு மாற்று உண்டா?'' அவன் மன்றாடி கேட்டான்.

''எவனொருவன் மனப்பூர்வமாக உன்னுடைய முதுமையினை ஏற்று தன் இளமையைத் தருகின்றானோ அவனுக்கு உன் முதுமையை கொடுத்துவிட்டு நீ இளைஞனாக வாழலாம்,'' என்று அதற்கு பரிகாரமும் தன் மருமகனுக்குச் சொன்னார். தேவயானிக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் அவ்விதம் நடந்து கொண்டார்.

யயாதி தன்னுடைய மகன்களிடம் போனான். தேவயானியின் இரண்டு மகன்களிடமும் தன்னுடைய முதுமையை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டான்.

(தொடரும்)

3



மகாபாரதம்

தந்தையே ஆனாலும் எந்த இளைஞன்தான் தன் இளமையைத் தியாகம் செய்துவிட்டு முதுமையை ஏற்கத் துணிவான்?

''வாலிபம் என்பது எவ்வளவு அற்புதமான காலம்! இதை அனுபவிக்காமல் நானாக வலுக்கட்டாயமாய் உங்களிடமிருந்து முதுமையை வாங்கிக் கொண்டு என் இளமையைக் கொடுப்பதில் எனக்கு என்ன லாபம்? நீர் பெற்ற சாபத்தை நீர்தான் அனுபவிக்க வேண்டும். உங்களுடைய செல்வத்தை அனுபவிப்பதாலேயே உங்களுடைய சாபத்தையும் அனுபவிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. ஒரு பொழுதும் உன்னுடைய முதுமையை நான் ஏற்க மாட்டேன்'' என்று மறுதலித்து விட்டான் ஒரு மகன்.

பாலகுமாரன்

தேவயானியின் அடுத்த பிள்ளையைக் கேட்க, ''இளமையைக் கொடுத்துவிட்டு முதுமையை வாங்கிக்கொள்ளவா? மறுபடியும் கொடுத்து விடுவதாகச் சொல்கிறாயே, உன்னை எப்படி நம்புவது? இளமையை ருசித்தவன் எவனும் முதுமையை விரும்பமாட்டான். முதுமை அடைந்து தள்ளாடி நிற்கிற நீ இளமையை அடைந்தவுடன் அந்த இளமையோடு இருக்கத்தான் விரும்புவாயே தவிர ஒருபொழுதும் மறுபடியும் முதுமையை என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளமாட்டாய். என்னை ஏமாற்றிவிட்டு எங்கேனும் ஓடிவிடுவாய். எனவே தன் தந்தையை திருடன் என்ற நினைப்பிலேயே விலக்கி வைக்கிறேன். உமக்கு ஒரு பொழுதும் உதவ மாட்டேன்'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டான் இரண்டாவது மகன்.

சர்மிஷ்டையின் முதல் மகன் வாய் விட்டு சிரித்தான்.

''நீ ஏற்கனவே பாவம் செய்தவன். பாவம் செய்யத் தயங்காதவன். மிகச் சிறந்த வலுவுள்ள சுக்கிராச்சாரியாரையே பலகாலம் ஏமாற்றி வந்தவன். என்னை ஏமாற்றமாட்டீர் என்பது என்ன நிச்சயம்? உம்மால் சுக்கிராச்சாரியாரையே அசிங்கப்படுத்த முடியுமானால் என்னை எது வேண்டுமானாலும் செய்யலாம். உம்மை நான் மனிதனாகவே மதிக்கவில்லை. உமக்கு இந்த கோரரூபம் நன்றாக இருக்கிறது. இவ்விதமாகவே இருந்துவிடுங்கள். இது ஞானம் பெற நல்ல வழி'' என்று கொக்கரித்தான்.

இரண்டாவது பிள்ளை தீவிரமாக யோசித்தான்.

''தண்டனை என்றுதானே தந்திருக்கிறார்கள்? செய்த தவறுக்குப் பிராயசித்தம் செய் என்றுதான் இந்த உருவத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதை விட்டு விட்டு தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று ஏன் நினைக்கிறாய்? அப்பொழுது பிராயசித்தம் செய்ய வேண்டிய தன்மை உமக்கு இல்லையல்லவா? தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம்தான் இருக்கிறதல்லவா? இப்படி தப்பிக்க நினைப்பவன், என்னிடமிருந்தும் தப்பித்துக் கொள்ள மாட்டாய் என்பது என்ன நிச்சயம்? உன்னை எப்படி நம்புவது? நீ மனிதன் அல்ல. நீ உண்மையை ஏற்க மறுக்கிறாய். பொய்மையை முன் நிறுத்துகிறாய். என்னை விட்டு விலகு. பொய்யானவர் தந்தையாயினும் விலக்கப்படவேண்டியவர்.''

யயாதி திகைத்தான். இரண்டாவது பிள்ளையை விட்டு நீங்கினான். சர்மிஷ்டையின் மூன்றாவது பிள்ளையின் பெயர் புரு. அழகன். இளமையானவன். நல்லொழுக்கம் மிக்கவன். அமைதியானவன். தந்தையின் மீது மிகப் பெரிய மரியாதை வைத்திருப்பவன். திக்கித் திணறி தள்ளாடியவாறு தன் தந்தை தன் ஆசையை தெரிவித்தபோது அவன் மனம் நெகிழ்ந்து போனான். ''ஒரு தந்தைக்கு மகன் எல்லாவிதமான உதவிகளும் செய்துதான் ஆகவேண்டும். தந்தை சௌக்கியமாக இருக்கவேண்டும் என்றுதான் நினைக்கவேண்டும். தந்தையினுடைய சுகம் முக்கியம் என்று உணர்வது ஒரு மகனுடைய கடமை. நான் இதை விருப்பத்தால் செய்வதைவிட இது எனக்கிட்ட கட்டளையாகவே கருதிச் செய்கிறேன். என் கடமை என்று செய்கிறேன். தயவுசெய்து உங்களுடைய முதுமையை எனக்குக் கொடுங்கள். விருப்பமான நாள்வரை நீங்கள் இளமையோடு இருங்கள். ஒருவேளை இளமையை திருப்பித்தர மனமில்லாவிட்டாலும், அதுபற்றி எனக்கு கவலையில்லை. இளமை எப்படிச் சிறந்ததோ அதே போல முதுமையும் ஒரு நல்ல வாழ்க்கைதான். உங்களைப் பார்க்கும்போது இந்த நிலை எப்படி இருக்கும் என்று அறியத் தோன்றுகிறது. நிற்க முடியாது, வாயில் எச்சில் ஒழுக, கண்களில் நீர் பெருக, மூச்சு முட்ட, எதையேனும் பிடித்துக் கொண்டு நிற்கும் உங்களைப் பார்க்கும்பொழுது அணைத்துத் தேற்ற வேண்டும் என்று தோன்றுகிறது. என்னை அணைத்துக் கொண்டு உங்கள் முதுமையை பரிமாறிக் கொள்ளும். என் இளமையை எடுத்துக் கொள்ளும். சௌக்கியமாக இரும்,'' என்று மனமாறச் சொன்னான்.

இளமையும் முதுமையும் இடம் மாறின.

யயாதி இளமை பெற்று தேசம் முழுவதும் சுற்றினான். பல்வேறுவிதமான இன்பங்களில் ஈடுபட்டான். விதவிதமான உணவும் விதவிதமான பெண்களும், விதவிதமான ஆட்டம் பாட்டங்களும், பயணங்களும் அவனை சந்தோஷப்படுத்தின. என்ன செய்தாலும் மனதிற்கு திருப்தி இல்லை என்பது அவனுக்குத் தெரிந்தது. எவ்வளவுநாள் நீடித்தாலும், போதும் என்ற நிலை வரவே வராது என்பது அவனுக்குப் புரிந்த யயாதி தன் மகனை நோக்கிப் போனான். மிகுந்த நன்றியுடையவனாய் ''இதோ என்னுடைய இளமையை எடுத்துக் கொண்டு நான் வழங்கிய முதுமையைக் கொடுத்துவிடு. வாழ்க்கை அலுப்பானது. நீண்ட அனுபவங்களால் வாழ்க்கை நிறைந்து விடாது. திரும்பத் திரும்ப அனுபவிக்கின்ற விஷயங்களால் மனம் திருப்தியுறாது. எனவே திருப்தி அடைய வேறு ஏதோ ஒன்று தேவை. அது என்ன என்பதை முதுமையில்தான் தெளிவாக உணரமுடியும். இளமை இருக்கும் போது மனம் பல்வேறு சுகங்களில் நாட்டம் பெறுகிறது. எனவே, புரு, என் இளமையை எடுத்துக் கொண்டு நான் வழங்கிய முதுமையை திருப்பிக் கொடு'' என்று பிரியத்துடன் கேட்டான்.

இளமையும் முதுமையும் இடம் மாறின.

யயாதி தான் அடைந்த அனுபவத்தின்பால் மிகச்சிறந்த விஷயங்களை உலகத்திற்குச் சொன்னான் என்கிறது இந்த புராணம். யயாதி சொன்ன விஷயங்கள் மிக நீண்டவை. அவன் தன் மகனுக்கு உபதேசித்தான். மகன் அதை அமைதியாய் கேட்டுக் கொண்டான். மெல்ல சிரித்தான்.

''அப்பா, ஒரு விசித்திரம் நடந்திருக்கிறது. பதினாறு வயதில் என் இளமையைக் கொடுத்தேன். ஐம்பது வருடம் கழித்து என் அறுபத்தாறு வயதில் மறுபடியும் என் பதினாறு வயது இளமை வந்திருக்கிறது. இப்போது எனக்கு வயது அறுபத்தி ஆறு. ஆனால், என் உடம்புக்கோ பதினாறுதான். அதே நேரம் என்



மனம் முதுமையைப் பற்றி தெளிவாக அறிந்திருக்ருக்கிறது. அதுவும் தவிர உங்கள் அனுபவங்களிலிருந்து கொடுத்த இந்த சாரம் எனக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. ஐம்பது வருடங்கள் காணோம் அப்பா. எங்கே போயிற்று? என் தமையனார்களெல்லாம் வயதாகியிருக்கிறார்கள். என்னைச் சுற்றியுள்ள மந்திரிகளெல்லாம் கிழவர்களாகி விட்டார்கள். நான் நட்ட சிறிய கன்று பெரும் மரமாகிவிட்டது. என்னுடைய குதிரைகள் இறந்து அவற்றினுடைய பேரக்குதிரைகள் வளர்ந்து வருகின்றன. என்னுடைய தாயார் மரணப்படுக்கையில் இருக்கிறார். ஆனால், என்னைப் பாருங்கள். இளமையாக, தெளிவாக, உற்சாகமாக இருக்கிறேன்.

''அப்பா, இது சாபமா, வரமா? வரம் அப்பா. நீங்கள் எனக்கு வரம் கொடுத்திருக்கிறீர்கள். இளமையானபோதே ஐம்பது வருடத்திற்கு அப்பால் மறுபடியும் இளமையைப் பெற்று முதுமையின் அனுபவத்தைக் கொண்டு உங்களுடைய தர்ம நியாயத்தையும் காதுபட கேட்டிருக்கிறேன். என்னை விட சிறந்தவன் இந்த உலகத்தில் உண்டோ?'' என்று சொல்லி, தந்தையை வணங்கினான் பூரு.

மகாபாரதத்தில் சொல்லப்படுகின்ற அற்புதமான கதை இது. ஒரு கணம் உங்களை பூருவாக நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் வயது பதினாறு. ஐம்பது வருடங்கள் கழித்தும் உங்களுக்கு வயது பதினாறு. அதே நேரம் முதுமையைப் பற்றி உங்களுக்கு முழுதும் தெரியும் என்றால், இதை யோசிக்க முடியும் என்றால் நீங்கள் ஞானத்தின் வாசலை திறந்துவிட்டீர்கள் என்றே அர்த்தம்.

மகாபாரதம் வைசம்பாயனரால் ஜனமேஜயனுக்கு சர்ப்பயாகம் செய்யும்போது சொல்லப்பட்டது. அங்கே இதை செவிமடுத்த சூதர், நைமிசாரண்யத்தில் உள்ள முனிவர்களுக்கு விளக்கத் துவங்கினார். மகாபாரதம் முழுவதும் இப்படித்தான் விளக்கப்படுகிறது.

ஜனமேஜயன் என்கிற அந்த மன்னன் யாகத்தின் நடுவில் இளைப்பாறிக் கொண்டிருக்கும்பொழுது இந்த இளைப்பாறலின் சுகத்தை அதிகப்படுத்த வைசம்பாயனரிடம் மகாபாரதம் கேட்கத் துவங்கினான். வெறுமே சொன்னதை கேட்கின்ற சிறுபிள்ளையாக இல்லாது அந்தக் கதையில் ஆழ்ந்து மனம் செலுத்தி அதில் உள்ள சந்தேகங்களையெல்லாம் கேள்விகளாக்கி வைசம்பாயனரிடம் கேட்கத் துவங்கினான்.

''யயாதி புருவிடம் ராஜ்ய பரிபாலனத்தை ஒப்படைத்துவிட்டு போகும்போது அவரிடம் என்ன உபதேசம் செய்தார், அந்த விவரம் என்ன? முதுமையை கொடுத்து இளமையை நன்கு அனுபவித்த யயாதி தவத்தாலும் மிகச் சிறந்தவர் என்று கேள்விப்படுகிறேன். கடுமையான தவமும், நல்ல அனுபவங்களும் உலக வாழ்க்கையில் நீண்ட பிடித்தமும் உள்ள அவர் மிகச்சரியான விஷயங்களை சொல்லியிருப்பார் என்றும் எண்ணுகிறேன். தயவு செய்து யயாதி சொன்ன உபதேசங்களை எனக்குச் சொல்லுங்கள். நாங்கள் கேட்க ஆவலாக இருக்கிறோம்.'' மகாபாரதம் சம்பவங்களின் தொகுப்பு அல்ல. மனிதர்களின் உணர்ச்சி கொப்பளிப்பை வெளிக்காட்டுகின்ற கதை மட்டும் அல்ல. அது நல்ல நீதி நூல் என்பதை இடையிடையே அது சொல்லிக்கொண்டு தான் இருக்கிறது. விளக்கிக் கொண்டிருக்கிறது. அங்கு வரும் உத்தமமான மனிதர்கள், வாழ்வு பற்றியும் இகலோகம், பரலோகம் பற்றியும், மரணம் பற்றியும், மரணத்திற்கு அப்பால் உள்ள நிலை பற்றியும் மிகத் தெளிவாகச் சொல்கிறார்கள்.

இல்லற வாழ்க்கையின் நியமங்கள் மட்டுமில்லாது அதற்குப் பிறகு என்ன என்பதையும் அவர்களால் விவரிக்கப்படுகிறது. அது இன்று வரையிலும் மிகச் சிறந்த விஷயமாக போற்றப்படுகிறது. இதுதான் மகாபாரதத்தின் தனிச்சிறப்பு. அது நேற்றைய விஷயமல்ல. புராணக்கதை அல்ல. எப்போதோ, எங்கேயோ நடந்தது அல்ல. இன்றைக்கும் அந்த செய்திகள் நமக்கு உவப்பாக இருக்கின்றன. உதவியாக இருக்கின்றன.

''அருமை மகனே புரு, யமுனைக்கும், கங்கைக்கும் இடைப்பட்ட இந்த இந்திர பிரஸ்தத்திற்கு உன்னை மன்னனாக்குகிறேன். இதுதான் பூமியின் நடுபாகம். இதைவிட செழிப்பான இடம் உலகில் எதுவும் இல்லை. இதன் எல்லைகளை உன் சகோதரர்கள் ஆட்சி செய்வார்கள். இந்த இடத்தில் வலிவுமிக்க இந்த மக்களை நீ ஆட்சி செய்வாயாக. புரு, எவனுக்கு சக்தி இருக்கிறதோ அவன் பொறுமையாக இருக்கிறான். எவனுக்கு சக்தி இல்லையோ அவன் பதட்டமடைகிறான். அகம்பாவி, அமைதியானவனைக் கண்டு ஆத்திரமடைகிறான். வலுவில்லாதவன் வலுவுள்ளவனைக் கண்டு கோபமடைகிறான். தரித்திரன் பணக்காரனைக் கண்டு துவேஷம் அடைகிறான். கோபம் உள்ளவன் கோபமில்லாதவனைக் கண்டு வியந்து புறம் கூறுகிறான்.

எனவே, இம்மாதிரியான துவேஷ செயல்களில் ஈடுபடாமல் உன்னுடைய சக்தியை வளர்த்துக் கொள். உன் பலத்தை பெருக்கிக்கொள். சிறிதளவும் கடும் சொல் இல்லாத வாழ்க்கையை ஒரு மனிதன் வாழ வேண்டும். கடும் சொல் என்பது வாயில் பிசாசை வைத்து வளர்ப்பதைப்போல. அது நல்ல மனிதர்களின் மனதில் வேதனையை உண்டாக்குகிறது. நல்ல மனிதர்கள் கடும் சொல்லுக்கு பதிலாய் கடும் சொல் சொல்ல மாட்டார்கள். அதற்கு பதிலாக இப்படி சொல்லிவிட்டானே என்று குமுறுவார்கள். அந்த குமுறல் மிக சக்தி வாய்ந்தது. கடும் சொல் சொன்னவனை எரித்துவிடக் கூடியது. அவன் புண்ணியத்தையெல்லாம் உறிஞ்சக்கூடியது. நல்லவர்களிடம் அதாவது, சாதுக்களிடம் மிக பவ்யமாக இருக்க வேண்டும். அவர்கள் விருப்பம் என்ன என்று கேட்டு அதற்கு உதவியாக இருக்க வேண்டும்.

மன்னன் மட்டுமல்ல. ஒரு தேசத்தின் மக்களும் நல்லவர்களை போற்றி பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். செய்கையாலும், சொல்லாலும் அமைதியாக இருக்க வேண்டும். பூஜைக்குரியவர்களை பூஜிக்க வேண்டும். மன்னனானவன் மற்றவருக்கு தானம் கொடுக்க வேண்டும். மற்றவரிடமிருந்து எதுவும் பெறக்கூடாது என்று உபதேசித்தேன்'' என்று விளக்கினார்.

அப்போது இந்திரன் அவரை நோக்கி, நீங்கள் தவத்தில் யாருக்கு சமமானவர் என்று சொல்லுங்கள் என்று வினவினார்.

எனக்கு இணையாக தேவ, மனித, கந்தர்வ மகரிஷிகளில் யாரையும் ஈடாகக் கருதவில்லை என்று யயாதி பதில் சொன்னார். இந்திரன் திடுக்கிட்டான். இவ்வளவு கர்வம் ஆகாது. இது ஆராயாமல் சொல்லப்பட்ட பேச்சு. இதற்கு உண்டான பலனாக நீங்கள் இங்கிருத்தல் தகாது. இந்த இடத்திலிருந்து விலகி மறுபடியும் பூமிக்குச் சென்று அங்கு தவம் செய்து மறுபடியும் சொர்க்கத்திற்கு வாருங்கள். கர்வம் சொர்க்கத்தில் தவறான விஷயம் என்று அவரை நகர்த்தினான். அவர் கீழே விழத் துவங்கினார்.

பெரிய சுடராக சூரிய மண்டலத்திலிருந்து அவர் கீழே வருவதைப் பார்த்து முனிவர்கள் பலர் அவருக்கு அருகே வந்தார்கள். ''நீங்கள் யார்?'' என்று வினவினார்கள்.

''மகான்களே, நான் கீழே விழுந்து கொண்டிருப்பதால் உங்களை வணங்க முடியவில்லை. நீங்கள் விசாரித்ததால் நின்று உங்களை வணங்குகின்றேன். என்னுடைய புண்ணியம் குறைந்து போனதால் பாவம் பீடிக்கப்பட்டு நான் சொர்க்கத்திலிருந்து கீழே விழுந்து கொண்டிருக்கிறேன். எல்லோரையும்விட நான் சிறந்தவன் என்று கருதியதால்தான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது. கர்வம்தான் எல்லா பாபங்களுக்கும் ஆரம்பம். நெல் முனையளவும் பாவம் செய்யாதவர்தான் சொர்க்கத்தில் இருக்க முடியும். கர்வ தூண்டுதலால் மற்ற எல்லா விஷயங்களும் தவறாகிப் போகும். எனவே அவர்களை சொர்க்கம் உடனடியாக விலக்கும்.

செல்வம் அதிகம் சேரும்போது இன்னும் அடக்கமாக இருப்பதுபோல, நல்ல நிலைமை வரும்போது இன்னும் பவ்யமாக இருக்க வேண்டும். அது இல்லாததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது.

ஏன் கர்வம் ஏற்படுகிறது? நான் என்ற தன்மை அதிகரிப்பதால் ஏற்படும் சிக்கல் அது. விதியே பலவான் என்ற நினைப்பு வந்துவிட்டால் நான் என்ற அகங்காரம் வரவே வராது. சொர்க்கம் சுகம் என்றும், ஆனால், சுகங்கள் நிலையாமை கொண்டது என்பதையும் நான் நன்கு அறிந்துகொண்டேன். எந்த புள்ளியில் நான் தவறு செய்தேன் என்பதையும் தெரிந்துகொண்டேன். விதியின் வலிமைக்கு முன்னால் நான் எதுவும் இல்லை. அது மேலிருந்து கீழே வரும்போது எனக்கு புரிந்து போயிற்று. ஒருவன் தன் வலிமையை தானே வாய்விட்டு கூறுதல் என்பது அபத்தம். இது அடங்காத குணம்.''

''தேவலோகத்திலிருந்து திரும்பி வருகின்ற நீங்கள் ஒரு சூட்சம உருவத்தோடு இருக்கிறீர்கள். நீங்கள் எப்படிப் போய் பூமியை அடைவீர்கள். அதனுடைய மாற்றம் எத்தகையது. இதை எங்களுக்குச் சொல்ல வேண்டும்.'' இதை அந்த ரிஷிகள் கேட்டார்கள்.

''சொர்க்கத்திலிருந்து கீழே விழும் உயிர் நீராக பூமியை வந்தடைகிறது. அந்த நீர் பூமியில் கலந்து விருட்சங்களில் ஏறி காயாக, கனியாக மாறுகிறது. பூக்களின் வாசமும் அவ்விதம்தான். அந்த காய் கனிகளை உண்ட மனிதர்கள் அந்த ஜீவ சக்தியை தன்னுடைய உடம்பிலே தேக்கிக்கொள்கிறார்கள். அவர்கள் உடம்பிலே அது நன்கு கலந்து ரத்தத்திலிருந்து சுக்கிலத்திற்கு மாற்றப்பட்டு அந்த சுக்கிலத்தின் வழியாக ஒரு கர்ப்பத்தை அடைகிறது. அந்த கர்பத்திற்குள்ளும் இந்தவிதமான ரசங்களின் சுவை இருக்கிறது. அவையும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. அந்த ரசமானது கருவாக மாறி அந்த கருப்பையினுள்ளே இருக்கின்ற சக்தி அதன் உடம்பை பேணி பாதுகாத்து வளர்த்து ஒரு உருவமாக்கி பிறகு சரியான காலத்தில் பூமிக்கு யோனியின் வழியே வெளிவருகிறது. சூட்சமத்திலிருந்து மனிதனாக ஏற்படுகின்ற மாற்றம் இப்படித்தான் நிகழ்கிறது. மனிதன் மட்டுமல்ல, புழு பூச்சி, பறவை மிருகங்கள் எல்லாமும் இப்படித்தான் தன் கர்ம பலனை இந்த மாற்றத்தின் மூலம் அனுபவிக்கின்றன.''

(இந்த இடத்தில் ஒரு விஷயத்தை யோசிக்க வேண்டியிருக்கிறது. மனிதர் சொர்க்கத்திலிருந்து கீழே வரும்போது மனிதராகத்தான் பிறக்க வேண்டுமென்பதில்லை. புழுவாகவோ, பூச்சியாகவோ, மிருகமாகவோ, பறவையாகவோ பிறக்கலாம். ஜனத்தொகை அதிகரிக்கிறதே, அப்படியானால் என்ன அர்த்தம். மறுபிறவி என்பது எப்படி இருக்கும். என்றெல்லாம் கேட்டவர்களுக்கு இந்த பதில் சூட்சமமாக விடையளிக்கிறது. நம்புவதும், நம்பாததும் அவரவர் விருப்பம்.)

''யயாதி அவர்களே இப்போது மரணம் பற்றி சொல்லுங்கள். உடம்போடு கூடிய இந்த ஜீவன் மரணத்திற்குப் பிறகு அதாவது உடம்பை எரித்த பிறகு, புதைத்த பிறகு என்னவாக மாறுகிறது?''

யயாதி புன்சிரிப்போடு பதில் சொன்னார். ''உடம்பிலிருந்து ஜீவனானது ஒரு காற்றைப்போல வெளிப்பட்டு சுவாசம் இருக்கும்போதே கனவு காண்கிறோமே அந்த மாதிரியான நிலைக்கு இறங்கி அந்த இடத்திலிருந்து தெளிவற்ற சப்தங்களை கேட்டபடி, உச்சரித்தபடி வேறு லோகங்களுக்கு பாவ, புண்ணியங்களின் தகுதிக்கேற்ப பயணப்படுகிறது. என்னென்ன பாவம், எந்தெந்த இடம் என்பதையெல்லாம் நான் விளக்கிக்கூற விரும்பவில்லை. கனவு என்பது மரணத்திற்குப்பிறகு ஏற்படும் நிலை என்பதாய் ஓரளவிற்கு புரிந்துகொள்ளலாம்.''

''பூமியில் மக்கள் எந்தவிதம் வாழ வேண்டும்?''

''பிரம்மசாரிகள் ஒரு குரு கூப்பிட்ட பிறகுதான் அவருக்கு அருகே போக வேண்டும். அவர் எழுவதற்கு முன்பு எழுந்து, அவர்



உறங்கிய பிறகு உறங்கி அவருக்கு சேவை செய்ய வேண்டும். மிக கவனமாக அவர் கற்றுக்கொடுப்பதை புரிந்துகொள்ள வேண்டும். அவருக்குண்டான உணவை தேடித் தரவேண்டும். குரு பத்தினியை தாயைப்போல நமஸ்கரிக்க வேண்டும். கிருகஸ்தர்கள் சதாகாலமும் அதிதி உபசாரம் செய்ய வேண்டும். விருந்தினர்களை உபசரிக்க தயாராக இருக்க வேண்டும். படிக்கும் பிரம்மசாரிகளுக்கும், துறவிகளுக்கும் உதவி செய்பவராக வாழ வேண்டும். பெண்களை நிந்திக்காமல் வாழ்க்கை நடத்த வேண்டும்.

குடும்ப பாரம் சுமந்து குழந்தைகள் பெரியவர்கள் ஆனபிறகு அந்த தம்பதியர் வனத்திற்கு போக வேண்டும். காய்கனிகளை உண்டு எந்த பாரமும் இன்றி அமைதியாக வாழ வேண்டும். அங்கேயும் மனைவியின் பிரிவிற்குப் பிறகு அல்லது அதற்கு முன்னரே துறவு மேற்கொண்டு புலன்களை அடக்கி, மிகக்குறைவாக சாப்பிட்டு சதா நேரமும் ஆத்ம விசாரத்திலேயே ஈடுபட வேண்டும். இந்த மாதிரியான வாழ்க்கையே உத்தமமானது. இதுவே முக்தியை அளிக்க வல்லது.’’

‘‘சன்யாசியைப் பற்றிச் சொல்லுங்கள்,’’ ஒரு மகரிஷி கேட்க, யயாதி சொல்லத் துவங்கினார்.

‘‘சன்யாசி கிராமத்தில் இருந்தால் அவருக்குப் பின்னே காடு இருக்கிறது. சன்யாசி காட்டில் இருந்தால் அவருக்குப் பின்னே கிராமம் இருக்கிறது’’ என்று சொல்லிவிட்டு அமைதியானார்.

‘‘நீங்கள் சொல்வது புரியவில்லை. பின்னே இருக்கிறது என்றால் என்ன அர்த்தம்?’’

‘‘ஒரு சன்யாசியை அவர் வனத்தில் இருந்தாலும் கிராமம் அவரைத் தேடிப்போய் பார்த்து க்ஷேமலாபங்கள் விசாரித்து அவருக்கு உண்டான உணவை தரவேண்டும். கோமணமும், போர்த்திக் கொள்கின்ற சால்வையும் வழங்க வேண்டும். அந்த சன்யாசியை அந்த கிராமம் பின்னே நின்று பாதுகாக்க வேண்டும். அதே சன்யாசி கிராமத்தில் இருந்தால், அவர் கிராமத்தில் இருப்பினும், அந்த ஆரவாரத்திற்கு நடுவே இருப்பினும் ஒரு காட்டில் இருப்பதுபோல ஒரு காட்டினுடைய அமைதியை தனக்குள்ளே கொண்டிருக்க வேண்டும். அவர் சிந்தனை தனிமையில் இருப்பதாக ஆள் அரவமற்ற வனாந்திரத்தில் இருப்பதாக இருக்க வேண்டும்’’ என்று சொல்ல, மகரிஷிகள் சந்தோஷமாக அவரை நோக்கி கைகூப்பினார்கள்.

‘‘சிரார்த்தம் செய்வது முக்கியமானதா? உண்மையான சிரார்த்தம் எப்பொழுது முழு பலனை அளிக்கிறது?’’

‘‘சிரார்த்தத்தை நடத்தி வைப்பவரும், சிரார்த்த நேரத்தில் பரிமாறுபவரும், சிரார்த்தம் செய்பவரும் ஒரே மனநிலையில் இருந்தால் அந்த சிரார்த்தம் உத்தம பலனை தருகிறது. நல்ல அந்தணர் மந்திரத்தில் முழு பலத்தையும் தெரிந்தவன் சிரார்த்த காரியங்களை சோம்பல் இல்லாமல் சிரத்தையுடன் செய்பவன் அப்படி செய்வதின் அர்த்தத்தை யார் செய்கிறார்களோ, அவருக்கு விளக்குபவன் கிடைத்தால் அதுவே உத்தமமான சிரார்த்த காலம்.

இம்மாதிரி அந்தணர்களால்தான் சிரார்த்தம் முழுமையடைகிறது. பித்ருக்கள் அந்தணருக்கு அளிக்கும் உணவாலும், கையிலிருந்து வழியும் நீராலும் மிகுந்த சந்தோஷத்தையும், திருப்தியையும் அடைகிறார்கள். நேரே இருக்கும் மனிதர்களைவிட பித்ருக்களுடைய ஆசீர்வாதம் பல மடங்கு பலம் வாய்ந்தது. அதைப் பெறுகிறவன் மிகப்பெரிய புண்ணியம் செய்தவனாகிறான். அவன் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கிறது.’’

முனிவர்கள் நெகிழ்ந்தார்கள்.

எந்த சங்கடமும் இன்றி கேட்ட கேள்விகளுக்கு உடனடியாக பதில் சொல்லும் யயாதியை பார்த்து நன்றியுடன் கைகூப்பி நின்றார்கள்.

‘‘எங்களுடைய புண்ணியங்களை தருகிறோம். நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். மறுபடியும் சொர்க்கலோகம் போங்கள்’’ என்று விண்ணப்பித்தார்கள்.

‘‘நான் சத்திரியன். நான் யாசகம் வாங்க மாட்டேன். யாசகம் வாங்கும் உரிமை அந்தணர்களுக்கு மட்டுமே இருக்கிறது. சத்திரியர்கள் தானம் தரலாமே தவிர பெறக்கூடாது. அந்தணன் வாழ்க்கை வேறு எந்தவிதமாகவும் இல்லாமல் யாசகத்தின் மூலமாகத்தான் இருக்க முடியும். அப்போதுதான் அவர் தன்னுடைய கடமைகளில் கவனமாக இருக்க முடியும். உணவு பற்றிய கவலையோடும், உடைகள் பற்றிய கவலையோடும் அவர் இருப்பின் வேதபாடம் படிப்பது கடினமாகி விடும்.’’

இன்னும் இன்னும் யயாதியிடம் கேட்க வேண்டும் என்ற ஆவல் இருந்தாலும் யயாதியினுடைய நலன் கருதி அவர்கள் விலகிக் கொண்டார்கள்.

யயாதி பூமியை அடைந்து பலகாலம் தவம் செய்து மறுபடியும் சொர்க்கலோகம் போனார்.

யயாதியின் கதைக்கு முன்பே, பல தலைமுறைக்கு முன்பே துஷ்யந்தனின் கதை வந்துவிட்டது. துஷ்யந்தன் வாழ்க்கை சொல்லப்பட்டுவிட்டது. துஷ்யந்தனுக்குப் பிறகு பல மன்னர்கள் ஆண்டு, பல தலைமுறைகள் கடந்து அதற்குப்பிறகு நகுஷன் என்ற மன்னனும் அவருக்கு யயாதியும், யயாதிக்கு புருவும் தோன்றினார்கள். அதற்குப் பிறகு பல மன்னர்கள் ஆண்டு கௌரவ வம்சம் கிளர்ந்து, எழுந்தது. துஷ்யந்தனின் கதைக்குப்பிறகு கௌரவர்கள் வாழ்க்கை விவரிக்கப்படும்.

(தொடரும்)

மகாபாரதம்

4

மகாபாரதக் கதையின் ஓட்டத்திற்கு ஆரம்பமாக பூரு வம்சத்தைச் சார்ந்த இந்த துஷ்யந்தன் கதை சொல்லப்பட்டு இருக்கிறது. இது மிக சுவாரஸ்யமான கதை. கணவன் - மனைவிக்கு நடுவே ஏற்படுகின்ற விவாதத்தை மிக ரசமாக இந்தக் கதை சொல்கிறது.

ஒரு பெண்ணை மனதால் கவர்வதற்கு ஒரு ஆண் செய்கின்ற முயற்சிகளும், பெண் அதற்கு மறுப்பு சொல்வதும், பிறகு தழைந்து போவதும் இதில் நிதானமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது எல்லா காலங்களிலும் ஏன் இன்று கூட நடைபெற்று கொண்டிருக்கிறது என்பதை நினைக்கும்போது வியப்பாக இருக்கிறது. மனிதர்கள் மாறவில்லை என்று சாட்சியாக இருக்கிறது.

அந்நாளில் துஷ்யந்தன் என்ற மன்னன் பரத கண்டத்தின் பெரும் பகுதியை தனி ஒருவனாகத் தன் பராக்கிரமத்தால் சீரும், சிறப்புமாய் ஆண்டு வந்தான். அவனுடைய தேசத்தில் திருடர் பயமே இல்லை. ஜனங்கள் பரஸ்பரம்



பாலகுமாரன்

ஒற்றுமையாக இருந்தார்கள். அவரவர் அவருடைய தர்மத்தை கவனமாக காப்பாற்றி வந்தார்கள். யாருக்கும் பசி இல்லை. தானியங்கள் தானாக வளர்ந்தன. உழுது பயிரிடவோ, களை எடுக்கவோ எவரும் முயற்சி செய்யவில்லை. மாணிக்கங்கள் தரையில் கொட்டிக் கிடந்தன. ஆனால், அவைகளை யாரும் வாரிப்போகவில்லை. அந்த தானியங்களும் சத்து நிறைந்ததாக, ஜீவன் மிகுந்ததாகவும் இருந்தது. வேண்டுமென்ற தானியங்களையும், பழங்களையும், காய்களையும் பக்குவப்படுத்தி உண்ணுகின்ற கலையை மக்கள் தெரிந்து கொண்டிருந்தார்கள். அதனால் திடகாத்திரமாய் நோயற்று வாழ்ந்தார்கள்.

கணக்கிடமுடியாத பெரும் காடுகளை கொண்டிருந்த அவருடைய இடத்தை அவன் விஸ்தரிக்க விரும்பினான். தன்னுடைய சதுரங்க சேனையோடு காடுகளுக்கு ஊடுபோய் கொடி விலங்குகளை வேட்டையாட வேண்டும் என்று விரும்பினான். அந்த விலங்குகள் தவறி கிராமங்களிலும், பட்டணங்களிலும் நுழைந்து ஜனங்களை பயமுறுத்துவதால் அட்டகாசம் செய்வதால் அவைகளை ஒடுக்க எண்ணினான். இது அரசருடைய மிகப்பெரிய தர்மமாக அந்நாளில் கருதப்பட்டது.

துஷ்யந்தன் கதை எறிவதில் வல்லவன். தூரத்திலிருக்கும் பகைவர் மீது கதை வீசும் பரிக்ஷேபமும், அருகில் உள்ளவனை கதை முனையால் அடிக்கும் விஷேபமும், பல சத்துருக்கள் சுற்றி இருந்தால் நாலாபக்கமும் கதையை சுழற்றி அடிக்கும் ஷேபமும், கதையின் முன் பாகத்தில் அடிக்கும் அபிஷேகமும் ஆகிய விஷயத்தில் அவன் நிபுணன். வில் வித்தையில், குதிரை, யானை சவாரியில் வல்லவன். அவன் தன்னுடைய சேனைகளுக்கு தலைமை வகித்து காடுகளுடே போய்க் கொடிய விலங்குகளை தண்டிக்கத் துவங்கினான். காட்டு யானைகள் அவன் கதையால் அடிபட்டன. ஓடி ஒளிகின்ற சிங்கம் புலி போன்ற கொடுமையான விலங்குகள் அவன் அம்பினால் குத்தப்பட்டு இறந்தன. அடிப்பட்ட விலங்குகள் மீது அவன் வீரர்கள் பாய்ந்து வெட்டிக் கொன்றார்கள்.



வேட்டையில் விருப்பமாகி விட்டால் அந்த வேட்டையும் வெற்றிகரமாக நடந்து விட்டால் தொடர்ந்து ஓடிக் கொள்ளத்தான் தோன்றும். எங்கே ஓடுகிறோம் என்ற தெளிவுகூட இல்லாது கண் பார்த்த விலங்கின் பின்னால் மனம் ஓடும். மனம் ஓடியதற்கேற்ப உடம்பும் பரவசமாகி ஓடத் தோன்றும்.

துஷ்யந்தன் ஒரு சிறு குழுவோடு வனத்திற்கு வெகு அருகிலேயே வந்து விட்டான். மிக அழகான ஒரு ஆற்றங்கரையை வந்தடைந்தான். அந்த ஆறுக்கு மாலினி என்று பெயர். அந்த ஆற்றங்கரையில் உள்ள பெரிய புல் வெளியில் கண்வ மகரிஷியுடைய ஆசிரமும் இருந்தது. அந்த ஆசிரமம் பல உறுதியான குடிசைகளால் நிறைந்திருந்தது. அந்த குடிசைகளுக்குள் கல்வியில் சிறந்த அந்தணர்கள் வாழ்ந்து வந்தார்கள். நான்கு விதமான வேதங்களை மனனம் செய்தபடியும், மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுத்தும் அமைதியாக வாழ்ந்து வந்தார்கள். அந்த வனம் அவர்களுக்கு உண்டான உணவை தாராளமாக தந்துக் கொண்டிருந்தது. தெளிவான ஆறு, மூலிகை காற்று, மிகப் பெரிய புல்வெளி, பசுக்கூட்டம், உணவுக்கான வனம் எல்லாம் இருக்கையில் அங்கு பாடம் படிப்பது முழுநேர வாழ்க்கையாக இருந்தது.

துஷ்யந்தன் அந்த ஆசிரமத்திற்குள் பிரவேசித்தான். அவன் ஆயுதங்களை களைந்து விட்டு அலங்காரங்களை எடுத்துவிட்டு தன்னுடைய சிறு குழுவோடு ஆசிரமத்திற்குள் போனான். அந்தணர்களை நமஸ்கரித்தான். கண்வ முனிவருடைய இடம் எது என்று விசாரித்துக்கொண்டு அவரை தரிசிக்க விரும்பி அதிராது நிதானமாக நடந்தான். ஒரு குழுவாக வரும் அந்நியர்களை கவனித்து அவர்களின் பவ்யத்தை பார்த்து படிப்பவர்கள் ஏறிட்டு நோக்கி தங்கள் வேலைகளில் மூழ்கினார்கள். இப்படி வெளியிலிருந்து வந்து உணவுக்கான ஏற்பாடுகளை செய்பவர்கள் வருவது வழக்கம் என்பதால் அந்த வருகையை சாதாரணமாக எடுத்துக் கொண்டார்கள். கண்வ மகரிஷியின் மிகப்பெரிய ஓலைவேய்ந்த குடிசை அரசனுக்கு கட்டிக் காட்டப்பட்டது.

தன்னுடைய வீரர்களை நிறுத்திவிட்டு அவன் மட்டும் போனான். எந்தக் காரணம் கொண்டும் யாரும் பதட்டப்படாமல் இருக்கும்படியான கவனத்தோடு நடந்து கொண்டான். அவனுடைய வீட்டைச் சுற்றி வேலி இருந்தது. வேலியின் மீது கொடிகள் படர்ந்திருந்தன. மிக அழகாக அந்த ஆசிரமம் அலங்கரிக்கப்பட்டிருப்பதை கவனித்தான். அந்த இடமே ரம்மியமான தோற்றத்தை உடையதாக இருந்தது. பட்சிகள் ஜாலம் செய்து கொண்டிருந்தன. பயமின்றி தரையில் நடந்து கொண்டிருந்தன. அவன் வந்ததும் சப்தமிட்டு கிளைகளுக்குப் போயின. பட்சிகளின் சப்தம் கேட்டு அந்த வீட்டில் இருந்த ஒரு பெண் வெளியே வந்தாள். துறவாடை

உடுத்தியிருப்பினும் மிக அழகாக மிக கம்பீரமாக இருந்தாள். வந்தவரை கண்டு நாணாது வாருங்கள். நீங்கள் யார், உங்களுக்கு என்ன வேண்டும். உள்ளே வாருங்கள் என்று படலை திறந்து விட்டாள். உட்காருவதற்கு ஆசனம் போட்டாள். குடிப்பதற்கு நல்ல நீர் எடுத்து வந்து அருகில் இன்னொரு ஆசனத்தில் வைத்தாள். மறுபடியும் உங்கள் நல்வரவாகுக. இது கண்வ மகரிஷியின் ஆசிரமம். நீங்கள் யாரைத் தேடி வந்தீர்கள் என்று மிக வினயமாக வினவினாள்.

‘‘என் பெயர் துஷ்யந்தன். நான் கண்வ மகரிஷியை தரிசிப்பதற்கு வந்திருக்கிறேன். அவர் எங்கிருக்கிறார்’’ என்று அவனும் அடக்கமாக பேச ஆரம்பித்தான். ஆனால், மனம் எதிரே இருந்த பெண்ணையே எடை போட்டது. காட்டில் கிடைத்த செழுமையான கனிகளால், காய்களால், கீரை வகைகளால், பசுவின் பாலால் செழித்து உடம்பு. கள்ளமற்ற முகம். இடையறாது வேத மந்திரங்களை கேட்டுக் கொண்டிருப்பதால் மனதில் ஏற்பட்ட சந்துஷ்டியை முகம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. உடம்பின் வளமையும், முகத்தின் அழகும் அவனை கிறங்கடித்தன. துஷ்யந்தனுடைய புத்தி சாதுர்யமும், உடம்பின் வலிவும் அரசன் என்ற கர்வமும் அந்தப் பெண்ணை அடையத் தூண்டின.

‘‘அழகிய பெண்ணே, நீ யார். இந்த இடத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறாய். கண்வ மகரிஷிக்கு நீ என்ன வேண்டும்?’’ என்று மறுபடியும் மரியாதையாக கேட்டான்.

‘‘நான் கண்வ மகரிஷிக்கு மகள்’’

‘‘நினைத்தேன். கண்வ மகரிஷி நைஷ்டிக பிரம்மச்சாரியாயிற்றே. வேறு என்ன உறவாக இருக்க முடியும் என்றுதான் நினைத்தேன். நல்லது. ஆனால், இவ்வளவு அழகாக இருக்கும் நீங்கள் அந்தண குலத்தைச் சேர்ந்தவராக எனக்குப்படவில்லை. அந்த லட்சணங்கள் உன்னிடம் இல்லை. விழிகளை தாழ்த்திப் பேசவில்லை. நேருக்கு நேர் பார்த்து பேசுகிறாய். அதே நேரம் மிகப்பணிவாக இருக்கிறாய். நீ கண்வ மகரிஷியின் சொந்தப் பெண்ணாக இருக்க முடியாது. உன் கதை என்ன? நீ யார் அறிவாயா? அறிந்திருப்பின் என்னிடம் சொல்வாயா?’’ என்று கொஞ்சலாய் கேட்டான்.

அதிகம் ஆண்களை சந்தித்திராத அவள் வாலிபத்தின் மிடுக்கோடு கூடிய ஒரு ஆணினுடைய பேச்சைக் கேட்டு அவள் சந்தோஷமானாள். உருவத்தில் மனம் லயிப்பதைவிட நிறைய பெண்கள் ஆண்களுடைய பேச்சினாலேயே கவரப்படுகிறார்கள். குழலிசை கேட்ட மான்போல திகைத்துப் போய் நின்று விடுகிறார்கள். அல்லது உள்ளுக்குள்ளே குழைந்து போகிறார்கள்.

‘‘என் வாழ்க்கை பற்றி என் வளர்ப்பு பற்றி கண்வ மகரிஷி நேரடியாக என்னிடம் சொல்லவில்லை. ஆனால், வேறு ஒரு அந்தணரிடம் சொல்லிக்கொண்டிருக்கும்போது நான் அருகே இருந்து செவிமடுத்தேன்.

முன்பு ஒரு முறை விஸ்வாமித்திரர் என்ற மகரிஷி கடும் தவம் புரிந்தார். அவருடைய தவம் தேவலோகத்தை அசைத்தது. இந்திரலோகத்தை கவலையடையச் செய்தது. தன்னுடைய தபோபலத்தால் இந்திரனுடைய பதவியை பறித்து அங்கு வந்து அமர்ந்து கொள்வாரோ என்ற பயம் இந்திரனுக்கு ஏற்பட்டது. அவன் தேவமாதர்களில் ஒருவளான மேனகையை அழைத்து எப்பாடு பட்டாகிலும் விஸ்வாமித்திரர் தவத்தை கலைத்துவிடு. அவர் ஆழ்ந்த தவத்திலிருந்து விலகி வரச்செய். இந்திரலோகத்திற்கு உதவியாகவும், எனக்கு ஆதரவாகவும் இந்த உதவியை நீ செய்துதான் ஆகவேண்டும் என்று கட்டளையிட்டார். மேனகா பயந்தாள்.



விஸ்வாமித்திரர் கடும் கோபம் உள்ளவர். அவருக்கு எதிரான சின்ன அசைவையும் எந்த உயிரினம் செய்தாலும் பொறுத்துக் கொள்ளாதவர். அவர் மிக முக்கியமாக கருதுகின்ற தவத்தை நான் கலைத்தால் என்னை கடுமையாக சபிப்பார். இது நானே வலியப்போய் ஒரு மான் பொறியில் மாட்டிக் கொள்வதைப் போல தன்மையுடையதாய் இருக்கிறது. இதைச் செய்வதற்கு எனக்கு பயமாய் இருக்கிறது என்று கண்ணீர் விட்டாள். ஆனால், இந்திரன் அவளை வற்புறுத்தினான்.

''சரி, தேவலோகத்திற்காக இந்த காரியத்தை செய்கிறேன். ஆனால், நானாக வலிந்து செய்யாது, என் அழகு இயற்கையாக வெளிப்பட்டது போல தோற்றத்தை ஏற்படுத்த வேண்டும். வாயுவை என்னுடன் அனுப்புங்கள். என் ஆடையை பறித்துக் கொண்டு போகச் செய்யுங்கள். எனக்கு உதவியாக மன்மதனையும் அனுப்புங்கள். நான் அவரோடு இருக்கும் சமயம் காட்டில் நறுமணம் வீசட்டும்'' என்று கேட்டுக்கொண்டாள்.

தூண்டுதல் என்பது அவளால் என்று மட்டுமில்லாது வெவ்வேறு செயல்களால் நிகழ்ந்தது என்பதை காட்ட விரும்பினாள். விஸ்வாமித்திரருக்கு அருகே போய் அவருக்கு பணிவிடைகள் செய்வது போல சுற்றி சுற்றி வந்தாள். அவர் முன்பு பாட்டு பாடினாள். நடனம் ஆடினாள். அங்கும் இங்கும் ஓடி அவர் கவனத்தை திருப்புவதற்கு முயற்சி செய்தாள். விஸ்வாமித்திரர் மனித வாசனையை உணர்ந்து மெல் கண்விழித்து மேனகை இடதும் வலதும் ஓடுவதை பார்த்து விஸ்வாமித்திர மகரிஷி மெல்ல அவள் மீது மனதை திருப்பினார். ஆச்சரியத்துடன் பார்த்தார். அந்த நேரம் வாயு அவள் அணிந்திருந்த உடையை பறித்துக்கொண்டான். காற்றால் அந்த உடை வெகுதூரம் போயிற்று. ஒரு செடியின் மீது படர்ந்தது. அவள் துள்ளி குதித்து நிர்வாணமாக அந்த துணியை நோக்கி ஓடினாள். இழுத்து சொருகிக் கொண்டாள் காற்றில் நறுமணம் வீசியது. மன்மதன் மலர் பாணங்களை அவரைச் சுற்றிலும் விடாது எய்து வந்தான். மேனகையின் அழகை கண்டு விஸ்வாமித்திரர் திகைத்தார். எழுந்து நின்றார். யார் நீ? இங்கு வா என்று அழைத்தார். அதற்காகவே காத்துக்கொண்டிருந்ததுபோல தன் காரியம் எளிதில் நடந்தது என்ற சந்தோஷத்தோடு அவருக்கு அருகே போய் மேனகை நின்று கொண்டாள். அவரால் தொடப்பட்டாள். மிகுந்த நாணமும் பயமும் கொண்டவளாக நடித்தாள். அது முனிவருக்கு சந்தோஷமாக இருந்தது. தனக்கு இணங்கிய ஒரு பெண்ணோடு அவர் வெகுகாலம் தன் தவத்தை முற்றிலுமாக மறந்து சந்தோஷமாக இருந்தார். மேனகை சந்தோஷப்படும்படியாக நடந்து கொண்டார்.

பருவங்கள் தோன்றி மறைந்தன. மேனகை கருவுற்றாள். அந்த மாலினி நதிக்கரையிலேயே அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்தாள். வந்த காரியம் முடிந்தது என்று அந்த குழந்தையை மாலினி நதிக்கரையிலேயே போட்டுவிட்டு தேவலோகத்திற்கு போனாள்.

தன்னுடைய தவம் கலைந்ததையும், தன்னுடைய வலிவு குறைந்ததையும் உணர்ந்து விஸ்வாமித்திரர் வெட்கப்பட்டார். அவரும் அந்த குழந்தையை விட்டுவிட்டு தவம் செய்ய வேறு இடத்திற்குப் போனார்.

''தாயாலும் தந்தையாலும் கைவிடப்பட்ட அந்த குழந்தை நான்தான். சகுந்தலை பட்சிகள் என் மீது வெய்யில் படாத வண்ணம் வேறு துஷ்ட மிருகங்கள் வந்து என்னை தின்னாத வண்ணம் தன் சிறகுகளை விரித்து என்னை போற்றி பாதுகாத்தன. நதிக்கரையில் ஸ்நானம் செய்ய வந்த கண்வ மகரிஷியின் எதிரே போய் நின்று தீனமாக அழுது என் கதையைச் சொல்லி என்னை காப்பாற்ற வேண்டின. மிகுந்த அன்போடு என் அழுகுரல் கேட்டு கண்வ மகரிஷி என்னை வாரி எடுத்துக் கொண்டார். நதியில் குளிப்பாட்டினார். துணியால் சுற்றினார். நான் அவர் தோளில் சாய்ந்து கொண்டேன். மிகுந்த பொறுப்போடு என்னை தன் ஆசிரமத்திற்கு அழைத்து வந்தார். சகுந்தலை பட்சிகள் என்னைச் சுற்றி காப்பாற்றியதால் எனக்கு சகுந்தலை என்ற பெயர் வைத்தார். இதுதான் என் கதை. நான் பூமியில் பிறந்த விதம். வளர்ந்த விதம். கண்வ மகரிஷி ஆசிரமத்தில் அவருக்காக மகளாக அவருக்கு பணிவிடை செய்து வருகிறேன்.''

''அற்புதம். அதுதானே பார்த்தேன். நீ அந்தணப் பெண்ணாக இருந்தால் என் மனம் உன்னை நாடியிருக்காது. நான் சத்ரியன். சத்ரிய பெண்தான் எனக்கு விருப்பமுள்ள விஷயம். அவர்கள் மீதுதான் என் மோகம் படரும். உன்னுடைய நடை அழகும், நிற்றலும், பார்வையும், நீ சத்ரியப் பெண் என்பதை எனக்கு இடையறாது புரிய வைத்தன. என்னை தயவு செய்து திருமணம் செய்துகொள். என்னை உன் புருஷனாக வரித்துக்கொள். எனக்கு மனைவியாகி விடு. உன்னை இந்த வனத்தின் சாட்சியாக என் மனைவியாக ஏற்கிறேன். நாம் காந்தர்வ விவாகம் செய்து கொள்வோம். என்னிடம் வா'' என்று கை நீட்டினான்.

சகுந்தலை மெல்லியதாகச் சிரித்தாள்.

''என் தந்தை பழங்கள் சேகரித்து வர வெளியே போயிருக்கிறார். அவருக்காக நான் காத்திருக்கிறேன். இத்தனை நாள் வளர்த்த தந்தையினுடைய அனுமதி பெறாது உங்களை நான் எப்படி நேசிப்பது. என்னை நீங்கள் விரும்புவது தெரிகிறது. கண்வ மகரிஷியின் அனுமதி கேட்டு அவர் சம்மதம் தெரிவித்ததும் நீங்கள் என்னை திருமணம் செய்து கொள்ளலாம். உங்களுக்கு மனைவியாக இப்போது உடன்படேன்'' என்று மறுத்தாள்.

இந்த பேச்சே அவள் ஈர்ப்பை, அவள் சம்மதத்தை துஷ்யந்தனுக்கு சொல்லிற்று.

கண்வ மகரிஷி அந்தணர். அந்தணர்கள் வாள் எடுத்து போர் செய்ய மாட்டார்கள். ஆனால், மனம் ஒருமித்து கடுமையான சாபங்கள் கொடுத்து விடுவார். அது வாளால் வெட்டுவதைக் காட்டிலும் மிக மோசமான விளைவை ஏற்படுத்தும். ஒருவேளை நான் யார் என்று தெரியாமல் அவர் என்னை மறுதலிக்கவும் கூடும். அந்த மாதிரியான சம்பவத்திற்கு இடம் தராமல் என்னை திருமணம் செய்துகொண்டால் வேறுவழி இன்றி கண்வ மகரிஷி உனக்கு என்னை தாரை வார்த்து கொடுப்பார்.

எனவே, மகரிஷி வருவதற்கு முன்பு நாம் திருமணம் செய்து கொள்ளலாம். நான் உன்னை நிச்சயம் காப்பாற்றுவேன். நான் துஷ்யந்தன். இந்த தேசத்தின் அரசன். உன்னை பட்ட மகிஷியாக்குவேன். இணை பிரியாது உன்னோடு இருப்பேன். என்னை திருமணம் செய்து கொண்டு என்னோடு ரம்மித்து இருந்தபிறகு என்னுடைய சதுரங்க சேனையை அனுப்பி உன்னை மிகப்பெரிய மரியாதையோடு நான் அழைத்து வருவேன். தங்க சிம்மாசனம் உள்ள யானையின் மீது நீ ஒரு மகாராணியைப்போல ஊர்வலம் வருவாய். ஊர்மக்கள் உன்னைக் கண்டு வியப்பார்கள். அடாடா, என்ன அழகு என்று பாராட்டுவார்கள். ஊர் அறிய, உலகு அறிய உன்னை நான் என் அரண்மனையில் மறுபடியும் விவாகம் செய்து கொள்வேன். எனவே, கர்ண மகரிஷியின் அனுமதிக்கு காத்திராது என்னை அடைவாயாக. ஒருவேளை அவர் மறுதலித்து விட்டால் உனக்கு நானும் எனக்கு நீயும் கிடைக்காமலே போகலாம். இந்த சந்தர்ப்பம் மறுபடியும் ஏற்படாமலேயே போகலாம். அதனால்தான் உன்னை கெஞ்சிக் கேட்கிறேன். தயவுசெய்து வா. என்னை திருமணம் செய்துகொள்.

காந்தர்வ விவாகம் நல்லதல்லவா. சத்திரியருக்கு முறையானதல்லவா. குலத்திற்கு எதிரான எந்த விஷயமும் செய்யவில்லையே. காந்தர்வ விவாகம் மட்டுமல்ல. உன்னை எடுத்துக்கொண்டு போகிற, கையோடு தூக்கிக்கொண்டு போகிற பைசாச திருமணமும் என்னால் செய்ய இயலுமே.

ஆனால், உன்னை நோகடிக்க விரும்பவில்லை. எனவே, நீயே விரும்பி என் கழுத்தில் மாலையிட்டால் தான் எனக்கு மகிழ்ச்சி'' என்று சொன்னான். அவன் பேச்சில் மெல்லிய பயம் மட்டும் இருந்தது.

சகுந்தலை குழம்பினாள். மனிதர்களோடு பேசி பழகாதவள். வேறு பெண்களின் துணை இல்லாதவள். பெண்களின் ஆலோசனைகள் கேட்டறியாதவள். வசீகரமான ஒரு ஆணின் பிடிவாதமான பேச்சுக்கு மனம் கரைந்தாள். அவனுடைய ஆசை வார்த்தைகள் அவளை அலைகழித்தன.

இந்த விஷயம் அன்றிலிருந்து இன்று வரை இன்னும் பலகாலம் வரை தொடர்ந்து நடைபெற்று கொண்டுதானிருக்கும். ஆணின் ஆசை வார்த்தைகள் தான் பெண்களை அலைகழிக்கின்றன.

சகுந்தலை மனம் இளகினாள்.

''எனக்கு ஒரு சத்தியம் செய்யுங்கள். எனக்கு பிறக்கும் பிள்ளையே உங்களுக்குப் பிறகு உங்கள் தேசத்தை அரசாள வேண்டும். அவனே அரசனாவான் என்ற வாக்குறுதி கொடுங்கள். அப்பொழுது நான் உங்களை திருமணம் செய்து கொள்ள சம்மதிக்கிறேன்'' என்று சொன்னாள். ஒருவேளை கண்வ மகரிஷி இவன் கூடாது என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளுக்கு இருந்தது.



துஷ்யந்தன் வார்த்தையில் நம்பிக்கை வந்தது. அவன் அழகில் மயக்கம் இருந்தது. பக்குவம் இல்லாத பருவப்பெண் சத்தியம் மிகப் பெரிய விஷயம் என்று நம்பினாள். சத்தியத்தை யாருமே மீறமாட்டார்கள் என்று அவளுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. அவன் உரத்த குரலில் சத்தியமிட்டான். அந்த வனம் அதற்கு சாட்சியாக இருந்தது. மரங்களும், மான்களும் பட்சிகளும் அவன் சத்தியத்தை செவிமடுத்தன. சகல உயிரினங்களுக்கும் நடுவில் உரத்த குரலில் அவன் செய்த சத்தியத்தை கேட்டு அவள் மனம் நெகிழ்ந்தாள். ஓடிப்போய் பூக்கள் பறித்து வந்து அவன் காலடியில் கொட்டி விழுந்து வணங்கினாள். என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கை நீட்டினாள். அவன் அவள் கரத்தை பற்றிக் கொண்டு இறுக அணைத்துக்கொண்டான்.

விரும்பிய பெண்ணை தழுவிக்கொள்வதுபோல சந்தோஷம் உலகத்தில் எதுவும் இல்லை.

கண்வ மகரிஷி திரும்புவதற்கு முன்பு துஷ்யந்தன் விடை பெற்றான். நிச்சயம் சதுரங்க சேனையை அனுப்புவதாக பலமுறை சத்தியம் செய்தான். சகுந்தலை கண்ணீரோடு விடை கொடுத்தாள். அப்படி புருஷன் அனுப்பிய படைகளுக்கு நடுவே போவதுதான் மரியாதை என்று நினைத்தாள்.

துஷ்யந்தன் மிகுந்த நிறைவோடு தொலைவே காத்துக்கொண்டிருந்த தன் குழுவோடு சேர்ந்து கொண்டான். பிறகு வனம் விட்டு வெளியேறி நாட்டை அடைந்தான். கண்வ மகரிஷிக்கு தெரிந்தால் என்ன ஆகும் என்று பயந்தான். விஷயத்தை தள்ளிப் போட்டான். மறந்தும் போனான்.

சில நாட்கள் கழித்து ஆசிரமம் வந்த கண்வ மகிரிஷி வழக்கம்போல சகுந்தலை முன் வந்து ஆசனம் தராதது பார்த்து வியந்தார்.

''என்ன ஆயிற்று உனக்கு'' என்று கேட்க, அவள் கண்ணீரோடு விழுந்து வணங்கினாள். நடந்த கதையை கூறினாள்.

''தயவு செய்து அவரை சபித்து விடாதீர்கள். அவர் என் புருஷன்'' என்று கைகூப்பி கெஞ்சினாள்.

(தொடரும்)

சகுந்தலையை துஷ்யந்தனுடன் இணைத்து வைத்த அசரீரி !

பாலகுமாரன்

மகளின் நிலை பார்த்து கண்வ மகரிஷி கலங்கினார். பெற்ற மகள் முடிவு செய்து விட்டாள். பிறகு ஒரு தகப்பன் என்ன செய்ய முடியும். அவள் விரும்பி தன்னை இழந்து விட்டாள். இதை யார் நேர் செய்ய முடியும். ஏதோ நல்லதற்குத்தான் இது நடந்திருக்கிறது என்று மனம் தேற்றிக் கொண்டார்.

"கவலைப்படாதே. நான் யாரையும் சபிக்க மாட்டேன். துஷ்யந்தன் நல்லவன். தர்மத்தின் பக்கம் நின்றிருந்த அரசன். அவனைப் பற்றி ஒரு செய்தியும் தவறாக நான் கேள்விப்பட்டதில்லை. எனவே, வெகு நிச்சயமாக தன்னுடைய சேனையை அனுப்பி உன்னை வரித்துக் கொள்வான். காத்திரு. நீ இப்பொழுது ஒருவரின் மனைவி. பத்தினி. எனவே, அவரையே நினைத்துக் கொண்டிரு. அவனுடைய அன்பையே உன் மூச்சுக் காற்றாக மாற்றிக்கொள்" என்று உபதேசம் செய்தார்.

மகாபாரதம்

5



ம.செ

துஷ்யந்தனைப் பற்றி நினைத்தபடியே அவள் ஆசிரமப் பணிகளைச் செய்தாள். அவள் வயிற்றில் கரு வளர்ந்தது. சதுரங்க சேனை வரவில்லை. இன்று வரும் நாளை வரும் என்று பொழுது போனது. சகுந்தலை அந்தக் கருவை சுமந்து வளர்த்தாள்.

சகுந்தலைக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. திடகாத்திரமாக இருந்தது. சத்ரியனுடைய எல்லா அங்க லட்சணங்களையும் கொண்டிருந்தது. அந்தக் குழந்தை சீரும் சிறப்புமாக அந்தணர்களுக்கு நடுவே கண்வமகரிஷியின் நேரடிப் பார்வையில் கம்பீரமாக வளர்ந்தது. அவனுக்கு பரதன் என்று கண்வ மகிரிஷி பெயரிட்டார்.

> “மன்னா. ஒன்று புரிந்து கொள்ளுங்கள். சத்தியம் மிகப் பெரியது. அஸ்வமேத யாகத்தின் பலனை ஒரு தட்டில் வைத்து எதிர் தட்டில் சத்தியத்தை வைத்தால் சத்தியத்தில் தட்டு தாழ்ந்துதான் இருக்கும். நீங்கள் சொன்ன சத்திய வாக்கை மறக்காதீர்கள். அதை புறக்கணிக்காதீர்கள். உங்கள் மகன் நூறு அஸ்வமேத யாகம் செய்வான். உங்கள் தேசத்தை ஆட்சி செய்வான் என்று தேவர்கள் சொன்ன வாக்கு ஒருகாலும் பொய்க்காது. உங்களுடைய மகுடம் இவனுக்கே சொந்தம்.”

இயற்கையினுடைய அரவணைப்பில், தாயினுடைய போஷாக்கில், ஞானிகளுடைய நேர் பார்வையில் பரதன் கம்பீரமாக வளர்ந்தான். ஏழு வயதில் அகலமும், உயரமுமாய் வாலிபனைப் போல இருந்தான். சிங்கக் குட்டிகளை விளையாட அள்ளி எடுத்துக்கொண்டு வந்தான். பின்னால் துரத்திய ஆண் சிங்கத்தையும் பெண் சிங்கத்தையும் உதைத்து விரட்டினான். அவற்றைக் கொடிகளால் பிணைத்து தோட்டத்தில் கட்டிப் போட்டான். அவன் பராக்கிரமத்தை கண்டு ஆசிரமத்து அந்தணர்கள் வியந்தார்கள். துஷ்யந்தனின் மகனல்லவா என்று சந்தோஷப்பட்டார்கள்.

துஷ்யந்தன் வராததை பற்றி தன் கவலையை சகுந்தலை கண்வ மகரிஷியிடம் தெரிவித்தாள்.

ஏன் வரவில்லை என்று தெரியவில்லை. தகுந்த காரணங்கள் இல்லாமல் துஷ்யந்தன் அப்படி நடந்து கொள்ள மாட்டான். புருஷன் வராது போனால் என்ன? புருஷன் இருக்கும் இடம் நோக்கி மனைவி போகலாம். உன்னுடைய மகனைக் கண்டதும் அவனுடைய தந்தை பாசம் மேலிடும். அவன் மகனை அணைத்துக்கொள்ளும் போது உன்னையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வான். எனவே, நான் சிறந்த அந்தணர்களோடு உன்னை அவனுடைய தலைநகருக்கு அனுப்புகிறேன். அங்கு போய் அரசனை சந்தித்து உன்னைப் பற்றிச் சொல். உன் மகனை அவனுக்கு காட்டு. உன் மகன் இங்கேயே வாழ்வது சரியல்ல. அவன் இடம் அரண்மனைதான்'' என்று சொன்னார்.

மிகுந்த சந்தோஷத்தோடு கண்களில் நீர் மல்க சகுந்தலை கண்வ மகரிஷியின் கால்களில் விழுந்தாள்.

''ஒரு மகளாக நான் உங்களுக்கு ஏதேனும் தீங்கு நினைத்திருந்தால் உங்கள் மனம் புண்படும்படி நடந்து கொண்டிருந்தால், உங்களுக்கு எதிராக, உங்கள் விருப்பத்திற்கு மாறாக செயலாற்றியிருந்தால் அவற்றையெல்லாம் முற்றிலும் மறந்து என்னை மன்னித்து விடும்படி கேட்டுக்கொள்கிறேன். உங்களைப் போன்றவரை தந்தையாக அடைந்தது என்னுடைய பாக்கியம். பூர்வ புண்ணியம்: எந்த குறையும் இல்லாமல் என்னை வளர்த்தீர்கள். நான் என் புருஷனைத் தேடிப்போகிறேன். என்னோடு எப்போதும் கூடவே இருங்கள். உங்கள் ஆசீர்வாதங்கள் என்னை பலப்படுத்தும்'' என்று பணிவோடு கூறினாள்.

சகுந்தலை எழுந்து பிரியும் போது முனிவரும் கண்ணீர் வடித்தார். தன் மகள் தன் நல் வாழ்க்கைக்காக வெகுதூரம் பிரிந்து போவது என்பது எந்த தந்தையையும் கலவரப்படுத்தும். முனிவரே ஆனாலும் உள்ளுக்குள்ளே வேதனை கவிழ்க்கும். கண்வ மகரிஷி சாதாரண மனிதரைப்போல கண்களில் நீர் பெருக்கி உதடு துடிக்க தன் மகளுக்கு ஆசீர்வாதம் செய்தார்.

தந்தை மகள் மீது கொண்ட பாசம் என்பது இந்த உலகத்தில் இன்றும் ஒரு பலமான கட்டுக் கயிறு. மனித வாழ்க்கையை பரஸ்பரம் பிணைப்பது இம் மாதிரி கட்டுகளே. தகுந்த துணையோடு எளிதான வழியை தேர்ந்தெடுத்து சகுந்தலை துஷ்யந்தனை நோக்கிப் போனாள்.

அந்தணர்கள் வந்திருப்பதை தெரிந்து அவர்களுக்கு துஷ்யந்தன் வரவேற்பு கொடுத்தான். தாங்கள் வந்த காரியத்தை தெரிவித்து விட்டு அந்தணர்கள் பின்னடைந்தார்கள்.

தூண் மறைவில் வெட்கத்தோடு சகுந்தலை மறைந்து நின்றாள். தன் மகனை முன் அனுப்பினாள். உயரமும், அகலமும் கொண்டு மிகுந்த களையோடு ஏழு வயது பரதன் அரசனுக்கு முன்னே போய் நின்றான்.

''மன்னா, இவன் உங்கள் மகன். பெயர் பரதன். கண்வ மகரிஷி ஆசிரமத்தில் என்னை காந்தர்வ விவாகம் செய்து கொண்டீர்கள். என்னோடு ரமித்து இருந்தீர்கள். அதன் விளைவாகப் பிறந்தவன் இந்த குழந்தை. என்னை திருமணம் செய்யும்போது இவன் பொருட்டு நீங்கள் செய்த சத்தியத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு என்ன வாக்குறுதி கொடுத்தீர்கள் என்பதை மறுபடியும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இவனை தங்கள் மகனாக ஏற்று, தங்கள் மடியில் இருத்தி இவனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்யுங்கள். இவன் உங்கள் மகன் பரதன்'' என்று பணிவோடு கூறினாள்.

துஷ்யந்தன் திகைத்தான். அவனுக்கு அந்த விஷயம் முற்றிலுமாக மறந்து போயிருந்தது. ''ரிஷிகளைப் போல காவி உடை உடுத்திக்

கொண்டிருக்கிறாய். ஆனால், நீ பேசுவது பொய்யாக இருக்கிறது. ஒரு துஷ்டத்தனம் தெரிகிறது. யாரோ ஒரு பையனை கூட்டிக்கொண்டு வந்து இவன் என் மகன் என்கிறாய். நீயும், நானும் ஒருமித்து இருந்தோம் என்கிறாய். கண்வ மகரிஷி என்கிறாய். பெரியவர்கள் பெயரை இப்படியெல்லாம் உபயோகப்படுத்தச் சொல்லி உனக்கு யார் சொன்னார்கள்?

உனக்கும் எனக்கும் திருமண சம்பந்தம் எந்த தர்மத்தோடு நடந்தது என்பது எனக்கு நினைவில் இல்லை. நீ யாருடைய மனைவி என்று தெரியவில்லை. திடுமென்று அரண்மனைக்குள் நுழைந்து இப்படி பேசுவது தவறு. நீ வேறு எங்கேனும் போய் உன் விருப்பப்படி வாழ். இங்கு உனக்கு இடம் இல்லை'' என்று சொன்னான் துஷ்யந்தன்.

சகுந்தலை துடித்துப்போனாள். தன்னுடைய பதிவிரதா தர்மத்தை கேள்வி கேட்கும் வண்ணமாக தன் புருஷனே தன் எதிரே நின்று தன்னை அவமானப்படுத்துவது தாங்காமல் உதடு துடிக்க, கண்களில் நீர் பெருக, உடல் தள்ளாட அவஸ்தைப் பட்டாள். தூணை இறுகப் பிடித்துக்கொண்டாள். ''எவ்வளவு வேகமாய் தூக்கி எறிந்து பேசுகிறீர்கள். அன்று நீங்கள் செய்த சத்தியத்தை மறந்தது மட்டும் இல்லாமல் என்னை நினைவிலேயே இல்லை என்று சொல்கிறீர்களே. இது எப்பேர்ப்பட்ட அவமானம். அன்று நீங்களும் நானும் கூடியிருந்ததை யாரும் கவனிக்கவில்லை. எந்த சாட்சியும் இல்லை என்று நினைக்கிறீர்களா. அந்தர்யாமியான இறைவன் நமக்குள் அருகேதான் இருந்தான். உங்களுக்குள்ளும் எனக்குள்ளும் இருந்தபடி நம் செயல்களை கவனித்தபடி இருந்தான். உலகம் அறியாது எவரும் எந்த காரியத்தையும் செய்துவிட முடியாது. அந்த வனத்தில் உள்ள அத்தனை விருட்சங்களும், பறவைகளும், மிருகங்களும் நமது செயலை கவனித்துக் கொண்டுதான் இருந்தன. நம் பேச்சை செவிமடுத்தன.

நியாயத்திற்கு நீங்கள் தான் வந்திருக்க வேண்டும். உங்கள் பேச்சுப்படி சதுரங்க சேனையை அனுப்பி என்னை கௌரவப்படுத்தியிருக்க வேண்டும். நானாக இங்கு என் மகனோடு வந்து விட்டதால் என்னை அவமானப்படுத்தாதீர்கள். பதிவிரதையான என்னை கேவலமாக நிராகரிக்காதீர்கள். குழந்தையை பார்த்தும் உங்களுக்கு புரியவில்லையா.

ஒரு கணவனே மனைவியின் கர்ப்பத்தில் பிரவேசித்து மகன் உருவில் பிறந்து வருகிறான். இதுவே தாய்மையின் மேன்மை. புத்திரன் தான் புத் என்னும் நரகத்திலிருந்து காப்பாற்றுகிறான். புத் என்னும் நரகத்திலிருந்து காப்பாற்றுவதாலேயே அவன் புத்திரன் என்று அழைக்கப்படுகிறான். மனிதன் புத்திரனால் புண்ய லோகத்தை காண்கிறான். பேரனால் அட்சய சுகத்தை பங்கு பெறுகிறான். பேரனின் மகனால் கொள்ளு பாட்டனார் கணங்கள் ஆனந்தமடைகிறார்கள். பரம்பரை பரம்பரை தொடர்வதால் பித்ருக்கள் குதூகலம் அடைகிறார்கள். கணவன் உலகில் இருந்தாலும் இறந்திருந்தாலும் நரகலோகத்தில் இருந்தாலும் பதிவிரதையே கணவனை பின் தொடர்ந்து வருகிறாள். பதிவிரதை முதலில் இறந்து விட்டால் பரலோகம் சென்று கணவனுக்காக காத்திருக்கிறாள். கணவன் முதலில் இறந்துவிட்டால் அவனை அனுசரித்துச் செல்கிறாள். எனவே, ஒழுக்கமுள்ள பெண்ணை மணக்க எல்லோரும் விரும்புகிறார்கள். கணவன் பதிவிரதையான தன் மனைவியை இந்த லோகத்தில் பெறுவது மட்டுமில்லாமல் பரலோகத்திலும் பெறுகிறான்.

இப்படி தன் புதல்வனுக்கு தாயாகிவிட்ட தன் தர்ம பத்தினியை ஒரு மனிதன் தன் தாயைப் போல பார்க்க வேண்டும். மனைவியாக இருக்கின்ற ஒருத்திக்கு அவனுடைய மகனால் மேலும் மேன்மை கூடுகிறது. புருஷனிடம் மரியாதை அதிகரிக்கிறது. இப்படி இருக்கும் என்னை இழிவாகப் பேசுவது உங்களுக்கு தகாது. உங்களுக்கு தீங்கை கொடுக்கும்.

உங்கள் மகன் முன்பு அவனுடைய தாயை இழிவாக நடத்துவது உங்களுக்கு அவமானத்தை கொண்டு வந்து கொடுக்கும். சினம் கொண்டாலும் மனைவிக்கு பிரியமில்லாத செயலை ஒரு கணவன் ஒருகாலும் செய்யக்கூடாது. பத்தினி என்பவள் பாதி சரீரம். பத்தினி என்பவள் செல்வம், மக்கள், உடல், தர்மம், சொர்க்கம், ரிஷி, பித்ருக்கள் அனைவரையும் ரட்சிப்பவள். மண்ணை மிதித்து தூசோடு வரும் மகனை இழுத்துக் கட்டிக் கொள்வதில் உள்ள ஒரு சுகம் தந்தைக்கு வேறு எதிலும் கிடைக்காது.

இதோ பாருங்கள். உங்கள் மகன் மிக அன்போடு உங்களை பார்த்துக் கொண்டிருக்கிறான். உங்கள் மடியில் உட்கார ஆவலோடு இருக்கிறான். அவனை புறக்கணிக்காதீர்கள். குழந்தை என் மார்போடு அணைத்துக்கொண்டிருக்கிற சுகத்தை மென்மையான வஸ்திரமோ, அழகான பெண்களோ, குளிர்ந்த நீரோ தர முடியாது. விலங்குகளில் பசுவும், கௌரவம் மிக்கோரில் முனிவரும், ஸ்பரிஸம் செய்யத் தகுந்த பொருட்களில் புத்திரனும் மிகச் சிறந்ததாகும். அவனை தழுவிக் கொள்ளுங்கள்.

மூன்றரை ஆண்டுகள் இவனை கர்ப்பத்தில் தரித்து பிறகு இவனை பெற்றேன். இவன் பிறந்த போது அசரீரி, இவன் நூறு அஸ்வமேத யாகங்கள் செய்வான் என்று வாழ்த்தியது. இல்லற தர்ம மந்திரங்கள் உங்களுக்கு மனப்பாடம் ஆகவில்லையா? மகனை நோக்கி பேசுகின்ற மந்திரங்கள் உங்களுக்கு தெரியாதா? குழந்தாய், என் ஒவ்வொரு அங்கத்திலிருந்தும் தோன்றியுள்ளாய். நீ புத்திரன்

பெண் என்பவள் நதியா.
நதி என்பது பெண்ணா?
நதியிலிருந்து பெண் தோன்றினாளா?
அல்லது நதி பெண்ணாகவே இருக்கிறதா?
ஒரு திமிர் பிடித்த அழகுமிக்க,
புத்திசாலியான வேகம் மிகுந்த ஒரு
பெண்ணாக அல்லவா இந்த நதி இருக்கிறது.

என்னும் பெயரில் என் ஆத்மாவே ஆவாய். ஆகவே நீ நூறு ஆண்டுகள் வாழ்வாய். என் வாழ்வும், என் சத்தான பரம்பரையும் உனக்கு உண்டானவை. எனவே, நீ நூறு ஆண்டுகள் சுகமாக வாழ்வாய் என்று ஆசீர்வதிப்பார்கள்.

இந்தக் குழந்தை உங்கள் உடம்பிலிருந்து தோன்றியவன். ஒரு குளத்தில் பிரதிபிம்பம் தெரிவது போல உங்கள் முகத்தை இவனில் பாருங்கள். உங்களுடைய இரண்டாவது அக்னியிலிருந்து தோன்றிய இந்த மகனை கண்குளிர பாருங்கள்.

என் வம்சத்தைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்வி உண்டா? நான் விளக்கிச் சொல்கிறேன். முன்னொரு காலத்தில் குசன் என்கிற ஒரு ரிஷி பிரம்மாவிடமிருந்து தோன்றினார். குசனுடைய மகன் குசனாபர். குசனாபருடைய மகன் காதி. காதியினுடைய மகன் விஸ்வாமித்திரர். விஸ்வாமித்திரர் தேவமாதர்களில் ஒருவரான மேனகையின் மீது காதல் வசப்பட்டு அவளோடு கூடியிருந்து அதன் மூலம் நான் பிறந்தேன். சகுந்தலை பட்சிகள் என்னை காப்பாற்றியதால் சகுந்தலா என்ற பெயர் பெற்றேன். பிறந்தபோதே என்னை தாயும், தந்தையும் புறக்கணித்தார்கள். கண்வமகரிஷி ஆதரவு தவிர, வேறு எந்த அன்பையும் அறியாதவள் நான்.

அன்று என்னிடம் நீங்கள் பிரியமான வார்த்தைகள் பேசியதால் நான் மனம் நெகிழ்ந்தேன். அன்புக்கு ஏங்கியிருந்த மனம் உங்கள் பேச்சால் குளிர்ந்து உங்களை நாடியது. மிக எளிதாக என்னை நீங்கள் கவர்ந்தீர்கள். தாயாலும், தந்தையாலும் கைவிடப்பட்ட என்னை நீங்களும் புறக்கணித்தால் என் கதி என்ன? தயவு செய்து என்னையும், என் மகனையும் ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று கை கூப்பி மண்டியிட்டு நமஸ்கரித்தாள்.

துஷ்யந்தன் வாய்விட்டு சிரித்தான்.

''ஏழு வயதா உன் மகனுக்கு! ஒரு பெரிய மரம் போல நிற்கிறான். வயதிற்கு மிஞ்சிய பலசாலியாக இருக்கிறான். தேவமாதர்களில் மேனகை உத்தமமானவள். ரிஷிகளில் விஸ்வாமித்திரர் உத்தமமானவர். அவர்கள் இருவருமே உன்னை புறக்கணித்ததற்கு காரணம் இல்லாமல் இருக்குமா. உன் வார்த்தைப்படி வைத்துக்கொண்டாலும் இதை கேட்கிறபோது நீ மகாபாபி என்றுதான் தோன்றுகிறது. அரண்மனை படி ஏறி வந்து பொய் பேசுகிறாய். ஒரு விலைமாதை போல் நடந்து கொள்கிறாய். பணத்திற்கு ஆசைப்பட்டு அரசனான என்னிடம் வந்து கதைகள் சொல்கிறாய்'' என்று கடுமையாக பேச, அவள் கோபமடைந்தாள்.

''மன்னா, ஒன்று புரிந்து கொள்ளுங்கள். சத்தியம் மிகப் பெரியது. அஸ்வமேத யாகத்தின் பலனை ஒரு தட்டில் வைத்து எதிர் தட்டில் சத்தியத்தை வைத்தால் சத்தியத்தில் தட்டு தாழ்ந்துதான் இருக்கும். நீங்கள் சொன்ன சத்திய வாக்கை மறக்காதீர்கள். அதை புறக்கணிக்காதீர்கள். உங்கள் மகன் நூறு அஸ்வமேத யாகம் செய்வான். உங்கள் தேசத்தை ஆட்சி செய்வான் என்று தேவர்கள் சொன்ன வாக்கு ஒருகாலும் பொய்க்காது. உங்களுடைய மகுடம் இவனுக்கே சொந்தம்.

ஆனால், நீங்களும், நானும் ஒன்றாக இருந்ததை சாட்சி இல்லாததால் நான் என் மகனோடு இந்த இடத்தை விட்டு நீங்குகிறேன்'' என்று கோபமாக திரும்பினாள்.

அப்போது சபை நடுங்க பெருங்குரல் ஒன்று எழுந்தது: ''மன்னா, சகுந்தலை உன் மனைவி. அவளுக்கு பிறந்த பரதன் உன் மகன். அவர்களை ஏற்றுக்கொள். புறக்கணிக்காதே. சகுந்தலை சொல்வது சத்தியம். பரதன் உன் தேசத்தை மிகச் சிறப்பாக ஆளப்போகிறான். எனவே, அவனை அழைத்து உன் மடியிலே அமர்த்திக்கொள். அவனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்''.

அசரீரி சொன்னதை கேட்டு சபை எழுந்து நின்று கை கூப்பியது. மன்னனும் எழுந்து நின்று கை கூப்பினான்.

''சபையோரே, கேட்டீர்களா இந்த அசரீரியை? சகுந்தலையை என் மனைவி என்று சொல்கிறது. பரதனை என் மகன் என்று சொல்கிறது. நான் புறக்கணித்ததால்தான் இந்த சப்தம் எழுந்தது. சகுந்தலைக்கு துணையாக நின்றது. நானாக ஏற்றுக்கொண்டிருந்தால் சகுந்தலைக்கு மரியாதை இருக்காது. பரதனுடைய பிறப்பு பற்றி கேள்வியும், கேலியும் இருக்கும். இப்போது அவை சுத்தமாக நீங்கிவிட்டன. நான் மனமுவந்து சகுந்தலையை ஏற்றுக்கொள்கிறேன்'' என்று தன் கைகள் விரித்து மனைவியையும், தன் மகனையும் தழுவிக்கொண்டான்.

பிறகு துஷ்யந்தன் சாஸ்திர விதிப்படி தன் மனைவியையும், மகனையும் பட்டாடைகளாலும், நகைகளாலும் அலங்கரித்து அவர்களை தன்னோடு யானை மீது ஏற்றி ஊர்வலமாக வரச்செய்து தன் மக்களுக்கு தன் மகனை அறிமுகப்படுததினான்.

பரதன் நன்கு வளர்ந்து தன் பலத்தால் எல்லா மன்னர்களையும் வென்று தன் தேசத்தை ஒட்டுமொத்தமாக ஒரே ராஜ்ஜியமாக மாற்றினான். பரதன் ஆண்ட தேசத்திற்கு பரதகண்டம் என்ற பெயர் வந்தது. மகரிஷியை ஆச்சாரியராக ஏற்று அஸ்வமேத யாகங்களை இடையறாது செய்யத் துவங்கினான்.

பரதன் என்ற மன்னனாலேயே கௌரவ வம்சம், பரத வம்சம் என்று சிறப்பிக்கப்பட்டது.

அந்த வனத்தினூடே கங்கை நதி பிரவாகமாக போய்க் கொண்டிருந்தது. தேரிலிருந்தபடி சற்று மேடான பகுதியில் ஏறி சந்தனு கங்கை நதியையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான். என்ன துள்ளல், என்ன மிடுக்கு, எவ்வளவு வேகம், எவ்வளவு தெளிவு, என்ன வாசனை, என்ன குளிர்ச்சி... அவன் விதம்விதமாக கங்கை நதியை கண்டு களித்தான்.

ஒரு பெண்ணினுடைய நளினத்தோடு ஒரு நதி பாய்கிறது. பெண் என்பவள் நதியா, நதி என்பது பெண்ணா? நதியிலிருந்து பெண் தோன்றினாளா? அல்லது நதி பெண்ணாகவே இருக்கிறதா? ஒரு திமிர் பிடித்த அழகுமிக்க, புத்திசாலியான வேகம் மிகுந்த ஒரு பெண்ணாக அல்லவா இந்த நதி இருக்கிறது. இப்படி ஒரு பெண் இருந்தால் எப்படி இருக்கும். அப்படி ஒரு பெண் எதிரே வந்தால் நான் என்ன செய்வேன். எனக்கு என்ன தோன்றும். ஹா, மதி மயங்குவேன். கண் கிறங்குவேன். குதிரையிலிருந்து கீழ் இறங்கி அவள் கரம் பற்றுவேன். வா என்னோடு என்று இழுப்பேன். மறுப்பாள். என்னை திருமணம் செய்துகொள் என்று கெஞ்சுவேன். பணிவாள். ஆஹா, இப்படி துள்ளலும், அழகும், திறனும் கொண்ட ஒரு பெண்ணோடு கூடுவது எவ்வளவு சுகம். நதி பெண்ணா, பெண் என்பவள் நதியாகிவிட்டாளா...

மெல்ல அந்த நதியிலிருந்து யாரோ எழுந்து வந்தார்கள். மெல்லிய வெள்ளை உடை உடுத்தி இடுப்பு அசைய, தொடைகள் நகர, நெஞ்சு குலுங்க, தோள்கள் மிளிர அவன் எதிரே தோன்றினாள். அவனுக்கு தெரிந்துவிட்டது. அந்த நதிதான் அந்தப் பெண். அவள்தான் கங்கை. அவன் திகைத்துப் போனான்.



ஆனால், இந்த சந்திப்பு திடுமென்று நடந்தது அல்ல. இது வெகுநாள் முன்பு நடந்த விஷயத்தின் விளைவு.

மஹாபிஷன் என்கிற மன்னன் மிகத்திறமையாக பூமியை ஆண்டு பரத தலைவனாகி பல யாகங்கள் செய்து சொர்க்கத்தை அடைந்தான். தேவ சபையில் அவனுக்கு நல்ல இடம் கொடுக்கப்பட்டது. தேவர்கள் அவனை மதித்தார்கள்.

அவன் யாகத்திற்காக அவனை கொண்டாடினார்கள். அப்பொழுது தேவ சபைக்கு கங்கை வந்தாள். காற்றில் அவள் ஆடைகள் நிலைகுலைந்து அவள் ஆடை நழுவி புறம் போயிற்று. அங்குள்ள தேவர்கள் அவளை பார்க்க விரும்பாது தலையை குனிந்து கொண்டார்கள். மஹாபிஷன் மட்டும் வியப்போடு கங்கையை பார்த்தான். இந்திரனுக்கு கோபம் வந்தது.

''இது சரியில்லையே. தேவ சபையில் இப்படி நடக்கக்கூடாதே. ஒரு பெண்ணைக் கண்டு மோகித்து நிற்பது என்பது பூமியின் விஷயம். இந்திர சபையில் இவ்விதம் செய்யலாகாது. செய்கிறாய் என்றால் உன்னுடைய பூமி வாசனை இன்னும் போகவில்லை என்று அர்த்தம். உன்னுடைய வினை மிச்சம் இருக்கிறது என்று அர்த்தம். இத்தனை யாகங்கள் செய்தும் உனக்குள் இருக்கின்ற ஆவல் அடங்கவில்லை. எனவே, நீ மறுபடியும் பூமிக்குப் போய் சிறிதுகாலம் வாழ்வை அனுபவித்துவிட்டு மறுபடியும் வா'' என்று கட்டளையிட்டான். மஹாபிஷன் அதை ஏற்றுக் கொண்டான். நல்ல தந்தைக்கு மகனாக பிறக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். அப்படியே ஆகட்டும் என்று தேவர்கள் ஆசீர்வதித்தார்கள்.

தன்னால்தானே இது நடந்தது என்று கங்கையும் துக்கப்பட்டாள். அவளும் சபையை விட்டு நீங்கி பூமிக்கு புறப்பட்டாள். வழியில் அஷ்ட வசுக்கள் தேவசபையிலிருந்து நழுவி வேகமாக பூமியை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள். ''எங்களுக்குத்தான் பிரச்னை. உங்களுக்குமா என்ன'' என்ற போது, ''வசிஷ்டர் அமைதியாக சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தபோது நாங்கள் ஆரவாரமாக அந்தப் பக்கம் போனோம். அவர் இருப்பது தெரியாது சப்தமிட்டோம். அவர் பூமியில் பிறக்கும்படி சாபமிட்டு விட்டார். எனவே, அதை ஏற்று நாங்கள் பூமிக்கு திரும்பிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு ஒரு உதவி செய்'' என்று கை கூப்பி கேட்டனர்.

''என்ன வேண்டும்.''

''உன் வயிற்றில் பிறக்க நாங்கள் ஆசைப்படுகிறோம். உனக்கு மகனாகப் பிறந்து உன்னிடமிருந்து பிரிந்து மறுபடி மேலே வரவேண்டும். எங்களை பெற்றவுடன் கங்கையில் தூக்கிப்போட்டு விடு'' என்று அவை கெஞ்சின. கங்கை ''சரி'' என்று ஏற்றுக்கொண்டாள்.

ஆனால், நண்பர்களே, யாரோ ஒருவரோடு கூடித்தானே உங்களைப் பெற முடியும். அப்படி கூடிப் பெற்றவனுக்கு துரோகம் செய்ய முடியுமா? எல்லா குழந்தைகளையும் நீரில் போட முடியுமா? அவனுக்கென்று அவனுடைய க்ஷேமத்திற்கென்று பிள்ளை வேண்டாமா'' என்று சொல்ல,

''ஆமாம். அவனுக்காக ஒரு பிள்ளையை நாங்கள் ஒன்று திரட்டித் தருகிறோம். எங்கள் சக்தியை அந்தப் பிள்ளை பெற்றிருப்பான். ஆனால்,,அவனுக்கு பிள்ளை இருக்காது. வசுக்கள் வம்சம் அங்கு வளராது'' என்று சொன்னார்கள். கங்கை ஏற்றாள். ஏற்றபடித்தான் சந்தனுவிடம் நோக்கி வந்தாள்.

சந்தனு யார்? மாஹாபிஷனே சந்தனுவாக பிறந்தார். எப்படி?

(தொடரும்)

ப்ரதீபன் என்ற அரசன் பரதகண்டத்தை ஆண்டு வந்தான். அவன் அமைதியானவன். ஜனங்கள் மீது மிகுந்த பிரியமுள்ளவன். யார் எது கேட்டாலும் வழங்கக்கூடியவன். காது கொடுத்து பிறர் குறைகளை கேட்கக்கூடியவன், சாதுவானவன், மஹாபிஷேகன் தேவசபையிலிருந்து வெளியேறி ப்ரதீபனுக்கு மகனாகப் பிறந்தார். சாந்தமான தகப்பனுக்கு பிறந்ததால் அவனுக்கு சாந்தனு என்று பெயர் இடப்பட்டது.



பாலகுமாரன்

மகாபாரதம்

6

தந்தைக்குத் துணை தேடிய தனயன்

ஆனால், கங்கைக் கரையில் ப்ரதீபன் அமர்ந்திருந்தபோது அவன் குணத்தால் ஈர்க்கப்பட்டு கங்கை மேலெழுந்து அவனுடைய இடது தொடையில் அமர்ந்தாள். என்னை மணம் செய்து கொள்ளுங்கள் என்று கேட்டாள். ப்ரதீபன் சிரித்தபடி மறுத்தான். ''நீ என்னுடைய இடது தொடையில் வந்து உட்கார்ந்து கொண்டாய். இது மகளுக்கும், மருமகளுக்கும் உண்டான இடம். நான் உன்னை மணம் புரிந்துகொள்ள முடியாது. ஆனால், மருமகளாக ஏற்கிறேன். என்னுடைய மகனுக்கு நீ மனைவியாக வா. அதற்கு இப்பொழுது காலம் இல்லை. சரியான காலத்தை புரிந்துகொண்டு என் மகனுக்கு துணையாக வா,'' என்று வேண்டினான். கங்கை அவனை வணங்கி விடைபெற்றாள்.

அந்த கங்கைதான் சாந்தனு முன்பு அழகாக நடந்து வந்தாள். சாந்தனுவால் கவரப்பட்டு அவன் எதிரே நின்றாள். எந்த ஒரு சந்திப்பும் தானாக நடைபெறுவதில்லை. அதற்கு மூலகாரணங்கள் இருக்கின்றன. ஒரு மனிதனை சந்தித்து பேசுவதும், அவரை நட்பாக்கிக் கொள்வதும், உறவாக்கிக் கொள்வதும், முன் வினையின் பயனாகவே நடைபெறுகிறது. இன்றளவும் அது தொடர்கிறது.

நதி, பெண்ணாக வந்தால் யாருக்கு மனம் நடுங்காது இருக்கும்? எழிலே உருவாக இருக்கும் பெண் எதிரே வந்து சிரித்தால் யார் மயங்காது போக முடியும்? சாந்தனு பிதற்றத் துவங்கினான்.

> என்ன இது. எவ்வளவு பெரிய சத்தியத்தை செய்கிறான். காங்கேயனுடைய வரலாறு பூமியில் நிச்சயம் பேசப்படும். பூமி இருக்கும் வரை காங்கேயனுடைய வாழ்க்கை சொல்லப்படும். இனி இவன் காங்கேயன் அல்ல. செயற்கரிய செயலை செய்தவன். பீஷ்மன்.

''நீ யாராய் இருந்தால் என்ன. நீ கங்கையே ஆகுக. அல்லது தேவகன்னிகையாகவோ, அப்ஸரசாகவோ அல்லது தேவலோகத்து நடனமாடும் பெண்ணாகவோ இரு. அதைப்பற்றி எனக்கு கவலையில்லை. உன் அழகு என்னை பித்தனாக்குகிறது. உன்னை மணம் புரிய விரும்புகின்றேன். எனக்கு மனைவியாகிவிடு. பரத கண்டத்தின் மிகப்பெரிய மன்னன் நான்'' என்று தன்னைப் பற்றி சொல்லி அவளை மணம்புரிய கெஞ்சினான்.

கங்கை அழகாக சிரித்தாள். ''எனக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால், என்னை திருமணம் செய்ய சில நிபந்தனைகள் உண்டு.''

''என்ன நிபந்தனையானாலும் சொல். அதை ஏற்கிறேன்.''

''என் பிரியத்திற்கு மாறாக எதையும் செய்யக் கூடாது.''

''இது ஒரு நிபந்தனையா? எந்த புருஷன் இத்தனை அழகான மனைவிக்கு எதிராக இருப்பான். அவள் பிரியத்தை மறுப்பான்? இது நிபந்தனையே அல்ல.''

''இல்லை. நான் எது செய்தாலும் அதை தட்டிக் கேட்கக்கூடாது. அது நல்லதோ, தீயதோ அதை நீங்கள் ஏற்கத்தான் வேண்டும்.''

''செய். எது வேண்டுமானாலும் செய். ஆனால், எனக்கு மனைவியாக இருந்து விடு. என்னோடு மகிழ்ச்சியோடு உறவுகொள்'' என்று கெஞ்சினான். மோகம் இப்படித்தான் பேச வைக்கும்.

பெண்ணின் அழகாலும், பேச்சாலும் கவரப்பட்ட ஆண் எந்த நிபந்தனைக்கு வேண்டுமானாலும் அடிபணிவான். யாரை வேண்டுமானாலும் அவள் பொருட்டு பகைத்துக் கொள்வான். கங்கை தன் வலக்கையை நீட்டினாள். அதை சாந்தனு இறுக பற்றிக் கொண்டான். அவர்கள் கொஞ்சிக் குலாவி குடித்தனம் நடத்தினார். குள்ளக்குளிர நீரில் அமிழ்வதும் ஒரு பெண்ணோடு கூடுவதும் சுகம் தானே! குளிரினாலேயே உடம்பின் உஷ்ணம் அதிகமாகிறது. உடம்பின் உஷ்ணம் அதிகமாவதாலேயே காமம் தலைக்கு ஏறுகிறது. அந்த காமம் பெண்ணினால் தணிகிறது. பிறகு மறுபடியும் சீறுகிறது. இது அழகான இயற்கை விளையாட்டு.

அவர்கள் விளையாடினார்கள். கங்கை கருவுற்றாள். கரு வளர்ந்தது. குழந்தை பிறந்தது. கங்கை எடுத்துக்கொண்டு நதிக்கரைக்கு போனாள். வீசி எறிந்தாள். பின்னால் போன சாந்தனு திடுக்கிட்டான். ''என்ன இது'' என்று திக்கித் திணறி பேச ஆரம்பித்தபோது கங்கை திரும்பி பார்த்தாள். அவன் 'ஒன்றும் இல்லை' என்று அடக்கிக் கொண்டான். ஒன்றல்ல இரண்டல்ல. ஏழுமுறை இது நடந்தது. அஷ்டவசுக்கள் பிறந்தார்கள். அவர்கள் சொல்படி தண்ணீரில் கங்கை எறிந்தாள். கடைசி குழந்தையை வீசும்போது சாந்தனுவால் தாங்க முடியவில்லை.

''வேண்டாம். இந்த குழந்தையை கொல்லாதே'' என்று கெஞ்சினான். கங்கை திரும்பினாள்.

''இல்லை. இதை உங்களுக்காகவே கொடுக்கிறேன். உங்கள் அன்புக்காக கொடுக்கிறேன். அஷ்டவசுக்களின் சாபத்தை நான் தீர்த்து வைத்தேன். எட்டாவதாகப் பிறந்த இந்த குழந்தை அஷ்டவசுக்களின் ஆசீர்வாதத்தை பெற்றவன். அவர்களுடைய சக்தி முழுவதும் இந்தக் குழந்தையின் மீது இருக்கும். என்னைவிட குழந்தையின் பாசம் உனக்கு அதிகமாக இருப்பதால் இந்தக் குழந்தையை உனக்கு பரிசாகத் தருகிறேன். எனக்கு விடை கொடு. நான் போய் வருகிறேன்.''

''என் குழந்தையை என்னிடம் கொடு,'' மிகுந்த பாசத்தோடு சாந்தனு கெஞ்சினான்.

''இல்லை. உன்னால் இவனை வளர்க்க இயலாது. இவன் வலிவை உன்னால் தாங்க இயலாது. இவனை நான் வளர்க்கிறேன். இந்த காங்கேயன் என்னிடமே இருக்கட்டும். தக்க வயது வரும்போது உன்னிடம் அவனை அனுப்புகிறேன்.

இவனை வளர்க்க முயற்சி செய்தால் உன்னால் ராஜ்ய காரியங்களை கவனிக்க இயலாது. எனவே, இவனை என்னிடம் விட்டுவிடு. நிச்சயம் ஒருநாள் அவன் உன்னிடம் வருவான்.

கைக்குழந்தையோடு கங்கை நீரில் இறங்கினாள். மறைந்தாள்.

சாந்தனு துக்கித்தான். என்ன செய்வது என்று தெரியாமல் தனக்குள்ளாகவே புலம்பிக்கிடந்தான். மெல்ல தேறினான்.

பல வருடங்கள் கடந்தன. ஒருநாள் கங்கைக் கரை ஓரம் போய்க்கொண்டிருந்தபோது கங்கை நீர் வற்றியிருப்பதைக் கண்டான். என்ன காரணம் என்று தெரியாமல் கங்கை முகத்துவாரம் நோக்கி ஓடினான். கங்கை பொங்கி வரும் இடத்தில் ஒரு இளைஞன் அடுக்கடுக்காக அம்புவிட்டு கங்கையின் போக்கை தடுத்துக் கொண்டிருந்தான். எங்கோ பார்த்ததுபோல் இருக்கிறதே என்ற ஆவலோடு அவனை அணுக, அவன் காங்கேயன் என்கிற கங்கதத்தன் என்பது புரிந்தது. தன் மகன் என்பது தெரிந்தது.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்தப் பிள்ளை காட்டுக்குள் மறைந்து போனான். அவன் போகின்ற வேகத்தை பார்த்தால் அவனைத் தேடுவது கடினம் என்று தெளிவாகத் தெரிந்தது. அவனைக் கண்ட திகைப்பு உடம்பை விட்டு நீங்காமல் இருந்தது. சாந்தனு என்ன செய்வதென்று தெரியாமல் அந்த இளைஞன் எய்த அம்பை பிடுங்கிப் பார்க்க அது எளிதாக இல்லை. மிக உறுதியாக ஆழமாக அது சொருகப்பட்டிருந்தது.

சட்டென்று நதியின் போக்கு மாறியது. குளிர் காற்று வீசியது. மெல்ல மேகம் கவிழ்ந்தது போல் பனி படர்ந்தது. நதியின் நடு ஆழத்திலிருந்து ஒரு பெண் நடந்து வந்தாள். அவள் அம்புகளைத் தாண்டி கரை ஏறினாள். கணுக்கால் ஜலத்தில் கால் வைத்து சாந்தனு இருந்த இடத்திற்கு வந்தாள். அந்தப் பிள்ளை வில் வளைத்தான். ஒற்றை அம்பை வேகமாக அடித்தான். அந்த அம்பு அடி ஆழத்திற்குச் சென்று நீரின் வேகத்தை தடுத்த எல்லா அம்புகளையும் துணித்து மறுகரைக்குப் போய் நின்றது. நதி சடேரென்று எகிறி குதித்து அவர்களை தாண்டி போயிற்று.

கங்கதத்தன் கரையேற அவர்கள் இருவரும் பின் தொடர்ந்தார்கள். கங்கை கைகூப்பி வணங்கினாள்.

''நான் கங்கை. நினைவு இருக்கிறதா'' மெல்லிய குரலில் கேட்டாள். சாந்தனு புரிந்து கொண்டான். ''ஆமாம்'' என்றான்.

''மன்னரே தாங்கள் என்னிடமிருந்து பெற்ற எட்டாவது புதல்வன் இவன்தான். இவனை நான் வளர்த்து பெரியவனாக்கிவிட்டேன். பல்வேறு ஆயுதங்களில் இவனுக்கு பயிற்சி இருக்கிறது. இவனை நல்லபடி நான் வளர்த்திருக்கிறேன். இவனை நீங்கள் அழைத்துச் செல்லுங்கள். மிகுந்த பலசாலியான இந்த புதல்வன் வசிஷ்டரிடம் வேதங்களை படித்துவிட்டான். சாஸ்திர வித்தையிலும் பண்டிதனாகிவிட்டான். மன்னா, இவன் போரில் இந்திரனுக்கு நிகரானவன். இவனை தேவரும், அசுரரும் மதிக்கிறார்கள். நீதி சாஸ்திரத்தை தெளிவாக அறிந்தவன். பிரகஸ்பதி அறியும் சாஸ்திரத்தை தங்கள் மகன் முழுமையாக அறிந்துள்ளான். ஜமதக்னியின் புதல்வன் பரசுராமன் அறிந்த அஸ்திரவித்தை அத்தனையும் என் மகனிடம் இருக்கிறது. இவன் ராஜதர்மத்திலும், பொருளாதாரத்திலும் பெரும் பண்டிதனாவான். என் மகனும், மிகப் பெரிய வில்லாளியுமான இவனை நீங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள்.''

அவள் தன் மகனை தழுவிக் கொண்டாள். உச்சி முகர்ந்து விடை கொடுத்தாள். சாந்தனு தன் வலது கை நீட்டி தன் மகனை பெற்றுக்கொண்டு தன்னுடைய தலைநகரான அஸ்தினாபுரத்திற்கு அவனை அழைத்து வந்தார். கங்கை அவர்கள் போகும்வரை அங்கேயே நின்று பிறகு மெல்ல நீரில் இறங்கி மறைந்தாள்.

காங்கேயனுக்கு தாயின் பிரிவு துக்கமளித்தாலும் தனக்கு வேறு கடமைகள் இருக்கின்றன என்ற எண்ணத்தோடு இறுகிய முகத்தோடு தந்தையை பின் தொடர்ந்தான். உறுதியும், கம்பீரமும், சாகசமும் மிக்க அந்தப் பிள்ளையை வியப்போடு பார்த்துக் கொண்டு சாந்தனு அவனை தன் தலைநகருக்கு அழைத்து வந்து இளவரசு பட்டாபிஷேகம் செய்தார். ராஜ்ய விவகாரங்களிலிருந்து இனி விட்டேத்தியாக இருக்கலாம் என்ற எண்ணத்தை அடைந்தார்.

பட்டமேற்ற நாள் முதல் அஸ்தினாபுரத்தை பம்பரமாகச் சுற்றி பரத கண்டத்தின் பல்வேறு நகரங்களுக்கு பயணப்பட்டு தன்னுடைய கம்பீரத்தை காங்கேயன் காட்டினான். இவர் ஆளுமையில் தவறே செய்ய முடியாது என்ற எண்ணத்திற்கு அதிகாரிகள் வந்தார்கள். நீதியோடு வாழ்வதுதான் நல்லது. அதுதான் நிம்மதி என்ற கொள்கையை மக்கள் கடைப்பிடித்தார்கள்.

அஸ்தினாபுரத்தை தலைநகராகக் கொண்ட சாந்தனுவின் தேசம் மிகச் சிறந்த வளர்ச்சியை காங்கேயனால் அடைந்தது. நான்கு ஆண்டுகள் அமைதியாகக் கடந்தன.

சாந்தனு இம்முறை யமுனை நதிக்கரையை ஒட்டி தன் பயணத்தை துவக்கியபோது திடீர் என்று ஒரு நறுமணம் முகத்தை தாக்கியது. எங்கிருந்து வருகிறது என்று ஆவேசப்பட்டு அதைத்தேட முற்படுகையில் யமுனையின் கரை ஓரமாக ஒரு படகில் ஒரு அழகானப் பெண் படகு செலுத்த தயாராக இருந்தாள். சாந்தனு அவசரமாகப் போய் அவள் படகில் ஏறிக்கொண்டான்.

''அழகியே நீ யார்? உன்னிலிருந்து அற்புதமான நறுமணம் வீசுகிறது. பேரழகியாகவும் திகழ்கிறாய். நீ எந்த தேசத்து இளவரசி?'' என்று கேட்க, அவள் வாய்விட்டு சிரித்தாள். அந்தச் சிரிப்பில் மன்னன் மயங்கினான்.

''நான் ஒரு வேடுவப்பெண். பெயர் சத்யவதி. என் தந்தையார் நிஷாதராஜன். அவருடைய ஆணைப்படி தர்மத்திற்காக படகு செலுத்துகிறேன். யாரிடமும் எதன் பொருட்டும் காசு வாங்குவதில்லை.'' அந்த பெண்ணிடம் யாசிக்க மன்னன் மனதளவில் தயாராகி ஆனால், முடிவை மாற்றிக்கொண்டு உன் தந்தையிடம் என்னை அழைத்துப் போ என்று கேட்க, அந்தப் பெண் படகு செலுத்தி அவள் தந்தையை நோக்கி அழைத்துப் போனாள். மன்னன் கண்கொட்டாமல் அவள் பேரழகையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நிஷாதராஜனை கண்டதும் கீழ் இறங்கி தான் யார் என்பதை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''எனக்கு உன் மகள் வேண்டும். உடனடியாக மணம் முடித்துக்கொடு'' என்று அதிகாரமாய் பேசினான். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''மன்னரே நீங்கள் யார் என்பதை நான் நன்கு அறிவேன். நீங்களே விரும்பி என் பெண்ணை மணம்கேட்டு வந்தது எனக்கும் என் குலத்திற்கும் மிகப்பெரிய மரியாதை. என் பெண்ணுக்கு நல்ல வரனை முடிக்க வேண்டுமே என்ற கவலை என் மனதில் உள்ளது. நீங்கள் நல்ல வரன் என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை. மிகப்பெரிய சத்தியவான் என்பதிலும் ஐயம் இல்லை. இந்தப் பெண் வேண்டும் என்றால் நான் சொல்லும் நிபந்தனையை ஏற்பேன் என்று சத்தியம் செய்யுங்கள்.''

''என்ன நிபந்தனை அது.''

''இந்தப் பெண்ணுக்கு பிறக்கும் மக்களே உங்கள் அரசபதவியை ஏற்க வேண்டும். அவர்களே அரசாள வேண்டும். அதற்கு சம்மதித்தால் நான் இந்தப் பெண்ணை இப்பொழுதே மணம்புரிந்து கொடுக்க தயாராக இருக்கிறேன். இப்படி சத்தியம் செய்ய இயலுமா'' என்று பணிவாகக் கேட்டான்.

மிகப்பெரிய நிராசையுடன் அந்தப் பெண்ணை சாந்தனு பார்த்தான். மனதிற்குள் கம்பீரமாக இருக்கின்ற தன் மகனை நினைத்துக் கொண்டான். அந்த வேடுவனின் இருப்பிடம் விட்டு மெல்ல வெளியே வந்தான். படகில் ஏறினான். வேறு சிலர் படகில் ஏறி படகை செலுத்த, அவன் கிளம்பிய இடத்தை அடைந்தான். குதிரை ஏறினான். நாட்டிற்கு திரும்பினான். அரசன் மறுத்து திரும்பியதை அறிந்து நிஷாதராஜன் வேதனை கொண்டான். அவன் உறவுகள் அவனைத் தேற்றினார்கள். சத்தியவதி என்கிற அவன் மகள் மறுபடியும் படகோட்டப் போனாள்.

குதிரைக்குப் பின்னே மன்னருடைய தேர் வந்தது. மன்னன் அரண்மனைக்குள் புகுந்து சுருண்டு படுத்துக்கொண்டான். அதிக நேரம் தனிமையில் இருந்தான். காங்கேயனுக்கு எப்படி துரோகம் செய்வது. ஒரு பெண்ணால் பட்ட துன்பம் போதும். நல்ல பெண்ணோடு கூடுவதற்கு தனக்கு அருகதை இல்லை. நல்ல மனைவி இல்லாமல் வெகுகாலம் இருந்துவிட்டேன். மறுபடியும் ஒரு உத்தமமான பெண் வேண்டும் என்று நினைக்கிற போது அதற்கு பல்வேறு நிபந்தனைகள் வந்துவிட்டன. ஒருபொழுதும் அந்த நிபந்தனையை ஏற்கமுடியாது.

ஆனால், அந்த சத்தியவதியை படகோட்டிப் பெண்ணை மறக்க முடியவில்லை. அவன் தனக்குள் பேசினான். உரத்து மரத்தோடு பேசினான். மல்லாக்க படுத்து கிளிகளோடு பேசினான். மேலே விழுந்த இலைச்சருகோடு பேசினான்.

அவன் அப்படி இருப்பதை பணியாட்கள் காங்கேயனுக்குத் தெரிவித்தார்கள். கங்கையின் மைந்தனான அவன் தொலைவிலிருந்து மன்னனை பார்த்தான். மெலிந்து, கருத்து தனக்குள்ளே பேசிக் கொண்டும் தனியாக பொழுது கழிக்கும் மன்னனைப் பார்த்து துக்கப்பட்டான். என்ன ஆயிற்று இவருக்கு அவன் அவரை மெல்ல அணுகினான்.

''தந்தையே, ஏன் மனம் கலங்கி இருக்கிறீர். எதனால் ராஜ்ய காரியம் கவனிக்காது தனியே நடக்கிறீர். என்ன வேதனை.''

''என் வம்ச விருத்திபற்றி கவலை வந்தது.''

''ஏன்?''

''உன் தாய் உன்னை மட்டும் தந்துவிட்டு போய் விட்டாள்.''

''அதனால் என்ன?''

''தனி மரம் தோப்பாகாது. ஒருபிள்ளை பெற்றவன் பிள்ளை பெற்றவனாக மாட்டான். பல பிள்ளைகள் ஒரு அரசனுக்கு இருப்பது உத்தமம்.''

''எனக்கு புரிகிறது தந்தையே'' காங்கேயன் விடைபெற்றான்.

''மன்னர் தேரில் சாரதியாய் போகும்போது இளைப்பார கூடாரமும், உணவும் கொண்டு போனாய் அல்லவா. அவரைப் பற்றி உனக்கு நன்கு தெரியும் அல்லவா. வெகுகாலம் அவருக்கு துணையாக இருந்திருக்கிறாய் அல்லவா. சொல். என்ன நடந்தது. ''தேரோட்டி சத்தியவதியை சந்தித்ததையும், அவள்

உடம்பிலிருந்து எழுந்த உத்தமமான வாசனையும், மன்னன் மயங்கிப்போய் அவள் யார் என்று விசாரித்ததையும், அவள் தந்தையிடம் அழைத்துப் போகும்படி சொன்னதையும், தந்தையிடம் போய் பெண் கேட்டதையும், அதற்கு அந்த நிஷாதராஜன் நிபந்தனை விதித்ததையும், சத்தியவதியின் குழந்தைகளே இங்கு அரசாள வேண்டும் என்று ஆவல் தெரிவித்ததையும், அதற்கு மறுத்து சாந்தனு திரும்பியதையும், திரும்பும்போதே புலம்பல் ஆரம்பித்து விட்டதையும் தேரோட்டி விளக்கிச் சொன்னான்.



காங்கேயன் மெல்லச் சிரித்தான். குதிரை ஏறினான். தக்க மந்திரிகளுடன் யமுனை நதிக்கரையை அடைந்து அங்கிருந்து அந்த வேடுவன் இல்லத்திற்குப் போனான். நிஷாதராஜன் பயத்தோடும், கலவரத்தோடும் அவர்களை வரவேற்றான். தவறு இருந்தால் மன்னிக்கும்படி வேண்டினான். எடுத்தவுடன் பணிவாகப் பேசிய வேடுவராஜனைக் கண்டு காங்கேயன் வருத்தப்பட்டான்.

"என்ன பயம் உங்களுக்கு. சாந்தனு ராஜ்யத்தில் எதற்கு கவலை. உங்களை யார் என்ன செய்து விடுவார்கள். அரசர் பெண் கேட்டு வந்தார். நீங்கள் நிபந்தனை விதித்தீர்கள். அது சரியாகத்தான்படுகிறது. அரசருக்காக நான் பெண் கேட்டு வந்திருக்கிறேன். அவருடைய மகனான நான் அவருக்காக அவர் நலனுக்காக உங்களிடம் வந்திருக்கிறேன். சத்தியவதிக்கு பிறக்கும் பிள்ளைகளே அஸ்தினாபுரத்தின் அரசாட்சியில் அமருவார்கள். நான் அவர்களுக்கு துணையாக இருப்பேன். இது சத்தியம்" என்று கை தூக்கிச் சொன்னான். மந்திரிகள் திடுக்கிட்டார்கள். அந்த நிஷாதராஜன் காலில் விழுந்தான்.

"எப்பேர்ப்பட்ட சத்தியத்தை செய்கிறீர்கள். எவ்வளவு எளிதாக உங்கள் தந்தைக்காக அரச பதவியை உதறி விட்டீர்கள். இளவரசன் என்ற பட்டம் சூட்டிய போதும், அதற்குண்டான எல்லா தகுதியிருந்த போதும் தகப்பனே முக்கியம் என்று உங்களுக்கு எப்படி தோன்றியது. ஆனாலும், உங்கள் சத்தியத்தின்பால் எனக்கு சந்தேகம் இருக்கிறது. மற்ற மந்திரிகள் கோபத்துடன் சீற, பொறுமையாக இருக்கும்படி காங்கேயன் அவர்களிடம் சொன்னான்.

"என்ன சந்தேகம்?"

"இந்த பிள்ளைகள் அரசாள்வார்கள். அவர்களுக்குப் பிறகு? உங்களுக்கு பிறக்கும் பிள்ளைகள் இதை கட்டுப்படுத்துமா, யாரோ யாருக்கோ வாக்கு கொடுத்தார்கள். எனக்கென்ன என்று உங்கள் பிள்ளைகள் சீற மாட்டார்களா? இந்தப் பதவி எனக்கு வேண்டும் என்று வாள் உருவி வரமாட்டார்களா? செம்படகுலத்தில் பிறந்த சத்தியவதியின் பிள்ளைகள் எங்கே, உங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் எங்கே? அவர்களுக்கு முன் எங்கள் குலத்து பிள்ளைகள் நிற்க முடியுமா? எனவே, எங்கள் குலத்து பிள்ளைகளும் தொடர்ந்து அரசாள வேண்டும். இதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்."

"வெகு எளிது. வெகு எளிது." எல்லோருக்கும் திகைத்து கங்கதத்தன் என்கிற காங்கேயனை பார்க்க, அவன் வலதுகையை தூக்கினான்.

"இந்த உலகம் முழுவதும் கேட்கும்படியான ஒரு சத்தியத்தை உங்களுக்குச் சொல்கிறேன். என் தந்தையின் பொருட்டு சத்தியவதியின் பிள்ளைகள் அஸ்தினாபுரத்து ஆட்சியில் அமரும் பொருட்டு அவளுக்கு பிறக்கும் பேரப்பிள்ளைகளே வம்சாவளியினரே தொடர்ந்து ஆட்சி செய்யும்பொருட்டு காங்கேயனான நான் என் தந்தைக்காக கடும் பிரம்மச்சாரிய விரதத்தை மேற்கொள்வேன். எந்த மாதரையும் மனதாலும் தீண்டேன். எனக்கு அரச பதவியும் வேண்டாம். இல்லற சுகமும் வேண்டாம். எனக்கு வம்சம் இராது. நான் நித்ய பிரம்மச்சாரியாக என் வாழ்நாள் முழுவதும் இருப்பேன்" என்று உரக்கச் சொன்னான். பூமி மெல்ல அதிர்ந்தது. பல மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. சில மரங்கள் வேரோடு சாய்ந்தன. சுற்றியுள்ள கந்தர்வர்களும், தேவர்களும் இந்த அதிர்ச்சி தாங்காது ஓலமிட்டார்கள். தேவர்கள் சட்டென்று கூடினார்கள்.

"என்ன இது. எவ்வளவு பெரிய சத்தியத்தை செய்கிறான். காங்கேயனுடைய வரலாறு பூமியில் நிச்சயம் பேசப்படும். பூமி இருக்கும் வரை காங்கேயனுடைய வாழ்க்கை சொல்லப்படும். இனி இவன் காங்கேயன் அல்ல. செயற்கரிய செயலை செய்தவன். பீஷ்மன். பீஷ்மன் அந்த இடம் முழுவதும் பீஷ்ம பீஷ்ம என்ற குரல் எழும்பியது. அவரின் கழுத்தில் யார் கண்ணுக்கும் தெரியாத மலர் மாலைகள் விழுந்தன. நிஷாதராஜன் மண்டியிட்டு தேம்பித் தேம்பி அழத்துவங்கினான்.

"உங்கள் மகளை அனுப்புங்கள். எங்கள் வீட்டு மருமகளை அனுப்புங்கள்" என்று சொல்ல, சத்தியவதி தானே முன்வந்து தன் மகனை வணங்கினாள்.

"நீங்கள் வணங்கக்கூடாது தாயே. நீங்கள் எனக்கு அன்னைக்கு சமமானவர். தயவு செய்து என்னோடு தேரில் ஏறுங்கள். உங்களை என் தந்தையாரிடம் சேர்ப்பேன்" என்று சொல்ல, அவள் மூடிய புடவையோடு மௌனமாக தேரில் அமர்ந்து கொண்டாள். தந்தைக்கும், தாய்க்கும் கைகூப்பி விடை கொடுத்தாள்.

தேரை கங்கதத்தன் என்ற காங்கேயன் என்கிற பீஷ்மன் அஸ்தினாபுரம் நோக்கி செலுத்தினான்.

மகாபாரதக் கதையில் இது ஒரு முக்கியமான திருப்பம்.

(தொடரும்)



பீஷ்மர் என்ற வைராக்கிய புருஷர்

பீஷ்மருக்கு குழந்தைகள் இருந்திருந்தால் மிக வல்லவர்களாக இருந்திருப்பார்கள். அவர்களே அரசாட்சியை தொடர்ந்து நடத்தியிருப்பார்கள். அவர்களால் அஸ்தினாபுரமும், பரத கண்டமும் மிகப்பெரிய சிறப்பு பெற்றிருக்கும். க்ஷத்திரிய வம்சம் அழியாது போயிருக்கும். கிருஷ்ணருடைய வேலை கடுமையாக இருந்திருக்கும். எவரால் மிகப்பெரிய ஒரு வம்சம் தோன்ற வேண்டுமோ அது விதியால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதற்கு காரணம் என்று ஏதேதோ சொல்லப்படலாம். ஆனால், பரதகண்டத்தின் வலிவு சட்டென்று குறைந்து போயிற்று என்பதை படிப்பவர்கள் உணருவார்கள். ஒரு மிகப்பெரிய வம்ச கிளை ஒன்று மலராமல், வளராமல் நின்றுவிட்டது. இது மகாபாரதக் கதையில் நடந்த மிகப்பெரிய சோகம்.

மகாபாரதம்

7



பாலகுமாரன்

ஆனால், உத்தமமான மனிதர்கள் இந்த பரத கண்டத்திலே வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை இந்தக்கதை சொல்கிறது. தந்தைக்காக, தந்தையின் திருமணத்திற்காக அவருடைய காம ஆவேசத்தை சமனப்படுத்துவதற்காக ஒரு பிள்ளை இப்பேற்பட்ட தியாகத்தை செய்கிறான் என்றால் அவன் சாமான்யமானவனா? அவன் சரித்திர புகழ் பெற்றவனல்லவா!

பீஷ்மருக்கு தனி கோயில் எழுப்பலாம். கொண்டாடலாம். அவ்வளவு பெரிய சத்தியம் கொண்ட மகான் அவர். ஆனால், பரத கண்டத்தில் பீஷ்மருக்கு ஏன் கோயிலே இல்லை என்று தெரியவில்லை.

சாந்தனு தன் மகனின் செய்கையை கண்டு திகைத்துப் போனான். நெகிழ்ந்து போனான். சத்தியவதியை ஏற்ற அவன் தன் பிள்ளையை தழுவிக் கொண்டான். “பாவமற்ற என் மகனே, நீ விரும்பும்வரை உன்னிடம் மரணம் வராது. நீயாக ஏற்றால் ஒழிய மரணம் உன்னை தீண்டாது. என் புண்ணியம் அனைத்தும் எடுத்து உனக்குத் தந்தேன்” உணர்ச்சிவசப்பட்டு நா தழுதழுத்தான். அது உண்மையாயிற்று.

> உத்தமமான மனிதர்கள் இந்த பரதகண்டத்திலே வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை இந்தக்கதை சொல்கிறது. தந்தைக்காக, தந்தையின் திருமணத்திற்காக அவருடைய காம ஆவேசத்தை சமனப்படுத்துவதற்காக ஒரு பிள்ளை இப்பேற்பட்ட தியாகத்தை செய்கிறான் என்றால் அவன் சாமான்யமானவனா? அவன் சரித்திர புகழ் பெற்றவனல்லவா!

சாந்தனும், சத்தியவதியும் உலகத்தையே மறந்து ரமித்து இருந்தனர். நிர்வாகம் முழுவதையும் பீஷ்மர் எந்தக் குறையும் இல்லாமல் கவனித்து வந்தார். தந்தையின் சுக போகத்திற்கு எந்த கேடும் வராதபடி நகரத்தை சுபீட்சமாக்கினார். குறையே இல்லாத போது, குறை சொல்பவரே இல்லாதபோது அரசருக்கு என்ன கவலை? ஏதும் இருந்தாலும் அது ஒரு பொழுதும் சாந்தனுவையோ, சத்தியவதியையோ எட்டாது வாழ்க்கை அவர்களுக்கு இன்பமாக இருந்தது.

சித்ராங்கதன், விசித்ர வீர்யன் என்று இரண்டு குழந்தைகள் அவர்களுக்கு பிறந்தார்கள். சில ஆண்டுகளில் இரண்டாவது குழந்தை சித்ராங்கதன் வாலிப பருவத்தில் இருந்தபோது சாந்தனு இயற்கையாக மரணமடைந்தார். சித்ராங்கதனை எந்த தயக்கமும் இன்றி பீஷ்மர் அரசாக்கினார்.

சித்ராங்கதன் கர்வியாக இருந்தான். பீஷ்மரைத் தவிர சகலரையும் அலட்சியம் செய்தான். தேவர்களையும் பகைத்துக்கொண்டான். எல்லா மன்னர்களையும் இழித்துப் பேசினான். தானே படையெடுத்து அவர்களை பயமுறுத்தினான். மிகச் சிறந்த வீரன் என்று காட்டுவதற்காக பல்வேறு விஷயங்களை செய்தான். சித்ராங்கதன் பெயர் கொண்ட கந்தர்வன் ஒருவன் சித்ராங்கதன் மீது எரிச்சல் பட்டான்.

உனக்கும் எனக்கும் ஒரே பெயர். நீ பெயரை மாற்றிக்கொள். இல்லாவிட்டால் என்னோடு வந்து போர் செய் என்று சொல்ல, இயல்பிலேயே ரோஷக்காரனான சித்ராங்கதன் கந்தவர்வனோடு கடும் சண்டை போட்டான். மூன்று வருடங்கள் அவர்களுக்கிடையில் சண்டை நடந்தது. மாய வித்தைகள் செய்யத் தெரிந்த அந்த கந்தர்வன் அம்மாதிரி விஷயங்களை பிரயோகித்து சித்ராங்கதனை கொன்று போட்டான். பீஷ்மருடைய உதவி தேவையில்லை என்று மறுத்த சித்ராங்கதன் கந்தர்வன் கையால் மரணமடைந்தான்.

இளம் வயதாக இருந்த விசித்ரவீர்யனை அடுத்தபடி பீஷ்மர் மன்னனாக்கினார். விசித்ரவீர்யன் சிறந்த வில்லாளி. ஆனால், பக்குவம் இல்லாத இளைஞன். வம்சம் வளர அவனுக்காக மிகச்சிறந்த பெண்களை மணம் முடிக்க வேண்டும் என்று பீஷ்மர் ஆசைப்பட்டார். நல்ல வம்சம் வளர வேண்டும் என விரும்பினார்.

காசிராஜன் மகள்களுக்கு சுயம்வரம் என்று கேள்விப்பட்டு அங்குபோய் அமர்ந்துகொண்டார். அந்தப் பெண்கள் மிக அழகானவர்கள். படித்தவர்கள், பண்பானவர்கள், உயர்குல நடவடிக்கைகள் கொண்டவர்கள் என்று கேள்விப் பட்டதால் அவர்களையே விசித்ரவீர்யனுக்கு மனைவிகளாக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

பீஷ்மரின் வருகை கண்ட சுயம்வரத்திற்கு வந்த மற்ற மன்னர்கள் கேலி செய்தார்கள். பெண்ணாசை யாரை விட்டது என்று உரக்க பேசினார்கள். பீஷ்மர் அசையாது உட்கார்ந்திருந்தார். ஒரு வேளை வேடிக்கை பார்க்க வந்திருக்கிறாரோ என்றும் பேசினார்கள். ஆனால், இடுப்பில் வாளுடன், நெஞ்சில் கவசத்துடன், தோளில் அம்பாரத்துணியுடன், மடியில் வில்லுடன் உட்கார்ந்திருக்கின்ற தோரணை கண்டு பயந்தார்கள். இத்தனை மன்னர்களுக்கு நடுவே இப்படி ஆயுதபாணியாக இருக்கிறார் என்றால் இவர் ஏதோ ஒரு முடிவோடு தான் வந்திருக்கிறார் என்று தங்களுக்குள் கலவரத்தோடு பேசிக்கொண்டார்கள்.

அந்தப் பெண்கள் நுழைந்ததும் பீஷ்மர் எழுந்து நின்றார்.

“க்ஷத்திரியர்களுக்கு ஒரு வழக்கம் உண்டு. தனக்கு பிடித்த பெண்களை கடத்திக்கொண்டு போகலாம். அவனை மற்ற மன்னர்கள் தடுக்கலாம். வலுவுள்ளோர் அவனை கொன்று அந்தப் பெண்களை கைப்பற்றலாம்.

நான் இந்தப் பெண்களை இந்த இடத்திலிருந்து கடத்திக்கொண்டு போகிறேன். காசியிலிருந்து அஸ்தினாபுரம் எடுத்துக்கொண்டு போகப்

போகிறேன். உங்களால் முடிந்தால் என்னை தடுத்து நிறுத்துங்கள். உங்கள் வலிவை என்னிடம் பரிசோதித்துக்கொள்ளுங்கள்'' என்று கம்பீரமாகச் சொல்லி, அந்தப் பெண்களை தேரை நோக்கி போகும்படி கட்டளையிட்டார். பீஷ்மரைப் பற்றியும், அஸ்தினாபுரம் பற்றியும் அறிந்திருந்த அந்தப் பெண்கள் ஆவலோடு தேர் ஏறினார்கள். அவர்களை வீரர்கள் சூழ்ந்துகொண்டார்கள்.

பீஷ்மர் தேரின் முன்பக்கத்தில் ஏறி தன்னுடைய வில்லில் அம்பு தொடுத்து தயாராக இருந்தார். சுயம் வரத்திற்கு அலங்காரமாக வந்திருந்த மன்னர்கள் உடனடியாக கவசம் தரித்தார்கள். ஆயுதம் ஏந்தினார்கள். அவரை பின்தொடர்ந்தார்கள். கதையை விசினார்கள். கோடாரியை வீசினார்கள். அவர்கள் வீசிய எல்லா ஆயுதங்களும் நடுவழியில் உடைந்தன. சுக்கு நூறாயின. அவர்களை நோக்கி வந்த அம்புகள் அவர்கள் கிரீடங்களை உருட்டி விட்டன. தேர்களை உடைத்தன. தேர் சக்கரங்களை பெயர்த்தன. குதிரைகளை அறுத்து நாலாபுறமும் ஓட விட்டன. சில தேர்களில் உள்ள சாரதி பலமாக அடி பட்டார். குப்புற விழுந்தார். சாரதி இல்லாத தேர்கள் சேற்றில் விழுந்தன. பின்தொடர முடியாத மன்னர்கள் தவித்தார்கள். அவர்களை தன்னுடைய பாணங்களால் பீஷ்மர் கடுமையாக தண்டித்தார். தன் தேரை விரைவாக ஓடச் செய்தார். அவர் தேர் எவர் பின்தொடரும் இல்லாமல் ஓடிற்று.



சால்வ தேசத்து அரசன் அவரை தைரியமாக பின்தொடர்ந்தான். வெகு விரைவாக ஓடினான். நில் நில் என்று உரக்க கத்தினான். அவன் கூச்சலை கேட்டு பீஷ்மர் தேரை திருப்பினார். அவன் வருகைக்காக காத்திருந்தார். அவன் வந்ததும் அவன் குதிரைகளை அடித்தார். கொடியை அறுத்தார். தேரோட்டியை அடித்து வெளியேற்றினார். தேர் சக்கரத்தை உடைத்தார். சாய்ந்து ஓடிக்கொண்டிருக்கின்ற தேரின் கால்களை அறுத்தார். மண்டபங்கள் உடைந்த சால்வன் கீழே இருந்தான். தன்னுடைய வில்லை வளைத்து பாணங்களால் அவரை துன்புறுத்தினான். அவர் கவசத்தை அறுத்தான். தொடர்ந்து கடும் பாணங்களை அவர் மீது செலுத்தினான். கோபம் அடைந்த பீஷ்மர் அவன் வில்லை உடைத்தார். கத்தியை அறுத்தார். அவன் மீது பல பாணங்கள் அடித்து கடும் வலி உண்டாக்கி அவனைத் தள்ளாடச் செய்தார். அவன் தொடர முடியாமல் வழிநெடுக அம்பு செலுத்தினார். தன் தேரை வேகமாக ஓட்டினார். தள்ளாடித் தள்ளாடி முன்னேற முடியாமல் தவித்த சால்வ தேசத்து அரசன் வெட்கப்பட்டு குதிரை ஏறி தன் தேசம் நோக்கிப் போனான்.

அஸ்தினாபுரத்திற்கு அந்த தேர் வந்து சேர்ந்தது. விசித்ரவீர்யனுக்கு மூன்று கன்னிகைகளையும் மணம் முடிக்க வேண்டிக் கொண்டிருப்பதாக சத்தியவதியிடம் சொல்ல, சத்தியவதி மகிழ்ந்தாள். மிக அழகான பெண்களாக இருக்கிறார்களே என்று அவர்களை அணைத்துக்கொண்டாள். அப்பொழுது மூத்த பெண்ணான அம்பிகை பீஷ்மரை வணங்கி எழுந்தாள். என்ன வேண்டுமம்மா என்று பீஷ்மர் பரிவோடு கேட்க, சால்வ தேசத்து அரசனை தான் மனமார விரும்புவதாகவும், சால்வ தேசத்து அரசன் தன்னை விரும்புவதாகவும், எனவே உங்கள் மகனை மணம் புரிய விரும்பவில்லை என்றும் அவள் சொன்னாள். விருப்பமில்லாத ஒரு பெண்ணை வேறு ஒருவருக்கு மனதை பறிகொடுத்துவிட்ட ஒரு பெண்ணை தன் மகனுக்கு ஏற்பது சரியாக இருக்காது என்று தெரிந்து, நீ சால்வனிடம் போ என்று சொல்லி, அவளை விடுவித்து விட்டார்.

இளம் பெண்களான அம்பிகையும், அம்பாலிகையும் விசித்ரவீர்யனுக்கு திருமணம் செய்துகொடுக்கப்பட்டார்கள். திருமணம் கோலாகலமாக நடந்தது. அழகும் இளமையும் மிக்க அரசனை கண்டு அம்பிகையும், அம்பாலிகையும் மகிழ்ந்தார்கள். மிக அற்புதமானவன் தங்களுக்கு கணவனாக கிடைத்திருக்கிறார். அஸ்தினாபுரம் என்ற மிகப்பெரிய தேசத்தில் தாங்கள் வாழ்க்கை பட்டிருக்கிறோம் என்ற சந்தோஷத்தோடு விசித்ரவீர்யனை மனதார அந்தப் பெண்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அம்பிகை சால்வனை நோக்கி தனியே நடந்து போனாள்.

விசித்ரவீர்யன் அந்தப் பெண்களை சந்தோஷமாக கொண்டாடினான். ஏழு வருடம் அவர்களோடு சுகித்திருந்தான். கடுமையான காச நோய் கர்ம வினையால் அவனுக்கு ஏற்பட்டது. எத்தனையோ வைத்தியம் செய்தும் தீரவில்லை. சட்டென்று ஒரு நாள் விசித்ரவீர்யன் காச நோயால் இறந்துபோனான். அஸ்தினாபுரத்தில் துக்கம் சூழ்ந்தது.

இனி வம்சம் எப்படி வளரும். குழந்தையில்லாத ஒரு வம்சத்தை யார் மதிப்பார்கள். இனி அடுத்தபடி அஸ்தினாபுரத்தை யார் ஆள்வார்கள் என்ற கேள்வி எழுந்தது. மக்களும், மந்திரிகளும் மற்ற பிரதானிகளும், பீஷ்மரும், சத்தியவதியும் தவித்தார்கள். சத்தியவதி பீஷ்மரையே கர்ப்ப தானம் செய்யச்

சொல்லி வேண்டினாள். அந்த இரண்டு பெண்களையும் ஏற்று பல குழந்தைகளை பெறுவாயாக என்று கெஞ்சினாள்.

"என் விரதம் முக்கியமானதம்மா. அதைவிட முக்கியமான விஷயம் எதுவும் இல்லை. எதன் பொருட்டும் நான் என் விரதத்தை பங்கமாக்க விட மாட்டேன். எவ்வளவு அவசியமாக இருந்தாலும் நான் சொன்ன வாக்கை மீற மாட்டேன். இதற்கு வேறு உபாயம் உண்டா என்று யோசியுங்கள். என்னை வற்புறுத்துவதை விட்டுவிடுங்கள். நான் மனதாலும் எந்தப் பெண்ணையும் ஏற்க விரும்பவில்லை என்று தீர்மானமாகச் சொன்னார். சத்தியவதி அவர் பிடிவாதத்தை உணர்ந்திருந்தாலும் ஆபத்து காலத்தில் விரதத்தை தவிர்ப்பது தவறல்ல என்று சொல்லி வாதாடினாள். ஆனால், தன் விரதத்தில் பீஷ்மர் உறுதியாக இருந்தார்.

"உனக்கு ஒரு விஷயம் சொல்லவா தயங்கி தயங்கி சத்தியவதி சொன்னாள். என் உடம்பில் உள்ள வாசனையை பார்த்துவிட்டுத்தானே அதை நுகர்ந்தபடிதானே என் தந்தை என்னிடம் மயங்கினார். இதற்கு ஒரு காரணம் உண்டு. ஒரு கதை உண்டு கேட்கிறாயா?

நான் எவரிடமும் காசு வாங்காமல் யமுனையை கடக்க படகு செலுத்திக்கொண்டிருந்தபோது பராசரர் என்ற முனிவர் வந்தார். ஏதோ ஒரு வேதனையில் தவித்துக்கொண்டிருந்தார். என்ன விஷயம் என்று கேட்டபோது, இப்போதே இந்த படகுலேயே என்னோடு கூடவேண்டும். நீ என் உடம்பினுடைய ரேஜஸை வாங்கிக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட நேரம் வந்துவிட்டது என்று தவித்தார். என் உடம்பில் அப்போது மீனின் நாற்றம் இருந்தது. நான் தயங்கினேன். அதை புரிந்துகொண்டு என் உடம்பிலிருந்து நல்ல வாசனை வரச்செய்தார். நான் அவருக்கு இணங்கினேன். அந்த படகில் நாங்கள் ஒன்று கூடினோம். அவருடைய ரேஜஸ் என் வயிற்றில் தங்கியது. எனக்கு வியாஸர் என்ற மகன் பிறந்தான்.

மிகச்சிறந்த ரேஜஸ்சோடு பிறந்த அந்த குழந்தையை பராசரர் அழைத்துப் போய்விட்டார். நான் குழந்தையை பிரிய வருத்தப்பட்டேன். குழந்தையாக இருந்த அந்த வியாஸர் என்னோடு பேசினார். நீங்கள் நினைக்கும்போது நான் மறுபடியும் வருவேன். கவலை வேண்டாம் என்றது ஆறுதல் அளித்தது. வியாஸர் வியாஸ மகரிஷியாக, வேதங்களை பிரித்து வகைப்படுத்தபவராக, மிகப் புலமை பெற்றவராக, மிகச் சிறந்த தபஸ்வியாக எங்கோ வளர்ந்து வருவதை நான் கேள்விப்பட்டதுண்டு.

இப்போது வியாஸரும் எனக்கு மகனாகிறான். என் மகனான விசித்ரவீர்யன் மூலம் பிறக்காத குழந்தைகளை வியாஸர் பிறக்க வைப்பார். அவருக்கு அந்த உரிமை இருக்கிறது. எனவே நான் வியாஸரை தியானிக்கப்போகிறேன்'' என்று சொல்ல, அது சரி என்று பீஷ்மர் சொன்னார்.

சத்தியவதி கைகூப்பி வியாஸரை வேண்ட நொடிப்பொழுதில் அங்கு வியாஸர் தோன்றினார். என்ன வேண்டுமம்மா என்று அவர் கேட்டார். கருத்த சடை, செம்பட்டையான தாடி, கருத்த உடல், பருத்த மேனி, உடம்பு முழுவதும் அழுக்கு, கௌபீனம் மட்டுமே ஆடை, கையிலே தண்டம், கமண்டலம், கக்கத்திலே மான் தோல் என்று காலணியில்லாமல் சஞ்சரிக்கின்ற அவரைப் பார்த்து பீஷ்மர் வணங்கினார். சத்தியவதி அவரை தழுவிக்கொண்டு முத்தமிட்டாள்.

"உங்கள் கட்டளைக்கேற்ப நான் வந்திருக்கிறேன். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்.''

தன் குலம் முடிந்து போனதை, தன் இரண்டு குழந்தைகளும் இறந்து போனதைச் சொல்ல, தன்னுடைய மருமகள்கள் கர்ப்பம் அடையாததை விவரிக்க, வியாஸரால் அது நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்ல,

"கர்ப்ப தானம் ஒரு நல்ல விஷயம். தமையனுடைய இறப்பினால் மனைவி துன்பப்பட்டால் எந்த ஆசையும் இன்றி தமையனின் மனைவியோடு கூடுவது என்பது சாஸ்திரம் ஒத்துக்கொள்கிறது ஏனெனில் எல்லா விஷயங்களையும் விட, விதிமுறைகளைவிட ஒரு அரச பரம்பரை அழியாது இருப்பது முக்கியம். ஒரு பரம்பரை முடியாது இருப்பது முக்கியம். எனவே, உங்கள் சொல்லுக்கு கட்டுப்படுகிறேன். ஆனால், அவர்கள் ஒரு வருடம் விரதம் இருக்க வேண்டும். என் சொல்படி குறைவான உணவு உண்டு சில மந்திரங்கள் சொல்லி தனித்திருக்க வேண்டும். தங்களை புனிதப்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்று விவரித்தார்.

அதற்கெல்லாம் நேரமில்லை. உடனடியாக இந்தச் செயலில் இறங்க வேண்டும் என்று சத்தியவதி வற்புறுத்த,

"சரி, உங்கள் கட்டளையை ஏற்கிறேன். ஆனால், என்னுடைய உருவத்தை கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தால் அது அவர்களுக்கும், அவர்களுக்கு பிறக்கப்போகும் குழந்தைகளுக்கு நல்லதல்ல. எனவே, மிக கவனமாக அன்போடு என்னை அரவணைத்துக்கொள்ளச் சொல்லுங்கள்.''

சத்தியவதி தன் மருமகள்களை அழைத்து அவர்கள் நிலைமையைச் சொல்லி, இதற்கு இதுதான் பரிகாரம் என்று சொல்லி வருபவரை ஏற்க வேண்டும் என்று சொல்லி நிர்பந்தித்தாள். அந்தப் பெண்கள் வேறு வழி தெரியாமல் மாமியார் சொல்லுக்கு கட்டுப்பட்டனர். வம்சம் முக்கியம் என்பதை உணரத் துவங்கினர்.

அறைக்குள் நுழைந்த வியாஸரைக் கண்டு அம்பிகை திகைத்துப் போனாள். இவ்வளவு கோர ரூபமா என்று கண்களை மூடிக்கொண்டாள். வியாஸர் அருகே வந்து அவளைத் தழுவி விலகும் வரை அவள் கண்களை திறக்கவேயில்லை. அம்பாலிகை அறையில் வியாஸர் நுழைந்தபோது அவள் பயத்தில் வெளியேறினாள். அவர் ரூபம் கண்டு மனம் குன்றினாள். பயந்தபடியே அவருக்கு இடமளித்தாள்.

குழந்தைகள் உண்டாவார்களா என்ற கவலையோடு சத்தியவதி வியாஸரை கேட்க,

"அம்பிகை கண்களை மூடிக்கொண்டதால் குருடான மகன் பிறப்பான். அம்பாலிகை பயத்தில் வெளிறியதால் வெளிறிய மஞ்சள் நிறமுடைய வெண்குஷ்டம் போல் உடலுடைய மகன் பிறப்பான். நான் சொன்னதுபோல ஒரு வருடம் தவம் இருந்திருந்தால் இந்த கதி நேர்ந்திருக்காது. உங்கள் அவசரத்தால் ஏற்பட்ட விளைவு இது.''

சத்தியவதி தவித்தாள். குருடனான ஒரு பிள்ளை எப்படி அரசாள்வான். எனவே, மறுபடியும் அம்பிகையோடு கூடவேண்டும் என்று வியாஸரை சத்தியவதி வற்புறுத்தினாள். தாயின் விருப்பத்தை தட்ட முடியாதபடி வியாஸர் அம்பிகையின் அறைக்குள் நுழைந்தார். அம்பிகை கலவரப்பட்டு தன் தாதியை தன் இடத்தில் அவளைப்போல அலங்காரம் செய்வித்து விலகிப் போனாள். அந்த சேடிப்பெண் வியாஸர் யார் என்று புரிந்துகொண்டாள். அவர் தொடலில் அவரை உணர்ந்து கொண்டாள். தன் முகத்திரையை விலக்கி தான் இன்னார் என்று சொல்லி, அவரை ஆசையுடன் தழுவிக்கொண்டாள். அவளை அணைத்து அவள் முதுகு தடவி, உனக்கு மிகச் சிறந்த பிள்ளை பிறப்பான். அவனுக்கு விதுரன் என்று பெயர் வை. என்று சொல்லி, சந்தோஷமாக விடை பெற்றார்.

அம்பிகைக்கு குழந்தை பிறந்தது. பிறவியிலேயே வெள்ளை விழிகள் கொண்ட குருடாக இருந்தது. திருதராஷ்டிரன் என்ற பெயர் பெற்றது. அம்பாலிகைக்கு குழந்தை பிறந்தது. மஞ்சள் நிறத்தில் உடம்பெல்லாம் பூத்துக் கிடந்ததால் பாண்டு என்று பெயர் பெற்றார். அந்த சேடிப்பெண்ணுக்கு மிக தேஜஸ் உள்ள குழந்தை பிறந்தான். வியாஸர் சொல்படி அவனுக்கு விதுரன் என்று பெயரிடப்பட்டது. அந்த குழந்தைகள் கம்பீரமாக வளர்ந்தார்கள்.

ஒரு மிகப்பெரிய பாரதப் பரம்பரை திசை திரும்பிய காலம் இதுவே. நேரடியான வாரிசுகள் இல்லாது சுற்றி வளைத்து விதிகள் மீறி வாரிசுகள் உண்டாகி, அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் ஒருவர் மீது ஒருவர் காழ்ப்போடு திரிந்து பரத கண்டத்தின் தலையெழுத்தே மாறிப்போயிற்று. மிக உத்தமமான க்ஷத்திரியர்கள் இருந்த இடத்தில், மிக நாகரீகமான மனிதர்கள் வாழ்ந்த இடத்தில் மிக மோசமான க்ஷத்திரியர்கள் வரத் தொடங்கினார்கள். இது சாந்தனு செய்த பிழையா அல்லது விதியின் பிழையா அல்லது இரண்டுமா யோசிக்க வேண்டும்.

சாந்தனு சத்தியவதியின் மீது ஆசைப்படாமல் இருந்திருந்தால், பீஷ்மருக்கு அற்புதமான குழந்தைகள் பிறந்திருக்கும். அஸ்தினாபுரம் இன்னும் வலுவாகியிருக்கும். பீஷ்மரே தகுந்த பெண்ணை தந்தைக்குத் தேர்ந்தெடுத்திருப்பார். வியாஸரிடம் கெஞ்ச வேண்டிய அவஸ்தை இருக்காது. தூக்கி வந்த பெண்களும் வியாஸரைப் பற்றிய தெளிவின்மையால், இதைச்சொல்ல தகுதியான ஆட்கள் இல்லாததால் மாமியார் நிர்பந்தத்திற்காக உடன்பட வேண்டியிருக்கிறதே என்ற வெட்கத்தால் தவறு செய்தார்கள்.

இது பரத கண்டத்தின் மீது விதி நடத்திய விளையாடல்.

(தொடரும்)

மகாபாரதம்

8

இந்திரனே
வந்து யாசிக்கும்

புகழுடையோன்

பாலகுமாரன்



திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் இவர்களின் பிறப்பால் அஸ்தினாபுரம் சந்தோஷப்பட்டது. பீஷ்மருடைய மேற்பார்வையில் அவர்கள் சிறப்பாக வளர்ந்தார்கள்.

திருதராஷ்டிரனுக்கு பார்வை இல்லாததால் அவருக்கு உறுதியான உடலமைப்பு பெறுவதற்கான பயிற்சிகள் தரப்பட்டன. கைகளால் இறுக்கிப் பிடிக்கவும், அணைத்து அழுத்தி கட்டவும், திமிர முடியாதபடி நிற்க வைக்கவும் திருதராஷ்டிரன் பயிற்சி பெற்றான். பல மல்யுத்த வீரர்களை அவன் அசையாமல் நிற்க வைத்தான். அந்த பயிற்சியில் சந்தோஷமடைந்தான்.

யம தர்மனே, தர்மம் அறிந்தவனே அஸ்தினாபுரத்தில் பிறந்திருந்ததால் மக்கள் ஒழுக்கத்தோடும், நீதி நெறியோடும் வாழ்ந்தார்கள். அதிகாரிகள் தங்கள் செயல்களில் மிகக் கவனமாக இருந்தார்கள். அஸ்தினாபுரம் மிகக் கவனமாக இருக்க விதுரருடைய ஒரு பிறப்பு காரணம்.

பாண்டு மிகச்சிறந்த வில்லாளியானான். எல்லா வித படைக்கலன்களையும் கற்றுக் கொண்டான்.

விதுரர் தர்ம சாஸ்திரங்களை அறிந்தவராகவும், வேதங்களை அதன் அங்கங்களோடு தெரிந்தவராகவும் வளர்ந்து வந்தார். சேடிப் பெண்ணுக்கு பிறந்த விதுரர் சாதாரணப் பிறப்பு அல்ல. யமனுடைய இன்னொரு பிறப்பே விதுரர். அதனால் தர்மம் அறிவதில் அவருக்கு விருப்பமும், தெளிவும் இருந்தது. யமன் விதுரராக பிறக்க காரணம் என்ன? ஒரு அழகான சம்பவத்தால் விளக்கப்படுகிறது.

மாண்டவ்யர் என்கிற ஒரு ரிஷி கைகளை மேலே உயர்த்தி தனியாக ஒரு மரத்தின் கீழ் கடுமையாக தவம் இருந்தார். அரசருடைய நகைகளை திருடிய திருடர்கள் சுமையோடு அந்தப்பக்கம் நோக்கி ஓடி வரலாயினர். அவர்கள் போர் வீரர்களால் துரத்தப் பட்டார்கள். போர் வீரர்கள் வருவதைக் கண்டு சுமையோடு வேகமாக ஓடினார்கள். ஆனால், அவர்களால் வேகமாக ஓட முடியவில்லை. எனவே, மாண்டவ்யர் இருக்கின்ற ஆசிரமத்தில் அவற்றை ஒளித்து வைத்துவிட்டு அக்கம் பக்கங்களில் ஒளிந்து கொண்டார்கள். மாண்டவ்யரிடம் போர்வீரர்கள் வழி கேட்க, திருடர்களைப்பற்றி விசாரிக்க அவர் தவத்தில் இருந்ததால் எந்த பதிலும் சொல்லாதிருந்தார். படைவீரர்கள் முயன்று தேடி அரசருடைய நகைகளை மீட்டார்கள். சுற்றிப் பதுங்கியிருந்த திருடர்களை வளைத்தார்கள். மாண்டவ்யரும் ஒரு திருடனாகத்தான் இருக்க வேண்டும் என்று அவரையும் இழுத்துக் கொண்டு போனார்கள்.

அரசர் யாரையும் பார்க்காமல் சகலரையும் கழுவில் ஏற்றச் சொன்னார். மாண்டவ்யரும் கழுவில் ஏற்றப்பட்டார். திருடர்களோடு மாண்டவ்யரும் கழுவில் ஏற்றப்பட்டார். அவர் உடம்பின் அடிப்பகுதியில் வேலால் குத்தி தூக்கி நிறுத்தினார்கள். மிக வேதனையான ஒரு அனுபவத்தை மாண்டவ்யர் பெற்றார். அரசர் அவையில் உள்ள முனிவர்கள் மாண்டவ்யரை பார்த்து விட்டு, இவர் ரிஷி என்று புரிந்து கொண்டு மன்னனிடம் சொல்ல, மன்னன் மன்னிப்பு கேட்டு அவரை கீழே இறக்கினான். தன் தவறுக்கு மன்னிப்பு கேட்டான். பெரிய மனம் கொண்ட மாண்டவ்யர் உடனடியாக மன்னனை மன்னித்து விட்டார்.

ஆனால், தனக்கு நேர்ந்த இந்த துன்பத்திற்கு என்ன காரணம் என்று யோசிக்கத் துவங்கினார். இந்த தண்டனை எதனால் வழங்கப்பட்டது என்று யமனிடம் கேட்டார்.

''போன ஜன்மத்தில் நீங்கள் தட்டாரபூச்சியின் வாலில் முள்ளால் குத்தி பூக்களை சொருகி அவற்றை பறக்க விட்டீர்கள். அதனால் உங்களுக்கு இந்த துன்பம் நேர்ந்தது'' என்று யமன் பதில் சொன்னான்.

''எந்த வயதில் பறக்க விட்டேன்'' என்று பதிலுக்கு மாண்டவ்யர் கேட்டார்.

''உங்கள் பதினோறாவது வயதில்'' என்று பதில் சொன்னார்.

''அறியாத வயதில் முதிராத ஒரு பருவத்தில் நான் செய்த ஒரு குற்றத்திற்காக நீ இந்த தண்டனை வழங்குவது தவறு. பதினாலு வயது வரை ஒருவர் செய்யும் பாவத்திற்கு எந்தக் கணக்கும் கிடையாது. அது தெளிவில்லாமல் செய்தது. அதனால் எந்த தண்டனையும் தரக்கூடாது'' என்று வாதிட்டார். யமன் அவர் வாதத்தை ஏற்றுக் கொண்டான். யமனை மாண்டனாகப் பிற என்று சாபமிட்டார்.

யமன் தன்னுடைய பிறப்பை தேர்ந்தெடுத்துக் கொண்டான். விதுரர் என்ற பெயரில் வியாஸர் மூலம் பூமியில் பிறந்தார். யம தர்மனே, தர்மம் அறிந்தவனே அஸ்தினாபுரத்தில் பிறந்திருந்ததால் மக்கள் ஒழுக்கத்தோடும், நீதி நெறியோடும் வாழ்ந்தார்கள். அதிகாரிகள் தங்கள் செயல்களில் மிகக் கவனமாக இருந்தார்கள். அஸ்தினாபுரம் மிகக் கவனமாக இருக்க விதுரருடைய ஒரு பிறப்பு காரணம்.

மூத்தவரான திருதராஷ்டிரனுக்கு கண் தெரியாததால் பாண்டுவே அரசரானார். பாண்டு தன்னுடைய பராக்கிரமத்தால் அருகிலுள்ள நாடுகளுக்குச் சென்று அவர்களை கப்பம் கட்ட வைத்தார். தொலை தூரம் உள்ள நாடுகளுக்குச் சென்று பெரும் பொருட்களை சம்பாதித்து வந்தார். அவருக்கு வெகுமதியாக கொடுக்கப்பட்ட பசுக்களோடும், எருமைகளோடும், குதிரைகளோடும், ஒட்டகங்களோடும் அஸ்தினாபுரம் வந்தார். வீட்டிற்கு உபயோகமான இந்த மிருகங்களால் அஸ்தினாபுரத்தின் செல்வநிலை உயர்ந்தது.

சத்தியவதி தன்னுடைய பேரர்களைப்பற்றி சந்தோஷமடைந்தாள். வெற்றி பெற்ற பாண்டுவை பீஷ்மர் தழுவிக் கொண்டார். திருதராஷ்டிரனுக்கு திருமணம் செய்ய எண்ணினார். காந்தார தேசத்து மன்னனிடம் போய் பெண் கேட்டார். காந்தார தேசத்து மன்னனின் மகள் காந்தாரி தனக்கு நூறு பிள்ளைகள் வேண்டும் என்று வரம் கேட்டதாய் தெரிந்து, அவளே திருதராஷ்டிரனின் மனைவியாக வர வேண்டும் என்று விரும்பினார். காந்தார மன்னன் தயங்கினாலும் பீஷ்மருடைய திறனும், அந்த குலத்தினுடைய உயர்வும் தெரிந்து தன் பெண்ணை கொடுக்க சம்மதித்தார்.

தனக்கு கணவனாக வரப்போவருக்கு கண்கள் தெரியாது என்ற அடுத்த நிமிடமே கருப்பு பட்டால் தன்னுடைய கண்களை காந்தாரி கட்டிக் கொண்டாள். புருஷனுக்குத் தெரியாத பார்வை தனக்கு எதற்கு. தான் மட்டும் பார்வையோடு இருந்தால் தன் புருஷனுக்கு அது ஒருவேளை



வேதனையை தரக்கூடும். தனக்கும் பார்வை இல்லையென்றால் அவர் தன் மீது பிரியமாக இருக்கக்கூடும். பார்வை இருந்தும் அதை மறுத்து கண்களில் துணியை கட்டிக்கொண்டிருப்பதை தெரிந்து தன்மீது இன்னும் பிரியமாக இருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் அவ்விதம் செய்தாள். கணவனை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்காத, அவனையே தொழுகின்ற, அவனையே உயர்வு என்று நினைக்கின்ற பதிவிரதையாக, உத்தமஸ்ரீதியாக காந்தாரி இருந்தாள்.

காந்தார மன்னன் காந்தாரியை அஸ்தினாபுரம் அனுப்பி வைத்தார். காந்தாரியோடு அவள் சகோதரன் சகுனியும் அஸ்தினாபுரம் வந்தான். குனிக்கு அஸ்தினாபுரம் மிகவும் பிடித்துவிட்டது. ஆயினும் மிகப்பெரிய பதில் சீரோடு அவன் மறுபடியும் காந்தாரத்திற்கு போனான்.

அவளுக்கு ப்ருதா என்று பெயர். குந்திபோஜனுக்கு மகளாக அவள் இருந்தாள். மிகச் சிறந்த குணநலன்கள் உடையவளாக அவள் இருந்தாள். ஒரு சமயம் அவள் அரண்மனைக்கு தூர்வாசர் தன்னுடைய பரிவாரங்களோடு வந்திருந்தார். தூர்வாசர் மனம் கோணாது ப்ருதா எல்லாவிதமான உதவிகளையும் அவருக்குச் செய்தாள். அவளுடைய சேவையில் தூர்வாசர் மனம் குளிர்ந்தார். உனக்கு சில மந்திரங்களை உபதேசிக்கிறேன். அந்த மந்திரங்களைச் சொன்னால் உன் எதிரே அந்த தேவதைகள் தோன்றுவார்கள். உன்னுடைய அற்புதமான சேவைக்கு மயங்கி இவைகளைத் தருகிறேன் ஏற்றுக்கொள் என்று சொல்ல, ப்ருதா அவரை வணங்கி மந்திரங்களை கற்றுக் கொண்டாள். தூர்வாசர் விடை பெற்றுப் போனார்.

இந்த மந்திரங்களைச் சொன்னால் தேவதைகள் வருமா? என்ன ஆச்சர்யம்? இது மந்திர மகிமையா? தூர்வாசர் ஆசியா? என்று வினாக்கள் ப்ருதாவிற்குள் எழுந்தன. சூரியனை குறித்த மந்திரத்தை அவள் தனியே சூரியனை நோக்கியபடி ஜபித்தாள். மேல் மாடத்தில் மல்லாந்து படுத்தபடி சூரியனை தியானித்து மந்திரம் சொல்ல, சூரியன் அங்கு பிரசன்னமானார்.

''குந்தி போஜனின் மகளே குந்தி உனக்கு என்ன வேண்டும் கேள். எதற்காக என்னை அழைத்தாய்?'' என்று மாடத்தில் இறங்கினார். மேல் தளத்தில் மிகப்பிரகாசமாக சூரியன் இறங்கியது கண்டு குந்தி நடுங்கினாள். உண்மையாகவே இந்த மந்திரம் வேலை செய்கிறது என்று குதூகலமடைந்தாள். கலவரமும் ஆனாள்.

''மன்னிக்க வேண்டும் சூரியதேவரே. இந்த மந்திரம் தூர்வாசரால் எனக்குச் சொல்லப்பட்டது. அவர் சொன்ன இந்த மந்திரம் பலிக்குமா என்பதற்காக நான் இதை சொல்லிப் பார்த்தேன். மற்றபடிக்கு எனக்கு வேண்டியது எதுவும் இல்லை''.

''இல்லை குந்தி. இது சொல்லப்பட்டதின் காரணம் என்னுடைய அம்சமாக ஒரு குழந்தை உன்னுடைய வயிற்றில் உருவாகும். அதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்''. என்று சொல்ல, குந்தி தனக்கு இன்னும் திருமணமாகவில்லை என்று பலஹீனமாக எடுத்துரைத்தாள்.

''எனக்குத் தெரிகிறது. ஆயினும் நான் வந்த காரணம் வீணாகக்கூடாது. என்னுடைய அம்சம் உன்னுடைய வயிற்றில் நிச்சயம் வளரும். அவன் பிறந்த பிறகு மீண்டும் உன்னுடைய கன்னிமை மீண்டும் வருவதற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆனால், என் வரமாக இந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்'' என்று சொல்லி அவளை ஆலிங்கனம் செய்து மறைந்தார்.

குந்தியின் உடம்பில் மாற்றங்கள் ஏற்பட்டன. கரு தங்கியது. வளர்ந்தது. யாரும் அறியாது அதை வளர்த்த குந்தி, தன்னுடைய சேடிகளின் உதவியுடன் குழந்தை பிறந்ததும் அதை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டாள். ஆற்றில் குழந்தை மிதந்து போனது. குந்திக்கு மறுபடியும் கன்னித்தன்மை வந்தது.

ஆற்றில் மிதந்த பெட்டியை மடக்கி ஒரு தேரோட்டி அதை கரைக்கு இழுத்து வந்தான். உள்ளுக்குள்ளே சர்வலட்சணங்களுடன் ஒரு குழந்தை இருப்பதைக் கண்டு குழந்தை இல்லாதவன் மிகவும் மகிழ்ந்தான். அதிரதன் என்கிற அந்த தேரோட்டி தன் மனைவி ராதாவிடம் அந்தக் குழந்தையை கொடுத்தான். அவர்கள் இரண்டு பேரும் பூரித்துப்போய் கண்ணும் கருத்துமாக அந்தக் குழந்தையை வளர்த்து வந்தார்கள். அந்தக் குழந்தைக்கு வசுசேஷன் என்று பெயரிட்டார்கள்.

வசுசேஷன் சூரியனுடைய ஆசீர்வாதத்தால் மிகுந்த பராக்கிரமத்துடன் வளர்ந்து வந்தான். ஒரு சத்திரியனுக்குள்ள எல்லா குணங்களையும் பெற்றிருந்தான். அந்த தேரோட்டியை சுற்றியுள்ள எளிய மக்கள் வசுசேஷனின் வருகையால் பெருமிதம் கொண்டார்கள். அந்த கிராமமே அவனை கொண்டாடிற்று. அந்தணர்கள் தங்களை ஒதுக்கி விலக்கி வைத்திருப்பதை புரிந்து கொண்டான். எந்த அந்தணன் என்ன கேட்டாலும், எப்போது கேட்டாலும் உடனடியாகத் தருவேன் என்று சபதம் செய்தான்.

அந்தணர்களுக்கு வாரி வழங்கினான். இதனால் அவன் குலத்தோர் பெருமையும், அவனைச் சுற்றியுள்ளோர் பெருமையும் மேலும் அதிகரித்தது.

இந்திரன் அவன் வளர்ச்சியை கண்டு பயந்தான். இவன் எல்லா மன்னர்களையும் விட சிறந்து விளங்குவான். அதற்குக் காரணம் சூரியபகவான் இவனுக்கு இயற்கையாகக் கொடுத்த கவசகுண்டலங்கள் என்பதை புரிந்து கொண்டான். எனவே, ஒரு விடியல் வேளையில் போய் கர்ணனுடைய கவச குண்டலங்களை தானம் கேட்டான். இந்திரன் அவ்விதம் கேட்பான் என்று முதல் நாள் இரவே கனவில் அவனுக்கு சூரியபகவான் சொல்லியிருந்தார். ஆனாலும் நான் தருவேன். மறுக்க மாட்டேன் என்று வசுசேஷன் சூரியபகவானுக்கு பதில் சொன்னான். அப்படியானால் அதற்கு பதிலாக சக்தி ஆயுதத்தைக் கேள் என்று சூரியன் அவனுக்குச் சொல்லியிருந்தார். இந்திரன் கேட்டதும் கவசகுண்டலங்களை அறுத்து கொடுத்தான்.

‘‘அந்தணராக வந்தாலும் நீர் யார் என்பதை நான் அறிவேன். எனவே இந்திரரே, வலுமிக்க சக்ராயுதத்தை எனக்கு வரமாகக் கொடும்’’ என்று கைகூப்பி கேட்க, வேறு வழியில்லாமல் ஒருமுறை மட்டும் பிரயோகிக்க என்ற நிபந்தனையோடு சக்தியாயுதம் கர்ணனுக்கு வழங்கப்பட்டது.

காதுகளுக்கு இயல்பாகத் தொங்கும் குண்டலங்களையும், கவசத்தையும் அடைந்ததால் வசுசேஷன் கர்ணன் என்று அழைக்கப்பட்டான். கர்ணம் என்றால் காது.

இந்திரனே வந்து யாசிக்கின்ற குணம் கொண்டவன், புகழ் கொண்டவன் என்று அவன் பெருமை இன்னும் அதிகரித்தது. குறையவேயில்லை.

கன்னித்தன்மை அடைந்த குந்தியை பெண் கேட்டு பலர் வந்தார்கள். குந்திபோஜன் சுயம்வர ஏற்பாட்டைச் செய்தார். அந்த சுயம்வர ஏற்பாட்டில் கலந்து கொண்ட பாண்டுவை குந்தி விரும்பினாள். அவரையே கணவனாக அடைவது என்று தீர்மானித்தாள். அவருக்கு மாலையிட்டாள். குந்திக்கும், பாண்டுவிற்கும் மிக விமரிசையாக திருமணம் நடந்தது. குந்தி அஸ்தினாபுரம் வந்து சேர்ந்தாள்.

வம்சாவளியை மனதில் நிறுத்தி பாண்டுவிற்கு இன்னொரு திருமணம் செய்ய பீஷ்மர் விரும்பினார். மத்தர தேசத்து சல்லிய மன்னனிடம்போய் அவனுடைய சகோதரியை பாண்டுவிற்கு பெண் கேட்டார். தன் குல வழக்கப்படி தகுந்த கன்னியா சுருக்கம் கொடுத்தால்தான் பெண் தரமுடியும். இது மூத்தோர் வாக்கு என்று சல்லிய மன்னன் சொல்ல, மிகப் பெரும் நிதியை, தங்கக்குவியலை, ரத்தினங்களை சல்லிய மன்னனுக்கு கன்னியாசுருக்கமாக பீஷ்மர் வழங்கினார். மாத்ரேயை நன்கு அலங்கரித்து பீஷ்மரோடு சல்லிய மன்னன் தன் சகோதரியை அனுப்பினான். பாண்டுவிற்கும், மாத்ரிக்கும் அஸ்தினாபுரத்தில் விமரிசையாக திருமணம் நடந்தது. பாண்டுவின் பராக்கிரமம் பரதகண்டம் முழுவதும் பரவியது. அரசால் அவருடைய குலம் மிகச்சிறப்பாக பேசப்பட்டது. பீஷ்மருக்கு பாண்டுவின் எல்லா நடவடிக்கைகளும் பிடித்திருந்தன. பாண்டு வேட்டையாடுவதை விரும்பினார். அதனால் காடு அழித்து நாடாக்குகின்ற வேலை துரிதமாக நடைபெறும் என்பதால் காடுகளுக்குள் புகுந்து கிராமங்களின் எல்லையை தொந்தரவு செய்யும் மிருகங்களை வேட்டையாடினார். அது அவருக்கு பிடித்த வாழ்க்கையாகவும் இருந்தது. அரசு நிர்வாகங்களை கவனித்துக் கொள்ள பீஷ்மர் இருந்ததால் காட்டுக்குள்ளேயே இரண்டு மனைவியரோடும் மிக சந்தோஷமாக பாண்டு தங்கினார்.

மன்னர்களுக்கு மான் வேட்டையாடுவது மிகவும் பிடிக்கும். மான் எளிதில் வசப்படாது. குறுக்கி கிடக்காது. வில்லை வளைப்பதற்குள் மான் வெகு தூரம் ஓடி விடும். நாணை இழுத்து அம்பை விடுவதற்குள் மான் சட்டென்று பதுங்கிக் கொள்ளும். அம்புக்கு புறம் காட்டி வேகமாக திசைகள் பல திரும்பும். மிக சூரராக இருக்கும் வில்லாளிகளும் மானிடம் பல அம்புகளை விரயமாக்க வேண்டியிருக்கும்.

குறிப்பிட்ட மானை பாண்டு தேடி வந்தார். அதன் தோல் ரிஷிகளுக்கு ஆகும். பரிசளிக்கலாம் என்ற எண்ணம் வைத்திருந்தார். ஆனால், அந்த வகை மான் சிக்கவில்லை. சட்டென்று ஒருநாள் வனத்தில் மானினுடைய குரலை கேட்டார். மிக அமைதியாக அடிமேல் அடிவைத்து சப்தம் வந்த திசை நோக்கிப் போக அந்த வகை மான் ஒன்று மிகப் பெரியதாய் நின்று பெண்மானோடு கூடிக் கொண்டிருந்தது. பெண்மானின் சுகமான குரலைத்தான் தான் கேட்கிறோம் என்று புரிந்து கொண்டார். மான் முழு மோகத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. சப்தம் இல்லாமல் வில்லை வளைத்து நாண் இழுத்து மானின் முதுகில் அம்பு சொருகினார். தப்பிவிடக்கூடாது என்ற நினைப்பில் அதிகமாக நாண் இழுத்து வேகமாக நாண் விட்டார். அம்பு அந்த மானை துளைத்துக் கொண்டு பெண் மானையும் குத்திக் கொன்றது. இரண்டு மான்களும் புணர்ந்த நிலையிலேயே துடிதுடித்துக் கொண்டிருந்தன. சட்டென்று அங்கே காட்சி மாறியது. ஒரு ரிஷி மான் உருவை நீத்து மனித உருவில் கிடந்தார். அந்த பெண் மான் இறந்து போயிருந்தது. யாரது? என்று அம்பை பிடித்த வண்ணம் அந்த ரிஷி அலறித் துடித்தார். பாண்டு பயந்து போய் அந்த அம்பை விலக்க முயற்சி செய்யவில்லை. அது மிகுந்த வேதனையை கொடுக்கும். நீ யார்? என்று கேட்க, பாண்டு தன்னைப் பற்றிச் சொன்னார்.

‘‘எதற்காக என்னை அடித்தாய்? ஏன் இந்த காரியம் செய்தாய்? என்று உடைந்த குரலில் முனிவர் கேட்க, மானை வேட்டையாடுவது அரசர் வழக்கம்தானே. மான் எளிதில் சிக்காது. அதனால் மானை துரத்திப் பிடித்து கொல்வது என்பதும் இயல்புதானே. எனவேதான் நான் உங்களை வேட்டையாடினேன். நீங்கள் ரிஷி என்றோ மனிதர் என்றோ எனக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் செய்திருக்க மாட்டேன்’’.

‘‘அது சரி. மானை கொன்றது தவறில்லையெனினும் இரண்டு உயிரினங்கள் ஒன்றைஒன்று கூடிக் கொண்டிருக்கும் போது அதை கொல்லுதல் என்பது எவ்வளவு கேவலமானச் செயல். அவைகள் சந்தோஷத்தை அனுபவிக்கட்டும் என்று உன்னால் ஏன் அமைதிகாக்க முடியவில்லை. நாங்கள் பிரிந்த பிறகு என்னை ஏன் கொல்லவில்லை. என்னால் அந்த மானும் கொல்லப்பட்டு விட்டது. பல்வேறு உருவங்களில் நான் இதை ஒரு தவமாக செய்வது

வழக்கம். இதை ஏன் செய்தாய் என்று தெரியவில்லை. ஆனால், எனக்கு பிரியமான அந்தப் பெண் மானை கொன்றது எனக்கு துக்கம் அளிக்கிறது. கூடும்போது ஒரு கூடலை அழிப்பது தவறு. அகற்றுவது மிகப் பெரிய குற்றம். தடுப்பது பாவம். எங்கள் இருவரையும் கூடலின் போது கொன்ற பாவத்திற்காக நீ எப்போது கூடினாலும் உனக்கு மரணம் நேரும். இது சத்தியம்'' என்று சொல்லி உயிர் நீத்தார்.

பாண்டுவின் உடம்பில் பயத்தால் மாற்றங்கள் ஏற்பட்டன. அவர் துக்கமடைந்தார். தள்ளாடி தள்ளாடி தன்னுடைய இடத்திற்குப் போய் மனைவி குந்தியிடம் தனக்கு நேர்ந்ததைச் சொன்னார்.

''நான் மிகப் பெரிய பாவியாகி விட்டேன். செய்யக்கூடாததை செய்து விட்டேன். முன்வினை காரணமாக நான் இந்த தவறை இழைத்து விட்டேன். இதைப் போக்குவதற்கு நான் துறவறம் மேற்கொள்ளப்போகிறேன். நீங்களெல்லாம் அஸ்தினாபுரம் போங்கள். பீஷ்மருடைய சொல்படி அவருடைய கட்டளைப்படி வாழுங்கள். என்னை தனியே விடுங்கள். இந்த துக்கத்திலிருந்து நான் மீளப்போவதேயில்லை. நான் இன்னும் இமயத்தின் மேலேறி தலையை மொட்டை அடித்து, குறைந்த உணவே உண்டு, மனம் அடக்கி என்னை ஆராயப் போகிறேன். உங்களுக்கு அந்த துன்பம் வேண்டாம். உங்களுக்கு விடுதலை கொடுத்தேன். இங்கே இருக்கின்ற செல்வங்கள், குதிரைகள், சேவகர்கள் எல்லாம் அஸ்தினாபுரத்தை அடையட்டும்'' என்று சொன்னார். குந்தியும், மாத்ரியும் போக மறுத்தார்கள். சேவகர்களை தங்கள் உடைமைகளோடு பாண்டு அஸ்தினாபுரம் அனுப்பினார். தனக்கு ஏற்பட்ட நிலையை விளக்கச் சொன்னார். மனைவியர் அவரை பிரியாமல் இருப்பதையும் சேவகர்கள் அஸ்தினாபுரம் வந்து சொன்னார்கள். காலம் கடந்தன. தன்னால் தன்னுடைய மனைவியர் படுகின்ற கஷ்டம் கண்டு பாண்டுவிற்கு மனம் மிகப் பெரிய வேதனை அடைந்தது.

''வேறு எவரையேனும் சேர்ந்து பிள்ளை பெற்றுக் கொள்ளுங்கள். இதற்கு தர்மசாஸ்திரம் ஒத்துழைக்கிறது. பலனில்லாத புருஷனோடு இருப்பதை விட உத்தமமான மனிதரை சார்ந்து வம்சத்தை விருத்தி செய்வது சரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அஸ்தினாபுரம்போய் அம்மாதிரி காரியங்களில் ஈடுபட்டு ஒரு குருகுலத்தை வளருங்கள். என்னை பின் தொடராதீர்கள்.'' என்று நொந்தபடிச் சொன்னார்.

''இத்தனை துக்கப்படுகின்ற உங்களிடம் நான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகின்றேன். முன்பு ஒரு சமயம் துர்வாசர் எங்கள் வீட்டிற்கு வந்தபோது நான் அவரை உபசரித்தேன். குறைவர உபசாரம் செய்தேன். அதற்கு மகிழ்ந்த அவர் எனக்கு ஆறு மந்திரங்கள் உபசரித்தார். அவற்றை சொன்னால் நான் கர்ப்பம் தரிப்பேன் என்று சொன்னார்.

நீங்கள் அனுமதித்தால் அந்த மந்திரங்களைச் சொல்லி அந்த தேவதைகளை வரவழைத்து அவர்களின் மூலம் நான் கர்ப்பம் தரிப்பேன். இது புருஷனுக்கு துரோகம் செய்வதாகாது. வேறு எவரையும் நான் தீண்ட வேண்டியது இல்லை. சந்தோஷமாக போகத்தில் ஈடுபட வேண்டியது



இல்லை. இது மந்திரசக்தியால் ஏற்படுகின்ற கர்ப்பம். எனவே, நான் கற்பு குறைந்தவளாகப் போக மாட்டேன். நீங்கள் அனுமதித்தால் இதைச் செய்கிறேன்.'' என்று சொல்ல பாண்டு மகிழ்ந்தான்.

''இதுதான் விதி போலும். இப்படி நேரும் என்பதால்தான் நீ அந்த மந்திரங்களை கற்றாய் போலும். காலம் மிகத் தெளிவாக சில விஷயங்களை தீர்மானிக்கிறது. உன்னுடைய மந்திரங்கள் உனக்கு பயன்பட வேண்டும் என்பதற்காகவே நான் இந்த தவறு செய்து இந்தச் சாபத்திற்கு ஆளானேன். எனக்கு வலு இருக்குமாயின் இந்த மந்திரங்கள் உனக்கு ஒருபொழுதும் பயன்பட்டிருக்காது. துர்வாசருடைய மிகப் பெரிய வரம் ஒன்று வீணாகியிருக்கும். ஆக எல்லாம் நன்றாகத்தான் நடைபெறுகிறது. உன்னை கைகூப்பி கேட்கிறேன். தயவு செய்து இந்த மந்திரங்களை உச்சரித்து நல்ல குழந்தைகளை பெறுவாயாக'' என்று சொல்ல, யமதர்மராஜனுக்குரிய மந்திரத்தை குந்தி சொல்லத் துவங்கினாள்.

அவளுக்கு சரியான காலத்தில் தேஜஸ்வியாக யுதிஷ்டிரர் என்ற தர்மர் பிறந்தார். தர்மராஜனுடைய மகன் என்பதால் தர்மர் என்று அழைக்கப்பட்டார்.

அதே நேரம் வியாஸ பகவான் பசியோடும், நடந்த களைப்பாலும் அஸ்தினாபுரம் வர, மிகுந்த மகிழ்ச்சியோடு அவருக்கு காந்தாரி உபசாரங்கள் செய்தாள். தன்னுடைய சேவகர்கள் முழுவதையும் அவருடைய பணியில் ஈடுபடுத்தினாள். அவருடைய அன்புக்கு வியாஸர் மகிழ்ந்தார். என்ன வேண்டும் என்று கேட்க, தன் கணவனைப் போன்ற பராக்கிரமசாலியாக நூறு குழந்தைகள் வேண்டும் என்று கேட்டாள். அதற்கான லட்சணம் ஏற்கனவே அவளிடம் இருந்தது.

(தொடரும்)

துரியோதனனின் தங்கை

துச்சலா



மகாபாரதம்

9

வியாசர் காந்தாரிக்கு அருள் செய்ய அவளும் கர்ப்பவதியானாள். இரண்டு வருடங்கள் கர்ப்பத்தை தாங்க வேண்டியிருந்தது. ஆனாலும் பிள்ளைப்பேறு உண்டாகவில்லை. காந்தாரி மதிமயங்கினாள். ஏன் பிள்ளைப்பேறு உண்டாகவில்லை என்று கவலைப்பட்டாள். புருஷனுக்கு இணையாக வாழ வேண்டும் என்பதால் கண்ணை கட்டிக் கொண்டிருப்பதால் அவளுக்கு அப்படி யோசிப்பதைத் தவிர, மனம் புழுங்குவதைத் தவிர வேறு வேலையில்லை. இரண்டு வருடமாயிற்று இன்னும் பிள்ளைப்பேறு இல்லையே என்ற பயத்தில் அவள் பதட்டமானாள். குந்திக்கு தேஜஸ்வியான ஒரு பிள்ளை பிறந்து விட்டான் என்ற செய்தி வந்தது. அவள் பதட்டம் அதிகரித்தது. உலக்கையால் தன் வயிற்றை அடித்துக் கொள்ள அவளிடமிருந்து மிகப் பெரிய மாமிசபிண்டம் ஒன்று நழுவி விழுந்தது. வியாசருக்கு செய்தி போயிற்று.



‘‘ஏன் இப்படி செய்துவிட்டாய்? நான் காத்திருக்கச் சொன்னேனே’’ என்று வியாஸர் கடிந்து கொண்டார். நூறு நெய் குடங்கள் ஏற்பாடு செய்யச் சொன்னார். பிண்டத்தின் மீது நீர் தெளிக்கச் சொன்னார். நீர் தெளித்ததும் பிண்டம் நூறு துண்டங்களாயிற்று. நூறு துண்டங்களையும் நூறு நெய் குடங்களில் இட்டார். மிஞ்சியிருந்ததை நூற்றி ஒன்றாவது குடத்திலிட்டார். அவற்றை இரகசியமாக பாதுகாத்து வரும்படிச் சொன்னார். இரண்டு வருடம் கழித்து அவற்றை திறக்கலாம் என்று கட்டளையிட்டுச் சென்றார்.

இங்கே மறுபடியும் குந்தி கர்ப்பம் தரித்தாள். இந்த முறை வாயு பகவானை வேண்டி அவருடைய சக்தியை தன் வயிற்றில் ஏற்றாள்.

முதல் நெய் குடத்தை திறந்தபோது அதிலிருந்து குதித்துக்கொண்டு ஒரு குழந்தை இறங்கினான். அப்போது மிகப்பெரிய ஓலங்கள் பூமியில் எழுந்தன. வௌவால்களும், பறவைகளும் பயத்தில் முன்னும் பின்னும் பறந்தன. இருள் சூழ்ந்தது. தூசுப்படலம் எழுந்தது. பூமி நடுங்கிற்று. தொடர்ந்து நெய் குடங்களிலிருந்து குழந்தைகள் எகிறி வந்தார்கள். மூத்தவனுக்கு துரியோதனன் என்று பெயரிடப்பட்டது. துரியோதனன் பிறந்த அந்த நேரமே குந்திக்கு பீமசேனன் பிறந்தான். துரியோதனன் உட்பட அவன் தம்பிகளுக்கு நாமகரணம் நடந்தது. கௌரவர்கள் நூறு பேரும்,

> ‘‘முதல் நெய் குடத்தை திறந்தபோது அதிலிருந்து குதித்துக்கொண்டு ஒரு குழந்தை இறங்கினான். அப்போது மிகப்பெரிய ஓலங்கள் பூமியில் எழுந்தன. வௌவால்களும், பறவைகளும் பயத்தில் முன்னும் பின்னும் பறந்தன. இருள் சூழ்ந்தது. தூசுப்படலம் எழுந்தது. பூமி நடுங்கிற்று.’’

1.துரியோதனன், 2. துச்சாதனன், 3. துசாகன், 4.ஜலகந்தன், 5.சமன், 6.சகன், 7.விந்தன், 8.அனுவிந்தன், 9.துர்தர்சனன், 10.சுபாகு, 11. துஷ்பிரதர்ஷனன், 12. துர்மர்ஷனன், 13. துர்முகன், 14.துஷ்கரன், 15.விவிகர்ணன், 16.விகர்ணன், 17. சலன், 18. சத்வன், 19. சுலோசனன், 20.சித்ரன், 21.உபசித்ரன், 22.சித்ராட்சதன், 23. சாருசித்ரன், 24.சரசனன், 25.துர்மதன், 26.துர்விகன், 27.விவித்சு, 28.விக்தனன், 29.உர்ணநாபன், 30. சுநாபன், 31.நந்தன், 32.உபநந்தன், 33.சித்திரபாணன், 34.சித்ரபாணன், 35.சித்திரவர்மன், 36.சுவர்மன், 37.துர்விமோசன், 38.மகாபாரு, 39.சித்திராங்கன், 40.சித்திரகுண்டாலன், 41.பீம்வேகன், 42.பிமுபன், 43.பாலகி, 44. பாலவரதன், 45.உக்ரயுதன், 46.சுசேனன், 47.குந்தாதரன், 48.மகோதரன், 49.சித்ரயுதன், 50.நிஷாங்கி, 51.பஷி, 52. விருதகரன், 53. திரிதவர்மன், 54. திரிதட்சத்ரன், 55.சோமகீர்த்தி, 56.அனுதரன், 57. திரிதசந்தன், 58. ஜராசங்கன், 59. சத்தியசந்தன், 60. சதஸ், 61. சுவாகன், 62. உக்ரச்ரவன், 63. உக்ரசேனன், 64.சேனானி, 65. துஷ்பரஜை, 66. அபராஜிதன், 67. குண்டசை, 68. விசாலாட்சன், 69. துராதரன், 70. திரிதஹஸ்தன், 71. சுகஸ்தன், 72.வத்வேகன், 73.சுவர்ச்சன், 74.ஆடியகேது. 75.பாவசி, 76.நகாதத்தன், 77.அக்ரயாய, 78.கவசி, 79. கிராதன், 80. குண்டினன், 81. குண்டதரன், 82. தனுர்தரன், 83. பீமரதன், 84. வீரபாகு, 85. அலோலுபன், 86. அபயன், 87. ருத்ரகர்மன், 88. திரிடரதச்ரயன், 89. அனாக்ருஷ்யன், 90. குந்தபேதி, 91. விரவி, 92. சித்திரகுண்டலகன், 93. தீர்கலோசன், 94. பிரமாதி, 95. வீர்யவான், 96. தீர்கரோமன், 97. தீர்கபூ, 98. மகாபாகு, 99. குந்தாசி, 100. விரஜசன்.

இந்த வரிசைப்படி இந்தப் பெயர்களோடு அஸ்தினாபுரத்தில் சுகமாக வளர்ந்து வந்தார்கள்.

காந்தாரிக்கு நூறு ஆண் குழந்தைகள் தவிர ஒரு பெண் குழந்தை மீதும் ஆசை இருந்தது. பெண்களுக்கு மகனை விட, மகன் வயிற்றில் பிறக்கும் பேரனைவிட மகள் வயிற்றில் பிறக்கும் பேரன் மீது மிகப்பெரிய ஆசையிருக்கும். மகளை திருமணம் செய்து கொண்ட மருமகன் மீது பெரிய மரியாதையும், அன்பும் இருக்கும். மகன்களின் மனைவியரிடம் பிரியமாய் இருப்பாளோ இல்லையோ மகளிடம் சேர்ந்த மருமகனிடம் மிகப் பெரிய அன்பு வைத்திருப்பார்கள். எனவே, அம்மாதிரியான ஒரு அன்பையும் தான் அனுபவிக்க வேண்டும் என்று விரும்பினாள். மருமகனால் ஏற்படுகின்ற உத்தம லோகத்திற்கு தன் புருஷன் போகவேண்டும் என்று ஆசைப்பட்டாள். ஒரு மகளும் வேண்டும் என்று விரும்பினாள். நூறு நெய் குடங்கள் போக மிஞ்சியிருந்த பிண்டத்தை நூற்றி ஒன்றாவது நெய் குடத்தில் போட, துச்சலா என்கிற பெண் குழந்தையும் பிறந்தாள்.

துரியோதனன் பிறந்தபோது ஏற்பட்ட துர்சகுனங்களை கண்டு பண்டிதர்கள் திருதராஷ்டிரனிடம் போய் சத்திரிய குலத்திற்கு அழிவு வரும் அளவு இவனுடைய பிறப்பு இருக்கிறது. அபசகுனங்கள் தோன்றின. உங்களுக்கு தொண்ணூற்று ஒன்பது குழந்தைகள் இருக்கட்டும். நூறு குழந்தைகளில் ஒரு குழந்தையான துரியோதனனை நீங்கள் இழக்கச் சம்மதியுங்கள். என்று சொல்ல, திருதராஷ்டிரன் மறுத்து விட்டான். மற்றவர்கள் அவனை புறக்கணிக்கச் சொன்னதாலேயே துரியோதனன் மீது அவருக்கு பிரேமை அதிகமாயிற்று. எந்த குழந்தையை இழிவு என்று மற்றவர்கள் கருதுகிறார்களோ அந்தக் குழந்தை மீது தந்தைக்கு அன்பு வருவது இயல்பு.

குந்திதேவி மூன்றாவது பிள்ளைக்காக இந்திரனை உபாசித்தாள். அவனுக்குரிய மந்திரத்தை இடையறாது சொன்னாள். மறுபடியும் கர்ப்பம் தரித்தாள். உத்தமமான வேளையில் நல்ல சகுனங்களோடு கூடிய நாழிகையில் அவளுக்கு மூன்றாவது குழந்தை பிறந்தான். அவனுக்கு அர்ஜுனன் என்று பெயர் உண்டாயிற்று. அர்ஜுனன் பேரழகனாகத் திகழ்ந்தான். அவனைச்

பாலகுமாரன்

சுற்றி கந்தர்வர்களும், அப்ஸரஸ்களும் ஓயாது கீதம் இசைத்தார்கள். அவன் ஆடி ஓடும் போதும், உறங்கும் போதும் அவனுக்கு துணையாக இருந்தார்கள். அவனுக்கு வேடிக்கைக் காட்டி கொண்டாடினார்கள். குந்தியின் கண்ணுக்குத் தெரியாதவாறு அவனை சீராட்டினார்கள். மற்ற குழந்தைகளை விட இவன் வியப்போடு இருப்பதும், விளையாட்டுகள் செய்வதும், உறக்க பேசுவதும், சிரிப்பதும் பார்த்து குந்தி சந்தோஷமானாள்.

''பாண்டு மன்னரே, இதற்கு மேலும் குழந்தைகள் பெற்றுக் கொள்ள என்னை கட்டளையிடாதீர்கள். ஒன்றுக்கு மூன்று குழந்தைகள் பெற்றுவிட்டேன். உங்கள் வம்சம் வளரும். இது போதும்.'' என்று தன்னுடைய எண்ணத்தை எடுத்துரைத்தாள்.

பாண்டு மன்னர் தனியாக இருந்தபோது மாத்ரி அவருக்கு அருகே வந்தாள்.

''ஒரு சக்களத்தி பேசுவது போல் பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள். மூத்தாள் மூன்று குழந்தைகள் பெற்றுவிட இளையாள் நான் வெறுமே உட்கார்ந்திருப்பது எனக்கு வேதனையாக இருக்கிறது. எனக்கு மந்திரஜபங்கள் தெரியாது. அதே நேரம் நீங்கள் குந்தியிடம் கேட்ட அந்த மந்திர ஜபத்தை எனக்கு உபதேசித்தால் நான் கருவுருவேன். குழந்தை பெற்றுக் கொள்வேன். எனக்கும் தாய் என்ற ஸ்தானம் கிடைக்கும். வெறும் மனைவி என்பதைவிட உங்கள் குழந்தைகளுக்கு தாய் என்பது மிகப் பெரிய நல்ல விஷயம் அல்லவா. குந்தியிடம் எனக்கு மந்திர உபதேசம் செய்யும்படி கேளுங்கள்'' என்று சொல்ல,

பாண்டு, ''என் மனதிலும் அந்த எண்ணம் இருந்தது. அவள் குழந்தை பெற மறுத்துவிடவே அந்த மந்திரங்கள் உனக்கு உதவுமே என்று எண்ணினேன். ஆனால், என்ன சொல்வாளோ என்று தயங்கினேன். நீ மறுப்பாயோ என்று நினைத்தேன். உனக்கும் அந்த ஆசை இருக்க நான் நிச்சயம் குந்தியிடம் கேட்கிறேன்'' என்று சொன்னார். குந்தியிடம் தன் எண்ணத்தைச் சொன்னார். குந்தி ''சரி. என்னோடு படகில் வா'' என்று சொல்லி அவளை படகில் ஏற்றிக் கொண்டாள். மந்திரத்தை உச்சரித்தாள்.

''ஏதேனும் ஒரு தேவதையை மனதில் நினைத்து இந்த மந்திரத்தைச் சொல். அந்த தேவதை உனக்கு உதவக்கூடும்'' என்று சொல்லி கரையேறினாள்.

மாத்ரி யோசித்தாள். மறுபடியும் போய் மந்திரம் கேட்கச் சொன்னால் குந்தி தருவாளா. ஒரு பிள்ளை என்பது இருந்தாலும் ஒன்று இல்லையென்றாலும் ஒன்று. இரண்டு பிள்ளை இருந்தால் தான் நல்லது. எனவே, இரண்டு பிள்ளைகளுக்கு என்ன வழி என்று யோசித்து இரட்டையர்களான அஸ்வினி தேவதைகளை தியானித்தாள். அஸ்வினி தேவர்கள் அவளுக்கு இரண்டு குழந்தைகளை வழங்கினார்கள்.

குந்தி திடுக்கிட்டாள். ஒரு மந்திரத்தில் இரண்டு குழந்தைகளா? இந்த புத்தி எனக்கு தோன்றாமல் போய்விட்டதே. என்ன கெட்டிக்காரத்தனம், சக்களத்தி என்பதை நிரூபித்து விட்டாள் அல்லவா? இரண்டு குழந்தைகளை ஒரே மந்திரத்தில் பெற்றுவிட்டாள் அல்லவா. இனி இந்த மந்திரத்தை எவருக்கும் உபதேசிக்க மாட்டேன். மறுபடி வந்து கேட்டால் தரமாட்டேன் என்று பாண்டுவிடம் சொல்லி விட்டாள். இரண்டு மனைவியரிடையே ஒற்றுமை உண்டாவது என்பது இப்பூவுலகில் இல்லை.

தாய்கள் இரண்டு பேரும் மெல்லிய பூசலோடு இருந்தாலும் அந்த ஐந்து குழந்தைகளும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த காதலோடும், பிரேமையோடும் அந்த வனத்திலே வளர்ந்தார்கள். பல முனிவர்களுடைய ஆசியால் ஒளிர்வு பெற்றார்கள். இளம் வயதில் இமய மலை காடுகளில் ரிஷிகளுக்கு நடுவே அந்த குழந்தைகள் வளர்ந்தார்கள். முனிவர்களுடைய திருஷ்டிகள் அவர்கள் மீது பலமாக படிந்தன. முனிவர்களின் தொடலும், உச்சிமுகரலும் அவர்களுக்கு பலம் ஏற்றின. குழந்தைகள் ரிஷிகளை தயக்கமின்றி ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். கால்களை கட்டிக் கொண்டார்கள். அந்த முனிவர்களின் கால் தூசுகளை முகத்தில் துடைத்துக் கொண்டார்கள். இவையெல்லாம் அந்தக் குழந்தைகளை பலம் பெறச் செய்தன.

பாண்டுவைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்த துவாரகை மன்னர் வசுதேவர் பாண்டுவிற்கு குழந்தைகள் பிறந்ததை கேட்டதும் மிகுந்த சந்தோஷம் அடைந்தார். பல புரோகிதர்களையும், பசுக்களையும், ஆடை ஆபரணங்களையும் குழந்தைகளுக்கு அனுப்பினார். அந்த புரோகிதர்கள் அந்தக் குழந்தைகளுக்கு யஞ்ஞோபவீதாரணம் செய்தார்கள். பசுக்களின் மூலம் கிடைக்கும் உணவுகளையும் அளித்து சிறந்த ஆடை ஆபரணங்களை வைத்து அவர்களுக்கு அலங்காரம் செய்தார்கள். காட்டுவாசிகள் என திரிந்த அந்தக் குழந்தைகள் அந்த ஆபரணங்களால், வைதீக காரியங்களால் அரசகுமாரர்கள் போல மிளிர்ந்தார்கள்.

சர்யாதி வம்சத்தில் பிறந்த ப்ருஷத் என்கிற சுகர் என்பவர் அந்தக் குழந்தைகளுக்கு முதல் ஆசானாகத் திகழ்ந்தார். ஆயுதங்களை தயாரித்துக் கொடுத்தார். அவர்களுக்கு அதை எப்படி பிரயோகம் செய்வது என்பதை உபதேசித்தார். தர்மர் ஈட்டி எறிவதிலும், பீமன் கதையை பிரயோகம் செய்வதிலும், அர்ஜுனன் வில் வளைத்து போரிடுவதிலும்,

நகுல சகாதேவர்கள் கத்தி சண்டையிலும் பயிற்சி பெற்றார்கள். பலம் பெற்றார்கள். அர்ஜுனன் இடது கையால் அம்பு விடுகின்ற சூட்சமத்தையும் கற்றான். மற்ற எல்லோரையும் விட இடையறாத பயிற்சியின் மூலம் தன் வில் வித்தையை உச்ச நிலைக்கு எடுத்துச் சென்றான்.

அது அருமையான மழைக்காலம். மழை ஓய்ந்து புற்கள் பளிச்சென்று வெளிக்கிளம்பின. பச்சை கம்பளிகள் போர்த்திக் கொண்டது போல மலைகள் இருந்தன. எல்லா செடிகளும் விதம்விதமான பூக்களை மலர்வித்தன. கனிகள் கீழே விழுந்து உடைந்து மணம் பரப்பின. கொழுந்து வாசனையும், பழ வாசனையும் பூக்கள் வாசனையும், புற்கள் வாசனையும், ஈர மண்ணின் வாசனையும் பூமியை சுற்றி வந்தன. நடந்து போகும் யாருக்கும் கிளர்ச்சி ஏற்பட்டது.

பாண்டு காலாற நதிக்கரையோரம் நடக்க, மாத்ரி அவனை பின் தொடர்ந்தாள். நடக்க நடக்க பாண்டுவிற்கு இந்த வாசனைகளால் காமம் கொப்பளித்தது. பின்னே வரும் மனைவியின் வாசனையும் அவனை கிளர்ச்சியுறச் செய்தது. அவள் நகைகளின் குலுக்கமும், உடைகளின் ஸ்பரிஸமும் அவ்வப்போது பேசும் குரலும் அதீத கிளர்ச்சியைத் தந்தன. அவன் திரும்பி சட்டென்று மனைவியை பார்த்தான். தோள் மீது கை வைத்தான். என்ன என்பது போல் மாத்ரி விழிகளால் வினவினாள். வா என்று ஒற்றை வார்த்தையில் பாண்டு அழைக்க, பயந்தாள். இல்லையே இதற்கு நீங்கள் தகுதியில்லையே. துன்பம் நேருமே. தயவுசெய்து இந்த முயற்சியில் ஈடுபடாதீர்கள் என்று விலகினாள்.

அவள் விலகி நடக்க, அவள் பின்பக்க அசைவுகள் பாண்டுவை மேலும் கிளற வைத்தன. ஓடிப் போய் அவள் பின்பக்கமாய் தழுவிக் கொண்டான். உடல் முழுவதும் தடவினான். உன்மத்தமானான். மாத்ரி கெஞ்சிக் கூத்தாடினாள். விலகும்படி சொன்னாள். ஆனால், விலக்க விலக்க அவன் வெறி அதிகமாகியது. தடுக்க தடுக்க அவனுக்கு காமம் அதிகரித்தது. மறுக்க மறுக்க அவனுக்கு பேச்சு காதில் விழாமல் போயிற்று. மிக உக்கரமாக அவள் மீது சரியும்போது சட்டென்று சாபத்தால் நெஞ்சு அடைத்தது. அவன் திகைத்தான். மெல்ல நழுவி தரையில் சாய்ந்தான். நெஞ்சைப் பிடித்துக் கொண்டான்.

''தவறு செய்து விட்டீர்களே. செய்யக்கூடாத விஷயத்தை செய்துவிட்டீர்களே. தயவுசெய்து அந்த முனிவரை வேண்டுங்கள். மன்னிப்பு கேளுங்கள்.'' என்று கதறினாள். ஆனால், காலம் கடந்து விட்டது. மூச்சு திணறியது. கண்கள் நிலை குலைந்தன. உடம்பு துடித்து அடங்கியது. பாண்டு மரணமடைந்தான். மானுரு கொண்ட முனிவரின் சாபம் அங்கே பலித்தது.

மாத்ரியின் கூச்சல் கேட்டு குந்தி குழந்தைகளோடு ஓடிவந்தாள். குழந்தைகளை அங்கேயே நிறுத்தி விட்டு வாருங்கள். என்று மாத்ரி கூச்சலிட்டாள். குந்தி குழந்தைகளை அங்கேயே நிறுத்தி விட்டு ஓடி வந்தாள். நடந்ததை மாத்ரி சொல்ல தலையில் அடித்துக் கொண்டாள்.

''என்ன பெண்ணடி நீ. புருஷன் இப்படி முயற்சிப்பான் என்று தெரியாதா. இந்த தனிமையும், இந்த வனத்தின் சூழலும் எல்லா உயிரினங்களுக்கும் காமம் தூண்டுமே. உன் புருஷனுக்கு இந்த நிலைமை ஏற்படாதா. எதற்கு அவரோடு தனிமையில் போகிறாய். எங்களோடு இருக்க வேண்டியதுதானே. ஏன் இப்படி அடாது செய்தாய்.'' என்று கடிந்து கொண்டாள்.

''என்ன செய்வேன் என்ன செய்வேன்'' என்று கதறினாள் மாத்ரி. அவன் கால்களை இறுக்க பிடித்துக் கொண்டாள்.

அவர்களை கூச்சலை கேட்டு தொலைதூரம் இருந்த முனிவர்களும் ரிஷிகளும் விரைந்து வந்தனர். அவர்களை சூழ்ந்து கொண்டனர். அவர்கள் கதறலை கேட்டு முனிவர்களும் அழுதனர். குழந்தைகளை அருகே வரவழைத்தார்கள். குழந்தைகள் இறந்த தந்தையின் காலை கட்டிக் கொண்டு அழுதன. ஒரு குடும்பம் அங்கு தலைவனை இழந்து தவிதவித்தது. பாண்டவர்களின் வாழ்க்கையில் முதல்முறையாக சோகம் அரங்கேறியது.

அஸ்தினாபுரம் பிரம்மிப்பாய் இருந்தது பஞ்ச பாண்டவர்களுக்கு. விதவிதமான தேசத்து ஜனங்கள் ஒன்றுகூடியிருந்ததால் ஜனங்களின் முகத்தை பார்ப்பது பெரிய ஆச்சரியமாய் இருந்தது.

ஆனால், பஞ்சபாண்டவர்களைப் பார்த்ததும் அஸ்தினாபுரத்து ஜனங்கள் அழத் துவங்கினார்கள். இளம் வயதில் பாண்டவர்கள் தந்தையை இழந்து துயரமே வடிவாக, கலைந்த கேசமும், இடுங்கிய முகமும், தளர்ந்த உடலுமாய் நடந்து வருவது கண்டு மிகவும் வேதனைப்பட்டார்கள். ஜனங்களுடைய துக்கம் கண்டு அந்த அரச குமாரர்களுக்கு துக்கம் அதிகரித்தது. எங்கள் தந்தையை இழந்த துயரத்திலிருந்து நாங்கள் மனம் தேறிவிட்டோம். நீங்கள் அழவேண்டாம் என்று ஆறுதல் சொல்ல வேண்டும் போல ஒரு வேகம் ஏற்பட்டது.

அரண்மனைக்குள் நுழைந்ததும் சபை கதறியது. சத்தியவதியும், அம்பிகையும், அம்பாலிகையும் கதறினார்கள். குழந்தைகளை அணைத்துக் கொண்டு உச்சி முகர்ந்தார்கள். குந்தியை கட்டிக் கொண்டு ஆறுதல் சொன்னார்கள். தந்தையை பிரிந்த துக்கத்திற்கு நடுவே நம்முடைய இடத்திற்கு வந்துவிட்டோம் என்ற ஆறுதலும் அந்த அரசகுமாரர்களுக்கு ஏற்பட்டது. இதோ பீஷ்மர், இவர் விதுரர், அவர் துரோணர் என்று அவர்கள் மனம் ஆரவாரித்தது. மந்திரிகளை, சேனாதிபதிகளை அடையாளம் கண்டுகொண்டது. உறவினர்களிடம் போய் நின்று கால் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டது. அமைதியாகவும், அடக்கமாகவும்,

> இயல்பிலேயே கெட்டது யோசிக்கின்ற துரியோதனன் இரவும், பகலும் அதிகம் பீமனைப் பற்றி நிறைய கெடுதல்கள் யோசித்தான். எப்படி செயலாற்றுவது என்று தவித்தான். கொல்வது தான் வழி. இவனை கொன்றால்தான் நிம்மதி.

பலமாகவும், தெளிவாகவும், தேஜஸோடும் கூடிய அந்த அரச குமாரர்களை அஸ்தினாபுரம் அரவணைத்துக் கொண்டது. துரியோதனன் மட்டும் அவர்களை பயத்தோடு பார்த்தான்.

பதினாலு வயது தருமர் யுதிஷ்டருக்கு. பதிமூன்று வயது பீமனுக்கு. பன்னிரண்டு வயது அர்ஜுனனுக்கு. நகுல சகாதேவர்களுக்கு பதினோறு வயது. ஆனால், எல்லோரும் வளர்ந்த வாலிபர்களைப் போல இருக்கிறார்கள். காடுகளில் வளர்ந்ததாலோ என்னவோ அவர்கள் அசைவில் கொஞ்சம் நாகரீகம் குறைவாக இருந்தது. சடக்கென்று உட்காருவதும், விலுக்கென்று எழுந்திருப்பதும் கொஞ்சம் விரைப்பாக இருந்தது. அரச குமாரர்களுக்குண்டான நெளிவும், சுளிவும் இல்லாமல் இருந்தது.

இந்த பீமனைத் தவிர மற்ற எல்லோரையும் சமாளித்து விடுவேன். இந்த பீமன் என்ன அசுரபலம் கொண்டவனாக இருப்பான் போலிருக்கிறதே. என்ன முறுக்கான உடம்பு. என்ன அடர்த்தியான முடி. எவ்வளவு கருத்த புருவங்கள். எவ்வளவு பெரிய உள்ளங்கை. எத்தனை பெரிய பாதங்கள். அவன் படியேறினால் சுவர் அதிர்ந்தது. அவர்களுக்கு அரண்மனையின் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டது.

பதினான்கு நாள் முடியவில்லை என்பதால் எல்லோரும் தரையில் தூங்கினார்கள். துக்கம் அனுஷ்டித்தார்கள். சிராத்தக் காரியங்களை மிகச் செம்மையாகச் செய்து, அந்தணர்களுக்கும், முனிவர்களுக்கும், ஏழை மக்களுக்கும் வேண்டுமென்ற தானம் கொடுத்தார்கள். அதற்கு அரசாங்க அதிகாரிகள் முழுவதுமாக ஒத்துழைத்தார்கள். அப்படி ஒத்துழைத்த அதிகாரிகளை தருமர் மனப்பூர்வமாக வணங்கினார். சகோதர்கள் வாய் நிறைய நன்றி சொன்னார்கள். அதிகாரிகளை இந்தப் பண்பாடு சந்தோஷப்படுத்தியது. துரியோதனனிடமும் அவன் சகோதரர்களிடமும் இந்த விஷயத்தை அவர்கள் கண்டதில்லை.

மரணத்தின் துயர் பின்னடைந்து வாழ்வு பற்றிய சந்தோஷம் பஞ்சபாண்டவர்களை பற்றிக் கொண்டது. மரங்களோடும், மிருகங்களோடும், முனிவர்களோடும் பேசிக் கொண்டிருந்த அந்த இளைஞர்கள், மக்களுக்கு நடுவே புழங்கியதும் சந்தோஷப்பட்டார்கள். உடன் விளையாட நூறு அரசகுமாரர்கள் இருக்கிறார்கள் என்றவுடன் எகிறி குதித்தார்கள்.

பீமன் உற்சாகமானான். கொஞ்சம் அதிகமாகவே உற்சாகமானான். யார் அந்த தென்னை மரத்தை முதலில் தொட்டுவிட்டு வருவார்கள் என்று சொல்லும் முன்னரே ஓடுவான். மற்றவர்கள் தயாராகும் போது திரும்பி விட்டான். இல்லை இனிமேல்தான் ஓடவேண்டும் என்றவுடன் மறுபடியும் ஓடினான். அவர்கள் தென்னை மரத்தை தொடுவதற்கு முன்பு ஆரம்ப இடத்திற்கு வந்து விட்டான். அவன் வேகம் பார்த்து அந்த நூறு சகோதரர்களும் வியந்தார்கள். பயந்தார்கள். பழகப் பழக அந்த சகோதரர்களோடு வம்பு சண்டைக்கு போவதும், அவர்களை துன்புறுத்துவதும் பீமனுடைய உற்சாக புத்தியாக இருந்தது. இரண்டும் கெட்டான் பையனுடைய குதூகலம் அவனை அதிகம் ஆடவைத்தது. ‘‘என்னை தூக்கிக்கொண்டு ஓடு பார்க்கலாம்’’ இருபத்தைந்தோ, இருபத்தியாறோ எண்ணிக்கை உள்ள சகோதரன் பேசும் போது அவன் தூக்கிக்கொண்டு அந்தப் பையன் சொன்ன இடத்தையும் தாண்டி வெகுதூரம் போய் முள்புதரில் போட்டு விட்டு வந்தான். அந்தப் பையன் வந்து சேருவதற்கு மாலை நேரம் ஆகியது. வந்து ஓவென்று அலறினான். துரியோதனன் சமாதானப்படுத்தினான். இரண்டு பேரை தூக்கிக் கொண்டு ஓடுவேன் என்றான் பீமன். ஓடி, நடுவழியில் இறக்கி, இரண்டு பேர் தலைகளையும் நச்சென்று இடித்தான். இடது ஒன்றும், வலது ஒன்றுமாக விசிறிப் போட்டான். அவர்கள் நெற்றியை பிடித்துக்கொண்டு அழுதுகொண்டே வந்தார்கள். நாலுபேர் அவனை அழுத்தி அடக்க முயற்சிக்க, நாலுபேரையும் தரையில் கரகரவென்று தேய்த்துக் கொண்டு வந்தான். முழங்காலும், பிருஷ்டமும், எரிய எரிய இழுத்தான் அவர்கள் அலறினார்கள்.



பீமனுக்கு உற்சாகம். வேறு எதுவுமில்லை. கொஞ்சம் அடக்க அங்கு ஆள் இல்லை. யுதிஷ்டர் அதட்டினால் அடங்குவான். ஆனால் யுதிஷ்டர் பார்க்காத போது அவன் விஷமங்களை வைத்துக் கொண்டான்.

யுதிஷ்டருக்கு செய்தி வரும் முன்பு துரியோதனனுக்குப் போய்விடும். சகோதரர்களை காப்பாற்ற முடியாத ஒரு ஏக்கத்திலும், கோபத்திலும் இருந்த துரியோதனனுக்கு வன்மம் பற்றிக் கொண்டது. இயல்பிலேயே கெட்டது யோசிக்கின்ற துரியோதனன் இரவும், பகலும் அதிகம் பீமனைப் பற்றி நிறைய கெடுதல்கள் யோசித்தான். எப்படி செயலாற்றுவது என்று தவித்தான். கொல்வதுதான் வழி. இவனை கொன்றால்தான் நிம்மதி. இல்லையெனில் இப்போது போல வாலிபமான பிறகும், மத்திம வயது வந்த பிறகும் இவன் தொல்லை இருக்கத்தான் செய்யும். இப்போதே இந்த வயதிலேயே அழித்து ஒழித்து விட்டால் தருமனை கைது செய்து உள்ளே போடலாம். மற்றவர்கள் ஒரு பொருட்டே அல்ல என்று எண்ணினான். எப்படி கொல்வது என்று திட்டமிட்டான். சகுனியிடம் போய் நின்று கண்களில் நீர் துளிக்க தன் துயரம் பற்றி பேசினான். சகுனி பதைத்துப் போனார்.

(தொடரும்)

மகாபாரதம்

10

பாம்பு கடித்துப் பிழைத்தான்
பீமன்

பாலகுமாரன்



சகுனியினுடையது காந்தார தேசம். வன்மம் கொள்வதை இயல்பாக கொண்டுள்ள பூமி. ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்வது என்பது அங்கு தினசரி விஷயம். எல்லோரும் எதிரிகள். எதிரிகளை எப்படி ஒழிப்பது என்கிற புத்தியுடையோர் அங்கு அதிகம். ஆகவே இங்கே அஸ்தினாபுரத்தில், துரியோதனை காட்டிலும் சகுனி அதிகம் வருத்தப்பட்டார். அதிகம் யோசித்தார். அதிகம் கவலைப் பட்டார். ஒருவேளை பஞ்சபாண்டவர்கள் வந்தால் தனக்கு எந்த மரியாதையும் இருக்காது; துரியோதனன் இருக்கும் வரைதான் தனக்கு சிறப்பு என்பதை அவர் தெளிவாகப் புரிந்து வைத்திருந்தார்.

ஒரு மனிதன் தன்னைப்பற்றி, தன் சிறப்பு பற்றி, தன் எதிர்காலம் பற்றி மட்டும் யோசிக்கும்போது மற்றவர்களுடைய விசேஷ குணங்கள் அவனுக்குத் தெரியாது போகும். எடைகள் தவறாகப் போகும்.

“பீமனுடைய இயல்பு என்ன துரியோதனா?” சகுனி கேட்டார்.

“கோபப்படுவது.”

“இல்லை. தின்பது. இடையறாது உண்பது. எனவே, பீமனை உணவின் மூலமாகவே ஒழிக்க வேண்டும்.”

“உணவின் மூலமாகவே ஒழிப்பது என்றால் என்ன மாமா?”

''விஷம் தருவது.''

''கொல்வதா.''

''பிறகு வேறு எதற்கு ஆலோசனை கேட்டு வந்தாய்? அவன் இருக்கும் வரை உனக்கு நிம்மதி இல்லை.''

''தெரிகிறது மாமா. அதற்காக...''

''அவனை கொன்று முடித்தால்தான் உனக்கு நிம்மதி. நீ சிறு பிள்ளை. உனக்குத் தெரியாது. கடைசிவரை அவன் உனக்கு எதிரிதான். அவனைப் பார்க்கும்போது உன் மரணம்தான் எனக்கு ஞாபகம் வருகிறது. உன்னை ஒழித்து விடுவானோ என்கிற கவலை வருகிறது. அவனை நிச்சயம் ஒழித்துவிட வேண்டும்.''

''விஷம் கொடுத்தா...?''

''ஆமாம். விதம் விதமான பட்சணங்கள் செய். அதில் அவனுக்கு விருப்பமுள்ளதை எடுத்து அவன் இலையில் வை. உன் கையில் விஷம் தடவிக் கொண்டு அவனுக்கு பிசைந்து கொடு. வாயில் ஊட்டு.''

''விஷம் எங்கே கிடைக்கும்?''

''நான் தருகிறேன். காளகூடம் என்கிற விஷம். உண்ட கால் நாழிகையில் மரணம் நிச்சயம்.''

துரியோதனன் மாமனை நோக்கி முன்னேறினான். பாதம் தொட்டு நெற்றியில் வைத்துக் கொண்டான். எக்கி இறுக்க அணைத்துக் கொண்டான். துயர் தீர்ந்தது என்பதுபோல பார்த்தான். சகுனியும், துரியோதனனும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டார்கள்.

கங்கைக்கரைக்கு அருகே கூடாரம் இட்டு ஜலக்கிரீடை செய்யப் போவதாகவும், விதம்விதமான உணவுகள் தயாரித்து உண்ணப் போவதாகவும் துரியோதனன் அறிவிக்க, துள்ளி குதித்தது பீமன்தான். தருமருக்கு யோசனையாக இருந்தது. அவசியமா என்ற கேள்வி எழுந்தது. ஆனால், பீமன் நிச்சயம் போக ஆசைப்படுவான். அவனுக்கு துணையாகவாவது தான் போகவேண்டும் என்று தீர்மானித்தார்.

கௌரவர்களும், பாண்டவர்களும், குதிரைகளிலும், யானைகளிலும் பயணப்பட்டனர். அஸ்தினாபுரத்திலிருந்து கங்கை கரைக்குப்போய் அங்கிருந்த மிகப்பெரிய புல்வெளியில் தோலாலும் துணியாலும் ஆன கூடாரங்களை நிறுவச் சொல்லி அதில் குடிபுகுந்தார்கள். தீ வளர்த்து ஆடினார்கள். பாடினார்கள். ஒருவரை ஒருவர் சீண்டி விளையாடினார்கள்.



''பீமா உனக்கு அதிரசம் பிடிக்குமா? லட்டு. புளியோதரை...?'' அன்பொழுக துரியோதனன் கேட்டான்.

பீமன் ஆவலாய் தலையசைக்க, துரியோதனன் பிசைந்து வாயில் ஊட்டினான். கையில் விஷம் இருந்தது. இருட்டில் யாருக்கும் தெரியாது.

''என்ன வாசனை அது?'' பீமன் மூச்சிழுத்தான்.

''அப்பம் கொஞ்சம் கருகிவிட்டது. சமையல் காரனை உதைக்க வேண்டும்.''

''இல்லை. சுவையாக இருக்கிறது.'' இன்னும் இரண்டு அப்பங்கள் சாப்பிட்டான். விஷம் வயிற்றுக்கு போனது. கால் நாழிகை. அரை நாழிகை. எதுவும் நடக்கவில்லை. புளியோதரையிலும் விஷம் கலக்கப்பட்டது. பலவித பானங்களிலும் விஷம் கலக்கப்பட்டது. இவன் என்ன மனிதனா. வேறெதாவதா? துரியோதனன் திகைத்தான். ஆனால், விஷம் மெல்ல வேலை செய்தது.

''சூலம் நடு.'' தன்னுடைய தேரோட்டிக்கு கட்டளையிட்டான் துரியோதனன்.

ஆறு சுழித்துக்கொண்டு ஓடும் இடத்தில் சூலங்கள் நடப்பட்டன. ஆறு வேகமான இழுப்போடு போய்க்கொண்டிருந்தது. எல்லா இளைஞர்களும் அயர்ந்து தூங்க, பீமன் விஷத்தினால் ஆழ்ந்த நிலைக்குப் போனான். அவன் கை, கால்கள் காட்டுக் கொடியால் கட்டப்பட்டன. துரியோதனனும், தேரோட்டியும் சேர்ந்து அவனை உயரமான இடத்திலிருந்து சூலம் நட்ட இடத்தில் தூக்கிப் போட்டார்கள். ஆற்றினுடைய வேகம் வேகமாக இருந்ததால் விழுந்த கணத்திலேயே இழுக்கப்பட்டு சூலத்திற்கு அப்பால் போய் பீமன் விழுந்தான். கங்கை அவனை அடியில் இழுத்துக் கொண்டு போயிற்று. நீர் பட்டதும் தன்னை அறியாது பீமன் மூச்சை அழுத்தி அடக்கினான். உள்ளுக்குள்ளே இருக்கின்ற காற்று அவனுக்கு உயிர்வாழ போதுமானதாக இருந்தது. வெகுவேகமாக அவனை கங்கை நதி இழுத்துக் கொண்டு போனது. அடுத்த மடுவில் கொண்டு போய் சொருகியது. அந்த மடுவில் கொடிய நாகங்கள் புதர்களுக்கு நடுவே சுற்றிக் கொண்டிருந்தன. நீரின் வேகத்திற்கு ஏற்ப ஆடிக் கொண்டிருந்தன. ஒரு மனித உடல் வந்து சேர்ந்ததும் தங்கள் ஆட்டம் பாதிக்கப்படுவதை கண்டு கோபமுற்று வேகமாக அவனை கொத்தின. பல இடங்களில் பல் பதித்து அழுத்தின. சில நாகங்களுக்கு பல் உடைந்தது. ஆனாலும் விஷம் இறங்கியது. வயிற்றுக்குள் இருக்கின்ற விஷம். பாம்பு கடித்த விஷத்தினால் முறிந்தது!

பீமன் பாம்புகளை பிய்த்துப் போட்டான். கொடிகளை அறுத்து எறிந்தான். நீரில் வேகமாக நீந்தினான். பாம்புகள் அவனை பின் தொடர்ந்தன. பாம்புகளின் அரசனான நாகராஜனிடம் போய் ''பலம் வாய்ந்த ஒருவன் நீரில் மூழ்கியிருக்கிறான். ஏற்கனவே விஷம் அருந்தியிருப்பான் போலிருக்கிறது. நாங்கள் விஷம் கொடுத்தவுடன் அது அவனுக்கு அமிர்தமாகி விட்டது.'' என்றன பாம்புகள். பிறகு பீமனை மடக்கி தங்கள் அரசனிடம்

அழைத்துப் போனார்கள். நாகங்கள் அவனுக்கு நீந்தவும், மூச்சு அடக்கவும் கற்றுக் கொடுத்தன. சிறுவனின் ஆற்றல் கண்டு நாகராஜன் சந்தோஷமடைந்தான். சுற்றி அணைத்து உச்சி முகர்ந்தான். இவன் சாதிக்கப் பிறந்த பிள்ளை என்று தெரிந்து கொண்டான். ''எங்களிடம் அற்புதமான அமிர்தம் இருக்கிறது. உனக்குத் தருகிறேன். உன்னால் முடிந்த மட்டும் குடி.'' என்று அவனுக்கு அமிர்த குடங்களை வழங்கினான்.

கரையில் பீமனைக் காணோம் என்று தேடினார்கள். கரையோரம் நடந்து பார்த்தார்கள். உண்மைலேயே போய்விட்டானா என்று துரியோதனன் விசாரித்து, 'போனது போல் இருந்தது'. என்று பதில் பெற்று. 'பீமன் முன்னால் போயிருப்பான். வாருங்கள் போகலாம்' என்று அந்த இடத்தை காலி செய்து கொண்டு அஸ்தினாபுரம் திரும்பினார்கள். மற்ற எல்லோரையும்போல துரியோதனனும் தேடினான். கவலையோடு தருமரும், அர்ஜுனனும், நகுல சகாதேவரும் பேச, எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று விதுரரிடம் குந்தி பதட்டப்பட்டு விசாரிக்க, நாலா பக்கமும் ஆட்களை அனுப்பினார்கள்.

எட்டு நாளாயிற்று, எங்கே இருக்கிறான் என்ற செய்தி கிடைக்கவில்லை. ஊரே கவலையில் மூழ்கிற்று.

நாகராஜன் கொடுத்த எட்டு குடங்களையும் அப்படியே பீமன் அருந்தினான். புது பலம் பெற்றான். கட்டித் தழுவி நன்றி கூறினான். பீமன் கரையேறி அஸ்தினாபுரம் சேர்ந்தான். சகோதரர்கள் ஓடிவந்து தழுவிக் கொண்டார்கள். ஊர் சந்தோஷப்பட்டது. துரியோதனன் துவண்டு போனான்.

''பொறு. பதட்டப்படாதே. இவனை மட்டும் ஒழித்தால் போதாது. ஒட்டுமொத்தமாய் ஐந்து பேரையும் ஒழிப்போம். கவலைப்படாதே. அவன் தாயாரோடே சிவலோகத்திற்கு அனுப்பி வைப்போம். மனம் தளராதே.'' சகுனி உறுதி கூறினான்.

''இதை வெளியே சொல்ல வேண்டாம்.'' விதுரர் பதட்டத்துடன் சகோதரர்களுக்கு கட்டளையிட்டார்.

''இது துரியோதனன் செயல். திட்டமிட்ட நடவடிக்கை. கொல்லும் அளவுக்கு ஏற்பட்ட கொடூரம். துரியோதனன் இதைச் செய்ததாக காட்டிக் கொள்ளாதீர்கள். விஷம் கொடுத்ததாகவோ, விஷம் நீங்கப் பெற்றதாகவோ வெளியே சொல்லாதீர்கள். ஒன்றுமே நடவாதது போல இருங்கள். துரியோதனன் நல்லவன் என்றே காட்டிக் கொண்டிருங்கள். அப்பொழுதுதான் அவன் தொடர்ந்து என்ன செய்வான் என்பது நமக்குத் தெரியவரும்.'' சகுனியும், துரியோதனனும் ஏகப்பட்ட ஆலோசனைகள் செய்கிறார்கள் என்பது யுயுட்சு என்பவன் மூலமாக விதுரருக்கும், யுதிஷ்டருக்கும் தெரியவந்தது.

அவர்கள் சுள்ளி விழுந்தாலும் தலை தூக்கி, காது விடைத்து திசைபார்க்கும் மான்களைப்போல மிக கவனமாக இருந்தார்கள். அரசல் புரசலாக ஒற்றர்கள் மூலமாக திருதராஷ்டிரன் காதுக்கும் இந்த விஷயம் எட்டியது. அவரும் இதை கண்டு கொள்ளாமல் மௌனமாக இருந்தார். குழந்தைகளின் மனப்போக்கை திசை திருப்புவதற்காக அவர்களை தனுர்வேதம் படிக்க வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

அந்த அந்தணருக்கு அரசன் நண்பன். அரசனுக்குப் பெயர் துருபதன். ஒரே குருகுலம். அடுத்தடுத்த படுக்கை. அடுத்தடுத்து உணவுத் தட்டு, ஒரே உயரம், ஒரே நிறம், ஒரு பருமன், ஒரே விதமான புத்தி. இதெல்லாம் கூட நட்பில் ஒற்றுமை வளர்க்கும் விஷயங்கள். குருகுலத்தில் அரசன், அந்தணன் என்ற பேதமில்லை. எல்லோரும் ஒன்று, மாணவன் என்ற ஒரே விதமான தகுதி, கடவுளே வந்தாலும்கூட குருகுலத்தில் கை கட்டித்தான் படிக்க வேண்டும். அவர்கள் சாதாரண மனிதர்கள். வெவ்வேறு குலத்தில் பிறந்தவர்கள்.

> அந்தணர் வாழ்க்கையில் ஆடம்பரத்திற்கு இடமில்லை. அவசியமும் இல்லை. அப்படி மிஞ்சி ஏதேனும் தேவைப்பட்டால் உன்னிடம் வராமல் நான் வேறு எங்கு போவேன். உன்னோடே இருப்பது என்பது அரச போகத்தை அனுபவிப்பதற்குச் சமம். நான் அந்தணனாகவே இருக்கிறேன்.

துரோணருக்கு உதவி செய்வது இயல்பு. சத்ரியனான துருபதனுக்கும் அதுவே இயல்பு.

''துரோணா. எப்பேர்பட்ட தோழன் நீ.'' ஒரு முறை துருபதன் மனம் நெகிழ்ந்து பேசினான். ''எவ்வளவு உதவிகள் செய்திருக்கிறாய், எப்படி என்னை பேணி காக்கிறாய். நீ இல்லாவிட்டால் இந்த குருகுலத்தில் எனக்கு பைத்தியமே பிடித்திருக்கும். படிப்பு முடிந்த பிறகு தயவு செய்து என்னோடு என் தேசத்திற்கு வா. என்னோடு இரு. கடைசிவரை நான் உன்னை காப்பாற்றுகிறேன்.''

''இல்லை. துருபதா. அப்படி அவசியமில்லை. அந்தணர் வாழ்க்கையில் ஆடம்பரத்திற்கு இடமில்லை. அவசியமும் இல்லை. அப்படி மிஞ்சி ஏதேனும் தேவைப்பட்டால் உன்னிடம் வராமல் நான் வேறு எங்கு போவேன். உன்னோடே இருப்பது என்பது அரச போகத்தை அனுபவிப்பதற்குச் சமம். நான் அந்தணனாகவே இருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் யாசகத்திற்கு வருவேன்.'' என்று அடக்கமாக சொல்ல,

''யாசகமா! என்னுடையதெல்லாம் உன்னுடையது. எனவே, எந்தக் கவலையும் இன்றி நீ வரலாம்'' என்று சொன்னான். உற்சாகம் மிகுந்த நண்பன் துருபதனின் வார்த்தைகள் துரோணரின் மனதைக் குளிர்வித்தன. காலம் உருண்டோடியது. கண்ணீர் பொங்க இருவரும் பிரிந்தனர்.

துருபதன் தன் தேசத்திற்குப் போனான். இளவரசன் பட்டம் ஏற்றான். பிறகு அரசனானான். மிகச்சிறப்பாக ஆட்சி செய்தான். படித்த பாடங்கள் உதவி செய்தன. துரோணருக்கும் திருமணமாயிற்று. யாசித்துதான் உண்பது என்ற

கொள்கையால் அவர் அந்தண தர்மத்தை கடைபிடித்து அங்கே இங்கே கையேந்தி வந்தார். ஆனால், அவர் பக்கம் அத்தனை செழுமையாக இல்லை. அஸ்வத்தாமன் பிறந்த பிறகு அவனுக்கு கூடுதல் உணவு தேவைப்பட்டது. தானும், மனைவியும் நீர் குடித்து பட்டினி இருக்கலாம். குழந்தையை நீர் குடித்து இரு என்று சொல்ல முடியுமா? ஐந்து வயது பிள்ளைக்கு அகோர பசி ஏற்பட்டது. அதிகம் உணவு தேவைப்பட்டது. குறைந்தபட்சம் பாலாவது தரவேண்டும். ஒரு பசுவாவது வேண்டும். இரண்டு பசு இருந்தால் நன்றாக இருக்கும். அவர் மனைவி கணக்கு போட்டு கணவனின் காதை கடித்தாள். நெடுநேரம் யோசனை செய்து துருபதனை நோக்கி துரோணர் போனார்.

அரண்மனைக்கு உள்ளே போய் அரசவை விளிம்பில் நின்று பார்த்தார். துருபதன் யாரது என்று கையால் வெளிச்சம் மறைத்து அவரைப் பார்த்தான். கை உயர்த்தி வரச்சொன்னது போல துரோணர் உணர்ந்தார். சந்தோஷமானார்.

‘‘துருபதா, நலமா?’’ என்றார். சபை திகைத்தது. அரசனை பெயரிட்டு கூப்பிடுகின்ற இந்த அந்தணர் யார்? இவர் கிழிசல் உடையும், பரட்டை தலையும், புழுதி படிந்த கால்களும் இவருக்கு மரியாதை கொடுக்கும் எண்ணம் இல்லையே. இவருக்கும் மரியாதை தெரியவில்லையே என்று முணுமுணுத்தார்கள். துருபதன் கோபமானான்.

‘‘யார் நீங்கள்?’’ என்று மிடுக்காக விசாரித்தான். துரோணர் தன்னைச் சொன்னார்.

‘‘நினைவில் இருக்கிறது. நீயும், நானும் ஒரே குருவிடம் படித்தோம் என்பது மறுப்பதற்கில்லை. அங்கு நீ எனக்கு உதவி செய்தாய் என்பதையும் நான் நினைவில் வைத்திருக்கிறேன். இருந்தாலும் நீ படித்த படிப்பு உனக்கு உதவி செய்யவில்லையே என்று வருந்துகிறேன்.’’

‘‘என்ன உதவி செய்யவில்லை?’’

‘‘ஒரு அரசனை எப்படி அணுகுவது என்று உன் படிப்பு சொல்லித் தரவில்லையா? ஒரு சபைக்குள் நுழைகிறபோது அரசன் எத்தனை தெரிந்தவனாக இருந்தாலும் ஒரு மரியாதையோடு பேச வேண்டும் என்று உன் குரு சொல்லித் தரவில்லையா அல்லது சொல்லித்தந்தது மறந்து போயிற்றா? அந்தணர்கள் கூர்த்த மதி படைத்தவர்கள் என்று சொல்வார்கள். உன் கூர்த்த மதி எங்கே போயிற்று? ஒருவேளை ஏதும் பிசகோ?’’ என்று கேட்க, உள்ளுக்குள்ளே அந்த கேள்வியின் அர்த்தம் புரிந்து துரோணர் பளிச் சென்று கோபமடைந்தார். புருவம் நெருக்கி உற்றுப் பார்த்தார்.

‘‘எனக்கு நினைவில் இருக்கிறது என் பாடம். உனக்கு உன் பாடமும், உன் வாக்கும் நினைவில் இல்லை. நீ சொன்ன உணர்ச்சிகரமான வசனங்களை நீ மறந்து விட்டாய். சத்ரியர்கள் நீட்டி முழக்கி பேசுவதில் வல்லவர்கள். அவர்கள் அரசியல் தெரிந்தவர்கள். எனவே, எந்தப் பக்கமும் அவர்கள் நாக்கு புரளும் என்பதை எனக்கு பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறது.’’ துரோணர் சீறினார்.

‘‘துருபதா, நான் உன்னிடம் பெரிதாக எதுவும் யாசிக்க வரவில்லை. உன் ராஜ்ஜியத்தில் பாதி கேட்கவில்லை. எனக்கு இரண்டு பசுக்கள் கொடு. எனது மகனின் பசியை அது ஆற்றும்.’’

‘‘ஒரு அந்தணருக்கு நூறு பசு கொடுத்தேன். அவர் கேட்கும் விதத்தில் கேட்டார். மகிழ்ந்தேன். நீயும் அப்படியே கேள். இன்னொருமுறை என் பெயரைச் சொன்னால் நான் உனக்கு வேறு தரவேண்டியிருக்கும்.’’ அவன் தொடை தட்டினான்.

‘‘கசையால் அடிப்பாயா. உன்னால் முடியுமா துருபதா?’’

‘‘மீண்டும் என் பெயர் சொல்கிறீர்கள்.’’

‘‘ஏன் துருபதன் என்பதுதானே உன் பெயர்? துரோகி என்று அழைக்கவா.’’

‘‘ஏய்...’’ அவன் எழுந்து நின்று அதட்டினான்.

துரோணர் விரல் உயர்த்தினார். கவனம் என்று விரல் ஆட்டி எச்சரித்தார். சபை எழுந்து நின்றது. துரோணரை கோபத்தோடு பார்த்தது. அருகே இருந்த வீரர்கள் மடக்கிப் பிடித்து குனிய வைத்து விடலாமா என்று துடித்தார்கள். ஆனால், துருபதனுக்குத் தெரியும். துரோணரை அசைக்கக்கூட அவர்களால் முடியாது. காவலாளியின் கழியைப் பறித்தே காவலாளியை தரைக்குச் சாய்க்க துரோணருக்குத் தெரியும். அவருடைய எல்லா வித்தையும் அற்புதமானது. அவர் தனுர் வித்தையின் சிகரம். அவன் அமைதியானான்.

‘‘தர முடியாது. அவரை போகச் சொல்லுங்கள்.’’

அவர் முகம் சிவந்தார். மூச்சிரைத்தார். ‘‘துருபதா, உன்னை அடக்குவேன். உன்னை நிச்சயம் அடக்குவேன்’’ சபதம் சொல்லி விட்டு அந்த அரண்மனையை விட்டு வெளியே வந்தார்.

அந்தப் புல்வெளியில் கும்பல் கும்பலாய் அரச குமாரர்கள் பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

சீடனைத் தேடும்

குருவின் தவிப்பு

பாலகுமாரன்

மகாபாரதம்

11



துரோணர் ஒரு மாதம் முன்பே அஸ்தினாபுரம் வந்துவிட்டார். மனைவியையும், குழந்தையையும் அழைத்துக் கொண்டு விதுரர் வீட்டிற்கு வந்து தங்கினார். விதுரர் அவரை தெரிந்து கொண்டார். மிக அன்போடு வரவேற்றார். 'முதலில் ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். பிறகு பேசலாம்' என்று அவருக்கு தன் அரண்மனையில் தனியே இடம் கொடுத்தார். துரோணரின் மனைவி கிருபி நிம்மதியானாள். வெறும் அரிசி மாவு கரைசலை குடித்து விட்டு, 'பால் குடித்தேன் பால் குடித்தேன்' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த அஸ்வத்தாமன், உயர்ந்த ரக பசுக்களின் பாலை குடித்து ஆனந்தப்பட்டான். விதுரருக்கு அந்தக் குழந்தையின் சந்தோஷம் மிகப் பெரிய மகிழ்ச்சியை கொடுத்தது. இரவு–பகல் பாராது அவனோடு சுற்றிக் கொண்டும், விளையாடிக் கொண்டும் இருந்தார். அவர் வாழ்க்கையில் அஸ்வத்தாமன் மிக முக்கியவனாகிப் போனான். துரோணர் நன்றியில் அழுதார். கிருபி பலமுறை நமஸ்கரித்தாள்.

‘‘**நா**ன் என்ன செய்தேன். நானல்லவா உங்களுக்கு நமஸ்காரம் செய்ய வேண்டும். இந்த வீட்டில் ஒரு அற்புதமான குழந்தை. சூட்சமமான குழந்தை. அதிரடிக்கிற புத்திசாலித்தனமான குழந்தை இங்கு வந்து விளையாடிக் கொண்டிருக்கிறான் என்றால் அது எங்கள் வீடு செய்த பாக்கியமல்லவா?

‘‘நீங்கள்போய் யாசகம் கேட்கலாமா? உங்கள் திறன் என்ன என்று தெரியாதவரிடம் நீங்கள் எதற்கு கைகட்டி நிற்கிறீர்கள்? அரசர்கள் எப்பொழுதுமே கர்வம் மிக்கவர்கள். அதில் மிகச்சிலரே சொன்ன சொல் தவறாதவர்கள். நெருப்பை அனுபவிப்பது போல் அரசன் எவ்வளவு தெரிந்தவனாக இருந்தாலும் சற்று தள்ளி இருந்தல் அழகு. மிக உண்மையான அரசன். மிகுந்த நன்றியுள்ள அரசன். வாக்கு காப்பாற்றுகின்ற க்ஷத்ரியன் ஆயிரத்தில் ஒருவனாகத்தான் இருப்பான். அந்த ஒருவனுக்காக நாம் மற்றவரையும் பொறுத்துக் கொள்ள வேண்டியது தான். இனி வறுமையின் நிழல்கூட உம் மீதும், உம் குடும்பத்தின் மீதும் படாது. நீர் யார் என்று இப்பொழுது வெளிக்காட்ட வேண்டாம். நான் அரண்மனையின் விஷயங்களை உற்று கவனித்து சரியான நேரம் சொல்கிறேன். அப்போது உங்களை வெளிப்படுத்திக் கொள்ளுங்கள்.

‘‘பீஷ்மரிடம் நேரேபோய் உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டால், ‘எதற்கு இங்கு வந்தாய்? உன்னால் என்ன உபயோகம்?’ என்று யோசிக்க ஆரம்பித்து விடுவார். நீ உபயோகம் என்று அவர் முதலில் தெரிந்து கொள்வது நல்லது. அதற்கான சந்தர்ப்பத்தை நான் உருவாக்கித் தருகிறேன். பாஞ்சாலம் எங்கே? அஸ்தினாபுரம் எங்கே? எவ்வளவு தொலைவு நடந்து வந்திருக்கிறீர்கள்! உண்பதும், உறங்குவதும் தவிர வேறு ஒரு வேலையும் உங்களுக்கு இல்லை.’’

ஆனால், துரோணரால் அப்படி இருக்க முடியாது. விதுரரின் வீட்டை அழகாக சீர்படுத்திக் கொடுத்தார். கிருபி சுத்தம் செய்தாள். சமையல் அறையை ஆளுமை செய்தாள். வீட்டிலுள்ளவர்களுக்கு அவரவர்க்கு தகுந்தபடி உணவு தயார் செய்தாள்.

‘‘துரோணரே. கிளம்பும். குழந்தைகள் மைதானத்திற்கு விளையாடப் போயிருக்கிறார்கள். புல்வெளியில் பந்தாடலாமே என்று நான் சொல்லி அனுப்பினேன். கும்பலாக ஓடியிருக்கிறார்கள். சாதாரண தேச சஞ்சாரி போல, அந்தப் பக்கம் வழி கேட்டுக் கொண்டு போவது போல நீங்கள் அவர்கள் இருக்கும் இடம் போங்கள். அங்கு போய் அவர்கள் மனம் கவரும் காரியத்தை செய்யுங்கள். அவர்களே வந்து உங்களை அரண்மனைக்கு அழைத்து வரட்டும். குழந்தைகள் அழைத்து வந்தால் உமக்கு பீஷ்மர் வேண்டியது தருவார். விசாரிக்கவும் செய்வார். இறைவன் துணையிருப்பான்.’’

அந்த ஒற்றைப் பந்து பீமன் உதையில் உயரே கிளம்பி காற்றழுத்த திக்கில் நகர்ந்து கிணற்றில் போய் விழுந்தது. ஏற்கனவே தருமரின் மோதிரம் விழுந்து கிடந்த கிணறு அது. கிணறு பெரியது. ஆனால், தண்ணீர் வெகு ஆழத்தில் இருந்தது. தெளிவாகத் தெரிந்தது. இறங்குவதற்கு அந்தக் குழந்தைகளுக்கு தைரியம் இல்லை. அதே சமயம் பந்து விளையாடல் பாதியில் நின்று போனது வருத்தமாக இருந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்ளத் துவங்கினார்கள்.

கிணறு நோக்கி துரோணர் நகர்ந்தார். ‘‘என்ன குழந்தைகளே என்ன கூச்சல்’’ என்று கிணற்றில் எட்டிப் பார்த்தார். ‘‘பந்து இருக்கிறது. எடுக்க வேண்டியது தானே.’’

‘‘அடிஆழத்தில் இருக்கிறதய்யா’’ ஒருவன் கத்தினான்.

‘‘கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கிறது என்றா சொன்னேன்? எந்த ஆழத்தில் இருந்தால் என்ன? சாமர்த்தியம் உள்ளவர் எடுப்பார். நீங்கள் அரச குமாரர்கள்தானே.’’ அவர் சந்தேகமாகக் கேட்டார்.

‘‘அந்தணரே. நாங்கள் அரச குமாரர்கள்,’’ ஒருவன் கர்ஜனையோடு பேசினான்.

‘‘அஸ்திர பயிற்சி இல்லையா.’’

‘‘எங்களுக்குத் தெரியும். ஆனால், அஸ்திரத்தை கொண்டு பந்தை அடித்து நாசம் செய்யவா? அது தேவையற்றது.’’

‘‘அடடே. அஸ்திரம் நாசம் செய்வதற்கென்று யார் சொன்னார்கள். ஒரு விஷயத்தை எப்படி பயன்படுத்தினால் நல்லதாக இருக்கும். எப்படி பயன்படுத்தினால் அழிவுக்குப் போகும் என்று ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டும். அரசகுமாரர்களாகிய உங்களுக்கு இது சொல்லித் தரப்படவில்லையா.’’



அவர்கள் கோபத்திலும், வெட்கத்திலும் நெளிந்தார்கள்.

‘‘இந்த பந்தை எடுப்பதற்கு ஈர் குச்சிகள் போதும்.’’

‘‘ஈர் குச்சிகளா?’’

‘‘ஆமாம். ஒரு நூறு ஈர் குச்சிகள் கொண்டு வாருங்கள்.’’

‘‘ஒன்றோடொன்று பின்னி பிணைத்து பந்தை எடுப்பீரா?’’

‘‘அதெப்படி முடியும்?’’

‘‘பிறகு எதற்கு ஈர் குச்சிகள் கேட்கிறீர்கள்?’’

‘‘ஈர்க்குதான் அஸ்திரம்’’

‘‘ஈர்க்கு அஸ்திரமா, பல் குத்த அல்லவா உதவும்!’’

‘‘அது வெறுமே மாமிசம் தின்பவர்களுக்கு. ஈர்க்கை அஸ்திரமாக பயன்படுத்திக் கொள்ள ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டும். இதோ, இந்த ஈர்க்கை எடுத்து அஸ்திரத்திற்கு உண்டான மந்திர ஜபம் சொல்லி, ஒரு வேகத்தில் எறிந்தால் அது போய் பந்தில் தைத்துக் கொள்ளும். அடுத்த ஈர்குச்சியை எடுத்து அஸ்திரம் சொல்லி அந்த ஈர்க்கு முனையில் எறிந்தால் அதில்போய் இது சொருகிக் கொள்ளும். இப்படி ஒன்றன் மீது ஒன்றாக அஸ்திர மந்திரம் சொல்லி ஈர்க்கை எறிந்தால் கைக்கு அருகே ஒரு பெரிய சங்கிலி ஏற்பட்டு விடும். மெல்ல அசையாது பந்தை மேலே எடுத்து விடலாம்.’’

‘‘இது உங்களுக்குத் தெரியுமா?’’

‘‘தெரியாமலா கதை சொல்லிக் கொண்டிருக்கிறேன். அல்லது எங்கோ பார்த்ததை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன் என்று நினைத்தீர்களா?’’

‘‘தயவு செய்து பந்தை எடுத்துக் கொடுங்கள்.’’ பீமன் கெஞ்சினான். அவனைத்தான் எல்லோரும் குறை சொன்னார்கள். அர்ஜுனன் அவரையே வியப்போடு பார்த்தான்.

‘‘அது என்ன மந்திரம்?’’ குழந்தை இடுப்பில் கை வைத்துக் கொண்டு ஆவலாகக் கேட்டான். துரோணர் வாய்விட்டு சிரித்தார். கூரிய அறிவுள்ள குழந்தை. காரியத்தில் கண்ணாக இருக்கிறது என்று மகிழ்ந்தார்.

‘‘சொல்லிக் கொடுக்கும் முன்பு செய்து காட்டினால் நம்பிக்கை வருமல்லவா. ஈர்க்குகள் கொண்டு வாருங்கள்.’’ குழந்தைகள் சிட்டாக பறந்தார்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட ஈர்குச்சிகள் சேர்ந்தன. பச்சை நிற மெல்லிய உறுதியான ஈர்க்குகள். அவர் மொத்தமாக வாங்கி பிரித்து சொத்தைகளை தள்ளி இருநூறு ஈர்குச்சிகள் எடுத்துக் கொண்டார்.

கண் மூடினார். மனம் குவித்தார். அஸ்திர மந்திரங்களை ஆரம்பித்தார். எல்லோரும் தண்ணீரையும், அவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தபோது, அர்ஜுனன் அவர் புருவ மத்தியையே கவனித்தான். என்னமோ ஒரு அசைவு அங்கு இருக்கிறது. அங்குதான் மந்திரம் சொல்கிறார் என்று கவனித்தான். அவர் கவனிப்பது கண்மூடி இருந்த துரோணருக்கு புரிந்தது.

கற்றுக் கொள்ள ஆசைப்படுகின்ற பிள்ளை. இவன் மட்டுமே கற்றுக் கொள்ள ஆசைப்படுகின்ற பிள்ளை. அவனைப் பற்றி அவருக்கு மரியாதை பெருகியது. ஈர்க்கை எறிந்தார். பந்தில் சொருகியது. பிள்ளைகள் ஓ... வென்று குதித்தார்கள். அடுத்தது அடுத்தது அடுத்தது எறிந்தார். சக் சக்கென்று ஈர்க்கு மீது ஈர்க்கு குத்தி நின்றது. ஈர்க்கை மெல்ல இழுக்க, பந்து மேலே வந்தது. பிள்ளைகள் தலைகால் புரியாது கத்தினார்கள். பந்து ஒரு சொடுக்கில் தரையில் வந்து விழுந்தது. ஈர்க்குகள் தனித்தனியாய் கீழே விழுந்தன.

துரியோதனன் ஓடிவந்து அவரை அணைத்துக் கொண்டான். பீமன் அவர் காலைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான். அர்ஜுனன் தொலைவில் நின்று அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவர் திரும்பி அர்ஜுனனை பார்த்து கண் சிமிட்டினார். அர்ஜுனன் அங்கிருந்தபடியே கைகூப்பினான். முகத்திற்கு நேரே நின்று வணங்கினான். பிறகு கையை உயர்த்தி ‘‘சத்குரு’’ என்று அழைத்தான். அவனுடைய உண்மையான விசுவாசம், சத்தியமான பாராட்டு அதில் வெளியே வந்தது.

அர்ஜுனன் அவர் புருவ மத்தியையே கவனித்தான். என்னமோ ஒரு அசைவு அங்கு இருக்கிறது. அங்குதான் மந்திரம் சொல்கிறார் என்று கவனித்தான். அவர் கவனிப்பது கண்மூடி இருந்த துரோணருக்கு புரிந்தது.

தருமர் முன்னேறினார். ‘‘அய்யா, என் மோதிரம் இருக்கிறது. அதை எடுத்து தர முடியுமா?’’ துரோணர் வில்லையும், அம்பையும் கேட்டு வாங்கிக் கொண்டார். நாணை இழுத்து சரிபார்த்து அம்பு தொடுத்து காது வரை நாண் இழுத்து மிகச் சரியாக அடித்தார். நீரை கிழித்துக் கொண்டு மோதிரத்தின் விளிம்பில் குத்தி மோதிரத்தை மேலே கிளப்பியது. மோதிரம் சுருண்டு அடிபட்ட வேகம் தாங்காமல் உயரே எழுந்தது. வில்லின் நுனியில் அந்த மோதிரத்தை வாங்கி தருமனின் கையில் கொடுத்தார். வில்லினுடைய நுனியிலிருந்து கழண்டு மோதிரம் தருமனின் கையில் விழுந்தது. தருமர் கண்ணில் ஒற்றிக் கொண்டார். மோதிரம் அம்பு பட்ட இடத்தில் மட்டும் சற்று நெளிந்திருந்தது. ஆனால், அதுவும் அழகாக இருந்தது. இந்த நெளிவு இடையறாது துரோணரைச் சொல்லுமல்லவா என்று தோன்றியது.

பந்து கிடைத்த சந்தோஷத்தில் பீமன் ஓடினான். துரியோதனன் பின் தொடர்ந்தான். மற்றவர்கள் ஆரவாரித்தார்கள். நகுல சகாதேவர்கள் வலம்வந்து நன்றி சொன்னார்கள். தருமரும், அர்ஜுனன் மட்டுமே அவருக்கு அருகே நின்றார்கள்.

‘‘அய்யா, நீங்கள் யார்? இப்பேர்பட்ட வித்தை உங்களுக்கு எப்படி தெரிந்தது? நீங்கள் அந்தணரைப் போல இருக்கிறீர்களே. ஆனால், வில்வித்தை இவ்வளவு எளிதாக வருகிறதே.’’

‘‘என்னைப் பற்றி கேட்கிறாயா? என்னைப் பற்றி நான் சொல்வதைவிட, என்னைப் பற்றி பீஷ்மரிடம் கேள். பாஞ்சால தேசத்திலிருந்து வருகிறார். இன்னாரிடம் குருகுலம் பயின்றார். என்று அவரிடம் சொல்லுங்கள். என்னுடைய அடையாளங்கள் சொல்லுங்கள். அவர் புரிந்து கொள்வார்.’’

‘‘ஐயா, எங்களோடு வாருங்கள். நான் அழைத்துப் போகிறேன் பீஷ்மரிடம் உங்களைப் பற்றி நான் சொல்கிறேன். இப்போது நீங்கள் செய்த வித்தைகளை எனக்கும் தயவுசெய்து கற்றுத்



தாருங்கள்.'' அவன் சாஷ்டாங்கமாக காலில் விழுந்தான். காலை இறுகப் பற்றிக் கொண்டான். அதில் உறுதி இருந்தது. இம்மாதிரி பலநூறு விஷயங்கள் இவருக்குத் தெரியும் என்று அவன் தீர்மானம் செய்து விட்டான்.

நல்ல குருவிற்கு சிஷ்யன் தவிப்பதுபோல, நல்ல சிஷ்யனுக்கு குருவும் தவித்துக் கொண்டிருக்கிறார் என்பது உலக நியதி.

துரோணருக்கு அவன் தொடலும், அவன் பார்வையும், அவன் பணிவும் மிகவும் பிடித்துப் போயிற்று. அவனை மெல்ல அணைத்துக் கொண்டார். முகம் வருடினார். நெற்றி நடுவே கட்டை விரல் வைத்து மெல்ல அழுத்தினார். உள்ளே படீர் என்று ஏதோ வெடித்தது. அவன் தலையை தடவி அந்த வெடிப்பை, உஷ்ணத்தை சமனம் செய்தார்.

''நான் சொன்னபடி செய். என்னைப் பற்றி, என் அடையாளம் பற்றி, இங்கு செய்து காட்டியதைப் பற்றி பீஷ்மரிடம் சொல். நீ அழைத்துப் போவதை விட அவர் விரும்பி அழைப்பது எனக்கு மரியாதை. புரிகிறதா.''

தருமர் முன்வந்தார். ''புரிகிறதய்யா. அவர் அழைத்துதான் நீங்கள் வரவேண்டும். உங்களைப் பற்றி அவரிடம் சொல்வோம்.''

''சரி. விளையாடப் போங்கள்.''

''இல்லை. அரண்மனைக்கு போகிறோம். உங்களைப் பற்றி சொல்வதற்குப் போகிறோம். இப்போதே போகிறோம்.'' அவர்கள் இரண்டு பேரும் தலைதெறிக்க அரண்மனை நோக்கி ஓடினார்கள்.

குழந்தைகள் தொடர்ந்து விளையாடினார்கள். துரியோதனனும், பீமனும் அங்கு ஆக்ரோஷமாக முட்டி கொண்டது நடந்தது. அவர் கை கட்டி அவர்களை வேடிக்கை பார்த்தபடியே நின்றிருந்தார்.

''அடே, அது துரோணர். துரோணாச்சாரியார்.'' பீஷ்மர் எழுந்து நின்று சொன்னார்.

''எங்கே அவர்? அழைத்து வரவில்லையா.''

''இல்லை. நீங்கள் அழைத்தால் வருவார்.''

''அட, என்ன குழந்தைகளே இப்படி செய்து விட்டீர்கள். உடனே அழைத்து வாருங்கள். இருங்கள்.'' மந்திரிகளை அழைத்தார். மரியாதையாக அழைத்துவரச் சொல்லி ரதம் அனுப்பினார். ரதத்தில் குழந்தைகள் ஏறிக் கொண்டார்கள். கிணற்றடி நோக்கி வந்த ரதத்தில் மந்திரிகள் இறங்கி துரோணரை வரவேற்றார்கள். விளையாடிய குழந்தைகள் திடுக்கிட்டு நின்றார்கள். தருமனும், அர்ஜுனனும் ரதத்தில் தொற்றிக் கொள்ள, மந்திரிகள் முன்னே அமர்ந்து கொள்ள, நடுநாயகமாக துரோணர் அமர்ந்து கொள்ள, ரதம் அரண்மனை நோக்கி போயிற்று. மகாபாரதக்கதையில் மிக உன்னதமான ஒரு தருணம், மிகப் பெரிய திருப்பம் அங்கு ஏற்பட்டது.

முரசுகள் அதிர்ந்தன. துந்துபிகள் முழங்கின. மாலையும், மரியாதையும், சாமரமும், கொடியும், பதாகையும் வந்து நின்றன. அணி வகுத்தன. அந்தணர்கள் கலசம் ஏந்தி வந்தார்கள். அவரிடம் கொடுத்து மெல்ல பின்னடைந்து வரவேற்றார்கள். வழியில் உஷ்ணம் படாது இருக்க நீர் தெளித்தார்கள். தள்ளி நின்று சாமரம் வீசினார்கள். அவர் படியேறினார். பீஷ்மர் படி இறங்கினார். நடுவே இருந்த அகலமான பெரும் படியில் இருவரும் சந்தித்துக் கொண்டு ஆரத் தழுவிக் கொண்டார்கள்.

''வரவேண்டும். வரவேண்டும். உங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் இங்கு வந்தது அஸ்தினாபுரம் செய்த மிகப் பெரிய தவம். வாருங்கள். உள்ளே வாருங்கள். என்ன வேண்டும்?'' தாம்பாளம் வைத்து கால் கழுவி, குடிக்க நீர் கொடுத்து பீஷ்மர் வணங்கினார். தருமரும், அர்ஜுனனும் வைத்த கண் வாங்காது அவரை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் வியர்வை ஒழுக கிணற்றில் போய் குதித்து தங்களை சுத்தம் செய்து கொண்டார்கள்.

''குழந்தைகளுக்கு விதுரர் மூலம் வில்வித்தை கற்றுக் கொடுக்கலாம் என்ற யோசனையில் இருந்தேன். நீங்கள் இன்னும் உன்னதமானவர். நீங்கள் வந்தது குழந்தைகள் செய்த அதிர்ஷ்டம். கௌரவர்களுக்கும், பஞ்சபாண்டவர்களுக்கும் நீங்கள் தயவு செய்து தனுர் வித்தை கற்றுக் கொடுக்க வேண்டும். இந்த வில்வித்தையில் அவர்கள் எல்லா விஷயங்களும் கற்றுக் கொள்ள வேண்டும். உங்களுக்கு தனி அரண்மனையும், மாதந்தோறும் தக்க சன்மானமும், வேலையாட்களும், பசுக்களும், குதிரைகளும், வாகனங்களும், ஆச்சாரியர் துரோணர் என்கிற அடைமொழியும், அரசவையில் நிரந்தரமான ஒரு இடமும், அது மட்டுமல்லாமல் அஸ்தினா

புரத்தை பாதுகாக்கின்ற ஒரு தகுதியும் உங்களுக்குத் தரப்படும்.''

மிகப் பெரிய கூடமும், தாழ்வாரங்களும், விசாலமான அறைகளும், கட்டில்களும், ஆசனங்களும், எல்லா தானியங்களும் நிறைந்த சமையல் அறையும், வேலையாட்களும், சமையலுக்கான அந்தணர்களும், வாயில்காப்போர்களும், ஏவல் பணியாட்களும், கணக்கர்களும், வீட்டு நிர்வாகிகளும் தரப்பட்டார்கள். கொட்டடியில் வாகனங்கள் நின்றன. தர்ப்பைபுல் கடிவாளமுள்ள குதிரைகள் தயாராக இருந்தன. துரோணருக்கான தனித்த எக்காளம் ஊதப்பட்டது. அது அறிமுகப்படுத்தப்பட்டது.

மற்ற குழந்தைகள் பால் குடிக்கிறார்கள். எனக்கும் பால் வேண்டும் என்று கேட்க, பாலுக்கு வகையில்லாது அரிசி மாவை கரைத்து கொடுத்து, அதை பால் என்று நினைத்துக் கொண்டு சந்தோஷப்பட்ட குழந்தை, மற்றவர்கள் அதை கேலி செய்ய புரியாமல் விழித்த குழந்தை, இப்போது அரசகுமாரனைப் போல வளர்ந்தான். அஸ்வத்தாமனின் அழகும், திறமையும் ஜொலிக்கத் துவங்கின. தூசு படிந்த வைரத்தை சுத்தம் செய்து தங்கத்தில் பொருத்தி கழுத்தில் அணிந்து கொண்டதுபோல அவன் தனித்துத் தெரிந்தான். அவனுக்கும் தனுர் வித்தை கற்றுக் கொடுக்க வேண்டும் என்று துரோணர் தீர்மானித்தார்.

பத்து பிள்ளைகளில் ஒரு பிள்ளையை தனித்து நேசிக்காத தகப்பனும், நூறு மாணாக்கர்களில் ஒருவனை தனக்கு உயர்ந்தவனாகக் கொள்ளாத ஆச்சாரியனும் இந்த உலகத்தில் இல்லை. அவர்கள் எப்போதும் பாரபட்சம் உடையவர்கள்.

அஸ்தினாபுரமே அவர்கள் வித்யாரம்பத்தை கொண்டாடியது. அடுத்த தலைமுறையின் நிம்மதி உறுதி செய்யப்படும் நாளல்லவா. அரசகுமாரர்கள் தனுர் வித்தையின் பிரகாசம் பெற்றால், யுத்தம் செய்வதற்கு பயிற்சி பெற்றால், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் என்று கற்றுக் கொண்டால் வரும் தலைமுறை பாதுகாப்பாக இருக்குமே. அஸ்தினாபுரம் மேலும் பிரகாசிக்குமே. மிக வெளிச்சமான எதிர்காலம் என்றல்லவா இந்த வித்யாரம்பத்திற்குப் பெயர் என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்.

எல்லோருக்கும் ஒரே விதமாகத்தான் துரோணர் சொல்லிக் கொடுத்தார். ஆனால், எல்லோரும் ஒரே விதமாக கற்றுக் கொள்ளவில்லை. அறிதலைப்பற்றி தெளிவு வருவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காலகட்டம் இருந்தது. சொன்னவுடன் புரிந்து கொள்வது, சொல்வதற்கு மேல் புரிந்து கொள்வது என்பதை சில சீடர்களே கற்றுக் கொள்கிறார்கள். பலமுறை சொன்னாலும் பதட்டமாகவே இருக்கின்ற சீடர்களும் துரோணருக்கு இருந்தார்கள்.

மகனுக்கு கற்றுக் கொடுக்க வேண்டுமே. துரோணர் ஒரு தந்திரம் செய்தார். மற்றவரைவிட கூடுதலாக பாடம் நடத்த, இன்னும் அஸ்வத்தாமனுக்கு நறுவிசு ஏற்படுத்த, சிறப்பு செய்ய ஒரு உபாயம் செய்தார்.

அரசகுமாரர்கள் கையில் குறுகிய வாய் உள்ள கமண்டலங்களை கொடுத்து ஆற்றுக்கு போய் தண்ணீர் எடுத்து வரச் சொன்னார். அவர்கள் போய் வருவதற்குள் அஸ்வத்தாமனுக்கு அவன் செய்த தவறுகளை சுட்டிக்காட்டி தெளிவாக, திறனாக இயங்குவதற்கு உதவி செய்தார்.

> “துரோணருக்கு அவன் தொடலும், அவன் பார்வையும், அவன் பணிவும் மிகவும் பிடித்துப் போயிற்று. அவனை மெல்ல அணைத்துக் கொண்டார். முகம் வருடினார். நெற்றி நடுவே கட்டை விரல் வைத்து மெல்ல அழுத்தினார். உள்ளே படீர் என்று ஏதோ வெடித்தது. அவன் தலையை தடவி அந்த வெடிப்பை, உஷ்ணத்தை சமனம் செய்தார்.”

அர்ஜுனன் இதை புரிந்து கொண்டான். தூரத்துகிறார் என்பதை தெரிந்து கொண்டான். சற்று தூரம் போய் வருண மந்திரம் சொல்லி தன் பாத்திரத்தில் விரைவாக தண்ணீர் நிரப்பிக் கொண்டு விரைவாக வந்தான். அஸ்வத்தாமனுக்கு பயிற்சி ஆரம்பிக்கும் போது விலகி நின்று கவனித்துக் கொண்டான். கவனித்துவிட்ட துரோணர் வாய்விட்டு சிரித்தார். இந்த வேகம் நல்லதுதான் என்று கொண்டாடினார். அவனுக்கும் கற்றுக் கொடுத்தார். அவன் குறைகளையும் சுட்டிக் காட்டினார்.

சமையல்காரனை பார்த்து இரவு உணவின் போதே விளக்குகளை அணைத்துவிடு என்று சொன்னார். விவரம் புரியாமல் சமையற்காரன் செய்தான். மற்றவர்கள் எல்லோரும் திண்டாட, உணவு முடிந்து, நீர் அருந்தி இலையை மடித்து அர்ஜுனன் எழுந்தான். விளக்கு வந்தது. அவனுடைய இடம் சுத்தமாக இருந்தது. இருட்டிலும் கையும், வாயும், நீர் சொம்பும், இலை சுருளும் இடம் மாறவில்லை. தவிக்கவில்லை. பதட்டமாகவில்லை. உணவு உண்ணும் போதும் அவன் தெளிவான சிந்தனையோடு செய்கிறான் என்று தெரிந்தது. ஒரு வில்லாளிக்கு இது மிக முக்கியம். கண் இருந்தாலும் கூட, இல்லாது போனாலும் கூட கைகள் வேலையை சுத்தமாக செய்து விட்டது. அர்ஜுனன் கெட்டிக்காரனாக இருந்தான்.

இரவு நேரம் ஏதோ எதனோடோ உரசும் சத்தம் கேட்டது. துரோணர் மெல்ல எழுந்து என்ன நடக்கிறது என்று பார்த்தார். அர்ஜுனன் பாடசாலைக்கு வெளியே குளிரில் கடும் இருட்டில், மிகச் சரியாக காலையில் பார்த்த இலக்குகளை தகர்த்துக் கொண்டிருந்தான். இருட்டிலும் பயிற்சி செய்து கொண்டிருந்தான். எதிர்பார்த்ததை விட விரைவாகவும், உறுதியாகவும், விடாப்பிடியாகவும் கற்றுக் கொள்கிற மாணவனை எந்த ஆச்சாரியனும் நேசிப்பான்.

(தொடரும்)

மகாபாரதம்

12



அர்ஜுனன் என்ற அசகாயசூரன்



“குழந்தைகளே, உங்களுக்கு நான் நன்கு பயிற்சி அளித்து வருகிறேன். நீங்களும் சிறந்த வீரர்களாக மாறி வருகிறீர்கள். அவரவருக்கு விருப்பமான ஆயுதத்தில் கடுமையாக பயிற்சி செய்து வருகிறீர்கள். உங்களை மாணவர்களாக நான் அடைந்தது என் பாக்கியம். உங்களுக்கு என் ஆசீர்வாதம். ஆனால், எனக்கு நீங்கள் தட்சிணையே தரவில்லையே! தருவீர்களா?” துரோணர் சீடர்களை கேட்டார். மாணவர்கள் அமைதியாக இருக்க, அர்ஜுனன் துள்ளி குதித்தான். “நிச்சயம் குருவே. நிச்சயம் தருவேன்.”

“நான் என்னவென்றே சொல்லவில்லையே.”

“நீங்கள் எது கேட்டாலும் தருவேன்.” மனம் உவந்து குதூகலமான குரலில் அர்ஜுனன் குழந்தையைப் போல் கூவினான். அடிவயிற்றில் சில்லென்ற ஒரு சந்தோஷம் துரோணருக்கு ஏற்பட்டது. மிகுந்த காதலோடு அவர் அவனைப் பார்த்தார். பிறகு, “ஏன் மற்றவர்களெல்லாம் மௌனமாக இருக்கிறீர்கள்.” என்று கேட்டார்.

“தட்சிணை என் தந்தையார் கொடுத்து விடுவார்.” துரியோதனன் பதில் சொன்னான்.

“இல்லை. தந்தையார் தருவதற்குப் பிறகு நம்மிடம் ஏதோ எதிர்பார்க்கிறார். என்ன என்று சொல்லுங்கள்.” தருமர் எழுந்து பணிவாக கேட்டார். ‘கேட்கக்கூடாததை கேட்டு தொலைத்து விடாதேயும்’ என்ற கவலை அதில் இருந்தது.

“ஆமாம். நானும் கொடுக்க தயாராக இருக்கிறேன்.” பீமன் எழுந்தான். யாராவது முன்னால் நடந்து போனால்தான் அவனுக்கு தொடர முடியும். சுயமாக எதுவும் செய்ய இயலாது. சகலரையும் மீறி துரோணர் வில் ஊன்றியபடியே அர்ஜுனனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“பாஞ்சாலம் என்றொரு தேசம். அதில் துருபதன் என்றொரு மன்னன். என்னோடு படித்தவன். ஒரே குருகுலவாசம். பல்வேறு விதங்களில் நானும் அவனும் ஒன்றாக செயலாற்றியிருக்கிறோம். பலவிதங்களில் நான் அவனுக்கு உதவி செய்திருக்கிறேன். அரசகுமாரனான அவனுக்கு காட்டு வாழ்க்கையும், குருகுல வாழ்க்கையும் கடினமாக இருந்தபோது அவற்றை ஈடுசெய்யும் வண்ணம் அவனை குதூகலப்படுத்தியிருக்கிறேன். அவனுக்கு கூடுதலான உணவுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். சிலசமயம் முதுகில் சுமந்தும் சென்றிருக்கிறேன். தூங்கும்போது கால் பிடித்து விட்டிருக்கிறேன். அவன் நெகிழ்ந்து அணைத்துக் கொள்வான்.

“நான் ஊருக்குப் போனதும் என் தகப்பனார் எனக்கு இளவரசு பட்டம் கட்டுவார். நான் அரசனான பிறகு என்னுடைய ராஜ்யத்தில் பாதி உனக்கு. அந்த யோக்கியதை உண்டு. எனவே, நம்முடைய நட்பு இந்த குருகுலத்தோடு முடிந்து விடவில்லை என்று அவனாகவே வாய்விட்டுச் சொன்னான். சத்தியமும் செய்தான்.

“நான் அந்தணன். யாசித்து சம்பாதிப்பது என்னுடைய குலத்தொழிலில் ஒன்று. அது எனக்கு பெருமைமிக்கது. என் குழந்தை பால் வேண்டி அழுதபோது, மற்ற அந்தணக் குழந்தைகள் பால் அருந்துகிறார்கள். எனக்கும் பால் வேண்டும் என்றபோது என்னிடம் பசுமாடு இல்லை. அவனை ஏமாற்ற நாங்கள் அரிசி மாவு கலந்து வடிகட்டி பால் என்று கொடுப்போம். அதை மகிழ்ந்து குடித்துவிட்டு, அடுத்த வீட்டில் சொல்ல, அவர்கள் கேலி செய்ய அவன் நிஜமான பசும்பால் வேண்டும் என்று அழ, நாங்கள் தவித்தோம்.

“நான் என் மனைவியோடும், மகனோடும் துருபதனிடம் போய் இரண்டு பசுக்கள் கேட்டேன். நட்பை முன்னிருத்தி கேட்டேன். நினைவிருக்கிறதா துருபதா என்று கேட்டேன். நான் துருபதனை துருபதன் என்று அழைத்தது பிசகா? நண்பனேயானாலும் பெயர் சொல்லி அழைக்காது அரசே என்று அழைத்திருக்க வேண்டுமாம். நான் நட்பாகத்தான் போனேன். அரசனைக் காண போகவில்லை. இரண்டு பசுக்களுக்காக அரசனிடம் போவார்களா? அடுத்த ஊர் பணக்காரர்கள் தரமாட்டார்களா? ஆனால், துருபதனிடம் ஒரு அன்பை எதிர்பார்த்து போனேன். அவன் அவமானப் படுத்தினான். தன்னை சபைக்கு நடுவே பெயர் சொல்லி அழைத்ததற்காக கடும் வார்த்தைகள் பேசினான். ‘கேட்டபடி கேட்டிருந்தால் நாலு பசுமாடு கொடுத்திருப்பேன். ஒன்றுமில்லை வெளியே போ’ என்று சொன்னான். நட்பை முறித்துக் கொண்டான். எனக்கு வேதனை தாங்கவில்லை. அவனைவிட வில்வித்தையில் நான் சிறந்தவன் என்று தெரிந்திருந்தும் நான் அந்தணன் அவன் அரசன் என்று அலட்டிக் கொண்டான்.

அந்த துருபதனை தேர்க்காலில் கட்டி இழுத்து வரவேண்டும். அவனையும், அவன் படைகளையும் அடித்து நொறுக்க வேண்டும். மணிமுடி இழந்து, சிகை அறுந்து விழ, ஆடைகள் நிலைகுலைந்திருக்க, உடம்பில் அடிபட்டு ரத்தம் வழிய, குற்றுயிரும் குலைஉயிருமாய் என்னிடம் இழுத்துவந்து அவனை என் காலடியில் விழச் செய்ய வேண்டும். பாஞ்சால தேசத்து மன்னன் துருபதனை உயிரோடு பிணைத்து வந்து என்னிடம் சேர்க்க வேண்டும்.” உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார் துரோணர்.

மாணவர் கூட்டம் திகைத்துப்போய் இருந்தது. தருமர் சோர்வோடு உட்கார்ந்திருந்தார். என்ன பதில் சொல்வது என்று தெரியாது பீமன் தவித்தான். எல்லோரையும் சுற்றி சுற்றிப் பார்த்தான்.

“நான் நிச்சயம் செய்து தருகிறேன். துருபதனை கதற அடிக்கிறேன். உங்களுக்காக அவனை மட்டும் அல்ல. அவனைச் சேர்ந்த அத்தனை பேரையும் அடித்து நொறுக்குவேன். இது உங்கள் மீது ஆணை. என்னால் செய்ய முடியும்.” அர்ஜுனன் கை உயர்த்தி, கால் அகட்டி, முகம் இறுக்கி, கண்கள் இடுக்கி, உதடு சுழிக்க ஆவேசமாகக் கத்தினான்.

துரோணருக்கு அடிவயிற்றில் இருந்த சந்தோஷம் நெஞ்சில் ஏறி நின்றது. உடம்பு முழுவதும் பரவியது. துரோணர் அப்போதே துருபதனை ஜெயித்துவிட்டதாக உணர்ந்தார். அர்ஜுனனை இறுக்க தழுவினார். யாருக்கும் தெரியாமல் காதோரம், “உன்னைவிட சிறந்த மாணாக்கன் வேறு எவரும் எனக்கில்லை. நீயே என் முதல் சிஷ்யன்.” என்று மிருதுவாகச் சொன்னார். அர்ஜுனன் கண்ணில் நீர் துளிக்கப் பார்த்தான்.

பல்வேறு தேசங்களிலிருந்து அரசகுமாரர்கள் அஸ்தினாபுரம் வந்து அவரிடம் வித்தை கற்க யாசித்தார்கள். அவர் பலருக்கும் வித்தை கற்றுக் கொடுத்தார். அப்போது ஹிரண்ய தனுஸ் என்கிற வேட மன்னனுடைய மகன் ஏகலைவன் அவரிடம் வந்து சேர்ந்தான். தனக்கும் அஸ்திர வித்தை கற்றுத் தர வேண்டும் என்று அவரிடம் பணிவாகக் கேட்டான்.

“நீ வேடர் குலச் சிறுவன்.



பாலகுமாரன்



முயலும், முள்ளம் பன்றியும் அடிக்கிறவனுக்கு அஸ்திரப் பிரயோகம் எதற்கு? உன் மனதில் ஆவல் இருப்பதை அறிகிறேன். ஆனாலும், உனக்கு சொல்லித்தரமாட்டேன். நீ போகலாம்” என்றார்.

ஏகலைவன் சிறிதும் தயங்கவில்லை. அவரை விழுந்து வணங்கி, அவர் பாதம் பட்ட மண்ணை நெற்றியில் இட்டுக் கொண்டு சரி என்று பின்னடைந்தான். தொலைவில் நின்று கைகூப்பினான்.

‘‘உனக்கு வில் வித்தை வரும். போய் வா.” என்று அவன் அடக்கம் கண்டு மகிழ்ந்து போய் துரோணர் ஆசீர்வதித்தார்.

அவன் அதையே பெரும் பேறாக கருதி தன் இருப்பிடத்திற்கு போனான். களிமண்ணால் துரோணர் போன்ற உருவம் செய்தான். அதற்கு தினசரி பூஜைகள் செய்தான். வலம் வந்தான். அந்த பிம்பத்தின் முன்பு நின்று அவரோடு மானசீகமாக பேசி, அவனாகவே வில்வித்தை கற்றுக் கொண்டான். மனம் குருவாகவும், சீடனாகவும் மாறி மாறி செயல் பட்டு அந்த வித்தையின் உச்சகட்டத்தை அவன் எளிதில் அடைந்தான்.

வித்தையில் ஞானம் என்பது கற்றுக் கொடுப்பதில் இல்லை. கற்றுக் கொள்வதில் இருக்கிறது. அரசகுமாரர்கள் இன்னும் தீவிரமான யுத்தப் பயிற்சியில் ஈடுபடுகின்ற வேகம் கருதி மக்களுக்கு தொந்தரவு இல்லாத அடர்ந்த காட்டிற்குள் நடக்கத் தொடங்கினார்கள். ஏகலைவனும் பின் தொடர்ந்தான்.

அர்ஜுனன் வளர்த்து வந்த உயர் ஜாதி நாய் ஒன்று அரசகுமாரர்களோடு போய்க் கொண்டிருந்தது. பின்னே சற்று தொலைவில் மான் தோலோடும், கருத்த உடலோடும், நீண்ட பின்னிய சிகையோடும், மணிமாலைகளோடும், வெறும் காலோடும், வில் அம்புகளோடும், வித்தியாசமாய் வருகின்ற அந்த வேடனைப் பார்த்து குரைத்தது. கல் எறிந்தும், மரக்கிளையால் விரட்டியும், நாய் ஏகலைவனை சுற்றி சுற்றி வந்து தொந்தரவு செய்தது. முழுபலத்தோடு வாய் பிளந்து அவன் கழுத்திற்கு குறி வைத்தது. வினாடி நேரத்தில் ஐந்து பாணங்களால் ஏகலைவன் அந்த நாயின் வாய் திறக்காதபடிச் செய்தான்.

நாய் வலி தாங்காமல் ஊளையிட்டுக் கொண்டு அர்ஜுனனிடம் போய் நின்றது. எந்த அம்பு எங்கு தைத்திருக்கிறது என்று தெரிவதே பெரிய வேலையாக இருந்தது. அர்ஜுனன் அம்புகளை பிடுங்கிப் போட்டான். ஓடுகின்ற முரட்டுத்தனமான இந்த நாயை இப்படி அடித்து வாயை மடக்க வேண்டுமென்றால் அவன் மிகச் சிறந்த வில்லாளியாக அல்லவா இருக்க வேண்டும்! யாரது? அவர்கள் தவித்தார்கள். நாய் வழிகாட்டியது. அங்கே ஒரு மரத்தின் மீது இலக்கு வைத்து சரமாரியாக சரம் விட்டுக் கொண்டு பயிற்சி செய்து கொண்டிருந்த ஏகலைவனைப் பார்த்தார்கள்.

‘‘யார் நீ? என்று அதட்டினார்கள். அவன் மௌனமாக இருந்தான்.”

‘‘எங்கள் குருநாதர் கேட்கிறார். சொல். யார் நீ?”

துரோணரின் பெயர் கேட்டதும் அவன் துள்ளி எழுந்தான். ‘‘நான் ஹிரண்ய தனுஸ் என்கிற வேடர் குலத் தலைவனின் மகன். என் பெயர் ஏகலைவன் என்று துரோணரிடம் சொல்லுங்கள். அவர் புரிந்து கொள்வார்.” என்று சொன்னான். மறுபடியும் அஸ்திரம் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு வருமோ என்று ஆவலோடு நின்றான்.

இடுப்பிலிருந்து வாள் உருவி மரக்கட்டையின் மீது வலக்கட்டை விரலை வைத்து வேகமாக சுழற்றி சரக்கென்று கத்தியை கட்டை விரலில் இறக்கினான்.

அர்ஜுனன் இடிந்து போனான். அப்படியென்றால் முன்னமே தெரியுமா? தெரியும் என்பது போலல்லவா பேசுகிறான். நீதான் சிறந்த சீடன். நீதான் முதல் சீடன் என்று புகழ்ந்தாரே. இப்போது வேறு ஒருவனுக்கு பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறாரே. இப்படி வாய் தைப்பது எனக்குத் தெரியாதே. இவ்வளவு உறுதியான நறுவிசான வேலையை அவனுக்கு கற்றுக் கொடுத்து விட்டு, என்னை முதல் சீடன் என்பது எவ்வளவு பெரிய பிழை!

அர்ஜுனன் கோபமானான். துரோணரை தனியே சந்தித்தான். அழுதான். ‘‘எப்படி இது, எப்படி? என்னை ஏன் ஏமாற்றினீர்கள்? நான் என்ன துரோகம் உங்களுக்குச் செய்தேன்? இந்த வித்தையை அவனுக்கு நீங்கள் எப்படி கற்றுக் கொடுத்தீர்கள்? எப்பொழுது கற்றுக் கொடுத்தீர்கள்? எனக்கேன் கற்றுத் தரவில்லை? பிறகு ஏன் என்னை முதல் சீடன் என்று சொல்கிறீர்கள்?’’ என்றெல்லாம் அலறினான்.



துரோணர் என்ன செய்வது என்று யோசித்தார். வேடர் குலத் தலைவனின் மகன் தன்னை பூஜித்து தன் வித்தைகளை கற்றுக் கொள்வதை உணர்ந்தார். வேகமாக அவனை நோக்கி நடந்தார். அர்ஜுனன் அவரைப் பின் தொடர்ந்தான். மற்றவர்களும் என்னவோ, ஏதோ என்று ஓடினார்கள். அர்ஜுனன் ஏகலைவனை சுட்டிக் காட்டினான். ஏகலைவன் அப்பொழுதும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தான். மனிதர்கள் வரவே வேகமாகத் திரும்பினான். துரோணரை கண்டதும் வில்லையும், அம்பையும் தரையில் வைத்து விட்டு ஓடிவந்து நமஸ்கரித்தான். ‘நலமா?’ என்று விசாரித்தான். அர்ஜுனனுக்கு இன்னும் கோபம் எகிறியது. பல்கடித்தான். முகம் திருப்பிக் கொண்டான். துரோணரை விட்டு விலகி நின்றான்.

துரோணர் தவித்தார். தான் என்ன சொன்னாலும் அர்ஜுனன் நம்பப் போவதில்லை என்று நினைத்தார். ஏகலைவனைப் பார்த்து அருகே வா என்று அழைத்தார். அவன் அருகே வந்தான். ‘‘எப்படி கற்றுக் கொண்டாய் இந்த வித்தையை? நான் உனக்கு சொல்லித் தரவில்லையே.’’

‘‘இல்லை அய்யா. நீங்கள் சொல்லித்தரவில்லை. ஆனால், உங்களைப்போல பதுமையை நான் செய்து உங்களை வணங்கி, உங்களுடைய ஆசியினால் நானாக கற்றுக் கொண்டேன். நீங்கள் சூட்சமமாக என்னை வழிநடத்தினீர்கள்.’’ என்று சொன்னான்.

‘‘அப்படியா. இது நான் கற்றுத் தந்ததுதான் என்று எண்ணுகிறாயா.’’

‘‘நிச்சயமாக. உங்கள் அன்பு இல்லாது, உங்கள் ஆசி இல்லாது என்னால் இந்த வித்தையை எப்படி செய்ய முடியும்?’’

‘‘அப்படியானால் நீ குருதட்சிணை தர வேண்டுமே.’’

‘‘ஆமாம். நிச்சயம் தரவேண்டும். சொல்லுங்கள். எது கேட்டாலும் தரவேண்டியது ஒரு சீடனுடைய கடமை. குருவிற்கு அவன் அடிமை.’’

‘‘நல்லது. நல்ல வார்த்தை சொன்னாய். எனக்கு தட்சிணையாக உன்னுடைய வலது கை கட்டை விரலை கொடு.’’ என்று கேட்டார்.

அவரை நிமிர்ந்து பார்த்து வேடன் மகன் மெல்லியதாய் சிரித்தான். அவர் எண்ணத்தை புரிந்து கொண்டான். தொலைவே முகம் திருப்பிக் கொண்டிருக்கின்ற அர்ஜுனனை கவனித்தான். பிறகு மண்டியிட்டான். இடுப்பிலிருந்து வாள் உருவி மரக்கட்டையின் மீது வலக்கட்டை விரலை வைத்து வேகமாக சுழற்றி சரக்கென்று கத்தியை கட்டை விரலில் இறக்கினான். கட்டை விரல் துண்டாக எகிறி உயரே போய் சுழன்று துரோணர் காலடியில் போய் விழுந்தது.

துரோணர் அவனை உற்று பார்த்து விட்டு வேகமாக அர்ஜுனனை தாண்டி வனத்திற்குள் பிரவேசம் செய்தார். அர்ஜுனன் பின் தொடர்ந்தான். மற்றவர்கள் ஏகலைவனை பரிதாபமாக பார்த்து விட்டு நடந்தார்கள். ஒரு நல்ல வில்லாளியை இழந்து விட்டோம் என்று துரியோதனன் நினைத்துக் கொண்டான்.

ரத்தம் பெருக நின்ற ஏகலைவன் மறுபடியும் சரம் எடுத்து அடுத்த இரண்டு விரல்களால் காதுவரை நாண் இழுத்து விட்டான். ஆனால், முன்பு இருந்த வேகம் இப்போது இல்லை.

அர்ஜுனனுக்கு துரோணர் மீது அளவுகடந்த பக்தி உண்டாயிற்று. கங்கைக் கரையில் அவர்கள் எல்லோரும் குளிக்க வந்தபோது துரோணருடைய கால்களை முதலை பற்றிக் கொண்டது. அவர் முதலையோடு புரண்டு எழுந்து கரைக்குத் தாவி முதலையை இழுத்தார். நீரிலும், நிலத்திலுமாய் பெரிய முதலை அவரை நீருக்குள் இழுக்க முயற்சி செய்தது. துரோணர் உறுதியாக இருந்தார். முதலையின் உருவம் கண்டு மற்ற அரசகுமாரர்களும் துள்ளி குதித்து பயந்து பதுங்கினார்கள். ஆயுதங்களை தேடினார்கள்.

ஆனால், அர்ஜுனன் மிக வேகமாக செயல்பட்டு முதலையை துண்டு துண்டாக்கினான். மூளையிலும், வாயிலும், இருதயத்திலும், வாலிலும் சரங்கள் புகுந்து முதலையை துண்டாடின. முதலை விட்டது. அர்ஜுனன் துரோணரை கை கொடுத்து தூக்கி நிறுத்தினான்.

‘‘இந்த நேரத்திலும் எப்படி வில்லும், அம்பும் வைத்திருந்தாய்?’’ துரோணர் ஆவலோடு கேட்டார்.

‘‘என் கையை வைத்துவிட்டு எப்படி நீந்தப் போவேன்? என்னுடைய தனுசு எனக்கு ஒரு அங்கமாகப் போய்விட்டது. என்னால் தனுசு இல்லாமல் எங்கேயும் இருக்க முடியவில்லை.’’ என்று பதில் சொன்னான். துரோணர் வாய்விட்டுச் சிரித்தார். எல்லாவிதத்திலும் அர்ஜுனன் முன்னேறியிருப்பதை புரிந்து கொண்டார்.

குழந்தையைப்போல களிமண்ணில் ஒரு பொம்மையை செய்யச் சொல்லி அதை கங்கை கரையில் வைத்தார். எல்லோரையும் கங்கையை பார்க்கும்படி உத்தரவிட்டார். அரசகுமாரர்கள் வரிசையாக நின்று கங்கையை பார்த்துக் கொண்டிருந்தார்கள். எல்லோரிடமும் ஆயுதங்கள் இருந்தன. கங்கையின் ஓட்டத்தையே பார்க்கச் சொன்னார். எல்லோரும் கங்கை ஓட்டத்தை கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

‘‘கங்கையின் ஓட்டத்தை கவனித்தாயா?’’ துரியோதனன் துச்சாதனனை கேட்டான்.

‘‘கவனித்தேன். எதற்கு கவனிக்கச் சொல்கிறார் என்றுதான் யோசித்தேன்.’’ துச்சாதனன் துரியோதனைக் கேட்டான்.

‘‘உனக்கு கண் இருக்கிறதா என்று சோதிக்கத்தான். கங்கையை தெரிகிறதா என்று குருநாதர் சொல்கிறார்.’’ சொல்லிவிட்டு துரியோதனன் சிரித்தான். மற்றவர்களும் சிரித்தார்கள்.

‘‘அண்ணா அண்ணா, எனக்கு கங்கை தெரிகிறது அண்ணா.’’ இன்னொருவன் குதூகலமாய் பேச, அவர்கள் அடிக்குரலில் சிரித்துக் கொண்டார்கள்.

பீமனுக்கு நதியினுடைய குதியாட்டம் புரிந்தது. தருமர் குளிர்ந்த காற்றை ரசித்துக் கொண்டிருந்தார். நகுல சகாதேவர்கள் சிலம்புக் கம்பினால் மண்ணை நோண்டிக் கொண்டிருந்தார்கள்.

துரோணர் எல்லோரையும் கண்களை கட்டச் சொன்னார். மேல்துண்டு எடுத்து எல்லோரும் தங்கள் கண்களை இறுக்க கட்டிக் கொண்டார்கள். ‘‘இப்போது அந்த பொம்மையை நான் கங்கையில் வீசப்போகிறேன். அதை உங்கள் ஆயுதத்தால் அடியுங்கள்’’ என்று உரக்கச் சொன்னார். பொம்மையை வீசுகின்ற ஓசையும், நீரில் விழுகின்ற ஓசையும் சகலருக்கும் கேட்டது. அவரவர்கள் ஆயுதங்களை பிரயோகம் செய்தார்கள்.

வித்தையில் ஞானம் என்பது கற்றுக் கொடுப்பதில் இல்லை. கற்றுக் கொள்வதில் இருக்கிறது.

ஆனால், அர்ஜுனன் மட்டுமே அவரிடமிருந்து தள்ளி வெகுதூரம் போன அந்த பொம்மையை பல துண்டுகளாக ஆக்கினான். அவனுடைய ஒவ்வொரு அம்பும் ஒவ்வொரு அங்கத்தை உடைத்தன. படகோட்டிகள் பொம்மையை மடக்கி எடுத்து வந்து கரையில் போட்டார்கள். வேறு எந்த ஆயுதத்தாலும் தாக்கப்படாது அர்ஜுனனுடைய அம்பால் மட்டுமே பொம்மை உடைபட்டதாகச் சொன்னார்கள்.

‘‘எப்படி இது சாத்தியமாயிற்று? உன்னால் எப்படி அடிக்க முடிந்தது?’’ துரியோதனன் கேட்டான்.

‘‘கங்கையை கவனி என்று சொன்னதுமே கங்கையின் ஓட்டத்தை கவனிக்கச் சொல்கிறார் என்பது புரிந்து போயிற்று. குழந்தை பொம்மை வைத்தவுடனே இதை தூக்கி எறிந்து அடிக்கச் சொல்வார் என்று நினைத்தேன். கண்ணை கட்டிக் கொண்டு அடிக்கச் சொல்வார் என்று நினைக்கவில்லை. ஆனால், கண்களை கட்டிக் கொண்டு என்று சொன்னதும் நீரின் வேகமும், பொம்மை விழும் சத்தமும், அது எவ்வளவு வேகத்தில் எங்கு போயிருக்கும் என்ற அனுமானமும் எனக்குள் வந்து விட்டன. அதன் நகர்வை நான் மனதில் உணர்ந்தேன். அடித்தேன். அவ்வளவே.’’ தன் செயலுக்கு அர்ஜுனன் விளக்கம் சொன்னான். துரோணருக்கு கரைகாணாத மகிழ்ச்சி உண்டாயிற்று.

அர்ஜுனனை வெல்ல ஆளே இல்லையோ என துரியோதனன் கவலைப்பட்டான். தனக்கு எதிரி பீமனா, அர்ஜுனனா அல்லது இரண்டு பேருமா அல்லது பஞ்சபாண்டவர்கள் அத்தனை பேருமா? இவர்களை எப்படி ஜெயிக்க முடியும்? நான் எப்படி அரசனாக முடியும்? அவன் சோகத்தில் இருண்டு போனான். ஜெயிக்கின்ற மாணவனை பார்த்து தோற்கின்ற மாணவனுக்கு பொறாமை வருவது இயல்பு. துரியோதனன் அதிகம் பொறாமை கொண்டவன். அவனுக்கு அர்ஜுனன் மீது சொல்லொணா ஆத்திரம் இருந்தது. தன்னுடைய எதிர்காலம் பற்றி மிகப்பெரிய பயமும் இருந்தது. துரோணர் அவனுக்கு தனித்தபடியாக ஏதோ சொல்லித் தருகிறார் என்பது புரிந்தது.

அவன் நினைத்தது போலவே மிகச் சிறந்த அஸ்திரம் ஒன்றை அர்ஜுனனுக்கு பரிசளித்தார் துரோணர். ‘‘என் உயிரை காப்பாற்றியதற்காக இதைத் தருகிறேன். இதை மனிதர்கள் மீது பிரயோகம் செய்து விடாதே. தாங்க மாட்டார்கள். மனிதர்களுக்கு மிஞ்சிய தேவர்களோ, அசுரர்களோ, கந்தர்வர்களோ உன்னை கொல்ல முயற்சித்தால் அவர்கள் மீது இதை பிரயோகம் செய். மற்றபடிக்கு இதை கவனமாக உன்னிடம் வைத்திரு.’’ என்று கொடுத்து ஆசீர்வதித்தார்.

அர்ஜுனன் அஸ்திரத்தை பெற்றுக் கொண்டான். அவனை தனுர் வித்தையில் ஜெயிப்பதற்கு இந்த உலகில் இன்னொரு ஆள் பிறக்கவே இல்லை.

(தொடரும்)

மகாபாரதம்

13

எல்லாப் புகழும் துரோணருக்கே!

ஒரு பரீட்சைக்கு முன்பு அந்த பரீட்சைக்கு தயார் செய்ய இன்னொரு பரீட்சை வைப்பதில்லையா, அதுபோல அரச குமாரர்களை ஊருக்கு அறிமுகம் செய்து வைப்பதற்கு முன்பு தானே பரிட்சித்துப் பார்க்க துரோணர் விரும்பினார். ஒரு பறவையின் உருவத்தை செய்யச் சொல்லி அதை முதல் நாளே ரகசியமாக மரத்தில் மாட்டினார். உண்மை பறவை போலவே இருந்தது.

‘‘இன்றைக்கு தனுர் வித்தையில் பரீட்சை’’ என்று அறிவித்தார். வில்லும் அம்பும் எடுக்கச் சொன்னார். அரசகுமாரர்கள் வரிசையானார்கள். துரியோதனனை மண்டியிட்டு வில் வளைத்து அம்பு தொடுத்து பறவையை குறி பார்க்கச் சொன்னார். ‘குறி பார்த்து விட்டேன் என்பதை ஒரு சிறிய ஹுங்காரத்தால் வெளிப்படுத்து. நான் சொல்லும்வரை சரத்தை விடக்கூடாது,’ என்று கட்டளையிட்டார். அவன் மண்டியிட்டு தன்னை தயார் செய்து கொண்டு பறவையை குறி பார்த்தான்.

‘‘இப்பொழுது என்ன தெரிகிறது. பறவை தெரிகிறதா?’’

‘‘ஆமாம் குருவே, பறவை தெரிகிறது.’’

‘‘மரம் தெரிகிறதா?’’

‘‘ஆம், மரம் தெரிகிறது.’’

‘‘இலைகள், கிளைகள்?’’

‘‘தெரிகின்றன.’’

‘‘நீல வானம்?’’

‘‘தெரிகிறது.’’

‘‘நீல வானத்தில் அடர்ந்து போகும் மேகங்கள்?’’

‘‘தெரிகின்றன.’’

‘‘நல்லது. வில்லையும், அம்பையும் கீழே வைத்து விட்டு நீ தலைகுனிந்து உட்கார்ந்து கொள்.’’

அவன் திகைத்துப்போய் அவரைப் பார்த்தான்.

‘‘நீ தனுர் வித்தைக்கு லாயக்கில்லாதவன். அலங்காரத்திற்காக நீ வில் வைத்துக் கொள்ளலாம். அதனால் அந்தப் பக்கம் போ’’ என்று சொன்னார். அரசகுமாரர்கள் சிரித்தார்கள். துரியோதனன் வெட்கமடைந்தான். துரோணர் பற்றி அவனுக்குள் இடையறாது ஒரு கவலையும், கோபமும் இருந்தன.

தருமர் மண்டியிட்டு சரம் தொடுத்தார். காதுவரை நாண் இழுத்தார்.

‘‘என்ன தெரிகிறது தருமா?’’

‘‘எல்லாம் தெரிகிறது.’’

‘‘வில்லை மடித்து வை. எழுந்து நின்று சபையை வலமாகச் சுற்றி மரத்துக்கு அருகே மரமாக நில்.’’ இந்த முறையும் அரசகுமாரர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

துரோணர் ஒரு கடுமையான ஆசிரியர். சுருக்கென்று குத்துவதில் மிகவும் வல்லவர். நோகப் பண்ணுவதில், அவமானப்படுத்துவதில் மிகுந்த ருசி உள்ளவர். சிலருக்கு அவரின் சொற்கள் புரிவது கூட தாமதமாகும். அவர் கேலிக்கு, அவர் சொன்னதை பாராட்டாக நினைத்துக் கொண்டு ‘நன்றி குருவே’ என்று உளறிய அரசகுமாரர்களும் உண்டு.

ம.செ

பீமன் நிதானமாக மண்டியிட்டான். வில் வளைத்தான். குறி பார்த்தான். 'எழுந்திரு' என்றார். வில் ஊன்றி எழுந்தான். 'உட்கார்' என்றார். மறுபடி உட்கார்ந்தான். வில் வளைத்தான். நாண் இழுத்தான். மூச்சு வாங்கினான். “பீமா, வில் என்கிற ஆயுதம் லேசானது. அதனால்தான் உன்னால் தூக்க முடியவில்லை. கனமான கதையைத்தான் உன்னால் தூக்க முடியும். யானை திறமையான மிருகம்தான். அதனை புற்கள் பறித்துப் போடவா உபயோகப்படுத்துவது? மரம் முறிக்க அல்லவா உபயோகப்படுத்த வேண்டும். போ, போய் மரம் முறி.” அரசகுமாரர்கள் விழுந்து, எழுந்து, புரண்டு சிரித்தார்கள். தருமரிடம் வந்து எதற்கு சிரிக்கிறார்கள் என்று பீமன் கேட்டான். தருமர் தலையில் அடித்துக் கொண்டார்.

துச்சாதனன் வந்தான். வில்லை எடுக்கும் முன்பு வேட்டியை இழுத்து இறுக்கக் கட்டி தொடை தட்டினான். பிறகு, வில் வளைத்து சரம் தொடுத்து நாண் இழுத்தான்.

“வில் வளைக்கும் முன்பு ஏதோ செய்தாயே. அது என்ன? துரோணர் கேட்டார். அரசகுமாரர்கள் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

“நான் தொடை தட்டிக் கொண்டேன்.”

“எதற்கு?”

“நான் செய்து முடிப்பேன் என்பதை சொல்வதற்கு.”

“எதை செய்து முடிப்பாய்?”

“நீங்கள் என்ன சொன்னீர்களோ அதை செய்து முடிப்பேன்.”

“அப்படியா?”

“ஆமாம், அப்படித்தான்.”

“அப்படியானால் வில்லை வைத்து விட்டு எழுந்து நின்று தொடையை தட்டி, வேட்டி அவிழ்த்து விட்டு ஓரமாகப் போய் நில்.”

அரசகுமாரர்களின் சிரிப்பில் வனம் அதிர்ந்தது. வேலையாட்களும் வாய் பொத்திக்கொண்டு சிரித்தார்கள். துரியோதனனும் சிரித்தான். துச்சாதனனும், துரோணரும் மட்டும் சிரிக்காமல் ஒருவரை ஒருவர் முறைத்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் வில்லை கீழே வைத்தான். தொடை தட்டினான். வேட்டியை தளர விட்டுக் கொண்டான். பிறகு வில்லை எடுத்துக் கொண்டு ஓரமாகப் போய் நின்றான்.

பீமன் அவனை எட்டிப் பார்த்துவிட்டு, “அற்புதமாகச் செய்தாய்” என்று பாராட்டினான். மீண்டும் பேய் சிரிப்பு. இந்தமுறை துச்சாதனனுக்கும் சிரிப்பு வந்தது.

அர்ஜுனனுக்காக எல்லோரும் காத்துக் கொண்டிருந்தார்கள். அர்ஜுனனை கூப்பிடவில்லையே என்று எல்லோரும் ஏங்கட்டும் என்று துரோணர் தாமதித்தார். சகலரும் முடிந்த பிறகு சற்று இடைவெளி விட்டு அர்ஜுனனை அழைத்தார். அர்ஜுனன் அசையாது நின்றான். கால்கள் சேர்த்து, வில்லை ஒடுக்கி, கைகளை சேர்த்து, தலையை நிமிர்த்தி குருவின் கட்டளைக்கு காத்திருப்பது போல விரைப்பாக நின்றான்.

“அர்ஜுனா, அந்த பாசப் பட்சியை பார்த்தாயா?”

“ஆமாம்.”

“மண்டியிட்டு அந்தப் பாசப் பட்சியை நோக்கி உன்னுடைய சரத்தை தயார் நிலையில் வை. நான் சொல்லும் வரை சரம் விடுபடக் கூடாது. குறி வை” உறக்கக் கத்தினார். சட்டென்று மண்டியிட்டு நாண் இழுத்த நேரமும், வில் வளைத்த நேரமும் ஒன்றாக்கி அவன் தயார் நிலைக்கு வந்தான். ஒரு சொடக்கு நேரம்தான் அவன் குறி வைக்க எடுத்துக் கொண்டான். அவனுடைய துடிப்பு ஆச்சரியமாக இருந்தது. கடும் பயிற்சி இல்லாமல் இப்படி உட்கார முடியாது என்று தோன்றியது. மூச்சு நகரவில்லை. இமைகள் துடிக்கவில்லை. அடிவயிறு எம்பி தாழவில்லை. இறுக்கமாக கற்சிலையில் செய்யப்பட்ட பொம்மை போல குறி பார்த்து இழுத்தான்.

“அர்ஜுனா என்ன தெரிகிறது?”

“பாசப் பட்சி”

“அர்ஜுனா, வேறு என்ன தெரிகிறது?”

“பாசப் பட்சியின் கழுத்து.”

“அர்ஜுனா, வேறு எதையாவது காண்கிறாயா?”

“எதுவும் இல்லை. பாசப் பட்சியின் கழுத்து தவிர வேறு எதுவும் தெரியவில்லை.”

“சரம் விடு” உரக்க கத்தினார்.

பாசப்பட்சியின் தலை சிதைந்தது. சகலரும் உரத்த குரலில் ஆரவாரம் செய்து பாராட்டினார்கள். அர்ஜுனன் அசையாது அப்படியே நின்றான்.

“எழுந்து நில்.”

எழுந்து மர பொம்மையாய் நின்றான்.

“உன் இடத்திற்கு போ குழந்தாய்.”

அர்ஜுனன் அவரை வலமாக சுற்றி கால் தொட்டு வணங்கி தன் இருப்பிடத்திற்கு வந்தான்.

“குழந்தாய்”- என்ன விளிப்பு இது! எவ்வளவு அன்பு அதில்! துரியோதனன் பொசுங்கினான். அவன் கவலை அதிகரித்தது. ஒருவேளை நான் அரசன் இல்லையோ, இவர்கள்தானோ? பயம் பிடுங்கித் தின்றது.

பயம்தான் எதிரியை உருவாக்குகிறது. பயம்தான் சண்டையை தீர்மானிக்கிறது. பயம்தான் வாழ்வை கேள்விக் குறியாக்குகிறது. பயம்தான் எல்லா கெடுதல்களுக்கும் காரணமாக இருக்கிறது. பயம்தான் உலகத்தில் மனித வாழ்வின் அடிநாதமாக இருக்கிறது. பயமில்லாதவர் எவரும் இல்லை. அர்ஜுனனுக்கு என்ன பயம் இருக்கும்? துரியோதனன் சிந்தித்தான். அவர்களை உணவு உண்ணச் சொல்லி குருநாதர் கட்டளையிட்டார். களத்தில் உணவு வைத்து அதையே துரியோதனன் வெறித்து பார்த்துக் கொண்டிருந்தான். அர்ஜுனனுக்கு என்ன பயம் இருக்கும்?

அர்ஜுனனுக்கு பயம் இருந்தது. தொடர்ந்து எல்லா பயிற்சிகளிலும் முதன்மையாக இருக்க வேண்டுமே; இந்த பயிற்சிகளுக்கு அப்பால் என்ன நடக்கும்? எதிர்காலம் எப்படி இருக்கும்? அஸ்தினாபுரம் இரண்டாக பிரித்து தரப்படுமா? அல்லது வேறு ஏதேனும் நகரத்திற்கு போக வேண்டுமா? துரியோதனனுக்கு பாசம் மிகுந்த தகப்பன் உண்டு. எனக்கு இல்லை. தந்தை இல்லாது வாழ்வது எவ்வளவு கடினம். வழிகாட்ட ஆள் இல்லாது இருப்பது எத்தனை வேதனை! என்ன உறவுகள் இருப்பினும் நாங்கள் ஐவரும் அனாதைகள்தானே. அப்பன் இல்லாதவர்கள்தானே. யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் ஏய்க்கலாமே. அவனும் தன் கலத்தில் உள்ள உணவை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தான்.



பாலகுமாரன்

உலகத்தில் கவலை இல்லாத மனிதர்கள் எவரும் இல்லை.

இந்த ருசி, இந்த சாப்பாடு இதற்கு இணையாக உலகத்தில் எதுவும் இல்லை. பீமன் நினைத்தான். இன்னும் கொஞ்சம் போடு என்றான். உலகத்தில் மனிதர்கள் இப்படியும் உண்டு. உணவின் மீது பெரும் காதல் உள்ளவர்களுக்கு கவலைகள் அதிகம் இருக்காது. அவர்கள் கவலைகள் அடி நாக்கில் தொண்டைக்குழியில் நின்று விடுகின்றன.

அந்தணர்களுடன் கலந்து பேசி துரோணர் நாளும், நாழிகையும் குறித்துக் கொண்டார். வித்தைகளை வெளிக்காட்ட பிற்பகல் நேரமே சிறந்தது. பிற்பகல் நேரம் அணிவகுப்பில் துவங்கி விட்டு, ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்திவிட்டு சிறுசிறு வித்தைகளை ஆரம்பித்து விட்டு இரவு நெருங்கும்போது பெரும் வித்தைகளை வைத்துக் கொள்ளலாம். அவர் திட்டமிட்டார்.

சேனாதிபதிகளுடன் குதிரை ஏறி பெரிய புல்வெளியை தேடினார். வடக்கு பக்கம் தாழ்ந்து தெற்கு பக்கம் உயர்ந்த பூமியை தேர்ந்தெடுத்தார். மரங்கள் இல்லாத புல்வெளி சீர் செய்யப்பட்டது. மேடைகள் அமைக்கப்பட்டன. பெண்கள் அமர அடுக்கடுக்காய் பலகைகள் போடப்பட்டன. ஜனங்கள் தரையில் அமர்ந்து கொள்ள மணல் பரப்பப்பட்டது. முரசு அறிவித்து, எக்காளம் ஊதி, அரசகுமாரர்கள் தங்களுடைய வித்தைகளை ஜனங்களுக்கு காட்டி ஆசைகளை கூறுகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

ஜனங்கள் ஆரவாரம் செய்தார்கள். அட. இன்னும் ஐந்து நாட்கள்தானா என்றார்கள். அதற்குள் முடிக்க வேண்டிய வேலைகள் என்ன? என்று பரபரத்தார்கள். அத்தனை பேருக்கும் குடிக்க நீரும், பானகமும், உண்ண உணவும் வேண்டுமே. குழந்தைகளுக்கு பால், தாகத்திற்கு மோர் என்றெல்லாம் பரபரத்தார்கள். 'ஆயிரம் லட்டுகம், இலவசமாக வினியோகிக்கப் போகிறேன்' - யாரோ நெஞ்சு தட்டினான். ஜனங்களுக்கு வெறி பிடித்தது. கொண்டாட்டம் ஆரம்பமாகியது.

அரசகுமாரர்கள் தயாரானார்கள். மந்திரிகள், சேனாதிபதிகள், நிர்வாகிகள், அரசகுலத்து பெண்டிர்கள் அத்தனைபேரும் அந்த நாளுக்காக காத்திருந்தார்கள். காலையிலேயே கொடி தோரணங்கள் கட்டப்பட்டு, வாழைமரங்கள் நடப்பட்டு அந்த இடம் மிகுந்த அலங்காரத்தோடு விளங்கியது. வழிநெடுக எண்ணெய் ஊற்றிய தீப்பந்தங்கள் எரிவதற்கு தயாராக இருந்தன. வண்டியில் வருபவர்க்கு தனித்த இடம் ஒதுக்கப்பட்டது. காவலர்கள் சுழன்று சுழன்று வேலை செய்தார்கள். அவ்வப்போது மோர் குடித்தும், பசியாற்றியும் வந்தார்கள். பெரும் திருவிழா போன்று அஸ்தினாபுரம் வர்ண உடைகளுடனும், வாசனை பொருட்களுடனும், பூக்களுடனும் மகிழ்ந்து ஆடியது.

புறப்பட்டு விட்டார்கள். பேரிகை முழங்கியது. சங்கம் அதிர்ந்தது. எக்காளங்கள் ஊதப்பட்டன. குதிரை வீரர்கள் வழி விலக்கியபடியே வந்தார்கள். நீர் தெளிக்கப்பட்டது; புழுதி பறக்கக் கூடாதல்லவா? வாசனை சந்தனம் தெளிக்கப்பட்டது; வீச்சம் வரக்கூடாதல்லவா?

இது துரியோதனன். அது துச்சாதனன். இது யார். அது யார் எல்லோரும் ஒருவரை ஒருவர் விசாரித்து பெயர் சொல்லி கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்குத் தெரியவில்லை எனில் முன்னேறி,

'அய்யா உங்கள் பெயர் என்ன?' என்று அரச குமாரர்களை கேட்டார்கள். அரச குமாரர்கள் கைகூப்பி பவ்யமாய் பதில் சொன்னார்கள். பளபளக்கின்ற உடைகளும், கம்பீரமான ஆயுதங்களும், முகத்தில் வீரமும் பொங்க இருக்கின்ற அரசகுமாரர்கள் அமைதியாய் பதில் சொல்வது ஜனங்களுக்கு பிடித்திருந்தது. அந்த பவ்யத்தை மறுபடி அனுபவிக்கவே அவர்கள் மறுபடி மறுபடி கேட்டார்கள். அரசகுமாரர்களும் சளைக்காமல் பதில் சொன்னார்கள். ஊர்வலம் மேடையை அடைந்தது.

துரோணர் கடவுள் வாழ்த்து படித்து, அரசருக்கு முகமன் சொல்லி, அரச மகா பெண்டிரை கைகூப்பி வணங்கி, குருமார்களின் ஆசிகளை கேட்டு, சேனாதிபதிகளின் அனுமதிகளை பெற்று, மந்திரிகளின் முன் விண்ணப்பம் வைத்து, அரசகுமாரர்கள் தங்களுடைய வித்தைகளை காட்ட வந்திருக்கிறார்கள் என்று முழக்கம் செய்தார். ஜனங்கள் மேல் துணியை விசிறிப் போட்டு தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்தினார்கள். வரிசையாய் கைகூப்பி அரசகுமாரர்களை இங்குள்ள மகாஜனங்கள் கைதூக்கி ஆசீர்வதிக்க வேண்டும். உங்கள் ஆசிதான் அவர்களை பலப்படுத்தும் என்று சொல்ல, ஜனங்கள் எழுந்து நின்று இரண்டு கைகளையும் உயரே தூக்கி அரசகுமாரர்களை ஆசீர்வதித்தார்கள். அரசகுமாரர்கள் குனிந்து வணங்கி ஜனங்களுக்கு நன்றி சொன்னார்கள். ஜனங்களின் தயவை பெறுவதைவிட ஒரு அரசனுக்கு முக்கியமான வேலை எதுவும் இல்லை. கௌரவர்களில் இளையவர்கள் தங்கள் வித்தையை ஆரம்பித்தார்கள். சிறு கத்திகள் உயரே பறந்தன.

''அடேய், குழந்தாய் மேலே பட்டுவிடப் போகிறது.'' ஜனங்கள் பயந்து கத்தினார்கள். வெகு உயரம் கிளம்பி விண்ணை தொட்டு வேகமாக கீழே இறங்கியது. சட்டென்று அதை அந்த சிறுவன் பிடித்து நிறுத்தினான். ஜனங்கள் ஓவென்று கத்தினார்கள். ஒருமுறை ஒரு கத்தியை எறிந்து பிடித்தவன் இப்பொழுது ஆறு கத்திகளை வானத்தில் எறிந்தான். ''மகனே நீ நரபலி,'' கூட்டத்தில் ஒருவன் பயந்து கத்தினான். ஆனால் ஆறு கத்திகளும் பிடிக்கப்பட்டு தரையில் வைக்கப்பட்டன. அவன் கைகூப்பினான். ஜனங்கள் ஆரவாரம் செய்தார்கள்.

''கீரைத்தண்டு போல் இருக்கிறான். என்ன வித்தை? என்ன வித்தை?''

''எல்லா மகிமையும் துரோணருக்குத்தான்.'' இன்னொருவன் பதில் சொன்னான்.

''அப்பொழுது இந்தப் பிள்ளையை கூமுட்டை என்கிறாயா.''

''இல்லை இல்லை. உன்னை கூமுட்டை என்கிறேன்.''

''ஏய் ஏய்'' அவர்களுக்குள் சண்டையிட ஆரம்பித்தார்கள். ஜனங்கள் சமாதானப்படுத்தினார்கள்.

கத்தியை பார்க்கும்பொழுது கத்திப் பேசுவது ஜனங்களுக்கு இயல்பு. சண்டை பார்க்கிறபொழுது ஆக்ரோஷப்படுவது ஜனங்களுக்குப் பிடிக்கும்.

கோபம் கோபத்தை தூண்டும். ஆயுதம் கோபத்தை அதிகரிக்கச் செய்யும். வேடிக்கை பார்க்கின்றவர்களைக் கூட ஆயுதப் பிரயோகங்கள் ஆட வைக்கும். புல் நறுக்குவதற்கு மட்டுமே கத்தியை பயன்படுத்தியவன் கூட அப்பொழுது போர் வீரனாக கால் அகட்டி நிற்பான். பார்க்கின்ற விஷயத்திலிருந்து, பார்க்கின்ற கண்களையும், மனதையும் அப்புறப்படுத்துவது எல்லோருக்கும் எளிதல்ல. அஸ்தினாபுரத்து ஜனங்கள் உணர்ச்சிவசப்பட்டவர்களாகவே இருந்தார்கள்.

சிலம்புச் சண்டை துவங்கியது. நகுல சகாதேவர்கள் தங்கள் சிலம்பால் வேகமாக தாக்கிக் கொண்டார்கள். அளவு எடுத்ததுபோல் நகர்ந்தார்கள். நடனம் போலவும் அது இருந்தது. மூங்கிலிலிருந்து நெருப்பு வருமா, புகை வருமா? வந்ததே. புகை வந்தது. பொறி பறந்தது. மற்ற அரசகுமாரர்களை கூழாங்கல்லை எறியச் சொல்லி இவர்கள் கொம்பு சுற்றினார்கள். கூழாங்கல் அடிபட்டு சபையில் வந்து விழுந்தது. முன்வரிசையில் இருந்தவர்கள் அடிவாங்கிக் கொண்டு பின் வரிசைக்கு வந்தார்கள். முன்வரிசைக்கு போனவர்கள் முண்டாசுகளால் முகத்தை மறைத்துக் கொண்டார்கள். ஜனங்களுக்கு நடுவே பானை தொங்க விடப்பட்டிருந்தது. ஒரு கூழாங்கல் நகுலனை நோக்கி வீச, அவன் அந்த கூழாங்கல்லை பானை நோக்கி திருப்பினான். சிலம்பில் பட்டு கூழாங்கல் பானையை நொறுக்கிற்று. உள்ளிருந்து அரிசிப் பொரி கொட்டிற்று.

ஒரு நுனியை தரையில் ஊன்றி ஒரு நுனியில் கால் வைத்து அவன் ஒரு கொம்பு உயரம் நின்றான். சுற்று முற்றும் பார்த்தான். மறுபடியும் கீழே இறங்கி கம்பு வீசினான். பிறகு மறுபடியும் ஊன்றி உயரே நின்று பார்த்தான். நின்ற கம்பை அடித்து தட்டச் சொன்னான். நாலைந்து பேர் வேகமாக வந்து கம்பால் மோதினார்கள். அவன் சிலம்பு அசையவே இல்லை. அவனை கீழே இறக்க முடியவில்லை. அவன் கைகளுக்கும் எட்டவில்லை. பறை ஒலிக்க அவன் கொம்பு நுனியில் நடனமாடினான். ஜனங்கள் எகிறி குதித்தார்கள். வாய்விட்டு சிரித்தார்கள்.

''இது கழை கூத்தாடி வித்தை'' ஒரு அந்தணர் வாய் விட்டுச் சொன்னார். நகுலன் காதில் அது விழுந்து விட்டது. திரும்பி அவரைப் பார்த்தான். அவர் பயந்தார். அவர் அங்கவஸ்திரத்தை தூக்கி பிடிக்கச் சொன்னான். அவர் பயந்தவாறே அங்கவஸ்திரத்தை தூக்கிப் பிடித்தார். ''இறுக்க பிடியும்'' என்று கட்டளையிட்டான். அவர் அங்கவஸ்திரத்தை இறுக்க பிடித்தார். இவன் வேகமாக சிலம்பு சுழற்றினான். சிலம்பு பெரிய விசிறிபோல வேகமாக சுழன்றது. காற்று பிய்த்து அடித்தது. கையில் உள்ள அங்கவஸ்திரத்தை பிடுங்கிக் கொண்டு போயிற்று.

''இதை எந்த கழை கூத்தாடியாவது செய்வானா?'' நகுலன் கேட்க. அவர் கன்னத்தில் போட்டுக் கொண்டார். அவன் குனிந்து அவர் பாதங்களை நோக்கி வணங்கி விட்டு நகர்ந்தான்.

சகாதேவனுக்கு இடது கையில் ஒரு கொம்பும், வலது கையில் ஒரு கொம்பும் சுழல, தலைக்கு மேல் இன்னொரு கொம்பு சுழன்று கொண்டிருந்தது. அந்தக் கொம்பு கீழே இறங்கும்போது இடம், வலம் கொம்புகள் கை மாறின. வலக்கை கொம்பு மேலே போயிற்று. மேலே பார்த்தால் கீழே அடி விழும். கீழே தடுத்தால் மேலே கொம்பு விழும். சகாதேவன் பயமுறுத்தினான். குதிரையில் ஏறி இலக்கு அடித்தான். கண் கட்டிக் கொண்டு இலக்கை தாக்கினான்.

''எப்படி அய்யா முடிகிறது?''

''வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்'' என்று இன்னொருவர் பதில் சொன்னான்.

''எத்தனை நாள் பழகி இருப்பார்கள்?''

''என்ன பேசுகிறார்கள்?'' சகாதேவன் காவலாளியை கேட்டான்.

''எத்தனை நாள் பழகியிருப்பீர்கள் என்று கேட்கிறார்கள்?''

''அப்படியா, ஒரே ஒருநாள்தான் பழகியிருப்பேன். வித்தை வந்து விட்டது.''

''அது எங்ஙனம்?'' வினவியவன் கேட்டான்.

''ஆசிரியர் மகிமை. எல்லா மகிமையும் துரோணருக்கே. இதைவிட ஒரு அழகிய வேலை உண்டு.''

''என்ன அது?''

''உம்முடைய மீசையில் ஒரு ஊசியை சொருகி விடுவேன். மீசைக்கு அடிபடாது ஊசி மட்டும் வெளியே விழும். பார்க்கலாமா.''

''அய்யா, ஏற்கனவே பற்கள் ஆடிக் கொண்டிருக்கின்றன. தவறாகி விட்டால் என் கதி அதோகதி ஆகிவிடும்.''

''நான் இரண்டு நாள் பழகியிருக்கிறேன்.''

''எடுத்தால் ஊசி. விழுந்தால் பற்கள். என்ன இப்பொழுது.'' அவன் ஊசியை மீசையில் சொருகி வைத்து விட்டு விலகி வந்தான். தொலைதூரத்திலிருந்து கம்பை சுழட்டிக் கொண்டு வந்து கையை நீட்டி சிலம்பை மூக்குக்கு அருகே வீசினான். காற்றுதான் பட்டது. ஊசி காணோம். மீசை இருந்தது. அவன் சிரித்தான்.

''பல் விழுந்து விட்டதய்யா கீழே.'' சகாதேவன் சொல்ல, அவன் குனிந்து பல் தேடினான். எல்லோரும் சிரித்தார்கள்.

''இல்லை. பற்கள் விழவில்லை.'' அவனுடைய அசட்டு சிரிப்பு, ஜனங்களை குதூகலப்படுத்தியது.

''எல்லா மகிமையும் துரோணருக்கே.'' மறுபடியும் சகாதேவன் சொன்னான். அவர்கள் துரோணரை நோக்கி கைகூப்பினார்கள். துரோணர் மிகுந்த கம்பீரத்தோடு உட்கார்ந்திருந்தார்.

துரியோதனனும், பீமனும் களம் இறங்கினார்கள். பெரும் கதையை எடுத்து சுழற்றினார்கள். கம்பு சுற்றல், கத்தி சுழற்றல், வில் அடித்தல் இதெல்லாம் சரி. இந்த கதையை இப்படியெல்லாம் சுழற்ற முடியுமா! உள்ளங்கையில் பம்பரம் போல ஒரு கதை சுற்றிக் கொண்டிருக்கிறதே. என்ன இது. ஆறு கதைகள் ஒன்றின் மீது ஒன்று எறிய இடது, வலது, இடது, வலது என்று மாறிக்கொண்டு ஆறு கதைகள் போய்க் கொண்டிருக்கின்றன. ஆறு கதைகளும் தரையில் இறங்கின.

பத்து பேர் கொண்டு வந்து கற்பாறையை நடுவில் வைத்தார்கள். பீமன் ஓடிவந்து கற்பாறையை முட்டினான். பிறகு விலகினான். இரண்டு கதைகள் சுழற்றி எடுத்துக் கொண்டு வந்தான். சுற்றி மடமட வென்று கற்பாறையை அடித்தான். ஆள் உயர கற்பாறை இடுப்பு உயரத்திற்கு நொறுங்கி விழுந்தது. மணலாக பறந்தது. அந்தப் பாறை உடைய வேண்டு மென்றால் என்ன அடி! கற்பாறையே இப்படி உடையும் என்றால் மனிதருக்கு என்ன கதி.

‘‘இடுப்பு வரை உடைத்து விட்டார். மீதியை என்ன செய்வார்?’’

பீமன் அந்த கற்பாறையை கட்டிப் பிடித்து தூக்கினான். தலைக்கு மேலே தூக்கினான். காலின் கீழே கதை இருந்தது. கற்பாறையை தூக்கி மேலே போட்டான். ஜனங்கள் தலையில் கை வைத்துக் கொண்டு ‘‘அய்யோ’’ என்று கத்தினார்கள். குனிந்து கதையை எடுத்து கற்பாறை கீழே வரும் முன்பு ஓங்கி அடித்தான். கற்பாறை கை அகல துண்டு கூட இல்லாமல் உடைந்து நொறுங்கியது.

‘‘போதும் வா,’’ துரோணர் அவனை அழைத்தார்.

துரியோதனன் வித்தைகள் இதை விடவும் வேகமாக இருந்தன. இரண்டு கதைகளை ஒன்றாக அடித்து உரசி சபைக்கு நடுவே இருந்த தீப்பந்தத்தில் அவன் கொளுத்தி காட்டினான். ஒரு கதையை வீசி போட்டு விட்டு ஒரு கதையால் பூமியை ஓங்கி அடித்தான். பூமி பிளந்தது. மேலே போன கதை கீழே வந்து பூமியை இன்னும் இடித்தது. இன்னும் ஆழமாக்கியது. கீழிறங்கி கதையை பிடுங்கி எடுத்து வந்தான்.

> **பயம்தான் எதிரியை உருவாக்குகிறது. பயம்தான் சண்டையை தீர்மானிக்கிறது. பயம்தான் வாழ்வை கேள்விக் குறியாக்குகிறது.**

‘‘சர்வ நாஸ்தி. சர்வ நாஸ்தி. இந்த அடியானையின் மீதுபட்டால் யானை பூமியில் புதைந்துதான் போகும்’’ என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். பயமும், திகைப்புமாய் அவர்கள் துரியோதனனை பார்த்தார்கள். என்ன உடம்பு. வஜ்ஜிரம் போல என்று. வியந்தார்கள். என்ன அழகன்! கொண்டாடினார்கள்.

மேற்கு பக்கம் கதிரவன் மறையும்போது அர்ஜுனன் சபை ஏறி கைகூப்பினான். ஜனங்கள் வெறியேறி போனார்கள். ஆனந்த கூச்சலிட்டார்கள். நிறை கொண்ட அழகு. மன்மதன். என்ன உயரம். என்ன அளவான உடம்பு. எவ்வளவு கூறிய மூக்கு. எத்தனை அழகான இதழ்கள், எவ்வளவு பெரிய கண்கள், எவ்வளவு விசாலமான நெற்றி. எவ்வளவு சுருள் கூந்தல். அம்பு வைத்திருந்த அம்பறாத் துணியும். வில் பிடித்த விதமும். கால் அகட்டி நின்றதும். குனிந்து சபைக்கு வணக்கம் சொன்னதும். நடுவே ஓடிவந்ததும். சுற்றி ஜனங்களிடம் சகலரையும் தொட்டுக் கொண்டு வலம் வந்து கண்ணில் ஒற்றிக் கொண்டு மறுபடியும் விழுந்து வணங்கியதும் ஜனங்களை பரவசப்படுத்தின.

‘‘இதுவரை எந்த அரசகுமாரனும் ஜனங்களை தொடவில்லை. அர்ஜுனன் மட்டும் ஜனங்களை தொட்டு ஆசி கோருகிறான். இதுவல்லவா அடக்கம். இதுவல்லவா அன்பு. இதுவல்லவா சிநேகம். இதுவல்லவா ராஜகுணம்’’ எல்லோரும் கொண்டாடினார்கள். ஒரு சரம் மேலே பறந்தது. எல்லோரும் வானத்தை பார்த்தபடியே இருந்தார்கள் சரம் வரவில்லை.

‘‘எங்கே?’’ வினவினார்கள்.

‘‘இந்த விழா முடியும்போது அந்த சரம் கீழே விழும்’’ என்று சொன்னான்.

‘‘அப்படியானால் அது எங்கே போயிருக்கிறது.’’

‘‘வெகுதூரம், வெகுதூரம்’’

ஜனங்கள் பாராட்டுவதா அல்லது திகைப்பதா என்று பரிதவித்தார்கள். வில் வளைத்து ஒரு அஸ்திரத்தை ஏவினான். புகையோடு அஸ்திரம் மேலே போயிற்று. படீர் என்று வெடித்தது. அக்னி பெரும் மேகம் போல தரையில் மெல்ல இறங்கிற்று. ஜனங்கள் விலகி ஓடினார்கள். இன்னொரு அம்பு சீறி எழுந்தது. அக்னியை தாண்டியது. படீர் என்று அடித்தது. மழை பெய்யத் துவங்கியது. பாதியில் வந்து அக்னியை அணைத்தது. லேசான சூட்டுடன் ஜனங்கள் மீது படர்ந்தது. கிட்டத்தட்ட பாதி ஜனங்கள் புல்வெளியில் மல்லாந்து கிடந்தார்கள். பெண்மணிகள் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தார்கள். அம்பு மேலே போகும். கீழே விழும். சுழன்று சுழன்று வருமா? ஒரு அம்பு சுழன்று வந்தது. காற்று அடித்தது. எல்லோர் உடைகளையும் கலைத்தது. காற்றில் புற்கள் பறிக்கப்பட்டு நாலாபக்கமும் எறியப்பட்டன.

‘‘இது வாயுவாஸ்திரம்’’ என்று துரோணர் உரக்கச் சொன்னார். ஜனங்கள் ஹாவென்று கேட்டுக் கொண்டு வாய் பிளந்தார்கள்.

‘‘நீர் என்பது வானத்திலும் இருக்கிறது. பூமியிலும் இருக்கிறது. வானத்தில் உள்ள நீரை கண்டீர்கள். இப்போது பூமியில் உள்ள நீர்.’’ அர்ஜுனன் வில் வளைத்து சரத்தை செலுத்தினான். பூமியில் சரம் மறைந்தது. எதுவும் நடக்கவில்லை. ஜனங்கள் எட்டிப் பார்த்தார்கள். அர்ஜுனனை பார்த்தார்கள். தாங்கள் இடதும் வலதும் உள்ளவர்களைப் பார்த்தார்கள். திடீர் என்று பத்து ஆள் உயரத்திற்கு நீர் பீய்ச்சி அடித்தது. பெரும் ஊற்றுபோல கிளம்பியது. புல் தரையை நனைத்தது. ஜனங்கள் ஓடிப்போய் நீர் பருகினார்கள். கங்கை கங்கை என்று தலையில் தெளித்துக் கொண்டார்கள். ‘‘இவன் வீரன் அல்ல. சூரன்’’ என்று அர்ஜுனன் காதுபட புகழ்ந்தார்கள்.

இன்னும் சற்று நேரத்தில் இருள் கவிழ்ந்து விடும். அர்ஜுனன் இன்னொரு சரம் தொடுத்தான். மேலே அனுப்பினான். பத்து கூடை பூக்கள் கீழே விழுந்தன. எங்கு வைத்திருந்த பூக்கள். எங்கிருந்து வந்த பூக்கள். எதுவும் தெரியவில்லை. ஜனங்கள் மீதெல்லாம் பூக்கள் சொரிந்தன. அர்ஜுனன் தலைகுனிந்து வணங்கினான். பெரிய ஆரவாரமும், கோஷமும் ஜனங்களிடமிருந்து வந்தது. முதலில் விட்ட அம்பு தரை தொட்டது.

‘‘அர்ஜுன மகாராஜா’’ என்று ஒருவன் கத்தினான். அர்ஜுனனுக்கு சிரிப்பாக இருந்தது. ஆரம்பத்திற்கே இப்படி அலறுகிறார்களே. மற்றதை காட்டினால் என்ன செய்வார்கள் என்ற கர்வம் இருந்தது. அவன் முகம் முழுவதும் பொலிவோடும், சிரிப்போடும் இருந்தான்.

(தொடரும்)

இரண்டாம் முறை பீமன் மன்னிப்பதே இல்லை!

வாசல்பக்கம் யாரோ தன் தோள் தட்டும் சத்தம் கேட்டது. அது தோள் தட்டும் ஒலியா அல்லது மரம் பிளக்கும் ஒலியா என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஜனங்கள் திரும்பிப் பார்த்தார்கள். அங்கு ஒரு வில் வீரன் நின்றிருந்தான். உயரம், அழகு, காதில் குண்டலங்கள், நெற்றியில் சூரியச் சின்னம், நெஞ்சிலே கவசம், கையிலே கையுறை, தோளிலே வில், முதுகிலே அம்பறாத்தூணி, அழகான பாதரட்சைகளோடு சபைக்குள் நுழைந்தான்.

"அர்ஜுனா" என்று உரக்கக் கத்தினான். அர்ஜுனன் திரும்பிப் பார்த்தான்.



மகாபாரதம் 14

துரோணர் எழுந்து நின்று யார் என்பது போல சீற்றத்தோடு பார்த்தார். ஜனங்கள் அவனை பார்த்தார்கள்.

"என் பெயர் கர்ணன். நீ செய்து காட்டிய அத்தனை வேலையும் என்னாலும் செய்ய முடியும். எனவே இங்கு பூக்கள் சொரிந்து உன்னுடைய அன்பை காட்டாதே. வித்தை காட்டு" என்று உரக்கச் சொன்னான். ஜனங்கள் ஆஹா... ஆஹா... என்று கத்தினார்கள். ஜனங்களுக்கென்ன வேடிக்கை பார்க்க வேண்டும். இரண்டு பேருக்கு சண்டை நடக்க வேண்டும். அவ்வளவுதான். அது துவங்கி விட்டது என்று இறுக்க உட்கார்ந்து கொண்டார்கள்.

"யார் நீ?" துரோணர் அதட்டினார்.

"நான் வில் வித்தைக்காரன். இந்த சபையில் அர்ஜுனன் செய்த அத்தனை வேலையும் நீங்கள் அனுமதித்தால் நான் செய்து காட்டுகிறேன். செய்த பிறகு என் பெயர் கேட்க வேண்டியது அவசியம் தானா என்று நீங்கள் தீர்மானம் செய்யுங்கள்" கர்ணன் உரத்த குரலில் பேசினான்.

பெயரை கேட்காதே. வேலையைப் பார் என்ற அதட்டல் அதில் இருந்தது. துரோணருக்கு வேறுவழி இல்லை. சரி என்று தலையசைத்தார். அர்ஜுனன் செய்த அத்தனை வேலைகளையும் இழை பிசகாது இன்னும் நறுவிசாய் கர்ணன் செய்து காட்டினான். அர்ஜுனனிடம் ஒரு அலட்டல் இருந்தது. கர்ணன் அதை அமைதியாகச் செய்தான். மக்களின் மனதை எளிதில் கவர்ந்தான்.

துரியோதனன் பரவசப்பட்டான். எழுந்து நின்று ஓடி வந்தான். கர்ணனை தழுவிக் கொண்டான். "என் மானம் காத்தாயடா" என்று இறுக்க அணைத்துக் கொண்டான். "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"மகாபிரபு, என் பெயர் கர்ணன். நான் உங்கள் நட்பை நாடி வந்திருக்கிறேன்" என்ற



அவன் பேச்சு துரியோதனனுக்கு காதில் தேனாய் விழுந்தது. இன்னும் அணைத்துக் கொண்டான். சுற்றி தட்டாமாலை ஆடினான். “நீ என் நண்பன்” என்று உள்ளங்கையை பற்றி உறுதி கூறினான்.

மகாபாரதத்தின் மகத்தான இன்னொரு கணம், இன்னொரு சேர்க்கை அங்கு நடைபெற்றது. அதோடு அங்கே முடிந்திருக்கலாம். துரியோதனன் தந்த ஆலிங்கனம் கர்ணனை அதிகம் பேச வைத்தது. பேச்சுதானே பிரச்னைகளின் ஆரம்பம். பேசாதிருக்க பலருக்குத் தெரியாது.

“கௌரவர்களை விட பாண்டவர்கள் பெரியவர்கள் என்று ஜனங்கள் எண்ணிக் கொண்டிருந்தபோது நீ வந்து சேர்ந்தது என் மானம் காப்பது போல.” முணுமுணுப்பாய் துரியோதனன் பேசினான்.

“கடைசி வரை காப்பேன். உங்களை கைவிடேன்,” கர்ணன் இன்னும் இறுக பற்றிக் கொண்டான். அவர்கள் இருவரும் இணைந்து இழையும் சிங்கங்கள் போல் இருந்தார்கள். இத்தோடு நின்று போயிருக்கலாம். ஆனால், கர்ணன் முன்னேறினான்.

“அர்ஜுனா, உன்னோடு தனித்த யுத்தம் செய்ய விரும்புகின்றேன். உன் தலையை அறுக்க விரும்புகின்றேன். உன் கைகளை உடைக்க விரும்புகின்றேன். உன் தனுசை சிதறடிக்க விரும்புகின்றேன். உன்னை இந்த இடத்திலிருந்து துரத்தித் துரத்தி அடிக்க விரும்புகின்றேன்” என்று வீராவேசமாக மொழிந்தான். துரோணருக்கு வேறு வழியில்லாமல் சபைக்குள் இறங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

“அப்படியா நான் தயார்,” அர்ஜுனன் துள்ளி குதித்தான். தலைப்பாகையை இறுக்கிக் கொண்டான். கவசத்தை சுருக்கிக் கொண்டான். தமையனாரைப் போய் தழுவிக் கொண்டான். பீமனையும், நகுல சகாதேவனையும் தொட்டுத் தழுவி முத்தமிட்டான். ஓடிவந்து சபையில் நாண் பூட்டிய வில்லோடு தயாராக இருந்தான்.

கர்ணனும் துரியோதனனை தழுவி, கன்னத்தில் முத்தமிட்டு அவனுடைய சகோதரர்களை அருகே அழைத்து அணைத்துக் கொண்டு குதூகலமாய் நடனமாடி அவனும் சபைக்கு நடுவே பூட்டிய வில்லோடு கூடிய நாணை வைத்துக் கொண்டு நின்றான். துரோணருக்கு சபைக்குள் இறங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

“அர்ஜுனன் அரசகுமாரன். அவனோடு தனித்த யுத்தம் செய்ய வேண்டுமென்றால் நீ யார் என்று தெரிய வேண்டும். குலத்தில் தாழ்ந்தவனோடு அரசகுமாரர்கள் ஒருபொழுதும் சண்டையிட மாட்டார்கள். நீ எந்த அரசன், எந்த குலம் என்று சொல்லிவிட்டு இந்த செயலை துவங்கு.”

கர்ணன் தன் குலப்பெருமை பேச முடியாமல் தள்ளாடினான். அந்த வேதனை துரியோதனை அசைத்தது. ஓடிப்போய் பீஷ்மரிடம் நின்றான்.

“என் நண்பனை நான் அரசனாக்கப் போகிறேன். நீங்கள் அனுமதிக்க வேண்டும்” என்று உரத்தக் குரலில் கூறினான். பீஷ்மர் தலையசைத்தார். இந்த இடம், இந்த நிலைமை ஏதோ ஒரு இடத்தில் வந்து நிற்க வேண்டும் என்று விருப்பப்பட்டார். கால் உதைத்து துரியோதனன் கட்டளையிட வேலைக்காரர்கள் நாலாபக்கமும் பறந்தார்கள். சிங்காசனம் கொண்டு வரப்பட்டது. அந்தணர்கள் முன் வந்தார்கள். அவன் தலையில் கங்கை நீரை கொட்டினார்கள். மாவிலை கொண்டு நீரை தெளித்தார்கள். மருந்தை உடம்பில் தடவினார்கள். இவன் அரசனாக இருக்க தகுதி உடையவன் என்று அட்சதை தூவி ஆசீர்வதித்தார்கள். அங்கதேசத்தின் அரசனாக்குகிறேன் என்று உரத்த குரலில் துரியோதனன் முழங்க கிரீடமும், கொடியும், தாமரமும், பாதுகை பீடமும், உடைவாளும் கொண்டு வரப்பட்டன. சகலமும் அணிந்து கொண்டு மிகக் கம்பீரமாக சபை நடுவே கர்ணன் உட்கார்ந்து கொண்டான். நன்றியோடு கைகூப்பி துரியோதனனுக்கு வணக்கம் சொன்னான். அதில் பணிவும், பாசமும் பொங்கி இருந்தன.

தன் மகன் சபை நடுவே உட்கார வைத்து அரசனாக்கப்பட்டான் என்று தெரிந்து கர்ணனுடைய தகப்பன் சன்சயன் என்கிற தேரோட்டி அவனை நோக்கி ஓடிவந்தான். கிழவனான தன் தகப்பன் கோல் ஊன்றி, தள்ளாடி வருவதை பார்த்து கர்ணன் எழுந்திருந்தான். மண்டியிட்டு அவர் பாதம் பணிய முன்வந்தான். தன்னுடைய மேல் துண்டினால் தன் பாதங்களை அந்த தேரோட்டி மறைத்துக் கொண்டான். ‘அரசே, எழுந்திரும்’, என்று தோள் தட்டி எழுப்பினான். தன் மகனின் கன்னங்கள் தடவி உதட்டில் வைத்துக் கொண்டான்.

“அட, இவன் நமது தேரோட்டி. இவன் மகனா நீ? யோக்கியதை இல்லாத ஒரு விஷயத்தில் நீ எப்படி தலையிடுகிறாய். உன்னுடைய குலம் குதிரை ஓட்டும் குலம். சவுக்கு எடுத்துக் கொள். வில் எதற்கு? யுத்தம் எதற்கு? அரசகுமாரர்களோடு போரிடுகின்ற ஆசை எதற்கு?” என்று உரத்த குரலில் பீமன் கேலி செய்ய, துரியோதனன் அருகே வந்து பீமனை முறைத்துப் பார்த்தான்.



பாலகுமாரன்



“சூரர்களுக்கும், நதிகளுக்கும் மூலம் இல்லை. அந்த மூலம் பார்ப்பதும் கூடாது. உலகத்திலே மிகச் சிறந்த அஸ்திரம், அசுரர்களையெல்லாம் கொல்லுகின்ற அஸ்திரம் ஒரு பிராமணருடைய எலும்பிலிருந்து வந்தது. ஊரே நடுங்குகின்ற அக்னி ஜலத்திலிருந்து வந்தது. எனவே எது எங்கிருந்து வந்தது என்பது முக்கியமில்லை. அதனுடைய வீர்யமே முக்கியம். கர்ணனுடைய வீர்யத்தைப்பற்றி பேசு. வீரத்தைப்பற்றி பேசு. அதற்கு எதிரே நின்று தைரியமாகப் பேசு. அதைத்தவிர அவன் மூலத்தைப் பற்றி பேசுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை” என்று உரத்து துரியோதனன் கத்த, “யாகத்திற்காக வைத்திருந்த அவிசை நாய் திங்கலாகாது” என்று சொல்ல, துரியோதனன் கதையை தூக்கிக்கொள்ள, பீமனும் கதையை உயர்த்த, அங்கு கைகலப்பு நடக்கும் போலிருந்தது. அஸ்வத்தாமன் உரத்துக் கத்தி இரண்டு பேரையும் விலக்கினான்.

இருள் சூழ்ந்தது. சூரியன் மறைந்தான். விளக்குகள் ஏற்றப்பட்டன. திகைத்துப் போயிருந்த ஜனங்கள் ஆளுக்கொருபக்கம் பேசியபடி கலைந்து போனார்கள்.

கர்ணனின் தோளை அணைத்தபடி துரியோதனன் அவன் தன் அரண்மனைக்கு அழைத்துப் போனான். இரவு தன் கட்டிலில் கர்ணனை தனக்கு அருகே படுக்க வைத்துக் கொண்டு நிம்மதியாகத் தூங்கினான். பீமனைப் பற்றிய பயம் அவனிடம் அறவே மறைந்தது.

ஆனால், யுதிஷ்டிரர் என்கிற தருமர் தூக்கம் வராமல் தவித்தார். கர்ணன் நிச்சயம் அர்ஜுனனை விட பலம் பொருந்தியவன். அவன் அந்தப் பக்கம் போய்விட்டானே என்று தவித்தான். குந்திக்கு கர்ணனை அடையாளம் புரிந்தது. அவன் தன் மகன் என்று தெரிந்தது. அவன் அரசனானது அவளுக்கு சந்தோஷமாக இருந்தது. ஆனால், அந்த சந்தோஷத்தை அவள் யாருக்கும் சொல்லாமல் ரகசியமாக அனுபவித்தாள்.

அந்த விழாவைப்பற்றி அஸ்தினாபுரத்து ஜனங்கள் கதைகதையாய் வெகுநாள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

குருதட்சிணை என்பது துருபதனோடான போர் என்பது எப்போதோ தீர்மானமாகியிருந்தது. அதை இப்போது நிறைவேற்ற வேண்டும். கர்ணன் இருக்கின்ற தைரியத்தில் நாங்களே இதைச் செய்து முடிக்கிறோம் என்று துரியோதனன் பிரித்து பேசியதால், தருமர் அவர்களே போகட்டும் என்று அவர்களை முன்னே போகவிட்டார். ஆரவாரமாக கௌரவர் படை துருபதனின் பாஞ்சால தேசம் நோக்கிப் போயிற்று. எல்லைகளை அழித்தது. கிராமங்களை சூறையாடியது. துருபதனுக்கு தன் மக்களை பிடிக்கும். தன் நகரத்தைப்பற்றி பெருமை அதிகம். எனவே, அவனை துன்புறுத்த அவன் ஊரை துன்புறுத்துங்கள் என்று துரோணர் உத்தரவிட்டிருந்தார். தன் நகரம் பற்றிய கர்வம் கொண்டிருந்த துருபதனின் கண் எதிரே கௌரவர்கள் அவன் தேசத்தை சூறையாடினார்கள்.

ஆனால், துருபதன் மிகுந்த சாமர்த்தியசாலி. பல போர்கள் செய்து பழக்கப்பட்டவன். துரோணருக்கு இணையான திறமைகள் பெற்றவன். ஒரே குருகுலம். எனவே, கௌரவர்களால் அவனை வெல்லுவது அரியதாக இருந்தது. அவன் கௌரவர்களை உள்ளே நுழையவிட்டு கதவை மூடிக் கொண்டு கண்ட மேனிக்கு அடித்தான். கதறக் கதற விரட்டினான்.

நகரத்திற்கு வெளியே காத்திருந்த அர்ஜுனனுக்கு சகோதரர்களின் ஓலம் காதை துளைத்தது. பாணங்களால் வாசல் கதவை உடைத்தான். யுதிஷ்டிரரை “நீங்கள் வர வேண்டாம்” என்று சொல்லி, தடுத்து நிறுத்தி அவனும் பீமனும் மட்டுமே உள்ளே போனார்கள்.

பீமன் யானை கூட்டங்களை அடித்து நொறுக்கினான். தன் சகோதரர்களை தாக்கிய வீரர்களை துரத்தித் துரத்தி அடித்தான். ஒரே வீச்சில் கொன்று போட்டான். கட்டிடங்களை இடித்து தள்ளி முன்னேறினான். அவனை தடுக்க முடியாமல் பின்னடைய, பீமனை தாண்டிக் கொண்டு தன்னுடைய தேரை அர்ஜுனன் செலுத்தினான். விதம் விதமான பாணங்களால் துருபதனை அடித்தான். அவனை துன்புறச் செய்தான். அவன் தேர் மீது ஏறிக் கொண்டான். அவனுடைய முடியை கொத்தாகப் பிடித்து அவனை மடித்து பின் கையை கட்டி தன்னுடைய ரதத்திலே போட்டான். வழி நெடுக கடும் அழிவை ஏற்படுத்திக் கொண்டு அவன்

நகரத்திற்கு வெளியே வந்தான். தன்னுடைய தேரின் தூணில் துருபதனை கட்டி அவன் தலையை கலையவிட்டு ஆடைகளை கிழித்து, கன்னத்தில் அடித்துரத்தம்வரச் செய்து அலங்கோலமாக கொண்டு போய் துரோணர் முன் நிறுத்தினான்.

“துருபதா” அன்பொழுக அழைத்தார். அந்த அன்பில் ஒரு குரூரம் இருந்தது.

“உன்னை மறுபடியும் பெயர் சொல்லி அழைக்கலாமா அல்லது அரசே என்று அழைக்க வேண்டுமா சொல்” என்று கேட்க, துருபதன் தலை குனிந்தான்.

“எனக்கு நீ பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். நீ எனக்கு நண்பனா இல்லையா என்று தெரிந்தாக வேண்டும். நீ எனக்கு நண்பன் இல்லை என்றால் வேறுவிதம். நண்பன் என்றால் வேறு விதம். சொல். உன்னுடைய விருப்பம் என்னவோ அதுதான் என் விருப்பம்.” என்று துரோணர் பணிவாகப்பேசினார். அதிலும் ஒரு குரூரம் இருந்தது. துருபதன் தலை நிமிர்த்தினான்.

“நான் உங்கள் நட்பை விரும்புகின்றேன். உங்களை நான் அவமானப்படுத்தியது தவறு. உங்களை வெறும் அந்தணன் என்று நினைத்தது பிசகு. அந்த பிசகை நான் உணர்ந்து கொண்டேன். உங்களுடைய அன்பு எனக்கு முக்கியம். நான் செய்த தவறை மன்னித்து என்னை மறுபடியும் உங்கள் நண்பனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.”

“மிகுந்த சந்தோஷம். மிகுந்த சந்தோஷம். அர்ஜுனா, கட்டுகளை அவிழ்த்து எறி.” உடனடியாக கட்டுகள் அவிழ்க்கப்பட்டன. அவனை அர்ஜுனன் கீழே இறக்கினான். துருபதன் ஓடிவந்து துரோணருடைய கால்களை பற்றிக் கொண்டான். அவனை தூக்கி நிறுத்தி ஆரத்தழுவிக் கொண்டார்.

“எனக்கு நீ சொன்னபடி உன் ராஜ்ஜியத்தில் பாதி வேண்டும். கங்கையினுடைய வடக்குப் பக்கம் பாஞ்சாலதேசம் என்னுடையதாகவும், தெற்குப் பக்கம் உன்னுடையதாகவும் இருக்கும். பிறகு பிரித்து ராஜ்ஜியத்தை வாங்கிக் கொண்டார். ராஜ்ஜியம் பெற்ற ஓலையை கையில் வாங்கிக் கொண்டு சிரித்தார். பிறகு அந்த ஓலையை துருபதனிடமே கொடுத்தார்.”

“நீயே வைத்துக் கொள் உன் ராஜ்ஜியத்தை. எனக்கெதற்கு” என்று சொன்னார். திரும்பி அர்ஜுனனை அழைத்து ஆரத்தழுவிக் கொண்டார். “என்னுடைய மிகப் பெரிய சபதத்தை எளிதில் நிறைவேற்றிய உனக்கு நான் எப்படி நன்றி சொல்வேன். அர்ஜுனா, நீ நீடூழி வாழ வேண்டும்.” என்று ஆசீர்வதித்தார்.

துருபதன் இருவரையும் வணங்கிப் போனார். வாசல்வரை கொண்டுபோய் அர்ஜுனன் வழியனுப்பினான். திரும்பி அர்ஜுனன் முகத்தை வருடி, “அற்புதமாகப் போர் செய்தாய். நீ போர் செய்த இந்த சாமர்த்தியத்தை பார்த்தே நான் உன்னிடம் தோற்றுப் போனேன். நான் இன்னும் சுதாரித்திருக்கவேண்டும். உன்னை என் வாழ்நாளில் மறக்கவே மாட்டேன். இந்த யுத்தத்தையும் மறக்க இயலாது” என்று துருபதனும் தலையில் கை வைத்து அர்ஜுனனை ஆசீர்வதித்தார். தேர் ஏறினார். தன் தேசம் போனார். எதனால் தோற்றோம். எதனால் தோற்றோம். என்று யோசித்தார். துரோணருக்கு நிகரான வலிவு இருந்தும், சில இடங்களில் துரோணரை காட்டிலும் வலிவு இருந்தும், துரோணருடைய பிரம்மதேஜஸ் தன்னிடம் இல்லை. அந்த பிரம்மதேஜஸ் இல்லாத போது யுத்தம் செய்து புண்ணியம் இல்லை. அந்தணர்களுக்கே உரித்தான அந்த அடங்கிய கோபம், அதுதான் ஜெயிக்கும். ஆரவாரம் ஜெயிக்காது என்பதை புரிந்து கொண்டான்.



எனவே, அம்மாதிரியான தேஜஸ் அடைய என்ன செய்ய வேண்டும். என்ன மாதிரியான யாகம் செய்ய வேண்டும் என்று பல்வேறு விதமான அந்தணர்களை வேண்டினான். அங்கே ஒரு பெருங்கூட்டம் இருப்பதைக் கண்டு தன் விருப்பத்தை வைத்தான். துரோணரைக் கொல்ல ஒரு பிள்ளையும், அர்ஜுனனை மணக்க ஒரு பெண்ணும் தனக்கு வேண்டும் என்றும் அவன் அவர்களிடம் விண்ணப்பித்தான்.

துரோணர் கங்கையின் வடகரைக்கு அகிஸ்சக்கரம் என்ற நகரை ஸ்தாபித்து அதற்கு புதிய பெயரிட்டார். அநேக தேசங்கள் அடங்கிய அகிஸ்சக்கரம் அர்ஜுனனால் ஜெயிக்கப்பட்டு துரோணருக்கு பரிசளிக்கப்பட்டது. அரசகுமாரர்களின் போர் வாழ்க்கை துவங்கியது. எதிர்த்து வரும் மிருகங்களை அடித்துத் துவைத்தும், ஓடிப்போய் கொன்றும் ரத்த சேறு பார்த்த அந்த அரசகுமாரர்கள் உண்மையான யுத்தத்தையும் நேருக்கு நேர் சந்தித்தார்கள்.

மடக்கிப்போட்டு வேண்டாம் விட்டு விடு என்று கெஞ்சியவன் பீமன் விலகியதும் எகிறி வாள் உருவி தாக்க வந்தான். மறுபடியும் அவனை மடக்கி போட்டு அடிக்க, வேண்டாம் என்று கெஞ்சினான். இந்த முறை பீமன் விலகியதாக நடித்து விலகி பிறகு ஓங்கி அடித்து கொன்றான். இரண்டாம் முறை பீமன் மன்னிப்பதே இல்லை.

வல்லமை பெற்ற துருபதன் போன்றவர்களை ஜெயிப்பது எங்ஙனம்? இந்த யுத்தம் அர்ஜுனனுக்கு சிறந்த பயிற்சியாக இருந்தது. துருபதன் முன்பு சற்று நேரம் தடுமாறியது கூட தன்னுடைய சாரதியால்தான் என்பதை அர்ஜுனன் புரிந்து கொண்டான். ஒரு போர் வீரனுக்கு நல்ல சாரதி மிகவும் முக்கியம். கணவனும் மனைவியும் போல அவர்கள் பேசாது புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளவர்கள். அர்ஜுனன் மனம் நல்ல சாரதிக்கு ஏங்கத் துவங்கியது. காதலிக்கு ஏங்குவதும், கடவுளுக்கு ஏங்குவதும், சாரதிக்காக ஏங்குவதும் ஒன்றே. யார் வழி நடத்துகின்றானோ அவனே சாரதி. அவன் குருவிற்கு ஒப்பானவன். சாரதியின் நட்பு தவறாக இருப்பின், பிளவுபட்ட நிலையில் இருப்பின் அந்தப் போர்வீரன் சேற்றில் சிக்கிக் கொள்வான்.

அதற்கும் மகாபாரதத்தில் உதாரணம் இருக்கிறது. தினசரி வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனையும் வழிநடத்த ஒரு சாரதி இருப்பின் அவன் வெற்றி நிச்சயம். ஆனால், சாரதி கிடைப்பது பூர்வ புண்ணியம்.

துருபதனுக்கு ஆற்றாமை பொங்கிப் பொங்கி வந்தது. சொன்னதில் ஏதேனும் தவறு இருக்கிறதா. அரசனை அரசன் என்று தானே அழைக்க வேண்டும். அரசனுடைய மகன் கூட அப்பா என்று அழைக்காமல் அரசே என்று அழைப்பதுதானே முறை. சபையின் உள்ளே நுழைந்து விளிம்பில் நின்று துருபதா, என்று அழைக்க யாருக்கு உரிமை இருக்கிறது. ஒருவருக்கும் இல்லையே. பாஞ்சால தேசத்தை அவமானப்படுத்துவதுபோல் அல்லவா இருந்தது. அதைச் சொன்னால் அவ்வளவு கோபமா. இப்படி பழி வாங்கவா அடித்து, உதைத்து, ஜனங்களை வதைத்து, மாளிகைகளை இடித்து... யோசிக்க யோசிக்க மனம் பதறியது.

விடுவேனா, உன்னை விடுவேனா துரோணா. உன்னை விட மாட்டேன். நட்பு என்று நான் கீழே இறங்கி வந்தது உன்னை வதைக்கத்தானே ஒழிய, பழி வாங்கத்தானே ஒழிய, பதுங்குவதற்கு அல்ல. பயந்து அல்ல. நீ அந்தணன். காத்திருந்து கழுத்து அறுத்துவிட்டாய். நான் சத்ரியன். அந்த நேரம் பொங்கி அந்த நேரம் அடங்கி விட்டேன், நான் முட்டாள், நீ கெட்டிக்காரன், நான் உணர்ச்சி வசப்பட்டவன், நீ உணர்ச்சியை அடக்கத் தெரிந்தவன், நீ பிரம்மஞானி, நான் வெறும் மனிதன், இல்லை நானும் மாறுவேன், நானும் பிரம்ம ஞானியாக மாறுவேன், நானும் பிரம்ம தேஜஸோடு இருப்பேன். நானும் புலன் அடக்கி உன்னைப்போல் உள்ளுக்குள் மூழ்கி, ஆழ அமிழ்ந்து எப்படி கோபத்தை எவ்வளவு வெளியிட வேண்டுமோ, எங்கு வெளியிட வேண்டுமோ அங்கு வெளியிடுவேன், பழிவாங்குவேன்.

ஆனால், துரோணா இனிமேல் யுத்தம் செய்ய முடியுமா. இந்த அவமானத்திற்குப் பிறகு வில் வளைக்கவும், சரம் தொடுக்கவும் தோன்றுமா? அடித்து நொறுக்கி விட்டான். என்ன ஆட்டம். என்ன ஆட்டம். எனக்குத் தெரிந்து அத்தனை வித்தையையும் பிரயோகம் செய்தும் அந்த சிறுவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்படியெல்லாம் சரம் தொடுக்க முடியுமா என்ற சந்தோஷம் இருந்தது. இது கற்றுக்கொண்டதால் வந்ததா. இல்லை. உள்ளுக்குள் இருந்த ஒரு பூரிப்பு. ஏதோ ஒரு தெய்வச் சக்தி. ஏதோ ஒரு விஷயம். இவன் சாதாரணன் இல்லை. அந்த அர்ஜுனன் வெறும் மனிதனல்ல. அவன் தெய்வப்பிறவி. அந்த ஆட்டம் கண் முன்னால் இருக்கிறது. அந்த சந்தோஷம் மனதிற்குள் இருக்கிறது. தோற்றுப் போனதும் சரியான ஆளிடம் தோற்றுப் போனேன் என்ற நிறைவு இருக்கிறது. அந்த அர்ஜுனனுக்கு பரிசு தர வேண்டும். துரோணரின் சிரம் அறுக்க வேண்டும். என்னால் அறுக்க இயலாது. எனக்கு பதில் என் மகன் அறுப்பான். உன் சிரம் அறுக்க துரோணா, எனக்கு ஒரு மகன் வேண்டும். அந்த அர்ஜுனனை மணக்க எனக்கு ஒரு மகள் வேண்டும். எப்படி கிடைக்கும். எப்படி கிடைக்கும். எங்கே கிடைக்கும்.

(தொடரும்)

ம.செ

மகாபாரதம்

15

உணவில் ஆசை கொண்டவன் எதற்கும் துணிவான்!

அவன் சல்மாட்சி என்ற கங்கைக்கரை ஊரை அடைந்தான். அந்த கங்கைக்கரை ஊரில் அந்தணர்கள் மட்டுமே வசித்தார்கள். மிகச் சிறந்த அந்தணர்கள் அங்கு இருந்தார்கள். தவம் செய்யாத அந்தணர்கள் அங்கு எவரும் இல்லை. ரிஷிகளுக்கு ஒப்பான யாஜர், ஜர் என்று இரண்டு சகோதரர்கள் அங்கு இருந்தார்கள். எது கேட்டாலும் தருகிறேன் என்று அவர்களுக்கு சத்தியம் செய்து கொடுத்து அவர்களின் உதவியால் தனக்கு இந்த இரண்டு வரங்களும் வேண்டும் என்று விவரித்தான். அவர்கள் இஷ்டி செய்து தருவதாக வாக்களித்தார்கள்.

தன் நகரத்திற்குப் போய் திரண்ட செல்வங்களோடு அந்த கங்கைக்கரை கிராமத்தை அடைந்தான். தன்னுடைய தமையனான யாஜேரி பற்றி, அவனுடைய தம்பியான உபயாஜர் அரசனிடம் பேசினார்.

“என்னை விட எல்லா விதங்களிலும் சிறந்தவரான என் தமையனை முன்னிட்டு நீ எந்தவிதமான யாகத்தையும் செய்யலாம். ஆனால், அவர் வேறு விதமான விருப்பம் உள்ளவர். உணவில் விருப்பமுள்ளவர். வழியில் மண்ணில் விழுந்த பழங்களைக் கூட ருசியாக இருந்தால் தூசி தட்டி விட்டு உண்பதில் ஆசையுள்ளவர். மணம் மிகுந்த

சமையலை அவர் மூக்கு உணர்ந்து விட்டால் அந்த இடத்திற்குப் போய் நின்று எனக்கு இந்த சமையலில் பங்கு கொடுங்கள் என்று கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறவர். சாப்பிடுகிறபோதே இந்த உணவு இப்படி இருக்கும். அந்த உணவு அப்படி இருக்கும் இங்கே உணவு இப்படி இருக்கும் என்று விதம் விதமாக ருசித்து ருசித்து அந்த உணவைப் பற்றி மகிழ்ந்து பேசுபவர். அன்னத்தில் அவர் அதிகம் நாட்டம் வைத்திருப்பதால் அந்த மாதிரியான அன்னங்களை நீங்கள் அவருக்கு கொடுத்து சந்தோஷப்படுத்தலாம். அந்த சந்தோஷத்தை நீங்கள் வெளிப்படுத்தினாலே அவர் உங்களுக்கு வேண்டியதைச் செய்வார். எனவே, அவரிடம் போய் பேசுங்கள்" என்று சொல்ல, விதம் விதமான ருசிகள் உள்ள உணவைப் பற்றி யாஜனிடம் அந்த அரசன் பேசினான்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு பலவீனம் உண்டு. அந்த பலவீனத்தை உபயோகப்படுத்திக் கொண்டு தங்களுக்கு வேண்டிய காரியங்களை செய்து கொள்ள பலருக்கு திறமைகள் உண்டு. இஷ்டி என்கிற இஷ்டத்தைத் தருகின்ற அந்த யாகத்தை யாஜர் என்கிற அந்தணரை முன்வைத்து அவருக்கு பத்துகோடி பசுக்களைத் தருவதாகச் சொன்னான். அப்படிச் சொன்னதும் அவர் வாய் பிளந்து துள்ளி எழுந்து உடனே செய்வதாக உறுதி அளித்தார்.

பாஞ்சால தேசத்திலிருந்து பெரிய படை விதம் விதமான பொருட்களோடு வந்து சல்மாட்சி என்கிற கங்கைக்கரை கிராமத்தை சூழ்ந்து கொண்டது. அந்தணர்கள் சந்தோஷமானார்கள். நன்கு உடுத்தினார்கள். நன்கு உண்டார்கள். அரசனை சந்தோஷப்படுத்த எண்ணினார்கள். எந்தக் கவலையும் இல்லாமல் யக்ஞத்திற்கு வேண்டிய சமித்துகளை நீயே தேடி எடுத்துக் கொண்டு வா என்று யாஜர் அரசனுக்கு உபதேசித்தார்.

அரசன் காடு முழுவதும் சுற்றி சுள்ளிகளை பொறுக்கினான். அப்படி பொறுக்கி மூட்டைகளாகக் கட்டினான். தலையில் சுமந்து வந்தான். தோளில் எடுத்து வந்தான். அப்படி செய்கின்ற எல்லா செய்கைகளிலும் அவருக்கு துரோணரை பழி வாங்குகின்ற எண்ணமே இருந்தது. ஒவ்வொரு குச்சியும், ஒவ்வொரு செயலும் அவரின் தீராத தாபத்தை சுமந்து வந்தான்.

கல்மிஷி என்கிற அந்த கங்கைக்கரை கிராமத்தில் அந்தணர்கள் வாழ்ந்து வந்த அக்ரஹாரம் யாக குண்டம்போல் ஒளி வீசியது. எல்லா விரல்களும் ஒன்றாக இருப்பதில்லை என்பதுபோல் அங்குள்ள அந்தணர்களும் வேத விஷயத்தை வெவ்வேறு விதமாக அணுகினர். எந்தவித லாபநோக்கும் இல்லாது, எந்தவித எண்ணமும் இல்லாது அந்தணனாக வாழ்ந்து மறைவதே வாழ்வின் லட்சியமாக கொண்டிருந்தவர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு வினைக்கும் ஒரு வினை உண்டு. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர் செயல் உண்டு. இந்த ஜென்மத்தில் இப்படி இருப்போமே. எந்தவித நோக்கமும் இல்லாமல், அந்தணனாக இருப்பதே நியதி என்று வாழ்வோமே. இதற்கு ஏதேனும் பலன் இருந்தால் அடுத்த ஜென்மத்தில் அடைவோமே என்று அமைதியாய் வாழ்ந்தவர்கள் அங்கு இருந்தார்கள்.

எனக்கென்று எதுவும் தேவையில்லை. எனக்கு கிடைத்திருக்கின்ற இந்த வீடு, இரண்டு பசுக்கள், ஒரு மனைவி, மூன்று குழந்தைகள் இது போதும். இவ்வுலகிற்கு வேறு ஏதேனும் செய்ய வேண்டியிருப்பின், மழை வேண்டியிருப்பின், வெய்யில் வேண்டியிருப்பின், பயிர்கள் செழிக்க வேண்டியிருப்பின் அதற்குண்டான பூஜைகளை நான் உலகத்தின் பொருட்டு நான் செய்யத் தயாராக இருக்கிறேன். இந்த உலகம் எனக்கு செய்திருக்கிறது. நான் உலகத்திற்கு செய்ய வேண்டாமா என்ற அந்தணர்கள் உண்டு. ஆசை இல்லாதவர்கள் மிகக் குறைவு. அந்தணர்களிலும் ஆசை உள்ளவர்கள் இருந்தார்கள்.

உணவின் மீது ஆசை வைத்த அந்தணர்கள் அதன் பொருட்டே வாழ்ந்தார்கள். ஓயாமல் உண்பது அவர்களுக்கு உவப்பாக இருந்தது. வறுத்தது, அவித்தது, பொடித்தது, ஊற வைத்து உலர வைத்தது, பிறகு பொடித்து பட்சணமாக்கியது என்றெல்லாம் விதம் விதமான பக்குவங்களை அவர்கள் வாய்விட்டு சொன்னார்கள். விரும்பி உண்டார்கள். பிறர் தயாரித்ததை, அல்லது தானே தயார் செய்துகொண்டதை பற்களால் அரைத்து, சுவைத்து, சப்பு கொட்டி உறிஞ்சி சந்தோஷமாக உண்டார்கள். எண்சாண் உடம்பு. இது ஒரு விரல் நீட்டமுள்ள இந்த



பாலகுமாரன்

நாக்கு என்ன ஆட்டம் ஆடுகிறதய்யா. உப்புக்கும், புளிப்புக்கும், இனிப்புக்கும் இந்த அன்னங்கள் தவிக்கின்றன. பொறபொறத்து கிடக்கின்ற பருப்புகளை அரைத்து அரைத்து உண்பது, விழுதாக்கி உள்ளுக்குள் தள்ளுவது என்ன சுகம். உணவு ருசி நாக்கு வரை என்கிறார்கள். இல்லை ஏலக்காயும், முந்திரியும் கலந்த பாயசம் உள்ளுக்குள்ளே போய் வயிற்றுக்குள் அடங்கி அங்கிருந்து சிறு ஏப்பமாக சின்ன தித்திப்பாக வாய்க்கு வரும்போது அப்படியே கிறங்கிப் போகிறது. அரைத்த மாவை புளிக்கவைத்து பதினெட்டு தோசை, பிரட்டி பிரட்டி உண்ண, வத்தல் குழம்பு, துவையல், மிளகுப்பொடி, நெய், சர்க்கரை.... பதினெட்டு போதுமா போதாது. ஆனால், போதும் என்று அரைகுறை மனதோடு எழுந்திருப்பார்கள். உனக்கு பிடிக்குமே என்று கொண்டு வந்திருக்கிறேன் என்று இரண்டு அடுக்கு மூடிக்கொண்டு வந்தார்கள்.

“என்ன அது?”

“ஒன்றில் சீடையும், இன்னொன்றில் முறுக்கும்.”

“அடேய் அடேய் எனக்கு மிகவும் பிடிக்கமே”

எடுத்து மடியில் வைத்துக் கொண்டான்.

“நிதானமாக உண்ணுங்கள்.”

“நிச்சயம் நிச்சயம். உனக்கென்ன வேண்டும்.”

“ஒரு கன்னிகையை மனதில் நினைத்திருக்கிறேன். நீர் போய் விசாரித்து, என்னைப் பற்றிகூறி...”

“அந்தக் கன்னிகை உமக்கே என்று வைத்துக் கொள்ளும்.”

“என்ன சொல்கிறீர்.”

“முறுக்கு கொடுத்துவிட்டீர் அல்லவா. இனி நான் வேலை செய்ய ஆரம்பித்து விடுவேன்.”

“முறுக்கினால் வேலை செய்வீரா?”

“ஆமாம். முறுக்கு ஒரு விசேஷம் அல்லவா” என்று அவர்கள் பேசிக்கொள்வார்கள். அந்தக் கன்னிகையை அவர் எப்பாடுபட்டேனும் அவனிடம் கொண்டுபோய் சேர்ப்பார். அடுத்தமுறை அதிரசமும், பொருள் விளங்கா உருண்டையும் அவன் கொண்டு வந்து தருவான். பொருள் விளங்கா உருண்டை! எதற்கு பொருள் விளங்க வேண்டும். உண்ண ருசியாக இருக்கிறது. அது போதாதா? யாஜர் இந்த வகையைச் சார்ந்தவர்.

உண்ண ஆசை இருப்பவர்களிடம் ஒரு குறை இருக்கும். உணவு பற்றி பேசுவதில் ஒரு கிறக்கம் இருக்கும். உணவுக்காக எவ்வளவு வேண்டுமானாலும் கீழே இறங்கி வருகின்ற ஒரு இளிப்பு இருக்கும். உம்மைப்போல் உண்டா என்ற புகழ்ச்சி இருக்கும். இடுப்பு அசைந்து நிற்பது, அதிகமாக இருக்கும். தயை செய்யும் என்ற ஏக்கமான கண்கள் இருக்கும். யாசகம் கேட்கின்ற பரபரப்பு இருக்கும். பத்து கோடி பசுக்களா, எனக்கே எனக்கா. உம்முடைய விருப்பம் என்ன? அதைச்சொல்லும். அவன் சொன்னதும் அவர் நிமிர்ந்தார்.

“இவ்வளவுதானா, ஏதும் அநியாயமாகக் கேட்டுவிடவில்லையே, அடுத்தவர் மனைவியை கூட்டிக்கொடு என்று சொல்லவில்லையே. மிக நியாயமான கோரிக்கை அல்லவா வைக்கிறார். ஒரு நல்ல பிள்ளை, ஒரு நல்ல மகள் வேண்டும். அவ்வளவுதானே. நிச்சயம் தருகிறேன்.

இந்த உலகம் நம்மால் மட்டுமே ஆனதல்ல ராஜன். அங்கே தேவதைகள் பல பேர் இருக்கிறார்கள். பல்வேறு விதமான சூட்சமர்கள் இருக்கிறார்கள். மரங்களும், புதர்களும், அருவி கரைகளும், ஆற்றங்கரைகளும் தேவதைகள் உலாவுகின்ற இடமாக இருக்கின்றன. அவற்றை அழைத்து வந்து முறைப்படி பூஜை செய்து, யாகத்தில் நிறுத்தி அவர்களை அணுகி கேட்டோம் என்றால் அவர்கள் நிச்சயம் நம்முடைய விருப்பத்தை நிறைவேற்றுவார்கள். மனிதர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற தேவதைகளுக்கு விருப்பம் உண்டு. வார்த்தைகளால் குளிரச் செய்து, பாராட்டி, பலி கொடுத்து அவர்களை ஆனந்தமாக்கி நம்மிடையே கட்டிப் போட வேண்டும். என்னால் கட்ட முடியும். பத்து கோடி பசுக்கள் வந்துவிடுமல்லவா.”

“வந்துவிடும்.”

ஆயிரம் ஆயிரமாய், லட்சம் லட்சமாய் பசுக்கள் சுற்றியுள்ள வனங்களில் வந்து இறங்கின. பசுக்களின் வருகையை கண்டு மற்ற மிருகங்கள் பயந்து ஓடின. பயமே இல்லாத அந்த வனத்தில் பசுக்கள் தாவரங்களை ஆவலுடன் பறித்து உண்டன.

அரசன் சொன்ன சொல்லை காப்பாற்றி விட்டான். அந்தணர்கள் இனி காப்பாற்ற வேண்டும். சௌத்ராமணி என்கிற அந்த யாகத்தில் கௌசபி என்கிற தேவதை உற்பத்தியானாள். யாஜரிடம் கட்டுப்பட்டாள். அப்படி தோன்றுகின்ற அந்த தேவதையை யார் ஹோமம் செய்கின்றார்களோ அவர்களே புருஷனாக நின்று வரித்துக்கொள்வார்கள். அந்த

தேவதையை கட்டுப்படுத்தி பத்தினியாக்கி அவள் மூலம் தாங்கள் வேண்டியதை பெற்றுக் கொள்வார்கள்.

“பிருஷத் பிருஷத்தியே, இந்த அக்னியில் தோன்றிய தேவதையே, உனக்கான அவிஸ் இதோ சுத்தமாக தயாராக இருக்கிறது. இதை எடுத்துக் கொள்வதற்காக வா.” அவர் அந்த அவிஸை மந்திரித்த நைய்வேத்தியத்தை அக்னியில் உள்ள தேவதையிடம் நீட்டினார்.

“நான் உனக்கு பத்தினியாவதில்லை. எனக்கு அந்த எண்ணம் இல்லை. எனவே, இந்த அவிஸை ஏற்க மறுக்கிறேன்.” அந்த தேவதை பயந்தாள்.

“நீ வந்தாலும் வா. நின்றாலும் நில். இந்த அவிஸ் உனக்கு தரப்படும். இதன் மூலம் நான் வேண்டுவன எனக்குக் கிடைக்கும். இதோ இந்த அவிஸ். எடுத்துக்கொள்,” அந்த அக்னிக்கு அவிஸை அவர் சமர்ப்பித்தார். அவிஸ் அக்னி ஏற்றுக்கொண்டது. அந்த தேவதை அதில் உள்ள சத்தை தனக்குள் வாங்கிக்கொண்டாள். அந்த தேவதையின் உதவியால் அந்த அக்னியில் கருத்த நிறமும், சிவந்த உதடும், அகலமான தோள்களும், உறுதியான தொடைகளும், உயரமும், செஞ்சடை போன்ற தலை முடியும், அழுத்தமான புருவமும், கூர்மையான மூக்கும், கையிலே வில்லும், முதுகிலே அம்புறாத் தூணியும், இடுப்பிலே கத்தியும் உடைய ஒரு இளைஞன் தோன்றினான். அக்னியை விட்டு வெளியே வந்து யாஜரை பணிந்தான்.

இவன் பாண்டவருக்கு சிநேகன். துரோணருக்கு யமன். பல போர் களங்கள் காணப் போகின்ற வெல்ல முடியாத வீரன் என்று அசரீரி எழும்பிற்று.

பாஞ்சால மன்னன் குதூகலித்தான். பாஞ்சாலர்கள் சந்தோஷத்தில் ஆரவாரம் செய்தார்கள். மறுபடியும் தேவதை சந்தோஷமாக தன்னிலிருந்து ஒரு அழகிய பெண்ணை உற்பத்தி செய்தது. சுருளான கூந்தலும், கருத்த நிறமும், திடமான உடம்பும், அழகிய உதடும், யௌவனமும், பெரிய ஸ்தனங்களும் கொண்ட ஒரு பெண்மணி யாகத்திலிருந்து வெளிப்பட்டாள்.

“இவள் மிகப்பெரிய பத்தினி. ஐவரை மணக்கப் போகிறவள். இவளால் சத்திரிய குலம் குணமடையும். சத்திரியகுலம் அழிவதற்கு இவள் காரணமாக இருக்கிறாள். அதற்காகவே பிறந்திருக்கிறாள். இந்த யாகம் ஒரு சம்பவம். இவர்கள் பிறப்பு எப்போதோ தீர்மானிக்கப்பட்ட விஷயம். யாஜர் என்கிற உத்தமமான அந்தணரே, உம்முடைய மந்திரங்களுக்கு கட்டுப்பட்டு இவர்களை உற்பத்தி செய்தேன். இவர்களுக்கு வேறு யாரும் தாயாராக வேண்டாம். எனவே, உம்மை நான் புருஷனாக வரிக்கிறேன். என்னை பத்தினியாக நீங்கள் அங்கீகரித்துக்கொள்ளுங்கள். இவர்களுக்கு நானே தாயாக இருக்கிறேன்” என்று அந்த தேவதை சூட்சமமாக யாஜரை வந்தடைந்தது.

யாஜர் அந்த இளைஞனையும், அந்த யுவதியையும் வழி நடத்திக்கொண்டு அரசனிடம் வந்து நின்றார்.

“இவர்கள் இரண்டு பேரையும் உம்மிடம் தத்தம் அளிக்கிறேன் என்று நீர் வார்த்து கொடுத்தார். அவர்கள் இருவரையும் பார்த்து இவரே உமக்கு தந்தை. இவரே உமக்கு உறவு. இந்த அரசனை பணிவீராக” என்று கட்டளையிட்டார். அவர்கள் இருவரும் அந்த அரசனின் காலில் விழுந்து பணிந்து கைகூப்பி நின்றார்கள்.

கண்களில் நீர் சொரிய, உடம்பு உணர்ச்சி வசத்தில் துடிக்க யாஜரை நோக்கி பாஞ்சால அரசன் துருபதன் கைகூப்பினான். இரண்டு குழந்தைகளையும் இழுத்து அணைத்துக் கொண்டான். கருவில் பிறக்காது, சிறு குழந்தைகளாக இருக்காது வாலிப வயதின் விளிம்பில் நிற்கின்ற அந்த இரண்டு குழந்தைகளும் தங்களுடைய ஸ்வீகார தந்தையை அணைத்துக் கொண்டார்கள்.W அவனோடு கைகோர்த்துக் கொண்டார்கள்.

மகாபாரதத்தின் இன்னொரு முக்கியமான விஷயம் அங்கு நடைபெற்றது. மகாபாரதத்தின் காரணம் அங்கு தோன்றிவிட்டது. சத்திரியர்களின் நாசத்திற்கான விஷயம் அங்கு நடந்துவிட்டது. மகாபாரதம் ஒருநாள் செயல் அல்ல. அது வெகுகாலம் முன்பே திட்டமிடப்பட்டு பல்வேறு இடங்களில் பல்வேறு விதமாய் வளர்ந்துகொண்டிருக்கிறது. அதனுடைய ஒரு வளர்ச்சி இதோ இங்கிருக்கிறது. திருஷ்டத்யும்னன் என்கிற இந்த இளைஞனும் திரௌபதி என்கிற இந்தப் பெண்ணும் மகாபாரதத்தின் கதைக்கு காரணமானார்கள். துரோணரின் மரணம் எழுதப்பட்டுவிட்டது.

விதி தன் முடிவை எழுதிவிட்டதை துரோணர் உணர்ந்தார். துருபதனின் மகனான திருஷ்டத்யும்னனை வரவழைத்து அவனுக்கு வித்யாரம்பம் செய்து வைத்து

அவனுக்கு அஸ்திர வித்தையை கற்றுக் கொடுத்தார். அவனும் தன்னுடைய சூட்சம புத்தியால் அவர் கற்றுக்கொடுத்ததைவிட அதிகமான விஷயங்களை அவரிடமிருந்து கிரகித்துக் கொண்டான். விதி என்பதை யாராலும் வெல்ல முடியாது. தன்னுடைய முடிவு எவரால் எழுதப்பட்டால் என்ன? முடிவு வந்தே தீரும். அது இவன் கையால் வந்தது பற்றி எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்ற எண்ணத்தில் துரோணர் இந்தச் செயலைச் செய்தார். தன் சுகம் பற்றி எந்த கருத்தும் இல்லாது பிரமாண்டமான வாழ்க்கை ஓட்டத்தில், தான் ஒரு இலை, சருகு என்று புரிந்துகொண்ட அந்தணர்களும் துரோணரைப்போல உள்ளவர்களும் இருந்தார்கள். வாழ்க்கையில் எந்த எதிர்ப்பும் இன்றி மிதந்தார்கள்.

துரோணர் ஒட்டுமொத்தமாய் தன் வாழ்க்கையைப் பற்றி யோசித்தார். இது வரை என்ன செய்திருக்கிறோம். இதன் விளைவு என்னவாக இருக்கும். எதற்காக இத்தனை விஷயங்கள் நடைபெறுகின்றன என்று சிந்திக்கத் துவங்கினார். தன் மகனுக்கு ஒரு குவளை பால் கொடுப்பதற்காக இத்தனை பெரிய காரியத்தை தான் செய்ய வேண்டியிருந்தது. அஸ்வத்தாமன் அழுதால் அவரால் தாங்க முடியாது. ஆனால், அஸ்வத்தாமனுக்கு ஒப்பாக அவர் அடுத்தபடி நேசிப்பது அர்ஜுனனை. அவனுடைய வீரம் அவரை சிலிர்க்க வைத்தது. அகத்தியர் மூலமாக அவருடைய சிஷ்யரான அக்னியசரிடம் தான் வில்வித்தை கற்றுக்கொண்டதும், அந்த அக்னியிடம் கற்றுக்கொண்டதை அர்ஜுனனிடம் மாற்றிவிட்டதும் அவருக்கு எதனால் என்பது புரிந்தது. என்ன நடக்கும் என்பதை கிரகங்களை வைத்தும், உள்ளுணர்வாலும் அவர் புரிந்துகொண்டார். அவர் அர்ஜுனனுக்கு ஆள் அனுப்பினார். அவனை அருகில் வைத்துக் கொண்டார்.



“இனி சொல்லித் தருவதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை. நான் சொல்லித் தந்ததற்கு அப்பால் நீ இன்னும் பல விஷயங்களை தெரிந்துகொள்ளப் போகிறாய். உனக்கு பரமேஸ்வரன் துணை செய்வான். அர்ஜுனா, இங்கு ஏதோ ஒரு பெரும் செயல் நடந்துகொண்டிருக்கிறது. பூமியினுடைய பாரம் குறையப் போகிறது. பெரும் யுத்தங்கள நடைபெறப் போகின்றன. அதற்காகத்தான் சகலரும் இத்தனை உச்சகட்ட திறமையோடு இருக்கிறார்கள். அதிகம் பேர் அதிக வித்தை தெரிந்து அலைந்துகொண்டிருந்தால் யுத்தம் வராது. வேறு என்ன நடக்கும்? சத்திரியர்கள் துடிப்போடு இருப்பது யுத்தத்திற்கு அறிகுறி. யுத்தம் வரத்தான் செய்யும். உன்னைவிட தனுர்வித்தையில் சிறந்தவன் வேறு எவரும் இல்லை. உன்னால் ஜெயிக்கப்பட முடியாதவன் யாரும் இல்லை-ஒரே ஒருவரைத்தவிர. அவர் கிருஷ்ண பரமாத்மா.

யாதவ குலத்தில் பிறந்து மாமனான கம்சனை அழித்து, காளிங்கனை நர்த்தனம் செய்து கொன்று, பல தீயவர்களை அழித்த கிருஷ்ண பரமாத்மா உனக்கு நண்பராகப் போகிறார். அவரே பிரபஞ்சத்தின் எல்லையற்ற அதிகாரி. அவரே இங்கு இறந்த காலமும், நிகழ்காலமும், எதிர்காலமுமாய் இருப்பவர். அவரே எல்லாமுமானவர். அவரே இந்த பிரபஞ்சம். எனவே, அவரைத்தவிர மற்ற அத்தனை பேரையும் உன் பாணங்களால் நீ எதிர்க்கலாம். ஆனால் அந்த கிருஷ்ண பரமாத்மாவிற்கு நீ உண்மையான நண்பனாக மாற வேண்டும்; மாறுவாய். உன்னைப் பற்றி அவர் மிகுந்த கருணையோடு இருக்கிறார். உன்னுடைய சூட்சம சக்தியான இந்திரன் அவருடன் போய் இங்கு அர்ஜுனன் என்பவன் குந்தியினுடைய கனிஷ்ட குமாரனாக பிறந்திருக்கிறான். அவனுக்கு உங்களுடைய சகாயம் தேவை. அவனை நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்று பணிவாகக் கேட்டுக் கொண்டான்.

கிருஷ்ணமூர்த்தி மிகவும் முகம் மலர்ந்து நான் அர்ஜுனனை, என் அத்தையின் மகனை மிகவும் நேசிக்கிறேன். அவன் இல்லாது நான் இல்லை. என் அத்தனை சொத்துகளும் அவனுக்குச் சொந்தமானவை. அவனால்தான் என்னுடைய காரியங்கள் நிகழப் போகின்றன. அவனை சந்திக்கின்ற நேரத்திற்காக நான் ஆவலாக காத்திருக்கிறேன் என்று பதில் சொன்னாராம். மிக உத்தமமான ஒரு புருஷனை நீ சினேகமாக அடையப் போகிறாய். அவருக்கும், உனக்கும் விளையாட்டாகக் கூட சண்டை வராது. அர்ஜுனா, குந்தியின் மைந்தனே, கிருஷ்ண பரமாத்மாவை சரணடை. அவரை இறுக்க பிடித்துக் கொள். இது உனக்கு நான் வைக்கும் வேண்டுகோள்.”

(தொடரும்)

மகாபாரதம்

16

திருதராஷ்டிரனின்

அதர்மக் கணக்கு





அர்ஜுனன் சட்டென்று தாள்பணிந்து, தன்சிரசை துரோணரின் பாதங்களில் வைத்து, “உங்கள் ஆசி, உங்களுடைய அன்பு, உங்களுடைய வழிகாட்டலை நான் நிச்சயம் மறவேன்” என்று கண்ணீர் மல்க கூறினான்.

“எனக்கு இன்னொரு வாக்கு தர வேண்டும்.”

“தருகிறேன். கேளுங்கள்.”

“ஒருவேளை யுத்தம் வந்தால் எனக்கு எதிரே நின்று போர் செய்ய வேண்டியிருந்தால் தயங்காது, முழுபலத்தோடு நீ என்னோடு யுத்தம் செய்ய வேண்டும். என்னை நீ கொல்ல வேண்டுமென்றாலும் அதை நீ சந்தோஷமாகச் செய்யலாம். நான் ஆனந்தமாக உன்னுடைய பாணங்களை ஏற்பேன். இதை ஒருபோதும் மறுக்காமல் நீ செய்ய வேண்டும்.”

அர்ஜுனன் திகைத்தான். மறுபடியும் அவர் பாதங்களில் தன் சிரம் பதிய வைத்தான்.

“நீங்கள் சொல்லி நான் எதையும் மீறியதில்லை. இதையும் மீறப் போவதில்லை. ஒருவேளை உம்மோடு யுத்தம் என்றால் நான் மிகக் கடுமையாக உம்மை தாக்குவேன்.

அதில் எனக்கு விருப்பம் உண்டு. ஏனெனில், எனக்கு இணையான வில்லாளி நீர் ஒருவரே என்பதை அறிவேன். சமபலம் உடையவரோடு சண்டை போடுவதுபோல சந்தோஷம் ஒருவீரனுக்கு வேறுஎன்ன இருக்க முடியும்!”

அர்ஜுனனும், துரோணரும் இறுகத் தழுவிக் கொண்டார்கள். கன்னத்தோடு கன்னம் வைத்துக் கொண்டார்கள். மெல்லவிலகி ஒருவரையொருவர் ஆழ்ந்து பார்த்தார்கள். பிரபஞ்ச சக்தியில் இரண்டு புள்ளிகள் விவேகத்தோடு ஒன்றையொன்று பற்றி நின்றன. தலைகுனிந்து ஆத்மாவிற்கு ஆத்மா வணக்கம் சொன்னது. மெல்ல பின்னடைந்தது.

துரோணர் எந்தக் காரணமுமின்றி ஆசனத்தில் அமர்ந்து மெல்ல கண்ணீர் விட்டு அழுதார். அர்ஜுனன் தன்னுடைய அரண்மனைக்கு தனித்து தன்தேரில் போனபோது கண்களில் கண்ணீர் வழிந்தது. தூசு பட்ட கண்ணில் நீர் வருவதாக இருக்கும் என்று பார்த்தவர்கள் நினைத்தார்கள். அவரவர் துக்கம் அவரவருக்கு. எல்லாவற்றையும் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.



என்னோடு சண்டையிடு. கொல்வதென்றால் கொல் என்று எந்த குரு சொல்வார்! நிச்சயம் செய்வேன் என்று எந்த சீடன்தான் சொல்வான்! உண்மையான குரு. உண்மையான சீடன். இவர்களுக்கு நடுவேயெல்லாம் இறப்பும், யுத்தமும் இல்லவே இல்லை. எல்லாம் விளையாட்டுத்தான். குருவால் தொடப்பட்டு, இறுக்க தழுவப்பட்டு, உச்சி முகரப்பட்டு, கன்னங்களில் முத்தமிடப்பட்ட அந்தப் பதினாறு வயது இளைஞன் மிகப் பெரிய விவேகியாக இருந்தான். அவனுக்கு அவன் குரு அவன் போகவேண்டிய இடத்தை மிகத் துல்லியமாக சொல்லிக் கொடுத்தார். அவன் மனம் கிருஷ்ண பரமாத்மாவிற்காக ஏங்கத் துவங்கி விட்டது. மகாபாரதத்தின் இன்னொரு திருப்பம் அங்கு ஏற்பட்டது. அவன் நினைக்க நினைக்க அங்கேதுவாரகையில் கிருஷ்ணரும் அவன் நினைப்பாகவே இருந்தார். அடிக்கடி அர்ஜுனா என்று மனதிற்குள் நினைத்தார்.

நான் அரசனாவது எப்போது? என்னால் அரசனாக முடியுமா? எனக்குப்பின் என் வம்சம் இந்த அஸ்தினாபுரத்தை ஆட்சி செய்யுமா. அல்லது அஸ்தினாபுரத்தின் ஒரு ஓரத் தூணாக விளிம்பாக என் குலம் இருக்குமா? சிற்றரசர்களுக்கும் கீழாக அவர்களை வருக வருக என்று சொல்லும் வரவேற்பாளராக அரசாங்கப் பணியாளனாக என்னுடைய குலம் தாழ்ந்து போகுமா? ஏதோ ஒருவிதமாக என் தந்தை திருதராஷ்டிரனுக்கு இந்த அரச பதவி கிடைத்துவிட்டது. கண்கள் இருந்திருந்தால் மிக நியாயமாக அவர்தான் அரசாள வேண்டும். ஆனால், பாண்டுவிற்கு ராஜ்ஜியம் கொடுக்கப்பட்டது. திருதராஷ்டிரன் அங்கஹீனன் என்பதால் மறுக்கப்பட்டது. பாண்டு அரசாண்டதால் பாண்டுவிற்குப் பிறகு பாண்டுவின் குழந்தைகள்தான் அரசாள வேண்டும். அதுதான் விதி. அரசனுடைய மகன்தானே இளவரசன். இளவரசன்தானே அரசன் என்று மக்கள் பேசத் துவங்கியிருந்தார்கள்.

அப்படியொரு கணக்கு போட்டால் அந்தகணக்கின்படி யுதிஷ்டிரர்தான் அடுத்த வாரிசு. அவர்தான் அஸ்தினாபுரத்து வருங்கால மன்னர். வம்ச விஷயங்களை விட்டு விடுவோம். குல ஆசாரங்களை மறந்து விடுவோம். யுதிஷ்டிரரைப்போல ஒரு நல்ல குணமுடைய அரசகுலத்தான் உண்டா. என்ன அமைதி. என்ன அடக்கம். எவ்வளவு கனிவு, பணிவு. அரசன் அஞ்சுகின்றவனாக இருத்தல் எவ்வளவு பெரிய அவஸ்தை. எந்நேரமும் அவன் பாதம் பார்த்தே பேச வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஜனங்களுக்கு எவ்வளவு கடினம். அரசனுடைய முகம் பார்த்து அவன் குறிப்பறிந்து பேசுகின்ற சந்தோஷம்போல் உண்டா.

தருமரிடம் முகம் பார்த்து பேசலாம். விண்ணப்பங்கள் வைக்கலாம். அவர் சொல்வதை மறுத்து அது அவ்விதம் அல்ல. இவ்விதம் என்று எடுத்துச் சொல்லலாம். தருமருக்கு பெரும் காதுகள். அதாவது, பெரிய மனது. காது கொடுத்து கேட்பார். அப்படியா... அப்படியா... என்று விசாரிப்பார். அதேநேரம் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும் பிறவியும் அல்ல. இங்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும்போதே அங்கு வேறு விதமாக செய்தி சேகரிப்பு நடந்துவிடும். எதிரே இருப்பவர் சொல்வது உண்மைதானா என்று

பாலகுமாரன்

சில நிமிடங்களில் அவருக்குத் தெரிந்துவிடும். அதிகாரிகள் தயாராக இருப்பார்கள். அதிகாரிகள் சொன்னதை மனதில் வாங்கி வந்து எதிரே இருப்பவரிடம் குறுக்கு கேள்வி கேட்டு விஷயத்தினுடைய அடிவேரை கால் அரைக்கால் நாழிகையில் கண்டுபிடித்துவிடுவார். பிறகு என்ன? கொண்டுபோன பிரச்னை அத்தோடு தீர்ந்தது. சொன்னவரும் முக்கியமில்லை. கேட்டவரும் முக்கியமில்லை. பிரச்னையை தீர்ப்பதே முக்கியம். யுதிஷ்டிரர் மன்னர் என்றால் பிரச்னையே இல்லை என்றுதான் அர்த்தம்.

> **திரும்பத் திரும்ப யோசிக்கையில் நியாயத்தைவிட துரியோதனின் ஆசையே முக்கியம் என்று அவனுக்குத் தோன்றியது. மகன் மீதுள்ள பாசம் மிக பலமானது. அது எல்லாவிதமான தர்ம நியாயங்களையும் புறக்கணிக்கக் கூடிய வல்லமையுடையது. புறக்கணித்தது.**

“யுதிஷ்டிரரைப் பற்றி மட்டுமே பேசுகிறீர்களே. துரியோதனன் பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?” வேண்டுமென்றே கேள்வி கேட்டவர் சபையை சுற்றிப் பார்த்தார். சபை மௌனமாக இருந்தது.

‘‘அபிப்ராயம் ஏதும் இல்லையா?”

“இருக்கிறது?”

“என்ன?”

“லாயக்கில்லாதவன்” சபை வாய் விட்டு சிரித்தது.

“ஏன் என்ன குறை?”

“நான், எனது என்று இருப்பவர் எப்படி மன்னராக முடியும். நான், எனது என்று இருப்பதில்கூட தவறில்லை. அடுத்தவர்மீது துவேஷம் பாராட்டுவது அழகல்லவே.”

“யார் யார் மீது பாராட்டினார்கள்?” சபை மௌனமாக இருந்தது. அது எல்லோருக்கும் தெரிந்த சங்கதியாகவே இருந்தது.

ஒற்றர்கள் ஜனங்களுடைய அபிப்ராயத்தை துரியோதனனிடம் சொன்னார்கள். துரியோதனன் தவித்தான். மனம் குழம்பினான். யாரிடம் இதை பேசுவது என்று தெரியாமல் முன்னும் பின்னும் அலைந்தான். சுவரைப் பார்த்தும், வெட்ட வெளியைப் பார்த்தும், திரைச்சீலையை பார்த்தும் பேசத் துவங்கினான். வேறு வழியில்லாமல் தந்தையிடம் சகலரையும் வெளியேறச் சொல்லி அவருக்கு அருகே உட்கார்ந்து ரகசியமாக பேசத் துவங்கினான்.

“நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். நான் உங்கள் மகன் துரியோதனன். என்னைப்பற்றி ஏதேனும் சிந்தனை உண்டா. என் எதிர்காலம் பற்றி ஏதேனும் திட்டம் உண்டா. நீங்கள் அந்தகராய் இருப்பது ஒரு சௌகரியம் என்று நினைக்கிறீர்களா. எந்தப் பிரச்னையையும் பெரிதாக எடுத்துத் தலையில் வைத்துக் கொள்ளாமல் பீஷ்மரிடமோ, விதுரரிடமோ, கிருபரிடமோ தூக்கிப் போட்டுவிட்டு இருள் கனவில் மூழ்கிக் கிடப்பது என்பது உங்களுக்கு சௌகரியமாகி விட்டதா. உங்களுக்கு இணையாக கண் தெரியாது கண்களை கட்டிக் கொண்டு என் தாயோடு உட்கார்ந்து கொண்டு தத்வார்த்தம் பேசுகின்ற சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறீரா. உண்ண உணவு, படுக்க படுக்கை, வேலை செய்ய ஆட்கள் போதாதா. சுகம் இதுதானே” குத்திப் பேசினான். மகனுடைய கோபம் திருதராஷ்டிரனுக்குப் புரியவில்லை.

‘‘என்ன வேண்டும் என்று கேள்?”

‘‘எனக்கு என்ன வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?”

‘‘நான் நினைப்பது இருக்கட்டும். உன்னுடைய விஷயம் என்ன? கேள். பேச நீதானே வந்தாய்.”

“ஆஹா. இந்த மடக்கு பேச்சில் எந்த குறையும் இல்லை. ஒரு குறை வந்தால் ஒரு நிறை வந்துவிடுகிறது. உங்களின் கண் பார்வைக்குத்தான் குறைவு. உங்கள் வாய் பேச்சுக்கு எந்த குறையும் இல்லை. அது கொடிகட்டிப் பறக்கிறது.” மறுபடியும் குத்தினான். வேதனை தாங்காது திருதராஷ்டிரன் நெளிந்தான்.

“தயவு செய்து சொல். என்ன வேண்டும்?”

“அடுத்தவருடைய சோற்றுக்கு கையேந்தி நிற்காத நிலைமை வேண்டும்.”

“அப்படி உனக்கில்லையே.”

‘‘இருக்கிறதே. இது பாண்டுவின் ராஜ்ஜியம். உங்களுக்கு ஏதோ ஒரு விதமாக கொடுக்கப்பட்டது. பாண்டுவினுடைய ராஜ்ஜியம் என்பதால் பாண்டுவினுடைய புத்திரர்கள்தான் மறுபடியும் அரசாள வேண்டும். தருமன்தான் இங்கே அரசாள வேண்டும். யுதிஷ்டிரன் என்கிற அந்த தருமன்தான் இங்கு மிகச் சிறந்தவனாகக் கருதப்படுகிறான். அப்படியானால் நான் யார்? எனக்கு என்ன தகுதி? வரிசையாய் உட்கார்ந்து யுதிஷ்டிரன் முகத்தை பார்த்து, நான் உண்ணலாமா என்று கேட்டு அவர் சரி என்று சொல்ல, நான் உண்ணுகின்ற பிச்சைக்காரனாக இருக்க வேண்டுமா. உங்களுக்கு மகனாகப் பிறந்த ஒரே பலன் இதுதானா.”

‘‘உனக்கு என்ன வேண்டும் துரியோதனா?” இடைமறித்து திருதராஷ்டிரன் கேட்டான்.

“எனக்கு இந்த ராஜ்ஜியம் வேண்டும்.

நான் மன்னனாக வேண்டும். அஸ்தினாபுரத்திலிருந்து பஞ்சபாண்டவர்களை அப்புறப்படுத்த வேண்டும்."

"எதற்காக? பாண்டு மிக நல்லவன். உத்தமன் என்று பெயர் பெற்றவன். மக்களும் அதிகாரிகளும், சேனாதிபதிகளும் அவரிடம் மிகுந்த நம்பிக்கையோடும், அன்போடும், விசுவாசத்தோடும் இருந்தார்கள். பாண்டுவின் மகனான யுதிஷ்டிரனிடம் இன்னும் பிரியத்தோடும் இன்னும் அதிக விசுவாசத்தோடும் இருக்கிறார்கள். பாண்டுவை விட பாண்டுவின் புத்திரனான யுதிஷ்டிரன் இன்னும் நேர்மையாகவும், தெளிவாகவும், திடமாகவும் இருக்கிறான். அவனுடைய இனிமையான சொற்கள் ஜனங்களை கவர்ந்து இழுப்பதில் ஆச்சரியமேயில்லை.

காசுக்காக ஆலோசனை சொல்ல வருபவர்கள் மிக உற்சாகமாக இருப்பார்கள். மிக அக்கறையாக இருப்பார்கள். எல்லாவகையிலும் ஆலோசனை கேட்டவரை, அரசனை திருப்தி செய்யும் வகையிலேயே இருப்பார்கள்.

இதற்காக நீ கோபப்படுவானேன். இதை பிச்சை என்று நீ நினைப்பானேன். எல்லோருக்கும் உண்டான பங்குதானே. உனக்குண்டான பங்கு உன்னிடம் வந்து நிற்கிறது. அவ்வளவுதானே. நீ மன்னனாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் என்ன. நம்முடைய முயற்சிகளுக்கு அப்பால்தானே இங்கு விஷயங்கள் நடைபெறுகின்றன. நான் அரசனாவேன் என்று நினைத்தேனா. அரசனானேன். அரசனாக இருப்பதும் இல்லாதிருப்பதும் எனக்கு ஒன்றாகத்தான் இருக்கிறது."

உங்களுக்கு அப்படித்தான் இருக்கும். உங்கள் நிலைமை அப்படி. உங்கள் மனைவியைப்போல நானும் கண்களை கட்டிக்கொண்டு உட்கார்ந்துவிட்டால் எனக்கும் நிம்மதி. ஆனால், நான் அப்படி இருக்க விரும்பவில்லை. நான் ஆட்சி செய்ய வேண்டும். என் சகோதரர்களை நான் காப்பாற்ற வேண்டும். பஞ்ச பாண்டவர்களுடைய பராக்கிரமத்திலிருந்து என் சகோதரர்களை நான் ரட்சிக்க வேண்டும். அப்பா, என்ன செய்வீர்களோ தெரியாது. ஏது செய்வீர்களோ தெரியாது. பாண்டவர்கள் அஸ்தினாபுரம் விட்டு வெளியேற வேண்டும். ஏதாவது உபாயம் செய்யுங்கள். மந்திரிகளிடம் பேசுங்கள்." கால் உதைத்து எழுந்துவிட்டு அவன் அறையை விட்டு வெளியேறினான்.

திருதராஷ்டிரன் குழம்பினான். அவனுக்கு தன் மகனைப் பற்றிய பெருமை இருந்தது. அதேசமயம் நியாய புத்தியும் இருந்தது. திரும்பத் திரும்ப யோசிக்கையில் நியாயத்தைவிட துரியோதனின் ஆசையே முக்கியம் என்று அவனுக்குத் தோன்றியது. மகன் மீதுள்ள பாசம் மிக பலமானது. அது எல்லாவிதமான தர்ம நியாயங்களையும் புறக்கணிக்கக்கூடிய வல்லமையுடையது. புறக்கணித்தது.

துரியோதனன் வருத்தப்படுகிறான் என்றால் தூங்க முடியுமா. பஞ்ச பாண்டவர்கள் விலகினார்கள் என்றால் சிறிது நாளில் மனம் தேறிவிடலாம். துரியோதனன் வேதனைப்படுகிறான் என்றால் உண்ண முடியாது, உறங்க முடியாது, உட்கார முடியாது, நிற்க முடியாது. எனவே துரியோதனனே முக்கியம் என்ற முடிவிற்கு வந்தான். தர்மத்தோடு வாழ்வது என்பது எளிதான காரியம் அல்ல. எல்லோராலும் தர்மத்தோடு வாழ்ந்து விட முடியாது.

உன் மந்திரிகளோடு ஆலோசனை செய். துரியோதனன் சொல்லிவிட்டு போய்விட்டான். எந்த மந்திரியோடு, யாரை நம்புவது, யாரை இங்கு ஆலோசனையை சொல்லிவிட்டு நேரே போய் யுதிஷ்டிரனிடம் உனக்கு எதிராக ஆட்சி நடத்த திருதராஷ்டிரன் முயலுகிறான் என்று சொல்லாமல் இருப்பார். திருதராஷ்டிரன் சகுனியை கொண்டு ஆலோசித்தான். சகுனி தன் மந்திரி கனிஷ்கனை கூட்டிக்கொண்டு வந்தான்.

ராஜ்ய விவகாரங்களில் மிகுந்த தந்திரசாலி என்றும் ஆட்சி மிக்கவன் என்றும், ஆசைப்படுகிறவன் என்றும் புகழ்ச்சியில் விருப்பம் உள்ளவனுமான அந்த அந்தணன் திருதராஷ்டிரனுடைய சபையை வந்தடைந்தான். வந்தவுடனேயே அவனுக்கு பொற்கிழிகள் வழங்கப்பட்டன. அவன் சந்தோஷமாக வாங்கிக் கொண்டான்.

"ஒரு முக்கியமான விஷயம் பற்றி பேச வேண்டியிருக்கிறது. ரகசிய ஆலோசனை செய்ய வேண்டியிருக்கிறது. இன்று இரவு அரண்மனைக்கு வருகிறீரா" கனிஷ்கன் பல் தெரிய சிரித்தான்.

"ரகசிய ஆலோசனை என்கிறீர்களே. இரவு நேரம் வரச்சொல்கிறீர்களே."

"இரவுதானே சரியான நேரம். ரகசியமாக பேசுவதற்கு."

"இல்லை. நீங்கள் ரகசியமாகப் பேசுவதை வேறு யாரேனும் ரகசியமாக கேட்கிறார்களா

என்பதை இரவு நேரத்தில் கண்டுபிடிக்க முடியாது. ரகசிய ஆலோசனை எதுவும் இரவு நேரம் செய்யக்கூடாது. நல்ல அரசன் செய்ய மாட்டான்."

"பிறகு?"

"பகல் நேரமே சரியான நேரம். விடிந்து வெளிச்சம் பரவிய நேரம். உயிரினங்கள் ஆசுவாசமாக இருக்கின்ற நேரம். அந்த நேரத்தில் நாம் ரகசிய ஆலோசனை செய்வோம்."

"நாளை விடிந்த பிறகு வருகிறீர்களா?"

"எங்கு?"

"அரண்மனைக்கு"

"அரண்மனையில் ரகசிய ஆலோசனை செய்யக்கூடாது." மறுபடியும் திருதராஷ்டிரன் திகைத்தான்.

"வேறு எங்கு செய்ய வேண்டும்?"

"ஒரு பரந்த புல்வெளியில், மேல் மாடியில் அல்லது பெரிய நதியினுடைய நடுவே படகில் போய்க்கொண்டு என்றுதான் ரகசிய ஆலோசனை செய்ய முடியுமே தவிர, தூண்கள் நிறைந்த, திரைச்சீலைகள் நிறைந்த, உயர்ந்த மர ஆசனங்கள் நிறைந்த அரசசபையில் ஆலோசனைகள் நடக்கக்கூடாது. சபைதான் நடக்கலாம்."

''நான் கண் இல்லாதவன். புல்வெளிக்கு போய் விடுவோம். காலை நேரத்தில் போர்த்திக்கொண்டு உட்கார்ந்து விடுவோம். தொலைவில் எல்லா திக்கிலும் வீரர்களை நிறுத்தி யாரும் அருகே வராது செய்துவிடுவோம்.'' அப்படியே நடந்தது.

''என்ன வேண்டும் சொல்லுங்கள்'' மறுநாள் காலை அந்த அந்தணன் சொர்ணம் வாங்கிய திருப்தியோடு மேலும் வாங்கும் எண்ணத்தோடு அரசனிடம் பேசினான். காசுக்காக ஆலோசனை சொல்ல வருபவர்கள் மிக உற்சாகமாக இருப்பார்கள். மிக அக்கறையாக இருப்பார்கள். எல்லா வகையிலும் ஆலோசனை கேட்டவரை, அரசனை திருப்தி செய்யும் வகையிலேயே இருப்பார்கள்.

''துரியோதனன் பாண்டவர்களை கண்டு பயப்படுகிறான். பாண்டவர்களை ஒழித்துவிட வேண்டும் என்று நினைக்கிறான். தானே அரசாள வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அவன் ஆசையை நிறைவேற்ற வேண்டியது தகப்பனாகிய என்னுடைய கடமை. ஏதோ ஒருவிதமாக எனக்கு இந்த அரசாட்சி வந்தாலும் இதற்கு உரியவர் யுதிஷ்டிரனே தவிர, துரியோதனன் அல்ல. ஆனால், துரியோதனன் தான் அரசனாக வேண்டும் என்றும், இந்த தேசத்தை விட்டு அவன் எதிரியாக நினைக்கின்ற பஞ்சபாண்டவர்கள் விலகிப்போக வேண்டும் என்றும் நினைக்கிறான். இதற்கான உபாயத்தை நீங்கள் சொல்ல வேண்டும்."

"எதிரி என்று தீர்மானித்த பிறகு விலகி இருக்க வேண்டும் என்று நினைப்பது அவ்வளவு ஆரோக்கியமாக இல்லையே." கனிஷ்கன் மறுபடியும் சிரித்தான். அவன் சிரிப்பில் குரூரம் இருந்தது.

"விலகி இருக்க வேண்டும் என்று நினைக்காமல் வேறு எதை யோசிப்பது."

"கொன்று போட வேண்டும். விலகியிருந்தால் நெருங்கி வரமாட்டார்களா. வலிவு மிகுந்து வர மாட்டார்களா. வந்து அடக்க மாட்டார்களா. எதிரி என்று ஒரு அரசனுக்குத் தோன்றிய பிறகு யார் எதிரியோ அவன் உயிரோடு இருத்தல் கூடாது. ஏதேனும் ஒரு வகையில் அவனை அழித்து ஒழிக்க வேண்டும். அவனை கொன்று போட வேண்டும். அப்போதுதான் நிம்மதியாக தூங்க முடியும்."

"என்ன இவ்வளவு மோசமாக பேசுகிறீர்கள்."

''இல்லை. நான் சத்தியத்தைப்பற்றி பேசுகிறேன். அரசாங்கம் பற்றி பேசுகிறேன் அரசியல் பேசுகிறேன். அரசனைப்பற்றி பேசுகிறேன். ஒரு அரசன் அவனைச்சுற்றி அவனுடைய நண்பர்களைத் தான் வைத்துக்கொள்ள வேண்டும். அடிவருடிகளோடுதான் இருக்க வேண்டும். காசுக்கு ஆசைப்பட்டவர்களை காசும், பெண்களுக்கு ஆசைப்பட்டவரை பெண்களை கொடுத்தும், அதிகாரத்திற்கு ஆசைப்படுகிறவரை அதிகாரம் கொடுத்தும், சொத்து சுகங்களுக்கு ஆசைப்படுபவருக்கு சொத்து சுகங்கள் கொடுத்தும், உணவுக்கும், மதுவிற்கும் ஆசைப்படுபவர்களை அதைக் கொடுத்து திருப்தி செய்தும் தன் அருகே வைத்துக் கொள்ள வேண்டும். இவைகளுக்கு பணியாத எதிரியை அவன் வைத்துக்கொண்டு என்ன புண்ணியம். அவரால் என்ன லாபம். உறக்கமின்மைதான் அவர்களால் ஏற்படும். எனவே, எதிரிகள் என்று நினைத்தவரை எப்படியேனும் கொன்று தீர்ப்பதுதான் ஒரு அரசனுடைய கடமை."

(தொடரும்)

மகாபாரதம்

17

அழுகை நாடகங்கள்!

“எப்படிக் கொல்வது?” திருதராஷ்டிரன் சிந்தனை மிகுந்தவனாகக் கேட்டான்.

“காசுக்கு ஆசைப்படுகின்ற கொலையாளிகள் நிச்சயம் உண்டு. அவர்கள் கொன்று போட்டுவிட்டு நல்ல திரவியத்தோடு தப்பித்து வேறு எங்கேனும் போய் வாழ்வார்கள். எனவே, அப்படிப்பட்டவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். திரவியம் தரவேண்டும். அவர்களை கொலை செய்யச் சொல்ல வேண்டும். அத்தோடு நின்றுவிடக் கூடாது.” கனிஷ்கன் கூர்மையாகக் கூறிவிட்டு உற்றுப் பார்த்தான்.

“பிறகு?”

“யார் கொலை செய்தானோ அவனையும் கொலை செய்துவிட வேண்டும்.”

“ஏன்?”

“நாளை அவன் எதிரியிடம் சிக்கி நமக்கு எதிராகச் சொன்னால்..? எனவே, அவன் கொலை செய்த ஓரிரு தினங்களில் இவன் கொல்லப்பட வேண்டும். தொடர்ந்து இன்னொரு கொலையாளியை நிறைய திரவியம் கொடுத்து அனுப்ப வேண்டும். அவன் கொல்லுகின்ற ஆட்களுடைய திரவியமும், தான் கொல்லப்போகின்ற கொலையாளியின் கை திரவியமும் தனக்கு கிடைக்கும் என்பதில் இந்த நாடகம் விரைவாகவும், திடமாகவும் நடக்கும்.”

“ஆனால், நீங்கள் பேசுகின்ற பிரச்னையில் ஒரு இடர்ப்பாடு இருக்கிறது. ஏற்கனவே முட்டாள்தனமாக பீமனை கொல்ல முயற்சி செய்துவிட்டு பீமன் அதிலிருந்து மீண்டு மிகுந்த திடத்தோடு வெளியே வந்துவிட்டான். ஆகவே, பஞ்சபாண்டவர்கள் எந்த நேரமும் துரியோதனன் தங்களுக்கு கெடுதல் செய்வான் என்ற எண்ணத்தோடு மிகுந்த கோபத்தோடு இருக்கிறார்கள். மாளிகையின் கதவுகளை பூட்டிக்கொண்டு



உறங்குகிறார்கள். வெளியில் தங்க நேர்ந்தால் ஒன்றாக இருக்கிறார்கள். மாறிமாறி காவல் இருக்கிறார்கள். எனவே, அவர்களை இனிமேல் கொல்வது என்பது அவ்வளவு எளிதான விஷயம் அல்ல.”

“வேறு என்னதான் வழி?” திருதராஷ்டிரன் அயற்சியோடு கேட்டான்.

“உங்களிடம்தான் இருக்கிறது. எப்படியாவது பிரித்து வெளிதேசம் அனுப்புங்கள். அவர்கள் இங்கு மரணமடையக் கூடாது.”

“ஏன்?”

“உடனடியாக சந்தேகம் துரியோதனன் மேல்தான் வரும். துரியோதனன் இருக்கும் இடத்திலிருந்து வெகுதூரம் தள்ளி அவர்கள் இறப்பு நடந்தால் யாருக்கும் சந்தேகம் வராது. துரியோதனனும் அவர்கள் இறந்ததற்கு வாய்விட்டு அலறி தரையில் புரண்டு தன்னுடைய துக்கத்தை காட்ட வேண்டும்; நடிக்க வேண்டும். அழுகின்ற உறவுகளைக் கண்டாலும், காவி தரித்தவரை கண்டாலும், அழுகின்ற அரசனைக் கண்டாலும் ஜனங்களுக்கு இரக்கம் வரும். அரசனே அழுகிறான் என்கிறபோது அவர்களும் விம்மி விம்மி அழ ஆரம்பித்து விடுவார்கள். அவர்களை முட்டாளாக்குவது எளிது. இந்தக் காரியம் இங்கு நடக்கக்கூடாது. பாண்டவர்களை தூக்கிக் கொண்டாட வேண்டும். கொஞ்ச வேண்டும். அவர்கள் பிரியும்போது மிகுந்த துக்கத்தில் இருப்பது போல நடிக்க வேண்டும். அவர்களைத் தோளில் சுமந்து போவது போல அன்பை அவர்கள் மீது காட்ட வேண்டும். சமயம் நேரும்போது குடத்தை கல்லில் போட்டு உடைப்பதுபோல அவர்களை கொன்றுபோட வேண்டும்.”

“ஒருவேளை யுதிஷ்டிரன், துரியோதனன் அரசனாவதை ஒத்துக்கொண்டால்...”

“சரணடைந்த எதிரியை நம்பவே கூடாது. எதிர்க்கின்ற எதிரியை கூட கணக்கிட்டு விடலாம். சரணடைந்த எதிரியை கணக்கிடுவது மிகவும் கடினம். அவன் எந்த நேரத்தில் என்ன செய்வான் என்று தெரியாது. சரணடைந்த எதிரி மிக மிக ஆபத்தானவன். சிறிதளவும் இரக்கம் அவன் மீது வைக்கக் கூடாது. எவ்வளவு அழுதாலும் விட்டுவிடக் கூடாது. அழஅழ அவனை கொல்லத்தான் வேண்டும்.”

திருதராஷ்டிரன் வாயடைத்துப் போனான். “என்னதான் செய்யச் சொல்கிறீர்கள்?” கோபத்தில் கத்தினான்.

“நீங்கள் சொன்னதுபோல அவர்களை இந்த இடத்திலிருந்து வெகுதூரத்துக்கு அனுப்பிவிடுங்கள். அடுத்த ஒரு வருடம் அவர்கள் சந்தோஷமாக வாழ வகை செய்ய வேண்டும். அவர்களை கொல்லும் எண்ணத்தை ஒருபொழுதும் ஒரு இடத்திலும் வெளிப்படுத்திவிடக் கூடாது. அவர்களுக்கு ஆதரவாக இருப்பதுபோலவே நடக்க வேண்டும். அதேநேரம் அவர்களை தனியே ஒரு

அரண்மனையில் குடியேற்றுகின்ற ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அந்த அரண்மனையை விசேஷமாக தயார் செய்யவேண்டும். அந்த அரண்மனையில் அவர்கள் குடியேறிய பிறகு அங்கு அவர்கள் சிலகாலம் சௌக்கியமாக வாழ்ந்த பிறகு அந்த அரண்மனையை எரித்துவிட வேண்டும். ஒரு அரச குடும்பத்தின் மரணத்திற்கு கிட்டத்தட்ட ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் காத்திருக்க வேண்டும். மிக இயல்பாக அது நடைபெற வேண்டும்.”

“இன்னும் தெளிவாகச் சொல்லுங்கள்” திருதராஷ்டிரன் கனிஷ்கனின் கைபிடித்து மன்றாடினான். கெட்டவர்கள் உத்தமர்களாக, உபயோகமானவர்களாக தோன்றும் நேரம் மிகக் கெடுதலான நேரம். விதி மிக பயங்கரமாக விளையாடும் நேரம்.

“ஒரே ஒரு அசைவினால் ஒரு கொலை நடக்கக்கூடாது. இவரைத் தூண்டி அவர், அவரைத்தூண்டி அவர், அவரைத்தூண்டி அவர் என்று பல கைகள் மாறி எதிரியை கொல்லுதல் மிகச் சிறந்த உபாயம். ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு காட்டில் புலி, எலி, கீரிப்பிள்ளை, செந்நாய் போன்ற மிருகங்களோடு ஒரு நரி, சிநேகமாக வசித்து வந்தது. அந்த காட்டில் மிகுந்த வலிமையுடைய ஒரு மான் அரசன் இருந்தது. ஆனால், அந்த மானை தின்ன எல்லோருக்கும் ஆசை இருந்தது. ஆனால், அதன் அருகில்கூட போக முடியவில்லை. அப்பொழுது நரி ஒரு தந்திரம் செய்தது. தூங்குகின்ற மானின் காலில் எலி மிருதுவாக முன்னேறி கால்களை கடித்துவிட வேண்டும். கடிபட்ட மானை புலி அடித்து கொல்ல வேண்டும். புலி அடித்து கொன்ற மானை நாமெல்லோரும் பங்கிட்டு உண்போம் என்று சொல்ல, அவைகள் சந்தோஷமாக துள்ளிக் குதித்தன. மான் தூங்கிக்கொண்டிருக்கும்போது எலி மானின் கால்களை கடித்துவிட, விடிந்ததும் புலி அதை துரத்திக்கொண்டு ஓடிற்று. எலியினால் கால்கள் கடிக்கப்பட்ட மானால் வேகமாக ஓட முடியாமல் புலியால் கொல்லப்பட்டது. ‘நல்லது, மிக தீரமாக சண்டையிட்டீர். உடம்பெல்லாம் மண்ணும், சேருமாக இருக்கிறது. போய் ஸ்நானம் செய்து வாரும். நிதானமாக இந்த மான் கறியை உண்ணலாம்’ என்று நரி சொல்ல, புலி ஸ்நானம் செய்யப் போயிற்று. தீர்க்கமாக நீராடி திரும்பி வந்தது. விசனத்தோடு இருக்கின்ற நரியைப் பார்த்து ‘ஏன் அமர்ந்திருக்கிறீர்? வாரும் சாப்பிடலாம்,’ என்று அழைத்தது. ‘எனக்கு பிடிக்கவில்லை,’ என்று நரி நடித்தது. ‘ஏன்?’ புலி கேட்டது. ‘மானைக் கடித்த எலி மிக கம்பீரமாக பேசுகிறது. ஒரு மானை வேட்டையாட இந்த புலிக்கு துப்பில்லை. நான் மானின் காலைக் கடித்து பலவீனப்படுத்திய பிறகு அந்த மானை வேட்டையாடுகிறது என்கிறது,’ என்றது நரி. ‘தேவையில்லை. எனக்கு இந்த மான் தேவையில்லை. எனக்கு வலிமை இருக்கிறது. வேறு எங்கேனும், ஏதேனும் வேட்டையாடி நான் இன்புறுவேன்,’ என்று சொல்லி புலி அந்த இடத்தை விட்டு ஓடிற்று.

இப்போது எலி அங்கே வர, ‘எலியே இந்த கீரிப்பிள்ளை தந்திரமாக பேசுகிறது. நீ கடித்ததால் இந்த மான் மாமிசம் விஷமாகி விட்டதாம். அதனால் இதை தின்னப்போவதில்லையாம். உன்னைத் தின்னப் போகிறதாம். தயவு செய்து எங்காவது ஓடி ஒளிந்துகொள். உன்னை கீரிப்பிள்ளை கொன்றுவிடும்,’ என்று சொல்ல, எலி பயந்து ஓடிற்று.

பிறகு செந்நாய் அங்கு வந்தது. ‘புலி எங்கே?’ என்று கேட்டது. ‘தன் மனைவியை அழைத்துவரப் போயிருக்கிறது. உன்னைக் கொல்லப் போகிறதாம். உனக்கு எதற்கு பங்கு தரவேண்டும் என்று கேட்கிறது. தன் மனைவியோடு உன்னை கொல்வதற்காக அது வந்து கொண்டிருக்கிறது. உன்னுடைய உசிதப்படி செய்,’ என்று செந்நாய்க்கும் சொல்ல, செந்நாய் பயந்து அந்தக் காட்டை விட்டு ஓடிற்று. கீரிப்பிள்ளை மட்டும் எதிரே நிற்க, ‘என்னுடைய புஜபலத்தினால் புலியையும், செந்நாயையும், எலியையும் துரத்திவிட்டேன். முடிந்தால் என்னோடு சண்டை போட்டு விட்டு இந்த மாமிசத்தை எடுத்துக் கொள்,’ என்று கீரியிடம் வம்புக்கு போக, புலியையே துரத்திக்கொன்ற நரியிடம் தன் வேலை பலிக்காது என்று எண்ணி அந்த காட்டை விட்டு ஓடிற்று. அந்த மானை நரி நிதானமாக பல நாட்களுக்கு வைத்திருந்து உண்டு சந்தோஷமாகியது.

அரசனுடைய நண்பர்கள் ஒருவருக்கொருவர் நண்பர்களாகி விடக்கூடாது. இது மிக முக்கியம். அரசனுக்குத்தான் நண்பர்களே தவிர, நண்பர்கள் நண்பர்களாக கைகோர்த்துக் கொள்ளக்கூடாது. கைகோர்த்துக் கொண்ட நண்பர்கள் எதிரிகளாவது எளிது.”

“நீங்கள் சொல்லுகின்ற கதைகள் எனக்கு புரிகின்றன. ஆனால், என்ன செய்ய வேண்டும் என்பதை தெளிவாகச் சொல்லுங்கள்.”

“முதல் விஷயம் பாண்டவர்கள் இங்கிருந்து முழுமனதோடு வேறுதேசத்திற்கு உல்லாசமாக வசிப்பதற்கு பிரிந்து போக வேண்டும். அது உங்கள் கட்டளையால் நடந்தால் அதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிற

தென்று பஞ்சபாண்டவர்களும், மற்ற மந்திரிகளும், பொதுமக்களும் எண்ணத் துவங்கி விடுவார்கள். இது உங்களுடைய விருப்பம் அல்ல; உங்களுடைய மந்திரிமார்களுடைய விருப்பம், அவர்களுடைய ஆலோசனை என்பதாகவே ஆரம்பிக்க வேண்டும்.”

“உங்கள் மந்திரிமார்களுக்கு, சேனாதிபதிகளுக்கு வானராவதம் பற்றி உயர்ந்து பேச, பொருட்கள் கொடுங்கள். தூண்டிவிடுங்கள். வானராவதம் என்கிற நகரம் அஸ்தினாபுரத்திலிருந்து நல்ல தொலைவில் இருக்கிறது. இரண்டு நாள் பயணப்பட வேண்டியிருக்கிறது. வானராவதம் போல சுகமான இடம் உலகத்தில் வேறு எதுவும் இல்லை என்று உங்கள் மந்திரிகளை பேசச் சொல்லுங்கள். யார் காசு கொடுத்தால் பேசுவானோ, யார் கறவை கொடுத்தால் பேசுவானோ, யார் உணவையும் கொடுத்தால் பேசுவானோ அவனை பேசச் செய்யுங்கள். அவன் மூலம் மற்றவர்கள் பேசட்டும்.

அப்போது அவர்களுடைய விஷயத்தை செவிமடுப்பதுபோல, அவர்கள் பேசுவதை தலையசைத்து கேட்பதுபோல, நன்று நன்று என்று அவர் சொன்னதை தெரிவிப்பது போல தெரிவித்து அந்த செய்கையின் மூலம் பாண்டவர்களை யோசிக்க வையுங்கள். வானராவதம் போனால் என்ன என்று.”

“சரணடைந்த எதிரியை நம்பவே கூடாது. எதிர்க்கின்ற எதிரியை கூட கணக்கிட்டு விடலாம். சரணடைந்த எதிரியை கணக்கிடுவது மிகவும் கடினம். அவன் எந்த நேரத்தில் என்ன செய்வான் என்று தெரியாது. சரணடைந்த எதிரி மிக மிக ஆபத்தானவன்.”

“சுற்றி வளைத்து மூக்கை தொடுவது போல் இருக்கிறதே.”

“நேராக தொட முடியாது. தொட்டால் சந்தேகத்திற்கு உள்ளாவீர்கள்.”

“வானராவதம் மிகச் சிறந்த பூமி” என்று யாரோ ஒருவர் ஆரம்பிக்க, அதை நான்கு பேர் வழிமொழிய, பிறகு பலபேர் பேச, சபையில் எப்போதுமே அந்த ஊர் பற்றிய சிறப்பு பேச்சாக இருந்தது. பாண்டவர்கள் காதுக்கும் வந்தது.

“அவ்வளவு அற்புதமான இடமா அது. அதைப்பற்றி இப்போதுதானே கேள்விப்படுகிறேன். இதற்கு முன்பு கேள்விப்படவில்லையே.” பஞ்சபாண்டவர்கள் சந்தேகத்தோடு விசாரித்தார்கள்.

‘‘நீங்கள் கேட்கவில்லை. அதனால் சொல்லவில்லை. பூமியில் எத்தனையோ பகுதிகள் அற்புதமானவையாக இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் பற்றி நமக்கு தெரியுமா என்ன?’’ என்பது போல மந்திரிகள் பேசினார்கள். பஞ்ச பாண்டவர்கள் தலையசைத்தார்கள்.

“நீங்கள் வேண்டுமென்றால் மற்றவர்கள் பேசுவதை கேட்பதற்கு பதிலாக நீங்களே போய் பாருங்களேன். இன்னும் வேறு ஏதாவது ஊர்கள் இருக்கிறதா என்பதையும் தெரிந்துகொண்டு வாருங்களேன்” என்று திருதராஷ்டிரன் நேரம் பார்த்து கட்டளையிட்டான். அவர் கட்டளையை யுதிஷ்டரரால் மீறமுடியவில்லை. அவர் சொன்னார் என்பதற்காகவே பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ போய்த்தான் தீரவேண்டும் என்ற நிலைக்கு பஞ்சபாண்டவர்கள் தள்ளப்பட்டார்கள்.

“நீங்களெல்லாம் போய் விட்டால், பிறகு நான் என்ன செய்வேன்? நானும் வருவேன்” என்று துரியோதனன் பொய்யாக அடம் பிடித்தான்.

“நீ சும்மா இருடா. அவர்கள் போய் வரட்டும். இங்கு யார் ராஜ்ய பரிபாலனம் செய்வது” என்று இங்கு துரியோதனன் இருப்பது அவசியம் என்பதாக திருதராஷ்டிரன் நடித்தான். பஞ்சபாண்டவர்கள் பிரிவதை சகிக்கவொண்ணாதவன்போல துரியோதனன் கண்ணீர்விட்டு நின்றான். அவர்கள் போனதும் சந்தோஷத்தால் குதித்தான்.

தூண்டிய மந்திரிகளுக்கு பெரும் பொருள் அளித்தான். எப்பொழுதுமே என்னோடு இரும். நான் உங்களை கவனித்துக் கொள்கிறேன். நீர் என் சுகத்தை முக்கியமாகக் கருதும். நான் உங்கள் சுகத்தை முக்கியமாகக் கருதுகிறேன் என்று பரஸ்பரம் ஒப்பந்தம் செய்து கொண்டான். அதிகாரிகளை தன் வயப்படுத்தல்தான் ஆட்சியாளனின் முதல் தந்திரமாக இருக்க வேண்டும்.

எல்லா அரசாங்கத்திலும் வாங்கத் தகுந்த அதிகாரிகளே அதிகம். வாங்க முடியாத அதிகாரிகளை ஆட்சியாளன் அப்புறப்படுத்திவிட வேண்டும். அல்லது குற்றம் சுமத்தி வேறு இடத்திற்கு அனுப்பிவிட வேண்டும்.

வாரனாவதம் போய் சௌக்கியமாக அவர்கள் வாழும்போது வாரனாவதத்தின் ஏதேனும் ஒரு மூலையில் ஒரு பெரிய அரக்கு மாளிகை கட்டப்பட வேண்டும். சணலால், குங்கிலியத்தால், பிரம்புகளால், மூங்கில்களால், கற்பூர தைலத்தால், நெய்யால், மெழுகால் தூண்களும், உத்திர கட்டைகளும், மேற்கூரைகளும், சுவர்களும், தரைகளும் செய்யப்பட வேண்டும். காற்று வீசுகின்ற

மேடான பகுதியில் அது இருக்க வேண்டும். நீர் சுமந்து போவதற்கு வாட்டம் இல்லாதபடி தனித்தே கிடக்க வேண்டும். அம்மாதிரியான மாளிகையை நிதானமாக மெல்ல மெல்ல எழுப்பிக் கொண்டிருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குப் பிறகு பஞ்ச பாண்டவர்களை அதில் குடியேற்றிவிட வேண்டும். சில மாதங்களுக்குப் பிறகு அதை தீயிட்டு கொளுத்திவிட வேண்டும். பஞ்ச பாண்டவர்கள் தீயில் கருகி இறந்தார்கள் என்று நம்ப வைக்க வேண்டும். துரியோதனனும், நீங்களும் விம்மி விம்மி அழ வேண்டும். சகுனியின் மந்திரி கனிஷ்கன் தன்னுடைய திட்டத்தை வெளிப்படுத்தினான். அவனுக்கு அவன் எதிர்பார்த்ததைவிட மிக அதிகமான சன்மானங்கள் வழங்கப்பட்டன.

“யார் இதைச் செய்வார்கள்?”

“புரசேனன் என்பவன் இம்மாதிரியான அரக்கு மாளிகை கட்டுவதில் நிபுணன்” என்று கனிஷ்கன் தெரிவித்தான். துரியோதனன் அவையில் என்ன நடக்கிறது என்பதை இடையறாது விதுரருக்கு வந்து சொல்ல ஒற்றர்கள் இருந்தார்கள். துரியோதனனும், திருதராஷ்டிரனும் தனித்து பேசியதும் அவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டதும், சகுனி வந்ததும், சகுனியின் மந்திரியான கனிஷ்கன் வந்ததும் கனிஷ்கனுக்குப் பிறகு புரசேனன் என்பவன் அங்கு வந்ததும் சன்மானம் பெற்றதும், எல்லா மந்திரிகளும் வாரணாவதம் பற்றி பேசியதும், பேசிய மந்திரிகளுக்கெல்லாம் செல்வம் கிடைத்ததும் விதுரரால் எண்ணிப் பார்க்கப்பட்டன. இது பெரிய சூழ்ச்சி என்பது அவருக்கு எளிதில் புலப்பட்டு போயிற்று. ஆனால், எப்படி தடுப்பது என்பது அவருக்கு தெரியவில்லை.

தருமர் விடைபெற வந்தபோது அவர் அணைத்துக்கொண்டு பேசினார்.

“நல்லபடியாக போய் வாருங்கள். சந்தோஷமான இடம் அது. இவர்கள் எல்லோரும் திடீர் என்று இப்போதுதான் இவ்வளவு சிலாக்கியமாக பேசுகிறார்கள். இதுவரை ஏன் பேசவில்லை என்பது தெரியவில்லை. ஆனால், நெருப்பில் மாட்டிக்கொண்ட எலி உடனடியாக சுரங்கம் தோண்டி வெளியே போய்விடும். விட்டு பிரிவது என்பது வருத்தமான விஷயம்தான். அதனால் என்ன தனித்து வாழ கற்றுக்கொள்ள வேண்டும். களை அகற்றினால் வழி தெரிந்து விட்டு போகிறது. வழி கண்டுபிடிப்பதா கடினம்? அதற்கு முன்பு அடிப்படையான வான சாஸ்திரத்தை எல்லோருமே கற்றுக் கொள்ளுங்கள். நான் உங்களோடு வரவேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் எங்கிருந்தாலும் என்னுடைய ஆட்கள் தங்கள் இருப்பை சூட்சமமாக தெரிவிப்பார்கள். எப்போதும் தொடர்பில் இருப்பேன்” என்று விதுரர் சொல்ல, முன்னும் பின்னுமாக விதுரர் பேசியது உற்று கவனித்து, ‘புரிகிறது’ என்று யுதிஷ்டிரர் பதில் சொன்னார். துரியோதனனும், திருதராஷ்டிரனும், ஜனங்களும் வருத்தப்பட அவர்கள் வானராவதம் பிரிந்து போனார்கள்.

“கிட்டத்தட்ட வாரணாவதத்திற்கு துரத்தப்படுகிறோமோ?” அர்ஜுனன் ஆவலோடு யுதிஷ்டிரனை பார்த்துக் கேட்டான்.

“ஆமாம் என்று வைத்துக் கொள்ளேன். மறுக்கவா முடியும்? மறுத்தால் நன்றாகவா இருக்கும். போய் பார்த்துவிட்டு வாயேன் என்று பெரிய தந்தை சொன்ன பிறகு போகத்தான் வேண்டும். அதுவும் தவிர, அஸ்தினாபுரம் நெரிசலாகத்தான் இருக்கிறது. கொஞ்சம் விலகி இருப்பதுதான் நல்லது என்று தோன்றுகிறது. உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருக்கிறதா என்று பீமனையும், அர்ஜுனனையும் பார்த்து கேட்டார்.

“இல்லவே இல்லை. புதிய இடம் நன்றாகத்தான் இருக்கிறது. அம்மாவிற்கு எப்படி இருக்கும் என்றுதான் தெரியவில்லை.”

“அம்மா நம்மைவிட்டு எங்கும் போக மாட்டாள். அவளுக்கு அரண்மனையில் மற்ற அரசிகளோடு இருக்க வேண்டும் என்ற எண்ணம் வந்ததேயில்லை. எப்போதும் நம்மோடேயே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை உடையவள். அம்மாவைவிட்டு வரவேண்டும் என்று சொன்னால் நமக்குதான் பெரிய அவஸ்தையாகிவிடும்” என்று யுதிஷ்டிரர் சொல்ல, அவர்கள் எல்லோரும் ஆமாம் என்றார்கள். குழந்தைகள் கூடி கூடிப் பேசுவதை வேறொரு யானையிலிருந்து பார்த்தபடி குந்தி பயணப்பட்டாள்.

மந்திரிகள் சொன்னதைவிட வாரணாவதம் மிக அற்புதமாக இருந்தது. அருவிகளும், நதிகளும், பெரிய குளங்களும், அழகான வீடுகளும், சுத்தமான தோட்டங்களும், அடர்ந்த தோப்புகளும் கொண்டதாய் இருந்தது. பசுக்கள் நிறைந்திருந்தன. எல்லா வர்ணத்தாரும் ஒருவரை ஒருவர் சார்ந்து செளக்கியமாக இருந்தார்கள்.

அரசகுமாரர்கள் யாரும் இந்த நகரத்திற்கு வந்ததேயில்லை. ‘உங்கள் வரவு நல்வரவாகுக’ என்று மிகுந்த சந்தோஷத்தோடு அந்த மக்கள் பொங்கி பொங்கி வரவேற்றார்கள். அந்த அங்கீகாரம், அந்த கெளரவம், அந்த வரவேற்பு பாண்டவர்களுக்கு பிடித்திருந்தது. விலகி ஏதோ மாடத்தில் நின்று அரசகுமாரர்களாக வாழ்வதற்கு பதில் இப்போது ஒரு சிறிய நகரத்தில் மக்களோடு மக்களாக வாழ்வது சந்தோஷமாக இருந்தது. மக்களை புரிந்துகொள்ள பஞ்சபாண்டவர்களுக்கு அது ஒரு நல்ல பயிற்சி கூடமாக இருந்தது. அரசர்களை புரிந்துகொள்ள அந்த

நகரத்தாருக்கு இது ஒரு வாய்ப்பாக இருந்தது. ஜலத்தை ஜலம் சூழ்ந்து கொண்டதுபோல, அந்த மக்கள் அரசகுமாரர்களை சூழ்ந்து கொண்டார்கள். அந்த அரசகுமாரர்கள் தங்கள் பொய்யான கம்பீரங்களையெல்லாம் விட்டுவிட்டு மக்களோடு மக்களாக மாறினார்கள்.

நகரத்திலிருந்து தள்ளி சற்று மேடான ஒரு பகுதியில் எந்நேரமும் சுழற்காற்று எழும்பு கின்ற ஒரு பகுதியில் புரசேனன் தன்னுடைய கட்டிட வேலையை ஆரம்பித்தான். அவனுக்கு ஒரு வேடர்குலப் பெண் கட்டிடம் கட்ட உதவியாக இருந்தாள். அந்த வேடுவப் பெண்ணுக்கு ஐந்து குமாரர்கள் இருந்தார்கள். அவர்களும் அங்கு சுற்றி சுற்றி வந்தார்கள்.

அரக்கு மாளிகை தயாரானதும் அவர்களுக்கென்று தனித்த இடம் கட்டப்பட்டிருக்கிறது என்றும் அரசகுமாரர்கள் ஜனங்களுக்கு நடுவே புழங்குவது அத்தனை உயர்வு அல்ல என்றும் புரசேனன் சொன்னான். அவர்களை அரக்கு மாளிகையில் குடி வைத்தான். ஒவ்வொரு இடமும் தீப்பற்றக்கூடிய இடமாக இருப்பதை யுதிஷ்டிரரும், பீமனும், அர்ஜுனனும் புரிந்து கொண்டார்கள்.

அப்போது கனகன் என்பவன் யுதிஷ்டரிடம் வந்து வணங்கி நின்றான். ‘காடுகளில் நெருப்பு ஏற்பட்டால் எலிகள் வளைகளில் புகுந்து தப்பித்துவிடும்,’ என்று சொன்னான். யுதிஷ்டிரர் திடுக்கிட்டு பார்த்தார். ‘என்னை விதுரர் அனுப்பினார். இந்த விஷயத்தை உங்களிடம் சொல்லச் சொன்னார். நான் சுரங்கம் கட்டுபவன். இந்த மாளிகைக்கு அடியிலே சுரங்கம் ஏற்படுத்தி வெளியே வெகு தொலைவில் சேர்வதற்குண்டான காரியத்தை செய்ய வல்லவன். எலி எப்படி தப்பிக்குமோ அப்படி. ஒருவேளை இந்த மாளிகை தீப்பிடித்துக்கொண்டால் அந்தச் சுரங்கத்தின் வழியாக நீங்கள் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் விதுரர் சொல்லச் சொன்னார். அதுமட்டுமல்ல. கங்கை கரையில் உங்களுக்கு வேறு சில ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அவையும் உங்களுக்கு நிதானமாக தெரிய வரும்” என்றான்.

அந்த வேடர் குலமகள் புரசேனனால் பராமரிக்கப்பட்டு, அவனால் வேண்டுமென்ற தானியங்கள் தரப்பட்டு அந்த தானியங்களுக்காக, அந்த உணவிற்காக ஆசைப்பட்டு அவனுக்குத் துணையாக இருந்தாள். குந்திக்கு உதவி செய்பவளாய் பஞ்சபாண்டவர்களின் துணிகளை துவைப்பவளாய், அந்த வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்பவளாய் அவள், தன் குழந்தைகளோடு வலம் வந்தாள். எதுவும் காரணம் இன்றி நடைபெறவில்லை என்ற தெளிவு யுதிஷ்டிரருக்கு இருந்தது. இவள் வருகைக்கும் முன்பே அரக்கு மாளிகைக்கு தான் தீ வைத்து விட வேண்டும் என்று தீர்மானித்தார்.

மதுவால் மயங்கி வேடர்குல மகளும், அவள் குழந்தைகளும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கும்போது புரசேனன் வீட்டு முன் அறையில் படுத்து உறங்கியபோது விடியும் வேளையில், குளிர்ந்த இருட்டில் வீட்டு வாசலுக்கு பீமசேனன் நெருப்பு வைத்தான். எந்த இடங்களெல்லாம் ஒட்டு மொத்தமாக தீ பற்றிக் கொள்ளுமோ, வேகமாக தீ ஜ்வாலை எழுமோ அந்த இடங்களிலெல்லாம் நெருப்பு வைத்தான். வீடு தகதகத்து எரிந்ததும் அவன் சுரங்கத்தின் அறைக் கதவை திறந்தான். மூடிக்கொண்டான்.

குந்தியை கழுத்திலும், நகுல சகாதேவர்களை அக்குளிலும் இடுக்கிக் கொண்டான். யுதிஷ்டிரரையும், அர்ஜுனனையும் கை பிடித்துக் கொண்டான். அந்த இருட்டிலும் தட்டுத்தடுமாறி அவர்களை கிட்டத்தட்ட சுமந்தபடி பீமன் சுரங்கத்தின் வழியே நடந்தான். ஆரம்பத்தில் இடுக்காக இருந்த அந்த வழி பிற்பாடு விசாலமாயிற்று. அவர்கள் மூவரும் வேகமாக ஓடினார்கள். குந்தி இறுக்கமாக பிள்ளையின் கழுத்தை பிடித்துக் கொண்டாள். நகுல சகாதேவர்கள் உடும்புப் பிடியாய் பீமன் தோளை பிடித்து தொங்கினார்கள். இன்னும் சுரங்கம் விசாலமாயிற்று. வெளிக்காற்று உள்ளே வந்தது.



கங்கைக் கரை ஓரம் புதருக்கு நடுவே திடீரென்று எழுந்தார்கள். பிறகு கங்கைக் கரை ஓரமாக பீமன் ஓடினான். இப்போது ஒரு கப்பலோட்டி எதிர்பட்டான். தீப்பந்த ஒளியில் அவர்கள் வருவதைக் கண்டு தீப்பந்தத்தை ஆட்டினான். ஆடுகின்ற தீப்பந்தம் நோக்கி பீமன் ஓடினான். அங்குள்ள அந்த

கப்பல் மாலுமி தலைகுனிந்து வணக்கம் தெரிவித்தான்.

“நான் விதுரருடைய வேலை ஆள். அவருடைய சாரணன். உங்களுக்கொரு செய்தி சொல்ல விரும்புகின்றேன். வனத்தில் நெருப்பு சூழும்போது எலிவளை தோண்டி போகும்போது நட்சத்திரங்களை புரிந்து கொண்டால் இருட்டிலும் வழி தெரிவது எளிதாகும். எனவே நட்சத்திரங்களைப் பற்றி பாடங்களை படியுங்கள்” என்று சொன்னான். விதுரரின் வார்த்தையாக அவை இருப்பதைக் கண்டு அவன் விதுரரின் ஆள் என்பதை புரிந்து கொண்டார்கள்.

அவன் ஒரு நீர் இடுக்கிலிருந்து பெரிய கப்பலை வெளியே கொண்டு வந்தான். பாய் மரத்தை விரித்து விட்டான். எந்திரங்களை சுழற்றினான். ஏறிக்கொள்ளச் சொன்னான். ஒரு சிறிய வீடு போல இருந்த அந்த பாய் மர படகை அவன் மிக வேகமாக கங்கையில் செலுத்தினான். கங்கையின் அலைகள் அடித்து படகு பாய்மரத்தின் வேகத்தாலும், எந்திரத்தின் சுழற்சியாலும் மிக வேகமாக கங்கையோடு கலந்து எதிர்பக்க கரையில் ஒதுங்கியது.

> அஸ்தினாபுரம் திரும்பிப்போய் அடித்துக் கொன்றுவிடலாமா என்ற ஆத்திரம் வந்தது. ஆனால், யுதிஷ்டிரர் ஒத்துக்கொள்ள மாட்டார். ஏதோ ஒரு முக்கியமான காரியத்திற்காக இப்படி பிரிந்து தொலை தூரம் ஓடுகிறோம் என்று மனதை சமாதானம் செய்து கொண்டான்.

“உங்கள் அரக்கு மாளிகையிலிருந்து நீங்கள் வெகு தொலைவில் வந்துவிடவில்லை. அருகேதான் இருக்கிறீர்கள். எனவே, இந்த தென்கரையில் இறங்கி வெகுதூரம் நடந்து போய்விடுவதுதான் உங்களுக்கு நல்லது. உடனடியாக எவ்வளவு முடியுமோ அத்தனை தொலைவு தென்திசை நோக்கிப் போய்விடுங்கள். அதோ, அந்த நட்சத்திரம் உங்களுக்கு வழிகாட்டும்.”

அவன் சில நட்சத்திரங்களை சுட்டிக் காட்டினான். பீமன் புரிந்து கொண்டான். அர்ஜுனனையும், யுதிஷ்டிரரையும் கையில் பிடித்த வண்ணம், தாயை கழுத்திலும், நகுல சகாதேவர்களை தோள்களிலும் தூக்கிய வண்ணம் அவன் மரங்களை நெஞ்சால் முறித்துக்கொண்டு மிக வேகமாக அந்த காடுகளுடே ஓடினான். புதிதாக வழியை அவன் கண்டுபிடித்தான். அவன் போன வழியெல்லாம் ஒரு யானை போன வழியாக இருந்தது.

குந்தி பயத்தில் தவித்தாள். அர்ஜுனனும், யுதிஷ்டிரரும் அவளை சிறந்த வார்த்தையால் தேற்றினார்கள். தங்களுக்கு ஏன் இந்த நிலைமை? ஓடிக்கொண்டிருந்த பீமனுக்கும் துக்கமான சிந்தனை ஏற்பட்டது. கோபம் வந்தது. அஸ்தினாபுரம் திரும்பிப்போய் அடித்துக் கொன்றுவிடலாமா என்ற ஆத்திரம் வந்தது. ஆனால், யுதிஷ்டிரர் ஒத்துக் கொள்ள மாட்டார். ஏதோ ஒரு முக்கியமான காரியத்திற்காக இப்படி பிரிந்து தொலை தூரம் ஓடுகிறோம் என்று மனதை சமாதானம் செய்து கொண்டான்.

வாரனாவதத்தில் அழுகை நாடகங்கள் செவ்வனே நடைபெற்றன. ஒரு பெண்ணுடைய எலும்புக் கூடும், ஐந்து இளைஞர்களுடைய எலும்புக்கூடு இருப்பதை நான்கு நாட்களுக்குப் பிறகு தீ அணைந்தபிறகு உள்ளுக்குள்ளேபோய் கண்டுபிடித்தார்கள். அப்போதும் தாங்க முடியாத வெப்பம் இருந்தது. எல்லோரும் இறந்து போனார்களே என்று தலையில் அடித்துக்கொண்டு அழுதார்கள். அங்கு துக்க நாடகம் திட்டமிட்டபடி மிக அழகாக நடைபெற்றது. விம்மி விம்மி துரியோதனன் அழ, புரண்டு புரண்டு திருதராஷ்டிரன் அழ, மந்திரிகள் அழ, சேனாதிபதிகள் அழ, மற்ற சகோதரர்களும் அழ, விதுரரும், பீஷ்மரும் துக்கப்பட்டு நிற்க, அவர்களையெல்லாம் கண்டு ஜனங்களும் நடந்தது விபத்துதான் என்ற எண்ணத்தில் அழத் துவங்கினார்கள். யாருடைய சூதும் இல்லை என்று நம்பத்துவங்கினார்கள். நீத்தார் கடன் அந்த இடத்திலேயே நிறைவேறின. பீஷ்மரும், விதுரரும், கிருபரும் அதில் பங்கு பெறுவதை ஜனங்கள் வேடிக்கை பார்த்தார்கள். பஞ்ச பாண்டவர்கள் இறந்தார்கள் என்று திடமாக நம்பினார்கள்.

ஆனால், அடர்ந்த வனத்திற்கு நடுவே குந்தியும், ஐந்து சகோதரர்களும் மரத்தின் வேரில் தலை வைத்தபடி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

பீஷ்மர் விசனம் அடைந்திருப்பதைக் கண்டு விதுரர் அருகே வந்து அந்த வீட்டினுடைய ஒரு பகுதியை சிலம்பு குச்சியால் குத்திக் காட்டினார். மண் சட்டென்று சரிந்து பெரிய பள்ளம் உண்டாயிற்று. அது சுரங்கம் என்பது தெரிந்தது. பீஷ்மர் அதை பார்த்ததும் பெரிய எரிந்த உத்திரகட்டையை அதை மறைக்கும்படியாக விதுரர் புரட்டிப் போட்டார். வேறு ஏதோ தேடிக்கொண்டிருப்பதாக நடித்தார்கள். ‘அவர்கள் இறந்ததாக எனக்குத் தெரியவில்லை. இது சுரங்கம். தப்பித்திருக்கிறார்கள் என்று திடமாகத்

தெரிகிறது" என்று பீஷ்மரிடம் சொல்ல, 'எனக்கும் உள்ளுக்குள்ளே துக்கம் உண்டாகவில்லை. நானும் மற்றவரைப்போல நடிக்கிறேன். அவர்கள் தப்பித்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் சொன்னதை கேட்டுக் கொண்டேன். இது உறுதியாக இருக்கிறது. நம்பத்தகுந்ததாக இருக்கிறது. அவர்களை அவ்வளவு எளிதில் கொல்ல முடியாது. இங்கு பல காரியங்கள் அவர்களால் நடக்க வேண்டியிருக்கின்றன,' என்று விதுரருக்கு முணுமுணுப்பாக பதிலளித்தார்.

அவர்கள் வெளிப்பார்வைக்குதுக்கமாக இருந்தாலும் உள்ளுக்குள்ளே பாண்டவர்கள் தப்பித்து விட்டார்கள் என்ற சந்தோஷத்தில் இருந்தார்கள். கோடைகாலத்தில் ஆழமான மடு அடியே குளிர்ச்சியாகவும், மேலே கொதிப்பாகவும் இருப்பதுபோல அவர்கள் இரண்டு குணம் உள்ளவர்களாய் அந்த இடத்தில் நீத்தார் கடன் செய்தார்கள்.

மகாபாரதத்தில் அரக்கு மாளிகை எரிப்பு ஒரு நல்ல திருப்பம். வெகு நிச்சயமாக துரியோதனர்களோடு பகை உண்டு என்று பாண்டவர்கள் உறுதி கொண்ட சமயம்.

பெரிய செடிகள் மிதிபட்டன. சிறிய மரங்கள் உடைபட்டன. விழுதுகள் அறுந்து விழுந்தன. போன பாதையில் புதிய பாதை ஏற்பட்டது. பெரிய நீர் திவலைகளுடன் குளங்கள் தோண்டப்பட்டன. சேறு பூமி சிதறியது. உலர்ந்த பூமி நடுங்கியது. எவ்வளவு தொலைவு விலகி ஓட முடியுமோ அவ்வளவு தொலைவு புலியால் துரத்தப்பட்ட மான் போல பீமசேனன் தன்னுடைய உறவுகளை தூக்கிக்கொண்டு ஓடினான். களைப்படைந்து மிகப்பெரிய ஆல மரத்தடியில் அவர்களை இறக்கினான். அருகே உள்ள குளத்திற்குப் போய் தாமரை இலையை மடித்து தண்ணீர் கொண்டு வந்தான். அங்கவஸ்திரத்தை நனைத்து அதை அவர்கள் மீது பிழிந்தான். முகம் துடைத்துக் கொண்டும், முதுகு துடைத்துக் கொண்டும், நெஞ்சில் நீர் வார்த்துக்கொண்டும் அவர்கள் சிரமபரிகாரம் செய்தார்கள். தொன்னையில் வந்த நீரை குடித்து ஏப்பம் விட்டார்கள். சிறிய கனிகளை, காய்களை, கிழங்குகளை உண்டார்கள். சுவையான இலைகளை பறித்து உண்டார்கள். முன் பசிக்கு இதுபோதும் என்கிறபோது ஓட்டத்தின் காரணமாக அவர்களுக்கு அலுப்பு ஏற்பட்டது. அவர்கள் மெல்ல சாய்ந்தார்கள். கால்களை பரப்பி குறட்டை விட்டு தூங்கினார்கள்.

புல் தரையில் முதுகிலும், முழங்கையிலும் மண் ஒட்ட கிடந்தார்கள். ஓடும்போது துக்கமாக இல்லை. பேசும்போது கோபம் வரவில்லை. உண்ணும்போது ஆத்திரம் வரவில்லை. ஆனால், கால் அகட்டி தனித்தனியே தாயும், சகோதரர்களும் தூங்குவதை பார்த்ததும் கண்ணில் நீர் பொங்கி விட்டது. பீமசேனன் தூங்குகிறவர்களைப் பார்த்து முகம் பொத்தி அழுதான். போன மாதம் இதே திதியில் பஞ்சு படுக்கையில் சுகமாக படுத்து தாதிகள் விசிற தூங்கியவர்கள். இப்போது மரக்கிளைகள் தாலாட்ட, புல்லே படுக்கையாக தூங்குகிறார்கள்.

இது என்ன தலையெழுத்து! எவ்வளவு தெளிவான ஒரு சிந்தனையாளர். எவ்வளவு நேர்மையான மனிதன். மறந்து போயும் மற்றவர்களுக்கு கெடுதல் செய்யாத குணம். அந்த தருமர், அந்த யுதிஷ்டிரர் இப்படி தூங்குகிறாரே. அவன் அருகே உட்கார்ந்து அவர் தலையை தடவி அழுதான். கருத்த உடம்புள்ள அர்ஜுனன் சுருள் கேசத்தோடு முகம் மறைக்க தூங்குவதைப் பார்த்த முடிக் கற்றையை சரி செய்தான். எப்பேர்ப்பட்ட வீரனடா நீ. உன்னுடைய கை அம்புகள் என்னென்னவோ பேசுமே. இதில் பாதி பேசக்கூட இங்கு ஆள் இல்லையே. அவர்கள் எல்லோரும் சுகமாக இருக்க நீ இந்த மரத்தடியில் தூங்குகிறாயே. என்ன விதி இது. எதனால் ஏற்பட்டது இது. யாரை எதிர்த்து போரிடுவது. யாரோடு அறைகூவல் இட்டு சண்டையிடுவது, தெரியவில்லையே.

இதற்குக் காரணம் துரியோதனனா, திருதராஷ்டிரனா, சகுனியா, கர்ணனா அல்லது இவர்களுக்கெல்லாம் மேற்பட்ட ஒரு தெய்வமா? அந்த தெய்வத்தை கூப்பிட்டு உலுக்க வேண்டாமா? அவன் திசை தெரியாமல் பல் கடித்தான். நகுல சகாதேவர்கள் அருகே போய் அவர்கள் கால்பிடித்து விட்டான். அவர்கள் சுகமாக இன்னும் கால் அகட்டி காட்டினார்கள். வலி இருக்கிறது என்பதை அவர்கள் முகபாவங்கள் சொல்லின. குழந்தைகளே, என் குழந்தைகளே அவர்களை கட்டி அணைத்து முத்தமிட்டு உச்சி முகர்ந்தான். அவர்கள் மெல்லிய சிரிப்போடு புரண்டு படுத்தார்கள். எங்கு படுத்திருக்கிறோம் என்பதே அந்த குழந்தைகளுக்குத் தெரியவில்லை.

தாயின் பாதத்திற்கு அருகே போனான். நெற்றியை அவள் பாதத்தில் வைத்தான். உத்தமமான பெண்மணி. எங்களுக்கு தாயாக இருந்து எந்த சுகமும் காணாத பெண்மணி. உன்னுடைய குமாரர்கள் பராக்கிரமசாலிகள், மிகவும் பக்குவப்பட்டவர்கள். ஆனாலும் என்ன உன்னுடைய இப்போதைய இடம் இந்த புழுதி வீடுதான். எங்கள் தாயாரை நாங்கள் காப்பாற்றுகின்ற விதம் இருக்கின்றதே இது காவியமாக செய்யப்பட வேண்டியது என்று தலையில் அடித்துக் கொண்டான். அழுகை இன்னும் பீறிட்டது. அவர்களை எழுப்பாது சத்தம் இல்லாது அவன் அழுதான்.

(தொடரும்)



மகாபாரதம்

18

தாழ்ந்தது உயரும், உயர்ந்தது தாழும்!

மனம் துக்கத்தில் ஒருமை அடைகிறது. ஒன்றாக குவிகிறது. என்ன காரணம் என்று யோசிக்கத் துவங்குகிறது. ஆரம்பத்தில் பதட்டம். இருப்பினும் மெல்ல மெல்ல கோபமும், பதட்டமும் அடங்கி உண்மையான விஷயத்தை விசாரிக்கத் துவங்குகிறது. பீமனுடைய அழுகை மட்டுப்பட்டு அதன் காரண காரியங்களை யோசிக்கத் துவங்கி விட்டது.

இது நல்லது. துரத்தினால்தானே கோபம் வரும். விலக்கினால்தானே வேகம் வரும். கொன்று போட வேண்டும் என்ற ஆத்திரம் எதிரியிடமிருந்து வெளிப்பட்டால்தானே நமக்கும் வீரம் வரும். ஐயோ, பாவம் சகோதரன். அறியாமையில் செய்கிறான் என்ற இரக்கம் இனி வராது அல்லவா. வரக்கூடாதல்லவா. வந்தால் துடைத்து எறிய வேண்டு மல்லவா. நீயோ நானோ இரண்டு பேரில் ஒருவர்தான் உயிரோடு இருக்க முடியும். ஒன்று நான் சாக வேண்டும். அல்லது நீ சாக வேண்டும். இதில் இரண்டு பேரும் உயிரோடு இருப்பின் இந்த தேசம் கஷ்டப்படும். இந்த மக்கள் கஷ்டப்படுவார்கள். எனவே, மக்களின் சௌகரியத்திற்காக, தேசத்தின் வலிமைக்காக நீயோ, நானோ உயிரோடு இருத்தல் வேண்டும். உன்னுடைய வாழ்க்கை உத்தமமா, என் வாழ்க்கை உத்தமமா. நான் தர்மமா, நீ தர்மமா, தெரிந்துகொள்ள வேண்டும். தர்மம்தான் ஜெயிக்கும் என்றால் நம்மில் யாரோ ஒருவருடைய தர்மம்தானே ஜெயிக்கும்? எந்த தர்மம் அது?

வாழ்க்கையினுடைய பெரும் ஓட்டத்தில் இப்படி தாழ்வது இயற்கை. துரியோதனன் தாழ்ந்தான் அல்லவா, நடு சபையில் அர்ஜுனன் வித்தை காட்ட, முகம் சுருங்கினானல்லவா. என் கதைக்கு பயந்தானல்லவா. அது அவனுடைய மோசமான காலம். எங்களுடைய சிறப்பான காலம். கர்ணன் வந்தபிறகும் நாங்கள் ஒன்று கவிழ்ந்து விடவில்லையே. இரண்டு பக்கமும் சரியான நிலையாக அன்றைய பொழுது போயிற்று. இன்றைய பொழுதில் நாங்கள் தாழ்ந்திருக்கிறோம். தாழ்ந்தது உயரும். உயர்ந்தது தாழும். அப்படியானால் என்ன செய்வது? உற்சாகமாக இருக்க வேண்டியதுதான். பீமன் தொடை தட்டிக் கொண்டு எழுந்தான். அவன் உடம்பின் வாசனை அந்த காடுகளூடே வெகுதூரம் பரவியது.

அது ஒரு அரைத் தூக்கத்தில் இருந்த ஒரு ராட்சஸனுடைய நாசியைத் தொட்டது. வருடியது. எழுப்பியது. விழிக்க வைத்தது. மனிதர்கள். ஹா.... சுவையுள்ள மனிதர்கள். அவன் தொடைதட்டி எழுந்தான். அவன் பெயர் இடும்பன். அவன் ராட்சஸன். மாமிசம் மட்டுமே உண்பவன். அதுவும் பச்சையாகத் தின்பவன். இடையறாது உண்பவன். உண்பதே வாழ்க்கை என்று வாழ்பவன்.

அந்த அரக்கன் பிணம் தின்பவன். உயிரோடு இருப்பவரை அடித்துக் கொன்று நிதானமாக சூடுகுறையாத அந்த மாமிசத்தை உண்பவன். அவன் தன் சகோதரியை அழைத்தான். அவளுக்கு இடும்பி என்று பெயர்.

“இடும்பி மாமிச வாசனை வீசுகிறதா”

“ஆமாம்”

“நல்ல மாமிசம் என்று தெரிகிறதா”

“ம்ம்”

‘‘சூடான ரத்தம் என்பதை உணருகிறாயா”

“ஆமாம்”

“சுவையுள்ள தசைகள் இருக்கின்றன என்று தெரிகிறதா”

“ஆமாம்”

“கெட்டியான எலும்புகள்”

“ஆமாம்”

“எனக்கு உண்ண வேண்டும். எப்படியாவது உண்ண வேண்டும். உடனே உண்ண வேண்டும். ஓடிப்போ. ஓடிப்போய் எங்கே இருக்கிறது என்று தேடு. ஒரு குரல் கொடு. உடனே வந்து விடுகிறேன்” எப்போதும் உண்பவன் அல்லவா. அவனுக்கு ஓடுதல் எளிதல்ல. ஆகவே, மற்றவரை ஏவினான்.

இடும்பி பறந்தாள். நாலாதிசையும் அலைந்தாள். தொலைதூரத்திலிருந்து பீமனை பார்த்தாள். பீமன் அப்பொழுது தான் எழுந்து நின்றான்.

‘‘அடேயப்பா, இது என்ன ஆச்சா மரம் எழுந்து நிற்பதுபோல் இருக்கிறதே!” அவள் வியந்தாள். பரவசமானாள். பெண் எப்பொழுது எவரைக் கண்டு காமுறுவாள் என்பது மிகமிக ரகசியமான கணக்கு.

இவன் மானுடன்.

அதனால் என்ன? புருஷன் என்றால் இவனல்லவோ. என்ன அகலமான தோள்கள். எவ்வளவு குழிந்த வயிறு. எவ்வளவு உறுதியான தொடைகள். எத்தனை திடமான பிருஷ்டம். எத்தனை அளவான கழுத்து. எத்தனை அடர்த்தியான முடி. எத்தனை கூர்மையான நாசி. எத்தனை தடித்த உதடு. எத்தனை செழுமையான கன்னங்கள். எத்தனை வலிமையான புஜம். இவனுடைய இறுக்கத்தில் திணறத் திணற இவனுக்கு சந்தோஷம் அளிப்பது எவ்வளவு அற்புதம்.

அவள் மனம் காமத்தில் திளைத்தது. அந்தச் செய்கையில் திமிறிற்று. அவன் வேண்டுமே என்ற ஆவலை இது அதிகப்படுத்தியது. அவள் விரல் சொடுக்கி தன்னை அழகாக்கிக் கொண்டாள். வளமான வாலிப பெண்ணாக்கிக் கொண்டாள். மானுட உருவம் எடுத்துக் கொண்டாள். வாசனையாக்கிக் கொண்டாள்.

வறுத்த மீன் பசு நெய் தடவி இருப்பினும் மீனின் நாற்றம் உள்ளே இருக்கும். மூச்சு இழுத்து சுவாசிப்பவருக்கு அதனுடைய உண்மை வாசனை தெரியாமல் போகாது. செத்த மாமிசம் சத்தம் போடத்தான் செய்யும்.

பிறந்த இடம் சிலருக்கு சட்டென்று விட்டுப்போகும். மனம் வேறு இடம் தேடிப் போகும். அந்த ராட்சஸி இடும்பைக்கு அப்படித் தோன்றியது. தமையனுக்கு பயந்து வாழ்வதும் நர மாமிசம் தேடுவதும், எந்நேரமும் உண்பதும், உணர்ச்சியற்று உறங்குவதும் அபத்தமாக இருந்தது. வாழ்வின் பெரிய சுழற்சி லேசாகத் தெரிந்தது. இதுவல்லவே வாழ்க்கை என்று தன்னை பற்றிய பலம் பிடிக்கத் துவங்கியது. உயரமும், அழகும், அகலமும், கம்பீரமுமாய் ஒரு ஆண் மகன் எழுந்து நிற்கையில் அவள் மனம் காதலாகவும், காமமாகவும் வயப்பட்டு அவளை வாட்டியது. ஏங்க வைத்தது. அருகே போய் “ஐயன்மீர்” என்று அழைத்தாள். இந்த இருட்டில் அந்த வனத்தில் இத்தனை அழகிய ஒரு பெண்மணி ஐயன்மீர் என்று அழைத்தால் யாருக்கும் சந்தேகம் வரத்தான் செய்யும். அதையும் அவள் அறிந்திருந்தாள். எனவே, தன்னிடம் விட்டு நகராது விலகியிருந்தபடியே கைகூப்பி பேசினாள்.

‘‘இந்த அடர்ந்த வனத்தில் இருக்கும் நீங்கள் யார்? இது மோசமான வனம். துஷ்ட மிருகங்களும், அரக்கர்களும் சுற்றித் திரியும் வனம். இந்த இடத்தில் மானுடர்களாகிய உங்களுக்கு என்ன வேலை? நீங்கள் எதன் பொருட்டு இந்தப் பக்கம் வந்தீர்கள்? உங்களைப் பற்றி சொல்லுங்கள்” என்று விலகியபடியே கேட்டாள். அவள் விலகி நின்றதும், கை கூப்பியதும் பீமனுக்கு ஆச்சரியத்தையும், சந்தேகத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்தன.

“நல்லது. நீ தவறான பெண்மணிதான். நீ மானுட உருவம் எடுத்தாலும் உன்னுடைய சுய உருவம் வேறு என்று உள்மனது சொல்கிறது. இருந்து விட்டுப் போ. என்னைப் பற்றி உனக்கென்ன விசாரணை?” அவன் அலட்சியமாக தொடர்ந்து பேசாமல் இருந்தான். அவள் மறுபடியும் இனிய வார்த்தையால் அவனை விசாரித்தாள்.

‘‘என் பெயர் பீமசேனன். பாண்டுவின் மைந்தன். என் தமையனார் யுதிஷ்டிரர், அதோ படுத்திருக்கிறார். அங்கே கருத்த உடலாய் படுத்திருப்பவன் என் தம்பி அர்ஜுனன். தனுர் வித்தையில்



பாலகுமாரன்



சிறந்தவன். நகுல சகாதேவர்கள் என் சகோதரர்கள். இது என் தாய் குந்தி. நாங்கள் அஸ்தினாபுரத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு விபரீதம் காரணமாக இந்தப் பக்கம் நாங்கள் தப்பித்து வந்திருக்கிறோம். நீ யார் சொல்” அவன் அவளை விசாரித்தான்.

“என் பெயர் இடும்பி. உங்களுக்காக இப்பொழுது மானுட உருவம் தரித்தாலும் உண்மையில் நான் ராட்சஸி. ஆனாலும், வெகு நாட்களாக இந்த ராட்சஸ உருவம் பற்றியும், வாழ்வு பற்றியும் எனக்கு கேள்விகள் இருந்தன. உங்களை சந்தித்ததும் அந்த கேள்விகள் பெரும் விஸ்வரூபம் எடுத்து என்னை வேறுவிதமாக சிந்திக்கத் தூண்டின. உங்களைப் போன்றவரை பர்த்தாவாக அடைந்தால் வாழ்வு சிறப்பாக இருக்குமே என்று தோன்றியது. நான் அரக்கிதான். ஆனால், உங்களுக்காகஎன்னை மாற்றிக் கொள்வேன். என்னுடைய பலம் அளவிடற்கரியது. அதைப் பற்றி அறிந்தால் வியந்து போவீர்கள். என்னுடைய தமையன் இடும்பன். இந்த வனப்பகுதியின் தலைவன். உங்களுடைய வாசனை அறிந்து உங்களை உண்ண வேண்டும் என்று என்னை அனுப்பினான். தேடிக் கண்டு குரல் கொடுக்கச் சொன்னான். நான் உங்களைத் தேடிக்கண்டு கொண்டேன். நீங்களே எனக்கு புருஷனாக இருக்க வேண்டும் என்று கைகூப்பி வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாற விரும்பிய பெண்ணை அபலையாகநிற்கும்பெண்ணை தமையன் துணையை உதறிவிட்டு வரும் பெண்ணை நீங்கள் அச்சமின்றி ஏற்கலாம். தானே முன்வந்து என்னை ஸ்வீகரியுங்கள் என்று சொல்லும்போது ஸ்வீகரிக்காமல் இருப்பது ஆணுக்கு அழகல்ல. ஆகவே, தயவுசெய்து என்னை திருமணம் செய்து கொள்ளுங்கள். நான் உங்களை என் தமையனாரிடமிருந்து காப்பாற்றுகிறேன். நான் இன்னும் தொலைதூரத்திற்கு, இன்னும் நல்ல இடத்திற்கு அழைத்துப் போகிறேன் என்று சொன்னாள்.

பீமன் சிரித்தான் “நன்றாக இருக்கிறது, வரன் கேட்கும் லட்சணம். நல்ல நேரம். நல்ல இடம். நல்ல காலக்கட்டம். இதில் ஒரு பெண் வந்து எங்களுடைய நிலைமை அறியாது தன்னை மணம்புரிய கேட்க, நானும் மணம் புரிந்து கொள்ள வேண்டுமா? என் தலையெழுத்து. வாழ்க்கையின் உச்சகட்ட அலுப்பில் இருந்தேன். ஏன் இந்த அவலம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். தேன் சொட்டு போல ஒரு துளி உன் செய்கை என் நாவில் பட்டு சிரிப்பை உண்டு பண்ணுகிறது. நன்றாக இருக்கிறது உன் பேச்சு. எனக்கு தமையனார் இருக்கிறார். அவருக்கு திருமணம் ஆகவில்லை. அவரை முந்திக் கொண்டு திருமணம் செய்கின்ற எண்ணம் எனக்கு ஒருபொழுதும் ஏற்பட்டதில்லை. எனவே, என் தமையனாரின் திருமணம் முடிந்து சில வருடங்களுக்குப் பிறகு உன்னைப் பற்றி யோசிப்போம். ஆகவே, இப்போதைக்கு இந்த இடம் விட்டுப் போய்விடு” என்று கை தட்டினான்.

‘சென்ற தங்கை வரக்காணோமே’ என்று விழித்துக்கொண்ட இடும்பன் எழுந்து நின்று சுற்றும் முற்றும் பார்த்து தங்கை போன திக்கை நோக்கி வேகமாக வந்தான். வரவர நர மாமிச வாசனை மூக்கை கிளறிற்று. எங்கே போனாள் இவள். தான் மட்டும் தின்கிறாளா என்று ஆவேசப்பட்டான். தொலைவில் அவன் வருவதைப் பார்த்துவிட்டு, “சிவந்த கண்களும், கடும் பசியுமாக என் தமையன் வந்து கொண்டிருக்கிறான். அவனுக்கெதிரே எந்த மானுட பலமும் செல்லாது. எனவே, தயவுசெய்து இடுப்பில் ஏறிக் கொள்ளுங்கள். நான் உங்களை ஆகாய மார்க்கமாக கொண்டு போகிறேன்.”

“என்னுடைய சகோதரர்கள்?” அவன் கேட்க, “சரி. அவர்களையும் வேண்டுமானாலும் தூக்கிக் கொள்கிறேன். உங்கள் பொருட்டு” என்றாள்.

“இந்தக் கதையெல்லாம் வேண்டாம். எனக்கு அவர்கள் முக்கியம். அவர்களையும், என்னையும் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும். உன்னுடைய தயவால் நான் காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் இல்லை” என்று சொல்ல, இடும்பன் தொலைவிலிருந்து அவர்களைப் பார்த்துவிட்டு உரக்கக் குரல் கொடுத்தான்.

சகோதரர்களும், குந்தியும் துள்ளி எழுந்தார்கள். தூக்கம் முற்றிலும் கலைந்தவர்களாய் பயந்து எழுந்தார்கள்.

“பிரச்னை என்னை நோக்கித்தான் வந்தது. அந்த பிரச்னையின் தொடர்பாக இன்னொரு பிரச்னை என்னை நோக்கிதான் வந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்தப் பிரச்னையை நான் சமாளிக்கிறேன். நீங்கள் அமைதியாக இருங்கள்” என்று விலக்கினான்.

உத்தமமான உறவுக்கு வழியா சொல்கிறாய். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய். இந்தப் பசியை என்னால் தாங்க முடியாது. அதுவும் எதிரே இருக்கின்ற அந்த கொழுத்த மாமிசம் எனக்கு வேண்டும் என்று வேகமாக நடந்தான். இடும்பி பலவிதமாக அவனோடு சண்டையிட்டு தடுத்தாள். ஆனால்,பெண்ணாகிய அவளை வெகு எளிதில் புறந்தள்ளிவிட்டு பீமனுக்கு எதிரே வந்து தொடை தட்டினான்.

“குந்தியின் அனுமதியில்லாது, சகோதரர்களின் அனுமதியில்லாது ஒருபோதும் பீமன் தன்னை மணம் முடிக்க சம்மதிக்க மாட்டான் என்பது புரிந்தது. எனவே பீமனை யாசிப்பதை விட குந்தியின் கால்களில் விழுவது மேல் என்று தீர்மானித்தாள்.”

பீமன் எகிறி அவன் தொண்டையில் குத்தினான். முகத்தில் அடித்தான். நெஞ்சை உடைத்தான். இடுப்பு எலும்புகளை முறித்தான். கைகளை இழுத்து தரையில் அடித்தான். கால்களைப் போட்டு மிதித்தான். முகத்தை அழுத்தினான். முழங்காலால் நெறித்தான். வளைத்தான். வெகு சீக்கிரத்தில், வெகு சீக்கிரத்தில் வலிவும், திடமும் மிக்க அந்த அரக்கனை பொம்மையைப் பிய்த்துப் போடுவது போல தூக்கிப் போட்டு மிதித்தான்.

“வீணாக மனிதருடைய மாமிசங்களை தின்று வீணாக காலம் கழித்த உன்னுடைய மரணமும் வீணாகவே நடைபெறுகிறது. நிம்மதியாக நீ இருந்திருக்கலாம். எங்கள் பார்வையில் பட்டுத் தொலைத்து இப்பொழுது மரணத்தை தழுவிக் கொண்டு இருக்கிறாய்” என்று சொல்லி அவன் கடைசி மூச்சையும் அழுத்தி நிறுத்தினான்.

இடும்பி நிம்மதி பெருமூச்சு விட்டான். பீமனின் வலிமை கண்டு குந்தி பதறுவதும், குந்தியின் நலனுக்காக பீமன் பேசுவதும் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. குந்தியின் அனுமதியில்லாது, சகோதரர்களின் அனுமதியில்லாது ஒருபோதும் பீமன் தன்னை மணம்முடிக்கசம்மதிக்கமாட்டான் என்பது புரிந்தது. எனவே பீமனை யாசிப்பதை விட குந்தியின் கால்களில் விழுவது மேல் என்று தீர்மானித்தாள். குந்தியை மண்டியிட்டு வணங்கினாள்.

‘‘நான் இந்தக் கணம் அநாதை. என்னுடைய ஒரே துணையான சகோதரன் மடிந்தான். உண்மையில் நான் ராட்சஸி அல்ல. ஒரு வன தேவதை. ஈஸ்வரி. இவ்வனத்தில் ராட்சஸர்கள் குடியேறியதால் நானும் அவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டியதாயிற்று. இப்போது இடும்பன் இல்லை என்கிறபோது நான் என் சுயரூபத்தில் உலாவலாம். தயவுசெய்து உங்கள் மகனை திருமணம் செய்து கொள்ள அனுமதியுங்கள்.

இந்த வனம் வாழ்வதற்கு எளிதானதல்ல. இன்னும் நல்ல இடத்திற்கு உங்களை அழைத்துப் போகிறேன். இன்னும் சிறப்பான வாழ்க்கை வாழ நான் ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் யாருக்கோ பயந்து வருகிறீர்கள் என்று எனக்கு தெளிவாகத் தெரிகிறது. உங்கள் பயத்தை நீக்க என்னால் ஆகும். பதிலுக்கு நான் யாசிப்பது உங்கள் மகனை. திருமணம் செய்ய விரும்புவது உங்கள் மகனை. நான் மன்மதனால் தாக்கப்பட்டேன். அந்த வேதனை உங்களுக்குத் தெரியும். நான் மனதால் உங்கள் மகனை புருஷனாக வரித்துவிட்டேன். இனி ஒருவரையும் நாடேன். எனவே, தயவுசெய்து... தயவு செய்து உங்கள் மகனை எனக்கு கணவனாக்குங்கள்” என்று கெஞ்சினாள். அவள் கண்களில் நீர் சுரந்தன. குந்தி மனம் இரங்கினாள்.

இந்த வனத்தில் இந்த நேரத்தில் எதிரிகள் துரத்தும்போது நமக்குச் சரியான துணை வேண்டுமல்லவா. அவள் யோசித்தாள். யுதிஷ்டிரரோடு கலந்து பேசினாள். யுதிஷ்டிரர் சம்மதித்தார். குந்தி இடும்பியின் திருமணத்திற்கு சரி என்று சொன்னாள். யுதிஷ்டிரர் முன்னே வந்து இடும்பியை தலை தொட்டு ஆசீர்வதித்தார்.

“மருமகளே வா. என் தம்பியின் அன்புக்கு கட்டுப்பட்டு அவனோடு நலமாக வாழ்வாயாக. உன் வருகையால் என் குடும்பம் நல்லகதி அடையட்டும். சௌக்கியமாக வாழட்டும். இடும்பியே பகல் பொழுது முழுவதும் அவனோடு சுற்றிக் கொண்டிரு. இரவு நேரம் காவலுக்காக அவனை எங்களிடம் விட்டுவிடு. சூரியன் அஸ்தமனத்துக்கு முன்பு அவன் எங்களிடத்தில் வந்துவிட வேண்டும் என்பதை உனக்கு என் கட்டளையாக கூறுகிறேன்.”

“எங்கள் பகைவர்கள் எங்களைத் தொந்தரவு செய்யாத வண்ணம் எங்களை காப்பாயாக.” என்றும் கேட்டுக் கொண்டார்.

வாழ்வினுடைய ஓட்டத்தில் ஏதோ ஒன்று எங்கோ புரட்டித்தள்ளினாலும் ஏதோ ஒன்று தடுத்து காவல் காக்கிறது. வாழ்வு முற்றிலும் அழிவதற்காகவோ அல்லது முற்றிலும் ஜொலிப்பதற்காகவோ இல்லை. அவை நல்லதும், கெட்டதும் கலந்து, உயர்வும் தாழ்வும் கலந்திருக்கின்ற ஒரு சிறப்பான விஷயம்.

(தொடரும்)

மகாபாரதம்

19

பலம் நிற்காது உண்மையே நிற்கும்!

அஸ்தினாபுரம் பற்றி, துரியோதனன் பற்றி, திருதராஷ்டிரனைப் பற்றி அவர்கள் முற்றிலும் மறந்து வனத்தில் சஞ்சரித்து சுகமாக வாழ்ந்தார்கள். மிக நீண்ட வனவாழ்க்கைக்கு அவர்களுக்கு அது ஆரம்பகால பயிற்சியாக இருந்தது.

திடீரென்று அர்ஜுனனுக்குள் ஓர் எண்ணம் தோன்றியது. 'இந்த வனத்தில் துரியோதனன் தன் சகோதரர்களோடு எத்தனை நாள் வாழ்வான்?' அவன் வாய்விட்டு சிரித்தான்.

இடும்பி அவர்களை மேலும் அழைத்துக் கொண்டு சாலிஹோத்ரசரஸை அடைந்தாள். மிகப்பெரிதாகத் துள்ளிய அந்த நீர்த்தடாகத்தை சாலிஹோத்ர மகரிஷி உருவாக்கியிருந்தார். அது வனத்திற்கு நடுவேயுள்ள பசுந்தோட்டம். அருவிகளும், ஆறும்,


ம.செ

குளங்களும், புல்வெளிகளும், அழுத்தமாக கட்டப்பட்ட பர்ணசாலைகளும் அங்கே இருந்தன. பரதகண்டம் எங்கும் சஞ்சரிக்கின்ற குணம் உடைய சாலிஹோத்ர மகரிஷி பெயரால் உருவாக்கப்பட்ட அந்த இடத்தில், வனத்தில் சஞ்சரிக்கின்ற ரிஷிகள் தங்கிப் போவார்கள். அந்த இடம் சுற்றிலும் பழமரங்களும், காய்கறிகளும் நிரம்பிக் கிடந்தன. இடும்பியால் அவை பக்குவமாக சமைக்கப்பட்டு பரிமாறப்பட்டன. வேகமாக ஓடக்கூடிய இடும்பியால் நகரத்திலிருந்து தானியங்கள் பெற்று நல்ல உணவு தயார் செய்ய முடிந்தது. வாசனை மிகுந்த தாம்பூலம்கூட அவளால் கொண்டு வரப்பட்டது. வனம்தான். ஆனால், எல்லா வசதியும் இருந்தன. காணாமல் போனவர்கள், இறந்து போனவர்கள் என்கிற அந்தஸ்து உள்ளவர்கள்தான். ஆனாலும், வாழ்க்கை களிப்புற்றதாக இருந்தது. வனம் மனத்திற்கு அமைதி, உடம்புக்கு ஆரோக்கியம், தனிமையில் சிறப்பு உணரும் இடம். ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்க வேண்டிய அவசியம் காட்டும் இடம். அவர்கள் அஸ்தினாபுரத்து கூட்டத்தை விட்டுப் பிரிந்தார்கள். ஆனால், அவர்களுக்குள் இறுக்கமாக, ஒற்றுமையாக ஆனார்கள். ஒரு குழு பிரிக்கப்பட்டு மிகக் கவனமாக, உறுதியாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பூபாரம் தீர்க்கப்பட வேண்டுமல்லவா? அதற்கு வலிவு மிகுந்த ஆயுதம் வேண்டுமல்லவா? கனமான உலோகங்களால் ஒரு கலவையாக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு ஒரு அஸ்திரம் - பஞ்சபாண்டவர்கள் என்கிற அஸ்திரம் - தயாராகிக் கொண்டிருந்தது. ஆனால், இந்த கூத்து சத்திரியர்களுக்குத் தெரியாது. அவர்களால் இதை உணர முடியாது. ஆனால், இதை உணர்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

பாலகுமாரன்

பகல் முழுவதும் இடும்பியோடு சுற்றிய பீமன் இரவானதும் வந்துவிடுவான். அவர்களுக்கு படுக்கை தயார் செய்வான். படுக்க வைப்பான். பக்கத்தில் அமர்ந்து கொண்டு கண்கொட்டாது காவல் இருப்பான். விடிந்ததும் துள்ளி வரும் இடும்பியை இறுக்க அணைத்துக் கொண்டு வனத்திற்குள் ஓடுவான். மரம் மீதும், மலை மீதும், மடுக்களிலும், புல்வெளிகளிலும், வெளிச்சம் நுழைய முடியாத இருட்டு வனங்களிலும் அவர்கள் சுற்றித் திரிந்தார்கள்.

காமம் முற்றுப் பெறாதவளாய் இருந்தாலும் இடும்பி கர்ப்பம் அடைந்தாள். வேகமாக கர்ப்பம் வளர்ந்தது. வெகு விரைவில் அவள் குழந்தை பெற்றாள். கடம் என்கிற தலை முழுக்க அடர்த்தியாக ரோமம் இருப்பதால் அவள் மகனுக்கு கடோத்கஜன் என்ற பெயரை வைத்தார்கள். சிவப்பு நிற வாயும், கருப்பு நிற உடம்பும், பெரிய விழிகளும், கூர்மையான காதுகளும், அகன்ற தோள்களும், கோரைப் பற்களும், தடித்த உருவமும், கையில் ஆயுதங்களுமாய் அந்தக் குழந்தை பிறந்தான். தாயையும், தந்தையையும் கால்களை பிடித்துக் கொண்டு முத்தமழை பொழிந்தான். அவர்களை அணைத்துக் கொண்டு குதித்தான். பிறந்த கணத்திலேயே விரைவாக வளர்ந்த அந்தக் குழந்தையை பார்த்து பீமன் திகைத்தான். 'இவன் ராட்சஸ குழந்தை. அப்படித்தான் இருப்பான். நான் தெய்வ பலம் மிகுந்தவள். இவனுக்கும் அந்த சக்தி உண்டு. எனவே, இவனைப்பற்றி கவலை கொள்ள வேண்டாம்,' என்று இடும்பி அவன் திகைப்பை நீக்கினாள்.

அர்ஜுனனுக்கும், யுதிஷ்டிரருக்கும், நகுல சகாதேவர்களுக்கும் தன் தாய்க்கும் கடோத்கஜனை அறிமுகப்படுத்தினான் பீமன். அவர்கள் அவனைக் கட்டிக் கொண்டும், ஓட்டிக் கொண்டும் சந்தோஷமானார்கள். அவர்களோடு ஆடுவது அவனுக்கு மிகுந்த விருப்பமாக இருந்தது. தன்னுடைய மகனை, தன்னுடைய கணவனுடைய உறவுகள் கொண்டாடுவதை, கொஞ்சுவதைக் கண்டு இடும்பி மகிழ்ந்தாள். கண்ணீரில் மிதந்தாள்.

நான் போட்ட கணக்கு தவறாகவில்லை. நிம்மதியான, சந்தோஷமான, ஒழுக்கமான ஒரு வாழ்க்கையை நான் வாழ்கிறேன். என் ஒழுக்கத்திற்கு பரிசாக இந்தப் பிள்ளை தெய்வீகமான பிள்ளை கடோத்கஜன் பிறந்திருக்கிறான். இவன் தன் தந்தைக்கு நிச்சயம் உதவி செய்வான். அவன் தாய் என்ற பெரும் பேற்றை அடைந்தாள். நல்ல மனைவியாகவும், நல்ல தாயாகவும் அவள் விளங்கினாள். அவள் பிறந்த விஷயம் வேறாக இருப்பினும், அவளுடைய சக்திகள் வேறாக இருப்பினும் அவள் மகாபாரதம் என்கிற மிகப் பெரிய யுத்த நேரத்திற்கு மிகச் சிறந்த ஒரு வீரனை பரிசாக அளித்தாள். அவனின் பராக்கிரமம் நிச்சயம் பாண்டவர்களுக்கு உதவி செய்யும்.

சில காலம் சௌகரியமாக வாழ்ந்தபோது வியாசர் அங்கே வந்தார். அவரைக் கண்டு எல்லோரும் எழுந்து நின்று கைகூப்பினார்கள். அதுவரை இல்லாத துக்கம் அப்பொழுது வந்து தொண்டையை அடைத்துக் கொண்டது.

"எதற்கு அழுகை? என்ன நடந்து விட்டது இப்போது? ஏன் துக்கப்படுகிறீர்கள்?

துரத்தப்பட்டோம் என்றும், அரசாங்க சுகங்கள் இல்லையே என்றும் வருத்தப்படுகிறீர்களா? அந்த சுகங்களை அடைந்தவர்கள் சௌக்கியமாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா? இல்லையே! ஒவ்வொரு நாளும் உங்களைப் பற்றிய அச்சம் அவர்களை படர்ந்து கொண்டுதானே இருக்கிறது. உங்களுக்கு அவர்களைப் பற்றிய அச்சம் இருக்கிறதா? மறந்தே போனீர்கள் தானே? அப்படியானால் எந்த வாழ்க்கை சிறந்தது? பயந்து பயந்து வாழ்ந்த அஸ்தினாபுரத்து வாழ்க்கையா அல்லது பயமே இல்லாது அவர்களைப் பற்றிய சிந்தனையே இல்லாது இங்கு இடும்பியினுடைய உபசாரத்தோடு கூடிய சந்தோஷமான வாழ்க்கையா? எது சிறந்தது? இது ஒரு பயிற்சி களமல்லவா? உங்களுக்குள் உங்களைப் பற்றி புரிந்து கொள்கின்ற அற்புதமான தருணம் அல்லவா? இதை நழுவ விடலாமா?”

குந்தி மிக விவேகமாக நடந்து கொண்டாள். தகுந்த நேரத்தில் கிடைத்த உதவியை இறுக பற்றிக்கொண்டாள். குலம் பார்க்காது அவள் மனங்களை பார்த்தாள். இடும்பி என்ற பெண்ணுடைய காதல் அவளுக்குப் புரிந்தது. இந்த நேரம் அவள் உதவி என்பது புரிந்தது. அவளை வரித்துக் கொண்டாள்.

“இப்போது சுகமாக வாழ்கிறீர்கள். குந்தி, இப்போது சொல்கிறேன். உன்னுடைய புத்திரர்கள் மிகுந்த பராக்கிரமசாலிகள். அவர்களால் எதிரிகள் அழிவார்கள். பலரை வென்று, கொன்று அவர்கள் தங்களுடைய புதிய ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார்கள். மிகச் சிறந்த பரதகண்ட மன்னர்களாக வாழ்வார்கள். அவர்களால் சத்திரிய வம்சம் தன்னுடைய பலத்தை இழந்து கதறி விழும். பொதுமக்களை அதட்டி, உருட்டிக் கொண்டிருக்கின்ற அந்த சத்திரியர்கள் முறிக்கப்படுவார்கள். தர்மமே நிற்கும். பலம் நிற்காது. உண்மையே நிற்கும். அஸ்திரங்கள் மட்டுமே சிறக்காது. தர்மத்திற்கு துணையாக மிகச் சிறந்த புருஷன் உங்களுக்கு ஆதரவாக வரப் போகிறான். நீங்கள் ஜெயிக்கப் போகிறீர்கள் என்ற என் வார்த்தையை மட்டும் கெட்டியாக பிடித்துக் கொள்ளுங்கள். சௌகரியமாக வாழுங்கள். மறுபடியும் சந்திப்போம்.” என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார்.

குந்தியின் மனம் நிம்மதியாயிற்று. இடும்பியின் சிஷ்ருஷை மட்டும் அல்ல. வியாச மகரிஷியின் ஆறுதலான வார்த்தைகளும் அவர்களுக்கு மிகுந்த பலத்தை கொடுத்தன. உணவுக்கான சௌகரியங்களும், உறக்கத்திற்கான சௌகரியங்களும், குளியல் போக்குவரத்திற்கான சௌகரியங்களும் உள்ள ஒரு இடத்தில் ஒரு நல்ல மனிதர் வந்து நல்ல வாக்கு சொல்லி, நாளை விடியும் என்று உறுதி சொல்லிப் போனது அவர்களை உற்சாகப்படுத்தியது. அவர்கள் இடும்பியை விட்டு இன்னும் தொடர்ந்து போகவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.



தைரியமாக உங்கள் பயணத்தை தொடருங்கள். மிகச் சிறந்த காரியத்திற்காக நீங்கள் படைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை வியாசர் வாயிலாய் அறிந்தேன். அவர் ஆசீர்வாதம் என்னை சிலிர்க்க வைத்தது. என் பிள்ளையும் உங்களுக்கு உதவுவான். நான் உபயோகமாக இருக்கிறேன். நல்லவர்களுக்கு உதவியாக இருக்கிறேன் என்பதே எனக்கு மிகப் பெரிய நிம்மதி.

இடும்பி, பாண்டவ சகோதரர்களுக்கு எதிரே புருஷனை பணிந்து நின்றாள்.

‘‘எப்பொழுது கூப்பிடுகிறீர்களோ அப்பொழுது ரகசியமாய் உங்களை வந்தடைந்து உங்களை சந்தோஷப்படுத்துவேன். எனவே, தைரியமாக உங்கள் பயணத்தை தொடருங்கள். மிகச் சிறந்த காரியத்திற்காக நீங்கள் படைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை வியாசர் வாயிலாய் அறிந்தேன். அவர் ஆசீர்வாதம் என்னை சிலிர்க்க வைத்தது. என் பிள்ளையும் உங்களுக்கு உதவுவான். நான் உபயோகமாக இருக்கிறேன். நல்லவர்களுக்கு உதவியாக இருக்கிறேன் என்பதே எனக்கு மிகப் பெரிய நிம்மதி. நான் எடுத்த வாழ்க்கைக்கு அர்த்தம் உள்ளதாக இவை அமைந்து விட்டன. நான் குந்திதேவிக்கும், உங்கள் சகோதரர்களுக்கும் என் பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.” அவள் பீமனின் பாதங்களைக் கட்டிக்கொண்டு அழுதாள். சகோதரர்கள் அவளுக்கு ஆறுதல் சொன்னார்கள்.

‘‘பீமனின் பத்தினியே எழுந்திரு. உன்னால் எங்களுக்கு ஒரு உதவி ஆகவேண்டியிருக்கிறது,” யுதிஷ்டிரன் சொன்னார்.

“என்ன? சொல்லுங்கள் மூத்தவரே’’ அவள் கைகூப்பினாள்.

“அந்தணர்களைப் போல உடை அணிய வேண்டியிருக்கிறது. எனவே, அந்த மாதிரியான வெள்ளை உடையும், பூணூலும், ஜெபமாலையும், தர்ப்பைப் பாயும், கமண்டலுமுமாக இருந்தால் நாங்கள் தொடர்ந்து ஒளிந்து வாழ்வு மேற்கொள்வோம். துரியோதனனைப் பொறுத்தவரை இறந்தவர்களாகவே நாங்கள் இருக்க எங்களுக்கு விருப்பம் உண்டு. எவ்வளவு தூரம் எங்களை காட்டாமல் இருப்போமோ அவ்வளவு நல்லது. எனவே, இந்த உடையோடு இல்லாது அந்தணர்களைப்போல எங்களை மாற்றிவிடு” என்று சொல்ல, இடும்பி சிரித்துக் கொண்டே அந்த மாதிரியான உபகரணங்கள் கொண்டு வந்தாள்.

அவர்கள் தலையை வேறுவிதமாக சீவி, வேறுவிதமாக முடிந்து, திருநீற்று பூச்சும், சந்தன பொட்டும், விரதத்தில் இருக்கின்ற அந்தணர்களைப் போல தாடியும், மீசையுமாய் அவர்கள் கமண்டலம் ஏந்தி, தர்ப்பைப் பாயை சுருட்டி எடுத்துக்கொண்டு அவர்கள் ஏகசக்கரம் என்கிற கிராமத்திற்கு வந்தார்கள். கிராமத்திற்கு வரும் முன்பு வனத்தின் எல்லையில் தங்களுடைய ஆயுதங்களை மறைத்து வைத்தார்கள். மரங்களின் உச்சியில் கிளையைப் போல கட்டினார்கள். கொடிகளை வளைத்து சுற்றினார்கள். அந்த மரத்தில் யாரும் ஏறாவண்ணம் முள்செடிகளை போட்டார்கள். கள்ளிச் செடிகளை நட்டார்கள். நாம் எப்படி ஏறுவது என்று சகாதேவன் கேட்க, அர்ஜுனன் ஒரு கயிறை கிளை மீது வீசி இறுக்கினான். அந்த கயிறை பற்றிக் கொண்டு கிளைக்குப் போய் கிளையிலிருந்து உச்சிக்குப் போனான். ஒரு மாளிகையில் படியேறிப்போவது போல மிக கம்பீரமாக அவன் ஏறிப்போவது வியப்பாக இருந்தது. ஆயுதங்களை நெருங்கும்போது சில கிளைகளை கத்தியால் மெல்ல கீறி அர்ஜுனன் விட்டுவந்தான். அந்தக்கிளையை யார் பற்றினாலும், யார் கால் வைத்தாலும் பளிச்சென்று முறியும். நல்ல உயரத்திலிருந்து முள் செடியின் மீது விழ வேண்டியிருக்கும். எவர் முயற்சியும் ஆயுதத்தை தொடும்படி இருக்காது என்று உறுதி செய்து கொண்ட பின்னர் அவர்கள் ஏகசக்கர நகரத்திற்குள் நுழைந்தார்கள்.

ஊரார் வரவேற்றார்கள். அந்தணர்கள் முன் வந்து “அயற்சியாக இருக்கிறீர்கள். வாருங்கள். இங்கு தங்கும் விடுதி இருக்கிறது. ஒரு வீடு காலியாக இருக்கிறது.” என்று சொல்லி ஒரு வீட்டிற்கு அழைத்துப் போனார்கள். கதவு திறந்து விட்டார்கள். ஜன்னல்களை திறந்து காற்றோட்டமாக்கினார்கள். சமையலுக்கு வேண்டிய பாத்திரங்களை கொடுத்தார்கள். சமைக்க வேண்டிய தானியங்களையும் கொடுத்தார்கள். “அதிதி தேவோ பவ” என்று கைகூப்பினார்கள். பீமனும், அர்ஜுனனும், யுதிஷ்டிரரும் நெகிழ்ந்து போனார்கள். குந்தி திகைத்தாள்.

“என்ன அற்புதமான மனிதர்கள். எவ்வளவு சத்தியத்திற்கு கட்டுப்படுகிறீர்கள். ‘அதிதி தேவோ பவ’ என்பதை வெறும் வார்த்தையாக இல்லாமல் எவ்வளவு உண்மையாக செய்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் வந்தனம். நீங்கள் அத்தனை பேரும் சௌக்கியமாக இருக்க வேண்டும்” என்று சொல்ல, அவர்கள் வெளிறி சிரித்தார்கள். குந்தி யுதிஷ்டிரரை பார்த்தாள். யுதிஷ்டிரரும் அந்த துக்கத்தை புரிந்து கொண்டான். இப்போது கேட்க வேண்டாம். தானாக வரும் என்று சொல்லி, அவர்களை கரம் கூப்பி அனுப்பி வைத்தான்.

அவர்கள் உட்கார்ந்து உண்ணத் துவங்கினார்கள். ஓய்வு எடுக்கும்போது என்ன துக்கம் இந்த நகரத்தில் என்று பரஸ்பரம் விசாரித்துக் கொண்டார்கள். “நாமாக கேட்பதில் தவறு வரும். வெட்கம் வரும். ஐயோ கேட்கிறார்களே, நாம் பதில் சொல்ல வேண்டுமே என்ற துக்கம் வரும். அவர்களாக தாங்கமுடியாது நம்மிடம் வந்து பேசுவார்கள். அதுவரை பொறுமையாக இருப்போம்.” என்று யுதிஷ்டிரர் சொன்னார். ஒரு மனிதரை எப்படி அணுக வேண்டும் என்பது நல்ல மனிதருக்கு நிச்சயம் தெரியும். உன்னிடம் காசு இல்லையா. நான் தரட்டுமா என்று கேட்பது அவமானப்படுத்தும். என்னிடம் காசு இல்லை. உங்களால் உதவ முடியுமா என்று கேட்ட பிறகு உடனடியாக உதவுவது ஒரு பெரிய நட்பை ஏற்படுத்தும். இரண்டிற்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது என்பதை நல்ல மனம் நிச்சயம் தெரிந்து கொள்ளும். பக்கத்து வீட்டில் அழுகை சத்தம் கேட்டது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார்கள். “என்ன நேரம்.”

“விடியல் நேரம்.” நட்சத்திரம் பார்த்து

விட்டு பீமன் சொன்னான். குந்தி எழுந்து முகம் கழுவிக் கொண்டாள். மெல்ல அடுத்த வீட்டு கொல்லைப்புறம் வழியாக அந்த வாசலில் நின்றாள். சமையல் அறையில் புருஷனும், மனைவியும் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. சிணுக்கத்தோடு குழந்தைகள் எழுந்தும், உட்கார்ந்தும், அலைந்தும், அதட்டு வாங்கியும் கிடந்தார்கள்.

“எவ்வளவு மோசமான மனைவி நீ. புருஷன் பேச்சு கேட்காத மனைவி. என்னுடைய வீடு. என் மூதாதையர் வாழ்ந்த வீடு, என் தந்தை வாழ்ந்த வீடு என்றெல்லாம் பேசி இங்கு உட்கார வைத்துவிட்டாயே. இந்த கிராமம் சரியாக இல்லை. இந்த கிராமத்தில் அம்சங்கள் நன்றாக இல்லை என்று சொல்லி, இதை விட்டு போகலாம் என்று பலமுறை சொல்லியும் என் தந்தையார் வாழ்ந்த வீடு என்று உட்கார்ந்திருக்கிறாயே. இன்று பார். என் மகனோ அல்லது நானோ மரணத்தை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. அதட்டினாலும் புரிந்து கொள்ளாமல் ஆர்ப்பாட்டம் செய்தாயே. அதன் விளைவு மரணம். எதற்கு என் பிள்ளை சாக வேண்டும். நான் போகிறேன். நான் செத்துப் போகிறேன். நீ நிம்மதியாக இரு. இது உன்னுடைய வீடு. உன் தகப்பன் வீடு. இறந்து போன உன் தகப்பனும், தாயும் உன்னை ஆசீர்வதிக்கட்டும். நலமாக வாழ்.” என்று சொல்லி, உதறி எழுந்து கொண்டான்.

வீட்டில் சமையல் உச்சகட்டத்தில் நடந்து கொண்டிருந்தது.

“நீங்கள் சொல்வது உண்மை என் இனிய புருஷனே. என் தந்தையின் மீதுள்ள பாசத்தாலும், என் ஊரின் மீதுள்ள நேசத்தாலும் நான் இங்கேயே தங்கிவிடலாம் என்று உங்களிடம் வற்புறுத்தியது உண்மை. இது ஒரு சுபிட்சமான கிராமம். சுற்றி என்னுடைய சுற்றத்தார்கள். எனக்கு ஆசையாக உங்களுக்கு திருமணம் செய்து வைத்த என்னுடைய தகப்பனார் வாழ்ந்த இல்லம். இந்த வீட்டினோடு இயைந்து, இந்த ஊரினோடு கலந்து எங்களுக்கெல்லாம் கௌரவம் ஏற்படுத்திய நீர் கொடுத்த உற்சாகத்தால்தான் நான் இங்கேயே தங்க விரும்பினேன். தவறு இப்போது புரிகிறது. ஆனால், தாமதமாகி விட்டது. மிகப் பெரிய ஆபத்திலே என்னாலேயே இந்த குடும்பம் மாட்டிக் கொண்டு விட்டது. பகன் என்ற அரக்கன் இங்கு வருவான் என்றோ, இந்த கிராமத்தை தன்னுடைய வலிமையினால் கட்டுப்படுத்துவான் என்றோ, கண்டபடிக்கு அடித்து இம்சை செய்து உணவுக்காக அந்தணர்களைக் கொல்வான் என்றோ நான் நினைக்கவேயில்லை. இப்படிப்பட்ட துயர் ஒன்று இந்த ஊருக்கு வரும் என்று யாருக்கும் தெரியாது. ஆனால், புருஷோத்தமரே வந்து விட்டது. வாரத்திற்கு ஒரு குடும்பம் வீதம் அவனுக்கு உணவு தயார் செய்து கொடுக்க வேண்டும் என்றும், எடுத்துப் போவரையும், இழுத்துப் போகின்ற வண்டி மாட்டையும் அவன் அடித்துத் தின்பான் என்று கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை. அரக்கர்கள் பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன்.

“இப்படி தவறு என்மீது இருக்க, நீங்கள் தற்கொலை செய்வதுபோல எங்களையெல்லாம் விட்டுவிட்டு வனத்திற்கு போவானேன்? அவனிடம் சிக்குவானேன்? நான் சொல்லுகின்ற உபாயத்தை கேளும். புருஷன் இல்லாத மனைவியும், பருவத்திற்கு காத்திருக்கின்ற மகளும் இருப்பின் அதைவிட ஆபத்தானது இந்த உலகத்தில் எதுவும் இல்லை. யார் நெருங்கியவர்களோ, யார் உறவுகளோ இப்படி அனாதையாக இருக்கின்ற இரண்டு பெண்களையும் ஸ்வீகரித்து தங்கள் போகத்திற்கு பயன்படுத்துவார்கள். எவரை நம்பியும் வாழ்ந்து விட முடியாது. அப்படியே நல்லவரை நம்பி வாழ்ந்தாலும் இந்த ஊர் வாய் சும்மா இருக்காது. எனவே, அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வதை விட நான் இந்த உணவை பகனுக்கு எடுத்துப் போகிறேன். ஒருவேளை ஸ்திரீ என்பதால் என்னை அவன் கொல்லாது இருக்கலாம். என்னை விட்டு விடலாம். அது நல்ல விஷயம்தானே. இதற்கு முன்னும் அப்படி நேர்ந்திருக்கிறதே.

“அப்படியே என்னை கொன்றாலும் என்ன, சமைக்கத் தெரிந்து வீடு பராமரிக்கத் தெரிந்த என் மகள் இருக்கிறாள். என் மகன் இருக்கிறான். அவன் வளர்ந்து வாலிபனாகி நீத்தார் கடன் நிம்மதியாகச் செய்வான். என் மகனுடைய கையினால் நீர் வார்க்கப்பட்டு நான் சொர்க்கம் போவேன். நீரும் அவனுக்கு துணையாக இருப்பீர். செய்த தவறுக்கு நான்தானே தண்டனை அனுபவிக்க வேண்டும்? உங்களை எங்ஙனம் நான் அங்கு துரத்துவேன்? எனவே, என்னிடம் பிரியமான வார்த்தைகள் சொல்லி என்னை வழி அனுப்பி வையும். நல்ல சித்ரான்னங்களுடனும், அசுரன் விரும்பிய மாமிச பட்சணங்களோடும் நான் போகிறேன். என்னை வழி அனுப்பி வையும்,” என்று கைகூப்பி கண்ணில் நீர் மல்க பேசினாள்.

பிராமணனுக்கு உயிரே கரைந்து போயிற்று. தன் மனைவியினுடைய பேச்சு அவனைத் துவள வைத்தது. தந்தையும், தாயும் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து அழுவதைப் பார்த்து அவர்கள் மகள் அழுதாள். பத்து வயதான அந்த மகளுக்கு தெளிவான புத்தி இருந்தது. குடும்பச் சூழ்நிலை நன்கு புரிந்தது.

(தொடரும்)



மகாபாரதம்

20

பகனை கொன்ற
பலபீமன்



“அப்பாவும் போகவேண்டாம். அம்மாவும் போகவேண்டாம். நான் போகிறேன். நீங்கள் சொன்னது போல பெண் என்றும், சிறுமி என்றும் உணவுப் பதார்த்தங்களையும், காளைகளையும் எடுத்துக் கொண்டு அந்த பகன் என்ற அசுரன் சிறுமியான என்னை விட்டு விடக்கூடும். அப்படியே நான் இறந்தால் என்ன. இந்த வீட்டில் கடைசி வரை வாழுகின்ற உரிமை எனக்கில்லையே. என்னை திருமணம் செய்து கொடுத்து வேறு எங்கோ அனுப்பப் போகிறீர்களே. அப்படி வேறு எங்கோபோய் வாழ்வதற்கு பதிலாக என் தந்தைக்கும், தாய்க்கும் உதவியாக நான் இறந்து போகிறேனே. இத்தனை நாள் வளர்த்த பாசத்திற்காக என்னுடைய கடமையை நான் செய்கிறேனே. என்னை அனுப்புங்கள். வண்டியோடு நான் போகிறேன். கானகத்தின் எல்லைவரை வாருங்கள். பிறகு நான் முன்னே போய் பகனை பெயர் சொல்லி அழைக்கிறேன். நடப்பது நடக்கட்டும். என்னுடைய தம்பியின் கையாலும், என் தகப்பன் கையாலும் நான் நீர் வார்க்கப்பட்டு நிம்மதியான இடத்திற்குப் போவேன். எனவே, என்னை சிறுமி என்று பாராது, ஒரே மகள் என்றெல்லாம் பேசாது, இந்த குடும்பம் நல்ல கதியில் வாழ என்னை அனுப்புங்கள். நம்முடைய பித்ருக்களுடைய சௌகரியத்திற்கு, அவர்கள் சமாதானத்திற்கு உங்களுக்கு ஒரு மகன் இருக்கிறான். பித்ருதோஷம் நம் குடும்பத்திற்கு ஏற்படாது. நான் இருந்து என்ன பயன், எனக்கு அந்த உரிமை இல்லை. எனவே என் தம்பியை சீரும், சிறப்புமாக வளர்ப்பதற்காக நான் பகனிடம் போகிறேன்” என்று சொன்னாள். அவர்கள் அந்தக் குழந்தையை கட்டிக் கொண்டு அழுதார்கள்.

இரண்டு வயது மகன் எழுந்தான். இடுப்பில் கை வைத்தான்.

“எங்கே பகன். இந்த குச்சியால் அவனை குத்திக் கொல்லுவேன். வெட்டி எறிவேன்” என்று சிறிய ஈர் குச்சியை வைத்து வீராவேசம் பேசினான். அந்தக் குடும்பம் அழுகையை விட்டுவிட்டு அழுகையினூடே வாய்விட்டு அந்த குழந்தையைப் பார்த்து சிரித்தது. அவன் செய்யும் வேடிக்கையை பார்த்து சந்தோஷப்பட்டது. அவனையும் அணைத்துக் கொண்டது.

இது ஒரு அழகான கதை, பிரச்னை வரும் காலத்தில் ஒருவருக்கொருவர் முந்தி முன் வந்து குடும்பத்திற்காக தன்னை இழக்கத் தயாராக இருக்கின்ற ஒரு அற்புதமான கதை. ஆனால், கதையின் முடிவு மிக உத்தமமாக வந்து சேர்ந்தது.

குடும்பத்திலுள்ள நான்கு பேர்களும் பேசுவதைக் கேட்டு குந்தி மகிழ்ந்தாள். அடே, எத்தனை அற்புதமான குடும்பம் என்று சந்தோஷப்பட்டாள். இவர்கள் துயரத்தை நீக்க வேண்டியது தன்னுடைய கடமையல்லவா என்று நினைத்தாள். பீமனின் ஞாபகம் வந்தது.

அந்தணன் என்று சொன்னால் கேட்டுக் கொண்டார்களே தவிர, ஊரிலுள்ள எல்லா அந்தணர்களுக்கும் பீமனைப் பற்றிய பயம் இருந்தது. அந்தணர்களில் இப்படி ஒரு உருவமா என்ற கேள்வி இருந்தது. இருக்கக்கூடும் என்று ஏற்றுக் கொண்டார்கள். அமைதியாக பேசுவதைப் பார்த்து அந்தணர்கள்தான் என்ற முடிவுக்கு வந்தார்கள். அந்த அக்ரஹாரத்தில் அவன் பிச்சை எடுக்க அவனுக்கு பெரிய பாத்திரம் தேவைப் பட்டது. அப்படி பெரிய பாத்திரம் செய்வதற்கு அந்த ஊர் குயவனை நாடினான். வாய் அகன்ற பாத்திரம் இவ்வளவு பெரிசு வேண்டும் என்று கைகளை அகல விரித்தான்.

"அத்தனை மண்ணுக்கு எங்கே போவது, என்னிடம் இருக்கின்ற மண்ணில் சிறிய பாத்திரங்கள் செய்யலாம். நீ கேட்பது போல பாத்திரம் செய்ய நூறு மூட்டை மண் தேவைப்படுமே" என்று குயவன் கேலியாகச் சொல்ல, அவ்வளவுதானா. நான் எடுத்து வருகிறேன். குயவனோடு போய் மண் இருக்கும் இடத்தை பார்த்து பெரிய கூடைகளில் மண் அள்ளி வந்து குயவனுடைய வீட்டிற்கு அருகே நூறு கூடைக்கும் மேலே போட்டான். குயவன் திகைத்துப் போனான். அவன் கேட்டுக் கொண்டபடி மிகப் பெரிய பாத்திரத்தை செய்து பீமன் பரிசளித்தான்.

பீமன் சூளையில் வெந்த அந்த சிவப்பு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு பவதி பிட்சாந்தேஹி என்று போக, ஊர் புரண்டு புரண்டு சிரித்தது. நான் ஏறி உட்கார்ந்து கொள்ள வேண்டியதுதான் என்று அந்தணர் சொல்ல, பீமன் சிரித்தான். "உம்மை சாப்பிடுவதற்கில்லை. நல்ல உணவாக செய்து போடச் சொல்லும்." பச்சைக் காய்கறிகளும், பழங்களும், கீரைகளும், நல்ல சமைத்த உணவும், அவித்த உணவுமாக அவன் பெரிய பாத்திரத்தில் போடப்பட்டது. அவன் பிச்சை எடுப்பதே பெரிய விஷயமாக இருந்தது. பீமனை அந்த ஊர் மக்கள் கொண்டாடினார்கள்.

குந்தி எதிரே அழுதுகொண்டிருந்த பிராமணனை நோக்கி ஆறுதலாகப் பேசினாள்.

"ஒரு மகள், ஒரு மகன் என்று அருமையான மனைவியோடு குடித்தனம் செய்யும் அந்தணரே, உங்களின் துக்கம் எனக்கு புரிகிறது. இந்த ஊர் சோகமாக இருக்கிறதே என்று உள்ளே நுழையும்போதே நினைத்தேன். நீங்களாக சொல்லும்வரை கேட்கவேண்டாமே என்று அமைதியாக இருந்தேன். இப்பொழுது காரணம் தெரிந்து விட்டது. உங்கள் சோகம் நீக்கப்பட வேண்டியது. உங்களுக்கு இருக்கின்ற இரண்டு குழந்தைகளையும் இழக்க வேண்டாம். எனக்கு ஐந்து புதல்வர்கள் இருக்கிறார்கள். அதில் பீமன் என்கிற இரண்டாமவனை நான் அனுப்புகிறேன். அவனிடம் வண்டி கட்டி அந்த அசுரனுக்கு வேண்டிய உணவை அனுப்புங்கள். அவன் கொண்டு போய் கொடுத்து விட்டு வருவான். கொன்று விடுவானே என்று சொல்லாதீர்கள். பீமனை அவ்வளவு எளிதில் கொல்ல முடியாது. அவன் மந்திர சக்தி உள்ளவன். தந்திரமானவன். என்ன செய்து ஆளை மயக்குவான் என்று எவருக்கும் தெரியாது. எனவே, அவனை நம்பி உணவுப் பொருட்களை கொடுங்கள். அவன் போய் கொடுத்துவிட்டு வருவான். நீங்கள் உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்தால் என் மகனுக்கு உத்தரவிட்டு வருகிறேன்" என்று எழுந்தாள்.

"நில்லுங்கள் அம்மா. நீங்கள் அதிதி. நீங்கள் விருந்தினர். விருந்தினரை கொண்டு போய் கொடுக்கச் சொல்லி அவர்களை கொன்று நாங்கள் உயிர் வாழ்வதா. இது எந்த உலகத்திலும் நடக்காத விஷயம். எந்த தர்மத்திற்கும் ஒவ்வாத விஷயம். விருந்தினர்கள் விருந்தினர்களாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, ஒரு வீட்டினுடைய துக்கத்தை அவர்கள் தோளில் போட்டுக் கொள்ள முடியாது. ஒரு வீட்டினுடைய வறுமையை அவர்களை வைத்து தீர்க்க முடியாது. வந்த விருந்தினர் வசதியாக இருக்கலாம். அதற்காக அவரிடம் காசு வாங்கி அவருக்கு விருந்து வைக்க

முடியுமா. நீராகாரமாக இருந்தாலும் அது வீட்டு எஜமானனின் சொந்த உழைப்பில் கிடைத்து அதை பங்கு போடுகின்ற விதம் தான் சரி. உங்கள் அன்பான வார்த்தைகளுக்கு நன்றி. ஐந்து குழந்தைகள் இருப்பதாலேயே ஒருவனை இழக்கத்துணிகின்ற தாயை நான் இப்போதுதான் பார்க்கின்றேன். ஐந்து லட்டுகங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றைத் தருகிறேன் என்பது போல பேசுகிறீர்கள். இப்படிப்பட்ட பேச்சு நான் கேட்டதேயில்லை. உங்கள் மனம் மிகப் பெரியது. வாங்கியே பழக்கப்பட்ட அந்தணர்களைத் தான் தெரியும். நீங்கள் பெரிய வள்ளலைப் போல அரச குடும்பத்தை சார்ந்தவர்களைப் போல இருக்கிறீர்கள். அவர்களால்தான் இப்படி பேச முடியும். உயரமும், அகலமும் உள்ள பீமன் ஒருவேளை பகனை ஜெயித்துவிட்டு வந்தாலும் வரலாம். ஆனால், அதை நம்பிக் கொண்டு ஒருபொழுதும் பீமனை அனுப்புவதற்கு நாம் சம்மதியேன். இது தர்மத்திற்கு விரோதம், எங்களுடைய துக்கம் நாங்கள் அனுபவித்து தீரவேண்டியது. எனவே, அன்பான வார்த்தை பேசியதற்கு நன்றியோடு உங்களை விலகி இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

"மூன்று நாழிகையில் நூறு மண் கூடை எடுத்ததை கேட்டாயல்லவா. ஊரே வியந்ததல்லவா. பெரிய பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்தபோது சிரித்தீர்கள் அல்லவா. அவனுக்கு அவ்வளவு பசி. அது அவனுடைய பசி அல்ல. அவனுக்குள் இருக்கின்ற தேவதையின் பசி. எனவே, அவனை மட்டுமல்ல. அந்த தேவதையை நம்பி நீங்கள் அனுப்பலாம். உணவு தயார் செய்யுங்கள். நான் என் மகனிடம் சொல்லிவிட்டு வருகிறேன்." அவள் பதிலுக்கு காத்திராமல் கீழே இறங்கிப் போனாள்.

அந்த வீடு திகைத்தது. ஊர் மக்களுக்கு செய்தி போயிற்று. ஊர் மக்கள் ஒன்று கூடினார்கள்.

சரி. நாம் கேட்கவில்லை. அவர்களாக முன்வருகிறார்கள். அதுவும் தவிர இந்தமாதிரி ஆட்களால்தான் இந்த கிராமத்திற்கு விடிமோட்சம் கிடைக்கும். ஒரு குறிப்பிட்ட காலம்வரைதான் எந்த துக்கமும் இருக்கும். துக்கம் முடியும் காலம் வந்துவிட்டது. கிரகங்கள் மாறுகின்றன. இவர்கள் உள்ளே நுழையும்போதே நல்ல சகுனங்கள் ஏற்பட்டன. இவர்கள் உள்ளே நுழைய சுழற்காற்று முன்னே போயிற்று. மரங்களிலிருந்து பூக்கள் உதிர்ந்தன. பட்சிகள் சரியான திசை நோக்கி கூவின. எனவே, பீமனுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கலாம்.



பாலகுமாரன்

"அம்மா, மறுபடியும் நீங்கள் இந்த விஷயத்தை யோசனை செய்யுங்கள். அவசரப்பட்டு பேசிவிட்டோம் என்ற எண்ணம் இருப்பின் இப்போது கூட நீங்கள் மாறிக் கொள்ளலாம்" என்று கிராமத்து ஜனங்கள் சொல்ல, குந்தி உறுதியாக நின்றாள். பீமன் அதைவிட துடிப்பாக நின்றான். அர்ஜுனன் வியப்போடு பார்க்க, யுதிஷ்டர் யோசனையோடு நின்றார்.

பக்குவப்படுத்திய மாமிசங்களும், சித்ரான்னங்களும், தயிர் குடங்களும், நெய் குடங்களும், மது வகைகளும் பெரிய பார வண்டியில் ஏற்றப்பட்டன. மூச்சு இழுத்து அந்த வாசனை உணர்ந்து, இதுவல்லவா உணவு என்று பீமன் ஆர்ப்பரித்தான். கிராமத்து ஜனங்கள் சிரித்தார்கள். துக்கப்பட்டார்கள்.

வண்டியின் முகத்தடியில் பீமன் உட்கார்ந்து கொண்டு வண்டியை செலுத்த கிராமம் வண்டியின் பின்னே போயிற்று. கிராமத்தின் பின்னே குந்தியும், யுதிஷ்டரும் நடந்தார்கள்.

"தவறு செய்கிறோமோ" மெல்லிய குரலில் யுதிஷ்டிரர் பேசினார். அர்ஜுனன் நடுவே வந்து என்ன என்பது போல காது கொடுத்தான்.

"நாம் மறைந்து வாழ்கிறோம். துரியோதனனுக்கு தெரியக்கூடாது என்று அந்தண வேஷம் போட்டிருக்கிறோம். இப்போது இவ்வளவு ஊர்வலமாக, ஆரவாரமாக பீமனை பகனிடம் அனுப்பினால் அது நமக்கு எதிராக அல்லவா முடியும். வெகு நிச்சயம் பீமன் பகனை அடித்துப் போடுவான். அப்படிப்பட்ட ராட்சஸனை அடித்துப் போட்டது யார் என்ற கேள்வி வராதா. ஐந்து வாலிபர்கள் உள்ளே நுழைந்தார்கள் ஒரு பெண்மணியோடு என்ற பேச்சு வராதா. துரியோதனன் எளிதில் நம்முடைய இருப்பிடத்தை கண்டுபிடிக்க மாட்டானா. ஆட்களை அனுப்பி தொந்தரவு செய்ய மாட்டானா. நாம் மறைந்து வாழ்வதற்கு அர்த்தமே இல்லையே."

கொஞ்சம் கோபத்தோடும், வருத்தத்தோடும் பேசினார். அவசரப்பட்டு விட்டீர்கள் அம்மா என்று குற்றம் சொன்னார்.

"எவ்வளவு காலம் அண்ணா மறைந்து வாழ்வது. முடிந்தவரை செய்வோம். மறைந்து வாழ்வது முக்கியமா. அல்லது மறைந்து வாழ்வதற்காக இந்த கிராமத்து குடும்பத்தை பலி கொடுப்பது முக்கியமா. கண் எதிரே ஒரு அநியாயம் நடக்கிறது என்பதை நம்மால் பார்த்துக் கொண்டு எப்படி இருக்க முடியும். நம்முடைய நலன்தான் முக்கியம்

என்று அமைதியாக இருப்பது தர்மத்திற்கு விரோதம் அல்லவா. பிறகு நாம் என்ன க்ஷத்திரியர்கள். ஒரு குடும்பத்தை சாக விட்டு, ஒரு கிராமத்தை துடிக்கவிட்டு இங்கு அவர்கள் போடுகின்ற உணவை கைநீட்டி நெய் பிசைந்து சாப்பிட வேண்டுமா. உங்களால் சாப்பிட முடியுமா. இதையே இந்த கிராமத்திற்கு உதவியாக இந்த காரியத்தை செய்து பகனின் முட்டியை முறித்து உயிரை போக்கினால் இந்த கிராமம் எவ்வளவு கொண்டாடும். எவ்வளவு நிம்மதி பெறும். ஜனங்களுடைய நிம்மதிக்காகத்தானே க்ஷத்திரியர்கள் வாழ்கிறார்கள். நீங்கள் ஏன் இதை மறுத்து விட்டீர்கள் அண்ணா."

''ஆக, உன்னை க்ஷத்திரியன் என்று இன்னும் திடமாக சொல்லிக் கொண்டிருக்கிறாயா அர்ஜுனா."

"ஆமாம் அண்ணா. நாம் போட்டிருப்பது அந்தண வேடம். உண்மையில் நான் க்ஷத்திரியன். எப்போது நான் காண்டீபத்தை தொடுவேன் என்று நான் பரபரத்துக் கொண்டிருக்கிறேன். மறைந்து உறையும் வாழ்வுதான். அதனால் என்ன. துரியோதனன் கண்டுபிடித்துவிட்டால் செத்துப் போய்விடுவோமா. என்ன நடக்குமோ அது நடக்கும். ஒருபொழுதும் இவர்களுடைய துக்கத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு என்னால் இருக்க முடியாது. அம்மாவினுடைய குணம் எனக்கு மிக உவப்பாக இருக்கிறது. ஒரு க்ஷத்திரிய பெண்மணியின் கருணை அவள் முகத்தில் தவழ்கிறது. உங்கள் பேச்சிலும் தவறில்லை அண்ணா. உங்கள் கவலை புரிகிறது. விதி விட்ட வழி கிளம்பிவிட்டோம். எனவே, தொடர்ந்து அடுத்தது என்ன என்று தீர்மானிப்போம்." அர்ஜுனனுடைய விவேகமான பேச்சு குந்திக்கு சந்தோஷத்தை அளித்தது.

ஒரு சின்ன சம்பவம், மகாபாரதத்தில் கிளைக்கதையாக சொல்லப்படுகின்ற இந்தச் சம்பவம் மனிதர்களுடைய குணங்களை எத்தனை அழகாக சொல்கிறது. இது சரியா, தவறா எப்படி ஆராய்கிறது. இப்படி ஆராய கற்றுக் கொள்வதுதான் இதிகாசங்களுடைய முக்கியமான நோக்கம். இதேபோல பிரச்னையை அல்லது இதைவிட முக்கியமான பிரச்னையை ஒரு குடும்பம் சந்திக்கக் கூடும். அடுத்த வீடு அந்த குடும்பத்தை வெறுமே வேடிக்கை பார்த்திருக்கலாமா. உதவிக்கு போகத்தான் வேண்டும் என்பதை மிக ரம்மியமாகச் சொல்கிறது இந்தக் கதை. மகாபாரதத்தின் சிறப்பே இம்மாதிரியான கதைகள்தான்.

வனம் தாண்டி பகன் வசிக்கின்ற மலையடிவாரத்தில் பீமன் போய் சேர்ந்து காளைகளை அவிழ்த்து விட்டு சித்ரான்னங்களையும், பக்குவப்படுத்தப்பட்ட மாமிசங்களையும் நிம்மதியாக சாப்பிட்டுவிட்டு, நெய் குடித்து விட்டு, தயிர் குடித்து விட்டு, பாயசத்தை கலக்கிக் கொண்டிருக்கையில் பகன் பசியோடு ஓடி வந்தான். "யாரடா அது?" என்று பீமனைப் பார்த்து கூவினான். பீமன் அலட்சியமாக உட்கார்ந்து கொண்டிருக்க அவனை முதுகில் அடித்தான். இடக்கையால் பகனை பிடித்து தள்ளிவிட்டு பீமன் பாயசத்தை குடித்து விட்டு பருப்புகளை மெல்ல ஆரம்பித்தான். மறுபடியும் பகன் ஓடிவர, அவனை காலால் எட்டி உதைத்தான். "சாப்பிட்டு விட்டு வருகிறேனே" என்று விண்ணப்பித்தான். பகன் பெரும் கூச்சலோடு வர, தொலைவில் இருந்த கிராமத்து மக்களுக்கு அது கேட்டது. எல்லோரும் முகத்தை துணியால் பொத்திக் கொண்டு அழ, பீமன் பாயச சட்டியால் பகாசூரனை ஓங்கி அடித்தான். பேயடி. அடுத்து விழுந்த குத்தெல்லாம் மிகத் தேர்ந்த மல்யுத்த வீரன் செய்வது.

பகனுக்கு புரியவில்லை. பூணூலும், குடுமியும், திருநீறும், இறுக்க கட்டிய வேட்டியும் இருக்கிற இவன் இந்த அடி அடிக்கிறானே என்று எண்ணுகிறபோது அவன் கை முறுக்கப்பட்டது.

ஒரு அக்ரஹாரத்தை நசுக்கி, அந்த ஜனங்களை துன்புறுத்தி நீ சாப்பிடுவாயென்றால் உன்னை தண்டிப்பதில் தவறில்லை. மனிதர்களை உண்ணும் கேவலமான ஒரு பிறவி நீ. பச்சை மாமிசம் தின்கிறவன் நீ. உனக்கெல்லாம் எதற்கு மீசை. எதற்கு தலைமுடி. வலிக்க வலிக்க பிய்த்து எறிந்தான். முதுகில் அடித்தான். மார்பில் குத்தினான். முகத்தை முஷ்டியால் தாக்கினான். கழுத்தை உடைத்தான். கால்களை மிதித்தான். வயிறை முழங்காலால் அழுத்தினான். விதம் விதமாக துன்புறுத்தி அவனை தலையில் அடித்துக் கொன்றான்.

"அய்யோ" என்ற பகாசூரனின் அலறல் ஜனங்களுக்கு கேட்டது.

திகைப்பானார்கள். முன்னேறினார்கள். திரும்ப மாட்டு வண்டியில் புழுதி பறக்க, தலைமயிர் கலைந்து கிடக்க, பீமன் வருவதைப் பார்த்து ஆரவாரித்தார்கள். ஓடிப்போய் கட்டிக் கொண்டார்கள். என்ன ஆயிற்று பகனுக்கு விசாரித்தார்கள். வேறு சிலர் தொடர்ந்து ஓடிப்போய் பகன் இறந்து போனதை ஊருக்கு அறிவித்தார்கள். ஊர் ஜனம் பகனின் பிணத்தை சுற்றிப் பார்த்தது.

''உங்களுக்கும் அடி விழுந்திருக்கும் போலிருக்கிறதே".

"ஆமாம். பாயசம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது முதுகில் வந்து அடித்தான்."

"அப்பொழுதே அடித்திருக்க வேண்டியது தானே."

"பாயசம் சாப்பிட முடியாமல் போகுமே.

இவன் செத்தபிறகு, இவன் பிணத்தை பார்த்த பிறகு நான் எப்படி பாயசம் சாப்பிடுவேன். அதனால்தான் இருடா வருகிறேன் என்று பாயசம் சாப்பிட்டு விட்டு சண்டைக்கு போனேன். ஜனங்களுக்கு அவன் பேச்சு ஆச்சரியமாக இருந்தது. இவர்கள் அந்தணர்களா? இல்லை என்று தெரிந்தது. ஆனால், சொல்லப்படாதவரை கேட்கக்கூடாது என்று அவர்கள் அமைதியாக இருந்தார்கள். அது ஒரு நாகரீகம்.

“கடவுளே, பல வருடங்களுக்குப் பிறகு இப்பொழுது தானய்யா சிரிக்கிறோம். பல வருடங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் நிம்மதியாக சாப்பிடுகிறோம். பல வருடங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் அமைதியாக ஜபதபம் செய்து கொண்டிருக்கிறோம். நீங்கள் யார் என்று தெரியவில்லை. ஆனால், குந்தி தேவி நீயும், உன் குழந்தைகளும் வாழ்வாங்கு வாழ வேண்டும்.

எங்களுடைய தபத்தில் ஏதேனும் பலம் இருப்பின் அந்த பலத்தை நான் உங்கள் மகன் பீமனுக்கு தத்தம் செய்கிறேன். மிகப் பெரிய மனதோடு இந்த உதவியை செய்த உங்களை இந்த அக்ரஹாரம் கைகூப்பி நமஸ்கரிக்கிறது. உங்களுக்காக ருத்ர ஜபம் சொல்லப்போகிறது என்று கூட்டாக குந்தியின் குடும்பத்திற்காக பிரார்த்தனை செய்தார்கள்.

பொன், பொருள் சம்பாதிக்கலாம். நிலம் நீச்சு வாங்கி விடலாம். ஆனால், ஒரு குடும்பத்திற்காக ஒரு கூட்டமே பிரார்த்தனை செய்வது என்பது சாதாரண விஷயமா. தலைமுறை தலைமுறைகளுக்கு கிடைக்கின்ற வரமாயிற்று. ஒருமுகப்பட்ட அன்பும், அக்கறையும் இணைபிரியாதவை. உண்மையான அன்பும் சிறப்பான வாழ்த்துகளை கொண்டு வந்து கொடுக்கும். சிறப்பான வாழ்த்துகள் தான் உண்மையான வாழ்க்கைக்கு அடிப்படை.

தன் குழந்தைகள் மீது நம்பிக்கை வைத்து ஊர் மீது அன்பு வைத்த குந்தியினுடைய நடவடிக்கை அந்த குடும்பத்திற்கு மிகப் பெரிய சொத்தாக அமைந்தது. ஏகசக்ரா நகரம் நிம்மதியாக தூங்கிற்று. அந்த குடும்பத்தை கொண்டாடிற்று. சிறிது காலம் அவர்கள் அன்பில் திளைத்த குந்தியின் குடும்பம் வேறு இடம் போவதற்கு யோசனை செய்தது.

இந்த இடம் நமக்கு சொந்தமானதல்ல. இங்கு அடைக்கலமாக, அதிதியாக வந்தோம். அதிதியாக வந்தவர் வந்த இடத்தில் நிம்மதியாக தங்கக் கூடாது. எவ்வளவு விரைவில் வேறு இடம் போக வேண்டுமோ போக வேண்டும். இத்தனை நான் இங்கு இருந்ததே இந்த அந்தணர்களுடைய அன்புதான் காரணம். இங்கு வேண்டுமென்ற அளவு சுகமாக வாழ்ந்து விட்டோம். தொடர்ந்து வேறு இடம் போக வேண்டும் என்று யோசித்தார்கள். நல்லதான ஒரு விஷயத்தை நாடியபோது அதற்கு தோதான சம்பவங்கள் நல்லவர்களுக்கு ஏற்படும்.

> அம்மாவினுடைய குணம் எனக்கு மிக உவப்பாக இருக்கிறது. ஒரு க்ஷத்திரிய பெண்மணியின் கருணை அவள் முகத்தில் தவழ்கிறது. உங்கள் பேச்சிலும் தவறில்லை அண்ணா. உங்கள் கவலை புரிகிறது. விதி விட்ட வழி கிளம்பிவிட்டோம்.

அவர்கள் இதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும்போது அந்த ஊருக்கு தவம் நிறைந்த ஒரு அந்தணர் வந்தார். அவருக்கு பல ஊர்களைப் பற்றி தெரிந்திருந்தன. பல மன்னர்களைப் பற்றியும், அவர்கள் வலிமை பற்றியும் விரிவாகச் சொன்னான். இம்மாதிரியான மனிதர்கள்தான் சஞ்சாரிகள்தான் உலகத்தை ஒன்றாக சேர்க்கிறார்கள். பாஞ்சாலம் என்று ஒரு நாடு இருக்கிறது என்பதே பலபேருக்கு அவர் சொன்னபிறகே தெரிந்தது.

பாஞ்சால தேசத்து துருபதன் பற்றியும், அவன் துரோணரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டது பற்றியும், துரோணர் தன்னுடைய சீடப்பிள்ளையை வைத்து துருபதனை தோற்கடித்ததையும், அவமானப்படுத்தியதையும் விளாவரியாகச் சொன்னான். பஞ்சபாண்டவர்கள் கைகட்டி புதிதாய் கேட்பது போல் கேட்டுக் கொண்டார்கள்.

அந்த துருபதன் துரோணரை ஜெயிப்பதற்கு ஒரு பிள்ளையும், அர்ஜுனனை மணப்பதற்கு என்று ஒரு பெண்ணையும் பெற்றிருக்கிறான் என்று சொன்னதும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார்கள். யாரும் கேட்காமலேயே திரௌபதியின் அழகை அந்த பிராமணன் விவரித்துச் சொல்ல, பஞ்சபாண்டவர்கள் அத்தனை பேருக்கும் திரௌபதியின் மீது காதல் உண்டாயிற்று. பாஞ்சால தேசம் போகவேண்டும் என்ற எண்ணம் வந்தது.

(தொடரும்)

ஒழுக்கமாகவும், அடக்கமாகவும், பொறுமையாகவும் இருப்பவரே

உயர்ந்தவர்!

மகாபாரதம்
21



இன்றிலிருந்து எண்பத்தைந்தாவது நாள் தை மாதம் கிருஷ்ணபட்சத்தில் துருபதன் தன்னுடைய மகள் திரௌபதிக்கு சுயம்வரம் நிச்சயித்திருக்கிறான். பலதேசத்து மன்னர்களுக்கு ஓலைகள் அனுப்பப்பட்டு விட்டன. மன்னர்களும் பயணங்களுக்கு திட்டமிட்டு விட்டார்கள். எனவே, அந்த ஊருக்குப் போனால் மிகப்பெரிய வீரர்களை பார்க்கலாம். துரியோதனன், கர்ணன், துச்சாதனன் போன்ற மன்னர்கள் நிச்சயம் வருவார்கள். திரௌபதியின் அழகு பலருக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. பாஞ்சால தேசத்திற்கு மருமகனாகப் போவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் இருந்தது. எனவே, இங்குள்ள அனைவருமே பாஞ்சால தேசம் போகலாம். அந்த தேசத்து மக்கள் அந்தணர்களை மிக மரியாதையாக நடத்துவார்கள். எதுவும் கேட்காமலேயே கூப்பிட்டுக் கொடுப்பார்கள். ஒரு செழுமை

யான தேசத்தை பார்க்க வேண்டுமென்றால் அது பாஞ்சால தேசம்தான். பயணத்தில் விருப்பமுள்ள அந்தணர்களுக்கு அந்தப் பேச்சு இனித்தது. மனதால் பஞ்சபாண்டவர்கள் பாஞ்சாலம் நோக்கி நடக்கத்துவங்கி விட்டார்கள்.

தன் குழந்தைகளுடைய முகக் குறிப்பிலிருந்து அவர்கள் திரௌபதியை பார்க்க விரும்புகிறார்கள் என்பதை குந்தி புரிந்து கொண்டாள். ஏகசக்கர நகரத்திலிருந்து விடைபெற்றுக்கொண்டார்கள். வேறொரு அந்தணக்குழு பாஞ்சால தேசம் நோக்கி நடப்பது தெரிந்தது. அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். வழியில் மறுபடியும் வியாசரை சந்தித்தார்கள்.

தாங்கள் பாஞ்சாலம் போகிறோம் என்று வெட்கத்தோடு சொன்னார்கள்.

“நல்லது. எது நடக்க வேண்டுமோ அது நடந்து கொண்டிருக்கிறது. முன்னொரு காலத்தில் ஒரு கன்னிகை இருந்தாள். அவளுக்கு திருமணம் தள்ளிப்போய்க் கொண்டிருந்தது. மிகச்சிறந்த புருஷனே தனக்கு கணவனாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டாள். அதுவும் அந்தத் தாமதத்துக்குக் காரணமாக இருந்தது. அவள் சிவனை நோக்கி கடுமையாக தவம் செய்தாள். எனக்கு அருமையான கணவனை கொடு என்று சிவனை நோக்கி பலமுறை பிரார்த்தித்தாள். ஐந்து முறை எனக்கு அருமையான கணவனை கொடு என்று கேட்டதால் அடுத்த ஜென்மத்தில் நீ ஐவரை மணப்பாய் என்று சிவன் சிரித்தபடிச் சொன்னார். இல்லை எனக்கு ஒரு கணவன் போதும் என்று அந்தப் பெண் சொல்ல, உன் விருப்பம் முக்கியமல்ல. உன்னால் நடக்கப்பட வேண்டியவை இந்த பூமியில் நிகழ்ந்தே ஆகும். உன்னை முன்னிட்டு உன் புருஷர்களைக் கொண்டு பெரிய பூபாரம் ஒன்று குறையும். எனவே, அதைரியப்படாமல் மிக கம்பீரமாக அந்த புருஷர்களை ஏற்பாய். காரணமின்றி காரியங்கள் நடைபெறுவதில்லை என்று ஆசீர்வதித்தார். அவளே மறுஜென்மத்தில் திரௌபதியாக பிறந்திருக்கிறாள். அவளுக்கு அடிமனதில் தன்னைப்பற்றி இந்தச் செய்தி தெரிந்திருக்கிறது. நீங்கள் பாஞ்சாலம் போய் அங்கு நடக்கும் போட்டியில் கலந்து கொள்ளலாம். வெற்றி உங்களுக்கே” என்றார்.

தேசம் விட்டு அலைந்து, மிகக் கடுமையான நியமங்களோடு பிரம்மச்சரிய வாழ்க்கை வாழுகின்ற அந்த அரசகுமாரர்கள் வியாசரின் வழிகாட்டலை மிகுந்த கவனத்தோடு கேட்டுக் கொண்டார்கள். பாஞ்சாலதேசம் நோக்கி நடந்தார்கள். கங்கைக் கரையில் ஒரு மாலை வேளையில் ஸ்நானத்திற்காக அர்ஜுனன் கீழே இறங்குகையில் ஒரு கந்தர்வன் அர்ஜுனனை தடுத்தான்.

“இரவு வந்துவிட்டது. சூரியன் அஸ்தமித்த எண்பது விநாடிகளுக்குப் பிறகு அந்த நேரம் கந்தர்வர்களுக்குச் சொந்தம். அவர்கள் நதிக்கரையிலும், புண்ணிய தீர்த்தத்திலும் நீராடுகிற நேரம். அவர்கள் இனப்பெண்களோடு சல்லாபிக்கின்ற நேரம். மனிதர்களோ, மற்றவர்களோ அப்போது வரக்கூடாது. இருட்டிய பிறகு நீரில் கால் வைத்திருக்கிறாய். விலகிப் போ” என்று அதட்டினான்.

அர்ஜுனனுக்கு கோபம் வந்தது. “என்னை விலகச் சொல்லும் அளவுக்கு உனக்கு என்ன தகுதி இருக்கிறது? கந்தர்வன் என்ற ஒரு தகுதி போதும் என்று நினைக்கிறாயா? புனித கங்கையை தொடுவதற்கு நேரம் உண்டா? நதிகள் எப்போது வேண்டுமானாலும் வணங்கத் தக்கவை. வெறும் குளம், குட்டையில் நீ இந்த ஆட்டத்தை வைத்துக் கொள்ளலாம். ஒரு புண்ணிய நதிக்குப் போகாதே என்று மறுப்பதற்கு எவனுக்கும் திராணி இல்லை,” என்று கோபமாக மறுபடி சொன்னான்.

பேச்சு முற்றி அவர்களுக்குள் சண்டை வந்தது. அர்ஜுனன் அந்த கந்தர்வனை எளிதாக கடுமையாக தாக்கினான். கந்தர்வனின் மனைவி கும்பசீனி கைகூப்பி கந்தர்வனை கொல்லாது விட்டுவிடும்படி கேட்டுக் கொண்டாள். அர்ஜுனன் சரி என்று தன்னுடைய வில்லை தளரவிட்டான். அர்ஜுனனால் உயிர் பிச்சை அளிக்கப்பட்ட கந்தர்வன் மிகுந்த சந்தோஷமடைந்தான்.

“யார் ஜெயிக்கக் கூடியவனோ அவனே அபயம் அளிக்கத் தகுந்தவன். உன்னுடைய தனுர் வேதம் மிக அற்புதமாக இருக்கிறது. எவராலும் ஜெயிக்கப்பட முடியாதவனாக நீ இருக்கிறாய். உன்னுடைய வீரத்தை பார்த்து உன்னை அர்ஜுனன் என்று புரிந்து கொள்கிறேன். உனக்கு என்ன பலம் இருப்பினும் உன்னுடைய பிரம்மச்சரிய விரதம்தான் என்னை ஜெயிக்க வைத்தது. ஒரு அரசன் பிரம்மச்சரியனாக இருந்தால் மட்டும் போதாது. அவன் கோபமடையாமல் இருக்கவும், அடுத்தது என்ன செய்வது என்று யோசிக்கவும், அந்தணர்களை அணைத்து இருப்பதும் நல்லது. தன்னுடைய திறன், தன்னுடைய யோசனை, தன்னுடைய திட்டமிடல் என்று ஒரு சத்திரியன் இருப்பானாயின் அவனை ஏதேனும் ஒரு நேரம் தோல்வி வந்து சேரும்.

யுத்தத்தில் ஈடுபடாத அந்தணர், யுத்தத்தில் ஈடுபடுகின்ற

பாலகுமாரன்

சத்ரியன் இரண்டு பேரும் ஒன்றாக சேர்ந்தால் அந்த இடத்தில் தர்மம் முன் நிற்கும். தர்மத்தின் பொருட்டு சண்டையிடுகிறோம் என்று தெரிந்தால் ஜெயிப்பது நிச்சயமாகும்."

"அப்படியா, பிராமணர் அவ்வளவு உயர்வா?"

"ஆமாம். உயர்வுதான். நான் இப்போது குலம் பற்றிப் பேசவில்லை. பரம்பரை பற்றிப் பேசவில்லை.. குணம் பற்றிப் பேசுகிறேன். யார் ஒழுக்கமாகவும், அடக்கமாகவும், பொறுமையாகவும் இருக்கிறாரோ அவரே உயர்ந்தவர். அவரை வெல்லுதல் எளிதில்லை."

''எப்படிச் சொல்கிறாய்? என்ன உதாரணம்?"

"வசிஷ்டர் என்ற ஒரு மகரிஷி இருந்தார். அவரிடம் காமதேனு என்ற பசு இருந்தது. அந்தப் பசு விரும்பிய உணவுகளை கொடுக்க வல்லது. வசிஷ்டர் அந்தப் பசுவின் உதவியால் மிகப்பெரிய பாடசாலையை நிர்மாணித்தார். என்ன உணவு கொடுக்கப்பட வேண்டுமோ, எப்போது தரப்பட வேண்டுமோ, எவ்வளவு தரப்பட வேண்டுமோ அவ்வளவு அந்தப் பாடசாலையில் நந்தினி என்றும் அழைக்கப்படும் காமதேனுவால் தரப்பட்டது. வசிஷ்டரை தேடிக்கொண்டு விஸ்வாமித்திர மகரிஷி வந்தார். விஸ்வாமித்திரர் சத்திரிய வம்சத்தை சேர்ந்தவர். ஆனாலும் தபஸ்வி. கடும் தவங்களை மேற்கொண்டு சிறந்த வரங்களைப் பெற்றவர். விஸ்வாமித்திரரை வரவேற்று வசிஷ்டர் நந்தினியின் மூலம் அறுசுவை உணவிற்கு ஏற்பாடு செய்தார். விஸ்வாமித்திரரும் அவருடைய கூட்டமும் திகைத்து திணறும் அளவுக்கு விதவிதமான உணவுகள் பரிமாறப்பட்டன. உப்பிட்டவையும், இனிப்பிட்டவையும், லேசாக கசப்பவையும், புளிப்பிட்டவையும், சாறு நிரம்பியவையும், உறிஞ்சி குடிப்பவையும், மென்று உண்பவையும், எளிதாக விழுங்க வேண்டியவையும் உணவாக தரப்பட்டன.

இன்னும் இன்னும் என்று விஸ்வாமித்திருடைய மாணவர்கள் விரும்பிச் சாப்பிட்டார்கள். இப்படி சாப்பிட்டதே இல்லை என்று சொன்னார்கள். விஸ்வாமித்திரரும் அந்த உபசரிப்பில் திளைத்துப் போனார்.

இந்த காமதேனு ஒரு அற்புதம். ஒரு ரத்தினம். இது அரசனாகிய என்னிடம் இருப்பதல்லவா நல்லது! காட்டிலே வெறும் பாடசாலை நடத்திக் கொண்டிருக்கின்ற நீங்கள் உங்கள் மாணாக்கர்கள் மூலமே உணவு ஏற்பாடு செய்து கொள்ளலாம். ஆனால், பெரும் படையும், நீளமும், அகலமுமான தேசம் கொண்ட எனக்கு காமதேனு பெரும் உதவியாக இருப்பாள். எனவே, தயவு செய்து காமதேனுவை என்னோடு அனுப்புங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.



வசிஷ்டர் வாய்விட்டு சிரித்தார். ''இன்னும் உங்களுக்கு அமைதி ஏற்படவில்லை என்பதை அறிகிறேன். நான் எதற்கும் சொந்தக்காரன் அல்ல. காமதேனுவை நான் கட்டிப் போடவில்லை. காமதேனு தானாக என்னிடம் வந்து சேர்ந்தாள். அவளாக உதவி செய்து கொண்டிருக்கிறாள். இது எனக்குச் சொந்தமாக இருந்தால்தானே உங்களுக்கு கொடுப்பதற்கு! காமதேனு இங்கு இருக்கிறாள். விருப்பப்பட்டால் உங்களோடு வருவாள்" என்று சொன்னார்.

"உங்கள் விருப்பம் என்ன?'' விஸ்வாமித்திரர் கேட்டார்.

''எனக்கு விருப்பம் என்று இல்லை. எதையும் என்னுடையது என்று நான் கருதவில்லை" என்று அமைதியாக பதில் சொன்னார் வசிஷ்டர்.

"அப்படியானால் காமதேனுவை நான் அழைத்துப் போகிறேன்."

"முடிந்தால் செய்யுங்கள்"

''முடியாத காரியமா அது'' என்று காமதேனுவின் கொம்பில் கை வைத்து இழுக்க காமதேனு உதறி வேறு பக்கம் போயிற்று. விஸ்வாமித்திரருடைய படைகள், மாணவர்கள் அதைச் சூழ்ந்து கொண்டார்கள். கயிறு வீசி இறுக்கினார்கள். இழுத்தார்கள். காமதேனுவை அவர்களால் அசைக்கக்கூட முடியவில்லை. மிகவேகமாக

சவுக்காலும், தடியாலும் அதன் முதுகில் அடித்தார்கள். காமதேனு அலறியது. முன்னும் பின்னும் அலைந்தது. வசிஷ்டரிடம் போய் ‘என்னை நீங்கள் காப்பாற்ற வேண்டாமா?’ என்று கேட்டது.

“நான் காப்பாற்றுகின்ற திறன் உடையவன் அல்ல. நான் பொறுமையைத்தான் என்னுடைய குணமாகக் கொண்டிருக்கிறேன். அமைதியைத்தான் என் வாழ்க்கையாக நடத்திக்கொண்டிருக்கிறேன். உன்னை நீதான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்” என்று சொல்ல, காமதேனு கழன்று அடித்து ஹுங்காரம் இட்டது. அதன் மூச்சுக் காற்றிலிருந்து போர் வீரர்கள் தோன்றினார்கள். நெருப்பும், ஊதற்காற்றும் அந்த இடத்தை நிறைத்தன. என்ன முயன்றும் விஸ்வாமித்திரரால் காமதேனுவை கைக்கொள்ள முடியவில்லை.

ஆனால், இந்தக் காமதேனு மிகப் பிரியமாக வசிஷ்டரை ஒட்டி நிற்கிறாள். தன்னுடைய படைபலத்தைவிட கெட்டிக்காரத்தனத்தை விட, தபோ பலத்தைவிட, பிரம்ம தேஜஸ்தான் மிகப் பெரியது. அமைதியும், பொறுமையும்தான் மிக உறுதியான ஆயுதம். அந்த பிரம்மதேஜஸ் இல்லாததால்தான் தன்னால் காமதேனுவை கைக்கொள்ள முடியவில்லை என்று புரிந்து கொண்டார் விஸ்வாமித்திரர். பிரம்மதேஜஸ் அடைவதற்குண்டான தவத்தை மேற்கொள்ள அங்கிருந்தே தன் படைகளை பிரிந்து சென்றார். அர்ஜுனா, உனக்கு இதை மிக முக்கியமான விஷயமாகச் சொல்கிறேன், உன்னுடைய அஸ்திரவித்தை மட்டுமே உன்னை காப்பாற்றாது. செயற்கரிய செயல்களை நீ செய்ய வேண்டுமென்றால் ஒரு அந்தணனுடைய துணையை நீ கொள்ள வேண்டும். அவருடைய புத்தியை வரித்துக்கொள்ள வேண்டும். புரோகிதன் இல்லாது ஒரு சத்திரியன் இருக்கலாகாது.”

> **யார் ஜெயிக்கக் கூடியவனோ அவனே அபயம் அளிக்கத் தகுந்தவன். உன்னுடைய தனுர் வேதம் மிக அற்புதமாக இருக்கிறது. எவராலும் ஜெயிக்கப்பட முடியாதவனாக நீ இருக்கிறாய். உன்னுடைய வீரத்தை பார்த்து உன்னை அர்ஜுனன் என்று புரிந்து கொள்கிறேன்.**

“எனக்கான புரோகிதன் யார்?” கந்தர்வனை அர்ஜுனன் கேட்டான்.

“தௌமியர் என்ற அந்தணர் இருக்கிறார். அவர் உனக்கு வழி சொல்லுவார்.

கந்தர்வன் அர்ஜுனனை அணைத்து உச்சி முகர்ந்து ஆசீர்வதித்து விட்டுச் சென்றான். துரோணரால் தனக்கு கொடுக்கப்பட்ட அஸ்திரத்தை தன் நண்பன் கந்தர்வனுக்கு அர்ஜுனன் பரிசாக அளித்தான். மிகச் சிறந்த விஷயத்தை மிக எளிதாக கைமாற்றிக் கொடுக்கின்ற அந்தத் தன்மை அர்ஜுனனுக்கு அந்தக் கதையை கேட்ட மாத்திரத்திலேயே வந்தது. அவர்கள் தொடர்ந்து பயணப்பட்டார்கள்.

பாஞ்சால தேசம் அவர்களை வரவேற்றது. பெரிய உயர் மாட மாளிகைகள் நிறைந்த நகரம். நடுவே கோட்டை. கோட்டைக்கு நடுவே அரண்மனை. அரண்மனையைச் சுற்றி பல மாளிகைகள். அரண்மனைக்கு நடுவே தோட்டங்கள். தடாகங்கள். நீர் வீழ்ச்சிகள். மலைச்சரிவிலிருந்து பார்க்கும் போது நகரம் பிரமாண்டமாக இருந்தது. நகரத்திற்குள் போகாமல் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதி நோக்கி பஞ்சபாண்டவர்கள் நடந்தார்கள்.

குயவர் சாலைக்குள் நுழைந்தார்கள். அங்குள்ள குயவர் வீடுகளுக்கு அடுத்து, மண் பாண்டங்களை அடுக்கி வைக்கும் பெரும் கொட்டகைகள் உண்டு. வெயிலில் உலர வைத்த பானைகளை நெருப்பில் வாட்ட எடுத்துப் போகும் முன்பு அசையாமல் வைப்பார்கள். மழைச்சாரல் பட்டால், பனியின் ஓதம் இறங்கினால் பாத்திரம் கெட்டுப் போகும் என்பதால் அவற்றை பெரும் கொட்டகைக்குள் அடுக்கி வைப்பார்கள். எடுத்துக்கொண்டுபோய் சூளையில் வைத்து சுட்டுக்கொண்டு வந்தவுடன் வெயிலில் வைப்பார்கள்.

அந்த பச்சை மண் பாண்டங்கள் வைக்கும் இடத்தில் எப்பொழுதும் பத்து இருபது பேர் படுத்துக்கொள்ள இடம் இருக்கும். பானைகள் எதுவும் இல்லையென்றால் நாற்பது ஐம்பது பேர்கூட படுத்துக் கொள்ளலாம். ஒரு குயவர் வீட்டில் இப்படி என்றால், அந்தத் தெரு முழுவதும் ஆயிரம், இரண்டாயிரம் பேர் படுத்துக் கொள்ளலாம். ஊருக்குள் போக விரும்பாத அல்லது அதற்கு வசதி இல்லாத ஜனக்கூட்டம் இதுமாதிரி தங்கும். தச்சர்களுக்கும் கருமார்களுக்கும் கூட இப்படி கருவிகள் வைக்கும் இடம் உண்டு. இதையெல்லாம் விட உசிதம் மாட்டுத் தொழுவம். பசுக்களுக்கு நடுவே அமர்ந்திருப்பது ஒரு தனி சுகம். ஈக்கள், கொசுக்களிலிருந்து தப்பிக்க மெல்லிய துணியை மேலே போர்த்திக் கொண்டால் போதும். சுகமாக இரவு கழியும்.

மந்திரஜபம் செய்ய பசுதொழுவத்தைத் தவிர வேறு சிறந்த இடம் எதுவும் இல்லை. தூங்காமல் தூங்கி இருப்பதே அந்தணர்களுக்கு பிடித்த வேலை. அதுவும் நகரத்திற்குள் நுழைந்துவிட்டால் இந்த கூட்டத்தில் எவ்வளவு தூரம் ஆசார, அனுஷ்டானங்களை கைக்கொள்ள முடியும் என்று தெரியவில்லை. சத்திரியர்கள் ஆரவாரமாக இருக்கின்ற இடத்திலிருந்து விலகியிருப்பதும் நல்லதல்லவா.

ஆரவாரமாகத்தான் இருந்தது பாஞ்சாலதேசம். துரியோதனன், துச்சாதனன், கர்ணனிலிருந்து பல்வேறு தேசத்து மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து இறங்கியிருந்தார்கள். நல்ல நாள் பார்த்து கிளம்பி இருப்பார்கள் போலும். கிட்டத்தட்ட அனைவரும் ஒரே நேரத்தில் உள்பக்கம் குவிந்தார்கள். துருபதனுடைய அதிகாரிகள் நாலாபக்கமும் ஓடி தகுந்த இடம் கொடுத்து, தகுந்த மரியாதை செய்து வரவேற்றார்கள்.

பஞ்சபாண்டவர்கள் நகரத்தின் விளிம்பில், ஜனங்களோடு ஜனங்களாக நின்று வருவோர் போவோரை சாதாரண மனிதர்களைப் போல வேடிக்கை பார்த்தார்கள். ஒரு மனிதனுக்கு மிக சந்தோஷமான நேரம். அவனுடைய உண்மையான அடையாள மற்று கும்பலில் கரைகின்ற நேரம்தான். அப்பொழுதுதான் மற்றவர் முகத்தை சரியாக பார்க்க முடிகிறது.

கர்வம் ததும்பிய துரியோதனனையும், கபடம் நிறைந்த துச்சாதனனையும், சிரிப்பும் செருக்குமாக இருந்த கர்ணனையும், பசுபாலனையும், ஜராசந்தனையும், அஸ்வத்தாமனையும் அவர்கள் தொலைவில் நின்று வியப்போடு பார்த்தார்கள். தோளோடு தோள் நின்று பழகியவர்கள், உள்ளங்கை தேய்த்து இறுக பிடித்து நின்றவர்கள் இப்போது தனியே வாகனத்தில் ஏறி அவரவர் பதாகை கொடி பறக்க போவதைப் பார்க்கும்போது களிப்பாக இருந்தது. உள்ளே குதூகலம் பொங்கியது. கர்ணன் குண்டடித்து விட்டான். சிசுபாலன் தூங்கிக்கொண்டு போகிறான், துச்சாதனனுக்கு முதுகு அரிப்பு போகவேயில்லை. துரியோதனன் அஸ்தினாபுரத்திற்கு அரசனாகி விட்டானா என்ன; இவ்வளவு இளைத்திருக்கிறானே என்றெல்லாம் சிரித்துப் பேசிக் கொண்டார்கள்.

மிகப் பெரிய பணக்காரர்கள் ஆண்டிகள் நிறைந்த சபையில் ஒரு ஓரத்தில் உட்கார்ந்திருப்பதைப் போல அந்த மாவீரர்கள் ஜனங்களோடு ஜனங்களாக மன்னர்களைப் பார்த்து ஆரவாரித்த வண்ணம் தங்களுடைய எளிமையை தாங்களே அனுபவித்துக் கொண்டு சந்தோஷமாக நின்றார்கள்.

மகாஜனங்களே, “சபைக்கு நடுவே திருஷ்டித்யும்னன் வாத்தியங்களை அடக்கி விட்டு



பேச ஆரம்பித்தான். இதோ என் சகோதரி, திரௌபதி வருகிறாள். அவளுக்கு சிறப்பான கணவனை தேர்ந்தெடுக்க துருபத மகாராஜா ஒரு உபாயம் செய்திருக்கிறார். எதிரே தனுஸ் இருக்கிறது. ஐந்து பாணங்கள் இருக்கின்றன. மேலே ஒரு சக்கரம் சுழல்கிறது. அந்த சக்கரத்திற்கு நடுவே ஒரு இலச்சினை இருக்கிறது. தனுர் வித்தை தெரிந்தவர்கள் வில்லில் நாண் ஏற்றி அந்த இலக்கை அடித்து வீழ்த்த வேண்டும். ஐந்து முறை உங்களுக்கு வாய்ப்பு தரப்படும். வித்தையில் தேர்ந்தோர் வருக. மற்றோர் வேடிக்கை பார்க்கலாம்” என்று சொன்னான்.

பேரழியான திரௌபதி அழகிய மலர் மாலைகள் அணிந்து சபைக்குள்ளே நாணத்தோடு பிரவேசித்தாள். அவள் கண்கள் பேசின.

சபை சத்திரியர்களால் நிறைந்திருந்தது. அதனாலேயே கூச்சல் அதிகம் இருந்தது. கர்ஜிப்பதும், கம்பீரமாக பேசுவதும், யாரும் கேட்கிறார்களோ இல்லையோ தனக்குத்தானே தன்னைத்தானே உயர்வாக தொடைதட்டிக்கொள்வதும் சர்வ சாதாரணமாக நடைபெற்றன. சத்திரியர்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்று அவர்களுக்குள்ளாகவே அந்தக் கூச்சலுக்கு சமாதானம் சொல்லிக் கொண்டார்கள். ஆய் ஊய் என்ற சப்தங்கள் அங்கு அதிகம் இருந்தன. எதற்கு என்றுதான் எவருக்கும் தெரியவில்லை. ஒருவர் ஒன்று சொல்ல, அதற்குமேல் இன்னொன்று சொல்லச் சொன்னதற்கு மேல் வேறு ஒருவர் பேச, அங்கு வெறும் உரத்த பேச்சுகளே நீண்டன.

(தொடரும்)



வில்லேந்தி வெற்றிகண்ட விஜயன்



மகாபாரதம்

22

சிசுபாலன் எழுந்து முன்னே போனதும் மற்ற வீரர்கள் ஆரவாரித்தார்கள். இரண்டுபேர் எழுந்து, "இருப்பா, நீ போய் வில் எடுத்து வளைத்துவிட்டால் எங்களுக்கெல்லாம் வாய்ப்பு இல்லாமல் போய்விடுமே. அதனால் எங்களைப் போன்றவர் முன்னே போனபிறகு நீ போகலாம்" என்று சொல்ல, அவன் அதை பாராட்டாக எடுத்துக்கொண்டு நாலாபுறமும் பார்த்து தொடை தட்டி, தோள் தட்டி வில்லுக்கு அருகே போனான். "சொல்வதைக்கேள். நீ போகாதே," என்று இரண்டு மன்னர்கள் தடுத்தார்கள். "அட, நீ போப்பா. நீ போய் வில் வளைத்து வா," என்று இன்னொருவர் சொல்ல, "இவனாவது வில் வளைப்பதாவது, வெறும் நடிகன், வீரனல்ல" என்று இன்னொருவன் சொல்ல, அவனைப் பார்த்து இவன் முறைக்க, இவனைப் பார்த்து அவன் முறைக்க அமைதியாக மற்றவர்கள் இந்த ஆரவாரித்தை ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

மன்னர்களுக்கு நடுவே இருந்த துவேஷம் அங்கே லஜ்ஜையின்றி வெளியே வந்தது. அந்த நேர பரத கண்டத்தின் அவலம் இதுவே.

"அண்ணா, ஏன் இவர்கள் இத்தனை

பரபரப்பாகவும், கூச்சமாகவும் இருக்கிறார்கள்?” அர்ஜுனன் சந்தேகத்தோடு யுதிஷ்டரை பார்த்து கேட்டான்.

“சுயநம்பிக்கை இல்லாதவனிடம்தான் இத்தனை பெரிய கூச்சல் இருக்கும். இன்னும் சில விநாடிகளில் தோல்வி ஏற்படப்போகிறது. அதற்கு முன்னால் ஜெயித்ததுபோல் கத்துவோமே. ஜெயித்துவிடுவோம் என்று கத்துவோமே என்று நாடகம் போடுகிறார்கள். அதைத்தவிர...” யுதிஷ்டிரர் பேச்சு நிறுத்தி அவர்களையே பார்த்தார்.

பீமன் ஆவலானான். “அதைத்தவிர?”

“ஷத்திரியர்கள் என்றால் இப்படி கூச்சலிட வேண்டும். வீரம் என்றால் இத்தனை சத்தம் வேண்டும் என்று இவர்களுக்கு யாரோ சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அல்லது பரம்பரை பரம்பரையாக இந்த தவறை செய்து வருகிறார்கள்.”

“வீரமும், சத்தமும் நெருங்கிய தொடர்பு உள்ளன அல்லவா?” அர்ஜுனன் சந்தேகம் கிளப்பினான்.

“முழக்கம் செய்வது வீரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், முழக்கம் செய்யாமலும் வீரம் காட்டலாம். வீரம் பலிதம் இல்லாமல் போனால் முழக்கம் ஆபாசமாக அல்லவா போய்விடும்!” தருமர் சொன்னதும் அர்ஜுனனும், பீமனும் தலையாட்டினார்கள்.

“அண்ணா, இங்கே இவர்கள் செய்யும் தவறு என்ன?” அர்ஜுனன் மறுபடியும் ஆவலாகக் கேட்டான்.

“தனுசுக்கு மரியாதை இல்லை,” யுதிஷ்டிரர் சாந்தமான குரலில் பேசினார்.

“தனுசுக்கு மரியாதையா!” பீமன் வியந்தான்.

“ஆமாம். நீ ஒரு காளையை பிடிக்கப் போகிறாய். அந்தக் காளையை உற்று கவனிக்க வேண்டாமா? அதன் நகர்வை அனுமானிக்க வேண்டாமா?”

“தனுசு நகராமல் அல்லவா இருக்கிறது.”

“தனுசு நகராது. அந்த தனுசுக்குள் ஒரு சக்தி இருக்கிறது. வளைக்க முடியாதது என்றுதானே அதற்கு பட்டம் கொடுத்திருக்கிறார்கள். வளைக்க முடியாது என்ற திமிரை அது கொண்டிருக்கிறதல்லவா? அந்த திமிரை கவனிக்க வேண்டாமா? எங்கு தொட்டால் வளையும் என்று கவனிக்க வேண்டாமா? தனுசை பார்க்காமல் தன் நெஞ்சை பார்த்துக்கொண்டு, தன் தொடையை பார்த்துக்கொண்டு, சுற்றி இருக்கின்ற சபையை பார்த்துக்கொண்டு ஆரவாரிப்பதில் என்ன லாபம்? அப்பொழுது தனுசு உன்னை எப்படி மதிக்கும், உனக்கு எப்படி வசப்படும்?”

பாலகுமாரன்

“புரிகிறது புரிகிறது.” அர்ஜுனன் கொஞ்சம் உரத்த குரலிலேயே பேசினான்.

“சகோதரர்களே வேடிக்கை பார்க்க வந்திருக்கிறோம். வேடிக்கை பார்ப்போம். எல்லாம் தெரிந்ததுபோல நீங்கள் பேசிக்கொண்டது என் காதிலும் விழுந்தது. அவர்களை சொல்லிவிட்டு நாம் அடக்கம் இல்லாமல் இருக்கலாமா? நாம் அந்தணர்கள். அடக்கமாக இருப்போம்,” என்று பின்னால் ஒரு கிழவர் மிக கம்பீரமாக பேசினார். பீமன் புருவம் நெறித்தான். அப்படியே பின்னால் கை கொடுத்து முன்னால் இழுத்து போட்டுவிடலாமா என்று நினைத்தான். அவன் உள்ளக்கிடக்கையை யுதிஷ்டிரர் எளிதில் புரிந்து கொண்டார். ‘வேண்டாம்’ என்றார்.

“இந்த அந்தணரும் கர்விதானே?”

“ஆமாம். சும்மா இருப்பது போன்ற கர்வம். அமைதியாய் இருப்பது போன்ற அகம்பாவம்.”

“உண்மையில் எப்படி இருக்க வேண்டும் அண்ணா?”

“நல்லவனாகவோ, கெட்டவனாகவோ வலிமை குறைந்தவனாகவோ, அன்பானவனாகவோ இல்லாமல் வெறுமே இருப்பது. இதையெல்லாம் தாண்டி இருப்பது. ஒரு வெறுமையில் இருப்பது. பிறரை மட்டும் அல்ல. உன்னையும் சேர்த்து வேடிக்கை பார்ப்பது அதாவது, வேடிக்கை பார்க்கின்ற உன் மனதையும் வேடிக்கை பார்ப்பது. அப்பொழுது கட்சி எடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியும்.”

“மனதை வேடிக்கை பார்ப்பதால் என்ன லாபம்?”

“பிரச்னை என்னவென்று புரியும். பிரச்னையை முழுவதுமாக அணுக முடியும்,” தருமர் விநாடி நேரம்கூட தாமதிக்காமல் பதில் சொன்னார்.

“அண்ணா நீர் ஞானி,” அர்ஜுனன் கைகூப்பினான்.

“இல்லை அர்ஜுனா. நான் இந்த புகழ்ச்சியில் சிக்க மாட்டேன். நான் யார் என்று எனக்குத் தெரியும். என்னை கவனித்தபடியேதான் இருக்கிறேன்.”

அர்ஜுனனும், பீமனும் உடனே தம்மை கவனித்தபடி இருந்தார்கள். எது எதிரே கவனிக்கப்படுகிறதோ, எதனால் கவனிக்கப்படுகிறதோ அதை கவனிக்கத் துவங்கினார்கள்.

“அயலை அறிவது அறிவா? அயலை அறியும் அறிவை அறிவது அறிவா?” தருமர் முத்தாய்ப்பாய் பேசினார்.

“அடடே, பேசிக்கொண்டே இருக்கிறீர்களே. நீங்கள் அந்தணர்கள்தானா?” பின்னால் இருக்கும்



அந்தணர் வேகமாக அலட்டிக்கொண்டார்.

பீமனுக்கு கோபம் தாங்கவில்லை. “இல்லை. நாங்கள் அந்தணர் இல்லை,” என்றான்.

“நினைத்தேன். நீங்கள் யார்?”

“நாங்கள் குயவர் தெருவிலிருந்து வருகிறோம்,” பீமன் உண்மையைச் சொன்னான். பின்னால் இருந்த அந்தணர் சற்று நகர்ந்து உட்கார்ந்துகொண்டார். யுதிஷ்டிரர் வாய் விட்டுச் சிரித்தார். கூட்டத்தின் எத்தனையோ சத்தங்களில் அவர் சிரிப்பொலியும் கரைந்து காணாமல் போயிற்று.

ஒரு விரல் இடைவெளி இருக்கும்போது சிசுபாலன் வளைத்த வில் எகிறி உயரேபோய் திரும்பி வந்து சிசுபாலன் மண்டையை தாக்கிற்று. இரண்டு கைகளாலும் தலையை பிடித்துக்கொண்டு அவன் தள்ளாடியபடி சபையை விட்டு வெளியேறினான்.

ஜராசந்தன் உள்ளே நுழைந்தான். சிசுபாலன் வாங்கிய அடிக்கும் ஜராசந்தன் நுழைவுக்கும் விதவிதமான கூச்சல்கள் எழுந்தன. இந்த முறை இன்னும் வேகமாக வளைக்கப்பட்டது. நாண் இழுக்கப்பட்டது. ஒருஎள் இடைவெளி இருக்கும்போது வில் படேர் என்று எகிறிற்று. சபையில் உள்ளவர்கள் தலையில் கை வைத்துக்கொண்டார்கள். ஆனால், வில் தரையில் விழுந்தது.

அடுத்தபடி துரியோதனன் முன்னே வந்தான். “துரியோதனன் மாவீரன்,” பின்னால் இருந்த அந்தணர் முன்னே எட்டிப் பார்த்து சத்தம் போட்டார்.

‘இங்கிருந்து போவதற்கு முன்பு இவன் இரண்டு பிருஷ்டத்தையும் கசக்கிவிடப் போகிறேன். நிமிரவே முடியாதபடி செய்து விடப் போகிறேன்’ பீமன் கங்கணம் கட்டிக் கொண்டான்.

அவன் எண்ண ஓட்டத்தை எளிதில் யுதிஷ்டிரர் அறிந்தார். கூடாது என்றார்.

“இவனைப்போய் மாவீரன் என்கிறாரே.”

“அது அவர் அபிப்ராயம். உனக்கேன் இவ்வளவு கோபம்?”

“ஒன்றுமே தெரியாது. ஆனால், தெரிந்தது போல் பேசுகிறார்.”

“அது அவருடைய இயல்பு. தெரிந்திருக்கிறது என்று திடமாக நம்புகிறார். இப்பொழுது எதை மறுக்கிறாய்? அவருடைய அபிப்ராயத்தையா, துரியோதனனின் வீரத்தையா? எதுவாயினும் அது உன் அபிப்ராயம். முடிவு என்ன என்பது சிறிது நேரத்தில் தெரிந்துவிடும்.”

“இப்போது என்ன செய்ய வேண்டும்? அவருடைய பேச்சுக்கு எதிரொலிக்கக் கூடாதா?”

“எதிரொலிக்கலாம். அது அபிப்ராயத்திற்கு அபிப்ராயம். ஆனால், உண்மை என்ன? உன் அபிப்ராயத்தையும் அவர் அபிப்ராயத்தையும் தாண்டி அல்லவா இருக்கிறது.”

“ஒருவேளை துரியோதனன் நாண் ஏற்றி விட்டால், அவர் அபிப்ராயம் சரியாகிவிடுமல்லவா? பீமன் தவறாகி விடுவானல்லவா? நாண் ஏற்றிவிட்டால் அவர் தவறாகி விடுவார். ஆனால், உண்மை என்பது தள்ளித்தான் இருக்கிறது. இவர்கள் இருவரிடத்திலும் இல்லை.”

“அதனால்தான் கேட்கிறேன். என்ன செய்ய வேண்டும்?”

“நிகழ்வுக்கு முன்பு அபிப்ராயம் சொல்வது வெற்றுப்பேச்சு. துரியோதனன் ஜெயித்தால், ‘அப்போதே சொன்னேன் அவன் ஜெயிப்பான் என்று’ என்று பேச்சு வரும். துரியோதனன் தோற்றால் ‘ஏதோ தவறாகி விட்டது. என்னவென்று தெரியவில்லை’ என்றும் பேச்சு வரும். முன்னும் பின்னும் நர்த்தனம் ஆடுவது வெறும் சொற்கள்தான்.”

> தனுசு நகராது. அந்த தனுசுக்குள் ஒரு சக்தி இருக்கிறது. வளைக்க முடியாதது என்றுதானே அதற்கு பட்டம் கொடுத்திருக்கிறார்கள். வளைக்க முடியாது என்ற திமிரை அது கொண்டிருக்கிறதல்லவா? அந்த திமிரை கவனிக்க வேண்டாமா?

“சொற்களற்று இருக்க முடியுமா?”

“விவேகி அப்படித்தான் இருப்பான். அயலை அறிவது அறிவா. அயலை அறியும் அறிவை அறிவது அறிவா? அறிவோனை அறி. ஹே, கிருஷ்ணா நான் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.” பீமன் தலையை பிடித்துக் கொண்டான்.

சிரித்தபடி யுதிஷ்டிரர் அவன் முதுகு தொட்டார்.

கூட்டத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லாமல் அந்த மூன்று சகோதரர்களும் பேசிக் கொண்டிருந்தார்கள். நகுல-சகாதேவன் தமையன்மார்களை கூர்ந்து கவனித்தார்கள்.

நகநுனி இடைவெளி இருந்தபோது வில் எகிறிற்று. இந்த முறை அடி துரியோதனன் நெஞ்சில் விழுந்தது. ஆனால், அவன் வலிக்காதவன்போல நடித்தபடி தன் இருப்பிடத்திற்கு வந்தான். எழுந்தான். சபையை விட்டு நகர்ந்தான். வேறு யாரேனும் வளைத்து விடுவார்களோ என்று விலகி நின்று கவனித்தான்.

“இப்பொழுது அபிப்ராயம் சொல்லலாமா?” பீமன் கேட்டான்.

“இல்லை. முடிந்த விஷயத்திற்கு ஏன் அபிப்ராயம்? அடுத்தபடி யார் வருகிறார் என்று பார்.”

கர்ணன் சபைக்கு நடுவே வந்தான். வில்லைப் பார்த்து கரம் கூப்பினான். நிமிர்த்தினான். அழுத்தி வளைத்தான். நாண் பூட்டப்பட்டு விட்டது என்று ஆரவாரமாக க்ஷத்திரியர்கள் எழுந்தார்கள். ஆனால், மயிரிழை வித்தியாசம் இருக்கும்போது வில் கைவிட்டு எகிறிற்று. நாணை விடாது பிடித்திருந்ததால் வில் வேறு எவர் தலையிலும் விழாமல் திரும்பி தலையில் விழுந்தது.

அர்ஜுனனுக்கு அந்த வில் புரிந்து போயிற்று. கர்ணனுக்கே முடியவில்லை. வேறு யார் எழுந்து வரப்போகிறார்கள்? திருஷ்டத்யும்னன் கவலையில் ஆழ்ந்தான். துருபதனுக்கு சோர்வு ஏற்பட்டது. இதுவரை ஆரவாரித்திருந்த க்ஷத்திரிய கூட்டம் அடங்கிற்று. அட, தேசத்திற்கு போவோமப்பா. பிற்பகல் என்ன உணவு தயார் செய்திருக்கிறார்கள் என்று பேச்சு திசை மாறிற்று.

அர்ஜுனன் எழுந்து சபைக்கு நடுவே போனான். பின்னால் உட்கார்ந்திருந்த கிழவர் என்ன இது என்பதுபோல் பார்த்தார்.

“இளவரசே இந்த தனுசை க்ஷத்திரியர்கள் தான் வளைக்க வேண்டுமா அல்லது வேறு வர்ணத்தாரும் முயற்சித்து பார்க்கலாமா.”

“யார் வேண்டுமானாலும் வளைக்கலாம். வீரம்தான் இங்கு முக்கிய குறிக்கோளே தவிர, குலப்பெருமை அல்ல. குலப்பெருமை பார்ப்பதென்றால் நான் ஏன் சுயம்வரம் வைக்கிறேன். எதற்கு தனுசை கொண்டு வந்து வைக்கிறேன்” என்று துருபதனின் மகன் சொல்ல, “நான் முயற்சிக்கட்டுமா” என்று அர்ஜுனன் அனுமதி கேட்டான்.

“அடேய் சிறுவா, உட்காரப்பா” என்று பின்னால் இருந்த கிழவர் கத்தினார் நிச்சயம் இவன் பின்பக்கத்தை நசுக்க வேண்டும் என்ற கோபம் பீமனுக்கு எழுந்தது. அவன் திரும்பி அந்தணரை முறைத்தான்.

“இந்தப் பையன் பாட்டுக்கு எழுந்துபோய் நிற்கிறான். இவனால் வில் வளைக்க முடியவில்லையென்றால் ஊரிலுள்ள அத்தனை அந்தணர்களுமல்லவா சிரிப்பாய் சிரிப்பார்கள். பார்ப்பனர்க்கு வந்த ஆத்திரத்தை பார்த்தாயா என்று நம்மையல்லவா குறை கூறுவார்கள். அடக்கமாய் இருக்க வேண்டியது இவர்களுக்கு மறந்து போயிற்றா. வந்ததிலிருந்து கவனித்துக்கொண்டிருக்கிறேன். ஓயாத பேச்சு. எப்படியெல்லாம் தத்துவம் கொட்டுகிறார்களய்யா!” யாரையும் பொதுவாக நோக்காது உரத்த குரலில் கத்தினார்.

“என்ன தவறு?” எதிர்பக்கத்திலிருந்து குரல் வந்தது. “அந்தணர்கள் முயற்சிக்கக்கூடாது என்று எங்கு எழுதியிருக்கிறது? அனுமதிக்க வேண்டியவரே சரி என்று சொல்லிவிட்டார். கூடாது என்று சொல்ல உமக்கென்ன யோக்கியதை வாயை பொத்திக் கொண்டிரும்.”

“வளைக்கவில்லையென்றால் அவமானமில்லையா?”

“வளைத்துவிட்டால் மிகப்பெரிய கௌரவம் இல்லையா?”

“வளைக்கலாமா, கூடாதா என்ற சபையின் அங்கீகாரம் தேவையில்லை. யார் அனுமதிக்க வேண்டுமோ அவர்கள் அனுமதித்து விட்டார்கள். ஆகவே இந்த இளைஞன் முயற்சி செய்யட்டும்.”

“நான் எழுந்து போகிறேன். இங்கு அவமானப்படத் தயாராய் இல்லை.” அந்த அந்தணர் எழுந்து துண்டு உதறி தன் எதிர்ப்பு காட்டி, சபையிலிருந்து நகர்ந்து வாசல் பக்கம் போய் அர்ஜுனன் என்ன செய்வான் என்று பார்த்துக் கொண்டிருந்தார்.

வளைக்க மாட்டான் என்பதும் அவரிடம் திடமாக இல்லை. வளைப்பான் என்ற எண்ணமும் ஏற்படவில்லை. உலகத்தில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது ஜனங்கள் இடதும் இல்லாமல் வலதும் இல்லாமல் இரண்டு பக்கமாகவும் இருக்கிறார்கள்.

“இந்தச் சிறுவன் வளைத்து விடுவானா” ஒரு அந்தணர் இன்னொரு அந்தணரைக் கேட்டார்.

“வந்துவிட்டோம் வேடிக்கை பார்க்க. வேடிக்கை பார்த்துவிட்டு எழுந்து போவோமய்யா. போகும்முன்பு பசியாறிவிட்டு நன்கு ஒரு தூக்கம் போட்டுவிட்டுத்தான் போக வேண்டும். அவர் அவருடைய காரியத்தில் கண்ணாக இருந்தார்.

“இந்த அந்தணன் வளைத்து விடுவானா?”

“அவன் அந்தணன் என்று எங்கே சொன்னான்? குயவர் தெருவிலிருந்து வருவதாக அல்லவா சொன்னான்.”

“ஆனால், முப்புரிநூலும், குடுமியும் தரித்திருக்கிறானே.”

“வேஷம் போட்டவனாக இருக்கலாம். அந்தணன்போல வேஷம் தரித்துக்கொண்டு வந்திருக்கலாம். நமக்கென்ன, வில் மேலே விழாது ஜாக்கிரதையாக உட்கார்ந்து கொள்வோம்.

“இவன்தான் கடைசி, பிறகு சோறுதான்” வேறு ஒரு அந்தணர் இடையில் புகுந்து பேசினார்.

வெள்ளை வெளேர் என்று அன்னம், எல்லா காய்கறிகளும் போட்டு கூட்டு, சின்ன சட்டி நிறைய நெய், பெரிய சட்டி நிறைய தயிர், இரண்டாம் முறையும், மூன்றாம் முறையும் அன்னம் பரிமாறுகிறார்கள். பருப்பு கலந்த காய்கறி குழம்பும், தயிர் கலந்த அன்னமும் எத்தனை சுவையாக இருக்கின்றன.

அர்ஜுனன் வில்லை வலம் வந்தான். கைகூப்பினான். வில்லில் உள்ள சக்தி அர்ஜுனனை பணிந்தது. வணக்கம் சொல்பவருக்கு வணக்கம் சொல்வது இயல்பு. வணங்கத்தக்கது உயிர் மட்டும் அல்ல. அஃறிணையிலும் உயிர் உண்டு. அந்த அஃறிணையும் உங்களோடு பேசும். வாசற்கதவை வருடிவிட்டுப் போவது நல்ல பண்பாடு. வாசற்கதவு தன்னைத் தாண்டுபவர்களோடு பேசும். ஜலப்பாத்திரத்தை நெஞ்சில் வைத்துக் கொள்வது நல்லது. அந்த ஜலத்தின் குளுமை நெஞ்சைத் தொடும். நெஞ்சு ஜலப்பாத்திரத்திற்கு அன்பு சொல்லும். வடிவம் இல்லா எல்லா விஷயத்திற்கும் ஒரு சக்தி இருக்கிறது. அந்த சக்தியை தீண்டுதல் சந்தோஷம் தரும்.

அர்ஜுனன் குனிந்து வில்லை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டான். நிமிர்த்தினான், கால் கட்டை விரலால் அடிப்பாகத்தை அழுத்தினான். மெல்ல மெல்ல அழுத்திக்கொண்டு வருவது என்பது எல்லோரும் செய்வது. அதை நாம் செய்யக் கூடாது என்று தெளிவாக இருந்தான். பளிச்சென்று அழுத்தி நாணை சுற்றினான். வில் வசப்பட்டது. மெல்ல மெல்ல அழுத்தினால் சக்தி ஒரு இடத்தில் நின்றுவிடும். முழுபலத்தோடு மேல் நுனியை அழுத்தினால் சக்தி சட்டென்று தலைகுனியும். அந்த அஃறிணை வில் அழுத்தம் தாங்காது தலைகுனிந்து நாணை ஏற்றது. அவன் நாணை இழுத்து டங்காரம் செய்தான். சபை அதிர்ந்தது. ஹா என்று அத்தனை பேரும் எழுந்து நின்று வேடிக்கை பார்த்தார்கள். ஐந்து அம்புகளையும் நாணில் சொருகி இழுத்தான்.

“ஒவ்வொன்றாய் செய்யலாமே” பின்னால் இருந்த அந்தணர் இப்போது கட்சி மாறி பேசினார். முழங்கையால் இடித்துத் தள்ளிவிடலாமா என்று பீமனுக்கு கோபம் வந்தது.

ஐந்து பாணங்களும் நாணில் மாட்டி குறி பார்க்கப்பட்டன. இழுத்து வளைத்து லட்சியத்தை நோக்கி அவன் வில்லை திருப்பினான். சக்கரம் முன்னிலும் வேகமாக சுழலுவதுபோல் இருந்தது. அடித்து விடுவானோ என்ற பயத்தில் துருபதனின் மகன் கைகாட்ட சக்கரத்தின் சுழல் அதிகரிக்கப்பட்டது. சக்கரத்தின் சுழல் அதிகமாக இலக்கு இப்போது தெளிவாகத் தெரிந்தது. அழுத்தி நாண் இழுத்துவிட்டதும் சக்கரத்திற்கு நடுவே பாணங்கள் பாய்ந்தன. ஐந்தும் இலக்கை தாக்கிற்று. சக்கரம் சிதறிற்று. லட்சினை நின்று நிதானமாய் மூன்று நான்கு துண்டுகளாய் உடைந்து தரையில் விழுந்தது.

திரெளபதி துள்ளி எழுந்தாள். துருபதன் கை உயர்த்தி ஆசீர்வதித்தான். திருஷ்டத்யும்னன் முன்னே வந்து அர்ஜுனனை தழுவிக் கொண்டான். சொல்லொணா அளவுக்கு அந்த இடத்தில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டன. பீமன் அர்ஜுனனுக்கு அருகே போய் நின்றான். யுதிஷ்டிரர் அடுத்த பக்கம் போய் நின்றார். நகுல-சகாதேவர் அவர்களுக்கு அடுத்து நின்றார்கள். சபையில் தனித்த இடத்தில் பகவான் கிருஷ்ணரும், பலராமரும் அருகருகே நின்று பஞ்ச பாண்டவர்களை ஆவலுடன் பார்த்தார்கள்.

“அவர்கள்தான்... அவர்கள்தான்... அவர்கள்தான்... கிருஷ்ணர் மூன்று முறை பலராமரிடம் திரும்பி பேசினார். பலராமர் தலையசைத்தார். அந்த ஐவரும் அந்தணர்கள் அல்ல. அவர்கள் யார் என்பது கிருஷ்ணருக்கும், பலராமருக்கும் தெரிந்துவிட்டது. மேற்கொண்டு என்ன நடக்கும் என்று அவர்கள் காத்திருந்தார்கள். ஆசனத்தை விட்டு அசையாது இருந்தார்கள்.

(தொடரும்)

ஐவருக்கு மனைவியாவது தர்மத்துக்கு உட்பட்டதுதான்!



திரௌபதி துள்ளி வந்து அர்ஜுனன் கழுத்தில் மாலையிட்டாள். நமஸ்கரித்தாள். இனம் புரியாத ஒரு சந்தோஷம் அவள் வயிற்றில் சிறகடித்தது. யாரை மணக்கவேண்டுமோ அவரைத்தான் மணந்திருக்கிறோம் என்பதாக எண்ணம் தோன்றியது. எல்லா நினைவுகளுக்கும் காரணம் தேட வேண்டிய அவசியம் இல்லை. காரணமே இன்றி சில நினைவுகள் சந்தோஷமாய் நம்முள் மலரும். காரணம் பிற்பாடு தெரிய வரும்.

“வெற்றி வெற்றி வெற்றி. அந்தணர்களுக்கு வெற்றி. திரௌபதி அந்தண இளைஞனை மணந்துவிட்டாள். அந்தண குலத்திற்கு வந்துவிட்டாள்” பின்னால் நின்ற கிழவர் தாறுமாறாக ஆடினார்.

“நாங்கள் குயவர் தெருவிலிருந்து வருகிறோம்” உறுமலாக பீமன் பதில் சொன்னான்.

‘‘நானும் அங்கிருந்துதானய்யா வருகிறேன். குயவர் தெருவிலிருந்து வந்தால் குயவர் என்றாகிவிடுமா. அந்தணர்களுக்கு குயவர் தெருவில் படுக்க வசதி உண்டு. அப்படித்தானே அங்கு போயிருக்கிறீர்கள்!”

‘பிறகு ஏன் விலகி உட்கார்ந்தீர்?’ சொல்ல வாயெடுத்தான்.

“இவர் வெறும் திண்ணை பேச்சுக்காரர். இவரோடு தகராறு எதற்கு?’’ மெல்ல யுதிஷ்டிரர் அதட்டினார்.

“அந்தணர்கள் என்றால் இந்த க்ஷத்திரியர்களுக்கு இளக்காரம். தவம்தானய்யா முக்கியம். தவம்தான் அந்தணர் பலம். அது திரும்பத் திரும்ப சொல்லப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அகத்தியர் கடலை குடிக்கவில்லையா? பரசுராமர் க்ஷத்திரியர் கண்களில் விரல்விட்டு ஆட்டவில்லையா? அதேபோல இந்த இளைஞன் திரௌபதியை மணந்து கொண்டான். வாழ்க, வாழ்க, வாழ்க அந்தணர் குலம்” அவர் எகிறினார்.

ஏதாவது காரணம் சொல்லி தன்னை முதன்மையாக்குவதில் மனிதர்களுக்கு எப்போதும் விருப்பம் உண்டு. திரௌபதியை தானே மணந்ததுபோல அந்த அந்தணக் கிழவர் ஆட்டம் ஆடினார்.

“இந்தத்துருபதனை கட்டி வைத்து உதைக்க வேண்டும்” துரியோதனன் உரத்த குரலில் முழங்கினான். மற்ற க்ஷத்திரியர்கள் அவனை



திகைப்போடு பார்த்தார்கள். "க்ஷத்திரியர்களை சுயம்வரத்திற்கு வரவழைத்துவிட்டு ஒரு அந்தணனுக்கு மகளைக்கொடுக்கிறானே. இதென்ன அயோக்கியத்தனம். க்ஷத்திரியர்களுக்கு இல்லையென்றால் யாருக்குமே இல்லையென்றுதானே ஆக வேண்டும்?"

பாலகுமாரன்

"இல்லை, அந்தப் பெண் விருப்பப்பட்டிருக்கிறாளே!"

"அந்தப் பெண்ணைத் தூக்கி நெருப்பில் போடுங்கள். க்ஷத்திரியனுக்கு தேவையில்லாதவள் வேறு எவருக்கும் தேவையில்லை," துரியோதனன் கூவினான். திருஷ்டத்யும்னன் வாள் உருவினான். யுதிஷ்டிரர் அவனை அமைதியாக இருக்கும்படி கூறினார். "இனி அவளை காப்பாற்ற வேண்டியது அவள் கணவன் பொறுப்பு. கவலைப்பட வேண்டாம்" என்று சாந்தப்படுத்தினார்.

அர்ஜுனன் சபையை விட்டு வெளியேறினான். திரௌபதி அவனைப் பின்தொடர்ந்தாள். சபை விளிம்பிலிருந்து திரும்பி நின்று தகப்பனைப் பார்த்து தலை குனிந்து கைகூப்பினாள். தமையனைப் பார்த்து வணக்கம் சொன்னாள். முகம் மலர்ந்திருந்தது. நடையில் சந்தோஷம் இருந்தது. தகப்பனும், தமையனும் ஆசிர்வதிக்க, அவள் கணவனின் வலதுபுஜத்தை பற்றியபடி வெளியே போனாள். க்ஷத்திரியர்கள் ஹுங்காரம் செய்தார்கள். ஆனால், எவருக்கும் அருகே வருகின்ற தைரியமில்லை.

"முன்னே போய் மடக்குவோம்" கர்ணன் கத்த, கிருஷ்ணரும், பலராமரும் எழுந்தார்கள். "அதெப்படி முன்னே போய் மடக்குவது, ஏன் மடக்க வேண்டும்? என்ன விதிமுறையோ அதன்படித்தானே சுயம்வரம் நடந்தது? சுயம்வரத்தில் யார் ஜெயித்தாரோ அவருக்குத்தானே திரௌபதி உரிமையாவாள்? இங்கே எல்லோரும் தர்மப்படி நடக்க அதர்மமாய் என்ன கூட்டம் போடுகிறீர்கள்" என்று கிருஷ்ணர் அதட்டினார். கர்ணன் பின்னடைந்தான். துரியோதனன் வாயடைத்தான். ஜராசந்தனும், சிசுபாலனும் பின்னடைந்தார்கள்.

சகோதரர்கள் தொடர, திரௌபதியின் கைப்பற்றி மிகுந்த குதூகலத்தோடு அந்த குயவர் சாலை நோக்கி நடந்தான் அர்ஜுனன். அவர்களைச் சுற்றி பெரும்கூட்டமாய் அந்தணர்கள் போனார்கள். எல்லோரும் அந்த ஓலை கொட்டகைக்குள் நுழைய வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். அத்தனை பேரையும் உள்ளே அழைத்துப்போவது இயலாது என்பதால் யுதிஷ்டிரர் வாயிலிலேயே நின்றார். அர்ஜுனனுக்கு அருகே திரௌபதி நின்றிருந்தாள். மற்ற சகோதரர்கள் வாசலை அடைத்துக்கொண்டு நிற்க, அந்தணர்கள் பின்பக்கம் இருந்தார்கள்.

> ஆத்மாவினுடைய பணி தர்மத்தை நிலைநாட்டல். தர்மத்தை ஆத்மா நிலைநாட்ட பஞ்ச பூதங்கள் மூலம்தான் முடிய வேண்டும். பஞ்சபூதங்களின் இருப்புக்கு ஆத்மாதான் காரணம். ஆத்மா இல்லாமல் பஞ்சபூதங்களோ, பஞ்சபூதங்களற்று ஆத்மாவோ இல்லை.

கன்னி கொண்டு வந்திருக்கிறோம் என்பது கனி கொண்டுவந்திருக்கிறோம் என்பதாய் குந்தியால் புரிந்துகொண்டாள் என்றும், பங்கிட்டு எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவள் உள்ளிருந்தபடியே சொன்னாள் என்றும் மகாபாரதக் கதை விவரிக்கிறது. பிக்ஷை கொண்டுவந்திருக்கிறோம் என்று தருமர் உரத்தக் குரலில் சொல்ல, பகிர்ந்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று குந்தி பார்க்காமல் பேசியதாக இன்னொரு கூற்று இருக்கிறது.

ஒரு சொல் சொல்லியாகிவிட்டது என்றால் அதைக் கடைபிடித்தே ஆகவேண்டும். காரணம் இல்லாமல் காரியம் இல்லை. அப்படி சொல்லப்பட்டது மிக முக்கியத்துவமான விஷயம். எல்லாமும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அந்தக் குடும்பத்தின் நியதி. இங்கே பங்கீடு என்பது இன்னொரு விஷயம். பாத்திரம் நிறைய சோறு என்றால் அதில் பாதி பீமனுக்கும், இன்னொரு பாதி குந்தி உட்பட ஐவருக்கும் விருந்தாகும். ஆனால், இங்கு சமமாக பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்கிறபோது அந்த சொல்லை அந்த சகோதரர்கள் ஏற்க வேண்டியதாயிற்று.

"திரௌபதி, அழகிய பெண்ணே, துருபதன் மகளே, என் தாயார் சொன்னதை கேட்டாயல்லவா. நாங்கள் ஐவரும் உனக்கு புருஷர்களாவோம். நீ எங்களுக்கு மனைவியாக இருக்க வேண்டும். இதை இப்போதே உன்னிடம் அறிவிக்கிறேன். உன்னுடைய மனதை தயார் செய்துகொள்" என்று நிதானமான குரலில் அர்ஜுனன் பேசினான்.

திரௌபதி திகைத்தாள். இதெப்படி என்று யோசித்தாள். கிருஷ்ணரும், பலராமரும்

அந்த இடத்திற்கு வந்தார்கள். பஞ்ச பாண்டவர்களை தழுவி வாழ்த்தினார்கள். அர்ஜுனனை கிருஷ்ணர் இறுக அணைத்துக் கொண்டார். கன்னங்களில் முத்தமிட்டார். இருவரும் ஒருவரை ஒருவர் அசையாது பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இது பேசுகின்ற நேரம் அல்ல. இதோ இந்த அன்பை ஆதரவை சொல்லியாகிவிட்டது. இனி வேறொரு சந்தர்ப்பத்தில்தான் உட்கார்ந்து பேச வேண்டும். பின்னால் பெரும் கூட்டம் இருக்க வேறு எதுவும் விவாதிக்க முடியாது. இது தர்மத்திற்கு உட்பட்டதுதான். இது மிக முக்கியமான செயல். சகோதரர்களுக்கிடையே எந்தவித பிரிவும் இருக்கக்கூடாது. எவர் பொருட்டும் வரக்கூடாது. ஏதேனும் காரணம் இருக்கலாம். இப்போதைக்கு தெரியாமல் போகலாம். பிற்பாடு தெரிய வரலாம்.

ஆனால், அவர்கள் அவ்விதம் வாழ தீர்மானித்துவிட்டால் அதை திரௌபதி ஏற்கத்தான் வேண்டும். தடுக்க திரௌபதிக்கு உரிமை உண்டு. அதை திரௌபதிதான் வெளிப்படுத்த வேண்டும். நிலைமையை புரிந்துகொண்டு திரௌபதி சம்மதித்தாள் என்றால் தடுப்பதற்கு எவராலும் இயலாது. யாருக்கும் அபிப்ராயம் சொல்ல அருகதை கிடையாது. புருஷனுக்கு பல மனைவிகள் இருப்பது உண்டு. ஒரு பெண்ணுக்கு பல புருஷர்களா, இது சரியாக இல்லையே! ஊர் குமிறிற்று. அதர்மம் அல்லவா என்று கூக்குரலிட்டது.

“இல்லையே இதில் எந்த அதர்மமும் இல்லை,” வியாஸர் திரௌபதிக்குச் சொன்னார். “இது முதல் தடவை அல்ல. இதற்கு முன்பும் நிகழ்ந்திருக்கிறது. சப்த ரிஷிகளுக்கு ஒரே ஒரு பெண் மனைவியாக இருந்திருக்கிறார்கள். வர்ஷிதை என்ற பெண் பத்து பிரதேஸுகளுக்கு பத்தினியாக இருந்திருக்கிறாள். நீங்கள் ஒன்றும் முன்மாதிரி அல்ல. இந்த விஷயத்தின் அடிப்படை சகோதரர்களின் ஒற்றுமையை குறிக்கிறது. மிகச்சிறந்த உன்னைப் போன்ற பெண் மணியை இவர்களில் ஒருவர் மட்டும் அடைவது மற்றவரை பலவீனப்படுத்தும். எதன் பொருட்டும் தங்களை பலவீனப்படுத்துவதை யுதிஷ்டிரன் விரும்பவில்லை. யுதிஷ்டிரன் உன்னை ஜெயித்திருந்தாலும்கூட இதுவே நடந்திருக்கும். பீமன் ஜெயித்திருந்தாலும்கூட இதுவே நடந்திருக்கும்.

எனவே, எந்தவித தயக்கமுமின்றி இவர்களோடு ரமித்திருப்பாயாக. இவர்கள் மூலம் உனக்கு நல்ல குழந்தைகள் பிறக்கட்டும்” என்று ஆசீர்வதிக்க திரௌபதி நாணினாள்.

“உங்கள் கட்டளையை மீற முடியாது இருக்கிறேன். இதற்கு சம்மதிக்கும் பொழுது ஒவ்வொரு புருஷனிடமும் தனித்தனியே அந்தரங்கமாக இருக்க விரும்புகின்றேனே தவிர, இவர்கள் எல்லோர் முன்பும் நிற்கின்ற நிலைமை வேண்டாம்,” என்று சொன்னாள். சகோதரர்கள் ஒரே குரலில் சரி என்று சொன்னார்கள்.

மகாபாரதத்தின் இந்த கடினமான பகுதி பல்வேறு விதமான விமர்சனங்களுக்கு ஆளாகியிருக்கிறது. ஆத்மா என்கிற திரௌபதியை ஐம்புலன்கள் என்கிற பஞ்சபாண்டவர்கள் ஸ்வீகரித்தார்கள். ஆத்மா இல்லாமல் ஐம்புலன்கள் இல்லை. ஐம்புலன்களை அடையாளப்படுத்தாமல் ஆத்மாவிற்கு மரியாதை இல்லை என்கிற தத்துவத்தை சொல்வதாக வியாக்கியானம் செய்வது உண்டு.

ஆத்மாவினுடைய பணி தர்மத்தை நிலைநாட்டல். தர்மத்தை ஆத்மா நிலைநாட்ட பஞ்சபூதங்கள் மூலம்தான் முடிய வேண்டும். பஞ்சபூதங்களின் இருப்புக்கு ஆத்மாதான் காரணம். ஆத்மா இல்லாமல் பஞ்சபூதங்களோ, பஞ்சபூதங்களற்று ஆத்மாவோ இல்லை. இருப்பது தர்மத்தின் பொருட்டு என்று தெள்ளத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. உபமானம், உபமேயம் என்று பார்க்கும்போது உவப்பாக இருந்தாலும், தினசரி வாழ்க்கையில் இந்த விஷயம் எங்ஙனம் கைக்கொள்ளப்படும், எப்படி அங்கீகரிக்கப்படும்? இது பின்பற்றத் தக்க விஷயமா. அல்லது புறக்கணிக்கத்தக் கதா என்கிற கேள்விகள் எழாமல் இல்லை. வாழ்வின் நோக்கம் என்ன என்பது தெளிவாக இருப்பின் இம்மாதிரியான விஷயங்களுக்கு நியாயங்கள் கற்பிக்கப்படும்.

பஞ்சபாண்டவர்களுடைய நோக்கம் என்ன என்பது மிகத் தெளிவாக அவர்களிடம் இருந்தது. அர்ஜுனன் இல்லாது துரியோதனனை ஜெயிக்க முடியுமோ, கர்ணனை அசைக்க முடியுமோ, பீமன் இல்லாது துச்சாதனனை, துரியோதனனை வீழ்த்த முடியுமோ, தருமர் இல்லாது இவர்களால் படை நடத்த முடியுமோ, நகுல

சகாதேவர்களின் துணையில்லாது அத்தனை பெரிய யுத்தத்தில் குதிரைகளையும், தேர்களையும் பழக்கப்படுத்த முடியுமோ, என்றெல்லாம் சந்தேகமும் வரும். இந்த ஐவர் மட்டும் போதாது. இதைத் தாண்டி அந்த ஆத்மாவிற்கு, இவர்கள் நோக்கத்திற்கு இறைபலம் தேவையாக இருக்கிறது. அதுவும் வந்து சேர்ந்திருக்கிறது.

ஆக, ஒரு தனி மனிதரின் ஆத்மாவோ, புலன்களோ காரிய வல்லமை உடையவை அல்ல. அவற்றுக்கு இறைவனுடைய சாரத்யமும் தேவைப்படுகிறது; இறைவனுடைய வழிகாட்டலும் தேவைப்படுகிறது. யுத்தத்தில் இறைவன் இறங்கவில்லை.

ஆனால், வழிகாட்டினான். புலன்கள்தான் யுத்தம் செய்தன. ஆத்மாவை முன்னிருத்தி சீறி எழுந்தன. என் ஆத்மாவை அவமானப்படுத்துகிறாயா என்று ஆங்காரப்பட்டன. ஆத்மா அவர்களை தட்டிக் கொடுத்து தூண்டியது. இறைவன் வழிகாட்டினான். எவ்வளவு பெரிய இயக்கம் இந்த பரதகண்டத்திலே அதர்மத்தை எதிர்த்து நடந்திருக்கிறது என்று பார்க்கும் போது இது யுகத்திற்கு யுகம் அவதரிக்க வேண்டிய அவதரிக்கக்கூடிய ஒரு விஷயம் என்பது தெளிவாகிறது.

மேற்பார்வைக்கு கணவன்-மனைவி என்கிற குடித்தன விவகாரத்திற்கு இதை வைத்துப்பார்க்கும் போது மிரட்சியாக இருக்கின்றதே தவிர, பூபாரம் குறைப்பது, உலகத்திலுள்ள க்ஷத்திரியர்கள் கொட்டம் அடக்குவது என்கிறபோது இந்த ஒற்றுமை தேவைப்படுகிறது.

இரண்டாம் உலகப்போரில் மிகப் பெரிய சக்தியை எதிர்த்து பல நாடுகள் ஒன்று சேர்ந்தன. ஒன்றாகக் குவிந்தன. அவையெல்லாம் ஒன்று சேர்ந்துதான் தர்மத்தை நிலை நாட்டின. அந்நியரின் மீது படையெடுப்பது தன்னுடைய இயல்பு என்று சொன்ன ஜெர்மனியை அடித்து நொறுக்கின. இரண்டாகப் பிளந்தன.

சமீபத்தில் நடந்த மிகப் பெரிய யுத்தத்திற்கே இந்த ஒற்றுமை தேவைப்படுகிறது எனில் பரதகண்டத்தின் முழு பலத்தையும் குறைப்பதற்கு க்ஷத்திரியர்களுடைய திமிரை அடக்குவதற்கு, க்ஷத்திரியர்களால் ஜனங்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்குவதற்கு இந்த ஒற்றுமை தேவைதான். எல்லா இடங்களிலும் பொதுவிதிகள் எல்லா நேரங்களிலும் கைப்பற்றப்படுவதில்லை.

> “ஒரு சொல் சொல்லியாகிவிட்டது என்றால் அதைக் கடைபிடித்தே ஆக வேண்டும். காரணம் இல்லாமல் காரியம் இல்லை. அப்படி சொல்லப்பட்டது மிக முக்கியத்துவமான விஷயம். எல்லாமும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்பது தான் அந்தக் குடும்பத்தின் நியதி.”

ஆனாலும், துருபதன் இதற்கு சம்மதம் இல்லாமல் தவித்தான். பெண்ணைப் பெற்ற தகப்பன் தன் மகளுக்கு ஐந்து கணவர்கள் என்பதை எவ்வாறு ஏற்பான்? அது விமர்சனத்திற்குரிய, நாணத்தக்க விஷயம் இல்லை என்பதை எப்படி தெளிவான்? வியாஸர் அவனுக்கு வேறு ஒரு கதை சொன்னார்:

கௌதமர் என்கிற மகரிஷிக்கு நளாயினி என்கிற ஒரு பத்தினி இருந்தாள். கௌதமருக்கு கடும் குஷ்டரோகம் இருந்தது. விரல்கள் சுருங்கி வந்தன. தோல்கள் பொடிப்பொடியாக உதிர்ந்தன. வாய் துர்நாற்றம் எடுத்தது. விலா எலும்புகள் வெளியே தெரிந்தன. உட்காருவதும், எழுவதும், நடப்பதும் மிகுந்த சிரமத்தின் பேரிலேயே நடைபெற வேண்டியிருந்தது. எந்த அருவறுப்பும் இல்லாமல் கண்பார்வை குறைந்து வரும் தன் புருஷனுக்கு நளாயினி சிஷ்ருஷை செய்தாள். ஒருமுறை கௌதமரின் விரல் ஒன்று துண்டாகி அவளுடைய உணவில் விழுந்தது. அவள் மிக கவனமாக அந்த விரலை எடுத்து வைத்து விட்டு அந்த உணவை உட்கொண்டாள்.

கௌதம மகரிஷி திகைத்துப் போனார். “உண்மையில் நான் வாய் துர்நாற்றமோ, குஷ்டரோகமோ, மங்கிய கண்பார்வை உடையவனோ அல்லது எழமுடியாதவனோ அல்ல. எனக்கு சகல வல்லமையும் உண்டு. உன்னை சோதிக்கவும், இப்படிப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள் என்று உலகத்திற்கு காட்டவும் நான் இந்த வேடத்தை மேற்கொண்டேன்.

பிரியமுள்ளவளே, நளாயினி, இதுவரை பொறுமையாக எனக்குச் செய்த அன்பின் பாற்பட்டு உன்னை கேட்கிறேன். உனக்கு என்ன வேண்டும் சொல்,” என்று கேட்டார்.

நளாயினி கை கூப்பினாள். சிரித்தாள். “நான் தனியாக எந்த காரியமும் செய்யவில்லை. இது என் இயல்பு. புருஷன் என்று ஒருவரை வரித்துவிட்ட பிறகு அவருடைய குற்றங்களை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. எதுவாயினும் ஏற்கவேண்டும் என்று எனக்கு சொல்லிக்கொடுக்கப்பட்ட பாடம். அந்தப் பாடத்தைதான் நான் கைக்கொண்டேன். நீங்கள் அப்படி இல்லை என்று தெரிகிறபோது மிகுந்த சந்தோஷமுடையவளாகிறேன். நீங்கள் ஐந்து அங்கங்களாக எனக்கு காட்சியளிக்கிறீர்கள். எனவே, நீங்களே எனக்கு ஐந்து புருஷர்களாக

என்னிடம் சேரும் வண்ணம், என் காமத்தை குறைக்கும் வண்ணம் ஈடுபட வேண்டும் என்று கைகூப்பி கேட்டுக் கொள்கிறேன். இந்த உடம்பு, மன சமாதானம் என்னை மேலும் உயர்நிலைக்கு கொண்டு போகும். கற்புக்கரசியாய் இருந்தவளுக்கு புருஷனால் பல்வேறு விதமான சுகங்களும், கௌரவங்களும் கிட்டும்போது அவள் வீடுபேறு அடைகிறாள். ஞானத்தின் உச்சியை தொடுகிறாள். வலிமையுள்ள புருஷனும், திறமையுள்ள புருஷனும், ஞானமுள்ள புருஷனும் தன்னிடம் அனுசரணையாக நடக்கிறபோது அதைவிட உத்தமமான ஒரு நேரம் அவளுக்கு வேறு எப்போதும் லயிப்பதில்லை. புருஷனால் அனுபவிக்கப்படும் இந்த திருப்தியே அவளை உச்சநிலைக்கு அழைத்துப் போகிறது. ஒரு பெண் தவம் என்று எதுவும் செய்ய வேண்டியதில்லை. அவளுக்கென்று தனித்த நியமங்கள் எதுவும் இல்லை. புருஷனை அனுபவிப்பதும், அவனுக்கு உதவிகள் செய்வதும், அவனால் ஆளப்பெறுவதும், அவனை ஆளுவதுமே அவளுக்கு தவமாகிறது. எனவே, எனக்கு அப்பேர்பட்ட பாக்கியத்தை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்," என்று சொல்ல, இந்த ஜென்மத்தில் அல்ல. உனக்கு மறுபிறவியில் ஐந்து புருஷர்கள் உண்டு. நானே உனக்கு புருஷனாக வருவேன் என்று அவளை ஆசீர்வதித்தார்.

இதுவே பழைய கதை என்று துருபதனனுக்கு வியாஸர் சொல்ல, அந்த விஷயங்களெல்லாம் நேரில் நடப்பதுபோல தெரிய, துருபதன் சமாதானமானான்.

அவர்கள் பாஞ்சால தேசத்தின் அரண்மனைக்கு போனார்கள். பாஞ்சால தேசத்தில் அவர்களுக்கு மிகப் பெரிய விருந்து அளிக்கப்பட்டது. ஊர் சுற்றிப் பார்த்தார்கள். அரண்மனைகளில் எல்லாம் ஏறி இறங்கி பார்த்தார்கள். மிகுந்த சந்தோஷத்தோடு அர்ஜுனன் அவளை தனித்த இடத்திற்கு கூட்டிக் கொண்டு போனான். அவனுடைய சந்தோஷமான முகம் மற்ற சகோதரர்களுக்கு நிறைவு தந்தது. ஒவ்வொருவரையும் தனித்தனியாக திரௌபதி பாணிக்கிரஹணம் செய்து கொண்டாள். ஒவ்வொரு இரவும் தனித்தனியாக சகோதரர்களோடு இருந்தும் அவள் கன்னியாகவே இருந்தாள் என்று மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மிகச் சிறந்த ஒரு பெண் தனக்கு மருமகளாக வந்த சந்தோஷத்தை குந்தி அனுபவித்தாள். துருபதன் அவர்களுக்கு செய்கின்ற மரியாதையைப் பார்த்து மனம் குளிர்ந்தாள். மொத்த பாஞ்சால தேசமும் தன் புதல்வர்களை கொண்டாடுவதை பார்த்து திருப்தியானாள். ஆனால், இவ்வளவு நல்ல கன்னிகைக்கு தங்கள் பக்கமிருந்து எதுவுமே செய்யவில்லையே என்ற துக்கம் அவளுக்கு இருந்தது.

மறுநாள் காலை வாசலில் எக்காளம் முழங்க, முரசு அதிர துவாரகையிலிருந்து பெரும் சீர் பொருட்கள் பாஞ்சால தேசம் நோக்கி வந்தன. நிறைய ஆபரணங்கள், பட்டாடைகள், படுக்கை விரிப்புகள், தலையணைகள், போர்வைகள், அழகிய கட்டில்கள், சிங்காரமான ஆசனங்கள், மதுக்குடங்கள் என்று பலதும் மாட்டு வண்டிகளிலும், யானைகளிலும், கோவேறு கழுதைகளிலும் அனுப்பப்பட்டன. எடுத்து மாட்டிக் கழற்றி கைகள் ஓய்ந்து போயின. அரண்மனையில் பல அறைகளில் கிருஷ்ணரின் சீர் துணிகள் அலங்கரித்தன. விசாலமான கூடங்களில் மறைப்பு கட்டி கட்டில்கள் போடப்பட்டன. பாஞ்சால தேசம் முழுவதுமே நெய்யின் வாசனையால் நிரம்பியது. பாலாடை கட்டிகளை ஆவலுடன் உண்டது.



இப்பேர்பட்ட சகோதரனை நான் அடைந்திருக்கும்போது எதற்காக துக்கப்பட்டேன் என்று குந்தி நாணினாள். மனதார கிருஷ்ணனை தழுவிக் கொண்டு அவன் நெற்றியில் முத்தமிட்டாள். சகோதரியின் முத்தம் கிருஷ்ணரை புன்னகை பூக்க வைத்தது.

பஞ்சபாண்டவர்களுடையது ஒரு நல்ல குடும்பம். 'கிருஷ்ணை' என்கிற திரௌபதியின் வருகையால் அவர்கள் துன்பங்களெல்லாம் ஒரு முடிவிற்கு வந்தன. அங்கே அஸ்தினாபுரத்தில் கலகங்கள் துவங்கின. ஆளாளுக்கு அபிப்ராயங்கள் சொல்ல ஆரம்பித்தார்கள். எதிர்த்து பேச ஆரம்பித்தார்கள். பஞ்சபாண்டவர்களிடையே ஒற்றுமை அதிகரிக்க, கௌரவர்களிடையே பிரிவினை வேகமாக தலைதூக்கிற்று. காற்றடிக்கும் திசைக்கு எதிர்திசையில் கடும் புழுக்கம் ஏற்படுவது இயற்கைதான். கடும் புழுக்கம் ஏற்பட்ட இடத்திலிருந்துதான் காற்று அடுத்த இடத்திற்கு நகரும். குளுமையாக்கும். இந்தமுறை தென்றல் காற்று பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தது.

(தொடரும்)

மகாபாரதம்
24

துரோகத்தை ஏற்றதாலேயே நல்லவரானவர்கள்!

கடும் நியமத்தோடும், பயத்தோடும், நம்பிக்கையோடும் செய்த யாகத்திற்கு பலன் இருக்கிறது. அந்த யாகத்தின் பலனில் ஒன்று நிறைவேறி விட்டது. அர்ஜுனனுக்காக திரௌபதி என்ற மகளை யாகத்தில் பெற்றது பலித்து விட்டது. பஞ்சபாண்டவர்கள் அரக்கு மாளிகையில் இறந்து விட்டார்கள். எலும்புக் கூடுகள் எடுக்க முடியாதபடி உஷ்ணமாக இருக்கின்றன என்றெல்லாம் சொல்லப்பட்டபோது, மொத்த வாழ்க்கையும் பொய்யோ என்ற துக்கம் ஏற்பட்டது. எல்லோர் மீதும் அவநம்பிக்கை ஏற்பட்டது. அந்தணர்கள் செய்கின்ற இஷ்டி யாகங்கள் நாடகமோ என்ற கவலை ஏற்பட்டது.

ஆனால், எதுவும் பொய்யில்லை. உண்மை மறைக்கப்பட்டு இப்போது மேகம் தாண்டிய கதிரொளி போன்று அற்புதமாக பிரகாசிக்கிறது. என் தவம் வீண் போகவில்லை. அது அபத்தம் இல்லை. வாழ்க்கையைப் பற்றிய அறிவு எனக்கு சரியாக இல்லை. சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்ற ஹோமங்களும், நியமங்களும் உன்னதமானவை.

இதோ அர்ஜுனன், மகளோடு விளையாடிக் கொண்டிருக்கிறான். மற்றவர்கள் பெரிய கூடத்தில் வெவ்வேறு மூலையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். தருமர் சேனாதிபதிகளோடும், மந்திரிகளோடும் ராஜதர்மம் பற்றி கேள்விகேட்டு தெளிவடைந்திருக்கிறார். பீமன் மல்யுத்த வீரர்களோடு அவர்கள் உணவுப் பழக்கங்கள் பற்றி விசாரித்து, உடற்பயிற்சி பற்றி அதை தெரிந்த குருமார்களிடம் விவரம் கேட்டுக் கொண்டிருக்கிறார். நகுல-சகாதேவரன் பிராமணர்களை நெருங்கி கோள்களைப் பற்றியும், குதிரைகளைப் பற்றியும் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களால் வெறுமே சோம்பித் திரிந்து இருக்க முடியவில்லை. இவர்கள் சுறுசுறுப்பால் அரண்மனை சுறுசுறுப்பாகி, அரண்மனை சுறுசுறுப்பால் நகரம் சுறுசுறுப்பாகி, நகரத்தின் சுறுசுறுப்பால் தேசம் சுறுசுறுப்பாகிறது.

பீமனுக்கு இந்த மீன் வேண்டுமாமே என்று சொல்ல, செம்படவர்கள் அதிகாலையில் கங்கைக் கரை இறங்கி நெய்மீனை தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நூல் எங்கே கிடைக்கும் என்று தருமர் விசாரிக்க தொலைதூரத்து அந்தணர்கள் வீடும் தட்டப்படுகிறது. ஓலையாக அல்ல. நினைவுகளாக அந்த நீதி சாஸ்திரம் இருக்கிறது என்றதும், அந்த அந்தணரை குடும்பத்தோடு அள்ளிக் கொண்டு வருகிறார்கள். தனியே அழைத்து தருமரோடு பேச வைக்கிறார்கள். நகுல சகாதேவருக்கு ஒவ்வொரு நாளும் ஒரு சபையே சுற்றி உட்கார்ந்து விஷயங்களை விவரித்துக்


ம.செ

கொண்டிருக்கிறது. கரும்பலகை முழுவதும் நட்சத்திர கோளங்களைப் பற்றி கிரகங்களை நிலைநிறுத்தி விவாதம் செய்கிறார்கள். அந்த விவாதம் நகரத்திற்கு படர்ந்து, நகரத்திலிருந்து, மற்ற ஊர்களுக்கும் போகிறது. இப்போது சாமானியர்களுக்கும் நல்ல ஹோரை, கெட்ட ஹோரை என்பதெல்லாம் தெரிகிறது.

திரௌபதியை அணைத்தபடி அர்ஜுனன் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறான். மனைவி என்ன கட்டளை இட்டாலும் செய்து கொண்டிருக்கிறான். கூடத்தில் இன்னும் அட்சதைத் துணுக்குகளும், ஔபாசன பானைகளும், பாலிகைக் குடங்களும், நிறைந்திருக்கின்றன. சந்தனமும், பன்னீரும், மகிழம்பூவும் மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன. இடையறாது சிற்றுண்டிகள் முன்னும் பின்னும் போய்க் கொண்டிருக்கின்றன. அரண்மனை சௌக்கியமாக இருக்கிறது. எப்போது இந்த ஒருபாதையும் ஜெயித்துவிட்டதோ அப்போது மறுபாதையும் ஜெயிக்கும். அர்ஜுனன் வெகுநிச்சயமாய் துரோணரைக் கொல்வான். திரௌபதியின் திருமணம் முடிந்தது என்றாலேயே துரோணர் இறந்தது போலத்தான்.

‘துரோணா நான் ஜெயித்து விட்டேன். நான் ஜெயித்து விட்டேன். உன்னைவிட வலிவு மிகுந்தவன் என்பதை நிரூபித்து விட்டேன். அஸ்திர வித்தையில் ஜெயிக்க முடியவில்லை. என் ஆன்ம பலத்தால் ஜெயித்தேன். என்னை அந்த வழிக்கு தூண்டிய உனக்கு நன்றி சொல்கிறேன். நல்லவர்களுடைய வருகையால் என் தேசம் பரிபூரணம் அடைந்தது. நல்லவர்கள் வருவதற்கு என் தவம் உபயோகம் செய்தது. புத்திமான்களாகிய அந்தணர்களுடைய உதவியும், என் ஒழுக்கமும் என் தேசத்திற்கு சுகத்தை கொண்டு வந்திருக்கின்றன. இனி என் மரணம் நிம்மதியானது’ என்று அமைதியடைந்தான். நினைத்த எண்ணங்கள் நிறைவேறிய பிறகு இறப்பது என்பது வெகு சில புண்ணியாத்மாக்களுக்கே கிடைக்கும். துருபதன் புண்யாத்மா.

ஆனால், அஸ்தினாபுரத்தில் மிகப் பெரிய கலக்கம் தோன்றியது. லட்சியத்தை அடித்து கீழே வீழ்த்தி காண்டீபம் என்ற அந்த தனுசோடு நின்றவன் அர்ஜுனன். அவனை எதிர்க்க முடியாமல் அவனுக்கு அருகே நின்று அவனை காத்தவன் பீமன். விலகி கைகட்டி அதே நேரம் போருக்குத் தயாராக இருந்தவன் யுதிஷ்டிரன். துடிப்பாக சுற்றிச் சுற்றி வந்தவர்கள் நகுல சகாதேவர்கள்.

ஆக, அரக்கு மாளிகை பயன் தரவில்லை. புரோசோனன் ஏமாற்றி விட்டான். துரியோதனன் கோபத்தில் இறைந்தான். இந்த சூழ்ச்சி முடிந்து போயிற்று. அதனால் என்ன, அரசருக்கு அரசர் சூது செய்து வெற்றி கொள்ளலாம் என்று விதி இருப்பினும் அந்த சூது தோற்று விட்டால் சோர்ந்து விடலாகாது. பீமனுக்கு தூண்டில் போடுகிறோம். மீன் முள்ளை முழுங்கி வெளியே எடுக்கும்போது சுக்கி நகர்ந்து போனால் கவலைப்படுகிறோமோ? இன்னொரு முள்ளை தைத்து வீச வேண்டும். மீனுக்கு காத்திருக்க வேண்டும்.

பஞ்ச பாண்டவர்களை அடித்து ஜெயிக்க முடியுமா? எனக்குத் தோன்றவில்லை. அந்த வலிமை இந்தப் பக்கம் இருப்பதாக நான் நினைக்கவே இல்லை. அவர்கள் காட்டிய பராக்கிரமத்தில் பாதிகூட நம்மிடம் உள்ளவர்கள் தீர்க்கவில்லை. எனவே, சூழ்ச்சிதான் சிறந்த வழி.

அவர்களுக்கு மிகப்பெரிய அடைக்கலம் கிடைத்துவிட்டது. யுதிஷ்டிரன் துருபதன் மடியில் அமர்ந்திருக்கிறான். அர்ஜுனனிடம் பாஞ்சால தேசமே மயங்கிக் கிடக்கிறது. அவன் வீரத்தைக் கண்டும், அவன் வீரத்தால் கொடுக்கும் கொடையைக் கண்டும் மிகச் சாதாரணமாக கீழே இறங்கி சாமான்யர்களிடம் பேசுவதைக் கண்டும் பாஞ்சால தேசமே கிறங்கிக் கிடக்கிறது. அதிகாரிகளை பெயர் சொல்லி அழைத்து குடும்ப விசாரணை செய்த அவன் எளிமை வெகு எளிதில் சகலரையும் கவர்ந்து விடுகிறது. தன் பெயர் அர்ஜுனனுக்கு ஞாபகம் இருக்கிறது என்பதே ஓர் அதிகாரி வாழ்நாள் முழுவதும் அவனுக்கு அடிமையாக போதுமானதாயிற்று. இவையெல்லாம் பாண்டவர்கள் எங்கு கற்றார்கள் என்பதே ஆச்சரியமான விஷயம்.

ஆனால், மனிதர்கள் சூழ்ச்சிக்கு இரையாவார்கள். எவனொருவன் காலில் விழுந்து வணங்கி போற்றிப் பாராட்டுகிறானோ அவனே கொலை செய்யவும் வல்லவன். அவனை கொலை செய்பவனாக மாற்ற வேண்டும். துருபதனுக்கும் பஞ்ச பாண்டவர்களுக்கும் இடையே பொறாமை ஏற்படுத்த வேண்டும். திரௌபதியின் கோபத்தால் பாண்டவர்களுடைய ஒற்றுமை குலைய வேண்டும். மித்ரபேதம்தான் சிறந்த வழி. அதற்குண்டானதை யோசிப்போம் என்று சகுனி சொல்ல, “போர் மட்டுமே வழி” என்று கர்ணன் பேசும்போது விதுரர் அரண்மனைக்குள் நுழைந்தார். அவர்கள் ஒன்று கூடி திருதராஷ்டிரனை சந்திக்கப் போனார்கள். அரண்மனை பரபரப்பாக

இருக்கிறது என்பதை மட்டும் தெரிந்து கொண்டு, விஷயத்தைப்பற்றி முழு ஞானம் இல்லாத திருதராஷ்டிரன் விதுரரை வரவேற்றார்.

“கௌரவர்களுக்கு கீர்த்தி உண்டாயிற்று. கௌரவர்கள் ஜெயித்தார்கள்” என்று விதுரர் உரக்கச் சொல்ல, எங்ஙனம் என்று அவர் விசாரிக்க, பாஞ்சால தேசத்து கன்னிகையை கௌரவர்கள் மணந்தார்கள் என்று விதுரர் சொன்னார்.

“அப்படியா. நல்லது. திரௌபதியை சபைக்கு அழைத்து வா. அவளுக்கு ஆபரணங்கள் கொடு. உடைகள் கொடு. என் மருமகளை நான் வரவேற்க தயாராய் இருக்கிறேன் என்று சொல்” என்று சொல்ல, சகுனி அவருக்கு அருகே போய், “ஜெயித்தது பஞ்சபாண்டவர்கள்” என்று சொன்னார்.

‘‘கௌரவர்கள் என்று சொன்னாயே.’’

‘‘ஆமாம். பஞ்சபாண்டவரும் கௌரவர் வம்சம்தானே. அவர்கள் ஐவர் தனித்து இருப்பதால் பஞ்சபாண்டவர் என்று அழைக்கிறோம். உண்மையில் அவர்களுடைய வம்சம் எது? உன்னுடைய வம்சம்தானே அவர்கள்? உன் சகோதரன் புத்திரர்கள் உன் புத்திரர்கள்தானே. உன் வம்சம்தானே. உன் கோத்திரம் தானே. நான் சொன்னதில் என்ன பிசகு?” என்று கேட்க, திருதராஷ்டிரனுக்கு தன் தவறு புரிந்தது. ஆனாலும் வாய் விட்டு சொன்ன சொல்லை மாற்ற விரும்பாமல், ‘‘எனக்கென்ன, பஞ்ச பாண்டவர்களாக இருந்தாலும் துரியோதனன் சகோதரர்கள்தான். ஒன்றுதான். நான் பஞ்சபாண்டவர்களையும் நேசிக்கிறேன். அவர்கள் ஜெயித்தது நான் ஜெயித்தது போலத்தான். அவர்களை இங்கே அழைத்து வரவேண்டும்’’ என்று பேசினார்.

விதுரர், ‘‘அங்ஙனமே ஏற்பாடு செய்கிறேன்.” என்று சொல்லி நகர்ந்தார்.

துரியோதனனும், கர்ணனும் வேகமாகப் போய் தங்கள் பெயர்களைச் சொல்லி திருதராஷ்டிரன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். “என்ன இப்படி செய்துவிட்டீர்கள்.” என்று துரியோதனன் கூச்சலிட ஆரம்பித்தான். கர்ணன் அவனை அமைதிப்படுத்தினான். “யுத்தம் ஒன்றே வழி, பராக்கிரமம் ஒன்றே பலனளிக்கும். ஆதரவு இல்லாது தனித்திருந்த அவர்களுக்கு இப்போது ஆதரவு கிடைத்துவிட்டது. துருபதன் தவிர யாதவர்களும் பஞ்ச பாண்டவர்களுக்காக உயிரையே கொடுப்பார்கள். சைன்னியம் இல்லாதவர்களுக்கு சைன்னியம் கிடைத்து விட்டது. துருபதன் சேனையும், யாதவ சேனையும் யுதிஷ்டிரனை தலைமை தாங்கி இந்தப் பக்கம் வருவார்கள். நாம் முன்னிலும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அந்த ஐவருக்கு இருக்கின்ற ஒற்றுமை நமக்குள் இருக்கிறதா என்று சோதித்து பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் யார், யார் துணை என்று இப்போதே தீர்மானம் செய்துவிட வேண்டும். அப்படி தீர்மானம் செய்து அவர்களுக்குண்டான பரிசுகளை அனுப்பி அவர்களோடு நம்முடைய நட்பை பேசியும், வெளிப்படுத்தியும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அர்ஜுனன் வில் வளைத்து பாணம் தொடுத்தபோது பீமனல்லவா பின்னால் நிற்கிறான். நாம் தனித்தனியாக அல்லவா போராடிக் கொண்டிருக்கிறோம். நமக்குள்ளே ஏன் ஒற்றுமை இல்லை என்பதை ஏன் சிந்திக்கக்கூடாது. ஏன் போர் என்று பறை அறிவிக்கக்கூடாது. உன்னை ஒழிப்பேன் என்று ஏன் சொல்லக்கூடாது? அதுதானே அரசருக்கு மரியாதை. அந்த தீர்மானம்தானே முக்கியம்! அவ்விதம் இல்லாது வெறுமே வரவேற்றும், வாழ்த்தியும், அட்சதை தூவியும் என்ன பயன்? என்னால் அவர்களை வணக்கம் செய்யக் கூட முடியாது. அவ்வளவு வெறுப்பாக இருக்கிறது. துரியோதனன் வெறுப்பை உள்ளே வைத்துக் கொண்டு தந்தை சொல்லுக்காக அவர்கள் மீது மலர் தூவ வேண்டும். இதைவிட கேவலமான ஒரு நேரம் ஓர் அரசனுக்கு கிடையாது.”

திருதராஷ்டிரன் துரியோதனன் பேச்சில் மயங்கினான்.

“என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய். விரைவாகச் செய். வாய்ப்பை நழுவவிடாதே” என்று சகுனி தூண்டி விட்டான். திருதராஷ்டிரனுக்கு மகனைப் பற்றிய கவலை அதிகரித்தது.

ஆனால், பீஷ்மரிடம் அபிப்ராயம் கேட்க வேண்டுமல்லவா. அவரை கேட்காமல், அவர் அனுமதிக்காமல் இங்கு எதுவும் செய்ய முடியாது. நாம் போர்

> **“பஞ்ச பாண்டவர்களை அடித்து ஜெயிக்க முடியுமா? எனக்குத் தோன்றவில்லை. அந்த வலிமை இந்தப் பக்கம் இருப்பதாக நான் நினைக்கவே இல்லை. அவர்கள் காட்டிய பராக்கிரமத்தில் பாதிகூட நம்மிடம் உள்ளவர்கள் தீர்க்கவில்லை. எனவே, சூழ்ச்சிதான் சிறந்த வழி.”**



என்று சொன்னால் விதுரர் சரி என்று ஒத்துக்கொள்வாரா? இந்நேரம் வரவேற்க கிளம்பி இருப்பாரே. “தடுத்து நிறுத்துங்கள். வரச் சொல்லுங்கள்.” விதுரருக்கும், பீஷ்மருக்கும் ஆள் போயிற்று.

அவர்கள் சபைக்கு வந்தார்கள். சபை அவர்கள் வருகைக்கு காத்திருந்தது. பீஷ்மர் கடுமையாகப் பேசினார். “போரா, அவர்களுடனா? இதென்ன அபத்தம்! ஒரு குலத்தில் உள்ளவர்கள் இரண்டாக பிரிந்து கொண்டு அடித்துக் கொள்வதை வேடிக்கை பார்க்கவா நான் இங்கு இருக்கிறேன்? போர் என்று சொல்வதையே மறந்து விடுங்கள். அதுவும் பஞ்சபாண்டவர்களோடு போர் என்பதை மனதிலிருந்து சுத்தமாக துடைத்தெறியுங்கள். யார் ஜெயிப்பார்கள், யார் வலிமையுள்ளவர்கள் என்பது இப்போது பேச்சல்ல. அவர்கள் உங்கள் சகோதரர்கள். இந்த ராஜ்ஜியத்தின் பெரும் பகுதி அவர்களுக்கு போக வேண்டியது நிச்சயம்.”

பாண்டு அரசாண்டிருந்ததை திருதராஷ்டிரன் இப்போது தலைமை ஏற்று நடத்தி வருகிறார். பாண்டுவின் புத்திரர்களுக்கு உண்டானதை நிச்சயம் தர வேண்டும். அதுதான் தர்மநீதி. கௌரவர்களுக்கு உண்டானதை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை இந்த அஸ்தினாபுரத்தை கௌரவர்களே வைத்துக் கொண்டாலும் அதாவது, துரியோதனர்களே வைத்துக் கொண்டாலும் பஞ்சபாண்டவர்களுக்கென்று தனி ராஜ்ஜியம் நீங்கள் தந்துதான் ஆகவேண்டும். பிரிக்க மாட்டேன் என்று சொல்வது பேதமை. பிரித்து தரவேண்டும் என்பதில் நான் உறுதியாகவும் இருக்கிறேன். அதைச் செய்தும் தீருவேன்.

இதற்கு எதிராக கர்ணன் பேசினாலும், சகுனி பேசினாலும், துரியோதனன் பேசினாலும், ஏன் திருதராஷ்டிரன் பேசினாலும்கூட நான் கடுமையாக எதிர்ப்பேன். தர்மத்திற்கு எதிராக நீங்கள் நடந்து கொண்டால் ஜனங்கள் இழிவாகப் பேசுவார்கள். ஏற்கனவே அரக்கு மாளிகை கட்டியது, அரக்கு மாளிகைக்கு தீ வைத்து, கொலை முயற்சி செய்தது எல்லாம் துரியோதனன் தான் என்ற எண்ணம் மக்களிடையே இருக்கிறது. அது கலகமாக மாறிவிடக் கூடாது. நீங்கள் அவர்களுக்கு துரோகம் இழைத்ததாலேயே பஞ்சபாண்டவர்கள் நல்லவர்களாகி விட்டார்கள். அய்யோ பாவம் என்ற பேச்சு அவர்கள் மேல் வந்துவிட்டது.”

பீஷ்மர் பேசியதை விதுரர் ஆமோதித்தார். பீஷ்மர் தொடர்ந்தார்.

“பராக்கிரமம் என்ற பேச்சை கர்ணன் மட்டுமே சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இந்த தேசத்தை கர்ணன் ஆளவில்லை. துரியோதனனுக்கு அந்த எண்ணம் வரவேண்டும். இடதா, வலதா என்று ஒரு அரசன் இருக்கும்பொழுது இந்த பராக்கிரம பேச்சு எடுபடாது. சூழ்ச்சியால் ஜெயிக்கலாம் என்று உங்களில் யாரேனும் நினைத்தால் அதற்கு நான் முட்டுக்கட்டை போடுவேன். அரக்கு மாளிகையிலிருந்து பஞ்சபாண்டவர்கள் தப்பியது ஒன்றும் ஆச்சரியமான விஷயமல்ல. நான்கு சுவர்களுக்கு நடுவே நீங்கள் ரகசிய திட்டம் போட்டாலும் காற்று கொண்டுபோய் உங்கள் ரகசியத்தை எதிரிக்குச் சொல்லும். எப்பொழுது இரண்டு பேராக விவாதித்தீர்களோ அப்போது இரண்டு பேரில் ஒருவர் இந்தத் தகவலை எதிரிக்குச் சேர்க்கின்ற குணம் உடையவராக இருப்பார். எனக்கு மட்டும் தெரிந்ததே ரகசியம். அடுத்தவரிடம் பேசும்போது அது உடைந்து உதிர்ந்து விடுகிறது. எந்த நேரமும் அது எதிரிக்கு போக தயாராக இருக்கிறது.

இந்த சபை என் பேச்சை ஏற்க வேண்டும். மறுப்பு சொல்லாது ஏற்க வேண்டும். ஜனங்களுடைய எதிர்ப்பை சம்பாதித்துக் கொள்ளாதீர்கள். மாறாக நன்மை செய்யுங்கள். பஞ்சபாண்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் ஆட்களை அனுப்புங்கள். நீங்கள் அழைப்பதாக அழைத்தால் வரமாட்டார்கள். நான் அழைத்தால் வருவார்கள்.

ஆகவே, என் பெயரை முன்மொழிந்து பஞ்ச பாண்டவர்களை இங்கே அழைக்க வேண்டும். அவர்களுக்கு பாதி ராஜ்ஜியம் தரப்படும் என்று சொல்லப்பட வேண்டும். அந்த நம்பிக்கையின் பேரிலே அவர்கள் இங்கு வரவேண்டும். ஒருவேளை துருபதன் சேனையோடு அவர்கள் இங்கு வரலாம். அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதைத்தவிர வேறு எந்தச் சிந்தனையையும் இந்தச் சபை கொள்ளலாகாது” என்று தீர்மானமாகச் சொல்ல, பீஷ்மருக்கு எதிர்பேச்சு பேச அங்கு யாருக்கும் துணிவில்லை.

வயதின் காரணமாகவும், அறிவின் காரணமாகவும், அரச பதவி வேண்டாம் என்று வெட்டி விலகி நின்ற பிரம்மச்சரிய விரதம் காரணமாகவும் பீஷ்மருக்கு அஸ்தினாபுரத்தில் மிகப்பெரிய மரியாதை இருந்தது. அவரை எதிர்க்க எவருக்கும் துணிவில்லாது இருந்தது.

துரியோதனன் மனம் புழுங்கினான். "கர்ணா, நீ எனக்கு தனுசு. என் சகோதரர்கள் சரங்கள். ஆனால், கையில் விலங்கு மாட்டிக்கொண்டு யுத்தம் செய்வது எப்படி? பிதாமகர் பீஷ்மர் எனக்கு காலில் சிக்கிய விலங்காக இருக்கிறாரே" என்று அழுது புலம்பினான்.

துரோணரும் சபைக்கு வந்தார். அவரும் பீஷ்மர் சொன்னதை ஆதரித்தார். "வெறும் தூதுவர்களை அனுப்பினால் போதாது. துச்சாதனனையும், விகர்ணனையும் உன் சார்பாக அங்கு அனுப்ப வேண்டும். என்னுடைய சகோதரர்கள் அவர்களுடைய வரவை விரும்புகிறார்கள் என்பதை நீ வெளிப்படுத்த வேண்டும். இதில் எந்தப் பொய்யும் தேவையில்லை. எவர் சூழ்ச்சியும் தேவையில்லை. முழுமனதாக பாண்டவர்களோடு சமாதானம் செய்கிறோம். அது உனக்கு நல்லது. இந்த தேசத்திற்கு நல்லது. அஸ்தினாபுரம் சிறப்படைய வேண்டும் என்றால் இது நடந்தே ஆகவேண்டும்."

கர்ணனால் துரோணர் பேச்சை தாங்க முடியவில்லை. "நீங்கள் ஏன் எப்பொழுதும் பாண்டவர்களுக்கு ஆதரவாக இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் ஏன் துரியோதனனை மதிப்பதே இல்லை, அவன் உள்ளக்கிடக்கை பற்றி யோசிப்பதே இல்லை என்பதும் எனக்கு புரியவில்லை. கை நீட்டி துரியோதனனிடம் காசு வாங்குகின்ற கூலித் தொழிலாளி நீங்கள். அவருக்கு எதிராகப் பேச உங்களுக்கு எப்படி மனம் வந்தது?

ஒன்று செய்யலாமே. உங்கள் மகனோடு நேரே துருபதன் அரண்மனைக்குப் போய் அர்ஜுனனோடு சேர்ந்து கொள்ளலாமே. யுதிஷ்டரிடம் காசு வாங்கலாமே. இங்கு உட்கார்ந்து காசு வாங்கி அவர்களுக்காகப் பேசுவது என்பது என்ன ஆச்சார்ய தர்மம். உங்கள் குணம் தெரிந்து உங்களை நான் அழைக்காது இருந்தேன். இவரை யார் இங்கு அழைத்தது?" கர்ணன் உரத்த குரலில் அதட்டினான்.

துரோணர் பேசினார். "சபையில் உள்ள மந்திரிகள் பற்றி மோசமான ஒரு கதை இருக்கிறது. மகத தேசத்தில் அம்புவீசன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு மகா கெட்டிக்காரனான ஒரு மந்திரி துணை இருந்தார். ராஜ்ஜியத்தின் எல்லா நிர்வாகத்தையும் கவனித்துக் கொண்டார். இதனால் மன்னன் சோம்பலுற்று, உண்டு, தூங்குவதையே வாழ்க்கையாக வைத்திருந்தான். அரசனுடைய பெண்டிர்களையும், அவனுடைய அரண்மனையையும் அந்த மந்திரி அபகரித்துக் கொண்டான். ஆனாலும், அரசன் அதைப் பற்றி கவலைப்படாது அடுத்த வேளை உணவு, எந்த இடத்தில் உறக்கம், சுவாசிக்கிறேனா இல்லையா என்ற எண்ணத்தோடயே வாழ்ந்து வந்தான். அவனுக்கு அது போதுமானதாக இருந்தது. மற்றவர்கள் மீது நாட்டம் இல்லாததாக இருந்தது. ஆனால், அந்த அம்புவீசனை ராஜ்ஜியத்திலிருந்து அகற்றி தானே அரசனாக வேண்டும் என்று மந்திரி ஆசைப்பட்டான். ஆனால், அம்புவீசனே அரசன் என்று விதி தீர்மானம் செய்திருந்தது. ஜனங்கள் அவனைத்தவிர வேறு யாரையும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, மந்திரியாகவே இருந்து சகல சந்தோஷங்களையும் அனுபவித்து ஒரு அரசனை அவமரியாதையாய் வாழ வைத்திருந்தார். இப்படிப்பட்ட மந்திரிகள் இந்தச் சபையிலும் உண்டு."

அவர் யாரைச் சொல்லுகிறார் என்றும், யார் அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்பதும் அந்த சபைக்கு தெரிந்தது. துரோணர் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"இன்னமும் இங்கு பராக்கிரமம் என்பது பேச்சாகவே இருக்கிறது. ஒரு பெண்ணை ஏங்கி நினைத்து காதல் கொள்வதும், அதைப் பற்றி பேசிக்கொண்டிருப்பதும், அந்த பெண்ணை திருமணம் செய்தல்போல் ஆகாது. காமுகர்களுக்கு எந்த சபையிலும் மரியாதை இல்லை. அவர்கள் பேச்சு அருவெறுப்பானது. இந்த விவாதம் இப்படி நடந்துகொண்டு போனால் முடிவில்லாமல் போகும் என்று விதுரர் உணர்ந்தார்.

பேச்சு நிறுத்தப்படலாம். பீஷ்மர் சொன்னது கட்டளை. மீறுவதற்கு யாருக்கு துணிச்சல் இருக்கிறது? பீஷ்மர் அரசராக இல்லாது இருக்கலாம். ஆனால், அஸ்தினாபுரத்து முக்கிய முடிவுகள் அவர் ஆதரவிலேயே நடைபெறுகின்றன. அவருடைய கட்டளையே முதன்மை பெறுகிறது. எனவே, பீஷ்மர் விருப்பப்படி, இந்த குலத்தின் மூத்தோர் விருப்பப்படி, உடனடியாக துச்சாதனனையும், விகர்ணனையும் பாஞ்சாலத்துக்குதூது அனுப்பி பஞ்சபாண்டவர்களை சந்தித்து அஸ்தினாபுரம் வரச்சொல்ல வேண்டிக் கொள்வோம். வந்தபிறகு நடக்க வேண்டியவைபற்றி கூடிப்பேசி தீர்மானம் செய்வோம்.

திருதராஷ்டிரன் சோர்ந்து போனான். உள்ளே மனதில் இருப்பதையே வெளியே சொல்ல திராணியில்லாதவன் ஆனான். அயர்ந்துபோய் சபை கலையலாம் என்று சிம்மாசனத்தில் சாய்ந்தான். சபை கலைந்தது.

(தொடரும்)



பாண்டவர்கள்தான் எத்தனை உத்தமர்கள்!

மகாபாரதம்

25

துருபதன் சபையில் ஐந்து சகோதரர்களும் அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றி ஒன்றுகூடி யோசிக்கத் தலைபட்டார்கள்.

ஒருவேளை யுத்தம் வந்தால் திருஷ்டத்யும்னனும், துருபதனும், சிகண்டியும் துணை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. சிகண்டி, பீஷ்மர் எங்கு இருக்கிறாரோ, அங்கு எதிரே நிற்பான். சிகண்டியின் தவம் பீஷ்மரை எதிர்ப்பது, பீஷ்மர் எது செய்தாலும் மறுப்பது, பீஷ்மரை கொல்வது. அப்படியான கோபம் உடையவன் பஞ்சபாண்டவர் பக்கம் எந்த எதிர்பார்ப்பும் இன்றி இருந்தான். மொத்த



யாதவக்கூட்டமும் பஞ்சபாண்டவர்கள் மீது வெறியாக இருந்தது.

கௌரவர்கள் பீஷ்மரின் கட்டளையால் சமாதானத்திற்கு வருகிறார்கள் என்பது தெரிந்து பகவான் கிருஷ்ணர் துருபதனுடைய சபைக்கு வந்து சேர்ந்தார்.

சமாதானத்திற்கு வருவது விதுரன் என்பதால் துருபதனுக்கு மிகப்பெரிய நிம்மதி உண்டாயிற்று. எந்தவிதமான முன்னெச்சரிக்கையையும் தான் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்பது அவனுக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

விதுரர் பாண்டவர்களின் நெருங்கிய நண்பர். பாண்டவர்களின் நலம் விரும்பி. கௌரவர்களைவிட இந்த தேசத்தை ஆள பாண்டவர்களுக்கே அதிக உரிமை உள்ளது என்று தெளிவாகவும், திடமாகவும் நம்புபவர். அப்படிப்பட்டவரே பாண்டவர்களை அஸ்தினாபுரத்துக்கு அழைத்துப் போக வருகிறார் என்பது சந்தோஷமாக இருந்தது. சரியா, தவறா, பாண்டவர்கள் அங்கு போகலாமா, கூடாதா என்ற எண்ணங்களெல்லாம் உடைபட்டுவிட்டன.

பாண்டவர்கள் அங்கு வந்தால் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிந்திருந்தால் ஒருபோதும் விதுரர் இப்படி சமாதானத்திற்கு முன்வரமாட்டார். வேறு யாரையேனும் அனுப்பியிருப்பார்கள். வேறு எவர் வந்தாலும் பாண்டவரை அங்கு அனுப்புவது ஒரு கேள்விக்குறியே. அதுவும் தவிர, இந்த விஷயத்தில் ஆலோசனை செய்ய ஸ்ரீகிருஷ்ணர் பாஞ்சால தேசத்திற்கு வந்துவிட்டார். இதுவே நல்ல சகுனம். இனி இதைப் பற்றி தான் மண்டை உடைத்துக் கொள்ளத் தேவையில்லை. மொத்த பொறுப்பும் கிருஷ்ணருடையதாகிறது.

தான் தன் மந்திரிகளுடன் கூட்டம் கூடி மகனை முன்வைத்து ரகசிய ஆலோசனை செய்ய வேண்டியது அவசியம். இல்லையெனில் சகலமும் கிருஷ்ணார்ப்பணம் என்று அவரிடம் விட்டு விடலாம். ஆனால், மந்திரிகளையும், மகனையும் கூர்மையாய் இருக்கச் சொல்ல வேண்டும். என்ன நடக்கிறது என்பது அவர்கள் பார்வையில் அறிந்து தனக்குச் சொல்ல வேண்டும் என்று சந்தோஷமாக இருந்தார். விதுரரை முறைப்படி வரவேற்பதில் துடிப்பாக இருந்தார்.

குதிரைப்படையும், தேர்களும் புழுதி பறக்க வந்தன. நகரத்து ஜனங்கள் அவரை பூத்தூவி வரவேற்றார்கள். வரவேற்கும்படி கட்டளை இருந்தது. அவர் போய் இறங்கிய பிறகு பெரிய யானைகள் நுழைந்தன.



இரண்டு பக்கமும் துணியிலான பைகள் தைத்து அதில் விதம்விதமான சிறிய பைகள் போட்டு வைத்திருந்தார்கள். பாஞ்சால தேசத்து அரசருக்குக் கொடுப்பதற்கென பல்வேறு உபகரணங்கள் தாங்கி யானைகள் வந்தன.

அரசவை தயாராக இருந்தது. கிருஷ்ணர் வலப்பக்கம் பாஞ்சால தேச அரசனுக்கு அருகே உட்கார்ந்திருந்தார். அவருக்கு அருகே ஒரே வரிசையாக பஞ்சபாண்டவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். சபை நிறைந்திருந்தது.

விதுரர் உள்ளே நுழைந்ததும் சகலரும் எழுந்து நின்றார்கள். கை கூப்பினார்கள். வருக வருக என்று ஸ்தோத்திரம் சொன்னார்கள். விதுரர் சகலரையும் வணங்கிய வண்ணம் நேரே வந்து இரண்டு கைகளையும் விரித்து பாஞ்சால மன்னர் முன்பு நின்றார். ‘ஜெயவிஜயீபவ’ என்று கூறினார். வெற்றி உனக்கே என்று சொல்கின்ற அர்த்தம் அது.

துருபதன் கீழே இறங்கி வேகமாக வந்தான். பிரிந்த அவர் கைகளுக்குள் கைகூப்பி நின்று கொண்டான். அவர் அணைத்துக் கொண்டார். அவனும் கைகளை விரித்து அவரை இறுக்கிக்கொண்டு அவர் வந்ததற்கு வரவேற்பைச் சொன்னான். வந்ததற்குண்டான நன்றியைச் சொன்னான். இருவரும் பிரிந்தார்கள்.

ை குமர்

அவரைக் கைப்பிடித்து ஏற்றி இடப்பக்கம் காலியாக இருந்த பெரிய ஆசனத்தில் சௌகரியமாக உட்காரச் சொன்னார்கள். அகலமான பாத்திரம் வைத்து பஞ்சபாண்டவர்களால் அவர் கால்கள் கழுவப்பட்டன. ஸ்ரீகிருஷ்ணர் அதற்கு உத்தரவு கொடுத்திருந்தார். ஒவ்வொருவரும் அவர் கால்களைக் கழுவி, தலையில் தண்ணீர் தெளித்துக் கொண்டு பின்னடைவதை மிகுந்த கூர்மையுடனும், அன்புடனும், ஆசையுடனும் துருபதர் பார்த்தார். அவர்களுடைய தொடர் நன்றியைச் சொல்லியது. அவர்களுடைய பார்வை அன்பைக் கொட்டியது. அவர்களுடைய வணக்கம் இன்னும் அவர்கள் உள்ளத்தில் தான் வீற்றிருப்பதை சொல்லியது. விதுரர் கண்கள் கசிந்தன.

எதைச் செய்தாலும் துல்லியமாகச் செய்கின்ற, ஆழமாகச் செய்கின்ற இந்த பாண்டவர்கள் எவ்வளவு உத்தமர்கள் என்று நினைத்துக்கொண்டார். ஒரு வணக்கத்தைக்கூட கவிதையைப்போல சொல்கின்ற நேர்த்தி இவர்களுக்கு மட்டுமே எப்படி வாய்த்தது? குந்தியினுடைய அருளா, பாண்டுவினுடைய ஆசீர்வாதமா இல்லை வேறு எங்கேனும் கற்றுக் கொண்டார்களா, இல்லை இது இயல்பில் வந்தது என்று சமாதானமானார்.

நகர்ந்ததும் எழுந்து நின்று கிருஷ்ணரை தனியே நமஸ்கரித்தார். அந்த செய்கையிலும் அர்த்தம் இருந்தது. பஞ்சபாண்டவர்களுக்கு நீ துணையாக இருக்கிறாயே அது போதும் என்று சொல்லாமல் சொன்னது. கண்ணில் கசிந்த நீர் கிருஷ்ணரைப் பார்த்ததும் கன்னம் ஓடி வழிந்தது. முகத்தை துடைத்துக்கொள்வதைப் போல கண்ணீரை துடைத்துக் கொண்டார். அமர்ந்தார். ஸ்ரீகிருஷ்ணர் சகலமும் பார்த்துவிட்டு அவரை நோக்கி தலையசைத்து கை கூப்பினார். கிருஷ்ணருடைய அந்த வணக்கம் நான் இருக்கிறேன் என்று சொல்வதுபோல் இருந்தது.

“திருதராஷ்டிரன் தன்னுடைய அன்பை துருபதா, உனக்குச் சொல்லச் சொன்னார். நீயும் அவருக்கு ஆத்ம நண்பராக மாறியது கண்டு சந்தோஷமடைந்தார். பஞ்சபாண்டவர்களை ஆதரித்து அவர்களுக்கு உன் மகளை மணம் செய்விக்கக் கொடுத்த போதே நீ கௌரவர்களுக்கும் நெருக்கமாகிவிட்டாய் என்பது உண்மை என்று அவர் உணர்ந்து கொண்டார். அதற்காக அளவில்லாத சந்தோஷம் கொண்டிருக்கிறார். இதை உன்னிடம் தெரிவிக்கச் சொன்னார்.”

சபை மௌனமாக இருந்தது. அதை ஏற்றுக்கொண்டும், ஏற்றுக் கொள்ளாதது போலவும் எந்த சலனமும் அற்று இருந்தது. இது உபசார வார்த்தை என்று சகலருக்கும் புரிந்தது.

‘‘திருதராஷ்டிரன் மட்டுமல்ல. கௌரவர்களும் அஸ்தினாபுரத்துக்கு பாண்டவர்களுடைய வரவை விரும்புகிறார்கள். திருதராஷ்டிரன் ராஜ்ஜியத்தை பிரித்து அவர்களுக்குத் தரத் தயாராக இருக்கிறார்.

மற்றவர்கள் சொன்ன உபதேசத்தின் மூலம் அவர் மனம் தெளிவடைந்திருக்கிறார்” என்று நிறுத்தினார்.

அப்பொழுது குழப்பமாக இருந்ததோ என்ற கேள்வி எல்லோருக்கும் எழுந்தது. ஆனால், விதுரர் மீது உண்டான மரியாதை கருதி அவர்கள் அதை கேட்காமல் இருந்தார்கள். எல்லோர் முகமும் அந்தக் கேள்வி கேட்பதை விதுரர் என்ற கெட்டிக்காரரால் உணர முடிந்தது. மகாபலசாலியான துருபதன் பாண்டவர்கள் பக்கம் இருக்கிறார் என்பது அங்கே மிக முக்கியமாக விவாதிக்கப்பட்டது. எல்லா வளமையும் பெற்ற ஸ்ரீகிருஷ்ணரும் அவர்களுக்கு துணையாக இருக்கிறார் என்பது அவர்கள் உணர்ந்த விஷயமாக இருந்தது. எனவே வேறு வழியின்றி சமாதானத்திற்கு போக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு அவர்கள் ஆளானார்கள்.

> **எதைச் செய்தாலும் துல்லியமாகச் செய்கின்ற, ஆழமாகச் செய்கின்ற இந்த பாண்டவர்கள் எவ்வளவு உத்தமர்கள் என்று நினைத்துக்கொண்டார். ஒரு வணக்கத்தைக்கூட கவிதையைப்போல சொல்கின்ற நேர்த்தி இவர்களுக்கு மட்டுமே எப்படி வாய்த்தது? குந்தியினுடைய அருளா, பாண்டுவினுடைய ஆசீர்வாதமா இல்லை வேறு எங்கேனும் கற்றுக் கொண்டார்களா, இல்லை இது இயல்பில் வந்தது என்று சமாதானமானார்.**

“நானும், பீஷ்மரும் துரோணரும் இதைப் பல்வேறு விதமாக அவருக்கு எடுத்துச் சொன்னோம். துரோணர்தான் எனக்கு பேதமேயில்லை என்று தெளிவாகச் சொன்னார். ஆனால், பீஷ்மர் ஒருபடி போய், பாண்டவர்களை நான் விரும்புகின்றேன். அவர்களை நேசிக்கின்றேன். அவர்கள் மிகுந்த பலசாலிகள். இதை நான் நினைவில் வைத்திருக்கிறேன் என்று சொன்னார். அதற்கு அர்த்தம் நீயும் நினைவில் கொள்க என்பதுதான். அவருடைய பேச்சுதான் அவர்களை அசைத்தது. துரோணரைக்கூட, என்னைக்கூட அவர்கள் புறம் தள்ளிவிடுவார்கள். ஆனால், பீஷ்மரை அவர்களால் புறம் தள்ள முடியாது.

“எனவே, துருபதரே, பாண்டவர்களுக்கு எந்தக் குறையும் வராது. உன் மகளைப் பற்றிய சிறிய கவலையும் உனக்கு வேண்டாம். அவளைச் சூழ்ந்து பாண்டவர்கள் இருக்க, அவர்கள் ஐவரையும் தயவுசெய்து அஸ்தினாபுரத்திற்கு அனுப்பி வையுங்கள். நல்லதே நடக்கும். நிச்சயம் அவர்களுக்கு பாதி ராஜ்ஜியம் கிடைக்கும். கிடைக்கும்படி அங்குள்ள நல்லவர்கள் வற்புறுத்துவார்கள் என்று நிதானமாகக் கூற சபை யோசித்தது. சரிதானே அவர் சொல்வது என்று தீர்மானித்தது.

“துருபதா, பாண்டவர்கள் இந்த நேரத்தில் பின்வாங்கியிருப்பது நல்லதல்ல. நாங்கள் அழைத்தும் வரவில்லை. என்ன செய்வது என்ற பேச்சுக்கு இலக்காகிவிடக் கூடாது. நாங்கள் தந்தும் வாங்கவில்லை, என்ன செய்ய. அவர்கள் போரை விரும்புகிறார்கள் என்ற பேச்சு வந்துவிடக்கூடாது. இந்த அழைப்பை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை என்பது என் அபிப்ராயம்.”

மறுபடியும் சபை முணுமுணுவென்று பேசியது. துருபதன் திகைத்தபடி உட்கார்ந்திருந்தான். கிருஷ்ணர் சிரித்தபடி இருந்தார். பஞ்சபாண்டவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

“என்ன அண்ணா சொல்கிறீர்கள்?” என்று பீமன் ஆலோசித்தான். “மறுத்தால் என்ன, சண்டை வரும் அல்லவா, போனாலும் சண்டைதான். இதற்கு மறுத்துவிட்டே போகலாமே. அவன் பிச்சை தேசம் நமக்கு எதற்கு?” என்று பீமன் சீறினான். விரல் உயர்த்தி அவனை தருமர் அடக்கினார்.

இந்த சபையில் பேசக்கூடாத சில விஷயங்களும் என்னிடம் இருக்கின்றன. யாரிடம் பேசவேண்டும் என்பதும் எனக்கு இந்த க்ஷணம் புரியவில்லை. எப்படி ஒரு ஆபத்திலிருந்து தப்பி மிகப் பெரிய சம்பத்தான திரௌபதியை அடைந்தார்களோ அப்பொழுதே அவர்களுடைய தலையெழுத்து மிகச் சிறப்பாக இருக்கிறதென்றுதான் அர்த்தம்.

“பீமனுடைய வலிமைதான் அவர்களை காப்பாற்றியது. தப்பித்துக்கொள்ள தந்திரங்கள் யார் சொல்லிக் கொடுத்தாலும் பீமன் இல்லாவிட்டால் இது நடந்திருக்காது. வலுவுள்ளவர்களே வாழத் தகுதியுள்ளவர்கள். வாழத் தகுதியுள்ளவர்களுக்கு வலு இருக்கும் என்பது உலக நியதி.

அஸ்தினாபுரம் வருவது ஒரு சோதனை போலத்தான். அதை நீங்கள் ஏற்கத் தயாராகத்தான் இருக்கவேண்டும். ஆனால்,

உங்கள் மீது ஒரு துரும்புகூட படாதபடி பீஷ்மர் உங்களை காப்பார். நானும், துரோணரும் உங்கள் பக்கம் இருக்கிறோம். எனவே, பெரிய ஆலோசனையெல்லாம் செய்வதை விட்டுவிட்டு விதிவிட்ட வழி என்று நீங்கள் என்னோடு கிளம்புவது நல்லது.”

அனுப்புக என்ற ஸ்ரீகிருஷ்ணரின் கண் அசைவை புரிந்துகொண்டு துருபதன் எழுந்து நின்று திரௌபதியையும், அவள் கணவன்களையும் மரியாதையுடன் அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டார். ஒட்டகங்களும், குதிரைகளும், யானைகளும் தங்கள் தேசத்து ராஜகுமாரிக்கு சீர் சுமந்தபடி முன்னே போயின. தங்கக் குவியல்களும், முத்து மாலைகளும் மிருகங்கள் மீது ஏற்றி அனுப்புவது மட்டும் அந்த நாள் வழக்கம் அல்ல. தங்கள் மகளோடு உத்தமமான மனிதர்களையும் அவர்கள் சீராக அனுப்புவார்கள். அதிகம் குலுங்காத வில் வண்டியில் நல்ல மாடுகள் கட்டி அதில் தாதிகள் தங்கள் புடவை துணிமணிகளை ஏற்றிக் கொண்டார்கள். பண்ட பாத்திரமெல்லாம் வேறு வண்டியில் இருந்தன. காவலாட்கள், ஏவலாட்கள் என்று வகை பிரித்து வரிசையில் நின்றார்கள்.

தினசரி பூஜைக்கு உதவியாக அந்த மாதிரி சடங்குகளுக்கு துணையாக விவரம் தெரிந்த அந்தணர்களும், ஜோதிடர்களும், நல்ல குடிமக்களும் அரசியை மறக்க முடியாத மத்திம வயதினரும் குடும்பத்தோடு அவளைப் பின்தொடர தயாராக இருந்தனர். ஏதேனும் ஒருநாள் அந்தக் குழந்தை புக்ககம் போவாள் அல்லவா, இப்போது சொல்கிறேன், எங்கு அவள் போனாலும், என்று அவள் போனாலும் அவள் பின்னே நான் போவேன் என்று சபதம் செய்தவர்கள் பலர் இருந்தார்கள்.

ஆறு குதிரைகள் பூட்டிய பெரிய தேரில் பஞ்சபாண்டவர்கள் அமர்ந்துகொள்ள பாஞ்சால தேசம் பெரிய ஆரவாரத்தோடு அவர்களை அனுப்பி வைத்தது. சீர் வரிசைகள் முன்னே செல்ல, அடுத்தது பாஞ்சாலர்களுடைய சீர்வரிசை செல்ல, அதற்குப் பிறகு ஆறு குதிரைகள் பூட்டிய தேரில் தனது சகோதரர்களோடு அமர்ந்திருந்தார்.

மறுபடியும் எப்பொழுது பார்ப்போமோ என்ற நினைப்பில் ஜனங்கள் அருகே நெருங்கி வந்தார்கள். அவர்களை நெருங்கி வரவிட்டு தேர் நிதானமாகப் போயிற்று. அவர்களின் காலை தொட முடியாதவர்கள் தேரின் அடிப்பாகத்தை தொட்டு கும்பிட்டார்கள். கால் தொடுவது போல உணர்ந்தார்கள். அற்புதமான அரசர்களல்லவா. இவர்களால் பூமிக்கு விடுதலை வரப்போகிறதென்று ஜோதிடர்கள் சொல்கிறார்களே, என்ன விடுதலை என்று தெரியவில்லை. ஆனாலும் காணக்கிடைக்காத வீரர்களல்லவா என்று கை கூப்பி தொழுதது.

துருபதன் திகைத்துப்போய் கிடந்தான். துருபதனுக்கு துணையாக அவன் மகன் இருந்தான். ‘என்னவோ முடிந்ததுபோல் இருக்கிறதப்பா,’ என்று வருத்தத்துடன் பேசினான்.

“இல்லை மகனே, இனிமேல் தான் ஆரம்பிக்கப்போகிறது, உண்மையான கதை. ஒரு பகுதி முடிந்து அடுத்த பகுதி ஆரம்பமாகப் போகிறது. ஒரு சண்டை முடிந்து அடுத்த சண்டைக்கு அரசர்கள் தயாராக இருக்கிறார்கள். கிருஷ்ணர் அனுப்பு என்று சொல்லாவிட்டால் நான் அனுப்பியிருக்கமாட்டேன். நான் அனுப்பமாட்டேன் என்று தெரிந்துதான் கிருஷ்ணர் உட்கார்ந்து எனக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

ஸ்ரீகிருஷ்ணரை யாரால் மீறமுடியும்? பஞ்சபாண்டவர்களால் நமக்கு அவன் சினேகமானான். இது பெரும் பாக்கியம். கிடைத்தற்கரிய பேறு. கிருஷ்ணரை நேரே சந்திப்போமா, அவரின் அன்பை பெறுவோமா என்று நான் தவித்துக்கொண்டிருக்க அவரே நம் இல்லம் தேடி வந்து அமர்ந்ததும், நம் அரசவையில் வீற்றிருந்ததும் நமக்கு ஆதரவாகப் பேசியதும் மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. பாண்டவர்களுக்கு நாம் மகளைத்தான் தந்தோம். பாண்டவர்கள் நமக்கு கடவுளை காட்டிவிட்டார்கள்.” அவர் கிருஷ்ணர் அமர்ந்திருந்த நாற்காலியை பார்த்து கை கூப்பினார்.

நல்ல நிலைமைக்கு வர பக்தி காரணம். நல்ல நிலைமையில் இருப்போருக்கு பக்தி எப்பொழுதும் நீடித்திருக்கும். உள்ளுக்குள் எல்லா இடங்களிலும் நிரம்பியிருக்கும். துருபதன் அப்படிப்பட்ட மனோ நிலைமையில் இருந்தான்.

> “குந்தியை காந்தாரி வரவேற்றாள். கைகளை பிடித்துக் கொண்டாள். கன்னத்தில் ஒற்றிக்கொண்டாள். ஆனால், உள்ளே ஆக்ரோஷம் பொங்கிற்று. என் குழந்தைகளுக்கு எமனாகப் போகும் பஞ்சபாண்டவர்களுக்கு இவளே தாய். இவள் அழிந்தால் எல்லாம் அழிந்தது என்று கையை பற்றிக் கொண்டு வினயம் உள்ளவளைப்போல் நடித்தாள்.”

அஸ்தினாபுரம் அவர்களை வரவேற்கத் தயாராக இருந்தது. துரியோதனனைத் தவிர மற்ற எல்லோரும் கோட்டை வாசலுக்கு வந்தார்கள். கண் தெரியாத திருதராஷ்டிரன் நடக்கின்ற விஷயங்களை சொல்லக்கேட்டு கவனமாக தருமபுத்திரர் வரும் வழியை நோக்கியபடியே இருந்தான். இரண்டு பக்கமும் கூச்சல்கள். அப்பொழுது நடுவேதான் இருக்க வேண்டும், பஞ்சபாண்டவர்கள் என்ற கணக்கோடு விழித்து எழுந்தவன்போல் அவர்களை பார்த்துக் கொண்டிருந்தான். கண்ணில்லாதவர்களுக்கு மற்ற அவயவங்களும், கூர்த்த மதியும் சுறுசுறுப்பாய் இருக்கும் என்பதை கற்றவரே அறிவார்.

பீஷ்மரும், துரோணரும் ஆலிங்கனம் செய்து வரவேற்றார்கள். உச்சி முகர்ந்தார்கள். மிகுந்த சந்தோஷத்தால் கண்களில் நீர் நிரம்ப அவர்களை பார்த்தார்கள். உங்களை யாரும் அசைக்கமுடியாது வீரர்களே என்ற சந்தோஷம் அந்த முகத்திலும், அணைப்பிலும் தெரிந்தது.

குந்தியை காந்தாரி வரவேற்றாள். கைகளை பிடித்துக் கொண்டாள். கன்னத்தில் ஒற்றிக்கொண்டாள். ஆனால், உள்ளே ஆக்ரோஷம் பொங்கிற்று. என் குழந்தைகளுக்கு எமனாகப் போகும் பஞ்சபாண்டவர்களுக்கு இவளே தாய். இவள் அழிந்தால் எல்லாம் அழிந்தது என்று கையை பற்றிக் கொண்டு வினயம் உள்ளவளைப்போல் நடித்தாள். உடம்பிலிருந்த கனக்சூடும் குந்தியின் முகத்தில் அடித்தது. எந்தப் பிரச்னையும் முடியவில்லை என்பது தெள்ளத் தெளிவாக குந்திக்கு தெரிந்தது. எங்கே இருப்பது, இவர்கள் அரண்மனையிலா? இல்லை என்பது திருதராஷ்டிரன் உத்தரவில் தெரிந்தது.

‘‘இவர்களுக்கு தனித்ததான அரண்மனையை கொடுங்கள். தனித்ததான கோட்டையும், காவலும் தாருங்கள். இவர்களைப் பார்க்க வருபவர்கள் சோதிக்கப்பட்டே வரட்டும். இவர்களைக் கண்ணின் இமைபோல நாம் காக்க வேண்டும்’’ என்று சொன்னான். குந்திக்கு வணக்கம் சொன்னான்.

‘‘என் மனதில் நல்ல திட்டங்கள் இருக்கின்றன. விரைவில் நிறைவேற்றுவேன். உன் குழந்தைகளுக்கு எந்தத் தொந்தரவும் வராது. கவலை வேண்டாம்’’ என்று உறுதி கொடுத்தான். அந்த உறுதியில் உண்மை இருந்தது.

அந்த இடம் விட்டு குந்தி வெளியே நடந்தாள். எந்த இடம் தங்களுக்கு கொடுக்கப்படுகிறது என்று பாண்டவர்கள் ஆவலாக இருந்தார்கள். தனித்தனியே குதிரை ஏறி தாயை தேரில் வரச்சொல்லி அவர்கள் தங்களுடைய அரண்மனைகளுக்குப் போனார்கள். வந்ததும் முதல் வேலையாக பீமன் அதன் பாதுகாப்பு பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினான். நகுல சகாதேவர்கள் அவனுக்கு உதவி செய்தார்கள்.

வாஸ்து பிரகாரம் சரி... ஆனால், எந்த தொந்தரவும் இல்லை என்று தருமபுத்திரர் நினைத்துக் கொண்டார்.

அர்ஜுனன் நிலைகொள்ளாமல் அலைந்தான். இந்த இடத்தில் இருந்தால் எப்படி போர் செய்வது. வீட்டிற்குள்ளேயே இருந்து எப்படி சண்டை செய்வது. இந்த இடம் எனக்கு நிரந்தரம் என்று தோன்றவில்லை. இந்த இடத்திலிருந்தும் கிளம்பிவிட வேண்டும். வெகு சீக்கிரம் வேறு இடம் போய் விட வேண்டும். இங்கே இவர்களுக்குக் கீழ் இவர்கள் அரசசபையில் முதல் வரிசையில் அமர்ந்து கொண்டு முகவாயை சொறிந்து கொண்டு இருக்க முடியாது.

தள்ளியிருந்தால்தான் யுத்தத்திற்கு அழைக்க முடியும். வேறு தேசம் போனால் தான் இவர்களை எதிர்க்க முடியும். இந்த இடத்தில் கிருஷ்ணரை வரச்சொல்வது கூட இயலாதே. இவர்கள் உத்தரவு தேவைப்படுமே. பீஷ்மரிடமும், துரோணரிடமும், விதுரரிடமும் கேட்க வேண்டுமே. அவர்கள் அவசியமா என்பது போல் பார்ப்பார்களே. கிருஷ்ணர் அவசியமா என்று பார்க்கும் இடத்தில் நான் எப்படி இருக்க முடியும் என்று யோசித்தான்.

ஒரு நல்லவன் தன் நண்பனை எந்த இடத்திலும் விட்டுக் கொடுப்பதில்லை. நண்பன் வராத இடத்தில் அவனுக்கு வாழ்க்கையே இல்லை.

தன்னுடைய மகன்கள் தன்மீது கடும் வெறுப்பில் இருப்பதை திருதராஷ்டிரன் உணர்ந்து கொண்டான். ஒருவரும் பார்க்க வருவதில்லை. மீறி ஓரிருவர் இருந்தாலும் நீ ஒரு தண்டம் என்பதுபோல் சொல்லிவிட்டு போகிறார்கள். ஏதாவது இடித்துரைக்கிறார்கள். அறுபதாவது மகனோ, அறுபத்தெட்டாவது மகனோ போய் நிற்பார்கள்.

(தொடரும்)

26

மகாபாரதம்

நீ இருப்பதால்தான் நாங்கள் நிம்மதியாக இருக்கிறோம்!

"யார் வந்திருப்பது? வந்திருப்பவர் எனக்கு வணக்கம் சொல்லவேயில்லையே," என்று திருதராஷ்டிரன் கேட்டான்.

"வந்திருப்பது தெரிகிறது, வணக்கம் சொல்வது தெரியவில்லை அல்லவா, அப்பொழுது எதற்கு பேசுகிறீர்கள்? வாய் பொத்தி இரும்."

"வணக்கம் என்பது சொற்றொடராக வரவேண்டுமல்லவா? அறிமுகம் நடக்க வேண்டுமல்லவா?"

"தெரு ஜனம்போல மேல் துண்டை வீசிப் போட்டு ஹோ... என்று கூவ வேண்டுமா?

ம.செ

அதற்கெல்லாம் வேறு ஆளைப் பாரும்,” வெளியேறும் சத்தம் கேட்டது.

யார் வந்தது, தாதிகளைத்தான் கேட்க வேண்டும். ஆனால், தாதிகள் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொள்வார்கள். அதனால் யார் வந்தால் என்ன, யார் போனால் என்ன என்று அமைதியாக இருந்தார். இதைப் போல பலநூறு விஷயங்கள் அவருக்கு வேதனையைக் கொடுத்தன. துரியோதனன் எங்கே என்று ஆள் அனுப்பியபோது, செத்துப் போய்விட்டான் என்று சொல் என்ற பதில் வந்தது.

ஏன் இப்படி இருக்கிறார்கள்? இப்படித்தான் இருப்பார்கள். பஞ்ச பாண்டவர்கள் இருக்கும் இடத்தில் தாங்கள் இருக்கிறோமா என்பது அவர்களுக்கு பதைபதைப்பாக இருக்கிறது. கோட்டையின் மீது தாக்குதல் நடத்தி விடலாமா என்றுதான் உள்ளுக்குள்ளே குமுறிக் கொண்டிருப்பார்கள். அந்தக் கோட்டை வலுவானது அல்ல. அதே நேரம் இந்த இடத்தில் சண்டை நடப்பது என்பது கேவலத்திலும் கேவலம். எனவே, உடனடியாக பாதி ராஜ்ஜியம் தருமருக்கு கொடுத்து அவர்களுக்கு பட்டாபிஷேகம் செய்து அனுப்புவாயாக என்று விதுரர் சொன்னார். அதுவே, உத்தமமான காரியம் என்று திருதராஷ்டிரனுக்குத் தோன்றியது.

மகனை சந்தோஷப்படுத்தும் என்ற நினைப்பிலும் அவர்களை அப்புறப்படுத்துவது சகலருக்கும் நல்லது என்ற நினைப்பிலும் அவன் தன் ராஜ்ஜியத்தை இரண்டாகப் பிரித்து பஞ்சபாண்டவர்களுக்கு தர சம்மதம் தெரிவித்தான். தனக்கு தோன்றியதுபோல பேச ஆரம்பித்து விட்டான். தீர்மானம் செய்து விட்டேன் என்று முழக்கமிடத் துவங்கினான்.

‘‘என்னுடைய சகோதரன் பாண்டு எனக்கு செய்த உதவியின் பிரதியுபகாரமாக நான் அவன் குழந்தைகளுக்கு இந்த ராஜ்ஜியத்தில் சரிபாதியைத் தருவதாக தீர்மானம் செய்து விட்டேன். பாண்டுவின் புத்திரர்கள் நலமே வாழ்வார்கள். இனிவரும் நன்நாளில் உடனடியாக பட்டாபிஷேகம் நடந்தேறட்டும்” என்று உரத்த குரலில் கட்டளையிட்டான்.

இதற்கென்று காத்திருந்தது போல விதுரரும், பீஷ்மரும், துரோணரும் உடனடியாகச் செயல்களில் இறங்கினார்கள். மற்ற எல்லா நாட்களிலும் நடப்பதைவிட செயல்கள் விரைவாக நடந்தன.

காண்டவ ப்ரஸ்தம் என்கிற மிகச் சிறந்த நகரம் பஞ்சபாண்டவர்களுக்குத் தரப்பட்டது. அது புரூ வம்சத்தினுடையது. யயாதி ஆண்ட தேசமது. புரூ வம்சத்தில் மிகச் சிறந்த மன்னர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அந்த இடம் ஒருவருக்கு கிடைப்பது மிக அதிர்ஷ்டவசமானது என்று மக்கள் சொல்லிக் கொண்டார்கள்.

அஸ்தினாபுரத்திலேயே புரூ வம்சம் ஆண்ட காந்தவ ப்ரஸ்தம் இன்று முதல் தருமசேனருக்கு உறுதியாகிறது என்று சொல்லப்பட்டது. பல யானைகளின் மீது கங்கை நீரும், மற்ற புண்ணிய நதிகளின் நீரும் கொண்டு வரப்பட்டு குடம் குடமாக அபிஷேகம் செய்யப்பட்டன.

கௌரவர்கள் பெயருக்கு கலந்து கொண்டார்கள். ‘எப்பொழுது பயணம் செய்ய தீர்மானித்திருக்கிறாய்?’ என்று தருமசேனரிடம் கேட்டார்கள். ‘இப்பொழுதே இந்த நன்நாளிலேயே’ என்று தருமசேனர் சொல்ல, அவர்கள் சிரித்துக் கொண்டார்கள். உற்சாகமானார்கள். காலியான அரண்மனைக்குப் போய் எல்லாவற்றையும் எட்டி உதைக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார்கள்.

அந்த அரண்மனைக்கு தருமசேனர் போகவேயில்லை. திருதராஷ்டிரன் அரசவையிலிருந்து குதிரை ஏறி காண்டவ ப்ரஸ்தம் நோக்கி நின்றார்.

காண்டவ ப்ரஸ்தத்தில் குந்திக்கு மரியாதைகள் செய்யப்பட்டன. தகுதிக்கு ஏற்றவாறு நல்லது செய்துவிட்டேன் குந்தி என்று, கை கழுவுவது போல திருதராஷ்டிரன் பேசினான். குந்தி அதை ஏற்றுக்கொண்டாள். காந்தாரியிடம் உரத்த குரலில் பேசி விடைபெற்றுக்கொண்டாள். காந்தாரி அவளைத் தேட முயற்சிக்க சேடிகள் அவள் நகர்ந்து விட்டதாகச் சொன்னார்கள். காந்தாரி ஏமாற்றமானாள்.

ஊர்வலம் நகரத் துவங்கியது. திருதராஷ்டிரன் கொடுத்த அரண்மனையிலிருந்து எந்தப் பொருளும் எடுத்து வரப்படவில்லை. துருபதன் கொடுத்த பொருட்களே போதுமானதாக இருந்தன.

ஸ்ரீகிருஷ்ணர் காண்டவ ப்ரஸ்தத்தில் காத்திருந்தார். அவர்களை வரவேற்றார். அங்கிருந்தபடி இந்திரனை மனதால் நினைத்தார். இந்திரன் வந்து நின்றான். ‘இந்த இடத்தை செழிப்பாகவும், அழகாகவும், எல்லா வசதிகள் நிறைந்ததாகவும் செய்து கொடு’ என்று கட்டளையிட்டார்.

இந்திரன் சரி என்றான். இந்த தேசம் இன்று முதல் இந்திரப்ரஸ்தம் என்று அழைக்கப்படும் என்று அறிவித்தான். தனது சிற்பி விஸ்வகர்மாவை வரவழைத்து உடனடியாக சிறப்பான அரண்மனைகளும், கட்டில்களும்,


ல குமன்

மெத்தைகளும், திரைச்சீலைகளும், தீபதூபங்கள் வைக்கின்ற கந்தர்வ விளக்குகளும் வைத்து அலங்கரிக்ககட்டளையிட்டான்.

விஸ்வகர்மா தனது படையோடு வேலையில் இறங்கினான். மிகக் குறைவான காலத்தில் அரண்மனை மிகப் பொலிவோடு இருந்தது சரியான மரங்கள் நடப்பட்டன. நீருற்றிவளர்க்கப்பட்டன. நட்ட சில நாட்களிலேயே கிளை பரப்பி நிழல் கொடுத்தன. அரண்மனைக்குள்ளேயே அருவிகளும், சோலைகளும், நீர் நிலைகளும் விஸ்வகர்மா உருவாக்கினான். சமையல் அறைக்கு அருகிலேயே நீர்வீழ்ச்சி வரும்படி அமைத்துக் கொடுத்தான்.

> கிருஷ்ணரின் மேற்பார்வையில் ஒவ்வொரு விஷயமும் நடந்தது. இப்படிப்பட்ட மாமன் எவருக்கு இருந்தாலும் அவன் சிறப்படைவான். வெகு நாளைக்குப் பிறகு பஞ்சபாண்டவர்கள் அயர்ந்து தூங்கினார்கள். அவர்களை குந்தி ஆதுரமாக பார்த்தாள். கிருஷ்ணருக்கு அருகே வந்து அமர்ந்து கொண்டாள்.

நீர் நிலைகளும், தடாகங்களும் வேலைக்காரர்களுக்கு உபயோகமாக இருந்தன. குளங்களில் குளித்து தடாகத்தின் அருகேபோய் நீர் மொண்டு அறையை கழுவி சுத்தம் செய்யவும். வாசல் பெருக்கவும். செடிகளுக்கு நீர் வார்க்கவும் வைத்துக் கொண்டார்கள். முற்றங்களை தேய்த்து பளிச்சிட வைத்தார்கள். பாத்திரங்களை தேய்த்தார்கள். சமையலுக்கு நீர் வீழ்ச்சி நீரை பயன்படுத்திக் கொண்டார்கள். அடிப்படையான வசதிகள் சரியானவுடன் மற்ற வேலைகள் எளிதாக இருந்தன. இந்திரப்ரஸ்தம் என்ற அந்த அழகிய மாளிகை தயாராகியது.

கிருஷ்ணரின் மேற்பார்வையில் ஒவ்வொரு விஷயமும் நடந்தது. இப்படிப்பட்ட மாமன் எவருக்கு இருந்தாலும் அவன் சிறப்படைவான். வெகுநாளைக்குப் பிறகு பஞ்சபாண்டவர்கள் அயர்ந்து தூங்கினார்கள். அவர்களை குந்தி ஆதுரமாக பார்த்தாள். கிருஷ்ணருக்கு அருகே வந்து அமர்ந்து கொண்டாள்.

“நீ தூங்குவதேயில்லையா கிருஷ்ணா?” என்று கேட்டாள். அவன் புறங்கையை வருடி கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

‘‘சொல்லுங்கள் அக்கா, என்ன வேண்டும்?”

“நீ இருப்பதால்தான் நாங்கள் நிம்மதியாக இருக்கிறோம். நீ ஒருவன் துணை என்பதால்தான் நாங்கள் அச்சமில்லாமல் இருக்கிறோம். உன்னுடைய அன்பு, உன்னுடைய அக்கறை என்னை நெகிழ வைக்கிறது. எந்த ஜென்மத்தில் என்ன கொடுப்பினை செய்தேன், எனக்கு நீ துணையாக வருவதற்கு என்று அதிசயித்துப்பட்டுப் போகிறேன். என் உற்ற சகோதரன் என் குழந்தைகளுக்கு துணையாக இருக்கிறான் என்று நினைத்து பெருமிதம் கொள்கிறேன். ஒரு பெண்ணுக்கு பெரிய சம்பத்து என்று என்ன வேண்டும்? அவள் குடும்பத்தினர் தன் குடும்பத்தை காப்பாற்றுகிறார்கள் என்கிற ஒரு நிலை இருந்தால், ஒரு தகுதி இருந்தால் அதுவே பெரிய சம்பத்து. எனக்கு நீ இருக்கிறாய். இதுபெரும் பொக்கிஷம். நீ எங்களுக்கு உறவினன் அல்ல, தெய்வம், கண் கண்ட தெய்வம்’’ என்று கை கூப்பினாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

கண்ணன் இதைத்தான் கேட்கிறான். தன்னிலிருந்து பீறிடுகின்ற அன்பை அவன் மீது சொரிவதை விரும்புகின்றான். எந்தவித சுணக்கமும் இல்லாத நேசத்தைக் காணும்போது ஸ்ரீகிருஷ்ணரும் நெகிழ்ந்து போகிறார். குந்திதேவியும் எந்தப் பொய்யும் இல்லாமல் உண்மையாய் தன் மனதை வெளிக்கொட்டி அவனை உறவினன் என்று எண்ணாமல் தெய்வம் என்றே கை கூப்பினாள்.

மனம் சொல்வது சில சமயம் விரல்களூடே தெரிந்துவிடும். கிருஷ்ணருக்கு குந்திதேவியின் அன்பு புரிந்தது.

நாரதருக்குண்டான சகல மரியாதைகளும் செய்து மிக அன்போடு அவரை வணங்கி, அவர் அருகாமையை ஆவலோடு கவனித்து மனதில் கிருஷ்ண நாமத்தை சொல்லிக் கொண்டேயிருந்தார், தர்மபுத்திரர். மனித உலகத்தில் தர்மத்தை விரிவாக, திறமையாக எடுத்துரைக்கும் வல்லமை நாரதருக்கு உண்டு. நாரதர் பேச்சு சுவையானது. கதைகள் நிரம்பியது. மற்றவரிடமிருந்து கேட்கும் கடினமான பாடங்கள் இவர் வாயிலிருந்து வரும்போது மிக எளிதானதாகத் தோன்றும். மிகச் சுவையானதாகத் தோன்றும். இவரிடமிருந்து ஏதோ ஒரு விஷயத்தை கிரகித்துக் கொள்ள வேண்டுமென்று கிருஷ்ணர் சொன்னார். அவர் சொல்வதைப் பார்த்தால் அதைச் சொல்வதற்கு தனக்கே தகுதியில்லையென்பது போலவும், நாரதரே அதைச் சொல்ல முடியுமென்பது போலவும் இருந்தது. அது உண்மையா அல்லது என் கற்பனையா என்பது தெரியவில்லை.

''எதுவாயினும் எனக்கு ஏதேனும் சொல்லவேண்டியிருந்தால் தாங்கள் தயவு செய்து கூறவேண்டும்" என்று தருமபுத்திரர் கை கூப்பினார்.

“உங்கள் ஐவருக்கும் சொல்லவேண்டிய விஷயம் உண்டு. அரச சபையை கலைத்துவிட்டு நாம் உங்கள் தனி அறைக்குப் போகலாம்,” என்று சொல்லி நாரதர் ஆசீர்வதிக்க, அரச சபையினர் எழுந்து போனார்

கள். அரசவையை விட்டு அரண்மனையில் ஒரு பெரிய அறையில் அவர்கள் வட்டமாக உட்கார்ந்து கொள்ள, நாரதர் ஒரு மேடையில் அமர்ந்து கொண்டார். ஒரு அழகான குருகுலம்போல அது இருந்தது.

இரண்யகசிபு வம்சத்தில் நிகும்பன் என்ற அசுர ராஜனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். சுந்தோ, பசுந்தோ என்று பெயர். பெயரைக்கூட பிரிக்க முடியா வண்ணம் இரண்டு பெயரும் ஒருவரியிலேயே உச்சரிக்கும்படியான அமைப்பில் இருந்தது.

அவர்கள் இரண்டு பேருக்கும் ஒரே அரியணை, இரண்டு பேருக்கும் ஒரே படுக்கை அறை. இரண்டு பேருக்கும் ஒரே படுக்கை. இரண்டு பேருக்கும் ஒரே சாப்பாட்டு அறை. தாங்கள் யாராலும், எதனாலும் பிரிக்கப்படாதவர்களாக இருக்க வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டார்கள். இது இன்னும் வளர வேண்டும். இந்த உத்வேகத்தோடேயே, இந்த இறுக்கத்தோடேயே நாம் சகல உலகங்களையும் ஜெயிக்க வேண்டும் என்றும் பேராவல் கொண்டார்கள். தந்தையிடம் விடைபெற்று அவர்கள் தவம் செய்ய ஆரம்பித்தார்கள்.

நாளாக நாளாக அவர்களின் தவம் உக்கிரமாயிற்று. ஒரு காலில் நின்றும், தங்கள் தசைகளை தாங்களே சுட்டுக் கொண்டும், சூரியனை உற்றுப் பார்த்தும், கண்களை பார்வையிழக்கச் செய்தும் அவர்கள் தவம் செய்தார்கள். அவர்கள் தவத்தைக் கலைக்க தேவர்கள் பெரிதும் முயற்சி செய்தார்கள்.

அழகிய பெண்களை பொற்குவியலோடும், நவரத்தினக் குவியலோடும் அனுப்பினார்கள். அந்த அசுரர்கள் அதை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. நிறைய பெண்களை நடனமாட வைத்தார்கள். அவர்கள் அந்தப் பக்கம் திரும்பவில்லை. அவர்களுடைய மனைவிகளைப்போல உருவங்கள் செய்து, குழந்தைகள் போல உருவங்கள் செய்து அவர்கள் கதறும்படிச் செய்து, சூலத்தால் குத்தியும், கொன்றும், நெருப்பில் போட்டும் வேதனைப்படுத்தினார்கள். ஆனால், அந்த அசுர சகோதரர்கள் அசையவேயில்லை.

என்ன செய்தாலும் திரும்பவில்லையே என்று வருத்தமடைந்தபோது, தங்கள் தவத்திற்குக் காரணமாக இருந்த, யாரை நோக்கி தவம் செய்தாரோ அந்த பிரம்மா, கீழே இறங்கி வந்தார்.

“படைப்பு கடவுளே, நீர்தான் எங்களை படைத்தீர் என்றால் உங்களால் எங்களுக்கு உபயோகம் ஆகவேண்டியிருக்கிறது. எல்லா லோகங்களையும் நாங்கள் ஒற்றுமையாக வென்று ஜெயிக்க வேண்டும். எங்களுக்கு மரணமில்லாத பெருவாழ்வு தரவேண்டும்,” என்று கேட்டார்கள்.

“எல்லா லோகங்களையும் ஜெயிக்கக் கூடிய வலிவு உங்களுக்கு உண்டு. நான் தந்தேன். ஆனால், மரணமில்லா பெருவாழ்வு தர முடியாது. அதை நீங்களே உங்களுக்குள் தீர்மானம் செய்து கொள்வீர்கள்” என்று சொல்லி மறைந்தார் பிரம்மா.

அந்த பலம் அவர்களை களிப்பூட்டியது. அவர்கள் தேசத்து மக்கள் அவர்களைக் கொண்டாடினார்கள். மது வெள்ளமென பாய்ந்தது. மாதர்களுக்கு நெறி குலைந்தது. அசுர வாழ்க்கையின் உன்னதமான காலம் துவங்கிற்று. தேவர்கள் கவலை கொண்டார்கள்.

> கௌரவர்கள் பெயருக்கு கலந்து கொண்டார்கள். ‘எப்பொழுது பயணம் செய்ய தீர்மானித்திருக்கிறாய்?’ என்று தருமசேனரிடம் கேட்டார்கள். ‘இப்பொழுதே இந்த நன்நாளிலேயே’ என்று தருமசேனர் சொல்ல, அவர்கள் சிரித்துக் கொண்டார்கள். உற்சாகமானார்கள்.

தேவர்கள் கூடிப் பேசுவதை சுந்தோ, பசுந்தோ அசுரர்கள் உணர்ந்தார்கள். தேவர்களுக்கு பலம் அளிப்பது பிராமணர்களுடைய ஹோமங்களும், ரிஷிகளுடைய யாகங்களும். எனவே, எங்கே எவன் யாகம் செய்தாலும் அடித்து நொறுக்குங்கள். அந்தணர்களை சிறையில் அடையுங்கள். வெட்டிக் கூறு போடுங்கள். ரிஷிகளை அடித்துத் துரத்துங்கள். ஒருவரும் இந்த தேசத்தில் இருக்கக் கூடாது. பூலோகத்தில் எங்கு ஹோமப் புகை வந்தாலும் அது உடனே அணைக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

அந்தணர்களும், ரிஷிகளும் ஒளிந்து, மறைந்து வாழ்ந்தார்கள். மடக்கிக் கேட்கும்போது நான் அந்தணன் இல்லை என்று சொன்னார்கள். சொல்லும்படி நேர்ந்தது. எல்லா லோகங்களையும் வெற்றி கொண்டு, குறிப்பாய் இந்திர லோகத்தை வெற்றி கொண்டு, இந்திரனை அடித்துத் துரத்திவிட்டு தாங்களே அந்த அரியாசனத்தில் அமர்ந்து கொண்டார்கள். எல்லா லோகங்களிலிருந்தும் அங்கே பிரம்மாவின் சபையில் கூடினார்கள். தங்களுக்கு இந்த கதி நேர்ந்துவிட்டதே என்று புலம்பினார்கள். நீங்களேதான் காரணம் என்று பிரம்மாவை சொன்னார்கள்.

பிரம்மா யோசித்தார் விஸ்வகர்மாவை கூப்பிட்டார். எவர் கண்டாலும் மயங்குகின்ற ஒரு பெண்மணியை உருவாக்கு என்று கட்டளையிட்டார். பிரம்மா நிறைய ரத்தினங்களை எடுத்து குழைத்து ஒரு பருவப் பெண்ணை உருவாக்கினார். அவளுடைய ஒவ்வொரு அசைவும் மனதை

கிளறுவதாக இருந்தது. அவள் நடை காண்போரை மயக்கியது.

"நான் என்ன செய்ய வேண்டும்? தங்கள் கட்டளை என்ன?" என்று அவள் பணிந்து கேட்டாள்.

"பூலோகத்தில் சுந்தோ, பசுந்தோ என்ற இரண்டு அசுர சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்திரலோகம் வந்து ஜெயித்து விட்டார்கள். என்னுடைய வரத்தினால் எல்லா லோகத்தையும் துன்புறுத்துகிறார்கள். அவர்களுக்கிடையே சண்டை உண்டு பண்ணி அவர்கள் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு விழும்படி நீ செய்ய வேண்டும் என்று சொன்னார்.

ரத்தினங்களின் ஒளியில் உண்டானதால் அவளுக்கு திலோத்தமை என்று பெயர் வைத்தார். அவள் பிரமிக்கத்தக்க அழகுடையவளாய் இருந்தாள். அவள் அந்தச் சபையை வலம் வந்தபோது சிவனுக்கு நேரிடையாய் இருந்த தலை அசையாது இருந்தது. அவள் வலப்பக்கம் வந்தபோது அந்த பக்கம் ஒரு தலை முளைத்தது. பின் பக்கம் போனபோது இன்னொரு தலை முளைத்தது. இடப்பக்கம் போனபோது அங்கும் ஒரு தலை முளைத்தது. தேவர்கள் அவளை வைத்த கண் வாங்காது அவள் அசைவுகளை கவனித்தார்கள்.

அந்த பேரழகு தனக்கே வேண்டுமென்று சுந்தோ, பசுந்தர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டார்கள். இரண்டு பேரும் கதை எடுத்துக்கொண்டு எல்லா உலகுக்கும் துரத்தித் துரத்தி போய் சண்டையிட்டார்கள். ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள். இந்திர லோகம் நிம்மதியாயிற்று.

"எனவே, ஒரே அரியணை ஏறி, ஒரே தட்டில் உண்டு, ஒரே கட்டிலில் படுத்தவர்களுக்கே பெண் விஷயத்தில் சண்டை வருகிறதென்றால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை யோசித்து அதைப் போல செய்யுங்கள். எந்தவித குளறுபடிக்கும் இடம் கொடுத்து விடாதீர்கள்," என்று ஆசிர்வதித்தார்.

தருமர் தன் சகோதரர்களோடு ஒன்று கூடி பேசினார். ஒரு வருடத்திற்கு ஒரு முறை ஒரு சகோதரன் திரௌபதியோடு இருப்பான். அப்படி இருக்கும் நேரம் வேறு எவரேனும் உள்ளே நுழைந்தால் அவன் பதினெட்டு மாதம் பிரம்மச்சரிய விரதம் கொண்டு நகர்ந்துவிட வேண்டியது. இது அவனுக்குண்டான தண்டனை என்று சொல்லப்பட்டது. சகோதரர்கள் நிபந்தனையை ஏற்றுக் கொண்டார்கள்.

தருமர் மிக சந்தோஷத்தோடு திரௌபதியை அணைத்தவாறு அந்தப்புரத்திற்குள் புகுந்தார். மற்ற சகோதரர்கள் தங்கள் வேலையை கவனித்தார்கள்.

(தொடரும்)

சந்தித்த நாளே சந்தோஷம்

எனக்கு அதிர்ஷ்டமே இல்லை. நான் எதை செய்தாலும் அது தோல்வியிலேதான் முடிகிறது. கடன் தொல்லை, தீராதநோய், அவமானம், உறவுகளில் மனஅமைதியின்மை, சொத்து முடக்கம், பண வரவில் தடை, மனநோய் பாதிப்பு என எந்த முன்னேற்றமும் இல்லாமல் வாழ்வே சூன்யமாகி உயிரை மாய்த்துக் கொள்ளவும் முடியாமல் நடைப்பிணமாக இருக்கும் அத்தனை பேரும் கோயில், பரிகாரம், ஜோசியம், என எல்லா இடங்களும் சென்று பல ஆயிரக் கணக்கில் செலவு ஆனது தான் மிச்சம்.

எந்த விடியலும் ஏற்படாத நிலையில் சாத்தான், மாந்திரீகம், தாந்திரீகம் என ஒரு சில மோசடி கும்பல்களிடம் சிக்கி விரக்தி நிலையில், தவிக்கும் அனைவருக்கும் ஒரு புது வாழ்வு காத்திருக்கிறது.

சந்தித்த நாளே சந்தோஷம், நொடிப் பொழுதில் வேண்டியதெல்லாம் நடக்கிறது. துயரங்கள் அனைத்தில் இருந்தும் விடுதலையாகி, அதிர்ஷ்ட வாழ்வை கைமேல் பலனாக தந்து மகிழ்கிறார் ஸ்ரீ அரவிந்த அன்னை.

உங்களுக்கு உதவும் சத்தியத்தின் சன்னிதானத்திற்கு புறப்படுங்கள். உடனடி பலன் நிச்சயம். சென்னை, மேற்கு மாம்பலம், 41, தம்பையா ரோட்டில் உள்ள ஸ்ரீ அன்னை ஆஸ்ரமத்திற்கு செல்லுங்கள் ஸ்ரீ அன்னை அடிகளை சந்தியுங்கள், உங்களுக்கான அதிர்ஷ்ட வாழ்வை சந்திக்கும் போதே பெறுங்கள்.

B.உஷா

Cell : 98414 25456 , 93804 50621,
www.mothergrace.org
e-mail: sriannaiadigal@gmail.com

ஸ்ரீ அரவிந்தர் அன்னை நிகழ்ச்சிகளை உலகெங்கிலும் 24 மணிநேரமும் webtv www.mothertv.in மற்றும் உங்கள் மொபைல் போனிலும் காணலாம்

99412 48456 - 98414 22456

கோவை : 123, நாராயணகுரு ரோடு, சாய்பாபா காலனி
செல் : 8344145214 - 9500173849

அர்ஜுனனின் காதல் திக்விஜயம்

தருமர் சந்தோஷமாக திரௌபதியோடு அந்தப்புரத்திற்கு சென்ற அந்த நேரத்தில் அர்ஜுனனுக்கு ஒரு சங்கடமான சூழல் ஏற்பட்டது. நகரத்தின் எல்லையில் இருக்கின்ற ஒரு சிறிய கிராமத்தில் வசிக்கும் அந்தணனுடைய பசுக்களை யாரோ கள்வர்கள் அபகரித்துச் செல்கிறார்கள் என்ற செய்தியோடு அந்தணன் அலறிக்கொண்டு வந்தான்.

"என்னிடம் இருக்கும் சொத்துகளே அந்த பசுக்கள்தான். அவை உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவை. காசு கொடுத்து என்னால் வாங்க முடியாது. நான் தானமாகப் பெற்றது. அந்த பசுக்களால் நான் உணவுக்கு எந்த சிரமமும் இன்றி வாழ்ந்து வந்தேன். அதை திருடர்கள் எடுத்துக்கொண்டு போகிறார்கள். உங்கள் ராஜ்ஜியத்தில் இப்படி நடக்கலாமா? ஒரு ஏழை அந்தணனை எளிதில் ஏமாற்றலாம் என்று தடியோடு வந்த திருடர்களை என்னால் எப்படி தடுக்க முடியும்? நீங்கள்தானே உதவி செய்ய வேண்டும்! பலம் பொருந்திய அரசர்களாகிய நீங்கள் இருக்கும்போது எனக்கு இந்த வேதனை வந்ததே. எனவே, தயவுசெய்து என் பசுக்களை மீட்டுத் தாருங்கள்." என்று கதறினான்.

அர்ஜுனன் தவித்தான். அவன் ஆயுதங்கள் அந்தப்புரத்தில் இருந்தன. திரௌபதி வசிக்கும் இடத்தில் இருந்தன. அந்தணனுடைய அலறல், ஈனக்குரல் அவனை வாட்டியது. என்னுடைய தேசத்தில் இப்படியா! ராஜ்ஜியபாரம் பூண்ட சில நாட்களிலேயே இப்படி ஒரு தொந்தரவா! பகைவர்கள் என்றால் கூட ஒரு அர்த்தம் இருக்கிறது. திருடர்கள் என்றால் கேட்பதற்கு நாதியில்லை என்றுதானே ஆகிறது. முன்னே யாரும் இல்லாததால் தேசத்தில் இந்த விபரீதம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது தகுந்த அரசர்கள் வந்த பிறகும் திருடர்கள் விவரம் தெரியாமல் தங்கள் கைவரிசையை காட்டுகிறார்கள். நான் யாரென்று நிரூபிக்கிறேன். இந்த அந்தணனுக்கு மட்டுமல்ல. இனி வேறு எவருக்கும் வேறு எந்த தொந்தரவும் வராதபடி தண்டிக்கிறேன் என்று ஆத்திரப்பட்டான். ஆனால், ஆயுதங்கள் இல்லாமல் எப்படி போவது - வேறு வழியில்லை. மீறித்தான் ஆகவேண்டும். தண்டனை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அவன் சடேரென்று துணிந்து முகத்தை துணியால் மூடிக்கொண்டு அந்தப்புரம்போய், தன் வில்லையும், அம்பறாத் துணியையும் எடுத்துக்கொண்டு வந்தான். தருமரை வணங்கி, தான்தான் என்றும், இந்த தவறுக்கு மன்னிக்க வேண்டும் என்றும் இந்த தண்டனை எனக்கு ஏற்புடையதென்றும், இந்த தண்டனையை ஏற்று நான் ஒரு வருட காலம் வனவாசம் செய்வேன் என்றும் சொன்னான்.

மகாபாரதம்

27

தருமர் எத்தனை சொல்லிப் பார்த்தும் முடியவில்லை. நாங்கள் பேசிக் கொண்டுதானே இருக்கிறோம் என்று சொல்ல, இல்லை. அது தவறு. என் ஒருவனுக்கு இந்த விதி தளர ஆரம்பித்தால் பலருக்கும் பல காரணங்களுக்காக தளரும். இது நமக்கு நன்மை தராது. எனவே, தயவுசெய்து என்னை வனவாசம் போக அனுமதிக்க வேண்டும் என்று ஆயுதங்களோடு வெளியேறினான்.

அந்தணருக்கு பசுக்களை மீட்டு கொடுத்துவிட்டு, அந்த திருடர்களுக்கு கடும் தண்டனை கொடுத்துவிட்டு அம்மாதிரியான கூட்டத்திற்கு எச்சரிக்கை விடுத்துவிட்டு, இந்த தேசத்தில் இனி இம்மாதிரி நடக்காது என்று வீர முழக்கம் செய்துவிட்டு அவன் மறுபடியும் அரண்மனைக்கு வந்து தன் சகோதரர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, தாயிடம் ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டு வனம் நோக்கி பயணித்தான்.

அவன் வனம் கிளம்பும்போது அவன் பின்னே அவனுக்கு பிரியமான குடிமக்களும், அந்தணர்களும் பயணம் செய்தார்கள். வனாந்திர பகுதியில் போகும் கங்கைக் கரையில் அவன் குடியமர்ந்தான். அந்தணர்களோடு அமைதியாய் வேத விசாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். கங்கை நதியில் ஆழ்ந்து குளித்தும், எதிர் நீச்சல் இட்டும், ஆற்றோடு போயும் அதன் சுகத்தை அனுபவித்து வந்தான். அப்படி ஒருநாள் குளித்து கரை ஏறும்போது உலோபி என்று ஒரு நாக கன்னிகை அவன் கால் பிடித்து இழுத்தாள்.

அவள், "நான் ஐராவத நாக குலத்தில் பிறந்தவள். கௌரவ்யன் என்ற நாக அரசனுடைய மகள். உங்களை கங்கையில் கண்டது முதற்கொண்டு நான் பைத்தியம் பிடித்ததுபோல் ஆகிவிட்டேன். உங்கள் மீது காதல் கொண்டு விட்டேன். அளவில்லாத காதல் ஜுரத்தில் தவிக்கிறேன். என்னை திருமணம் செய்து கொள்ள வேண்டும். உங்கள் காலை பற்றிக்கொண்டு கேட்கிறேன். உங்களுக்கு நீரின் எல்லா ரகசியங்களும் சொல்வேன். இதுவரை கண்டிராத சுகபோகத்திற்கு உங்களை அழைத்துச் செல்வேன்" என்றெல்லாம் பேசினாள்.

"என்ன பிதற்றுகிறாய் பெண்ணே. யாரிடம் என்ன பேசுவதென்று தெரியவில்லையா? நான் யார் தெரியுமா? நான் என் தமையனாருக்கு ஒரு வாக்கு கொடுத்திருக்கிறேன். ஒரு வருடம் தீர்த்த யாத்திரை போவதாக. வேறு ஒரு பெண்ணை மணப்பதற்கு இல்லை. பிரம்மச்சரியம் பூண வேண்டும் என்பது இதில் ஒரு விதி."

''அந்த விதியை தளர்த்தக் கூடாதா."

"எப்படி தளர்த்துவது? விதியை சேர்ந்து உண்டாக்கி விட்டு, விதியை எனக்கு மட்டும் தளர்த்துவது என்று ஒன்று உண்டா?"

''எதன் பொருட்டு நீங்கள் இந்த விரதத்தை மேற்கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். எதன் பொருட்டு தருமர் உங்களை இங்கு வர அனுமதித்திருக்கிறார் என்பதை நான் அறிவேன். மன்மதரே. ஒரு தர்மத்தின் பொருட்டு பிராமணனின் பசுக்களை காக்க நீங்கள் அத்துமீறி சத்தியத்தை உடைத்து உள்ளே நுழைந்திருக்கிறீர்கள். அந்த பிராமணருடைய அழுகையை கேட்க விரும்பாமல் நீங்கள் தர்மத்தினுடைய எல்லையை மீறி விட்டீர்கள். கிட்டத்தட்ட அந்த அந்தணன் நிலையில் தானே நான் கதறுகிறேன். அப்பொழுது எனக்கு உதவிக்கு வரலாகாதா? பிராமணருக்காக நீங்கள் பூண்ட ஒழுக்க சத்தியத்தை உடைக்க முடியும் என்றால், அதேவிதமான ஒழுக்க சத்தியத்தை பிராமணன் நிலையில் நின்று கதறும் எனக்காக உடைக்கக்கூடாதா? அங்கு ஒரு நீதி, இங்கு ஒரு நீதியா" என்று கதற, அவன் வாய்விட்டு சிரித்தான்.

"சாதுர்யமானவளே, உன்னுடைய வேண்டுகோளை ஏற்கிறேன். அந்த தர்மத்தை மீறியதற்கு தண்டனை ஒன்று இருந்தது. அதேபோல் இதற்கும் இருந்தால் நான் ஏற்றுக் கொள்கிறேன். அதே சமயம் ஒரு அந்தணன் அலறல்போல உன் மனம் அலறுகிறது என்று கேட்டு உனக்கு உதவி செய்ய வருகிறேன் என்று அவளை அணைத்து அன்று இரவு முழுவதும் கங்கை நீருக்கடியில் அவளோடு சுகித்திருந்தான். அவன் மூலம் அவளுக்கு இரவான் என்ற ஒரு மகன் பிறந்தான்.

மறுநாள் காலை கங்கையிலிருந்து வெளிப்பட்டு அந்தணரோடு பேசியிருந்துவிட்டு பிறகு அவர்களை அனுப்பி விட்டு அவன் கடற்கரை ஓரமாகச் சென்றான். மகாநதி துங்கபத்ரை, கோதாவரி போன்ற நதிகளில் ஸ்நானம் செய்து நதிகளில் மிக முக்கியமான நதியான காவிரியை வணங்கிக் குளித்து, அதன் குளுமையை அனுபவித்து பல்வேறு கிளைகளாகப் பிரிந்திருந்த அதன் கடற்கரையோரம் நடந்தான்.

அந்தப் பக்கம் மணலூர் என்று ஒரு ஊர் இருந்தது. அந்த ஊரில் சித்ராங்கதை என்ற ஒரு பெண் கம்பீரமாக உலவிக் கொண்டிருந்ததை பார்த்தான். அந்த ஊர் மன்னன் சித்ரனுக்கு அவள் மகள். அவளுடைய நடவடிக்கைகளை பார்த்ததும் அவனுக்கு அவள் மீது தாபம் உண்டாயிற்று. பன்னிரண்டு மாதங்கள் முடிந்ததால் அவன் அந்தப் பெண்ணை அடைய தீர்மானித்தான்.

ல குமர ன்

அரண்மனைக்குப்போய் உங்களுடைய மகள் சித்ராங்கதையை எனக்குத் தருக என்று கேட்டான். அவனைப் பற்றி மன்னன் விசாரித்ததும் தன்னுடைய விவரங்களை தெரிவித்தான்.

"என் குலத்தில் எப்பொழுதுமே ஒரு குழந்தைதான் உண்டாகும். என் முன்னோர் பலருக்கு மகன் உண்டாகி அந்த வம்சம் தழைத்தது. இன்று இவள் எனக்கு மகளாக வந்திருக்கிறாள். மகன் சந்ததி உடைந்து மகள் வந்தது. ஆயினும், இவளை நான் என்னுடைய மகனைப் போலவே

கனகம்பீரமாக வளர்த்து வருகிறேன். அந்த கம்பீரத்தைக் கண்டுதான் நீ அவளை விரும்பியிருக்கிறாய். நல்லது. உன்னுடைய உத்தமமான குலம் பற்றியும், உன் வாழ்வு பற்றியும் நான் அறிவேன். அங்கிருந்து வருகின்ற சாதுக்கள் இதைச் சொல்கிறார்கள். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நீ மிக நெருங்கிய நண்பன் என்பது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. சித்ராங்கதையை உனக்கு மணம் செய்து கொடுப்பதில் எனக்கு எந்த மறுப்பும் இல்லை. அது இந்த தேசம் செய்த கொடுப்பினை. அதே சமயம் உன்னை ஒன்று கேட்க விரும்புகின்றேன். இவளுக்குப் பிறக்கின்ற மகனை இங்கேயே விட்டுவிட வேண்டும். அவனை இந்த தேசத்தின் மன்னனாக நீ அங்கீகரிக்க வேண்டும். இது ஒன்றே நான் எதிர்பார்ப்பது" என்று சொல்ல, அர்ஜுனன் அதற்குச் சம்மதித்தான்.

விரதம் முடிந்த மறுமாதம் சித்ராங்கதையை மணந்து கொண்டான். அவர்கள் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தினார்கள். சித்ராங்கதை மூலமாக பப்ருவாகன் என்ற மகன் பிறந்தான். அவனை சித்ராங்கதையின் தகப்பனிடம் ஒப்படைத்தான். பிறகு சித்ராங்கதையிடம் விடை பெற்றான்.

"நான் மறுபடியும் என்னுடைய தேசத்திற்குப் போகிறேன். அங்கே என்னுடைய தமையனார் ராஜசுய யாகம் செய்யப் போகிறார். அந்த யாகத்தில் கலந்து கொள்ள தென் தேசத்திலிருந்து உன் தந்தையும் வரட்டும். அப்பொழுது நீயும் அவரோடு என் மகனை கூட்டி வா. அந்த இடத்தில் நான் உன்னை என் அரண்மனையில் சேர்த்துக் கொள்கிறேன். என்னுடைய சகோதரர்களுக்கும் உன்னை அறிமுகப்படுத்துகிறேன்" என்று சொன்னான்.

சித்ராங்கதை சந்தோஷமாக விடை கொடுத்தாள்.

மேற்கு மலை முழுவதும் பிரயாணம் செய்து பல புண்ணிய தீர்த்தங்களையும், க்ஷேத்ரங்களையும் தரிசித்துக்கொண்டு அவன் ஸ்ரீகிருஷ்ணர் வசிக்கின்ற துவாரகை நோக்கி பயணமானான்.

துவாரகைக்கு முன்னமேயே மிகப் பெரிய பசுக்கூட்டம் ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. மத்திம வயது தாண்டிய மீசை நரைத்த ஒரு கிழவன் மரத்தடியிலிருந்து எழுந்து வந்து கை கூப்பினான்.

"எப்படி என் வருகையை தெரிந்து கொண்டாய். நான் மரங்களின் ஓரமாகத்தானே வந்தேன். உனக்கு எப்படி என் வருகை தெரிந்தது."

"மாடுகள் சொல்லிற்று ஐயா."

"மாடுகள் என்ன சொல்லிற்று?"

"யாரோ வருகிறார்கள் என்று எனக்கு மணி அசைத்து, தலை அசைத்து, காதுகள் விடைத்து நீங்கள் வருகின்ற திக்கு பார்த்து குறி சொல்லிற்று."

> "யாரோ வருகிறார்கள் என்று எனக்கு மணி அசைத்து, தலை அசைத்து, காதுகள் விடைத்து நீங்கள் வருகின்ற திக்கு பார்த்து குறி சொல்லிற்று."

"மாடுகள் சொல்லுமா"

"நிச்சயம் சொல்லும். நிறைய சொல்லும். வந்தவன் நல்லவனா, கெட்டவனா என்றும் சொல்லும்."

"அதற்கு எப்படி தெரியும்."

"உங்களுடைய உடம்பு அதிர்வை வைத்துக் கொண்டு கண்டுபிடித்து விடும். உங்களிடமிருந்து வரும் வாசனையை வைத்துக் கொண்டு கண்டுபிடித்து விடும். உங்கள் வாசனை அவைகளுக்கு இடைஞ்சல் செய்வது போல் இல்லை. அதனால் உங்கள் வருகையை சுட்டிக் காட்டி விட்டு அவை பாட்டுக்கு புல் மேய்ந்து கொண்டிருக்கிறார்கள்."

"வாசனை இடைஞ்சல் செய்யும்படி இருந்தால்"

"மாடுகள் சிதறும். நாலாபக்கமும் அலையும். குரல் கொடுத்து கத்தும். நான் வேகமாகி விடுவேன். அந்த மாடுகளை பாருங்கள். ஒன்றிரண்டு உங்களை பார்க்கின்றதே தவிர, மற்றதெல்லாம் புல் மேய்ந்து கொண்டிருக்கின்றன."

"அந்த ஒன்றிரண்டுக்கு என்மீது என்ன பார்வை?"

"நீங்கள் அழகாக இருக்கிறீர்கள். அதுவோ பசு. பெண்ணினம். அழகிய ஆடவனை ஒரு பெண் பார்ப்பது வழக்கம் தானே."

"தெரிந்து கேலி செய்கிறீரா, தெரியாது கேலி செய்கிறீரா?"

"நீங்கள் அர்ஜுனன் என்பது தெரியும். உங்களுடைய எல்லா குணங்களும் பரத கண்டத்திலுள்ள எல்லா மக்களுக்கும் அத்துப்படி. அப்படியான உங்களைப் பற்றி நான் அறியாது இருப்பேனா. அதுவும் தவிர, நீங்கள் எங்கள் அரசன் ஸ்ரீகிருஷ்ணரின் உற்ற நண்பராயிற்றே. ஸ்ரீகிருஷ்ணர் என்றால் உங்களுக்குப் பிடிக்கும். இதுவும் உலகறிந்த விஷயம்தானே."

"சாமர்த்தியமாக பேசுகிறீர். இத்தனை மாடுகளை நீங்கள் ஒருவராக மேய்ப்பீரா?"

"நிச்சயம் மேய்ப்பேன். அவற்றுக்கு கட்டளையிடுவேன். ஒழுங்காக போகும்படி உத்தரவிடுவேன். சிலசமயம் கோபத்தில் கத்துவேன். அவை ஒழுங்காக அதனதன் இடத்திற்கு போய் விடும். ஒன்றும் பிரச்னையில்லை."

"பசுக்கள் என் வாசனையை அறிந்தது என்றா சொல்கிறீர்கள்?"

"ஆமாம். உற்று கவனியுங்கள். எல்லா மாடுகளும் மூக்கை நக்கிக் கொள்கின்றன. மூக்கினுடைய ஈரத்தை தின்கின்றன என்று சொல்வார்கள். அப்படி அல்ல. தங்களுடைய வாயிலிருந்து ஊறும் உமிழ் நீரால் மூக்கு நுனியை, கருப்பு பாகத்தை, சுத்தம் செய்து கொள்ளும். அதுதான் உணரும் சக்தியை கொண்ட இடம். அதை அவ்வப்போது சுத்தமாக வைத்துக்கொண்டு அவை வெகுதூரம் உள்ள விஷயங்களையும் முகர்ந்து

பார்த்து அறிந்து கொள்ளும். காட்டில் ஒரு கல் தொலைவில் ஒரு புலி நடந்து வந்தால் இவை இங்கேயேவாசனைமுகர்ந்துபதட்டப்படும். இல்லையெனில் மௌனமாக மேய்ந்து கொண்டிருக்கும்.”

“அடேயப்பா. அற்புதமான விஷயம்.”

“தாங்கள் ஏன் இந்தப் பக்கம்.”

“தீர்த்த யாத்திரை போய் வந்தேன்.”

“அப்படியா. எதுவரை?”

“பரதகண்டத்தின் முடிவு வரை. கன்னியாகுமரி வரை. பிறகு அங்கிருந்து மேற்கு பக்கமாக நகர்ந்து துவாரகைக்கு போகிறேன்.”

“துவாரகைக்கு எதற்கு போகிறீர்?”

“கிருஷ்ணரை பார்க்கத்தான்.”

“சுபத்திரையை பார்த்ததுண்டா.”

“யார்?”

“கிருஷ்ணருடைய சகோதரி சுபத்திரையை.”

“இல்லையே.”



“பார்த்திருந்தால் துவாரகை விட்டு போகவே மாட்டீர்கள். எங்களுக்கு இரண்டு அரசர் கிடைத்தது போல் ஆகும். பலராமரை தலைவராகக் கொண்டு நீங்களும், கிருஷ்ணரும் துவாரகையில் இருந்தால் அதைவிட பெருத்த சைன்யம் உண்டா. எங்களை விட பெருமைப்படுபவர் உண்டா.”

“சுபத்திரையை பார்த்தால் என்னாகும்?”

“அடாடா, மிக அழகு.”

“எது அழகு?”

“உருவம், புத்தி, குணம், பார்வை. எல்லாம் அழகு”

“அதென்ன பார்வை அழகு.”

‘‘ஒரு பார்வை பார்க்கும் பொழுது ஒருவருடைய மனதின் நிதானம் புரிந்து விடுகிறது. கண்கள்தான் மனதின் வாசல். எப்பொழுது சுபத்திரையை பார்க்கும் பொழுதும் அந்த கண்களை மண்டியிட்டு வணங்கி அந்தக் கண்களையே ஆவலுடன் பார்ப்பேன். அவை கருணை பொழியும். என்ன யாதவரே. எப்படி இருக்கின்றன பசுக்கள் என்று கேட்காமல் கேட்கும். நலம் விசாரிக்கும். பேச்சைவிட பார்வையில் பேசுவது மிக அழகு. சுபத்திரைக்கு அந்த கலை தெரியும்.”

“பார்வையிலேயே பேசும் பெண்ணா”

“பார்த்தால்தானே தெரியும்.”

அர்ஜுனன் அந்த யாதவன் தூண்டிவிட்ட நினைப்பிலேயே இருந்தான். பார்வையிலேயே பேசுவது என்றால் எப்படி என்று யோசித்தான். இவ்வளவு அழகா என்று யாதவன் வர்ணனையில் வியந்தான். மண்டியிட்ட பிறகும் பேசமாட்டாளா. கண்கள் பேசுமா. கருணை பொழியுமாமே. அதெப்படி. அவளையே யோசித்தான். உள்ளுக்குள் மெல்ல மெல்ல காதலும், காமமும் புரண்டன.

கிருஷ்ணரை கேட்டால் சரி என்பாரா. ஊர் மேய்கிறவன் நீ, உனக்கு என் தங்கையை கொடுக்கவா. வேறு வேலை இல்லை. போடா போ என்று துரத்தி விடுவாரா. கிருஷ்ணர் கொடுத்தாலும் கொடுக்கலாம். என்னைப் பற்றி பலராமருக்குத் தெரியும். அண்டவிட மாட்டாரே. ஊருக்குள்ளேயே வரக்கூடாது என்பாரே என்று பயந்தான்.

பார்வையிலேயே பேசும் பெண். அவளை மணந்தால் எப்படி இருக்கும். கிருஷ்ணருடைய அனுமதி பெற்று நகருவோமா. நாமாக முயற்சிப்போமா.

மழை அடித்துப் பெய்தது. ஆலமரத்தடியில் நின்றவன் குளிர் தாங்காமல் வெடவெடத்தான். ஆனால், சிந்திக்க வேண்டும்போல் இருந்தது. ஒரு பெரிய புதருக்குள் நுழைந்து தன்னை சுருக்கிக் கொண்டான். மழை அவனைச்சுற்றி பெய்தது. அவன் சுகமாக உட்கார்ந்து சுபத்திரையைப்பற்றி யோசித்தான். கிருஷ்ணா, கிருஷ்ணா எனக்கு உன் தங்கையை மணம் செய்துகொடு என்று கெஞ்சினான்.

சத்யபாமாவின் பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்த கிருஷ்ணர் திடீரென்று சிரித்தார்.

“என்ன சிரிக்கிறீர்கள்?” என்று சத்யபாமா கேட்டாள்.

“ஒன்றுமில்லை. அர்ஜுனன் வருகிறான். சுபத்திரையை மணம் புரிய என்னிடம் மனதுக்குள் கெஞ்சுகிறான். அந்த சப்தம் காதில் விழுந்தது. நான் சுபத்திரையை அர்ஜுனனுக்கு மணம் செய்து கொடுக்கப் போகிறேன். உனக்குப் புரிந்ததா?”

அவள் யோசித்தாள். புரிந்தது என்றாள். ‘‘அமைதியாய் இரு’’ என்று உத்தரவிட்டு அப்போதே கிளம்பினார்.

மகேந்திர மலையைச்சுற்றி யாதவர்கள் கூடினார்கள். மலையைச்சுற்றி விளக்கேற்றினார்கள். உச்சியில் தீபம் ஏற்றினார்கள். மேகத்தை தடுத்து மழையை கொண்டு வருகின்ற மிகப்பெரிய மேரு அல்லவா. மழை பெய்வதற்கு காரணமே இந்த மேரு அல்லவா. இதிலிருந்து நீரோடைகளும், இதனால் தடுக்கப்பட்டு வரும் மழையும்தானே புல்வெளிகளாக இருக்கின்றன. அவைதானே இந்த கோகுலத்திற்கு உதவியாக இருக்கின்றன என்று மலையை கும்பிட்டார்கள்.

மலையின் எல்லா பக்கங்களும் வெவ்வேறுவித காரணங்களுக்காக மலை கொண்டாடப்பட்டு வந்தது. அந்த கொண்டாட்டத்தினூடே அர்ஜுனன் நுழைந்தான்.

அர்ஜுனன் வருகையை கண்டு கொண்டார். பலராமரும், மற்ற யுவ புருஷர்களும் மதுவின் போதையில் தள்ளாடிக் கொண்டிருக்க, கிருஷ்ணர் நிதானமாய் வந்து ஓரமாய் நின்ற அர்ஜுனனின் அருகே வந்து நின்றார்.

“என்ன யோசனை!” என்று கேட்டார். அர்ஜுனன் திடுக்கிட்டான். கிருஷ்ணரை பணிந்து எழுந்தான்.

“எங்கெல்லாம் போய் வந்தாய்?” அர்ஜுனன் விவரம் சொன்னான்.

“எதற்கு இந்த காவி கோலம் கொண்டிருக்கிறாய்?”

“இல்லை. சுபத்திரையை பார்க்க வேண்டும் என்று.”

“சுபத்திரையை பார்க்க காவி கோலம் போடுவானேன்.”

“நான் போர் வீரனாக வந்தால் பலராமர் விடுவாரோ மாட்டாரோ. பலராமர் என்னை விடுவார். அர்ஜுனன் வந்திருக்கிறான். நீ வெளியே வராதே என்று சுபத்திரையை மடக்கிவிட்டால்... அதனால்தான் நான் சன்னியாசி உடையில் வந்திருக்கிறேன்.”

அர்ஜுனன் அந்த யாதவன் தூண்டிவிட்ட நினைப்பிலேயே இருந்தான். பார்வையிலேயே பேசுவது என்றால் எப்படி என்று யோசித்தான். இவ்வளவு அழகா என்று யாதவன் வர்ணனையில் வியந்தான். மண்டியிட்ட பிறகும் பேசமாட்டாளா. கண்கள் பேசுமா. கருணை பொழியுமாமே. அதெப்படி. அவளையே யோசித்தான்.

“ஆக, உன்மீது உனக்கே நம்பிக்கை இல்லை. உன்மீது ஒரு இழிவு மனப்பான்மைதான் இருக்கிறது.”

“உண்மை அதுதானே கிருஷ்ணா.”

“உண்மை அதுதான். உன் ஆசை என்ன?”

“சுபத்திரையை மணப்பது.”

“ஏன்?”

“சுபத்திரை பேரழகி. கண்ணால் பேசுபவள்.”

“யார் சொன்னார்?”

“கஜன் என்ற யாதவன் சொன்னான்.”

“ஊரே சொல்கிறது அவள் அழகைப்பற்றி. எனவே, உனக்கு வந்ததில் வியப்பு இல்லை. நீ தாராளமாக சுபத்திரையை திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால், நீ நினைத்ததுபோல உனக்கு பெண் கொடுக்க ஒருபொழுதும் பலராமர் சம்மதிக்க மாட்டார். அவளுக்கு சுயம்வரம் என்று தீர்மானிப்பார். அப்பொழுது உள்ளே புகுந்து அவளை கடத்திக்கொண்டு போய்விடு.

“காந்தர்வ விவாகமும் சரி என்று சாஸ்திரம் சொல்கிறது. சுயம்வரம் வந்து அதில் உன்னை உட்கார வைத்தால் சரி. அல்லது உன்னை உட்கார வைக்காது போனால் என்ன செய்வது? ஒருவேளை உட்காரவிட்டாலும் உன்னைவிட அழகாக வேறு யாராவது அவள் மனதுக்கு தோன்றிவிட்டால் என்ன செய்வது? உனக்குப் பிடித்த பொருள் உனக்கு இல்லை என்று ஆகிவிடும்.

“எனவே, அந்த விபத்துக்கெல்லாம் இடம் கொடுக்காமல் என்னுடைய அரண்மனையில் தங்கி இரவோடு இரவாக சுபத்திரையை பார்த்துப் பேசி, அவள் மனதை கவர்ந்து பிறகு திட்டமிட்டு கடத்திக் கொண்டு போ. பின்னால் தொடர்ந்து வந்து யுத்தம் செய்வார்கள். தடுக்க உனக்குத் தெரியும். உன்மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது.”

அர்ஜுனன் தடேர் என்று கிருஷ்ணர் காலில் விழுந்து வணங்கினான். “எப்படி என் மனதை புரிந்துகொண்டு சொல்கிறாய்.”

“உன் மனதை மட்டும் புரிந்து கொள்ளவில்லை. மொத்த உலக நடப்பையும் புரிந்துகொண்டு பேசுகிறேன். அது உனக்கு தெரிய வேண்டும் என்று அவசியம் இல்லை. இந்த காரியத்தில் நீ ஈடுபடும் முன்பு உன்னைப் பற்றி, நீ இங்கு இருப்பதைப்பற்றி உனக்கு சுபத்திரையை கொடுப்பது பற்றி உன் தாயிடமும், தமையனிடமும் சொல்லிவிடப் போகிறேன்.”

விரைவாக தூதர்களை அனுப்பி அந்த விஷயத்தை இந்திரப்ரஸ்தம் அறிய தெரியப்படுத்தினார். இந்திர ப்ரஸ்தத்தில் உள்ளவர்கள் அதை புரிந்துகொண்டு சம்மதம் அளித்தார்கள். அந்த சம்மதத்தை எடுத்துக்கொண்டு தூதர்கள் கிருஷ்ணரிடம் வந்தார்கள். தன்னை மறுத்து பேசமாட்டார்கள் என்பதை கிருஷ்ணர் அறிவார்.

ஆனாலும் இது ஒரு மரியாதை. இது ஒரு உலக வழக்கு. அதையே கிருஷ்ணரும் பின்பற்றினார். கிட்டத்தட்ட பெண் கொடுக்கப் போகிறேன் என்ற முன்அறிவிப்பு செய்துவிட்டு காரியத்தில் இறங்கினார்.

மரங்கள் சூழ்ந்த ஒரு நந்தவனத்தில் ஒரு பாறை மீது அர்ஜுனன் அமர்ந்திருக்க, யாதவர்கள் பூஜை முடித்துவிட்டு திரும்பினார்கள். பலராமரும் திரும்பினார். யாரோ ஒரு சாது அமைதியாக உட்கார்ந்துகொண்டிருக்கிறார். தேஜஸ்வியாக இருக்கிறார் என்று மக்கள் சொல்ல, பலராமர் அவருக்கு அருகே போனார். பலராமரை உட்காரச் சொல்லி சாது இடம் காட்டினார்.

“நீங்கள் யார்? நீங்கள் என்னென்ன க்ஷேத்ரம் போய் வந்தீர்கள். வெகுதூரம் நடந்து களைப்புற்றவர்போல் இருக்கிறதே. என்னவென்று சொல்லுங்கள்.”

அர்ஜுனன் தான் கிழக்குக் கடற்கரை முழுக்க சுற்றியதும், மேற்கு கடற்கரை முழுவதும் வந்ததும், பல இடங்களை தரிசித்து, பல நதிகளில் குளித்ததும், அந்த நதிகளின் தன்மை பற்றியும், அந்த இடங்களின் மகிமை பற்றியும் விவரித்தான். கூட்டம் அசையாது கேட்டுக் கொண்டிருந்தது. அர்ஜுனனின் பேச்சு பலராமரை கவர்ந்தது.

(தொடரும்)

28

மகாபாரதம்

கிருஷ்ணன் உருவாக்கிய அர்ஜுனன்-சுபத்ரை பந்தம்

“கிருஷ்ணா, இந்த காட்டில் இந்த சந்நியாசி உட்கார்ந்துகொண்டு கஷ்டப்படுவானேன்? இந்த தபஸ்விக்கு தகுந்த இடம் சொல்லு” என்று பலராமர், சந்நியாசி வேடத்திலிருந்த அர்ஜுனனைப் பற்றி கிருஷ்ணரிடம் சொன்னார்.

“நீங்கள்தான் பெரியவர். நீங்கள்தான் தலைவர். இவரை எங்கே தங்க வைப்பது என்று உங்களுக்குத்தான் தெரியும்” கிருஷ்ணர் சொன்னார்.

“ஏன் நம்முடைய இடத்திற்கே கூட்டிக்கொண்டு போகக்கூடாது? ஏன், நம் அரண்மனையிலேயே வைத்து சுபத்ரையையே சிஸ்ருஷை செய்யச் சொல்லக் கூடாது? இவர் நல்ல துறவியாக இருக்கிறாரே. மிகச் சாதுவாக இருக்கிறாரே. கண்கள் அமைதியை கக்குகின்றனவே,” என்று சொன்னார்.

“இருக்கலாம். ஆனாலும், இவர் இளைஞர். படித்தவர். சுபத்ரை இருக்கின்ற இடத்தில் இவரை வைப்பது நல்லதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும், நீங்கள் தீர்மானம் செய்ய வேண்டியது முக்கியம். உங்கள் தீர்மானத்திற்கு எதிராக நான் பேசப் போவதில்லை.”

“இல்லை கிருஷ்ணா. சுபத்ரை உபசாரம் செய்யட்டும். அந்தப் புண்ணியம் அவளுக்குச் சேரட்டும். இவருக்கு தெரிந்த பரதகண்டம் முழுவதும் அவளும் தெரிந்து கொள்ளட்டும். எனக்கே இவர் சொன்ன பல விஷயங்கள் புதிதாக இருக்கிறது” என்று சொல்ல, கிருஷ்ணர் மறைமுகமாய் அர்ஜுனனை பார்த்துச் சிரித்துவிட்டு பாறையை விட்டு கீழே இறங்கினார்.

பலராமர் ஒரு சிவிகையில் வைத்து அர்ஜுனனை துவாரகைக்கு அழைத்துப் போனார். சுபத்ரையின் மாளிகையில் ஒரு இடத்தை கொடுத்தார். தினந்தோறும் சுபத்ரை அவரை வணங்கி, அவருக்கு என்ன வேண்டும் என்று கேட்டு அதன்படி உதவிகள் செய்ய வேண்டும் என்ற உத்தரவு பலராமரிடமிருந்து வந்தது.

‘காட்டு நரியிடம் வீட்டு முயலை கொடுத்து பலகாரம் பரிமாறச் சொல்லுங்கள். நரி நன்கு உண்ணட்டும்,’ என்று கிருஷ்ணர் முணுமுணுப்பாய் பேசினார். அது யார் காதிலும் விழவில்லை.

அர்ஜுனன் என்கிற சந்நியாசி, தன்னுடைய தர்மத்தை எப்போது கீழே போட்டு உடைப்பது என்று காத்திருந்தான்.

பெற்றவர்கள் பார்த்து செய்து வைக்கின்ற திருமணம்தான் பத்திரமானது. உத்தமமானது. பெரியவர்கள் சம்மதம் இல்லாது தானாகவே தேடி பரஸ்பரம்

மனம் பரிமாறி அந்த திருமணத்தை மேற்கொள்ள வேண்டுமென்றால் கடவுள் துணை வேண்டும். பெற்றோர் துணைக்கு ஈடாக கடவுள் துணைதான் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். வாழ்வது என்பது வெறும் காதலிப்பது மட்டும் அல்ல. அதற்குப் பிறகு பொறுப்போடு நடந்துகொள்வது. அந்தப் பொறுப்புதான் பெற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியைத் தரும். அதுதான் சம்பந்தப்பட்ட தம்பதியருக்கு மரியாதை தரும்.

அர்ஜுனன் வல்லவன். நல்லவன். எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற எண்ணம் உடையவன். ஒரு ஏழை பிராமணருக்கு, பசுக்களை யாரோ மறித்து எடுத்துப் போகிறார்கள் என்பதற்காக அவர்களுக்குள் உள்ள கட்டுப்பாட்டை உடைத்து தன் தமையன் தருமபுத்திரர் திரௌபதியோடு இருக்கும் சமயம், உள்ளேபோய் வில்லெடுத்து வந்து திருடர்களை கொன்று போட்டு பசுக்களை அந்தணருக்கு கொடுத்தான்.

ஆனால், தவறு தவறுதானே? தமையன் திரௌபதியோடு இருக்கும் பொழுது உள்ளே நுழைந்தது தவறுதானே? அதற்காக அவன் பன்னிரெண்டு மாதங்கள் தன் சகோதரர்களை பிரிந்து தீர்த்த யாத்திரைக்குச் சென்றான். தருமபுத்திரர் எவ்வளவு தடுத்தும் 'நான் ஒருவன் இதை எளிதாக எடுத்துக்கொண்டால் ஊரிலுள்ள மற்றவர்களுக்கும் சத்தியத்தை உடைப்பது எளிதாகப் போகும். அப்படி இருக்கலாகாது. அர்ஜுனன் சத்தியம் உடைத்து சமாதானம் ஆனான் என்ற பேச்சு வரக்கூடாது. எனவே, செய்த உடன்படிக்கையின்படி நான் பன்னிரெண்டு மாதங்கள் தீர்த்தயாத்திரை மேற்கொள்கிறேன். இது பலவிதத்தில் எனக்கு உதவும்,' என்று சொல்லி அவன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டான்.

மறுபடியும் திரும்பி வந்து தன் நண்பனை பார்த்து சந்தோஷமடைந்து, அவன் சகோதரியைப் பார்த்து திகைப்படைந்து இவள் எனக்கு மனைவியாக மாட்டாளா என்று எண்ணத் துவங்கி விட்டான். சிறிதுகூட வெட்கம் இல்லாமல் தன்னுடைய தடுமாற்றத்தை, தன் மனம் சுபத்ரையை பின் தொடர்வதை வெட்கமின்றி சொல்லி விட்டான். இதுதான் அர்ஜுனன்.

ை குமன்

மிகப்பெரிய யது குலத்தினுடைய செல்வ மகளான சுபத்ரையை ஒருவன் விரும்புவதற்கு யோக்கியதை வேண்டும். அந்த விருப்பத்தை அந்த குடும்பத்தாரிடம் சொல்ல கூடுதல் யோக்கியதை வேண்டும். கிருஷ்ணர் நண்பர். ஆனாலும், இவ்வளவு பெரிய அனுமதியை அவர் கொடுப்பாரா, இதை ஏற்பாரா? அந்தக் கவலை அவனுக்கு இல்லை. தன்னுடைய நட்பின் மீது அவனுக்கு நம்பிக்கை இருந்தது. அந்த நட்பு கிருஷ்ணரை சார்ந்திருக்கும்போது கிருஷ்ணர் மீதும் நம்பிக்கை இருந்தது. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசத் தெரியாதவன். எனக்கு சுபத்ரை கிடைத்தால் நன்றாக இருக்குமே. நான் சௌக்கியமாக வாழ்வேனே என்று கிருஷ்ணரிடம் சொல்ல, 'சந்நியாசியாக வேடமிட்டிருக்கிறாய். இது நல்லதல்லவே?' என்று அவர் கேட்க. பலராமர் வந்து அழைக்க, சுபத்ரையை பார்த்து, "நீயே கவனித்துக் கொள் இந்த சந்நியாசியை" என்று கட்டளையிட, சகலமும் கிருஷ்ணரின் மனம்போல் நடந்தது.

ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் அர்ஜுனனுடைய, காதல் எண்ணத்திற்குக் கூட கிருஷ்ணர் காரணம் என்று தோன்றுகிறது. வெறும் நண்பனாக இருக்கின்ற பந்தம் அவருக்கு போதவில்லை. அவருக்கு உறவாக வேண்டும் என்று தோன்றியது. அப்பொழுதுதான் அவன்மீது தன் பிடி அதிகமாக இருக்கும். அப்பொழுதுதான் தன் மீது பிரேமை அவனுக்கு அதிகரிக்கும். அவனை ஒரு கடனாளியாகச் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தில் சுபத்ரை வளைய வரும் அரண்மனையில் அவனை உட்கார வைத்தார். அப்படி உட்காரும்படி பலராமரைச் சொல்ல வைத்தார்.

ஸ்ரீகிருஷ்ணரின் மனம்போல் அல்லாது வேறு எந்த விஷயமும் நடப்பதில்லை. உலகின் ஒவ்வொரு விஷயமும் நாராயணரால் தீர்மானிக்கப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ணராக அவதரித்து பூமாதேவியின் பாரம் குறைக்க வந்திருக்கின்ற அந்த அவதாரம் அந்த நோக்கத்திற்கான செயல்களையே இடையறாது செய்து வந்தது! அர்ஜுனனுக்கு தன் சொந்த சகோதரியான சுபத்ரையை மணம் முடிப்பதும் பூபாரம் குறைவதற்கே.

சந்நியாசிக்கு எல்லா உபசாரங்களும் அரண்மனை பெண்டிரால் நடத்தப்பட்டன. மத்திம வயது பெண்கள் அவருக்கு அருகே போனதும் கொஞ்சம் துணுக்குற்று பின்னடைந்தார்கள். இந்தப் பார்வை ஊடுருவுகிறதே, சந்நியாசியின் பார்வைபோல் இல்லையே என்று பயந்தார்கள்.

மலர் குவியலுக்கு நடுவே அமர்ந்திருக்கும் பதுமைபோல ஏதும் செய்யவொண்ணாது கன்னிப் பெண்களின் கூட்டத்திற்கு நடுவே அர்ஜுனன் அமர்ந்திருந்தான். ரோஜா மலருக்கு

நடுவே அன்று மலர்ந்த தாமரையை வைப்பதுபோல சுபத்ரை உள்ளே நுழைந்ததும் பரவசமானான். அவன் உடம்பின் ஆட்டங்கள் அதிகமாக வெளிப்பட்டன. எழுந்திருக்க முயற்சித்தான். உட்கார்ந்தான். இடதும், வலதும் அலைந்தான். முகம் வெளிறினான். சிரித்தான். முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டான். மந்திரம் சொல்ல முயற்சித்தான். “வருக... வருக... நலமா” என்று விசாரித்தான்.

அர்ஜுனன் ஏகாக்கிரகம் கொண்டவன். குறி பிசகாது அடிக்கின்ற கண்களும், மனமும் கொண்டவன். ஆழ்நிலை தியானத்திற்கு போனவன். ஆனால், மனித மனம் மிகத் தந்திரமானது. அவனை மீறி அவன் மனம் அலைந்தது. சுபத்ரையை பார்த்ததும் திக்குமுக்காடிற்று. இது கிரகச்சாரமா அல்லது கிருஷ்ணனின் லீலையா என்று சந்தேகம் அவனுக்கு வந்தது. காமவசப்பட்டு விட்டோம். காதல் வயப்பட்டு விட்டோம், கிருஷ்ணரிடம் சொல்லி விட்டோம். இனி மீறினால் சரியாக வராது. என் தங்கையை பிடிக்கவில்லையா என்று கிருஷ்ணன் கேட்டால் என்ன பதில் சொல்வது. சொல்லி எப்படி உயிர் வாழ்வது. முன்னேறவும் முடியவில்லை. பின்னடையவும் முடியாது. நாமாக வந்து வம்பில் மாட்டிக் கொண்டோம். பெரிய இடத்து சம்பந்தத்தில் பிழை செய்யப் போகிறோமா என்று அர்ஜுனன் கவலைப்பட்டான்.

கவலை முகத்தில் தெரிந்தது. சற்று முன் குதியலாக இருந்த அர்ஜுனன் சோர்ந்து கிடப்பதைப் பார்த்து அவர்கள் வியந்தார்கள். ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்.

இந்த ஆள் சந்நியாசியே இல்லை. ஊர் சுற்றி. சோற்றுக்கு பதில் ஒரு பானை பாயசம் வைத்தேன். இவருக்கு கொடுத்து விட்டு மற்றவர்களுக்கு கொடுக்கலாம் என்று நினைத்தேன். பிரசாதமாக வழங்க திட்டமிட்டேன். ஒரு பானை பாயசத்தையும் மடக்மடக்கென்று குடித்து விட்டது. பானைக்கு அடியிலிருந்த பருப்புகளையும் வழித்துத் தின்றது. இப்படி சாப்பிடுகிறவன் எப்படி சந்நியாசி ஆவான்? பலராமர் ஏமாற மாட்டாரே, எப்படி ஏமாந்தார் என்று பேசிக் கொண்டார்கள்.

மலைக்கு பூஜை செய்ய யாதவர்கள் புறப்பட்டார்கள். அந்த சந்நியாசியோடு கிருஷ்ணர் கம்பீரமாக நடந்து வந்தார்.

யாதவப் பெண்கள் ஆட ஆட மனம் பேதலித்தது. வெகுநாள் உலர்ந்த உடம்பிற்கு பெண் சுகம் தேவைப்பட்டது. சட்டென்று அங்கு சுபத்ரை இறங்க, மற்ற எல்லாப் பெண்களும் மறைந்து போய் சுபத்ரை மட்டுமே மனதில் நின்றாள். காமம் மட்டுமே சந்தோஷமாகாது. காதல் இல்லா காமம் வீண். இப்படிப்பட்ட பெண்ணைத்தான் காதலிக்க வேண்டும். இப்படிப்பட்ட பெண்ணால்தான் காதலிக்கப்பட வேண்டும். சுபத்ரை விரும்புவாளா மனம் யோசித்தது. அவன் யோசிப்பை கிருஷ்ணர் புரிந்து கொண்டார்.

‘‘சுபத்ரை விரும்புவாளா என்று யோசிக்கிறாய். விரும்பவில்லை என்று சொன்னால் என்ன செய்வாய்? சுபத்ரைக்கு சுயம்வரம் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. தேதி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை சுபத்ரைக்கு நிச்சயமானால் சுயம்வரத்திற்கு மன்னர்கள் வருவார்கள். பெண் மனதை சொல்ல முடியாது. வேறு யாரையேனும் அவள் வரிக்கக்கூடும். வேறு எந்த ஆணாவது அவளை வசீகரிக்கக்கூடும். காரணம் ஒன்றும் இருக்காது.

“க்ஷத்திரியர்களுக்கு பெண்ணை தூக்கிக்கொண்டு போவது ஒரு தர்மமான விஷயம். முடிந்தால் சண்டையிட்டுக்கொண்டு உன் பெண்ணை மீட்டுக்கொள் என்று சொல்வது ஒரு வீரமான விஷயம். அப்படி கடத்திக்கொண்டு போன பெண்ணை வேறு எவரும் வரிக்கவும் மாட்டார். நீ சுபத்ரையை கடத்திக்கொண்டு போவதுதான் நல்லது. சுபத்ரை விரும்புவாளா என்று கேள்வி கேட்டுக்கொண்டு இருக்காதே. நீ யார் என்று தெரிந்தால் சுபத்ரை நிச்சயம் விரும்புவாள். அர்ஜுனனை விரும்பாத பெண்ணும் உண்டோ. சந்நியாசி என்று பின்னடைந்திருக்கிறாள்.”

“நான் யார் என்று சொல்லி விடுகிறேன்.”

கிருஷ்ணர் சிரித்தார். அவனை தனியே விட்டு சுபத்ரையின் அருகில் போனார். அவளோடு பாடுவது போலவும், அவள் ஆடுவதற்கேற்ப தாளமிடுவது போலவும் இருந்தார். அவள் அருகே வரும்போது, “அர்ஜுனன் உனக்காக காத்திருக்கிறான். இங்கு சந்நியாசியாக வந்தது அர்ஜுனன்தான். உன்னை காதலிக்கிறான்” என்று சொல்ல, சட்டென்று அவள் அடங்கிப் போனாள். மெல்ல ஒரு மேடையில் வந்து அமர்ந்து கொண்டாள். தோழிகள் ஆச்சரியப்பட்டார்கள். விட்டுவிட்டு நடனமாடினார்கள்.

> **கிருஷ்ணர் இந்த நாடகத்தை துவங்கும் முன்பே சில வீரர்களை தர்மபுத்திரரிடம் அனுப்பி, உங்கள் தம்பிக்கு என் தங்கையை மணமுடிக்க விரும்புகின்றேன். பெரியவர்கள் ஆதரிக்க வேண்டும் என்று ஓலை அனுப்பினார்.**

“என்ன சுபத்ரை, என்ன ஆயிற்று?” கிருஷ்ணர் வாஞ்சையோடு கேட்டார்.

“அவ்வளவு பாக்யசாலியா நான்! அர்ஜுனன் காதலிக்கின்ற அளவுக்கு அழகியா நான் அல்லது உங்கள் சகோதரி என்பதால் காதலிக்கிறாரா? இது அர்ஜுனன் விருப்பமா அல்லது உங்கள் லீலையா?” அவள் விழி உயர்த்திக் கேட்டாள்.

“அர்ஜுனன் எப்படித் தவிக்கிறான் என்பதை நான் அறிவேன். நீ வந்தவுடன் அவன் பித்து பிடித்ததுபோல ஆகிறான். உளறித் தொலைக்கிறான். நீ கவனிக்கவில்லையா?”

“ஆமாம் கவனித்தேன். ஏன் என்று தோழிகளும் கேட்டார்கள். இவன் சந்நியாசி இல்லையே என்றும் பேசிக் கொண்டார்கள். நான்தான் காது கொடுக்கவில்லை. நீங்கள் சந்நியாசி என்றால் அவர் சந்நியாசிதானே என்று அமர்ந்து விட்டேன்.”

கிருஷ்ணர் வாய்விட்டுச் சிரித்தார். தன் தங்கையை பாசத்துடன் தடவிக் கொடுத்தார். தன்னை இப்படி முழுவதுமாக நம்புகிறவர்களை கிருஷ்ணர் அதிகமாக நேசிப்பார். அவர் வேண்டியது அதுவே. “சுபத்ரை, உனக்கு சிறந்த கணவன் வாய்க்க வேண்டும் என்று நீ பிறந்தபோதே நினைத்தேன். அவ்விதமே நடக்கப் போகிறது. உலகத்தில் மிகச் சிறந்த வீரன், அழகன், அறிஞன் உனக்கு கணவனாக வரப் போகிறான். இவனை விடச் சிறந்த வரனை உனக்கு யாரும் தந்து விட முடியாது. இவனால் உலகம் சுபிட்சமடையப் போகிறது.”

கிருஷ்ணருக்கு தன்னுடைய வேலை ஒன்றே குறி. செயலுக்குண்டான மனிதர்களை வைத்து அவன் செயலுக்குண்டான விளைவை ஏற்படுத்துவான். மனிதன் ஆற்றல் உள்ளவன். அவனால் படிப்படியாக பல விஷயங்களில் முன்னேற முடியும். ஆனால், பிரபஞ்ச சக்திக்கு நிகராக தானும் வந்து விட்டதாக அவன் நினைக்கிறான். அப்பொழுதுதான் அந்த வினை முற்றுகிறது. அவனை கீழே பிரபஞ்ச சக்தி அழுத்தி அடங்க வைக்கிறது. எத்தனை அடக்கினாலும் உலகமே தன் சக்திக்குக் கீழ் என்று மனிதன் நினைத்து விடுகிறான். அவ்வப்பொழுது பிரபஞ்ச சக்தி பூமியில் இறங்கி தான் யார் என்பதை மனிதரூபத்தில் காட்டத் துவங்கி விடுகிறது.

ஆமாம், பிரபஞ்ச சக்தியின் மனித ரூபம் ஸ்ரீகிருஷ்ணர். அது அவர் பிறந்த நாளிலிருந்து பல்வேறு விதமாக நிரூபிக்கப்பட்டு வருகிறது.

கடவுளை எத்தனை விதமாக நிரூபித்தாலும் அதற்கு எதிராகப் பேசுகிற மனிதர்கள் உண்டு. எதிராகப் பேசுவது என்பது அந்த எதிர்ப்பது சந்தோஷத்திற்கே அன்றி அது கடவுளை மறுத்ததாகாது. அறிவுள்ளோர் பிரபஞ்ச சக்தியை மறிக்கத்தானே செய்வர், எப்படி மறுக்க முடியும்? சாதாரண பாமரர்களுக்குண்டான ஆசார அனுஷ்டானங்களை மறுக்க முடியுமே தவிர அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கின்ற அந்த பிரபஞ்ச சக்தி பற்றி யோசிக்கக்கூட முடியாது. முற்றிலும் உணராத ஒன்றை எதிர்த்து என்ன பயன். என்னை ஆதரிக்கவும் வேண்டாம் என்று பிரபஞ்ச சக்தி தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது. ஆனால், அந்த வியப்புக்குரியவன், அதைக் கண்டு திகைத்து நின்றவன் கைகூப்பத்தான் செய்வான். கடவுள் இல்லை என்று சொல்கின்ற நாத்திகம் ஒரு அபத்தம்.

கிருஷ்ணர் இந்த நாடகத்தை துவங்கும் முன்பே சில வீரர்களை தர்மபுத்திரரிடம் அனுப்பி, உங்கள் தம்பிக்கு என் தங்கையை மணமுடிக்க விரும்புகின்றேன். பெரியவர்கள் ஆதரிக்க வேண்டும் என்று ஓலை அனுப்பினார். கிருஷ்ணரை சம்பந்தியாகக்கொள்ள குரு வம்சத்தாருக்கு கசக்கிறதா என்ன! தர்மபுத்திரர் மிகுந்த சந்தோஷத்தோடு அதை ஆதரித்தார். பீமனுக்கும் தனியே ஒரு கடிதம் எழுதப்பட்டது. கிருஷ்ணர் இனி எங்கள் பக்கம் என்று அவன் சந்தோஷமடைந்தான். நகுல சகாதேவர்கள், நாங்கள் செய்த புண்ணியம். இந்த திருமணம் அற்புதமாக நடக்கப் போகிறது என்று கட்டியம் கூறினார்கள்.

மலையில் கேளிக்கைகள் நடக்கும் போதே தர்மபுத்திரர் சம்மதம் வந்தபோதே ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனை தனியே அழைத்து, “என்னுடைய தேர் தயாராக இருக்கிறது. என்னுடைய அற்புதமாக குதிரைகள் அதில் பூட்டப்பட்டிருக்கின்றன. என்னுடைய வில்லை எடுத்துக்கொள். நான் உனக்கு பாணங்கள் தருகிறேன். நீ சுபத்ரையை கடத்திக்கொண்டு போய்விடு, உன் காதலைச் சொன்னதும் சுபத்ரை தவித்துப் போயிருக்கிறாள். திகைத்துப் போயிருக்கிறாள். உனக்குச் சரியான மனைவி ஆவேனா என்று கலவரப்பட்டிருக்கிறாள். அவளுக்கு திரௌபதி பற்றிய பயம் இருக்கிறது. அதைத் தேற்ற வேண்டியது, மாற்ற வேண்டியது உன் பொறுப்பு. எங்கள் குலக் கொழுந்து கலவரப்பட்டு விடக்கூடாது” என்று பிரியமுடன் உபதேசித்தார்.

ஸ்ரீகிருஷ்ணர் பிரபஞ்ச சக்தியாக இருந்தாலும் அண்ணனாகவும் இருந்தார். அதுதான் கிருஷ்ணரின் அற்புத தத்துவம். பிரபஞ்சத்தில் தர்மத்துடன் செயல்பட்டது போலவே, ஒரு ஒழுங்கில் இருந்தது போலவே, அவர் பூமியிலும் ஒரு ஒழுங்கில் இருந்தார். ஸ்ரீகிருஷ்ணரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பலதும் உண்டு.

யோசிக்க யோசிக்க திகைக்க வைக்கின்ற ஒரு பாத்திரம் ஸ்ரீகிருஷ்ணர்.

அர்ஜுனன் என்ற மாவீரனுக்கு தன் தங்கையை கொடுத்து அவனை தன்னோடு இறுக்கிக் கொள்கின்ற பேராவலுடன் அவர் செயல்பட்டார். அதற்கு மிகப் பெரிய காரணம் இருந்தது.

அர்ஜுனனை துரிதப்படுத்தினார். அவன் சந்நியாசி வேஷத்தை கலைத்துவிட்டு கவசம் அணிந்து குண்டலங்களும், நெற்றித் திலகமும் இட்டு, கையுறைகளை அணிந்து, கங்கணங்கள் பூட்டி, கேயூரங்கள் மாட்டி, இடுப்பில் பருத்தி ஆடை மீது தோலாடை இறுக்கி, கனத்த பாதரட்சைகள் போட்டு வில்லில் நாணேற்றி ரீங்காரம் செய்தான். எங்கிருந்து வருகிறது இந்த சத்தம் என்று வீரர்கள் திகைக்கும் போது, தேரில் ஓடி ஏறி அவனே செலுத்திக்கொண்டு சுபத்ரை இருக்கும் இடத்தை அடைந்தான். அவளை நோக்கி கை நீட்டினான். பெரிதாய் புன்னகை செய்தான்.

சுபத்ரை திகைப்போடு கன்னத்தில் கை வைத்துக் கொண்டாள். "என்னையா அழைக்கிறீர்கள்?" என்று சந்தேகத்தோடு கேட்டாள். "உன்னைத்தான் சுபத்ரை வா. என்னோடு வா" என்று பிரியம் பொங்க அழைக்க அவள் ஓடி வந்து அவன் கைப் பற்றினாள். உடம்பு புல்லரித்தது. மிக உத்தமமானவன் கை பற்றுகிறோம் என்று அந்த வினாடி தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. வலது காலை தூக்கி தேர் படியில் வைத்து உள்ளே ஏறி அவனுக்கு அருகே அமர்ந்து கொண்டாள்.

தன்னை கடத்திப்போக வந்திருப்பது தெரிந்து அதற்குத் தயார் என்பது போல் விழிகள் தாழ்த்தி காத்திருந்தாள். அவள் மௌனத்தை சம்மதமாக எடுத்துக்கொண்டு அவன் தேரை திருப்பினான். ரைவத மலையிலிருந்து வெகு வேகமாக வெளியே போனான். வீரர்கள் திகைத்தார்கள். கிருஷ்ணருடைய தேர் என்று நினைத்தார்கள். யாரோ ஒருவன் ஓட்டுகிறானே என்று பயந்தார்கள். அதன் வேகம் கண்டு விலகினார்கள். சுபத்ரை அதில் போவதைக் கண்டு பதறினார்கள். பலராமரிடம் ஓடினார்கள். யாரது யாரது என்று அவர் கத்த, அது சந்நியாசி வேடத்தில் வந்த அர்ஜுனன் என்று அவருக்குச் சொல்லப்பட்டது.

"என்னை அவமானப்படுத்தி விட்டான், என்னை மிதித்துக் கொண்டு போய் விட்டான். நான் குரு வம்சத்தை இல்லாது ஒழித்து விடுவேன். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்" என்று பெரும் கூச்சலிட்டார். "உன்னால் வந்தது... உன்னால் வந்தது..." என்று கிருஷ்ணரை நோக்கி கத்தினார்.

"ஆமாம் அண்ணா, என் திட்டம்தான் அது. ஆனால், ஒவ்வொரு நேரமும் உங்களிடம் அனுமதி வாங்கிக் கொண்டுதான் நான் இதைச் செய்தேன். உங்களால் இப்பொழுது என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து கொள்ளுங்கள். அது என்னுடைய தேர், அவை என்னுடைய குதிரைகள். அவனுக்கு நான் ஆயுதங்களும் தந்திருக்கிறேன். முடிந்தால் அவனை மடக்கிக் கொண்டு வாருங்கள். அதற்குத் தயாராகவே அவன் போயிருக்கிறான். அவன் ஒரு சுத்த வீரன். யது குல மங்கையை செல்வம் கொடுத்து கன்னிகா தானமாக வாங்க முடியாது என்று அவனுக்குத் தெரிந்திருக்கிறது. செல்வச் செழிப்பில் நாம் அவர்களை விடச் சிறந்தவர்கள். பணம் நமக்கு முக்கியமில்லை. அதனால் அவன் அந்த விதத்தில் முயற்சி செய்யாது அவளை விரைவில் எடுத்துக்கொண்டு போய் விட்டான். சுயம்வரத்தில் பார்த்துக் கொள்ளலாமே என்று நீங்கள் சொன்னீர்கள் என்றால் அதுவரை காத்திருக்க அவன் மனம் ஒப்பவில்லை. சுயம்வரத்தில் வேறு ஏதேனும் சங்கடம் வந்தால், ஒரு வேளை சுபத்ரை வேறு ஆளைத் தேர்ந்தெடுத்து விட்டால் என்ற பயம் அவனுக்கு இருந்தது. அதனால் சுயம்வரத்திற்கு முன்பே அவன் முந்திக் கொண்டு விட்டான். க்ஷத்திரிய தர்மப்படி பெண்ணைக் கடத்திக் கொண்டு போவது என்பது சாதாரணமானதே. தர்மத்திற்கு உகந்ததே. உங்கள் வீரர்களை பின்னே அனுப்பிப் பாருங்கள். சுபத்ரையின் சம்மதம் இல்லாமல் இது நடந்திருக்காது. சுபத்ரைக்கு அந்த சந்நியாசி அர்ஜுனன் என்று தெரிந்திருக்கும். கேட்டுப் பாருங்கள். அவன் வா என்று கூப்பிட்டவுடன் கையைப் பற்றி தேரில் ஏறிக் கொண்டாள். அவனுக்கு அருகே அழகாக உட்கார்ந்துக் கொண்டாள். எனவே, சுபத்ரை இதற்கு சம்மதம் தெரிவித்திருக்கிறாள். அல்லது இதற்கு ஏங்கியிருக்கிறாள் என்று தெள்ளத் தெளிவாக புரிகிறது. உங்கள் வீரர்களை அனுப்பி அவர்களை மடக்கி வரச் சொல்லுங்கள். முடியாது போனால் ஆறுதல் வார்த்தை கூறி அழைத்து வரச் சொல்லுங்கள்." என்று அமைதியாகப் பேசினார்.

(தொடரும்)

29

மகாபாரதம்

சகோதர பாசம் மட்டும் காரணமல்ல!

பலராமருக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. தன்னுடைய சேனாதிபதிகளை பார்த்துக் கட்டளையிட்டார். சேனாதிபதிகள் கீழே இறங்கினார்கள். சிரித்தபடி அர்ஜுனனைப் பின் தொடர்ந்தார்கள்.



அர்ஜுனனுடைய அம்புகள் அவர்களைத் தாக்கவில்லை. மாறாக சீறிக் கொண்டு தலைக்கு மேல் பறந்தன. முதுகைத் துளைத்து விடுவேன் என்பதுபோல காதருகே வந்தன. கழுத்துக்குக் குறி வைக்காது குண்டலங்களுக்கும், தலைமுடிகளுக்கும், குதிரையின் சேணங்களுக்கும் அவன் குறி வைத்தான். உயர்ந்த மரங்களின் கிளைகளை அம்பினால் அடித்து உடைத்துப் போட்டான். பள்ளங்களை உண்டாக்கினான். புதர்களை நெருப்பு பற்ற வைத்தான். ஒரு வீரன்கூட காயம் அடையவில்லை. அர்ஜுனன் தேரையும் ஓட்டிக் கொண்டு யுத்தமும் செய்து கொண்டிருப்பதை கவலையுடன் சுபத்ரை பார்த்தாள்.

“எனக்கு பயிற்சி இருக்கிறது. நான் தேர் ஓட்டுகிறேன்,” என்றாள்.

அவள் இறங்கி தேரில் சாரதியின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். குதிரையை அடித்து விரட்டினாள். குதிரைகள் அற்புதமாக ஓடின. இடைவெளி அதிகமாகியது. பின் தொடர்ந்த வீரர்கள் சோர்வானார்கள். சுபத்ரை மிக சாமர்த்தியமாகத் தேரோட்ட, தோற்றுப் போனோம் என்பதை உணர்ந்த வீரர்கள் உரத்த குரலில் அர்ஜுனன் பேரை கூறினார்கள். இடி இடிக்கும்போது குழந்தைகள் கூவுவது போல, ‘அர்ஜுனா அர்ஜுனா’ என்றார்கள்.

அர்ஜுனன் திரும்பிப் பார்த்தான். சமாதான அம்புகள் பறக்க விடப்பட்டன. உயரே பறந்து வண்ணத் துணிகளுடன் கீழே இறங்கின. அர்ஜுனனும் சமாதான அம்புகள் விட்டான். அவர்கள் நெருங்கி வந்தார்கள். அவன் உருவிய வாளோடு கவனமாக இருந்தான். அவர்கள் முன்வந்து அடி பணிந்தார்கள். அர்ஜுனனுக்கு முழங்கால் பணிந்து வணக்கம் சொன்னார்கள். அர்ஜுனன் வாளை உறையில் இட்டான். ஓடிவந்து, “யாரையேனும் தாக்கி விட்டேனா. யாருக்கேனும் காயம் பட்டு விட்டதா” என்று அன்பொழுகக் கேட்டான். அவர்கள் கை கூப்பி, இல்லையென்று கண்களில் நீர் துளிர்க்க பதில் சொன்னார்கள். உண்மையான ஒரு வீரனின் கவலை இப்படித்தானே இருக்கும் என்று பாராட்டினார்கள். அர்ஜுனனின் தேர் திரும்பியது.

சுபத்ரை தேர் ஓட்டிப் போனது பற்றி பலராமரிடம் சொல்லப்பட்டது. “அப்படியானால் அவளுக்கு அதில் விருப்பம் இருக்கிறது என்று தோன்றுகிறதா?” என்று தளபதிகளை கேட்க, தளபதிகள் ஆமாம் என்று சொன்னார்கள்.

“சுபத்ரைக்கு பிடித்தே போயிருக்கிறாள் என்றால் என்ன செய்வது? அவளுக்கே விருப்பம் என்றால் எப்படி மறுப்பது.”

பலராமர் மனம் குளிரத் துவங்கியது. உள்ளம் குழைந்தது. ஏமாற்றியது அர்ஜுனன் அல்ல, ஸ்ரீகிருஷ்ணர் என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. ஆனால், கிருஷ்ணரை கோபித்துக் கொள்ள முடியாது. ‘ஏன் இப்படிச் செய்தாய்?’ என்று ஒரு பார்வையில் கேட்டார். ‘காரணம் இருக்கிறது’ என்று அதேவிதமாக பார்வையில் கிருஷ்ணர் பதில் சொன்னார். மெல்ல வந்து பலராமர் கிருஷ்ணரை அணைத்துக் கொண்டார். கிருஷ்ணரும் பலராமரைத் தாள்பணிந்தார். மன்னித்துக் கொள்ளுங்கள் என்றார்.

“பெரிய திட்டம் தீட்டி அதில் சிறிய நாடகம் நடத்தியிருக்கிறாய். எனக்கு புரிகிறது. ஒரே ஒரு கேள்வி. அர்ஜுனன் அப்படி ஒரு அற்புதமான ஆளா?”

“நிச்சயமாக.”

“இந்தக் குழந்தையை அவன் காப்பாற்றுவானா?”

“அதில் எனக்கு சந்தேகமேயில்லை.”

“திரௌபதி என்ற பெண் அங்கு இருக்கிறாளே. அவள் நம் யதுகுல குலக்கொடியை கேலி செய்ய மாட்டாளா? துன்புறுத்த மாட்டாளா?”

“அவளுக்கு நம்மைப் பற்றித் தெரியும். குறிப்பாக என்னைப்பற்றி தெரியும். சுபத்ரை என் தங்கை என்று தெரிந்ததும் அவள் ஒருபொழுதும் அவளுக்கு எதிராக இருக்க மாட்டாள். இது என் வாக்கு.”

பலராமர் சமாதானமடைந்தார். கிருஷ்ணரை இறுக்கிக் கட்டிக் கொண்டார். “சுபத்ரை பற்றி கவலை இருந்தது. அதுதான் யோசித்தேன்.”

“நீங்கள் அவளை குழந்தை என்று நினைக்கிறீர்கள். இல்லை. பருவம் அடைந்த எல்லா பெண்களும் விவேகமானவர்கள். அவர்களுக்கு தம் வாழ்க்கை பற்றி, யாருக்கு வாழ்க்கைப்படப் போகிறோம் என்பது பற்றித் தெள்ளத் தெளிவாகத் தெரியும். இந்த நேரம் அவள் தன் திருமணம் எப்படி நடக்க வேண்டும் என்றும், புகுந்த வீட்டிற்கு எப்படி போக வேண்டும் என்றும், அங்கு எப்படி வாழ வேண்டும் என்றும் சுபத்ரைக்குத் தெரியும். அதுமட்டுமல்லாது சுபத்ரை கர்ப்ப காலம் வரை, அவளுக்கு குழந்தை பிறக்கும் வரை நான் அங்கு இருப்பேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்” என்று சொல்ல,

பலராமர் மறுபடியும் கிருஷ்ணரை இறுக்க தழுவிக் கொண்டார்.

“இதுதான் சகோதர பாசம். நான் வெறுமே கோபப்படுகிறேனே தவிர, அடி, பிடி என்று கத்துகிறேனே தவிர, சொந்த சகோதரியோடு அவள் புகுந்த வீட்டிற்கு போவேன் என்று சொல்லுகின்ற சகோதரன் மிகவும் உத்தமமானவன். எந்த சகோதரனும் தன் மதிப்பை குறைத்துக் கொண்டு சம்பந்தி வீட்டில் இருக்க மாட்டான். உனக்கு அதைப் பற்றியெல்லாம் கவலையில்லை. சம்பந்தி வீட்டார் உன்னை கடவுள் என்று தொழுகின்றார்கள். எனவே, அங்கு உனக்கு எந்த மரியாதை குறைவும் ஏற்படாது. நீ எல்லாவற்றுக்கும் புது உதாரணமாய் இருக்கிறாய்.

ஐ குமரன்

சகோதரிக்காக எதையும் செய்யும் சகோதரனாய் இருக்கிறாய். கிருஷ்ணா, நீ தனித்தவன். நீ மிகப் பெரிய முன்னுதாரணம்." என்று புகழ்ந்தார்.

மிக அற்புதமாய் திருமணம் நடந்தது. துவாரகை முழுவதும் தன் மனைவியோடு அர்ஜுனன் வலம் வந்தான். எல்லா வீரர்களையும் அறிமுகப் படுத்திக் கொண்டான். மக்களோடு எளிமையாகப் பழகினான். செந்நிற ஆடை உடுத்தி மகாராணி போல வலம் வந்த சுபத்ரையை அழைத்து, "நீ யாதவ குலத்து பெண். ஆச்சி போல உடுத்திக் கொள். உன் குல வழக்கப்படி இரு. அங்கு போய் அமைதியாய் பெரியவர்களுக்கு வணக்கம் சொல்," என்று சூசகமாய் சொல்ல, அவள் புரிந்து கொண்டாள்.

சொந்த தங்கையான சுபத்ரையிடம் கிருஷ்ணர் உட்கார்ந்து பேசுவதும் யுத்தத்தின் பொருட்டே. பூபாரம் குறைப்பதின் பொருட்டே. க்ஷத்திரியர்களின் அகங்காரம் அடக்குவதின் பொருட்டே.

ஒரு ஆச்சி வேடத்தில் இந்திர பிரஸ்தத்திற்கு தன் கணவனோடு சுபத்ரை போனாள். திரௌபதியின் காலில் பணிந்தாள். 'உங்களுக்கு வேலைக்காரியாக இருப்பேன்' என்று கை கூப்பி பேசினாள். என்னை தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கெஞ்சினாள். திரௌபதி திகைத்து அந்த அன்பு தாளாது கட்டிக் கொண்டாள். முத்த மழை பொழிந்தாள்.

"நீ யார் என்று எனக்குத் தெரியாதா? எதற்கு இந்த வேடம்? அர்ஜுனன் கட்டளையா? சாதாரணமாக இரு. நீ மகாராணி போல் வாழ வேண்டிய இடம் இது. எனக்கு உன்மீது எந்தக் கோபமும் இல்லை. எப்படி இருக்க முடியும்? எல்லாம் வல்ல கிருஷ்ணரின் சகோதரி அல்லவா! நாங்கள் தெய்வமென நினைக்கின்ற மனிதருக்கு நீ தங்கையல்லவா! உன்மீது எனக்கு நெல் முனையளவும் கோபமில்லை. ஆனால், உன் புருஷனை கேட்காமல் விடமாட்டேன்." என்று அவளை அணைத்துக் கொண்டு தன் அரண்மனைக்குள் அழைத்துப் போனாள்.

அர்ஜுனன் மெல்ல உள்ளுக்குள் நுழைந்தான்.

"வாருமய்யா. எங்கு போனீர்? போகிற இடமெல்லாம் வேட்டையாமே! பல இடத்தில் திருமணமாமே! இதுதான் சன்னியாசி லட்சணமா? இதுதான் பிரம்மச்சர்ய விரதமா? இந்த இடத்தை விட்டு ஓடிவிட்டு எல்லா இடத்திலும் மேய்ந்து விட்டு வந்தீர்களாக்கும்? என் பெயர் திரௌபதி. அதாவது. ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்க, அர்ஜுனன் அவளை சமாதானப்படும்படி பேசினான்.

பரதகண்டத்தின் வடக்கு பக்கம் அற்புதமான க்ஷேத்திரங்கள் இருக்கின்றன என்று விவரிக்க ஆரம்பித்தான். ஒரு அளவுக்கு மேல் புருஷனை கோபிக்க முடியாத திரௌபதி சிரித்துக் கொண்டு, "இதையெல்லாம் பிறகு கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது இவளுக்கு தகுந்த இடத்தை ஏற்பாடு செய்யுங்கள்," என்று சுபத்ரையை அவனோடு அனுப்பி வைத்தாள்.

சுபத்ரை பரம சுதந்திரத்துடன். சந்தோஷத்துடன் எல்லா உறவுகளோடும் ஒட்டிக் கொண்டும், அவர்களோடு பேசிக் கொண்டும் வாழ்ந்தாள். பீமனின் பலத்தை பற்றி வியந்தாள். குந்தியின் துக்கம் பற்றி கேட்டாள். அவள் செய்த தியாகங்களைப் புரிந்து கொண்டாள். நகுல சகாதேவர்களைப் பற்றிய திறமைகளை கேட்டறிந்தாள். அவர்களோடு அவர்கள் வித்தைகள் பற்றி கேட்டு தெரிந்து கொண்டாள். நான் உணவு பரிமாறுகிறேன், நான் துணிகளை மடித்து வைக்கிறேன் என்று கீழ் இறங்கினாள். வேலைக்காரர்கள் அதைத் தடுத்து அவளை அமைதியாக உட்கார வைத்தார்கள்.

அர்ஜுனனோடு கூடி சுபத்ரை கர்ப்பமடைந்தாள். அவள் வயிற்றில் குழந்தை வளரும் போது கிருஷ்ணர் அவள் தலையில் முத்தமிட்டு ஆசீர்வதித்தார். அதைத் தொடர்ந்து விழாக்கள் நன்கு நடந்தேறின. அந்தணர்களால் தினந்தோறும் மந்திர ஜபங்கள், வேதங்கள் சொல்லப்பட்டு அவள் காதும், மனதும் நிரம்பி வழிந்தன.

அதைவிட அற்புதமாக கிருஷ்ணர் அவளோடு மட்டுமின்றி அவளுடைய வயிற்றில் வளரும் குழந்தைக்கு தெரியும் வண்ணம் பல தத்துவ விஷயங்களும், சாஸ்திர விஷயங்களையும், ஆயுதப் பிரயோகங்களையும், போர் பற்றியும் பேசினார். எனக்கு எதற்கு என்று கேள்வி கேட்ட சுபத்ரையை மெல்ல தடுத்து நிறுத்தி, "இது உன் பிள்ளைக்காக பேசுகிறேன். உன் பிள்ளை இதை கேட்க வேண்டும் என்று பேசுகிறேன்." என்று இனிமையாகக் கூறினார்.

சொந்த தங்கையான சுபத்ரையிடம் கிருஷ்ணர் உட்கார்ந்து பேசுவதும் யுத்தத்தின் பொருட்டே. பூபாரம் குறைப்பதின் பொருட்டே. க்ஷத்திரியர்களின் அகங்காரம் அடக்குவதின் பொருட்டே. சாதாரண மக்களையும், தர்மாத்மாக்களையும் காப்பாற்றுவதின் பொருட்டே. அந்த வயிற்றில் சிசுவிடம் அவர் பேசியதும், அதற்கு போதித்ததும் அவருடைய தந்திரமே. ஆனால், ஸ்ரீகிருஷ்ணர் என்ன செய்கிறார் என்று யாருக்கும் புரிவதேயில்லை.

மிக அழகான குழந்தையை சுபத்ரை பெற்றெடுத்தாள். அந்த ஆண் குழந்தைக்கு அபிமன்யு என்று பெயரிட்டார்கள். அவன் மன்யுவான். கோபத்துடன் போரிடுபவன். அபி பயமின்றி போரிடுகிறவன். அபிமன்யு கோபத்துடன் பயமின்றி போரிடுகிறவன் என்று பெயரிட்டார்கள்.

கிருஷ்ணருக்கு அப்படிப்பட்டவன்தானே வேண்டும்! அப்படிப்பட்ட வீரன் இறக்க நேர்ந்தால், அப்படிப்பட்ட மகன் அடிபட்டு துடிப்பதை அர்ஜுனன் பார்க்க நேர்ந்தால் போர் உக்ரம் ஆகுமல்லவா. அழிக்கவே முடியாத பீஷ்மரையும்,

துரோணரையும் தூக்கி போட்டு மிதிப்பான் அல்லவா. அந்த கோபத்தை கிளற, அவனுக்கு ஒரு செயல் வேகம் கூட ஒரு காரணம் வேண்டுமே. அபிமன்யு காரணமாவான் என்று ஸ்ரீகிருஷ்ணருக்கு மட்டும் தெரிந்தது. பயமின்றி கோபத்துடன் போரிடுகிறவனை அவர் பேணி காத்தார். பல்வேறு வித்தைகளை அவனுக்கு அர்ஜுனன் மூலம் சொல்லிக் கொடுத்தார்.

கிருஷ்ணர் இந்திரப்ரஸ்தம் வந்து காதலித்து திருமணம் செய்து கொண்ட தன் சகோதரிக்கு அருகே வாழ்ந்து அவள் குடும்பம் செய்கின்ற அற்புதத்தை பார்த்துக் கொண்டிருப்பதற்கு சகோதர பாசம் மட்டும் காரணமா? இல்லை. வேறு காரணமும் இருந்தது.

அபிமன்யு அற்புதமாக வளர்ந்தான். பெயர் பெற்ற தாதிகளோடு சுபத்ரை அவனை கண்ணும் கருத்துமாக வளர்த்துவர, அர்ஜுனனும், கிருஷ்ணனும் பல காடுகளில் சஞ்சரித்தார்கள். மிருகங்களை வேட்டையாடினார்கள். பரதகண்டம் உள்ளே வெளிச்சமே நுழைய முடியாத அடர்ந்த காடுகளை கொண்டிருந்தது. இந்திரன் மிகுந்த மழையை பொழிவித்து அந்த காடுகளை வளர்த்து வந்தான். கோரமான மிருகங்களும், பூதங்களும், பேய்களும், விஷஜந்துகளும் அந்தக் காடுகளில் குடியிருந்தன. கொடுமையான பறவைகள் இருந்தன. காடுகளில் உணவு கிடைக்காதபோது அவை அத்துமீறி வயல்வெளிகளில் நுழைந்தன. மனிதர்களை துன்புறுத்தின. எந்த நேரமும் மிருகங்களைப் பற்றிய பயம் பரத கண்டத்தில் வாழும் மனிதர்களுக்கு இருந்தது. காடுகளினால் இந்திரன் பலமடைந்தான். மழை பெற்றான். அந்த மழை மூலமாக காடுகள் வளர்த்தான். இருவரும் பரஸ்பரம் இறுகிய நட்பு கொண்டு இன்னும் இன்னும் அதிகமாக பெருக தலைப்பட்டார்கள். காண்டவ வனத்தை அடக்க வேண்டிய காலம் வந்தது.

> சூட்சமமான நர நாராயணர்கள் அந்த அந்தணனின் தோற்றத்தைக் கண்டும், அவர் பேச்சை கண்டும் அதில் ஏதோ தந்திரம் இருக்கிறது என்று புரிந்து கொண்டார்கள். “என்னவிதமான அன்னத்தை நீங்கள் யாசிக்கிறீர்கள்” என்று அர்ஜுனன் அமைதியாகக் கேட்டான்.

காண்டவ வனத்தின் விளிம்புகளில் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோது அந்த வனத்தின் அடர்ந்த பகுதியை நரநாராயணர்களான அர்ஜுனனும், கிருஷ்ணரும் கவலையுடன் நோக்கினார்கள். அந்த இடத்திற்கு வெண்ணிற தாடியும், வெண்ணிற சிகையும், கூர்ந்த மூக்கும், ஒளிமிகுந்த பார்வையும், உறுதியான உடம்பும், உயரமும், நீண்ட கைகளும், அழகிய விரல் நகங்களும், படர்ந்த மார்பும், குழிந்த வயிறுமாய் ஒரு அந்தணர் வந்து நின்றார். பார்க்கும்போதே வணங்குகின்ற தோற்றத்தைக் கொண்டிருந்தார்.

“உங்களைப் பார்த்தால் க்ஷத்திரியர்கள் போல் தோன்றுகிறது. நான் அந்தணன். என் பசிக்கு ஏதாவது உணவு தர முடியுமா? நான் மிகுந்த பசியோடு இருக்கிறேன்” என்று கைகூப்பி கேட்டார்.

சூட்சமமான நரநாராயணர்கள் அந்த அந்தணனின் தோற்றத்தைக் கண்டும், அவர் பேச்சை கண்டும் அதில் ஏதோ தந்திரம் இருக்கிறது என்று புரிந்து கொண்டார்கள். “என்னவிதமான அன்னத்தை நீங்கள் யாசிக்கிறீர்கள்” என்று அர்ஜுனன் அமைதியாகக் கேட்டான்.

எதிரே வந்த பிராமணர் உண்மை உருவம் கொண்டு சிரித்தார். “புரிந்து கொண்டீர்கள் என்பதற்கு மகிழ்ச்சி. நான் அக்னி தேவன். எனக்கு இந்த காண்டவ வனத்தை எரிக்க வேண்டும். எரித்து பசியை தீர்த்துக்கொள்ள வேண்டும். இங்குள்ள மதத்த விலங்குகளின் கொழுப்பை எரித்து உண்டால்தான் என் பசியாறும். ஆனால், ஒவ்வொரு முறையும் நான் இதை எரிக்க முற்படும்போது, உள்ளே இருக்கின்ற விலங்குகள் நீரை பீய்ச்சியும், மண்ணை தூற்றியும் என் சக்தியை அடக்கி விடுகின்றன. அதுவும் அல்லாது காண்டவ வனத்தை போஷிக்கின்ற இந்திரன் மழையை அனுப்பி என் சக்தியை தடுத்து விடுகிறான். ஈரம் மிகுந்த காற்றை என்னால் உண்ண முடியவில்லை. அதே நேரம் உண்ண வேண்டும் என்ற வெறி என்னுள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. எனக்குத் துணையாக நின்று இந்திரனின் மழையை தடுத்து எனக்கு உதவ வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

அவர் பேச்சில் பணிவு இருந்தது. எதற்காக இந்திரன் காண்டவ வனத்தை ஆதரிக்கிறான் என்று ஸ்ரீ கிருஷ்ணர் கேட்டார். அவர் எல்லாம் அறிந்தவர்.

“தட்சகன் என்கிற பெரிய நாகராஜன் அதிக விஷமுள்ளவன் இந்த காண்டவ வனத்தில் வசிக்கிறான். அவன் விஷ வெப்பம் தாங்காது மனிதர்கள், பசுக்கள் இங்கே நுழைய முடியவில்லை. இது இன்னும் அடர்த்தியாக போய்க் கொண்டிருக்கிறது. உள்ளே கொடிய விஷமுள்ள பாம்புகள் இருக்கின்றன என்பதாலேயே மனிதர்கள் விலகி வருகிறார்கள். வனம் பெருத்துக்கொண்டே போனால் விளைநிலங்களே இல்லாது போகும். உள்ளே இருக்கின்ற மிருகங்கள் வெளியே மக்களை துன்புறுத்துகின்றன. ஆனால், மக்கள் எதிர்க்க சக்தியற்று இருக்கிறார்கள். வனத்தை வெட்டி மாள அவர்களால் இயலாது. எனவே, என்னை உற்சாகப்படுத்த சிலர் தீ மூட்டுகிறார்கள். அது உடனே அணைந்துவிட்டது. அணையாமல் இந்திரனை

எதிர்த்து நான் நன்கு எரியும் வண்ணம் என்னை உற்சாகப்படுத்த வேண்டும்” என்று பேசினார்.

எல்லாம் விட்டு அக்னி தேவன் காண்டவ வனத்தை எரிப்பானேன். வனம் எரிப்பது அவர் வேலையா அல்லது வேறு ஏதேனும் தொந்தரவா என்ற கேள்வி வந்தது.

சேதகி என்று ஒரு மன்னன் இருந்தான். அவன் ஹோமம் செய்வதில் மிகுந்த பிரியமுடையவன். நல்ல ரித்விக்குளை அழைத்து அவர்களை உபசாரம் செய்து நிறைய தட்சிணைகள் கொடுத்து ஹோமங்கள் செய்விப்பான். இடையறாது நூறு வருடம் ஹோமம் செய்ய வேண்டும் என்கிற ஆசை அவனுக்கு இருந்தது. அதை அந்தணர்களிடம் வெளிப்படுத்த அந்த அந்தண ரித்விக்குகளான உயர்ந்த மனிதர்கள் அது இயலாத காரியம் என்றும், மிகப் பெரிய அயர்ச்சி உண்டாகும் என்றும், அதற்குண்டான வலு தங்களுக்கு இல்லையென்றும், ஏற்கனவே அரசர் செய்த பல ஹோமங்களால் கண்கள் எரிகின்றன என்றும், உடல்நலம் குன்றியிருக்கிறது என்றும் அவர்கள் சொன்னார்கள்.

அவர்களற்று பல்வேறு ரித்விக்குகளிடம் அரசன் காலில் விழுந்து கெஞ்சி, நிறைய முன் பணம் கொடுத்து இம்மாதிரியான ஹோமத்திற்கு வரச் சொன்னான். அவர்களும் மறுத்து விட்டார்கள்.

வேதனையுற்ற மன்னன் சேதகி, சிவனை நோக்கி தவம் இருந்தார். ஒற்றைக்காலால் மூச்சை மெல்ல நூலிழையாக விட்டு, கைகளை உயரே தூக்கி, உண்ணாது, நீர் குடிக்காது, கடுமையாக தன்னை வருத்திக் கொண்டான். ஒரு காரியத்திற்காக ஒருவர் தன்னை வருத்திக் கொண்டால் போதும். அந்த இடத்தில் கடவுள் நிச்சயம் தோன்றுவார். சிவபெருமான் அவனுக்கு காட்சி அளித்தார். என்ன வேண்டும் என்றார். தன் பொருட்டு அவர் யாகம் செய்ய வரவேண்டும் என்று கேட்டான். யாகம் செய்ய என்னால் ஆகாது. ஆனால், என் அம்சமான துர்வாசர் என்கிற முனிவர் இருக்கிறார். அவர் பிராமண ரிஷி. அவர் உனக்காக நீ விரும்பிய ஹோமம் செய்வார் என்று சொன்னார்.

பன்னிரண்டு வருடங்கள் இடையறாது நெய் தாரையாக கொட்டும் வண்ணம் ஒரு ஹோமத்தை துர்வாசர் ஆரம்பித்தார். பாதி பிளந்த நீண்ட குழிந்த மூங்கிலில் சிங்க முக வாய் பொருத்தி மறுபக்கம் வளைந்த மரம் பொருத்தி அந்த குப்பியிலே நெய் ஊற்றி அது தாரையாக நெருப்பில் விழுந்தது. விறகுகள் வெட்டிப் போடப்பட்டன. இரவு பகல் பாராது துர்வாசரின் சீடர்கள் கூர்மையாக மந்திரம் சொல்லியபடி நெய்யை ஊற்றி அக்னி வளர்த்தார்கள். அரசர் எதிர்பார்த்தபடி மிகச் சிறப்பாக ஹோமம் பன்னிரண்டு வருடங்கள் நடந்தது. இடையறாது நெய்யை ஊற்றியதால் அக்னி மந்தித்திருந்தார். பிரகாசம் குன்றியிருந்தார். நெய்யைத் தவிர வேறு சில கொழுப்புகளை உண்டால்தான் பிரகாசமாக முடியும் என்று அவருக்கு தோன்றியது. எனவே காண்டவ வனத்தை எரிக்க முயன்றார். ஆனால், தடுக்கப்பட்டார். நரநாராயணர்களான அர்ஜுனன், கிருஷ்ணரை அவர் பணிந்து கேட்டார்.

கிருஷ்ணரும், அர்ஜுனனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அக்னி தேவனே கெஞ்சிக் கேட்கும்போது அவருக்கு உதவ வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அதேசமயம் அவரிடமிருந்து என்ன வாங்க முடியும் என்று யோசித்தார்கள். கண்களால் பேசிக்கொண்டார்கள். “அக்னி தேவனே” அர்ஜுனன் பேசினான்.

“என்னிடம் இருக்கும் வில் சாதாரணமானது. மனிதர்களோடு போர் செய்ய முடியுமே தவிர தேவேந்திரனான இந்திரனோடு போர் செய்ய வலுவற்றது. என்னிடம் அவர் மழையை தடுத்து நிறுத்துகின்ற பாணங்களும் இல்லை. எனக்கு நல்ல வில்லும், நிறைய சரங்களும் தருவீராயின் உமக்காக இந்தப் போரில் ஈடுபடுவேன். அதுமட்டுமல்லாது வனம் முழுவதும் ஓடி போர் செய்ய எனக்கு வேகமான தேரும், நல்ல குதிரைகளும் வேண்டும். இவற்றை கொடுத்தால் உமக்காக நிச்சயம் போரிடுவேன். அது மட்டுமல்லாது கிருஷ்ணருக்கு இந்த வனத்தை விட்டு மிருகங்கள் வெளியேறா வண்ணம் மனிதர்களை தாக்கா வண்ணம் தடுப்பதற்கு உயர்ந்த ஆயுதத்தைக் கொடு. கிருஷ்ணரால் துண்டாடப்பட்ட அல்லது விரட்டப்பட்ட மிருகங்களை நீ உண்டு அதன் கொழுப்பை தின்று பிரகாசிக்கலாம். எங்களுக்குத் தேவையான ஆயுதங்களை தருவீராயின் மிகத்திறமையாக காண்டவ வனத்தை எரித்துவிடுவோம். இந்திரனே வந்தாலும் தடுத்து விடுவோம்” என்று சொன்னான்.

(தொடரும்)

அக்னியின் ஆசீர்வாதம்

30

மகாபாரதம்



அக்னி தேவன் அவன் நிபந்தனையை ஏற்றுக் கொண்டார். மிகச்சிறந்த தேரையும், நான்கு குதிரைகளையும், வானர உருவம் அச்சிட்ட கொடியையும் கொடுத்தார். கொடியில் அந்த உருவம் மிக பயங்கரமாக இருந்தது. தேரில் பல இடங்களில் பல வேகமான மிருகங்கள் செதுக்கப்பட்டிருந்தன. பொன்மயமான அந்தத் தேரில் அர்ஜுனன் பிடிப்பதற்கு ஏற்றவண்ணம் சொரசொரப்பான ஒரு வில் தரப்பட்டது. அதற்கு காண்டீபம் என்று பெயர். அற்புதமான சரங்கள்

அடங்கிய பைகள் தேரில் வைக்கப்பட்டிருந்தன.

கிருஷ்ணருக்கு ஏதுவாக அக்னி பகவான் சக்கரத்தை கொடுத்தான். கௌமோதகி என்கிற கதையையும் வழங்கினான். பிரசித்தமான அந்தக் கதையைப்போல உலகில் வேறு யாரிடமும் இல்லை. அந்தச் சக்கரம் எதிரியை துண்டாடி எந்த ஆயுதத்தின் பாதிப்பும் இன்றி கிருஷ்ணரிடம் திரும்ப வந்துவிடும். அவர் விரலில் ஒரு ஆபரணம்போல மின்னும். அந்த தேரும் அனுமன் கொடியும், காண்டீபமும், சரங்களும் காண்டவ வனத்திற்காக மட்டும் ஏற்படவில்லை. சக்கரமும், கதையும் அவரின் சொத்துகள். நாராயண ரூபத்தில் இருந்த அவை கிருஷ்ணரை வந்தடைந்தன.

"நாங்கள் போருக்குத் தயார். நீங்கள் காண்டவ வனத்தை எரியுங்கள். இந்திரன் வராது நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அர்ஜுனன் உறுதிகூற, நாலா பக்கங்களிலும் காண்டவ வனத்தை அக்னி எரிக்கத் தொடங்கினான்.

இந்திரன் ஓடோடி வந்தான். தனக்கு உதவுகின்ற வனத்தை எரிக்கின்ற அக்னியைப் பார்த்து சீற்றமாகி பெரும் மழையை பொழிவித்தான். வருணனின் ஆற்றலைவிட அதிக ஆற்றலைக் கொண்ட இந்திரன் இடி மின்னலை அனுப்பி பெரும் மழையை பொழிவிக்கச் செய்தான். சரங்களால் அந்த மழை, கூடாரம் போட்டு தடுக்கப்பட்டன. தீ பெரிதாக எரிந்தது. கிருஷ்ணருடைய சக்கரம் வெளியேறத் துடிக்கும் விஷ மிருகங்களையும், பூச்சிகளையும் துண்டாடின. அவை துள்ளிக் குதித்து நெருப்பில் விழுந்தன. அவை விழுந்த இடங்களிலெல்லாம் நெருப்பு பரவி அவற்றை கபளீகரம் செய்தன. காண்டவ வனம் முற்றிலும் எரிக்கப்பட்டது.

காண்டவ வனத்தை எரிப்பது கிருஷ்ணரின் கடமையாயிற்று. கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு மிகச் சிறந்த ஆயுதங்களை வாங்கிக் கொடுத்தது மட்டுமல்லாது, அதை பிரயோகிக்கின்ற பயிற்சியும் அந்த இடத்தில் கொடுத்தார். இந்த பயிற்சியால் அர்ஜுனனுடைய திறமை இன்னும் அதிகமாகும் என்று அவர் தெரிந்து வைத்திருந்தார். இது பிற்பாடு மிகப் பெரிய யுத்தம் நடக்கும்பொழுது மிகச்சீரிய முறையில் பயன்படுத்தப்படும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

இந்திரனுடைய அளவுக்கு மீறிய அதிகாரத்தால் பரத கண்டத்தின் பெரும்பகுதி வனத்தால் மூடப்பட்டு வாழ்வு சுகம் இல்லாது செய்யப்பட்டது. அந்த வனத்திலிருந்து நீராவியைப் பெற்று அந்த வனத்திற்கே நீரை அனுப்பி தன்னுடைய இடி, மின்னல், மேகங்களோடு அவன் ஆடிக்கொண்டிருந்தான். அவனுக்கு பயந்து மற்ற தேவர்களும் அமைதியாக இருந்தார்கள். இந்திரன் வஜ்ராயுதத்தை எடுத்து போர் செய்ய வந்தபோது யமன் உட்பட பல தேவர்கள் அவனுக்கு ஆதரவாகவும், அர்ஜுனனுக்கு எதிராகவும் யுத்தத்திற்கு தயாரானார்கள்.

காண்டவ வனம் எரிக்கப்பட்டபோது தட்சன் என்ற நாகராஜன் அங்கு இல்லை. ஆனால் அங்கிருந்த அவனுடைய மகன் ஒருவிதமாகத் தப்பித்துப் போனான். மாயாசூரன் என்பவன் அந்த வனத்திலிருந்து ஓட கிருஷ்ணர் அவனை வேகமாக பின்தொடர்ந்தார். அவனை எரிகின்ற வனத்திற்குள் தள்ள தன்னுடைய பாணங்களை ஏவினார். ஒருபுறம் அக்னி, ஒருபுறம் கிருஷ்ணர் என்று மாயாசூரன் தவித்தபோது, 'அர்ஜுனா என்னை காப்பாற்று' என்று அவன் தேருக்கு முன் விழுந்தான். காலில் விழுந்தவன் மீது இரக்கப்பட்டு, "நான் இருக்கிறேன் கவலைப் படாதே" என்று அபயம் அளித்தான் அர்ஜுனன். அவன் அபயம் அளித்ததால் கிருஷ்ணரும் தாக்கவில்லை, அக்னியும் எரிக்கவில்லை. தட்சனுடைய மகனும், மாயாசூரனும் சாரங்கம் என்ற நான்கு பட்சிகளும் அந்த வனத்தில் எரிபடாமல் காப்பாற்றப்பட்டன.

வனம் அழிந்ததால் அந்தப் பகுதி நல்ல விளை நிலமாயிற்று. அர்ஜுனனுக்கு அற்புதமான அஸ்திரங்களும், வில்லும் கிடைத்தன. கிருஷ்ணருக்கு சக்கரமும், கதையும் கிடைத்தன. அர்ஜுனனுடைய வலிமை அங்கு சோதிக்கப்பட்டது. இப்படி பல்வேறு விஷயங்கள் தர்மத்தின் பொருட்டு அங்கு நடந்தன. பிறகு நடக்கின்ற யுத்தத்திற்கு முன்மாதிரியாக காண்டவ வனம் ஒரு களமாயிற்று.

பெரும் வனங்கள் மட்டுமே அடர்த்தியாய் வளருகின்ற ஒரு பூமியில் மக்கள் வாசம் செய்ய இயலாது. மக்கள் வளம் கருதி அடர்த்தியான அந்த வனம் கிருஷ்ணரால் தகிக்கப்பட்டது. அர்ஜுனனால் அழிக்கப்பட்டது. அவர்கள் இருவரும் உதவி செய்யவில்லையெனில் அக்னியால் அந்த வனத்தை அழித்திருக்கவே முடியாது. பரதகண்டம் மேலும் சிறப்புற காண்டவ வனத்தின் அழிவு முக்கியமாயிற்று.

மாயாசூரனும், தட்சன் மகனும் தப்பித்தது பெரிய விஷயம் அல்ல. அவர்கள் தங்களுடைய சாமர்த்தியத்தினால் தப்பித்துக்கொண்டார்கள். அந்தப் பறவைகள் இறக்காது போனதற்கு காரணம் என்ன என்று ஒரு கேள்வி வருகிறது. மகாபாரதக் கதை மிக அழகாக, அந்தக் கதையை தெளிவான தத்துவத்துடன் சொல்கிறது.

காண்டவ வனத்தை எரித்தபோது அந்த நான்கு பட்சிகளை எரிக்காததின் காரணம் என்ன என்பதை மகாபாரதம் மிக சுவாரசியமாக சொல்கிறது.

மந்தபாலன் என்ற ஒரு மகரிஷி. அவர் கடுமையான பிரம்மச்சரிய விரதம் பூண்டு

ஹோமங்களும், யக்ஞங்களும் செய்து இடையறாது ஈஸ்வர தியானத்தில் இருந்தார். எது தர்மமோ அதை குறைவற கைப்பற்றியிருந்தார். மந்தபாலன் நோக்கமே இறைவழிபாடு. அதைத்தவிர செய்வதற்கு ஒன்றும் இல்லை என்பதுபோல் வாழ்ந்து வந்தார்.

இறைவழிபாட்டைத் தீவிரமாய் செய்பவர்களுக்கு எங்கும்போய் எதுவும் யாசிக்க வேண்டியதில்லை. ஊர் மக்களோ, பணக்காரர்களோ, சிற்றரசர்களோ, சேனாதிபதிகளோ அவர்பால் ஈர்க்கப்பட்டு என்ன வேண்டும் என்று கேட்டு, அவர் விவரம் சொல்ல, அதை உடனடியாகக் கொண்டுபோய் அவரிடம் சேர்த்தார்கள். ஒன்று கேட்டால் பத்து கொடுத்தார்கள். கேட்காமலும் வந்து கொடுத்தார்கள். அப்படி கொடுப்பதை மாதாந்திர விஷயமாக செய்து கொண்டார்கள்.

> இறைவழிபாட்டைத் தீவிரமாய் செய்பவர்களுக்கு எங்கும்போய் எதுவும் யாசிக்க வேண்டியதில்லை. ஊர் மக்களோ, பணக்காரர்களோ, சிற்றரசர்களோ, சேனாதிபதிகளோ அவர்பால் ஈர்க்கப்பட்டு என்ன வேண்டும் என்று கேட்டு, அவர் விவரம் சொல்ல, அதை உடனடியாகக் கொண்டு போய் அவரிடம் சேர்த்தார்கள்.

கொடுத்தவர்களை வாழ்த்திவிட்டு இடையறாது அவர் ஹோமங்களில் ஈடுபட்டார். அக்னி ஜ்வாலைபோல் திகழ்ந்தார். ஆரோக்யமாக நெடுநாள் வாழ்ந்து, வயதான பிறகு மூச்சு தடுமாற போய்வருகிறேன் என்று உடம்புக்கு விடை கொடுத்து விட்டு அவர் உயிர் பிரிந்தது.

அடுத்தபடியாக மிகப் புண்ணியமான தேவலோகத்தில் வாழ்க்கை என்று அவர் நகர, தேவலோகத்தின் கதவு அவருக்குத் திறக்கப்படவில்லை. வாசலில் நின்ற தேவனிடம், 'நான் எந்த பாவமும் செய்யவில்லையே, நிறைய ஹோமங்கள் செய்திருக்கிறேனே எனக்கு ஏன் கதவுகள் திறக்கப்படவில்லை?' என்று கேட்டபொழுது யோசித்து விட்டு அந்த தேவன் பதில் சொன்னான்.

'மனிதர்களுக்கு மூன்று கர்மங்கள் இருக்கின்றன. யக்ஞ கர்மம், பிரம்மச்சரியம், சந்தான உற்பத்தி. நீங்கள் நிறைய யக்ஞ காரியம் செய்திருக்கிறீர்கள். கடும் விரதம் மேற்கொண்டு பிரம்மச்சாரியாக, பிரம்மமே கதியாக வாழ்ந்திருக்கிறீர்கள். ஆனால், மூன்றாவதான ஒரு கடமை சந்தான உற்பத்தி. அதை நீங்கள் செய்யவில்லை. பிரம்மச்சரியமாக இருப்பதே சந்தான உற்பத்திக்குத்தான். யக்ஞம் செய்பவர்கள் பிரம்மச்சாரியாக இருந்து செய்தால் அது பெரும் பலன்தான். ஆனால், இவை இரண்டு மட்டும் செய்தால் போதாது. பிறகு அவர் ஒரு நல்ல பெண்ணை மணந்து சத்புத்திரர்களை உற்பத்தி செய்ய வேண்டும். அவர் செய்த காரியங்கள் அவர் மகன்களால் தொடரப்பட வேண்டும். எது தர்மம் என்று நீங்கள் உணர்ந்து வாழ்ந்தீர்களோ அந்த வாழ்க்கை சொல்லித் தரப்பட வேண்டும். தான் மட்டும் யக்ஞம் செய்து விட்டு, தான் மட்டும் தர்மநிலையாக வாழ்ந்து விட்டு இங்கு வந்தால் கதவுகள் திறக்காது. இதை அடுத்தவருக்கு வழங்க வேண்டும். நீங்கள் வழங்கவில்லை.

சீடனுக்குத் தருவதை விட, தெரியாதவருக்கு தருவதை விட, நீங்கள் புத்திர உற்பத்தி செய்து அந்த புத்திரர்களுக்கு நீங்கள் இவற்றை அளித்திருக்க வேண்டும். புத்திர உற்பத்தி இல்லாவிட்டால் புத் என்கிற நரகத்தில் விழும்படி நேரிடும். இப்பொழுது உங்களுக்கு நரகம்தானே ஒழிய தேவலோக கதவுகள் திறக்காது."

அவர் திகைத்தார். 'இதற்கு என்ன வழி?'என்று கேட்டார்.

'மறுபடி பிறவி எடுங்கள், புத்திர உற்பத்தி செய்து விட்டு வாருங்கள்,' என்று தேவன் சொன்னான்.

தபோபலம் மிக்கவர் ஆதலால் அவருக்கு நரகம் கிட்டவில்லை. மாறாக அவருக்கு பிறவி கிட்டியது. எப்படி பிறந்தால் வெகுவேகமாக சந்தான உற்பத்தி செய்ய முடியும் என்று யோசித்து அவர் சாரங்க பட்சியாகப் பிறந்தார். ஜரிதா என்கிற பெண் பறவையோடு கூடி குடித்தனம் செய்து நான்கு குழந்தைகள் பெற்றார். நான்கு சின்னஞ்சிறு பறவைகள் இறக்கை முளைக்காதவை. அவருடைய கூட்டில் இருந்தன. புதிதாக பெண் போகம் அனுபவித்ததால் அந்த விஷயத்தில் அவருக்கு ருசி அதிகமாகி லபிதா என்கிற பெண் பறவையோடு கூடி குலாவலானார். அதனால் ஜரிதாவுக்கு மிகவும் துக்கம் ஏற்பட்டது. குழந்தைகளை கவனிக்காமல் போகிறாரே என்ற ஏக்கம் இருந்தது.

அந்த நேரம்தான் அக்னி காண்டவ வனத்தை எரிக்கத் துவங்கினார். தீ ஜ்வாலைகள் பறவை கூட்டை நெருங்கின. அக்னி எரிப்பதை இந்திரன் தடுக்க முயற்சிக்க, அதை கிருஷ்ண-அர்ஜுனன் வெகு வேகமாக அகற்றினார்கள். எனவே, அக்னியுடைய ஆட்டம் வேகமாக இருந்தது. நிச்சயமாக குழந்தைகளையும், கூட்டையும் கபளீகரம் பண்ணிவிடும் என்று தோன்றியது. லபிதா அலறினாள். லபிதாவோடு கூடிய மந்தபாலருக்கும் இது புரிந்தது. அவர் உடனடியாக அக்னியிடம் போய் நின்று, "நான் பலமுறை உம்மை ஸ்தோத்தித்திருக்கிறேன். பலவாறு உம்மை வளர்த்திருக்கிறேன். இடையறாது உம்மை பூஜித்திருக்கிறேன். உம்மூலம் நான் தேவர்களை தொட்டிருக்கிறேன். எனவே, அந்த புண்ணியங்களை மனதில் வைத்தும், மிக அற்புதமாக தேஜஸாக, உலகத்தின் உயிராக, நீர் ஆதாரமாக, நிலத்தின் செழிப்பாக, பயிர்களின் வளமாக, உயிர்களின் உரமாக இருக்கின்ற

உம்மை வணங்குகின்றேன். என் கூட்டை நீங்கள் தொடாது. என் குழந்தைகளை எரிக்கலாகாது என்று மன்றாடி கேட்டுக் கொள்கிறேன்’என்றார்.

தன் ஆயுட்காலம் முழுவதும் தன்னை ஸ்தோத்திரம் செய்ததாலும், இப்பொழுது கூறிய உண்மையான, அற்புதமான வார்த்தைகளாலும் அக்னி மகிழ்ந்தார். ‘உன் குழந்தைகளைத் தீண்ட மாட்டேன்’ என்று வாக்குறுதி கொடுத்தார். அந்த சத்தியத்தை பெற்றுக்கொண்டு மிக வேகமாக தன் இணையான லபிதாவோடு அவர் பறந்து களித்தார்.

காண்டவ வனம் எரியத் துவங்கியது. மிருகங்களும், பறவைகளும் பொசுங்கின. அக்னி, மந்தபாலர் கூட்டை மிக நெருங்காமல் அதைச் சுற்றித்தான் போயிற்று. அதன் வெப்பம்தான் அடித்ததே தவிர, அதன் ஜ்வாலைகள் அந்த கூடு இருந்த மரத்தில் படரவில்லை. ஆனால், மந்தபாலர் கேட்டதை அறியாத லபிதா, ‘தயவு செய்து வெளியே வாருங்கள். கூட்டை விட்டு கீழே விழுந்து விடுங்கள். கீழே ஒரு எலி வளை இருக்கிறது. அதில் போய் ஒளிந்து கொள்ளுங்கள். அது ஆழமான எலி வளை. நெருப்பு ஒன்றும் செய்யாது’என்று கதறிற்று.

‘எலி வளைக்குள் நுழைவதா? எலி கடித்துக் குதறினால் அது இன்னும் மோசமான மரணம் அல்லவா! நீங்கள் ஏன் பதட்டப்படுகிறீர்கள்? நீங்கள் பறந்து போங்கள். எங்களை விட்டு விடுங்கள்,’ என்று குஞ்சுப் பறவைகள் சொல்லின.

‘உங்களை விட்டுவிட்டு எப்படிப் பறப்பேன்? அந்த எலி வளை காலியாக இருக்கிறது. அந்த எலியை ஒரு கருடன் தூக்கிப் போவதை நான் பார்த்தேன். எனவே தயவுசெய்து அந்த வளைக்குள் நுழைந்து கொள்ளுங்கள். அது அடைக்கலம் தரும்.’

‘உள்ளே மேலும் சில எலிகள் இருந்தால், அவற்றால் தொல்லை வந்தால்..? எனவே இந்த இடத்தை விட்டு, தெரியாத ஒரு இடத்திற்குப் போக முடியாது. ஆபத்து காலத்தில் அவசர முடிவு எடுப்பது சரியல்ல.’ மிக உத்தமமான ஒரு மனிதருக்கு, அவருடைய முற்பிறப்பு புண்ணியங்களால் வலுவானவருக்கு குழந்தைகளாக பிறந்ததால் அந்த பறவைகள் தெளிவாகவும், விரைவாகவும் சிந்தித்தன.

சீடனுக்குத் தருவதை விட, தெரியாதவருக்கு தருவதை விட, நீங்கள் புத்திர உற்பத்தி செய்து அந்த புத்திரர்களுக்கு நீங்கள் இவற்றை அளித்திருக்க வேண்டும். புத்திர உற்பத்தி இல்லாவிட்டால் புத் என்கிற நரகத்தில் விழும்படி நேரிடும்.

அந்தப் பறவைகளில் மூத்த மகனுக்கு கடிகாரி என்று பெயர். இரண்டாமவன், சாரிசுகன். மூன்றாமவன் ஸ்தம்பமித்திரன். நான்காமவன்துரோணன். இவை நான்குமே ஞானக் குழந்தைகளாக இருந்தன.

இவர்களில் யாரைக் காப்பாற்ற முடியும்? ஜரிதா தவித்தது. முன்னும் பின்னும் அலைந்தது. அக்னி நெருங்குவது கண்டு பயந்தது.

‘அம்மா, ஏன் இப்படி பதட்டப்படுகிறாய்? நீ பறந்து செல். இந்த இடத்தை விட்டு உடனே அகன்று போ. நீ இளமையாக இருக்கிறாய். வலிமையாக இருக்கிறாய். உன்னுடைய வாழ்நாளை சிறகு இல்லாத எங்களுக்காக தியாகம் செய்து விடாதே. பாசம் முக்கியம் அல்ல அம்மா. நம்முடைய பறவை குலத்திற்கு எது நன்மையோ அதைச் செய். இந்தக் குலம் அழிந்து விடக் கூடாது. எனவே வேறொரு பறவைத் துணையைத் தேடிக் கொண்டு அந்தப் பறவையோடு கூடி நீ மேலும் குழந்தைகளை பெறுவாயாக. மரணத்திற்கு சமீபத்தில் இருக்கும் எங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நீ எங்களை பெற்றாய் என்பதற்காக எங்கள் மீது பிடிப்பு வைக்காதே. நாங்கள் உங்களுக்கு எந்த உபகாரமும் செய்யவில்லை. இதற்கு முன்பு நாங்கள் என்னவாக இருந்தோம் என்றும் எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு நீங்கள் யார், உங்களுக்கு நாங்கள் யார் இதை அறியாதபோது தேவையில்லாமல் ஏன் பிணைத்துக் கொள்ள வேண்டும்? எந்த ஆபத்தும் இல்லையெனில் இந்த உறவுகளுக்கெல்லாம் அர்த்தம் உண்டு. பிரளயம் போல, ஊழித்தீ போல உலகமே அழியும் வண்ணம் இம்மாதிரியான நிலைமைகள் ஏற்படும்போது உறவுகளெல்லாம் சிரிக்கத் தகுந்தவை. எனவே தயவுசெய்து இந்தத் தீயை விட்டு அகன்று விடு’என்று கெஞ்சி கேட்டுக் கொண்டன.

காண்டவ வனம் எரிவதை பார்த்து, அதன் வெப்பத்தை சகிக்க வொண்ணாது அந்தத் தாய்ப் பறவை குழந்தைகளை விட்டு வெளியேறி பத்திரமான இடத்திற்கு போய் விட்டது. சுற்றி எரிகின்ற தீயை பார்த்து பறவைகள் தங்களுக்குள் பேசிக் கொண்டன. ‘மரணம் நெருங்கும்போது பதட்டப்படுவதில் என்ன லாபம்? சங்கட நேரத்தில்தான் பெரிதும் அவஸ்தை, வீண் அலறல். மரணம் வரும்போது மௌனமாக இருப்பதே சிறப்பு. தடுக்க முடியாத விஷயங்கள் ஏற்படுகிறபோது அமைதியாக எடுத்துக் கொள்ள அறிவாளி முயற்சி செய்வான்.’

‘நீர் அமைதியாக இருக்கிறீர். நீர் மிகவும் சூரன். உங்கள் அமைதி எனக்கும் தொற்றிக் கொள்கிறது. எனக்கும் அது ஏற்படுகிறது. வெறும் பேச்சுகளில் லாபம் இல்லை. உண்மையான அமைதி சான்றோனுக்குத்தான் வரும்.’

‘மூத்த சகோதரன் தந்தைக்கு நிகரானவன். அவனே சங்கடத்திலிருந்து விடுவிக்கிறான். வரும் அபாயத்திலிருந்து தப்பிக்கும் வழி இல்லையெனில் வேறு என்ன செய்ய முடியும்? ஜொலிக்கும் தீ இந்த கூட்டை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கிறது. எல்லா பக்கமும் பரவிக் கொண்டிருக்கிறது. தீ வரட்டும். அக்னியை நமஸ்கரிப்போம்’ என்று அவை நான்கும் அக்னி தேவனை துதிக்கத் துவங்கின.

அதில் கடைசியாக பிறந்த சாரங்க குஞ்சான துரோணன், மிக உருக்கமாக அக்னி பகவானைத் துதித்தது: ‘அக்னியே, நீ உலக உயிரினங்களின் உள்ளிருந்து அவை உண்ணும் உணவை ஜீரணிக்க வைக்கிறீர். நீங்களே தாவரங்களை பசுமையாக்குகிறீர். மண்ரசத்தை உறிஞ்சி மேலே எடுத்துப்போய் தக்க சமயத்தில் பெரும் மழையாக பெய்விக்கிறீர். இந்த ரசவாதம் இல்லையெனில் பூமி வெறும் மண் பந்தாய்தான் இருக்கும். நீங்களே சிறு குட்டைகளையும், பெரிய கடல்களையும் நிரப்பி வருகிறீர்கள். இவ்வளவு தகிக்கும் தன்மை இருக்கும் உங்களுக்குள் குளுமையும் இருக்கிறது. எனவே அக்னி பகவானே, இந்த வெப்பத்தை குறைத்து எங்களை குளுமைப்படுத்தும்.’

அக்னி பகவான் அந்தப் பறவைக் குஞ்சின் பிரார்த்தனையை கண்டு வியப்படைந்தார்.

‘உங்கள் தந்தைக்கு நான் வாக்கு கொடுத்திருக்கிறேன். உங்களை நான் தீண்ட மாட்டேன் என்று சத்தியம் செய்திருக்கிறேன். அதுவும் தவிர நீ சொன்ன அற்புதமான வார்த்தை என் மனதுக்கு உகந்ததாக இருக்கிறது. உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது’என்று சொல்லி, அந்த குஞ்சுகள் இருந்த மரத்தை மட்டும் விட்டு விட்டு விலகிப்போய் மற்ற மரங்களை கபளீகரம் செய்யத் தொடங்கினார்.

அவர் பசி மெல்ல மெல்ல தணிந்தது. காட்டு மிருகங்களின் கொழுப்பை உண்டு தன்னை சமனப்படுத்திக் கொண்டார். காட்டில் தீயின் அசுர வேகத்தை கவனித்த மந்தபாலர், லபிதாவிடம் வருத்தப்பட்டார்: ‘என்னுடைய மனைவி என்ன ஆனாளோ, என் குழந்தைகள் என்ன ஆனவோ தெரியவில்லையே. அவர்களை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. நான் அக்னியிடம் வேண்டிக் கொண்டேன். அவரும் தீண்ட மாட்டேன் என்று சத்தியம் செய்தார். இருந்தாலும் மனசு அல்லல்படுகிறது. ஏதேனும் கெடுதல் ஆகியிருக்குமோ என்று பயமாக இருக்கிறது.’

லபிதா உடனே கோபித்துக் கொண்டது. ‘உங்களுக்கு மூத்தாள் மீதுதான் பாசம் அதிகம். அவளையே தான் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். என்னை உறவாட மட்டும் அழைத்துக் கொள்கிறீர். அவள் இல்லாது வேறு சிந்தனையே உங்களுக்கு இல்லை. அவளையும், அவளுடைய குழந்தைகளையும் விட்டுவிட்டு என்னிடம் உல்லாசத்திற்கு வந்தீர். பிறகு அவளைப் பற்றி பேச்சு என்ன, அவளுடைய குழந்தைகள் பற்றி கவலை என்ன?’ என்று கடிந்து கொண்டது. ‘நீங்கள் என்னிடம் இருக்க வேண்டாம் போகலாம். ஆண் துணையின்றி நான் தனியாக சஞ்சரிப்பேன். என்னால் அப்படி வாழ முடியும். நீங்கள் விலகலாம்.’

மந்தபாலன் எரியாத அந்த மரத்திற்கு அருகே வந்து நின்றார். குழந்தைகள் உயிரோடு இருப்பது பார்த்து சந்தோஷப்பட்டார். அதேசமயம் அங்கே ஜரிதாவும் வந்து சேர்ந்தது. ‘மூத்த புதல்வன் எப்படி இருக்கிறான்? யார் இரண்டாமவன், யார் மூன்றாமவன், யார் நான்காமவன், எனக்கு விவரித்துச் சொல்’ என்று ஜரிதாவிடம் மந்தபாலன் கேட்டார்.

‘உமக்கென்ன கவலை? இங்கு எதற்கு வந்தீர்? செத்துப் போய்விட்டோமா என்று பார்ப்பதற்கு வந்தீரா? எங்களைப் பற்றிய கவலை உங்களுக்கு ஏன்? புது மனைவியின் மோகம் குறைந்துவிட்டதா?” என்று கடுமையான வார்த்தைகள் சொல்ல, அவர் வருத்தப்பட்டார்.

அவர் குஞ்சுகளைப் பார்த்து பேசத் துவங்கினார். ஆனால், அந்த குஞ்சுகள் தந்தையை எதிர்க்காமலும், அவரோடு சல்லாபம் செய்யாமலும் வெறுமே அவரை பார்த்துக் கொண்டிருந்தன. குழந்தைகளின் புறக்கணிப்பு மந்தபாலனுக்கு மிகவும் வேதனை கொடுத்தது.

‘உங்களுக்கு என்னை புரியவில்லை. என்னுடைய குணம் தெரியவில்லை. நான் அக்னி பகவானிடம் என்னுடைய குழந்தைகளை தயவு செய்து தீண்ட வேண்டாம் என்று இறங்கி கேட்டுக் கொண்டேன். அவரும் அவ்விதமே சத்தியம் செய்தார். அதனால்தான் நீங்கள் அக்னியால் தீண்டப்படாமல் இருக்கிறீர்கள். உங்கள் மேல் பாசம் இல்லாமல் இல்லை. உங்களைப் பற்றி நினைக்காமல் இல்லை’என்று தழுதழுத்த குரலில் சொன்னார்.

நான்காவது புத்திரனான துரோணன் அக்னி தன்னிடம் அவ்விதம் சொன்னதை தந்தையிடம் தெரிவித்தது.

ஜரிதா சமாதானம் ஆகியது. மற்ற பறவைகளும் தந்தைக்கு அருகே வந்து அவரை முத்தமிட்டன. மனைவியோடும், நான்கு புத்திரர்களோடும் அந்தப் பறவை அந்த இடத்தை விட்டு, வேறு இடத்திற்கு பறந்து போயிற்று.

மகாபாரதத்தின் நடுவே இது ஒரு தந்திரமான கதை. மக்களுக்கு புத்தி சொல்லும் வண்ணம் அமைந்திருக்கிறது. குழந்தைகள் மீது பாசம் இருப்பினும், ஆபத்து சமயத்தில் அகன்று விடுவது பௌருஷம் ஆகாது. வலிமையற்ற குஞ்சுகள் தந்தை தங்களை காப்பாற்றுவார் என்று நினைத்துக் கொண்டிருக்க, அவர் வேறு ஒரு பெண்ணுடன் சுகத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறார் என்று தாய் சொன்னால், அந்தக் குழந்தைகள் படாதபாடுபடும். தந்தையை வணங்கவோ, மதிக்கவோ அவர்களுக்கு விருப்பம் இருக்காது.

(தொடரும்)

31

மகாபாரதம்

அரசும், அரசியலும் ஆன்மிகமே!

புத்திரர்களை பெற்றுக் கொள்ள பறவையாக பிறந்தாலும். புத் என்ற நரகத்தில் விழாமல் இருக்க புத்திர உற்பத்தி செய்தாலும் அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யவில்லை மந்தபாலர். ஆனாலும் அவர் சுகம் கருதி வெளியே நீங்கிய அச்சமயத்தில் தன் குழந்தைகளை பற்றி அக்கறையோடு அக்னியிடம் வேண்டிக் கொண்டது ஒரு உயர்ந்த அம்சம். குடும்ப காட்சியை இந்தக் கதை நினைவூட்டுகிறது. அந்தக் குழந்தைகள் ஒரு உயர்ந்த ரிஷிக்கு பிறந்ததினால் மிகுந்த விவேகம் உடையனவாக இருந்தன. அம்மாவின் பாசத்தை பார்த்து. 'எதற்கு துடிக்கிறாய், நீ யார். நான் யார்?' என்ற உயர்ந்த தத்துவத்தை அவள் முன் வைத்தன. அந்தப் பாசத்திற்கு கட்டுண்டு. அழுது. அவளை புலம்ப விட்டு தானும் புலம்பவில்லை. மாறாக, 'நீ பறந்து போ. எங்களால் சுயமாக இருக்க முடியும். அப்படியே இறந்தாலும் சந்தோஷமாக இறக்க முடியும்,' என்று கூறி அனுப்பின. தங்களால் தப்பித்துக் கொள்ள இயலாது. பறக்க இயலாது. ஆயினும் என்ன, ஒரே ஒரு சாதனம் இருக்கிறது - இறை வேண்டுதல். வலிமையுள்ள தேவனான அக்னி மனம் மாற வேண்டுதல், துதித்தல், பிரார்த்தனை காப்பாற்றும். உடல் வலிவோ, மன வலிவோ, பிறர் வலிவோ இல்லாது போனாலும் உயிர் வாழவும், வளரவும் பிரார்த்தனை உதவும் என்று அந்த ரிஷி குமாரர்களுக்கு தெரிந்திருந்தது. அது அவர்கள் ரத்தத்தில் ஊறி இருந்தது. மனிதர்களுக்கு இக்கட்டு நேரும்போது, சொந்த பந்தங்களால் கைவிடும்போது இந்த சாரங்க பட்சிகளின் கதையை நினைவு கொள்வது நல்லது. எதனால் உயிர் பிழைத்தது? அப்பாவின் யாசகமா அல்லது அந்தக் குழந்தைகளின் பிரார்த்தனையா? அல்லது இரண்டுமேதானா? ஒவ்வொரு தனி மனிதரும் தன்னை முன் வைத்து யோசித்துக் கொள்ளலாம். மற்றவரால் உயரப் போகிறோமோ, அவர்களால் உயிர் வாழப் போகிறோமா அல்லது என் மனோபலம், என் பிரார்த்தனை என்னை உயிர்ப்பிக்கப் போகிறதா என்று கேட்டுக் கொள்ளலாம். இந்தக் கதை தந்தையையும் அலட்சியம் செய்யவில்லை, தன்னையும் விட்டு விடவில்லை. அதேநேரம் பெண்களுக்காக அலையும் ஆண் தன்மையும், ஆண்களை கடுமையாகத் தாக்கி பேசும் பெண்களையும் தெளிவாக காட்டுகிறது. இது உலக நடப்பு. இதிலிருந்தும் மனிதர்கள் பாடம் கற்கலாம். இந்தக் கதை இருதாரத்தை சிலாகிக்கவில்லை. மாறாக எவ்வளவு உயர்ந்த ஒரு விஷயமும், ஒரு உயிரினமாக இருந்தாலும், என்ன அறிவு இருந்தாலும் இரு பெண்களின் ஒற்றுமையின்மையினால் ஒரு ஆண் கலவரப்பட நேரிடும் என்று தெள்ளத் தெளிவாகச் சொல்கிறது. சக்களத்தி சண்டை பல மனிதர்கள் வாழ்வில், பல உயர்ந்தோர் வாழ்வில் சோபை இழக்கச் செய்திருக்கிறது. காண்டவ வனம் முழுவதும் கபளீகரம் செய்த அக்னி பகவான் அர்ஜுனன் முன்பும், ஸ்ரீகிருஷ்ணர் முன்பும் தோன்றினார். தன்னிடமிருந்த மிக உயர்ந்த வில்லை அர்ஜுனனுக்கு வழங்கினார். காண்டவ வனத்திலிருந்து அந்த வில் கிடைத்ததால் அதற்கு காண்டீபம் என்று பெயர். வானரக் கொடியுடன் கூடிய தேரை கொடுத்தார். பல அஸ்திரங்களை வழங்கினார். "தக்க சமயத்தில் இது உமக்கு பயன்படும். இன்னும் உயர்ந்த விஷயங்களை சிவபெருமான் மூலம் உமக்கு தர ஏற்பாடு செய்கிறேன். எந்த வில்லாளிக்கும் இணையில்லாத வில்லாளியாக நீ திகழ்வாய். உன் அன்புக்கு நன்றி" என்று ஆசிர்வதித்தார். ஸ்ரீகிருஷ்ணரைப் பார்த்து, "நீங்கள் யார் என்று



“பஞ்சபாண்டவர்கள் வியந்தார்கள். தங்களுக்கு
இப்படி ஒரு சபையா, தங்களுக்கு மறுபடியும்
ராஜ்ஜியமா, தங்களுக்கு இத்தனை அழகான ஒரு
மண்டபமா என்று ஆச்சரியப்பட்டார்கள்.
கிருஷ்ணனை மனதிற்குள் வைத்து வணங்கினார்கள்.
மாயாசூரன் அர்ஜுனனை தழுவிக் கொண்டான்.”

அறிவேன். ஆயினும் ஸ்ரீகிருஷ்ணராக பிறந்திருக்கும் உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்கள்" என்று கேட்க, ஸ்ரீகிருஷ்ணர் சிரித்துக் கொண்டே, அர்ஜுனனோடே தன்னுடைய நட்பு எல்லா வகையிலும் நன்கு வளர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அக்னி பகவான் ஆசிர்வதித்தார். ஸ்ரீகிருஷ்ணரும், அர்ஜுனனும், தப்பித்து போன மாயாசூரனும் அக்னியை வலம் வந்தார்கள். இந்திரனும் இவர்களை ஜெயிக்க முடியாது என்று தெரிந்து கொண்டு திரும்ப, அக்னியும் சந்தோஷமாக தன் இருப்பிடம் வந்தார். மாயாசூரன் மண்டியிட்டு அர்ஜுனன் காலை கெட்டியாக பிடித்துக் கொண்டான். "தப்பித்து ஓடிய என்னை கொல்லாமல் விட்டதற்கு நன்றி. உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள், அதை நான் செய்கிறேன்" என்றான். "எனக்கு என்ன தெரியும். கிருஷ்ணரை கேள். எனக்கு வேண்டியவற்றை அவரே சொல்வார்" என்று பதில் சொன்னான். மாயாசூரன் ஸ்ரீகிருஷ்ணரிடம் என்னிடம் என்ன வேண்டும் கட்டளை இடுங்கள் என்று அர்ஜுனன் சொல்ல, கிருஷ்ணர் யோசித்தார்.

"அர்ஜுனனுக்கும், எனக்கும் தருவதை விட தருமபுத்திரருக்கு நீ தர வேண்டும். மிகச் சிறந்த மாளிகையை நீ ஏற்படுத்த வேண்டும். நீ மயன். உன்னால் செய்ய முடியாத விஷயமே இல்லை. இதுபோல் இன்னொன்றைச் செய்ய முடியாது என்பதாக ஒரு மாளிகை தருமபுத்திரருக்கு செய்து கொடுக்க வேண்டும். பஞ்ச பாண்டவர்கள் சௌக்கியமாக வாழ நீ உதவ வேண்டும். அவர்கள் வனங்களில் திரிந்து கடுமையான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள். நல்ல காற்றும், உணவும், சுகபோகமான கட்டில்களும், இருக்கைகளும், தாரையாக விழும் அருவியும், நீச்சல் குளமும், இன்னிசை கச்சேரி நடத்துகின்ற கூடங்களும், புகை வீசாத சமையல் அறைகளும் அங்கு இருக்க வேண்டும்" என்று கட்டளை இட, மயன் என்கிற அந்த மாயாசூரன் அவ்விதமே செய்வதாக வாக்களித்தான்.இந்த ஒரு சிறு விஷயம் கூட யுத்தத்தை நோக்கியே இருந்தது. சிறு விஷயங்களுக்குக்கூட பொறாமைப்படுகின்ற துரியோதனன் இந்த மாளிகைக்கு வரும்போது பெரும் பொறாமை கொள்பவனாக நிச்சயம் மாறுவான்





என்று ஸ்ரீகிருஷ்ணருக்கு தெரிந்திருந்தது. மகாபாரதத்தின் ஒவ்வொரு அசைவும் ஸ்ரீகிருஷ்ணரின் அசைவாகவே இருந்தது. மற்றவர்கள் அவர் அசைவிற்கு, பார்வையாளராக இருந்தார்கள், அவ்வளவே. மகாபாரதத்தை ஒரு ஆன்மிக நூலாக அல்லது அரசியல் நூலாக உற்றுப் பார்க்கிறபொழுது ஸ்ரீகிருஷ்ணரது ஒவ்வொரு நடவடிக்கையும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ போரை நோக்கி நகர்வதாகவே இருக்கிறது. தானே முன்நின்று பேசுவதாக அல்லாது தனக்கு உடன் இருப்பவர்களையும் அவர் இந்த விஷயத்தில் உபயோகப்படுத்திக் கொள்கிறார். அவர் சொல்லும் ஆன்மிகத்தில், அரசியல் என்கிற விஷயமும் இருக்கிறது. ஆன்மிகத்தில் அரசன் என்கிற விஷயம் இருந்தால் அரசியல் என்கிற விஷயமும் இருக்கத்தானே செய்யும்! அரசன் என்று ஒருவன் இருந்தால் குரு என்பவர் இருக்கத்தானே செய்வார். குரு என்று ஒருவர் இருந்தால் போதனை என்பது நிச்சயம் இருக்கத்தானே செய்யும். அரசன் என்று ஒருவன் இருந்தால் போர் வீரர்கள் இருக்கத்தானே செய்வார்கள். உடல் பலம் என்பது முன்னே நிற்கத்தானே செய்யும். அப்படி இருப்பின் அந்த விஷயங்கள் போரை நோக்கித்தானே முடிவுறும். அரசனை நோக்கித்தானே அந்தணர்கள். அந்தணருக்காக அரசர் வாழ்ந்தது இல்லையே. அரசருக்காகத் தானே குடிபடைகள். எனவே, மக்கள் கூட்டு வாழ்க்கை இயல்பு என்று இருந்தால் அதற்கு தலைவன் என்று ஒருவன் உண்டு என்பதும் அந்த தலைவனுக்கு அரசன் என்று பெயர் வைப்பதும், அந்த அரசன் நன்னெறியோடு வாழ வேண்டும் என்பதும், காலப்போக்கில் அவர்கள் அதை மறந்து விடுவார்கள் என்பதும், காலப்போக்கில் மறந்து விட்ட அந்த விஷயத்தை இயற்கை அல்லது கடவுள் தலையில் அடித்து மறுபடியும் ஞாபகப்படுத்தும் என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். அப்படியானால் அரசு என்பதும், அரசியல் என்பதும் ஆன்மிகமாகத் தானே இருக்க வேண்டும்! மகாபாரதம் வாழ்வின் நியமத்தைச் சொல்லும் ஒரு நூல். வாழ்வு நியமம் என்பது ஆன்மிகம் சார்ந்ததாகத்தான் இருக்கிறது. இருக்க வேண்டும். சுபத்திரையை திருமணம் முடித்து அர்ஜுனன் வந்த பிறகு இந்திரப்ரஸ்தம் அதாவது, காண்டவப்ரஸ்தம் மிக சந்தோஷமான நிலையை எட்டியது. புதிய அரசர்கள், புதிய அரசாட்சி, புதிய அதிகாரிகள் என்று வருகிறபொழுது அந்த தேசம் தன்னை வெகுவேகமாக முன்னேற்றப் பாதையில் அமைத்துக் கொள்கிறது. செய்வன திருந்தச் செய் என்கிற விஷயம் அதிகாரிகளாலும், அரசர்களாலும் கூர்மையாக கண்காணிக்கப்பட்டு அந்தக் கண்காணிப்பின் பேரில் மிகச் சிறப்பான ஒரு மாறுதல் ஏற்படுகிறது. மக்களின் திருப்தியே மிக முக்கியமான விஷயம் என்றும், மக்களின் ஒழுங்கே தேசத்தின் ஒழுங்கு என்றும், மக்களின் அமைதியே மிக முக்கியம் என்றும் நடத்தப்படுகிறது. எனவே, நிர்வாகம் என்கிற விஷயத்தில் முழு ஈடுபாடு கொண்டிருக்கிற தேசமே நாகரீகம் மிக்க தேசமாகும். இயற்கை பேரிடர்களையும், பகைவர்களையும் தடுத்து நிறுத்துகின்ற வல்லமை மட்டுமல்லாது அமைதியான காலத்தில் மிக முன்னேற்றமான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற எண்ணத்தை தோற்றுவிப்பதும் நிர்வாகம்தான். கீழ் நிலையில் இருக்கின்ற குடிமகனுக்கும், உயர் நிலையில் இருக்கும் அரசனுக்கும் தொடர்பு ஏற்படுத்துவது நிர்வாகம்தான். மக்களின் குறைகளை அரசன் கேட்பது நிர்வாகத்தின் மூலம்தான். மக்களின் குறைகளை தீர்ப்பது நிர்வாகத்தின் மூலம்தான். எனவே, நிர்வாகம் என்பது சபை என்ற விஷயமாக அன்று சொல்லப்பட்டு வந்தது. நல்ல சபா மண்டபம் வேண்டும் என்பது ஒரு அரசனுடைய முக்கியமான தகுதி. அதிகாரிகள் வீட்டிலிருந்தே நிர்வாகம் செய்ய இயலாது, கூடாது. அவர்களுக்கு மிகச் சரியான இடம் வேண்டும். ஒரு அலுவலகம் வேண்டும். அந்த அலுவலகத்திற்கு அரசன் வந்துபோக வேண்டும். அரசன் அதிகாரிகள் புடைசூழ அமர வேண்டும் என்பதால், அந்தந்த அதிகாரிகள் அந்தந்த இடத்தில் அமர வேண்டும் என்பதால் சபை என்பது மிக நறுவிசாக, சிறப்பாக இருக்க வேண்டும். கிருஷ்ணர் நேரிடையாக இந்த சபை நிர்மாணத்தில் இறங்காமல் நாரதரை தூண்டிவிட்டார். சொல்லோ, செயலோ அல்ல. கிருஷ்ணர் எண்ணத்தை நாரதர் அறிவார். சகோதரர்களெல்லாம் ஒன்றுகூடிய ஒரு நேரத்தில் நாரதர் நாராயணன் நாமத்தோடு வந்து இறங்கினார். "எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள் மகரிஷியே. என்ன விசேஷம்?" என்று தருமர் பணிவாக உபசாரத்துடன் கேட்க, அவர் மிக சந்தோஷத்தோடு தருமரை வாழ்த்தி விட்டு பேசத் தொடங்கினார். மூன்று உலகத்தில் சஞ்சரிக்கின்ற நாரதருடைய பேச்சு முக்கியமானது. "நான் எமதர்மனுடைய சபைக்குப்போய் வருகிறேன். அவர்களையெல்லாம் அவர்களுடைய சபையில்தான் நான் சந்திக்கிறேன். யமனுடைய சபை எப்படி இருக்கும் தெரியுமா?" என்று கேட்டு நீண்டதாக விவரித்தார். "அதற்குப் பிறகு நான் குபேரனுடைய சபையைப்போய் பார்த்து வந்தேன். அது கொள்ளை அழகு. அங்கிருக்கின்ற பலபேர் மிகுந்த பலசாலிகள். தெளிவான சிந்தனை உடையவர்கள். அங்கு உள்ள மாடங்களும், குளங்களும், நீரூற்றுகளும் அற்புதமானவை. தங்கத்தாலும், வெள்ளியாலும் இழைக்கப்பட்ட தூண்கள்..." என்றெல்லாம் சொல்ல, ஆச்சரியத்தோடு கேட்டு வந்தார்கள். "எல்லாவற்றிலும் சிறந்தது இந்திரனுடைய சபை. உள்ளே



நடனமாதர்கள் அவ்வளவு அழகு...” அவர் விவரிக்க, தங்களுக்கோர் சபை வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. காண்டப்ரஸ்தத்திற்கு ஒரு மிகச் சிறந்த சபை என்று இருந்தால் அது மதிப்புதானே, மரியாதைதானே என்ற எண்ணம் வந்தது. இவர் வீடு வாங்கியிருக்கிறார், அவர் வீடு வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் கேட்டவருக்கு தானும் வீடு வாங்க வேண்டும் என்ற ஆசை வரும். நாரதர் நேரிடையாக உனக்கு ஒரு சபை வேண்டும் என்று சொல்லாது மற்றவர் சபையை வியந்து சொல்ல, தங்களுக்கும் சபை வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அவர்களுக்கு மிகப் பெரிய சபை ஏற்பட்டு அதன் சித்திர விசித்திரங்கள் வெளியில் பேசப்பட்டு, வந்த விருந்தினர்கள் அதைக் கண்டு மயங்கி பொறாமைப்பட்டு, அதனால் பகை ஏற்பட்டு, அந்தப் பகையால் யுத்தம் ஏற்பட்டு அந்த யுத்தத்தால் பூபாரம் குறையும் என்ற எண்ணமே அங்கு இந்தச் செயலுக்கு காரணமாக இருந்தது. கிருஷ்ணரின் சம்மதம் இல்லாமலா நாரதர் வந்திருப்பார்! நன்றியில் நனைந்த மயன் தன்னுடைய திறமை முழுவதும் காட்டி தனக்கு அபயம் அளித்த அர்ஜுனனுக்கு நன்றி சொல்ல விரும்பினான். பரிசளிக்க விரும்பினான். அர்ஜுனனுக்கு தருவதின் மூலம் தருமருக்கு ஒரு மிகப் பெரிய சபா மண்டபத்தை அழகாக நிர்ணயம் செய்தான். பாறைகளால் அடித்தளங்கள் கட்டப்பட்டு, செங்கற்களால் தூண்கள் எழுப்பப்பட்டு, சுவர்கள் எழுப்பப்பட்டு, அதில் முத்து குழைக்கப்பட்டு, தங்கத்தில் உத்திரங்கள் பொருத்தப்பட்டு, வெள்ளியில் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டு, உலகத்தில் எந்த பொருள் மிக உயர்த்தியோ அது அந்தந்த இடத்திலே அழகாக பதிக்கப்பட்டு மிகச் சிறந்த சபையாக அது விளங்கியது. பஞ்சபாண்டவர்கள் வியந்தார்கள். தங்களுக்கு இப்படி ஒரு சபையா, தங்களுக்கு மறுபடியும் ராஜ்ஜியமா, தங்களுக்கு இத்தனை அழகாக ஒரு மண்டபமா என்று ஆச்சரியப்பட்டார்கள். கிருஷ்ணனை மனதிற்குள் வைத்து வணங்கினார்கள். மாயாசூரன் அர்ஜுனனை தழுவிக் கொண்டான்.“என் திறமை முழுவதும் காட்டியிருக்கிறேன். உன்னுடைய அன்புக்கு இது ஈடு செய்ததாகாது. உனக்கு இன்னும் ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆசை இருக்கிறது. உனக்கு காண்டீபம் என்கிற வில் கொடுத்ததுபோல, உன் தம்பியான பீமனுக்கு மிகச் சிறந்த கதை ஒன்று தந்திருக்கிறேன். அது மிகச்சிறந்த போர் வீரர்களால் கையாளப்பட்டு ஓர் இடத்திலே வைக்கப்பட்டிருந்தது. அது பல கதைகளையும் உடைக்கும் வல்லமை பெற்றது. மிகுந்த வல்லமை பெற்றது. அதை சுழற்ற பீமனால் முடியும். இவை அனைத்தும் உங்களுக்கு உங்களைப் பற்றிய நம்பிக்கையை அதிகப்படுத்தும் என்று நினைத்தே வழங்குகின்றேன்.” அந்த மாளிகை வர்ணனைக்கு அப்பாற்பட்டு இருந்தது. தெளிந்த நீரோடைபோல தரை இருந்தது. நீர் இருக்கும் என்று வேட்டியை சற்று தூக்கிக்கொண்டு போனால் அது தரையாக இருந்தது. இது தரைபோல் இருக்கின்ற இடம். ஆனால், கண்ணுக்கு நீராக காட்டப்படுகிறது என்று சொல்லி கால் வைத்தால் அது சலனமற்ற நீராக இருந்தது. இடுப்பளவு ஆழத்தில் விழ நேர்ந்தது. காவலர்கள் தடுமாறி விழ, பெண்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். அந்த இடத்திற்கு எல்லா உலகத்திற்கும் சஞ்சாரம் செய்கிறவரும், எல்லா வித்தைகளும் தெரிந்தவருமான நாரதர் வந்தார். தருமருக்கு நாரதரை கண்டவுடன் மிகப் பெரிய சந்தோஷம். தருமர் பேசுவதில் விருப்பமுள்ளவர். உரையாடுவதில் ஆர்வமுள்ளவர். இது என்ன, அது என்ன என்ற கேள்விகள் உடையவர். விசாரம் உள்ளவர். எனவே நாரதர் வந்ததும்,“எங்கள் சபையை பார்த்தீர்களா. இதுபோல சபை வேறு உலகத்தில் உண்டா?” என்று ஆவலாகக் கேட்டார். அவர் தன்னுடைய சபையை பற்றிய பெருமையை மட்டும் கொண்டவரில்லை. இது இந்த பூமியில் ஒன்றா அல்லது வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு சபை இருக்கிறதா என்று அறிந்துகொள்ளும் ஆவலாக கேட்கப்பட்ட கேள்வி. இந்திரன் சபை பற்றியும், வருணனின் சபை பற்றியும், யமனின் சபை பற்றியும் நாரதர் விவரமாகச் சொல்ல, அவர்கள் மிகக் கவனமாகக் கேட்டு, அம்மாதிரியான விஷயங்களில் தங்களுடையதும் ஒன்று என்ற அமைதியை அடைந்தார்கள். கட்டிடங்கள் மட்டும் அல்ல, சுற்றியுள்ள

> “காண்டப்ரஸ்தத்திற்கு ஒரு மிகச் சிறந்த சபை என்று இருந்தால் அது மதிப்புதானே, மரியாதைதானே என்ற எண்ணம் வந்தது. இவர் வீடு வாங்கியிருக்கிறார், அவர் வீடு வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் கேட்டவருக்கு தானும் வீடு வாங்க வேண்டும் என்ற ஆசை வரும். நாரதர் நேரிடையாக உனக்கு ஒரு சபை வேண்டும் என்று சொல்லாது மற்றவர் சபையை வியந்து சொல்ல, தங்களுக்கும் சபை வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.”

குளங்களும், நீர் தேக்கங்களும், சிறிய அருவிகளும், அதைச் சுற்றியுள்ள தோட்டங்களும், அதில் உலா வரும் பறவைகளும் மிக நேர்த்தியாக அமைந்திருந்தன.நாரதரோடு தொடர்ந்து பேசுகிறபோது தருமர் பற்பல மன்னர்களைப் பற்றிக் கேட்க, அதில் குறிப்பாக அரிச்சந்திரன் என்ற மன்னனைப் பற்றி நாரதர் வெகுவாக சிலாகித்து கூறினார்: "திரிசங்கு என்ற மன்னனுக்குப் பிறந்தவர் அரிச்சந்திரன். அவர் தன் புஜ பலத்தால் ஏழு கண்டங்களையும் வென்று அந்த மன்னர்களை அடிமையாக்கி காணிக்கைகள் பெற்று அதன்மூலம் பெரும் யாகங்கள் செய்து இணையில்லா மன்னராக திகழ்ந்தார். உலகம் அனைத்தும் ஜெயித்து ராஜசூய யாகம் செய்வதால் அவருக்கு இந்திரன் பதவியில் அமர்ந்திருக்கின்ற வாய்ப்பு கிட்டியது. அங்கு அவர் மிக கம்பீரமாகவும், நிரம்பிய அதிகாரத்தோடும் இருக்கிறார். தருமபுத்திரா, நான் இங்கு வரும்போது உன்னுடைய தந்தை பாண்டு அரிச்சந்திரனைப் பற்றி சொல்லி, அவரைப்போல ராஜசூய யாகம் நீ செய்ய வேண்டும் என்று அவர் கட்டளையிட்டதாக உன்னிடம் சொல்லச் சொன்னார். அற்புதமான இரண்டு தம்பிகளை பெற்று இருக்கின்ற நீ இதைச் செய்வதில் வல்லவன். ஆனால், இது எளிதான விஷயம் அல்ல. இதில் தவறு ஏற்படின் தண்டிப்பதற்கு பிரம்மராட்சசர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, எந்த இடைஞ்சலும் இல்லாது மிகுந்த பராக்கிரமத்தோடும், நியமத்தோடும் இதைச் செய்து முடிக்க வேண்டும். இதைச்செய்து பெரும் புகழோடு தருமன் இங்கு வரவேண்டும் என்பதாகக் கூறு என்று தன்னுடைய ஆசையை தெரியப்படுத்தினார். இதை நான் உனக்குச் சொல்கிறேன். இதை நீ நன்கு யோசித்து இந்த பெரும் காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டு. இது உனக்கு நன்மை பயக்கும்" என்று ஆசிர்வதித்தார். நாரதரின் வருகை மிக சூட்சமமான விஷயத்தை பஞ்சபாண்டவர்களுக்கு நடுவே ஏற்படுத்தியிருந்தது. தேசம் கிடைத்துவிட்டது. வாழ்வதற்கும் அருமையான மாளிகை கிடைத்துவிட்டது. பலம் வாய்ந்த சகோதரர்களும், திறமையான அதிகாரிகளும், அன்பான மக்களும் இருக்கிறார்கள். தாயும், மனைவியும் இருக்கிறார்கள். இதைவிட வேறு என்ன தேவை ஒரு மன்னனுக்கு! இது போதுமே என்று இருக்க, தருமரை நாரதர் விடவில்லை. ஒரு விதையை அவர் நெஞ்சிலே வைத்துவிட்டுப் போனார். தான் சொல்வதாக இல்லாது இறந்துபோன பாண்டு சொன்னதாக, பித்ரு வாக்கியமாக அதை விதைத்துவிட்டுப் போனார். இப்போது அது வெறும் ஆலோசனையாக இல்லாது ஒரு உத்தரவாக மாறி தருமருடைய மனதை குடையத் துவங்கியது. ராஜசூய யாகமா, நானா என்னால் முடியுமா என்ற கலவரம் ஏற்பட்டது. முடியும் என்பதால்தான் ஊக்கப்படுத்துகிறார்கள். முயற்சித்தால் என்ன என்ற ஆசை வந்தது. பீமனும், அர்ஜுனனும் இருக்கும்போது இதற்கு கவலைப்படுவானேன் என்ற எண்ணம் ஏற்பட்டது. வேண்டும் என்று சில நேரமும், வேண்டாம் என்று சில காலமும் அவர் தவித்து வந்தார். அவ்வப்போது தன்னுடைய அதிகாரிகளையும், உறவினர்களையும், சகோதரர்களையும் ராஜசூய யாகம் பற்றி அவர்களுடைய கருத்துகளைக் கேட்டுக்கொண்டு வந்தார். எப்பொழுது சந்தித்தாலும் இதைப்பற்றி மன்னர் கேட்கிறார் என்பதால் அவரைச்சுற்றி உள்ளோரும் இதைப்பற்றி தீவிரமாக யோசிக்கத் துவங்கினார்கள். அவர்களால் எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை. ஒருநாள் சரி என்றும், மறுநாள் வேண்டாம் என்றும் உற்றாரும், நண்பர்களும் கூறுவதைக் கேட்டு தருமபுத்திரர் மயங்கினார். வேறு வழியே இல்லை. கிருஷ்ணரிடம்தான் சரணடைய வேண்டும் என்று தீர்மானித்தார். உடனடியாக கிருஷ்ணரை இந்திரப்ரஸ்தம் வரும்படி தூது அனுப்பினார்.கிருஷ்ணருக்கும் அந்த ராஜசூய யாகம் பற்றிய தருமரின் நினைப்பு பிடித்திருந்தது. தன்னுடைய அவதார நோக்கிற்கு இந்த விஷயம் மிகப்பெரிய உதவி செய்யும் என்று புரிந்திருந்தது. வெகுவேகமாக கிருஷ்ணர் இந்திரப்ரஸ்தம் நோக்கி வந்தார். பஞ்ச பாண்டவர்கள் தக்கபடி அவரை உபசரித்தார்கள். தருமரும், பீமனும் அவர் தந்தையாகக் கொண்டாடினார்கள். அர்ஜுனன் நெடுங்காலம் பிரிந்த நண்பனைத் தழுவிக்கொண்டான். நகுலனும், சகாதேவனும் கிருஷ்ணரை குருவாக பார்த்தார்கள். இந்திரப்ரஸ்த ஜனங்களுக்கு கிருஷ்ணர் தெய்வமாகத் தோன்றினார். சகலரும் அவரை வணங்க, அவர் ராஜசூய யாகம் பற்றி பேசத் தொடங்கினார்.

(தொடரும்)



ராஜசூய யாகம் பற்றி கிருஷ்ணர் பேசத் தொடங்கியவுடன் அங்கிருப்போர்கள் அனைவரும் மிகவும் ஆர்வமானார்கள்.

“இந்த உலகத்தினுடைய தலைவன் நானே என்று எவனொருவன் தைரியத்தோடு நிற்கிறானோ அவனே அந்த யாகம் செய்ய வல்லவன். அப்படிப்பட்ட நிலையை அவன் அடைய வேண்டுமென்றால் உலகம் முழுவதும் சுற்றி அங்குள்ள மன்னர்களை அவன் ஜெயித்து அவர்களிடமிருந்து காணிக்கைகள் பெற்று வர வேண்டும். அவர்கள் அவனுக்கு அடி தொழுபவர்களாக இருக்க வேண்டும். அந்த கம்பீர தலைவன்தான் ராஜசூய யாகம் செய்வதற்கு தகுதி உடையவன். அப்படிப்பட்ட மன்னனுக்கு சாம்ராட் என்று பெயர்.

32

மகாபாரதம்

பகவானையே யோசிக்க வைத்த பராக்கிரமசாலி!



சாம்ராட் ஆக வேண்டுமென்றால் துரியோதனர், பீஷ்மர், துரோணர், அஸ்வத்தாமா, கிருபாச்சாரியார், கர்ணன், சிசுபாலன், ருக்மி, ஏகவல்லன், த்ருமன், சுவேதன், சைப்யன், சகுனி ஆகிய வீரர்களை வெல்லாமல் எப்படி ராஜசூய யாகம் செய்ய முடியும்? ஆனால், இந்த வீரர்கள் அத்தனை பேரும் தங்களுடைய கௌரவம் கருதி, உங்கள் மேல் வைத்திருக்கும் அன்பை கருதி உங்களோடு சண்டையிட மாட்டார்கள். ஆனால் உங்களை சாம்ராட் என்று ஏற்றுக்கொள்வார்கள். ராஜசூய யாகம் செய்ய ஒத்துழைப்பு தருவார்கள். ஆனால், ஜராசந்தன் என்கிற அரசன் மட்டும் அவ்விதம் செய்ய மாட்டான். பரதகண்டத்தின் மத்திய பாகத்தை ஆட்சி செய்கின்ற ஜராசந்தன் உயிரோடு இருக்கும்வரையில் உங்களால் ராஜசூய யாகத்தை செய்து முடிக்க முடியாது. அவன் பரமசிவனை கடும் தவத்தால் சந்தோஷப்படுத்தி பல அஸ்திரங்களை பெற்று உலகின் பல மன்னர்களை ஜெயித்து அவர்களை சிறையில் அடைத்து வைத்திருக்கிறான். நூறு அரசர்களை கொன்று மிகப் பெரிய யாகம் செய்யப்போகிறான். எண்பத்தாறு அரசர்களை அவன் கைது செய்துவிட்டான். இன்னும் பதினாலு அரசர்கள் இருக்கிறார்கள். அந்த பதினாலு அரசர்கள் சேர்ந்ததும் அவன் அந்த யாகத்தை தொடர்வான். உண்மையில் ஜராசந்தனை எதிர்க்க, எனக்கும், பலராமருக்கும்கூட வலுவில்லை. நாங்கள் ஜராசந்தனுக்கு பயந்துதான் துவாரகாபுரிக்கு போய்விட்டோம். ராஜசூய யாகம் நடத்த விரும்பினால் அந்த மன்னர்களை விடுவித்து ஜராசந்தனை கொல்லவும் வேண்டும். ஜராசந்தனை வதைக்க முடியுமா என்பதைப்பற்றி இந்த சபை யோசனை செய்யட்டும்" என்று கிருஷ்ணர் சொன்னார்.

கிருஷ்ணருடைய இந்தப் பேச்சு தருமருக்கு கலவரத்தை கொடுத்தது. "பிரம்ம லோகத்தை அடைவதற்கு ஒரு உபாயமாக ராஜசூய யாகத்தை சொல்கிறீர்கள். நான் இதை நம்பவில்லை. மனம், புலன்களின் அடக்கத்தையே எல்லாவற்றுக்கும் உத்தமமானதாக நான் கருதுகிறேன். அதனாலேயே ஒரு மனிதனுக்கு நன்மை உண்டாகும். ராஜசூய யாகம் துவங்கி முழுமை அடைந்தாலும் பிரம்மலோகத்தை அடைய முடியாது. நீங்களே ஜராசந்தனைப்பற்றி பயப்படுகிறபோது நான் என்ன செய்ய முடியும்? நான் உங்களையே நம்பிக் கொண்டிருக்கிறேன். அவன் உங்களைவிட பலசாலி என்றால் நான் அல்லது பீமன் அல்லது அர்ஜுனனால் அவன் கொல்லப்பட முடியுமா? நீங்களே முடிவற்ற சக்தி என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இப்படிப் பேசும்போது என் மனம் கவலையடைகிறதே" என்று சொன்னார்.

உகுமதர்

தருமபுத்திரர் கவலையடைந்ததும் பீமன் தன் இருக்கையிலிருந்து எழுந்தான். சபைக்கு நடுவே வந்தான். "எந்த முயற்சியும் செய்யாமல் இப்படி ஆரம்பத்திலேயே கவலைப்படுவது எந்த விதத்தில் நியாயம்? நல்ல உபாயத்தாலும், கடுமையான உழைப்பாலும், நீதியாலும் போரிடுகிறவன் நிச்சயம் வெற்றி பெறுவான். கிருஷ்ணரிடம் நீதி இருக்கிறது. என்னிடம் பலம் இருக்கிறது. அர்ஜுனனிடம் வெல்லும் சக்தி இருக்கிறது. நாங்கள் மூன்று பேரும் அக்னிகளாக ஒரு யாகத்தை வெற்றி பெறச் செய்வதுபோல ஜராசந்தனை ஜெயித்து விடுவோம். வெற்றி பாண்டவர்களுக்குத்தான் என்பது இப்பொழுது தீர்மானமாகியிருக்கிறது.

"சாம்ராட் ஆவதுதான் முக்கியமான விஷயம் என்கிறபோது ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் சாம்ராட் ஆகிறார்கள். கார்த்த வீர்யார்ஜுனனும், பகீரதனும் தங்கள் தவவலிமையால் சாம்ராட் ஆனார்கள். மாந்தாதா வெல்லத் தக்கவர்களை வென்று சாம்ராட் ஆனார். மருத் மன்னர் தன்னுடைய செழுமையின் பிரபாவத்தால் சாம்ராட் ஆகியிருந்தார். ஆனால், நீங்கள் சாம்ராட் ஆவதற்கு இடைஞ்சலாக ஜராசந்தன் இருக்கிறான். அவனை வெற்றி பெற்றே ஆகவேண்டும்.

நீங்கள் சாம்ராட் ஆவது ஒரு பக்கம் இருக்கட்டும். ஜராசந்தன் என்கிற ஒரு முரடன் பல மன்னர்களைக் கொன்று பல ஜனங்களை துன்புறுத்தி அவன் தன்னை மிகப்பெரிய மன்னனாக நினைத்துக் கொண்டிருக்கிறபொழுது அந்த அகங்காரத்தை, கொழுப்பை அடக்க வேண்டாமா? அவனை தட்டிக் கேட்க வேண்டாமா? அந்த அநியாயத்தை உதறி எடுக்க வேண்டாமா? அப்படியே ஒரு வீரன் போரில் ஈடுபட்டு ஜெயிக்க முடியாமல் போனாலும் அவனும் உன்னதமான பதவியைத்தான் அடைகிறான். ஜராசந்தனை வெல்பவன் நிச்சயமாய் சாம்ராட் ஆவான். எனவே, எந்த தயக்கமும் இன்றி ராஜசூய யாகம் செய்யத் தயாராகுங்கள். ஜராசந்தனை வெல்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இரண்டு தம்பிகள் இருக்க உங்களுடைய தயக்கம் கொஞ்சம் வியப்பை கொடுக்கிறது," என்று சொல்லி நிறுத்தினான்.

"அதுமட்டுமில்லை தருமரே, பரசுராமர் அவதாரத்திற்குப்

பிறகு இந்த பரதகண்டத்தில் வலிமை மிக்க க்ஷத்ரியர்கள் பலரும் கொல்லப்பட்டு விட்டார்கள். இப்போது இருக்கின்ற க்ஷத்ரியர்கள் தரத்தில் தாழ்ந்தவர்கள். இவர்களை வெல்வது எளிதுதான். வெல்ல முடியாதவர்கள் என்று யாரும் இங்கே இப்போது இல்லை. அம்மாதிரி இருந்தவர்கள் பரசுராமரால் கொல்லப்பட்டு விட்டார்கள். எனவே, நீங்கள் தைரியமாக போரில் ஈடுபடலாம்" என்று உற்சாகப்படுத்தினான்.

சபையில் தன் இருக்கையை விட்டு அர்ஜுனன் எழுந்தான். "கிடைத்தற்கரிய வில்லும், அஸ்திரங்களும் அக்னியின் மூலம் எனக்கு கிடைத்திருக்கின்றன. மிகச்சிறந்த விஷயங்களை கையில் தரித்துக் கொண்டு நான் வெறுமே இருப்பது வீண் வாழ்க்கை என்று கருதுகிறேன். இவை எனக்குக் கிடைத்திருப்பதே பகைவரை வெல்வதற்குத்தான். உங்களுக்கு உதவி செய்யத்தான். குறையற்ற ஒரு க்ஷத்ரியனாக இருக்க விரும்புகின்றேன். எல்லா குணங்களும் நிறைந்திருந்தாலும் பலமற்றவன் என்ன செய்வான்? அவனுக்கு என்ன புகழ் கிடைக்கும்? எனவே மிகுந்த பலசாலிதான் முக்கியம். அவன் குணசாலியாகவும் இருப்பதே சிறப்பு. ராஜசுய யாக வெற்றிக்காக ஜராசந்தனை அடித்து சிறைப்பட்டுள்ள மன்னர்களை காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமையாகிறது. இதைவிட வேறு எதற்காக நாம் பிறந்திருக்கிறோம்? எதற்காக இந்த அஸ்திரங்கள்? ஒருவேளை நாம் இந்த யாகத்தை துவக்காமல் இருந்தால், ஜராசந்தனை போருக்கு அழைக்காமல் இருந்தால் பாக்கியிருக்கின்ற பதினாலு பேரில் நாமும் சேர்க்கப்பட்டு விடுவோம். வெகு நிச்சயம் ஜராசந்தன் நம்மை நோக்கி வருவான். அப்படி அவன் வருவதற்கு முன்பே நாம் துணிந்து இறங்கினால் நம்மைக்கண்டு அவன் பயப்படக்கூடும்."

> 'அதுமட்டுமில்லை தருமரே, பரசுராமர் அவதாரத்திற்குப் பிறகு இந்த பரத கண்டத்தில் வலிமை மிக்க க்ஷத்ரியர்கள் பலரும் கொல்லப்பட்டு விட்டார்கள். இப்போது இருக்கின்ற க்ஷத்ரியர்கள் தரத்தில் தாழ்ந்தவர்கள். இவர்களை வெல்வது எளிதுதான். வெல்ல முடியாதவர்கள் என்று யாரும் இங்கே இப்போது இல்லை.

ஆனால், எவருடைய வீரமான பேச்சும் தருமருக்கு சமாதானம் ஆகவில்லை. "கிருஷ்ணா, எல்லாம் வல்ல நீரே அவனைக் கண்டு பயப்படுகிறீர்கள் என்றால் அந்த ஜராசந்தன் யார்? இவ்வளவு பலம் அவனுக்கு எப்படி வந்தது? அவனைக் கண்டு பயந்து நீங்கள் துவாரகாவிற்கு ஓடியதாகச் சொல்கிறீர்கள். துவாரகாபுரியை நீங்கள் நிர்மாணித்ததே ஜராசந்தனின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்றும் சொன்னீர்கள். ஆச்சரியமாக இருக்கிறது. அவன் அவ்வளவு பலசாலியா? நீங்கள் பயப்படும் வண்ணமா? எனக்கு புரியவேயில்லை."

தருமருடைய இந்தப் பேச்சை கேட்டதும் கிருஷ்ணர் தொண்டையை செருமிக் கொண்டு ஜராசந்தனைப் பற்றி விவரிக்கலானார்: வளம் பொருந்திய மகத தேசத்தில் பிருகதத்தன் என்ற ஒரு மன்னர் ஆட்சி செய்து வந்தார். கல்வி கேள்விகளில் சிறந்தவர். யாகங்கள் செய்வதில் ஆர்வம் உள்ளவர். மனம் அடக்கி, புலன் அடக்கி கூர்மையாக அக்னி மூலம் தேவர்களை வணங்குகிற போது, தானும் தன் மக்களும், தன் தேசமும் ஆசிர்வதிக்கப்பட்டதை அவர் உணர்ந்திருந்தார். தொடர்ந்து பல்வேறு விதமான ஹோமங்களை செய்து நகரத்தை வளப்படுத்தினார். மழை பெய்வதற்கும், மழை நிற்பதற்கும், பயிர் வளர்வதற்கும், பூச்சிகள் தாக்காது இருப்பதற்கும், நன்கு அறுவடை நடப்பதற்கும், பூக்கள் மலர்வதற்கும் அவர் வேண்டுதல்கள் நிகழ்த்தினார். மக்களுக்காகவே நிறைய ஹோமங்கள் செய்தார். இப்படிப்பட்ட மன்னர்கள் கிடைப்பது அரிது.

அவருக்கு அப்பொழுது காசியில் மன்னராக இருந்த காசிராஜன் தன்னுடைய இரண்டு மகள்களை பிருகதத்தனுக்கு கன்னிகாதானமாகக் கொடுத்தார். அந்த இரண்டு பெண்களிடமும், 'உங்கள் இருவரையும் நான் சமமாகவே நடத்துவேன். பேதம் காட்ட மாட்டேன்' என்று எடுத்தவுடனேயே சத்தியம் செய்தார் பிருகதத்தன். மிக சந்தோஷமாக வாழ்ந்தார். சிற்றின்பத்தின் சௌகரியங்களையெல்லாம் உணர்ந்த பிறகும் அவருக்கு புத்திர பாக்கியம் ஏற்படவில்லை. புத்திர பாக்கியம் இல்லையெனில் இவ்வித இன்பங்களுக்கெல்லாம் எந்த அர்த்தமுமில்லை என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. எனவே, மெல்லிய வருத்தம் பற்றிக்கொண்டது. புத்திர காமேஷ்டி போன்ற யாகங்கள் செய்தும் அதனால் அவர் பலன் பெறவில்லை.

வேறு என்ன செய்வது என்ற திகைப்பில் இருந்தபோது, சண்டகௌசிக முனிவர் என்பவர் தவத்தை முடித்து அவர் ஊரின் எல்லையில் ஒரு மரத்தடியில் விஸ்ராந்தியாக அமர்ந்திருக்கிறார் என்று கேள்விப்

பட்டு தன் மனைவிமாருடன் அங்கு போய் நமஸ்கரித்தான்.

“உங்களுக்கு என்ன வேண்டும். சகலமும் செய்ய சித்தமாயிருக்கிறேன்” என்று பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். அந்த முனிவருக்கு மன்னனுடைய அடக்கமும், மரியாதையும், பண்பான பேச்சும் மிகவும் சந்தோஷத்தை கொடுத்தன.

“எனக்கு ஒன்றும் வேண்டாமப்பா. உனக்கு என்ன வேண்டும் கேள்” என்று சொல்ல, அதற்காகவே காத்திருந்ததுபோல மன்னன் தனக்கு குழந்தை இல்லையென்றும், புத்திர காமேஷ்டி யாகங்கள் செய்தும் எந்த பலிதமும் ஏற்படவில்லை என்றும் வருத்தத்தோடு சொன்னார். “என்னுடைய பித்ருக்கள் என்னுடைய குழந்தைகளுக்காக ஏங்கியிருக்கிறார்கள், பரம்பரை தொடரா விட்டால் ஒரு மன்னன் வாழ்ந்து என்ன பிரயோஜனம்? யாருக்குத்தான் அது லாபம்? மிகப்பெரிய இந்த சோகம் என்னை வாட்டுகிறது. இத்தனை தான தர்மங்கள் செய்தும் பலிதமில்லையே என்பதால் தான தர்மங்கள் மீது சந்தேகம் வருகிறது” என்று துக்கத்தோடு பேச, தர்மத்தின் வேரையே அசைக்கின்ற மன்னனுடைய வேதனையை பார்த்து சண்டகௌசிக முனிவர் வேதனைப்பட்டார்.

அப்போது சட்டென்று அவர் மடியில் ஒரு மாம்பழம் வந்து விழுந்தது. அது கிளியால் கொத்தப்படவில்லை. யாராலும் பறித்துப் போடப்படவில்லை. எங்கிருந்தோ தெய்வீகமாக அந்தப் பழம் வந்து அவர் மடியில் விழுந்தது.

என்னுடைய தவத்திற்கு பலன் இதுதானா என்று நல்லவர் அரற்றும்போது உடனடியாக தெய்வம் பதில் சொல்கிறது. உத்தமர்களுக்கு முன்னேதான் இது வேகமாக நடைபெறுகிறது. தெளிவாக நடைபெறுகிறது.

கிடைத்த அந்தப் பழத்தை சிறிதும் தயக்கமின்றி சண்டகௌசிக முனிவர் அந்த மன்னனுக்கு கொடுத்து, ‘இது உன் குறையை தீர்க்கும். எடுத்துப் போ’ என்று ஆசிர்வதித்தார்.

“என்னுடைய தவத்திற்கு பலன் இதுதானா என்று நல்லவர் அரற்றும்போது உடனடியாக தெய்வம் பதில் சொல்கிறது. உத்தமர்களுக்கு முன்னேதான் இது வேகமாக நடைபெறுகிறது. தெளிவாக நடைபெறுகிறது.”

அந்த மன்னன் பிருகுதத்தன் தன் மனைவியரிடம் அந்தப் பழத்தை கொடுத்தான். அவர்கள் அதை இரண்டாக அரிந்து ஆளுக்கு ஒரு பகுதியை உண்டார்கள். கருவுற்றார்கள். கரு நலமே வளர்ந்தது. குழந்தை பிறந்தது. ஆனால், முழுதாக இல்லாது ஒரு கால், ஒரு கை, அரை வயிறு, அரை மார்பு, அரை முகம் என்று ஆளுக்கு ஒரு பாதியாக பிறந்தது. அவர்கள் பயந்து போய் குழந்தையை ஒரு துணியில் சுற்றி தாதியிடம் கொடுத்தார்கள். தாதிகள் அதை வாங்கி குப்பையிலே வீசினார்கள்.

பிருகுதத்தன் அரண்மனையை ஜடா என்ற அரக்கி காவல் காத்து வந்தாள். அவளுக்கு அந்த அரண்மனையின் ஒரு பகுதியில் படம் வரைந்து பூஜை நடைபெற்று வந்தது. மாமிச பிண்டம் குப்பைத் தொட்டியில் இருக்கவே ஜடா அதை உண்பதற்காக ஆவலோடு எடுத்தாள். இரண்டு துண்டங்களாக இருப்பதைப் பார்த்து சந்தோஷப்பட்டாள். அவளையும் அறியாமல் அந்த இரண்டு துண்டங்களையும் இணைக்க அது ஒட்டிக் கொண்டது. குழந்தை அழத் துவங்கியது. பெருங்குரலோடு குழந்தை அழுவதைப் பார்த்து ஜடா பயந்தாள். விடியும்வரை குழந்தையை சமாதானப்படுத்தி விடியும் நேரத்தில் அரசரிடம் போனாள்.

“உங்கள் வீட்டு குப்பைத் தொட்டியில் இருந்த குழந்தை இது. உங்கள் மனைவிமார்கள் சூலுற்றிருந்தார்கள். அவர்களுடைய குழந்தையாக இருக்கலாம். இரண்டையும் இணைத்தபோது குழந்தை அழத் துவங்கியது. நான் சமாதானப்படுத்தினேன். இது உன் குழந்தை. உன்னுடைய அரண்மனையில் என்னை தினந்தோறும் பூஜை செய்ததால் இதை நான் உண்ணாமல் உனக்கு பரிசாகக் கொடுக்க, ஆசைப்படுகிறேன். மாமிசம் சாப்பிடுவது வழக்கமாயினும் இந்தக் குழந்தையை உண்ண எனக்குப் பிடிக்கவில்லை. பிள்ளை பேறு இல்லாத உனக்கு இந்தக் குழந்தை வரம் அல்லவா. எனவே வாங்கிக் கொள்” என்று நீட்டினாள்.

மிகுந்த சந்தோஷத்தோடு குழந்தையை வாங்கி தன் நெஞ்சோடு பிருகுதத்தன் அணைத்துக் கொண்டான்.

ஜரா என்ற அரக்கி கொடுத்ததால் அவன் ஜராசந்தன் என்று அழைக்கப்படுகிறான். சந்தி என்றால் சேர்த்த என்று பொருள். ஜராசந்தித குழந்தை என்பதால் ஜராசந்தன் ஆனான். மிகுந்த பலமுடையவனாகவும், தெளிவான பார்வையுடையவனாகவும், வேகமான வளர்ச்சியுடையவனாகவும் இருந்தான். அவன் மன்னருக்கெல்லாம் மன்னராகத் திகழ்வான் என்று சண்டகௌசிக முனிவர் அந்தக் குழந்தையை ஆசிர்வதித்தார். ஈடு இணையில்லாத வீரத்தை கொண்டிருப்பான் என்றும் கொண்டாடினார்.



தன் மகன் வாலிப பருவம் எய்தியதும் அவனுக்கு அரசாட்சியை கொடுத்து விட்டு பிருகுதத்தன் வனவாசம் மேற்கொண்டான். பிறகு காலகிரமத்தில் இறந்தும் போனான். தந்தை இறந்ததும் தன்னை பெரும் மன்னனாக பிரகடனப்படுத்திக் கொள்ள ஜராசந்தன் எல்லா முயற்சிகளையும் செய்தான்.

சாம்ராட்டாக ஜராசந்தன் விளங்கி விட்டான். அவனுக்கு பக்கபலமாக பல வீரர்கள் இருக்கிறார்கள். வெல்லவே முடியாத அந்த வீரர்களையெல்லாம் துணைக்கு வைத்துக் கொண்டு, எளிதாக வெல்லக்கூடிய மன்னர்களையெல்லாம் சிறைபிடித்து தலைகொய்ய திட்டமிட்டிருக்கிறான். இந்த பயமுறுத்தலால் பரதகாண்டத்தின் மத்திய பகுதி நடுங்கிக் கொண்டிருக்கிறது. சாதாரண ஜனங்கள் பேச்சற்றுக் கிடக்கிறார்கள். வலுவுள்ளவர்களே எதிர்க்க முயலாதபோது பொது ஜனங்கள் எப்படி அரசனை எதிர்ப்பார்கள், எப்படி கண்டிப்பார்கள்?

“நாம் பெரும் போர் நடத்த படை திரட்டிக் கொண்டு அவனை சந்திக்க வேண்டுமென்றால் அது நமக்கு நஷ்டங்களை கொடுக்கும். எதிரியைப் பற்றி யோசித்து முடிவு செய்ய வேண்டும் என்பது ஒரு உண்மையான விஷயமாயின் ஜராசந்தனை படைபலம் வைத்து சந்திக்காது தனி ஒருவனாக துவந்த யுத்தத்திற்கு அவனை அழைக்க வேண்டும். அவனுடைய கோட்டைக்குள் ரகசியமாக புகுந்து அவன் மல்யுத்தம் புரியும் நேரத்தில் சண்டை போட பிரியப்படுகிறேன் என்று சொல்லி, உள்ளே நுழைந்து அவனை அடித்து நொறுக்க வேண்டும். பீமசேனன்தான் அதற்கு சரியானவன். பீமசேனன் பலத்திற்கு முன்பு ஜராசந்தனால் நிற்கவே முடியாது. தெய்வாம்சம் பொருந்திய முனிவருடைய கிருபையால் அவன் ஆடிக் கொண்டிருக்கிறான். அதற்கு முடிவு கட்ட வேண்டிய நேரம் வந்து விட்டது.

“எனவே, படை எடுத்துப் போகாது நானும், அர்ஜுனனும், பீமனும் ஜராசந்தனின் கோட்டைக்குப் போய் அவனை நோக்கி நடக்கிறோம். பல நாட்கள் பயணப்பட்டு அவனுடைய இருப்பிடம் போய் அவன் மல்யுத்தம் செய்கிறபோது அங்கே போய் நின்று என்னோடு சண்டை போடுகிறாயா என்று கேட்டு அவனை வலிய சண்டைக்கு இழுத்து அடிக்க வேண்டும். இதனால் பெரும் நஷ்டங்கள் தவிர்க்கப்படும். பெரும் உயிர்க்கொலைகள் தவிர்க்கப்படும். ஜராசந்தனை முன்னிட்டு நம்முடைய படைகளை நாம் பலி போடக்கூடாது. ஜராசந்தன் அழிந்து போனால் அவன் படையும் குலைந்து போகும். எனவே, தனியான சண்டைதான் இதற்குச் சரி. பீமன் அதற்குத் தயாராக இருக்கிறான். ஜராசந்தனுக்கு முடிவு வந்துவிட்டது. தருமபுத்திரரே, எங்களுக்கு விடை கொடும்.” என்று கிருஷ்ணர் சொன்னார்.

பல்வேறு விதமாக யோசனை செய்து பெரும் படை இழப்பை தவிர்க்க கருதியும், இப்போது அம்மாதிரி இழப்பு ஏற்பட்டால் பிற்பாடு வேறு சிலரோடு போரிடுவதற்கு பலவீனமான படையே இருக்கும் என்று கருதியும், அப்படி பலவீனமான படை இருப்பின் மற்றவர்கள் வந்து சண்டைக்கு இழுப்பார்கள் என்று மனதில் வைத்தும் ஜராசந்தனை நோக்கிப் போக வேண்டியது அவசியமாகிறது.

அர்ஜுனன் வருகிறான், பீமன் வருகிறான், கிருஷ்ணன் வருகிறான் என்றால் அவன் கைது செய்யத்தான் முற்படுவானே தவிர, படைகளை அனுப்பி சிறையில் அடைப்பானே தவிர சண்டைக்கு வரமாட்டான். அவனை சண்டைக்கு அனுப்ப அவனுடைய தளபதிகளும் விடமாட்டார்கள். எனவே, எங்கே, எப்போது மல்யுத்தம் செய்கிறான் என்று பார்த்து அங்கே போகவேண்டும். அவன் மல்யுத்தம் செய்வதில் பிரியமுள்ளவன். மல்யுத்த வீரர்களின் எலும்புகளை நொறுக்குவதில் ஆசையுள்ளவன். முஷ்டியை மடக்கி ரத்த விகாரமாய் முகத்தை சிதைப்பதில் விருப்பமுள்ளவன். அதில் பெரும் சந்தோஷமடைபவன். அந்த சந்தோஷத்தை தூண்டிவிட்டு சரியான நேரத்தில் உள்ளே நுழைந்து அவனை துவம்சம் செய்ய வேண்டும் என்று திட்டமிடப்பட்டது.

ஸ்ரீகிருஷ்ணரும், அர்ஜுனனும், பீமசேனனும் மகதம் நோக்கிப் பயணமானார்கள்.

(தொடரும்)

33

மகாபாரதம்

போரிலும் நேர்மை பாராட்டியவர்கள்!

பாண்டவ ப்ரஸ்தத்தில் அரசவையில் வீற்றிருந்த தருமபுத்திரரிடம் விடைபெற்றுக் கொண்டு கிருஷ்ணர், அர்ஜுனன், பீமன் மூவரும் மகத தேசத்தை நோக்கிப் போனார்கள். ஜராசந்தனின் மிகப் பெரிய கோட்டை இருக்கின்ற அந்த தேசத்து மக்கள் பூஜை செய்கின்ற கிரி விரதத்தின் மீது ஏறினார்கள். அந்த மலை மகத தேசத்தினுடைய முக்கிய அணிகலனாக விளங்கியது. பெரிய மதிப்பாக மக்கள் அதை கருதினார்கள். அந்த மலையின் மீது முரசுகள் வைக்கப்பட்டிருந்தன. அவை ஒருமுறை ஒலித்தால் எதிரொலியின் மூலம் பல மாதங்களுக்கு அந்த முரசு சத்தம் கேட்டுக் கொண்டிருக்கும். அந்த மலைத் தொடர் அவ்வித விசித்திரம் கொண்டது.

மூவரும் மலை மீது ஏறி அந்த முரசை அறைந்து பிறகு அதை அவிழ்த்து கீழே போட்டு உடைத்தார்கள். எந்த சிகரத்தை மக்கள் கண்மணி என்று கருதியிருந்தார்களோ அதைத் தங்கள் முழு பலத்தால் இடித்து உடைத்து அதன் சிகரங்களை உடைத்தெறிந்தார்கள். தொலைவிலிருந்து பார்த்தால் கும்பிடத் தோன்றும் அதன் சிகரம் இப்பொழுது மூளியாக இருந்தது.

ஜனங்கள் பதற வேண்டும் என்றும், வீரர்கள் ஆத்திரப்பட வேண்டும் என்றும், போருக்குத் தயாராக வேண்டும் என்றும், அவர்கள் அழிவு ஆரம்பமாகி விட்டது என்பதை காண்பிக்க வேண்டும் என்றும் இந்த காரியங்கள் அந்த மூவரால் செய்யப்பட்டன. சிகரத்தை உடைத்து விட்டு அவர்கள் கீழே இறங்கினார்கள். ஜனங்கள் பதறினால் தானே தலைமை அதிரும்? ஜராசந்தனை அதிகம் அதிர வைத்தார்கள்.

மகத தேசத்தின் தலைநகருக்குள் அவர்கள் நுழைந்தார்கள். மிகப்பெரிய கோட்டையில் பலத்த காவல் இருந்தபோதும் அவர்கள் தங்கள் புஜபலத்தால் வலுக்கட்டாயமாக நுழைந்தார்கள். மக்கள் புழங்கிக் கொண்டிருக்கும் கடைத்தெருவில் ஆரவாரம் செய்தார்கள். வன்முறையால் மூன்று மலர் மாலையை பிடுங்கிக் கொண்டார்கள். தங்கள் கழுத்தில் அணிந்து கொண்டார்கள். வண்ண உடையில் இருந்தார்கள். எல்லோரையும் தங்களைப் பார்க்க வைத்தார்கள்.

அந்தணர்கள் சூழ்ந்த ஜராசந்தன் பூஜையறையில் விளக்குகள் ஆடின. அறுந்து விழுந்தன. ஹோமத்தீ அணைந்து புகைந்தது. இம்மாதிரியான துர்சகுனங்களை கண்ட அந்தணர்கள் ஜராசந்தனை உடனடியாக யானையின் மீது ஏற்றி அதைச் சுற்றி தீ வளர்த்து அவன் பாதுகாப்புக்காக மந்திரங்கள் சொன்னார்கள். ஆனால், யானை தீயை கண்டு நடுங்கியது. அந்தணர்களால் அமைதியாக மந்திரங்கள் சொல்ல முடியவில்லை. மந்திரக் கட்டு குலைந்தது.

அரண்மனைக்குள் நுழைந்த மூவர் பற்றிக் கேட்டு பூஜையைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு ஜராசந்தன் அரசவைக்குப் போனான். அந்த மூவரும் அந்தண வேடத்தில் இருந்ததால் மரியாதையாக கைகூப்பி வரவேற்றான். உங்களுக்கு நல்வரவு என்று சொல்லி அவர்களை நமஸ்கரித்தான். அர்ஜுனனும், கிருஷ்ணரும் பேசாமல் இருந்தார்கள். அவன் வரவேற்பை ஏற்காததுபோல் முகம் திருப்பிக் கொண்டார்கள். ஸ்ரீகிருஷ்ணர் ஜராசந்தனிடம் சொன்னார்: “நள்ளிரவு மட்டுமே பேசுகின்ற விரதத்தை இவர்கள் கடைபிடிக்கிறார்கள். அதனால் இப்போது பேசவில்லை” என்று சொல்ல, அவர்களை யாகசாலையில் தங்க வைத்துவிட்டு மன்னன் தன் இருப்பிடத்திற்குப் போனான். நள்ளிரவிற்குப் பிறகு அவர்களை தேடி வந்தான். அவர்களை சந்திப்பதில் மிகுந்த கவனமாக இருந்தான்.

“அந்தணர்களே யார் நீங்கள்? உங்களுக்கு நான் எந்தக் கெடுதலும் செய்ததாக நினைவில்லை.



அப்படி செய்திருப்பின் தயவுசெய்து தெரிவியுங்கள். எதற்காக மகதம் பூஜை செய்கின்ற சிகரத்தை உடைத்தீர்கள்? முரசுகளை அறைந்து நாசம் செய்தீர்கள்? எந்த முன்னறிவிப்புமின்றி யுத்தம் செய்கின்ற நோக்கத்தோடு நீங்கள் வந்திருப்பது தெரிகிறது. காரணம் என்னவென்று சொன்னால் அதற்கேற்றபடி நான் ஆயத்தமாவேன்" என்று மரியாதையாக பதில் சொன்னான்.

நல்லவனோ, கெட்டவனோ, அரசனோ, அரக்கனோ பரத கண்டத்தின் இந்த மரியாதைதான், அதன் மிகப் பெரிய நாகரீகமாக இன்றளவும் போற்றி பாதுகாக்கப்பட்டு வருகிறது. வேதங்களிலிருந்து கிளர்ந்த சனாதான தர்மம் அந்த வேதத்தின் சாரத்தை தன்னுடைய நியதிகளாக வைத்துக்கொண்டது. வம்புச்சண்டைக்கு வந்தால்கூட என்ன காரணம் என்று கேட்டுத்தான், தகுந்த மரியாதையோடு உபசரித்த பிறகுதான், யுத்தம் துவக்குவது வழக்கம். எதிரியா இல்லையா என்று தீர்மானிப்பது பண்பாடு.

"எதற்கு வந்தீர்கள். எதற்காக வர்ண மாலைகளை தரித்துக் கொண்டிருக்கிறீர்கள். எதற்காக மலை உச்சியை துவம்சம் செய்தீர்கள்" என்று ஜராசந்தன் ஒரு அரசனுக்குரிய நியதியோடும் பண்போடும் கேட்டான்.

"நாங்கள் அந்தணர்கள் வேடம் பூண்டிருக்கிறோம். எங்களிடம் லக்ஷ்மி வாசம் செய்வதால் மலர் மாலை அணிந்திருக்கிறோம். நான் உனக்குத் தாய் மாமன், கிருஷ்ணன். இவர்கள் அர்ஜுனனும், பீமனும் ஆவார்கள். உன்னை தண்டிக்க வந்திருக்கிறோம். உன்னால் கவரப்பட்ட அரசர்கள் பலரையும் விடுவித்து இவ்விதம் கொடுமை செய்ததற்காக உன்னோடு போர் செய்து உன் கர்வத்தை குலைக்க வந்திருக்கிறோம்." சகல விஷயமும் தலையில் கொட்டப்பட்டது. இதுதான் காரணம் என்று பூடகமின்றி நேரடியாகப் பேசப்பட்டது.

"இதற்கு அந்தண வேடத்தில் வருவானேன்? பெரிய படை திரட்டி வந்திருக்கலாமே. என் படையோடு சமர் செய்திருக்கலாமே. நீங்கள் தனித்த யுத்தம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள் போலும். நான் அதற்குத் தயாராக இருக்கிறேன்.

உங்கள் மூவரோடும் நான் ஒரே நேரத்திலும் அல்லது தனித்தனியாகவும் சண்டையிடவும் தயார். இது எனக்கு கொண்டாட்டமான விஷயம். நீங்கள் என்னை தண்டிப்பதற்கு என்று சொன்னதுதான் நகைப்பாக இருக்கிறது. நான் ஒன்றும் இரவில் படுத்துத் தூங்குகின்ற அரசனை அவன் மனைவியர் மத்தியிலிருந்து கவர்ந்து வந்து விடவில்லை. முன்னறிவிப்பு செய்து, போரிட்டு, ஜெயித்து கொண்டு வந்திருக்கிறேன். போர் செய்ய திராணி இல்லாதவன் என்னிடம் கைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான். இதில் என்ன தவறு என்று தெரியவில்லை. வெகு நிச்சயமாக நான் அவர்களை பலிபோடப் போகிறேன். சிவனுக்காக தீட்சை எடுத்து யாகம் செய்யப் போகிறேன். இப்பொழுது உங்களையும் அந்த கும்பலில் சேர்த்துக் கொள்கிறேன். நீங்களாக வந்திருப்பதால் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். எப்படி யுத்தம் செய்ய விருப்பம்?” என்று வெகு குதூகலத்தோடு கேட்டான்.

மரணம் பற்றி சிறிதும் அஞ்சாத க்ஷத்திரியர்கள் வாழ்ந்த தேசம். அவரவர் கொள்கையில் அவரவர்க்கு உடன்பாடு இருப்பினும் அதில் தவறு இருந்தால் போரிட்டு தீர்த்துக் கொள்ள வேண்டிய நியதி உள்ள தேசம் இது. வலிமையுள்ளது எஞ்சும் என்ற தர்மத்தை பின்பற்றுகின்ற தேசம். நான் தவறா, சரி, முடிந்தால் தண்டித்துப் பார். அல்லது தவறு என்று சொன்ன உன்னை நான் தண்டிக்கிறேன். என்று விஷயங்களை தீர்த்து விடுகின்ற தேசம். நியாயங்களை நிலைநிறுத்துகின்ற தேசம்.

ஜராசந்தன் போருக்குத் தயார் என்று சொன்னதும் பீமன் எழுந்து அவனோடு போர் செய்வதாக தன் விருப்பத்தை தெரிவித்தான். ஜராசந்தன் அதை வரவேற்றான். அர்ஜுனனைக் காட்டிலும், பீமனைக் காட்டிலும் வலிமைமிக்க நாராயண அம்சமான ஸ்ரீகிருஷ்ணர் அமைதியாக இருந்தார். ஜராசந்தனை கொல்லுகின்ற வலு அவருக்கு இருப்பினும் யது குலத்தோரால் அவன் கொல்லப்பட மாட்டான் என்ற வரம் வாங்கியிருந்ததால் தான் நகர்ந்து பாண்டவர்களுக்கு இடம் கொடுத்தார். பீமனால் இவன் கொல்லப்பட வேண்டும் என்பது விதி என்று அசரீரி சொல்லிருப்பதாலேயே ஜராசந்தனோடு போர் செய்த பலராமர் பின்வாங்கி கிருஷ்ணரோடு துவாரகாபுரிக்கு போய் புதிய கோட்டை அமைத்துக் கொண்டார். யதுகுலம் ஜெயிக்க முடியாத எதிரியை இப்பொழுது பீமன் மூலம் வஞ்சம் தீர்த்துக் கொள்ளப்போகிறது.

உ குமர்

ஒருவனுக்கு மரணம் முள்ளால் வர வேண்டுமென்றாலும், ஆயுதத்தால் வரவேண்டுமென்றாலும், கையால் வரவேண்டுமென்றாலும் அதன் வழியேதான் வந்து தீரும். மாற்று முயற்சிகள் பயன்படாது. அவதாரமான ஸ்ரீகிருஷ்ணர் இதை தெரிந்து கொண்டு வலிவுமிக்க பீமனை ஜராசந்தனோடு போரிட அனுப்பினார்.

மறுநாள் காலை போருக்கான மேடை தயாரானது. திரண்டு வேடிக்கை பார்க்க வந்த மல்லர்களும், போர் வீரர்களும், அதிகாரிகளும் ஒருபக்கம் இருக்க, மறு பக்கம் பொதுமக்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டது. மல்லர்கள் இருவரும் மேடை ஏறினார்கள். பரஸ்பரம் கால்தொட்டு நமஸ்கரித்துக் கொண்டார்கள். விலகி நின்று கை கூப்பினார்கள். ஜனங்களுக்கு வந்தனம் சொன்னார்கள்.

பிறகு, அருகே நின்று இரண்டு கைகளையும் ஒருவரை ஒருவர் பற்றி மேடையிலிருந்து தள்ள முயற்சித்தார்கள். இழுத்து கீழே போட வலிவு காட்டினார்கள். ஆனால், இருவரும் பரஸ்பரம் அசையவில்லை, மல்லாந்து விழவில்லை. உடும்புப் பிடியாக தசைகள் முறுக்கி, முதுகு விடைத்து, பிருஷ்டம் இறுக்கி, தொடைகள் அழுந்தி, பற்கள் கடித்து, கண்கள் நெறிய மிகுந்த வேகத்தோடு ஒருவரை ஒருவர் தள்ள முயற்சித்தது பெரும் ஆவலை உண்டு பண்ணியது.

சட்டென்று விலகி ஆச்சாமரம் போன்ற தன் கைகளால் பீமன் ஜராசந்தன் முகத்தில் அடித்தான். ஏதோ துணியால் அடித்தது போன்று அந்த அடியை வாங்கிக் கொண்டு துடைத்து ஜராசந்தனும் பீமனை பதிலுக்கு அடித்தான். இடுப்பை இறுக்கி கீழே போட்டான். கீழே போட்ட அதே க்ஷணத்தில் பீமன் அவனை மல்லாக்க கிடத்தினான். பதிலுக்கு ஜராசந்தனும் அதே வேகத்தில் பீமனை மல்லாக்க கிடத்த, படேர் படேர் என்று மேடை அதிர அவர்கள் விழுந்து, விழுந்து எழுந்தார்கள்.

பொது ஜனங்கள் அப்பேர்ப்பட்ட உக்கிரமான யுத்தத்தை பார்த்ததில்லை என்பதால் மிகுந்த பயத்தோடு கூச்சலிட்டார்கள். வீரர்கள் பல் கடித்து ஆவேசமானார்கள். மல்லர்கள் கொல்லு கொல்லு என்று உற்சாகமூட்டினார்கள். கிருஷ்ணரும், அர்ஜுனனும் அசையாது மல்யுத்தத்தின் வேகத்தை கவனித்துக் கொண்டிருந்தார்கள். கடும் மழையால் குளத்திலுள்ள மலர்களெல்லாம் சலசலக்க இரண்டு தாமரை மலர்கள் மட்டும் ஆடாது இருப்பதுபோல அந்தக் கும்பலில் அவர்கள் இரண்டு பேரும் தனித்துத் தெரிந்தார்கள். ஒரு காரியத்தின் நோக்கமும், அதை செய்தாக வேண்டிய விதிகளும் தெள்ளத் தெளிவாக மனதில் இருந்து விட்டால் ஒருவன் ஆவேசமடைய மாட்டான். அடுத்தது அடுத்தது என்று வேகமாக நகர்வான்.

இப்பொழுது கைகளை அடித்து, முறுக்கி, காலால் மிதித்து, கையாலும், காலாலும் தாக்கிக்கொண்டபடி சண்டை நடந்தது. இருவருக்கும் காயம்பட்டு ரத்தம் ஒழுகியது. ஜராசந்தனுக்கு அடி அதிகம். ஆனாலும், அவன் களைப்படையாது இருந்தான். அடி வாங்க அடி வாங்க உற்சாகம் கொண்டான். பதிலுக்கு கடும் வேகமாக தாக்கினான். ஆனால், அந்த வேகத்திலிருந்து பீமன் நகர்ந்து கொள்வதால் பல அடிகள் காற்றில் கலந்தன. பாய்வதில் மட்டுமல்லாமல் பதுங்குவதிலும் மல்யுத்தம் விதிமுறைகளைக் கொண்டது. அதுவும்

ஒரு தந்திரமாக கருதப்பட்டது. பீமன் அந்த தந்திரத்தில் நிகரற்றவனாக இருந்தான். தன்னைத் தாக்குகின்ற கையை விலக்கி நின்று போகவிட்டு, போகின்ற கையை அடித்து உதைத்தான். கடும் வலியை ஏற்படுத்தினான். அந்தக் கையை கவனிக்கின்ற நேரத்தில் முகத்தில் அடித்தான். பின் மண்டையைத் தாக்கினான். இரண்டு கைகளாலும் தலையை நசுக்கினான். அக்குளில் கைகொடுத்து சுழற்றி மூலையில் போட்டான். விலா எலும்புகள் உடையும் சத்தம் கேட்டது. கூட்டம் வாய்பொத்தி அமைதியாக பிரமை பிடித்ததுபோல பார்த்துக் கொண்டிருந்தது.

இப்பொழுது சண்டை வேறுவிதமாக மாறியது. முஷ்டியாலும், காலாலும் ஒருவரை ஒருவர் கடுமையாக தாக்கிக் கொண்டனர். தன்னைவிட வயதில் இளையவனான பீமனை யுத்தத்தின் போக்கை நிர்ணயிப்பவனாக ஜராசந்தன் பெரும் மனதுடன் அனுமதித்தான். அவன் என்ன விதமாக யுத்தம் செய்கிறானோ அதே விதமாக தானும் யுத்தத்தை நடத்தினான். அவன் முஷ்டி பலத்தால் தாக்கினால் அதே விதமாகவும், தோளோடு தோள் தாக்கினால் அதே விதமாகவும் தூக்கி அடித்து சண்டை செய்தால் அந்த விதமாகவும் தன் யுத்த தர்மத்தை வகுத்துக் கொண்டான். அதுவும் ஜராசந்தனுக்கு ஒரு கம்பீரத்தை கொடுத்தது. நீ என்ன செய்தாலும் சரி என்னை ஜெயிக்க முடியாது என்ற பயத்தை எதிராளிக்குக் கொடுத்தது.

ஆனால், பீமன் அதற்கு அசருபவனாக இல்லை. யுத்தத்தின் போக்கை அவன் எடுத்துக் கொண்டாலும், எதிராளியின் பலத்தை துல்லியமாக எடை போடுபவனாகவும், கடுமையான தாக்குதலை நடத்துபவனாகவும், தாக்குதலை விட்டு நகர்ந்து தாக்குகின்ற விதத்தையே திசை திருப்புபவனாகவும் இருந்தான். ஜராசந்தனுடைய முஷ்டி முகத்துக்கு நேரே வந்தபோது விலகி, அது தன்னை தாண்டிப் போகிற கணத்தில் மிக வேகமாக அந்த இடத்தை ரத்தம் வர தாக்கினான். அதனால் அடிக்க வேண்டிய கை அடிபடாமல், அடிக்க வேண்டிய கை அடிக்காமல் அடிபட்டது. சுழற்றி வீசிய கையை தடுத்து பொத்தென்று இழுத்து ஜராசந்தனை தரையில் விழச் செய்தான். மறுபடியும் தூக்கி அடித்தான்.

தரையில் விழுந்த ஜராசந்தனை பார்த்தவண்ணம் சட்டென்று கிருஷ்ணரை நோக்கினான். மேடையைச் சுற்றி வைக்கப்பட்டிருந்த தொட்டியில் இருந்த நாணல் புல்லை உருவி கிருஷ்ணர் நகத்தால் கீறி பிளந்தார். அந்தக் குறிப்பை கவனித்துவிட்ட பீமன் உடனே இடது காலை ஜராசந்தன் தொடைமீது வைத்து, வலது காலை திருப்பி முறுக்கி, மிகுந்த பலத்துடன் ஜராசந்தன் உடம்பை இரண்டாகப் பிய்த்துப் போட்டான். மேடை முழுவதும் ரத்தம் பொங்கி பரவியது. ஜனங்கள் வாய்விட்டு கதறினார்கள். வீரர்கள் நிலைகுத்தி நின்றார்கள். அடித்து துவைத்தல் நடக்கும்; கிழித்தெறிதல் நடக்குமா என்று அதிசயமாய்க் கலவரப்பட்டார்கள். இத்தனை வலிவா என்று நிலைகுலைந்து பார்த்தார்கள். அதிசயப்பட்டார்கள். தூக்கி மூலைக்கு ஒன்றாக அந்த உடம்பை பீமன் வீச, அந்த இரண்டு பகுதிகளும் வேகமாக வந்து ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டான்! பீமன் பயந்தான். இதென்ன வித்தை என்று கலங்கினான். தயங்கினான்.

துள்ளி எழுந்த ஜராசந்தன் பீமனை சரமாரியாக அடித்தான். பீமன் அந்த அதிசயத்தால் தன்வசமிழந்திருந்தான் என்பது தெள்ளத் தெளிவாக வேடிக்கை பார்ப்போருக்குத் தெரிந்தது.

கிருஷ்ணர் மறுபடியும் ஒரு நாணலை எடுத்து நகத்தால் கீறி இரண்டாக பிளந்தார். பீமன் பார்க்க அதை புரட்டிப் போட்டார். பீமன் புரிந்து கொண்டான். உடனே வேகமாகத் தாக்கினான். மறுபடியும் அடித்து தரையில் சாத்தினான். இப்பொழுது தொடையில் கை வைத்து வேகமாக அடித்து இரண்டாக பிய்த்து பிய்த்தை உடம்பை தலை கீழாக மாற்றிப் போட்டான். இதனால் கால் பக்கம் தலையும், தலைப்பக்கம் காலும் இருந்த உடம்பு ஒன்று சேர முடியாமல் தவித்தது. துவண்டது. அமைதியாயிற்று. ஜராசந்தன் இறந்து போனான்.

ஜராசந்தன் மகனுக்குப் பெயர் சகாதேவன். அவன் பயந்து அலறி கிருஷ்ணரிடம் தன் பொக்கிஷங்களை கொடுத்து அவரோடு சமாதானம் பேசினான். மனம் இறங்கிய கிருஷ்ணர், சகாதேவனை தன்னுடைய நண்பனாக்கிக் கொண்டார். அதனால் பீமனும், அர்ஜுனனும் அவனுக்கு மரியாதை செய்தார்கள். அவர்களும் நண்பனாகப் பார்த்தார்கள்.

தன் தந்தையிடமிருந்த மிகச் சிறந்த தேரை சகாதேவன் ஸ்ரீகிருஷ்ணருக்கு பரிசளித்தான். இரண்டு பேர் நின்று போர் செய்யும் விதமாக அகலமாகவும், உறுதியாகவும், விரைவாக செல்லும்படியாகவும் அது செய்யப்பட்டிருந்தது.

அந்தத் தேரை பல திக்குகளில் ஓட்டி அர்ஜுனனோடும், பீமனோடும் பயணம் செய்து ஸ்ரீகிருஷ்ணர் சந்தோஷப்பட்டார். அந்த தேரிலேயே ஏறி காண்டவப்ரஸ்தத்திற்கு திரும்பி வந்து தருமரிடம் ஜராசந்தன் இறந்தது தெரிவித்தார். மூவரும் செயற்கரிய காரியம் செய்து திரும்பியது கண்டு தருமபுத்திரர் மிகவும் மகிழ்ந்தார். என் பொருட்டு இவ்வளவு சிரமங்கள் எடுத்துக் கொண்டீர்களே என்று ஆனந்தத்தோடு துக்கப்பட்டார்.

ஜராசந்தனிடம் சிறைபட்ட மன்னர்கள் வரிசையாக வந்து தருமபுத்திரரை வணங்கினார்கள். ‘நீங்கள் ராஜசூய யாகம் செய்ய வேண்டிய தருணம் வந்து விட்டது. எனவே, அதற்குண்டான ஏற்பாடுகளை கவனியுங்கள்’ என்று வேண்டினார்கள். மற்ற அதிகாரிகளும் அவ்விதமே வேண்ட தருமபுத்திரர் பணிவாக மறுத்தார். “ஸ்ரீகிருஷ்ணரின்

உத்தரவு இன்றி நான் ஒருபோதும் ஒரு காரியத்தையும் செய்யேன். எனவே நான் யாகதீட்சை ஏற்றுக் கொள்வது என்பது ஸ்ரீகிருஷ்ணரின் கையில் உள்ளது. ஒருவேளை அவரே செய்ய ஆசைப்பட்டாலும் அதற்கு நான் துணையாக நிற்பேன்” என்று சொன்னார்.

ஸ்ரீகிருஷ்ணர் ஆனந்தமாக அவரை தழுவிக் கொண்டு, “உங்கள் அன்பு என்னை நெகிழச் செய்கிறது. எதையும் எனக்கு தத்தம் கொடுக்கின்ற உங்கள் பண்பு என்னை குதூகலமடைய வைக்கிறது. ராஜசூய யாகம் செய்ய இதுவே தருணம். நீங்கள் அதற்குண்டான ஏற்பாடுகளை செய்யலாம்” என்று ஸ்ரீகிருஷ்ணர் உத்தரவிட, போர் செய்வதற்காக வடக்கு பக்கம் அர்ஜுனனும், கிழக்கு பக்கம் உள்ள நாடுகளில் வெற்றி பெறுவதற்காக பீமனும், தெற்கே வெகுதூரம் வரை போவதற்காக சகாதேவனும், மேற்கே உள்ள தேசங்களை போரிட்டு வெல்வதற்காக நகுலனும் தயாரானார்கள். காண்டவப்ரஸ்தத்தில் தங்கிய தருமபுத்திரர் இந்த போர் செய்திகளை செவிமடுத்தபடி உட்கார்ந்திருந்தார்.

உயர்ந்த மலைச் சிகரங்களையும், தெளிவான நீர்த் தடாகங்களையும் கொண்டிருந்த பல தேசங்களை அர்ஜுனன் வென்றான். கடக்கவே முடியாத மேரு மலையின் அடிவாரம்வரை அவன் பயணம் செய்தான். மிக அழகான யுவதிகளும், வயதானவர்களும் நிறைந்திருந்த தேசங்களில் அவனை வரவேற்றார்கள். போர் செய்யும் எண்ணமே இல்லாமல் அர்ஜுனனுக்கு கட்டுப்படுவதாக சிலர் வரிப்பணம் கொடுத்தார்கள். தருமருடைய ஆட்சியை ஏற்றுக் கொண்டார்கள். அர்ஜுனன் அம்மாதிரி இடங்களில் தங்கி, நீராடி அங்குள்ள மனிதர்களிடம் அன்பாகப் பேசி நட்பு வளர்த்துக் கொண்டான்.

அலை பொங்கும் கடலோரம் இருக்கின்ற நகரங்களையெல்லாம் கிழக்கே பீமன் வென்றான். பீமனை எதிர்க்க வேண்டுமென்று ஆர்வத்தோடு சில மன்னர்கள் போட்டிபோட, அவன் யுத்தத்தில் இறங்கினான். யுத்தத்தின் உக்கிரத்தை தாங்க முடியாமல் அவர்கள் அலறிப், பின்வாங்க அவன் பொறுமையோடு காத்திருந்தான். அவர்கள் ரத்தினக் குவியலோடும், தங்கப் பாளங்களோடும் வந்து அவனை வணங்கி தருமபுத்திரர் ஆட்சியை ஏற்பதாகச் சொன்னார்கள். போர் செய்ய வேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்தியதாகச் சொன்னார்கள். அவர்களை இறுகத் தழுவிக் கொண்டு பீமன் அன்பு பாராட்டினான்.

தெற்கே சகாதேவன் கோதாவரி ஆற்றைத் தாண்டி திராவிட தேசம், பாண்டிய தேசம், ஸ்ரீலங்கா போன்ற இடங்களை நோக்கி நகர்ந்தான். பாண்டிய மன்னனோடு ஒரு நாள் முழுவதும் சண்டையிட்டு அவரிடமிருந்த அற்புதமான முத்துகளை பெற்றுக் கொண்டான். உலகப் புகழ்பெற்ற கிஷ்கிந்தா என்ற நகரை அடைந்து அங்கு ஆட்சி செய்கின்ற நீலன் என்பவனை அடைந்து போர் செய்ய அழைத்தான்.

“சகாதேவா உன்னை நான் அறிவேன். உனக்கு யார் துணை இருக்கிறார்கள் என்றும் எனக்குத் தெரியும். இதுவரை நீ ஜெயித்தது போதும். இதற்கு மேல் என் இடத்திற்குள் நீ பிரவேசிக்க முடியாது. எனவே திரும்பிப் போ. என்னை நீ ஜெயிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனக்கு தருமபுத்திரரோடு சண்டை இல்லை” என்று சொல்ல, சகாதேவன் மனம் மாறாமல் அவரை நோக்கி படையெடுக்க, அவனுடைய தேர்களும், அவன் வீரர்களின் ஆயுதங்களும், அவனுடைய வீரர்களுடைய உடைகளும் தீப்பற்றிக்கொண்டன. அக்னியினுடைய வீச்சை தாளமுடியாமல் சகாதேவன் அவஸ்தைப்பட்டான். எதனால் இது என்று ஆச்சரியப்பட்டான்.

நீலனுடைய மகள் சுலக்க்ஷணா. பேரழகி. அக்னிதேவன் அவளைக் கண்டதும் மதிமயங்கி அவளை மணக்க விரும்பினார். ஒரு பிராமண உருவம் தாங்கி நீலனிடம் போய் தனக்குப் பெண் தரவேண்டுமென கேட்டான். சுலக்க்ஷணாவை விரும்புவதாகச் சொன்னார். நீலன் அவரை சரியானபடி விசாரிக்க, தான் அக்னி தேவன் என்பதை ஒப்புக் கொண்டார்.

அக்னி தேவனே தன் மகளை விரும்பியது கண்டு நீலன் சந்தோஷமடைந்தான். மகளை மணமுடித்து தருவதற்கு ஒப்புதல் தந்தான். தன்னுடைய நகரை காப்பாற்ற வேண்டும் என்ற கன்னியா சுல்கத்தை பெற்றுக் கொண்டான். மகளை திருமணம் செய்வித்ததற்காக இந்த வரத்தை அக்னிதேவன் கொடுத்தார். அதனால்தான் அவன் தேசத்திற்குள் யாரும் படையெடுத்து வர முடிவதில்லை.

இந்தக் கதையை கேட்டதும் சகாதேவன் சட்டென்று தேரிலிருந்து இறங்கி, கீழே தர்ப்பையை பரப்பி அதன் மீது உட்கார்ந்து கொண்டு அக்னியை நமஸ்கரித்தான். அக்னியை குளிர்விக்கும் ஸ்தோத்திரங்கள் சொன்னான். நாங்கள் புரியும் யாகத்திற்கு நீங்கள் தடையாக இருக்கக்கூடாது என்று அக்னியை வேண்டிக் கொண்டான்.

அக்னி அவன் முன் தோன்றி, “சகாதேவா நான் உன்னை சோதித்தேன். ஒரு பொழுதும் நான் இந்த யாகத்திற்கு தடையாக இருக்க மாட்டேன். நீலன் வந்து வரிப்பணம் தருவார். வாங்கிக் கொள்” என்று சமாதானம் சொன்னார்.

பாண்டவ புத்திரர்கள் வெறும் புஜபலம் மட்டும் காட்டி மற்றவரை வசீகரிக்காமல் அன்பான பேச்சாலும், மென்மையான நடவடிக்கையாலும், சிலசமயம் பணிவினாலும் வெற்றி பெற்றார்கள். நீலன் ஓடிவந்து வரிப்பணத்தை கொடுத்து சகாதேவனை ஸ்நேகமாக்கிக் கொண்டான். தன் இடம் தாண்டி தென்திசை போவதற்கு வழி சொன்னான்.

தென்திசை கடற்கரையோரம் சகாதேவன் முகாமிட்டு எப்படிக் கடப்பது என்று யோசித்துக் கொண்டிருக்க, சகோதரன் மகன் கடோத்கஜனை நினைத்தார். கடோத்கஜன் மிகப் பெரிய உருவம் உடையவன். மனோவேகம், வாயுவேகமாக இடங்களை தாண்டிக் கொண்டு போக பலம் உள்ளவன். பீமனுடைய அம்சமாக பூமியில் பிறந்தவன். சிற்றப்பன் தன்னை நினைக்கிறான் என்று தெரிந்ததும் உடனே நேரே வந்து கைகட்டி நின்று எனக்கு

என்ன வேலை உத்தரவிடுங்கள் என்று பணிவாகப் பேசினான்.

புத்திரபாசம் பெருக்கெடுத்தோட சகாதேவன் தன் அண்ணன் மகனை வாரி எடுத்து நெற்றியில் முத்தமிட்டார். கடல் கடந்து விபீஷணனிடம் போய் தருமபுத்திரரின் காரியத்தைச் சொல்லி, அவருக்கு அடங்கியதாக வரிப்பணம் வாங்கி வா என்று சகாதேவன் உத்தரவிட, அப்படியே கடல் கடந்து அவன் இலங்கைக்கு போய் இறங்கி அங்குள்ள கோட்டை கொத்தளங்களுக்குள் நுழைந்து தன் வருகையை தெரிவித்தான்.

விபீஷணன் உடனே அவனை சந்தித்து, தருமருடைய காரியம் அறிவேன். நீங்களெல்லாம் யார் என்றும் தெரியும். எந்த அவதாரத்தின் கீழ் நிற்கிறீர்கள் என்பதையும் அறிவேன். இதோ என்னுடைய வரிப்பணம். தருமருடைய காரியம் தங்கு தடையின்றி நிறைவேறும் என்று சொல் என்று ஆசிர்வதித்தான்.

பலம் காட்டி போரிட்ட மன்னரும், பணிவாக நின்ற மன்னரும் தாண்டி விபீஷணைப் போல எங்கே, என்ன, எப்படி நடக்கிறது என்பதை புரிந்துகொண்டு அதற்கேற்றார்போல் நடந்த மன்னர்களும் பரத காண்டத்தில் உண்டு.

மேற்கே போன நகுலன் அங்குள்ள சகல தேசங்களையும் வென்று பாலைவனப் பகுதிகளில் உள்ள மன்னர்களிடம் வரிப்பணம் பெற்று தருமரிடம் சமர்ப்பித்தான். சகல தேசங்களிலும் உள்ள மன்னர்களை ஜெயித்தாகி விட்டது என்று தெரிந்து தருமபுத்திரர் ராஜசூய யாகத்திற்குத் தயாரானார்.

வேள்வி செய்யக்கூடிய ஆயிரக்கணக்கான அந்தணர்கள் வரவழைக்கப்பட்டனர். மன்னர்கள் ஒன்று சூழ்ந்தனர். யாரும் கட்டளையிடாமலே அவரவர் ஒவ்வொரு வேலையை எடுத்துக் கொண்டார்கள். துரோணர், துருபதர், பீஷ்மர் உட்பட துரியோதனனும் அவனுடைய மகன்களும், மகாரதியான கர்ணனும் வந்து சேர்ந்தார்கள்.

துரியோதனன் மன்னர்கள் பரிசுகளை வாங்கி அந்த பொக்கிஷங்களை சேர்க்கும் வேலையை மேற்கொண்டார். அந்தணர்களை உபசரிப்பது, மன்னர்களை வரவேற்பது, நல்ல தின்பண்டங்கள் செய்வது, சகலருக்கும் உணவளிப்பது என்று பொறுப்புகளை எடுத்துக் கொண்டார்கள். பெரும் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. தங்குவதற்காக தனித்தனி வீடுகள் எழுப்பப்பட்டன. பாண்டவப்ரஸ்தமே ராஜசூய யாகத்தை செய்வதற்கு முழு முனைப்போடு இறங்கியது.

ஆறுவிதமான அக்னிகள் வளர்த்து அவற்றின் மூலம் தேவர்களை தருமபுத்திரர் திருப்தி செய்தார். அந்தணர்களுக்கு பொன்னும், பொருளும் தானம் அளித்து, வந்தவர்களுக்கு பரிசுகள் அளித்து எல்லோரையும் கௌரவப்படுத்தினார். நாலாபக்கத்திலிருந்தும் செல்வம் திரட்டிக் கொண்டு வந்து ஒரு இடத்தில் வைத்து, அதை மறுபடியும் நாலாபக்கமும் பரிமாறுகின்ற ஒரு முக்கியமான காரியமாக அந்த ராஜசூய யாகம் இருந்தது.

தென்திசை முடித்து வடதிசை போயிற்று. வடதிசை ரத்தினங்கள் மேற்குதிசை போயின. மேற்குதிசை தங்கங்கள் கிழக்குதிசை வந்தன. கிழக்குதிசை தந்தங்களும், மரக்கட்டில்களும் சகல பக்கமும் பரவின. அவரவர்க்கு கிடைத்த பரிசை விருப்பத்தோடும், வியப்போடும், மன்னர்களும், மற்றவர்களும் சோதித்துக் கொண்டிருந்தார்கள். திருப்தியடையாதவர் யாரும் இல்லை என்ற நிலை உண்டாயிற்று. எல்லோர் மனதிலும் சந்தோஷம் இருந்தது. எல்லோர் மனதிலும் நிம்மதி இருந்தது. எல்லோரிடமும் போதும் என்ற நிறைவு இருந்தது. எல்லோரிடமும் அமைதி இருந்தது.

ஸ்ரீகிருஷ்ணர், வந்திருந்த பிராமணர்களின் காலை கழுவி அந்த ஜலத்தை தன் தலையில் தெளித்துக் கொள்ளும் காரியத்தை சிறிதும் பிழறாது செய்து கொண்டிருந்தார். எல்லாம் வல்ல அவரே அவ்விதம் செய்தது கண்டு மற்றவர்களும் ஒருவருக்கொருவர் பணிவாகவும், பிரியமாகவும் நடந்து கொண்டார்கள். பேசிக் கொண்டார்கள்.

ஜராசந்தன் வதத்திற்குப் பிறகு மிகப் பெரிய அமைதியை காண்டவப் பிரதேசமும், பரதகண்டத்தின் வடக்குப் பகுதியும் அனுபவித்தன. புயலுக்குப் பின் அமைதி என்பது உண்மையாயின் இந்த அமைதிக்குப் பிறகு புயலும் வரும் என்பதுதானே உலக வழக்கம்? வட்டம்தானே உலக வாழ்க்கை! தருமபுத்திரரின் யாகம் ஜனங்கள் மத்தியில் அமைதியை, நிம்மதியை, திருப்தியை கொடுத்தது. அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கு ஏதுவாக மக்கள் அந்த அமைதியை, சந்தோஷத்தை அனுபவித்தார்கள். நெடுநாள் சந்தோஷமாக இருக்க யாரால் முடியும்? மனிதர்களுக்கு அது இயலாத விஷயம்?

மகாபாரதத்தில் ஆதிபர்வம் இத்துடன் நிறைவுபெறுகிறது.

(தொடரும்)

> “ஒரு காரியத்தின் நோக்கமும், அதை செய்தாக வேண்டிய விதிகளும் தெள்ளத் தெளிவாக மனதில் இருந்து விட்டால் ஒருவன் ஆவேசமடைய மாட்டான். அடுத்தது அடுத்தது என்று வேகமாக நகர்வான்.”

மகாபாரதம்

34

முதல் மரியாதைக்குரியவர் கிருஷ்ணனன்றி வேறு யார்?

யாருக்கு அர்க்யம் என்ற பேச்சு ராஜசூய யாகம் ஆரம்பிக்கும் தருமபுத்திரர் சபையில் எழுந்தது. சபை நிறைந்திருந்தது. மன்னர்களும், மந்திரிகளும், அறிவாளிகளும், வேதம் அறிந்த அந்தணர்களும், கையில் ரட்சை தரித்த தொழில் விற்பன்னர்களும், பஞ்சபாண்டவர்களுக்கு நெருங்கிய, தொலைதூர உறவினர்களும், முதன் முதலாக நடக்கின்ற அந்த சபைக்கு வருகை தந்திருந்தார்கள். அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து சபையின் நடவடிக்கைகளை கவனித்தார்கள்.

இன்னும் இடம் கொள்ளும் என்பது போல் தான் அந்த சபை இருந்தது. எங்கிருந்து பார்த்தாலும் எல்லோருடைய இருப்பும் தெரிந்தன. நடவடிக்கைகளை தெளிவாக கவனிக்க முடிந்தது. சாதாரணமாக பேசினாலே மிகத் தெளிவாக சப்தம் காதில் விழுந்தது. சற்று உரத்துப் பேசினால் மிக ஸ்பஷ்டமாக இருந்தது. உரத்து பேச வேண்டிய அவசியம் இல்லாதபடிக்கு சபையில் உள்ளோர் மிருதுவான வாக்கியங்களை மெல்லிய குரலில் பேசினார்கள்.

அபிஷேசனிய என்கிற ஒரு விஷயம் சபையில் நடக்கத் தயாரானது. வந்தவரை கையில் நீர் கொடுத்து வரவேற்கின்ற ஒரு நிகழ்ச்சி. அழைத்து வந்திருந்தாலும், விருப்பப்பட்டு வந்திருந்தாலும் அங்கு பிரிவினை இல்லை. எல்லோருமே மரியாதையுடன் நடத்தப்பட வேண்டியவர்கள். வருக வருக என்று சொல்லால் மட்டும் சொல்லாமல், கை கூப்பி ஆனால், சிரம் தாழ்த்தாமல் மெல்லிய ஒரு சடங்கோடு செய்வதே இங்கு முக்கியம்.

ஆனால், இது எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும், யாரை முதலில் வரவேற்க வேண்டும், எவருக்கு முதல் அர்க்யம், யாருக்கு முதல் வரவேற்பு என்பது இங்கே முக்கியமானது. இந்த சபையில் யார் முக்கியமோ, யார் பெரியவரோ, எவர் கொண்டாடப்பட வேண்டுமோ அவரைத்தான் முதலில் தேர்ந்தெடுத்து வருக வருக என்று சொல்லி கையில் அர்க்யம் கொடுப்பார்கள். வழங்கப்பட்டவர்கள் எழுந்திருந்து சபைக்கும், மன்னருக்கும் வணக்கம் சொல்லி இந்த வரவேற்பு, சந்தோஷம் என்றும், வந்ததற்கு பெருமையாக இருக்கிறது என்றும் சில வார்த்தைகள் சொல்வார். இது சடங்கு எனினும் இதில் யாருக்கு முதல் மரியாதை என்கிற நியமம் தனி முக்கியத்துவம் பெற்றிருந்தது.

"வரவேற்க ஆரம்பிக்கலாம்."

மன்னர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். யாருக்கு முதலில் என்பதில் தருமபுத்திரருக்கு சந்தேகமில்லை. ஆனால், தானாக சொல்லாது தன்னைக் காட்டிலும் வயதிலும், அனுபவத்திலும், அந்தஸ்திலும் யார் பெரியவரோ அவர் சொல்லி அவர் வழிகாட்ட நடந்தால் உத்தமமாக இருக்கும் என்று கருதி மௌனமாக இருந்தார். பெரியோர்கள் சொல்படி, அவர்கள் ஆசிர்வாதத்தின்பொருட்டு நடந்தது என்று அந்த நிகழ்ச்சியை நடத்த விரும்பினார். தான் அரசன், தன் விருப்பம் என்று திமிராக இல்லாது இணக்கமாக இருக்க ஆசைப்பட்டார். ஆனால், உள்ளுக்குள் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்ற தெளிவு அவருக்கு அழுத்தமாக இருந்தது.

அந்த சபைக்கு நாரதரும் வந்திருந்தார். சுற்றுமுற்றும் அத்தனை அரசர்கள் முகத்தையும் பார்த்தார். 'அடடே, பரதகண்டத்தின் அத்தனை அரசர்களும் வந்துவிட்டார்களே ! எதற்காக நாராயணர் இங்கு அவதரித்திருக்கிறாரோ அந்த விஷயம் இங்கு நடைபெறப் போகிறது. நாராயணர் தேவலோகத்தில் இருந்த உங்களிடம், 'நீங்கள் எல்லோரும் பரதகண்டத்தில் அரசர்களாக பிறப்பீர்கள். ஒருவரை ஒருவர் கொன்று உய்வடைவீர்கள். ஒரு இனம் தான்தோன்றியாய் தலைக்கர்வம் பிடித்து ஆடாமல் இருந்து அமைதியாக இருக்க நமக்கு முன்னுதாரணமாக இருக்கும். எனவே, எந்தவிதமான பாத்திரங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களோ அவ்விதம் இருங்கள். எனக்கு இணக்கமாகவோ, எதிராகவோ இருக்கலாம். இரண்டுமே என்னை சந்தோஷப்படுத்தும்' என்று சொல்லியிருந்தார். 'அப்படி அவர் சொல்ல கேட்டவர்களே இந்த சபையில் அமர்ந்திருக்கிறார்கள்' என்று அவருக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. இது அதி சூட்சுமமான விஷயம். உடன் இருப்பவர்களுக்கு இது தெரியாது. எல்லா உலகும் சுற்றுகிறவரும், எல்லா காலங்களும் முழுமையாக அறிந்தவருமான நாரதர் இதைப் புரிந்து கொண்டார்.

ஆக, மிகப் பெரிய மகாபாரதப் போரில் கலந்து கொள்ளப் போகிறவர்கள் அத்தனைபேரும் வந்துவிட்டார்கள். அத்தனை பேரும் இங்கு வந்ததினாலேயே இந்த இடம் கலகம் நடக்கக்கூடிய இடமாக மாறும். ஒரு சண்டை வரத்தான் செய்யும். அபிப்ராயங்கள் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதைவிட்டு, நீ சரி, நான் சரி என்ற பேதங்கள் எழும். ஒருவரை ஒருவர் இழிவுபடுத்திக்கொள்ள நேரும். க்ஷத்திரியர்கள் பரஸ்பரம் இழிவுபடுத்திக் கொள்ள தயங்க மாட்டார்கள். உடம்பின் வலிவு அப்படி இழிவுபடுத்த வைக்கும். இழிவுபடுத்தியது போலவே இழிவுபடுத்தியதை தாங்கவும் க்ஷத்திரியர்களால் முடியாது. அதற்கு வாய் வார்த்தையாக பதில் மட்டும் இல்லாது முஷ்டியை உயர்த்திக் காட்டுவார்கள். தொலைவில் இருந்தாலே அபிப்ராயங்கள் சொல்லி சண்டை போட்டவர்கள் எதிரெதிரே அமர்ந்தால் அலட்டாமலா இருப்பார்கள்? வெகுநிச்சயம் இங்கு கலகம் நடக்கப் போகிறது என்பதை நாரதர் புரிந்து கொண்டார்.

பகவான் நாராயணர் வைகுந்தத்தில் தன்னை சுற்றியிருந்த தேவர்களை, நீங்கள் தர்மத்தின் பொருட்டு கீழே போய் மன்னர்களாகப் பிறந்து

ஒருவரை ஒருவர் கொன்று இங்கு வந்து சேருங்கள். க்ஷத்திரிய தர்மம் தலைவிரித்தாடுகிறது. அதிகார ஆணவத்தில் அலைமோதுகிறது. சாதாரண பொது ஜனங்களை நிம்மதியில்லாமல் வைக்கிறது. பூமியினுடைய அழுகை சத்தம் அதிகமாகிறது. எனவே, அங்கு அமைதி ஏற்படுத்த நாம் அங்குபோய் ஒரு நாடகம் நடத்துவோம் என்று சொன்னார். அங்கு வாழ்ந்தவரே இங்கு மன்னராக அவரவர் விருப்பப்படி பிறந்திருக்கிறார்கள். என் பொருட்டு கீழே போகிறவர்கள் எனக்கு இணக்கமாக இருந்தாலும் சரி, எதிராக இருந்தாலும் சரி எனக்கு பிரியமானவரே என்று நாராயணர் சொன்னதால் அவரவருக்கு விருப்பமான வேடங்களை தரித்துக்கொண்டு பூமிக்கு வந்திருந்தார்கள். சகல லோகங்களுக்கும் போகக்கூடியவரும், சகல காலங்களிலும் வாழக்கூடியவருமான நாரதருக்கு அதை முழுமையாக புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால், மற்றவர்கள் மாயையால் கட்டப்பட்டு, தான் ஒரு மன்னன் என்றும், மகரிஷி என்றும் அலட்டிக்கொண்டிருந்தார்கள்.

மன்னர்கள் அலட்டுவதற்கு முன்பு அந்தணர்கள் தர்மத்தின்படி செய்ய வேண்டிய நியதி இது. வேதம் சொல்லுகின்ற தர்மம் இது என்றெல்லாம் தங்களுக்குள்ளே எதிரெதிர் திசையில் உட்கார்ந்து விதண்டாவாதம் செய்து கொண்டிருந்தார்கள். ஒருவாதம் எழுப்பியதாலேயே அதற்கு பதில்மொழி சொல்லுகிறபோது அது விதண்டாவாதமாகத்தான் முடியும். மக்கள் கவனிக்கிறார்கள். மன்னர்கள் கவனிக்கிறார்கள் என்பதாலேயே உரத்த குரலில் வாதத்திற்கு எதிர்வாதம் செய்ய அந்தணர்கள் முயற்சி செய்தார்கள். இரண்டு பருந்துகள் வானில் பறந்தபடி ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு ஒரு இறைச்சித் துண்டைக் கைப்பற்றுவது போல அந்த விஷயம் நடந்தது. இறைச்சி என்பது ஒரு விஷயம். எந்த ஒரு விஷயத்தையும் தன் பக்கம் இழுத்துக் கொள்வதுதான் மனித இயல்பு. தனக்கு பசிக்கிறதா, தனக்கு அந்த இறைச்சி வேண்டுமோ என்று அந்த பருந்து என்னவில்லை. அவர் கையில் அந்த இறைச்சி இருக்கக்கூடாது. அது எனக்கு வேண்டுமென்றுதான் பருந்து பறித்துக் கொள்ளுமே தவிர பசியால் போட்டியில்லை. எதிரியின் கையில் அது இருக்கிறது என்பதுதான் அந்த உறுத்தல். அவ்விதமே அந்தணர்கள் நடந்து கொண்டார்கள்.

> “கிருஷ்ணருக்கு அர்க்யம் கொடு என்று பீஷ்மர் சொல்ல, யுதிஷ்டிரன் சரி என்று தலையசைக்க, சகாதேவன் முன்னேறி ஸ்ரீகிருஷ்ணர் முன்பு மண்டியிட்டு அவர் பாதங்களை கழுவி, கைக்கு ஜலம் கொடுத்து அதை துடைத்துவிட்டு அவர் பாதத்தில் தன் சிரம் பதிய வைத்து, கைகளை பற்றிக்கொண்டு 'வருக வருக வந்து எங்களை வாழ்த்தியருளக...' என்று பணிவுடன் வேண்டிக் கொண்டான்.”

வியாஸ பாரதத்தில் அந்தணர்களை பருந்துகள் என்கிற மிக அழகான இந்த உவமையோடு இந்த விவாதம் விவரிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி கவிநயங்களுக்கு மகாபாரதத்தில் குறைவே இல்லை.

கிருஷ்ணருக்கு அர்க்யம் கொடு என்று பீஷ்மர் சொல்ல, யுதிஷ்டிரன் சரி என்று தலையசைக்க, சகாதேவன் முன்னேறி ஸ்ரீகிருஷ்ணர் முன்பு மண்டியிட்டு அவர் பாதங்களை கழுவி, கைக்கு ஜலம் கொடுத்து அதை துடைத்துவிட்டு அவர் பாதத்தில் தன் சிரம் பதிய வைத்து, கைகளை பற்றிக்கொண்டு 'வருக வருக வந்து எங்களை வாழ்த்தியருளக...' என்று பணிவுடன் வேண்டிக் கொண்டான். ஸ்ரீகிருஷ்ணரும் மனம் நெகிழ்ந்தார். சபை குதூகலித்தது.

சேதி ராஜனான சிசுபாலன் கோபமடைந்தான். எழுந்து நின்றான். சபைக்கு நடுவே வந்தான். சகாதேவனைப் பார்த்து "என்ன தவறான காரியம் செய்கிறாய். இந்த சபையிலே பல மன்னர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேரையும் விட்டுவிட்டு மன்னனல்லாத ஒரு இடையனுக்கு வருக வருக என்று அர்க்யம் வார்க்கிறாய். அர்க்ய பூஜை செய்கிறாய். இது மன்னர்களை அவமதிப்பது போல் ஆகாதா. இந்த பீஷ்மரின் சொல்லை கேட்டா இதைச் செய்தாய். பீஷ்மர் ஒரு கிழவர். அவருக்கு அறிவு மந்தமாகிவிட்டது. தர்மம் எது என்று தெரியாமல் எப்படி இயங்குகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. உங்களைப் போல உயர்ந்த தர்மாத்மாக்கள் இப்படி தவறாக முகதாட்சண்யத்திற்காக முதல் வரவேற்பு கொடுத்தால் அக்ர பூஜை செய்தால் இது தர்மத்திற்கு ஏற்புடையதாகாது. இது இந்தத் தவறை பலர் பின்பற்ற நேரிடும். நீங்கள் இந்த சபைக்கு செய்கின்ற அவமானம்.

சரி, கிருஷ்ணனை நீ பெரியவன் என்று கருதினால் அவன் தகப்பனையல்லவா நீ கொண்டாட வேண்டும். அவன் தகப்பன் இருக்கும்போது இவனை பெரியவன் என்று கொண்டாடினால் அவன் தகப்பனை அவமானப்படுத்தியதுபோல ஆகாதா? கிருஷ்ணனை நீ ஆச்சார்யன் எனக் கொண்டால் அர்ஜுனனுக்கு வில் பிடிக்க கற்றுக் கொடுத்த துராணாச்சாரியார் உயர்ந்த ஆச்சார்யன் அல்லவா? அவருக்கு அவமானம் இழைத்ததுபோல் ஆகாதா? கிருஷ்ணரை நீங்கள் மிகப்பெரிய நண்பன் என்று கருதி இந்த அக்ர பூஜை செய்கிறீர்கள்

என்றால் உங்களுடைய மிகச் சிறந்த நண்பர் விதூர் அல்லவா? அவரால் அல்லவா நீங்கள் உய்வடைந்தீர்கள்? கிருஷ்ணரை பெரிய ரிஷி என்று நீங்கள் கொண்டால் இங்கு மிகப்பெரிய ரிஷியாக வேத வியாஸர் அமர்ந்திருக்கும்பொழுது அவரை புறக்கணித்துவிட்டு இந்த இடையனுக்கு அக்ர பூஜை செய்கிறாயே இது என்ன நியாயம்?

சாஸ்திரத்தில் நிபுணனான அஸ்வத்தாமா இங்கிருக்கும்பொழுது அவரை புறக்கணித்து விட்டு கிருஷ்ணருக்கு அர்க்யம் கொடுப்பது நியாயமா? கிருஷ்ணரை மிகப்பெரிய பலசாலி என்று கருதினாயா? துரியோதனனை மறந்து விட்டாயா, கிருபாச்சாரியாரை மறந்து விட்டாயா? இம்மாதிரி பெரும் புருஷர்களை புறக்கணித்து விட்டு வெறுமே சிரித்துக் கொண்டிருக்கின்ற இவனைப்போய் எதற்கு பூஜை செய்கிறாய்? பீஷ்மர், ருக்மி, ஏகலைவன், சல்லியன் இருக்கும் பொழுது கிருஷ்ணனை ஏன் பூஜை செய்தாய்? எல்லா பலத்தால் மன்னர்களோடு போட்டியிடும் மிகப் பெரிய வல்லமை பொருந்திய மகாரதியான கர்ணன் இருக்கும் பொழுது இவனை ஏன் கொண்டாடினாய்?

மிகப் பெரிய யாகம் செய்தவனும் அல்ல. யாகம் செய்வதற்குரிய மன்னனும் அல்ல. அப்படி இருக்கும்பொழுது ஒரு மிகப்பெரிய யாகத்திற்கு எங்களை அழைத்துவிட்டு யாகமே செய்யாத இவனை ஏன் கொண்டாடுகிறாய்? அவனைத்தான் பூஜிப்போம் என்று நீங்கள் சொல்வீர்களாயின் எங்களை அழைத்திருக்கக் கூடாது. இத்தனை மன்னர்களை அழைத்துவிட்டு அவனை கொண்டாடுவது எங்களை கூப்பிட்டு வைத்து அவமானப்படுத்துவதுபோல் இருக்கிறது. இது கொடுமையிலும் கொடுமை.

இங்கே மகாத்மா தருமபுத்திரருக்கு நாங்கள் வரிப்பணம் கொடுத்திருக்கிறோம். காரணம் பயத்தால் அல்ல. உங்களை கண்டு நடுங்கியல்ல. தர்மம் தெரிந்தவர் ஒரு யாகம் செய்கிறார். அதற்கு ஒத்துழைப்போம் என்றுதான் கொடுத்தோமே தவிர, அவர் ஒரு சாம்ராட் ஆக வேண்டுமென்று ஆசைப்பட்டோமே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை. நாங்கள் யுதிஷ்டிரருக்கு இந்த மரியாதை செய்தோம். ஆனால், பதிலுக்கு யுதிஷ்டிரர் எங்களுக்கு மரியாதை செய்யவில்லை. மாறாய் அவமானப்படுத்தியிருக்கிறார். தர்மம் தெரியாத இந்த தருமபுத்திரன் தருமத்திலிருந்து நழுவிவிட்ட பிறகு, இந்த சபை கூடியிருப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது.

சரி, இந்த கிருஷ்ணன் யார், சொந்த மாமனான கம்சனை அடித்துக் கொன்றவன். அநியாயமாக பழி தீர்த்தவன் கம்சனுடைய ராஜ்யத்தில் வளர்ந்து, கம்சனுடைய உணவை உண்டு கொழுத்து பிறகு கம்சனையே கொன்ற துராத்மா இவன்.

ஹே கிருஷ்ணா, இந்தப் பாண்டவர்கள் கோழைகள், பயம்கொள்ளிகள், ஏதோ ஒரு பயத்தின் காரணமாக உனக்கு அர்க்யம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் நீயும் வெட்கமின்றி எப்படி எடுத்துக் கொள்கிறாய்? இதற்கு யோக்கியதை இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தாயா? பெரிய யாகம் வளர்க்கிறோம். அதில் ஒரு சொட்டு நெய் எங்கோ ஒரு ஓரத்தில் விழுந்து விடுகிறது. ஒருநாய் ஓடி வந்து அந்த நெய்யை நக்கிவிட்டு தான் புண்ணியனாய் மாறியதாய் நினைத்துக் கொண்டால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது உன்னுடைய நிலைமை.

உனக்கு அர்க்யம் அளித்ததால் எங்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. ஆனால், உன்னை பாண்டவர்கள் மிகப் பெரியவனாய் உட்கார வைத்து ஏமாற்றுகிறார்கள். நீயும் ஏமாந்து போகிறாய். அலிக்கு திருமணம் செய்வதும், ஒரு குருடனுக்கு உருவை காட்டுவதும் அவர்களை கேலி செய்வதாகும். ஆஹா... இந்த ஓவியம் எத்தனை அழகாக இருக்கிறது என்று எத்தனை முறைச் சொன்னாலும் குருடனுக்கு அதை ரசிக்க முடியாது. தவிப்புதான் உண்டாகும். உனக்கு அந்த தவிப்பு உண்டாகியிருக்க வேண்டும். ஆனால், குத்துக் கல்லாய் உட்கார்ந்திருக்கிறாய்.

இந்த அக்ர பூஜையிலிருந்து ஒன்று தெரிகிறது. பீஷ்மர் என்ற கிழவர் யார் என்று தெரிந்துவிட்டது. பயம் கொள்ளிகளான இந்த பாண்டவர்கள் முகம் தெரிந்துவிட்டது. எல்லாவற்றையும் வெட்கமின்றி ஏற்றுக் கொள்ளக்கூடிய இந்த கிருஷ்ணனுடைய சுபாவம் என்னவென்று தெரிந்துவிட்டது. இங்கே இருப்பது என் மரியாதைக்கு உகந்ததாகாது" என்று கத்திவிட்டு அவன் சபையைவிட்டு வெளியேறத் துவங்கினான்.

யுதிஷ்டிரர் என்று அழைக்கப்படுகின்ற



தருமபுத்திரர் தன் ஆசனத்தைவிட்டு இறங்கி ஓடி வந்தார். இரண்டு கைகளாலும் சிசுபாலனை தடுத்துப் பிடித்துக் கொண்டார். "என்ன வார்த்தை சொல்லிவிட்டாய். என்னை அவமானப்படுத்தினாலும் தாங்கிக் கொள்வேன். ஏன் கிருஷ்ணரை அவமானப்படுத்துகிறாய்? பீஷ்மருக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்ன முதல் மனிதனை நான் இந்த சபையிலே உன் உருவாய்ப் பார்க்கிறேன். இங்கு எவரும் இதுவரை இம்மாதிரியான வார்த்தைகளை சொன்னதேயில்லை. பீஷ்மரை இழிவு படுத்தியதில்லை. உத்தமபுருஷரான பீஷ்மரை இழிவுபடுத்தியதின் மூலம் உன் யோக்கியதை என்ன என்பதை இந்த சபைக்கு தெரிவித்து விட்டாய். ஆனாலும், நீ என் விருந்தினர். உன்னை அவமானப்படுத்த விரும்பவில்லை.

"ஸ்ரீகிருஷ்ணர் யார் என்று உனக்கு தெரியாவிட்டாலும் அறிந்து கொள். கேட்டுத் தெரிந்து கொள். யது குலத்து புருஷனாகத்தான் நீ கிருஷ்ணரை பார்க்கிறாய். வேறு எதுவும் உன் கண்களுக்கு தெரியவில்லையா? வேறு எதுவும் உன் செவிகளுக்குள் படவில்லையா. அவர் புகழை பீஷ்மர் சொல்வார். அதைக் கேட்டுக் கொள். பீஷ்மர் அவர்களே, சிசுபாலனுக்கு இருந்த சந்தேகம்போல இந்த சபையில் வேறு சிலருக்கும் இருக்கலாம். உள்ளூர இருந்து வெளியே சொல்லாமல் இருக்கலாம். யார் கிருஷ்ணர் என்று தயவு செய்து இந்த சபைக்குச் சொல்லுங்கள். நானும் காது குளிர கேட்கிறேன்."

பீஷ்மரை வேண்டிக் கொண்டு யுதிஷ்டிரர் தொடர்ந்தார். "கிருஷ்ணரைப்பற்றி பீஷ்மரைத் தவிர முற்றிலும் அறிந்தோர் வேறு எவரும் இல்லை. அவர் சொல்வதை காது கொடுத்துக் கேள். உன்னைவிட வயதில் அதிகமான அனுபவத்தில் பெரிய மன்னர்களும், பெரியோர்களும் இந்த சபையிலே இருக்கிறார்கள். அவர்கள் யாரும் இந்த விஷயத்தில் எந்தக் கருத்தும் சொல்லவில்லை. அக்ரபூஜையை தடுக்கவில்லை. பீஷ்மருக்கு இருக்கின்ற ஞானம் உனக்கு இல்லை. இதனால் நீ கேட்டுத்தான் ஆக வேண்டும்" என்று கட்டளைபோல் பேசினார்.

ஜராசந்தனுக்குப் பயந்து தன் அண்ணன் பலராமரோடு ஓடி துவாரகாபுரியில் கடல் நடுவில் பட்டணம் அமைத்து தப்பித்துப்போன ஸ்ரீகிருஷ்ணர் பீமனையும், அர்ஜுனனையும் அழைத்து வந்து பீமனோடு ஜராசந்தனை கொல்வதற்கு, உண்டான சூட்சுமம் சொல்லி ஜராசந்தனை வதைத்த ஸ்ரீகிருஷ்ணர் பாண்டவருடைய சபையில் பாண்டவருடைய மேன்மையை பெரிதுபடுத்தக் கருதி அவர்கள் எளியோர்கள் அல்ல, மிக வலிமை வாய்ந்தவர்கள், வலிமை வாய்ந்த அந்த பஞ்சபாண்டவர்களுக்கு அருகே முழு பலத்தோடு நான் இருக்கிறேன் என்று சகலருக்கும் தெரிவிக்க எண்ணி சிசுபாலனை பேசவிட்டு சிசுபாலன் உளற உளற அதற்குப் பதிலாக பீஷ்மரை பேசவைத்தார். யோசித்துப் பார்க்கும்பொழுது இந்த நாடகம் வியக்க வைக்கிறது.

அந்த சபையில் மிகப் பெரிய மனிதர் பீஷ்மர். எல்லோராலும் மதிக்கப்படத் தகுந்தவர். பிரம்மச்சரியத்தால் மட்டும் அல்ல. தர்ம நியாயம் தவறாது நடப்பவர் என்று பெயர் பெற்றவர். அவருக்கு பகைவர் என்று எவரும் இல்லை. அவருக்கு எதுவும் தெரியாது என்று சொல்பவர் அந்த சபையில் இல்லை. அவர் சொன்னால் கேட்டுக் கொள்ளக் கூடியவர்களே அங்கு இருந்தார்கள். குறிப்பாய் துரியோதனனும், கர்ணனும், துச்சாதனும் அவர் சொல்வதை காது கொடுத்துக் கேட்டார்கள். அவர்களுக்கு எச்சரிக்கை விடும் வண்ணம்தான் இந்த பீஷ்மருடைய பேச்சு இருந்தது. ஒரு குறிப்பிட்டவருக்கு ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றி சொல்லி பயமுறுத்தவில்லை. தனக்குத் தெரிந்த கிருஷ்ணர் என்பதாகத்தான் பீஷ்மர் பொதுவாகப் பேசினார்.

பத்து அவதாரங்களையும் வரிசைக்கிரமமாக சொல்லி முடித்தார். பிரபஞ்சங்கள் மொத்தமும் இவருக்குள் அடக்கம். அந்த ஆதிநாராயணன்தான் ஸ்ரீ கிருஷ்ணராக அவதரித்திருக்கிறார். இவர் கூர்மமாக, மச்சமாக, வராகமாக இன்னும் பலவிதமாக அவதாரங்கள் எடுத்து ராமர் என்ற அவதாரத்தில் முடித்து ஸ்ரீகிருஷ்ணர் என்ற அவதாரத்தை எடுத்திருக்கிறார். கல்கி என்கிற அவதாரமும் எடுக்கப் போகிறார் என்று மிக மிக விஸ்தாரமாக ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றி புகழ்ந்து அந்த சபையில் பீஷ்மர் பேசினார். சபை வாய் பொத்தி கேட்டுக் கொண்டிருந்தது. கிருஷ்ணர் மலர்ந்த தாமரை மலரைப்போல மந்தகாசத்துடன் அமர்ந்திருந்தார்.

(தொடரும்)

மகாபாரதம் 35

உன்னால்தான் எங்கள் உயிர், வாழ்வு எல்லாம் அர்த்தமாகிறது!

“கிருஷ்ணரை நண்பன் என்றோ ஆச்சார்யன் என்றோ, குரு என்றோ பஞ்சபாண்டவர்கள் விதவிதமாக நினைத்துக் கொண்டிருந்தாலும் எல்லாம்வல்ல ஒரு மிகப்பெரிய சக்தியான இதுவே, நாராயண சொரூபம் என்று பஞ்சபாண்டவர்களுக்கும் புரிய வைத்தார். வார்த்தையாகவும் சொன்னார். மிகப்பெரிய ரித்விக். அதாவது, ரிஷி என்று நாங்கள் கிருஷ்ணரை கொண்டாடவில்லை. நண்பர் என்று கொண்டாடவில்லை. ஒரு மிகப்பெரிய சமூகத்திற்கு மன்னன் என்று கொண்டாடவில்லை. எங்களுக்கு பலகாலம் உதவி செய்தவர் என்று கொண்டாடவில்லை. அவரே சாட்சாத் கடவுள். அவரே எல்லாமும் என்று அடிபணிந்து தொழுது பஞ்சபாண்டவர்கள் அவரை கொண்டாடுகிறார்கள். எனவே, அவர்களுடைய சபையில் கிருஷ்ணரைப் பற்றி இழிவாகப் பேசுவதை தயவுசெய்து நிறுத்து. நீ ஒன்றும் அறியாத மூடன். அறிவிலி. ஆத்திரம் உன் கண்களை மறைக்கிறது. எதிர்த்து பேசுவதில் ஒரு சுகம் கண்டுவிட்டாய். எதிர்த்து பேசுவதாலேயே சகலத்தையும் எதிர்த்துவிட முடியும் என்கிற குறுக்குப்போக்கு உன் மனதில் படிந்துவிட்டது. இது மிகப்பெரிய விஷம். இந்த விஷம் வார்த்தைகளாக வந்து விழுகிறது. நீ என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசுவேன் என்றால் அது மிகப் பெரிய மனக்குமுறலே அன்றி, மனநோயே அன்றி வேறு எதுவும் இல்லை.”

ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றி விவரமாக பேசிவிட்டு கடுமையாக பீஷ்மர் சிசுபாலனை நிந்தித்தார். ஆனால், அவர் சொன்னதுபோல மனக்குரூரம் மிக்க, மனப்பிறழ்வு மிக்க சிசுபாலன் அவருக்கு பதில் சொல்ல எழுந்து நின்றான். அவர் சொன்னது எதுவும் அவன் காதில் ஏறவில்லை. தான் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறானோ, தன் இழிவை எப்படி வெளியே காட்ட முடியுமோ, தன் குரூரத்தை எந்த வார்த்தைகளால் கொட்ட முடியுமோ அதை அவசரமாகத் தேடிக் கொண்டிருந்தான்.

சிசுபாலனுக்கு அருகே வந்தார் ஸ்ரீகிருஷ்ணர். தன் தேஜஸால் அவர் அனைவருக்கும் நல்ல கதியை அளிக்கிறார். நீர்க்குமிழி நீரில் தோன்றி அதிலேயே உடைந்து கரைவதுபோல சராசரம் அனைத்தும் எப்போதும் நாராயணனிடமிருந்து தோன்றி அவரிடமே அடைக்கலமாகின்றன. இந்தக் கேசவனின் விஸ்வரூபத்தை கூற இயலாது.

சிசுபாலன் இடுப்பில் கை வைத்துக்கொண்டு பீஷ்மரைப் பார்த்து உரக்கக் கத்தினான். “நீ பேச்சால் பயமுறுத்துகிறாய். வயதில் பெரியவனாக இருந்தாலும் இப்படிச் சொல்வதில் வெட்கமில்லை. நபும்சகன், பேடி. ஆண்மை இல்லாத பலவீனத்தை மறைப்பதற்கு பிரம்மச்சரிய விரதம் பூண்டதாக நாடகம் ஆடுகிறாய். ஒரு படகை இன்னொரு படகோடு கட்டினால் அது தனித்தா போகும்? ஒன்றின்பின் ஒன்றுதான் போகும். பார்வையற்ற ஒருவன் பின்னால், அவன் கொம்பைப் பிடித்துக்கொண்டு பார்வையற்ற இன்னொருவன் நடந்தால் இவன் விலகியா போவான்? பின்னாலேயேதான் வருவான். முந்தியவனை நம்பித்தான் பிந்தியவன் செல்வான். இப்பொழுது பாண்டவர்கள் உன் பின்னே நடந்து வருகிறார்கள்.

“பீஷ்மா, உன்னை நீ பெரிய அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். உண்மையில் நீ மிகப்பெரிய முட்டாள். ஒரு பட்சியை பிடித்துக் கொண்டவனையும்,



“ஸ்ரீகிருஷ்ணர் சந்தோஷமானார். எந்த விதமாய் அன்பு செலுத்தினால் என்ன, எந்த பாவத்தில் இருந்தால் என்ன, உண்மைதான் முக்கியம். உண்மையாக செய்யப்படுகின்ற காரியம்தான் முக்கியம். குரு பாவமும், கடவுள் பாவமும், ஸ்நேக பாவமும் தாஸ பாவமுமாய் இருக்கின்ற இந்த பஞ்ச பாண்டவர்களை ஸ்ரீகிருஷ்ணர் கை தூக்கி ஆசீர்வதித்தார். பிறகு விடைபெற்றுப் போனார்.”

யுத்தத்திற்கு பழக்கமில்லாத ஒரு குதிரையை அடித்து ஒடுக்கியவனையும், ஒரு பெண்ணின் மார்பகத்தை இம்சைபடுத்தி சாகடித்தவனையும், இரண்டு எருக்கஞ் செடிகள் போன்ற மரங்களை பிளந்து வெளியே வந்தவனையும் பெரிய வீரன் என்று கொண்டாடுகிறாய். பீஷ்மா, சக்கரம் என்பது என்ன? உயிரற்ற உலர்ந்த மரக்கட்டைகளின் தொகுப்புதானே? அதை எட்டி உதைத்துவிட்டால் இவன் வீரனாகிவிடுவானா? இதற்கு ஒரு கொண்டாட்டமா, இதற்கு ஒரு பாராட்டா, வெட்கமாக இல்லையா? கோவர்த்தன கிரியை ஒரு கையால் தூக்கினானாம். உண்மையில் கோவர்த்தன கிரி என்பது என்ன? ஒரு கரையான் புற்று. இதை தூக்கியதற்கா கிருஷ்ணனைப் பாராட்டுகிறாய்?

“காசிராஜனுடைய கன்னிகை அம்பா, நான் வேறு ஒருவனுக்கு மனதை கொடுத்துவிட்டேன் என்று சொன்ன பிறகும் அந்த பெண்ணை இழுத்து வந்து விசித்திர வீர்யனுக்கு முன் நிறுத்தினாயே. இதைவிட கேவலமான காரியத்தை எந்த அரசனாவது செய்திருக்கிறானா? விசித்திர வீர்யனை மறுத்து அவள் அலைகழிந்து தொலைந்தாளே அந்த பாபம் உன்னை சும்மாவிடுமா? எப்பேர்ப்பட்ட பாவி நீ. பெண் மீதோ, அன்னமிட்டவன் மீதோ, அபயம் அளித்தவன் மீதோ கத்தியைச் செலுத்தக் கூடாது என்று தர்மம் உபதேசிக்கிறது. கம்சனுடைய உணவை உண்டு கம்சனையே கொன்றானே கிருஷ்ணன், இதை எந்தவிதமாக பார்க்கிறாய்? அறிவில் சிறந்தவன், உலகில் உள்ள அத்தனை உயிர்களுக்கும் ஆதாரமானவன், உலகம் அனைத்திலும் பெரிய ஈசன் என்று சொல்கிறாய். நீ சொல்வதாலேயே கிருஷ்ணன் அதை ஆமாம் என்று நம்பத் துவங்கிவிட்டான். ஆனால், என் பார்வையில் கிருஷ்ணன் சாதாரண மனிதன். நீ சொல்லியது அத்தனையும் பொய். ஒரு பாடகன் தன் பாட்டை இன்னொருத்தனுக்கு கற்பிக்க முடியாது. தான் பாடுவதுபோல இன்னொருத்தரை பாட வைக்க முடியாது. கற்றுக் கொண்டவன் தன் மனோபாவப்படிதான் பாடுவான். நீ எவ்வளவுதான் கரடியாக கத்தினாலும் இங்குள்ள மன்னர்களுக்கு கிருஷ்ணனைப் பற்றிய சந்தேகம் எழாமல் போகாது. பேச்சு சாதுர்யத்தால் எல்லோரையும் சமாதானமாக்கிவிடலாம் என்று நினைக்காதே. உனக்கு திருமணம் இல்லை, குழந்தைகள் இல்லை. புத்திரன் இல்லாதவன் எத்தனை யாகம் செய்தாலும், என்ன தவம் செய்தாலும் அவன் உத்தம லோகத்திற்கு போக முடியாது. அவன் குறையுள்ளவனாகத்தான் பூமியிலும், சொர்க்கத்திலும் காணப்படுவான்.

“ஜராசந்தன் கிருஷ்ணனை அறிவிலி என்று கருதி போரிட விரும்பவில்லை. விலக்கிவிட்டான். அதனால் பீமனை அழைத்துப் போனான். இவர்கள் நேரிடையாகப் போகாமல், யுத்தத்திற்கு நாள் குறிக்காமல், முன்கூட்டியே கூறாமல் மலைச் சிகரங்களை உடைத்தும், கோட்டைக் கதவைத் தாக்கியும், வன்முறையில் உள்ளே நுழைந்தும், அந்தணர்கள் போல காட்சி அளித்தும் ஜராசந்தனை நெருங்கினார்கள். இதைவிட அதர்மமான போர் நான் கேள்விப்பட்டதில்லை. பெண் என்ற தர்மத்தை கொன்றவன் நீ. அலி என்கிற பிறப்பு. உனக்கு எப்படி இந்த தர்மமெல்லாம் தெரியும்”

சிசுபாலனுடைய பேச்சை பீமனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவனை கொன்று போடுவதற்காக மிகுந்த கோபத்தோடும், வேகத்தோடும் எழுந்தபோது பீஷ்மர் அவனை அடக்கினார். “இது உன் வேலை அல்ல. உட்கார்” என்று அவனை அமைதிப்படுத்தினார். “சிசுபாலனைப் பற்றி உனக்குத் தெரியவில்லை. அதனால்தான் பதறுகிறாய். இவனைப் பற்றி நான் சொல்கிறேன் கேள். சேதுராஜன் தமகோஷனின் குலத்தில் இந்த சிசுபாலன் தோன்றினான். அப்போது இவனுக்கு மூன்று கண்களும், நான்கு கைகளும் இருந்தன. பிறக்கும்பொழுது இவன் குழந்தை போல் அழாது ஒரு கழுதையைப் போல் கத்தினான். பல

மாககர்ஜனையும்செய்தான். அவன் பெற்றோர், உற்றார் உறவினர் அனைவரும் மிகவும் பயந்து போனார்கள். அப்பொழுது ஒரு அசரீரி கேட்டது. 'இவன் மிகப் பெரிய பலவானாவான். இவனைப் பற்றி கவலை கொள்ளாதே. இவனை கொல்ல வேண்டியவன் பிறந்து விட்டான். ஆயுதத்தால் இவன் கொல்லப்படுவான்' என்று சொல்லிற்று. 'எந்த அசரீரி இதை தெரிவித்ததோ அந்த அசரீரியை நான் கைகூப்பி கேட்டுக் கொள்கிறேன். யாரால் இவனுக்கு மரணம் நேரும் என்று சொன்னால் சம்பந்தப்பட்டவரிடம் நான் மன்றாடுவேன்,' என்று அந்த அசரீரியை சிசுபாலனின் தாய் மன்றாடினாள்.

அசரீரி இறங்கிற்று. 'யார் மடியில் இவனை வைத்தால் இவனுடைய மற்ற இரண்டு கரங்களும், நெற்றிக்கண்ணும் அழியுமோ அவர்கள்தான் இவனுக்கு எமனாவார்கள்.' பல்வேறு மன்னர்களிடம் அவனை கொண்டு போய் காண்பித்தும், பல்வேறு மன்னர்களை வரவழைத்தும் அவனை மடியிலிட்டார்கள். ஆனால், அந்தக் குழந்தை செழிப்பாகவே இருந்தது. சிசுபாலனின் தாய் கிருஷ்ணருக்கு அத்தையாகவேண்டும். பலராமரும், அவரும் போய் அந்த அரசவையில் உட்கார, அவனை சிசுபாலன் தாய் கிருஷ்ணன் மடியில் கிடத்தினாள். சிசுபாலனின் கண் அழிந்தது. கைகள் துவண்டு விழுந்தன. சிசுபாலனின் தாய் கிருஷ்ணரின் காலை பிடித்துக் கொண்டு மன்றாடினாள். 'என் குழந்தையை கொன்றுவிடாதே. அவனுக்கு உயிர் பிச்சை கொடு' என்று கேட்டாள்.

''அத்தை ஒருவரை கொல்ல மாட்டேன் என்று வரம் கொடுப்பது எளிதல்ல. இருப்பினும் தருகிறேன். நூறுமுறை இவன் பிழையை நான் பொறுத்துக் கொள்கிறேன். நூற்றியோராவது முறை இவன் பிழை செய்வானேயானால் இவனைக் கொன்றுபோடுவேன்" என்று சொல்ல அவள் சமாதானம் அடைந்தாள்.

"பீமா, இவன் காலம் முடிவடையப் போகிறது. இவன் நாக்கில் கெட்ட சக்தி உட்கார்ந்து கொண்டிருக்கிறது. தன் மரணத்தைதானே தேடிக் கொள்கிறான். கிருஷ்ணரை நிந்திப்பதின் மூலம் அவன் மரணமடையப்போகிறான். எனவே இது உன்னுடைய இடமல்ல. அமைதியாக உட்கார்," என்று பீஷ்மர் பீமனை சமாதானப்படுத்தினார்.

பீஷ்மருடைய இந்த வார்த்தைகள் பீமனுக்கு மட்டுமல்லாமல் அங்குள்ள மன்னர்களுக்கும் கேட்டது. சிசுபாலன் சரித்திரத்தை அவர்களும் அறிந்து கொண்டார்கள். இதனால் சிசுபாலன் ஆத்திரமடைந்தான். "பீஷ்மா, நீ வலுவில்லாதவன். வெறும் வாய்சாலகன் என்பதை மறுபடியும் நிரூபிக்கிறாய். உனக்கு யாரையாவது புகழ வேண்டும். ஒவ்வொரு மன்னனும்தான் பராக்கிரமசாலி என்று சொல்வானே தவிர, அண்டை நாட்டு அரசனும், எதிரியும் பராக்கிரமசாலியென்று புகழ்ந்து கொண்டிருக்க மாட்டான், இந்த வெட்கம்கெட்ட காரியத்தை நீதான் இடையறாது செய்கிறாய். உன்னைப் பற்றி புகழ்ந்தால் நான் பொறுத்துக் கொள்வேன். ஏதோ ஒரு இடையனைப் பற்றி புகழ்ந்து பேசுவது அபத்தமாக இருக்கிறது. உனக்கு யாரையாவது புகழ வேண்டுமென்று தோன்றினால் இங்குள்ள மன்னர்கள் பலரைப் பற்றிப் பேசு. வாக்லீகர் என்கிற இந்த வங்க தேசத்து மன்னனைப் பற்றி பேசு. மகாவீரனான கர்ணனைப் பற்றி பேசு. கவச குண்டலங்களோடு பிறந்த அவனைக் கொண்டாடு. துரோணரை, விதுரரைப் பற்றிப் பேசு. அப்படியல்லாது வெறுமே இந்த இடைச் சிறுவனை பற்றி பேசிக் கொண்டிருக்காதே. உன்னை கொன்றுவிட்டு பிறகு அவர்களை கொல்கிறேன்."

கிருஷ்ணர் நிதானமாக எழுந்தார். ''சபையோர்களே இவனுடைய தாய் யது குலத்து பெண்மணி. இவனுக்கு எதிராக யதுகுலம் எந்த செயலிலும் ஈடுபடவில்லை. ஆனால், இவன் யது குலத்தை அழிக்க வேண்டுமென்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறான். நாங்கள் துவாரகையில் இல்லாத சமயம் என் தந்தைக்கு சகோதரி மகனாக இவன் இருந்தும் துவாரகைக்கு தீ வைத்தான். உக்ரசேனனின் சேனைகளை கொண்டு பாதிப்பேரை கவர்ந்து போனான். தபஸ்வியான பப்ருவின் மனைவி அலாகாபுரிக்கு சென்ற சமயம் வழியில் சௌவீர தேசம் போனபோது அவளை மோகவசமாய் அபகரித்தான். மாயையாய் தன் கருஷ ராஜ்ஜியத்தை அடைவதற்கு தவம் புரியும் தன் மாமா விசாலாவின் கன்னி பத்ராவை அபகரித்தான். அத்தையின் மகன் என்று நான் இவனை சகித்துக் கொண்டிருக்கிறேன். இத்தனை மன்னருக்கு நடுவே இவன் பேசியது நல்ல விஷயம்தான். இவன் யார், இவன் குணம் என்ன என்பது உங்களுக்கு இப்பொழுது தெளிவாக தெரிந்துவிட்டது. மிகப்பெரிய அகங்காரத்தால் இவன் என்னிடம்

துர்விகாரம் செய்ததை என்னால் மன்னிக்க முடியாது. என் முதலாம் மனைவி ருக்மிணிக்காக அவனுடைய உறவினர்களிடம் யாசகம் செய்தான். ஆனால், அவர்கள் மறுத்து விட்டார்கள். அந்த ஆத்திரம் இன்னும் இருக்கிறது. அதன் பொருட்டே இவன் என்னிடம் பகைமை பாராட்டுகிறான்."

கிருஷ்ணர் வேண்டுமென்றே இந்த ருக்மிணி விஷயத்தை சிசுபாலனுக்கு ஞாபகப்படுத்தினார் என்று தோன்றுகிறது.

கிருஷ்ணரை இடைமறித்த சிசுபாலன் உரக்கச் சிரித்தான். "எந்த புருஷனாவது தன் மனைவி மாற்றானால் வசீகரிக்கப்பட்டவள் என்று சபையில் சொல்வானா? இவன் மனைவி ருக்மிணியை நான் விரும்பினேன், காதலித்தேன் என்று ஒரு சபையில் சொல்வானா. நான் கேட்டது அவர் உறவினரிடம். நான் கேட்டதை வெளியில் சொல்வாரா. ஒரு சபையில் என்ன சொல்ல வேண்டும், என்ன சொல்லக் கூடாது என்பதுகூட தெரியாதவன். இவனுக்கா அக்ர பூஜை? இவனா ஞானவான்? இவனா அண்ட பேரண்டங்களுக்கெல்லாம் தலைவன்? சிரிப்பாக இல்லையா!"

சிசுபாலன் சிரித்து கர்ஜித்தபோது மன்னர்களில் சிலர் சிசுபாலன் பக்கமாகவும், பலர் கிருஷ்ணர் பக்கமாகவும் பேசினார்கள். சிசுபாலனை அதட்டி நிந்தித்தார்கள். கிருஷ்ணரை, ஏன் வெறுமே இருக்கிறீர்கள் என்று தூண்டி விட்டார்கள். நன்றாக இருக்கிறது சிசுபாலன் வாதம் என்று சிலர் அவன் பக்கம் சேர்ந்து கொண்டார்கள்.

‘‘என் மனைவியை நீ அவமதித்தது நூற்றியோராவது தவறு சிசுபாலா. இதோ உன்னுடைய ஆயுள் முடிந்தது" என்று சொல்லி, தன்னுடைய மனதிற்குள் மஹா சுதர்சன சக்கரத்தை நினைத்தார். அந்த சக்கரம் அவருடைய ஆள்காட்டிவிரலில் வந்து நின்று கொண்டது.

"இங்குள்ள அத்தனை மன்னர்களும் கேளுங்கள். இவன் தாய்க்கு கொடுத்த வாக்கு நிறைவேறி விட்டது. நூறு தவறுகளை நான் பொறுத்து விட்டேன். என் மனைவியை அவமதித்த நூற்றியோராவது பிழைக்காக இவனைக் கொல்லப் போகிறேன். எவனும் தன் மனைவியை இழிவுபடுத்துவதைப் பொறுத்துக் கொள்ள மாட்டான். இவனைக் கொல்ல இதுவே சரியான காரணம்" என்று சொல்லி சக்கரத்தை ஏவ, சக்கரம் அவன் கழுத்தை துண்டித்து தலை வேறு, உடம்பு வேறாகச் செய்தது. பெரிய மரம்போல சிசுபாலன் சபை நடுவே ரத்த வெள்ளமாய் விழுந்தான். உடம்பிலிருந்து ஒளி பரவி கிருஷ்ணருக்குள் புகுந்து கொண்டது. எல்லாமும் அவரே என்பதை அந்த விஷயம் உறுதி செய்தது.

மன்னர்கள் ஸ்ரீகிருஷ்ணரை நோக்கி கைகூப்பினார்கள். அவர் துதி பாடினார்கள்.

‘‘சிசுபாலனை நல்ல முறையில் தகனம் செய்யுங்கள். அவன் மகனுக்கு பட்டாபிஷேகம் செய்யுங்கள். தொடர்ந்து யாக காரியங்கள் நடக்கட்டும். இந்த ராஜஸூய யாகத்திற்கு இருந்த ஒரே ஒரு தடையும் நீங்கிவிட்டது. இனி யாகம் தொடரலாம்" என்று சொல்ல, மிக வேகமாக அந்த இடம் சுத்தம் செய்யப்பட்டு, சிசுபாலனின் உடல் தகனம் செய்யப்பட்டு அவன் மகனுக்கு பட்டாபிஷேகமும் நடந்தது.

இடையறாத பந்தி போஜனத்துடனும், குறையாத அக்னி ஜ்வாலையுடனும், நிறைவாத வேத மந்திர கோஷத்துடனும் எல்லா நேரமும் சிறப்பாக அந்த ராஜஸூய யாகம் தொடர்ந்தது.

லட்சம் பேர் உணவு உண்டதும் சங்கு ஒலிக்கப்படும். அப்படி சங்கு அடிக்கடி முழங்கிற்று! மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். சகலருக்கும் அவரவர் யோக்கியதைக்கேற்ப தான - தர்மங்கள் செய்யப்பட்டன. எல்லோரும் மனம் குளிர்ந்தவராய் அரசரிடம் விடைபெற்று காண்டவப்ரஸ்தத்தைவிட்டு கிளம்பினார்கள். சகாதேவனும், அர்ஜுனனும், பீமனும் மன்னர்களை காண்டவப்ரஸ்தத்தின் எல்லைவரை கொண்டு போய் விடை கொடுத்தார்கள். எவ்வளவு மரியாதையாக வரவேற்றார்களோ அதேவிதமான மரியாதையுடன் மன்னர்களுக்கு அருகே நடந்து அவர்கள் வருகைப் பற்றி புகழ்ந்து, குளிர்ந்து, இதமாகப் பேசி அவர்களை வாயாற புகழ்ந்து நன்றி சொல்லி ஊருக்கு திருப்பி அனுப்பினார்கள். சிசுபாலன் விஷயம் பற்றி யாரும் பேசவேயில்லை. அது ஒரு தவறு என்பதாக அமைதியாக இருந்தார்கள். அந்த தவறைப் பற்றி பேசுவானேன் என்று புறக்கணித்தார்கள்.

ஸ்ரீகிருஷ்ணருக்கும் விடை கொடுக்க எல்லோரும் நகர எல்லைக்குப்போய் நின்று அவருக்கு பணிந்து நின்று விடை கொடுத்தார்கள். "உன்னால்தான் இது நடந்தது. நீ இல்லாமல் நாங்கள் இல்லை. உன்னால்தான் எங்களுடைய உயிர், வாழ்வு எல்லாம் அர்த்தமாகிறது. உன்னால்தான் எல்லாவித மரியாதையும் எங்களுக்கு கிடைக்கிறது. சகல நேரமும் நீ எங்கிருந்தாலும் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறோம் கிருஷ்ணா. என்னையும் அவ்விதமே நினைத்துக் கொள்ள வேண்டும். என் சகோதரர்களை நீ ஆசீர்வதிக்க வேண்டும்," என்று பணிவாக தருமபுத்திரர் கேட்டுக் கொண்டார்.

கிடைத்தற்கரிய நண்பனின் கையை பிடித்துக் கொண்டு மிகவும் வாஞ்சை

யோடு எந்தப்பேச்சும் எழாமல் அர்ஜுனன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தான். பீமன் கைகட்டி ஒரு குருவை பணிவுடன் நோக்குவதுபோல அன்பும், வாத்சல்யமும் கலந்து உடம்பை குறுக்கி அவருக்கு அருகே நின்று கொண்டிருந்தான். கடவுளைப் பார்ப்பதுபோல நகுல-சகாதேவன் கூப்பிய கைகளை பிரிக்காமல் அவரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீகிருஷ்ணர் சந்தோஷமானார். எந்தவிதமாய் அன்புசெலுத்தினால் என்ன, எந்த பாவத்தில் இருந்தால் என்ன, உண்மைதான் முக்கியம். உண்மையாக செய்யப்படுகின்ற காரியம்தான் முக்கியம். குரு பாவமும், கடவுள் பாவமும், ஸ்நேக பாவமும் தாஸ பாவமுமாய் இருக்கின்ற இந்த பஞ்ச பாண்டவர்களை ஸ்ரீகிருஷ்ணர் கை தூக்கி ஆசீர்வதித்தார். பிறகு விடைபெற்றுப் போனார்.

துரியோதனனும், கர்ணனும் மட்டுமே ராஜ சபையில் மீதமிருந்தார்கள். அவர்கள் இன்னும் விடைபெறவில்லை. பகவான் வியாஸர் தன் சீடர்களோடு அரண்மனைக்கு வெளியே தருமபுத்திரருக்காக காத்துக்கொண்டிருந்தார். அவரை ஆசீர்வதித்து விட்டுப்போக அங்கு அமர்ந்திருந்தார். தருமபுத்திரர் வந்ததும் அவரை ஆலிங்கனம் செய்து கொண்டார். உச்சியில் கை வைத்து ஆசீர்வதித்தார்.

“ஏன் இன்னும் உன் முகம் கலக்கமாக இருக்கிறது? இவ்வளவு பெரிய ராஜசூய யாகத்தை அமைதியாக செய்து முடித்தாய். ஆனாலும் உன் கண்களில் சந்தோஷம் இல்லையே. என்ன காரணம்?” என்று கேட்டார்.

“பீஷ்மர் பேசியதும், சிசுபாலன் வதமும் என் மனதிலிருந்து வடியவில்லை. இவ்வளவு தெளிவாகச் சொல்லியும் சிசுபாலன் போன்றவர்கள் ஸ்ரீகிருஷ்ணரை ஏன் நம்ப மறுக்கிறார்கள் என்று புரியவில்லை. சிசுபாலன் மட்டும்தானா இல்லை இன்னும் இருக்கிறார்களா என்ற கேள்வி இருக்கிறது. வெளியே சொல்லாமல் உள்ளுக்குள்ளே கிருஷ்ணரைக் கண்டு பொறாமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ என்ற கவலை வருகிறது. என்ன விதமாகச் சொல்லி கிருஷ்ணரை மன்னர்களுக்கு அறிமுகப்படுத்துவது என்ற கவலை வருகிறது.”



“தருமபுத்திரா அது உன்னுடைய வேலை அல்ல. காலத்தினுடைய வேலை. காலம் மிகத் தெளிவாக அதைச் செய்யும். அவர் இங்கு அவதரிப்பது க்ஷத்ரியர்களை இரண்டாகப் பிளந்து ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ள வைத்து க்ஷத்ரியர்களின் பலத்தை குறைக்க வேண்டுமென்பதற்காகத்தான். க்ஷத்ரியருடைய பலம் குறைவதற்கு ஸ்ரீகிருஷ்ணர் தூண்டுகோலாக இருப்பார். அர்ஜுனனாலும், பீமனாலும் க்ஷத்ரியர்கள் வதம் செய்யப்படுவார்கள். இன்னும் பதிமூன்று வருட காலத்தில் அந்த மிகப் பெரிய யுத்தம் நடைபெறும். துரியோதனனும், துச்சாதனனும், கர்ணனும், இன்னும் உன் பல சகோதரர்களும், உன் குருவும், நீ ஆதர்சமாக கொண்டிருக்கிற பீஷ்மரும் இந்த யுத்தத்தில் மரணமடைவார்கள். அதற்கு நீங்கள்தான் காரணமாக இருப்பீர்கள். இது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விஷயம். அதற்காகவே கிருஷ்ணர் அவதாரம் ஏற்பட்டிருக்கிறது. எனவே இதைக் கொண்டு மனதில் சஞ்சலப்படாமல் என்ன நடக்க வேண்டுமோ அது நன்றாக நடந்தே தீரும் என்ற எண்ணத்தை மனதில் கொண்டு நீ வெறும் கருவியாக மட்டுமே இரு. உன்னுடைய காரியம் என்பதாக நீ சஞ்சலப்படாதே. அமைதியாக இரு. உன்னுடைய வியக்தியினால்தான் இது ஏற்படுகிறது என்று கவலை கொள்ளாதே. இதிலிருந்து விலகி இரு” என்று சூட்சுமமாகச் சொன்னார்.

தருமபுத்திரர் வணங்கினார். ஆனாலும் அவருக்கு மனம் ஆறுதல் அடையவில்லை. கடைசியில் நான்தான் காரணமா, என்னுடைய தலைமையின் கீழ் இருக்கின்ற பீமனும், அர்ஜுனனும்தான் க்ஷத்ரிய அழிவிற்குக் காரணமா? சொந்த சகோதரர்களை கொல்லப் போகிறார்களா, உறவினர்களையும், குருமார்களையும் நான் நசுக்கப் போகிறேனா, என்ன கொடுமை இது! எதற்கு இந்த அரசாட்சி, எதற்கு இந்த ராஜசபை, என்று தருமபுத்திரரின் கவலை அதிகரித்ததே தவிர குறையவேயில்லை. அவர் தன் சகோதரர்களை அழைத்தார்.

(தொடரும்)



தருமபுத்திரனை எப்படியாவது ஜெயிக்க வேண்டும்!

தருமபுத்திரர் தன் சகோதரர்களை அழைத்தார். “வியாசர் சொன்னது இதுதான். இப்படித்தான் நடக்கப் போகிறது என்று சொல்கிறார். எனக்குக் கலவரமாக இருக்கிறது. தற்கொலை செய்து கொள்ளலாமா என்று தோன்றுகிறது. எல்லாவற்றுக்கும் நானே காரணமாக இருப்பேன். என்னை முன்னிறுத்தி இது நடக்கப் போகிறது என்கிறபோது எனக்கு உயிர் வாழ்தலில் விருப்பமே இல்லை. இப்பேர்பட்ட ஒரு காரியத்தை நான் ஏன் செய்ய வேண்டும்? இதற்காக நான் ஏன் உயிர் வாழ வேண்டும் என்று தோன்றுகிறது.

“ஆனாலும், உங்களுடைய மனமறிந்து நான் அமைதியடைகிறேன். என்னைப் பிரிந்து நீங்கள் இருக்க மாட்டீர்கள். இதற்கு ஒப்புமை தரமாட்டீர்கள் என்றும் தெரியும். மேலும், தற்கொலை செய்து கொள்வது பாவமானது. வியாசர் சொன்னபடி விதி வழியே போகத்தான் பிறந்திருக்கிறோம். ஆனாலும், நான் ஒரு சபதம் எடுத்துக்கொள்ளப் போகிறேன். எவர் மனதும் புண்படாது, எவருக்கும் பேதம் ஏற்படாது, எல்லோருக்கும் இதமானவனாய், எல்லோருக்கும் அடங்கிப் போகிறவனாய், எல்லோருக்கும் சரி என்று தலையசைக்கிறவனாய் நான் இருக்கப் போகிறேன். அப்பொழுது எப்படி சண்டை வரும்? அப்பொழுது எப்படி மனப்

மகாபாரதம்

36

பிளவு ஏற்படும்? விட்டுக் கொடுக்க நான் இப்பொழுதே தயாராகிவிட்டேன். இந்த க்ஷணமே தயாராகி விட்டேன். அப்பொழுது யாருக்கும் பேதம் வராதல்லவா, யாருக்கும் அசூயை வராதல்லவா?" என்று சொல்ல,

சகோதரர்கள் எந்தப் பேச்சும் இன்றி அமைதியாக அவரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். மனதிற்குள் இருக்கின்ற புலம்பல் வெளியே வரட்டும் என்று மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னே சகலருக்கும் அனுசரணையாய் இருப்பதாய் ப்ரதிக்ஞை எடுத்துக் கொண்டார். அந்த ப்ரதிக்ஞையே போருக்கு காரணமாயிற்று.

விதி மிகவலியது என்பது, எந்த வழியில் மனிதன் போனாலும் தப்பித்துக் கொள்ள முடியாதபடி தன் வழிக்கு அது இழுக்கும் என்பது, மிகத் தெள்ளத் தெளிவாக மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

யாரிடமும் பேதமை இல்லையென்று சொல்லிவிட்டால் முடிந்துவிடுமா. யுத்தம் வராது போகுமா? அப்படி பேதமை காட்டாது சூதாட்டத்திற்கு சரி என்று சொன்னதால்தானே, வரமாட்டேன் என்று சொல்லாததால்தானே, அனுசரித்துப் போனதால்தானே, அந்த யுத்தம் நடந்தது. எது கம்பீரமான சத்தியமோ, எது அன்பு மிகுந்த ஒரு செயலோ அதுவும்கூட

யுத்தத்திற்கு காரணமாகக் கூடும். விதி வலியது. மிக வலியது. மிகமிக வலியது.

ராஜசபையின் நடுவே விட்டேத்தியாக அமர்ந்திருந்த துரியோதனனும், சகுனியும் எழுந்து நின்றார்கள். மனதிற்குள் இடையறாது ராஜசுய யாகத்தின் காட்சிகளே நிறைந்திருந்தன. சிசுபாலனின் மரணம் மெல்லியதாய் வந்துபோய் கொண்டிருந்தது. அத்தனை மன்னர்களுக்கு நடுவே ஒரு மிருகத்தை அம்பு எய்து கொல்வதுபோல மிக எளிதாக கிருஷ்ணர் கொன்று போட்டது ஆச்சரியமாக இருந்தது. ஏன் ஒருவரும் எதிர்க்கவில்லை? கிருஷ்ணருக்கு பயந்தா, சிசுபாலன் தவறு என்றா என்ற கேள்விதான் இருந்தது. பதில் வரவில்லை. அதை மறக்கடிக்கும்படி பரிமாறப்பட்ட உணவு வகைகளும், கோஷங்களும், வாழ்த்துரைகளும் மனதில் நிறைந்திருந்தன. வந்திருந்து, மன்னர்களை வரவேற்று அவர்கள் கொடுக்கும் பரிசுப் பொருட்களை வாங்கி வைக்கும் வேலையை துரியோதனன் தானே எடுத்துக் கொண்டான். எளிதாக இருக்கும் என்று நினைத்தான். வேலை அசர வைத்தது.



உலகத்தில் மிகச் சிறந்த ரத்தினங்களை அவன் தொட்டுப் பார்த்தான். பானை பானையாக முத்துகளும், தங்கக் காசுகளும், வெள்ளி பாளங்களும், அழகிய வாட்களும், கதைகளும், கவசங்களும், அலங்காரப் பொருட்களுமாய் வந்திருந்தன. வந்தவர் அத்தனை பேரும் துரியோதனனை நினைவில் வைத்து அவனையும் குசலம் விசாரித்துப் போனார்கள். நீ எப்பொழுது ராஜஸூய யாகம் செய்யப் போகிறாய் என்று சிலர் நேரிடையாகக் கேட்டார்கள். சொல்லாமல் சொன்னார்கள். தவறான வேலைக்கு தானாக வந்துவிட்டோமோ என்ற கவலை துரியோதனனுக்கு வந்தாலும் அந்த இடத்தை விட்டு நகர முடியவில்லை. மிக நீண்ட வரிசையில் மன்னர்கள் காத்திருந்தபோது இன்னும் விரைவாகத்தான் வேலை செய்யத் தோன்றியது. இந்த பரிசுப் பொருட்களை வாங்கி வைத்ததில் தான் என்ன கொண்டு வந்தோம் என்பதே மறந்து போயிற்று. எதுவுமே கொண்டு வரவில்லையோ என்றும் தோன்றியது. கிலேசமும் ஏற்பட்டது. எதனால் ஒரு மயக்க நிலையை அடைந்திருக்கிறோம். எதனால் நம்மால் தெளிவாக சிந்திக்க முடியவில்லை... துரியோதனன் நீண்ட பெருமூச்சுவிட்டு தவித்தான்.

“என்ன ஆயிற்று துரியோதனா, ஏன் அடிக்கடி பெருமூச்சு விடுகிறாய். உணவுக் கோளாறா. உடம்பில் ஏதாவது அஜீரணமா?” கவலையோடு சகுனி விசாரித்தார்.

“தருமபுத்திரர் எவ்வளவு அற்புதமாக ராஜஸூய யாகம் செய்து முடித்துவிட்டார் மாமா” என்று பேச, சகுனிக்கு எந்தப் பக்கம் கால் வைப்பது என்று தெரியவில்லை. துரியோதனன் பாராட்டாகப் பேசுகிறானா அல்லது பொறாமையில் பிதற்றுகிறானா என்று அனுமானிக்க முடியவில்லை.

“ஆமாம். மிகச் சிறப்பாக நடந்தது. இதற்கும் உன் பெருமூச்சிற்கும் என்ன சம்பந்தம்”

‘‘கவலையாக இருக்கிறது மாமா’’ துரியோதனன் எழுந்தான். நாலாபக்கமும் பார்த்தான். தோளிலிருந்த வஸ்திரத்தை சுற்றிப் போர்த்திக்கொண்டு அரண்மனையை சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம் என்று நடந்தான்.

வியாசரிடம் பேசிக் கொண்டிருந்த தர்மபுத்திரர், துரியோதனன் அங்கிருக்கிறான். எனவே அவனை கவனிக்க யாராவது போக வேண்டும் என்று சொல்லி பீமனை அனுப்பினார். பீமன் விரைவாக அரண்மனைக்கு வந்தான்.

எதிரே பெரிய தடாகம் இருந்தது. பலவண்ண மீன்கள் நகர்ந்து கொண்டிருந்தன. கீழே நீரில் மூழ்கியபடி தாமரை மொக்கு இருந்தது. கீழே பசும்புல் தழைத்திருந்தது. சற்றுகூட அசையாது அழுத்தமாக நீர் நின்றது. அட, இந்த நீரை சலனப்படுத்த வேண்டும் என்று தோன்றியது. பஞ்சகச்ச வேட்டியை மடித்துக் கொண்டு வெகுநிதானமாக நீரின் சில்லிப்பை வாங்குவதற்காக துரியோதனன் படிகளில் இறங்கி நீரில் கால் வைத்தான். அது நீர் அல்ல. தரை. தரைக்கு கீழே நீர். நீரில் மீன்கள், தாமரை மொக்குகள், பசும்புற்கள். நீருக்கு மேலே ஸ்படிகத்தில் பலகை செய்து இறுக்கமாக மூடப்பட்டிருந்தது. பார்ப்பதற்கு அசையாத நீர் போல இருந்தது. அவன் இன்னும் நடக்க தடாகம் முழுவதும் பலகையாக இருந்தது. ஆனாலும், வேட்டியைவிட பயமாக இருந்தது. அதனால் வழித்த வேட்டியோடு தடாகத்தைச் சுற்றினான். யாரோ வேலைக்காரர்கள் சிரித்தார்கள். பணிப்பெண்கள் வாய்பொத்தி சிரிப்பது கேட்டது. அவன் மெல்ல வெளியே வந்தான். இன்னும் சற்று நடந்தான். வேறு ஒரு தடாகம் இருந்தது. அதிலும் மீன்களும், நீலநிற அல்லி மொக்குகளும் இருந்தன. நீர் சலனமற்று இருந்தது. இதிலும் ஸ்படிக பலகை போட்டிருப்பார்களோ என்று வேகமாய்ப் போய் கால் வைத்தான். ஆனால் அது நீர், சலனமற்று இறுக்கமாக இருந்தது. காற்றே வராது அமைதியாக இருந்தது. தொபீரென்று இடுப்பளவு ஆழத்திற்குள் விழ, பீமன் வாய்

விட்டு சிரித்தான்.

கண்ணெதிரே நீர் என்று தெரிந்தும் இரண்டு கால்களைக் கொண்டுபோய் வைப்பதற்கு இவன் என்ன முட்டாளா என்பது போல் சிரித்தான். இடுப்புவரை துணி நனைந்தது. சகுனி கைதூக்கிவிட்டான். துரியோதனன் வெட்கித் தலைகுனிந்தான். கரை ஏறினான். இந்த முறை பணியாட்களின் சிரிப்பு சத்தம் பலமாகக் கேட்டது. எங்கு துரியோதனன் நகர்ந்தாலும் அவர்களும் ரகசியமாக தூண்களுக்குப் பின்னாலும், சுவருக்கு அப்பாலும், சாரளங்களின் வழியாகவும் அவனை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது. பணியாட்கள் ஓடி வந்து அவனுக்கு மாற்று உடை கொடுத்தார்கள்.

பலகை என்று நினைத்தேன் நீராக இருந்தது. நீர் என்று நினைத்தேன் பலகையாக இருந்தது. அவன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

“ஆமாம் மன்னா. நீங்கள் மட்டும் அல்ல, பல தேசத்து மன்னர்களும் குப்புற விழுந்திருக்கிறார்கள். உங்களுக்காவது இடுப்பளவு ஆழம். தலைவரை மூழ்கி தத்தளித்து எழுந்தவர்கள் அதிகம் பேர்” வேலைக்காரர்கள் முகம் முழுவதும் பிரகாசமான கேலிப் புன்னகையோடு சொன்னார்கள். பளீர் என்று அறைய வேண்டும்போல் இருந்தது. மாற்றான் வீட்டு வேலைக்காரனை எப்படி அறைவது. அவன் அடக்கிக் கொண்டான்.

புதிய உடையோடு வேகமாக நடந்தான். உடை மிக பொருத்தமாக இருந்தது. சரிகை வேலைப்பாடுகள் அழகாக இருந்தன. மேல் துணியும் தரப்பட்டது. எல்லாவற்றிலும் வாசனை தெளிக்கப்பட்டிருந்தது. வாசனை கோபத்தை குறைத்தது. ஒரு வழியூனூடே பெரிய தோட்டம் தெரிந்தது. வேகமாக நடந்து போக டொம்மென்று அவன் இடித்துக் கொண்டான். அது வழி அல்ல, கதவு. ஸ்படிக கதவு. பிடி கூட இல்லாது வாசற்படி போல செய்யப்பட்டிருந்தது. வேட்டியை இறுக்கிக் கொண்டு கதவினின்று பின்னடைந்தான்.

மனிதனை மனிதன் ஒட்டாது செய்வது அவனுடைய அசூயை மட்டுமே. அசூயைக்கு எளிதாக காரணம் கண்டுபிடிக்க முடியாது. தனக்கு யோக்கியதை இருக்கிறதோ, இல்லையோ ஆனால், அடுத்தவரைப் பற்றி அவர் வளர்ச்சியைப் பற்றி, அவர் நிம்மதியைப் பற்றி ஒருவர் வெகு வேகமாக அசூயை கொள்ளலாம்.

இந்தப் பொறாமை மனிதர்களை சின்னாபின்னப் படுத்திவிடும். வாழ்க்கையை தடம் புரள வைத்துவிடும். உடல் நலத்தைசீரழித்துவிடும். சிந்தனையைக்குழப்பி விட்டுவிடும். வாய்விட்டும் சிரிக்க முடியாமல், நல்ல வார்த்தை சொல்ல முடியாமல் ஒரு இனம் புரியாத வேதனையில் எப்பொழுதும் விழுந்திருக்கத் தோன்றும். அசூயை கொண்டவர்கள் தனியே இருப்பார்கள். அது அசூயையை மேலும் வளர்க்கும். ஆனால், அசூயை கொள்வதற்கு சௌகரியமாக தனிமையை தேர்ந்தெடுப்பார்கள். எப்படி அவனுக்கு இந்த வாழ்வு வந்தது என்று கூட்டத்தில் அமர்ந்து யோசிப்பதைவிட தனியே அமர்ந்து யோசிப்பார்கள்.

பாலகுமாரன்

துரியோதனன் அந்த மனநிலையில்தான் இருந்தான். எப்பொழுதும் தன்னைச் சுற்றிக் கொண்டிருக்கிற துரியோதனன் திடீரென்று காணாமல் போனதும் சகுனி கவலையடைந்தார். இங்கும் அங்குமாக எங்கிருக்கிறான் என்று தேடினார். பலபேரை விசாரித்து துரியோதனன் இருக்கும் இடத்தை அடைந்தார். துரியோதனன் அவரைத் திரும்பிப் பார்த்தான் வா என்றும் சொல்லவில்லை. போ என்றும் சொல்லவில்லை. தலை குனிந்து உட்கார்ந்து கொண்டான்.

“என்ன ஆயிற்று உனக்கு. எதற்கு நெடுமூச்செறிகிறாய்? மூச்சு நீண்டதாக இருப்பது தவறாயிற்றே. உடல்நலம் சரியில்லையென்றால் நீண்ட மூச்சு வரும். இருதயம் தவிக்கும். நுரையீரல் சிரமப்படும். அதே மாதிரி சிந்தனை சரியில்லையென்றால் மூச்சு சிரமப்படும். நுரையீரல் தவிக்கும். உடம்பு, மனம் இரண்டும் மூச்சால் பிணைக்கப்பட்டிருக்கிறது. மூச்சை சரி செய்வதால் உடல் நலம் பேண முடியும். மனநலம் பேண முடியும். இவை இரண்டும் தெரிந்திருந்தும் இப்படி நெடுமூச்சு விட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே. இதற்கு என்ன காரணம்? என்னிடம் சொல். நான் உன் மாமன் அல்லவா. வேறு யாரிடம் நீ பேச முடியும், வேறு யார் இருக்கிறார்கள் உன்னிடம் பேச? நான் இருக்கிறேன் அல்லவா. சொல்.”

ஆதுரமான வார்த்தைகள் துரியோதனனை அசைத்தன. விழியோரம் நீர் தளம்பிற்று. அவன் ஆறுதலாக மாமனை பிடித்துக் கொண்டான். அவர் தோளில் சாய்ந்தான்.

“தருமபுத்திரர் செய்த ராஜசூய யாகத்தை எண்ணித்தான் நான் தவித்துக் கொண்டிருக்கிறேன். என்ன அற்புதமான வேள்வி. எத்தனை அந்தணர்கள், எத்தனை மன்னர்கள், எவ்வளவு பெரிய சபை, சிரித்தார்களய்யா. தடுக்கி விழுந்ததும், விழுந்தது மன்னன் என்று தெரியாது வாய் பொத்தி சிரித்தார்களய்யா. அந்த பீமன் உரக்கவே சிரித்தான். பெரும் ரணத்தை அது

என் நெஞ்சில் ஏற்படுத்தியது. ஒரு விருந்தாளி வீட்டிற்கு வந்து வழுக்கி விழுந்தால் சிரிப்பவன் மனிதனா? அவர்களையெல்லாம் சிரிப்பதற்கென்றே ஏற்பாடு செய்திருக்கிறார்களா? என்னை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணமா? இதோ இந்த நேரம் நீ தடுமாறுகிறாய். நான் உட்கார்ந்து சிரிப்பேனா, ஓடிவந்து கை லாவகம் கொடுத்து உன்னை உட்கார வைக்கமாட்டேனா? அங்கிருந்து சிரிப்பது என்பது என்ன அபத்தம். பீமனுக்கு என்மீது ஆறாத கோபம். நான், நீர் என்று நினைத்து தரையில் கால் வைத்ததும், தரை என்று நீரில் கால் வைத்ததும் அவன் காத்திருந்து, பார்த்திருந்து வாய்விட்டுச் சிரித்தான். வேண்டுமென்றே சிரித்தான். எனக்கு எரிகிறது. நவத்துவாரமும் எரிகிறது. என் ஆத்திரத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. அங்கேயே பீமனை அடித்துக் கொன்றிருப்பேன். ஆனால், விருந்துக்கு வந்துவிட்டு வரவேற்றவனை அடிப்பது நியாயமாகாது. தர்மம் அவன் பக்கம் பேசும் என்று அடக்கிக் கொண்டேன்.

மாமா புரியவில்லை. எப்படி இவ்வளவு உயரத்திற்கு அவர்கள் வளர்ந்து விட்டார்கள், யாரால் வளர்ந்தார்கள்? நான் அழிக்க வேண்டிய ஒரு விஷயம் எனக்கு முன்னே பெரிதாய் கிளம்பி நிற்கிறதே! அழிக்க முடியாதபடி வளர்ந்திருக்கிறதே, உங்களுக்கு வருத்தமாக இல்லையா? எனக்கு பொறுக்கவில்லை. என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. மிகத் தந்திரமாக ஒரு அரக்கு மாளிகை செய்து கொடுத்தும், இங்குள்ளவர்கள் காட்டி கொடுத்ததால் அவர்கள் தப்பிவிட்டார்கள்.

“மாமா நான் மன்னனாக இருப்பதற்கு அருகதை உடையவன்தானா? என் எதிரி என் கண் முன்னே பிரமாண்டமாய் வளர்ந்திருக்கும்பொழுது ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறேனே! நான் மன்னன்தானா? அசூயைப்படுவது தவறு என்று தயவு செய்து எனக்கு போதிக்காதீர்கள். தன்னுடைய பகைவன் வளருவது கண்டு எந்த அரசன் மௌனமாக இருப்பான்? அப்படி மௌனமாக இருப்பது க்ஷத்திரிய குணமா, இல்லையே? அப்படியானால் என்னுடைய அசூயை சரிதானே? தருமபுத்திரரை என்னால் அழிக்க முடியுமா? எனக்கு உதவி செய்ய ஆளே இல்லையே! மாமா ஊன்றி கவனித்தால் என்னுடைய நிலைமை உங்களுக்கு புரியவரும். கண்ணில்லாத ஒரு தகப்பன் கண்ணைக் கட்டிக் கொண்ட ஒரு தாய். இவர்கள் இரண்டு பேரும் ஒரு புதல்வனுக்கு. அதுவும் மூத்த புதல்வனுக்கு எவ்வளவு பெரிய சுமை. அதுமட்டுமல்ல எனக்குப் பின்னே தொன்னூற்றொன்பது சகோதரர்களை வைத்து அவர்களையும் நீயே பாதுகாத்து வா என்று என் தலையில் சுமத்திவிட்டார்கள். ஒவ்வொன்றுக்கும் விதுரரையும், பீஷ்மரையும், துரோணரையும் அனுமதி கேட்க வேண்டும். இந்த தொந்தரவுகள் எதுவும் இல்லாமல் ஸ்ரீகிருஷ்ணருடைய வழிகாட்டல்படி அற்புதமாக இரண்டு இளைஞர்களின் துணைகொண்டு அந்த தருமபுத்திரன் பிரகாசித்திருக்கிறான். என்ன தெரியும் அவனுக்கு? ஒரு அடி தாங்குவானா? பீமனைப் போல், அர்ஜுனனைப் போல எனக்கு யாரும் துணை இல்லையே மாமா. இது விதியா? நீங்கள் ஒருவர் எனக்கு ஆதரவாக இல்லையென்றால் நான் செத்தே போயிருப்பேன். இப்பொழுதும் உங்களால் எனக்கு பெரிய உதவி எதுவும் கிடைத்துவிடாதே என்ற துக்கத்தில்தான் நான் தனியே வந்தேன். விதுரரோ, பீஷ்மரோ, துரோணரோ என்னிடம் சோறு வாங்கி தின்கின்றவர்கள் எத்தனைப் பேரோ அத்தனை பேரும் தருமபுத்திரருக்கு ஆதரவாகத்தான் பேசுகிறார்கள்.

“அந்தச்சபையில்என்னநடந்தது? பீஷ்மர், கிருஷ்ணனை தடவித் தடவி கொடுக்கிறார். கிருஷ்ணர் சிசுபாலனை நடு சபையில் வதைத்தான். ஒரு மன்னர் கூட கேட்கவில்லையே. நியாயம் பேசுகின்ற பீஷ்மரும், விதுரரும், துரோணரும், அஸ்வத்தாமனும்கூட வாய் திறக்கவேயில்லை. கிருஷ்ணர் எது செய்தாலும் சரி என்கிற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்களே. அப்படிப்பட்ட கிருஷ்ணனைத்துணையாக பாண்டவர்கள் கொண்டிருக்கிறார்களே. ஒட்டு மொத்த உலகமும் எனக்கு எதிராக அல்லவா இருக்கிறது. என்னோடு என் அரச சபையில் எனக்கு முன்னே கைகட்டி நிற்பவர்கள் எல்லோரும் தருமருக்கல்லவா மானசீக துணையாக இருக்கிறார்கள்! பாண்டவர்கள் வாழ வேண்டுமென்றல்லவா நினைக்கிறார்கள். துரியோதனன் செத்தால் சாகட்டும் என்றல்லவா சொல்கிறார்கள். நான் சாக விரும்புகின்றேன். தீயிட்டாவது, தண்ணீரில் விழுந்தாவது, மூச்சு அடக்கியாவது, சிரத்தை நானே கொய்து கொண்டாவது சாக விரும்புகின்றேன். தயவு செய்து என்னை சாக விடுங்கள். அல்லது நான் எப்படி தருமபுத்திரனை ஜெயிப்பது என்ற வழியைச் சொல்லுங்கள்.”

துரியோதனன் கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகியது. அழுகை என்பது துக்கத்தால் மட்டுமல்ல, ஆத்திரத்தாலும்

ஏற்படும். அது சுய பச்சாபத்தால் வெளிப்படுகின்ற வேதனை. தருமபுத்திரருக்கு சுமைகள் இல்லை. துரியோதனனுக்கு சுமைகள் அதிகம். கண் தெரியாத பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அவனுடைய துக்கம் என்ன என்று புரிந்து கொள்ளாத தகப்பனுக்கும், தாய்க்கும் நடுவிலே பணிவாகப் பேச வேண்டும். அவன் இருப்பு என்னவென்று புரியாத சகோதரர்களோடு அவன் ஆடு, மாடு போல் மேய்ந்து கொண்டிருக்க வேண்டும். அவர்களை சம்ரட்சணை செய்து கொள்ள வேண்டும். துரியோதனன் தன்னைப் பற்றி அதிகம் கவலைப்பட்டான்.

தன்னைப் பற்றி அவன் பட்ட கவலையே தருமபுத்திரர் மீதும், பஞ்சபாண்டவர்கள் மீதும் மிகப் பெரிய ஆத்திரமாக, பழிவாங்க வேண்டும் என்ற எண்ணமாகத் தோன்றியது. எப்படி கொல்வேன் தருமபுத்திரரை என்று மனம் அரற்றியது.

“நீ சொல்வது சரி துரியோதனா, உன் பக்கத்திலே பீஷ்மரும், விதுரரும், துரோணரும், அஸ்வத்தாமனும் இருந்தாலும் இன்றைய அர்ஜுனனுக்கு எதிரில் நிற்க முடியாது. பீமனுக்கு எதிரே நிற்க முடியாது. இவன் மிகப் பெரிய வீரனான ஜராசந்தனை அடித்து பிய்த்துக் கொன்றான். மல்யுத்தத்தில் அடித்துத் தாக்கலாம். இரண்டாக கிழிப்பது உண்டா. அப்படி செய்ய முடியுமென்றால் அவன் எப்பேர்பட்ட வீரன்! மிகப் பெரிய பலசாலியான ஜராசந்தனை இரண்டாகக் கிழிக்க முடியுமென்றால் எத்தனை வலிவு அந்த உடம்பில் இருக்க வேண்டும். அந்த வலிவுள்ள உதவி ஆள் உனக்கு இல்லை. இது ஒரு உண்மை.

“காண்டவவனத்தை எரித்து மாயாசூரனுக்கு உயிர் பிச்சை கொடுத்து அவன் மூலம் மிகப்பெரிய மாளிகை கட்டி, அக்னி கொடுத்த பல அஸ்திரங்களை தன்னிடம் வைத்துக் கொண்டு நிகரற்ற வில்லாளியாக அர்ஜுனன் வளர்ந்து விட்டான். காண்டவ வனத்தை எரிப்பதற்கு உனக்கு தோன்றியிருக்குமா? அக்னி வந்து கேட்டிருந்தால் நீ செய்திருப்பாயா? இல்லையே! கிருஷ்ணனின் ஆலோசனைப்படி அர்ஜுனன் செயல்பட்டிருக்கிறான். ஜனங்களை கொடிய மிருகங்களிடமிருந்து காப்பாற்றவும், காடு அழித்து நாடாக்கவும் பெரும் பச்சை புல்வெளி உண்டாக்கவும் அர்ஜுனனால் அந்தக் காடு அழிக்கப்பட்டது. பரதகண்டம் முழுவதும் உண்டான காடு ஜனங்கள் வசிப்பதற்குண்டான நாடாக மாறிக் கொண்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனின் மகிமை குறித்து சிசுபாலன், காது கொடுத்து கேட்கவில்லை. கண்டபடிக்கு பேசினான். தண்டிக்கப்பட்டான். அதில் வருத்தப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

“கிருஷ்ணரை உன்னாலோ, என்னாலோ, பீஷ்மராலோ, துரோணராலோ எதிர்க்க முடியாது. ஆனால், கிருஷ்ணர் நம்மை கொல்ல எந்த முயற்சியும் செய்யமாட்டார் துரியோதனா. கிருஷ்ணர் தர்மபுத்திரர் பக்கம் இருக்கும்வரை வெல்லுகின்ற வாய்ப்பு அரிது. ஆனால், அதற்காக அசட்டையாக இருந்துவிட முடியுமா? இந்த மாமாவால் உதவிக்கு ஆகாது என்று நினைத்திருக்கிறாயே, அப்படி நினைக்கக் கூடாது. உனக்கு உதவி செய்ய நான் இருக்கிறேன். உனக்கு நிச்சயம் வெற்றி வாங்கித் தருவேன். அது போர் மூலம் தான் என்பது என்ன அவசியம்? தருமபுத்திரனை சூதுக்கு அழை. அவன் சூதாட மிகவும் ஆசைப்படுவான். அதே சமயம் சூதாட அவனுக்கு தெரியவே தெரியாது. இந்த அசட்டுத்தனத்தை உபயோகப்படுத்திக் கொள்வோம். போரில் இழுத்து பல உயிர்களை நாசம் செய்வதைவிட அவனை சூதுக்கு அழைத்து அவமானப்படுத்து”.

‟நன்றாக இருக்கிறது. தருமபுத்திரர் சூதாடுவார் என்று நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். எப்பொழுதும் காய்களோடு முட்டிக் கொண்டிருப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், யார் அவரை அழைத்து வருவது? நான் அழைத்தால் சந்தேகப்படுவார்களே”

“நீ அழைக்கக்கூடாது. உனக்கு அழைக்கின்ற உரிமை இல்லை. அழைப்பதற்கு உன் தகப்பனுக்குத்தான் உரிமை, உன் தகப்பன் இருக்கும்பொழுது நீ அழைப்பது என்பது அதிகப் பிரசங்கித்தனம். உன் தகப்பனை அழைக்க வைக்க வேண்டும்”

“எப்படி?”

“நீ போய் கேள்”

‟நான் கேட்டால் ஒத்துக் கொள்ள மாட்டார் மாமா.”

‟நாம் இருவருமே போவோம். அவர் மனதை கரைப்போம்.”

“விதுரரும், பீஷ்மரும், ஒத்துக் கொள்ள மாட்டார்களே.”

“அவர்களை விலகி இருக்கும்படி உன் தகப்பனை சொல்லச் செய்வோம். விதுரரை சூதுக்கு அழைத்துவர பயன்படுத்துவோம்.”

(தொடரும்)

துரியோதனன் கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகியது. அழுகை என்பது துக்கத்தால் மட்டுமல்ல, ஆத்திரத்தாலும் ஏற்படும். அது சுய பச்சாபத்தால் வெளிப்படுகின்ற வேதனை. தருமபுத்திரருக்கு சுமைகள் இல்லை. துரியோதனனுக்கு சுமைகள் அதிகம்.

கபடம் மிக்க சூதும் ஒரு போர் போலத்தான்!

"மாமா, உள்ளே ஏதோ ஒரு நம்பிக்கை பிறக்கிறது. நிச்சயம் சூதுக்கு வருவார்களா?" என்று சகுனியை நோக்கி துரியோதனன் கேட்டான்.

''அழைக்கும்படி அழைத்தால் வருவார்கள், வந்துதான் ஆகவேண்டும். மறுத்தால் அது அவமரியாதை, மறுத்தால் அது கோழைத்தனம். 'நீ விருந்துக்கு அழைத்தாய். நாங்களெல்லாம் வந்து உன்னை கௌரவப்படுத்தினோமல்லவா? நாங்கள் அழைக்கிறோம், பெரிய சபையை நிர்ணயிக்கிறோம். அந்த சபைக்கு நீ வந்து உட்கார். எங்களோடு பேசி, உண்டு அதே சமயத்தில் சூதும் ஆடு. வரமாட்டேன் என்றால் எங்கள் கௌரவ குலத்தை அவமானப்படுத்தியது அல்லவா அது?' என்று சொல்வோம்"

சகுனி சொல்ல, துரியோதனன் முகம் மலர்ந்தான். எழுந்து இடதும், வலதுமாக நடந்தான். யோசனை செய்தான். திரும்பி மாமனை பார்த்தான். ''அற்புதமான யோசனை. அருமையான யோசனை. ஆனால், ஒரு சந்தேகம்..."

"கேள்"

"இதில் ஜெயித்து விடுவீர்களா?"

"உனக்கு வந்து உதவி செய்கிறேன் பார். எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். என் திறமையில் முதன் முதலாக சந்தேகம் கிளப்பியவன் நீதான் அதுவும் என் சூதாடும் திறமையில். பாய்ச்சிகள் இல்லாது என்னை பார்த்திருக்கிறாயா? இந்த கைகளில் எப்பொழுதுமே பாய்ச்சிகள் உண்டு. அது என் கைகளின் இன்னொரு அங்கம். நான் சொல்வதை கேட்கும். நீ ஒரு எண் சொல். போட்டு காட்டுகிறேன்."

''வேண்டாம், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். வாருங்கள். இப்பொழுதே என் தகப்பனிடம் போவோம்."

திருதராஷ்டிரன் அரண்மனைக்கு அவர்கள் படியேறினார்கள்.

"எப்படி இருக்கிறீர்கள் மன்னரே, நலமா" அன்பொழுக திருதராஷ்டிரரை சகுனி கேட்டார்.

''நலமாக இருக்கிறேன். என்ன திடீர் விஜயம்?"

''உங்கள் பிள்ளையை குறித்துதான் வந்திருக்கிறேன். அவன் ஏதோ கவலையாக இருக்கிறான். பகைவர்களை எண்ணி உள்ளுக்குள் கலவரமாக இருக்கிறான். சரியாக உண்பதில்லை. முகம் வெளிறிப் போயிருக்கிறது. உடம்பில் பொலிவு இல்லை. நடையில் தளர்ச்சி இருக்கிறது. உட்காருவதும், எழுந்திருப்பதுமான ஒரு அவஸ்தையில் இருக்கிறான். நீங்கள் நலமாக இருக்கிறீர்கள் என்பதால் உங்களிடம் சொல்கிறேன். உங்கள் பிள்ளையைப் பற்றி விசாரிக்க வேண்டாமா? எப்படி இருக்கிறான் என்று வேலையாட்களை அனுப்பி கேட்க வேண்டாமா? எதுபற்றியும் கவலையில்லாமல் இருக்கிறீர்களே, துரியோதனனைப் பற்றி கொஞ்சம் விசாரியுங்கள்."

"அப்படியா. எங்கே துரியோதனன்?"

அந்த கிழ தகப்பன் குருடன் அவசரமாக எழுந்தான். புத்திரபாசம் என்பது மிக வலிவானது. பிள்ளை நல்லவனோ, கெட்டவனோ, வலிவுடையவனோ, வலிவற்றவனோ அந்த பிள்ளையின்மீது ஒரு தகப்பனுக்கு இருக்கும் பாசம் மிகப் பெரியது.

மகாபாரதம்

37



திருதராஷ்டிரனின் பதட்டத்தை கண்டு துரியோதனன் மிகவும் சந்தோஷப்பட்டான். இங்குதான் இருக்கிறேன் என்றான். திருதராஷ்டிரன் அருகே வந்து அவனை தழுவிக் கொண்டார். முகத்தை வருடினார். தலையை வருடினார். "என்ன விஷயம்? எது குறித்து கவலை, ஏன் கவலை? ஏன் பொலிவில்லாமல் இருக்கிறாய், ஏன் அமைதியில்லாமல் இருக்கிறாய்? காரணம் சொல். உனக்கு எந்த விதத்தில் நான் உதவக்கூடும், கேள்" என்று கொஞ்சலோடும், கெஞ்சலோடும் கேட்டான்.

''செத்துப் போயிவிடலாம் போல் தோன்றுகிறது'' என்று துரியோதனன் ஆரம்பித்ததும் திருதராஷ்டிரன் திடுக்கிட்டான். அவன் கரத்தை இறுக்க பற்றிக் கொண்டான். 'அப்படியெல்லாம் செய்துவிடாதே' என்று அந்தப் பிடி துரியோதனனுக்குச் சொல்லிற்று.

"ஒரு பகைவனுடைய வளர்ச்சி கண்டு அமைதியாக இருக்க முடியுமா, தூங்க முடியுமா, பெண் போகத்தில் ஈடுபட முடியுமா, உணவு அருந்த முடியுமா, குடிக்க முடியுமா? எதுவும் செய்ய முடியாதே. எந்நேரமும் பகைவனின் சிந்தைதானே இருக்கும். அந்த அவஸ்தையில் நான் இருக்கிறேன். தருமபுத்திரருடைய பிரகாசம், அவரின் வளர்ச்சி என்னை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது. நகர்ந்து விடுவார்கள் என்றுதான் நான் அவர்களை விலக்கி வைத்தேன். மீறிவிடுவார்கள் என்றுதான் அவர்களை அடக்கி வைத்தேன். நீங்களெல்லாம் சேர்ந்து பிரித்துக் கொடுத்து விட்டீர்கள். வேறு ஒரு தேசம் என்று நிர்மாணித்து கொடுத்துவிட்டீர்கள். இப்பொழுது புஜபலத்தால் அதை விரிவாக்கிக் கொண்டிருக்கிறான். மிக அழகிய மாளிகை கட்டியிருக்கிறான். அதை வர்ணிக்க வார்த்தைகளேயில்லை. ராஜசூய யாகம். இப்படி செய்ய வேண்டும் என்று எனக்கு தோன்றிற்றா, உங்களுக்கு தோன்றிற்றா? அவனைத் தூண்டிவிட கிருஷ்ணர் இருக்கிறார். அவன் செய்கிறான். அவனுக்கு அற்புதமான சகோதரர்கள் இருக்கிறார்கள்."

''உனக்கும் இருக்கிறார்களே துரியோதனா''

"எதற்கு உபயோகம் சொல்லுங்கள்?"

"ஏன் இப்படி அலுத்துக் கொள்கிறாய்? உன் பக்கம்தானே அஸ்வத்தாமனும், துரோணரும்,விதுரரும்,பீஷ்மரும்,சல்லியனும் இருக்கிறார்கள். அப்படி இருக்க நீ ஏன் இந்த வேதனைப்படுகிறாய். எல்லாவற்றுக்கும் மேலாக உன் இனிய நண்பன் மகாரதி கர்ணன் இருக்கிறானே, என்ன கவலை, உன்னை யார் தாக்கிவிடக்கூடும், உன்னை யார் ஜெயித்துவிடக் கூடும்?"

"என்னைத் தாக்கி என்னை ஜெயிப்பது இருக்கட்டும். அவர்கள் ஜெயித்துக்கொண்டு போகிறார்களே அதை தடுக்க முடியாதா."

"அவர்கள் நமக்கு பங்காளிகள். அவர்கள் மீது எந்த கோபமும் கொள்ளக்கூடாது. அவர்கள் வெற்றி நம்முடைய வெற்றிபோலத் தான். அவர்களுடைய இனம் நம்முடைய இனம்தான். நம் இனம்தான் ஜெயித்தது என்று இருக்க வேண்டும்."

''உங்கள் சமாதானம் தேவையில்லை. அவர்கள் என் ஒத்த இனமாக இருந்தாலும் நான் எதிரியாகக் கருதுகிறேன். தருமபுத்திரரை நான் வெறுக்கிறேன்."

''என்ன செய்ய வேண்டுமென்கிறாய், போர் செய்யவா?"

"இல்லை. போர் செய்வதைவிட இன்னும் அற்புதமான காரியம் ஒன்று செய்யலாம் என்று சகுனி மாமா சொல்கிறார்."

"சகுனி எதற்கு என் பிள்ளையை தூண்டி விடுகிறாய்?"

''இல்லை. அவன் வேதனையைத் தவிர்ப்பதற்காக நான் சில உபாயங்கள் சொன்னேன். உங்களுக்கு பொறுத்தமாயின் ஏற்றுக் கொள்ளுங்கள்"

"என்ன உபாயம்?"

''தருமபுத்திரரை சூதாட அழைக்க வேண்டும்."

"சூது தவறல்லவா?"

''மன்னர்கள் சூதாடுவது விதிக்கப் பட்டிருக்கிறது. அது அவர்கள் கேளிக் கைகளில் ஒன்று. படைகளோடு போர் செய்வதுபோல தனித்த போர் விதிக்கப்பட்டிருக்கிறது. தனித்த போர் செய்வதுபோல சூதாடும் போர் மன்னர்கள் செய்துதான் ஆகவேண்டும்.'' என்றான் துரியோதனன்.

"இந்த யோசனை சகுனியால் உனக்கு சொல்லப்பட்டதா?"

''ஆமாம். என்னால்தான் சொல்லப் பட்டது. துரியோதனனை நான் சமாதானப் படுத்த வேண்டும். அது என் கடமை. அவன் எனக்கு பிரியமானவனும்கூட. துரியோதனன் தவிப்பதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது.''

"தன்னைப் போலவே தன் பிள்ளையை பாராட்டவும், கொஞ்சவும் இன்னொருவர் இருப்பது ஒரு தகப்பனுக்கு சுகமான விஷயம்தான். ஆனால், சூதாடுவது தவறாயிற்றே. மிகப்பெரிய பிரச்னைகளை கொண்டுவந்து விடுமே. தீராத பொறாமையல்லவா ஏற்படும்? உங்களுக்குள் இருக்கின்ற மனவேறுபாடு பெரிதாகி விடுமே. இதைத் தவிர்த்துவிடு. யோசனை செய் துரியோதனா," பிரியத்தோடும், வாஞ்சையோடும் திருதராஷ்டிரன் பேசினார்.

“நான் நன்றாக இருக்கவே கூடாதா? என் விருப்பம் என்று இந்த பூமியில் ஒன்றும் இருக்கக் கூடாதா? உங்கள் பேச்சை, உங்களைச் சுற்றியுள்ளோர் பேச்சை எல்லாம் கேட்டு நான் மாடுபோல் தலையாட்டிக் கொண்டிருக்கதான் வேண்டுமா? என் விருப்பம் என்று என்றாவது நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? உங்கள் கொள்கைகளைத்தான் என் தலையில் வைக்கிறீர்களே தவிர, உங்கள் நடவடிக்கைகளில்தான் என்னை ஈடுபடுத்துகிறீர்களே தவிர, எனக்கு என்ன வேண்டும் என்றோ நீங்களோ, என் தாயோ, என் சகோதரர்களோ, மற்றவர்களோ நினைத்ததே இல்லை. புத்தி சொல்வது மிக எளிது. புரிந்து கொள்வது கடினம்.”

துரியோதனன் ஆத்திரத்தோடு சீறினான். மகன் கோபம் கண்டு திருதராஷ்டிரன் பயந்தான். வேதனைப்பட்டான். தனக்கு கண் பார்வை இல்லாததை நினைத்து வருத்தப்பட்டான். எந்த விதத்திலும் உபயோகம் இல்லாமல் இருக்கிறோமே. இவனுக்கு நல்வழி காட்டத் தெரியவில்லையே என்று மனதிற்குள் நொந்து கொண்டான். அந்தக் கூச்சலை அடக்க அவருக்கு வேறு வழி தெரியவில்லை. “சரி. சூதாட நான் சம்மதிக்கிறேன். ஆனால், நான் சம்மதித்தால் போதாது. விதுரரும், பீஷ்மரும் இதற்கு ஆலோசனை செய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான் அவனை அழைக்க முடியும்.”

பிரச்னையை சற்று நேரம் தள்ளி விதுரருக்கும், பீஷ்மருக்கும் திருதராஷ்டிரன் அனுப்பினான். கண் தெரியாத ஒரு தகப்பன், பலவீனன் அப்படித்தான் செய்வான்.

“என்ன முட்டாள்தனம் இது! அரசர்கள் சூதாட அழைக்கலாம்என்பது நியாயம்தான். ஆனால், நாம் அரசர்கள் மட்டுமா. நாம் பங்காளிகள் இல்லையா? பங்காளிகளோடா சூதாடுவார்கள்? இடது கைக்கு வெற்றி, வலது கைக்கு தோல்வி என்று எங்காவது நடக்குமா? ஒரே கிளைகளிலிருந்து இரண்டு புத்திரர்கள் கிளம்பி ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டால், பகைமை பாராட்டிக் கொண்டால் வெற்றி, தோல்வி என்று பேசிக் கொண்டால் உலகம் நகைக்காமல் இருக்குமா?” விதுரர் கோபப்பட்டு பேசினார்.

திருதராஷ்டிரனுக்கு அந்த நியாயம் புரிந்தது. ஆனால், பதில் சொல்லவில்லை. பீஷ்மருக்கு ஆள் அனுப்பினார்கள். துரியோதனன் மேலும் புலம்பத் துவங்கினான். “தென் திசையிலிருந்து வடதிசை உச்சி வரை, கிழக்கிலிருந்து மேற்கு வரை அத்தனை பேரும் வந்திருந்தார்கள். பல பேருக்கு சபைக்குள் நுழைய இடமில்லை. அவர்களெல்லாம் வாசற்படியில் எப்போது இடம் கிடைக்கும் என்று காத்திருந்தார்கள். தாங்கள் கொண்டு வந்திருந்த வெகுமதிகளை வாசலிலேயே வழங்கினார்கள். தருமபுத்திரரிடம் நேரே கொண்டுபோய் கொடுக்க வேண்டாம். யாரேனும் வாங்கிக் கொள்ளுங்கள் என்று கெஞ்சினார்கள். குளிந்தன் என்கிற பிராமணன் தருமபுத்திரருக்கு மிகப்பெரிய வலம்புரி சங்கை பரிசளித்தான். அதைச் சுற்றி தங்க நாணயங்கள் ஒட்டப்பட்டிருந்தன. தங்கச் சங்கிலிகள் அலங்கரித்தன. தங்கத்தில் ஊதுகுழல் செய்யப்பட்டிருந்தது. வீசினாலே வெறும் காற்றை உள்வாங்கி மிகப்பெரிய ஒலியை எழுப்பியது. அந்த ஒலியை கேட்டு பல மன்னர்கள் காது பொத்திக்கொண்டார்கள். பலபேர் மூர்ச்சையானார்கள். கிருஷ்ணரும், சாத்யகி இன்னும் சிலரைத் தவிர மற்றவர் எல்லோரும் மயங்கி ஆசனத்தில் சரிந்து போனார்கள். நான் கூட பயந்து போனேன். அத்தகைய அற்புதமான சங்கை, ஒரு போரில் முழக்கமிடுவதற்காக வைத்திருந்த சங்கை தருமபுத்திரர் அர்ஜுனனுக்கு கொடுத்தார். அர்ஜுனன் மிகப் பிரியமாக அதை வாங்கிக் கொண்டான். கிடைத்தற்கரிய ஒரு சங்கு, மிக அழகாக அது ஒப்பனை செய்யப்பட்டிருக்கிறது என்பதை மன்னர்கள் அருகிலிருந்து பார்த்து தங்களுக்கு வேண்டும் என்ற ஆவலை கண்களின் மூலம், செய்கைகள் மூலம் வெளிப்படுத்தினார்கள். எனக்கும் அந்த சங்கை கேட்டு வாங்கிக் கொள்ளலாமா என்ற ஆசை இருந்தது. இப்படி மற்றவருக்கு ஆசை வரவழைக்கக்கூடிய அநேகம் பொருட்களை அவர்கள் மிகச் சாதாரணமாக பெற்றுக்கொண்டார்கள்.

“தானம் பெறுவது மட்டுமல்ல. வேதம் அறிந்த அந்தணர்களுக்கு, நன்கு படித்தவர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட துறையில் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு தருமபுத்திரர் வாரி வாரி வழங்கினார். பசுக்களும், குதிரைகளும், தானியங்களும், ரத்தினங்களும், தங்கப் பாளங்களும், நாணயங்களுமாக அள்ளிக் கொடுத்தார். அந்த ராஜசபை முழுவதும் ஒரே சந்தைக் கூச்சலாக இருந்தது. என்னை அது கடுமையாக ஆத்திரமூட்டிற்று.

“எனக்கு அந்த சங்கு வேண்டும். எனக்கு அந்தக் குதிரை வேண்டும். எனக்கு அந்த காளை வேண்டும். எனக்கு அந்த பசுக்கள் வேண்டும். என்னைச் சுற்றி நின்று அந்தணர்கள் புகழ் பாட வேண்டும். எனக்கு அதுபோல

சபை வேண்டும். எனக்கு அந்த தேசம் வேண்டும். நான் அதை கைப்பற்ற வேண்டும். வலிமையால், போரினால், முரட்டுத்தனத்தால் தருமபுத்திரர் கன்னத்தில் பளீரென்று அடித்து நான்தான் இந்த இடத்திற்கு சொந்தம் என்று வாள் ஊன்றி நிற்க வேண்டும். எவர் வந்தாலும் வெட்டிப் போட வேண்டும். ஆனால், எனக்கு யார் துணை இருக்கிறார்கள்? ராஜசூய யாகம் செய்ய வேண்டும் என்று என்னை ஏன் எவரும் சொல்லவில்லை? மறுபடி சொல்கிறேன். குருட்டு தகப்பன், குருட்டு தாய். கால்களில் விலங்கு போன்ற எந்த பக்கமும் நகரவொட்டாத குருமார்கள், உறவினர்கள். அதைத் தவிர என் முதுகு சுமை போன்ற சகோதரர்கள். துரியோதனன் போன்று ஒரு வேதனைமிக்க, இழிவுமிக்க, சாபம் மிகுந்த ஒரு மனிதன் இந்த உலகத்தில் பிறக்கவில்லை. பிறக்கவும் மாட்டான்.”

“தவறு தவறு. அப்படி பேசாதே.” திருதராஷ்டிரன் பதறி தவித்தான். “நீ ராஜசூய யாகம் பண்ண வேண்டும் என்று விரும்பியிருந்தால் உனக்கு துரோணரும், பீஷ்மரும், விதுரரும் நிச்சயம் உதவி செய்வார்கள்.”

“அப்படியா, என்ன முட்டாள்தனமாக பேசுகிறீர்கள்? விதுரர் எப்பொழுதுமே பாண்டவர்களுடைய நலனைத்தான் ஆதரிப்பார். ‘பாண்டவர்களை எதிர்த்து உன்னால் சண்டை செய்ய முடியாது, எனவே ராஜசூய யாகம் வேண்டாமெ’ன்றுதான் என்னை எச்சரித்திருப்பார். பீஷ்மருக்கு பெரிய தர்மதாதா என்றுநினைப்பு.உத்தமபுருஷன் என்ற நடிப்பு. சிசுபாலன் கொல்லப்பட்டபோது கண்ணனை கண்டிக்க அவருக்குத் தெரியவில்லை.மாறாய் அவன் புகழ் பாடினார். விருந்துக்கு வந்த அரசனை இன்னொருவர் வெட்டிக் கொல்கிறபோது தருமபுத்திரர் வெறுமே இருந்தார். கேட்பதற்கு நாதியே இல்லாமல் சிசுபாலன் செத்துப் போனான். இந்த ஒரு அநியாயத்தைத் தட்டிக் கேட்காதவர்களா எனக்கு ராஜசூய யாகத்திற்கு துணையாக வந்து விடுவார்கள்? துரோணரெல்லாம் காசுக்கு ஏங்குகின்ற பிராமணர். சம்பாதித்து சாப்பிடுவதற்காக ஒரு வித்தையை கற்றுக் கொண்டவர். இவரா எனக்கு துணை வந்து விடுவார்? யோசிக்க யோசிக்க எவ்வளவு அநாதையாக இருக்கிறேன் என்று எனக்குப் புரிகிறது. எனக்கு ஒரே துணை சகுனிதான். சகுனி சூதாடி தருமபுத்திரனை ஜெயிப்பேன் என்று சொல்கிறார். தருமபுத்திரரை தோற்கடிக்க வேண்டும். என் வாழ்நாளில் நான் அதை பார்க்கவேண்டும். தயவுசெய்து சூதாட்டத்திற்கு அவரை கூப்பிடுங்கள்.”



> “உன்னுடைய பெரிய தகப்பனார் உன்னுடைய சபையை கேள்விப்பட்டு அதே விதமாக மிகப் பெரிய சபையை தானும் அமைத்திருக்கிறார். அந்தச் சபையில் சூதாட உங்களை அழைக்கிறார். இது சகுனியின் ஏற்பாடு. மாமனும், மருமகனும் கை கோத்து மன்னனைப் பணிய வைத்துவிட்டார்கள். புத்திரனின் புலம்பலை கேட்க முடியாமல் அவர் உனக்கு தூது அனுப்பியிருக்கிறார். உன்னை வரச் சொல்கிறார். சபையை பார்க்க மட்டுமல்ல. சூதாடவும். நீ யோசித்து பதில் சொல். மறுப்பதாயின் உடனே போய் தெரிவித்து விடுகிறேன்.”

பீஷ்மருக்கு தெள்ளத் தெளிவாக தன்னுடைய முடிவும், கௌரவர்கள் முடிவும் தெரிந்துவிட்டது. இது குடும்ப பிரச்னை அல்ல. பரதகண்டப் பிரச்னை. உலகாயத பிரச்னை. எது முற்றி, முதிர்ந்து பூமி அதிர நிற்கிறதோ அதன் திமிரை அடக்கி கீழே சாய்க்கின்ற விஷயம். நடக்கின்ற நாடகம். ஸ்ரீமன் நாராயணனின் லீலை. வேண்டாம் சூது ஆடாதே என்றால் அந்தப் பேச்சு கேலியாகத்தான் போகும். துரியோதனன் தூஷணையாகப் பேசினாலும் பேசுவான். யாரிடம் என்ன பேசுவது என்கிற நிதானம் அவனிடமிருந்து போய்விட்டது.

இது நல்ல வார்த்தைகளுக்கான காலம் அல்ல. அதற்கான நேரம் அல்ல. நல்லவை நல்லதாக நடக்க வேண்டும். விரைவாக நடக்க வேண்டும். க்ஷத்ரியர்கள் தங்களுடைய அழிவைத் தாங்களே தேடிக் கொள்கிறார்கள். வளர்ந்து செழித்து, சரீர பலமே மிக உயர்ந்தது என்று நினைக்கின்ற சமூகம் அப்படித்தான் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும். ஒரு சமூகத்தை அழிக்க இன்னொரு சமூகம் எங்கிருந்தோ வர வேண்டாம். அந்த சமூகமே இரண்டாகப் பிளந்து தன்னைத்தானே அடித்துக் கொள்ளும். வளர்ச்சியின் ஒரு பரிமாணம் இது. வளர்ந்தது போதும் என்று இயற்கை அல்லது பிரபஞ்ச சக்தி தீர்மானித்த விஷயம் இது.

அவர் விதுரரைப் பார்த்து கை கூப்பினார். ‘மன்னர் என்ன கட்டளையிட்டிருக்கிறாரோ அதை நிறைவேற்றுங்கள். பாண்டவர்களைப் போய் சூதாட அழைத்து வாருங்கள். எல்லாம்

நல்லபடியாக நடக்கும்.' வேதனையோடு சிரித்தார். எல்லாம் என்பதற்கு அர்த்தம் சூதாட்டம் மட்டும் அல்ல. அதைத் தொடர்ந்து பல்வேறு விஷயங்களும் என்று விதுரருக்கு புரிந்தது. அவர் விடைபெற்று தலைகுனிந்து வெளியே போனார்.

நல்ல குதிரையில் ஏறி பாண்டவப்ரஸ்தம் வந்தடைந்தார். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு தரப்பட்டது. தருமபுத்திரர் முன்னின்று வரவேற்றார். கைகளை பிடித்துக் கொண்டார். "வாருங்கள், வாருங்கள். முகம் தெளிவாக இல்லையே! பயணக்களைப்பா? அல்லது வேறு ஏதேனும் வேதனையானச் செய்தியா, எதுவாயினும் விரைவாகக் கூறுங்கள்."

"உன்னுடைய பெரிய தகப்பனார் உன்னுடைய சபையை கேள்விப்பட்டு அதே விதமாக மிகப் பெரிய சபையை தானும் அமைத்திருக்கிறார். அந்தச் சபையில் சூதாட உங்களை அழைக்கிறார். இது சகுனியின் ஏற்பாடு, மாமனும், மருமகனும் கை கோத்து மன்னனைப் பணிய வைத்துவிட்டார்கள். புத்திரனின் புலம்பலை கேட்க முடியாமல் அவர் உனக்கு தூது அனுப்பியிருக்கிறார். உன்னை வரச் சொல்கிறார். சபையை பார்க்க மட்டுமல்ல. சூதாடவும். நீ யோசித்து பதில் சொல். மறுப்பதாயின் உடனே போய் தெரிவித்து விடுகிறேன்."

"இல்லை. நான் மறுப்பாக இல்லை. சூதாடும் விருப்பத்தால் இல்லை. எனக்கு தந்தையைப் போன்றவர், தந்தை ஸ்தானத்தில் இருக்கின்ற திருதராஷ்டிரன் அழைக்கும்போது நான் எப்படி மறுப்பது? அது எதற்காயினும் எப்படி நான் முடியாது என்று சொல்வது? இணங்க மாட்டேன் என்று சொன்னால் கோபம் வரும். கோபத்தால் பேச்சு வரும். பேச்சால் போர் வரும் அல்லவா? நான் இணங்கிவிட்டால் ஒரு வேளை போர் வராது இருக்கக் கூடுமல்லவா? மரியாதைக்கு பதில் மரியாதை என்று நான் இதை எடுத்துக் கொண்டு வரத்தான் போகிறேன். சூதாடுவது தவறு. அதனால் கலவரம் ஏற்படும் என்று எனக்குத் தெரியும். அதுவும் குறிப்பாக பங்காளிகள் சூதாடுவது வெகு நிச்சயம் கோபத்தை உண்டுபண்ணும். அதிலும் துரியோதனன் ஆடும்போது எங்களை அழிப்பதற்கே இந்த விஷயத்தை பயன்படுத்துவான் அதுவும் தெரியும். ஆனாலும் நான் மறுதலிக்கப் போவதில்லை நான் வரப்போகிறேன். 'நீ அழைத்தால் நான் வர வேண்டும், உன்னுடைய பெருத்த செல்வத்தை காட்டிக் கொள்ள வேண்டும். நான் அழைத்தால் நீ வரமாட்டாயா? எங்கள் சபையை பார்க்க மாட்டாயா?' என்று கூச்சல் நிச்சயம் எழும். அதை தடுப்பதற்காகவே நான் வருகிறேன். இப்போது இங்கே சூதாடுவது என்பது இறைவனின் லீலை."

"உனக்கு அதில் விருப்பமும் உண்டோ?"

"நான்கு சகோதரர்களுக்கு மூத்தவனாக இருந்தபோது சூதாடுவது என்பது என்னுடைய ஆசையாக இருந்தது. ஆனால், காண்டவ ப்ரஸ்தத்தை தலைநகராகக் கொண்டு இந்தப் பகுதியை ஆளுகின்ற மன்னனாக இருக்கின்றபொழுது எனக்கு மக்களின் நலன்தான் முக்கியம். சூதாடுவது முக்கியமில்லை. ஆனாலும், அழைப்பை தட்ட முடியாது. நீங்கள்போய் என் வருகையை தெரிவித்து விடுங்கள். உங்களோடே நான் கிளம்புகின்றேன். அஸ்தினாபுரம் நெருங்கியதும் முன்னேறி எங்கள் வருகையைச் சொல்லுங்கள்."

தொட்டதற்கெல்லாம் ஸ்ரீகிருஷ்ணரை கலந்து ஆலோசிக்கும் தருமபுத்திரர் இப்போது அதை மறந்து விட்டார். ஒருவேளை ஸ்ரீகிருஷ்ணனிடம் கேட்டிருந்தால் ஒரு நல்ல உபாயம் கிடைத்திருக்கும். அல்லது தன்னிடம் வந்து இதை கேட்டுவிடக் கூடாது என்று கிருஷ்ணர் அவர் மனதை தன் பக்கம் திருப்பாமல் இருந்திருக்கலாம். சில சமயம் மறதியும் இறைவன் லீலையே!

பெரிய சேனையோடும் வேண்டிய பொருட்களோடும் தருமபுத்திரர் பெரிய யானையின் மீது ஏறிக் கொண்டார். அவருக்கு முன்னே பீமன் தேரில் பவனி வந்தான். தருமபுத்திரரின் இடதும், வலதும் நகுலசகாதேவர் அவரவர் தேரில் வந்தார்கள். பின்னால் இருக்கின்ற தேரில் கையில் காண்டீபத்தோடு அர்ஜுனன் அமர்ந்து வந்தான். தருமபுத்திரருக்கு சற்று முன்பு திரௌபதி சுகமான தேரில் பயணப்பட்டாள். அக்னியின் ஜொலிப்போடு யானையின் மீது அமர்ந்து அஸ்தினாபுரம் போகும் தங்கள் மன்னனை காண்டவப்ரஸ்தத்து மக்கள் ஆவலோடு பார்த்தார்கள். அவர் தேஜஸைப் பார்த்து வியந்தார்கள். எவ்வளவு அமைதியான முகம் என்று புகழ்ந்தார்கள். வாழ்வை அதன் மேடு, பள்ளங்களோடு ஏற்றுக் கொள்ளத் தெரிந்தவனின் முகம் அமைதியாகத்தான் இருக்கும். மறுதலிப்பவரே அவஸ்தைக்குள்ளாகிறார். முகம் விகாரமாகிறது.

அஸ்தினாபுரம் அவரை மிக கம்பீரமாக வரவேற்றது. விதுரர் முன்னே போய் அறிவித்ததால் துரோணரும், பீஷ்மரும் வந்து வரவேற்றார்கள். துரியோதனன் ஓடிவந்து தழுவிக் கொண்டான். அவர்கள் அரண்மனைக்குள்போய் திருதராஷ்டிரனின் பாதங்களில் விழுந்தார்கள். அவருக்கு பக்கத்தில் உட்கார்ந்து கைகளைக் கோத்துக் கொண்டார்கள்.

(தொடரும்)

நரியை உதறு, சிங்கத்தோடு ஸ்நேகம் கொள்!

மகாபாரதம் 38

“மிகச் சிறப்பாக ராஜசூய யாகம் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். அதைப் பாராட்டவே இங்கு உன்னை வரவழைத்தேன். இங்கு இவர்கள் நிர்மாணித்திருக்கும் சபையை பார். மிக அற்புதமாக இருக்கிறது என்று பேசிக் கொள்கிறார்கள். அது உனக்கு பிடிக்கும். பல்வேறு சௌகரியங்கள் இருக்கின்றன. உன்னோடு சூதாடவேண்டும் என்று துரியோதனன் ஆசைப்படுகிறான். உனக்கும் அதில் விருப்பம் உண்டே. நீ ஆடி சந்தோஷமாக இரு. போரிலும் சரி, சூதிலும் சரி, வெற்றி தோல்விகள் சகஜம், பெரிதாக எடுத்துக் கொள்ளாதே” என்று ஆறுதலாக வார்த்தைகள் சொன்னார்.

ஒரு தர்ம சங்கடத்துக்கு ஆளானவன் போல் தான் திருதராஷ்டிரன் வாக்கியங்கள் இருந்தன. அது தருமருக்குப் புரிந்தது. கவலையோடு திருதராஷ்டிரனை தடவிக் கொடுத்துவிட்டு தங்கள் இடம் போனார். அன்று நன்கு உணவு அருந்திவிட்டு அயர்ந்து தூங்கினார்கள்.

மறுநாள் விடிந்தது. அஸ்தினாபுரத்து ஜனங்கள் இந்த சூதினால் மிகப் பெரிய மாற்றம் வரும் என்று பேசிக் கொண்டார்கள். ஏதோ கெடுதலான விஷயம் நடக்கப் போகிறது. யாரெல்லாம் ஆயுதம் தாங்கி தன்னை க்ஷத்திரியன் என்று மார் தட்டிக் கொண்டானோ அவனுக்கு கேடு காலம் துவங்கி விட்டது. ஒரு இனமே அழியப் போகிறது. ஒரு வலிவு குன்றி முடக்கி வைக்கப்படப் போகிறது. இனி யாருடைய காலம், யார் ஆட்சி செய்வார்கள் என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆட்கள் நாலாதிக்கும் போய் பல்வேறு அரசர்களை சபைக்கு அழைத்து வந்தார்கள். துரியோதனன் பரபரப்பாக இருந்தான். இது நடக்கக் கூடியதுதானா. நான் ஜெயித்துவிடுவேனா என்று விதம் விதமாக யோசித்துக் கொண்டிருந்தான். ஜெயிக்காது போனால் என்ன ஆகும் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். உட்கார்ந்தும், எழுந்தும், நடந்தும், தொலைதூரம் பார்த்தும், அருகே இருந்தவர்களை நோக்கியும், தரையை வெறித்தவனுமாய் இருந்தான். மாமன் சகுனியை சுற்றிச் சுற்றி வந்தான்.

“இந்த மனோநிலையில் தயவு செய்து நீ பேசாதே. உனக்கு பதிலாக நான் பேசுகிறேன்.” சகுனி கட்டளையிட்டார். அவன் தலையசைத்தான்.

தருமபுத்திரர் தன் சகோதரர்களோடு உள்ளே நுழைந்தபோது முன்னே நகர்ந்து வணங்கி வரவேற்றான். சபையின் விஸ்தீரணம் பார்த்தும், அலங்காரம் பார்த்தும் பஞ்சபாண்டவர்கள் வியந்தார்கள். மற்ற மன்னர்களுக்கும், திருதராஷ்டிரனுக்கும் வணக்கம் சொன்னார்கள். துரியோதனிடமும், சகுனியிடமும் நலம் விசாரித்தார்கள். ஒவ்வொரு சடங்காக நடந்து கொண்டிருக்கும்போது பொறுமையில்லாமல் துரியோதனன் ஆடுவதைப் பார்த்து சகுனியும்



பதட்டப்பட்டான்.

சூதாடுவதற்கான வஸ்திரம் விரிக்கப்பட்டு விட்டது. எனவே வாரும் உட்கார்ந்து சூதாடலாம்."

"க்ஷத்திரியர் குணம் போர் செய்வது. சூதாடுவது அல்ல. எதற்கு நீ சூதாட அழைக்கிறாய் என்று எனக்குத் தெரியவில்லை."

நான் துரியோதனுக்காக சூதாட அழைக்கிறேன்'' என்று சகுனி சொல்ல, அவர் துரியோதனனை நோக்கினார்.

''ஆமாம். சூதாட வாருங்கள். எனக்காக சகுனி ஆடுவார்."

"உனக்கு ஆட விருப்பம் இருந்தால் நீ ஆடு. உனக்காக வேறு ஒருவர் ஏன் ஆடுவது. இது உசிதம் என்று தோன்றவில்லை. ஆனால், நீ அழைத்து இங்கே வந்துவிட்டேன். மறுக்க மாட்டேன்" என்று அவர் சூதாடும் பலகைக்கு முன்பு வந்து உட்கார்ந்து கொண்டார்.

"என்னிடம் நிரம்ப செல்வங்கள் இருக்கின்றன. அது உங்களுக்குத் தெரியும். நீங்கள் என்ன சூதாட வைக்கப் போகிறீர்கள்" என்று துரியோதனன் ஆவலாகக் கேட்டான்.

"ஏன் இவ்வளவு பதட்டப்படுகிறாய். என்ன வேண்டும் எங்களிடமிருந்து உனக்கு. எதை கவர்ந்து கொள்ள வேண்டுமென்று இவ்வளவு துடிக்கிறாய். சூதாடுவது என்பது ஏமாற்று வேலை. கபடம் நிறைந்தது அல்லவா. பொய்யும் புனைசுருட்டுமாக, ஏமாற்று வேலை செய்தா ஒருவரிடமிருந்து பொருளை அபகரிக்க வேண்டும் அதுவா வெற்றி."

அவர் ஆதாரத்தோடு துரியோதனனை கேட்டார். சகுனி உள்ளே புகுந்தார்.

"ஒரு வித்வான் இன்னொரு வித்வானை ஏமாற்றித்தான், கபடம் செய்துதான் ஜெயிக்கிறான். ஒரு பண்டிதன் இன்னொரு பண்டிதனை அவன் அறியாத விஷயம் எது என்று பார்த்து அந்த அறியாத விஷயத்தை எடுத்துக் கொண்டு அவனை கபடம் செய்துதான் ஜெயிக்கிறான். போரிலும் தந்திரம் உண்டே. எதிர்ப்பக்கம் எதிராளியின் திசையை கவனத்தை திருப்பி அவனை தாக்கி விடுவது உண்டே. அதை கபடம் என்று யாரும் சொல்வதில்லையே. அதேபோல சூதாட்டத்திலும் கபடம் இருக்கிறது. வாழ்வில் கபடம் இல்லாத நேரம் எது. எந்த விஷயம் சொல்" என்று சகுனி சொல்ல, தருமபுத்திரர் வாய் திறக்கவில்லை.

''உன்னோடு பேச்சு எதற்கு. வந்துவிட்டேன். வேலையை கவனிப்போம். சரி, என்ன வைக்கிறீர்கள் சொல்லுங்கள்."

"இதோ மிக அற்புதமான ரத்தின ஹாரம். தங்கத்தால் இழைக்கப்பட்டது. பெரிய கற்கள் கொண்டது. மிக அபூர்வமானது. இதை வைக்கிறேன்" என்று சபைக்கு காட்டி வஸ்திரத்தில் வைத்தார்.

சகுனி பாய்ச்சி உருட்டினான். இதை நான் வென்றுவிட்டேன் என்று ஹாரத்தை எடுத்துக் கொண்டான். என்ன எண் சொன்னாரோ அந்த எண் விழுந்தது. பெட்டியில் பலவிதமான தங்கங்கள் இருக்கின்றன. அத்தனை பெட்டிகளையும் வைக்கிறேன் என்று சொல்ல, இதையும் வென்றேன் என்று பாய்ச்சிகளை உருட்டி சகுனி வென்றான்.

பாலகுமாரன்

ஜைத்ர என்கிற மிக அற்புதமான ராஜ ரதம் இங்கே இருக்கிறது. அது என்னுடையது அதை வைக்கிறேன் என்று தருமபுத்திரர் சொல்ல, "அதையும் வென்றேன்'' என்று சகுனி சொன்னான்.

"எல்லா ஆபரணங்களையும் பூண்டு கொண்டிருக்கின்ற ஒரு லட்சம் பணிப் பெண்கள் என்னிடம் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரையும் இங்கே பந்தயமாக வைக்கிறேன். எல்லா கலைகளிலும் வல்லவர்கள். அதிகாரிகளுக்கும், மன்னர்களுக்கும் இவர்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் என் செல்வம். இந்த பெண்களை வைக்கிறேன்" என்று சொல்ல, "அதையும் வென்றேன்" என்று சகுனி பாய்ச்சிகளை உருட்டி ஜெயித்தேன்.

"பணிப் பெண்களைப் போல பணியாட்களும் உள்ளார்கள். அவர்களும் ஒரு லட்சம் பேர்களுக்கு மேல் இருப்பார்கள். அவர்களையும் வைக்கிறேன் என்று சொல், அவர்களையும் சகுனி வென்றான்.

தருமபுத்திரர் யானைகளை வைத்தார். தோற்றார். குதிரைகளை வைத்தார். தோற்றார். தேர்களை வைத்தார். தோற்றார். போர் வீரர்களை பணயம் வைக்கிறேன் என்றார் அதையும் சகுனி ஜெயித்தான்.

பணிப் பெண்களை வைத்துத் தோற்றது விதுரருக்கு பிடிக்கவில்லை போலும். அவர் தாய் ஒரு பணிப் பெண் அல்லவா. அவர் நிலைகுலைந்து உள்ளுக்குள்ளே அலைமோதிக் கொண்டிருந்தார். பொங்கி எழ அவருக்கு சற்று நேரம் பிடித்தது. தன்னுடைய படைகள் மொத்தமும் ஒரு மன்னன் இழப்பதை பார்த்து சகிக்க வொண்ணாத கோபம் வந்தது. எழுந்து நின்று ஆட்டத்தை தடுத்து நிறுத்தினார்.

"திருதராஷ்டிரா என்ன நடக்கிறது இங்கே. நான் இதை தடுக்கிறேன். நான் இதை மறுக்கிறேன். இது இங்கு நடக்கக் கூடாது என்று விரும்புகின்றேன். ஆனால், மரணத்தை நோக்கி போய் கொண்டிருக்கின்ற நோயாளிக்கு மருந்து பிடிக்காதே. என் சொற்கள் உங்களுக்கு பிடிக்காதே சில சமயம் அவன் மரணமே உசிதம் என்று விரும்புவான். உச்சி மரக்கிளையில் தேனடை இருக்கிறது. அந்த தேனடையை பறிக்க வேண்டுமென்ற எண்ணம் உடையவனுக்கு அங்கிருந்து விழுந்துவிடுவோம் என்ற எண்ணம் எழவே ஏழாது. நிச்சயம் பறித்துவிடுவோம் என்றுதான் மேலே ஏறுவான். விழுவதற்கு சந்தர்ப்பங்கள் இருக்கின்றனவே என்று அவனுக்குத் தோன்றாது. அதுபோல இந்த துரியோதனன் நடந்து கொண்டிருக்கிறான்.

இவன் பிறக்கும்போது நரியைப்போல ஊளையிட்டான். துர்சகுணங்கள் தோன்றின. இதெல்லாம் உனக்கு மறந்துவிட்டதா, பரத கண்டத்தின் அழிவுக்கு காரணம் இந்த துரியோதனன். இவனுடைய செய்கை."

பீஷ்மர் தெளிவாக இருந்தார். நாராயணருடைய லீலை என்று. அந்தத் தெளிவு விதுரரிடம் இல்லை. இந்த உலகத்தோடு சம்பந்தப்பட்ட மயக்க நிலையிலேயே அவர் தர்மத்தோடு விவாதித்தார். எது நியாயம் என்று பேசத் துவங்கினார்.

துரியோதனன் காக்கை, பஞ்சபாண்டவர்கள் மயில்கள். இந்த காக்கையை உதறிவிட்டு மயில்களோடு ஸ்நேகம் கொள். நரியை உதறிவிட்டு சிங்கத்தோடு ஸ்நேகம் கொள். குலம் முழுவதின் நன்மைக்காக இந்த தனி மனித தியாகம் செய். ஒரு கிராமத்தின் நலத்திற்காக ஒரு குடும்பத்தை விடலாம். ஒரு நகரத்தின் நலனுக்காக ஒரு கிராமத்தை விடலாம். ஒரு தேசத்தின் சுபிட்சத்திற்காக ஒரு நகரத்தை தியாகம் செய்யலாம். நீ இப்பொழுது ஆணையிட்டால் அர்ஜுனன் எழுந்து துரியோதனனை கொன்று போடுவான்.

ஒரு வனத்திலிருந்த பறவைகள் தங்கத்தை வாயால் உமிழ்ந்து கொண்டிருந்தன. மன்னன் அந்தப் பறவைகளை வேட்டையாடி அவைகளை கொன்று போட்டு பறவைகளின் உடலை கிழித்து தங்கம் தேடினான். பேராசை அவனுக்கு பெரும் நஷ்டத்தை கொடுத்துவிட்டது.

துரியோதனன் பாண்டவர்களின் செல்வத்தை அபரிக்கும் பேராசையால் அவர்களை கொல்ல முயற்சிக்கிறான். பாண்டவர்கள் அவமானப்பட்டு போருக்கு தயாரானால் அவர்களை யார் எதிர்க்கக் கூடும். அப்படி வலிமை பொருந்தியவர்கள் யார் இருக்கிறார்கள் இங்கே. இவர்களை சூதில் வென்றுவிட்டால் என்ன ஆகும். இவர்களை செல்வத்தையெல்லாம் எடுத்துக் கொண்டால் என்ன ஆகும். இவர்கள் தன சொருபர்கள். வெகு எளிதாக மறுபடியும் செல்வம் சம்பாதிப்பார்கள். இவர்களை நோக்கி செல்வம் ஓடிவரும். தோல்வி சூதில் விழாது. சகுனியின் சூது கபடமானது. இந்த சகுனியை திரும்பி அவன் நாட்டிற்கே அனுப்ப வேண்டும். துரியோதனனை அவனிடமிருந்து தனிமைப்படுத்த வேண்டும். இது என் கோரிக்கை"

சகுனியை இழிவுபடுத்தியது துரியோதனனுக்கு தாங்கவில்லை. வெற்றி மீது வெற்றி வாங்கித் தருகின்ற தன்னுடைய மாமனை வெளியேற்ற வேண்டுமென்றபோது அவன் கொதித்தெழுந்தான்.



“பீஷ்மர் தெளிவாக இருந்தார். நாராயணருடைய லீலை என்று. அந்தத் தெளிவு விதுரரிடம் இல்லை. இந்த உலகத்தோடு சம்பந்தப்பட்ட மயக்க நிலையிலேயே அவர் தர்மத்தோடு விவாதித்தார். எது நியாயம் என்று பேசத் துவங்கினார்.”

"போதும் விதுரா நிறுத்து. சோறு ஒரு இடத்திலும், மனம் ஒரு இடத்திலும் வைக்கின்ற ஜென்மத்தை இந்த சபையில் முதன் முதலில் இப்பொழுதுதான் பார்க்கிறேன். நான் என்ன செய்தாலும், எப்படி கொண்டாடினாலும் உனக்கு பஞ்ச பாண்டவர்கள் மீதுதான் கருணை. அங்குதான் பிரேமை. ஏன் இங்கு வருகிறாய். உன்னை யார் வரச் சொன்னார்கள். அங்கேயே காண்டவப்ரஸ்தத்திலேயே தங்கிவிட வேண்டியதுதானே. என்னுடைய இடம் இதுதான் என்று அவன் அரண்மனையிலேயே ஒட்டிக் கொள்ள வேண்டியதுதானே. இங்கு வந்து ஒரு சபையின் முக்கியமான நாற்காலியில் அமர்ந்து சகல மரியாதைகளையும் பெற்றுக் கொண்டு, இந்தச் சபையையே இழிவுபடுத்துவதற்கு உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது. வயதாகிவிட்டது என்பதாலேயே வாய்க்கு வந்தபடி பேசுகிறாயா. கிழத்தனம்தான் உபதேசம் செய்வதற்கு மிகப் பெரிய தகுதியெனில் அறிவு என்பதற்கு அப்பொழுது அர்த்தமேயில்லை."

"விதுரா, நீ மடியில் அமர்ந்த பாம்பு. உன் மனம் எவ்வளவு துவேஷத்துடன் இருக்கிறது என்பதை உன் நாக்கே நிரூபித்துவிடுகிறது. இந்த விஷயம் பிடித்தோ, பிடிக்காமலோ இந்த சபையில் பல பேர் இருக்கிறார்கள். அவர்கள் வாய் திறந்து பேசவில்லை. அதேபோல் நீயும் இருக்க வேண்டியதுதானே. எதற்கு எங்களை அவமானப்படுத்துகிறாய். என் பகைவனை நேசிப்பவனை என் வீட்டில் நான் வாழவிட மாட்டேன். நீ எங்கு விரும்புகிறாயோ அந்த இடத்திற்கு நீ போகலாம். நடத்தை கெட்ட பெண்ணுக்கு எத்தனை சௌகரியங்கள் செய்து கொடுத்தாலும், என்ன இனிமையான வார்த்தைகள் பேசினாலும் அவள் கணவனை விட்டு, அவன் மனையை விட்டு நீங்கத்தான் செய்கிறாள். "நீ போகலாம் விதுரா" என்று வாயிலை நோக்கி கை காட்டினான்.

சபை திகைத்து நின்றது.

"துரியோதனா, நீ புத்தியில்லாதவன். நீ உன்னை புத்திசாலியாகவும் என்னை முட்டாளாகவும் கருதுகிறாய். ஒருவனை நண்பனாக ஏற்றுக் கொண்டுவிட்டு பிறகு அவன் மீது குற்றம் சாட்டுகிறவன்தான் மிகப் பெரிய முட்டாள். துர்புத்தி உள்ள உன்னை நல்வழிபடுத்த முடியாது. இளம் பெண்ணுக்கு அறுபது வயது கிழவனை பிடிக்காதது போல குரு வம்சத்து இளவரசனான துரியோதனனுக்கு நிச்சயம் என்னுடைய உபதேசம் பிடிக்காது. எப்பொழுதுமே கெட்ட விஷயங்

களை வழவழப்பாக பூசி மெழுகும் வார்த்தையில் உனக்கு சொல்ல வேண்டுமென்றால் அதற்குண்டான ஆட்களை தேர்ந்தெடுத்துக் கொள். மனிதர்களின் மனதுக்கு பிடித்தமான விஷயங்களை பேசுகின்ற மகாபாபிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். நீ நிறைந்த செல்வத்தோடும், புகழோடும் நலமாக இருக்க வேண்டும். உனக்கு நல்லவர்கள் ஆசி கூற வேண்டும். நல்லவர்கள், படித்தவர்கள் விஷமுள்ள கோபமுள்ள பாம்புகளை சீண்டமாட்டார்கள். பாண்டவர்களை சீண்டுகிறாய். இது உனக்கு நன்மை தராது"

கோபமுள்ள விதுரரை பலர் சமாதானப்படுத்தி உட்கார வைத்தார்கள். சூது தொடர்ந்து நடந்தது.

"யுதிஷ்டிரா, இதுவரை நீங்கள் வைத்திருந்த பெரும் செல்வத்தை தோற்றுவிட்டீர்கள். இன்னும் ஏதேனும் செல்வம் இருக்கிறதா" என்று சகுனி கேலியாகக் கேட்டார். யுதிஷ்டரின் ஆத்திரத்தை தூண்டும் வண்ணமாக அந்தப் பேச்சு இருந்தது. என் செல்வம் பற்றி உனக்கு என்ன தெரியும் என்ற கோபத்தை கொடுத்தது. கோடி கோடியாக செல்வம் இருக்கிறது. அத்தனை செல்வத்தையும் நான் வைக்கிறேன். அதை பணயம் வைத்து உன்னோடு விளையாடுகிறேன்" என்று அவர் கை எடுத்து சத்தியம் செய்தார்.

சகுனி தாயம் உருட்ட, வென்றுவிட்டேன் என்று உரக்க கூவினான்.

தன்னுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஆடு, மாடு, பசு அத்தனையும் பணயம் வைக்கிறேன் என்றார். அதையும் சகுனி வென்று தீர்த்தான். கம்பீரமான கோஷம் எழுப்பினான்.

"என்னுடைய கிராமங்கள், நகரங்கள் அங்கு வாழும் பிராமணர்கள் சொத்து தவிர மற்றவை எல்லாவற்றையும் நான் பணயம் வைத்து ஆடுகிறேன்" என்று தருமபுத்திரர் உரக்க கத்தினார்.

பாய்ச்சிகள் உருட்டப்பட்டன. சகுனி வென்றுவிட்டான். தாங்கள் அணிந்திருந்த விலை உயர்ந்த ஆபரணங்களை வைப்பதாக தருமர் சொல்ல, அதனையும் சகுனி வென்றான்.

"கருநிற வண்ணனும், சிவந்த கண்களும், சிங்கம் போன்ற என் நகுலனை நான் பணயம் வைக்கிறேன். இவனை என் செல்வமாக ஏற்றுக்கொள்" என்று சொல்ல, நகுலனை பாய்ச்சியை உருட்டி சகுனி வென்றுவிட்டான்.

இன்னும் என்ன இருக்கிறது" என்று ஆவலோடு கூரிய கண்களால் சகுனி வினவினான்.

"சகாதேவன் தர்மஉபதேசம் செய்தவன், மிகச் சிறந்த பண்டிதன் என்று பெயர் பெற்றவன். எனக்குப் பிரியமானவன். இவனை பணயமாக வைக்கிறேன் என்று தருமர் சொல்லி முடிப்பதற்கு முன்பு பாய்ச்சிகள் உருண்டன. சகாதேவனை சகுனி வென்றான்.

"யுதிஷ்டிரா, மாத்ரியின் புத்திரர்களை நான் ஜெயித்துவிட்டேன். இனி மீதியிருப்பது அர்ஜூனனும், பீமனும் தானே. இவர்களை நீ பணயம் வைக்கமாட்டாய். எனக்குத் தெரியும்" சகுனி தந்திரமாக ஆரம்பிக்க, தறிகெட்ட கோபத்தில் இருந்த தர்மர்,

"எங்களுக்குள் பிளவு ஏற்படுத்த பார்க்கிறாயா, அப்படி ஏதும் இல்லை. நாங்கள் எப்பொழுதும் ஒற்றுமையானவர்கள். நான் அர்ஜூனனை என் ராஜகுமாரனை நான் பணயம் வைக்கிறேன் என்று சொல்ல, பாய்ச்சிகள் உருட்டப்பட்டன. சகுனி வென்றான்.

"அர்ஜூனனையே கொடுத்துவிட்டீர்கள். இனி பீமனையா வைக்கமாட்டீர்கள். அவனையும் வைத்து ஆடலாமே" என்று சகுனி அழைக்க, தருமர் பெருத்த பலம் கொண்ட பீமனை நான் பணயம் வைக்கிறேன் என்று சொல்ல, தாயம் உருட்டப்பட்டது. எளிதாக சகுனி வென்றான்.

"உங்களுடைய படைகளை இழந்துவிட்டீர்கள். சகோதரர்களை இழந்துவிட்டீர்கள். இனி இழப்பதற்கு ஏதாவது இருக்கிறதா".

"நான் இருக்கிறேனே. என் சகோதரர்களுக்கு மூத்தவன். அவர்கள் அனைவருக்கும் பிரியமானவன். என்னையே பணயம் வைக்கிறேன். ஆடு" என்று சொல்ல தாயம் உருட்டப்பட்டது. தருமபுத்திரரை சகுனி வென்றான்.

சகுனி முன்னும், பின்னும் அலைந்து வந்திருந்த அத்தனை மன்னர்களிடம் தான் வெற்றி பெற்றதை அறிவித்தான். யுதிஷ்டர் தோற்றதைச் சொன்னான். அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

"இன்னொரு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் திரௌபதியை பணயம் வைக்கலாமே. அதுவும் உங்கள் சொத்துதானே" என்று சொல்ல, பாஞ்சால குமாரி கிருஷ்ணாவை பந்தயம் வையுங்கள் என்று வற்புறுத்தினான்.

உயரமும் இல்லாத, குள்ளமும் இல்லாத கருமையான நிறமுடைய, பெரிய கண்களையுடைய, நீண்ட கூந்தலையுடைய, தாமரை மலர் போலும் மேனி வாசமுடைய திரௌபதி எனக்குப் பிரியமானவள். ஒரு புருஷனிடம் ஒரு மனைவி எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கத் தெரிந்தவள் திரௌபதி. இரவு நேரம் எல்லோரும் தூங்கிய பிறகுதான் தூங்குவாள். எல்லோரும் விழிக்கும் முன்பு விழித்துக் கொள்வாள். அவள் பேச்சும், செய்கையும் மிக நேர்த்தியாக இருக்கும். எப்பொழுதும் அவள் மீது ஒரு வியப்பு ஏற்படும். அப்படிப்பட்ட பெண் ரத்தினத்தை நான் பணயமாக வைக்கிறேன்"

சூதாடும் வேகத்தில் தருமபுத்திரர் இப்படி சொல்லும்போது சபையில் உள்ள மன்னர்கள் 'சீ... சீ..' என்று முகம் திருப்பிக் கொண்டார்கள். இவருக்கு போய் என்ன இழிநிலை என்று தலையில் அடித்துக் கொண்டார்கள். விதுரர் என் தலையில் இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்ட மயக்க நிலையில் இருந்தார். பீஷ்மர், அஸ்வத்தாமா, துரோணர் ஆகியோர் கற்சிலை போல் உட்கார்ந்திருந்தார்கள்.

திருதராஷ்டிரன் தன் மனதிற்குள் சந்தோஷமடைந்து நம் பக்கம் வெற்றியா, நம் பக்கம் வெற்றியா என்று பரபரத்துக் கேட்டுக் கொண்டேயிருந்தான் வெற்றி பெற வேண்டும் என்ற

ஆசை, மிகப் பெரிய ஆவல் தன் மகன் ஜெயிக்க வேண்டுமென்ற பேராவா உடல்மொழியல் இருந்தது. அவனுக்கு இந்தப் பந்தயம் மிகப் பெரிய சந்தோஷத்தை கொடுத்தது.

"நானே வென்றேன்" என்று சகுனி உரத்து கூவினான். பாய்ச்சிகளை உருட்டினான். சொன்ன படி வென்றான். உன்மத்தனை போல முன்னும், பின்னும் மேல் துணி பறக்க அலைந்தான். துரியோதனன் திகைத்துக் கிடந்தான். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது-

"எல்லாம் முடிந்துவிட்டதா. நான் ஜெயித்து விட்டேனா, என் ஆசை நிறைவேறப் போகிறதா" என்று மிகப் பெரிய சந்தோஷம் அவன் தொண்டையை அடைத்தது. எழுந்து நின்றான். அவன் பார்வை விதுரர் மீது படிந்தது.

"விதுரா, நீ போய் பாண்டவர்களுடைய அன்பான மனதுக்கு உகந்த மனைவியான திரௌபதியை உடனே அழைத்து வா. அவள் வரட்டும். என் மாளிகைகளை பெருக்கட்டும். அங்கேயே வேலைக்காரியைப் போல வாழட்டும்" என்று உரத்து சொன்னான். விதுரருக்கு கோபம் தலைக்கு ஏறியது. மிகுந்த ஞானியான அவர் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளாத ஒரு உணர்ச்சி வேகத்தை அடைந்தார்.

''பாண்டவர்கள் மனைவி திரௌபதியை வேலைக்காரி சொல்கிறாயா, அட முட்டாளே, உன் வாயிலிருந்து இப்படிப்பட்ட சொற்கள்தான் வரும். கோபம் தலைக்கேறி அதனால் கண்டபடிக்கு கட்டளையிடுகிறாய். எல்லோரையும் இழிவுபடுத்த துடிக்கிறாய். திரௌபதி எப்படி வேலைக்காரி ஆக முடியும். யுதிஷ்டர் தன்னை தோற்றுவிட்ட பிறகுதான் திரௌபதியை பணயம் வைத்தார். ஸ்வாதீனத்தை இழந்த ஒருவனுக்கு மறுபடியும் வேறு யாரை வைத்து ஸ்வாதீனப்பட உரிமை இருக்கிறது. துரியோதனன் தன் மரணத்தை தானே தேடிக் கொள்கிறான். தன் பகைவரை தானே தேடிக் கொள்கிறான். நிஷ்டுரமான வார்த்தைகள் மனதுக்குள் பெருத்த காயத்தை ஏற்படுத்தி புரையோடச் செய்து அதனால் எதிரிக்கு பழிவாங்கும் வேகம் அதிகரிக்கும். வெள்ளாடு புல்லை திங்கலாம். செடியை திங்கலாம். ஒரு ஆயுதத்தை அது முழுங்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் அதன் தலை அறுந்து போகும் அல்லவா, அப்படித்தான். பாண்டவர்களுடைய எதிர்ப்பு என்கிற, பாண்டவர்களுடைய சினம் என்கிற ஆயுதத்தை துரியோதனன் விழுங்கிவிட்டான். அவனுக்கு அழிவு நிச்சயம்.

“ சூதாடும் வேகத்தில் தருமபுத்திரர் இப்படி சொல்லும்போது சபையில் உள்ள மன்னர்கள் ‘சீ... சீ..’ என்று முகம் திருப்பிக் கொண்டார்கள். இவருக்கு போய் என்ன இழிநிலை என்று தலையில் அடித்துக் கொண்டார்கள். ”

மகன் ஜெயிக்கிறான் என்று திருதராஷ்டிரனும் குதூகலத்தில் இருக்கிறார். மகனை நரகத்திற்கு வழியனுப்பிக் கொண்டிருக்கிறார். தன் குலத்தை நிச்சயம் இவன் அழிக்கப் போகிறான்" என்று உரத்த குரலில் சொல்லி அமர்ந்தார்.

அதற்கு இன்னும் விமர்சையாக துரியோதனன் விதுரரை நிந்தித்தான். விதுரர் தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். சபையில் அமர்ந்து கொண்டிருந்த பிரதிகாமி என்கிற மன்னனைப் பார்த்து துரியோதனன் கட்டளையிட்டான். அவன் துரியோதனனுக்கு அடங்கிய மன்னன்.

"பிரதிகாமி, நீ போய் இங்கு திரௌபதியை அழைத்து வா. பாண்டவர்களைப் பற்றி பயம் கொள்ளாதே. விதுரர் பயம்கொள்ளி. அதனால் இப்படி உளறுகிறார். போ. இந்த சபையில் திரௌபதியை வர கட்டளையிட்டிருக்கிறோம் என்று சொல்லி கையோடு அழைத்து வா" என்று உத்தரவிட்டான்.

பிரதிகாமி பாண்டவர்கள் தங்கியிருந்த அரண்மனைக்குப் போய் திரௌபதியை பார்த்து வணங்கினான்.

"துருபத குமாரி, தருமபுத்திரர் உங்களை சூதில் வைத்து தோற்றுப் போனார். துரியோதனன் ஜெயித்தான். திருதராஷ்டிரன் இருக்கும் சபைக்கு உங்களை அழைத்துப் போகப் போகிறேன். அங்கு உங்களை ஒரு வேலைக்காரி போல நடத்தவும் உத்தரவாகியிருக்கிறது. என்னோடு உடனே வாருங்கள்" என்று பணிவாகக் கூறினான்.

"என்ன பேசுகிறாய் என்று தெரிந்துதான் பேசுகிறாயா. எந்த மன்னன் தன் மனைவியை சூது பொருளாக வைப்பான். எதனால் அவ்விதம் யுதிஷ்டர் செய்தார். அவர் எதையெல்லாம் பணயமாக வைத்தார். தன்னை முன் வைத்து பிறகு என்னை பணயமாக வைத்தாரா அல்லது என்னை பணயம் வைத்த பிறகு தன்னை வைத்தாரா."

"தன்னை பணயமாக வைத்த பிறகுதான் உங்களை பணயமாக வைத்தார்" என்று பிரதிகாமன் பதில் சொன்னான்.

"இதை சபைக்குச் சென்று நான் யுதிஷ்டரிடம் கேட்டதாக கேட்டு வா. தன்னை வைத்து என்னை பணயம் வைத்தாரா. என்னை வைத்த பிறகு தன்னை பணயம் வைத்தாரா." பிரதிகாமன் கை கூப்பினான். வெளியேறினான். சபைக்கு வந்து திரௌபதியின் கேள்வியை தெரிவித்தான். தருமபுத்திரரை நோக்கியே பேசினான். தருமபுத்திரர் என்ன பதில் சொல்வதென்று தெரியாது முகம் வெளுத்து, உயிரற்றவர் போல், உணர்வற்றவர் போல கிடந்தார்.

(தொடரும்)



மகாபாரதம்

39

திரௌபதிக்கு திருதராஷ்டிரன் அளித்த வரம்!

“திரௌபதியை பார்த்துவிட்டு வெறுமே வந்திருக்கிறாய் பிரதிகாமா. இந்த கேள்வியை அவளே வந்து கேட்கட்டுமே. யுதிஷ்டிரர் நேரிடையாக அவளுக்கு பதில் சொல்லட்டுமே அவள் என்ன ஆள் அனுப்புவது? போய் விரைவில் அழைத்து வா” என்று துரத்தினார்கள்.

“ராஜகுமாரி, அவர்கள் தங்களை சபைக்கு அழைக்கிறார்கள். நீங்கள் வந்து அந்த கேள்வியைக் கேட்டு பதில் தெரிந்து கொள்ளச் சொல்கிறார்கள். கௌரவர்களுக்கு கேடுகாலம் வந்துவிட்டது. உங்களை சபைக்கு வரக் கட்டளையிடும் அளவுக்கு போன ஒரு குடும்பம் செல்வச் செழிப்பில் திளைக்காது அழியும்”.

“உண்மை மன்னவனே. கடவுளின் சட்டம் அப்படித்தான். தர்மம் அதைத்தான் போதிக்கிறது. தர்மத்தை கடைப்பிடித்தால் அது உதவி செய்யும். எதிர்த்தால் நம்மை பங்கப்படுத்தும். இப்பொழுது என்னுடைய தர்மம் என்ன, நான் என்ன செய்ய வேண்டும்? துரியோதனனைக் கேட்க வேண்டாம். குருவம்சத்தில் சிறந்தவர்கள் அரசவையில் வீற்றிருக்கிறார்கள், அல்லவா? நீதி அறிந்தவர்கள், சிறந்தவர்கள், தர்மம் அறிந்தவர்கள் இருக்கிறார்கள் அல்லவா? நான் என்ன செய்ய வேண்டுமென்று அந்த மஹாபுருஷர்களிடம் கேள். அவர்கள் இடும் ஆணைப்படி நான் நடப்பேன்”

பிரதிகாமன் அங்கு போய் இந்த விஷயத்தைச் சொல்ல, சபை மௌனமாக உட்கார்ந்திருந்தது. அங்குள்ள பெரியோர்கள் தலை கவிழ்ந்தபடி இருந்தார்கள். துரியோதனின் மனம் என்ன வேண்டும் என்று ஆசைப்படுகிறது என்பதை அறிந்திருந்தார்கள். ஆனால், இந்தப் பிரச்னை ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். சபையில் உள்ளோர் சொல்லாது போனாலும் இந்த விஷயம் ஏதேனும் ஒரு திருப்பத்திற்கு நகர்ந்துதான் ஆக வேண்டும். இப்படியே வெறும் மௌனத்தோடு முடிந்துவிடக் கூடாது. முடிந்துவிடவும் முடியாது.

எனவே, தருமபுத்திரரே மிருதுவான குரலில் அவருக்குத் தெரிந்த ஒருவரிடம் பேசத் துவங்கினார்: “மாதவிலக்காக இருந்தாலும், ஒரே வஸ்திரம் அணிந்துள்ளாய் என்றாலும்,



அதே நிலையில் சபைக்கு வந்து உன்னுடைய மாமனார் முன்பு நில். உன்னைப் போன்ற அரச குமாரி சபைக்கு வந்தால் அதைக் கண்டு துரியோதனனை சகலரும் நிந்திப்பார்கள். இதை நான் சொன்னதாகச் சொல்." அந்த நபர் மிக வேகமாக திரௌபதியின் மாளிகைக்கு போய் தருமரின் கருத்தை தெரிவித்தான்.

தருமர் மெல்லிய குரலில் யாரிடமோ, எதையோ சொல்லி அனுப்பியது துரியோதனனுக்கு பதட்டமாக இருந்தது. திரௌபதி இங்கு வருவது அவன் கட்டளையாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். அவனுக்கு பயந்து இது நடைபெற வேண்டுமென்று விரும்பினான். சூரர்கள், வீரர்கள் என்று கொண்டாடப்பட்ட பஞ்சபாண்டவர்கள் இடிந்துபோய் உட்கார்ந்திருப்பது, அவனுக்கு சந்தோஷத்தை கொடுத்தது. உண்மையிலேயே ஜெயித்துவிட்டோம் என்று பேரானந்தம் ஏற்பட்டது. அருகிலிருந்த ஒருவனை அழைத்து, 'நீ போய் திரௌபதியை அழைத்து வா. இந்த இடத்திலேயே, கௌரவமான இந்த சபையில் அமர்ந்திருப்பார்கள் அவளுக்கு விடை சொல்வார்கள் என்று சொல். உடனே அழைத்து வா" என்று கட்டளையிட்டான். விடையளிக்க வேண்டியது சபை அல்லவா? எனவே, அவன் எழுந்து, பொதுவாக, "நான் திரௌபதியிடம் என்ன சொல்வது?" என்று கேட்டான். துரியோதனனுக்கு அவன் கட்டுப்பட்டவனாயினும் அந்த நேரத்தில் அவன் தர்மப்படி நடந்து கொண்டான். நாங்கள் யாரும் திரௌபதியை இங்கு வரச் சொல்லவில்லையே என்று சொன்னால் தான் என்னாவது என்று பயந்தான்.

தான் யாரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று என்று துரியோதனனுக்கு தெரிந்துவிட்டது. எவன் தனக்கு எந்த நேரத்திலும் பணிவாக இருப்பானோ, தன் கட்டளை கேட்பானோ அவனிடம் அந்தப் பணியை ஒப்படைக்க நினைத்துத் திரும்பினான். "துச்சாதனா" என்று உரக்க அழைத்தான்.

"எனக்கு அடிமைப்பட்ட இந்த மனிதன் ஒரு முட்டாள். இந்த பாண்டவர்களுக்கு பயந்து நான் சொன்னபடி போகாதிருக்கிறான். நீ போய் அழைத்து வா. அவளை இங்கு பிடித்திழுத்து வா" என்று கட்டளையிட்டான்.

நல்ல மனிதர்களுக்கு நெருக்கமான மனிதர்கள் இருப்பது போல கெட்ட மனிதர்களுக்கும் நெருக்கமானவர்கள் இருப்பார்கள். துச்சாதனன் எந்த நேரமும் துரியோதனனை வியக்கிறவன். அண்ணனை நம்புகிறவன். அவனுக்கு தம்பியாய் இருப்பதில் பெருமை கொள்பவன்.

"ஹே பாஞ்சாலி, வெளியே வா. நீ சூதில் வெல்லப்பட்டு விட்டாய். என்னைக் கண்டு ஒதுங்கிப் போவாயே. இப்பொழுது வெட்கத்தைவிட்டு எங்களைப் பார். எங்கள் தர்மத்தின்படி உன்னை அடைந்துவிட்டோம். வந்து எங்கள் அரசவையில் நின்று அங்கு வேலை செய். கௌரவர்களுக்கு சேவை செய்."

திரௌபதி எழுந்தாள். முகம் துடைத்துக் கொண்டாள். துச்சாதனனை பார்க்காதவாறு விலகிப்போய் படி இறங்கி சூது நடக்கும் சபை நோக்கி ஓடினாள். அங்கு பெண்களுக்கான திருதராஷ்டிரனின் மனைவி இருந்த இடத்திற்கு போக எத்தனித்தாள். ஆனால், துச்சாதனன் அவளை வழிமறித்து அவள் கூந்தலை இறுக பற்றினான். தரதரவென்று இழுத்தான்.

"கூப்பிட்ட என்னை புறக்கணித்துவிட்டு உன் இஷ்டம்போல் செயல்படுகிறாயா? அதற்கு உனக்கு உரிமை இல்லை, வா என்னோடு" என்று அவளை தெரு வாசல் வழியாக இழுத்துப் போனான். வீரதீரமிக்க புருஷர்கள் இருந்தாலும் திரௌபதி ஒரு அபலையாய் அவன் இழுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் அவன் பின்னே ஓடினாள். புயல் காற்று அலைக்கழிக்கும் வாழைமரம் போல் இழுபட்டாள்.

"முட்டாளே, துச்சாதனா, நான் மாதவிலக்காக இருக்கிறேன். ஒற்றை ஆடை மட்டுமே அணிந்திருக்கிறேன். இந்த நிலையில் நான் சபைக்கு வர இயலாது. வரக் கூடாது" என்று கதறினாள்.

பல மன்னர்கள் பார்க்க, பெரியோர்கள் பார்க்க நீள நெடிய அவள் தலைமயிரை பிடித்து இழுத்துக் கொண்டு அந்தச் சபைக்கு துச்சாதனன் போனான். அவன் பிடியிலிருந்து தப்ப முடியாதவளாய் அவள் தடுமாறிக் கொண்டே அவன் பின்னே நடந்தாள். அவள் ஆடை குலைந்து கிடந்தது.

தன் நிலையை எண்ணி கலவரப்பட்ட அவள் ஸ்ரீகிருஷ்ணனை மனதால் துதிக்கத் துவங்கினாள். ஆனாலும் அவளுக்கு சபை மீது நம்பிக்கை இருந்தது. இவர் என்னை ஜெயித்தது தர்மம்தானா, அதில் நியாயம் இருக்கிறதா, என்று மறுபடி மறுபடி அவர் சபையை கேட்டாள். பீஷ்மருக்கு பதில் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

"தர்மம் மிக சூட்சமமானது. அவர் தன்னை பணயம் வைத்தபிறகுதான், தன்னை தோற்றப் பிறகுதான் உன்னை பணயம் வைத்தார் என்பது உண்மையாயினும் தான் என்று அவர் சொல்வதில் நீயும் இருக்கிறாய். நான் என்னைத் தோற்றேன் என்றால் உன்னை மனைவி என அவர் ஏற்றுக் கொள்வாராயின் அவருக்கு உடைமையான நீயும் தோற்கப்பட்டதாகத்தான் அர்த்தம். ஆனால், இதை நான் சொல்வதைவிட அவரே சொல்லக் கேட்டுவிடு. நான் திரௌபதியை தோற்றேன் என்று யுதிஷ்டிரர் தன் வாயாலேயே சொல்லட்டும். அதுதான் சிறந்த முடிவாக இருக்க முடியும். இதுதான் உனக்கு சிறந்த விடையாக இருக்கும்" என்று பேசி உட்கார்ந்தார்.

அவர் என்ன செய்தாலும் நம்முடைய தமையனார். நம்முடைய தலைவர். நம்முடைய ஸ்வாமி. எனவே, இந்த இடத்தில் இந்த



பாலகுமாரன்

நேரத்தில் எதிர் பேச்சு பேசாதே. அது மோசமான விளைவுகளை உண்டாக்கும் என்று பீமனை அர்ஜுனன் அமைதிபடுத்தினான்.

துரியோதனனுக்கு விஷயம் இடதும், வலதுமாக புரண்டு போவது விரும்பவில்லை. அவன் இன்னும் அதிகமாக பாண்டவர்களை அவமானப்படுத்த விரும்பினான்.

“துச்சாதனா இந்த பாண்டவர்களுடைய திரௌபதியின் உடையைக் களைந்து போடு. யுதிஷ்டிரர் ஏன் சொல்ல வேண்டும் இங்கு நடந்த விஷயம் சரியா, தவறா? திரௌபதி தோற்கப்பட்டாளா இல்லையா என்பதை நகுல சகாதேவரும், அர்ஜுனனும், பீமனும் சொல்லட்டும். திரௌபதி எங்கள் மனைவி. யுதிஷ்டிரருக்கு அவளை பணயம் வைக்க அதிகாரம் இல்லை என்று இந்தச் சபையில் சொல்லட்டும். நால்வரும் ஒன்றுகூடி யுதிஷ்டிரர் பொய்யன் என்று சொல்லட்டும். அப்பொழுது வெகு எளிதாக உன்னை விடுவித்துவிடுகிறேன். உனக்காக இந்தச் சபை துயரப்படுகிறது. பல பேர் முகத்தை தொங்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், உனக்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் உன் புருஷர்கள். அவர்கள் ஏதும் சொல்லவில்லை. இது மிக மிக வருத்தத்திற்குரியது திரௌபதி” என்று பொய்யாக வருத்தம் தெரிவித்தான்.

நகுல, சகாதேவர்களும், பீமனும், அர்ஜுனனும் என்ன சொல்லப் போகிறார்கள் என்று மன்னர்கள் காத்திருந்தார்கள்.

“தன்னை வைக்கும் முன்பு இவர் என்னை வைத்ததினால் நான் தோற்றவனாகிவிட்டேன். என்னை சூதில் தருமபுத்திரர் இழந்துவிட்டார். பிறகு அபிப்ராயம் சொல்லுகின்ற நிலை எனக்கு இல்லை. அவரை விமர்சிக்கின்ற பாங்கு எனக்கு இல்லை. என்னை சூதில் தோற்காமல் இருந்திருந்தால் இந் நேரம் துரியோதனனை அடித்துத் துவைத்திருப்பேன். நூறு பேரையும் அடித்து சாகடித்திருப்பேன். இப்போதும் என் அண்ணன் எனக்கு ஆணையிடுவார் என்றால் உன்னை அடித்துநாசம் செய்து இங்கிருந்துதிரௌபதியை தூக்கிக்கொண்டு போவேன். அண்ணன் ஆணை இடவில்லை. அர்ஜுனனும் அமைதியாக இருக்கச் சொல்கிறான். எனவே, நான் பேசாமல் இருப்பதே உத்தமம். நான் பந்தயப் பொருளாகத் தோற்றுப் போனதால் ஏதும் செய்ய முடியாமல் இருக்கிறேன். உங்களை அழிக்க முடியாமல் இருக்கிறேன்” என்று அலறினான் பீமன்.

விதுரர் எழுந்து அவன் தோள்தட்டி சமாதானம் செய்தார். “உன்னால் அடிக்க முடியும். உன்னால் இவர்களை கொல்ல முடியும். ஆனால், அமைதியாக இரு” என்று ஆசுவாசப்படுத்தினார்.

கர்ணன் எழுந்து கால்களை விரித்து திரௌபதி அருகே நின்று கொண்டான். இடுப்பில் கை வைத்துப் பேசினான். “நீ இப்போது ஒரு அடிமையின் மனைவி. அடிமையின் மனைவியும் அடிமைக்கு எஜமானாக இருப்பவரின் அடிமைதான். துரியோதனனின் அத்தனை சகோதரர்களுக்கும் நீ சேவை செய்ய வேண்டும். இதுவொரு கட்டளை. தப்பித்துக்கொள்ள ஒரு உபாயம் சொல்கிறேன். உன்னுடைய கணவன்கள் உன்னை கைவிட்டுவிட்டார்கள். இப்பொழுது குந்தியின் புதல்வர்கள் உனக்கு கணவர்கள் அல்ல. நீ வேறு ஒரு கணவனை, இன்னொரு வீரனை தேர்ந்தெடுத்துக் கொள். அந்த வீரனுக்கு நீ மனைவியானால் அப்பொழுது நீ அடிமையாக மாட்டாய். ஐந்து பேரை மணந்து கொண்ட உனக்கு ஆறாவதாக ஒரு கணவனை தேர்ந்தெடுப்பது கடினமா”

விதுரருக்கு கர்ணனை கொன்றுவிட வேண்டும்போல் கோபம் வந்தது. அவர் தருமபுத்திரரை நோக்கி பேசலானார்: “கர்ணனுடைய பேச்சு எனக்கு கோபத்தை உண்டு பண்ணவில்லை. அதிலொரு நியாயம் இருக்கிறது. நீங்கள் திரௌபதியை வைத்து சூதாடாவிட்டால் இந்தப் பேச்சு கேட்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. நீங்கள் செய்தது தவறு. யுதிஷ்டிரரே, பீமனோ, அர்ஜுனனோ இதற்கு பதில் சொல்ல முடியாதவர்களாக இருப்பதை நான் உணர்கிறேன்.”

துரியோதனன் திரௌபதியின் வனப்பை கவனித்தான். அந்த சபையில் தன் நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் இடது பக்க தொடை வஸ்திரத்தை விலக்கி திரௌபதியை பார்த்து சிரித்தான். அவள் பார்க்கும்படி தன் தொடையை ஆட்டினான். பீமனுக்கு ரௌத்திரம் பொங்கிற்று.

“ஒரு பெரும் யுத்தத்தில் இந்தத் தொடைகளை அடித்து உடைத்து நான் ரத்தம் குடிப்பேன். என் கதையால் உன் கால்களை சிதைப்பேன்” என்று சபதம் செய்தான்.

விதுரர் எழுந்தார். “என்ன ஒரு குரு வம்சம் இது! ஒரு பெண்ணை நடுசபையில் நிற்க வைத்து அவமானப்படுத்தி விவாதம் நடந்துக் கொண்டிருக்கிறது. நீ தோற்ற பிறகு அவர் திரௌபதியை தோற்றார். தன்னை தோற்ற பிறகு அவருக்கு மேலும் சூதாட எந்த உரிமையும் இல்லை.



> “கோவிந்தா, கோபாலா, துவாரகாவாசியே, ஆபத்பாந்தவா, அநாத ரட்சகா, சங்கடம் போக்கும் ஜனார்த்தனா, என்னை காப்பாற்றுங்கள். என்னை காப்பாற்றுங்கள்..” என்று பெரிதாக வாய்விட்டு அலறினாள். துவாரகாபுரியில் மனைவியோடு அமர்ந்திருந்த கிருஷ்ணருக்கு திரௌபதியின் பேரழுகை கேட்டது. அவர் தெருவில் இறங்கி ஓடலானார். தன்னை வஸ்திரமாக மாற்றிக் கொண்டு திரௌபதியின் புடவை தலைப்புக்குள் புகுந்து கொண்டார்.”

வேறு யாரையும் பணயம் வைக்கும் உரிமையும் இல்லை. எனவே, திரௌபதியை தோற்றவளாக கருதக் கூடாது” என்று உரக்கச் சொன்னார்.

“திரௌபதி, இதை நகுல, சகாதேவன், அர்ஜுனன், பீமன் சொல்லட்டும். உன்னை பணயம் வைத்துத் தோற்க தருமபுத்திரருக்கு உரிமை இல்லை என்று அவர்கள் சொல்லட்டும் நான் கேட்டுக் கொள்கிறேன். இவர் சொல்ல வேண்டாம்” என்று விதுரரை எள்ளி நகையாடினான் துரியோதனன்.

அர்ஜுனன் மெல்லிய குரலில் பேசினான்.

“தன்னைத் தோற்ற பிறகு அவர் வேறு யாரையும் பந்தயம் வைக்க முடியாது. வேறு யார் மீதும் அவருக்கு அதிகாரம் கிடையாது. இதைக் கௌரவர்கள் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.”

சபை மௌனமாக நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்து துரியோதனன் தம்பி விகர்ணன் என்பவன் எழுந்தான்.

“ஏன் திரௌபதி எழுப்பிய வினாவிற்கு யாரும் விடையளிக்காமல் மௌனமாக இருக்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. பலமுறை அவள் கேட்டும் நீங்கள் மௌனமாகவே இருக்கிறீர்கள். நீங்கள் ஏதேனும் ஆலோசனை சொன்னாலும் சொல்லாமல் போனாலும் நான் வாய்மூடி மௌனமாக இருக்கப் போவதில்லை. பேசப் போகிறேன். மதுபானம், சூது, பெண், சிற்றின்பம் என்பதில் ஈடுபட்ட எந்த மனிதனும் மோசமான இடத்திற்குத்தான் போகிறான். சூது ஒரு கெட்ட பழக்கம் என்று தெரிந்ததே. தருமபுத்திரர் தருமம் அறிந்தவர் எப்படி இதில் ஈடுபட்டார் என்பது எனக்குப் புரியவில்லை. தன்னைத் தோற்றபிறகு திரௌபதியை தோற்கடிக்க அவருக்கு என்ன உரிமை இருக்கிறது என்றும் புரியவில்லை. பந்தயம் அத்தோடு முடிகிறது. அதற்குப் பிறகு சகுனி எழுந்து பந்தயம் வைக்க திரௌபதி இருக்கிறாளே என்று ஞாபகப்படுத்த, இவரும் ஞாபகம் வந்ததுபோல் திரௌபதியை பந்தயம் வைக்கிறார். முடிந்துபோன விளையாட்டு மறுபடியும் துவங்குகிறது. அந்த ஆலோசனை தவறானது. குரூரமானது. கபடமானது. இது ஒரு ஏமாற்று வேலை. ஏன் நீங்கள் ஆட்சேபிக்கவில்லை” என்று உரக்க கத்தினான்.

“விகர்ணா... விகர்ணா... இது உன் வேலை அல்ல” கர்ணன் வேகமாக எழுந்தான். “உன் கையில் இருக்கின்ற கோடாரியால் காலை வெட்டாதே. அரணிக்கட்டையிலிருந்து தோன்றிய தீ அந்த அரணிக்கட்டையையே எரித்துவிடும். அதுபோல் நடந்து கொள்ளாதே. பூமியிலுள்ள புற்களை தின்கின்ற பசு தன் குளம்புகளால் புற்களை நசுக்குவதுபோல் உன்னுடைய கௌரவ குலத்தை நீ இழிவுபடுத்தத்தானே, வெல்லப்பட்ட திரௌபதியை வெல்லப்படாதவள் என்கிறாய்? தருமபுத்திரர்தான் தன்னுடைய எல்லாவற்றையும் சூதில் பணயம் வைத்துவிட்டாரே. அப்பொழுது இவள் எப்படி அந்நியமாவாள்? எனக்கு இருக்கின்ற அத்தனையும் வைக்கிறேன் என்று சொன்ன பிறகு இவள் எப்படி நகர்ந்து போவாள்? எல்லாம் என்று சொல்லுகிறபோது அதில் திரௌபதியும் அடக்கம்தானே? எப்படி அவளை வெல்லப்படாதவள் என்று சொல்கிறாய்? ஒற்றை ஆடையுடன் திரௌபதியை இழுத்து வந்துவிட்டான், மாதவிலக்கானவளை கொடுமைப்படுத்துகிறான் என்று பேசுகிறாயே. அவள் யார், ஒரே ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டவளா? இல்லையே! ஐந்து பேருக்கு மனைவியானவள். ஐந்து பேருக்கு மனைவியானவளை பத்தினி என்று அழைப்பதில்லை. வேசி என்றுதான் சொல்கிறார்கள். ஒற்றை ஆடையோடு மட்டுமல்ல. நிர்வாணமாகவே அவள் இங்கு கொண்டு வரப்படலாம்.

“எல்லோரும் பார்க்க நடந்த ஒரு சூதில் சூது தர்மப்படி சகுனி திரௌபதியை வென்று விட்டான். துச்சாதனா, இந்த விகர்ணன் ஒரு நிர்மூடன். பெரிய பண்டிதனைப் போன்று பேசுகிறான். நீ பாண்டவர்களுடைய ஆடையை ஏன், திரௌபதியின் ஆடையையும் அவிழ்த்து எறி.” என்று கர்ணன் கட்டளையிட்டான்.

பாண்டவர்கள் வஸ்திரங்களை தாமாகக் கழற்றினார்கள். துச்சாதனன் பெரியோர்கள் அமர்ந்திருந்த அந்த சபையில் திரௌபதியின் வஸ்திரத்தை பலமாக பற்றி இழுக்கத் துவங்கினான். வஸ்திரம் இழுக்கப்பட துவங்கியதும் உரத்த குரலில் திரௌபதி கிருஷ்ணனை நோக்கி அலறினாள். “கோவிந்தா, கோபாலா, துவாரகாவாசியே, ஆபத்பாந்தவா, அநாத ரட்சகா, சங்கடம் போக்கும் ஜனார்த்தனா, என்னை காப்பாற்றுங்கள். என்னை காப்பாற்றுங்கள்..” என்று பெரிதாக வாய்விட்டு அலறினாள். துவாரகாபுரியில் மனைவியோடு அமர்ந்திருந்த கிருஷ்ணருக்கு திரௌபதியின் பேரழுகை கேட்டது. அவர் தெருவில் இறங்கி ஓடலானார். தன்னை வஸ்திரமாக மாற்றிக் கொண்டு திரௌபதியின் புடவை தலைப்புக்குள் புகுந்துகொண்டார்.

அந்தப் புடவை தலைப்பை துச்சாதனன் பிடித்துக் கொண்டிருந்தான். இழுக்க இழுக்க அந்தப் புடவை வளர்ந்தது. பல்வேறு வர்ணங்களாக எவ்வளவு இழுத்தாலும் மேலும்மேலும் வளர்ந்தது. திரௌபதியினுடைய மானத்தை மறைத்தது. எத்தனை வேகமாக இழுத்தாலும் மிகப் பெரிய குவியலாக புடவை இருந்ததே தவிர சற்றும் குறையவில்லை. துச்சாதனன் கைக்கு வருவது நிற்கவில்லை. எவருக்கும் தெரியவில்லை. முற்றிலும் அது மூடியவாறு இருந்தது. துச்சாதனன் களைப்படைந்து விழுந்தான். மனிதருக்கு மிஞ்சிய காரியத்தில் நடந்த இந்த அதிசயம் கண்டு சுற்றியுள்ளோர் கை கூப்பி வியந்தனர். சகுனியையும், துச்சாதனையும் நிந்தித்தார்கள். விகர்ணனைப் புகழ்ந்தார்கள்.

“சபையில் இருக்கும் மன்னர்களே, என் பேச்சைக் கேளுங்கள். இதற்கு முன் நான் இப்படி பேசியதில்லை. இப்பொழுது சொல்கிறேன். என்னுடைய மனைவியின் புடவையை இழுத்த இந்த துச்சாதனனின் மார்பைப் பிளந்து இவன்

ரத்தத்தை குடிப்பேன். இது சத்தியம். இந்த சொல்லை. இந்தச் செயலை செய்ய முடிக்காது விடின் என் மூத்தோர்களுக்கு கிடைத்த உத்தம கதி எனக்கு கிடைக்காமல் போகட்டும்."

அதிசயம் நடந்த பிறகு எல்லோருடைய கவனமும் திருதராஷ்டிரன் மீது போயிற்று. திருதராஷ்டிரனுக்கு இந்த அதிசயம் சொல்லப்பட்டது. அவன் திகைத்துப் போனான். சுயம் வந்தவனாய் விழித்துக் கொண்டான். மன்னர்கள் அவனை ஏசுவதை காது கொடுத்து கேட்டான். இப்படி ஒரு செயல் நடக்க தடுக்காமல் இருக்கிறீரே என்று அவனை இகழ்வதை கண்டு உள்ளம் நடுங்கினான்.

"சிறிய பிள்ளை விகர்ணன் எழுந்து பேசிவிட்டான். ஆனால், இந்தச் சபை மௌனமாக இருக்கிறது. இங்குள்ள மன்னர்கள் அமைதியாக இருக்கிறார்கள். எதற்கு பயந்து என்று தெரியவில்லை. திரௌபதி தோற்கப்பட்டாளா, தயவு செய்து சொல்லுங்கள்" என்று கத்தினான்.

"துரியோதனா..." கர்ணன் எழுந்து தன் குரலை உயர்த்தினான்.

"இந்த அடிமை திரௌபதியை உன்னுடைய வீட்டிற்கு அழைத்துப் போ. இவள் இங்கிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இனி அவள் பேச்சு பொருள் அல்ல. இந்த விஷயம் முடிந்துவிட்டது" என்று உத்தரவிட்டான்.

துச்சாதனனால் திரௌபதி இழுக்கப்பட்டாள். அவளோ தரையில் விழுந்துவிட்டாள். தரையில் விழுந்தவளையும் அவன் தலைமுடி பற்றி இழுத்துப் போனான். மிகக் கேவலமான ஒரு காரியமாக அது இருந்தது. எந்தச் சபையிலும் நடக்கக் கூடாத ஒரு காரியமாக அது இருந்தது. எல்லா நாகரிகத்தையும் தவிடு பொடியாய் உடைத்த காரியமாக அது இருந்தது.

ஏன் இந்த சபை மௌனமாக இருக்கிறது? ஏன் இந்த சபை என்னை காப்பாற்ற முன் வரமாட்டேன் என்கிறது? எதனால் என் அவஸ்தையை பார்த்துக் கொண்டு நீங்கள் எல்லோரும் அமைதியாக இருக்கிறீர்கள்? அரசர்களின் தர்மம் எங்கே போய்விட்டது? திருஷ்டதுய்மன் சகோதரி, பாண்டவர்களின் பத்தினி, கிருஷ்ணருடைய பக்தை இப்படிப்பட்டவளை எப்படி ஒரு சபையில் எப்படி அலங்கோலப்படுத்த முடியும்?

அப்பொழுது பீஷ்மர் எழுந்து தர்மம் சூட்சமமான விஷயம் என்று பதில் சொல்லத் துவங்கினார்.

அப்போது அஸ்தினாபுர யாக சாலையில் ஒரு நரி புகுந்து பெரிதாய் ஊளையிட்டது. நரியின் ஊளை சத்தத்தை கேட்டு யாக சாலையை சுற்றியிருந்த கோவேறு கழுதைகள் பயத்தால் அலறத் துவங்கின. கழுதை கத்தலும், நரியின் ஊளையுமாக ஒரு மோசமான சப்தம் அங்குள்ள அனைவருக்கும் கேட்டது. அது நல்ல சகுனம் அல்ல என்பது எல்லோருக்கும் புரிந்தது.

திருதராஷ்டிரன் கவலையானான். சுற்றியுள்ள மன்னர்கள் நிந்திப்பதை காது கொடுத்துக் கேட்டான். மன்னர்கள் பேச்சால் கலக்கமடைந்திருந்தவன் மனதிற்குள் நரியின் ஊளையும், கழுதையின் ஓலமும் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தின. இப்பொழுது, தான் பேச வேண்டிய நேரம் என்று திருதராஷ்டிரன் உணர்ந்து கொண்டான். தாமதமானாலும் மிகச் சரியான வார்த்தைகளை பேசத் துவங்கினான்.



"துரியோதனா, முட்டாளே! குரு குலத்திற்கு நன்மை தராத விஷயங்களை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறாய். நான் எப்படிச் சொன்னாலும் உன்னிடம் எடுபடமாட்டேன் என்கிறது. தவறான வழிகாட்டுதலில் நடந்து கொண்டிருக்கிறாய். சொந்த சகோதரர்களின் மனைவியை இழுத்து வந்து அசிங்கம் செய்கிறாய். ஆபாசமாய் பேசுகிறாய். திரௌபதி... மகளே, என் மருமகளில் நீ சிறந்தவள். என்னிடம் ஏதாவது வரம் கேட்க வேண்டுமென்று இருந்தால் கேள். நான் நிச்சயம் செய்கிறேன்." என்று கை உயர்த்தி சத்தியம் செய்தான்.

"புருஷன் அடிமையானதால் அவர் மூலம் எனக்கு பிறந்த குழந்தைகளும் அடிமையாகி விட்டனர். பெற்ற மகன் அடிமையாக இருப்பது என்பது ஒரு தாய்க்கு சிறப்பு அல்ல. எனவே என்னுடைய புருஷனை அவருடைய அடிமைத் தளத்திலிருந்து விடுவிக்க வேண்டும். அவர் யாருக்கும் தாஸனல்ல என்று நீங்கள் சொல்ல வேண்டும்" என்று சொல்ல, அவன் சரி என்று சத்தியம் செய்தான்.

(தொடரும்)



மகாபாரதம்

40

போருக்குப் பாதையிட்ட இரண்டாவது சூது!

“இன்னொரு வரம் கேள். இதோடு போதும் என்று எனக்குத் தோன்றவில்லை. இன்னொரு வரமும் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். கேள். தயவுசெய்து கேள்” பழிபாவத்திற்கு அஞ்சிய திருதராஷ்டிரன் திரௌபதியைப் பார்த்து பதைபதைத்துக் கேட்டான்.

‘‘பீம, அர்ஜுன, நகுல, சகாதேவர் நால்வரையும் தயவுசெய்து விடுவித்து விடுங்கள். இந்த சூதில் அவர்கள் தோற்றவர்கள் இல்லை என்பதை அறிவித்துவிடுங்கள்.’’

“நிச்சயம் செய்கிறேன். அவர்கள் தோற்றவர்கள் அல்ல. அவர்கள் யாருக்கும் அடிமைகள் அல்ல. மூன்றாவது வரம் கேள். அதுவும் தருகிறேன். இரண்டு வரங்கள் போதாது” என்று துடிதுடிக்கலானான்.

“போதும். ஆசைக்கு அளவில்லை. நான்



தொடர்ந்து வரங்கள் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் கொடுத்தவரை மிகப்பெரிய சந்தோஷம். என் கணவர்கள் அடிமைகள் இல்லை என்பதே எனக்கு மிகப் பெரிய சந்தோஷம். இதை வைத்துக் கொண்டே நாங்கள் மேன்மை அடைவோம்."

துரியோதனன் திகைத்துப் போனான். ஒரு பெண் வரம் கேட்டதும் அவள் புருஷர்களை விடுவித்ததும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தன. பெரிய நாவாயிலிருந்து புயல் காற்றில் சிக்கிக் கொண்டவர்கள் தப்பித்துக் கொள்ள எப்படி ஒரு சிறு படகு உதவுகிறதோ அதுபோல இந்த பஞ்சபாண்டவர்களை இந்தப் பெண் காப்பாற்றிவிட்டாள். இந்தப் படகில் ஏறி அவர்கள் தப்பித்துவிட்டார்கள் என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு பேசினான்.

பீமனுக்கு அது கோபத்தைக் கொடுத்தது. பஞ்சபாண்டவர்களை காப்பாற்றியது ஒரு பெண்ணா! என் வீரத்திற்கு இவ்வளவுதான் மதிப்பா என்ற ஆத்திரம் எழுந்தது.

பஞ்சபாண்டவர்கள் மேலாடையை அணிந்து கொண்டார்கள். யுதிஷ்டிரர் கைகூப்பி திருதராஷ்டிரனுக்கு அருகே போனார். வணக்கம் சொன்னார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். கண் தெரியாத அவரிடம் இனிமையான வார்த்தைகளை நன்றியோடு பேசத் துவங்கினார். "உங்கள் ஆதரவிற்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறேன். இனி தொடர்ந்து என்ன செய்ய வேண்டும் என்பதையும் நீங்கள்தான் சொல்லவேண்டும். நீங்கள் சொல்வதுபடி நிச்சயம் செய்கிறேன். உங்களுடைய கருணைக்கு என் வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று பாதம் பணிந்தார்.

"தருமா, உன்னை குறித்து எனக்கு மிகப் பெரிய சந்தோஷம் ஏற்படுகிறது. கடுமையான காலங்களில்கூட மோசமான வார்த்தைகள் பேசாமல் எல்லா நேரமும் வினயமாக உன்னால் இருக்க முடிவது ஆச்சரியமாக இருக்கிறது. உன் தர்மம்தான் உன்னை காப்பாற்றி இருக்கிறது. மனதை கோரமாக்காமல் இந்த சம்பவங்களை பெரிதுபடுத்தாது நீ குளிர்ந்த மனதோடு சகலத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறாய். இது மிகப்பெரிய பேறு. என் பிள்ளை செய்த உபத்திரவத்தை மறந்துவிட்டு என் உபகாரத்தை புகழுகிறாய். இது எப்படி பாராட்டினாலும் தகும். தயவுசெய்து துரியோதனன் செய்த கடுமையான காரியத்தை மனதிற்குள் வைத்துக் கொள்ளாதே. அவனும், அவன் உடன் இருந்தவர்களும் பேசிய மோசமான வார்த்தைகளை நெஞ்சில் ஏற்றிக் கொள்ளாதே. இந்த சூதை நான் தடுக்க விரும்பினேன். அதற்கான முயற்சிகள் செய்தேன். ஆனால், என்னையும் மீறி சில விஷயங்கள் நடந்துவிட்டன.

"உன்னிடம் தர்மம் இருக்கிறது. அர்ஜுனனிடம் தைரியம் இருக்கிறது. பீமனிடம் பராக்கிரமம் இருக்கிறது. நகுல சகாதேவரிடம் சிரத்தையும், குருசேவையும் இருக்கின்றன. நீ காண்டவப்ரஸ்தம் போ. உன்னுடைய எல்லா செல்வங்களோடும் திரும்பிப் போ. அங்குபோய் சௌக்கியமாக உன் ஆட்சியை தொடர்ந்து நடத்திக் கொண்டிரு. துரியோதனன் மீது நீ கோபம் கொள்ளாமல் ஸ்நேக பாவத்தோடேயே இரு. இதுதான் நான் உனக்கு சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்."

இத்தனை பேச்சுக்கு நடுவிலும் திருதராஷ்

டிரன் தன் மகனை பாண்டவர்கள் ஏதும் செய்து விடக் கூடாது என்கிற பதட்டத்தையும் கொண்டிருந்தான் என்பதை அவன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. திருதராஷ்டிரன் நல்லவனாகவும் இருந்தான். கெட்ட பிள்ளைக்கு தகப்பனாகவும் இருந்தான்.

தருமபுத்திரர் திருதராஷ்டிரன் கட்டளையை ஏற்று தன் சகோதரர்களோடும், திரெளபதியோடும் தேரில் ஏறி இந்திரப்ரஸ்தம் நோக்கிப் பயணம் துவக்கினார்.

துரியோதனன் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தான். கர்ணன் கைகளை பிசைந்தபடி விஷயம் வேறு விதமாக முடிந்துவிட்டதே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். துச்சாதனனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சபை கலையத் துவங்கியது.

கெளரவர்கள் திகைத்துப் போனார்கள். தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த செல்வம் கண் எதிரே கரைந்து காணாமல் போவதைக் கண்டு பதறினார்கள். அதை வெளிப்படுத்த முடியாது வாய் பொத்தி மெளனமாக இருந்தார்கள். உள்ளுக்குள் பொருமினார்கள். “சே! இப்படி ஒரு தகப்பன் உண்டா? பெத்த பிள்ளைக்கு இப்படி ஒரு துரோகம் செய்வானா? ஆடும்பொழுது நம் பக்கம் ஜெயமா, நம் பக்கம் ஜெயமா என்று கேட்டவன்தானே, இப்போது இப்படியொரு காரியம் செய்து விட்டானே! முட்டாள், பயந்து போய்விட்டான். துச்சாதனன் துணி இழுக்க, துணி வளர, சபை அலற, அவள் அலற அவன் குழம்பிப் போய்விட்டான். துணி வளருகிறது என்றதும் பயந்து போய் விட்டான்.

“அவள் குறளி வித்தை தெரிந்தவள், கண் கட்டு வித்தை தெரிந்தவள். அதைக் கண்டு சபை வியந்தது என்றால் அதற்குப் பயந்து இந்த அரசன் இப்படி செய்திருப்பானா? நாங்கள் என்ன திரெளபதியை அவமானப்படுத்த வேண்டும் என்றா சூதாடினோம். இல்லை, பஞ்சபாண்டவர்களை அடக்கி உட்கார வைக்க வேண்டும். வீரம் வீரம் என்று பேசிக் கொள்கிறார்களே, அவர்களை அரை நிர்வாணமாக பார்க்க வேண்டும். அது அழகாக நடந்தது. திட்டமிட்டு நடந்தது. மாமனுடைய ஒவ்வொரு விரல் அசைவிலும் நடந்தது. சொல்லிச் சொல்லி நடந்தது. என்ன அற்புதமான ஆட்டம். மாமன் தவறு செய்திருந்தால் நம் பக்கம் தோல்வியுற்றிருந்தால் அப்பொழுது என்ன செய்திருப்பான் இந்த திருதராஷ்டிரன். அற்புதமான வெற்றி. கெடுத்து குட்டிச் சுவராக்கிவிட்டான்.”

எல்லோரையும் விட கர்ணன் தான் அதிகம் புலம்பினான். அவனுடைய அசூயை துரியோதனனைக் காட்டிலும் அந்த நேரம் அதிகமாக இருந்தது. அர்ஜுனனை கண்ட பயம், அவன் அஸ்திரங்களை கண்ட குலை நடுக்கம், முற்றிலும் அழிந்து போய் வெற்றி பெற்று விட்டோம் என்று இறுமாந்து இருந்த வேளையில் தனக்கு இணையாகச் சொன்ன வீரன் காணாது போனதைக் கண்ட நிலை, இப்பொழுது மறுபடியும் அவன் விடுவிக்கப்பட்டிருக்கிறான். போரில் சந்திப்பான் என்பதை நினைக்க அடிவயிற்றை பயம் கவ்வியது.



பாலகுமாரன்

பிரச்னை இப்பொழுது வேறு திசையில் போய் விட்டது. போர் வந்தால் யார் ஜெயிப்பார்கள்? சமஅளவு பலம் என்று ஒரு பேச்சு இருந்தது. இப்பொழுது அப்படியில்லை. வஞ்சம் தீர்க்கப்படுவார்கள். பழிக்குப் பழி, ரத்தத்திற்கு ரத்தம், அவமானத்திற்கு அவமானம். அடிக்கு அடி, உதைக்கு உதை என்று மிகுந்த சீற்றத்தோடு பீமனும், அர்ஜுனனும் போருக்குத் துணிவார்கள். விஷமுள்ள பாம்பு. இப்பொழுது அவமானப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தூக்கி கழுத்தில் போட்டுக் கொண்டா நிற்க முடியும்! அது கொத்தத்தான் கொத்தும், சீறத்தான் செய்யும். விஷம் கக்கத்தான் கக்கும். எப்படித் தப்பித்துக் கொள்வது அதைத்தான் யோசிக்க வேண்டும்.

தவறு நம்முடையது. ஜெயித்த குதூகலத்தில் திருதராஷ்டிரனை அடக்காமல் போய் விட்டோம். அப்புறப்படுத்தாமல் போய்விட்டோம். அந்தப் பெண்மணி ஓலமிட்டு அழுது ஜனங்களுடைய ஆதரவைப் பெற்றுவிட்டாள். சபைக்கு நம்மீது பயம் இருக்கிறது. பீஷ்மர்கூட கடுமையாக கண்டிக்கவில்லை. ஆனால், இந்த குருட்டு தகப்பன் காரியத்தைக் கெடுத்து விட்டான். கிருஷ்ணனுக்கு பயந்து விட்டான்.

கிருஷ்ணன் மூலம்தான் திரெளபதிக்கு மானம் காக்கப்பட்டது என்று பயந்து கிருஷ்ணனை தெய்வமாக நினைத்து, இது தெய்வ குற்றம் என பயந்து இந்தச் சூதிலிருந்து விலகி விளையாட வந்தவன் விலகியிருந்து

விட்டான். எங்களையும் விலக்கி விட்டான். இனி, அதே திருதராஷ்டிரனை வைத்துத்தான் நாம் மறுபடியும் ஏதாவது செய்தாக வேண்டும். விதுரரையோ, பீஷ்மரையோ துரோணரையோ அணுகி அல்லது அஸ்வத்தாமனை பார்த்துப் பேசி அல்லது சபையினுள் மற்ற அரசர்களிடம் உதவி கேட்டு இந்த விஷயத்தைத் தொடர முடியாது.

இதற்கு திருதராஷ்டிரன் நான் உதவி செய்ய முடியும். அவன் உத்தரவிட்டால்தான் யுதிஷ்டிரன் திரும்புவான். இன்னும் ஒரே ஆட்டம். ஒரே ஒரு ஆட்டம். ஒன்று நீ அல்லது நான். எந்த வகையிலான ஆட்டம்? செல்வம் அனைத்தையும் வைக்கிறேன். தோற்றுப் போனால் என் செல்வம் அனைத்தையும் உன்னிடம் கொடுத்துவிட்டு அஸ்தினாபுரத்தை உன் காலடியில் சமர்ப்பித்துவிட்டு நாங்கள் மான்தோல் உடுத்தி, மரஉரி தரித்து இந்த இடத்தை விட்டு நீங்கிவிடுகிறோம். வனவாசம் போய்விடுகிறோம். பன்னிரண்டு வருடம் வனவாசம். பிறகு ஒரு வருடம் அஞ்ஞாத வாசம் - மறைந்திருந்து வாழ்வு. அந்த மறைவு வாழ்வில் கண்டுபிடித்துவிட்டால் மறுபடியும் பன்னிரண்டு வருட வனவாசம். துரியோதனன், துச்சாதனன், நான், சகுனி, சகோதரர்கள் அத்தனை பேரும் காணாமல் ஒழிவோம். இன்னும் ஒரே ஒரு ஆட்டம். ஒரு ஆட்டம். அப்படி நீ ஜெயிக்காமல் நாங்கள் ஜெயித்தால் நீ பன்னிரண்டு வருட வனவாசம். ஒரு வருட அஞ்ஞாத வாசம். அந்த மறைந்திருந்த வாழ்வு நேரத்தில் உன்னை கண்டுபிடித்துவிட்டால் உன் இருப்பை நாங்கள் பார்த்துவிட்டால் மறுபடியும் பன்னிரண்டு வருட வனவாசம். சொல்லாமல் கொள்ளாமல் இந்த பஞ்சபாண்டவர்கள் காணாது ஒழிய வேண்டும். ஒரு ஆட்டம். இனி ஒரு ஆட்டம்...

அவர்கள் திருதராஷ்டிரனிடம் ஓடினார்கள். சூழ்ந்து கொண்டார்கள். மாறி மாறி பேசினார்கள். குருடன் தவித்தான்.

“நிலைமை கைக்கு மீறி போய் விட்டது. தவறுதான் நடந்து விட்டது. தலைக்கு மேல் போன இந்த விஷயத்தை நாம் மறுபடியும் தரைக்குக் கொண்டு வரவேண்டும். அவர்கள் கடும் வெஞ்சினத்தோடு போயிருக்கிறார்கள். நாலாபக்கமும் கோபத்தோடு பார்த்தபடி அர்ஜுனனும், பீமனும் கிளம்பியிருக்கிறார்கள். அந்தக் கோபம் நிச்சயம் நமக்கு அழிவைத் தரும். நாம் நிர்மூலமாவோம். யுத்தத்தில் அடிபட்டுச் சாவோம். ஏற்கனவே, விஷம் கக்கிய பாம்புகள் இனி வேகம் கொண்டால் என்ன கதி ஆவோம்? அவர்களைப் பேசி சமாதானப்படுத்த முடியுமா, பரிசளித்து இறக்க முடியுமா. ஐயா தவறு நடந்துவிட்டது. மன்னித்துக் கொள்ளுங்கள் என்று பேச முடியுமா, அதற்குண்டான திராணி நம்மிடம் இருக்கிறதா. மன்னிக்கும் குணம் அவனுக்கு இருக்கிறதா. இல்லை. இவன் நம்மை மன்னிக்கப் போவதும் இல்லை. நாம் மன்னிப்பு கேட்கப் போவதும் இல்லை. இந்த விஷயம் போரில்தான், வெஞ்சினத்தில்தான் முடியும். எப்படியும் கடுமையாகத் தாக்குவான். மரணம் நிச்சயம், சொல்லி சொல்லி அடிப்பான், அழிவு நிச்சயம்.

“நம் கர்ணனும், துச்சாதனும் மட்டும் அல்ல தந்தையே, நம் குலம் மொத்தமும் அழியும். நமது சேனை மொத்தமும் அழியும். அவர்கள் உன்னையும் அழிப்பார்கள். நீ தடுக்கவில்லை அல்லவா, உன்னால் அவள் மானபங்கத்தை நிறுத்த முடியவில்லையல்லவா, வேறு ஏதோ நடந்தது அல்லவா? அதனால் உன்னையும் விடமாட்டார்கள், பீஷ்மரையும், விதுரரையும், துரோணரையும், அஸ்வத்தாமனையும் விடமாட்டார்கள். சகலரையும் அடித்துக் கொல்வார்கள். ஆக, போர்தான் ஒரே வழி, அதுதான் முடிவு. போருக்குப் போவதற்கு முன்பு ஒரு ஆட்டம். ஒரே ஒரு ஆட்டம்...”

நான்கு பக்கமும் நாலாவிதமாகவும் அந்த நால்வர் பயமுறுத்த, அந்தக் குருடன் மதி மயங்கினான். தடுமாறினான். உட்கார்ந்திருந்த ஆசனத்தை இறுக்க பிடித்துக் கொண்டான். “போ, போய் தருமபுத்திரரை நான் அழைத்தேன் என்று கூட்டி வா. இன்னும் ஒரு ஆட்டம், ஒரே ஒரு ஆட்டம் போதும்” என்று வெறுப்போடு கூறி முடித்தான். காத்துக் கொண்டிருந்த நான்கு பேரும் காணாமல் போயினர்.

செய்தி பறந்தது. பாதி வழி தாண்டிய யுதிஷ்டிரரை திருதராஷ்டிரன் அழைப்பதாகச் சொல்லி மறுபடியும் திருப்பி அஸ்தினாபுரத்திற்கு அழைத்து வந்தார்கள். சூதாடும் துணி விரிக்கப்பட்டது. சூது துவங்கியது.

யோசித்துப் பார்த்தால் கௌரவர்களின் பலவீனம், அந்த பயம்தான் சகலத்திற்கும் காரணம். ஒரு உறவுமுறை என்பது அச்சத்தின்பாற்பட்டே கெட்டுப் போகிறது. தன்மீது நம்பிக்கை இல்லாது அடுத்தவரின் அன்பின்மீது சந்தேகம் கொண்ட எந்த மனிதனும் நிம்மதியாக இருப்பதில்லை. எதிரே இருப்பவன் நல்லவன் என்று நினைத்தால் போர் எழ வாய்ப்பில்லை. அப்படிப் போர் வந்தாலும் என்னால் உறுதியாக நிற்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தாலும் போருக்கு

> **“ பிரச்னை இப்பொழுது வேறு திசையில் போய்விட்டது. போர் வந்தால் யார் ஜெயிப்பார்கள்? சம அளவு பலம் என்று ஒரு பேச்சு இருந்தது. இப்பொழுது அப்படியில்லை. வஞ்சம் தீர்க்கப்படுவார்கள். பழிக்குப் பழி, ரத்தத்திற்கு ரத்தம், அவமானத்திற்கு அவமானம். அடிக்கு அடி, உதைக்கு உதை என்று மிகுந்த சீற்றத்தோடு பீமனும், அர்ஜுனனும் போருக்குத் துணிவார்கள். ”**

முனைப்பு வராது. இவை இரண்டும் இல்லாத போது போர் ஏற்படத்தான் செய்யும். பிரச்னை பெரிதாகத்தான் செய்யும். அப்படிப் பிரச்னை பெரிதாக, முக்கியமான காரணமாக கொடை வள்ளல் என்று கொண்டாடப்படுகின்ற கர்ணன் இருந்திருக்கிறான். அர்ஜுனனுடைய கம்பீரத்தை வெற்றிகளை பொறுக்க முடியாத ஒரு மனிதனாக இருந்திருக்கிறான். பாண்டவர்களுக்கு ஒருவராக இருந்திருக்க வேண்டிய கர்ணனாலேயே பாண்டவர்கள் பெரும் அவஸ்தைப்பட்டார்கள். மிகப்பெரிய சோதனைகள் கர்ணனால்தான் ஏற்பட்டன. அவனுடைய பயம் கலந்த ஆவேசம்தான் இந்த சூதுக்கும், போருக்கும் காரணம். கர்ணன் கொடை வள்ளல்தான். ஆனால், அது அவன் தகப்பன் சம்பாதித்தது அல்ல. தானமாகக் கிடைத்தது. வலது கையில் வாங்கி இடது கையில் கொடுத்துக் கொண்டிருந்தான். மற்றபடிக்கு அவன் வாழ்க்கை அர்ஜுனன் மீது கொண்ட துவேஷத்தாலேயே இருந்தது.

மிகச்சிறந்த ஒரு விஷயம் மகாபாரதத்தில் இந்த இடம்தான். அந்த ஆறு பேரும் ஒன்றாக இருந்தால் பரதக்கண்டத்தின் தலையெழுத்து மாறியிருக்கும். க்ஷத்ரியர்கள் இன்னும் பெரிய வலு பெற்றிருப்பார்கள். வேறு எந்த விதமான தர்மங்களும் தழைத்தோங்காமல் சனாதன தர்மத்தின் ஆவேசம் உலகை ஆண்டிருக்கும். கடவுள், மாபெரும் பிரபஞ்ச சக்தி, ஒரு சக்தியை பிய்த்து எதிர்பக்கம் போட்டது. அதை வைத்தே அழிவை நோக்கி க்ஷத்திரிய குலத்தை அழைத்துப் போனது. க்ஷத்திரிய குலத்தை அழிக்க வேண்டுமென்று அந்த சக்தி தீர்மானம் பண்ணியதால் இந்த கபட வேலை நடந்தது. தன் கண்ணை தன் கையால் குத்திக் கொள்கிறோம் என்று கண்ணுக்கும் புரியவில்லை. கைக்கும் புரியவில்லை. வலியே எஞ்சியது. ஆழ யோசிக்கும்பொழுது ஊழ்வினைதான் சகல பிரபஞ்ச அசைவுகளுக்கும் காரணம் என்று சொல்லப்படுகிறது. பிரபஞ்ச சக்தி தீர்மானம் செய்துவிட்ட பிறகு அதை மாற்றுவது என்பது நடக்காது என்று புரிகிறது. இதனாலேயே பீஷ்மரும், விதுரரும் மௌனமாய் விலகியிருந்தார்கள். மிகப் பெரிய கேவலம் ஒன்று நடந்தபோது அது சூட்சுமமான தர்மம் என்று வாதம் புரிந்தார்கள்.

> **மிகச்சிறந்த ஒரு விஷயம் மகாபாரதத்தில் இந்த இடம்தான். அந்த ஆறு பேரும் ஒன்றாக இருந்தால் பரதகண்டத்தின் தலையெழுத்து மாறியிருக்கும். க்ஷத்ரியர்கள் இன்னும் பெரிய வலு பெற்றிருப்பார்கள். வேறு எந்த விதமான தர்மங்களும் தழைத்தோங்காமல் சனாதன தர்மத்தின் ஆவேசம் உலகை ஆண்டிருக்கும்.**

தன்னைத் தோற்று என்னை வைத்தானா, என்னைத் தோற்று தன்னை வைத்தானா என்று கேள்விகளெல்லாம் எழவேயில்லை. யுதிஷ்டிரன், ‘தான்’ என்று சொல்லுகிறபோது அந்த தான் எனது, என் சர்வத்தையும் என்று சொல்லுகிறபோது அதில் திரௌபதியும் இருக்கிறாள் என்று ஒரு தர்மம் பேசப்பட்டது. மனைவி என்பவள் எந்த காலகட்டமாயினும், எந்த நேரமாயினும் கணவனுக்கு அடங்கியவள் என்று ஒரு விதி உறுதி செய்யப்பட்டது.

“மறுபடியும் சூதாட அழைத்தது திருதராஷ்டிரன்தானே.”

“ஆமாம்.”

“என் பெரிய தகப்பன்தானே.”

“ஆமாம்.”

“இது அவர் வாய்மொழிதானே.”

“ஆமாம்.”

“அவர் எனக்கிட்ட உத்தரவுதானே.”

“ஆமாம் உங்களுக்கிட்ட உத்தரவுதான்.”

“திருதராஷ்டிரன் யுதிஷ்டிரரான என்னை மறுபடியும் சூதாட அழைத்திருக்கிறார்?”

“ஆமாம். அப்படித்தான்.”

“உடனே வருகிறேன்.”

தந்தை வாக்கை காப்பாற்றுவது இங்கேயும் நடந்தது. கட்டளையிட்டால் நான் வந்துவிடுவேன் என்பது இங்கும் நடந்தது. ‘வர முடியாது போ, சூதாடும் விஷயம் முடிந்து விட்டது. பாதி தூரம் வந்த என்னை மறுபடியும் இவர் அழைப்பது என்ன நியாயம்? திருப்பி கொடுத்ததற்கு நன்றி. ஆனால், மறுபடியும் சூதாட அழைத்தால் நான் வரமாட்டேன். வர முடியாது போ,’ என்று சொல்ல, தர்மபுத்திரனால் ஆகாது. அது தர்மம் அல்ல. தந்தையின் பேச்சை மீறுவது தவறு எனவே யுதிஷ்டிரர் திரும்பினார்.

ஏன் மறுபடியும் போகிறீர். கொஞ்சமேனும் அறிவு இருக்கிறதா உமக்கு என்று பிற சகோதரர்கள் அந்த மூத்த சகோதரனை அதட்டவில்லை. கேட்கவில்லை. விதி வலியது என்று அவர்கள் போகவில்லை. எல்லாம் வல்ல மாபெரும் சக்தி இப்படி இருக்கிறது என்கிற தெளிவு அவர்களுக்கு இல்லை. இங்கு உலகாயதமான தர்மம்தான் முன் வைக்கப்பட்டது. இந்தப் பெரிய பிரபஞ்ச சக்தியின் சிறு துகள் நாம். அதனுடைய ஆட்டத்தில் அலைக்கழிக்கப்படுகிறோம் என்ற தத்துவ உபதேசம் இங்கு வரவில்லை. உலகத்தில் தந்தை ஒரு வாக்கு சொன்னால் அதை மகன் நிறைவேற்ற வேண்டும். தந்தையைப்போன்றே தமையன் முன்னின்று போவோம் என்று சொன்னால் சரி என்றுதான் மற்ற சகோதரர்கள் சொல்ல வேண்டுமே தவிர, அதுதான் தர்மமே ஒழிய, அதுதான் உலக நியதியே தவிர, அதை மீறி செயல்படக் கூடாது. உலகத்திலே யாருக்குமே வராத மிகப் பெரிய கேவலமான ஒரு அவமானம் அந்த சகோதரர்களை வந்தடைந்தது.

விளக்க முடியாத வலிவும்,

விவேகமும் கொண்டிருந்த அந்த சகோதரர்கள் பெரிய சபை முன்பு மனைவியை முன் வைத்து மனைவியின் முன்னால் மனைவியை இழிவுபடுத்தி அவமானத்தை அடைந்தார்கள். மற்றவர்கள் தன் மனைவியை தீண்டுகின்ற மிகப் பெரிய கேவலத்தை சகித்துக் கொண்டார்கள். அண்ணன் கிடக்கிறான் என்று சொல்லி எழுந்து துரியோதனன் நெஞ்சை மிதித்து நசுக்க பீமன் முயலவில்லை. கோபம் வந்தும் தர்மர் அடக்க அடங்கிப் போனான். அர்ஜுனன் அடக்க அமைதியானான். அவர்களுக்குள் பிளவு ஏற்படுத்த துரியோதனன் பேச்சால் முயற்சித்தபோதும் அது நடக்கவில்லை. அந்த தர்மபுத்திர சகோதரர்கள் ஒன்றாக, அமைதியாக சகலத்தையும் சகித்துக் கொண்டு நமக்குள் பிளவு ஏற்படக் கூடாது என்ற உறுதியோடு இருந்தார்கள். அந்த உறுதிக்கு மறுபடியும் சோதனை வந்தது. சூதாட அழைப்பு வந்தது.

மகாபாரதத்தில் மிக அற்புதமான இடம் இது. நிச்சயம் சகுனி வெல்லுவான். வெல்லுகின்ற வாய்ப்பு சகுனிக்குத்தான் இருக்கிறது என்று தெரிந்தும் அந்த சகோதரர்கள் அஸ்தினாபுரம் புகுந்தார்கள். ஆணையிட்டபடி சூதாடத் துவங்கினார்கள். என்ன விதி என்று தெரிந்து கொண்டார்கள். சகலத்தையும் துறந்து மான்தோல் தரித்து இந்த சபையிலிருந்தே, இன்றிலிருந்தே வனவாசம் மேற்கொள்ள வேண்டுமென்ற விதியை அவர்கள் சூதாட்ட பணயமாக வைத்தார்கள்.

சகுனியின் கையில் இருந்த பாய்ச்சிகை, சூது வஸ்திரத்தில் உருண்டது. சகுனி வென்றுவிட்டான். சபை முகத்தை பொத்திக் கொண்டு அழுதது. கௌரவர்கள் ஆரவாரித்தார்கள். பாண்டவர்கள் அமைதியாக இருந்தார்கள். இந்த அவமானம் அவர்களுக்கு அப்பொழுது பழக்கப்பட்டுவிட்டது. அவர்கள் இறுகிய மனத்தோடு குனிந்த தலையோடு மௌனமாக இருந்தார்கள். அவர்களுக்கு மான்தோல் ஆடைகள் தரப்பட்டன. அவற்றைத் தரித்துக் கொண்டு அணிந்திருந்த நூலாடைகளை மெல்லிய சரிகை வஸ்திரங்களை உதறி எறிந்தார்கள். திரௌபதி அந்த ஒற்றை ஆடையோடே இருந்தாள். அந்த ஆடையும் அழுக்கு படிந்திருந்தது. அவள் தலைமுடி வாரப்படவில்லை. கடந்த துக்கத்திலிருந்து அவள் மீளாதவளாகவே இருந்தாள்.

துச்சாதனன் ஆரவாரத்தோடு திரௌபதியின் அருகே போனான். "உனக்கு எதற்கு இனி இந்த ஐந்து புருஷர்கள், வேண்டாம். அவர்களைவிட்டு விலகிவிடு. வேறு யாரையேனும் புருஷனாக தேர்ந்தெடுத்துக் கொள். அவர்களோடு நல்ல படியாக அரண்மனையில் சுகமாய் வாழ்ந்து வா. இவர்களை பின் தொடராதே" என்று சொல்லி சிரித்தான். திரௌபதி தலைகுனிந்து நின்றிருந்தாள்.

"அபலையான பெண்ணிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் பேசுகிறாய். உன் நெஞ்சை உடைத்து ரத்தம் குடிப்பேன். மானின் ரத்தத்தை சிங்கம் குடிப்பது போல உறிஞ்சி உன்னுடைய



ரத்தத்தை குடிப்பேன். இது சத்தியம்" என்று பீமன் சபதம் செய்தான்.

துச்சாதனன் திரும்பி நின்று, அவனை கேலி செய்வதுபோல உடல் மொழியை வெளிப்படுத்தினான். பீமன் தலை தாழ்த்திக் கொண்டான். துரியோதனன் பீமனைப் போல குறுக்கும், நெடுக்கும் நடந்தான். அவனுடைய சிங்க நடையை அதிகமாக நடித்து கேலி செய்தான்.

பீமன் இப்பொழுது துரியோதனன் பக்கம் திரும்பினான். "வெகு நிச்சயம் உன் தொடையைப் பிளப்பேன். உன் தலையை காலால் மிதிப்பேன். உன்னை அடித்துக் கொல்வேன். உன் மரணம் என் கையால் இது உறுதி" என்று உரத்து கத்தினான்.

சபை ஹுங்காரம் செய்து ஆமோதித்தது. கௌரவர்கள் எதிர் கூச்சலிட்டார்கள். மந்த புத்தி உடையவன் போல திருதராஷ்டிரன் திகைத்துக் கிடந்தான்.

"துச்சாதனையும், துரியோதனனையும் நான் கொல்வது போல கர்ணனை அர்ஜுனன் கொல்வான். சகுனியை நகுலன் வெட்டி சாய்ப்பான்" என்று கட்டளை போல பீமன் உரக்க கத்த, அர்ஜுனன் முன் வந்து, "இச்சபையில் என் மனைவியை இழித்துப் பேசிய இந்த கர்ணனை, எங்களை அவமானப்படுத்திய கர்ணனை நான் கூரிய அம்புகளால் கொல்வேன். யார் கர்ணனுக்கு துணை வந்தாலும் அவர்களுக்கு மரணம் நிச்சயம். இது உறுதி. இது சத்தியம்," என்றான்.

சகாதேவன் எழுந்து வந்தான். "கேவலமான, குள்ளநரித்தனமான, கபடம் நிறைந்த, இந்த சகுனியை நான் கொல்வேன். போரில் வீழ்த்துவேன். இது சத்தியம்."

அந்த நால்வரின் மரணமும் அன்று அந்த சபையில் எழுதப்பட்டன. ஆனால், அதை அவர்கள் அறியாது இருந்தார்கள். ஆரவாரம் செய்தார்கள்.

தருமபுத்திரர் திருதராஷ்டிரனை நோக்கி நடந்தார்.

(தொடரும்)



மகாபாரதம்

41

திருதராஷ்டிரனின் குருட்டுத்தனம்



தருமபுத்திரர் திருதராஷ்டிரனை நோக்கி நடந்தார். கை கூப்பினார்.

"பந்தயப்படி நாங்கள் தோற்றுவிட்டோம். மான் தோல் உடுத்திக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு விடை கொடுக்க வேண்டும். எங்களை ஆசீர்வதிக்க வேண்டுகிறோம். நாங்கள் விடை பெறுகிறோம். உங்களை வணங்குகின்றேன்."

குருடனான தன் பெரியப்பன் முன்னால் அவர் நிதானமாகவும், அழகாகவும் தெளிவாகவும் பேசினார்.

திருதராஷ்டிரன் சிலையென அமர்ந்திருந்தான். அவனுக்கு விடை கொடுக்கவும் தெரியவில்லை. கை உயர்த்தி ஆசீர்வதித்தான். அதுவே விடையாக தருமர் எடுத்துக்கொண்டார்.

தருமபுத்திரர் விதுரரை நோக்கி நடந்தார்.

"தருமா, யுதிஷ்டிரா, நீ பரமனிடம் தர்ம பாடம் கேட்டவன். பல ஞானிகளோடு பழகியவன். வேதாந்த விஷயங்கள் ருசி உள்ளவன். வாழ்வு பற்றிய கவலையுடையவன். போர் மட்டுமே நோக்கமாக உள்ள மன்னனாக இல்லாது தர்மம்தான் மிகப் பெரிய கவசம் என்பதை தெள்ளத் தெளிவாகத் தெரிந்தவன். சிறிதும் பதட்டமின்றி வனம் போய் வா. வெள்ளி உங்களுக்கே உங்கள் சபதங்கள் நிறைவேறப் போகின்றன என்பதை நான் உணருகிறேன். உங்களுடைய தான தர்மங்கள் உங்களோடு வரும் உங்களுக்கு உதவி செய்யும். உங்களை பாதுகாக்கும். நல்லபடி போய் வா" என்று கை உயர்த்தி ஆசீர்வாதம் செய்தார் சபையும் ஆசீர்வதித்தது.

விதுரருடைய ஆசீர்வாதத்தை எல்லா பெரியவர்களுடைய ஆசீர்வாதமாக எடுத்துக் கொண்டு தர்மபுத்திரர் வாசல் நோக்கி நடந்தார்.

சில மன்னர்கள் அவர்களை கேலி செய்தார்கள். சிலர் அவர்களுக்காக பரிதாபப்பட்டார்கள். அரண்மனைக்கு வெளியே வந்ததும் ஜனக் கூட்டம் அவர்களை பரிதாபத்தோடு பார்த்தது. ஆட்சியாளர்களுக்கிடையே பிளவு ஏற்பட்டு அவர்கள் ஒருவரை ஒருவர் கசந்து கொண்டால் சாதாரண ஜனங்களுக்கு அபிப்ராயம் சொல்லக்கூட தோன்றாது. எது சரி, எது தவறு என்று அவர்களால் யூகிக்க முடியாது. மற்றவர்களுடைய அபிப்ராயம் என்ன என்று கேட்டு அதன்பாற்பட்டுத்தான் இவர்கள் அபிப்ராயம் வளரும்.

பதட்டமாக இருந்த திருதராஷ்டிரன்

விதுரரை அழைத்தான்.

“பாண்டவர்கள் எப்படி போகிறார்கள். என்ன மனோநிலையில் இருக்கிறார்கள்” என்று கலவரத்தோடு விசாரித்தான். சுற்றி நடக்கின்ற சப்தங்களால் அவனால் விஷயத்தை கிரகிக்க முடியவில்லை. யாரேனும் ஒருவர் அவனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியிருந்தது. விதுரர் அவனுக்கு பதில் சொன்னார்.

“தருமபுத்திரர் முகத்தை கைகளால் மூடிக்கொண்டு நடந்துபோகிறார். தன்னுடைய பார்வையில் கோபம் ஏற்பட்டு அவை யாரையும் தகித்துவிடக் கூடாது என்ற கவனத்துடன் நடந்து போகிறார். பீமன் தன் புஜங்களை பார்த்துக்கொண்டே போகிறான். இந்த புஜங்களினால் கௌரவர்களை அழிப்பேன் என்பதை திரும்பத் திரும்ப தன் மனதிற்குள்ளே உருவேற்றிக்கொண்டிருக்கிறான். அர்ஜுனன் நீண்ட சிந்தனையுடன், கலைந்த தலைமயிருடன் அவன் தலையிலிருந்து ரோமங்கள் மானங்களைப் போல உதிர்ந்துகொண்டிருக்கின்றன. தன் முகத்திலுள்ள அபிப்ராயத்தை தெரிவித்துக் கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தோடு தன் முகத்தில் களிமண்ணை பூசிக்கொண்டு சகாதேவன் நடந்து போகிறார். தன் மீது யாரும் பச்சதாபம் கொள்ளக்கூடாது. தன் வனப்பு பார்த்து ஐயோ இவ்வளவு அழகிய பிள்ளை காட்டிற்கு போகிறதே என்று யாரும் நினைத்துவிடக்கூடாது என்று தன் உடம்பு முழுவதும் மண் பூசியபடி தன்னை அலங்கோலப்படுத்திக்கொண்டு நகுலன் பின்தொடருகிறான். ஒற்றை ஆடையுடன் இவர்களுக்குப் பின்னே திரௌபதி குனிந்த தலை நிமிராது மிருதுவாக நடந்துகொண்டிருக்கிறாள்.”

“ஜனங்கள் என்ன சொல்கிறார்கள்?”

“அவர்கள் வாழ்க்கையின் மீது உள்ள பற்றை இழந்துவிட்டார்கள். போதும் போதும் இந்த வாழ்க்கை. போதும் இந்த அஸ்தினாபுரம். வீடுகளை விட்டு விட்டு வெளியேறி விடுவோம். இந்த வீடுகளில் இனி எலிகளும், பாம்புகளும் வசிக்கட்டும். இந்த வீடுகளில் இனி நல்லதுக்காக நெருப்பு எரியாமல் இருக்கட்டும். யாகமோ, ஹோமமோ, சமையலோ நடைபெறாது இருக்கட்டும். வீடு இடிந்து, சரிந்து வெறும் மண்மேடாகட்டும். நாம் பாண்டவர்கள் எங்கு வசிக்கிறார்களோ அங்கு வசிப்போம். அவர்களுக்கு ஏற்ற உணவை தானியங்களை முடிந்தவரை தூக்கிக்கொண்டு போவோம். ஒரு வனத்தில் தேவைப்படக்கூடிய சௌகரியங்களை அவர்களுக்கு செய்துகொடுப்போம். அதற்கான கருவிகளை வைத்துக்கொள்வோம் என்று பல விஷயங்களை சேகரித்துக்கொண்டிருக்கிறார்கள். வீட்டை விட்டு கிளம்ப தயாராகி விட்டார்கள். நகரமே நகர்ந்து அவர்கள் பின்னால் போவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. அந்த காலத்திற்கு செய்ய வேண்டிய பூஜைகளை பிராமணர்கள் நிராகரித்துவிட்டார்கள். இனி என்ன பூஜை என்ற அலுப்பு ஏற்பட்டு விட்டது.

எனவே நகரம் முழுவதும் இருளால் மூடப்பட்டதுபோல, களையற்றதாய், அலங்கோலமாய் காட்சியளிக்கிறது. கௌரவர்களை ஜனங்கள் மிக வேகமாக நிந்திக்கிறார்கள்.”

“கௌரவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?”

“அவர்கள் துரோணரை நோக்கி நடந்துகொண்டிருக்கிறார்கள்.”

“எதற்கு?”

‘விதுரர் திருதராஷ்டிரனை விட்டு கௌரவர்கள் துரோணரிடம் என்ன பேசுகிறார்கள் என்று கவனித்தார். துச்சாதனனும், சகுனியும், துரியோதனனும் தங்களுக்கு கிடைத்த காண்டவப்ரஸ்தம் என்ற நகரத்தை துரோணர் காலடியிலே ஆச்சாரியனுக்கு காணிக்கையாக வைத்தார்கள்.

துரோணர் சிரித்தார்.

“என் முடிவும் ஒன்றும் புதியதல்லவே. அது ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. என் நண்பனோடு சண்டை போட்டு அவனால் அவமானப்படுத்தப்பட்டு வெளியேறி அர்ஜுனனை உருவாக்கி அவன் மூலம் என் நண்பனான துருபதனை நான் சிறைபடுத்தினேன். அவன் அலங்கோலமாய் நிற்பதை பார்த்து கொக்கரித்தேன். ஒரு அந்தணனுக்கு எதிராக ஒரு க்ஷத்திரியன் நிமிர்ந்து நின்றுவிட முடியாது என்று வீரம் பேசினேன். அவன் காயம் பட்டான். மன்னித்து அவனுக்கு விடுதலை கொடுத்தேன்.

விடுதலை அடைந்தவன் தன்னுடைய இடத்திற்குப் போய் மிகப்பெரிய யாகம் செய்தான். அந்த அக்னியினுடைய விளிம்பிலிருந்து அவனுக்கு ஒரு மகன் தோன்றினான். அவனுக்கு திருஷ்ட்டித்யும்னன் என்று பெயர். அவன் என்னைக் கொல்வதற்காகவே உருவாக்கப்பட்டவன். என்னைக்கொல்ல வேண்டும் என்று துருபதன் வேண்டி பிறந்தவன். அந்த அக்னியின் மத்தியிலிருந்து திரௌபதி தோன்றினாள். என்னைக் கொல்வதற்காக திருஷ்ட்டித்யும்னனையும், தன்னை சிறைபிடித்த

பாலகுமாரன்

அர்ஜுனனை பாராட்டும் வண்ணமாக அவனுக்கு மணம் முடிக்க திரௌபதியையும் அந்த யாகத்தில் துருபதன் தோற்றுபித்தான். அது நடந்து முடிந்தது.

திரௌபதி அர்ஜுனனுக்கு வாழ்க்கை பட்டாள். ஐவருக்கும் உரிமையானாள். அர்ஜுனனின் மைத்துனனான திருஷ்ட்டித்யும்னன் மிக கம்பீரமாக வளர்ந்து வருகிறான். எவர் எங்கு போயினும் அவன் அர்ஜுனனுக்குத்தான் உதவி செய்வான். சம்பந்தி அல்லவா. தன் சகோதரியை கொடுத்தவனிடம் அவன் ஒருபோதும் பகை பாராட்ட மாட்டான். அவனுக்கு எதிராக யார் வந்தாலும் அழிப்பான். எனவே, அர்ஜுனனுக்கு எதிராக நான் போரில் இறங்கினால் என்னைக் கொல்ல திருஷ்ட்டித்யும்னன் இருக்கிறான்.

என் கதை எப்பொழுதோ முடிந்து போயிற்று. என்ன நடக்க வேண்டுமோ அது நடந்துகொண்டிருக்கிறது. முழுமனதாக உங்களுக்கு போரில் உதவி செய்வேன். உங்களை ஆதரிப்பேன். ஆனால், வெற்றி பெறுவேன் என்று சொல்வதற்கில்லை. பதினான்கு வருடங்களுக்குப்பிறகு நீங்கள் தோல்வி அடையப்போவது நிச்சயம். எனவே, இந்த மரியாதை நீங்கள் காட்டுகின்ற அன்பு எனக்கொன்றும் உவப்பாக இல்லை. வருத்தத்தைத்தான் கொடுக்கிறது'' என்று சொல்லி அமைதியானார்.

> **என் கதை எப்பொழுதோ முடிந்துபோயிற்று. என்ன நடக்க வேண்டுமோ அது நடந்துகொண்டிருக்கிறது. முழுமனதாக உங்களுக்கு போரில் உதவி செய்வேன். உங்களை ஆதரிப்பேன். ஆனால், வெற்றி பெறுவேன் என்று சொல்வதற்கில்லை. பதினான்கு வருடங்களுக்குப்பிறகு நீங்கள் தோல்வி அடையப்போவது நிச்சயம். எனவே, இந்த மரியாதை நீங்கள் காட்டுகின்ற அன்பு எனக்கொன்றும் உவப்பாக இல்லை. வருத்தத்தைத்தான் கொடுக்கிறது.**

''பனை மரத்தினுடைய நிழல் இரண்டரை நாழிகை. அவ்வளவுதான். இந்த சொற்ப நேரத்தில் நீங்கள் சந்தோஷமாக சுகபோகங்களை அணுகி உலக இன்பத்தை அனுபவியுங்கள். யுத்தம் தீர்மானமாகி விட்டது. இதிலிருந்து யாரும் பின்வாங்க முடியாது.''

துரோணர் சொல்வதை திருதராஷ்டிரனும் கேட்க நேர்ந்தது.

“துரோணர் சொல்வது உண்மைதான். எல்லாம் முடிந்துபோயிற்று. யுத்தம் வரப்போகிறது. அவர்கள் கோபத்தில் போயிருக்கிறார்கள். அவர்களை மறுபடியும் பேசி அழைத்து வா. அவர்கள் வராது போனால் பெரும்படையை அவர்களுக்கு அனுப்பு. அவர்கள் எல்லாவித சௌகரியங்களோடும் வனங்களை சுற்றி வரட்டும். அவர்களும் என் குழந்தைகள்தான். அவர்கள் துன்பப்படக்கூடாது.” என்று பேசினான். அவன் பேச்சு உளறலாக இருந்தது.

துரோணர் அவன் பக்கம் திரும்பினார்.

“இன்றைய செயலுக்கு காரணம் நீங்களே. உங்களாலேயே இந்த முடிவு ஏற்பட்டது. உங்களால் உங்கள் பிள்ளையை திருத்த முடியவில்லை. அவனுக்கு எதிராக செயல்பட முடியவில்லை. அவன் எப்படி ஆசைப்படுகிறானோ அதையெல்லாம் நிறைவேற்றுவதே உங்கள் வாழ்க்கையாகக் கொண்டிருக்கிறீர்கள். எது தர்மம் என்று உங்களுக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தாலும் புரிந்துகொள்ள விருப்பமில்லை. பிள்ளையின் பேச்சை கேட்பதே தர்மம் என்று இருந்து விட்டீர்கள். அதற்குண்டான பலன்களை உங்கள் பிள்ளைகள் அனுபவித்துதான் ஆகவேண்டும்.

திருதராஷ்டிரன் குருட்டுத்தனம்போல எல்லா மனிதர்களிடமும் இருக்கிறது. அறிவு வேலை செய்ய மறுக்கிறது. அந்த குருட்டுத்தனத்தால் இல்லாதது இருப்பதுபோலவும், இருப்பது இல்லாததுபோலவும் ஏற்படுகின்ற வேதனையைப்போல, அநியாயமானது நியாயம்போல, நியாயமானது அநியாயம் போலவும் தோன்றுகிறது. இந்த குழப்பத்தில் மாட்டிக்கொண்டவன் தவறு செய்யத்தான் செய்வான். தவறுக்குண்டான விளைவை, வினையை அனுபவிக்கத்தான் செய்வான்.

பாண்டவர்கள் தலை கலைத்து தோலாடை உடுத்தி அஸ்தினாபுரத்து அரண்மனையிலிருந்து ஒற்றை ஆடையுடன் பின்தொடர்கின்ற திரௌபதியோடு வெளியேறினார்கள். அஸ்தினாபுரத்தின் வடக்கு பக்கத்திலிருந்து விலகி நகர்ந்தார்கள். அஸ்தினாபுரத்து மக்கள் அவர்கள் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு கண்ணீர் சிந்த அவர்களை பின்தொடர்ந்தார்கள்.

இன்றல்ல என்றுமே அரசியலில் நேரிடையாக ஈடுபட முடியாத மக்களுடைய எதிரொலிப்பு ஒரு பெரிய ஊர்வலமாகத்தான் இருக்கிறது. மன்னர்கள் இரண்டு பேர் சூதாடுகிறார்கள். சூதாடுவது தவறு. அதை தடை செய்வோம் என்று அவர்கள் கிளம்பவில்லை. சூதாட்டத்தின் முடிவில் தோல்வியுற்ற பாண்டவர்கள் பின்னே அழுது, அரற்றியபடி ஊர்வலமாகப் போனார்கள். ஒருவேளை துரியோதனன் தோற்றுப் போனாலும் ஊர்வலமாக சில பேறாவது போயிருக்கக்கூடும். ஜனங்களுக்கு தோற்றவர் மீது

பரிதாபப்படுவது இயற்கை. என்ன, ஏது என்ற காரண காரியங்கள் முக்கியமில்லை. தோற்றவருடைய வருத்தம்தான் அவர்களை வருத்தமடைய வைக்கிறது.

ஆனால், அஸ்தினாபுரவாசிகளில் சிலர் விவேகமானவர்களாக இருந்தார்கள். பின் தொடர வேண்டாம் என்று யுதிஷ்டர் சொன்னபோது, கை கூப்பி,

“இனி எங்களுக்கு அஸ்தினாபுரத்தில் என்ன இருக்கிறது. வீடுகள் பாழாகட்டும். அதில் எலிகளும், பாம்புகளும் வசிக்கட்டும். இடிந்து பெரும் குப்பை மேடாக போகட்டும். அதுபற்றி எங்களுக்கு கவலையில்லை. துரியோதனன் இருக்கும் இடத்தில் நாங்கள் எப்படி வசிக்க முடியும்.

சுபாவமாகவே அவர் முன்கோபி. ஆத்திரப்படுபவர். அசூயை உள்ளவர். அவரைப் போன்றவர்களை தலைவர்களாக வைத்துக்கொண்டு வாழ்வது என்பது நடுக்கத்திற்குரியது. நல்லவர்கள் இத்தனைப் பேர் இருக்கும்பொழுதும் இம்மாதிரி செய்கைகள் நடைபெறுகிறது என்றால் அங்குள்ள நல்லவர்களுக்கு எந்த வலிவும் இல்லையென்றுதான் அர்த்தம். துரியோதனன் தானே அங்கு எல்லாம். இப்பொழுது தட்டிக்கேட்கக்கூடிய நீங்களும் அங்கு இல்லையென்றால் அஸ்தினாபுரம் என்ன ஆகும். எனவே, எங்களுக்கு அஸ்தினாபுரம் தேவையில்லை. நீங்கள் எங்கு போகிறீர்களோ அங்கு போவோம். அந்த இடத்தில் நகரம் அமைத்துக்கொள்வோம்.

> **பூமி பரந்தது. பல தாவரங்கள் நிறைந்தது. எத்தனையோ உயிர்கள் அந்த தாவரங்களின் அடிப்படையில் உயிர் வாழ்கின்றன. அத்தனை உயிர்களுக்கும் இந்த பூமியில் உணவு கிடைக்கும் பொழுது எங்களுக்க கிடைக்காதா. அதைப் பற்றி கவலைப்படாதே.**

எந்த சௌகரியமும் இல்லாத வனமாக இருந்தாலும் உத்தமமான தலைவன் இருந்தால் அந்த இடம் நாடாக மாறும் என்ற நம்பிக்கை அவர்கள் பேச்சில் இருந்தது.

யுதிஷ்டர் சோகமாக சிரித்தார்.

“நீங்கள் பேசுவது என்ன நியாயம். என்னை ஆதரித்த விதுரரும், துரோணரும், பீஷ்மரும், என்னைச் சார்ந்த மற்றவர்களும் அங்கு இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் ஆதரிக்க வேண்டாமா. காடு போக வேண்டும் என்ற கட்டளையை மேற்கொண்டு காடு போவது என்பதில் உங்கள் எல்லோரையும் அழைத்துப் போக வேண்டும் என்ற விதி இல்லையே. வீடு, வாசல் இடிந்து போகட்டும். பாம்பும், எலிகளும் விளையாடட்டும். இந்த நகரம் பாழாகப் போகட்டும். நாங்கள் உங்கள் பக்கம் வருகிறோம் என்பதில் ஒரு ஆவேசம்தான் இருக்கிறதே தவிர அறிவுடமை இல்லை.

அப்படியானால் நீங்கள் ஒன்று தீர்மானித்து விட்டீர்கள். மறுபடியும் காட்டிலிருந்து யுதிஷ்ட்ரன் நாட்டுக்கு வரப்போவதில்லை. பன்னிரெண்டு வனவாசம் முடித்து, ஒரு வருடம் அஞ்ஞாத வாசம் முடித்து பதினான்காவது வருடம் யுதிஷ்ட்ரனும், பஞ்ச பாண்டவர்களும் இங்கு வருவார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லை. இதோடு என் கதை முடிந்துபோயிற்று என்று என்னை பின்தொடர்கிறீர்கள். அப்படி நான் திரும்ப வருகிறபோது அஸ்தினாபுரம் என்னை வரவேற்க வேண்டாமா, மலர் மாரி பொழிய வேண்டாமா...? இப்பொழுது இருக்கின்ற சிறுவர்களெல்லாம் இளைஞர்களாக ஓடிவந்து எங்களை வணங்க வேண்டாமா.

நண்பர்களே, ஒரு நகரத்தை பாழாக்கிவிட்டு இன்னொரு நகரத்தை உருவாக்குவதுதான் இந்த பந்தயத்தினுடைய முக்கியமான குறிக்கோள் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. இந்த வனம் போதலுக்கு நல்ல காரணம் இருக்கிறது. எனவே, தயவு செய்து ஆவேசப்படாமல் நகரவாசிகளான நீங்கள் எங்களை பின்தொடராமல் இருக்க என் மீது ஆணையிட்டு கேட்டுக்கொள்கிறேன்.”

இந்த ஆணையிட்டு என்ற வார்த்தை அவர்களை அசைத்ததுபோலும். அவர்கள் அழுதார்கள். அரற்றினார்கள். பின் தொடராது அமைதியாக நின்றார்கள்.

நகரத்துவாசிகளுக்கு பின்னே அவர்கள் போகட்டும் என்ற அந்தணர்கள் பின்தொடர்ந்தார்கள். நகரத்து வாசிகள் ஒதுங்கி வழிவிட்டதும், அந்தணர்கள் நெருங்கி யுதிஷ்டரையும் பஞ்ச பாண்டவர்களையும் அடைந்தார்கள். தொடர்ந்து நடந்தார்கள்.

கங்கைக்கரையின் வடகரையில் பெரிய ஆலமரத்தின்கீழ் அந்திசாயும் நேரத்தில் அமர்ந்துகொண்டார்கள். அந்தி நேரத்தின் நீர் கடன்களை முடித்தார்கள். கையில் கொண்டு வந்திருந்த உணவுகளை உண்டார்கள். பைசாசங்களும், பூதங்களும் அலைகின்ற அந்த வேளையில் அக்னி வளர்த்து மந்திரங்கள் சொல்லி மாலை நேர பிரார்த்தனை முடித்துக் கொண்டு ஓய்வாக அமர்ந்தார்கள்.

“நகரவாசிகளுக்கு இதம் சொன்னேன். அவர்கள் கேட்டுக் கொண்டு திரும்பி விட்டார்கள். எல்லாம் அறிந்த அந்தணர்களான உங்களுக்கு என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. எவ்வளவு தூரம் நீங்கள்

எங்களை பின் தொடரப் போகிறீர்கள் என்று புரியவில்லை. உங்களால் வனவாசத்தை மேற்கொள்ள முடியுமா. காடு என்பது விஷ ஜந்துக்களும், கொடிய மிருகங்களும் உடையது. இத்தனை பெரிய கூட்டத்தை எங்களால் காப்பாற்றி அழைத்துப் போக முடியுமா. அந்தணர்களுக்கு சரியான நேரத்தில் உணவு கொடுக்காமல் போனால் அது அரசனுக்கு மிகப் பெரிய பாவமில்லை. எவரையும் தீண்டும் விஷமல்லவா அது. தயவு செய்து இதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற வழியை எனக்கு நீங்கள் காட்ட வேண்டும்."

"காடுகளில் காய்களும், பழங்களும், கிழங்குகளும் இருக்கின்றனவே. சில உத்தமமான இலைகளும் உணவாகுமே" என்று அந்தணர்கள் சொல்ல, அவர் மறுத்து சிரித்தார்.

அந்தணர்கள் திருப்தியுரும் வண்ணம் உணவிட வேண்டும் என்பது தான் இந்த உலகின் கொள்கையாக இருக்கிறது. எப்போதும் உங்களைப் போன்ற கற்றறிந்தோர் தான் உலகத்தை வழி நடத்துகிறார்கள். உலகத்தின் தர்மத்தை பேணி காக்கிறார்கள். உங்களுக்கு கிழங்கும், அரை வயிறு உணவும் எப்படி போதும். அது தர்மத்திற்கு குந்தகம் அல்லவா விளைவிக்கும். தயவு செய்து சொல்லுங்கள். இந்த நேரத்தில் நான் என்ன செய்வது?

"தர்மா, வேதத்தின் அடிப்படை சாரமான ஒரு தத்துவ விஷயத்தைச் சொல்கிறேன் கேள். மனிதருக்கு திருப்தி என்று எதில் உண்டாகும். அந்தணர்கள் திருப்தியாகும் வரை உணவு இட வேண்டும் என்று சொன்னாய். எந்த மனிதருக்கு எதில் திருப்தி ஆகும்." ஒரு அந்தணர் பேசினார்.

"திருப்தி என்பது உடல் கூற்றா. இல்லை அது மனம் தான் தேகம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறவனுக்குத்தான் பிணி என்பது பெரிதாகிறது. பிணி என்பது பெரிதாகும் போதுதான் மனக்கிலேசங்கள் பெரிதாகின்றன. மனம் மயக்கமுற்று தவிக்கிற போது அலங்கோலப்படுகிற போது தர்மத்தைப் பற்றிய கேள்விகள் வந்து விடுகின்றன. தர்ம பிழற்சியும் ஏற்பட்டு விடுகிறது. கொன்றால் தான் உணவு என்றால் கொன்று தின்றுவது மிக முக்கியமான விஷயமாக போய் விடும். உயிரின் வலியும், வேதனையும் அப்பொழுது நெல் முனையளவும் தெரியாது.

ஆக, இங்கே தான், உடம்பு, தன் பசி என்கிற பாவத்தினாலேயே இந்த தொல்லைகள் ஏற்படுகின்றன. தன் உடம்பு பற்றின பிரஞ்ஞை இல்லாது தன் மனதை ஆத்மாவில் லயிக்க விடுகிறவனுக்கு இந்த பிரச்னை எழாது. இதை தெளிவாகவும், தீர்மானமாகவும் கற்று வைத்திருக்கிற அந்தணர்களுக்கு நீ சொல்கிற கஷ்டம் எதுவும் இல்லை. எனவே, எங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். என்ன கிடைத்ததோ அதைப் பற்றி அக்கறையில்லாமல் உண்ணுவதற்கு தெரியும். நல்ல அந்தணன் அரிசி உணவையும் அருமையாக உண்பான். வெறும் நீரையும் குடித்துவிட்டு உயிர் வாழ்வான்.



பூமி பரந்தது. பல தாவரங்கள் நிறைந்தது. எத்தனையோ உயிர்கள் அந்த தாவரங்களின் அடிப்படையில் உயிர் வாழ்கின்றன. அத்தனை உயிர்களுக்கும் இந்த பூமியில் உணவு கிடைக்கும் பொழுது எங்களுக்கு கிடைக்காதா. அதைப் பற்றி கவலைப் படாதே." என்று மிருதுவாகப் பேசினார்.

யுதிஷ்ட்ரர் அவர் பேச்சை ஏற்றுக்கொள்ளவில்லை.

"நன்றாக இருக்கிறதே. மாமரத்திலிருந்து ஒரே ஒரு செங்காயை பறித்து ஒரு அந்தணனுக்கு கொடுத்து பசியாறுங்கள் என்று சொல்லுகின்ற கடின புத்தி என்னிடம் இல்லை. இதுவரை நான் கொடுத்து கொடுத்தே பழக்கப்பட்டவன். உங்களுக்கு கொடுக்க முடியவில்லை என்கிற போது எனக்கு துக்கம் மண்டுமே... அதை நான் எவ்வாறு தீர்ப்பேன். எவ்விதம் சகித்துக் கொள்வேன். இதுவே என்னை அயற்சியுச் செய்து விடுமே.

நீங்கள் சொல்லுகின்ற தத்துவ விஷயங்கள் எனக்கு புரிகின்றன என்றாலும் அடுத்தவருக்கு கொடுத்து கொடுத்து பழக்கப்பட்ட என்னைப் போன்ற க்ஷத்திரியனுக்கு அதுவும் அந்தணருக்கும் மரியாதையாக வழங்கி பழக்கப்பட்ட என்னைப் போன்ற க்ஷத்திரியனுக்கு அப்படி கொடுக்க முடியவில்லை என்பது மிகப் பெரிய தாபம். ஆகவே தான் இதோடு நின்று விடும்படி உங்களை மன்றாடி கேட்டுக் கொள்கிறேன்.

(தொடரும்)

மகாபாரதம்

42

பரப்பிரம்மமாகிய சூரியனை வணங்கு!

யுதிஷ்டிரர் தொடர்ந்தார்: "நல்ல உணவு என்பது முக்கியம். இத்தனை அந்தணர்கள் பின் தொடர்கிறபோது அவர்களுக்குத் தேவையான உணவு பற்றிய சிந்தனையே எனக்கு இருக்குமே தவிர, வேறு எந்த சிந்தனையும் என் மனதை நிரப்பாது. நான் இந்த வனத்தின் தனிமையை அனுபவிக்க முடியாது. எனவே, உங்கள் எல்லோரையும், இதற்குமேல் வந்தோரையும் நான் பசி தீர்க்க வேண்டும். என்ன செய்யலாம்?"

"நீங்கள் எங்களை பராமரிப்பீர்கள் என்றா நாங்கள் இந்த பூமியில் பிறந்தோம்? அப்படிப்பட்ட எண்ணம் இருந்தால் அதை நீக்கி விடுங்கள். ஒவ்வொரு உயிரும் தன்னை பராமரித்துக் கொள்ளும் என்பதை புரிந்து கொள்ளுங்கள். கொடுக்க வேண்டும் என்ற தாபம் உங்களுக்கு பழக்கத்தால் ஏற்பட்டது. அதை மெல்ல நீக்கி விடுங்கள்," என்று சௌனகர் என்ற அந்தணர் சொன்னார். "பற்றுதான் துக்கத்திற்கு முதல் காரணம்.



உடம்பு பற்றிய பற்று பல்வேறு விதமாகக் கிளம்பி அதிகாரம், துவேஷம், அரண்மனை, படைவீடு என்றெல்லாம் கிளம்பும். பற்று இல்லாதவன் தாமரை இலை தண்ணீர் போல இருப்பான். பற்றுதான் துக்கத்திற்கு முதல் காரணம். உடம்பு பற்றிய பற்று இல்லாதவன் தாமரை இலை தண்ணீர் போல இருப்பான். இந்த பூமியில் ஒட்டியும், ஒட்டாமலும் இருப்பான். செல்வம் என்கிற விஷயத்திற்கும், நீங்கள் அரசன் என்கிற கம்பீரத்திற்கும் நாங்கள் உங்களோடு இருப்பதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. செல்வம் உள்ளவனுக்கு மிகப் பெரிய துக்கம் எப்போதும் உண்டு. அரசனுக்கு மதிப்பு ஏற்படுவதற்கு காரணம் செல்வம்தானே. அதுதானே படைபலமும்.

“செல்வந்தனை எல்லோரும் பிடுங்கித் தின்பார்கள். மாமிசத் துண்டை வானத்தில் பறக்கும் பறவையும், நீரில் வாழும் மீனும், தரையில் இருக்கின்ற புழுவும், நாயும், நரியும் எப்படி பிடுங்கித் தின்னுமோ, எப்படி தனக்கு என்று அதை சுவாதீனமாக்கிக் கொள்ளுமோ அதேபோல செல்வந்தனுடைய செல்வத்தை பலபேர் கொத்தி பிடுங்குவார்கள். செல்வத்தால் மிகப் பெரிய கவலையும், துக்கமும்தான் ஏற்படும்.

“இப்பொழுது நீங்கள் செல்வம் இல்லாத அரசன். வனவாசம் போய்க் கொண்டிருக்கிறீர்கள். உங்களை பின்தொடர்ந்து வரும்போது தத்துவ விஷயத்தை பேசுவதற்கு எளிதாகத்தான் இருக்கும். எங்கள் உணவை நாங்கள் கவனித்துக் கொள்ள, உங்கள் உணவை நீங்கள் கவனித்துக் கொள்ள அவரவருக்கு கிடைத்ததை அவரவர் உண்டு கொண்டிருக்க, இவ் வேளைகளில் நாம் பேசுவதற்கு எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன. தர்மம் செய்ய பொருள் சம்பாதிக்க வேண்டும் என்ற கூற்று அபத்தமானது. சேற்றை முகத்தில் அப்பிக் கொண்டு அதன் பிறகு முகத்தை கழுவுவதை விட சேற்றை தொடாமல் இருப்பது நல்லதல்லவா?” என்று சௌனகர் உரத்துக் கூறினார்.

யுதிஷ்டிரர் கை கூப்பி மறுத்தார். “நான் கிரகஸ்தன். ஒரு கிரகஸ்தனுடைய வீட்டில் உட்காருவதற்கு இடம், குடிப்பதற்கு நீர், உண்பதற்கு சோறு, நித்திரை கொள்ளும் வசதி, நிச்சயம் இருக்க வேண்டும். வருகின்ற அதிதிக்கு இதை ஒரு கிரகஸ்தன் வழங்க வேண்டும். தனக்காக உணவு சமைப்பது என்பது கிரகஸ்தனுக்கு இல்லவே இல்லை. அவன் தேவர்களுக்கும், முன்னோர்களுக்கும், அதிதிகளுக்கும், தன் குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும், தன் மனைவிக்குமாக அவன் உணவு தயார் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறான். இது ஒரு மகாயக்ஞம். இது ஒரு வேள்வி. கிரகஸ்தன் என்கிற விஷயத்தை அனுசரிப்பது யாகத்திற்கு ஒப்பானது. அதில் பிசிறே வரக்கூடாது. இன்றைக்கு உணவு இல்லை என்று ஒரு அதிதிக்கு சொன்னால் அவருடைய நெஞ்சுக் கனல் மொத்த புண்ணியங்களையும் விழுங்கிவிடும். அவ்வளவு சக்திவாய்ந்தது. எனவே, அதிதிக்கு இல்லை என்று சொல்லவே கூடாது. சொல்ல கிரகஸ்தனுக்கு மனம் வராது.

அதிதிக்கு கண் கொடு, மனதை கொடு, இனிய வாக்கை அளி. அவன் உனது வீட்டை விட்டுச் செல்லும் போது சிறிது தூரம் அவனோடு செல். அவன் வீட்டில் இருக்கும்பொழுது அவனோடு இரு. வெளியே போகாதே. மனதால் அவனைப் பற்றி நன்றாக நினைப்பதும், அவனுக்கு இனிய வாக்கை அளிப்பதும் அவனோடு வீட்டை விட்டு வெளியேறுவதும், அவன் வீட்டில் இருக்கும்போது அவனுக்கு காவலாக இருப்பதும் மிகப் பெரிய வேள்வி. யக்ஞம். இதனால் மிகப் பெரிய புண்ணிய பலன் கிடைக்கிறது.”

“யுதிஷ்ட்ரா, மறுபடியும் உலகாயதமன புண்ணிங்களைப் பற்றியே பேசுகிறாய். அக்னிஹோத்ரம் முதலிய காரியங்கள் செய்வதாலும், மந்திர ஜபங்கள் செய்வதாலும், புலன்களை அடக்கி ஆத்மத்தில் மனதை வைப்பதாலும் கிடைக்கின்ற ஐஸ்வர்யம் பற்றி உனக்கு பேசவே தோன்றவில்லை. அதிகாரத்தாலும், யுத்தத்தாலும் கிடைக்கின்ற செல்வங்கள் மாத்ரு, பித்ரு வகையைச் சேர்ந்தவை. உலக மயமானவை. வேறு ஒரு ஐஸ்வர்யம் உண்டு யுதிஷ்டிரா. அந்த ஐஸ்வர்யம் இருந்தால் உன் சந்நதியில் பசியே எடுக்காது. அந்த யோக சித்தியை அடைய முயற்சி செய்யுங்கள். அப்படிப்பட்ட சித்தர்கள் எது விரும்பினாலும், எங்கு விரும்பினாலும் அது கிடைத்துவிடும். எனவே, தவம் செய்து உங்களுக்கு வேண்டியதை பெற்றுக் கொள்ளுங்கள். மற்றபடிக்கு கொடுக்க வேண்டுமே. அது பழக்கமாயிற்றே என்று புலம்ப வேண்டாம்,” என்றார்.

ஆனால், யுதிஷ்டிரர் விடுவதாக இல்லை. “இதெல்லாம் இப்பொழுது முடியாத காரியம், நாளை காலை எனக்கு உணவு அளிக்க எந்த வகையும் இல்லை. எந்த யோக்கியதையும் இல்லை. இப்பொழுது இரவு என்னால் தூங்க முடியாது. இத்தனை பிராமணருக்கும் நாளை காலை

பாலகுமாரன்

நான் எப்படி உணவு வழங்குவேன் என்கிற அவஸ்தையே என்னை உறக்கம் இல்லாமல் செய்துவிடும். இந்த நேரம் எந்த தபஸும் செய்யாத, ஒரு அரசனாக, சாதாரண மனிதனாக இருக்கின்ற இந்த நேரம் வனவாசம் போய்க் கொண்டிருக்கின்ற இந்த நேரம், என்னை இத்தனை பிராமணர்கள் பின்தொடர்கிறார்களே இந்த நேரம் நான் என்ன செய்ய வேண்டும்? எனக்கு என்ன வழி?"

மகாபாரதத்தில் மிக அற்புதமான விஷயம் இது. மகாபாரதம் போர்க்கதை அல்ல. அது மிகப்பெரிய தத்துவச் சுரங்கம். சௌனகர் என்கிற அந்தணர் நல்லது சொன்னாலும் இந்த க்ஷணம் அது முடியாத காரியம். எனக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை இப்போது கூறு என்று ஒரு அரசனாக யுதிஷ்டிரர் கேட்பது மிக உயர்ந்த பண்பு. சௌனகர் அதற்கு பதில் சொன்னார். இப்போது தத்துவ விஷயங்கள் முற்றிலும் உடைந்து பக்தி என்கிற விஷயத்தை சனாதான தர்மம் உரத்து சொல்கிறது.

> "இப்பொழுது நீங்கள் செல்வம் இல்லாத அரசன். வனவாசம் போய்க் கொண்டிருக்கிறீர்கள். உங்களை பின்தொடர்ந்து வரும்போது தத்துவ விஷயத்தை பேசுவதற்கு எளிதாகத்தான் இருக்கும். எங்கள் உணவை நாங்கள் கவனித்துக் கொள்ள, உங்கள் உணவை நீங்கள் கவனித்துக் கொள்ள அவரவருக்கு கிடைத்ததை அவரவர் உண்டு கொண்டிருக்க, இவ்வேளைகளில் நாம் பேசுவதற்கு எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன.

உலகத்தில் அத்தனை உணவுக்கும் காரணமானவன் சூரியன். அவனாலேயே உணவு இந்த பூமியில் விளைகிறது. அவனாலேயே பசி எடுக்கிறது. அவனாலேயே பசி அடங்குகிறது. அவனே நீர். அவனே காற்று. அவனே விளைநிலம். அவனே காய்கள், கனிகள், பழங்கள், புற்கள் பசுக்கள் எல்லாம். இப்படிப்பட்டவனை தியானிக்கும்போது அவன் மனமுவந்து உங்களை ஆசீர்வதிப்பார். பசிதீர வழி சொல்வார். உணவு கொடுக்கும் பரம்பிரம்மமாகிய சூரியனை வணங்கு என்று ஓர் அழகான தேவதை உபாசனையை சௌனகர் யுதிஷ்டிரருக்குச் சொன்னார். "நூற்றியெட்டு போற்றிகள் சூரியனை குறித்து இருக்கின்றன. மனம் அடக்கி, புலன் அடக்கி உள்ளுக்குள் ஒன்றுகூடி இந்த நூற்றியெட்டு போற்றியை விடியல் நேரம் சொன்னால் நிச்சயம் சூரியன் உன் முன்பு தோன்றி வரம் தருவார், பசி தீர்க்கும் வழி சொல்வார்."

நூற்றியெட்டு போற்றிகளை சௌனகர் யுதிஷ்டிரருக்குச் சொல்லிக் கொடுக்கிறார். அவை சகலரும் மனப்பாடம் செய்ய வேண்டிய போற்றிகள். ஒவ்வொரு மனிதனும் தூய்மையான மனதோடு சூரியனை நோக்கி பிரார்த்தனை செய்தால் வெகு நிச்சயம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

மறுநாள் யுதிஷ்டிரர் அவ்வாறு ஈடுபட சூரியனை நோக்கி வேண்ட ஒளிமயமாக சூரியன் அவர் முன்பு தோன்றினார். பசியைக் குறித்த அவர் தாபத்தை புரிந்து கொண்டு ஒரு தவலையை பரிசளித்தார். அந்த தவலையில் ஒரு நாளைக்கான உணவு எத்தனை பேர் வந்தாலும் குறையாது இருக்கும். அதில் காய்கறிகளை போட்டு கொதிக்க வைத்தால் பன்மடங்காக பெருகும். நூறு, இருநூறு முன்னூறு பேரும், சில காய்கறிகளை பெருக்கி உண்டு விடலாம். வரும் விருந்தினர் அனைவருக்கும் கொடுத்து, சகோதரர்களும் உண்டு. தர்மபுத்திரர் உண்ட பிறகு, திரௌபதி உண்டால் அன்றைக்கு அந்த தவலை தன் வேலையை முடித்துக் கொள்ளும். உணவு உற்பத்தியை நிறுத்திக் கொள்ளும். திரௌபதி சாப்பிடுகிற வரை அதில் உணவு இருக்கும். தர்மபுத்திரருக்கு வரமாக அந்த பாத்திரம் தரப்பட்டது.

'கொடுப்பது பற்றி ஏன் அலட்டிக்கொள்கிறாய்? நீதான் கொடுக்கிறாய் என்று ஏன் நினைக்கிறாய்? அந்தந்த உயிர்கள் பார்த்துக் கொள்ளுமே! நீ என்ன சம்ரட்சணை செய்வது?' என்று வெவ்வேறு விதமாக பிராமணர்கள் யுதிஷ்டிரரை தேற்றினாலும், யுதிஷ்டிரர் தன்னுடைய தர்மம் தானம் தருவது, போற்றுவது, தன்னை நம்பி வருபவருக்கு உணவிடுவது என்று திடமாக இருந்தார்.

அந்த அந்தணர்கள் அதற்கும் அவருக்கு உதவி செய்தார்கள். அவருடைய மனப்போக்கின்படி பக்தியை அவருக்கு உபதேசித்தார்கள்.

தத்துவ விசாரம் முடிந்து பக்தி ஆரம்பிக்கிறது. வேண்டுபவற்றை பக்தியின் மூலம் பெறுவது நடக்கிறது. எனக்கு வேண்டுதலே இல்லை என்று சொல்வது ஒரு நிலை. அப்படி வேண்டுதல் என்ற நிலை வந்தால் அதற்கு பதில் பக்திதான், இறைஞ்சுதல்தான், இறைவனை நாடுவதுதான், கையேந்தி கேட்பதுதான்.

இறைவன் வள்ளலுக்கெல்லாம் வள்ளல். அவன் வாரி வழங்குகிறான். சூரியன் என்கிற தேவதை தர்மபுத்திரருக்கு அந்த தவலையை பரிசளித்தான். தர்மபுத்திரர் அன்றைய உலையில் ஏற்றி சமைக்கத்துங்கினார். அந்தணர்கள் அறுசுவையோடு உண்டார்கள். திரௌபதி சாப்பிட்டு முடித்ததும் அந்தத் தவலை சுத்தமாகியது.

(தொடரும்)

புத்திரபாசத்தால் மகனே கெட்டழியலாமா?



மகாபாரதத்தில் திருதராஷ்டிரனுடைய பாத்திரம்தான் மிகவும் பரிதாபத்துக்குரியது. இயற்கையிலேயே பார்வை இல்லாத, அதே சமயம் அரசனாக இருக்க வேண்டிய நிலையில் அவன் ஒவ்வொரு கட்டத்திலும் மிகப்பெரிய தவிப்பை அனுபவிக்கிறான். எது தர்மம் என்று தெரிந்தும் அதன்படி நிற்க முடியாமல் துரியோதனன் எங்கு இருக்கிறானோ அந்த இழுப்புக்கு தன் மனதை அனுப்புகிறான். புத்திர பாசம்தான் அவனை ஆட்டுவிக்கிறது. மகன் என்ன செய்தாலும் சரி என்கிற மனோநிலைக்கு அடிக்கடி போய்விடுகிறான். அவனை எதிர்க்க விருப்பமில்லாதவனாக இருக்கிறான்.

அதே நேரம் தவறாகிவிடுமோ, யுத்தம் வந்துவிடுமோ, அழிவு ஏற்பட்டுவிடுமோ என்ற பயமும் அவனிடம் அவ்வப்போது தலை தூக்குகிறது. நல்லது எது என்று தெரிந்தும் தவறிழைக்கின்ற மனிதர்களை பூமி இன்னும் கொண்டிருக்கிறது. பார்வை இல்லாத அரசன் என்பது மகாபாரதத்தின் மிக அற்புதமான உவமை. மிக கூர்மையாக வடிவமைக்கப்பட்ட பாத்திரம். உலகத்து மனிதர்களில் பார்வை இல்லாது அதே சமயம் ஆளுகின்ற நிலைமையும், தலைமை வகிக்கின்ற இடமும் கிடைத்த மனிதர்கள் அதிகம். அவர்களாலேயே பூமி பேரவஸ்தை பட்டிருக்கிறது. தற்குறித்தனம்தான் பூமியின் சோகத்திற்கு காரணமாக இருந்திருக்கிறது.



மகாபாரதம்

43

ஒரே ராஜ்யமாக செய்து அதில் யுதிஷ்டிரனை மன்னனாகச் செய்து, துரியோதனனை இளவரசனாக்கினால் பிரச்னையே வராதே. இரண்டாக இருந்தால்தானே சண்டை? ஒன்றாக இருந்தால்..? வனத்திற்கு அனுப்பிய பஞ்சபாண்டவர்களை மறுபடியும் வரச்சொல். துச்சாதனனை அவர்கள் காலில் விழுந்து வணங்கச் சொல். திரௌபதியை நீண்ட நெடுஞ்சாண்கிடையாக அவன் வணங்கட்டும். துரியோதனனும், சகுனியும், கர்ணனும் மனமாற மன்னிப்பு கேட்கட்டும், யுதிஷ்டிரனின் தலைமையை ஏற்கட்டும்.

"நல்லது சொல்ல ஆசைதான் திருதராஷ்டிரா. ஆனால், காது கொடுத்து கேட்கமாட்டேன் என்கிறாய். துரியோதனன் பிறந்தபோது உண்டான துர்சகுனங்களை வைத்து அப்போதே இவனை விலக்கி வைக்கச் சொன்னேன். எங்கேயாவது கொண்டுபோய் விட்டுவிடு என்று சொன்னேன். ஆனால், புத்திர பாசத்தால் நீ அதை கேட்கவில்லை. இதுவரை வளர்த்து அவன் செய்வதை எதுவும் தடுக்காமல் அவன் இஷ்டத்திற்கு நீயும் வளைந்து கொடுக்கிறாய். பிள்ளையை கண்டிப்பாக வளர்க்க வேண்டும் என்று உனக்குத் தெரியவில்லை. புத்திரபாசம் இருக்க வேண்டியதுதான். அவனே கெட்டு அழியும்படியாகவா இருப்பது" - சுருக் சுருக்கென்று வலிக்கும்படியாகவே விதுரர் பேசினார். பலமுறை உபதேசங்கள் சொல்லியும் திருதராஷ்டிரன் கேட்காமல் போன ஆதங்கம் அந்தப் பேச்சில் இருந்தது. ஆனால், திருதராஷ்டிரனின் மனம் என்னும் குரங்கு மறுபடியும் மரம் ஏறிக் கொண்டது.



"உன்னை நான் ஆலோசனை கேட்டது என் தவறு. எப்பொழுதுமே பாண்டவர்கள் பக்கம் பேசுகிறாய். துரியோதனனுக்கு கெடுதல் நடக்கக் கூடாது என்பதற்காக பேசினேன். என் பிள்ளை பாசம் தூண்டிவிட பேசினேன். அவன் என்னுடைய பிள்ளை. என்னுடைய பிரதி. அவனை இழிவு படுத்தினால் போர் வராது போய்விடுமா? பாண்டவர்களும் என் புதல்வர்கள்தான். நான் மறுக்கவில்லை. ஆனால், என் உடம்பிலிருந்து தோன்றிய துரியோதனனை எப்படி அவமானப் படுத்துவேன், எப்படி புறக்கணிப்பேன்? அது ஏன் என்று யோசனை செய்ய உனக்குத் தெரியவில்லை. உனக்கு மதிப்பு கொடுத்து அழைத்தால் நீ ஏன் எனக்கு தீயதாகவே சொல்கிறாய்? போ, பாண்டவர் பக்கம் போய்விடு. இங்கு இருக்க வேண்டாம். உனக்கு இங்கு இடம் இல்லை" என்று சொல்லி, விதுரரை புறக்கணித்து அவன் தன் இருப்பிடம் நோக்கி நகர்ந்தான்.

திருதராஷ்டிரன் நல்லவர்களிடம் ஆலோசனை கேட்டதும் தன் பிள்ளைக்கு தீங்கு வரக்கூடாதே என்கிற பயத்தினால்தான்; தர்மத்தினால் அல்ல. எது சரி என்ற எண்ணத்தில் அவன் தேடவே இல்லை. தன் பிள்ளைக்கு ஆபத்து வராத விஷயம் எது என்ற எண்ணத்திலேயே இருந்தான். அப்போது தர்மம் என்கிற விஷயத்தைப் பற்றி அவனால் சிந்திக்க முடியாது. நல்லது சொல்வோரை விரட்டத்தான் முடியும்.

விதுரர் முதலில் வருத்தமானார், உடனே சந்தோஷமானார், சிரித்துக் கொண்டார். நல்ல குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி பஞ்சபாண்டவர்களை நோக்கி உடனே புறப்பட்டார். இதுவல்லவா நிம்மதி என்று குதிரைகளை வேகமாக செலுத்தினார்.

விதுரர் வருவதை தொலைவிலிருந்து பார்த்த தருமபுத்திரர் மறுபடியும் சூதாட அழைக்கிறார்களா, இந்த முறை என்ன கேட்பார்கள், கொடுப்பதற்கு என்ன இருக்கிறது, அர்ஜுனனுடைய காண்டீபத்தையும், பீமனுடைய கதையையும் கேட்பார்களோ? கையில் உள்ளதையெல்லாம் கொடுத்துவிடுங்கள் என்று அலறுவார்களோ என்று வருத்தமுற்றான். தனக்கு என்ன விதமான ஆபத்து வரும் என்று பயந்தவருக்குத்தான் தெரியும். ஆயுதங்களை கேட்க வேண்டுமென்று துரியோதனனுக்கு யோசிக்கவே தெரியாது.

விதுரரை வரவேற்றார்கள். சிறிதுநேரம் அமைதியாக உட்கார்ந்தவர் பேசத் துவங்கினார். "திருதராஷ்டிரன் மறுபடியும் என்னை அழைத்து ஆலோசனை கேட்டார். நான் அவருக்கு விளக்கினேன். தேசத்தை ஒன்றாக்கி செய்து உனக்கு மன்னர் பட்டம் கட்டும்படியாக ஆலோசனை சொன்னேன். துரியோதனனை விலக்கி வைக்கும்படி சொன்னேன். கோபம் வந்துவிட்டது. நான் சதாகாலமும் பாண்டவர்களின் நன்மையையே உத்தேசிக்கிறேன் என்று என்னை வெளியேறச் சொல்லிவிட்டார். நான் கிளம்பி இங்கு வந்துவிட்டேன். உன்னோடு இத்தனைபேர் இருக்கிறார்களே. நானும் இருந்துவிட்டு போகிறேன்" என்று சந்தோஷமாகச் சிரித்தார்.

யுதிஷ்டிரருக்கு வேதனையாக இருந்தது. நல்லது சொல்ல இருந்த ஒரே மனிதரையும் திருதராஷ்டிரன் இழக்கிறானே என்கிற வேதனை அது. திருதராஷ்டிரன் கேட்கமாட்டான். பீஷ்மரை கேட்டாலும் சொல்ல மாட்டார். பேசக்கூடிய ஒரே ஆள் விதுரர், அவரையும் என் பக்கம் அனுப்பி

விட்டால் அங்கு நல்லது சொல்ல யார் இருக்கிறார்கள்? தெளிவான தருமர் உண்மையாக கவலைப்பட்டார். பலமான சகோதரர்கள் இருக்க, நல்ல உதவியாளர்கள் இருக்க வாழ்க்கைப் பிரச்னைகளை வெகு எளிதாக பேசி தீர்த்துக் கொள்ளலாம்.

“எவருமே இல்லாமல் நீங்கள் மட்டுமே இருப்பதற்கு உங்களோடு இத்தனை பெரிய அந்தணர் கூட்டம் இருப்பது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. நானும் இங்கு ஒருவனாக இருக்க பிரியப்படுகிறேன். உன்னோடு பேச விரும்புகின்றேன். அந்தணர் கூட்டத்தை புறக்கணித்துவிடாதே. ஒருவனுக்கு நல்ல உதவியாளர்கள் தேவை. பலம் பொருந்திய சகோதரர்கள் இருந்தால் மட்டும் போதாது. நல்ல உதவியாளர்கள் இருந்தால் இழந்தது எதுவாயினும் திரும்பப் பெறலாம். சிறிய கங்கு பெரும் காட்டை அழிப்பதுபோல ஜனங்கள் குமுட்டிக்குள் சிறிய அளவில் தீயை சேமித்து வைப்பதுபோல உனக்குள் பெரிதாக வேண்டுமென்ற வெப்பத்தை வைத்துக் கொள். அது நல்லது. அது அணையாமல் காக்க உன் சகோதரர்களும், உதவியாளர்களும் உதவுவார்கள். மற்றவர்கள் எதிரில் பேசக்கூடாத விஷயங்கள் உண்டு. தன்மானம், தன்னுடைய பூஜை, தன்னுடைய செல்வ மதிப்பு இவை எதையும் வெளியே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. எப்போதும் சத்தியத்தை பேசுவதற்கே இடையறாது முயற்சி செய்ய வேண்டும். சத்தியம் பேசுகிறேன் என்று பேசுபவர் நீட்டி முழக்கி பேசுபவர் மற்றவரை அயற்சிக்குள்ளாக்கிறார். பேச்சு என்பது சுருக்கமாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும்” என்று சொல்லி நிறுத்தினார்.

பாலகுமாரன்

மிகச் சரியான நேரத்தில் மிகச் சரியான விஷயத்தை விதுரர் சொல்வதை யுதிஷ்டிரர் புரிந்து கொண்டார். சூரியனிடமிருந்து கிடைத்த தவலையைப் பற்றி அவர் யாரிடமும் அலட்டிக் கொள்ளவில்லை. இந்த விவேகம்தான் பாண்டவர்களுக்கு கடைசிவரை துணையாக வந்தது. இந்த விவேகமின்மைதான் துரியோதனனுக்கு அழிவைத் தந்தது.

தினசரி வாழ்க்கையில் தலைவனாக இருக்கின்ற ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்ற விஷயத்தை மகாபாரதம் மிகமிக அருமையாக சொல்லித் தருகிறது.

விதுரரை அனுப்பிவிட்டு திருதராஷ்டிரன் தவித்துப் போனான். மறுபடி மறுபடி தப்பு செய்கிறோம் என்று பதறி ஆள் அனுப்பி திரும்பவரச் சொன்னான். கெஞ்சுவதாகப் பேசினான். விதுரர் மனம் இறங்கினார். அரசனுடைய ஆணை, மூத்த சகோதரனுடைய வேண்டுகோள் என்பதால் தருமரிடம் சொல்லிவிட்டு அஸ்தினாபுரத்திற்கு திரும்பினார்.

“என்னை மன்னித்துவிடு.” என்று உணர்ச்சி பொங்க, கைகள் நடுங்க அழுத குரலோடு திருதராஷ்டிரன் பேச பரிதாபமாக இருந்தது. சமாதானப்படுத்தினார். மன்னித்துவிடு. மன்னித்துவிடு என்று பலமுறை கேட்க, மனம் நெகிழ்ந்தது. “நீங்கள் என்னுடைய குரு. நீங்கள் என்னுடைய சகோதரர். நீங்கள் எனக்கு மூத்தவர். இப்படிப்பட்ட வார்த்தைகளெல்லாம் சொல்ல வேண்டாம். நீங்கள் பேசிய எல்லா வார்த்தைகளையும் நான் மறந்துவிட்டேன். நீங்கள் அழைத்தவுடன் நேரே வந்துவிட்டேன். இனி விதிப்படி என்ன நடக்கவேண்டுமோ அது நடக்கட்டும்” என்று சமாதானம் செய்தார்.

துரியோதனனுடைய குழப்பமும், விதுரருடைய விட்டேத்தியான சுபாவமும் இங்கு மிக முக்கியமானவை. இன்றைக்கும் மனிதர்களிடம் இருப்பவை.

அங்கே கௌரவர்களிடையே பெரும் குழப்பம் குடிகொண்டிருந்தது. திரும்பத் திரும்ப அவர்கள் திருதராஷ்டிரனை திட்டி தீர்த்துக் கொண்டிருந்தார்கள். விதுரரை விரட்டியதும் சந்தோஷப்பட்டார்கள். மறுபடி கெஞ்சி வரவழைத்ததும் வருத்தப்பட்டார்கள். என்ன செய்யலாம், இது சரியாக முடியவில்லையே, நமக்கு ஆதரவாக இல்லையே என்று புழுங்கி தவித்தார்கள் எளிதாக முடியவேண்டிய ஒரு பழி தீர்க்கும் படலம் தவறாக முடிந்து விட்டது. இது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று பயந்தார்கள்.

“எதற்கு பயப்படுகிறீர்கள்? படை இல்லாது. ராஜ்ஜியம் இல்லாது. உதவியாளர்கள் இல்லாது தனியே வனவாசம் போயிருக்கின்ற அவர்களைப் பின்தொடர்ந்து வளைத்து அடித்துக் கொல்வோம். இப்பொழுது அவர்களை வெல்வது எளிது” என்று கர்ணன் யோசனை சொன்னான். அது அவர்களுக்கு உவப்பாக இருந்தது. அவர்கள் தொடை தட்டி எழுந்திருந்தார்கள். யுத்தம் யுத்தம் என்று முழங்கினார்கள். போர்ப்படைகளை திரட்டினார்கள். துரியோதனன் பஞ்சபாண்டவர்களைப் பின்தொடர்ந்து யுத்தத்திற்காக போகிறான் என்பதை கேள்விப்பட்டு வியாஸ பகவான் அஸ்தினாபுரத்திற்கு வந்தார். திருதராஷ்டிரனை சந்தித்தார். “திருதராஷ்டிரா, உன் மகன் என்ன முட்டாளா, மந்த புத்தியா? எப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று தெரியாதா? அப்படித் தெரியாதவனை வழிக்கு கொண்டுவர உனக்குத் தெரியாதா? என்ன பிள்ளை பெற்றிருக்கிறாய் நீ? ஏன் அவன் இப்படி நடந்து கொள்கிறான்? ஏன் நீ அவனை கடுமையாக கண்டிக்க முடியாமல் போயிற்று?” என்று சீறலாகப் பேசினார்.

(தொடரும்)

சமாதான வாழ்க்கை என்பது பூமியின் இயல்பே அல்ல

“அந்தணரே, நான் அவனை அடக்க முடியாமல் புத்திர பாசத்தால் தவிக்கிறேன். அவன் கெஞ்சும் போதும், மிஞ்சும் போதும் அவன் இழுத்த இழுப்புக்குத்தான் போகிறனே தவிர, அவனுக்கு எதிராகப் பேச எனக்கு மனம் வரவில்லை. என் பிள்ளை, என் பிள்ளை, அவன் சிறக்க வேண்டும், அவன் சிறப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. அவன் என்ன சொல்கிறானோ அதை சரி என்று சொல்லி விடுகிறேன். பிள்ளை பாசம் தவறு என்று யாரும் உலகத்தில் சொல்லவில்லை. ஆனால், அது எனக்கு கொடுமையான விளைவுகளையே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது” என்று திருதராஷ்டிரன் கூறினான்.

வியாஸர் துரியோதனன் பக்கம் திரும்பினார். “போதும். ஆடியவரை போதும். இதோடு நிறுத்திக்கொள். இதற்கு மேல் ஒரு அங்குலம் நகராதே. இது உனக்கு

மகாபாரதம்

44



> பீமன் தன்னுடைய கைகளை விரித்தான். பெரிய மரத்தை பிடுங்கினான். இலைகளை உதிர்த்தான். மரத்தோடு முன்னேறினான். மல்யுத்தத்திற்கு தயாராக இருந்தான். மிகக் குரூரமான சண்டை துவங்கியது.

மிகப் பெரிய கெடுதலை ஏற்படுத்தும். உன்னுடைய வம்சத்தை அழிக்கும், நான் சொல்வதை கேள். உனக்கு யார் புத்தி சொன்னாலும் மனதிற்குள் நுழைய மாட்டேன் என்கிறது. அத்தனை கடுமையாக ஒரு தீர்மானத்தில் இருக்கிறாய். இது உன்னுடைய விதி, உன் அழிவு எழுதப்பட்டு விட்டது" என்று பயமுறுத்தினார்.

ஆனால், துரியோதனன் அசையாது அவரை பார்த்துக் கொண்டிருந்தான்.

"நான் சொல்வதைச் சொல்லி விட்டேன். எனக்குப் பின்னே வேறு ஒரு ரிஷி வருகிறார். மைத்ரேயர் என்று அவருக்குப் பெயர். அவர் பஞ்சபாண்டவர்களை சந்தித்து விட்டுத்தான் வருகிறார். பஞ்சபாண்டவர்களில் ஒருவனான பீமன் கிருமி என்று ஒரு அரக்கனை கொன்று போட்டதை பார்த்து விட்டுத்தான் வருகிறார். அவர்களுடைய பலத்தை புரிந்துகொண்டு உன்னை எச்சரிக்க வருகிறார். என்னிடம் முறைப்பாக உட்கார்ந்ததுபோல அவரிடம் உட்கார முடியாது. அவர் கடுமையானவர். வேகமாக சபித்து விடுவார்.

பெரியவர்கள் பேச்சை கேட்பதில்லை. தந்தைக்கு கட்டுப்படுவதில்லை என்பதால் நாங்களெல்லாம் இங்கு நுழைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. மைத்ரேயரை பகைத்துக் கொள்ளாதே. அவர் சொல்வதைக் கேள். இனி உன் தலையெழுத்து" என்று விரக்தியாக சொல்லிவிட்டுப் போனார்.

அவர் சொன்னபடியே மைத்ரேயர் அரண்மனைக்குள் நுழைந்தார். எடுத்தவுடன் துரியோதனனை பார்த்துப் பேச ஆரம்பித்தார். "உள்ளே நுழைந்ததும் கேள்விப்பட்டேன். யுத்தத்திற்கு தயாராமே. உனக்கு என்ன தெரியும், பீமனைப் பற்றி? உன்னால் கிருமியனை அடிக்க முடிந்திருக்குமா, கொல்ல முடிந்திருக்குமா? வெகு எளிதாக பந்தாடினான். சுற்றியுள்ள அந்தணர்கள் அந்த சண்டையை விவரித்தார்கள். கேட்டுவிட்டுத்தான் வருகிறேன். கிருமியன் இறந்து கிடப்பதை பார்த்துவிட்டுத்தான் வருகிறேன். முட்டாள் துரியோதனா, எவ்வளவு பெரிய படை திரட்டிக்கொண்டு போனாலும் அர்ஜுனனுக்கும், பீமனுக்கும் எதிராக உன்னால் ஒருதுரும்பைக்கூட கிள்ளிப்போட முடியாது. அடிபட்டு சாவாய். பன்னிரெண்டு வருடங்கள் இருக்கின்றன. எங்கேயாவது போய் படுத்து புரண்டு கொண்டிரு. வாழ்க்கையை அனுபவி. அவர்களைத் தொடர்ந்து யுத்தம் செய்யப் போகாதே. மக்கள் மனதில் நீ ஒரு மோசமான அரசனாகக் கருதப்படுவாய். மக்களின் ஆதரவு இல்லாது எந்த அரசனும் அரசாட்சி செய்ய முடியாது. அது சிறந்து விளங்காது."


பாலகுமாரன்

ஆனால், அவர் சொல்வதை துரியோதனன் காது கொடுத்துக் கேட்காமல் வேறு திசை பார்த்தபடியும், காலால் பூமியை தேய்த்தபடியும் உட்கார்ந்திருந்தான். அவருக்கு கோபம் வந்தது. கமண்டலத்திலிருந்து ஜலம் எடுத்து, எனக்கு எதிரே கால் ஆட்டிக் கொண்டிருக்கிறாயே உன் தொடைகள் பிளக்கப்படும் என்பது உறுதி என்று சபித்து அவன் மீது ஜலத்தை வீசி எறிய தயாராக இருக்க, திருதராஷ்டிரன் எழுந்து கை கூப்பி அவனை மன்னிக்கும்படி வேண்டினான். "தயவு செய்து இந்த சாபத்தை எடுத்து விடுங்கள்," என்று கெஞ்சினான். "பீமனை பகைத்துக் கொள்ளாமல் இருந்தால் என் சாபம் நிறைவேறாது. பீமனை பகைத்துக் கொண்டால் நிச்சயம் இவன் மரணம் தொடை பிளந்துதான் நடக்கும்," என்று மைத்ரேயர் சொல்லி விட்டு அமர்ந்தார்.

துரியோதனன் அந்தச் சபையிலிருந்து வெளியேறினான். யார் எது சொன்னாலும் கேட்கக்கூடாத ஒரு மனோநிலையில் அவன் இருந்தான். அதிகாரத்தில் இருப்பவர்கள் வீம்பாக இருந்தால் அதன் விளைவு தேசத்தையும், தேசத்து மக்களையும் பாடாய் படுத்தும். துரியோதனன் அஸ்தினாபுரத்து சாபம், கிர்னீர் என்ற அரக்கனை பீமன் கொன்ற விதம், மகாபாரதத்தில் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

அழகான காமியவனம் அடர்த்தியாக மனிதர்களுடைய நடமாட்டம் இன்றி இருந்தது. அந்த வழியே வருகின்ற மனிதர்களை, தபஸ்விகளை கிர்னீர் என்ற அரக்கன் அடித்து, கொன்று சுவைத்து தின்னும் பழக்கமுடையவன். நள்ளிரவில் மிருகங்களை வேட்டையாடி அதை ருசித்து தின்கிறவன்.

தடேரென்று அந்த அரக்கன் பஞ்சபாண்டவர்கள் முன்பு தோன்றினான். அவன் உருவத்தைக் கண்டு திரெளபதி கண்களை பொத்திக் கொண்டாள்.

"யார் நீங்கள்?" என்று கிர்னீர் அவர்களை கேட்டான். பதிலுக்கு, "நீ யார் என்று சொல்.

உன்னை அறிமுகப்படுத்திக் கொள்" என்று தர்மர் சொல்ல, "நான் மதன் என்ற அரக்கனுடைய சகோதரன். இந்தக் காடு என்னுடையது. எனக்கு எதைப் பற்றியும் பயம் இல்லை. இங்கு வருகின்ற அத்தனை பேரையும் நான் அடித்துக் கொல்கிறேன். எனக்குத் தோல்வி என்பதே இல்லை" என்று கொக்கரித்தான். அவன் சிரிப்பில் மிருகங்கள் பயந்து ஓடின. மாயையான விஷயங்களை அவன் செய்யத் துவங்கினான். அவன் ஆட்டத்தை பஞ்ச பாண்டவர்கள் ரசித்துக் கொண்டிருந்தார்கள். நீங்கள் யார் என்று கேட்க, தர்மர் தன் குல, கோத்திரங்களைச் சொன்னார்.

"இவன்தான் பீமனா? அந்தண வேடம் பூண்டு, என்னுடைய சகோதரன் பகாசூரனை கொன்றவன் இவன்தானா? இவனை கொல்ல வேண்டுமென்றுதான் நான் காத்திருந்தேன். இவன்தானே என்னுடைய நண்பன் ரம்பனை கொன்றது? இவனை வஞ்சம் தீர்க்க நான் அலைந்தேன். என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது தானாக வந்து சிக்கிக் கொண்டான். வா வா" என்று பீமனை சண்டைக்கு அழைத்தான்.

பீமன் தன்னுடைய கைகளை விரித்தான். பெரிய மரத்தை பிடுங்கினான். இலைகளை உதிர்த்தான். மரத்தோடு முன்னேறினான். மல் யுத்தத்திற்கு தயாராக இருந்தான். மிகக் குரூரமான சண்டை துவங்கியது. அத்தனையும் தாங்கி கிர்னீர் எழுந்து நிற்க, மிகப் பலமான அடியை தலையில் கொடுத்தான். தலை சுற்றி கிர்னீர் கீழே விழ, அவன் இடுப்பை பற்றி மேலே தூக்கி வேகமாக சுழற்றத் துவங்கினான். அடியின் வலி தாங்காது தலைசுற்றிக் கிடந்த கிர்னீர் இப்பொழுது இன்னும் விரைவான இந்த சுழற்றலால் மூர்ச்சையானான். மேலே, உயரே தூக்கி தரையில் பலமுறை மோதி பீமன் கிர்னீரைக் கொன்றான்.

சகோதரர்கள் வியந்து பார்ப்பதும், அதையெல்லாம்விட தன்னுடைய மனைவி தன் வீரத்தை ஆச்சரியத்தோடு நோக்குவதும் அவனுக்கு சந்தோஷத்தை கொடுத்தன. வீரம் என்பது மனிதர்களுடைய இயல்புகளில் ஒன்று. காமம், வெட்கம், சிரிப்பு, கோபம் போன்றவற்றில் வீரமும் ஒன்று. ஆழத்தில் பொதிந்து இருப்பது. தன்னைத் தாக்க வருகின்ற ஒரு கெடுதலிலிருந்து தப்பித்துக்கொள்ள, தொடர்ந்து உயிர் வாழ எல்லா உயிரினமும் முயற்சி செய்யும்.

சனாதன தர்மத்தின் ஒரு பகுதியாக வீரம் என்பதும், கெட்டவர்களை அழிப்பது என்பது கடவுள் செயலாகவும், மன்னர்களுடைய கடமையாகவும், மனிதர்களுடைய இயல்பாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு எதிராக எப்பொழுதும், எல்லா இடத்திலும் சமாதான வாழ்க்கை என்பது பூமியின் இயல்பே அல்ல. அது பூமியின் இயல்புக்கு எதிரானது. இந்த பூமி துவந்தமயமானது. இரண்டானது. மேல், கீழ், இடது, வலது, நல்லது, கெட்டது என்று பிரிவுபட்டிருப்பது. எது பிரிவுபட்டாலும் ஒன்றை ஒன்று தாக்கும் என்பது அடுத்த விதி. ஒன்றை மற்றொன்று அழிக்கச் செய்யும் என்பது தொடர்ந்த விதி. தன்னை நிலைநாட்டிக் கொள்ள விரும்பும் இயல்பு இந்த பூமியில் நிரந்தரம். விரட்டி வருகிறவனை சமாதானம் பேசுவது என்பது கோழைத்தனம். அப்படி சமாதானம் பேசுவதற்கு பதில் அடிபட்டுச் செத்துப் போகலாம். மறுபடியும் பலத்தோடு பிறக்கலாம். தொடர்ந்து நடைபெற்றுத் தான் ஆகவேண்டும். யுத்தம் மரணத்தால் ஓய்வதில்லை.

சூதில் தோல்வியுற்றாலும் பஞ்ச பாண்டவர்களுடைய வீரம் தோற்கவில்லை. இதற்கு அடுத்தபடி காண்டீபத்தை வளைத்து அம்பு தொடுக்க அர்ஜுனன் காத்திருந்தான். ஆனால், அர்ஜுனனுடைய அம்புக்கு வேலை இல்லாமல் பீமன் கொன்று தீர்த்தான். இந்த விஷயம் திருதராஷ்டிரனுக்கு சொல்லப்பட்டது. திருதராஷ்டிரன் கவலையானான். அவர்கள் பலம் இழக்கவில்லை. அவர்கள் துவண்டுபோய் விடவில்லை. சூதில் தோற்றாலும் அவர்கள் தங்கள் கீர்த்திகளை இழக்கவில்லை என்று தெரிந்தபோது அவனுக்கு சுரம்போலும் பயம் ஏற்பட்டது. சுருண்டு உட்கார தோன்றியது. தன் மகனின் அழிவு காலம் பற்றிய மிகப்பெரிய கவலை அவனை தாக்கியது.

பஞ்ச பாண்டவர்களுடைய தோல்வி என்பது தோல்வியாக இல்லாமல்

எடுத்தவுடனேயே ஒரு அரக்கனை கொன்று போடுகின்ற வெற்றியாக மாறியது. எனவே, நமக்கு ஏற்பட்டது தோல்வி அல்ல. இது ஒரு திசை திருப்பல். இது வேறு ஒரு அனுபவம். பல வனங்களை கடந்து நாம் போக வேண்டிய அவசியம் இருக்கிறது என்று அவர்கள் வடக்கே இருந்து மேற்கே திரும்பி நடந்தார்கள்.

அதற்குப் பெயர் வனம். அந்த வனத்திற்குள்ளே யுதிஷ்டிரர் சகோதரர்களோடும், மனைவியோடும் குடிபுகுந்தபோது அவருக்கு நேர்ந்த துக்கத்தை கேள்விப்பட்டு அவரை சந்திப்பதற்காக பாஞ்சால ராஜ குமாரன் திருஷ்டத்யும்னன், சேதி ராஜன், திருஷ்டகேசி, கேகய ராஜ குமாரர்கள் எல்லோரும் மிகுந்த கோபத்தோடு துரியோதனனையும், துச்சாதனனையும், கர்ணனையும் கண்டபடி ஏசிக்கொண்டு, கிருஷ்ணர் வருவாரா, எங்கிருக்கிறார் என்ற கேள்விகளோடும், புலம்பல்களோடும் வந்து சேர்ந்தார்கள். துக்கத்தால் அழுதார்கள்.

துக்கம் பெரிதல்ல என்பது மட்டுமல்ல, என் துக்கத்திற்காக எல்லாம் வல்ல கிருஷ்ணா நீதுக்கப்படாதே என்ற மகத்தான பிரேமை இங்கு வெளியாகிறது. பல அவதாரங்களை, பல வெற்றிகளை, பல இடங்களில் சண்டையிட்டு ஜெயித்ததை, செய்த யக்ஞங்களை, செய்த தான தர்மங்களை அவன் வரிசைப்படுத்தினான். கிருஷ்ணர் மனம் குளிர்த்தார்.

அந்தக் கடவுள், அந்த கிருஷ்ணர், அர்ஜுனனுடைய அபிமானத்தில் கோபம் தணிக்கும் செயலில் மனம் ஈடுபட்டவராய் மிகப்பெரிய வார்த்தைகளைச் சொன்னார். "பார்த்தா, நீ என்னுடையவன். நான் உன்னுடையவன். என்னுடையவர்கள் யாரோ அவர்கள் உன்னுடையவர்களுமாவார். உன்னிடம் துவேஷம் கொண்டவர், என்னிடம் துவேஷம் கொள்வராவார். உனக்கு அனுகூலமானவன் எனக்கு அனுகூலமாவான். ஹே வீரா, நீ நரன், நான் நாராயணன். நான் ஸ்ரீஹரி. இச்சமயம் நாம் இருவரும் நர நாராயணரே. இப்புவிக்கு வந்திருக்கிறோம். குந்தி மைந்தா, நீ என்னுள்ளிருந்து விலகி இல்லாதவன். நான் உன்னிலிருந்து தனித்து இல்லை. நம் இடையே பேதமே கிடையாது" என்று ஆசீர்வதித்தார்.

"உன்னுடைய கோபத்தைத்தான் நான் என்னுடைய கோபமாக மாற்றிக் கொண்டிருக்கிறேன். உன்னுடைய துக்கத்தால்தான் நான் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதை சொல்லாமல் சொன்னார். அதற்கு என்ன காரணம்? நீயும், நானும் பிரிக்க முடியாதபடி இந்தப் புவியில் பிறந்திருக்கிறோம். ஒரு செயலுக்காக பிறந்திருக்கிறோம்," என்பதை மிக சூட்சுமமாகச் சொன்னார். தீர்வு எதுவும் இல்லை. சொடுக்கு நேரத்தில் மாயாஜாலம் இல்லை. ஒரு துரும்பை எடுத்துக் கிள்ளி துரியோதனன் ஒழிக என்று போடவில்லை. வனவாசம் அனுபவி என்பது போலத்தான் அவருடைய பேச்சு இருந்தது. என்ன செய்வது என்பது போலத்தான் அவருடைய ஆறுதல் இருந்தது.

திரௌபதி விடவில்லை. கேட்டாள். "எங்கே போனீர்கள்? உங்களுக்காக கதறினேன். என்னை நீங்கள் காப்பாற்றியிருக்க வேண்டாமா? நான் உங்கள் சகோதரி. உங்கள் பக்தை. நான் அக்னியிலிருந்து பிறந்தவள், என்னை நீங்கள் காப்பாற்றியிருக்க வேண்டாமா? என்னை நீங்கள் ரட்சித்திருக்க வேண்டாமா, ஏன் என்னை புறக்கணித்தீர்கள்? ஏன் வரவில்லை. ஏன் என்னை அவமானப்படுத்தியவர்களை வதம் செய்யவில்லை? எதனால் அந்த அலட்சியம், எனக்கு ஏன் இந்த பாபம்?" என்று கதறினாள். அங்குள்ள க்ஷத்ரியர்கள் அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

நடுசபையில் கூந்தல் பற்றப்பட்டு தரதரவென்று இழுத்துப் போகப்பட்டேன். பயத்தால் நடுநடுங்கிக் கொண்டிருந்தேன். அத்தனைப் பெரிய சபையில் எனக்கு ஒருவர் கூட ஆதரவாக இல்லையென்று குமைந்து கொண்டிருந்தேன். அந்த காரணங்களால் ரத்தப் பெருக்கு அதிகமாயிற்று. தொடைகள் நனைந்தன. இதையெல்லாம் பார்த்து கர்ணன் சுட்டிக் காட்டி வாய்விட்டுச் சிரித்தான். ஒரு பெண்ணுக்கு இது எவ்வளவு பெரிய அவமானம் தெரியுமா கிருஷ்ணா? கருவை தாங்குவதற்குண்டான விஷயம்தான் இது. இதில் கேலி செய்ய எதுவும் இல்லை. 'உன்னை எப்படியெல்லாம் அவமானப்படுத்துகிறான் பார்த்தாயா!' என்பதுதான் கர்ணனுடைய சிரிப்பாக இருந்தது. துரியோதனனுக்கு அது உவப்பாக இருந்தது. துச்சாதனன் மூடனைப்போல சேலையைப் பிடித்து இழுத்தான்.

இவையெல்லாம் என் சகோதரர்கள் முன்பும், க்ஷத்ரியர்கள் முன்பும், உன் முன்பும் நான் சொல்லி அழவேண்டியிருக்கிறதே, இது இன்னமும் மோசமான நிலைமை. நான் மாதவிலக்காக இருக்கிறேன் என்று சொல்ல பெண் பிரியப்படுவதேயில்லை. அவள் பிறர் கண்களுக்கு அகப்படாமல் ரகசியமாக மறைத்துவிடுகிறாள். ஆனால், இப்பொழுது என் நிலைமையைப் பார். நான் என் கணவர்களை வெறுக்கிறேன். அவர்கள் கையாலாகாதத்தனத்தை நிந்திக்கிறேன். ஆனால், உன்னை நோக்கி கதறுகிறேன். எனக்கு ஏன் இத்தனை வேதனை? மிக வலிமையுள்ள பாண்டவர்களுடைய மனைவியே இப்படிப்பட்ட சித்ரவதைக்குள்ளானபோது சாதாரண பெண்களின்

> இவன்தானே என்னுடைய நண்பன் ரம்பனை கொன்றது? இவனை வஞ்சம் தீர்க்க நான் அலைந்தேன். என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. இப்போது தானாக வந்து சிக்கிக் கொண்டான். வா வா" என்று பீமனை சண்டைக்கு அழைத்தான்.



கதி என்ன, என்பது அவளுடைய பேச்சில் தொக்கி நிற்கிறது.

பெண்களை பதறடிப்பதும், பயப்படச் செய்வதும் அவர்கள் கதறி அழும்படி துன்புறுத்துவதும் ஒரு தேசத்தின், ஒரு குலத்தின் அழிவுக்கு வித்தாகிறது. பெண் அபலை. அவள் அழக்கூடாது என்பதே தர்ம சாஸ்திரம். அவள் துன்புறுத்தப்படக்கூடாது என்பதே நாகரிகத்தின் நோக்கம்.

ஒரு தனித்த வனத்தில் கடவுளைப் போன்ற கம்பீரம் மிக்க ஒரு மனிதரின் முன்பு தன்னுடைய சகோதரர்களும், புருஷர்களும் இருக்க, எவருமே காப்பாற்றவில்லையே என்று திரெளபதி அழுதது. அங்குள்ளோரை நாணமுறச் செய்தது. எல்லோரிடமும் ஒரு கையாலாகாதத்தனம் இருந்தது. ஏன், ஸ்ரீ கிருஷ்ணனிடமும் இருந்தது. திரெளபதிக்கு அவர் சமாதானம் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

"நான் வராதது உண்மைதான் திரெளபதி. அதற்குக்காரணம் இருக்கிறது. துவாரகையை தாக்கி அதை சின்னாபின்னப்படுத்த சால்வன் என்கிற அரசன் முயற்சி செய்ததால் அவனை தடுப்பதற்காக முழு வேகத்தில் வேறு எந்த சிந்தனையும் இன்றி நான் போர்புரிய வேண்டியதாயிற்று. அவனை சக்ராயுதத்தால் கொன்றேன். மிகப்பெரிய விமானம் வைத்து அதிலிருந்து அஸ்திரங்களை அவன் பிரயோகம் செய்து கொண்டிருந்தான். துவாரகாபுரியை தரைமட்டமாக்க வேண்டுமென்று நினைத்தான். தைவதம் என்கிற அந்த விமானத்தை உடைத்து, அவனையும் கொல்ல நான் துரத்தித் துரத்திப் போக வேண்டியதாயிற்று. மாயாஜாலம் காட்டினான். எதிரே இருந்தான். மறைந்தான். தொடரவரச் செய்தான். நான் தொடர்ந்து போகும் போது, நான் இல்லாத துவாரகாபுரியை கடுமையாகத் தாக்கினான். சற்று கவனம் திரும்பினால்கூட அவன் துவாரகபுரியை அழித்திருப்பான். என் மக்கள் வேதனைப் பட்டிருப்பார்கள். என்னுடைய முதன்மையான காரியமாக துவாரகபுரியை காப்பதும், சால்வனை கொல்வதுமாக இருந்தது."

அவர் திரெளபதி மானம் காத்தது பற்றி, புடவையாக அவளிடம் தன் சக்தியை செலுத்தியதுபற்றி கிருஷ்ணரும் சொல்லவில்லை. திரெளபதியும் அதை அவருக்கு முன் நன்றியோடு பேசவில்லை.

இதைத் தாண்டி நிகழ்ந்த நிகழ்வுகள்தான் அங்குள்ள அனைவரையும் வேதனையுறச் செய்தன. ரத்தக்கறையோடு கூந்தல்பற்றி தரையில் இழுத்து வந்த வேதனைதான், இழித்ததுதான், தொடைதட்டிக் காண்பித்ததுதான், நீ எல்லோருக்கும் தாசி என்று சொன்னதுதான், பெரும் சிரிப்பு சிரித்ததுதான், அவை எல்லாவற்றையும் பஞ்சபாண்டவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்ததுதான் முக்கியமாக இருந்தது.

திரெளபதி தன் புலம்பலை நிறுத்தவில்லை.

என்ன நடக்கிறது இங்கே? ஆரம்பத்திலிருந்து இடையறாது எத்தனை விதமான துன்பங்களை இந்த துரியோதனன் கொடுத்திருக்கிறான்!

(தொடரும்)



கடவுளும் ஓரம்போய் கண்ணீர் வடிக்குமோ!

மனித மனம் மூன்று காலங்களில் சஞ்சரிக்கும். ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு இடத்தில் வாழும். இறந்த காலத்தில் சில நேரமும், எதிர்காலத்தில் பல நேரமும் மனித மனம் வாழும் இயல்புடையது. நிகழ் காலத்தில் மனம் வைத்திருக்க வெகு சிலருக்கே முடியும். ஆனால், எல்லா மனிதர்களும் வலியின்போதும், வேதனையின்போதும் அல்லது சலனமற்ற ஒரு நிலையின்போதும் நிகழ்காலத்தில் சற்று நீடித்திருக்க வாய்ப்பிருக்கிறது.

வனத்தில் அமர்ந்திருந்த பஞ்ச பாண்டவர்களும், திரௌபதியும் வெவ்வேறு காலங்களில் தனித்தனியே வாழ்ந்திருந்தார்கள். அர்ஜுனனும், பீமனும் இனி அடுத்து எங்கே போவது, யாரிடம் நிற்பது, என்ன உபத்திரம் வரும், எப்படி மேற்கொள்வோம் என்று எதிர்காலம் குறித்து சிந்தனை செய்ய, தருமபுத்திரர் இந்த வனம் நன்றாக இருக்கிறதே. இப்படி மண்ணில் அமர்ந்து வேரில் முதுகு சாய்த்து கண்மூடி தென்றலை அனுபவிப்பதும், இளம் வெயிலை உணர்வதும், பட்சி ஜாலம் கேட்பதும் சந்தோஷமாக இருக்கிறதே. உலகில் இப்படிப் பட்ட இடங்களும் உண்டு. இங்கேயும் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்பதை அரண்மனையில் இருக்கும்போது அறியமுடியவில்லை. இங்கு வந்தவுடன் புதிய உலகம் தெரிகிறது. இந்த உலகமும் நன்றாகத்தானே இருக்கிறது என்று அமர்ந்தபடியே தன்னுடைய அந்த நிலையை எந்தவித கேள்விகளும் இன்றி ஏற்றுக்கொண்டு, எந்த எதிர்ப்பும் இன்றி ஸ்வீகரித்துக்கொண்டு தென்றலையும், பறவை ஒலிகளையும் அனுபவித்தார்.



மகாபாரதம்

45

நகுலன் முன்னேயும் பின்னேயும் ஒரு குதிரை போல அலைந்து கொண்டிருந்தான். நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்று எல்லாவற்றுக்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.

சகாதேவன் வேறுவிதமான பயிற்சியாளன். மனம் என்று ஒன்று இருந்தால்தானே காலம் என்று ஒன்று உண்டு. மனம் என்பதையே நிறுத்திவிட்டால் என்று மனதை கவனிக்கின்ற முயற்சியில் இருந்தான்.

ஆனால், திரௌபதி குமுறினாள். எப்படிப்பட்ட வாழ்க்கை. எவ்வளவு உயரம். எத்தனை சொகுசு. என்ன அலங்காரம். எவ்வளவு கம்பீரம். சகலமும் உதறிவிட்டு இந்த புழுதி மண்ணில் சொரசொரப்பான வேரில் சரியான உடைகள் இன்றி, தலை கலைந்து கிடக்க, உடம்பு வியர்த்து வழிய, வலிமைமிக்க சகோதரர்கள் இருந்தும் வாய் பேசி முடியாதபடி கைகட்டி அமர்ந்திருக்க, என் கணவர் தருமபுத்திரர் என்ன ஒரு மோசமான நிலையை அடைந்திருக்கிறார். எப்பேர்ப்பட்ட ஆடையை அணிந்திருந்தார். எவ்வளவு சுகமான பஞ்சணை. உட்காருகின்ற ஆசனங்கள்கூட எவ்வளவு சிறப்பு. எவ்வளவு பெரிய அரண்மனை. எவ்வளவு தூய்மையான நீர் நிலைகள். எவ்வளவு சிங்காரமான தோட்டங்கள். எத்தனை பணியாட்கள். எவ்வளவு அறுசுவை உணவு. எத்தனை புலவர்கள். எத்தனை அந்தணர்கள். எத்தனை வீரர்கள். எத்தனை மன்னர்கள். எத்தனை கலைஞர்கள். இடையறாது யாராவது வந்தும் போய்க்கொண்டும் இருக்கின்ற நடமாட்டம். இப்பொழுது இது நடக்கிறது. இப்பொழுது அது நடக்கிறது என்று கண்மூடி தூங்கும் வரையில் ஏதேனும் தகவல்கள் வந்துதானே இருக்கின்றன. சகலமும் காணாமல் போய் ஒரு மரத்தின் வேரில் சாய்ந்து நிலைகுத்தலாய் எங்கோ பார்வையை வெறிக்க விட்டு விட்டேத்தியாய் அமர்ந்திருக்கிறார். இந்த இடத்திற்கு இப்படி வந்துவிட்டோமே என்ற பதைபதைப்பு அந்த முகத்தில் இல்லை. இப்படி சாய்த்து விட்டார்களே என்ற கோபம் வரவில்லை. இங்கு வந்து அமர்ந்திருக்கிறேனே மகாபாவி என்று நொந்துகொள்ளத் தெரியவில்லை. இந்த மரத்தடி வேறும் சிங்காசன சொகுசாய்த்தான் போய்விட்டது.

பாலகுமாரன்

மறந்து போயிருக்குமோ. எதுவும் மனதில் தைக்காத சுத்தமாய் மறந்துபோயிருக்குமோ. எவ்வளவு பெரிய அவமானம் நடந்தது ஒரு சபையில் என்னை தலைமுடியை பிடித்துத் தரையோடு தரையாக இழுத்து வந்தான். உடையெல்லாம் ரத்தத் துளிகளால் நிறைந்தன. வீட்டு விலக்கான பெண் என்பவள் தெய்வம்போல. அதனால்தான் பெண்களும் அவளை தனியே நிறுத்தி அமைதியாய் இரு என்று ஆசுவாசப்படுத்துகிறார்கள். நன்கு உண்டு நன்கு தூங்கு என்று சௌகரியம் கொடுக்கிறார்கள். கவனமாய் பேணுகிறார்கள். மற்ற நேரத்தில் நூறு மாடுகள் மேய்க்க முடியுமென்றால் வீட்டு விலக்கு நேரத்தில் ஒரு கன்றுக்குட்டியைக்கூட இழுத்து பெண்ணால் நிறுத்த முடியாது. அத்தனை பலவீனம். உடல் சோர்வு கிடக்கட்டும். அழகும், மலர்ச்சியும், தெய்வீக அழகும் கொண்டிருந்த பெண் அந்த நேரம் வெயிலில் பட்ட தாமரையென சுருங்கி நீருக்குள் மூழ்கி கிடப்பாள். இந்த நிலையில் யாரும் பார்க்க வேண்டாமே என்றுதான் நினைப்பாள். அந்த நேரத்தில் கை தொட்டு வெளியே இழுத்து, தெருவில் இழுத்து, தலைமுடி பற்றி அரசவைக்கு ஏற்றி, வாடி என்று அழைத்த கொடுமை உலகில் எவருக்கும் வரக்கூடாது. பெரிய மனுஷியாகக்கூட அல்ல, ஒரு உயிரினமாகக்கூட பார்க்க மறுத்த நேரம் அது. புஜபலம் மிக்க நான்கு பேர்கள் சபையில் கொக்கரித்து நிற்க, மற்றவரெல்லாம் வாய் பொத்தி நிற்க, ஒருவகையில் இது தர்மம் தான் ஒன்று மூத்தோர் பேச, ஒரு பெண்ணை, அபலையை அவர்கள் அலைக்கழித்த காரியம் மிக கேவலமானது. பரதகண்ட சரித்திரத்தில் செதுக்கப்பட்ட, மறக்க முடியாத பெண் இழுக்கு இது. இதைவிட மரணம் சுகம். ஒரே வீச்சில் தலையை துண்டித்திருந்தால் கம்பீரமாகப் போயிருக்கும். தொடையை தட்டி வா என்று மற்றவர் மனைவியை கூப்பிட ஒரு மன்னனுக்கு முடியுமானால் இந்த உலகம் நாசமாகப் போகட்டும். இதுதான் வாழ்க்கை என்றால் காடுகள் சூழட்டும். இதுதான் நியதி என்றால் கடவுளும் ஓரம்போய் கண்ணீர் வடிக்கட்டும்.

திரௌபதிக்கு குமுறிற்று. வலிவு மிக்க தன் புருஷன்கள் ஐந்து பேரையும் பார்த்துவிட்டு தலைகுனிந்து கொண்டாள். இவர்களை வலிவு மிக்கவர்கள் என்று எப்படிச் சொல்வது. ஒருவன் மனைவியை மாற்றான் கைபிடித்து அழைப்பதும், தொடை விரித்து அழைப்பதும், நீ தாஸி என்று சொல்வதும் ஒரு கணவனால் ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அப்பொழுது தர்மம் என்பது ஏது. பௌருஷம் என்பது என்ன? அந்த சபையில் இந்த புருஷணர்கள் ஒரு சிறு அசைவும் காட்டவில்லையே. மனைவியை மாற்றான் கைக்கொள்ளத் துடிக்கும்போது மௌனமாய் இருப்பதுதான் தர்மமா. அதுதான் வேத சாரமா. என்ன கூத்து இது. ஆம் எனில் இந்த உலகம் அழியட்டும். அத்தனை கோபம் வந்தது.

ஆனால், தொண்டையைச் செருமி சரியாக்கிக் கொண்டாள். சூடு இறக்கிக் கொண்டாள். நிதானமாக பேச வேண்டும் என்று நினைத்துக்கொண்டாள். தன் பழைய நினைப்பிலிருந்து மாறாமல் அங்கிருந்தபடியே இறந்த காலத்திலிருந்தபடியே திரௌபதி குமுறினாள். "உங்களுக்கு எல்லாம் மறந்து போயிற்றா?" கேள்வி தருமபுத்திரரை நோக்கி இருந்தாலும் அங்குள்ள ஐவர் மீதும் அது பாய்ந்தது.

அவர்கள் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

"நடந்தது அத்தனையும் நீங்கள் மறந்து விட்டீர்களா." முதற்கேள்வியே இரண்டாம் கேள்வி எனினும் இது இன்னும் அழுத்தமாக தொண்டையை கமறிக்கொண்டு வந்தது. பதில் சொல்லியே ஆக வேண்டும் என்ற கண்டிப்பு அடுத்த கேள்வியில் இருந்தது.

"அத்தனை எளிதாக அந்த விஷயங்களை உங்களால் மறந்துவிட முடியுமா? என்னால் மறக்க முடியவில்லை. நெல் முனையளவும் மறக்க முடியவில்லை. நீங்கள் எப்பேர்ப்பட்ட உடை உடுத்திக்கொண்டிருந்தீர்கள். என்ன உணவு உண்டிருந்தீர்கள். எப்படி சாய்ந்திருந்தீர்கள். எப்படி தூங்கியிருந்தீர்கள். எப்படி நீராடினீர்கள். எப்படி நந்தவனத்தில் புலவர்களோடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தீர்கள் என்று எல்லாமும் ஞாபகம் வருகிறது. எனக்கு எதுவும் மறக்கவில்லை."

வான் நோக்கிய அம்புபோல் இருந்தாலும் அம்பு புரண்டு தலைகீழாக மிக வேகமாக அவர்களை நோக்கி வந்தது. அடித்தது.

திரௌபதி எடுத்தவுடன் தன்னுடைய நிலைமையைச் சொல்லவில்லை. மாறாய் தன் புருஷர்களுடைய சீற்றத்தை தூண்டும் வண்ணமாக பெண்களுக்கே உள்ள தந்திரத்துடன் உங்கள் சௌகரியம் உங்களுக்கு மறந்து போயிற்றா என்று ஆரம்பிக்கிறாள்.

பீமனுடைய பராக்கிரமத்தை, அவன் உணவு உண்ணும் விதத்தை, அவன் உறங்கும் சுகத்தை, அர்ஜுனனுடைய பேச்சை, கவிதையை, சிரிப்பை, நகுல சகாதேவர்களிடம் பொழிந்த அன்பை, உங்களிடம் கேள்வி கேட்டு விவாதித்ததை, அதற்குண்டான அற்புதமான மாளிகையை, அரச கூடத்தை, நடைபெற நமக்கு உதவி செய்த பணியாளர்களை, காவலர்களை, அதிகாரிகளை, மந்திரிமார்களை, உங்களுக்கு மறந்து போயிற்றா. எப்பேர்ப்பட்ட சுகங்களை அனுபவித்துவிட்டு இந்த புழுதியில் உட்கார்ந்திருக்கிறீர்கள். எவருமே இவ்வாறு அணில்களும், மான்களும், கிளிகளும் உங்கள் அரசவையில் இருக்க, வெறுமே வானம் பார்த்து உட்கார்ந்திருக்கிறீர்கள். உங்களுக்கு வருத்தமாக இல்லையா.

இன்னொரு கேள்வி, பதில் சொல்ல வேண்டாம். கொஞ்சம் அசைந்தவரை அவள் நிறுத்தினாள்.

"அவர்களுக்கு வருத்தமாக இருக்குமா?"

"எவர்களுக்கு?"

"அந்த கௌரவர்களுக்கு. சகுனிக்கு, துரியோதனனுக்கு, கர்ணனுக்கு, துச்சாதனனுக்கு, வலிமை மிக்க சகோதர மன்னர்களை பகைத்துக்கொண்டோமே, அவர்களை வெளியே அனுப்பி விட்டோமே என்ற பயம், அதனால் ஏற்பட்ட பதட்டம், வருத்தம் அவர்களுக்கு இருக்குமா? தவறு செய்துவிட்டோம் என்று அவர்கள் நினைப்பார்களா? எனக்குத் தோன்றவில்லை. தாங்கள் செய்தது தவறு என்று சற்றும் நினைக்காது தீர்மானமாய், திடமாய் உங்களை அவமானப்பட்டு வெளியேறினோமே என்ற வருத்தம் உங்களுக்கு இருக்காதா, வரவே இல்லையா அல்லது இது விதி, தர்மம், தவறு செய்தோம், தோற்றோம். தர்மத்தை காக்க வேண்டும் அதனால் மனைவியை பணயம் வைத்தோம். தோற்றோம். அதனால் மறுபடியும் வனவாசம் வந்தோம் என்று மௌனமாக வாழ்க்கையை அதன் போக்கை அங்கீகரித்திருக்கிறீர்களா. இது க்ஷத்திரிய குணமா.

> திரௌபதி கெட்டிக்காரி. நல்ல பெண்மணி. கிருஷ்ணரும் தன்னுடைய உறவினர்களும் புருஷன் எதிரே உட்கார்ந்து நலம் விசாரிக்கும்போது அவள் இந்த விஷயத்தை ஆரம்பிக்கவில்லை. ஆரம்பித்திருந்தால் அவருக்கு ஆதரவாக அவர்கள் நிச்சயம் பேசியிருப்பார்கள். அப்படி ஆதரவாக பேசுகின்ற நிலையில் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு, தருமரையும், பீமனையும் ஏன் சும்மா இருந்தீர்கள் என்று கண்டித்திருப்பார்கள். ஆனால், புருஷனை தன்னுடைய உறவினர்கள் முன்பு அவமானப்படுத்துகின்ற எண்ணமே திரௌபதிக்கு இல்லை.

இதுதான் உத்தமமான விஷயம் என்று நீங்கள் சொன்னால், என் வாயை அடக்கினால் நான் அந்த தெய்வங்களை நிந்திக்கிறேன். இதை ஏற்படுத்திய தெய்வங்களை, அதன் விதியை அவர்களின் தீராத விளையாட்டை நான் நிந்திக்கிறேன். நல்லவர்கள் துடிதுடித்து கிடப்பதுதான் தர்மம் என்றால் அந்த தெய்வங்களை நான் நிந்திக்கிறேன். அந்த தர்மங்களை நான் நிந்திக்கிறேன். நீங்கள் அமர்ந்திருக்கின்ற இந்தக்கோலம் உங்களுக்கு இந்த நிலை மிகுந்த திருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத்தான் எனக்கு காட்டுகிறது.

ஆனால், உங்கள் பேச்சை தாண்டாத வலிவு மிக்க பீமனை, எவர் எதிர்த்தாலும் புறமுதுகிட்டு ஓடச்செய்கின்ற அந்த வீரனைப்பற்றி நல்ல நினைவு ஏதேனும் இருக்கிறதா? அர்ஜுனன் காண்டீபத்தை அறியீரா. அவர் வீரம் இப்படி

புழுதியோடுதான் போக வேண்டுமா? உங்கள் பின்னேதான் இருக்க வேண்டுமா? நகுலனும், சகோதேவனும் உங்களை தேவதாவிசுவாசமாக கருதுகிறார்கள். அவர்களுக்கு ஒரு ராஜ்ஜியம் தேவையில்லையா. அவர்களை சீராட்ட வேண்டாமா? உங்களுக்கு தர்மம் மௌனம்தான் என்றால் இவர்களும் அப்படித்தான் இருக்க வேண்டுமா? உங்கள் சொல் தாண்டக்கூடாதா? இவர்களுக்கென்று அபிப்ராயம் கூடாதா? தயவுசெய்து பேசுங்கள். உங்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படியே வனம் வனமாக போவதுதான் வாழ்க்கையா அல்லது வேறு ஏதேனும் திட்டமா.”

திரௌபதி கெட்டிக்காரி. நல்ல பெண்மணி. கிருஷ்ணரும் தன்னுடைய உறவினர்களும் புருஷன் எதிரே உட்கார்ந்து நலம் விசாரிக்கும்போது அவள் இந்த விஷயத்தை ஆரம்பிக்கவில்லை. ஆரம்பித்திருந்தால் அவருக்கு ஆதரவாக அவர்கள் நிச்சயம் பேசியிருப்பார்கள். அப்படி ஆதரவாக பேசுகின்ற நிலையில் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு, தருமரையும், பீமனையும் ஏன் சும்மா இருந்தீர்கள் என்று கண்டித்திருப்பார்கள். ஆனால், புருஷனை தன்னுடைய உறவினர்கள் முன்பு அவமானப்படுத்துகின்ற எண்ணமே திரௌபதிக்கு இல்லை. அவள் குணவதி என்று காட்டுகின்ற இடம் இது.

வனத்திற்கு நடுவே காற்று சுழன்று வீசியது. திரௌபதி தொடர்ந்து பேசினாள். அவள் பேச்சுக்கு மனதளவில் கூட மறுப்பு சொல்லாமல் அவள் பேசட்டும் என்று அமைதியாக ஐவரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சிறுவண்டுகளும், பறவைகளும் தங்கள் சப்தத்தை குறைத்துக் கொண்டன. வேதனைப்பட்ட அந்த ஐவருக்கும் இதமாக கடுமையான சூரியன் ஒளிக்கதிர்களை மேகங்கள் மறைத்து குளுமையை உண்டு பண்ணின.

பீமன் என்ற ஒரு மகத்தான வீரனைப் பற்றி நான் சொல்லியா உங்களுக்குத் தெரிய வேண்டும். அவருடைய புஜபலம் எத்தகையது. எப்பேர்ப்பட்ட மல்யுத்த வீரர்களையெல்லாம் புரட்டிப்போட்டு பந்தாடியிருக்கிறார். அவருடைய வருகையை கண்டாலே மனம் நடுங்கி, வயிறு குழைந்து கண்கள் சொருக கிடக்கின்ற மன்னர்களை நீங்கள் பார்த்ததில்லையா. அப்பேர்ப்பட்ட வீரன் இங்கு உட்கார்ந்து தரையில் பேசிக்கொண்டிருப்பதும், இரவு நேரம் குளிர்காய சுள்ளிகள் உடைத்துக்கொண்டிருப்பதும், உங்களுக்கு நிழலாக பெரும் மரக்கிளைகளை உடைத்துக் கொண்டு வந்து நடுவதும், தரையை பெருக்கி சுத்தமாக்கி உங்களுக்கு சாய்மானம் தருவதும் என்னால் பார்க்க சகிக்கவில்லை.

கூலியாளா பீமன். வேலைக்காரனா அந்த வீரன். மிகுந்த வலிமை பெற்ற அந்த க்ஷத்திரியனை இப்படிக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறோமே என்று உங்களுக்கு மனம் பதை பதைக்கவில்லையா? இந்த மாதிரி நிலைக்கு கொண்டுவந்துவிட்டார்களே என்று ஆவேசம் வரவில்லையா? இத்தனை அமைதியாக ஒரு க்ஷத்திரியன் அமர்ந்திருக்கலாமா?

அதோ பாருங்கள் அர்ஜுனன். சம்மணமிட்டு அமர்ந்து முழங்காலில் கை மடித்து மெல்ல தலைகுனிந்து அமர்ந்திருக்கிறார். இரண்டு கைகளால் பல ஆயிரம் கைகள் கொண்ட ஒரு வீரனைப்போல அவர் அஸ்திரங்கள் வருவதை பார்த்ததில்லையா? ஒரு ஏழை பிராமணனுக்காக துடித்துப்போய் துள்ளியெழுந்து அவருடைய மாட்டுக்கூட்டத்தை திருடர்களிடமிருந்து கொண்டு வந்த பராக்கிரமத்தை அந்த அன்பை, அந்த வாஞ்சையை, ஏழைகளுக்காக துடிக்கின்ற அந்த மனோபாவத்தை உங்களுக்கு மறந்துபோயிற்றா? மற்றவர்களுக்காக துடிக்கின்ற அந்த வீரனை இன்று துவள வைத்திருக்கிறீர்களே உங்களுக்கு வலிக்கவில்லையா? இப்படி செய்துவிட்டார்களே சகோதரர்களை என்று கௌரவர்கள் மீது கோபம் வரவில்லையா?

மாத்ரியின் புதல்வர்களான நகுல சகாதேவர்கள் உங்களுக்காக இந்த கஷ்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இவ்வித கஷ்டங்களை அனுபவிக்க தகுந்தவர்களா. சொந்த சகோதரர்கள், உடன்பிறந்தவர்கள் உங்களுக்காக எந்த தியாகத்தையும் செய்யலாம். ஆனால், உங்கள் சிற்றன்னைக்கு பிறந்த அந்த இரண்டு வீரர்களும் என்ன பாவம் செய்தார்கள். இந்த



வனத்தில் கைகட்டி அமர்ந்திருப்பதற்கு உங்களை கடவுள்போல் பார்க்கிறார்கள். அவர்களை காக்க வேண்டிய நீங்கள் அமைதியாக இருக்கிறீர்கள். இது சரிதானா?

இதெல்லாம் அவர்கள் தலையெழுத்து என்று சொல்லிவிடாதீர்கள். ஒரு க்ஷத்திரியனுக்கு அது அழகல்ல. தைரியம் கொண்டவன்தான் க்ஷத்திரியன். கோபம் கொண்டவன்தான் க்ஷத்திரியன். அடிக்கு அடி, உதைக்கு உதை என்று சீறுகிறவன்தானே க்ஷத்திரியன். நீ அடித்தாலும் வாங்கிக்கொள்வேன் என்கிற அமைதி நம் குலத்திற்கு பொருந்துமா? இது பலவீனமல்லவா இந்த பலவீனம் பாவமல்லவா?"

விஷ ஊசிகளைப்போல திரௌபதியின் சொற்கள் தருமரை துளைத்து நின்றன. மற்ற நால்வரும் வியப்போடு அவர்கள் இருவரையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு புராணக்கதை சொல்லுவார்கள். பிரகலாதன் ஒருமுறை தன்னுடைய பேரனுக்கு ஒரு அறிவுரை சொன்னார். அவன் கேட்ட கேள்விக்கு பதிலாகச் சொன்னார்.

உலகத்தில் எது முக்கியம். பொறுமையா? வீரமா? என்ற கேள்வி வரின் மிகப்பொறுமை என்பது ஏமாளித்தனத்தைக் குறிக்கும். அப்படி பொறுமையானவனை வேலைக்காரர்கள்கூட ஏமாற்றுவார்கள். புறம்பேசுவார்கள். அவர் ஏமாந்ததை நினைத்து சிரிப்பார்கள். தொடர்ந்து ஏமாற்றுவார்கள். ஏமாற்ற முடியும் என்று நம்புவார்கள். அவன் பொறுமையாக இருக்கிறான் புரிந்துகொண்டு அமைதியாக இருக்கிறான் என்று அவர்கள் ஒரு லட்சணமாக, ஒரு குணமாக எடுத்துக்கொள்வதேயில்லை.

கண்டிக்கிற நேரத்தில் கண்டிப்பு வரத்தான் வேண்டும். தவறை சுட்டிக்காட்டத்தான் வேண்டும். சிலசமயம் தண்டிக்கத்தான் வேண்டும். அதே நேரத்தில் வீரம் என்பது அத்துமீறிப்போய் அட்டகாசமாக, அடக்குமுறையாக, ஆவேசமாக, அதிகாரத்தின் உச்சமாக இருந்துவிடக்கூடாது. துன்புறுத்தலும், வற்புறுத்தலும் பயன் தராது. பொறுமையையும், வீரத்தையும் அளவோடு ஒரு க்ஷத்திரியன் வைத்துக்கொள்ள வேண்டும்.

தருமபுத்திரரே, அளவோடு உங்கள் பொறுமை இருக்கிறதா என்பதை தயவுசெய்து நீங்கள் யோசிக்க வேண்டும்." திரௌபதி பணிவாகப் பேசினாலும் அவள் பேச்சு கொதிக்கின்ற சுடுநீராக இருந்தது. அந்த ஆவி முகத்தில் அடித்தது. கண்களை சுருக்க வைத்தது. பின்வாங்க வைத்தது. தருமபுத்திரர் அமைதியாக இருந்தார். திரௌபதி சொன்ன மொத்த விஷயத்தையும் மறுபடியும் யோசித்துப் பார்த்தார். தொண்டையைச் செறுமிக்கொண்டு அவளுக்கு பதில் சொல்லலானார்.

மகாபாரதத்தின் இந்த இடங்களிலெல்லாம் கதாபாத்திரங்களுடைய குணாம்சத்தை சொல்வது அல்ல. ஒரு கதையின் ஓட்டத்தில் வரும் சம்பவங்கள் அல்ல. இது உங்களுக்கும், எனக்கும் நடக்கிற பாடம். மகாபாரதம் படிக்கின்ற அத்தனை பேருக்கும் இது குறித்த சிந்தனை தொடர்ந்து வரவேண்டும். உங்கள் யோசனையை தூண்டி உண்மையில் சார் சரி, திரௌபதி கேட்கின்ற கேள்வி நியாயம்தானே. இதற்கு என்ன பதில் சொல்ல முடியும் என்ற எண்ணத்தில்தான் நீங்கள் அடுத்த பக்கத்தை புரட்ட வேண்டும். மகாபாரதம் சிந்திக்கத் தெரிந்தவருக்கு மிகப்பெரிய விருந்து. சிந்திக்க முடியாதவருக்கு நல்லதொரு பாடம்.

> பீமன் என்ற ஒரு மகத்தான வீரனைப்பற்றி நான் சொல்லியா உங்களுக்குத் தெரிய வேண்டும். அவருடைய புஜபலம் எத்தகையது. எப்பேர்ப்பட்ட மல்யுத்த வீரர்களையெல்லாம் புரட்டிப்போட்டு பந்தாடியிருக்கிறார். அவருடைய வருகையை கண்டாலே மனம் நடுங்கி, வயிறு குழைந்து கண்கள் சொருக கிடக்கின்ற மன்னர்களை நீங்கள் பார்த்ததில்லையா. அப்பேர்ப்பட்ட வீரன் இங்கு உட்கார்ந்து தரையில் பேசிக்கொண்டிருப்பதும், இரவு நேரம் குளிர்காய சுள்ளிகள் உடைத்துக்கொண்டிருப்பதும், உங்களுக்கு நிழலாக பெரும் மரக்கிளைகளை உடைத்துக்கொண்டு வந்து நடுவதும், தரையை பெருக்கி சுத்தமாக்கி உங்களுக்கு சாய்மானம் தருவதும் என்னால் பார்க்க சகிக்கவில்லை.

"நம்மீது துவேஷம் கொண்டு தெரிந்தே ஒரு குற்றம் ஒருவன் செய்வானானால் அவனை ஒரு முறை மன்னிக்கலாம். எடுத்துக் காட்டலாம். மறுபடியும் செய்தால் என்று அச்சுறுத்தலாம். ஆனால், தருமபுத்திரரே, உங்கள் சகோதரர்கள் திட்டமிட்டு பலமுறை பல தவறுகள் செய்தார்கள். உங்களை அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்டார்கள். அவர்களை எப்படி நீங்கள் மன்னிக்கப் போகிறீர்கள். ஏன் மன்னிக்கப் போகிறீர்கள். அவர்களை நோக்கி கோபம் கொள்வதில் என்ன தவறு இருக்க முடியும்?"

(தொடரும்)

சுகம் என்பது அமைதியில் இருக்கிறது!

மகாபாரதம்

46



'ஹே கிருஷ்ண,' என்று பிரியத்துடன் தருமபுத்திரர் திரௌபதியை அழைக்கிறார். திரௌபதியின் நிறம் கருப்பு. கிருஷ்ண என்று சொல்லுக்கு கருமை என்று பொருள். ஆழ்ந்த மனவருத்தத்தில் இருப்பதால், இந்த இடத்தில் அந்த அழைப்புகூட பொருத்தமானதாகத்தான் இருக்கிறது. தெளிவு என்ற ஒளியிலிருந்து விலகியிருப்பதால் அவளை கிருஷ்ண என்று அழைத்தாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

"ஹே கிருஷ்ண, கோபம் உள்ளவனுக்கு, கோபத்தாலேயே கோபம் தீங்கு என்று அறிவுறுத்த முடியுமா? கோபம் உள்ளவனை சாது தன்மையினால்தானே, சாதுவாக இருப்பதால்தானே, சமாதானமாக பேசுவதால்தானே கோபம் தவறு என்று அறிவுறுத்த முடியும்? 'கோபமுள்ளவன் அறிவில்லாதவன் என்று சொல்லப்பட்டால் அறிவுடைய நான் எப்படி கோபமுள்ளவனாக மாற முடியும்? அப்படி கோபப்பட்டால் நானும் அறிவில்லாதவன்தானே! எந்த நேரத்திலும், எந்த காரியத்திலும் தன்னை இழக்காதவனே சாது என சொல்லப்படுவான். சிலநேரம் வீரமாகவும், சிலநேரம் சாதுவாகவும் இருப்பது சாதாரண மனிதனுடைய செயல். கோபமுள்ளவனுக்கு எது குறித்து

கோபம் என்ற தெளிவு ஒருபோதும் இருக்காது. தெளிவே இல்லாத ஒரு நிலைதான் கோபம் என்றால் அது இருப்பதில் லாபம் என்ன? அதையா வீரம் என்று சொல்கிறாய்?

எந்த நேரமும் அமைதியையே தன்னுள் வைத்திருப்பவனே சாது. அதுவே பொறுமை. பொறுமை என்பதை இயல்பாக கொண்டுவிட்டால் தான் செய்கின்ற காரியத்தை, தான் இருக்கின்ற நிலையை அவனுக்கு மிகத் தெள்ளத்தெளிவாக அறிந்துகொள்பவனாக இருப்பான். நான் இயல்பிலேயே அமைதியாக இருக்க விரும்புகின்றேன். என்னுடைய நிலை என்ன என்று எனக்குத் தெரிகிறது. இதில் எனக்கு எந்த ஊசலாட்டமும் இல்லை. இதற்கு கோபப்பட வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றியும் நான் தெளிவாக சிந்தித்து வைத்திருக்கிறேன். இயற்கையினுடைய மிகப்பெரிய அறிவை, அதன் அசைவை நன்கு உணர்ந்தவன் கோபப்பட மாட்டான்."

தருமபுத்திரர் சொல்லி முடிப்பதற்கு முன்பு திரௌபதிக்கு கோபம் வந்தது. "ஆக, கடவுள் என்பவர் விதித்திருக்கும்படி நீங்கள் நடந்துகொள்கிறீர்கள். இயற்கை அல்லது கடவுள் அல்லது ஈஸ்வரன் என்று நீங்கள் நினைக்கின்ற விஷயம் உங்களுக்கு நீங்கள் இருக்கின்ற நிலைதான் சரி என்று உணர்த்தியிருக்கிறது. எனக்கு இந்த எண்ணமே கோபத்தை கொடுக்கிறது. கடவுள் என்பவர் சாதுவான உங்களுக்கு வனவாசமும், சூழ்ச்சிக்காரரான துரியோதனனுக்கு சுகமும், செல்வமும் தந்திருக்கிறான் எனில் அந்தக் கடவுளை, ஈஸ்வரனை நான் நிந்திக்கிறேன். அவர் அபத்தமாகப் படுகிறார். நல்லவருக்கு தீங்கும், கெட்டவருக்கு நல்லதும் கொடுக்கிறவரை கடவுள் என்று நான் எப்படி அழைக்க முடியும்?"

அவள் கோபத்தின் உச்சியில் அழத் துவங்கினாள். மற்ற நால்வரும் பரிதாபமாக பார்க்க தருமபுத்திரர் அவளை இன்னமும் மிக அழகாக சமாதானப்படுத்தினார்:

"தவறு. மிகப்பெரிய தவறு. கடவுள் என்ற விஷயத்தை, ஈஸ்வரனை, நிந்திக்கக்கூடிய அளவு அறிவு மனிதர்களில் எவரும் பெற்றிருக்கவில்லை. எல்லாம் கடந்தவரைப் பற்றி ஒரு சிறிய பேழையை வைத்துக்கொண்டு நீ பேசுவது கெட்டிக்காரத்தனமில்லை. துன்பப்பட்டவர்கூட ஒரு வாஞ்சையில்

தான் கடவுளை நிந்திப்பாரே தவிர, அவரை ஏற்றுக்கொண்டுதான் வேதனைப்படுவாரே தவிர, உன்னைப்போல கடுமையாக நிந்தித்து புறக்கணிக்க மாட்டார். இது தவறு கிருஷ்ணே, மிகப்பெரிய தவறு செய்கிறாய். அமைதி என்பது பற்றி சிறிதளவும் குறித்துக்கொள்ளாமல் இருக்கிறாய். எது அமைதி? எது சுகம் தருகிறதோ அதுதான் அமைதி. எது சுகம் தரும்? எது அமைதி தருகிறதோ அதுதான் சுகம் தரும். இந்த நேரம் துரியோதனன் தன் கோபத்தால் செய்த காரியங்களை எண்ணி சந்தோஷமாக இருப்பானா? அவன் உண்ணாமல், உறங்காமல் இருப்பானா இல்லை. எல்லாவற்றிலும் குளறுபடி இருக்கும். எல்லாவற்றிலும் வேதனை இருக்கும். பாதி செய்தும், செய்யாதுமான ஒரு அவஸ்தை இருக்கும். ஆனால், இங்கே பார். அவனால் துரத்தப்பட்ட நான் மிக அமைதியாக, எந்த சஞ்சலமுமின்றி இருக்கிறேன். இதற்கு என்ன காரணம்? சுகம் என்பது செல்வத்திலோ, பஞ்சணையிலோ, படுக்கையிலோ, உணவிலோ இல்லை. அது ஒரு மனதினுடைய குதியல்.

மனம் என்பதை புரிந்து மனம் என்பதை அமைதியாக்கினால் எந்த இடத்திலும் சுகமாக இருக்க முடியும். சுகம் என்பது பொருளில் இல்லை கிருஷ்ணே. அமைதியில் இருக்கிறது. நான் என் மனதை அமைதியாக வைத்திருக்கிறேன். அமைதியாக வைத்திருக்க வேண்டும் என்ற நிர்பந்தத்தில்கூட இல்லை. இயல்பிலேயே என் மனம் அமைதியாக இருக்கிறது. நான் தர்மப்படி நடந்துகொண்டால் அந்த தர்மம் என்னை காப்பாற்றும் என்று நான் நினைக்கவில்லை. கிரஹஸ்தனுக்கான விஷயம். வரவு செலவு போன்றது. தர்மத்தை செய்து தர்மத்தை அடைவது என்பது. நான் இயல்பிலேயே தர்மமாக இருக்கிறேன். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் தர்மமாக இருக்கிறேன். மிகுந்த அமைதியாக இருக்கிறேன். இந்த விஷயத்தை எளிதில் புரிந்துகொள்ள முடியாது. ஐயிரை இட்டு விறால் வாங்குவது அல்ல வாழ்க்கை. இருப்பதைக்கொண்டு சுகமாக இருப்பதுதான் சாதுக்களுடைய செயல். இதற்காக கடவுளை நிந்திக்காதே. இது ஈஸ்வரனுடைய காரியம் என்று நினைக்காதே. சுகம் என்பதை துரியோதனனுக்கு வாரி கொடுத்திருக்கிறான் என்று நீ நினைக்கலாம். ஆனால், துரியோதனனுடைய நிலையை ஈஸ்வரன் மட்டுமே அறிவான். கொஞ்சம் யோசித்தால் உன்னாலும் துரியோதனனுடைய அவஸ்தையை புரிந்துகொள்ள முடியும்.

பாலகுமாரன்

இது காடு. இது தரை, இது மரத்தடி. இது மரவுரி என்று அவஸ்தைப்படுகிறாய். இது ஒப்பிடல். முன்பு அப்படி இருந்தோமே, இப்பொழுது இப்படி இருக்கிறோமே என்கிற ஒப்பிடல். எனக்கு பஞ்சணையும், பருத்தித் துணியும், எண்ணெய் தடவிய சிகை முடியும், விருந்து உபசாரங்களும், தான தர்மங்களும், இன்றைய இந்த நிலையும் ஒன்றாகத்தான் இருக்கின்றன. என்னுள் இந்த சூழ்நிலை எந்த வேதனையும் கொடுத்து விடவில்லை. என் அமைதி என்னை சுகமாக வைத்திருக்கிறது. ஒரு மனதின் அமைதிதான் ஒருவனை சுகப்படுத்துமே தவிர, பொருட்கள் சுகப்படுத்தாது கிருஷ்ணே.”

அர்ஜுனனும், பீமனும் வியப்பால் விழிகளை விரித்துப் பார்த்தார்கள். அவரை நோக்கி கைகூப்பினார்கள்.

ஆனால், திரெளபதி விடவில்லை. அவள் இப்பொழுது வேறு ஒரு அஸ்திரத்தை எடுக்கிறாள். அதற்கு கர்ம யோகம் என்று பெயர்.

நண்பர்களே, மகாபாரதம் கதை அல்ல. அது தத்துவச் சுரங்கம். உங்கள் வாழ்வில் இன்றைக்கும் பயன்படக்கூடிய விஷயத்தை தெள்ளத் தெளிவாக உங்களுக்கு உணர்த்துவதற்காக பல பாத்திரங்களை படைத்து அவர்களை நடிக்க வைத்து, பேச வைத்து, செயல்புரிய வைத்து விவரணையாக வேத விஷயங்களை சொல்லுகிற ஒரு காவியம். ஒரு அரச குடும்பத்தினுடைய வரலாறு என்பதாக அது இருந்தாலும் உலகத்தினுடைய எல்லா மனிதருக்கும் அடிப்படையான தத்துவ விசாரத்தை, வாழ்வு பற்றிய விவரணையை மகாபாரதம் சொல்கிறது.

சாது தன்மையை இயல்பிலேயே கொண்டேன் என்ற தருமருடைய கூற்றை திரெளபதி ஆதரிக்கவேயில்லை. அப்படியா என்று கேட்டுவிட்டு, அடுத்த மிகக் கூர்மையான கணையை அனுப்புகிறாள்.

“ஒரு பசு இருக்கிறது. புற்களை கடித்து தின்கிறது. நீர் குடிக்கிறது. நிழலுக்குப் போய் உட்கார்ந்து வயிற்றிலிருந்து வாய்க்கு கொண்டுவந்து அசை போடுகிறது. கன்றுக்கு பால் தருகிறது. பிறகு யாரேனும் பால் கறக்க வந்தால் மெளனமாக அவர்களுக்கும் பால் தருகிறது. மறுக்கவேயில்லை. அது பால் தருவது என்பது உண்ணுதலாலும், அசை போட்டதாலும் ஏற்பட்டது. இதுதான் அதனுடைய கர்மா. இதுதான் அதனுடைய தொழில்.

ஒரு உழவன் இருக்கிறான். விதிப்படி நடக்கும் என்று அவன் தானியம் விதைக்காமல் கைகட்டி நிற்பதில்லை. அவன் தானியம் விதைத்து, நீர் பாய்ச்சி, எலிகளை விரட்டி, ஆலோலம் பாடி பறவைகளை துரத்தி, பருவத்தே அறுத்து பயிர் செய்து அதை போர் அடித்து நெல் மணிகளாகக் குவித்து, அதை பக்குவப்படுத்தி சாதம் ஆக்குகிறார்கள். அந்த உழவனுக்குத் துணையாக கண்ணார் என்ற கலைஞர் ஏர் கலப்பை செய்கிறார். அந்த கண்ணாருக்குத் துணையாக ஒரு மரத்தச்சர் கைப்பிடி செய்கிறார். இடையர்கள் நல்ல காளைகளை போஷாக்காக வளர்த்து உழவருக்கு கொடுக்கிறார்கள். அந்த போஷாக்கான காளைகளை காபந்து செய்ய வீரர்கள் இருக்கிறார்கள். அந்த வீரர்களுக்கு நல்ல துணி நைந்து கொடுக்க நெசவாளர்கள் இருக்கிறார்கள். அந்த நெசவாளர்களை, கம்மாளர்களை, தச்சர்களை, போர் வீரர்களை, இடையர்களை காப்பாற்ற படை வீரர்கள் இருக்கிறார்கள். அந்த



படை வீரர்களுக்கு அரசன் என்று ஒரு தலைவன் இருக்கிறான்.

ஆக, இந்த உலகம் முழுவதும் உணவு என்பதற்காக மட்டும் அல்ல, வாழ்வதற்காக தத்தம் கர்மங்களை செய்துகொண்டுதானிருக்கிறது. கர்மம் இல்லையெனில் இந்த உலக வாழ்க்கை குளறுபடியாகும். நின்றேகூட போகும். அவரவர் அவரவர் வேலையை செய்வதால் மட்டுமே இந்த உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்த உலகம் இயங்கிக்கொண்டுதானிருக்கும். இதுவரை இயங்கிய உலகம் ஒரு சாதுவால் நின்றுவிடக்கூடாது. நிற்க முடியாது. எங்கேனும் சில பேர் அமைதியாக இருக்கலாமே தவிர, அவரவர் கடமைகள் என்னவென்று ஆராய்ந்து அதில் ஈடுபடுவதுதான் சிறந்தது. எந்த உழவரும் விதிப்படி நடக்கட்டும் என்று மல்லாந்து கிடப்பதேயில்லை. அப்பொழுது மன்னர் எப்படி கிடக்கலாம்.

நான் ஈஸ்வரனை நிந்தித்தேன். புறக்கணிக்கவில்லை. புறக்கணித்திருந்தால் ஈஸ்வரன் என்ற பேச்சே என்னிடமிருந்து வந்திருக்காது. நல்லது செய் இந்த என் புருஷர்களுக்கு இவ்விதம் தீயதை கொடுத்திருக்கிறாயே, அபவாதத்தைத் தந்திருக்கிறாயே, இப்பேர்ப்பட்ட வீரர்களை தலைகுனியும்படி செய்திருக்கிறாயே என்று வேதனையில் அவரை நான் இழித்துப் பேசினேன். அவர் இருப்பை இல்லையென்று சொல்லவேயில்லை. பால் கொடுக்காத தாயிடம் குழந்தை முரண்டு செய்வதில்லையா. வீறிட்டு கத்துவதில்லையா. அதுபோலத்தான் என்னுடைய இந்த செய்கையும். தெய்வத்தினுடைய கட்டளை என்று இருப்பதைத்தான் நான் மறுதலித்தேன்.

> அசுரர்கள் தேவர்களைவிட பலம் பொருந்தியவர்கள். தேவர்களுக்கு மூத்தவர்கள். ஆனால், தேவர்கள் கபடத்தால் இந்த அசுரர்களை ஜெயித்து விட்டார்கள். அமிர்தத்தை அடைந்து விட்டார்கள். இதுவும் ஒரு வகை தர்மம்தான். நம்மை கபடத்தால் வீழ்த்திய துரியோதனனை நாமும் கபடத்தால் வீழ்த்த வேண்டும்.

புருஷனாகப்பட்டவன் காரியம் செய்துதான் ஆகவேண்டும். முயற்சி செய்துதான் ஆகவேண்டும். பிடிவாதத்துடன் ஒரு காரியத்தில் இறங்கித்தான் ஆக வேண்டும். அதை அனுகூலமாக்குவது என்பது தெய்வத்தின் காரியம். முயற்சியற்று இருப்பது கடவுளை சார்ந்த விஷயமாக இருக்காது. கடவுளை சார்ந்தவர்கள் எல்லோருமே முயற்சியற்றுத்தான் இருக்க வேண்டும் என்பது சரியான கொள்கை ஆகாது. எந்த முயற்சியும், அது வெற்றிபெற வேண்டும் என்ற கடவுளுடைய வேண்டுதலும் மனிதனுக்கு காலம் காலமாக இயல்பாக வந்தவை. இதில் எந்த முயற்சியும் நான் செய்ய மாட்டேன், கடவுள் என்னை காப்பாற்றட்டும் என்று இருப்பவர் அவ்வளவு குணமுடையவர் அல்ல. அது அவருக்கு தரித்திரமான நிலையே தரும்.

இன்னும் எளிதாக சொல்வதானால் - நிலத்தை ஏரால் உழுது, விதை விதைத்து, எரு இட்டு நீர் பாய்ச்சுகிறான். ஆனால், நல்ல மழை வந்தால்தான் விளைச்சல் நன்றாக இருக்கும். மழை வராவிட்டால் அது உழவனின் குற்றமில்லை. மழை வராது என்றோ, அதிகம் வரும் என்றோ உழவன் சும்மா இருப்பதில்லை. அவன் தன் காரியத்தை செய்துவிட்டு தெய்வ அனுகூலத்திற்காக காத்திருக்கிறான். மழைக்காக வேண்டியபடி இருக்கிறான். இப்படித்தான் ஒரு மன்னனும் இருக்க வேண்டும். தன்னுடைய முயற்சியை செய்துவிட்டு தெய்வம் என்ன தனக்கு அருள் செய்யும் என்று காத்திருக்க வேண்டும். முயற்சியே இல்லாதிருப்பது புருஷ குணத்திற்கு எதிரானது.

ஒரு மனிதன் தன்னைத்தானே அவமதித்துக்கொள்ளக்கூடாது. தன்னை ஒரு சிறுவனாக கருதிடக்கூடாது. நான் ஒரு துரும்பு என்று பிரபஞ்சத்தைப் பார்த்து இழிவுபடுத்திக் கொள்ளக் கூடாது. சிறிய எறும்பாயினும் அது நாலாபக்கமும் ஓடி தன் காரியத்தை செய்துகொண்டுதான் இருக்கிறது. ஒரு மனிதன் எப்படி அமைதியாக இருக்க முடியும்? தருமபுத்திரரே நான் இதை என் அறிவிலிருந்து பேசவில்லை. என் தந்தையின் மடியில் அமர்ந்து ஒரு அந்தணர் என் தந்தைக்கு உபதேசித்த நீதி வாக்கியங்களைத்தான் ஞாபகத்தில் கொண்டுவந்து உங்களிடம் பேசுகிறேன்" என்று பணிவாகக் கூறினாள்.

புருஷனை எதிர்த்து தன் கர்வத்தால் பேசவில்லை. தனக்கு சொல்லப்பட்டதை பகிர்ந்துகொள்கிறேன் என்று அவள் சாதுர்யமாகவும், இனிமையாகவும் தன் புருஷனிடம் விவரித்தாள்.

திரௌபதியினுடைய ஆலோசனைப் பேச்சால் தூண்டப்பட்ட பீமன் தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கு ஆயத்தமானான். அவனுக்குள்ளும் தருமபுத்திரருடைய அமைதி பற்றி கோபம் இருந்தது. அதைக் கடுமையான சொற்களால் சிதைக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனாலும், தன் தமையன் மீது வைத்த பாசத்தாலும், அப்படி எதிர்ப்பது தவறு என்பதாலும், அவருக்கு கட்டுப்பட்டவனாகத்தான் இருக்கிறேன். அப்படித்தான் வாழ்கிறேன் என்ற தெளிவு இருந்தாலும் அவன் அமைதியாக பேசத் துவங்கினான். ஆனால், அவன் பேச்சிலும் கூர்மை இருந்தது. "அர்ஜுனன் போன்ற காண்டீபதாரி உடன் இருக்கும்போது என்னைப்போன்ற ஒரு மல்யுத்த வீரன் உங்களுக்கு சகோதரனாக இருக்கும்போது மிகப்பெரிய வீரர்களான நகுல, சகாதேவன் இருக்கும்போது ஒரு சாதாரண தந்திரத்தால் நமது ராஜ்ஜிய விஷயங்களை இழந்தீர்கள். ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அந்த சூதாட்டத்திற்குப் பிறகு அந்த சபையை நான் கதற அடித்திருப்பேன். அப்படிச் செய்வது கூடாது. சூதிலே தோற்றுவிட்டோம். இனி கௌரவர்கள் என்ன சொல்கிறார்களோ அந்த கட்டளைப்படித்தான் நடக்க வேண்டும் என்று நீங்கள் தீர்மானம் செய்து விட்டீர்கள்.

எங்களையும் அடக்கி விட்டீர்கள். ஒரு வார்த்தை, ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அந்த சபை தூள்தூளாகியிருக்கும். அத்தனை பேரும் பயந்து ஓடிப் போயிருப்பார்கள். ஆனால், நீங்கள் சொல்லும் தர்மத்தின் காரணமாக இன்று இந்த வனவாசத்தில் தவித்துக் கிடக்கிறோம்.

துரியோதனன் சுகமாக இருக்கிறானாஇல்லையா என்பதல்ல பிரச்னை. நீங்களும் நானும் இந்த பயங்கரமான வனத்திலே எவர் உதவியும் இல்லாமல் ஒருவேளை உணவுண்டு இருக்கிறோமே அதுதான் வேதனை.

நாம் மனிதர்கள்தான். புலன்களால் வாழ்கிறவர்கள்தான். நம்முடைய புலன்கள் பல்வேறு சுகங்களுக்கு ஏங்கத்தான் செய்கின்றன. பெண்கள், மலர்மாலை, சந்தனம், நல்ல உணவு, நல்ல குடிநீர், சுகமான காற்று, அமைதியான படுக்கை, பத்திரமான கோட்டை என்பனவெல்லாம் எல்லா மனிதருக்கும் தேவையானவை. இவற்றைப் புறக்கணித்துவிட்டு வாழ்வது என்பது மனித கூட்டத்தை சாராத சாதுக்களுக்கும், ரிஷிகளுக்கும் பொருந்தும். நாம் க்ஷத்ரியர்கள். மன்னர்கள். நம்மால் காப்பாற்றப்பட வேண்டிய மக்களும் இதே புலன் நுகர்ச்சியோடுதான் வாழ்கிறார்கள். அதைத்தான் தர்மம் என்று சொல்கிறார்கள். புலன்களின் வழியாக வாழ்க்கையை அனுபவிப்பதற்குப் பெயர் காமம் எனில் காமம் மனிதருக்கு மிகவும் அவசியம்.

ஆனால், அது தர்மார்த்த காமமாக இருக்க வேண்டும். அப்போதுதான் காமத்தை நன்கு அனுபவிக்க முடியும். அடுத்தவன் வீட்டு மனைவியை தலைமுடியை பிடித்து இழுத்து வந்தவன் ஒருபொழுதும் அந்தப் பெண்ணை சுகம் கொள்ள முடியாது. அவனும் சுகப்பட முடியாது. நல்ல வீடு இருந்து, நல்ல உணவு இருந்து, நல்ல பத்தினி இருந்து, சுற்றிலும் குழந்தைகள் இருந்து அவர்களோடு விளையாடி சந்தோஷமாகி, பிறகு மனைவியோடு தனித்துப்போய் காமத்தில் ஈடுபடுகிறவன் சொர்க்கத்திற்கு நிகரான சந்தோஷத்தை அனுபவிக்கிறான். அது தர்மார்த்த காமம்.

காமமே கூடாது என்பது இயற்கைக்கு விரோதமானது. அது தர்மத்திற்கு ஒத்து வராதது என்றே நான் நினைக்கிறேன். நீங்கள் காமத்தை புறக்கணித்து தர்மத்தை மட்டுமே கையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இவை இரண்டையும் சமஅளவான குதிரைகளை வைத்து தேர் செலுத்தினால்தான் வாழ்க்கை என்ற தேர் ஓடும். மனித வாழ்க்கை பல வருடங்களை பல மைல் கற்களை இந்த இரண்டு குதிரைகள் மூலம்தான் கடந்தாக வேண்டும். நீங்கள் பயணப்படுவதையே நிறுத்தி விடுகிறீர்கள். இந்த தர்மார்த்த காமம் பற்றி விவரமாகவும், அழகாகவும் சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஒரு பகலின் முற்பகுதி தர்மத்தையும், இரண்டாவது பகுதி அர்த்தத்தையும் கடைசி இறுதி பகுதி காமத்தையும் அனுபவிக்க வேண்டும். அதேபோல வயது ஆரம்பத்தில் யுவ பருவத்தில் காமத்தையும், மத்திய வயதில் தனத்தையும், இறுதிப் பகுதியில் தர்மத்தையும் கடைபிடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தர்மத்தோடு பணம் சம்பாதித்து காமத்தில் ஈடுபடுதல், சுகங்களை அனுபவித்தல், தர்மத்தை மனதில் வைத்துக் கொள்ளுதல். அர்த்தம் என்கிற உழைப்பை, முயற்சியை உடம்பில் ஏற்றுதல். காமம் என்கிற மனதிருப்தியை அடைதல். இவை எளிதாக மனிதனிடம் இயல்பாகவே இருக்கின்றன.

வெறும் காமத்தில் ஈடுபட்டவனும் அல்லது உழைப்பே முக்கியம், காமம் வேண்டாம் என்று புறந்தள்ளுகிறவனும்; தர்மமே முக்கியம், காமமும், அர்த்தமும் வேண்டாம் என்று விலக்குகிறவனும் தவறான கொள்கையை கடைபிடிக்கிறார்கள்.

இன்னும் நாகரிகம் அடைந்து பல்வேறு மக்களுக்கு பல்வேறு விதமான கர்மங்களை விதித்திருக்கிறது. ஒரு அந்தணன் யாசகம் எடுத்து தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால், ஒரு க்ஷத்ரியன் அப்படி செய்ய இயலாது. செய்யக் கூடாது. மற்றவர்களின் கர்மத்தைப் போன்று ஒரு அரசன் வாழக்கூடாது. வணிகம் செய்தோ அதில் லாபம் சம்பாதித்தோ, துணி நெய்தோ, கலப்பை செய்தோ, மரவீடுகள் கட்டியோ அவன் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. உலகம் தர்மத்தை மிக அழகாக மனதில் கொண்டு தர்மத்தின் மூலம் கர்மத்தையும் பிரித்து வைத்திருக்கிறது. நம்முடைய தர்மம் என்ன என்று தயவுசெய்து யோசனை செய்து பாருங்கள்.

அசுரர்கள் தேவர்களைவிட பலம் பொருந்தியவர்கள். தேவர்களுக்கு மூத்தவர்கள். ஆனால், தேவர்கள் கபடத்தால் இந்த அசுரர்களை ஜெயித்து விட்டார்கள். அமிர்தத்தை அடைந்து விட்டார்கள். இதுவும் ஒருவகை தர்மம்தான். நம்மை கபடத்தால் வீழ்த்திய துரியோதனனை நாமும் கபடத்தால் வீழ்த்த வேண்டும். அதுதான் தர்மம். நம்மிடமிருந்து பிடுங்கப்பட்ட அமிர்த கலசத்தை நாம் பிடுங்க வேண்டும். அதுதான் தர்மம்.

நம்முடைய முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று நீங்கள் ஏன் யோசித்துப் பார்க்கவேயில்லை? அவர்கள் இந்த மாதிரி சாது வேடத்தை தரித்ததேயில்லை. போர் என்று வரும்போது மிகப்பெரிய உக்கிரத்தோடு போர் புரிந்திருக்கிறார்களே. எதிரிகளை துவம்சம் செய்திருக்கிறார்களே. அப்படி இருக்க நீங்கள் ஏன் ஒரு புது வழியை தேர்ந்தெடுக்கிறீர்கள்.

க்ஷத்ரியர்களுடைய தவம் காடு, மேடுகளில் அலைந்து திரிவதில் இல்லை. நதிக்கரையோரம் பர்ண சாலைகளில் இல்லை. அவருடைய தவம் போர் புரிதலே. அதுவே அவன் தர்மம். அதன் மூலமே அவன் வீர சொர்க்கம் அடைகிறான்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம். நாங்கள் சொல்வதால், திரௌபதியினுடைய கோபமான பேச்சால் நீங்கள் திசை திரும்ப வேண்டாம். நாட்டு மக்கள் அனைவருமே துரியோதனனுடைய தவறை சுட்டிக்காட்டி இழித்துப் பேசுகிறார்கள். உங்களைக்கண்டு வருத்தப்படுகிறார்கள். நீங்கள் திரும்ப வரவேண்டும் என்று கோபப்படுகிறார்கள். பண்டிதர்களும், அந்தணர்களும், தபஸ்விகளும் செய்வது மிகக் கேவலமான செயல் என்று

கௌரவர்களை நிந்திக்கத் துவங்கியிருக்கிறார்கள். நீங்கள் சிறிதளவும் தர்மத்தை மீறாது இருந்ததைப்பற்றி அவர்கள் சந்தோஷமடைகிறார்கள். ஆனால், இப்படியே போய்விடக் கூடாது என்று கவலையும் அடைகிறார்கள்.

எனவே, எங்களுக்காக இல்லையெனினும் மக்களுக்காகவும், தபஸ்விகளுக்காகவும், அறிஞர்களுக்காகவும் உங்களை ஆதரித்துப் பேசியவர்களுக்காகவும் நீங்கள் போர் என்னும் காரியத்தில் ஈடுபடத்தான் வேண்டும். எங்களை நம்பி இன்றே அஸ்தினாபுரத்தை நோக்கி படையெடுங்கள். கௌரவர்களை அடித்து நொறுக்க எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள். அர்ஜுனனுடைய கூர்மையான அம்புகளையும், என்னுடைய கனமான கதையையும் தாங்கக்கூடியவன் இந்த பூமியில் எவனும் இல்லை. நம்முடைய பூமியை நாம் பிடுங்கிக்கொள்ள வேண்டும்" என்று ஆவேசமாகக் கூவினான்.

பீமனுடைய கோபத்திற்கு தருமபுத்திரர் மிக அழகாக பதில் சொல்கிறார். "பீமா, நீ மிருதுவாகப் பேசினாலும் உன் பேச்சிலுள்ள ஆற்றாமை என் நெஞ்சை பிளக்கிறது. என்னை முட்டாள் என்றும், பலஹீனன் என்றும் மறைமுகமாக நீ எடுத்துக் காட்டுவது என்னை ரணப்படுத்துகிறது. உன் வாயால் இழிவுபடுத்தப்படுகிறோமே என்ற துக்கம் எழுகிறது. ஆனால், நன்றாக யோசித்துப் பார் பீமா. இந்த உங்களுடைய அவல நிலைக்கு நான்தான் காரணம் என்பதை நான் மறுக்கவேயில்லை. ஆனால், இந்தச் செயல் இந்த சூது ஒரு கோபத்தால்தானே விளைந்தது. அவர்கள் சூதுக்கு அழைத்தபோது முடியாது என்று சொல்லும் மனத்திண்மை எனக்கில்லையே. சூதில் ஜெயித்துவிட முடியும் என்றுதானே நம்பினேன். காய்களை உருட்டிச் சொன்ன எண்ணிக்கையை சொன்ன விதத்தில் துரியோதனனுக்கு பதிலாக சகுனி போட்டபோது நான் கோபாவேசம் அடைந்தேன். எனக்கும் விழும் என்று நினைத்தேன். இந்த முறை அவனுக்கு விழாது என்று நினைத்தேன். ஒன்றன் மீது ஒன்றாக பல பொருட்களை வைத்தது என்னுடைய கோபத்தினால்தான். அதுதான் என்னை கொஞ்சமும் லஜ்ஜையின்றி உன்னையும், அர்ஜுனனையும், நகுல சகாதேவர்களையும் ஏன் திரௌபதியையும் பணயமாக வைத்தது. இந்தக் கோபம் என்னிடம் இல்லாது இருந்தால், சூது பற்றிய வெறி என்னிடம் இல்லாமல் இருந்தால் இது பாதியிலேயே நின்றிருக்கும். நீ மாயக்காரன் என்று அவனை புறக்கணித்திருப்பேன். துரியோதனனை நீ போடு என்று சொல்லியிருப்பேன். யாராக இருந்தாலும் என்னால் ஜெயிக்க முடியும். நான் ஜெயிப்பேன் என்கிற ஆவேசம்தான் என்னை இந்த நிலைமைக்குத் தள்ளியது.

மொத்த வாழ்க்கையும் திரும்பக் கிடைத்து நம்மை மறுபடியும் சூதுக்கு அழைத்தார்கள். திரௌபதியின் வேண்டுகோளால் அவளுடைய அழுகையால் இந்த அளவாவது கிடைத்தது. மீண்டும் கிடைத்ததை மறுபடியும் இழக்க காரணம் என்னுடைய ஆவேசம்தான். அது ஒருவகையான கோபம்தான். இந்த முறை நிச்சயம் அவர்களுடைய ராஜ்ஜியங்களையெல்லாம் பிடுங்கிக்கொண்டு அவனை நிர்க்கதியாக விடவேண்டும் என்ற ஆத்திரம் எனக்கிருந்தது. பன்னிரண்டு வருடம் நீங்கள் காட்டிற்கு போக வேண்டும். ஒளிந்திருந்து வாழ வேண்டும். அப்படி இல்லையெனில் நாங்கள் அவ்விதம் செய்வோம் என்றபோது அவனை காட்டுக்கு துரத்த, ஒளிந்திருந்து வாழச் செய்ய நான் சூதில் இறங்கினேன். இது சாத்விக குணமா, சாந்தமா? இல்லை. இது க்ஷத்ரியனுக்கு உண்டான ஆத்திரம். பதிலுக்கு பதில். குத்துக்கு குத்து. வெட்டுக்கு வெட்டு என்று ஒரு போர்வையின் மீது காய்களை உருட்டி நடந்தது. ரத்தம் இல்லாத போராக அமைந்தது.

பீமா, அப்பொழுது என் கைகளை எரித்து விடுவேன் என்று சொன்னாய். கதையை வருடிக் கொண்டு உட்கார்ந்திருந்தாய். அடித்து நொறுக்க வேண்டும் என்ற ஆவேசத்தோடு இருந்தாய். பீமா, அதை ஏன் இப்பொழுது செய்யவில்லை. உன்னிலே இருக்கின்ற என் கைகளை ஏன் எரிக்கவில்லை? சூது முடிந்தபின் ஏன் கதையை பயன்படுத்தவில்லை. ஒரு தர்மத்திற்கு கட்டுப்பட்டாய் அல்லவா. நாம்தான் தோற்றோம் என்று ஏற்றுக் கொண்டாயல்லவா. அமைதியாய் இருந்தாயல்லவா. அதுதான்... அந்த அமைதிதான் என்னிடம் இருந்தது. இன்னும் இருக்கிறது. உன்னுடைய அமைதி மேலும், தாழ்ந்தும் இருந்து கொண்டிருக்கிறது. நான் நிரந்தரமான முழுமையான அமைதியில் மூழ்கிக் கிடக்கிறேன். இதைவிட வேறு எப்படி இதை உனக்குச் சொல்ல முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

(தொடரும்)

இந்த வாழ்க்கையும் நன்றாக இருக்கிறதே என்று அமைதியாகிவிடலாமா?

பீமனைத் தொடர்ந்து ஆற்றுப்படுத்தினார் தருமபுத்திரர். "இந்தப் பழியை எப்படி தீர்ப்பது என்று நீயோ, திரௌபதியோ, அர்ஜுனனோ யோசனை செய்யவில்லை. பன்னிரண்டு வருடங்கள் வனவாசத்தில் ஈடுபட்டு, பதிமூன்றாம் வருடம் ஒளிந்துறைந்து, எவர் கண்ணிலும் படாமல் வாழ்ந்து பிறகு போர் என்று முழங்கினால் மொத்த மக்களும் நம் பக்கம் இருப்பார்கள். இவ்வளவு காலம் துன்புற்று இருந்தார்கள். ராஜ்ஜியத்தை அவர்களுக்கு கொடு என்று மக்களே கேட்பார்கள். ஆனால், துரியோதனன் ராஜ்ஜியம் தரமாட்டான். அப்போதுதான் போர் செய்ய வேண்டும். செய்ய முடியும். அந்த போர்தான் நியாயமாக இருக்கும்.

"இல்லையென்றும், போர் செய்ய மாட்டேன் என்றும், போர் இனி வராது என்றும் யார்

மகாபாரதம்

47

சொன்னது? நான் அவ்விதம் பேசவேயில்லையே. இது நம்முடைய மோசமான நேரம். நாம் சத்தியத்தின்படி நடக்கிறோம். தர்மத்தின்படி நடக்கிறோம் என்பதை மக்களுக்குச்சொல்லியாக வேண்டும். உடனடியாக நீ கதை எடுத்து நின்றிருந்தால் உன் பக்கம் நாலு பேரும், அவன் பக்கம் பத்து பேரும் நின்றிருப்பார்கள். ஜனங்கள் இரண்டாக பிளந்திருப்பார்கள். அப்போது நானும் தர்மமல்ல. அவனும் தர்மமல்ல. தர்மத்தின் பக்கம் யாருமே நிற்க மாட்டார்கள். ஆனால், இன்று பீமா, நாம் தோற்றோம். மரவுரி தரித்துக் கொண்டோம். திரௌபதியோடு வெளியேறினோம். வனவாசம் துவங்கியிருக்கிறோம். நம் பின்னே எத்தனை ஜனங்கள் வந்தார்கள். எத்தனை அந்தணர்கள் வந்தார்கள். எத்தனை சான்றோர்கள் வந்தார்கள். நம்மை தேடிக்கொண்டு எத்தனை தபஸ்விகள் வந்தார்கள்.

இவையெல்லாம் ஏன் நடந்தது பீமா? நீ கதை எடுத்து அங்கு அடித்திருந்தால் உன்னைத்தேடி ஒருவரும் வந்திருக்க மாட்டார்கள். அவன் ஒரு அநியாயம் செய்தான், இவன் ஒரு அநியாயம் செய்தான் அதற்கு இது சரியாய் போயிற்று என்று வெறுத்து இரண்டு பேரையும் ஒதுக்கியிருப்பார்கள். இப்போது நாம் தர்மத்தின் பக்கம் நிற்கிறோம் என்றுதான் சாதுக்களும், ரிஷிகளும், அந்தணர்களும் மக்களும் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மகத்தான செல்வத்தை எப்படி உதறி விடுவது? இது ஏன் உனக்கு புரியவில்லை? போர் வரும் பீமா. அர்ஜுனனுடைய அஸ்திரங்களுக்கும், உன்னுடைய தசை நரம்புகளுக்கும் வேலை கொடுக்கின்ற நேரம் நிச்சயம் வரும். அதுவரை பரதகண்டம்

முழுவதும் சுற்றிக்கொண்டிருக்கிற ஒரு நல் வாய்ப்பு கிடைத்தது என்று நாம் அமைதியாக இருத்தல் வேண்டும்."

ஆனால், பீமன் விடவில்லை. தொடர்ந்து பேசினான்: "இந்த சூதிலே பயணப் பொருளாக வைக்கப்பட்டது பதிமூன்று வருட வனவாசம் மட்டும் அல்ல. அதை நாம் எளிதில் கடந்துவிடுவோம் என்று அவர்களுக்குத் தெரியும். இதோ பதிமூன்று மாதமும் முடிந்துவிட்டது. ஆனால், அவை மட்டும் அல்லாமல் ஒளிந்துறையும் ஒரு வருடத்தையும் நாம் கடந்தாக வேண்டும். அங்குதான் மிகப்பெரிய சூழ்ச்சி இருக்கிறது. என்னுடைய பராக்கிரமத்தையும், அர்ஜுனனுடைய வில் வித்தையையும், திரௌபதியினுடைய அழகையும், உங்களுடைய கம்பீரத்தையும், நகுல, சகாதேவருடைய தனித்த திறமையையும் எப்படி மறைக்க முடியும்? இமயமலையை ஒரு பிடி துரும்பினால் மறைக்க இயலுமா? நாம் எதிர்த்து போரிட்டு தண்டித்த அரசர்கள் உண்டு. அவர்கள் எல்லோரும் இந்நேரம் துரியோதனப் புகழ் பாடி அவனோடு கைகோத்துக் கொண்டிருப்பார்கள். நமக்கு ஆதரவாக இருந்தவர்கள்கூட அவனிடம் சரணடைந்திருப்பார்கள். அல்லது அவன் அவர்களை விலைக்கு வாங்கியிருப்பான். அப்படிப்பட்ட அரசர்கள் தங்கள் ஒற்றர்களை நாம் எங்கிருக்கிறோம் என்று தேட அனுப்பியிருப்பார்கள்.

"நாம் வனவாசம் மேற்கொள்வது எளிது. ஆனால், ஒளிந்துறைந்து வாழ்வது கடினம். மற்ற அரசர்களின் ஒற்றர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, துரியோதனன் நம்முடைய இருப்பை கண்டு பிடித்துவிட்டால் மறுபடியும் பதிமூன்று வருடம் வனவாசம் மேற்கொள்ள வேண்டும். ஆக, இது ஜெயிப்பதற்கு உண்டான வழியாக எனக்குத் தெரியவில்லை. தொடர்ந்து தோல்வியுற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவையெல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இப்போது போர் வேண்டாம் பிற்பாடு வைத்துக்கொள்ளலாம், பதிமூன்று வருடம் முடியட்டும் என்று நீங்கள் சொல்வது எனக்கு நகைப்புக்கு இடமாகத் தோன்றுகிறது. நீங்கள் எந்தச் செயலும் இல்லாது வெறும் ஒரு மலைப்பாம்பைப்போல உட்கார்ந்திருக்கிறீர்கள். இது தவறு. நாகமென சீறவேண்டிய கட்டாயம் நமக்கு வந்துவிட்டது. பிற்பாடு என்ற எண்ணத்தை தூக்கிப்போட்டுவிட்டு இப்போதே சீறுவோம், இப்போதே போர் துவங்குவோம்."

அதற்கு தருமபுத்திரர் பதில் கொடுக்கிறார்: "நீ சொல்கிற விஷயத்தைத்தான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நம் எதிரிகள் துரியோதனனிடம் சேர்ந்து விடுவார்கள். நமக்கு நட்பானவர்களும் சேர்ந்து விடுவார்கள். வெல்ல முடியாத வீரர்களெல்லாம் ஒன்று திரண்டு துரியோதனனுக்கு ஆதரவாகப் பேசி நம்மை எதிர்ப்பார்கள். ஏன் இப்போதே நமக்கு ஆதரவாக இருந்த துரோணரும், அஸ்வத்தாமனும், பிஷ்மரும், கர்ணனும் அவன் பக்கம்தான் இருக்கிறார்கள். நம்மீது கடும் கோபம் கொண்ட கர்ணனை எப்படி சமாளிக்கப் போகிறோம்? பீஷ்மரை எதிர்த்து நம்மால் சண்டையிட இயலுமா? நமக்கு ஆச்சார்யாரான துரோணரை நம்மால் கொல்ல முடியுமா? அவர் மகனைத்தான் சீவி எறிய முடியுமா? யாரை நாம் கொல்வோம், எப்படிக் கொல்வோம்? யுத்தம் என்று ஆரம்பித்துவிட்டால் இவர்களையெல்லாம் அழித்துவிட்டு நாம் துரியோதனனை கைது செய்துவிட முடியுமா? அப்படி ஒரு போர் ஏற்பட்டால் அவர்கள் ஜெயிப்பார்களா, நாம் ஜெயிப்போமோ? இந்த சந்தேகம் வரவேயில்லையா உனக்கு? இதை நினைத்தால் உனக்கு உறக்கமே வரவில்லை. போர் இப்போதைக்கு வேண்டாம் என்று நான் சொன்னதற்கு காரணம் இதுவாகவும் இருக்கிறது. மிக வலிமையான ஒரு கூட்டத்தை நாம் உடனடியாக பழிதீர்த்துக் கொள்வது சரியா என்ற கேள்வியும் வருகிறது."

பீமன் அந்த உண்மையை உணர்ந்து சோர்வானான். ஆனால், எல்லா விவாதத்திற்கும் ஒரு முடிவு வரவேண்டுமல்லவா? பஞ்ச பாண்டவர்களைப் போல வலிஷமிக்கவர்கள் ஒரே அபிப்ராயத்தில் ஒரே குழுவாக இருக்க வேண்டுமல்லவா? இந்த விவாதம் வளர்ந்து கொண்டே போகும் போது வியாஸ பகவான் அங்கு வந்தார். தருமர் என்ற யுதிஷ்டரை ஆசீர்வதித்தார். "என்னுடைய தியானத்தில் உன்னுடைய மனக்கிலேசம் பற்றி நான் அறிந்தேன். உனக்கு விளக்கம் சொல்வதற்காகவே இங்கு வந்திருக்கிறேன். நீ சொன்ன அறங்களெல்லாம் அற்புதமானவைதான். ஆனால், இதை மிஞ்சி இங்கு ஒரு பெரும் போர் நடக்க வேண்டியிருக்கிறது. பூபாரம் குறைக்க வேண்டியிருக்கிறது. க்ஷத்திரியர்களுடைய வலிமையை கீழ் இறக்க வேண்டியிருக்கிறது. க்ஷத்திரியர்களைக் கொண்டே க்ஷத்திரியர்களை வதம் செய்ய வேண்டியிருக்கிறது. அர்ஜுனனுடைய வில் வித்தையும், பீமனுடைய பலமும் வீணாக போகக் கூடாது. நீ எல்லாவற்றையும் துறந்தவன் போல இங்கு பேசிக் கொண்டிருக்கும்போது

துரியோதனன் அவனுக்கு ஒத்துவராத பீஷ்மரையும், துரோணரையும் கூட அனுசரித்துப் போகிறான். அவர்களை தன் வசப்படுத்தி வைத்திருக்கிறான். விதுரரையும், கிருபரையும் தன்னிலிருந்து மீறாமல் வைத்திருக்கிறான். துரோணரையும், அவர் மகன் அஸ்வத்தாமனையும் நட்பினாலும், அன்பினாலும் கட்டிப் போட்டிருக்கிறான். மிக தந்திரமாக இவர்களையெல்லாம் அனுசரித்தும், ஆதரித்தும் தன் பக்கம் வைத்திருக்கிறான். இதெல்லாம் விளையாட்டுக்கு என்று நினைக்கிறாயா? அல்லது நல்லவர்களை ஆதரிக்கும் மனோபாவமுள்ளவன் இவன் என்று கருதுகிறாயா? மிகத் தெளிவாக உங்களை அழிக்கின்ற ஒரு எண்ணத்தை அவன் திடமாக நாள்தோறும் வளர்த்து வருகிறான். இங்கு பேசியது போல நீ துரியோதனிடம் பேச முடியாது. அவனுக்குப் புரியாது. உன் பேச்சை கேட்டு அவன் கொக்கரிப்பான். ஜெயித்து விட்டதாக நினைப்பான். இதை மீறி அர்ஜுனனையும், பீமனையும் அவன் வதம் செய்தாலும் செய்வான். எனவே, போருக்குத் தயாராகும்படி அர்ஜுனனையும், பீமனையும் உற்சாகப்படுத்து. குறிப்பாக அர்ஜுனனை உத்வேகப்படுத்து.

"தேவர்களோடு சம்பாஷிக்கின்ற மந்திரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் உனக்குச் சொல்லித் தருகிறேன். நீ அதனை அர்ஜுனனுக்கு நல்ல நேரத்தில் உபதேசித்து இந்திரனை சந்தித்து வரும்படிச் செய். இந்திரனிடமிருந்து ஆயுதங்கள் வேண்டுமென்றும், அஸ்திரங்கள் வேண்டுமென்றும் அவனைக் கேட்கச் சொல். இதுதான் முடிவு. இதுதான் வழி. இதைத்தான் செய்ய வேண்டும். உண்மை நிலை என்ன என்பதை புரிந்து கொள். யார் நமக்கு எதிராக இருக்கிறான் என்பதை அறிந்து கொள். அதற்கேற்றார்போல் செயல்படு. எதற்கு யுத்தம், இந்த வாழ்க்கையும் நன்றாக இருக்கிறதே என்று அமைதியாகி விடுவது அர்த்தமல்ல. இங்கே யுத்தம் என்பது உன் பொருட்டு அல்ல. யுத்தமின்னையும் உன் பொருட்டு அல்ல. வேறு எதன் பொருட்டோ இங்கு சில விஷயங்கள் நடந்தாக வேண்டும். அவற்றை நீ அறிய முடியாமலும் போகலாம். எனவே நான் சொன்னதை செய்வாயாக" என்று கட்டளை இடுவதுபோல் பேசினார்.

பாலகுமாரன்

ஆழ்ந்து யோசிக்கும் போது தர்க்க நியாயத்திற்கு அப்பாற்பட்டு இந்த உலகம் சில விஷயங்களில் ஈடுபட்டுக் கொண்டும், விலகியும் இருப்பதை காண முடியும். மிக மோசமான ஒரு எதிரியை அழிப்பதற்காக கம்யூனிஸ்டு கொள்கையும், ஜனநாயக கொள்கையும் கொண்ட இரண்டு தேசங்கள் கை கோத்து ஒன்றிணைந்து ஒரு பொது எதிரியை அழித்தன. மும்மரமாக போரிட்டன. எனக்கு ஒன்றும் பாதிப்பு இல்லையே என்று இல்லை. பாதிப்பு வரத்தான் செய்தது. அவர்கள் வேறு, நான் வேறு, அவர்கள் சிந்தாந்தம் வேறு, என் சிந்தாந்தம் வேறு நான் கைகோர்க்க முடியாது என்று சொல்லியிருப்பின் எதிரி வலுவாகி, இவர்கள் இரண்டு பேருமே அழியும்படி நேரிட்டிருக்கலாம். அப்போது இரண்டு பேர் சிந்தாந்தமே முட்டாள்தனமாகப் போயிருக்கலாம். அந்த நேரத்தில் தங்கள் சிந்தாந்தங்களை ஒதுக்கி விட்டு என்ன செய்ய வேண்டுமோ அதை அந்த இரண்டு தேசங்களும் செய்தன. அன்றிலிருந்து இரண்டாம் உலகப்போர் வரை தர்க்கத்திற்கு மீறிய சில விஷயங்கள் நடைபெறுவதை உலகம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறது.

யுதிஷ்டர் சமாதானமானார். "இங்கே தைத்ய வனத்தில் இருந்தது போதும். தொடர்ந்து ஒரே இடத்தில் இருக்காதே. அது தபஸ்விகளுக்கு தொந்தரவு. உங்களை வரவேற்று உபசரித்தாலும் உங்களுடைய இருப்பு அவர்களுடைய தபத்தை குலைக்கும். எனவே வேறு இடம் நாடிச் செல். காம்ய வனத்திற்கு போ" என்று வியாஸர் சொல்ல, பஞ்சபாண்டவர்கள் திரௌபதியோடும், தொடர்ந்து வரும் அந்தணர்களோடும், நல்லோர்களோடும் காம்யவனம் நோக்கிப் போனார்கள்.

இம்மாதிரியான அமைதியான வனங்களையெல்லாம் எல்லோரும் பார்த்ததில்லை. அப்படி பார்ப்பதற்கு துணை இல்லாமல் உள்ளே நுழைய முடியாது. மகா வீரர்களான அர்ஜுனனும், பீமனும், நகுல சகாதேவரும், தருமரும் இருக்கும் பொழுது அவர்களோடு உணவுக்கு குறை வைக்காத திரௌபதியும் இருக்கும்பொழுது அவர்களெல்லோரும் பஞ்சபாண்டவர்களுடன் ஒரு அனுபவம் கருதி பயணப்பட்டார்கள். பஞ்சபாண்டவர்களுக்கும் வனத்தின் தனிமை பயமுறுத்தாது ஒரு சிறிய நகரத்தோடு நகர்வது போன்ற ஒரு அனுபவத்தை அடைந்தார்கள். எல்லோர் நலத்தையும் கருதி அமைதியாக பயணப்பட்டார்கள். பரஸ்பரம் உதவி செய்து கொண்டிருந்தார்கள். உற்சாகப்படுத்திக் கொண்டார்கள்.

காம்ய வனத்தில் நல்ல இடம் பார்த்து அழகாக குடியமர்ந்தார்கள். யாத்ரையின் போது மௌனமாக இருந்த யுதிஷ்டிரர் வந்து சரியாக குடியமர்ந்ததும் வியாஸர் சொன்னதை ஞாபகப்படுத்திக் கொண்டு அர்ஜுனனை அழைத்தார். தலையை வருடி, கன்னத்தை தொட்டு ஆலிங்கனம் செய்து கொண்டார். செயற்கரிய காரியத்தை செய்யப் போகிறவன் என்ற பெருமிதத்தோடு தம்பியை தழுவிக் கொண்டார்.

"நாம் பேசுவதற்கு முற்றுப்புள்ளி வைத்தார் போல வியாஸ பகவான் பேசி முடித்துவிட்டார். எனக்கு தேவர்களோடு சம்பாஷிக்கின்ற, அவர்களை உணர்கின்ற மந்திரத்தை உபதேசித்தார். உனக்கு அதை உபதேசிக்கச் சொன்னார். என்னிடமிருந்து அந்த மந்திரத்தை வாங்கிக் கொண்டு நல்லபடியாக அதை பயிற்சி செய்து

இமயமலை சாரலுக்குப் போய் தேவர்களோடு தொடர்பு கொள்வாயாக. அவர்களிடம் என்ன உதவி கேட்க வேண்டும் என்பது உனக்குத் தெரிய வரும். அதேபோல் நடந்து கொள்வாயாக. மறுபடி ராஜ்யமும், அரண்மனையும், குடிபடைகளுமாய் நாம் இருப்பதற்கு நீயே காரணம். உன்னாலேயே அது நடைபெற போகிறது. எனவே, உன் பராக்கிரமத்தை வளர்த்துக் கொள்கின்ற இந்த விஷயத்தைச் செய்து வா” என்று மந்திர உபதேசம் செய்தார்.

அர்ஜுனன் மந்திரத்தை வாங்கிக் கொண்டு சகோதரர்களையும், திரௌபதியையும் பிரியத்தோடு பார்த்தான். தன்னுடைய எண்ணம் நிறைவேற போகிறது என்ற சந்தோஷத்தில் திரௌபதி குதூகலமானாள்.

“என்ன நினைத்துக் கொண்டு குந்திதேவி உங்களைப் பெற்றாளோ தெரியவில்லை. அப்படி ஏதேனும் நினைத்துத் தானே பெற்றிருப்பாள்! மகாவீரனாக வேண்டும். பராக்கிரமசாலியாக இருக்க வேண்டும். உலகத்தையெல்லாம் ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்கின்ற ஒரு மகோன்னதமான குழந்தையாக இருக்க வேண்டும் என்று தானே உங்களைப் பெற்றிருப்பாள். அது நிறைவேறும் வண்ணம் நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். உங்களால் நாங்கள் எல்லோரும் கௌரவப்படப் போகிறோம். உங்களால் நாங்கள் எல்லோரும் மேன்மையடையப் போகிறோம். உங்களால் நாங்கள் இழந்த சுகங்களையெல்லாம் மறுபடியும் பெறப் போகிறோம். இந்த துக்கம் நீங்கப் போகிறது. வெற்றி உங்களுக்கே. போய் வாருங்கள்.” என்று கை கூப்பினாள்.

அர்ஜுனன் நெகிழ்ந்தான். திரௌபதியின் கைப்பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டான். ஒரு மிகப்பெரிய சாதனை செய்வதற்கு அவனுக்கு இப்பொழுது ஒரு அர்த்தம் கிடைத்து விட்டது. இதோ இந்த நான்கு சகோதரர்களுக்காகவும், மனைவிக்காகவும், அவன் மனதில் குமுறிக் கொண்டிருக்கிற இந்த வேதனையை நீக்குவதற்காகவும் தான் எத்தனை கடுமையான பயிற்சிகளையும் மேற்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று உறுதி செய்து கொண்டான். தருமரிடம் விடை பெற்று வடக்கு நோக்கி வேகமாகப் போனான்.

மனம் எந்த வேகத்தில் போகிறதோ அந்த வேகத்தில் அவன் உடம்பு செயல்பட்டது. இமயமலை அடிவாரம் அடைந்து கடக்க முடியாத சிகரங்களையும், பள்ளத்தாக்குகளையும், அருவிகளையும், ஏரிகளையும், ஓடைகளையும் தாண்டி அமைதியான இடத்திற்கு வந்தபோது ‘திஷ்டா’ என்று ஒரு குரல் கேட்டது. ‘இங்கேயே இரு’ என்று அதற்கு அர்த்தம். அர்ஜுனன் தயங்கி நின்றான். சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரு பெரிய மரத்தின் இரண்டு வேர்களுக்கு நடுவே அமைதியாக ஒரு முனிவரைப் போல தோற்றமளித்த வயோதிகன் அமர்ந்திருந்தான். உபவாசங்களால் மெலிந்திருந்தான். ஆனால், முகம் மிக தேஜஸாக இருந்தது. தலைமுடி சடையாக இருந்தது. ஆனால், கண்கள் அக்னியைப் போல பிரகாசித்தன. அந்த சிரிப்பு மயக்கியது.

“என்ன தம்பி. மிக மிக அமைதியான இந்த இடத்தில் வில்லும், அம்பும், கத்தியும், கையுறையும், செருப்பும் அணிந்து கொண்டு யுத்தத்திற்கு வருபவன் போல வருகிறாய்! இது யுத்தம் செய்யும் இடமல்லவே. அப்படி யாரும் இங்கு இல்லையே. எதற்கு இந்த ஆயுதங்கள். நீ அர்ஜுனன் தானே. நான் புரிந்து கொண்டேன். எதற்கு இது. தூக்கி எறி. ஒருவன் வாழ்நாளில் எங்கு வரவேண்டுமோ அங்கு நீ வந்துவிட்டாய். எந்த நிலையை அடைய வேண்டுமோ அந்த நிலையை அடைந்து விட்டாய். இங்கே வருவதற்குண்டான பலம் உனக்கு இருக்கிறது என்றால் இந்த வில்லும், வாளும், அம்பும், அம்பாரத் தூணியும் அர்த்தமற்றவை. பலம் குறைந்தவை. உன்னுடைய ஆயுதங்களை விட உன் மனம் பலம் பொருந்தியதாக இருக்கிறது. எனவே பலம் பொருந்திய அந்த மனதை மட்டுமே வைத்துக் கொண்டு மற்றதை வீசி எறி. இது அமைதியான இடம். உனக்குத் தேவையில்லை தூக்கிப் போடு.” என்று கட்டளையிடுவதுபோல் சொன்னார்.

எந்த காரணம் கொண்டும் தன்னுடைய காண்டீபத்தை புறக்கணிப்பதில்லை என்று அர்ஜுனன் சபதம் செய்திருந்தான். அது நினைவுக்கு வர பணிவாக மறுத்தான். “எனக்கென்று சில கடமைகள் இருக்கின்றன. என்னை நம்பியுள்ளோருக்கு நான் உதவி செய்ய வேண்டியிருக்கிறது. அந்த உதவிக்கு இந்த ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. இந்த ஆயுதங்கள் போதாது என்று நான் கூடுதலான ஆயுதங்களுக்காகத்தான் இங்கே வந்திருக்கிறேன். தேவர்களின் தலைவன் இந்திரனைத் தேடி அவருடைய ஆயுதங்களை வாங்க வேண்டுமென்ற விருப்பத்தோடு வந்திருக்கிறேன். எனவே, நீங்கள் யார் என்று எனக்குச் சொல்லி இந்திரனிடம் போக வழி சொல்லுங்கள்” என்று பணிவாகக் கேட்டான்.

அந்த முனிவர் சிரித்தார். “அர்ஜுனா நானே இந்திரன்” என்று தன் சுயரூபத்தை காட்டினார். அர்ஜுனன் விழுந்து வணங்கினான்.

“ஓய்ந்து விடாது. மிகப் பெரிய மனோ பலத்தோடு இத்தனை இடங்களை தாண்டி வந்திருக்கிறாய் என்றால் நீ எந்தவித ஆயுதங்களையும் வாங்க யோக்கியதை உள்ளவன். உன்னுடைய மனோவலிமை மெச்சத்தகுந்தது. இந்த ஆயுதங்களை நான் உனக்கு தருவதை விட பரமேஸ்வரன் உனக்கு கொடுத்தால் அது உத்தமமாக இருக்கும். எனவே, நீ பரமேஸ்வரனை தேடிப் போ. அவரை மனதில் தியானம் செய். உன் தேடுதலும், தியானமும் ஒன்று கூடட்டும். தேடல் என்பது உடல் ரூபமானது. அதற்காக பயணப்படுகிறாய். மனம் முழுவதும் சிவபெருமானைப் பற்றியே தியானத்திருக்கிறது. எனவே அவர் எங்கிருக்கிறார் என்று பார்ப்பது உன்னுடைய வேலையாகிறது. இந்த நேரத்தில் உடம்பும், மனதும் ஒன்று கூடுகின்றன. எந்த க்ஷணம் இவை

இரண்டும் பின்னிப் பிணைந்து ஒரே ஸ்தூபமாய், தீபமாய் எரிகிறதோ அப்பொழுது பரமேஸ்வரன் தரிசனம் கிடைக்கும். எனவே, தேடு. தேடினால்தான் கிடைக்கும். தேடாமல் தெரிந்தது போல் பேசுபவன் முட்டாள். பிறர் சொல் கேட்டு பேசுபவன் அறிவிலி. ஒவ்வொரு மனிதனும் தானே தேட வேண்டும். தானே தியானத்தில் ஈடுபட வேண்டும். இங்கு இன்னொருவர் சொல்லிக் கொடுத்து வருவதல்ல இது. இது உன்னாலேயே நடக்கப்பட வேண்டிய காரியம். மெல்லியதாய் நானோ, மற்றவரோ வழி காட்டலாம். ஆனால், தொடர்ந்து பயணப்படவும், மனம் ஒருமுகப்படவும் உன்னுடைய சக்தியும், வியக்தியும்தான் முக்கியம்.” என்று சொல்ல, அர்ஜுனன் ‘புரிந்தது’ என்று பணிந்தான்.

இந்திரன் நல் வார்த்தைகள் சொல்லி ஆசீர்வதித்து விட்டு அந்த இடத்திலிருந்து மறைந்தார். அர்ஜுனன் அங்கே தங்கினான். சிவனை தியானித்தான். தேடலுக்கு பிறகு தியானமல்ல. தியானத்திற்குப் பிறகு தேடல். மனம் ஒன்றுகூடிய பிறகு எங்கிருக்கிறார் என்று தேடுவது மனத்திற்கு எளிது. மிகப்பெரிய ஒரு வித்தையை எளிமையான முறையில் இந்திரன் சொல்லித்தர அர்ஜுனனுக்கு அது புரிந்தது.



மகாபாரதம் படிக்கின்ற சாதாரணர்களுக்கும் இதை ஊன்றி படித்து புரிந்து கொண்டால் மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவது எளிதாகும்.

இமயமலைத் தொடரின் பல சிகரங்களுக்கப்பால், பரதகாண்டத்தின் பின்னால் ஒரு மலைச் சரிவில் பசுஞ்சோலை இருந்தது. அங்குதான் அர்ஜுனன் இந்திரனை சந்தித்தான். இந்திரனை சந்தித்த இடத்திலேயே சிவனை குறித்து தியானிக்கலானான். ஒரு நாளைக்கு ஒரு முறை பழங்களையோ, காய்களையோ உண்டு கடும் தவத்தில் ஆழ்ந்திருந்தான். பிறகு மூன்று நாளைக்கு ஒரு முறை உணவு எடுத்துக் கொண்டான். பிறகு ஆறு நாளைக்கு ஒரு முறை பழங்கள் சாப்பிட்டான். பிறகு பதினைந்து நாளைக்கு ஒரு முறை எது கிடைத்ததோ அதை உண்டான். உணவு என்கிற விஷயம்கூட பசி என்கிற தொந்தரவு கூட அவனை தவத்திலிருந்து கலைக்கவில்லை. உயிர் வாழ்வதற்கு உடம்புக்குள் உயிர் இருப்பதற்கு என்ன சக்தி வேண்டுமோ அதை மட்டுமே உண்டான். பிறகு காற்று மட்டுமே போதுமானதாக இருந்தது.

ஒரு காலில் நின்று கைகளை உயரே தூக்கி ஒரு மூங்கில் கம்பு போல பொன்னிறமாக, தேஜஸ்வியாக அர்ஜுனன் பரமேஸ்வரனை குறித்த கடும் தவத்தில் இருந்தான். அந்த இடத்தில் இருந்த முனிவர்கள் அவனுடைய இந்த தபஸ் ஏற்படுத்துகின்ற அதிர்வை தாங்காது தவித்தார்கள். எங்கேயோ ஏதோ ஒரு ஜீவன் தவிக்கிறதே, தன்னை துன்புறுத்திக் கொள்கிறதே என்பதை உணர்ந்தார்கள். யார் என்று தெரிந்தார்கள். பரிதாபப்பட்டார்கள். சீக்கிரம் இவனுடைய தவம் நிறைவேற வேண்டுமே என்று ஆதங்கப்பட்டார்கள். இவன் நிறுத்துவதாக இல்லையே என்று பரமேஸ்வரனிடம் போய், ‘உங்களை குறித்து தவம் இருக்கிறான். தயவு செய்து அவனை ஆசுவாசப்படுத்துங்கள்’ என்று வேண்டினார்கள்.

“அர்ஜுனன் சொர்க்க வாசம் விரும்பவில்லை. அதற்காக தவம் இல்லை. அவன் எது குறித்து தவம் இருக்கிறான் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் பதட்டப்பட வேண்டாம். வெகுவிரைவில் நான் அவனை அமைதிப்படுத்துவேன் என்று அந்த முனிவர்களுக்கு வாக்கு கொடுத்தார் பரமேஸ்வரன்.

அந்த வனத்தில் சிவபெருமான் கொடும் வேடனாக உருவெடுத்து தரை இறங்கினார். நல்ல ஆகிருதியும், கையில் வில்லும், அம்பாரத்தூணியும், கண்களில் கூர்மையும், முகத்தில் கடுமையும், நடையில் அலட்சியமும், நிற்பதில் திடமும் கொண்டு பல பெண்களோடு அந்த வனத்திலே அர்ஜுனனை நோக்கி நடந்து வந்தார்.

அர்ஜுனனின் தபஸை கண்ட மூகன் என்ற ராட்சஸன் அந்த தவத்தை கலைக்க விரும்பினான். பன்றி உருவில், தொலைவிலிருந்து உருமினான். தடதடக்க அருகே ஓடினான். முன்னும் பின்னும் அலைந்தான். தொலைவிலிருந்து கால்களால் குழி எடுத்து, கோரை பற்களால் மண் கிளறி மிக வேகமாக அர்ஜுனனை நோக்கி ஓடிவந்தான். அர்ஜுனன் நகர்ந்து கொண்டான். பன்றி தவத்திற்கு இடையூறு செய்கிறது என்று கோபமடைந்தான். சட்டென்று வில்லும், அம்பும் எடுத்துக் கொண்டு உடம்பு இருக்கிறது என்கிற திமிர்தானே என் தவத்தை கலைக்க வைக்கிறது. ஒரே அடி, மண்டை பிளந்து இறந்துவிடுகிறாய் பார் என்று வில் வளைத்து அம்பு தொடுத்தான். அப்போது ‘நில்’ என்ற சப்தம் கேட்டது. வேடர் வடிவம் பூண்டிருந்த சிவபெருமான் கை உயர்த்தி அவன் குறி பார்ப்பதை தடுத்து நிறுத்தினார். அர்ஜுனன் தளர்ந்தான்.

(தொடரும்)

மகாபாரதம்

48

அடர்த்தியான கோபம் யுத்தத்துக்குத் தயாராகும்!

“அந்த பன்றியை துரத்திக் கொண்டுதான் வருகிறேன். அதை வெகு தொலைவிலேயே பார்த்துவிட்டு வருகிறேன். எனக்கு பயந்து ஓடிவந்து உன்னை தொந்தரவு செய்கிறது. அது நான் வேட்டையாட வந்த பன்றி. நீ அதை குறிபார்க்க வேண்டாம். சும்மா இரு” என்று அதட்டல் குரலில் பேசினார்.

வந்திருப்பவன் வேடன். குரலில் அதட்டல். கண்களில் திமிர், நடையில் அலட்சியம். அர்ஜுனனுக்கு பன்றியின் மீது இருந்த கோபம் வேடன் மீது திரும்பியது. முக்கியமான விஷயமாக இருக்கலாம். ஆனால், சொல்வதில் பணிவு வேண்டாம்? யார் யாரிடம் எப்படி பேசுவது என்ற முறை இல்லையா? இதென்ன அதட்டல் குரல்! அவன் முதலில் பார்த்துவிட்டால் பார்த்த பொருள் அவனுக்குச் சொந்தமா? பன்றி என்னை தாக்க வந்தது. தடுத்து நிறுத்த நான் வில் வளைத்தேன். நிறுத்து என்று சொல்ல இவனுக்கு என்ன உரிமை? அட போடா... என்ற அலட்சியத்தில் அர்ஜுனன் வில் வளைத்து மிக வேகமாக ஒரு அம்பு செலுத்த, கண் இமைக்கும் நேரத்தில் வேடன் தாழ்ந்திருந்த வில்லை வளைத்து இன்னொரு அம்பை செலுத்த இரண்டும் ஒரே க்ஷணத்தில் பன்றியின் உடலில் புகுந்து அதன் உயிரை குடித்தன. பன்றி சுருண்டு விழுந்து செத்தது.

சண்டை உயிர்ப்பித்தது.

“சொல்லச் சொல்ல செய்கிறாயே. யார் நீ? உனக்கு இங்கு என்ன வேலை? ஏதோ நகரத்தில் இருந்து சுகபோகியாக இருந்து இங்கு வந்து கை, கால்கள் தூக்கி தவம் செய்துவிட்டால் இந்த இடமும், இங்குள்ள மிருகங்களும் உன் வசமாகிவிட முடியுமா? நான் இந்த காட்டுவாசி. இங்குள்ள விலங்குகள் எனக்குச் சொந்தம். அதைக் கொல்வதும், கொல்லாததும் என் விருப்பம். அதற்குள் புகுந்து இடைஞ்சல் செய்வதற்கு உனக்கு எந்த உரிமையும் இல்லை. அது என்னுடைய லட்சியம் என்று சொன்ன பிறகும் அதன் மீது அம்பு செலுத்துகிறாயே இது அயோக்கியத்தனம்தானே?”

பேச்சு பேச்சாக இல்லை. வம்புக்கு இழுப்பதாக இருந்தது. அவமரியாதை மிகுந்திருந்தது. வேறொருவர் பன்றியை அடித்துக் கொன்றால் அது தவறு. இங்கு வேட்டையாட தனக்கு மட்டுமே உரிமை உண்டு என்று சொல்பவனைவிட நிர்மூடன் எவரேனும் உண்டா? உள்ளுக்குள் கோபம் பொங்கியது. “என்னைத் தாக்க வரும் பன்றியை தாக்கினேன். முதலில் அடித்தது நான். எனவே இந்த இடத்தைவிட்டு அப்பாலே போ” என்று வேடனை அர்ஜுனன் விரட்டினான்.

“யார் யாரை விரட்டுவது?” வேடன் பதிலுக்குச் சீறினான்.



“இங்கு வந்ததே தவறு. என் இடத்திற்கு வந்து என்னை விலகச் சொல்கிறாயே. என்ன திமிர் உனக்கு? உன்னையெல்லாம் தூக்கி போட்டு மிதித்தால்தான் புத்தி வரும்.” வேடன் பல் கடித்துப் பேச, அர்ஜுனனுக்கு சிரிப்போடு கோபம் வந்தது.

ஒருவேளை மெலிந்து பலவீனன்போல் தோற்றமளிப்பதால் தன்னை தவறாக எடை போடுகிறானோ? பெரிய ஆகிருதியாக இருப்பதால், சுற்றிப் பெண்கள் இருப்பதால் அட்டகாசமாக பேசுகிறானோ? இந்த வனத்தில் இத்தனைப் பெண்களோடு திரிகின்ற வேடனுக்கு கர்வம் இருக்கத்தானே செய்யும். ஆனால், அதை என்னிடம் காட்டினால் விட்டுவிடுவேனா? அர்ஜுனன் புருவம் நெறித்தான்.

“பெண்களுக்கு முன்னால் கம்பீரம் பேசுகிறாய் என நினைக்கிறேன். நான் யாரென்று உனக்குத் தெரியவில்லை.” அர்ஜுனன் வில் வளைத்து வேறொரு அம்பு எடுத்து வேடன்மீது குறி பார்த்தான். வேடன் அசரவேயில்லை. அர்ஜுனனுக்குக் கொஞ்சம் திகைப்பாகவே இருந்தது. சுற்றியுள்ள பெண்களை வேடன் பார்க்க, அவர்கள் விலகிக் கொண்டார்கள். எப்பொழுது வில்

சர்வாணி

பரமசிவனுடைய அஷ்டமூர்த்திகளில் பூமி ரூபமாக இருக்கும் மூர்த்திக்கு 'சர்வ' என்று பெயர். அவருடைய பத்னீ (சர்வஸ்ய தேவஸ்ய பத்னீ)

வளைத்து நாண் ஏற்றினான், எப்பொழுது அம்பு தொடுத்தான் என்று தெரியவில்லை. மிகப்பெரிய அஸ்திரப் பயிற்சி இருந்தாலொழிய இத்தனை வேகம், விரைவு ஒருவன் கைகளுக்கு கிடைக்காது. மிருகங்களை வேட்டையாடுகின்றவனுக்கா இத்தனை திறமை! அர்ஜூனனுக்கு உள்ளே மெல்லியதாய் ஒரு சந்தேகம் வந்தது. போர் முனையில் சந்தேகம் வரவே கூடாது.

"இப்பொழுது நீதான் முதலில் குறி பார்த்தாய். அதனால் நீ உன் பாணத்தை விடலாம். நடத்து," அவன் வாய்விட்டுச் சிரிக்க, வேடனைச் சுற்றியிருந்த பெண்களும் சிரித்தார்கள். பத்து பெண்களின் சிரிப்பொலி அர்ஜூனனுக்கு கோபத்தைக் கிளறியது. ஒருவேளை அர்ஜூனனின் கோபத்தை கிளற வேண்டுமென்பதற்காகவே பெண்கள் கூட்டம் வந்ததோ என்னவோ.

அம்பு சீறிச் சென்றது. மிக அழகாக ஒரு நெளிவோடு அந்த வேடன் நகர்ந்து கொண்டான். அம்பு அவனைத் தாண்டி வெகு தூரம் எங்கோ போய்விழுந்தது. தன் குறி பிசகுவதா! அர்ஜூனன் திகைத்தான். கோபமானான். திகைப்பு தெளிவு கொடுத்திருக்க வேண்டும், கோபத்தைக் கொடுத்து விட்டது! என்னுடைய குறி பிசகுவதா என்று கோபம் வந்துவிட்டது. நான், எனது, என்னுடைய என்ற எண்ணங்கள் கோபத்தில் பன்மடங்கு உயரும். ஒன்று நூறாகும். நூறு ஆயிரமாகும். அடர்த்தியான அந்தக் கோபம் யுத்தத்திற்குத் தயாராகும்.

அடுத்தபடி ஒரு அம்புவிட அதைக் கையில் பிடித்து ஒடித்து கீழே போட்டான். வேடனின் செய்கை ஆச்சரியமாக இருந்தது. சரசரவென ஐந்து. ஆறு அம்புகள் விட எதுவுமே வேடனை தாக்கவில்லை. ஒன்றிரண்டு மேலே விழுந்தாலும் உதறியவுடன் கீழே விழுந்தது. மணல் துகள் மேலேபட்டதுபோல எந்தவித பாதிப்பும் இல்லாமல் அந்த வேடன் எதிரே சிரித்தபடி இருந்தான். அந்தப் பெண்கள் கூட்டம் அவனை உயர்த்தி பேசியது. ஆஹா! ஆஹா! என்று பாராட்டியது. அர்ஜூனனின் கோபத்தை அதிகப்படுத்த அது போதுமானதாக இருந்தது.

இப்பொழுது என்னை பாராட்டப் போகிறீர்கள். அர்ஜூனன் மனதை ஒருமுகப்படுத்தினான். கோபத்தை வெளிப்படுத்த மனதை ஒருமைப்படுத்தல் எளிது. ஆனால், அதன் பலன் என்ன என்பதை மனம் பார்க்கத் தவறிவிடும். என்ன வேண்டுமானாலும் ஆகட்டும் என்ற முட்டாள்தனமான வேகம்தான் கோபத்தோடு கலந்து இருக்கும்.

பாலகுமாரன்

இம்முறை பல சரங்கள் பாதாதி கேசமாய் பறந்தன. உடல்மீது இருக்கும் புழுதியைக் கூட அந்தச் சரங்கள் அகற்றவில்லை. அகன்று போனவையும், அடிபட்டுப் போனவையுமாய் அவை உபயோகமற்ற குப்பையாய் போயின. அர்ஜூனன் சரங்களை அனுப்ப அவை அருகே நெருங்கும்போது ஒரே வீச்சில் வேடன் அதை வீசி எறிந்தான். அம்பறாத்தூணியிலுள்ள அத்தனை சரங்களும் குறி பார்த்து மிக வேகமாக துல்லியமாக அடிக்கப்பட்டன. ஆனால், எதுவும் பாதிப்பு ஏற்படுத்தவில்லை.

இந்நிலையிலேயே அர்ஜூனனுக்கு எதிரே இருப்பவன் யார் என்று தோன்றியிருக்க வேண்டும். ஆனால், அதீத கோபம், ஜெயித்தே ஆக வேண்டும் என்ற வெறி கண்களை மறைத்தது. அந்த வெறி, கோபம் உள்ளவர்களுக்கு புத்தி வேலை செய்யாது. புத்தி வேலை செய்தால்தான் நிதானம் ஏற்படும். வெற்றிதான் முக்கியம் என்ற வேகத்தில் இருப்பவர்களுக்கு எப்படியாயினும் என்ற எண்ணம் வந்துவிடும்.

அம்புகள் அத்தனையும் தீர்ந்ததும் வில்லை எடுத்து அருகே போய் வில் வளையத்தில் கழுத்தைப் பிடித்து இழுத்தான். வேடனுடைய கழுத்து மடிப்பில் வில் சிக்கித் தவித்தது. இழுக்க வில் கோணிற்று. ஒடிந்துவிடுமோ என்ற பயம் இருந்தது. மாட்டி இழுப்பதை விடவில்லை. பிடித்திருக்கின்ற அர்ஜூனன் நாலாபக்கமும் அலைக்கழிக்கப்பட்டான். கையிலிருந்து அம்பு பிடுங்கிக் கொண்டு தரையில் விழுந்தது. இடுப்புக் கத்தியை உருவினான். மிக வேகமாக சுழற்றினான். உடம்பில் பல இடங்களில் தாக்கினான். தலையில் அடித்தான். கத்தி இரண்டு துண்டாக உடைந்தது. யுத்தம் செய்யத் துவங்கினான். மிக மோசமாக அடி வாங்கினான். வேடனைப் பார்த்து அவன் அதிசயித்தான். சட்டென்று உள்ளே ஒரு பயம் ஏற்பட்டது. வெல்வதற்கு அறிய ஒரு வீரன் முன்பு நிற்கிறோம் என்பது தெரிந்தது. பின்னடைந்து உற்றுப் பார்த்தான். அவன் பார்த்ததைப் பார்த்து வேடன் சிரித்தான். அந்த சிரிப்பில் மிகப் பெரிய மயக்கம் இருந்தது.

இல்லை, இது வேடன் இல்லை. இது வேறு யாரோ. வேறு யார், வேறு யார்? அவன் பயத்தில் கை கூப்பினான். பணிவோடு நின்றான். என்னை ஜெயித்துவிட்டீர் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று மனம் குவித்து மண்டியிட்டு பணியும் போது எதிரே உருவம் வேறுவிதமாக மாறிற்று.

சிவபெருமான், பார்வதி சமேதராக, அந்த நாய்கள் புடை சூழ

உ. சர்மதாயினி

சுகத்தைக் கொடுக்கிறவள். சர்ம என்றால் சுகம் என்று பொருள். பக்தர்களுக்கு சர்ம(ஸுக)த்தைக் கொடுப்பதால் சர்மதாயினீ என்று பெயர்)



கம்பீரமாக நின்றார். அர்ஜுனன் வாய்விட்டுக் கதறினான். உம்மையா தாக்கினேன் என்று அலறினான். ஓடிப்போய் நிலம்பட தரையில் விழுந்தான். “ஐயனே இத்தனை அடிகளை பொறுத்துக் கொண்டீரே. இவ்வளவு மோசமாக தாக்கினேனே,” என்று கதறினான். அவர் பெரிதாகச் சிரித்தார். காடு அதிர்ந்தது. பறவைகளும், மிருகங்களும் பயந்து ஓடின. அவர் தாக்கிய இடங்கள் அர்ஜுனனுக்கு கடும் வலியைக் கொடுத்தது. அவன் துவண்டு போய் நின்றிருந்தான். பரமேஸ்வரன் முன்னேறினார். இறுக அணைத்துக் கொண்டார். உச்சி முகர்ந்தார். “உன்னை விட மிகச் சிறந்த வில்லாளி இந்த உலகத்தில் வேறு எவரும் இல்லை. யாருக்கு மிகச்சிறந்த திறமை இருக்கிறதோ அவருக்கு இறை தரிசனம் கிடைக்கிறது. திறமை என்பது மனஒருமை. மனஒருமை என்பது இறை தரிசனத்திற்கு ஒரு வழி. உன்னுடைய அஸ்திரப் பிரயோகம் அபாரமாக இருக்கிறது. என்னை அசர அடித்தது. உன்னை வெல்ல இந்த பூமியில் மனிதனே இல்லை. சோதிக்கத்தான் மனிதனாக வந்தேன். என்ன வேண்டும் கேள்” அவர் பிரியத்தோடு பேசினார்.

“நான் சத்தியத்திற்காக போராட வேண்டும். எங்களை அவமானப்படுத்திய கௌரவர்களை அழிக்க வேண்டும். சூதாடி ஜெயித்து எங்களை வனவாசத்தில் தள்ளி தொடர்ந்து வனவாசத்திலேயே இருக்கும்படி திட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கின்ற அவர்களை வதம் செய்ய வேண்டும். மிகச் சிறந்த வில்லாளிகளையெல்லாம் நான் எதிர்கொள்ள வேண்டும். உங்களுடைய அஸ்திரமான பாசுபதாஸ்திரம் எனக்கு வேண்டும். பாசுபதாஸ்திரம் இருப்பின் வருகின்ற போரிலே நாங்கள் நிச்சயம் ஜெயிப்போம். நான் அதைத் தேடித்தான் தவம் செய்வேன். அதைத் தேடித்தான் இங்கு வந்தேன். என் தவம் பலித்தது. உங்களுடைய அஸ்திரத்தை எனக்கு கொடுங்கள்” என்று மண்டியிட்டு கெஞ்சினான்.

சிவபெருமானால் பாசுபதாஸ்திரம் அர்ஜுனனுக்குத் தரப்பட்டது. அந்த மந்திரங்களும், அதைத் தரிக்கும் விதமும் சொல்லித் தரப்பட்டன. அந்த மந்திரங்களைச் சொல்லி அதற்காக கையேந்திய உடன் அந்த அஸ்திரம் வந்து சேர்ந்தது. மிக ரகசியமாக அவன் பக்கத்திலே அமர்ந்து கொண்டது. எப்பொழுது வேண்டுமானாலும் அர்ஜுனன் அதை உபயோகப்படுத்தலாம் என்பதுபோல அவனோடு இணைந்து கொண்டது.

“இது மட்டுமல்ல, தேவர்கள் உலகத்திலிருந்து பலரும் வருவார்கள். அவர்களுடைய அஸ்திரங்களும் உனக்குத் தரப்படும். நீ எடுத்தக் காரியம் மேன்மையானது. பூபாரம் குறைக்க வந்திருக்கின்ற விஷ்ணுவினுடைய காரியத்திற்கு நீ துணையாக இருக்கிறாய். நீயும், விஷ்ணுவும் வேறல்ல. ஒரே லட்சியத்தை உள்ளுக்குள் கொண்டிருக்கின்ற இரண்டு உருவங்கள். உங்களுக்கு வெற்றி கிடைக்கும். மிகப்பெரிய மாற்றம் இந்த பூவுலகில் ஏற்படும். மற்ற தேவர்களையும் தரிசித்து அவர்கள் தருகின்ற அஸ்திரங்களையும் வாங்கிக்கொண்டு போ” என்று சொல்லி ஆசீர்வதித்தார். மெல்ல மறைந்தார்.

வருணனும், அக்னியும், குபேரனும், எமனும் வரிசையாக அர்ஜுனன் முன்பு தோன்றினார்கள். அவரவர் தங்களின் மிகச்சிறந்த ஆயுதத்தை மந்திர ஜபத்தோடு அர்ஜுனனுக்கு வழங்கினார்கள். யுத்தம் என்பது இங்கு அர்ஜுனனாலோ, துரியோதனனாலோ, பீஷ்மராலோ, தருமராலோ தீர்மானிக்கப்படவில்லை. பரத கண்டத்தில் மிகப் பெரிய யுத்தம் என்பது தேவர்களின் குறிக்கோளாக இருந்தது. அதற்காகத்தான் வேடனுக்கும், அர்ஜுனனுக்கும் ஒரு ‘மாதிரி’ச் சண்டை இமய மலை வனத்திலே நடைபெற்றது. சிவபெருமான் வைத்த சோதனையில் அர்ஜுனன் ஜெயித்து விட்டான். தன் முழுத் திறமையைக் காட்டி போராடினான். இறைவனை ஜெயிக்க முடியவில்லை எனினும் இறைவனுக்கு அவன் வலிமை பற்றி முற்றிலும் தெரிந்து போயிற்று. அவனை உற்சாகப்படுத்தவே இந்த யுத்தம் நடந்தது.

பகவான் ரமணரிடம், ஹிட்லர் என்ற சர்வாதிகாரி உலக யுத்தத்திற்கு காரணமாக இருக்கிறான் என்று ஒருவர் சொல்ல, அதை அமைதியாக செவிமடுத்த பகவான் ரமணர் ஒருவேளை

ஸாத்வீ

பதிவிரதையாக இருப்பவள். அம்பாளுடைய பதிவிரதத்தின் மஹிமையையும் பெருமையையும் பற்றி மிகவும் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹிட்லருக்கு பூபாரம் குறைக்கின்ற வேலை கிடைத்ததோ என்னமோ என்று பதில் சொன்னார். ரமணர் ஹிட்லரை ஆதரிக்கவில்லை, எதிர்க்கவுமில்லை. என்ன நடக்க வேண்டுமோ அது நடந்துகொண்டிருக்கிறது என்ற நிலையில் பேசினார். எது ஜெயிக்கும் என்று தெரிந்தே பேசினார். ஜெயித்தல் தர்மமா அல்லது தர்மம் ஜெயித்ததா, உலகம் இரண்டாக பிரிந்து அரைகுறையான அறிவோடு அடித்துக்கொள்ளும். உண்மை என்பதை அறிய மிகுந்த அமைதியோடு சம்பவத்தை சுவீகரிக்க வேண்டும்.

பாரதப் போரை முன்னின்று நடத்துகின்ற அர்ஜுனன் அந்த இமயமலை வனத்திலே தூண்டப்பட்டான். பயிற்றுவிக்கப்பட்டான். அவன் பலத்தை அதிகப்படுத்தி மறுபடியும் அவனை சகோதரர்களை நோக்கி அனுப்பினார்கள். திரௌபதியினுடைய தூண்டுதலோ, தருமருடைய சமாதானமோ, பீம, நகுல, சகாதேவனுடைய ஊசலாட்டமோ இங்கு முக்கியமில்லை. யுத்தம் தீர்மானிக்கப்பட்டது வேறு இடத்தில், வேறு ஒருவரால். எனவே, வெறும் கருவியாக அதில் ஈடுபடுவது என்பது பஞ்ச பாண்டவர்களுக்கு தெரிந்துபோயிற்று. இது மிகப்பெரிய ஞானம்.

“நீ என்னோடு சொர்க்கத்திற்கு வா,” இந்திரன் அர்ஜுனனை மிகுந்த பிரியத்தோடு அழைத்தான். அர்ஜுனன் சந்தோஷமாக சரி என்றான். இந்திரனுடைய தேர்ப்பாகன் தன் குதிரையோடு அர்ஜுனனுக்கு அருகே வந்து அர்ஜுனனை ஏற்றிக்கொண்டான். சொர்க்கத்திற்குள் நுழைந்தான். முற்றிலும் விசித்திரமாக ஒளியில்லாத ஒளியோடு கூடிய சொர்க்கத்தை வியப்போடு அர்ஜுனன் பார்த்துக்கொண்டு வந்தான்.

அற்புதமான யுவதிகள். வலிமையான இளைஞர்கள். எவருக்கும் வயதாகவில்லை. எவருக்கும் நோயில்லை. எவரிடமும் முதுமையில்லை. எவருக்கும் கோபம் இல்லை. எவரிடமும் ஆற்றாமை இல்லை. அவரவர் அவரவர் வேலையை அவரவர் யோக்கியதைக்கு ஏற்ப செய்துகொண்டிருந்தார்கள். இந்திரனுடைய படை சொர்க்கத்தை கவனமாகவும், அக்கறையோடும், அன்போடும் கண்காணித்து வந்தது. சொர்க்கத்தில் அஸ்திரங்களைப் பற்றிய ஜபங்களை மறுபடி மறுபடி மனதுக்குள் ஏற்றி அர்ஜுனன் கெட்டிப்படுத்திக் கொண்டான்.

“உள்ளே இடையறாது ஒரு கவலையும், யுத்தம் பற்றிய துக்கமும், சகோதரர்களைப் பற்றிய வேதனையும், அவமானப்பட்டு விட்டோமே என்ற ஆதங்கமும் உன்னை துன்புறுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த சொர்க்கத்திற்கு வந்துவிட்டு, இந்த மாதிரி மனோநிலையில் நீ இருக்கக் கூடாது. வா, சித்ரசேனன் என்பவன் உனக்கு நடனப் பயிற்சி செய்துவிப்பான். பாட்டும், நடனமும் கற்றுக்கொள்” என்று சொல்ல, மிகப்பெரிய ஆண்மையும், அசாத்தியமான திறமையும் கொண்ட அர்ஜுனன் வளைந்தும், நெளிந்தும், உரத்த குரலெடுத்தும், கமகங்களோடும், தாள கட்டோடும், பாடவும், ஆடவும் கற்றுக்கொண்டான்.

மனதிலுள்ள கவலைகள் மெல்ல குறையத் துவங்கின. ஆடுவதை வேடிக்கை பார்க்கும் பெண்களை அவன் ஆசையோடு பார்த்தான். என்ன செழுமை என்று வியந்தான். அவர்கள் நடனத்தையும் கண் கொட்டாமல் பார்த்தான்.

பெண்கள் மீது அவனுக்கு நாட்டம் இருப்பதை இந்திரன் புரிந்துகொண்டு சித்ரசேனனை அழைத்து ஊர்வசியிடம் போய் அர்ஜுனன் என்பவனுடைய மகத்துவத்தைச் சொல்லி அவனை சந்தோஷப்படுத்த வேண்டும் என்று நான் சொன்னதாகச் சொல் என்று கட்டளையிட, ஊர்வசிக்கு அது தெரிவிக்கப்பட்டது.

அழகும், அறிவும், துள்ளலும் எல்லா கலைகளிலும் நேர்த்தியும், கம்பீரமும், கனிவும் கொண்ட அந்த நடனப் பெண்மணி அர்ஜுனனை சந்தோஷப்படுத்த ஒப்புக் கொண்டாள். பெண்மையினுடைய அண்மையும், சிரிப்பும், பேச்சும், பாட்டும், நடனமுமே ஒரு ஆணை சந்தோஷப்படுத்தும். மற்றவையெல்லாம் பிற்பாடுதான். வெறுமே கை கோர்த்துக்கொண்டு சொர்க்கத்தின் அற்புதமான பகுதியில் வலம் வந்தால்கூட போதும். மனம் எல்லா கவலைகளையும் மறந்துவிட்டு மயக்கத்தில் சிக்கித் தவிக்கும். ஊர்வசி அர்ஜுனனை சந்தோஷப்படுத்த ஒப்புக் கொண்டாள்.

அர்ஜுனன் தங்கியிருக்கும் இடத்திற்கு வந்தாள். அவள் கேள்விப்பட்டதைவிட சித்ரசேனன் அவளுக்கு விவரித்ததைவிட அர்ஜுனன் அழகனாகவும், கம்பீரமானவனாகவும் இருந்தான். ஆயுதங்களைப்பெற்ற நிம்மதியினாலும் கடும் தவத்தினாலும் அவன் மெலிந்தும், உறுதியானவனாகவும், கம்பீரனாகவும், மிகுந்த தேஜஸ்வியாகவும் காணப்பட்டான். அழகு என்பது சதைப்பற்றோ, பருத்த உடம்போ அல்ல. அது கனிவான கூரிய கண்கள். பதட்டப்படாத முகம். அதிகம் அசையாத உடம்பு என்பதை ஊர்வசி அறிந்திருந்தாள். அந்த லட்சணங்களுக்கேற்ப ஒரு பெண் வந்ததும் பதறி துடிக்காது வருக என்று கைகூப்பி வரவேற்றது அவளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஐய்யோ, இவனல்லவோ புருஷன் என்ற எண்ணம் ஏற்படுத்தியது. இன்னொரு முறை ரமிக்க வேண்டுமென்ற ஆசையும் ஊர்வசிக்கு வந்தது. சித்ரசேனனுடைய வாக்கையும், இந்திரனுடைய கட்டளையையும் அர்ஜுனனுக்கு தெரிவித்தாள்.

(தொடரும்)

மகாபாரதம்

49

தன்னைப் பெண்ணாகவும் உணரவேண்டியவன் ஆண்!

“அடடா, நீ நடனமாடும்போது உன்னை உற்றுப்பார்த்தேன் என்பதற்காக உன்னை என்னிடம் அனுப்பியிருக்கின்றாரா” என்று அர்ஜுனன் கேட்க ஊர்வசி “ஆமாம்” என்றாள்.

“நீ நடனமாடும்போது நான் உன்னை உற்றுப் பார்த்தேன். இந்த ஊர்வசிதானே குரு வம்சத்தினுடைய தாய், இவளிடமிருந்துதானே குரு வம்சம் உண்டாயிற்று. எங்கள் எல்லோருக்கும் தாய் இந்த ஊர்வசி அல்லவா என்று ஒரு திகைப்பில், ஒரு மரியாதையில் என் தாயைப் போல, குந்தியைப்போல, இந்திரனுடைய மனைவி இந்திராணியைப் போல ஒரு பெரிய மரியாதையோடு உன்னைப் பார்த்தேனே தவிர, வேறு எந்த எண்ணமும் இல்லை. உன்னுடைய அழகிய பாதங்களில் என் தலையை வைத்து நமஸ்கரிக்கிறேன். வேறு எந்த எண்ணமும் இல்லை. போய் வரலாம்” என்று கைகூப்பினான்.

ஊர்வசி பல்வேறு விதமாக அவனை சமாதானப்படுத்தினாள். “குரு வம்சத்தைச் சேர்ந்த பலபேர் இங்கு வருகிறார்கள். என்னோடும், இங்குள்ள அப்ரஸர்களோடும் ரம்மித்து விட்டுப் போகிறார்கள். எங்களுடைய இயல்பு சந்தோஷப்படுத்துவது. சந்தோஷமாக இருப்பது. சந்தோஷப்படுத்துவதின் மூலம் சந்தோஷமடைவது. எனவே, வேறு எந்த நியதியைப் பற்றியும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். வாருங்கள்” என்று ஆசையாலும், அன்பாலும் அவனுடைய கம்பீரத்தின் மீதுகொண்ட ஈர்ப்பினாலும் கை விரித்து அழைத்தாள்.

அர்ஜுனன் பின்னடைந்தான். “ஒருக்காலும் நான் இதற்கு சம்மதிக்க மாட்டேன். நீங்கள் என் தாய். போய் வாருங்கள்” என்றான்.

இதுவரை எந்த ஆணும் மறுக்காத அந்தப் பெண்மணி, அழகிய நடன மாது, இந்திரன் சபையின் தலைக்கோலி, மிகுந்த அழகும்,

திறமையும் உடையவள் அவமானப்பட்டாள். ஒரு பெண் அழைத்து மறுப்பது ஓர் ஆணுக்கு அழகல்ல. அப்படி மறுக்கப்பட்டால் அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு பெரிய அவமானம் என்பதை அந்த ஆண் அறியாதவனாக இருக்கிறான். அவள் கேவலத்திலும் கேவலமாக அந்த இடத்தில் போய்விடுகிறாள். ஒரு இழிவான தன்மையை அடைந்துவிடுகிறாள். “ஆண்களால் கவரப்படுவதும், ஆண்களை வசீகரிப்பதும் பெண்களின் இயல்பு. அதுவும் என்னைப்போல நடனப் பெண்களுக்கு இது முக்கியமானது. இதை புறக்கணிக்கும்போதுதான் அவமானப்படுகிறேன். என்னை கேவலப்படுத்தாதீர்கள்” என்று சொல்ல, அர்ஜுனன் உறுதியாக அவளை புறக்கணித்தான்.

அவள் கோபமானாள். எழுந்து நின்றாள். கால் உதைத்தாள். “எப்போது உங்கள் ஆண்மையையும் மதிக்காமல், என் பெண்மையையும் மதிக்காமல் மிக அற்பத்தனமாக என்னை புறக்கணித்தீர்களோ உங்களுக்கு அலித்தன்மை வரட்டும்” என்று சாபமிட்டாள். விரைவாக அந்த இடத்திலிருந்து கண்ணீரோடு நகர்ந்தாள். இந்த விஷயம் இந்திரனுக்கு சொல்லப்பட்டது.

“நல்லது. என்ன நடக்க வேண்டுமோ அது அழகாக நடந்தது. பன்னிரண்டு வருடங்கள் வனவாசத்திற்குப் பிறகு பதிமூன்றாவது வருடம் நீ மறைந்து வாழ வேண்டும். தருமரும், நகுலனும், சகாதேவனும், பீமனும்கூட ஏதேனும் வேடமிட்டுக்கொண்டு அமைதியாக உட்கார்ந்து விடுவார்கள். ஆனால், அர்ஜுனா, பராக்கிரமம் மிக்க உன்னால் அமைதியாக உட்கார முடியாது. அந்த ஒரு வருடத்தில் எங்கேனும் உன்னை நீ காண்பித்து விட்டால் மறுபடியும் பன்னிரண்டு வருடம் வனவாசம் போக வேண்டியிருக்கும். எனவே, அந்த ஒரு வருடம் நீ இந்த சாபத்தை ஏற்றுக்கொண்டு ஆணும் அல்லாத பெண்ணும் அல்லாத அலியாக வாழ்வாயாக. இது உனக்கு நல்லது. உலகத்திலுள்ள எவருமே அர்ஜுனன் என்கிற மிகப்பெரிய வீரன். கம்பீரன், அழகன், ஆண்மை பொருந்தியவன், அவன் அலியாக இருப்பான் என்று நினைத்துக்கூட பார்க்க மாட்டார்கள். அப்படி ஒரு சந்தேகம் எவருக்கும் வராது. எவராலும் உன்னை கண்டுபிடிக்க முடியாது. ஆண்மையுடைய கம்பீரத்தை அனுபவித்த இளைஞனே அர்ஜுனா, குந்தியின் மைந்தனே, ஆணுமற்ற, பெண்ணுமற்ற ஒரு தன்மையையும் அனுபவி. பெண்மையை முழுக்க அறிந்துகொள். பல பெண்களுக்கு விருப்பமாக இருப்பவனே, பெண் என்பவள் யார் என்பதை புரிந்துகொள்ள ஆணாகிய உடம்போடு, பெண்ணாகிய மனதை கொள்ளும்போது உனக்குப் புரியும். பெண் மனதும், ஆண் உடம்புமாய் நீ இருப்பது உன் மறைமுக வாழ்விற்கு நல்லது மட்டுமல்ல, பெண்களைப் பற்றி இன்னும் புரிந்துகொள்ள உதவும். எனவே,

ஊர்வசி இட்ட சாபத்தை மிக நல்ல விஷயம் என்பதை புரிந்துகொண்டு சொர்க்கத்திலிருந்து உன்னுடைய இடத்திற்கு திரும்பப் போய் வா.

பாலகுமாரன்

"அர்ஜுனா, என்ன நடக்க வேண்டுமோ அது நன்றாகவே நடந்தது. எனவே, கவலைப்படாதே. சகலமும் நன்மைக்கே. உன்னை இங்கே வரவழைத்ததும், உன்னைத் தொட்டு உன் வலுவை ஏற்றியதும், உனக்கு அஸ்திரங்கள் கொடுத்ததும், உன்னுடைய மனக்குறைகளெல்லாம் மறந்துபோய் நீ சந்தோஷமாக இருந்ததும், நீ நாட்டியம் கற்றதும், அலி என்ற சாபம் ஏற்றதும், அப்படி ஏற்றபோது இந்த நாட்டியத்தை நீ உபயோகப்படுத்திக்கொள்ளப் போவதும் உனக்கு சகல நன்மைகளும் தரும். மறுபடியும் சொல்கிறேன். இவை எல்லாமும் பாரதப் போரை முன்னிட்டுத்தான் நடக்கின்றன. ஒவ்வொரு அசைவும் பரமேஸ்வரனாலும், விஷ்ணுவாலும், பிரம்மனாலும் அதை நோக்கியே நகர்த்தப்படுகின்றன. நீ கருவி என்பதை புரிந்துகொண்டு உன் இடத்திற்கு திரும்பிப் போ. உனக்கு சகல மங்களங்களும் உண்டாகட்டும்" என்று ஆசீர்வதித்தார்.

மிகச்சிறந்த ஒரு வீரனுக்கு, பௌருஷம் மிக்கவனுக்கு, எதிரிகளை துவம்சம் செய்கிறவனுக்கு, பெண் என்ற மனமும், ஆண் என்கிற உடம்புமாய் ஒரு வருடம் இருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்ட விஷயம் மகாபாரதத்தில் மிக அற்புதமானது. உலகத்திலுள்ள எல்லா ஆண்களும் ஏதோ ஒரு கட்டத்தில் தன்னை பெண்ணாக உணரத்தான் வேண்டும். பெண்ணை புரிந்துகொள்ள தன்னுடைய பௌருஷத்தை முற்றிலும் மறந்து, ஒரு பெண் மனது எப்படி இருக்கும், அவள் நடையும், உடையும், பேச்சும், சிரிப்பும் அலங்காரமும் எப்படி இருக்கும் என்று அவளாக மாறி அவளை அறிந்துகொள்ள முற்படுவது அற்புதம்.

அர்ஜுனன் இன்னும் கனிந்து வருவதற்கு இந்த சாபம் உதவி செய்தது. ஊர்வசியின் மீது ஈடுபடாது அமைதியாக இருந்த அர்ஜுனனுடைய புலனடக்கம் அவனுக்கு நல்லது கொடுத்தது. சாபமாக அது காட்சியளித்தாலும் அது சாபமில்லை. வரமே. எது எப்போது சாபம், எந்த சாபம் எப்போது வரும் என்பதை காலம் சூட்சுமமாக மனிதனுக்குச் சொல்லித்தரும்.

காம்ய வனம் மிக அழகாக இருந்தது. வசந்த ருதுவில் பூக்கள் பொங்கிச் சொரிந்தன. பறவைகளும், மிருகங்களும் அந்த வனத்தை முழுவதுமாய் அனுபவித்தன. தெள்ளிய நீரைப் பருகியும், செழித்த தாவரத்தை உண்டும், அடர்ந்த மரநிழலில் அயர்ந்து தூங்கியும், பெரிய புல்வெளிகளில் துள்ளி ஓடியும் சாகப் பட்சிகள் சுகமாய் வாழ்ந்தன.

இந்த சாகப் பட்சிகளை உண்ணும் மாமிச பட்சிகள் கொழுத்த மிருகங்களை தேடி அலைந்தன. மிகுந்த வலிவோடு அவற்றைத் தாக்கி வினாடி நேரத்தில் கொன்று அதன் மாமிசத்தை ரசித்து உண்டன. பசி முற்றிலும் அடங்கிய போது சுற்றியுள்ள எந்த மிருகங்களைப் பற்றியும் கவலைப்படாது குளுமையான குகைகளிலும், தடிமனான மரக்கிளைகளிலும் அமர்ந்து தியானம் செய்யும் ரிஷிகளைப்போல மௌனமாய் அரைத்தூக்கத்தில் ஆழ்ந்தன. எது இறந்தாலும் மக்கும். எது மக்கினாலும் அது உரம். எனவே, தாவரங்களுக்கு வேட்டையாடுகின்ற வேதனையே இல்லை. பூமிக்கு அடியே வேர்களை பரப்பி பரப்பி உறுதியாக நின்றுகொண்டு நீரை உறிஞ்சி, நிலத்தில் இறந்து கிடந்த மிருகங்களை அழுகிய பின் ஆகாரமாக உண்டு பெரிய இலைகளையும், நிறைய மலர்களையும் சொரிந்தன மரங்கள். காம்ய வனத்தின் நியதி லயம் மாறாமல் அமைதியாய், அழகாய், சீராய் இருந்தது.

ஆனால், அந்த வனத்தில் தங்கியிருந்த பஞ்ச பாண்டவர்கள் அப்படி இல்லை. ஆயுதம் சம்பாதித்து வா என்று அர்ஜுனனை வலிய அனுப்பி விட்டு அவனைப் பற்றியே புலம்பிக் கொண்டிருந்தார்கள். அவன் வருவானா, எப்போது என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள். ஐந்துபேரும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும். ஒருவர் நகர கை ஒடிந்ததுபோல் ஆயிற்றே. அவன் நினைப்பாகவே இருக்கிறதே. இப்படி பிரியக் கூடாதே. ஆனால், ஒன்றாக இருப்பின் தவம் செய்வது எப்படி? அர்ஜுனனுக்கு ஆயுதங்கள் கிடைப்பது எப்படி? உன்னதமான லட்சியங்களுக்காக அவனை முன்னிருத்திதானே போராடுகிறோம். அவன்தானே மீதி இருக்கிற நான்கு பேரும் உயர்வதற்கு வழிகாட்டி. அவன் வலிவுதானே பாண்டவர்களின் வலிவு என்றும் சமாதானம் செய்து கொண்டார்கள். புலம்பலும், சமாதானமாக தினசரி வாழ்க்கை போயிற்று. பேசத் துவங்கியபோதே கண்களில் நீர் கசிந்தன. வாக்கு குழறிற்று. அர்ஜுனா அர்ஜுனா என்று மனம் புலம்பத் துவங்கிற்று.

மிகுந்த வேதனையில் இருக்கின்ற ஒருவருக்கு எப்படி ஆறுதல் சொல்வது? நாளை சரியாகும் என்றா? அது வெற்று நம்பிக்கையாகத்தானே இருக்கும். நாளை என்றால் எப்போது? இன்னும் ஆண்டுகள் இருக்கின்றனவே. அதுவரை இப்படி ஒற்றுமையாக இருப்போமா? ஒரே குழுவாக இருப்போமா? அர்ஜுனனை அனுப்பி வைத்தது நான். ஆனால் தடுமாறுகிறேனே என்று தருமர் உரத்த குரலில் புலம்புவார். மற்றவர்கள் பின் தொடர்வார்கள். அவர்களை சமாதானம் செய்வது எளிதான விஷயம் அல்ல. ஊரைப் பிரிந்து, உற்றாரைப் பிரிந்து, நல்ல குடிமக்களை பிரிந்து, சுகபோகங்களை துறந்து வனத்தில், மரத்தின் நிழலில் வெப்பமோ, குளிரோ, ஊதக் காற்றோ தோலாடையை இறுக்க பற்றி தலைகுனிந்து

அனுபவிப்பது தவிர, வேறுவழி தெரியாமல் இருக்கும்போது அவர்களில் ஒருவனான மகா வீரன் அர்ஜுனனும் விலகிப் போக, அவர்களை சமாதானப்படுத்த முடியாமலேயே இருந்தது.

எதைச் சொன்னால் சமாதானப்படுவார்கள் என்ற மிகுந்த கெட்டிக்காரர் ஒருவர் யோசித்தால் அதற்கு வழி தென்படும். எவ்வளவு பெரிய கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் என்றுதானே புலம்புவார்கள். ஐயா, உங்களைவிட மிகப் பெரிய கஷ்டத்தை அனுபவித்தவர்கள் இந்த உலகத்தில் உண்டு. உங்களைப் போல வேதான் அவர்களது வாழ்க்கையும். ஆனால், அதை வீரதீரத்துடன் அவர்கள் எதிர்கொண்டு முடிவில் ஜெயித்து உன்னதமான பதவியை அடைந்தார். எதை இழந்தார்களோ அதை திரும்பப் பெற்றார் என்று எவரேனும் கதை சொன்னால், அப்படியா, அம்மாதிரி கஷ்டப்பட்டாரா என்று கஷ்டப்பட்ட இன்னொருவர் வரலாறு தங்களுக்கு தெரியும்போது தங்களைப் பற்றிய நம்பிக்கை அதிகமாகும். எதிர்காலம் பற்றிய வெளிச்சம் மேலும் பரவும்.

அவர்கள் பேசிப்பேசி ஒருவர் பார்க்க ஒருவர் புலம்பி கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது அங்கு பிருகுதஸ்வர் என்ற முனிவர் வந்தார். அவரிடம் தங்கள் நிலைமையை யுதிஷ்டிரர் விரிவாகச் சொன்னார்.

"ஒரு முறைக்கு இருமுறை நாங்கள் சூதாட அழைக்கப்பட்டு சகலமும் இழந்தோம். என் மனைவியின் தலைமுடியை பிடித்து சபைக்கு இழுத்து வந்து அவமானப்படுத்தினார்கள். எங்களை வனத்திற்கு போகச் சொன்னார்கள். பதிமூன்றாவது வருடம் ஒளிந்து உறைந்து வாழச் சொன்னார்கள். எனக்கு சூதாடுகின்ற ஆசை உண்டே தவிர, சூட்சுமம் தெரியாது. ஆசையின் பாற்பட்டு விளையாட விரும்பிய என் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் வென்று விட்டார்கள். திட்டமிட்டு செயலாற்றி எங்களை நிர்கதியாக்கிவிட்டார்கள். இடையறாது எங்களுக்கு தீங்கு நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வனத்திற்கு வந்த பிறகும் விடக்கூடாது, கொன்றே தீரவேண்டும் என்று கர்ணன் முதலானவர்கள் சீறி எழுந்ததாகவும் கேள்விப்பட்டேன். கடவுள்தான் எங்களை காப்பாற்றி வருகிறார். என்னைவிட மோசமான ஒரு அரசனை, துக்கத்தில் இருக்கின்ற அரசனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா" என்று பிருகுதஸ்வ முனிவரிடம் யுதிஷ்டிரர் கண்ணில் நீர் வழிய புலம்ப, முனிவர் அவரை சமாதானப்படுத்தினார்.

"என்னைவிட துக்கப்படுபவர்கள் உண்டா என்று கேட்கிறாய். இருந்தார்கள் யுதிஷ்டிரா. உன்னைவிட மோசமாக கஷ்டப்பட்டார்கள். நிஷாத தேசத்து அரசன் நளன். அவனுடைய சொந்த சகோதரன் புஷ்கரனால் சூதுக்கு அழைக்கப்பட்டு அந்த சூதிலே சகலமும் தோற்று, தேரோ,

வாழ்வில் வெற்றி மேல் வெற்றி தருவாள்
ஸ்ரீ சொர்ண வாராஹி

உங்களுடைய எந்த பிரச்சனையாகயிருந்தாலும் – சிக்கலான ரகசிய குடும்ப பிரச்சனையாகயிருந்தாலும் எத்தனையோ இடங்களில் பார்த்தும் பிரச்சனை இன்னும் தீரவில்லையே என்று ஏங்குபவர்களுக்கு இந்த பஞ்சமி ஸ்ரீவாராஹி பீடம் ஒரு வரபிரசாதமாகும், இதன் தலைமை ஸ்ரீவாராஹி உபாசகர் நல்லான் சக்கரவர்த்தி வம்ச வழி ஸ்ரீ ரங்கநாத ஐயங்கார் B.Sc., (வயது 70) நீங்கள் உங்களுடைய பிரச்சனையுடன் வந்தால் பிரச்சனையை ஸ்ரீவாராஹி முன்பு வைத்து எலுமிச்சக்கனி (3) பிரயோகம் – பிரச்சன்னம் – தாம்பூல பிரச்சன்னம் தேவி ஸ்ரீவாராஹி பிரச்சன்னம் பார்த்து உங்களுடைய பிரச்சனையை அக்கு வேராக – ஆணி வேராக அலசி அதன் காரணத்தையும் – அதற்குண்டான பரிகாரத்தையும் சொல்லி உங்களுடைய பிரச்சனையை உடனடியாக தீர்த்து தருகிறார். கணவர் – மனைவி ஒன்று சேர – தகாத பெண் உறவு விலக – உங்களது பையன் / பெண் தகாத – சிக்கலான – காதல் வலையில் சிக்கியிருந்தால் விலக்கி – பெற்றோர்கள் சொல்படி கேட்டு நடக்க – மாமியார் – நாத்தனார் – கணவர் – உங்களது சொல்பேச்சு கேட்டு நடக்க – தடைபட்டு வரும் திருமணம் உடனே நடக்க – தொழிலில் நல்ல முன்னேற்றம் பெற – பணம் வர – பணம் குவிய ஆர்டர்கள் கிடைக்க – வியாபாரத்தில் No.1 ஆக வர – வீடு – மனை விற்க, வாங்க படிப்பில் முதன்மையாக வர – வேலை கிடைக்க – பதவி உயர்வு பெற – வெளிநாடு போக நோய் நொடியில்லாமல் ஆரோக்கியமாக சூட்சும மந்திரர்கள் – வாதம் – மூட்டுவலி தீர மூலிகை எண்ணெய் – குடும்ப ஒற்றுமை – எதிரிகள் விலக – தீயசக்திகள் மறைய – எந்த பிரச்சனையாகயிருந்தாலும் உடனே சந்திக்கவும் ஸ்ரீ ரங்கநாத ஐயங்கார் ஸ்வாமிகளை அவரை பார்த்தாலே பாதி பிரச்சனைகள் தீரும்.

குறிப்புகள்: 1. போன் செய்து முன் அனுமதி பெற்று சித்தரை சந்திக்கவும். 2. வரும் போது 3 எலுமிச்சைப்பழம் – புஷ்பம் – வாசனை ஊதுவத்திக் கொண்டு வரவும். 3. ஜாதகம் தேவையில்லை. சேவை கட்டணம் – ரகசியம் பாதுகாக்கப்படும்.

பார்வை நேரம்: காலை 11 முதல் மதியம் 2 வரை, மாலை 5 முதல் இரவு 7 வரை

ஜெய் ஸ்ரீ வாராஹி உபாசகர்
பரிகார சக்கரவர்த்தி **ஸ்ரீ ரங்கநாத ஐயங்கார்** B.Sc.

எண் : 14, அசிஸ் நகர் மெயின் ரோடு, பராங்குசபுரம் ரோடு சந்திப்பு, (கார்னர் வீடு) கிரேன் சூப்பர் மார்க்கெட்
எதிர் ரோடு (ஸ்ரீ ராகவேந்திரா கல்யாண மண்டபத்திலிருந்து 3வது Left), கோடம்பாக்கம் – சென்னை–24.
செல்: 9884045993

படை வீரர்களோ, திரண்ட செல்வமோ, பசுக்களோ இல்லாது தன் மனைவியோடு தன்னந்தனியே வனம் போனார். ஆனால், யுதிஷ்டிரா உன்னைச் சுற்றி பிரம்ம தேஜஸ்மிக்க அந்தணர்கள் இன்னும் இருக்கிறார்கள். இவர்கள்கூட இல்லாமல் நளன் பெரிய வேதனைப்பட்டார். அந்தக் கதையை சொல்கிறேன் கேள்.

நிஷாத தேசத்து வீரசேனனின் மகன் நளன். வீரசேனனுக்குப் பிறகு நளன் அந்த தேசத்தின் மன்னனாக பதவியேற்றார். அவர் பேரழகன். குதிரைகள் செலுத்துவதில் வல்லவர். தர்ம நியாயங்கள் அறிந்தவர். நல்லவர்களையும், அந்தணர்களையும் உபசரிப்பவர். மக்களிடம் மிகுந்த பிரியத்தோடு இருப்பவர். நேரிடையாக நின்று அவர்களின் குறைகளை கேட்பவர்.

நிஷாத தேசத்திற்கு அருகே விதர்ப தேசத்தில் பீமன் என்ற மன்னர் ஆட்சி செய்து வந்தார். அந்த பீமனுக்கு குழந்தைப் பேறு இல்லை. பீமனுடைய சபைக்கு தமன் என்கிற மகரிஷி வந்தார். மன்னனுடைய குறையைக் கேட்டார். மன்னன் தன் மனைவியோடு தமன் என்கிற அந்த ரிஷியை உபசரித்து வணங்க, உனக்கு நிச்சயம் குழந்தைப்பேறு உண்டு என்று ஆசி வழங்க, அவருடைய ஆசீர்வாதமாக தமயந்தி என்கிற பெண்ணும், தமன், தாம்தன், தமனன் என்று மூன்று ஆண் குழந்தைகளும் பிறந்தார்கள். மன்னன் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தான்.

பீமனுடைய மகள் வளர வளர மிகப்பெரிய அழகியாக லக்ஷ்மி கடாட்சத்தோடு மிளிர்ந்தாள். சிறிய இடுப்பும், பெரிய ஸ்தனங்களும், அழகிய பின்பக்கமும், நீண்ட கைகளும், கனிந்த உதடும், பெரிய கண்களுமாய் பெண்களே வியக்கின்ற பேரழகியாய் பீமனுடைய அரண்மனையில் வலம் வந்தாள். இவ்வளவு பெரிய அழகிக்கு எங்கிருந்து மாப்பிள்ளை கிடைக்கும், எங்கிருந்து புருஷன் வருவான் என்று தோழிகள் வியக்க, மனம் சஞ்சலப்பட, அவர்களே நளனைப்பற்றி தமயந்தியிடம் கூறினார்கள். உனக்கு சரியான கணவர் அவர்தான். பேரழகன். உத்தமன். திறமை உடையவன். அவனுக்கு ஈடு இணை எவரும் இல்லை என்று நளனுடைய அழகை விவரித்தார்கள்.

நளனிடம் இதேபோல உனக்கும் மிகச் சிறந்த பெண் வேண்டுமே. இந்த நிஷாத தேசத்தில் அப்படி பெண் இல்லை. ஆனால், விதர்ப தேசத்து அரசகுமாரி தமயந்தி பேரழகி என்று கேள்விப்படுகிறோம். எங்களில் சிலர் பார்த்திருக்கிறோம். பெரிய கண்களும், அழகிய முகமும், நீண்ட கைகளும், நல்ல உயரமும் கொண்டு லக்ஷ்மி தேவியைப் போல நடமாடிக் கொண்டிருக்கிறாள் என்று அவளை வர்ணித்துச் சொன்னார்கள்.

இப்படி நளனிடம் தமயந்தி பற்றியும், தமயந்தியிடம் நளனைப் பற்றியும் பேசிப் பேசியே பரஸ்பரம் இரண்டு பேர் மனதிலும் ஆழ உருவங்களை பதித்து விட்டார்கள். திருமணம் என்று செய்து கொண்டால் அது நளனைத்தான் என்று தமயந்தி உறுதிகொண்டாள். அதேபோல ஒரு ஏக்கத்தை நளன் தமயந்தியின் மீது ஏற்படுத்திக் கொண்டான்.

குளிர்காலத்தில் வடக்கேயிருந்து தெற்கே பறவைகள் போவது வழக்கம். மிகப்பெரிய அன்னங்கள் அப்போது நீர் நிறைந்த தடாகங்களுக்கு அருகே இறங்கி இளைப்பாறி தடாகங்களில் கிடைத்த மீன்களை உண்டு மரக்கிளையில் அமர்ந்து தூங்கும். மிகப் பெரிய அன்னக்கூட்டம் ஒன்று தமயந்தியின் தோட்டத்து தடாகத்தில் இறங்கியது. நளனைப்பற்றி சிந்திப்பதற்காக தனியான வந்திருந்த தமயந்தி வியப்போடு அந்த அன்னங்களைப் பார்த்தாள்.

“உங்களுக்கெல்லாம் என் நமஸ்காரம். நிஷாத தேசம் போவீர்களா? அங்கு எனக்குப் பிரியமான நளமகாராஜாவை சந்திப்பீர்களா? அவரிடம் என்னைப்பற்றிச் சொல்வீர்களா?” என்று கைகூப்பி மனதால் கேட்க, ஒரு அன்னப்பட்சி அருகே வந்து சிறகை விரித்து அவளை ஆசீர்வதித்தது. மனிதக் குரலில் பேச ஆரம்பித்தது. நளனுடைய அழகையும், புகழையும் சொன்னது. “வெகு நிச்சயம் சொல்வேன். நீங்கள் இருவரும் ஒருவருக்கு ஒருவர்

குளிர்காலத்தில் வடக்கேயிருந்து தெற்கே பறவைகள் போவது வழக்கம். மிகப் பெரிய அன்னங்கள் அப்போது நீர் நிறைந்த தடாகங்களுக்கு அருகே இறங்கி இளைப்பாறி தடாகங்களில் கிடைத்த மீன்களை உண்டு மரக்கிளையில் அமர்ந்து தூங்கும். மிகப் பெரிய அன்னக்கூட்டம் ஒன்று தமயந்தியின் தோட்டத்து தடாகத்தில் இறங்கியது. நளனைப்பற்றி சிந்திப்பதற்காக தனியான வந்திருந்த தமயந்தி வியப்போடு அந்த அன்னங்களைப் பார்த்தாள்.

என்று உருவாகியிருக்கிறீர்கள். உங்கள் திருமணம் நிச்சயம் நடக்கும். அவரிடம் உன்னைப்பற்றி சொல்லிவிட்டு, அவர் சொல்லும் பதிலைக் கேட்டு உன்னிடம் சொல்ல நான் மறுபடியும் வருவேன்” என்று வாக்கு தந்தது.

சிலிர்ப்போடு எழுந்து நின்ற தமயந்தி அன்னத்தை மண்டியிட்டு வணங்கினாள். அன்னப்பட்சி மெல்ல ஓடி மேலெழும்பி பறக்கத் துவங்கியது. நிஷாத தேசம்போய் இறங்கியது.

வெள்ளை வெளேர் என்ற உடம்புக்கு நடுவே தங்கச் சிறகுகள் கொண்ட அந்த அன்னத்தை நளன் வியப்போடு பார்த்தார். அவருக்கும் தமயந்தி பற்றிய எண்ணமே இருந்தது. அவளோடு பேசுவது போலவும், சல்லாபிப்பது போலவும், இறுக்க அணைத்துக் கொள்வது போலவும் கற்பனை செய்து கொள்ள ஒரு தோட்டத்தில் தனிமையில் அமர்ந்திருக்க, அன்னப்பட்சி அவர் முன் வந்து ஆடியது. அவர் வியப்போடு பார்த்தார். மனிதக் குரலில் தமயந்தி பற்றி பேசியது. இன்னும் சொல் இன்னும் சொல் என்று கேட்டார். அன்னப் பட்சி தமயந்தியினுடைய அழகை சொல்லியது.

“உம்மைச் சந்தித்ததையும் நான் அவளிடம் சொல்வேன். உம்மை சந்திக்கச் சொல்லி அந்தப் பெண்மணி கேட்டிருக்கிறாள். நீங்கள் இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். விரைவில் திருமணம் நிச்சயமாகும்,” என்று அன்னப்பட்சி சொல்ல, அவர் அன்னப்பட்சியை எழுந்து நின்று வணங்கினார்.

அன்னப்பட்சி தென்திசைப் பயணத்தை முடித்துக்கொண்டு மறுபடியும் வடக்கே போகும் போது தமயந்தியிடம் நளனைப் பற்றி, அவரை சந்தித்ததைப் பற்றி விரிவாகச் சொன்னது.

ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே பரஸ்பரம் மிகத் திடமான காதலை அவ்விருவரும் கொண்டிருந்தார்கள். தமயந்தியைத் தவிர வேறு எந்த பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன் என்று வைராக்கியத்தில் நளன் இருக்க, அவரே என் புருஷன் என்று தமயந்தி தீர்மானித்து விட அவர்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் சந்திக்கிற நாளை ஏக்கத்துடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

இடையறாது நளனுடைய நினைப்பாகவே இருந்ததால் தமயந்தி சோர்வானாள். கட்டிலிலிருந்து எழுந்திருக்க முடியாதபடி துவண்டு கிடந்தாள். மகளுடைய சுகவீனத்தை புரிந்து கொண்ட அரசன் பீமன் தன் மகளுக்கு சுயம்வரம் செய்ய உத்தேசித்தான். வயதின் வேகத்தாலேயே அவள் பலவீனம் அடைந்திருக்கிறாள். எனவே தகுந்த வரனை அவளே தேர்ந்தெடுக்கட்டும் என்று தனது செல்வ மகளுக்காக மிகப்பெரிய சுயம்வரத்தை ஏற்பாடு செய்தான். எல்லா மன்னர்களுக்கும் தெரிவித்தான்.

தமயந்தியின் அழகை ஏற்கனவே கேள்விப்பட்டிருந்த பல்வேறு தேசத்து மன்னர்கள் விதர்ப

பக்தி உலா வழங்கும் யாத்திரைகள்

04.11.2016 முதல் 12.11.2016 : ஆந்திர விஜயம் - புட்டபர்த்தி - மந்திராலயம் - மகாநந்தி - அகோபிலம் - மட்டபள்ளி - வாடபள்ளி - வேதாத்திரி - பத்ராச்சலம் - ராலி - அன்னவரம் - பிட்டாபுரம் - சாமல்கோட்டா - திராட்சாராமா - பீமாவரம் - பாலகொல்லு - துவாரகா திருமலா - விஜயவாடா - மங்களகிரி - அமராவதி - குண்டூர்

17.12.2016 முதல் 24.12.2016 : மார்கழி உற்சவம் - ஆழ்வார்களும் - நாயன்மார்களும், ஸ்ரீரங்கநாத தரிசனமும், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் ரங்கமன்னாரும், இத்துடன் பாண்டியநாடு 18 திருப்பதிகள் - திருசெந்தூர் - மதுரை மீனாட்சி - இராமேஸ்வரம் - நவகயிலாயம் (9 கோயில்கள்)

06.02.2017 முதல் 19.02.2017 : குஜராத் - ராஜஸ்தான் விஜயம் - அகமதாபாத் - பால் நகர் - சோம்நாத் - பாலக் - முல்துவாரகா - போர்பந்தர் - ஜாம்பவான் குகை - துவாரகா - பேட் துவாரகா - கோபிதளம் - நாகேசம் - டாக்கூர் துவாரகா - அம்பாஜி - சோட்டா அம்பாஜி - உதய்பூர் - ஸ்ரீநா துவாரகா - காங்குரோலி துவாரகா - புஷ்கரம் - அஜ்மீர் - ஜெய்பூர் - சென்னை

22.03.2017 முதல் 31.03.2017 : காசி யாத்திரை (பூரண வைதீக ஏற்பாடுகளுடன்)

பித்ருக்களின் பிரித்திக்காக ஒரு பிரத்யேக விஜயம்

புனித அமாவாசையில் - புண்ணிய காசி விஜயம்

பூரண வைதீக ஏற்பாடுகள் செய்து தரப்படுகிறது

புறப்படுவோம் வாரீர்! ரயில் யாத்திரைகளுக்கு 120 நாள் முன்பே முன்பதிவு செய்வது சிறப்பு!!

விபரங்களுக்கு : **ஆர். பட்டாபிராமன்,** ஒருங்கிணைப்பாளர்
பக்தி உலா, அசோக் மெடிக்கல்ஸ்,
10, தண்டீஸ்வரம் மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை - 42.
22434374 - 9042042138 - 9840753969

யாத்திரைகள் யாவும் உணவு, தங்குதலுடன்

தேசத்தை நோக்கி வந்தார்கள். அவர்களை பீமன் முறைப்படி உபசரித்தான்.

நாரத மகரிஷி பெரும் கூட்டமாய் மன்னர்கள் விதர்பதேசத்தில் வருவதையும் கவனித்தார். இந்திரலோகம் போனார்.

“பூமியில் எல்லோரும் நலம். எல்லா மன்னர்களும் நலம்” என்று சொன்னார்.

“அப்படியா. நலம் என்று சொன்னால் தேவர்களை பூஜிக்கக்கூடிய பெரிய யாகம் நடைபெறவில்லையே. மன்னர்களுடைய கோரிக்கைகள் எதுவும் வரவில்லையே. எங்களைக் குறித்து அவர்கள் பாடுகின்ற பாடல்கள் எதுவும் என் செவிகளில் எட்டவில்லையே” என்றான் இந்திரன்.

“அவர்கள் அனைவரும் தமயந்தியினுடைய சுயம்வரத்திற்காக போயிருக்கிறார்கள். அந்த விஷயத்திலேயே ஈடுபட்டிருக்கிறார்கள்” நாரதர் விவரித்துச் சொல்ல, இந்திரனுடன் இருந்த தேவர்கள், தாங்களும் சுயம்வரத்தில் கலந்து கொள்ள வேண்டும், தமயந்தியை மனைவியாக அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

இந்திரன் உட்பட பல தேவர்களும் வானத்தில் தங்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு மானுடரைப்போல உருவமிட்டு விதர்ப தேச தெருக்களில் சஞ்சரித்தார்கள். அழகிய குதிரைகள் சூழ நளன் வருவதைக் கண்டு வியந்தார்கள். தேவர்களையெல்லாம் விட அழகான இந்த நளன் சுயம்வரத்தில் கலந்து கொண்டால் எந்தப் பெண்ணும் அவனுக்குத்தான் மாலையிடுவாளே தவிர, நம்மை யாரும் தேர்ந்தெடுக்க மாட்டார்கள் என்று அவர்களுக்கு புரிந்து போயிற்று. இவனை சுயம்வரத்தில் கலந்து கொள்ளாதிருக்க என்ன செய்வது என்று யோசித்தார்கள்.

நளனை அருகே அழைத்தார்கள். நாங்கள் தேவர்கள் என்றார்கள். நளன் திகைத்து கைகூப்பினான். பணிவாக வணக்கம் சொன்னான். உங்களால் எங்களுக்கு ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது என்று விண்ணப்பித்தார்கள். தேவர்களல்லவா. நிச்சயம் செய்கிறேன் என்று நளன் வாக்கு கொடுத்தார்.

“வாக்குத் தவறாத மன்னராகிய நீர் எங்களுக்காக தமயந்தியிடம்போய் நாங்கள் வந்திருப்பதை சொல்ல வேண்டும். எங்களில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும்” என்று விண்ணப்பித்தார்கள்.

“தமயந்தியை நான் விரும்புகின்றேன். அதற்காகத்தான் சுயம்வரத்தில் கலந்து கொள்ள வந்திருக்கிறேன். தமயந்தியும் என்னை விரும்புவதாக கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அதைப் பற்றி நிச்சயமாக சொல்வதற்கில்லை. தேவர்களே அவருடைய திருமணத்திற்கு வந்திருக்கும்பொழுது அவளுடைய மனோநிலைமை எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்பதை நான் எப்படிச் சொல்வேன்? அவளுடைய அந்தப்புரத்திற்கு கட்டுக்காவல் அதிகம். என்னால் உள்ளே நுழைய முடியாது” என்று பதிலளித்தான் நளன்.

“உனக்கு அருப மந்திரம் சொல்லித் தருகிறோம். உன் உருவம் எவர் கண்ணிலும் தெரியாதபடி ஏற்பாடு செய்து விடுகிறோம். போய் எங்களைப் பற்றி சொல்” என்று கட்டளையிட்டார்கள்.

வாக்கு தவறாத நளன் மனதை அடக்கிக் கொண்டு தமயந்தியின் அந்தப்புரம் நோக்கி போனான். தமயந்தியைப் பார்த்து திகைத்தான். மனம் இன்னும் அவளை விரும்பியது. அன்னப்பட்சி சொன்னதையெல்லாம் விட பேரழகியல்லவா என்று அவள் மீது மோகம் கொண்டான். ஆனால் வந்த காரியத்தை மறைக்காது தன் ரூபத்தை எடுத்துக் கொண்டு தமயந்தி தனியாக இருக்கும் பொழுது, தேவர்கள் வந்திருப்பதையும், அவர்கள் அவளை விரும்புவதாகவும் சொன்னான்.

வாக்கு தவறாத நளன் மனதை அடக்கிக் கொண்டு தமயந்தியின் அந்தப்புரம் நோக்கி போனான். தமயந்தியைப் பார்த்து திகைத்தான். மனம் இன்னும் அவளை விரும்பியது. அன்னப்பட்சி சொன்னதையெல்லாம் விட பேரழகியல்லவா என்று அவள் மீது மோகம் கொண்டான். ஆனால், வந்த காரியத்தை மறைக்காது தன் ரூபத்தை எடுத்துக் கொண்டு தமயந்தி தனியாக இருக்கும்பொழுது, தேவர்கள் வந்திருப்பதையும், அவர்கள் அவளை விரும்புவதாகவும் சொன்னான்.

தமயந்தி திகைத்தாள்.

“நீங்கள் என்னை நேசிப்பதாக அன்னப்பட்சி சொல்லிற்றே அது பொய்யா?”

“இல்லை. அன்னப்பட்சி பொய் சொல்லாது. நான் உன்னை நேசித்தேன். இன்னமும் நேசிக்கிறேன். ஆனால், தேவர்கள் என்னிலும் வலிவுமிக்கவர்கள். வணங்கத்தக்கவர்கள். அவர்கள் சொல்லை எப்படி மீறுவது. எனவேதான் அவர்களுக்காக நான் தூது வந்திருக்கிறேன்.”

நளனுடைய உன்னதமான குணம் தமயந்திக்கு புரிந்து போயிற்று. அவன்மீது அவளுக்கும் மோகம் வந்தது. “தேவர்கள் என்னை விரும்பினால் என்ன? அதைப்பற்றி எனக்கு எந்த கவலையும் இல்லை. நான் உங்களைத்தான் விரும்புகின்றேன். என் மனதில் உங்களை புருஷனாக வரித்து விட்டேன். இனி வேறொருவருக்கு அங்கு இடம் இல்லை. எனவே, நான் மறுத்ததாக சொல்லுங்கள்.”

(தொடரும்)

மகாபாரதம்

50



பாதை திருப்பிய பகடைக் காய்கள்!

தான் அவர்களை மறுத்ததாக தமயந்தி சொல்லச் சொன்னபோது, நளன் மெல்ல சிரித்தான். "இல்லை. அது சரியாக இருக்காது. சுயம்வரத்திற்கு வந்தவர்களை அவமானப்படுத்தி அனுப்பக்கூடாது' என்று முறையிட்டான்.

'சரி. சுயம்வரத்திற்கு வரட்டும். அமரட்டும். நான் அங்கு நேரிடையாக வந்து உங்கள் கழுத்தில் மாலையிட்டு விட்டால் நீங்கள்தானே என் புருஷன். உங்களைத் தவிர நான் வேறு எவருக்கும் மாலையிட மாட்டேன். நீங்களும் சுயம்வரத்திற்கு வாருங்கள்" என்று கைகூப்பினாள்.

நளனுக்கு இந்த யோசனை சரியாகப் பட்டது. அவன் தேவர்களிடம் திரும்பச் சென்று, அவர்களுக்காகத் தான் தமயந்தியிடம் தான் தூதுபோனதையும், அவள் சொன்னவற்றையும், தன்னையும் சுயம்வரத்திற்கு வரச் சொல்லியிருக்கிறாள் என்பதையும், தனக்குத் தான் மாலையிடப் போவதாகவும் மிக வெளிப்படையாக, சிறிதுகூட பொய் கலப்பில்லாது உள்ளதை உள்ளபடி சொன்னான்.

தேவர்கள் சந்தோஷமானார்கள். அவன் நல்ல குணத்தை பாராட்டினார்கள். "நீ போய் வா. தமயந்தியினுடைய தந்திரம் இதுவென்றால் இதைவிட தந்திரம் எங்களுக்குச் செய்யத் தெரியும்" என்று சொன்னார்கள்.

சுயம்வர மண்டபத்தில் ஐந்து தேவர்களுக்கு பதிலாக ஐந்து நளன்கள் உட்கார்ந்திருந்தார்கள். நளனுடைய உருவம் போல ஐந்து பேரும் உட்கார்ந்திருந்தார்கள். ஆறாவதாக உண்மையான நளனும் உட்கார்ந்திருந்தான்.

மாலையோடு உள்ளே நுழைந்த தமயந்தி திகைத்தாள். இதில் எந்த நளன் என்னுடைய நளன் என்று அவஸ்தைப்பட்டாள். கூர்த்த மதியுடையவளாதலால் இறைவனை வேண்டி எனக்கு உண்மையைச் சொல் என்று கேட்டுக் கொண்டாள். அவள் சூட்சும புத்திக்கு ஒன்று தெரிந்தது. நளன் வேடமிட்ட தேவர்கள் மாலை வாடாமல் இருந்தது. மேலே தூசு படியாமல் இருந்தது. கண்கள்



இமைக்காமல் இருந்தன. கால்கள் தரையில் பாவவில்லை. இது தெரிந்தபிறகு அவர்கள் தேவர்கள் என்பதை உணர்ந்தாள். உண்மையான நளனின் மேல் தூசு இருந்தது. கண்கள் இமைத்தன. கால்கள் தரையில் படிந்திருந்தன. அவன் சூடிய மாலை வாடி இருந்தது. எனவே, அருகே போய் நிதானமாக அவன் கழுத்தில் மாலையிட்டு, நீரே என் புருஷன் என்று அவன் வஸ்திரத்தை பற்றிக் கொண்டாள்.

எல்லா மன்னர்களும் ஆரவாரம் செய்தார்கள். தமயந்தியையும், நளனையும் ஆசீர்வாதம் செய்தார்கள். தேவர்கள் சந்தோஷமானார்கள்.

பாலகுமாரன்

உண்மையான அன்பல்லவா. அதற்கு உண்மையை கண்டுபிடிக்கத் தெரியாதா என்று நளனையும், தமயந்தியையும் ஆசீர்வாதம் செய்துவிட்டு நகர்ந்தார்கள்.

தமயந்தியை திருமணம் செய்து கொண்ட நளன் மிகச் சிறப்பாக தன்னுடைய நிஷாத தேசத்தை ஆண்டு வந்தான். மனைவியோடு ரம்மித்து அவளுக்கு இரண்டு குழந்தைகளும் பிறந்தன.

துவாபரயுகம் நகர்ந்து கலியுகம் தோன்றுகின்ற வேளை, துவாபரயுகமும் கலியுகமும் சந்திக்கின்ற நேரம். உலகத்தின் நன்மைகளை சுகங்களைப் பற்றி கலி, துவாபர யுகத்திடம் கேட்டுக் கொண்டான். "அங்கு தமயந்தி என்ற பேரழகி இருக்கிறாளாமே. அவளை திருமணம் செய்ய விரும்புகின்றேன். அவள் எந்த இடத்தில் இருக்கிறாள்" என்று துவாபர யுகத்திடம் விசாரித்தான்.

கலியின் இந்த கேள்வியைக் கேட்டு துவாபர யுகம் சிரித்தது. "தமயந்திக்கு எப்பொழுதோ திருமணம் நடந்துவிட்டது. பரமசௌக்கியமாக இருக்கிறாள்."

"இல்லையே. தேவர்களல்லவா அவளை நோக்கிப் போனார்கள்."

"ஆமாம். தேவர்கள் நோக்கிப் போயினும் தேவர்களை புறக்கணித்து விட்டு மனிதனான நளனையே அவள் வரித்துக் கொண்டாள். சுயம்வரம் அப்படித்தான் நடந்தது. போட்டி ஏதும் அல்லாத பெண்ணின் விருப்பமே கொண்ட சுயம்வரம் அல்லவா. எனவே, தமயந்தியின் விருப்பமே திருமணமாயிற்று. அவர்கள் சௌக்கியமாக இருக்கிறார்கள்" என்று சொல்ல, கலி புருஷன் பல் கடித்தான்.

"அதெப்படி இருக்க முடியும். தேவாதி தேவர்களை புறக்கணித்துவிட்டு சாதாரண மனிதனை திருமணம் செய்து கொண்டால் நாங்கள் விட்டு விடுவோமா? அது அவமானமல்லவா. சாதாரண மனிதனை இவ்வளவு உயரத்தில் கொண்டு வந்து வைத்தால் நாங்கள் என்ன வெறுமே இருப்போமா. நான் என் வேலையை காட்டுகிறேன். தமயந்தி சுகமாக வாழக் கூடாது. வாழவிட மாட்டேன்" என்று சூளுரைத்தான்.

கலி புருஷன் பூமியை ஆக்ரமித்துக் கொண்டான். துவாபர யுகம் விடைபெற்றது. கலியின் கோலங்கள் பூமியில் அங்கங்கே தோன்றின.

நளனைப் பற்றிக்கொள்வதற்கு ஒரு காரணம் தேவைப்பட்டது. ஏதேனும் ஒரு குற்றம் செய்தால்தான் அந்த குற்றத்தை முன்னிட்டு அதனை தண்டிக்க கலி நளனை பீடிக்கலாம். கலியுகம் பன்னிரண்டு வருடம்வரை காத்திருந்தது. வாழ்வில் எக்கணமும், எதுபற்றியும் ஒரு தவறும் செய்யாமல் நளன் வாழ்ந்து வந்ததால் கலி அவனை பீடிக்க முடியவில்லை.

பன்னிரண்டு வருடங்களுக்கு பிறகு ஒருமுறை நளன் சிறுநீர் கழித்துவிட்டு வரும் போது சரியாக கால் கழுவவில்லை. அப்படிக் கழுவாததால் கலி நளனை பீடித்துக் கொண்டது. அந்த ஒரு சிறு தவறு அதற்கு போதுமானதாய் இருந்தது.

கலி, நளனுடைய சகோதரன் புஷ்கரனிடம் வேறு ரூபத்தில் சென்றது. 'உனக்கு இந்த ராஜ்யமும், சிம்மாசனமும், கிரீடமும், அதிகாரமும், அந்தஸ்தும் வேண்டுமா? நான் சொன்னபடி செய். நளனை சூதுக்கு அழை. சூதாடு. நான் உனக்கு துணையாக இருக்கிறேன். உனக்கு சகல வெற்றிகளையும் பெற்றுத் தருகிறேன்,' என்று சொல்ல, ஆசைப்பட்ட புஷ்கரன் நளனை சூதுக்கு அழைத்தான். 'தர்மப்படி சூதாடுவோம். ஒரு ஏமாற்று வேலையும் இல்லை. என்ன செய்ய வேண்டுமோ, எப்படி ஆட வேண்டுமோ அப்படி செய்வோம்,' என்று சூதுக்கு அழைக்க, நளன் கொஞ்சம் பதறினான். சொந்த சகோதரனே சூதுக்கு அழைத்தது அவனுக்கு தாங்க முடியவில்லை. ஆனாலும் ஒரு ரோஷம் ஏற்பட்டு அவ்வளவு திமிரா என்கிற எண்ணத்தில் அவனுடன் சூதாட ஒப்புக்கொண்டான்.

புஷ்கரனின் பகடைக்காய்களில் கலியுகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க துவாபர யுகம் ஒளிந்து கொண்டது. புஷ்கரன் எது போட்டாலும் சொன்ன சொல் தவறாது காய்கள் விழுந்தன. நளனுக்கு காய்கள் ஏறுமாறாக இருந்தன. பசுக்கள், குதிரைகள், ரதங்கள், தோட்டங்கள், அரண்மனை என்று பல விஷயங்கள் ஒவ்வொன்றாக பின் தொடர்ந்தன. நளன் இடையறாது தோற்றுக் கொண்டேயிருந்தான்.

மந்திரிகள் வேதனைப்பட்டார்கள். தமயந்தியிடம் முறையிட்டார்கள். தமயந்தி ஓடிப்போய் ஆட்டத்தை நிறுத்தும்படி நளனிடம் கெஞ்சினாள். மன்றாடினாள். 'இது உங்களுக்குத் தேவையில்லையே,' என்று இடித்துரைத்தாள். ஆனால், நளன் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. தொடர்ந்து சூதாடினான். நளன் இந்த தேசத்தில் வெகுநாள் இருக்கப் போவதில்லை என்று அதிகாரிகளும், மந்திரிகளும் தீர்மானம் செய்துகொண்டு அவரவர் இடத்திற்கு போனார்கள். ஊர் முழுவதும் ஒரு துக்கம் சூழ்ந்து கொண்டது.

மிகப் பரிச்சயமான தேர்ப் பாகன் ஒருவனோடு தமயந்தி தன் குழந்தைகளை தன் தந்தை வீட்டிற்கு அனுப்பினாள். குழந்தைகள் விதர்ப தேசம் போய் சேர்ந்தார்கள். என்ன வந்தாலும் நளனை விட்டு நகர்வதில்லை என்ற பிரதிக்ஞையோடு தமயந்தி புருஷனுக்கு அருகே நின்றாள். கிரீடமும், செங்கோலும், அதிகாரமும் சூதாட்டத்தில் இழந்தாகி விட்டது. சகோதரன் புஷ்கரனுக்கு நிஷாத தேசம் சொந்தம் என்று தீர்மானமாகி விட்டது.

இனி என்ன இருக்கிறது. உன் மனைவி மட்டும்தானே. அவளை வேண்டுமானால் பந்தயம் வைக்கிறாயா என்று சிரித்தபடி புஷ்கரன் கேட்க,

நளன் கோபத்தோடு சூதாட்டத்தை கலைத்து விட்டு போனான். அது அவனுடைய தேசம் இல்லை.

நளன் தன் ஆபரணங்களை கழற்றினான். இடுப்புத் துணியோடு மேலே எதுவும் போர்த்தாமல் ஒரு சாதாரண குடிமகன் போல சபையை விட்டு வெளியேறினான். அரண்மனையை தாண்டினான். தெருக்களில் இறங்கினான். நகரத்தை விட்டு வெளியே போனான். தமயந்தியும் அவனைப் பின் தொடர்ந்தாள். அவள் அப்போது வெறும் ஒற்றை ஆடை அணிந்திருந்தாள்.

யாராவது நளனுக்கு உதவி செய்தால் அவர்களை நான் வதைப்பேன் என்று புஷ்கரன் முரசு அறிவித்தான். ஜனங்கள் நளனைக் கண்டு கொள்ளாமல் வெறுமே பரிதாபத்துடன், 'அரசனே, தவறு செய்து விட்டாயே!' என்பதுபோலப் பார்த்தார்கள்.

நிஷாத தேசத்தைச் சுற்றியுள்ள காடுகளில் நளனும், தமயந்தியும் அலைந்து திரிந்தார்கள். பழங்களையும், காய்களையும் உண்டு பசி தீர்த்தார்கள். ஒரு இடத்தில் சிறிய பறவைகள் ஒன்றுகூடி தானியங்களை கொத்தித் தின்று கொண்டிருந்தன. இந்தப் பறவைகள் நன்கு உணவாகுமே என்று இடுப்புத் துணியை அவிழ்த்து அந்த பறவைகளின் மேலே வீசி எறிந்தான். ஆனால், பறவைகளை பிடிக்க முடியவில்லை. அந்த பறவைகள் வஸ்திரத்தோடு மேலே பறந்தன. இடுப்பு வஸ்திரம் காணாமல்போய் நளன் நிர்வாணமாக நின்றான். அந்த பறவைகள் 'மன்னனே நாங்கள் உங்களுடைய பகடைக்காய்கள். உம்முடைய இடுப்புத் துணியும் பறித்துக் கொள்ள இங்கு அனுப்பப்பட்டிருக்கிறோம். எனவே, இந்த துணியை தேட முயற்சி செய்ய வேண்டாம்.' என்று சொல்லி துணியோடு பறந்து போயின. நளன் விக்கித்து நின்றான். என்ன செய்வது என்று யோசித்தான்.

தமயந்தியை விட்டுப் பிரிய முடிவுசெய்தான். அவளுடைய சொந்த ஊரான விதர்ப தேசத்துக்கு வழிகாட்டினான். தமயந்தி பெரும் குரலெடுத்து அழலானாள். "எதற்கு விதர்ப தேசத்திற்கு வழிகாட்டுகிறீர்கள்? என்னைப் பிரியும்படியான எண்ணம் வந்து விட்டதா? எவ்வளவு துயர் வந்தாலும் அந்த துயரை தீர்க்கின்ற அருமருந்து ஒருவருடைய மனைவி என்பது உங்களுக்கு புரியவில்லையா? வேறு எவரையும்விட மனைவி மிகுந்த அக்கறையோடு அவன் துன்பத்தில் பங்கெடுப்பதையும், அதை நீக்குவதற்கு முயற்சி செய்வதையும் விரும்ப மாட்டாளா? அப்படி இருக்க என்னை புறக்கணிப்பதற்கு உங்களுக்கு எப்படி மனம் வந்தது" என்று விசும்பலோடு கேட்டாள்.

"துயர் ஏற்படும்போது மனைவி அருமருந்து என்பது உண்மைதான். உன்னை என்னால் பிரிய முடியாது. நான் தற்கொலை செய்து கொள்வேனே தவிர உன்னை விட்டு பிரிய மாட்டேன்" என்று நளன் கூறினான்.

"அப்படியானால் நாம் இரண்டு பேருமே விதர்ப தேசம் போய் விடுவோமே. அங்கு போனால் நலமாக இருக்கலாமே. என் தந்தை உங்களை மிகுந்த பிரியத்தோடு வரவேற்பார். நல்ல மதிப்பு தருவார்" என்று சொன்னாள்.

நளன் அங்கு வரமாட்டேன் என்று மறுத்தான். "மிகப் பெரிய மன்னனாக, கம்பீரமாக நான் அங்கு வந்திருக்கிறேன். உங்களுக்கு மகிழ்ச்சியை தந்திருக்கிறேன். இன்றைக்கு முற்றிலும் தோற்றுப்போய் அநாதையான நிலையில் உன் தந்தையை சந்திப்பது எனக்கு அவ்வளவு உவப்பாக இருக்காது."

அவர்கள் இரண்டு பேரும் ஒரே வஸ்திரத்தால் உடலை மறைத்த வண்ணம் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தார்கள். ஒரு தர்மசாலைக்கு போனார்கள். அங்கு சிறிதளவு உணவு கிடைத்தது. உணவு உண்ட களைப்பில் தமயந்தி அங்கேயே தூங்கி விட்டாள்.

அயர்ந்து தூங்கும் மனைவியை நளன் கவலையோடு பார்த்தான். நான்தான் விதியின் பயனாக கஷ்டத்தை அனுபவிக்கிறேன் என்றால் என்னோடு இவளும் சேர்ந்து ஏன் அனுபவிக்க வேண்டும். இவளுக்கு யாராவது அடைக்கலம் கொடுப்பார்கள். எவர் வேண்டுமானாலும் பிச்சை இடுவார்கள். இவள் கண்கலங்கி நிற்பதை பார்த்து இரக்கப்படுவார்கள். ஆனால், கூட நான் இருந்தால் அந்த இரக்கம் முழுமையாக இருக்காது - இவளுக்கு உதவிகள் மறுக்கப்படவும் கூடும். அதுதான் புருஷன் இருக்கிறானே பார்த்துக் கொள்வான் என்று புறக்கணிக்கக் கூடும். எனவே, அவள் தூங்கும் போது நளன் மெல்ல எழுந்து அங்குள்ளவர்களிடம் ஒரு கத்தி கேட்டு அவள் உடுத்தியிருந்த புடவையை சரிபாதியாக அறுத்து ஒன்றை தான் இடுப்பில் கட்டிக் கொண்டு மற்றதை அவள் மீது போர்த்தி, எழுந்து கத்தியை கொடுத்து விட்டு வெளியேறினான்.

மனைவி இல்லாது இருப்பதே உத்தமம். இம்மாதிரியான கடின காலத்தில் தனியாக இருப்பதே நல்லது என்று நினைத்தான். ஆனால், மனம் கேட்கவில்லை. மறுபடியும் வந்து மனைவியை பார்த்தான். அழுதான். எவ்வளவு அமைதியாகவும், அழகாகவும் இருக்கிறாய். உனக்கு ஏன் இந்த துக்கம். நீ சௌக்கியமாக இரு. உனக்கு அடைக்கலம் கொடுப்பவர்கள் அதிகமாவார்கள். அவர்கள் உன்னை கண்ணின் இமைபோல் பார்த்துக் கொள்வார்கள். இந்த பரதகண்டம் இன்னும் நல்லவர்களை தன்னுள் வைத்துக் கொண்டிருக்கிறது. அவர்களால் உனக்கு க்ஷேமம் உண்டாகும் என்று ஆசீர்வதித்தான்.

மனைவியினுடைய பாதி புடவையை எடுத்துக் கொண்டு வெளியே போனான். அந்த கற்புக்கரசியின் உடை அவனுக்கு பெரும் பாதுகாப்பாய் இருந்தது.

தமயந்தி விழித்து எழுந்தாள். கணவனைத் தேடினாள். விசாரித்தாள். 'நாலு நாழிகைக்கு முன்பே அவர் கிளம்பிப் போய்விட்டார். நீ அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாய். உனக்கு அருகே அழுது கொண்டிருந்தார். பிறகு எழுந்து போய் விட்டாரே. இந்தப் பக்கம்தான் போனார்' என்று வழிகாட்டினார்கள்.

தமயந்தி பித்து பிடித்தவள்போல் புழுதி படிந்த

ஆடையும், தலைமயிரும், உடம்புமாக அவன் பின் தொடர்ந்து ஓடினாள். நாலாபுறமும் பார்த்து புருஷன் பேரைச் சொல்லி கூவினாள். ஒரு பைத்தியம்போல அந்த கிராமத்தின் பல இடங்களில் அலைந்தாள். அவளைக் கண்டு ஜனங்கள் பரிதாபப்பட்டார்கள். யார் வீட்டிலோ குடிக்க தண்ணீரும், உணவும் கொடுத்தார்கள். அதை உண்டுவிட்டு தமயந்தி மறுபடியும் தேடினாள். இந்த வழிதானே என்று தமயந்தி மறுபடியும் கேட்டுக் கொண்டு நளன் போன வழி நோக்கி நடக்கத் துவங்கினாள். அது பெரும் கானகமாக இருந்தது.

கணவனைப் பிடித்த சாபம் என்பது அந்த குடும்பத்தையும் பாதிக்கும். குறிப்பாக அவன் மனைவியை பாதிக்கும். நளனுடைய குழந்தைகள் தாய், தந்தை இல்லாமல் வேறு ஒரு இடத்தில் ஏக்கத்தோடு வாழ, மனைவி புருஷனுடைய துக்கத்தை கண்டு வேதனையோடு அலைய, மனைவியும் வெறுத்து அந்தக் கணவன் என் துக்கம் என்னோடு போகட்டும் என விலகி நடக்க, நளனுடைய குடும்பம் கலியினுடைய கோபத்தால் உச்சகட்ட துக்கத்தை அடைந்தது. ஆனாலும், அவர்கள் ஒருவரை ஒருவர் வெறுக்கவில்லை. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டவில்லை. என் துக்கம் உனக்கு வராமல் இருக்கட்டும் என்ற கருணையோடுதான் நளன் நகர்ந்து போனான். என்னைவிட்டு எப்படிப் போகலாம். நீங்கள் எங்கு போனாலும் நான் உங்களை பின்தொடர்வேன். உங்களை தேடுவேன். உங்களை கண்டுபிடிப்பேன் என்ற வைராக்கியத்தோடு மனைவி பின்னே அலைந்தாள். குழந்தைகள் நல்ல பாதுகாப்பில் வளர்ந்தாலும் தாய், தந்தையின் ஏக்கத்தோடு அமைதியாக தவம் செய்து கொண்டிருந்தன...

- பிருகுதஸ்வ முனிவர் கதையை நிறுத்தினார். பஞ்ச பாண்டவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. திரௌபதி முகத்தை பொத்திக் கொண்டு விக்கி விக்கி அழலானாள்.

இந்த துக்கத்தை விடவா என் துக்கம் பெரிது? இதோ ஆஜானுபாகுவாய் என கணவர்கள் இருக்கிறார்களே. அவர்கள் எங்கு இருந்தாலும் அந்த இடம் சொர்க்கமாயிற்றே. நான் யாரையும் விட்டு பிரியவில்லையே. அழுக்காகவோ, தலைமயிர் கலைந்தோ, பைத்தியம்போல அலையவோ இல்லையே. நான் சுயநினைவோடு நல்ல காலம் விடியும் என்ற எதிர்ப்பார்ப்போடுமல்லவா இருக்கிறேன். என்மீது ஒரு தூசும் படாதவண்ணம் கொடியவர்களிடமிருந்தும் காப்பாற்றுகின்ற பலம் மிக்க புருஷர்களுடைய அண்மை எவ்வளவு சந்துஷ்டியானது என்று சந்தோஷப்பட்டாள்.

“மேற்கொண்டு என்ன ஆயிற்று” நகுல-சகாதேவர் வினவினார்கள்.

“காட்டில் துஷ்ட மிருகங்கள் அலைந்துகொண்டிருந்தன. எங்கோ மனிதர்கள் ஊர்வலமாக வருகிற சத்தம் கேட்டது. தமயந்தி காத்திருந்தாள். ஒரு பெரிய வியாபாரிகள் கூட்டம் கோவேறு கழுதைகளோடும், குதிரைகளோடும், மாட்டு வண்டிகளோடும், கையில் வேல், வாள் போன்ற ஆயுதங்களுடனும் மிக பாதுகாப்பாக அந்த வனத்தை தாண்டிக் கொண்டிருந்தார்கள். தமயந்தியைப் பார்த்து பயந்து நிறுத்தினார்கள். பிறகு தாண்டிப் போனார்கள். வயதான ஒருவர் வந்து ‘யாரம்மா நீ? இந்த கடும் வனத்தில் ஏன் தனியாக இருக்கிறாய்?” என்று பிரியமோடு கேட்டார்.

“நான் என் புருஷனைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன். இந்த வனத்தில் நளன் என்கிற பெயருடைய ஒரு மனிதரை கண்டீர்களா? அவர் என் புருஷன். சத்திரத்திலிருந்த என்னை தனியே விட்டு விட்டு போய்விட்டார் அவருடைய துக்கம் என்னை பிடிக்கக் கூடாது என்று நகர்ந்துவிட்டார். ஆனால், அவர் இல்லாமல் நான் எப்படி வாழ்வேன். அவர் எங்கிருக்கிறார் பார்த்தீர்களா?” என்றுகேட்க, அவர்கள் இல்லை என்று சொன்னார்கள்.

“இந்த வனத்தை தாண்டும் வரை எங்களோடு வா” என்று சொன்னார்கள். அவள் அந்த வியாபாரக் குழுவோடு சேர்ந்து நடந்து வந்தாள். வழி முழுவதும் கணவனையே தேடிக் கொண்டு வந்தாள். எங்கேனும் ஒரு ஒற்றையடிப் பாதை தெரிந்தாலும் சிறிது தூரம் ஓடிப்போய் தேடிவிட்டு வருவாள். மனித காலடித் தடயங்களே இல்லையென்று திரும்பி வருவாள். வியாபாரிகள் அவளுடைய வேதனையைக் கண்டு மனம் கசிந்தார்கள். ஆறுதல் சொன்னார்கள். ஒரு பெரிய புல்வெளியில் வண்டிகளை நிறுத்தி வியாபாரிகள் ஓய்வெடுத்தார்கள். நெடுந்தூரம் நடந்து வந்த களைப்பால் உணவு சமைத்து உண்ட திருப்தியால் அயர்ந்து உறங்கினார்கள். அந்தப் புல்வெளியில் அடிக்கடி மேய்கின்ற யானைகள் தொலைவிலிருந்து இவர்கள் இருப்பதை மோப்பம் பிடித்து பார்த்துவிட்டு கோபத்தோடு வந்தன. மாட்டு வண்டிகளையும், குதிரைகளையும் அடித்து மிதித்தன. வியாபாரிகளை தூக்கி வீசி எறிந்தன. படுத்துக் கிடந்தவர்களின் மீது ஏறி நின்றன. கூழாக்கின. யாரால் தாக்கப்படுகிறோம் என்றுகூட தெரியாமல் பல பேர் இறந்தார்கள். மற்றோர் சிதறி ஓடினார்கள். மரத்தின் மீது ஏறிக்கொண்டார்கள். ஏறிய மரத்தையும் யானைகள் முட்டி உடைத்தன. பின்தொடர்ந்தன. வெகு சிலரே தப்பித்தார்கள். அவர்கள் கொண்டு வந்த வியாபாரப் பொருட்கள் அத்தனையும் வீணாகின. ரத்தின குவியலும், துணிமணிகளும், உணவுப் பொருட்களும் நாலா திக்கும் சிதறிப்போய் உபயோகிக்க முடியாதவையாக ஆயின.

‘எத்தனை முறை இந்தக் காட்டை கடந்திருப்போம். எத்தனைமுறை இம்மாதிரி வியாபாரத்திற்கு கிளம்பியிருப்போம். அப்போதெல்லாம் வராத தூக்கம் இப்போது ஏன் வந்தது. நாம் ஸ்வாமி கும்பிடாமல் வந்திருப்போமோ, இல்லையே, வணங்காமல் வந்திருப்போமோ, இல்லையே, குபேரனை கும்பிடாமல் வந்திருப்போமோ, இல்லையே. அப்படி இருப்பினும் இது ஏன் நடந்தது?” என்றெல்லாம் எண்ணிக் கலங்கினார்கள் வியாபாரிகள்.

(தொடரும்)

மகாபாரதம்

51

தமயந்தியை அடையாளம் காட்டிய திலகம்!

இதுவரை நேர்ந்திராத வகையில் இப்போது மட்டும் ஏன் இப்படியெல்லாம் நிகழவேண்டும்? "யாரோ ஒரு பெண்மணி பரட்டைத் தலையும், அழுக்கு உடம்போடும் வந்த அவளை பரிதாபப்பட்டு நம்மோடு சேர்த்துக் கொண்டோம். அவள் பெண்ணே அல்ல. காட்டினுடைய துர்பூதம். அவளை சேர்த்துக் கொண்டதால்தான் இப்படி ஆயிற்று. அந்த கேடுகெட்ட பெண்ணால்தான் நமக்கு இப்படிப்பட்ட துக்கம் வந்தது. நம்முடைய சகோதரர்கள் செத்துப் போனார்கள். பொருள் நஷ்டமாயிற்று. அவள் பைத்தியம் பிடித்ததுபோல் நடிக்கிறாள். உண்மையில் அவள் பைத்தியம் அல்ல. சாகசமான பெண் பேய்" என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி பேசினார்கள்.

தமயந்தி துக்கப்பட்டாள். அவர்கள் மனத்தை புரிந்து கொண்டாள். மேலும் அவர்களுக்கு தொந்தரவு தரக்கூடாது என்று சொல்லி அந்தக் கூட்டத்திலிருந்து தன்னந்தனியே வனத்தை தாண்டினாள்.

சேதிராஜன் சுபாகு ஆண்ட தலைநகரை அடைந்தாள். அந்த ஊரின் தெருக்களில் கணவனைத் தேடி அலைந்தாள். அவளை குழந்தைகள் உட்பட எல்லோரும் வியப்போடு பார்த்தார்கள். சிறுவர்கள் அவளைச் சுற்றி கைகொட்டி சிரித்தார்கள். பைத்தியம் போல இருந்தவளை கேலி செய்யத் துவங்கினார்கள். ஊர் ஜனம் இதை வேடிக்கை பார்த்தது. தன் மாடத்திலிருந்து இதைப் பார்த்த சேதிராஜன் சுபாகுவின் மனைவி மற்றவர்களை விலக்கி தமயந்தியை அழைத்து வரச் சொன்னாள். தமயந்தியை உற்றுப் பார்த்தாள்.

"நீ பிச்சைக்காரி அல்ல, பைத்தியமும் அல்ல. நீ பேரழகியாக இருக்கிறாய். இந்த அழகு, இந்த சோபை ஒரு காலும் பைத்தியத்திற்கு இருக்காது. நீ ஏதோ ஒரு துக்கத்தால் பீடிக்கப்பட்டு ஏதோ ஒரு லட்சியத்திற்காக அலைந்து கொண்டிருக்கிறாய். வா, உட்கார். குடிக்க நீர் எடுத்துக் கொள். பழச் சாறு அருந்து" என்று உபசரித்தாள். தாகம் தீர நீர் அருந்தி, பழச்சாறு குடித்து அமைதிவரப் பெற்ற தமயந்தி அவளைப் பார்த்து கைகூப்பினாள்.

"உயிரை காப்பாற்றினீர்கள். உங்களுக்கு என் நமஸ்காரம். நான் என் புருஷனைத் தேடி அலைகிறேன். என் புருஷன் ஒரு பெரிய தேசத்தின் மன்னன். அவர் சூதாடி தனது சொத்துகளை இழந்து, சொற்படி வனம் போனார். நான் பின்தொடர்ந்தேன். அவருடைய உடையும், திருட்டுத்தனமாக பறிக்கப்பட்டது. அவர் நிர்வாணமாக இருந்தார். என்னுடைய உடையை சுற்றிக் கொண்டிருந்தார். ஒரு தர்மசாலையில் என் உடையை பாதி அறுத்து, தன் இடுப்பில்


ம.செ

தரித்துக்கொண்டு பாதி உடையுடன் என்னை விட்டுவிட்டுப் பிரிந்து போனார். தன்னால்தான் எனக்குத் துக்கம் என்று என்னை தனியே விட்டு பிரிந்து போனார். அவர் அருகே இருப்பின் எனக்கு எந்த துக்கமும் இல்லை. அவர் விலகிப் போனதுதான் துக்கமாக இருக்கிறது.

எனவே, துக்கத்திலிருந்து மீள என் புருஷனை நான் தேடிக் கொண்டிருக்கிறேன். அவர் எங்கிருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும் அவரைக் கண்டுவிட்டால் மிகப் பெரிய பொக்கிஷத்தை அடைந்ததுபோல நான் சந்தோஷமாக இருப்பேன்.”

அவள் கண்களில் தோன்றிய உறுதியும், வெறியும் ராஜமாதாவிற்கு வியப்பை உண்டாக்கின. உடம்பு நலிந்த நிலையில் மனதின் வேகம் கண்டு ஆச்சரியப்பட்டாள். “அன்புள்ளவளே, என்னோடு இருந்துவிடு” என்று மிகுந்த விருப்பத்துடனும், மரியாதையுடனும் கேட்டாள்.

“எனக்கு இங்கிருப்பதில் எந்த ஆட்சேபணையும் இல்லை. நலிந்து வந்த உடம்பை தேற்றிக் கொள்வதற்கும், தொடர்ந்து அமைதியாக உட்கார்ந்து என் புருஷனை கண்டுபிடிப்பதற்கும் உங்களோடு இருப்பது எனக்கு உதவி செய்யும். தாயே, நான் இங்கு வெறுமே இல்லாமல் ஒரு வேலைக்காரியாக உங்களோடு இருக்க வேண்டுகின்றேன். உங்களுக்கு வேண்டுமானால் பணிவிடைகள் செய்கிறேன். இந்த அரண்மனையை சுத்தம் செய்வதும், இங்குள்ளோருக்கு உதவி செய்வதும் என் விருப்பமான காரியங்களாக இருக்கும். ஆனால், என்னை வேறொருவர் எச்சிலை விழுங்கச் சொல்லக் கூடாது. இன்னொரு எச்சில் பண்டத்தை நான் சாப்பிட மாட்டேன். வேறு எவரும் என்னை அதிகாரம் செய்யலாகாது. எந்த ஆடவரும் என்னை தவறாக பார்க்கக் கூடாது. எந்த ஆடவரும் அப்படி பார்த்தால் அவர் கண்டிக்கப்பட வேண்டும். மூன்று முறைக்கு மேல் பார்த்தால் அவர் மரண தண்டனைக்கு ஆட்பட வேண்டும். மிகப் பெரிய மரியாதையுடன் நான் இங்கு இருக்க விரும்புகின்றேன்,” என்று சொன்னாள்.

தமயந்தியினுடைய இருப்பே தன்னுடைய அரண்மனைக்கு சோபை தரும். தன் புருஷனுக்கும், குடும்பத்திற்கும் நல்லது தரும் என்பதை உள்ளுணர்வில் அந்த ராஜமாதா உணர்ந்து, அப்படியே ஆகட்டும். நான் அவ்விதமே அறிவிப்பேன். நீ எந்த பயமும் இன்றி இங்கு இருக்கலாம் என்று வாக்குறுதி கொடுத்தாள்.

தமயந்தி உணவு பற்றிய, உடை பற்றிய, பாதுகாப்பு பற்றிய கவலைகளையெல்லாம் நீங்கி அதே ஒற்றை ஆடையுடன் அரண்மனையில் வலம் வந்தாள். எல்லா வேலைகளையும் விருப்பத்துடன் செய்தாள். மிகப்பெரிய தேசத்தின் அரசகுமாரி, புருஷனால் கைவிடப்பட்டவள், வேறொரு இல்லத்தில், வேறொரு அரசியின் கீழ் வேலைக்காரியாக இருப்பதற்கு ஒப்புக் கொண்டு அதில் கடும் நிபந்தனைகளையும் விதித்து சந்தோஷமாக வாழ்வது என்பது அதிசயம்தானே!‘கற்புள்ள பெண்களுக்கு இப்படிப்பட்ட சௌகரியங்கள் நிச்சயம் கிடைக்கும்’ என்று முனிவர் சொல்ல, எல்லோரும் தமயந்தியை நினைத்து கைகூப்பி வணக்கம் தெரிவித்தார்கள். கற்புள்ள பெண்களையெல்லாம் மனதிற்குள் வணங்கினார்கள்.

தமயந்தியைப் பிரிந்த நளன் வேறொரு காட்டில் நடந்து போய்க்கொண்டிருந்தபோது அந்தக் காட்டில் ஒருபக்கம் தீப்பிடித்து எரிவதைக் கண்டான். கடந்து போய்விடலாம் என்று நினைத்தபோது அந்த தீ எரிந்த பக்கத்திலிருந்து ஒரு தீனமான குரல் கேட்டது. ‘காப்பாற்றுங்கள். தயவுசெய்து காப்பாற்றுங்கள்’ என்று கதறியது. யாரோ தீயினால் சூழப்பட்டுவிட்டார்கள் என்பதை உணர்ந்து அந்தக் காட்டுத்தீயை நோக்கி நளன் போனார். கிடைத்த இடைவெளியினூடே அந்தத் தீயை தாண்டினார். காற்று வீசவும் தீ வேகமாக பரவவும் அபாயம் அதிகம் இருந்தது. பச்சை மரங்கள் எரிந்து விழுந்தன. அவர் இன்னும் நெருங்கிப் போனபோது ஒரு பெரிய நாகப் பாம்பு வளையமாக சுற்றிக் கொண்டிருப்பதை கவனித்தார். அந்த இடம் முழுவதும் சூடாகவும், தூசாகவும் இருந்தது. அதை வாரி எடுத்துக்கொண்டார். நாகம் அவரை தழுவிக் கொண்டது. “என்னை இங்கிருந்து காப்பாற்றி விடுங்கள். உங்களுக்கு நிச்சயம் உதவி செய்கிறேன்,” என்று உரக்கச் சொல்லியது. ஆனால், அதன் உதவியைப் பற்றி கவலைப்படாமல், என்ன உதவி என்று கேட்காமல் அவர் அதை எடுத்து சுமந்து ஓட முற்பட்டபோது நாகம் தன்னை ஒரு மோதிரத்தின் அளவுக்கு சுருட்டிக் கொண்டது. அந்த மோதிரத்தை கையில் அணிந்து கொண்டு வெகு எளிதாக தீயினை கடந்து வெளியே வந்து ஒரு நதியின் சுழலில் எறிந்தார். பாம்பு பிரம்மாண்டமாயிற்று. நன்றியுடன் நளனைப் பார்த்துப் பேசியது.

“நண்பனே, என் பெயர் கார்கோடன். இந்த வனத்தின் தீ என்னை விழுங்க காத்திருந்த நேரத்தில் நீ வந்து காப்பாற்றினாய். நான் பாம்பு என்று தெரிந்த பிறகும் பயமின்றி என்னைத் தொட்டு தோளில் தூக்கினாய். நான் விஷமுள்ளவன் என்று தெரிந்தும் என்னைக் காப்பாற்ற எண்ணம் கொண்டாய். இது எல்லா மனிதருக்கும் வராது. மிக உன்னதமான மனிதருக்கே வரும். மற்றவருக்கு உதவி செய்ய, உதவி வேண்டியவருக்கு எந்த தகுதியும் வேண்டியதில்லை என்று உத்தமருக்கே வரும். உதவிதான் முக்கியம், உதவி பெறுவது அல்ல என்பது ஞானிகளின் வாக்கு. ஒரு உத்தம புருஷனைப்போல் நடந்து கொண்டாய். உனக்கு நான் உதவி செய்ய விரும்புகின்றேன். நண்பனே, பத்தடி



பாலகுமாரன்

தூரம் நடப்பாயாக. அப்படி நடந்தபோது அந்த அடி தூரத்தை கணக்கிட்டு உனக்கு நண்பனாகி உதவி செய்வேன்.”

நளன் அந்த நாகத்தை சுமந்து கொண்டு பயமின்றி பத்தடி தூரம் நடந்தான். பத்தாவது அடி எடுத்து வைக்கும்போது கார்கோடன் என்கிற அந்தப் பாம்பு நளனை பலமாக கொத்தியது. விஷம் உடம்பு முழுவதும் பரவியது. நளன் திகைத்தான்.

“நண்பனே பயப்படாதே. உன்னுடைய உருவத்தை நான் மாற்றி விடுகிறேன். நீ உன் சுயரூபத்தை இழந்து வேறு உருவத்தில் இருந்தால்தான் நீ இந்த வேதனையான காலங்களை கவலையின்றி கடக்க முடியும். அதுவும் தவிர, உன்னுடைய உடம்பில் புகுந்து கொண்டிருக்கின்ற இந்த கலி என்கிற யுகம் என் விஷத்தால் தீண்டப்பட்டு மிகுந்த உபாதையடைந்து தாங்க முடியாதபடி வெளியே போகும். ஆனால், அது உடனடியாக நடக்காது. அவன் பெரும் அவஸ்தைக்குள்ளாகிதான் வெளியே வருவான். எனவே, நான் உன் மீது விஷம் கக்கியது தீங்கு செய்ய அல்ல. உதவியே என்பதை உணர்ந்து கொள்வாய்” என்று சொல்லி அவனைவிட்டு இறங்கி நழுவி வெளியே போயிற்று.

போகும் முன் திரும்பியது. “உனக்கு ஒரு வேளை உன் புதிய உருவம் எடுக்க வேண்டுமென்றால் இதோ இங்கிருந்து இரண்டு வஸ்திரங்கள் எடுத்துக் கொண்டு இடுப்பில் ஒன்றும், மேலே ஒன்றும் தரித்துக் கொள். நீ பழைய உருவம் பெற்றுவிடுவாய். ஆனால், அதை இப்போது உபயோகப்படுத்தாதே” என்று சொல்லி அது நின்ற இடத்திலிருந்து இரண்டு வஸ்திரங்களை தோற்றுவித்தது. பிறகு புதரோடே நகர்ந்து மறைந்தது.

நளன் தன் உடம்பு கருப்பாவதை கவனித்தான். கண், காது, மூக்கு எல்லாம் வேறு விதமாக மாறுவதை கவனித்தான். முற்றிலும் வேறு உருவம் தனக்கு வருவதை உணர்ந்து கொண்டான். இரண்டு துணிகளையும் எடுத்துக் கொண்டான். இடுக்கிக் கொண்டான். போகும் முன் அந்த கார்கோடன் நாகம் ருதுவர்னன் என்ற அரசனிடம் போகச் சொல்லிற்று. பாகுகன் என்ற பெயரோடு அவனை குதிரை சேவகனாய் அவனிடம் சேரச் சொல்லியது. உணவிற்கும் கவலையில்லாத இடம் என்று வழிகாட்டிற்று.

மாற்று உருவத்தோடு, இடுக்கிய வஸ்திரத்தோடு நளன் ருதுவர்ன மகாராஜா சபையை அடைந்தான். பெயர்என்ன என்று கேட்டபோது பாகுகன் சொன்னான்.

கார்கோடன் ருதுவர்ன ராஜாவிற்கு சூதாட தெரியும். சூதாட்ட கலைகள் அத்துப்படி. எனவே அவரிடம் சூதாட்டம் கற்றுக் கொண்டு உனக்குத் தெரிந்த குதிரை சாஸ்திரத்தை அவருக்கு கற்றுக் கொடு என்றும் உபதேசித்திருந்தது. மிக ஆவலோடு ருதுவர்ன மகாராஜாவை நோக்கி நளன் கை கூப்பினான். எதனாலேயோ ருதுவர்ன ராஜாவிற்கு பாகுகன் என்ற அந்த குதிரை சேவகனை பிடித்துப் போயிற்று.

அவனோடு ஆறு குதிரைகள் பூட்டிய தேரில் வலம் வந்தான். அத்தனை குதிரைகளும் பாகுகனுடைய குரலுக்கும், கை அசைவுக்கும் கட்டுப்படுவதை கண்டு ஆச்சரியப்பட்டான். ‘எப்படி எப்படி’ என்று வியந்தான். குதிரைகளின் மொழி என்ன என்று தெரிந்து கொண்டால் குதிரைகளிடம் பேசுவது எளிது. குதிரைகளின் மொழியை கற்றுக்கொள்ள குதிரைகளோடு வாழ வேண்டும். குதிரைகளோடு வாழ்வதற்கு குதிரை லாயம்தான் சரியான இடம். குதிரையில் உள்ள லாயத்தை விட்டு விட்டு நாம் அரண்மனைக்குள் போனால் குதிரைகள் துக்கமடையும். இத்தனை நேரம் ஓட ஓட விரட்டி விட்டு இப்போது அரண்மனைக்கு போகிறாயே என்று வருத்தப்படும். வருத்தப்பட்ட குதிரைகள் நம் பேச்சை கேட்காது. எனவே, குதிரைகளை ஓட்டி முடித்த பிறகு குதிரைகளுக்கு நடுவே இருப்பதுதான் அதற்கு சந்தோஷம்.

மிகப் பெரிய உண்மையை அவன் சொல்ல. அடடே, இது எனக்கு புரியாது போயிற்றே என்று ருதுவர்னன் வியந்தான். மேலும் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

குதிரைகளை லாயத்திற்கு அருகே நிறுத்தி, அவற்றைத் தேரிலிருந்து விலக்கி சேணங்களை அகற்றி, நளன் என்கிற பாகுகன் லாயத்தில் சேர்ந்தான். அவற்றின் முதுகை வருடி கழுத்தை கட்டிக் கொண்டு கொஞ்சினான். பசிக்கிறதா, என்ன வேண்டும் என்று கேட்டான். குடிக்க நீர் விடட்டுமா, உப்பு போடட்டுமா என்று வினவினான். அவை சொல்கின்ற பதிலை புரிந்து கொண்டான். இலைகளையும், புற்களையும் வாய்கொண்ட மட்டும் திணித்தான். சாப்பிடும்போது கழுத்தை நீவிக் கொடுத்தான். ஒரு குதிரையின் மீது சாய்ந்து கொண்டு இன்னொரு குதிரையோடு பேசினான். குதிரைகளை அவனின் சொந்தக்காரர்களைப் போல நடத்தினான். குதிரைகள் அவனை அன்பாக உரசின. முகத்தால் முட்டின. தாமே வந்து தேய்த்தன.

குதிரைகள் பாகுகனோடு பேசுவதைப் பார்த்து ருதுவர்னன் மிகுந்த சந்தோஷமடைந்தான். இன்னும் தெரிந்துகொள்ள அதிகம் இருக்கிறது என்பதால் பாகுகனை தனது முக்கியமான அதிகாரியாக நியமித்தான்.

மிகுந்த வேதனையடைந்த, வனத்தில் தனியே திரிந்த கணவனுக்கும், மனைவிக்கும் ஒரு அடைக்கலம் கிடைத்துவிட்டது. உணவுக்கும், உறைவிடத்திற்கும் பஞ்சமில்லாது ஒரு நல்ல இடம் கிடைத்துவிட்டது. அவர்கள் துக்கம் விடியப் போகிறது என்பதற்கு சாட்சியாக அந்த சுகங்கள் இருந்தன. அரண்மனை வாசம் கிடைத்தாலும் நளன் குதிரை லாயத்திலேயே உறங்கினான். அரண்மனை வாசம் கிடைத்தாலும் தமயந்தி தரையில் கையே தலையணையாக படுத்துக் கொண்டு தூங்கினாள். ஒரு வேலைக்காரியாகவே அந்த அரண்மனையில் இருந்தாள். தாங்கள் அனுபவிக்கின்ற துக்கத்திலிருந்து விலகி



இல்லாமல் இன்னும் துக்கத்தை உணர்ந்தபடியே ஒரு இடத்தில் பாதுகாப்பாக இருப்பதை அவர்கள் இருவரும் தெள்ளத் தெளிவாக உணர்ந்து செய்தார்கள்.

பிருதுதஸ்வருடைய இந்தப் பேச்சை நான்கு பேரும் புரிந்து கொண்டார்கள். திரௌபதியும் புரிந்து கொண்டாள். இந்த மாதிரி விஷயங்களெல்லாம் தங்கள் வாழ்க்கையில் நிகழப் போகின்றன என்பதை ஒருவாறு புரிந்து கொண்டார்கள். அப்படி நேர்ந்தால் எப்படி இருக்க வேண்டுமென்று தெரிந்து கொண்டார்கள்.

முனிவர் இந்தக் கதையைச் சொன்ன காரணமே பாண்டவர்களைவிட கஷ்டப்பட்ட நளனுடைய குடும்பத்தைப் பற்றி மட்டும் சொல்லாமல், அந்த கஷ்ட நேரத்தில் நளனும், தமயந்தியும் எப்படி ஜீவித்தார்கள் என்று சொல்வதின் மூலம் எப்படி இருக்க வேண்டுமென்ற சூட்சுமத்தையும் அவர் விளக்கினார். அவர்கள் அந்தச் செய்தியை மனதில் இருத்திக் கொண்டார்கள்.

துக்கம் இல்லாத நேரத்தில் துக்கம் வரும் போது எப்படி இருக்க வேண்டும் என்று தெரிந்து கொள்வது அறிவுள்ளோரின் கடமை. எனக்கு துக்கமே வராது என்று நினைப்பவன் நிர்மூடன். அப்படி ஏற்படின் தங்கள் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று யோசித்து மனதில் இருத்திக் கொள்பவன்தான் புத்திசாலி.

நளன் கதை அந்த நால்வருக்கும், திரௌபதிக்கும் சொன்ன கதைஅல்ல. நளன் கதை நமக்குச் சொல்லப்பட்டது. மனிதர்களில் துக்கம் இல்லாத வாழ்க்கை வாழ்ந்தவர் குறைவு. துக்கப்படும் நேரம் என்பது ஒரு குறிப்பிட்ட காலம்தான். அந்த காலத்தை அமைதியாக கடக்க தெரிந்துவிட்டால் சுகம் வெகு எளிதாக வந்து சேரும் என்பதை புரிந்து கொண்டு அந்த கடினமான காலத்தை ஏற்றுக் கொள்ள நளன் கதை சொல்லித் தருகிறது.

நள சரித்திரம் வெறும் கதை அல்ல. ராஜா ராணி கதை அல்ல. அது ஒரு உபதேசம். மனிதர்கள் அவசியம் அறிந்துகொள்ள வேண்டிய பாடம். சனாதன தர்மம், தர்மத்தை வெறும் வாக்கியங்களாக சொல்கின்ற வேத விஷயங்களாகக் கொண்டிருக்கிறது என்றாலும், அதை வேறு விஷயங்களை ஒரு மனிதருடைய கதையாக, ஒரு வாழ்க்கை வரலாறாக ஏற்றிச் சொல்கிறபோது அந்த தர்ம விஷயங்கள் இன்னும் தெளிவாக புரிகின்றன.

பாகுகன் என்கிற நளன் குதிரை லாயத்தில் அமர்ந்தபடி தன் மனைவியை நினைத்து சிறிய ஸ்லோகமாக பாடிக் கொண்டிருந்தான். புவி முழுவதும் சுற்றினாலும், வேறு எந்த இடத்தில் வசித்தாலும், எப்படி இருந்தாலும் அவர் மனம் மனைவியையே நினைத்து வாடிக் கொண்டிருக்கிறது. பாடிக் கொண்டிருக்கிறது. பிரதிக்ஞையை மீறினான். ஆனாலும் அது அவள் நல்லதுக்குத்தான். என்னோடு வந்து சொல்லொணா கஷ்டங்களை அனுபவிப்பதைவிட வேறு எவரோ நல்லவரிடம் அடைக்கலம் கேட்டு அமைதியாக இருப்பாள். எனக்காக காத்திருப்பாள். அனுபவம் ஏதுமற்ற அந்தப் பெண்ணுக்கு இந்த துக்கங்கள் நல்ல அனுபவம்.

அந்தப் பாட்டு திரௌபதியையும், பீமனையும், தருமரையும், நகுல, சகாதேவர்களையும் உலுக்கிற்று. தமயந்தியின் துக்கத்தில் அவர்களும் ஒருவராக பங்கேற்று கொண்டார்கள். ஒரு நல்ல கதையினுடைய, படைப்பினுடைய காரியம் அதுவே. படிப்பவரை, கேட்பவரை தன்னுள்ளே இழுத்து அவர்களுக்கு அந்தக் கதையில் ஒரு அடையாளம் கொடுத்துவிட்டு, ஒரு அனுவத்தை ஏற்படுத்துவது. கதையினுடைய துக்கமோ, சோகமோ நிஜ வாழ்க்கையில் ஏற்படும்போது இன்னும் நிதானம் தோன்றும். அந்த நிதானம் மிகப் பெரிய கம்பீரம்.

குண்டினபுரத்தைத் தலைநகராகக் கொண்ட விதர்ப தேசத்து மகாராஜா தன்னுடைய மகளான தமயந்தியைத் தேட நாலாபக்கமும் அந்தணர்களை அனுப்பினார். நல்லவர்களும், பிரயாணம் செய்வதில் வல்லவர்களுமான அந்தணர்கள் தங்கள் பிரயாணத்தின் பொருட்டில்லாமல் அரசனுடைய கட்டளைக்கேற்ப பிரயாணத்தினூடே தமயந்தியைத் தேடுதலையும் ஒரு வேலையாக வைத்துக் கொண்டார்கள். எந்த தேசம் போனாலும் தமயந்தியைப் பற்றி விசாரித்தார்கள்.

சுதேவன் என்கிற அந்தணர் இதுவே வேலையாகத் தேடத் துவங்கினார். அவர் சேதி நாட்டுக்கு வந்தார். அந்த அரண்மனையில் குறிப்பிட்ட தாதியைப் பற்றி மற்ற தாதிகள் பேசுவதைப் பார்த்து ஆச்சரியமடைந்தார். பொதுவாக வேலைக்காரர்கள் மற்ற வேலைக்காரர்களை புகழ்வதில்லை. ஆனால், இந்த இடத்தில் மட்டும் புகழ்ச்சி கூடுதலாக இருக்கிறது என்பது அவருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. சுதேவன் அரசனுடைய மாளிகைக்கு யாசகம் பெறுபவனாகப் போய் நோட்டமிட்டார். ஓய்வெடுக்க வேண்டுமென்று ஒரு இடத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டார். எந்த இடத்தில் பெண்கள் அமைதியாக நடமாடுகிறார்களோ அந்த இடத்தை தூங்குவதற்கென்று தேர்ந்தெடுக்க அந்த இடத்தில் வேலைக்காரியாக தமயந்தி நடமாடுவதை தெரிந்து கொண்டார். தமயந்தியினுடைய நெற்றியில் அழிக்க முடியாததான ஒரு அழகான திலகம் இருந்தது. அதுதான் தமயந்தி என்ற தெளிவை சுதேவனுக்கு ஏற்படுத்தியது. சுதேவன் கை கூப்பினார்.

(தொடரும்)

மகாபாரதம்

52

அந்தப் பெண் என்னைப் பழிவாங்குகிறாளா?

தமயந்தியை அடையாளம் தெரிந்துகொண்ட சுதேவன், அவளிடம் "நள மகாராஜாவின் மனைவி தமயந்திக்கு என் நமஸ்காரம். நான் விதர்ப தேசத்திலிருந்து வருகிறேன். என் பெயர் சுதேவன். உங்கள் தேசத்தில் உங்கள் தாயாரும், உங்கள் சகோதரரும் மற்ற உறவினர்களும், உங்கள் குழந்தைகளும் சௌக்கியமாக இருக்கிறார்கள்" என்று மெல்லிய குரலில் பேசத் துவங்கினார்.

தமயந்தி நடுங்கினாள். தூணைப் பிடித்துக் கொண்டு நின்றாள். பிறகு கீழே உட்கார்ந்து, "தயவு செய்து விதர்ப தேசத்தைப் பற்றி சொல்லுங்கள்," என்று கேட்க, அவளுக்கு சற்று தொலைவில் அமர்ந்து, தான் விதர்ப தேசத்திலிருந்து அவளை தேடுவதற்காகவே வந்ததையும், அவளை கண்டுபிடித்த விதத்தையும் அவர் விவரித்து சொன்னார். "இத்தனை வேலைக்காரர்களில் உங்கள் திலகமே உங்களை அடையாளம் காட்டியது," என்றார்.

அவர்கள் இருவரும் பேசுவதை கவனித்த மற்ற வேலைக்காரர்கள் அதை ராஜமாதாவிடம் போய்ச் சொன்னார்கள்.

சேதி நாட்டு அரசனின் தாயான ராஜமாதா அந்த இடத்திற்கு விரைந்து வந்து அந்த அந்தணனை நமஸ்கரித்தாள்.

"யார் நீங்கள், எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்? இந்தப் பெண்மணியைப் பற்றி என்ன தெரியும்? எதற்கு உங்களை கண்டதும் இவள் அழுகிறாள்? நீங்கள் சொன்ன செய்தி என்ன? நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்" என்று கேட்டாள்.

சுதேவன், தமயந்தி பெயரையும், நளனுடைய பெயரையும் உச்சரித்த மாத்திரத்திலேயே ராஜமாதா கைகூப்பி தமயந்தியை வணங்கினாள். அவளை இறுக அணைத்துக் கொண்டாள். அவளுடைய நெற்றியில் உள்ள அழுக்கை துடைத்து அதிலுள்ள திலகத்தை உற்றுப் பார்த்தாள். ஆரத்தழுவியபடி, "தமயந்தி, நீ என்னுடைய சகோதரியின் மகள். நான் உனக்கு சித்தி முறை. நீ என்னிடம் வந்து சேர்ந்ததும், என்னோடு இருந்ததும் எனக்கு சந்தோஷமளிக்கிறது. உன்னுடைய கட்டளைப்படி உனக்கு எந்த துன்பமும் நேராது. உன்னை நான் பாதுகாத்து வந்தேன் என்பது எனக்கு திருப்தியை தருகிறது. இனி நிச்சயம் உன்னுடைய கஷ்டங்கள் தீரப்போகின்றன. அதற்குண்டான சமிக்ஞையாகத்தான் இந்த அந்தணனுடைய வருகையை நான் பார்க்கிறேன். எங்கோ உன் புருஷன் நன்றாக இருந்துகொண்டு நீ சுகமாக வாழவேண்டும் என்று விருப்பப்பட்டதால்தான் இந்த இடத்திற்கு நீ வந்து இருக்கிறாய். நீ அருகே இல்லாது போனாலும் உன் புருஷன் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய மனம் உன்னை காத்துக் கொண்டிருக்கிறது. அவனுடைய மனம்தான் இந்த அந்தணனையும் இங்கு அனுப்பி வைத்திருக்கிறது. ஒருவேளை தவறாக இங்கே எவரேனும் நடந்திருந்தால் அவர்கள் சார்பாக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்று சொல்லி அழுதாள்.

தமயந்தியும் சித்தியை ஆரத்தழுவிக் கொண்டாள். "நான் விதர்ப தேசம் போக வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று அமைதியாக கேட்டாள்.

சேதி நாட்டு அரசன் உடனடியாக ஒரு பல்லக்கை ஏற்பாடு செய்து, நிறைய குதிரைகளுடைய ஒரு பட்டாளம் புடைசூழ தமயந்தியை விதர்ப தேசம் அனுப்பிவைத்தான். பல காடுகளையும், மலைகளையும், ஆறுகளையும் தாண்டி அவர்கள் விதர்ப தேசம் போய் இறங்கினார்கள். குழந்தைகளை தழுவிக்கொண்டும், சகோதரனை குசலம் விசாரித்தும், தாயோடும் மற்ற உறவுகளோடும் கைபிடித்து கொண்டாடியும், துக்கமும், அழுகையும், சந்தோஷமுமாக தமயந்தி வலம் வந்தாள்.

பிரிந்தவர் கூடுதல் என்பது எவ்வளவு பெரிய சந்தோஷம் ! ஆனால், அவள் சந்தோஷம் முழுமையானதல்ல. மறுநாள் காலையில் எழுந்ததும், 'என் புருஷனை தேடுவதற்குண்டான ஏற்பாடுகளை உடனடியாக செய்யுங்கள்,' என்று தன் தந்தையான விதர்ப தேச அரசனிடம் சொல்ல, உடனே பரபரப்பு தொற்றிக்கொண்டது.

பல ஊர்களுக்கு செல்லும் வியாபாரிகளையும், அந்தணர்களையும், வீரர்களையும் விதர்ப ராஜா பீமன், ஒன்று திரட்டினார். அவர்களுக்கு நடுவே தமயந்தியை பேச வைத்தார்: "நான் சொல்கிற கதையை கேட்டு யார் பெருமூச்சு விடுகிறார்களோ, யார் பதில் சொல்கிறாரோ



அவரே நளன் என்பதை புரிந்து கொள்ளுங்கள். வேறு எவருக்கும் நான் சொல்கிற இந்த விஷயம் புரியாது.”

அவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

“நடுவனத்தில் மனைவியினுடைய பாதி உடையை அறுத்து எடுத்து உடுத்திக் கொண்டு அவளை நிராதரவாய் விட்டுப் போனீரே, அவள் செய்த குற்றம் என்ன? என்ன குற்றம் கண்டு அவளிடமிருந்து பிரிந்து போனீர்? உங்களையே உயிராக நினைத்து, உங்கள் துன்பங்களையெல்லாம் தீர்ப்பதற்காகவே உங்கள் பின்னால் ஓடிவந்த, சகலரையும் துறந்துவிட்டு வந்த அந்தப் பெண்ணை ஏன் வெறுத்துவிட்டு போனீர்? புருஷனில்லாத உலகத்தில் மனைவிக்கு என்ன வேலை? புருஷன் ஒரு நாள் திரும்பி வருவான் என்ற நினைப்போடு தனியே தகித்துக் கொண்டிருக்கிற ஒரு மனைவியினுடைய நிலையை நீங்கள் அறிவீர்களா? இரக்கமே உலகத்தில் மிகச் சிறந்த குணம் என்று அடிக்கடி சொல்வீர்களே, மனைவியின் மீது மட்டும் ஏன் இரக்கம் இல்லாமல் போயிற்று...?”

விதர்ப தேசத்திலிருந்து வெவ்வேறு தொழில் செய்பவர்கள் தமயந்தியினுடைய சோகத்தை உச்சரித்த வண்ணம், அந்த கேள்வியை கேட்ட வண்ணம் பல இடங்களுக்கு பிரயாணம் செய்தார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு பர்தவன் என்ற அந்தணன் விதர்பதேசம் வந்தான். தமயந்தியைசந்திக்கவேண்டுமென்றுசொன்னான். தமயந்தியும் ஆவலாக சபைக்கு வந்தாள்.

“நான் ருதுவர்னன் என்ற அரசனிடம் போய் நீங்கள் சொன்ன ஸ்லோகத்தைச் சொன்னேன். உங்களுடைய கேள்விகளைக் கேட்டு இதற்கு யாரேனும் பதில் வைத்திருந்தால் கூறுக என்று வினவினேன். அந்த சபை மௌனமாக இருந்தது. ருதுவர்னனும் அமைதியாக இருந்தான். சரி இந்த இடத்திற்கு நளன் வரவில்லை போலிருக்கிறது என்று நினைத்து அவன் மாளிகையை விட்டு வெளியே வரும்போது என் பின்னே ஒரு தேரோட்டி தொடர்ந்து வந்தான். அவன் கைகள் சிறியதாய் இருந்தன. கொஞ்சம் விகாரமானவனாய் இருந்தான். கருப்பாக இருந்தான்.

‘உங்கள் சோகத்திற்கு நான் மறுமொழி சொல்கிறேன்’ என்ற அவன், “உத்தமமான பெண்மணி கணவனுடைய குறைகளை பெரிதுபடுத்த மாட்டாள். அந்த குறைளுடே அவனை ஏற்றுக் கொள்வாள். மனைவியின் துயர் சகிக்க முடியாமல், தான் இருக்கும் இடத்தில் அவளுடைய துயர் மேலும் அதிகமாகும் என்று நினைவில் கொண்டு மனைவியை அந்த இடத்திலிருந்து பிரிய முடியாமல் கணவன் பிரிந்திருக்கிறானே தவிர வேறொன்றுமில்லை. அவள் மீது எந்த குறையும் இல்லை. அவளை தவிக்கவிட வேண்டுமென்ற எண்ணமும் இல்லை. தன்னோடு அவள் கஷ்டப்படக்கூடாது, அதற்கு அவள் தகுதியானவள் அல்ல, அதை அவள் தாங்கமாட்டாள் என்பதைக் கருத்தில் கொண்டே அவளை பிரிய நேர்ந்தது. எப்பொழுதும், எல்லா இரவுகளிலும் மனைவியையே காதலோடு நினைத்துக் கொண்டும், எப்போது அவளை சேர்வேன் என்று ஏங்கியும் அவள் கணவன் இருக்கக்கூடும்” என்று பாடினான்.

பாலகுமாரன்

“அவன்தான் நள மகராஜா என்று எனக்கு தெரிந்துவிட்டது. நான் அவரிடம் அதைச் சொல்லவில்லை. ஆனால், மிக மரியாதையாக வணங்கிவிட்டு, உடனே உங்களிடம் சொல்வதற்காக ஓடோடி வந்துவிட்டேன்,” என்று பணிவாகக் கூறினான்.

பர்தவன் என்ற அந்தணன் சொல்லச் சொல்ல தமயந்தி சந்தோஷமடைந்தாள். அழுதும், புலம்பியும், சிரித்தும் தன் ஆனந்தத்தை வெளிப்படுத்தினாள். அவளுடைய நிலைமை விவரணனைக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது. நாலாபுறமும் அலைந்தாள். திகைத்து நின்றாள். உட்கார்ந்தாள். எழுந்து நின்றாள். அந்த அந்தணனை நமஸ்கரித்தாள். கைவிரித்து மேற் கூரையை பார்த்தாள். “கடவுளே கடவுளே நன்றி” என்று சொன்னாள். “நலமாக இருக்கிறாரா, உரு மாறியிருக்கிறதா?” என்று ஆதூரத்துடன் வினவினாள். “என்ன அழகான பதில்! ஒரு நல்ல மனைவி கோபிக்கமாட்டாள் என்று திடமான சிந்தனை. அதுவல்லவா அழகு. நான் எப்படி அவரை கோபிக்க முடியும்? என்ன செய்தால் சந்திக்க முடியும் என்றுதானே இருக்கிறேன். என்னை அவர் விட்டுப் போனது நல்லதிற்கு என்று தெரிந்த பிறகு எப்படி கோபிக்க முடியும்? பிரிவால் துயரப்பட்டேனே தவிர, அவருடைய செய்கைக்காக வருத்தப்படவேயில்லை” என்று சொன்னாள்.

நளன் கதை கேட்டு திரௌபதிக்கு அழுகை நெஞ்சை முட்டியது. எப்பேர்ப்பட்ட பெண்மணி என்று கரம் குவித்தாள். நகுலனும், சகாதேவனும் பூமியை தமயந்தியின் உருவமாய் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டார்கள். பீமன் திகைத்துக் கிடந்தான். தருமபுத்திரர் மெல்லியதாய் புன்னகை செய்து ‘உத்தமமான மனிதர்களை அறிமுகப்படுத்துகிறீர்கள்’ என்று பிருகுதஸ்வ முனிவரை வணங்கினார்.

நளனைத் தேடி விவரம் சொன்ன பர்தவன் என்ற அந்தணரை தமயந்தி நமஸ்கரித்தாள். அவர் எதிர்ப்பார்த்ததற்கும் மேலாக பொன்னும், பொருளும் கொடுத்தாள். “பர்தவரே நளன் வந்ததும் இதற்கு மேலும் தரப்போகிறேன். இப்போது நளனை நீர் சந்தித்த விஷயத்தை வேறு எவரிடமும் சொல்லக் கூடாது. குறிப்பாய் அரசருக்கு சொல்லக் கூடாது. நீர் எங்கேனும் போய் இந்த பொருட்களை வைத்துக் கொண்டு ரகசியமாய் இருங்கள். நளன் வரும் நேரத்தில் என்னை தொடர்பு கொள்ளுங்கள்” என்று சொல்லி அனுப்பி வைத்தாள்.

தன்னுடைய தந்தையிடம் போய் தனக்கு இரண்டாவது திருமணம் நடைபெற வேண்டுமென்றும், அதற்கு ஒரு சுயம்வரம் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், குறிப்பிட்ட நாளில் புருஷன் வராவிட்டால் இன்னொரு திருமணத்தை ஒரு பெண் செய்து கொள்ளலாம் என்கிற

தர்மத்தை உத்தேசித்து அந்த சுயம்வரம் நடக்கிறது என்று விளக்கமும் சொல்ல வேண்டும். அந்த சுயம்வரத்திற்கு ருதுவர்னனை அழைக்க வேண்டும். ‘எங்கே இருக்கிறான் நளன்?’ என்று கேட்டால், ‘காணாமல் போனவர்’ என்ற நிலைக்கு போய்விட்டார் என்று சொல்ல வேண்டும்” என்று விளக்க,

பீமராஜன் திகைத்தான்.

தன் மகள் அவ்விதம் அல்லவே என்று நினைத்தான். ஆனால், மனைவி வற்புறுத்த வேறு ஏதோ சூட்சுமம் இதில் இருக்கிறது என்று புரிந்து கொண்டு சுயம்வரத்திற்கான ஏற்பாடுகளை செய்யத் துவங்கினான்.

ருதுவர்ன ராஜாவிற்கு சுயம்வர அழைப்பு போயிற்று. அரசன் வெகு விரைவில் விதர்ப தேசம் போக வேண்டுமென்பதால் அந்த விஷயத்தை நளன் என்கிற பாகுகனிடம் சொன்னான்.

“நிச்சயம் விரைவாகப் போய்விடலாம்” என்று அந்த குதிரையோட்டி வாக்கு கொடுத்தான். தனிமையில் போய் சோர்ந்து உட்கார்ந்தான். தமயந்திக்கா மறுபடியும் திருமணம், தமயந்திக்கா மறுபடியும் சுயம்வரம்! நான் அபலையாக விட்டுப் போனேன் என்பதால் அந்தப் பெண் என்னைப் பழிவாங்குகிறாளா? நான் விவேகம் அற்றவன் என்பதால் அவள் விபரீதமாக நடக்கிறாளா? நான் நிபந்தனையை காப்பாற்றவில்லை என்பதால் நிஷ்டுரமாகிவிட்டாளா? என் தமயந்தி அப்படி செய்யக் கூடியவள் இல்லையே... ஒருவேளை நான் வரவேண்டுமென்று அந்த சுயம்வரம் விரைவாக நடக்கிறதோ? ருதுவர்னன் விரைவாகப் போக வேண்டுமென்றுச் சொல்லி என்னைத்தான் கூப்பிடுவார் என்று தெரிந்து இந்த விஷயம் வேகமாக நடக்கிறதோ என்ற சந்தேகமும் பட்டான். அந்த அந்தணர் பர்தவன், விதர்ப தேசத்தவர் தானே...

அரசனை ஏற்றிக் கொண்டு மிக விரைவாக விதர்பதேசம் நோக்கி தேரை செலுத்தலானான்.

என்ன முடிவு என்ன முடிவு என்று திரௌபதியுடன் ஐந்து பேரும் பரபரத்தார்கள். நளனும், தமயந்தியும் சந்திக்கும் நேரம் வந்துவிட்டது என்று துள்ளி குதித்தார்கள். ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொண்டார்கள். அப்பா, நிம்மதி என்று ஒருவரை ஒருவர் தொட்டு சந்தோஷப்பட்டார்கள். உடன்பிறந்தாருக்கு நிம்மதி ஏற்பட்டதுபோல, தனக்கு தெரிந்தாருக்கு விடிமோட்சம் ஏற்பட்டது போல அவர்கள் குதூகலித்தார்கள். ஒரு நல்ல படைப்பின், ஒரு நல்ல கதையின் சுகம் அத்தகையது. அது சொந்த வாழ்க்கையைப் போல மாறிவிடுகிறது.

பிருகுதஸ்வர் சித்தார். “இன்னும் முடிவு வரவில்லை. வேறு சில விஷயங்கள் இருக்கின்றன” என்றதும் அவர்கள் அமைதியானார்கள். இன்னும் என்ன விஷயம் இருக்கிறது என்று வியந்தார்கள்.

வேகமாக போன தேரிலிருந்து ருதுவர்ன மன்னனுடைய உத்தரீயம் விழுந்துவிட்டது. “தயவு செய்து தேரை நிறுத்து. பாகுகா என் உத்தரீயம் விழுந்துவிட்டது,” என்றான்.

“நீங்கள் ஆரம்பித்து சொல்லி முடிப்பதற்குள் இந்த தேர் நாலு கோசம் தாண்டிவிட்டது. இனி உத்தரீயத்தை திரும்ப போய் எடுக்க முடியாது” என்று சொல்லி இன்னும் தேரை விரைவாகச் செலுத்தினான் பாகுகன். குதிரைகள், ஓடும் அழகு, நளன் குதிரையை செலுத்தும் நேர்த்தியைக் கண்டு ருதுவர்ன மன்னன் செயலற்று உட்கார்ந்திருந்தான். ஒரு தான்தோன்றி மரத்தின் நிழலில் தேர் ஒதுங்கிற்று. பாகுகனை பார்த்து ருதுவர்ன மன்னன் பேச ஆரம்பித்தான். “உலகத்தில் எல்லா விஷயத்திலும் ஒரு மனிதன் ஞானம் பெற்றுவிட முடியாது. நீ அற்புதமாக குதிரை ஓட்டுகிறாய். அவ்வளவுதான். இதைத் தவிரவும் பல விஷயங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு நான் கணக்கிலே வல்லவன். சூதிலே சிறந்தவன். இந்த தான்தோன்றி மரத்தில் இரண்டு கோடி இலைகள் இருக்கின்றன. கீழே விழுந்த காய்களையும், இலைகளையும் விட நூற்றியிரண்டு காய்கள், இலைகள் மரத்தின் மீது உள்ளன. இவற்றை வேண்டுமானால் நீ கணக்கிட்டு தெரிந்து கொள்ளலாம்.”

“இத்தனை காய்களை எப்படி எண்ணுவது? நீர் உத்தேசமாக சொல்கிறீர்.”

“இல்லை. நீ எண்ணி பார்த்துக் கொள்ளலாம்” தீர்மானமாக ருதுவர்னன் சொல்ல, அவன் ஆச்சரியப்பட்டான்.

“இந்த கிளையில் மட்டும் எத்தனை இலைகள் சொல்லுங்கள் பார்க்கலாம்” என்று ஒரு கிளையை பிடித்தான். அவர் சட்டென்று ஒரு எண்ணிக்கையை சொன்னார். அவன் கத்தி எடுத்து அந்த கிளையை வெட்டத் துவங்கினான். ஓரம் சேர்த்தான். “நீங்கள் வேண்டுமென்றால் இன்னொரு சாரதியை அமர்த்திக் கொண்டு விதர்ப தேசம் போங்கள். நான் இதை எண்ணி முடித்து விட்டு வருகிறேன்” என்றான்.

“உன் மீது நம்பிக்கை இருக்கிறது. என்னை விதர்ப தேசம் சரியான நேரத்தில் சேர்த்துவிடுவாய். நீ எண்ணி முடி” என்றார் மன்னர்.

அந்த கிளையின் காய்களையும், இலைகளையும் விரைவாக எண்ணினான். மிகச் சரியான எண்ணிக்கை! மன்னன் சொன்னதுபோலவே இருந்தது. அவன் ஆச்சரியமடைந்தான். “எனக்கு சூதாடும் கலையை கற்றுக் கொடுங்கள்” என்று கை கூப்பி கேட்டான்.

“எனக்கு குதிரையைப் பற்றி சொல்லிக் கொடு. நான் சூதாடும் கலையை, கணக்கை, வித்தையை கற்றுத் தருகிறேன்” என்று மன்னன் சொன்னான். அவர்கள் இருவரும் பரஸ்வரம் கற்றுக் கொடுப்பதாக கை கோர்த்துக் கொண்டார்கள். ஒரு சத்திய பிரதிக்ஞை செய்து கொண்டார்கள்.

சூதாடும் கலை நளனுக்கு தெரிந்துவிட்டது என்று தெரிந்ததும் கலி புருஷன் நளனுடைய உடம்பிலிருந்து வெளியே வந்தான். மிக மோசமாக விஷம் தாங்காது கக்கிக் கொண்டும், இருமிக் கொண்டும், தள்ளாடியும், தான்தோன்றி மரத்தின் மீது முட்டிக் கொண்டும் இருந்தான். நளனும், ருதுவர்ன மன்னனும் ஆச்சரியப்பட்டார்கள்.

“நான் கலி புருஷன். உன்னை பிடித்து இந்த மோசமான நிலைமைக்கு ஆளாக்கியது நான்தான். ஒரு காலத்தில் உன் மனைவி என்னை ஏளனம் செய்ததால் கோமடைந்து இந்த ஜென்மத்தில அவளுக்கு துன்பம் தர உன்னை பிடித்தேன். இந்திரனுடைய சபையில் அது நடந்தது. இப்போது கார்கோடனால் நான் சித்ரவதைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். உன் உடம்பில் விஷம்

ஏறாமல், உள்ளுக்குள் இருந்த என்னை தாக்கி அது சித்ரவதை செய்துவிட்டது. நீ பாம்பின்மீது காட்டிய அன்பால் நான் இந்த தொந்தரவை அனுபவித்து உன்னை தொந்தரவு செய்ய முடியவிலை.” கலி சுருண்டு மரத்தின் மீது சாய்ந்து கொண்டான்.

“இப்போது சூதாடும் கலை உனக்கு சொல்லித் தரப்படும். அப்படியானால் உன் சகோதரனை நீ அதில் வென்றுவிடுவாய். என்னுடைய அசிங்கமான ஆட்டங்கள் இனி செல்லுபடி ஆகாது. உன்னைவிட்டு விலகுகிறேன். என்னை மன்னித்துவிடு, என்னை சபித்துவிடாதே” என்று கலி கெஞ்சினான்.

கலியை வெட்ட வாள் ஓங்கிய நளன் அமைதியாக இருந்தான். “சரி, போ. தலையெழுத்துப்படி நீ நடந்தாய். என் தலையெழுத்து நான் அனுபவித்தேன். நீயும், நானும் சண்டையிட்டு என்ன பிரயோஜனம்” என்று சொன்னான். அதே இடத்தில் அந்த அன்பு தாங்காமல் கலி கரைந்து மறைந்தது. அன்றிலிருந்து தான்தோன்றிக்காய் கலி கரைந்து மறைந்த இடமாக, கலி தொட்ட காயாக எதற்கும் பயன்படாமல் இன்றுவரை இருக்கிறது.

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் கொடுத்த நம்பிக்கையின் பேரில், குதிரைகளை இன்னும் வேகமாக செலுத்தி சூரிய அஸ்தமனத்திற்கு முன்பு விதர்ப தேசத்திற்குள் ருதுவர்னன் நுழைந்துவிட்டான். அந்த இடத்தில் மாளிகையில் பெரிய பந்தல்கள் எதுவும் இல்லை. வரவேற்பு இல்லை....

பீமராஜா முன் வந்து வணங்கி வரவேற்றார்.

“சுயம்வரம் என்று சொன்னார்களே. ஏதும் விழாப் போல் இல்லையே” என்று கேட்க, “எல்லோரும் வருவார்கள். நீங்கள் உள்ளே வாருங்கள். ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்” என்று பீமராஜா உபசரித்தார்.

சந்தேகத்தோடே ருதுவர்னன் அரண்மனைக்குள் நுழைந்தான். ஓய்வு எடுத்துக் கொண்டான். பாகுகன் குதிரைகளை கொட்டகையில் சேர்த்துவிட்டு அவற்றைத் தழுவி கொஞ்சிவிட்டு, அதன் வேகத்தை பாராட்டிவிட்டு, அதற்கு வேண்டிய உணவுகளை கொடுத்துவிட்டு பிறகு மெல்ல தன்னுடைய இடத்திற்கு வந்து அமர்ந்தான். தமயந்தியினுடைய உருவமும், மனதும் அவனை வாட்டி வதைத்தன. ‘உனக்கா சுயம்வரம். உனக்கா இரண்டாவது திருமணம். என்னை எப்படி மறந்தாய் தமயந்தி?’ அவன் தனிமையில் புலம்பத் துவங்கினான்.

நளனுடைய தேர் உள்ளே நுழைந்ததும் அதன் வேகமும், சத்தமும் வித்தியாசமாகத் தெரிந்தன. நளன் ஓட்டும் தேர்தான் இப்படி சத்தம் கொடுக்கும் என தமயந்திக்கு தெளிவாகத் தெரிந்தது. ஆனால், நளனை பார்க்க முடியவில்லை. விடிந்ததும் அவள் உப்பரிகையின் மேலிருந்து பார்த்தபோது கீழே குதிரை லாயத்தில் யாரோ ஒருவர் முன்னும் பின்னும் நடப்பதை உணர்ந்தாள். அது நளனா என்று தெரியவில்லை. அவளுடைய நள மகாராஜா போல அந்த உருவம் இல்லை. துக்கப்பட்டு தமயந்தி கீழே இறங்கினாள்.

தன்னுடைய தோழியான கேசினியை அழைத்தாள். “போய் பார். நளன்தானா அது என்று விசாரி. நேரிடையாக விசாரிக்க முடியாவிட்டால் அங்கு அவர் நடவடிக்கைகளை கவனித்து எனக்குச் சொல். அங்கு அவர் நீர், நெருப்பு கேட்டாலும் கொடுக்காதே. மறுத்துவிடு” என்று கட்டளையிட்டாள்.

விருந்தினராக வந்த அதிதிக்கு நீரும், நெருப்பும் கொடுக்காதிருப்பது எங்ஙனம் என்று யோசித்தவாறே கேசினி குதிரை லாயம் போனாள். குதிரை லாயத்திற்கு வெளியே பானைகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த பானைகள் காலியாக இருந்தன.

நளன் அதைப் பார்த்ததும் அதில் தளும்ப தளும்ப நீர் தோன்றியது. குதிரைகளுக்கு உணவிடுவதற்காக ஒரு பெரிய பானையில் தானியத்தை கொட்டி உப்பிட்டு விடியற்காலை சூரிய நேரத்தில் அந்த கைப்பிடி புல்லை சூரியனை நோக்கி காட்டியதும் அந்த கைப்பிடி புல் சட்டென பற்றிக் கொண்டது. அதை எடுத்து அடுப்பில் போட்டு மரக்கட்டைகளை சொருகியதும் தீ தகதகவென்று எரிந்தது. எல்லா அடுப்புகளிலும் அப்படி சூரியனிடமிருந்தே நெருப்பு எடுத்து நளன் ஏற்றினான். பிறகு உப்பு சேர்த்தான். உலை கொதித்து தானியங்களை வெந்ததும் கிழங்குகளை காய்கறிகளை சேர்த்தான். அவற்றைக் கலந்து எடுத்து ஆற்றி பெரிய பாத்திரங்களில் எடுத்து குதிரைகளுக்கு உண்ணக் கொடுத்தான்.

கேசினி ஆச்சரியப்பட்டாள். ஓடிச்சென்று தமயந்தியிடம் சொன்னாள். அதுதான் நளன் என்ற தீர்மானம் தமயந்திக்கு ஏற்பட்டது. அது நளன்தான் சந்தேகமே இல்லை. ஆனால் குட்டையான கைகளும், கருப்பு உடம்புமாய் இருக்கிறவர் எப்படி என் மகாராஜா ஆவார் என்று தமயந்தி சந்தேகித்தாள். “கேசினி, அவர் தமக்கென்று சமைத்த உணவை அவர் அறியாமல் எடுத்து வா. அந்த சமையல் ருசியை பார்த்ததும் சமைத்தது நளன்தான் என்று நான் புரிந்து கொள்வேன். அவரைவிட அற்புதமாக சமைக்க இந்த உலகத்தில் வேறு யாரும் இல்லை” என்று சொன்னாள்.

நளன் குதிரைகளுக்கு தானியம் வேகவைத்தது போக, தனக்கென்று சமைத்து வைத்ததை கேசினி ரகசியமாய் அந்த உணவை எடுத்துக் கொண்டு வந்து தமயந்தியிடம் கொடுத்தாள். தமயந்தி உண்டுவிட்டு அது நளன்தான் என்பதை முற்றிலுமாய் புரிந்து கொண்டாள். தமயந்தி கேசினியிடம் குழந்தைகளை கொடுத்தாள். கொண்டு போய் நளன் யதேச்சையாக பார்க்கும்படி ஏற்பாடு செய்தாள்.

குதிரைகளை வேடிக்கை காண்பிப்பது போல கேசினி அந்த இரண்டு குழந்தைகளையும் குதிரை லாயத்திற்கு அழைத்துப் போக, உட்கார்ந்து கொண்டிருந்த நளனிடம் குழந்தைகள் ஓடிப்போய் நின்று கொண்டன. இடுப்பில் கை வைத்து வியப்போடு பார்த்தன. தன் குழந்தைகளை கண்டதும் நளன் உருகினான். துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் பெருகின. இரண்டு கைகளையும் விரித்து குழந்தைகளை அழைத்தான். எதனாலேயோ சிறிய கைகளும், கருப்பாகவும் இருந்த அந்த மெல்லிய விகாரமாக இருந்த அவனிடம் குழந்தைகள் ஓடிப்போய் ஒட்டிக் கொண்டன. இழுத்து அவர்களை மார்போடு தழுவிக் கொண்டான். முத்தமிட்டான். தலையை வருடினான். கன்னத்தோடு கன்னம்

இழைத்தான்.

அரசர் வீட்டு குழந்தைகளை அப்படி எந்த வேலைக்காரர்களும் கொஞ்ச மாட்டார்கள். ஒரு சாரதி நிச்சயமாக விலகி இருப்பானே தவிர இந்த உன்மத்தமான அன்பை காட்டமாட்டான். கேசினிக்கு கண்களில் நீர் வழிந்தது. நள மகாராஜாவே தான் தன் குழந்தைகளை கொஞ்சுகிறார் என்பது அவளுக்கும் புரிந்தது. தமயந்தியிடம் ஓடிப்போய் இந்தச் செய்தியை சொல்ல, தமயந்தி முகத்தை பொத்திக் கொண்டு அழுதாள்.

“கதையை முடியுங்களய்யா” நகுல சகாதேவர் கதறினார்கள்.

“இது முடிந்த கதைதான். ஆனால், முடியாத உணர்வு. அந்த உணர்வு பெருக்கு எந்த காலமும் நிற்கும். எப்போதும் நிற்கும். அது தொடர்ந்து பல வருடங்களாக வந்துகொண்டுதான் இருக்கும். இப்பொழுது என் குழந்தைகளை கண்டால் நான் அணைத்துக் கொண்டு கண்ணீர் விடமாட்டேனா? திரௌபதியின் ஐந்து குழந்தைகளையும் கண்டால் நான் பரமானந்தப்படமாட்டனோ? அப்படித்தானே நள மகாராஜா பட்டிருக்கிறார்!” என்று இரண்டு கைகளையும் விரித்தபடி விம்மலோடு யுதிஷ்டர் சொன்னார்.

மிகப் பெரிய பக்குவமுடைய, எதற்கும் மனம் கலங்காத யுதிஷ்டரே மனம் கலங்கி கண்கள் கலங்கி நிற்பதை பார்த்து மற்றவர்கள் வியந்தார்கள்.

சுயம்வரத்திற்கான முகூர்த்தம் நெருங்கிற்று. ஆனால், அந்தண கோஷங்கள்கூட இல்லாது அரண்மனை அமைதியாக இருப்பதை பார்த்து ருதுபர்னன் வியந்தான். வேறு ஏதோ ஒரு விஷயம் இங்கு நடைபெறப்போகிறது. அதன் காரணமாகவே என்னை அழைத்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டான்.

இந்த பாகுகன் சாதாரண ஆள் இல்லை. அவனிடமிருந்து ஏதோ கெட்டது விலகிப் போயிற்று. கெட்ட விஷயம் நகர்ந்தது. ஏதோ ஒரு விஷயம் பீடித்திருந்தது. சூது கற்றுக் கொள்கிறேன் என்று சொன்னதும் ஓடிப்போயிற்று. நான் அவனுக்கு கற்றுத் தருவேன் என்றதும் நகர்ந்துவிட்டது. அப்படியானால் இது பாகுகனாக இருக்க முடியாது. நள மகாராஜாவாகத்தான் இருக்க முடியும். அவருக்குத்தான் அத்தகைய துன்பம் ஏற்பட்டது. என்ன நடக்கிறது என்று பார்ப்போம். இதுவரை ஏதும் அவமரியாதை செய்துவிட்டோமா என்று யோசிப்போம் என்று தனியே உட்கார்ந்து சிந்திக்கலானான்.

தமயந்தி தன் தாயிடம் ஓடினாள். “நள மகாராஜா கீழே வந்திருக்கிறார். என் புருஷன் சாரதியாக வேடமிட்டிருக்கிறார். அவர் இங்கு வந்திருப்பது எனக்கு தெள்ளத் தெளிவாக தெரிந்துவிட்டது. அவரை அரண்மனைக்குள் அழைக்கப் போகிறேன். நீ தயவு செய்து இந்த விஷயத்தை தந்தையிடம் சொல்லிவிடு. நீயும் கூடயிரு” என்று சொன்னாள்.

பீம மகாராஜா மகளின் கதைகளை கேட்டு நளனுடைய வருகைக்கு சம்மதித்தான். நளன் அரண்மனைக்குள் படியேறி வந்தான். அவனைக் கண்டதும் முகம் பொத்திக் கொண்டு சுவரில் சாய்ந்து கொண்டு தமயந்தி அலறினாள். “அக்னியை சுற்றி வலம் வந்து நான் உன் பின்னால் வருவேன். எந்த நேரத்திலும் உன்னை காப்பாற்றுவேன். உன்னை விட்டு ஒரு காலும் பிரியேன் என்று சத்தியம் செய்தீர்களே, என்னை விட்டு ஏன் பிரிந்தீர்கள். நான் செய்த குற்றம் என்ன? நடு வனத்திலே பாதி உடையை அபகரித்து போனீர்களே. அந்தப் பெண்மணி என்ன பாடுபடுவாள் என்று இரக்கமுள்ள நீங்கள் சிந்தித்திருக்க வேண்டாமா? புருஷன் இல்லாமல் பாதி உடையோடும், புருஷனை தேடி அலைகின்ற பெண்மணிக்கு எத்தனை அவமானங்கள், துன்பங்கள் நேரும் என்பது ஒரு புருஷனுக்கு தெரியாதா? அதை உணரமாட்டானா, பெண்களுடைய வேதனை என்ன என்பதை புருஷர்கள் ஒருகாலும் தெரிந்து கொள்ளமாட்டார்களா? அவளை வேண்டுமென்றபோது சேர்த்துக் கொள்வது, வேண்டாமென்கிறபோது விட்டுவிடுவது எந்த விதத்தில் நியாயம்? எது பௌருஷம்” என்று சீறலோடும், கோபத்தோடும், அழுகையோடும் பேசினாள்.

தமயந்தியின் அழுகை பாகுகன் என்ற நள மகாராஜாவை தைத்தது. “தேவி, நான் நளன்தான். உருவம் மாற்றப்பட்டிருக்கிறது. தேவி, நான் உன்னை விட்டுப் போகவில்லை. உன்னைவிடச் சொன்னது கலியினுடைய வேதனை. உனக்கும் எனக்கும் பிரிவு ஏற்படுத்தியது கலி என்கிற அந்த மோசமான விஷயத்தினுடைய காரியம். உன்னை பிரியமுடியாமல்தான் நான் தவித்தேன். கலி என்னை விலக்கி எடுத்துக் கொண்டு போனான். மறுபடி வந்து நான் உன்னைப் பார்த்து அழுதேன். ஆனால், நீ இருந்தால் அதிகம் துன்பப்படுவாய் என்று கலி என்னை ஏமாற்றி உன்னை விட்டு அழைத்துப் போனான்.

நீ துன்பப்படுவாய் என்று எனக்குத் தெரியும். உன்னை யாரேனும் நல்லவர்கள் காப்பாற்றுவார்கள் என்பதை அறிவேன். உன்னைப் போன்ற பெண்களை, ஸ்திரீகளை நல்லவர்கள் இடைவிடாது போஷித்திருப்பார்கள் என்பதை நான் அறிவேன். நான் வணங்கும் தேவதைகளும், உன்னுடைய கற்பும் உன்னை காப்பாற்றும் என்பதை எனக்கு புரிந்தே இருந்தது. எனவே, உன்னைப் பற்றிய கவலைகள் எனக்கு எழுந்தாலும் அதைப் பற்றி நான் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருந்தேன். கலி என்னை கண்ட இடத்திற்கு இழுத்துப் போயிற்று. அதை நீ பார்க்காமல் இருந்ததே நல்லது. நான் கோரமாக உருமாறியிருந்ததை பார்த்திருந்தால் நெஞ்சு வெடித்து இறந்திருப்பாய்” என்று சொல்ல, தமயந்தி அமைதியானாள்.

(தொடரும்)

மகாபாரதம்

53

தமயந்தியே சூதாட்டத்தில் பணயப் பொருள்!

நளனைத் தொடுவதற்கு தமயந்தி அருகே வந்தாள். சற்று விலகி நளன் கார்கோடன் கொடுத்த இரண்டு துணிகளையும் உடுத்திக் கொண்டு பழைய துணியை கழற்றிப் போட, அவனுடைய பாகுகன் உருவம் மறைந்து வலிமையும், பலமும், பௌருஷமும், அழகும் மிக்க நள உருவம் அவளுக்குத் தோன்றியது. விரித்த அவனுடைய கைகளுக்குள் தமயந்தி அடைக்கலமானாள். தமயந்தியை நளன் இறுக தழுவிக் கொண்டான். நெற்றியிலும், கன்னத்திலும், உதட்டிலும் முத்தமிட்டான். இன்னும் இன்னும் இறுக அவள் அணைத்துக் கொள்ள, போதாது போதாது என்று அவன் திமிறி இறுக்கிக் கொண்டான். மற்றவர்கள் மெல்ல விடை பெற்றார்கள்.

பாண்டவர்கள் நான்கு பேருக்கும், திரௌபதிக்கும் கண்களில் நீர் சுரந்தது. சிரிப்பும், அழுகையுமாக அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். தமயந்தியும், நளனும் சேர்ந்துவிட்டது அவர்களுக்கு சந்தோஷமான சிரிப்பைத் தந்தது. அதேசமயம் மிகுந்த வருத்தத்தையும், வேதனையையும் தந்தது. அழுகையை ஏற்படுத்தியது. அந்த அழுகை, இத்தனை கஷ்டங்களை இவர்கள் அனுபவித்திருக்க வேண்டுமா என்ற எண்ணத்தில் ஏற்பட்டது. கஷ்டம் முடிந்து விடிவுகாலம் ஏற்படுகையில் நடந்துபோன கஷ்டங்களெல்லாம் நினைவுக்கு வரத்தானே செய்யும்!

நளனும், தமயந்தியும் மட்டும் அல்லாமல் கதை கேட்ட அந்த ஐந்து பேரும் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை நினைவுபடுத்திக் கொண்டார்கள். தமயந்தி பின் தொடர்ந்து ஓடியதும், இரண்டு பேரும் ஒரே துணியைக் கட்டிக் கொண்டு சுற்றியதும், அயர்ந்து தூங்கும்போது அரைத் துணியை அறுத்து எடுத்துப் போனதும் நளமகாராஜா அந்த அரைத் துணியோடு சுற்றியதும், தமயந்தி வனத்தில் வியாபாரிகளோடு நளனைத் தேடிப் போனதும், காட்டு யானைகள் மிதித்து வியாபாரிகளை தொல்லை கொடுக்க, வியாபாரிகள் இந்தப் பெண்ணால்தான் இதெல்லாம் ஏற்பட்டது என்று அவளைத் தனியே விட்டதும், நளன் தீயில் புகுந்து கார்கோடனை காப்பாற்றியதும், கார்கோடன் பத்து அடி நடந்த பிறகு நளனை கொத்தியதும், விஷம் ஏறி உடம்பு, முகம் எல்லாம் மாறியதும் அவர்களுக்கு ஞாபகம் வந்தது. அரைத் துணியோடு பித்து பிடித்தது போல தெருத் தெருவாக நளனைத் தேடி சேதிராஜன் நகரில் தமயந்தி அலைந்தது நினைவுக்கு வந்தது. இதைவிட மோசமான நிலைமை தங்களுக்கு வரவில்லை என்ற ஆறுதலும், நிம்மதியும் ஏற்பட்டது.

நளனும், தமயந்தியும் சுயம்வர தினத்தன்று ஒருவரையொருவர் அருகே நெருங்கிய வண்ணம் பரஸ்பரம் பழங் கதைகளை பேசி விவரித்துக் கொண்டிருந்தார்கள். ருதுவர்ன மகாராஜா சகலமும் கேள்விப்பட்டு, நல்லது. நான் என்ன நினைத்தேனோ அது நடந்திருக்கிறது. அவர் நளன்தான். அவரை நான் தவறாக நடத்தியிருக்கக் கூடாது. அது தான் கவலையாக இருக்கிறது. அப்படி ஏதும் நடத்தியிருந்தால் மன்னிப்பு கேட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்தில் இருந்தான்.

இரவு முழுவதும் நளனும், தமயந்தியும் சுகித்திருந்தார்கள். விடியலில் ஸ்நானம் செய்து, நல்ல ஆடைகள் உடுத்தி, மலர் மாலைகள் பூண்டு பீமராஜாவின் எதிரில் வந்து நின்றார்கள். பீமராஜா ஆசீர்வதித்தார்.

“அப்பா, நல்லபடியாக கதை முடிந்தது.” அதைக் கேட்ட திரௌபதி அவசரப்பட்டு பேசினாள்.

“இல்லை, இன்னும் கதை முடியவில்லை,” என்று பிருகுதஸ்வர் சொல்ல, எழுந்திருக்க முயற்சித்த எல்லோரும் அமர்ந்தார்கள். என்ன என்று கேட்டார்கள்.

“சகோதரன் சூதாடி ஜெயித்தானே அதை மீண்டும் பெற வேண்டாமா” என்று கேட்க, “ஆமாம் ஆமாம். அது எப்படி நடந்தது” என்று ஆவலோடு உட்கார்ந்தார்கள்.

”பல நாட்கள் விதர்ப தேசத்தில் மாமனார் அரவணைப்பில், மனைவி கொடுத்த சந்தோஷத்தில் பூரிப்படைந்து நளமகாராஜா வீற்றிருக்க, ஒரு நல்லநாள் பார்த்து தன்னுடைய தேசம் நோக்கி கிளம்பினார். அவர் தேரைச் சுற்றி யானைப் படைகளும், குதிரைப் படைகளும் உடன் போயின. ஒருவேளை யுத்தம் என்று ஏதேனும் நடந்தால் அதற்கும் தயாராக இருக்க வேண்டுமென்று விதர்ப தேசத்து படைகள் பின் தொடர்ந்தன.

புஷ்கரன் நளன் திரும்பி வருகிறான்

என்று கேள்விப்பட்டு பயந்து நடுங்கினான். ஆனாலும், பயத்தை அடக்கிக் கொண்டு வரவேற்றான். நியாயமான விதத்தில்தானே ஜெயித்தேன் என்று நினைத்துக் கொண்டான். சூது சரியாகத்தானே நடந்தது. அதில் தோற்றுத்தானே போனீர் என்று பதில் சொல்ல நினைத்துக்கொண்டான். இப்பொழுது மறுபடியும் நளன் வந்திருக்கிறான் என்றால் என்ன செய்வது? சூதாட வேண்டுமென்றால் சூதாடலாம். நளனுக்கு சூது தெரியாது என்ற நினைப்பில் இருந்தான்.

பாலகுமாரன்

ஒப்புக் கொண்டபடி நளமகாராஜாவும், ருதுவர்னனும் ஒரு நல்ல நேரம் பார்த்து தங்களுடைய வித்தைகளை பரிமாறிக் கொண்டார்கள். அடிப்படையான விஷயங்களை விவரித்து தெரிந்து கொண்டார்கள். சூதுனுடைய அத்தனை சூட்சமும் நளனுக்கு சொல்லித் தரப்பட்டது. குதிரையினுடைய அத்தனை வித்தையும் ருதுவர்ன மகாராஜா நளனிடமிருந்து கற்றார். ருதுவர்ன மகாராஜா தானே குதிரையைச் செலுத்தி தன்னுடைய தேசத்திற்கு திரும்பப் போனார். சூது முற்றிலும் தெரிந்த நளன் புஷ்கரன் எதிரே சிரிப்போடு நின்றிருந்தான்.

சூதாடித் தோற்றவன் மறுபடியும் சூதாட அழைத்தால் ஜெயித்தவன் மறுபடியும் வர வேண்டும் என்பது சூதாட்ட தர்மங்களில் ஒன்று. உன்னிடம் சூதாட்டத்தில் நான் தோற்றது உண்மை. இப்போது நான் அழைக்கிறேன். நீ வரத்தான் வேண்டும். நீ அழைத்தபோது நான் வந்தேன். அதே மரியாதையை நீ தரத்தான் வேண்டும். சூது உனக்கு பிடித்தமான விஷயமாக இருக்கலாம். ஆனால், அந்த வித்தை எனக்கும் தெரியாது. காய்களை கொண்டு வா. பாயை விரி என்று சொல்ல, சூது பாய் விரிக்கப்பட்டது.

“இனி என்ன இருக்கிறது உன்னிடம் என்று இப்போது சூதாட வந்திருக்கிறாய்” புஷ்கரன் கேட்டான். “நளனே உனக்குப் பணயமாக என்ன வேண்டும்?” என்று வினவினான்.

“உன்னுடைய ராஜ்ஜியம், சொத்துக்களோடு உன் உயிரும் பணயமாக வேண்டும் புஷ்கரா.”

“ஆஹா! அவ்வளவுதானே, தந்தேன். என்னுடைய ராஜ்ஜியம், என்னுடைய மக்கள், படைகள் அனைத்தும் என் உயிரோடு சேர்த்து உனக்கு தர சித்தமாக இருக்கிறேன். இதுதான் என்னுடைய பந்தயப் பணயம். உன்னிடம் என்ன இருக்கிறது? நீ என்ன வைப்பாய், நள மகாராஜா? உன்னிடம் இப்போது இருப்பது உன்னுடைய தமயந்திதானே. அந்தப் பேரழகிதானே. அந்த பேரழகி எனக்கு சேவை செய்யட்டும். இந்திராணி சபையில் நடன மாதர்கள் செய்த அதே சேவையை என்னிடம் செய்யட்டும். வெகுநாளாக தமயந்தியின் மீது எனக்கு ஒரு ஆசை உண்டு. சகோதரனுடைய மனைவியாயிற்றே என்று நான் அமைதியாக இருந்தேன். ஆனால், நீயோ வலிய வம்புக்கு வரும்போது, உனக்கு சூதாடுவதற்கென்று எந்த பொருளும் இல்லாதபோது, தமயந்தியை தவிர வேறு எதுவும் இல்லை என்கிற போது, அந்த தமயந்தியை நான் அடைய இறைவன் சித்தம் செய்து விட்டான் என்று தோன்றுகிறது. உன்னிடமிருக்கும் அந்த ஒரே பொருளையும் நான் கவர்ந்து நன்றாக அனுபவிக்க ஆசைப்படுகிறேன்.”

“ஒரே ஆட்டம். ஒரே பணயம். என் பக்கம் தமயந்தி. உன் பக்கம் உன்னுடைய உயிர், ராஜ்ஜியம், செல்வம் அனைத்தும்” என்று நளன் சொல்ல, அவன் சம்மதித்தான்.

காய்கள் உருட்டப்பட்டன. வித்தை அறிந்த நளமகாராஜா வெற்றி பெற்றார். அவருடைய சகோதரன் புஷ்கரன் தோற்றுப் போனான். எழுந்து கைகட்டி நின்றான்.

“நீ சொன்ன வார்த்தைகளுக்கு உன் நாக்கை அறுக்க வேண்டும். உன் கழுத்தை சீவ வேண்டும். உனக்கு மதனியாக இருக்க வேண்டிய, உன்னுடைய தாய்போல நீ கவனிக்க வேண்டிய பெண்ணைப் பற்றி தவறாகப் பேசினாய். உன்னைக் கொன்று போடுவதால் உனக்கு புத்தி வந்து விடாது. நீ அவமானப்பட்டு ஊருக்கு திரும்பிப் போய் உன்னுடைய ராஜ்ஜியத்தில் குடிமக்களால் கேலி பேசப்பட வேண்டும். யார் சிரித்தாலும் உனக்கு இதைக் கண்டுதான் சிரிக்கிறார்களோ என்ற பயம் வர வேண்டும். போ. இனி வாழ்க்கை முழுவதும் உனக்கு அவமானம்தான். அது என்னால் வந்ததல்ல. உன்னால், உன் விளைவால் வந்தது. உனக்கு உயிர் பிச்சை தருகிறேன். நீ போ” என்று துரத்தினான்.

புஷ்கரன் தலைகுனிந்து வெளியேறினான். ஊர் அவனை தூற்றியது.

பாண்டவர்கள் கரகோஷம் செய்தார்கள். திரௌபதி வான் நோக்கி கை கூப்பினாள்.

மந்திரிமார்களும், குருமார்களும் சபைக்கு ஓடிவந்து, ஐயா இப்போதுதான் உயிர் வந்தது என்று நளனை நமஸ்கரித்தார்கள். மூச்சு விடக்கூட பயமாக இருந்தது. இப்போது சுதந்திர காற்றை சுவாசிக்கிறோம் என்று சொன்னார்கள். பொதுமக்கள் ஓடி வந்தார்கள். சகலரையும் மகாராஜா அன்போடு நடத்தினார். பெயர் நினைவு வைத்துப் பிரியத்தோடு பார்த்து பேசினார். தனித்தனியே விசாரித்தார். நளனுடைய அமைதியையும், அன்பையும் கண்ட மக்கள் வியந்தார்கள். நம்முடைய பிரார்த்தனை

பலித்தது என்று கும்பிட்டார்கள். நளமகாராஜா அவர்களுக்கு நன்றி சொன்னார்.

தமயந்தியோடும், குழந்தைகளோடும், உற்றார் உறவினர்களோடும் வெகுகாலம் நிஷாத தேசத்தை கம்பீரமாக ஆண்டு வந்தார்.

ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு பலஸ்ருதி என்று உண்டு. இந்தக் கதையை படிப்பதினால் என்ன லாபம். இந்தக் கதையை கேட்பதால் என்ன லாபம். இந்த ஸ்லோகத்தை சொல்வதால் என்ன லாபம் என்று அந்த ஸ்லோகத்தின் கடைசியில் கதையின் முடிவில் சொல்லப்பட்டிருக்கும். அதுவே பல ஸ்ருதி.

நளனுடைய கதையை கேட்பவர் யாருக்கும் எந்தவித துக்கமும் வராது. அவர்கள் செல்வத்தில் திளைப்பார்கள். சந்தோஷத்தில் மிதப்பார்கள். நல்ல நண்பர்களோடு கூடுவார்கள். அன்பானவர்களாக இருப்பார்கள். பலரிடம் அன்பு பெறுவார்கள். உலகத்தில் எந்தத் துயரமும் இல்லாது அழகாக, அமைதியாக அனுபவிப்பார்கள். நளனுடைய துயரமான சரித்திரமானது மனிதருக்கு சொல்லப்பட, தனக்கு ஏற்பட்டது எதுவுமே துயரமில்லை என்று தெரிந்து விடும்.

துயரமில்லை என்று எப்போது ஒருவருக்கு தோன்றியதோ அப்போது அந்த இடத்திலிருந்து துயரத்தை தாண்ட முடியும் என்ற உறுதி ஏற்பட்டு விடும். எப்போது தாண்ட முடியும் என்ற உறுதி ஏற்படுகிறதோ அப்போது நம்பிக்கை அதிகரிக்கும். எப்போது நம்பிக்கை அதிகரிக்கிறதோ அப்போது மனதுக்குள் சந்தோஷம் குடிபுகுந்து கொள்ளும். எப்போது சந்தோஷம் குடிபுகுந்து கொள்கிறதோ அப்போது நடக்கின்ற துக்கம் துக்கமாகவே தோன்றாது என்று பிருகுதஸ்வர் சொல்லி முடிக்க, அவர்கள் எல்லோரும் கைகூப்பி நளனையும், தமயந்தியையும் மனதால் நமஸ்கரித்தார்கள்.

"மறுபடியும் சூதுக்கு அழைப்பார்களோ என்று கலக்கம் கொண்டிருக்கிறாய் யுதிஷ்டிரா. நான் சூதாடுவதினுடைய ரகசியத்தை சொல்லித் தருகிறேன். வெகு நிச்சயம் நீ ஜெயிப்பாய். அந்த விஷயம் உனக்குத் தெரிந்து விடும். எனவே, மறுபடியும் சூதாட அழைத்தால் கலக்கமின்றி போய்வா" என்று சொல்லி, அவருக்கு சூதாடும் கலையை சில விநாடிகளில் முனிவர் சொல்லிக் கொடுத்தார்.

> **துயரமில்லை என்று எப்போது ஒருவருக்கு தோன்றியதோ அப்போது அந்த இடத்திலிருந்து துயரத்தை தாண்ட முடியும் என்ற உறுதி ஏற்பட்டு விடும். எப்போது தாண்ட முடியும் என்ற உறுதி ஏற்படுகிறதோ அப்போது நம்பிக்கை அதிகரிக்கும். எப்போது நம்பிக்கை அதிகரிக்கிறதோ அப்போது மனதுக்குள் சந்தோஷம் குடிபுகுந்து கொள்ளும். எப்போது சந்தோஷம் குடிபுகுந்து கொள்கிறதோ அப்போது நடக்கின்ற துக்கம் துக்கமாகவே தோன்றாது**

அந்த விஷயம் யுதிஷ்டருக்குள்ளே புகுந்தது. அவருடைய ஒரே ஒரு கலக்கமும் அவரிடமிருந்து விடை பெற்றது. வனவாசத்தை அவரும், அவருடைய சகோதரர்களும் நிம்மதியாக அனுபவித்தார்கள். திரௌபதியும், அவர்கள் நிம்மதியில் கலந்து கொண்டாள். அவர்கள் எண்ணமெல்லாம் அர்ஜுனனைப் பற்றியே இருந்தது. அர்ஜுனன் மூச்சுக் காற்று மட்டுமே உண்டு தவம் செய்து கொண்டிருக்கிறான் என்று கேள்விப்பட்டு மனதுக்குள் சந்தோஷமடைந்தார்கள். பெரும் வெற்றியோடு வருவான் என்று நம்பினார்கள். அவனுக்காக உள்ளுக்குள் பிரார்த்தனை செய்யத் துவங்கினார்கள்.

அரசமரத்தின் கீழிருந்து பீமசேனன் தன்னுடைய ஆயுதங்களை சரிபார்த்துக் கொண்டிருந்தான். வில்லின் நாணை இன்னும் இழுத்துக் கட்டினான். கட்டிய சுற்று இறுகி இருக்கிறதா என்று தடவிப் பார்த்தான். நாணை இழுத்து டங்காரம் செய்தான். இலக்கில்லாது நாணை இழுத்து வில்லை வளைத்து பனிச்சென்று அனுப்பினான். வில்லை மரத்தில் சார்த்திவிட்டு அம்புகளின் கூர்மையை, அடிச்சிறகை அதன் உறுதியை பரிசோதித்தான். கதையை எடுத்து அதன் தலைபாகத்தை உள்ளங்கையில் தாங்கினான். நிற்கவைத்தான். கதை உள்ளங்கையில் ஒரு சிறுவனைப்போல அமைதியாக நின்றது. எல்லா பக்கங்களிலும் எடை சரியாக இருப்பதால்தான் அந்த உலோகம் இப்படி நேராக நிற்கிறது. இல்லையெனில் கதை கொஞ்சம் கோணலாகி கீழே விழும்.

கத்தியை உருவி உயரே பிடிக்கும்பொழுது ஒரு அந்தணன் அருகே வந்து நெருங்கி இருந்த பாதை மீது உட்கார்ந்து கொண்டான். பீமனுக்கு இந்த நேரத்தில் ஒருவர் அருகே வந்து இருப்பது பிடிக்கவில்லை. ஆனாலும், வந்தது அந்தணன் என்பதால் மறுக்கவில்லை. தொடர்ந்து தன் வேலையிலேயே கூர்மையாக இருந்தான். அகலமான மார்பும் உயரமும், நீண்ட கைகளும் கொண்ட அந்த அந்தணன் 'அருமையான கத்தி' என்று பாராட்டினான். பீமன் திரும்பி அவனைப் பார்த்து விட்டு தன் வேலையில் கூர்மையானான்.

"எனக்கு ஆயுதங்களைப்பற்றி தெரியும். அஸ்திரங்களின் ரகசியங்களையும் அறிவேன். நீ வைத்திருக்கின்ற அம்பறாத் தூணியில் எது

அஸ்திரம் என்பதையும் புரிந்து கொண்டேன்" என்று சொல்லி சிரித்தான்.

ஒவ்வொரு பேச்சுக்கு இடையேயும் சிரிப்பது சிலர் வழக்கம். அது ஒன்றும் நல்ல குணம் அல்ல. அதிக நைச்சியம் உடையவர்கள்தான் இப்படிப் பேச்சுக்கு இடையே சிரித்துக் கொண்டிருப்பார்கள். தேவையற்று பல் காட்டுவார்கள். பீமனுக்கு அதிகம் சிரிப்பவர்களை பிடிக்காது.

"பதினாறு வருடங்கள் மிகக் கவனமாக வில்வித்தை பயின்றேன்," அந்த அந்தணன் பெருமையோடு சொன்னான்.

"ஏன்?" ஒற்றைக் கேள்வியில் முகம் சுளுக்கி அவரைப் பார்த்தான்.

"ஒரு அந்தணன் எது வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். சமையல் தெரிந்து சாப்பிட மட்டும் தெரிந்த அந்தணனாக என்னை நினைக்காதே. எங்கு யுத்தம் நடந்தாலும் அங்கு அந்தணருடைய மூளை இருக்கும். அந்தணர் யுத்தத்தில் இல்லாது போனாலும் அவன் செய்து கொடுத்த அஸ்திரம் இருக்கும். சொல்லிக் கொடுத்த தந்திரம் இருக்கும். உலக வாழ்க்கையில் எல்லா பகுதிகளிலும் அந்தணனுடைய செயல்திறன் மின்னத்தான் செய்யும். அரசர்கள் பளுவை குறைக்க வேண்டி அந்தணர்கள் யுத்தப் பயிற்சியும், அஸ்திரப் பயிற்சியும் மேற்கொள்வார்கள்."

"சரி, சந்தோஷம்." மேற்கொண்டு பேச விருப்பமில்லை என்பதை பீமன் அவரை தடுத்து நிறுத்தினான். ஆனால், அந்தணர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

"அன்று துருபதன் சபையில் அர்ஜுனன் எழுந்திருக்காது போனால் நான் எழுந்திருப்பேன். அந்த இலச்சினை அடித்து நொறுக்க என்னால் முடியும். அட, ஒரு அந்தணன் எழுந்திருக்கிறானே என்ற ஆச்சரியத்தில் நான் அமைதியாகி விட்டேன். நம்மைப் போலவே வேறொரு அந்தணனும் வில்வித்தை பயின்றிருக்கிறாரா என்று திகைத்து விட்டேன். இல்லையெனில் திரௌபதி எனக்கான ஆளாக இருந்திருப்பாள்."

"ஹூம்..." ஒரு சீறல் வந்தது. "அது முடிந்த கதை. திரௌபதி எங்கள் சொத்து."

"மறுக்கவேயில்லை," அந்தணன் அந்த அதட்டலுக்குப் பிறகும் வெட்கமின்றி பேசினான்.

"பல சக்கரங்களுடைய ஒரு இலச்சினையை அடிப்பதற்கு இலச்சினையின் நடுப்பகுதியே சிறந்தது. அத்தனை பேரும் வெளிவட்டத்தை குறி வைத்தார்கள். அர்ஜுனன் உள்வட்டத்தை குறிவைத்தான். அடித்துவிட்டான். அப்படித்தான் செய்ய வேண்டும் என்று நானும் நினைத்திருந்தேன்."

"போதும். நான் கத்தியை வீசப் போகிறேன். மேலே பட்டுவிடப் போகிறது. தள்ளிப் போங்கள்."

அந்தணன் எழுந்தான். அவன் எழுந்து நகர்வதற்குள் பீமன் கத்தியை எடுத்து எழுந்து நின்று வேகமாக சுழற்றத் துவங்கினான். காற்றை கிழித்துக் கொண்டு கத்தி பெரும் ஒலியை எழுப்பியது. துணி கிழிந்து விடும் என்ற பயத்தில் அந்த அந்தணன் நகர்ந்து கொள்ள, தாவி நான்கு பக்கங்களிலும் எகிறி குதித்து கத்தியை காற்றில் பாய்ச்சி இழுத்து வெட்டி தூக்கி அடித்து பல்வேறு வித்தைகளை பீமன் செய்தான். ஒரு பெரிய நடனம் போலும் அது இருந்தது.

பீமன் கத்தியை உறையில் போடும் போது, "அந்தக் கத்தியை என்னிடம் கொடு. அந்த வித்தையை நானும் செய்து காட்டுகிறேன்," என்றான் அந்தணன்.

பீமனுக்கு கட்டுக்கடங்காத கோபம் வந்தது. கத்தியை உறையில் இட்டான். "மகன், மகள், மனைவி, ஆயுதம், வீடு, வயல் இவற்றை மற்றவரிடம் கொடுக்கக் கூடாது. அவன் அந்தணனாயினும் இதைச் செய்யக் கூடாது. வித்தை காட்ட வேண்டுமெனில் உங்கள் கத்தியை எடுத்துக் கொள்ளுங்கள்."

"நான் ஆயுதம் எதுவும் கொண்டு வரவில்லையே."

"கடன் வாங்கி எதற்கு வித்தை காட்டுகிறாய். உன் வித்தையை நான் பார்க்க விரும்பவில்லை. நீ போகலாம்." ஒருமையில் அந்தணனை விரட்டிவிட்டு ஆயுதங்களை எடுத்துக் கொண்டு யுதிஷ்டிரர் இருக்கின்ற இடம் நோக்கி நகர்ந்தான். அந்த அந்தணன் பின்னாலிருந்து பார்ப்பதை உணர முடிந்தது.

இவன் அந்தணனா! எவ்வளவு வெட்கமின்றி கை நீட்டி கத்தியை கொடு என்று கேட்கிறான். என்ன கேவலம் இது. பன்றியைப் போல் இருக்கிறான். இவன் எதற்கு என்னிடம் வந்து பேசுகிறான். தருமருடைய செய்கையில் தவறு பலதும் இருக்கிறது. இம்மாதிரியான அந்தணர்களை ஏன் அருகே வைத்திருக்கிறார் என்று தெரியவில்லை. நல்ல வார்த்தை சொல்லி ஊருக்கு அனுப்பியிருக்க வேண்டும். அல்லது என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்க வேண்டும். ஓரமாக இழுத்து இரண்டு கன்னத்திலும் அறைந்து, காதுகளில் ரத்தம்

வரச் செய்து திருப்பி அனுப்புவேன்...

விரல்களுக்கிடையே குச்சிகளை கொடுத்து அழுந்த பிடித்துக் கொண்டால் வலி உயிர் போய்விடும். இரண்டு கைகளையும் பற்றி விடை கொடுப்பதுபோல் அது இருக்கும். ஆனால், வேதனை சொல்லி மாளாது. மறுபடியும் இங்கே எங்களோடு பார்த்தால் உன்னை அக்னிப் பாறையில் படுக்க வைத்து விடுவேன் என்று சொல்லி திருப்பி அனுப்பிவிட முடியும். ஆனால், தருமர், அந்தணர் வரட்டுமே. எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் தொடரட்டுமே என்று தேவையற்ற கருணையோடு பேசுவார். மறுபடியும் சந்தேகம் வருகிறது. இவன் அந்தணனா?பின்குடுமியும், பூணூலும், துளசிமாலையும், பஞ்சகச்ச வேஷ்டியும், மேல் துண்டும், விரலில் பாம்பு மோதிரமும், அக்குளில் தர்ப்பை கட்டும் இருந்தால் அந்தணனாக முடியாது. இவர்கள் வேதத்தில் இந்த சாகை சொல் என்று சொன்னால் சொல்லி விடுவார்கள். அதையும் பயின்றிருப்பார்கள். எனவே, ஒருவன் உண்மையில் அந்தணனா என்று கண்டுபிடிப்பது மிகவும் கடினம். இவன்மீது ஒரு கண் வைத்துக் கொள்ள வேண்டும். பீமன் தன்னுள் தீர்மானம் செய்து கொண்டான். அந்தணன் பின் தொடரவில்லை என்று தெரிந்ததும் தருமரோடு சேர்ந்து கொண்டான்.

சாப்பிடும்போது சகாதேவனுக்கு அருகே உட்கார்ந்து உணவு உண்டான். “நேரே ஒரு வாகை மரம் இருக்கிறது. அதற்குக் கீழே உள்ளவனுக்கு திரெளபதி அட்சய பாத்திரத்திலிருந்து அன்னம் இடுகிறாள். கவனித்தாயா.”

“கவனித்தேன்.”

“அவன் மீது ஒரு கண் வைத்துக் கொள் சகாதேவா.”

“ஏன்?”

“அந்தணன் இல்லையோ என்று ஒரு சந்தேகம்.”

“வேறு யாராக இருக்கக்கூடும்?”

“தெரியவில்லை. துரியோதனன் அனுப்பி வைத்த ஒற்றனாக, க்ஷத்ரியனாகக் கூட இருக்கலாம்.”

“எதனால் அப்படி சொல்கிறீர்கள் அண்ணா?”

“அஸ்திர வித்தை தெரியும் என்று சொல்கிறான். உன் கத்தியை கொடு நான் வித்தை காட்டுகிறேன் என்கிறான். இவனிடம் கத்தியை கொடுத்துவிட்டு நான் கைகட்டி இவன் செய்கிற வித்தையை பார்க்க வேண்டுமாம். என்னை என்ன முட்டாள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறானா. கை நீட்டி இன்னொருவர் கத்தியை கேட்பது எவ்வளவு கேவலம். இதை நல்லவன் செய்ய மாட்டான்.”

“புரிகிறது அண்ணா. மற்றவரை விட அதிகம் சாப்பிடுகிறான். உண்மையில் நம்மை விடவும் அதிகம் சாப்பிடுகிறான். அதனால் இவன் அந்தணனாக இல்லாது போகலாம். நீங்கள் சொல்வது போல க்ஷத்திரியனாக இருக்கலாம். தாமரை இலை முழுவதும் சோறு. சுற்றி வெஞ்சினம். கலந்து கலந்து உண்ணும் வேகத்தைப் பார்த்தால் ஏதோ மிருகம் இரையை உண்பது போலல்லவா இருக்கிறது” என்று சொல்லிச் சிரித்தான். பீமனும் அதைக் கேட்டு சிரித்தான்.

தொலைவிலுள்ள அந்தணனுக்கு அவர்கள் இருவரும் தன்னைப் பார்த்து சிரிக்கிறார்கள் என்பது புரிந்தது. உண்ணலை அந்த அந்தணன் நிதானப்படுத்தினான். அதற்கும் பீமனும், சகாதேவனும் சிரித்தார்கள். உணவின் வாசனையையும் மீறி அந்த அந்தணன் மூக்கில் திரெளபதியின் வாசனை மிதந்து கொண்டிருந்தது. காற்றினுடே அந்தப் பெண்ணின் வாசனையை கண்டுபிடித்து அவனால் இழுக்க முடிந்தது. என்ன செளந்தர்யம், என்ன அழகு. ஐந்து பேரோடு கூடிய பிறகும் இன்னும் கட்டுக்குலையாத மேனி. அந்த அந்தணன் வியப்போடு மற்றவருக்கு பரிமாறுகின்ற திரெளபதியை ஆவலோடு பார்த்தான்.

பொழுது சாய்ந்தது. அந்த வனத்தில் அந்த இடத்தில் மூன்று நாட்கள் தங்கி இளைப்பாறலாம். பிறகு தொடர்ந்து நடக்கலாம் என்று தருமபுத்திரர் கட்டளையிட்டிருந்தார். நல்ல கனிமரங்கள் நிறைந்ததும், நீரோடை ஓடுவதும், ஆடுகளும், மான்களும், முயல்களும் திரிவதுமான அந்த வனப் பிரதேசம் உணவுக்கு குறையில்லாத இடமாக இருந்தது. கங்கையின் கிளைநதி ஒன்று சிறிய ஓடையாக அந்த வனத்தினுடே வந்து கொண்டிருந்தது. வெளிச்சம் விடியும் நேரத்தில் திரெளபதி அந்த ஓடையில் அச்சமின்றி முங்கிக் குளித்தாள். தன் துணியை அலசிப் பிழிந்தாள். தருமருடைய வேட்டியையும், பீமனுடைய வேட்டியையும் சுத்தமாக துவைத்தாள். அந்தணன் புதருக்கு நடுவே அமர்ந்து திரெளபதியை வெறியோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

பகல் வேளையில் அட்சய பாத்திரத்திலிருந்து நல்ல உணவு கிடைக்கும். சகலருக்கும் கிடைக்கும். ஆனால், காலையில் எழுந்ததும் ஏதேனும் உண்பதற்கு இருந்தால் நன்றாக இருக்கும், அல்லவா? பழங்கள் வயிற்றை இளக்கும் அல்லவா. சுத்தப்படுத்தும் அல்லவா. எனவே, மாந்தளிர்களும், அத்திப்பழங்களும், உடலுக்கு வலுவூட்டும் நாகப்பழமும் வேண்டுமென்று திளெரபதி கேட்க, பீமன் அவற்றை தேடிப் போனான். அந்தக் காட்டில் இல்லாத மரங்கள் இல்லை. இவை நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு, தருமபுத்திரர் துணைக்கு இங்கே இருக்கிறார் என்ற எண்ணத்தோடு நகர்ந்து போனான்.

(தொடரும்)

மகாபாரதம்

54

வாழ்வின் நிதர்சனத்தைப் புரிந்துகொள்ளாதவன் யார்?

உச்சிவேளை உணவுக்கு முன்பு அவரோடு வந்த அந்தணர்கள் வெவ்வேறு திக்கில் நகர்ந்து மௌனமாக ஜபம் செய்யத் துவங்கினார்கள். இருபது, இருபத்தைந்து அந்தணர்கள் அஸ்தினாபுரம் விட்டு கிளம்பிய நாளிலிருந்து இன்றுவரை அலுக்காமல் தொடர்கிறார்கள். 'ஒரு அரசன் சேனை இல்லாமல் இருக்கலாம். அந்தணன் இல்லாது இருக்கக்கூடாது. என்ன செய்தல் தகும், எது தகாது என்று சொல்வதற்கு அந்தணர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, அரசனாகிய உங்களோடு நாங்கள் வருவது நல்லது. மறுக்காதீர்,' என்று சொல்லி தொடர்ந்தார்கள்.

அதுவும் தவிர, ஒரு அரசன் துணைக்கு வர, பீமன், அர்ஜுனன் போன்ற வீரர்களும், நகுல சகாதேவரும் வர, பரத கண்டத்தின் பல வனங்களை கடந்து நல்ல க்ஷேத்திரங்களை தரிசிக்க இப்படி ஒரு வாய்ப்பு எவருக்கும் கிடைக்காது. அதை முன்னிட்டும் அந்தணர்கள் வந்தார்கள். க்ஷேத்திராடனம் என்று சொன்னதால் தருமபுத்திரர் அதை ஏற்று அவர்களை மறுக்காது வரச் சொன்னார். உணவுக்கு குறைவில்லை என்பதால், ஒருவேளை உணவு அவர்களுக்கு இட முடியும் என்பதால், அந்த ஒருவேளை நல்ல உணவு அவர்களுக்கு போதும் என்பதால் அவர் சந்தோஷமாக அவர்களோடு பேசி சிரித்த வண்ணம் வந்தார்.

அட்சய பாத்திரத்தில் உணவு கேட்க இன்னும் நேரம் இருந்தது. அந்த அந்தணன் எழுந்தான். சுற்றியும் கவனித்தான். தருமபுத்திரர் கண்கள் மூடி மரத்தில் சாய்ந்து அரைத்தூக்கத்தில் இருந்தார். நகுல, சகாதேவர் தாவரங்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். திரௌபதி கூந்தலை இழைய பின்னி பாட்டு பாடிக் கொண்டிருந்தாள். மற்ற அந்தணர்கள் சற்றுத் தொலைவில் கூப்பிடும் தூரத்தில் ஜபத்தில் ஆழ்ந்திருந்தார்கள். இதுதான் சமயம் என்று அந்த அந்தணனுக்கு தோன்றியது.எழுந்து நின்று கைகளையும், கால்களையும் உதறினான். சட்டென்று வேறொரு வடிவம் அவன் உடம்பிலிருந்து வெளிப்பட்டது. அடர்ந்த ரோமங்களும்,



எப்போதும் உள்ள சர்வசாதாரண உண்மையைச் சொன்னால் மக்கள் அதை உணர்வதில்லை. தங்கள் நிஜ சொரூபமே மெய்ம்மை என்பதை அஞ்ஞானத்தால் அசட்டை செய்து கவனியாமல் விட்டுவிடுகிறார்கள். 'தான்' இருப்பதை உணராதவர் உண்டோ? ஆயினும் அதை எடுத்துக் கூறினால் அவ்வுண்மையைக் கேட்பாரில்லை.

பருமனான கைகளும், குறுகிய வயிறும், அகன்ற மார்பும், புதர் போன்ற மீசையும், பெரிய சடைமுடியும், ரோமம் நிறைந்த காலுமாய் ஒரு பெரிய கரடி போல அந்த அந்தணன் அரக்க வடிவம் எடுத்தான். அதுதான் அவனுடைய இயல்பான உருவம். அந்தணன் என்பது ஒரு வேடம்.

முகத்தை மாற்றிக் கொண்டும், அங்கங்களை மாற்றிக் கொண்டும், பெருக்கிக் கொண்டும், குறைத்துக் கொண்டும் இருக்கின்ற வித்தையை அப்போது இருந்த மனிதர்கள் தெளிவாக கற்றிருந்தார்கள். அது ஒரு பாடமாகவே பலருக்கு இருந்தது. மிகக் கவனமாக பயிற்சி செய்ய எளிதாக பலருக்கு வந்தது. உருமாறுதல், உரு எடுத்தல் என்பதெல்லாம் அங்கு சர்வசாதாரணமான விஷயங்கள்.

பாலகுமாரன்

அரக்கன் முன்னேறினான். திரௌபதியை பார்த்தான். சிரித்தான். பூதாகரமான ஒரு விஷயத்தைப் பார்த்து அவள் அலற, தருமர் விழித்துக் கொண்டார். நகுல சகாதேவர் எகிறினார்கள். சட்டென்று திரௌபதியை இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். இரண்டு கைகளாலும் நகுல, சகாதேவரைப் பிடித்துக் கொண்டான். அக்குள் இடுக்கில் தருமபுத்திரரை வைத்துக் கொண்டான். அந்த இடத்தை விட்டு வெகு வேகமாக ஓடத் துவங்கினான். அவன் காலடியில் குத்திய செடிகள் நசுங்கின. முள் செடிகள் உடைந்தன. அவன் போகின்ற பாதை யானை போகின்ற பாதை போல ஒரு வழித்தடம் ஏற்பட்டது.

திரௌபதி அலறினாள். நகுல, சகாதேவர் வீரத்துடன் திமிறினார்கள். ஆனால் அவன் பிடி உறுதியாக இருந்தது. தருமர் அவனைப் பார்த்து கேவலமாகச் சிரித்தார். "நீ அந்தணன் அல்லவோ. எதற்கு இந்த வேடம் பூண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

"இதுதான் என் உண்மையான உருவம். நான் அந்தணன் இல்லை."

"அப்போது எதற்கு அந்தண வேடம் பூண்டாய்?"

"எனக்கு திரௌபதி வேண்டும். திரௌபதி மீது வெகுநாளாக ஆசை."

"உனக்கு அழிவு காலம் வந்து விட்டது. எப்போதோ செத்திருக்க வேண்டிய நீ இந்த மானிடப் பெண்ணை தொட்டதால் நீ மரணமடையப் போகிறாய். உனக்கு இறப்பு வந்துவிட்டது என்று அக்குள் பக்கம் இருக்கின்ற உன் நாடி சொல்கிறது. மரணம் நேரும்போது அந்த நாடி வேகமாகத் துடிக்கும். உன் நாடி துடிக்க ஆரம்பித்து விட்டது. உனக்கு மரணம் இன்னும் அரை நாழிகையில் ஏற்படும். அதற்குள் உன்னை காப்பாற்றிக் கொள். தயவு செய்து திரௌபதியையும், எங்களையும் இறக்கி விடு. இது அநீதி."

"எனக்கு நீதி போதிக்க வேண்டாம். இதைப் போல ஒரு நல்ல நேரம் எனக்குக் கிடைக்காது."

"இது நல்ல நேரமா, கெட்ட நேரமா என்பதை நீ அனுபவித்துதான் அறிய வேண்டும். உனக்கு அப்போதுதான் புத்தி வரும். ஆனால், ஒரு அந்தணன்போல வேடம் பூண்டு, திரௌபதி கையால் உணவு உண்டுவிட்டு, அந்த திரௌபதியை தூக்கிக் கொண்டு எனக்கு வேண்டும் என்று சொல்கிறாயே இந்த துரோகத்தை நீ யாராக இருந்தாலும் செய்வது அபத்தம். நீ அந்தணனோ, அரக்கனோ அதைப்பற்றி எனக்கு முக்கியம் இல்லை. ஆனால், இது முதுகில் குத்துவதுபோல் அல்லவா, தூங்கும்போது தலையில் கல்லை போடுவது போல் அல்லவா, பீமன் இல்லாத போது நீ இந்த காரியத்தை செய்கிறாய் என்றால் வெகு நாள் திட்டமிட்டிருக்கிறாய் அல்லவா? அப்போது நீ இங்கு சோறு உண்டிருக்கக் கூடாது. என்னிடம் அடைக்கலம் கேட்டிருக்கக் கூடாது. உரக்கக் கத்தி பீமனை அழைத்து, அவனோடு சண்டை புரிந்து அவன் கை, காலை உடைத்து விட்டு திரௌபதியை தூக்கிக்கொண்டு போகவேண்டும். அப்படிச் செய்யாமல் இந்த தந்திரம் செய்யும்போது இதைவிட ஆபாசம் எதுவும் இல்லை. உன்னை விட ஆபாசமானவன் எவரும் இல்லை. யார் வீரன் என்பது எல்லா வகையினருக்கும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நீ செய்வது வீரம் என்றா நினைத்துக் கொண்டிருக்கிறாய். திருட்டுத்தனமாக ஒரு பெண்ணை கவர்ந்து போவது வீரம் என்றா சொல்கிறாய். உறங்கும் நேரத்தில் அவளை பலாத்காரம் செய்வது சரி என்றா நினைக்கிறாய்."

"அவளுடைய மூன்று புருஷர்கள் இருக்கும்போது அவளை நான் கவர்ந்து போகிறேன். பெண்ணை கவருவது என்பது சாஸ்திரத்தில் உள்ளதுதானே. நீங்களெல்லாம் கவரவில்லையா?" அவன் எக்காளமாகப் பேசினான்.

"திரௌபதிக்கு மொத்தம் ஐந்து புருஷர்கள். ஐந்து புருஷர்களை கொன்று விட்டல்லவா நீ இதை செய்திருக்க வேண்டும். என்னை சண்டைக்கல்லவா கூப்பிட்டிருக்க வேண்டும். நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது தூக்கிக் கொண்டு போகிறாயே. நான் ஆழ்ந்து மனதை

சுவர்க்கம், நரகம், மறுபிறவி முதலிய இதர விஷயங்களை ஆராய்வதிலேயே பெரும்பாலும் ஆர்வம் கொள்கின்றனர். வெட்ட வெளிச்ச உண்மையை நாடுவாரில்லை. விந்தைகள், வாழ்க்கை மர்மம் மீதே நாட்டமெல்லாம். அவர்கள் மனப்பான்மை அப்படியிருப்பதால், வேத சாஸ்திரங்களும் அவர்கள் வழியிலேயே சென்று, முடிவில் ஆன்ம சத்தியத்திற்கு அவர்களைத் திருப்ப முனைகின்றன.

ஒருநிலைப்படுத்திக் கொண்டிருக்கும்போது என்னை இறுக்கிக் கொண்டு ஓடுகிறாயே. இது எந்தவிதமான காந்தர்வத்தில் சேர்த்தி? அட முட்டாளே, உன்னைக் கொல்ல எங்களால் முடியும். ஆனாலும் அந்தணனாக வேடமிட்டிருக்கிறாய். எங்கள் சோறு தின்றிருக்கிறாய். அதனால் சொல்கிறேன். பிழைத்துப் போ. உனக்கு நான் ஒரு சிறிய இடைவெளி தருகிறேன்."

அவன் காது கொடுத்துக் கேட்கவில்லை. தருமபுத்திரர் மூச்சு அடக்கி தன் உருவத்தை பெரிதாக்கினார். அவன் அக்குள் விசாலமாயிற்று. இன்னும் பெரிதாயிற்று. அவரை இடுக்கிக் கொள்வது சிரமமாயிற்று. அவர் கனம் மிகுந்து காணப்பட்டார். அந்தக் கனத்தை தூக்க முடியாமல் அவன் மெல்ல தடுமாறினான். திசை தெரியாமல் நாலாபக்கமும் அலைந்தான். மரங்கள் மீது மோதினான். அந்தச் சலசலப்பு சத்தம் தொலைவிலிருந்த பீமனுக்கு கேட்டது. யானைகள் வரும் போதுதான் இப்படி மரங்கள் முறியும்... அரக்கன் ஒருவன் தன் குடும்பத்தை இடுக்கிக்கொண்டு போவது தெளிவாகத் தெரிந்தது. மின்னலென ஓடிப்போய் அந்த அரக்கன் முன்பு நின்றான்.

"என் குடும்பத்தாரை இறக்கி விடு. என்னோடு சண்டை செய்துவிட்டு அதற்குப்பிறகு உன்னுடைய காரியத்தை பூர்த்திசெய்து கொள். என்னை கொன்று விட்டு இதற்குமேல் கடந்து போ. நீ என்னால் கொல்லப்படப் போகிறாய்," என்று தெளிவாகச் சொன்னான்.



பாண்டவர்களுடைய கருணை மிகப் பெரியது. மோசமான, கேவலமான எதிரியானாலும் அவனை சிறிது தாமதிக்க வைத்து நல்ல வார்த்தை சொல்லி, சரியானபடி யுத்தத்திற்கு அழைப்பது அவர்கள் இயல்பாக இருந்தது. யுத்தம் என்று வந்துவிட்டால் பீமனுடைய குழந்தை சுபாவம், இளகிய மனோபாவம் முற்றிலும் மறைந்து வதைக்கிற வேகத்தோடு, இம்சைப்படுத்தி சாகடிக்கின்ற வெறியோடு மாறிவிடுவான். தொடை தட்டி பௌருஷத்தை வெளியே சொல்கிறவன் கண்டிக்கப்பட வேண்டியவன் என்பது பீமனுடைய எண்ணம். சண்டைக்கு வா என்று முஷ்டியை மடக்கி அழைத்து விட்டால் குத்து வாங்க தைரியம் இருக்க வேண்டும். கன்னத்தில் அறைந்தால் பொறுத்துக் கொள்ள வேண்டும். கால் இடறி கீழே விழுந்தால் எழுந்திருக்க வேண்டும். அதற்கு வலு இல்லாதவன் யுத்தத்திற்கு அழைக்கக் கூடாது. எதிரே இருப்பவன் வலு தெரியாது தன் வலுவை பெரிதாக நினைத்துக் கொண்டு கொக்கரிக்கறவன் எந்தப் பாவமும் செய்ய வல்லவன். வாழ்வின் நிதர்சனத்தை புரிந்து கொள்ளாதவன் வெகு எளிதாக தவறு செய்யக்கூடிய சுபாவம் உள்ளவன். எனவே அடித்து, நசுக்கி விரல்களை பிழிந்து, உச்சகட்ட வலியில் அலற வைத்து உபதேசம் செய்வதுதான் சரி. அந்த நேரமும் உபதேசத்தை செவிமடுக்கவில்லையெனில் அவன் உயிரோடு இருந்து எந்தப் புண்ணியமும் இல்லை. அவனுக்கு மரணம் தான் சரி.

பீமன் கண்ணிடுக்கி மிகுந்த கோபத்தோடு அந்த ஜடாசுரனை பார்த்தான். "பெண் மீது ஆசைப்பட்டு திரௌபதியை தூக்கிக்கொண்டு போவது என்கிற விஷயத்தை எனக்கு புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், என் தமையனையும், என் இரண்டு தம்பிகளையும் கூட்டிக் கொண்டு போகிறாயே, உன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? எங்கேனும் கொண்டுபோய் நசுக்கி சாகடிக்கலாம் என்றா? எங்களை அவ்வளவு எளிதாக அடித்து விட முடியுமா? தருமபுத்திரர் அக்குளில் இருந்தபடியே உன்னை தள்ளாட வைக்கிறாரே. இறங்கி நின்றால் உன்னை

வெளிமுக நாட்டம் நீங்கி மூல சொரூபத்தை உணர்தல் வேண்டும் என்பதே சாஸ்திரங்கள் அனைத்தின் உட்கருத்து. புதிதாய் எதனையும் அடைய வேண்டியதில்லை. அஞ்ஞானம் அகல வேண்டும். விபரீதப் பிரமைகள் ஒழிய வேண்டும்.

எப்படி வதை செய்வார் என்பது புரியவில்லையா. முட்டாள். அகங்காரமும், அசூயையும் உன் கண்களை மறைத்து விட்டன. உன் கத்தியை எனக்குக் கொடு. வித்தை காட்டுகிறேன் என்று வெட்கமில்லாமல் நீ கேட்டபோதே நீ அந்தணன் இல்லை என்பதை தெரிந்து கொண்டேன். அப்போதே நீ யார் என்று விசாரித்திருக்க வேண்டும். நான் சபையில் நிறுத்தி உன்னை விசாரிக்கத் துவங்கினால் உன் சுயரூபம் வெளிப்பட்டிருக்கும். ஆனால், தருமபுத்திரர் அதற்கு சம்மதித்திருக்க மாட்டார். அந்தணரை எப்படி விசாரிக்கலாம், அந்தணன் என்பவன் அந்தணன்தானே. அவன் குலத்தைப் பற்றி உனக்கு என்ன கவலை என்று நிறுத்தி விடுவார். அவன் சுயகுணம் என்ன என்று ஆராய்ந்து பார்க்க தருமபுத்திரருக்கு மனம் ஒப்பாது. எதிரே நின்று பேசுபவனும் அத்தனை பேரும் உண்மையைத்தான் பேசுகிறார் என்று அவர் நினைத்துக் கொள்கிறார்.

“ஆனால் நானோ, அர்ஜுனனோ அப்படிப்பட்டவர்கள் இல்லை. எவன் நெருங்கி வணங்குகின்றானோ அவனை நாங்கள் சந்தேகத்துடன்தான் பார்ப்போம். இது எங்கள் குணம். க்ஷத்ரிய குணம். யாரையும் எந்த நேரத்திலும், எதற்காகவும் நாங்கள் நம்புவதில்லை. துரியோதனனை நம்பியதுதான் இந்த சண்டைக்குக் காரணம். ஆனால், துரியோதனன் பகைவன் என்று தெரிந்ததுதான் இன்று எங்களுடைய வனவாசத்திற்கு காரணம். இந்த சந்தேகம் இல்லையெனில் நாங்கள் துரியோதனனை சகோதரனாகவே நினைத்திருப்போம். எதிரியாக பார்த்திருக்க மாட்டோம். எங்கள் க்ஷத்ரிய சந்தேக குணம் எங்களை காப்பாற்றியிருக்கிறது. உன்னையும் அப்படித்தான் நான் பார்த்தேன்.

“ஆயுதங்களைப் பற்றி எனக்குத் தெரியும் என்று சொன்னாயே, அப்பொழுதே சந்தேகப்பட்டேன். உன்னை விசாரித்தால் நீ என்ன செய்வாய். அரசர்களுடைய ஆயுதங்கள் மொத்தமும் அந்தணர்கள்தானே செய்திருக்கிறார்கள். அத்தனை அஸ்திரமும் அந்தணர்களும், ரிஷிகளும் செய்து கொடுத்ததுதானே என்று தந்திரம் பேசுவாய். அஸ்திரம் செய்தவனுக்கு அதை எப்படி உபயோகப்படுத்துவது என்று தெரியாதா என்று வாக்குவாதம் செய்வாய். தருமருக்கு அதில் கிஞ்சித்தும் விருப்பம் இருக்காது. எதற்கொரு அந்தணனை இம்சிக்கிறாய் என்று என்னை சீற்றத்துடன் பார்ப்பார். என் தமையனை நான் வருத்தப்பட வைக்க முடியாது.

“அசுரர்கள் மனிதர்களே ஆயினும் பிறப்பாலும், பழக்கத்தாலும் மிகுந்த பலம் கொண்டவர்கள். அதிகமான மாமிசம் உண்டு கொழுத்துப் போனவர்கள். அந்தக் குலமே இருக்கக்கூடாது என்பதுதான் இயற்கையின் அன்றைய முடிவாக இருந்தது.”

“ஆனால், இன்று உன் முகம் தெரிந்து விட்டது. நாய் சிங்கவேடம் போட்டாலும் அது குரைக்கும்போது கர்ஜனையா வரும், குரைப்புதானே வரும்! நாயின் குரைப்பு போல உன்னுடைய விகாரமான முகத்தை இதோ காட்டி விட்டாய். விடு என் குடும்பத்தை. இல்லையென்றால் உன் வலிவு மீது உனக்கு நம்பிக்கை இருக்கிறது என்றால் என்னை அடித்து நசுக்கி விட்டு என் மனைவியை எடுத்துப் போ. ஆனால், உனக்கு மரணம் நெருங்கி விட்டது. என்னுடைய ஒரு ரோமத்தைக் கூட உன்னால் அசைக்க முடியாது. நீ அடிபட்டு துடித்து சாகப் போகிறாய். உன் அங்கங்களை பிய்த்து எறியப் போகிறேன்.

“இப்படி யுத்தம் செய்து நாளாயிற்று. பிரபஞ்ச சக்தி என்னுடைய பலத்தை புதுப்பித்துக் கொள்ள, என்னுடைய யுத்த தந்திரங்களை சீராக்கிக்கொள்ள உன்னை அனுப்பியிருக்கிறது. க்ஷத்ரியனுக்கு போர் மிகப்பெரிய விருந்து. சந்தோஷம். கொண்டாட்டம். ஆனந்த நடனம். வா... என் ஆட்டத்தைப்பார். அதன் ஆவேசத்தைப் பார்...”

பீமன் பூமியை காலால் உதைத்து, புழுதியை எழுப்பி, கைகளால் தட்டி மேலும் பல கோப வார்த்தைகள் சொல்லி அரக்கனுக்கு வெறி ஏற்றினான். அரக்கன் சற்றுத் தடுமாற சகாதேவன் கீழே குதித்தான். கத்தியை உருவிக் கொண்டான். வெட்டத் துவங்கினான்.

“வேண்டாம் சகாதேவா. இவனை என்னிடம் விட்டுவிடு. நான் அடித்து நொறுக்குகிறேன். நாம் எல்லோரும் சேர்ந்து இவனைக் கொன்றதான

அமைதியும் ஆனந்தமும் தன்னைவிட்டு வேறெங்கோ இருப்பதாக எண்ணி அலையாமல், அயலேதுமில்லாத தன் பரிபூரண நிலையில் அமர வேண்டும். தான் தானாயிருத்தலே பரமானந்தம். அவ்வமைதியே ஆனந்த மயம்.

பெருமை இவனுக்கு கிடைத்துவிட வேண்டாம். பீமனுடைய ஒற்றை அடியை இவனால் தாங்க முடியாது என்பதை உலகம் புரிந்து கொள்ளட்டும். என் வெறிக்கு நல்ல தீனி கிடைத்திருக்கிறது. இவனை என்னிடம் விடு" என்று சொல்ல, தரும புத்திரர் சைகை செய்ய, நகுலனும், சகாதேவனும் பின்னடைந்தார்கள்.

இடுப்பில் சொருகியிருந்த திரௌபதியை அரக்கன் இறக்கி விட்டான். திரௌபதி துள்ளி குதித்து தருமருக்கு பின்னால் ஒளிந்து கொண்டாள். தன் புருஷனான பீமனை வியப்புடன் பார்த்தாள்.

அரக்கன் நெருங்க பீமனுடைய கோபம் தலைக்கு ஏறியது. "அந்தணன் வேடமா. அசிங்கமாக இல்லை. உன்னுடைய இயல்பான குணத்தை விட்டு எங்கள் சோறை கையேந்தி தின்றாயே வெட்கமாக இல்லை? திரௌபதி உணவு போட்டபோதெல்லாம் அவளை தவறாகத்தானே நீ பார்த்திருப்பாய். அது ஆபாசமாக இல்லை..."

பீமனுடைய பேச்சு அந்த ஜடாசுரனுக்கு கோபமூட்டியது. அந்தணனாக தன்னை மறைத்துக் கொண்டு பெரும் காம மயக்கத்தில் துருபத தேசத்திலிருந்து அவன் திரௌபதியை பின்தொடர்ந்து வருகிறான். தன்னை அடக்க முடியாதவனாய் அவளை அபகரிக்கவே அமைதியான அந்தணனாக இருந்தான். பேராசையும், கெட்டிக்காரத்தனமும் கொண்டவர்கள் தங்களுக்கான நேரம் வரும்வரை எல்லோரோடும் இனிமையாக இருப்பார்கள். உண்மையான குணத்தை மறைத்துக் கொண்டிருப்பார்கள். பீமனை ஜெயிக்க முடியாது என்று தெரிந்ததால்தான் இந்த திருட்டுத்தனத்தை கைக்கொண்டான்.

இப்போது வேறு வழியில்லை. யுத்தம் செய்துதான் ஆகவேண்டும். இழிபிறப்பு என்று சொன்னது கோபம் வந்தது. அசுரர்கள் பலம் பொருந்தியவர்கள். அவர்கள் நீதி வேறு. வன்முறை, இயல்பு, வழிப்பறி, சுபாவம். அசுரபலத்திற்கு முன்னால் மானுடர்கள் பூச்சியைப் போன்றவர்கள். ஆனால், இந்த பீமன் மானிடரில் சிறந்தவன். பயிற்சியினாலும், தவத்தினாலும் தன் பலத்தை பெருக்கியவன்.

எகிறி ஓடி பீமனை தாக்க முயற்சிக்க, பீமன் நகர்ந்து ஜடாசுரனின் பிடரியில் அறைந்தான். சிகையை இழுத்து திருப்பி முகத்தில் குத்தினான். தோள்களை தாக்கினான். நெஞ்சில் குத்தினான். விலா எலும்புகளை உடைத்தான். காலால் காலை அடித்து நெஞ்சைப் பிடித்து தள்ளினான். தரையில் மோதிய தலையை தூக்கி மறுபடியும் தரையில் அடித்தான். கைகளை இழுத்து சுழற்றி வானத்தில் வீசினான். மல்லாந்து கிடந்தவனின் தொடைகளை மிதித்தான். முறித்தான்.

சகோதரர்கள் ஆனந்த களியாட்டம் செய்தனர். திரௌபதி திகைத்து நின்றிருந்தாள். அமைதியான பசுவைப்போல குணம் கொண்ட பீமன் ரௌத்திரமாக சண்டையிடுவதைப் பார்த்து வியந்தாள். தான் தலைமுடியை விரித்து செய்த சபதம் நிச்சயம் ஒருநாள் நிறைவேறும் என்று நம்பினாள். தன் மனம் குழம்பும்போதெல்லாம், வெற்றி கிடைக்காதோ என்று வேதனைப்படும்போதெல்லாம் அவள் புருஷர்களுடைய பராக்கிரமம் அவளுக்குத் தெரிய வருகிறது. இப்படிப்பட்ட புருஷர்கள் இருக்கும்போது, அன்பும், அரவணைப்பும் அற்புதமான வீரமும் அவர்கள் கொண்டிருக்கும்பொழுது ஒரு பெண்ணுக்கு எது குறித்தும் கவலையில்லை. எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் அச்சமில்லை. இன்னும் பல நூறு வனங்களுக்கு போவதாக இருந்தாலும் அவள் மனம் அதற்குத் தயாராயிற்று.

படுத்துக் கிடந்தவனை உதைத்து எழுப்பி அவன் தலையை திருகி தனியே பிய்த்து பீமன் தொலைவே வீசினான். அசுரன் உடம்பிலிருந்து ரத்தம் பீய்ச்சி அடித்து பீமனை நனைத்தது. ஜடாசுரன் இறந்து போனான்.

அசுரர்கள் மனிதர்களே ஆயினும் பிறப்பாலும், பழக்கத்தாலும் மிகுந்த பலம் கொண்டவர்கள். அதிகமான மாமிசம் உண்டு கொழுத்துப் போனவர்கள். அந்தக் குலமே இருக்கக்கூடாது என்பதுதான் இயற்கையின் அன்றைய முடிவாக இருந்தது. பாண்டவர்கள் அதை முன்னின்று நடத்தினார்கள்.

உடம்பெல்லாம் புழுதியும், ரத்தமுமான பீமனை சிறிய ஓடைக்கு நகுல, சகாதேவர் குளிக்க அழைத்துப் போனார்கள். தலை முழுக வைத்து உடம்பு தேய்த்துவிட்டார்கள். கணுக்கால் தண்ணீரில் நின்றபடி தருமபுத்திரர் அவர்களோடு பேசினார். "அருகே இருப்பவர்கள்தான் எதிரி. நம்மை அறிந்தவர்கள்தான் நமக்கு துரோகம் செய்கின்றனர். அமைதியானவர்களை முற்றிலும் நம்ப முடியாது. எவர்மீதும் எப்போதும் சந்தேகம் இருப்பது க்ஷத்ரியர்களுக்கு நல்லது. போர்வீரன் அலட்சியமாய் இருந்துவிடக் கூடாது. எவரையும் முற்றிலும் நம்பிவிடக் கூடாது. ஆனால், க்ஷத்ரியன் அவசரமான விசாரணையிலும் இறங்கிவிடக் கூடாது. அது நல்லவர்களை காயப்படுத்தும். இரண்டு நல்லவர்களுக்காக நூறு அயோக்கியர்களை பொறுத்துக் கொள்ளலாம். நல்லவர்களுக்கு துணையாக இருக்கும் க்ஷத்ரியனுக்கு கடவுள் உதவியாக இருப்பார்."

(தொடரும்)

மகாபாரதம்
55

உயர்த்தியான பொருட்கள் மனிதருக்கு இல்லையென்று யார் மறுப்பது?

தருமருடைய அமைதியான பேச்சு பீமனின் கோபத்தை தணித்தது. நகுல, சகாதேவர் நெகிழ்ந்தார்கள்.

எப்பேர்ப்பட்ட உத்தமர்கள். எவ்வளவு அற்புதமான வீரர்கள். இவர்களெல்லாம் என் புருஷர்கள். இவர்களை அடைய நான் என்ன தவம் செய்தேன்! ஓடையின் மேற்புறம் புல் தரையில் அமர்ந்தபடி திரௌபதி யோசனை செய்தாள். அவளுக்கு உலகம் சந்தோஷமானதாக இருந்தது.

பலவிதமான மரங்கள் நிறைந்த வனப்பகுதிகளும், எல்லையே தெரியாத புல்வெளிகளும், சிவப்பும், பச்சையுமான மலைக் குன்றுகளும், அவற்றில் இருக்கின்ற பழமர தோப்புகளும் தாண்டி அவர்கள் இமயமலையின் அடிவாரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். இயற்கையின் வினோதங்களைக் கண்டு வியந்து வியந்து ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

* * *

உலகம் எவ்வளவு பிரமாண்டமானது என்பதை ஒரு சிறு பிரதேசத்தை ஆளுமை செய்யும் ஒரு அரசன் புரிந்து கொள்ள வேண்டும். அரசனைச் சார்ந்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அட்சய பாத்திரத்தின் மூலம் உணவு இருக்கிறது என்பதாலேயே இத்தனை அந்தணர்கள் பின் தொடர்கிறார்கள். இத்தனை அந்தணர்கள் பின் தொடர்வது அவசியமா?

கந்தமான பர்வதம் செங்குத்தானது. இவர்களால் ஏற இயலுமா? வனங்களை கடந்து விட்டதுபோல கந்தமான பர்வதத்தில் ஏற முடியாது. எனவே, மலையின் அடிவாரத்திலேயே இவர்களை தங்கச் சொல்வது நல்லது என்று பீமனும், சகாதேவனும், நகுலனும் சொல்ல, தருமரும் சம்மதித்தார்.

சில அந்தணர்களை கூப்பிட்டு, 'என்னை நீங்கள் அரசன் என்று கொண்டால், என் கட்டளையை நீங்கள் ஏற்க வேண்டும். உங்களில் சிலரை நான் இங்கேயே நிறுத்திவிடப் போகிறேன்.' என்றார்.

விருஷபார்கவா என்கிற முனிவரின் ஆசிரமத்திற்கு அவர்கள் போய்ச் சேர்ந்தார்கள். விருஷபார்கவாவிடம் அந்தணர்களை ஒப்படைத்தார். அங்கேயே அமைதியாக இருக்கச் சொன்னார். மிக அற்புதமான அந்த ஆசிரமம் இன்னும் பலபேர் வந்தாலும் தங்குவதற்கு ஏதுவாக இருந்தது.

விருஷபார்கவா, தருமரையும், மற்றவர்களையும் அமரச் சொன்னார். தருமரைப் பார்த்து 'வனத்தில் இருந்தாலும் அரச நியதியை பின்பற்றுகிறாயா, அந்த தருமத்தோடு வாழ்கிறாயா, உன்னை அண்டியவர்களை காப்பாற்றுகிறாயா?' என்று விவரமாகக் கேட்டார். கண்டமான பர்வதம் போகவேண்டும் என்ற ஆசையை தருமர் சொல்ல அதை அங்கீகரித்தார்.

"ஒரு இடத்திற்கு மேல் தாண்டிவிட வேண்டாம். அது நம்முடைய இடம் அல்ல. அது யட்சர்களுடைய, ராட்சஷர்களுடைய இடம். யட்சர்களுடைய தலைவன் குபேரன் அங்கு ஆட்சி செய்து கொண்டிருக்கிறான். அவன் மனிதர்களை மதிப்பதில்லை. அவர்களை கீழாகத்தான் பார்க்கிறார்கள். கந்தமான பர்வதம்வரை ஒரு மனிதனால் வரமுடியும் என்றால் அவன் சாதாரணன் அல்ல என்று தீர்மானித்து யுத்தத்திற்கு அழைக்கிறார்கள். திரும்பப் போ என்று விரட்டுகிறார்கள். எனவே, மனிதர்களுடைய நடவடிக்கை இந்த எல்லையோடு முடிகிறது. இதைத்தாண்டி மலைமீது ஏறுவது என்பது எல்லோருக்கும் எளிதானது அல்ல. கடினமான காரியம். நீ இங்கே இவர்களை அடைக்கலமாக கொடுத்தது ஒரு நல்ல காரியம். அந்த அந்தணர்களும் இதைப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

“இமயமலைக்கும் மேருமலைக்கும் இடையே உள்ள இந்த பெரும் வனப்பிரதேசத்தை, வயல் வெளியை, இந்தப் புல்வெளியை இவர்கள் பார்த்து விட்டார்கள். நதிகளின் போக்கை புரிந்து கொண்டார்கள். இப்போது இமயமலை துவங்குகிறது. அந்த மரங்களே வேறு. அங்குள்ள உயிரினங்களே வேறு. உற்று கவனித்தால் யட்சர்களுடைய ஆட்டமும், பாட்டமும், மேள சத்தமும், துந்துபியின் ஒலியும் கேட்கும். அது வராதே என்பதற்கான எச்சரிக்கை. மனிதர்கள் மேலே ஏறக்கூடாது என்பதற்கான அறிவிப்பு. எனவே, எதையும் யோசித்துச் செய்யுங்கள்” என்று சொல்ல, பீமன் கந்தமான பர்வதம் பார்க்க ஆசைப்பட்டான். தருமருக்கும் அந்த எண்ணம் இருந்தது. அங்குள்ள மலர்களும், பறவைகளும் விசித்திரமானவை என்பது தெரிந்து திரெளபதியும் ஆசைப்பட்டாள். போக விருப்பம் உண்டு என்று மெல்லிய குரலில் முனிவரிடம் சொல்ல, முனிவர் ஆமோதித்தார். வெகுசில அந்தணர்களோடு அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். கந்தமான பர்வதத்தில் ஏறினார்கள்.

கூதல் காற்று. பெரிய இலைகள் கொண்ட உயரமான மரங்களின் சலசலப்பு. பாறையின் உச்சியில் இருக்கின்ற மான்கள். செங்குத்தாக ஏறும் ஆடுகள். அந்த ஆடுகளை துரத்தி அடித்து வீழ்த்தும் கழுகுகள். அந்த ஆடுகள் உருண்டு விழ, அவற்றைக் கொத்தி பெரும் துண்டு மாமிசத்தை எடுத்துப் போகின்ற பறவைகள். வேட்டையாட காத்துக் கொண்டிருக்கின்ற புலிகள், சிங்கங்கள், கரடிகள் போன்றவற்றை பார்த்தார்கள். உயரத்திலிருந்து காற்று கீழே தவழ்ந்து பள்ளத்தில் இறங்கி, மேடேறி, மறுபடியும் சரிந்து திரும்பவும் மேலேறி பொத்தென்று முகத்தைத் தாக்கியது. தொலைவிலிருந்து அந்தக் காற்று சுழன்று ஒரு பனைமர உயரத்திற்கு வருவதை பார்க்க முடிந்தது. அதோ ஒன்று, இதோ ஒன்று, அங்கே வருகிறது, இங்கே வருகிறது என்று ஆரவாரமாக இடமும், வலமும் நடந்து அந்தக் காற்றை எதிர்கொண்டார்கள்.

சுத்தமான மூலிகையும், குளிரும் கலந்த அந்தக் காற்று அவர்களுடைய நுரையீரலை விரிவுபடுத்தியது. முழுவதுமாக சுவாசிக்க முடிந்தது. முற்றிலுமாக ஜீரணிக்க முடிந்தது. அதனால் இருதயம் பலப்பட்டது. அதனால் ரத்த ஓட்டம் பெருகியது. அதனால் உடம்பு சூடு அதிகரித்தது. அதனால் மேனியின் மீது ஒரு திரவம் படர்ந்தது. குளிரை தாங்க முடிந்தது. இமயமலையின் இயற்கைச் சூழலால் உடம்பு ஆரோக்கியம் பெறுவதை அவர்கள் உணர்ந்தார்கள். இப்படிப்பட்ட நல்ல விஷயத்தை மனிதர்களுக்கு ஏன் யட்சர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். இமயமலை எப்படி யட்சர்களுடைய பூமியாகப் போகும். மனிதருக்கு உரிமை இல்லாத இடம் உலகத்தில் உண்டா. உலகம் மனிதருக்குத் தானே என்று அவர்கள் பேசிக் கொண்டு நடந்தார்கள்.


பாலகுமாரன்

நகுலனின் கன்னங்கள் சிவந்து விட்டன. கன்னத்தை விட உதட்டின் சிவப்பு அழகாக இருக்கிறது. கண்களும் மலர்ந்து விட்டன. புஜங்களும் பெருத்து விட்டது போல் தோன்றுகிறது. அவன் நடையே மிக கம்பீரமாக இருக்கிறது. காற்றில் தலை சிலும்ப, மூக்கு விடைத்து அவன் கோல் ஊன்றி மேலே நடப்பது அழகாக இருக்கிறது. எவ்வளவு ஆரோக்யமாக நகுலன் ஆகிவிட்டான் என்று திரெளபதி வியந்தாள். பீமனுக்கு சுட்டிக் காட்டினாள். பீமனும் அதைப் புரிந்து கொண்டான்.

“விருஷபார்கவா முனிவருக்கும் கண்டமான பர்வதத்திற்கு போக வேண்டும் என்று ஆசை. தன்னால் வம்பு வரக்கூடாது என்று இமயமலையின் அடிவாரத்தில் தங்கி இருக்கிறார். பரத கண்டத்திலேயே மிக ஆரோக்யமான இடத்தில் அவர் ஆசிரமம் அமைத்திருக்கிறார். யட்சர்கள் அனுமதித்தால் கந்தமான பர்வதத்திலும் அவர் ஆசிரமம் அமைக்கக்கூடும். யட்சர்களிடம் பேச வேண்டும். ஆனால் யட்சர்கள் காது கொடுத்து எதையும் கேட்பவர்கள் அல்ல. அவர்கள் ராட்சஷர்களுடைய குடையோடு மனிதர்களை ஓட ஓட விரட்டுபவர்கள்” என்று தருமர் சொல்லிக் கொண்டு வர, பீமன், ‘நம்மை யார் துரத்துகிறார்கள் என்று பார்த்து விடுவோம்’ என்று சொல்லி சிரித்தான்.

மரங்கள் அடர்ந்து வனங்களெல்லாம்போய் நல்ல புல் முளைத்த பல திக்குகளிலும் ஆறுகள் பாய்கின்ற மலை முகடுகள்தான் எதிரே இருந்தது. மனிதர்களை பார்த்திராத புலிகள், சிங்கங்கள் உறுமலுடன் அருகே வந்தன. பீமருடைய கைக் கோலால் பளிச் பளிச்சென்று அடிக்கப்பட்டு வலி தாங்காமல், வாலை சுருட்டிக் கொண்டு ஓடின. திரெளபதி வியந்து சந்தோஷமாகச் சிரித்தாள். அவை வந்த வேகம் என்ன, போகும் பயம் என்ன என்று வியந்தாள்.

“காட்டின் எல்லைவரை ஆடுகளும், மான்களும் தொலைவிலிருந்து பார்த்துவிட்டு நின்றுவிடுகின்றன. புலிகளும், சிங்கங்களும் அருகே வந்து அடிக்கின்றன. பதிலுக்கு தாக்கினால் பேசாமல் போய்விடுகின்றன. ஆக, சிலருக்கு தண்டனைதான் தெளிவு தருகிறது” என்று தருமர் சொல்ல, நகுலனும், சகாதேவனும் ஆமோதித்தார்கள்.

மிகப்பெரிய ஏரிகள். அன்னப் பட்சிகள். பெரிய சிகப்பு அலகு கொண்ட கொக்குகள், வெள்ளை மயில்கள், வான்கோழிகள், கட்டி அணைக்க முடியாத அகலத்தோடு உயர்ந்த மரங்கள்... இயற்கையின் செழிப்புக்கு அளவே இல்லை. நீரால் ஆனது உலகம் என்பது எவ்வளவு சரி என்றெல்லாம் பேசிக்கொண்டு நடந்தார்கள்.

அப்போது தன் பெரிய சிறகால்

வீசி ஏரியிலிருந்த பெரிய பாம்பு ஒன்றை கீழ் இறக்கி, ஏரிக்குள் நுழைந்து அதைக் கால்களால் பற்றி, தலையில் கொத்தி ஒரு பெரும் கழுகு உயரே போயிற்று. அதனுடைய சிறகு வீச்சால் மரத்தின் கிளைகள் முறிந்தன. பூமியில் தூசு எகிறியது. காற்று வேகமாக அடித்தது. தொலைதூரத்திலுள்ள மரங்களிலிருந்து பூக்கள் அடித்துக்கொண்டு வந்து தரையில் விழுந்தன. மிகப்பெரிய பூ வாசனை கிளம்பியது. தரையில் விழுந்த புஷ்பங்களை அவர்கள் பொறுக்கி எடுத்து முகர்ந்து பார்த்தார்கள். சௌகந்தி என்கிற ஒரு வித தாமரைப்பூ தரையில் இருந்தது. அதை திரௌபதி முகர்ந்து பார்த்தாள். "எங்கிருக்கிறது இது?" என்று கேட்டாள்.

"இது கந்தமான பர்வதத்திலிருந்து வருகிறது. அதோ அந்த உயரம்தான் கந்தமான பர்வதத்தின் உச்சாணி இடம். அங்குதான் நகரம் இருக்கிறது. குபேரனுடைய பட்டணம்" என்று பீமன் கைகாட்டினான்.

அவள் மீண்டும் முகர்ந்து பார்த்தாள். நெஞ்சில் வைத்துக் கொண்டாள். தலையில் சூடிக் கொண்டாள். இன்னொன்றை எடுத்து காதில் சொருகிக் கொண்டாள். பெரிதாகக் கோர்த்து மாலையாக போட்டுக் கொள்ளலாமா என்று நினைத்தாள்.

பீமன் தனியாக நின்றபோது கால்களை நீரில் வைத்து இளைப்பாறியபோது பீமனுக்கு அருகே நெருங்கிப் போனாள். 'எனக்கு இந்தப் பூக்கள் வேண்டும்' என்று கொஞ்சினாள்.

"என்ன பூக்கள்?"

"சௌகந்திகா என்று சொன்னீர்களே. கந்தமான பர்வதத்தின் உச்சியிலிருந்து அடித்து வந்ததே. குபேர பட்டணத்தில் ஏகமாக இருக்கும் என்று சொன்னீர்களே. அவை எனக்கு வேண்டும். இவற்றை நாம் உபயோகப்படுத்தக்கூடாதா? இவற்றை சரமாகத் தொடுத்து உங்கள் கழுத்தில் நான் போடக்கூடாதா? மனிதர்களுக்கு இது ஆகாதா? இதை யட்சர்களும், ராட்சஷர்களும் தான் அனுபவிக்க வேண்டுமா? எவ்வளவு அழகாக இருக்கிறது அந்தப் பூக்கள். எவ்வளவு திடமாக இருக்கிறது. எவ்வளவு மகரந்தம். என்ன நெடி? எவ்வளவு மனதை மயக்குகிறது. உயர்த்தியான பொருட்கள் மனிதருக்கு இல்லையென்று யார் மறுப்பது? இது என்ன கூத்து? சௌகந்திகா மலர்கள் அஸ்தினாபுரத்திற்கும், மற்ற இடங்களுக்கும் கிடைக்கட்டுமே."

பெண்கள் தந்திரமானவர்கள். திரௌபதி நைச்சியமாகப் பேசினாள். பீமன் வாய்விட்டு சிரித்தான். "நாம் கந்தமான பர்வதத்திற்குத்தான் போய்க்கொண்டிருக்கிறோம். நாளை அதன் உச்சியை அடைந்து விடுவோம். குபேர பட்டணத்தை பார்க்கத்தான் போகிறோம். வேண்டுமென்ற மலர்களும், அதன் செடிகளும் நமக்கு கிடைக்கும். மனிதர்கள் மனம்போல அதை அனுபவிக்கலாம். திரௌபதியின் பெயர் சொல்லி தலையில் சூட்டிக் கொள்ளலாம்" என்று அவன் சொல்ல, அவள் சந்தோஷத்தோடு வெட்கப்பட்டாள்.

மனைவியை குளிர்விப்பதும், மனைவியை புருஷன் சந்தோஷப்படுத்துவதும் உலகத்தின் இயல்பு. வனவாழ்க்கை மேற்கொண்டாலும், அருகே புருஷன் மனைவி அன்புக்கு சிறிதும் குறைவில்லாமல் அவர்கள் வாழ்க்கை தொடர்ந்தது. போகப்போக மலை உயரமாக இருந்தது. ஒரு பனைமர உயரத்திற்கு மதில் சுவர்போல மலைச் சுவர்கள் இருந்தன. பாறைகளில் கைவைத்து பீமன் நிதானமாக ஏறினான். திரௌபதியை தோளில் இடுக்கிக் கொண்டான். சகோதரர்களும் பின்தொடர்ந்தார்கள்.

பனிபடர்ந்த மலை பின்னே இருக்க, முன்பக்கம் இருந்த பசுமையான மலைகளில் பட்டணம் நிறுவப்பட்டிருந்தது. பெரிய மதில் சுவர்கள் இருந்தன. உச்சி வேளையில் மந்தமான சூழ்நிலை இருந்ததால் வெயிலும் அற்று, குளிரும் அற்று இருந்ததால் அந்த குபேர பட்டணம் அமைதியாய் அரை தூக்கத்தில் இருந்தது.

பீமன் போர்க் கவசத்தை உதறி அணிந்து கொண்டான். இடுப்பு வேட்டியை இறுக்கிக் கொண்டான். சங்கு எடுத்து மிகப்பெரியதாய் போர் ஒலியை எழுப்பினான். குபேரப் பட்டணம் அல்லோலகப்பட்டது. தடேர் தடேர் என்று கதவுகள் திறந்தன. யார் என்று பார்த்தார்கள். தொலைதூரத்தில் பீமன் கால் அகட்டி யுத்தத்திற்கு தயாராக இருந்ததைப் பார்த்து, 'மானுடன் மானுடன்' என்று கூச்சலிட்டார்கள்.

வீட்டுக்குள் போய் ஆயுதங்கள் எடுத்து வந்தார்கள். குதிரைகளை அவிழ்த்து அதில் ஏறினார்கள். குபேரனுடைய சினேகிதன் மணிமான் என்பவன் முதலில் வெளிவந்தான். "என்னத் திமிர் மனிதா உனக்கு. எங்கள் காதுபட சங்க நாதம் எழுப்புகிறாயா? போருக்கு அழைக்கிறாயா? உங்கள் ஊருக்குள் வந்து உதைத்தால் ஓடி ஒளிந்து கொள்பவர்கள் நீங்கள். எங்கள் ஊருக்கு வரும் அளவுக்கு திமிர் வந்து விட்டதா? பாண்டவர்கள் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் கந்தமான பர்வதம் ஏறும் அளவுக்கு திமிர் உள்ளவர்களா நீங்கள். உடைத்து விடுகிறேன்" என்று ஆவேசமாக குதிரையை செலுத்தி பீமனை நோக்கி ஓடி வந்தான்.

பல ஆயுதங்களால் கடுமையான யுத்தம் நடந்தது. அவற்றை பீமன் தன் கதையால் அடித்து நொறுக்கினான். முன்னேறினான். எதிர்பட்டவர் அத்தனை பேரையும் அடித்துச் சிதைத்தான், உயரத் தூக்கி பந்தாடினான். குத்தியும், கிழித்தும் எலும்புகளை உடைத்தும் யுத்தம் செய்தான். மணிமானுக்கு முன்னாடி இருந்த அத்தனை வீரர்களும் கருண்டு வீழ்ந்தார்கள். பலர் இறந்து போனார்கள். மணிமானுக்கு அருகே போய் அவன் ஆயுதங்களை எடுக்கும் முன் ஓங்கி அவன் மீது கதையைச் செலுத்தினான். முகத்தில் அடித்தான். மணிமானால் அந்த வேகத்தை அவன் அடியை தாங்க முடியவில்லை. பீமனுடைய கதைக்கு மணிமான் பலியானான். மணிமானுக்கு பின்னால் வந்த

அசுரர்கள் வேகமாக கலைந்தார்கள். குபேரனிடம் ஓடினார்கள். "ஒரு மனிதன் பல ராட்சஷர்களைக் கொன்று குவித்து வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறான். உமது அரண்மனை கதவுகளை உடைத்து விடுவதுபோல நெருங்கிக் கொண்டிருக்கிறான். அரக்கர்கள் பலர் இறந்து விட்டார்கள். யட்சர்களால் தாக்கு பிடிக்கவே முடியவில்லை" என்றெல்லாம் கதறினார்கள்.

"பீமனா! இரண்டாம் முறை தவறு செய்கிறான்" என்று சொல்லி, குதிரையை தேரில் பூட்டச் சொன்னான் குபேரன். தேர் பூட்டப்பட்டது. ஏறி அமர்ந்தான். கடும் கோபத்தோடு யுத்தக்களம் நோக்கிச் சீறினான்.

என்ன இது. யுத்த களமா, இல்லை பலி கொடுக்கின்ற இடமா, பூமியிலேயே மிக வலுவுள்ள ராட்சஷர்கள் பிரிந்து சிதறிக் கிடக்கிறார்கள். முகம் நசுங்கி கிடக்கிறார்கள். வன்முறை என்பது ஒரு வரையறைக்கு உட்பட்டது என்று யுத்த சாஸ்திரம் சொல்லும். ஆனால் அதை தவிடுபொடியாக்கி வதைத்தல் என்பதுதான் வன்முறை. அதுதான் உட்சபட்சம் என்று தண்டிப்பதை அவன் பார்ப்பது இதுவே முதல் தடவை. இந்த தண்டித்தல் பயமுறுத்தியது. வயிறு குழைய வைத்தது.

மணிமான் சிநேகிதமானதே அவனுடைய பராக்கிரமத்தை உத்தேசித்துதான். இவ்வளவு பலமா, இத்தனை வேகமா, இவ்வளவு துணிச்சலா என்று வியந்திருந்த நண்பன் சின்னாபின்னப்பட்டு கிடக்கிறான். கை எங்கே, கால் எங்கே என்றுத் தேடி சேகரித்து வைத்திருக்கிறார்கள். சேகரித்து வைத்திருக்கும் குவியல்தான் தன்னுடைய சினேகிதன் என்று பார்க்கும்போது உடம்பு நடுங்கிற்று. அவன் நிமிர்ந்து தருமபுத்திரரை பார்த்தான்.

பாண்டவர்கள் மிகப் பெரிய வீரர்கள். அவர்களுக்கு கிருஷ்ணர் துணை இருக்கிறார். கிருஷ்ணர் சத்திய சொரூபம். கடவுளின் ஒரு ரூபம் என்று சொல்லப்பட்டிருந்தது. குபேரன் நம்பினான். ஆனால் எங்கும் பரந்திருக்கின்ற நாராயணர் எதற்கு பஞ்சபாண்டவர்களை நேசிக்கிறார் என்று கேள்வி வந்தது. அதற்கு விடை கிடைக்கவில்லை. இப்போது கிடைத்துவிட்டது. உலகத்தை சரி செய்வதற்கு பஞ்சபாண்டவர்கள் என்கிற ஆயுதத்தை கிருஷ்ணர் பயன்படுத்தியிருக்கிறார். அந்த ஆயுதங்கள் கூர்மையானவை. உறுதியானவை. எவராலும் கட்டுப்படுத்த முடியாதவை.

பீமன் என்கிறவனுடைய ஆட்டமே இப்படி எனில் அர்ஜுனனுடைய ஆட்டம் எப்படி இருக்கும். பீமனுடைய சரமே பலபேரை கொத்தித் தூக்கிப் போட்டது எனில், அர்ஜுனன் சரம் எங்கிருக்கும். அர்ஜுனன் களத்தில் இருந்தால் என்வீட்டு கதவு உடைந்திருக்கும். என்னை அடித்து இழுத்து வந்திருப்பான். என்னை சுவரோடு தைத்திருப்பான். பீமன் ஒருவனுக்கே சர்வநாசம் விளைகிறது எனில், அர்ஜுனனும் இங்கிருந்தால் இன்னும் மோசமாக இருந்திருக்கும். ஐந்து பேரும் ஆயுதங்களோடு வாசலில் வரிசைப்பட்டிருந்தால் குபேரப்பட்டணம் அதோகதி என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

எதனால் இது? ஏன் இது? பாண்டவர்களுடைய பலமா, இல்லை வேறு ஏதாவதா என்று யோசிக்கும்பொழுது அவன் காதருகே அவன் மாதிரி ஏதோ சொன்னான். அவனுக்குப் புரிந்தது.

இது பாண்டவர்களுடைய பலம்தான். பீமனுடைய பராக்கிரமம்தான். ஆனால் தன்னுடைய நண்பன் இறந்ததற்கு ஒரு சாபம் காரணம் - அகத்தியர் சாபம். யட்சன் என்கிற திமிரில், அலட்டலில், அதீத கர்வத்தில் அகத்தியர் என்ற அற்புதமான முனிவர் மீது அவன் எச்சில் உமிழ்ந்தான். உயரே பறக்க முடிந்த ஒரே காரணத்தால் காலின் கீழ் இருக்கின்றவர்களெல்லாம் துச்சம் என்று நினைத்தான்.

"எங்கு பறந்தால் என்ன. நீ அடிபட்டு சாகப் போகிறாய். என்னை துச்சம் என்று நினைத்தாயல்லவா, நீ துச்சம் என்று நினைக்கின்ற மனிதனால் வதைசெய்யப்பட போகிறாய். ஜெயிக்க முடியாதவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிற ராட்சஷ கூட்டம் அழியும். யட்சகர்கள் உதை வாங்குவார்கள்" என்று மிகுந்த கோபத்தோடு இதே கந்தமான பர்வதத்தில் அவர் சொல்லியிருக்கிறார். அது நடந்துவிட்டது.

குபேரனுக்கு உடம்பு உதறிப் போட்டது. அவன் தேரை விட்டு இறங்கினான். கைகளை கூப்பியவாறு தருமரை நோக்கி நடந்தான். பீமன் கைகூப்பி வருகின்ற குபேரனைப் பார்த்து விலகி நின்றான். தருமபுத்திரரை பார்த்து குபேரன் குனிந்து வணங்கினான். "உங்கள் வரவு நல்வரவாகுக. கந்தமான பர்வதத்திற்கு நீங்கள் வந்தது எங்கள் பாக்கியம்" என்றான்.

நடு யுத்த களத்தில் அரக்கர்களும், யட்சர்களும் அடிபட்டு முனங்குகின்ற சப்தங்களுக்கிடையே அவன் உரத்து இப்படி சொன்னது திரௌபதிக்கு சிரிப்பை உண்டு பண்ணியது. உதை வாங்கியபின்தான் இது தெரிந்ததா என்ற கேள்வி வந்தது. மனிதர்கள் புறக்கணிக்கப்படத் தக்கவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தீர்களே அது இப்பொழுது என்ன ஆயிற்று. அங்கே ஒரு மலர்கூட போகக்கூடாது, ஒரு செடிகூட நகரக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்திருந்தீர்களே அது இப்பொழுது என்ன ஆயிற்று. எவருக்குக் கடவுள் அருள் உண்டோ அவரே வலிவு மிக்கவர். எவருக்கு இறையின் அண்மை உண்டோ அவரே தைரியம் மிக்கவர். நீ அகலமும், உயரமுமான ஆயுதங்களைக் காட்டி ஜெயித்து விடுவேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் முட்டாள் என்று மனம் பேசிற்று. ஆனாலும் புருஷர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கூர்மையாக அந்த அரசியலை அவள் கவனித்துக் கொண்டிருந்தாள்.

பீமனின் பராக்கிரமம் மட்டும் அல்ல. அகத்தியர் சாபம், மணிமானுடைய இறப்பு இரண்டும் எப்போதோ தீர்மானம் செய்யப்பட்டுவிட்டது. இவன்



இப்படித்தான் இறப்பான் என்று எங்களுக்கு சொல்லப்பட்டுவிட்டது. பீமனுடைய வலிவு பற்றி கேள்விப்பட்டிக்கிறோம். இதோ கண்ணெதிரே பார்த்திருக்கிறோம். நீங்கள் செயற்கரிய செயலை செய்வதற்காக வனம் புகுந்திருக்கிறீர்கள். க்ஷத்திரியர்களின் கொட்டம் அடங்குவதற்காக நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். ஆமெனில் உங்களுக்கு யட்சர்களோ, ராட்சஷர்களோ இணையே இல்லை. இந்த கந்தமான பர்வதம் உங்களை வரவேற்கிறது. மணிமான் மரணத்திற்காக நீங்கள் பீமனை கோபித்துக் கொள்ள வேண்டாம். இது தவறாயிற்று என்று நினைத்து சஞ்சலப்பட வேண்டாம். யட்சர்கள் உங்களுக்கு எதிரிகள் அல்ல. இந்த குபரேனும் எதிரி அல்ல."

கொம்பு சத்தத்தினை கேட்டு சமாதானம் என்பதை புரிந்து கொண்டார்கள். பீமனை பார்த்து கை கூப்பினார்கள். 'உள்ளே வருக' என்று வரவேற்றார்கள். கின்னரர்கள் பாடினார்கள். அப்ஸரப் பெண்கள் ஆடினார்கள். யட்சர்கள் அனுபவிக்கின்ற அந்த கானங்கள், நடனங்கள் மனிதர்களுக்கு விருந்தாயின. பீமன் என்கிற ஒரு தனி மனிதன் இதை சாதித்து காட்டினான். மனிதர்கள் புறம்பானவர்கள் அல்ல என்று யட்சர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். வீரர்கள் எதிலும் உண்டு என்று புரிந்து கொண்டார்கள். பீமனுடைய பராக்கிரமம் அரக்கர்களின் உடம்பில் தெரிந்தது.

"சௌகந்திகா..." என்று மெல்ல பீமனுக்கு திரௌபதி ஞாபகப்படுத்தினாள். அது கூர்மையான செவித்திறன் உடைய குபேரனுக்கு கேட்டது. "அந்த மலரை நினைத்துதான் பல பேர் இங்கு வருகிறார்கள். புறந்தள்ளப்படுகிறார்கள். உங்களுக்கு அந்த மலர் கிடைக்கும். செடியும் கிடைக்கும். நீங்கள் உங்கள் தேசத்திற்கு எடுத்துப் போகலாம்" என்று குபேரன் பணிவோடும், நிதானத்தோடும் திரௌபதியைப் பார்த்து பேசினான்.

வெற்றி பெற்ற புருஷனின் தோளை நெருங்கி தொட்ட வண்ணம் திரௌபதி பட்டணப் பிரவேசம் செய்தாள்.

தருமரும், நகுலனும், சகாதேவனும் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற குபேர பட்டணத்து யட்சர்களை, சுக சௌகரியங்களை கண்டு வியந்தவாறு, அதன் சுத்தத்தை நேசித்தவாறு பட்டணப் பிரவேசம் செய்தார்கள். அவ்விதமாய் கந்தமான பர்வதம் மனிதர்களுக்காக திறந்து விடப்பட்டது.

அதிக அட்டகாசம் செய்கின்ற அரக்கர்களை அடக்கி வைக்கவும், நெருங்கிய வனங்களில் வழி ஏற்படுத்தவும், வனங்களிலுள்ள கொடிய மிருகங்களை ஒரு கட்டுக்குள் கொண்டு வரவும் ஏற்பட்டது. அதைப் பாண்டவர்கள் செவ்வனே செய்தார்கள்.

(தொடரும்)

பாசுபதாஸ்திரம் அருளிய பரமேஸ்வரன்!

பாலகுமாரன்

மகாபாரதம்

56

குபேரனால் நன்கு உபசரிக்கப்பட்டு, அங்கு சில நாட்கள் ஓய்வு எடுத்து, ஊர் சுற்றிப் பார்த்து, விதம் விதமான மலர்களையும், மரங்களையும், பறவைகளையும், மிருகங்களையும் கண்டு சந்தோஷப்பட்டு குபேர பட்டிணத்திற்கென்ற தோலாடை அணிந்து, அந்த குளிர் காற்றை நன்கு சுவாசித்து, மிகுந்த உற்சாகம் உடையவராய், பலம் பொருந்தியவராய் நுரையீரலும், இருதயமும் மிகச் சுத்தமாய் இயங்கக் கூடியதான வலிவோடு அவர்கள் இருந்தார்கள்.

ஓய்வாக இருக்கும்பொழுது அர்ஜுனன் பற்றிய எண்ணம் வரும். 'இந்த இடங்களையெலாம் அவன் பார்த்திருக்கிறானா தெரியவில்லையே. இங்கே எவ்வளவு நிம்மதியாக இருக்கிறோம். அத்தனை அமைதி அவனுக்கு இப்போது இருக்குமா தெரியவில்லையே. எங்கு எப்படி அவஸ்தைப்படுகிறானோ' என்று தருமர் புலம்ப, மற்றவர்கள் மௌனமாய் அதை எதிர்கொள்வார்கள். சில சமயம் திரௌபதி கண்ணிலிருந்து கண்ணீரும் வழியும். சகாதேவனுக்கு அருகே போய் 'கிரகங்கள் ஏதும் தவறாக சொல்கிறதா?' என்று கவலையோடு கேட்க, சகாதேவன் சிரிப்பான்.

"ஒரு நாளும் இல்லை. எல்லா கிரகங்களும் அர்ஜுனனுக்கு ஆதரவாகத்தான் இருக்கின்றன. செயற்கரிய செயலை செய்து கொண்டிருக்கிறான் என்றுதான் என் உள்ளுணர்வு சொல்கிறது. சிறிதளவும் கவலைப்பட வேண்டாம். வெகு சீக்கிரம் அவன் நம்மை சந்திப்பான் என்றுதான் நம்முடைய கிரகங்கள் சொல்கின்றன."

அவர்கள் குபேர பட்டிணத்திலிருந்து விடை பெற்றுக் கொண்டார்கள். இன்னும் பல சிகரங்களை ஏறிப் பார்க்க விரும்பினார்கள். இங்கிருந்து பார்க்கும்போது அந்த சிகரங்கள் கூம்பாகத் தெரிந்தாலும் அருகே போனால் மிகப் பெரிய சமதளமாக இருக்கும் என்று சொல்லப்பட்டது.

பச்சை போர்த்தியதுபோல் இருக்கின்ற மலைகளெல்லாம் அடர்ந்த வனங்களுடையவை. அங்குள்ள மரங்களெல்லாம் பத்து கோல் உயரமுடையவை. அந்த வனங்களில் வழித்தடங்கள் உண்டு. அதில் கால்பதித்து ஏறினால் எளிதில் மலைச் சிகரத்திற்கு போய்விடலாம் என்று வழிகாட்டப்பட்டது. குபேரன் கொடுத்த தோல் உடைகளோடு, பாதணிகளோடு மலைகளில் அவர்கள் ஏறத் துவங்கினார்கள்.

ஒருவர் உடம்பை வலுப்படுத்த இந்த இமய மலை பயணத்தைவிட அற்புதமான விஷயம்



எதுவும் இல்லை என்று அவர்களுக்குத் தோன்றியது. இந்தப் பயணமேகூட ஒரு கடும் யுத்தத்திற்கு ஏற்பாடு செய்கிறது. தகுதியாக வைக்கிறது.

துரியோதனனுக்கும், துச்சாதனனுக்கும் இந்த சுகங்கள் கிடைக்காது. இவை மிகப்பெரிய வேதனைகள் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சரியான உணவில்லாமல், சரியான உடையில்லாமல், சரியான துணையில்லாமல் எந்நேரமும் வனத்தில் பயந்து பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று துரியோதனன் நினைக்கிறான். வனத்திலுள்ள கொடிய மிருகங்களைக் கண்டு பயந்து வாழ்கின்ற சூழ்நிலை வந்துவிட்டது அவர்களுக்கு என்று சிரிக்கவும் கூட செய்யலாம். ஆனால், பீமனின் கண்களை பார்த்து மிருகங்கள் மிரண்டு ஓடுகின்றன!

இன்றைக்கு என்ன நாள் என்று சகாதேவன் துல்லியமாகக் கணக்கு வைத்திருக்கிறான். அதற்கேற்ப அந்தந்த நாட்களின் மகிமைகளை கொண்டாட முடிகிறது. பிரதோஷகால சிவ பூஜையும், ஏகாதசி விரதமும், துவாதசி பாராயணமும் நிம்மதியாக செய்ய முடிகிறது.

ஊதற்காற்று நேரில் மோதாத பாறை இடுக்கிலோ அல்லது குகையிலோ இரவு தங்க முடிகிறது. பிறகு, சுடுநீர் சுனையும், குளிர்நீர் சுனையும் இருக்கும் இடம் தேடிப்போய் உடம்பைச் சுத்தம் செய்து கொண்டு உணவு எடுத்துக் கொள்ள முடிகிறது. மெல்ல சிரம பரிகாரம் செய்துவிட முடிகிறது. பிறகு அமைதியாய் மனதை ஏகாக்கிரகத்தில் வைப்பதற்கு இயலுகிறது. இதைத் தண்டனை என்று துரியோதனன் நினைத்தால் அவன் மிகப் பெரிய முட்டாள். ஒரு அரசனை வலுவடையச் செய்கின்ற மிக அற்புதமான காலம் இது. க்ஷத்திரியர்களை பலம் பெறச் செய்கின்ற சுகம் இது.

ஒரு மலைச் சரிவில் ஏறும்போது எதிரே அந்த சரிவிலிருந்து யாரோ வேகமாக வருவது தெரிந்தது. சரிவு என்பதால் நடை ஓட்டமாக இருந்தது. துள்ளலாக இருந்தது. யார் இத்தனை விரைவாக வருவது என்று கூர்ந்து கவனித்தார்கள். ஆயுதங்களில் கை வைத்தார்கள். திரௌபதி உற்றுப் பார்த்தாள்.

அந்தச் சிகை, அந்தத் தோள்கள், அந்த புஜங்கள், அந்த இடுப்பின் குறுகல், மார்பின் அகலம், எங்கோ ஒருமுகச் சாயல். சட்டென்று அவளுக்கு புரிந்துவிட்டது. “அது அர்ஜுனன், அது அர்ஜுனன், அது அர்ஜுனன்” என்று கூவினாள்.

அவர்கள் திகைத்து நின்றார்கள். ஆயுதங்களிலிருந்து கைகளை எடுத்தார்கள். அர்ஜுனன் வருகின்ற திசைநோக்கி பீமன் ஓட மற்றவர்களும் வேகமாகப் பின் தொடர்ந்தார்கள்.

மலைச் சரிவிலிருந்து கீழே இறங்குகின்ற அர்ஜுனனும் முழு வேகத்தோடு மலையில் ஏறுகின்ற பீமனும், வடதிசை காற்றும், தென்திசை காற்றும் ஒன்றோடு ஒன்று நெருங்குவது போல் நெருங்கி, ஒன்றோடு ஒன்று மோதுவது போல் மோதி இறுக்க தழுவிக் கொண்டார்கள். சுற்றினார்கள். கன்னங்களில் முத்தம் கொடுத்துக் கொண்டார்கள். தலைமயிரை இறுக்கப் பிடித்துக் கொண்டார்கள். அழுதார்கள். சிரித்தார்கள். படேர் படேர் என்று அடித்துக் கொண்டார்கள். மடக்கி மாறி மாறி தரையில் சாய்த்தார்கள். வலிவு மிக்க இரண்டு வீரர்கள் எப்படி சந்தோஷத்தை கொண்டாடுவார்களோ அப்படி கொண்டாடினார்கள். வெட்டுப்பட்ட மரம் போல தடேர் என்று அர்ஜுனன் தரையில் விழுந்தான். தருமரின் கால்களை தொட்டான்.

தருமர் கை கூப்பினார். ‘ஹே கிருஷ்ணா... ஹே கிருஷ்ணா’ என்று மனமாற அழைத்தார். நன்றி சொன்னார்.

நகுலன் அர்ஜுனனை சுற்றி வந்தான். சகாதேவன் ஹோரை நேரத்தைக் குறித்துக் கொண்டான்.

திரௌபதி தொலைவிலிருந்து அர்ஜுனனை ஆவலோடு பார்த்தாள். அர்ஜுனன் மெலிந்திருந்தான். உறுதியாக இருந்தான். கேசங்கள் செம்பட்டையாக இருந்தன. முகம் கருமையாக மாறி இருந்தது. பாதரட்சை தாண்டி முழங்கால் வரை தூசு இருந்தது. கண்களில் தூக்கமின்மை தெரிந்தது. ஆனால், முகம் ஒளிமயமாக இருந்தது. அவன் வில்லை ஊன்றி நகுலனுக்கு கைநீட்டி ஆலிங்கனம் செய்ய அழைத்தபோது அனைவரும் அவனை மறுபடியும் பார்த்தார்கள். முன்னைவிட பல மடங்கு கம்பீரனாய் அவன் இருப்பது தெரிந்தது.

அவன் நகுலனையும், சகாதேவனையும் இறுகத் தழுவிக் கொண்டான். தலையில் கைவைத்து ஆசீர்வதித்தான். என்னை ஆளும் சிவன் உங்களுக்கு சகல நன்மைகளும் தரட்டும் என்று சொன்னான். சகாதேவன் அவன் கையை உச்சியில் வைத்தபோது கையிலிருந்து மிகப் பெரிய சக்தி தன் உடம்புக்குள் பரவியதை உணர்ந்தான். அர்ஜுனன் தரிசனம் பெற்றிருக்கிறான் என்பது தெரிந்தது. ஆனாலும், அவன் சொல்லட்டும் என்று காத்திருந்தான்.

திரௌபதி உள்ளே கனிந்து கிடந்தாள். ஐந்து வருடங்களுக்கும் மேலாக பிரிந்து இருந்த தன் ஆசையான புருஷன் எதிரே வில்லும், அம்பறாத் தூணியுமாய் வந்து நின்றபோது வயிறு குழைந்தாள். கால்களில் நிற்கின்ற சக்தி இல்லாது போயிற்று. பாதங்கள் தடுமாறின. கழுத்து வளைந்தது. இடுப்பு நெகிழ்ந்தது. கண்களில் நீர் கட்டியது. கன்னங்கள் சிவந்தன. காதுகள் சூடேறின. நெஞ்சு விம்மிற்று. மெல்ல முன்னேறி அர்ஜுனனை வணங்கி எழுந்தாள்.

அர்ஜுனன் அவள் முகத்தை தன் கைகளால் ஏந்திக் கொண்டான். நெற்றியில் முத்தமிட்டான். முதுகு தடவினான். புஜத்தை இறுக்க பிடித்தான். கைகளை கோர்த்துக் கொண்டான். இடுப்பில் கைபோட்டு சுற்றி தனக்கு அருகே அணைத்துக் கொண்டான். அவனுடைய தொடல் ஒவ்வொன்றும் அவருக்குள் புதுச் சக்தியை ஏற்றின. ஏதோ ஒன்று தெளிவாக திட்டமிட்டு



புரிந்துகொண்டு அர்ஜுனன் செய்கிறான் என்பது அவனுடைய நடவடிக்கைகளில் தெரிந்தது. அது வெறும் விரல் அல்ல. வேறு ஏதோ. அது சாதாரண உள்ளங்கை அல்ல. வேறு ஏதோ ஒரு செய்தி அதில் இருக்கிறது. அர்ஜுனன் பார்வையில் காதல் இல்லை, கனிவு இருந்தது. அர்ஜுனன் கை கோர்த்துக் கொள்ளும்போது மிகப் பெரிய சிநேகம் இருந்தது. அன்பு இருந்தது. ஆதரவு இருந்தது. அவர்கள் வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள். கிருஷ்ணனை நினைத்துக் கொண்டார்கள்.

“உன் அனுபவத்தை சொல் அர்ஜுனா,” அன்போடு தருமபுத்திரர் கேட்டார். அர்ஜுனன் தொண்டையை செருமிக் கொண்டான். எல்லோரும் அவனை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“சிவபெருமான் கைலாசத்தில்தான் இருக்கிறார் என்று எல்லோரும் சொல்லக் கேள்விப்பட்டு நானும் கைலாசம் எங்கேயிருக்கிறது என்று தேடிக் கொண்டு நடந்தேன். பனி படர்ந்த மலை, மலை உச்சியில் குகை என்று சொல்லப்பட்டது. நான் அதை நாடியே நகர்ந்து போனேன். ஒரு காட்டாற்றின் விளிம்பில் ஒரு அந்தணர் அமர்ந்திருந்தார். ‘தன்னந்தனியாக இந்த இடத்தில் எங்கு நடந்து கொண்டிருக்கிறாய். வீரனே எதை நோக்கி உன் பயணம்’ என்று கேட்டார். நான் உள்ளதை உள்ளபடிச் சொன்னேன். அவர் எழுந்து ஆரத்தழுவிக் கொண்டார். ‘செயற்கரிய செயலை செய்யப் பிறந்தவன் நீ. சாதனையாளன். உன் முயற்சிகள் வெல்லட்டும். கைலாசம்வரை நீ போக வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு முன்னரே நீ சிவனை சந்திப்பாய். ஆனால், சிவனைக் குறித்து தவம் செய். தவமே சிவனை அருகே கொண்டு வரும்’ என்று சொன்னார்.

நான் மலையில் கிடக்கும் கிழங்குகளையும், கனிகளையும் உண்டு அமர்ந்தபடி தவம் செய்தேன். பிறகு ஆறுமாத காலம் நீர் மட்டுமே அருந்தி தவம் செய்தேன். பிறகு, நின்றபடி தவம் செய்தேன். பிறகு காற்றையே உண்டு ஒற்றைக் காலை உயரே தூக்கி சிவதரிசனமே எனக்கு முக்கியம் என்று தவம் செய்தேன்.

மனமும், உடம்பும் ஒரே லயத்தில் மிக அழகாக இணைந்துவிட்டது. என் முயற்சி இன்றியே அது ஒன்றாகிவிட்டது. மனம் என்ன முயல்கிறதோ அதற்கு உடம்பு அழகாக ஈடு கொடுக்கிறது. மனம் அமைதியாக இமயமலைச் சாரலைவிட அற்புதமான இடம் வேறு எதுவும் இல்லை. காற்றினுடைய அசைவைத் தவிர வேறு எந்த ஓசையும் இல்லை. பூச்சிகள் எதுவும் இல்லை.

ஊர்வன எதுவும் அண்ட வருவது இல்லை.

குளிருக்கு உடம்பு பழக்கமாகிவிடுகிறது. உடம்பு தன்னைத்தானே சூடுபடுத்திக் கொள்கிறது. சிவனுடைய ஆட்சிதான் இங்கு என்று தெரிந்தபிறகு இங்கே எந்த இடத்தில் சிவன் இருப்பார் என்ற எண்ணம்தான் அதிகரிக்கிறது. பகலில் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்து இரவில் எங்கேனும் குகையில், பாறை இடுக்கில் சுருண்டு தூங்கி வாழ்கிறபோது என் பெயரே எனக்கு மறந்து போகிறது. எதற்கு வந்திருக்கிறேன். எனக்கு என்ன வேண்டும் என்பதும் மறந்து போகிறது. இது ஒரு தனித்த ஏகாக்கிரகம். சிவனைத் தவிர வேறு எதுவும் சிந்திக்காத மனோநிலைமை.

நான் ஒருநாள் விடியற்காலையில் என் தவம் துவங்கியபோது, ஒரு பன்றியின் உறுமல் சப்தத்தை கேட்டேன். பன்றி மிக வேகமாக இடதும், வலதும் அலைந்து கொண்டிருந்தது. பெரிய வளைந்த தந்தங்களுடைய அந்தப் பன்றி மண்ணைக் கிளறியது. செடிகளை பிடுங்கிப் போட்டது. மரங்களின் பட்டைகளை உரித்தது. பூமியை விரைவாகத் தோண்டியது. என்னை நோக்கி அது கோபமாக வந்தது. எனக்கு அந்தப் பன்றியின் மீது எந்த துவேஷமும் இல்லை. ஆனால், அந்தப் பன்றி என்னை துவேஷமாகப் பார்த்தது என்னை அழிக்க வேண்டும் என்று எண்ணியது. நான் வேறு வழியின்றி என் வில்லை வளைத்து நாணேற்றி அம்பை தொடுக்கத் தயாராக இருந்தேன். பன்றி ஆட்டம் காட்டியது. அப்பொழுதுதான் அந்தப் பன்றியை துரத்திக்கொண்டு ஒரு வேடன் வந்திருப்பது தெரிந்தது. அவன் மலை உச்சியில் ஏறி அந்தப் பன்றி எங்கே என்று தேடுகிறான். பின்னால் அவனைச் சார்ந்த பெண்கள், 'இங்கே இருக்கிறது. அங்கே இருக்கிறது' என்று சுட்டிக் காட்டினார்கள். 'இதோ அந்த இடத்தில் இருக்கிறதே' என்று அருகே இருக்கின்ற பன்றியை அவனுக்கு இனம் காட்டினார்கள்.

வில் வளைத்து சரம் தொடுத்து தயாராக இருந்த நான் அந்தப் பன்றியை ஒரே வீச்சில் அடித்துவிட வேண்டுமென்று காதுவரை நாணை இழுக்க, அந்த வேடன் மிக வேகமாக செயல்பட்டு அம்பு செலுத்தினான். என் அம்பு தைப்பதற்கு முன்பு பன்றியின் நெஞ்சில் வெகு ஆழத்தில் அந்த வேடனுடைய அம்பானது தைத்தது. பிறகு என் அம்பு தைத்தது. பன்றி நகர முடியாமல் அதே இடத்தில் சுருண்டு விழுந்து செத்தது. அந்தக் கிராதக வேடன் என்னை உற்றுப் பார்த்தான்.

'நான் துரத்தி வந்த பன்றியை நீ வேட்டையாட வேண்டுமெனில் உனக்கு கொஞ்சம் மூளை பிசகு என்று தோன்றுகிறது' என்று ஏக வசனத்தில் ஆரம்பித்தான். 'யாரோ துரத்துகிறார்கள், அதனால்தான் பன்றி இடமும், வலமும் அலைகிறது என்று தெரியவில்லையா? நீ வேட்டைக்கு பழக்கப்படாதவனா, இப்பொழுதுதான் வில் பிடிக்கிறாயா. நான் வளைத்து அம்பு தொடுத்து விட்டேன் என்று தெரிந்த பிறகு நீ உன் அம்பை அனுப்புகிறாயே, இது என்னவிதமான வித்தை?

ஒருவர் கொன்று போட்ட மிருகத்தை நீ கொன்றுவிட்டு நான்தான் கொன்றேன் என்று குதூகலிக்கப் போகிறாயா. நான் அதை கொல்லாமல் இருந்தால் உன் அம்பு அந்தப் பன்றியை வீழ்த்தியிருக்குமா? அம்போடு அந்தப் பன்றி ஓடிவந்து உன்னை நாசம் செய்திருக்கும். என்னுடைய அம்பு துளைத்த வேகத்தை பார்த்தாயல்லவா? உன்னுடைய அம்பைப் பார், மேல் தோலை கீறி நிற்கிறதா, ஊடுருவிதானே நிற்கிறது. அம்பு விடத் தெரியவில்லை. உங்களுக்கெல்லாம் எதற்கு வில். பார்த்தால் க்ஷத்திரியன் போல் இருக்கிறது. எல்லா க்ஷத்திரியனுக்கும் வாய்தான் இருக்கிறதே தவிர, கையில் வேகம் இல்லை' என்று பலவிதமாக, மிக வேகமாக பேசத் துவங்கினான்.

அவன் பேச்சு சுத்தமாக இருந்தது. பண்டிதனைப்போல இருந்தது. அவனுடைய ஒவ்வொரு கேலிக்கும் அங்குள்ள பெண்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். குலுங்கி குலுங்கி சிரித்தார்கள். அவர்களுடைய சிரிப்பு என் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.

'இப்பொழுது என்ன நேர்ந்து விட்டது? உனக்குப் பன்றி வேண்டுமென்றால் எடுத்துக் கொண்டு போ' என்று நான் நிதானமாகச் சொல்ல, 'கொன்று தின்பது க்ஷத்திரியனுடைய வேலை. நாங்கள் வேடர்கள். தேனும், தினைமாவும் போதும். ஏன், நீ வேண்டுமானால் பன்றியை எடுத்துக் கொண்டு போ' என்று இளக்காரமாகச் சொன்னான். பேச்சு அதிகமாக



இருந்தது.

வீண் வம்புக்கு வராதே என்று நான் எச்சரித்தேன்.

'வந்தால் என்ன செய்வாய்' என்று அவன் அடிக்குரலில் கேட்டான்.

உயரமாக, அகலமாக, அழகனாக, கொண்டையில் சிறகுகள் வைத்தவனாக, இடுப்பில் இறுக்கிய புலித்தோல் கட்டியவனாக, முழங்கால் வரையில் தோல் செருப்பு தைத்தவனாக, பாதி கையுறை வைத்தவனாக, அழுத்தமான வில் உடையவனாக, நெற்றியில் செஞ்சாந்து திலகமுடையவனாக, குருந்தாடியுடையவனாக, கழுத்தில் ருத்ராட்சம் அணிந்தவனாக, மிக தேஜஸ்வியாக காணப்பட்டான். அந்த வேடர் குலப் பெண்களும் மிக அழகாக இருந்தார்கள். இந்த மலையில் உள்ளவர்கள் எல்லோருமே இப்படி அழகாகத்தான் இருப்பார்களோ என்று வியப்பில் நான் நின்றேன்.

'பேசினால் என்ன செய்வாய், கொன்றுவிடுவாயா?' என்று கேட்டான். நான் பதில் பேசாது இருந்தேன்.

'உன்னை ஓட ஓட விரட்ட எனக்குத் தெரியும். இந்த இடத்தில் நின்றபடி உன்னுடைய வில்லையும், அம்பையும் அறுத்து உன்னை துணியில்லாமல் ஓடச் செய்ய எனக்குத் தெரியும்' என்று சொல்ல, அந்தப் பெண்கள் வாய்விட்டு சிரித்தார்கள். கற்பனையில் வெட்கப்பட்டார்கள். எனக்கு கோபம் வந்தது. நான் நாணை இழுத்து ரீங்காரம் செய்தேன்.

அவன் நடுங்கியதுபோல் நடித்தான். 'ஐய்யோ அண்ட சராசரங்களும் இடிந்துவிட்டனவே.... இப்பொழுது பார்க்கிறாயா?' என்று அவன் தன் நாணை இழுத்து ரீங்காரம் செய்தான். அண்ட சராசரமும் நடுங்கியது. நான் வியந்தேன். அம்பு என் தலையை நோக்கி வந்து என் சிகையை கலைத்தது. இன்னொன்று இடுப்பில் இறுக கட்டியிருந்த துணியின் சுருக்கை அவிழ்த்தது. இன்னொன்று வில்லின் மீது அடித்தது. இன்னொன்று அம்பறாத் தூணியை அறுத்துப் போட்டது.

நான் கோபமானேன். வேகமாக, பல்வேறு விதமான அஸ்திரங்களை அவன்மீது செலுத்தினேன். அவனை பாணத்தால் மூடினேன். அவற்றை எளிதில் கலைத்துவிட்டு அவன் என்னை அம்புகளால் துன்புறுத்தினான். அம்பு அருகே வந்து சிதறியது. முகம் முழுவதும் புகை படர்ந்தது. கோபமடைந்த நான் வாயுவாஸ்திரத்தை எடுத்து அவன் மீது செலுத்த அந்த வாயுவாஸ்திரம் எதற்கும் பயன் படாது போயிற்று. அவன் காலடியில் விழுந்தது.

அவன் பதிலுக்கு சில அஸ்திரங்களை செலுத்தினான். அது என்னை கட்டிப்போட்டன. என் வில்லை உடைத்தன. அம்பறாத் தூணியை இன்னும் நகர்த்தின. அஸ்திரங்கள் எல்லாம் காலியாயிற்று. எதையும் எடுக்க முடியவில்லை. கத்தியை எடுத்தேன். கத்தி துண்டானது. இன்னும் அருகே ஓடிப்போய் முகத்தில் குத்தினேன்.

அவன் வில்லைக் கீழே வைத்துவிட்டு என்னை கைதட்டி வரவேற்றான். குத்துகின்ற என்னுடைய முஷ்டியை அழுத்திப் பிடித்து வளைத்தான். முகத்தில் அடித்தான். முதுகில் அடித்தான். தூக்கிக் கீழே போட்டான். மறுபடியும் நிமிர்த்தி தரையில் அடித்தான். மடங்கிக் கீழே சாய்ந்தேன். அவன் பெரிதாக உருவம் எடுத்தான். அவனை அசைக்கக்கூட முடியவில்லை. தூக்கவும் முடியவில்லை. அவன் இறுக என்னை தழுவிக் கொண்டான். அழுத்தினான். நான் திமிறினேன். கொஞ்சம் பயந்தேன். இவனை ஜெயிக்க முடியாது என்று நான் நினைத்தேன். அந்த நினைத்த க்ஷணம் அவன் என்னை தளரவிட்டான். தரையில் இறக்கி வைத்தான்.

"அர்ஜுனா.." என்று அழைத்த அந்த வேடன் அந்த இடத்திலிருந்து மாயமாய் மறைந்து போனான். நான் திகைத்தேன். இது சாதாரண குரல் அல்ல. இது தெய்வக்குரல் என்று நாலா பக்கமும் தேடினேன் மெல்லிய மேகக் கூட்டத்திற்கு நடுவே, பனிக் கூட்டத்திற்கு நடுவே ரிஷபாரூடராய் சிவனும், உமையும் நின்றிருந்தார்கள். 'அர்ஜுனா, அற்புதமாக சண்டை போடுகிறாய். எவ்வளவு தொலைவு வந்திருக்கிறாய் ! எவ்வளவு கடுமையாக தவம் செய்கிறாய். என்ன வேண்டும் அர்ஜுனா. உனக்கு எல்லா உதவிகளும் செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். கேள், என்ன வரம் வேண்டுமானாலும் கேள்' என்று ஆதரவாக உற்சாகப்படுத்தினார்.

தேவர்களிடம் இருக்கின்ற அஸ்திரங்கள் அனைத்தும் எனக்கும் வேண்டும் என்று நான் கேட்டேன்.

சிவபெருமான் எல்லா அஸ்திரங்களையும் கொடுத்தார். தன்னையே ஒரு அஸ்திரமாக மாற்றி பாசுபதாஸ்திரம் என்ற அஸ்திரத்தை என்னருகே அனுப்பினார். சிவரூபமாய் அது இருந்தது. எனக்கு அருகே வந்து நின்று கொண்டது. அது என்னுள்ளே ஐக்கியமாயிற்று. பாசுபதாஸ்திரம் இப்பொழுது என்னிடம் இருக்கிறது.

இதைச் சாதாரண மனிதர்கள் மீது செலுத்தாதே. எல்லா அஸ்திரங்களும் வீணான பிறகு வேறு வழியில்லை என்ற பிறகு உன்னை காப்பாற்றிக் கொள்ள இந்த பாசுபதாஸ்திரத்தை பிரயோகம் செய் என்று சொன்னார். நான் சம்மதித்தேன். அவரே இந்திரனிடம் போகச் சொன்னார். இந்திர சபைக்கு வழிகாட்டினார். அங்கிருந்து தேவலோகத்திற்குப்போய் இந்திரனுடைய சபைக்குச் சென்று அவர்களிடமிருந்தும் அஸ்திரங்களை வாங்கி வந்தேன்.

அண்ணா, உலகத்தில் எவர் என்னை எதிர்த்தாலும் அவரை நான் வீழ்த்துவேன். துரியோதனன் ஒரு விஷயமே அல்ல. பாஞ்சாலியின் கூந்தல் துரியோதனன் ரத்தத்தால் தடவப்பட்டு முடிக்கப் போவது உறுதி. நாம் மறுபடியும் அரசாங்கம் அமைக்கப் போகிறோம். அது உறுதி. துரியோதனன் தன்னுடைய கூட்டத்தோடு அழியப் போகிறான் அது உறுதி."

(தொடரும்)

பீமசேனன் தனியாக இருக்கும்பொழுது திரௌபதி அவனுக்கு அருகே போய் அமர்ந்து கொண்டாள். பீமன் அவளை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

"சௌகந்திக மலர்கள் வேண்டுமென்று கேட்டேனே. மறந்து விட்டதா" என்று சற்று கேலியாக சிரிப்போடு வினவினாள்.

"இல்லை. மறுபடியும் ஏதேனும் காற்று சுழன்று அடிக்க அந்த மலர்கள் இங்கு வராதா என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று வானத்தைப் பார்த்தான்.

திரௌபதி வாய்விட்டு சிரித்தாள்.

"இல்லை. நீங்கள்போய் அந்த மலர்களை பறித்து வரவேண்டும். மனிதருக்கு ஆகாத மலர்களா. அந்த மரக்கன்றுகள் நாம் எடுத்து வர முடியாதா. அஸ்தினாபுரத்தில் நடக் கூடாதா. அது என்ன கந்தமாதன பர்வதத்திற்கும், கந்தமான பர்வதத்தின் அரசனான குபேரனுக்கு மட்டுமே சொந்தமானதா. அங்கு மனிதர்கள் போக முடியாதாமே. மலர்களும் கூடாது. மனிதர்களும் மேலே ஏறக்கூடாது. என்ன அற்புதமான இடம். பூமி மனிதர்களுக்குச் சொந்தமானது தானே. கூடாது என்று சொல்ல இவர்கள் யார்? மீறி நீங்கள் போனால் தடுத்து விடுவார்களா என்ன?" அவனை உத்வேகப்படுத்துவதுபோல திரௌபதி பேசினாள்.

பெரிய குளக்கரையில் அமர்ந்திருந்த பீமசேனன் அந்தக் கணமே எழுந்திருந்தான். நேரே தமையனிடம்போய் நமஸ்கரித்தான்.

"திரௌபதிக்கு விருப்பமான சௌகந்திக மலர்களை செடியோடு எடுத்து வர நான் கிளம்புகிறேன். ஆசிர்வதிக்க வேண்டும்" என்றான்.

அவன் சொன்னது விண்ணப்பமாக இல்லாது அவன் விருப்பமாக இருந்தது. அந்த த்வனியில் இருந்த அவசரத்தை அவர் புரிந்து கொண்டார். திரௌபதி பிடித்துத் தள்ளியிருக்கிறாள் என்பதை தெரிந்து கொண்டார்.

"சரி. போய் வா." என்று சொன்னார்.

பறவைகள் அலகோடு அலகிட்டு குலவின. வண்ணத்துப் பூச்சிகள் இடம் மாறின. பெரிய சிவப்பு மலரொன்று மரத்திலிருந்து நழுவி பீமனின் தோளைத்தொட்டு கீழே விழுந்தது. எல்லாம் நல்ல சகுனங்கள்தானே என்று அவன் மனம் நினைத்தது. அவன் கையை வருடி நெஞ்சில் வைத்துக் கொண்டார். "மறுபடியும் போய் வா" என்றார்.

பீமன் மரியாதையாக பின்னடைந்தான். திரும்பினான். கந்தமாதன பர்வதத்தின் உச்சியை நோக்கி நடக்கத் துவங்கினான். உயரமான மலைகளாலும், அழுத்தமான கொடிகளாலும் அந்த மலை பின்னப்பட்டிருந்தது. மனிதர்கள் நுழைய முடியாதபடி இறுக்கமாக இருந்தது. சிறிய இடைவெளியில் மிருகங்கள் புகுந்து உலாவின. மனிதர்கள் வரவு கண்டு பட்சிகள் இடம் மாறின. உரக்கக் குரல் கொடுத்தன. எழுந்து அடங்கின.

பாறைகள் பிடித்து பீமன் ஏற வேண்டியதாயிற்று. நீலவண்ணமும், பொன் வண்ணமும், சிவப்பு வண்ணமும் உடையதான பாறைகள் பல்வேறுவிதமான தாதுக்களை கொண்டவை. அவன் உடம்பில் பட்டு அவனின் உண்மையான நிறத்தை மாற்றியது. ஏதோ கூத்துக்கு வேடம் கட்டியவன் போல் பல்வேறு வண்ணத்தில் இருந்தான். கைகளே இத்தனை வண்ணத்தில் இருந்தால் முகம் என்ன கதியாகியிருக்கும் என்று நினைத்து சிரித்தான்.

அருகேதான் இருக்கிறது சிகரம் என்று நினைத்தது. நடக்க நடக்க விலகிப் போயிற்று. மலை மிகப்பெரிய உயரத்தில் இருக்கிறது என்பது தெரிந்தது. மலையைச் சுற்றி மேகங்கள் தவழ்ந்து வர, அந்த மலைக்குச் சிறகு முளைத்ததுபோல் இருந்தது. விநோதமான பறவைகளையும், மிருகங்களையும், குளிரைத் தாங்கும் கரடிகளையும், மிகப்பெரிய இலைகளையுடைய தாவரங்களையும், கனமான கோரைப்புற்களையும், வழுக்குப் பாறைகளையும் சாமர்த்தியமாகத் தாண்டி பீமசேனன் ஒரு பாதையை அடைந்தான்.

தடாகங்களில் அப்ஸர ஸ்திரீகள் ஜலக்கிரிடை செய்து கொண்டிருந்தார்கள். பீமன் வருகையைக் கண்டதும் அவர்கள் நடுங்கி மரங்களின் பக்கம் ஒதுங்கிக் கொண்டார்கள். சுத்த வீரனான பீமசேனன் அவர்களைப்பற்றி கவலைப்படாமல் தொடர்ந்து நடந்தான். சிகரத்தின் ஒரு பகுதிக்கு வந்ததும் கீழே தான் வந்த வழியைப் பார்த்து சந்தோஷமடைந்தான். தொடை தட்டினான். பெரிய சங்கநாதம்போல தன் குரலை உயர்த்தி கூ..வென்று கூவினான்.

கந்தமாதன பர்வதம் அதிர்ந்தது. மிருகங்கள் நாலாபக்கமும் ஓடின. பட்சிகள் எழுந்து அடங்கின. மரங்கள் சலசலத்தன. அங்கே வசிப்பவர்கள் முன்னும் பின்னும் அலைவது தெரிந்தது. கந்தமான பர்வதத்தின் சுகத்தை எண்ணி பொறாமைப்பட்டும், குபேரனை எண்ணி கோபப்பட்டும் அவன் மறுபடி மறுபடி தன்னுடைய ரௌத்திர குரலை எழுப்பினான்.

கந்தமாதன பர்வதத்தில் ஒரு பெரிய ஏரி இருந்தது. ஏரிக்கு அருகே ஒரு அடர்ந்த வாழைத்தோப்பு இருந்தது. அந்த வாழைத் தோப்புக்கு நடுவே அமைதியாய் ஹனுமான் அமர்ந்திருந்தார்.

தம்பி வந்து விட்டான். என் சகோதரனை பார்க்கப் போகிறேன். குரலே இத்தனை கம்பீரமாக இருக்கிறதே. அவன் உருவம் எப்படி இருக்கும் என்று நினைத்து புன்னகை செய்தார். எழுந்திருந்தார். தோள்கள் அகன்று, இடுப்பு குறுகி, கால்கள் திடமாக தரையில் ஊன்ற, வால் தரையில் புரண்டு வர, சிரித்த முகத்தோடு, முகம் நிறைய தேஜஸ்ஸோடு, கழுத்தில் உள்ள மணிமாலைகள் அசைந்தாட அவர் வாழைத்தோப்புக்கு அருகேயுள்ள வழியில் படுத்துக் கொண்டார். அது ஒரு பாதையாக இருந்தது. தேவலோகத்திற்கு போகும் வழியாக இருந்தது. இந்த இடத்திற்கு



மகாபாரதம்

57

ஜெய் ஹனுமான்!

மேல் பீமசேனனை அங்கே நகர விடக்கூடாது என்ற எண்ணத்தோடு வாழைத்தோப்புக்கு அருகே இருந்த பாறையில் உட்கார்ந்து கொண்டார்.

பாலகுமாரன்

பீமசேனன் மலைச்சரிவில் வேகமாக ஏறி வருவது தெரிந்தது. எழுந்து நின்று பார்த்தார்.

அடேயப்பா... இந்த உயரத்தை, இந்தச் சரிவை இந்த மனிதன் எத்தனை வேகமாக கடக்கிறான். எவ்வளவு திடம் அவனுக்கு. எவ்வளவு அகலமான தோள்கள். எவ்வளவு உறுதியான கைகள். எவ்வளவு அழுத்தமான நடை. எவ்வளவு சிலிர்ப்பான தலைமுடி. அவன் மூச்சு விடும் சத்தம் இதோ மேலே இந்த உச்சி வரை கேட்கிறது.

சாதாரண மனிதன் விடும் மூச்சு இத்தனை அழுத்தமாக இராது. இவன் க்ஷத்திரியன். யுத்தம் செய்து பழக்கப்பட்டவன். மிகப் பெரிய நுரையீரல்களை கொண்டவன். மூச்சு அடக்கி, மூச்சு விட்டு பழக்கமுள்ளவன். இவன் மூச்சுக் காற்று வெகு தூரம் போய் அங்குள்ள இலைகளை, செடிகளை அசைக்கும். அவ்வளவு வலிவு மிகுந்தது. மேலே வரட்டும். மடக்கி விசாரிப்போம் என்று ஒரு நாடகத்திற்குத் தயாரானார்.

பீமசேனன் பாதை அடைந்தான். இந்தப் பாதை வழியாகப் போனால் சௌகந்திக மலரை பறித்து விடலாம் என்று அவன் மூக்கு சொல்லியது. மற்ற வாசனைகளுக்கு நடுவே அந்த சௌகந்திக மலரின் வாசனையை அவன் தெளிவாக உணர்ந்திருந்தான். அருகேதான் அந்த மலர்களின் மரங்கள் இருக்க வேண்டும். இந்த ஏரி ஓரமாக பிடித்து விடலாம். வாழைத்தோப்பும் அழகாக இருக்கிறது.

அவன் விரைவாக நடந்தான். மேலேறி பள்ளத்தில் இறங்கியதும் வழியில் யாரோ படுத்திருப்பது தெரிந்தது. அட, இது என்ன பாதையின் குறுக்கே படுத்திருக்கிறார்களே. அவன் அருகே போய் நின்றான்.

சாதுவா. முனிவரா. ரிஷியா. அந்தணரா. இல்லை வேறு ஏதேனும் விலங்கா. வால் இருக்கிறது. இது குரங்காக இருக்க வேண்டும். ஆனால், உடை உடுத்திக் கொண்டிருக்கிறது. இது நாகரீகம்மிக்க ஒரு விலங்காக இருக்க வேண்டும். பேசத் தெரிந்திருக்க வேண்டும். 'ச்சூ போ' என்று விரட்டாது. வேறு விதமாக இதை அடக்கி பார்க்க வேண்டும். ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறது. அருகே போய் கை தட்டினான். ஹனுமார் புரண்டு படுத்தார். மிக வயதான குரங்கு. முப்புரிநூல் வேறு இருக்கிறது. முகத்தில் தெளிவு இருக்கிறது. வேதம் படித்ததுபோல் இருக்கிறது. நிச்சயமாக பேச்சுத்திறன் இருக்கும். ஆகவே, நாம் பேசுவது புரியும். கை தட்டுவது வயதானவருக்கு செய்யும் அவமரியாதை. நாம் பிரியத்துடனே நடந்து கொள்வோம். பீமசேனன் தனது இயல்பான, இனிமையான குணத்தோடு மறுபடியும் குனிந்து ஹனுமாரைப் பார்த்தான்.

"பெரியவரே சற்று எழுந்திருங்கள். நான் இந்த வழியே போக வேண்டும்." அவர் எழுந்திருந்து மல்லாக்க படுத்து ஒரு காலை தரையில் ஊன்றி மறுகாலை மடித்து ஊன்றிய முழங்காலில் வைத்தார். ஒரு சுகாசனம்போல இருந்தது. கைகளை பின்னுக்கு தள்ளிக் கொண்டார். தலை மேட்டில் இருந்தது. கைகள் புல் தரையில் இருந்தது. உடம்பு பாதையை அடைத்துக் கொண்டிருந்தது. வால் நீண்டு பாதையின் மறுபக்கம் படர்ந்திருந்தது.

"என்னப்பா? நிதானமாகக் கேட்டார்."

"இந்த வழியே போக வேண்டும்."

"போ."

"மறித்துக் கொண்டிருக்கிறீர்களே..."

"அப்படியா. வழியிலா படுத்துக் கொண்டிருக்கிறேன்."

"ஆமாம்."

"எனக்கு வயதாகி விட்டதப்பா."

"தெரிகிறது."

"நகர முடியவில்லை."

"அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்."

"என்னை தாண்டிப் போகக் கூடாதா."

"இல்லை. அது தவறு. எந்த ஒரு உயிரினத்தையும் தாண்டக் கூடாது. உங்களைப் பார்த்தால் படித்தவர்போல் தோன்றுகிறீர்கள். உங்களை எந்த விதத்திலும் அவமரியாதை செய்ய நான் விரும்பவில்லை. தயவுசெய்து சற்று நகர்ந்து இடம் கொடுங்கள். சிறிது இடம் கொடுத்தால் கூடப் போதும். நான் தாண்டிப்போய் விடுவேன்."

"கை, கால்களை அசைப்பது கூட கஷ்டமாக இருக்கிறது. நீ பேசுவதும் எனக்கு தெளிவாக கேட்கவில்லை. இருந்தாலும் வழிவிடு என்று கேட்கிறாய். எனக்கு வழி விட ஆசைதான். இயலவில்லை. அதனால்தான் தாண்டிப் போகச் சொல்கிறேன்."

"நிச்சயம் செய்ய மாட்டேன்."

"அப்பொழுது ஒன்று செய்."

"என்ன?"

"இந்த வால் பகுதியை எடுத்து கொஞ்சம் நகர்த்தி விட்டால் உனக்கு ஒரு பாதம் வைக்கின்ற இடம் கிடைக்கும்."

"ஆமாம்."

"வாலை நகர்த்தி விட்டுப் போயேன்."

"அது சரி. வாலைக் கூட நகர்த்த முடியவில்லையா."

"முடியவில்லையப்பா."

"இத்தனை வயதான காலத்தில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்."

‘‘வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.’’ அவர் மெல்லிய புன்னகையோடு சொன்னார்.

“இப்படி வழியில் படுத்துக் கொண்டிருப்பது தான் வாழ்க்கையா. நன்றாக இருக்கிறது நீங்கள் பேசுகிற லட்சணம். எங்கே இருக்கிறது உங்கள் வால்.”

“அதோ, புல் தரையில் படர்ந்து கிடக்கிறதே.”

பீமன் இடக்கையால் எடுத்தான். வால் தரையிலிருந்து நகரவில்லை. இன்னும் உள்ளே விரல் விட்டு தூக்கினான். நகர்த்தக்கூட முடியவில்லை. சற்று குனிந்து இடக்கையால் வேகமாக இழுத்தான். ஒரு சிறிய அசைவுகூட இல்லை. இரண்டு கைகளாலும் வாலைப் பிடித்து தூக்கினான். அப்பொழுதும் முடியவில்லை. பலம் கொண்ட மட்டும் வாலை பிடித்து இழுத்து மேலே தூக்க முயற்சித்தான். வால் பூமியோடு இருந்ததே தவிர, அவனால் அசைக்கக்கூட முடியவில்லை. மறுபடியும் முழு பலத்தோடு தோள்களுக்குள் தன்னுடைய வலிவை கொண்டு வந்து மூச்சு அடக்கி, நுரையீரலை பெருக்கி, இருதயத்தை நிறுத்தி வலிவோடு தூக்கினான். ஆனால், வால் சிறிதும் அசையவில்லை. பயந்தான். பின்னடைந்தான். பீமன் வலிமை உள்ளவன். ஆனால் இயல்பிலே மிக நல்லவன். அவன் நல்ல குணம் சட்டென்று அவனை மீறி வெளியே வந்தது.

“ஐயா, நீங்கள் யார்? உங்கள் வாலை அசைக்கக் கூட முடியவில்லையே. என்னை மிக பலஷ்டன் என்று சொல்வார்கள். நானும் அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த நினைப்பில் தான் பயங்கரமான கூச்சலை போட்டேன். ஆனால், ஒரு வானரத்தின் வாலைக்கூட அசைக்க முடியாத என் கூச்சல் அபத்தம் என்று தோன்றுகிறது. நீங்கள் வானரமா, இல்லை வேறு ஏதேனும் தேவரா. தெய்வங்களில் ஒருவரா. எனக்குத் தெரிய வேண்டும். நான் உங்களை நமஸ்கரிக்கிறேன்.



என் பெயர் பீமசேனன். நான் வாயுகுமாரன். பஞ்சபாண்டவர்களில் ஒருவன். சகோதரர்களால் நாட்டிலிருந்து துரத்தப்பட்டு காடுகளில் அலைந்து கொண்டிருக்கிறோம். எங்கள் ஐவருக்கும் ஒரே மனைவி திரௌபதி. துருபதனின் மகள். அவள் சௌகந்திகமலர்களை விரும்பினாள் என்று நான் கந்தமாதன பர்வதத்தில் ஏறினேன். அருகேதான் இருக்கிறது என்று வாசனை தெரிவிக்கிறது. ஆனால், வழியை மறித்துக் கொண்டிருக்கிறீர்கள். தாண்டிப் போகச் சொல்கிறீர்கள். நல்லவேளை அந்த மகாபாவத்தை நான் செய்யவில்லை. நீங்கள் வெறும் வானரமல்ல. நீங்கள் வேறு ஏதோ. உங்களை விழுந்து வணங்கி நமஸ்கரிக்கிறேன். உங்கள் வயது எனக்கு ஆசிர்வாதம் தரும் வயது. என்னை ஆசிர்வதியுங்கள். நான் பீமசேனன். வாயு குமாரன்.”

ஹனுமார் எழுந்து உட்கார்ந்தார். ஆனால் வழி அடைத்தபடிதான் இருந்தது.

“தம்பி..” என்று அன்பொழுக கூப்பிட்டார்.

தலைகுனிந்த பீமன் நிமிர்ந்து பார்த்தான். அந்த கண்களிலிருந்து கருணை பொங்கியது. அவர் உதடு துடிப்பது தெரிந்தது. மயிர்கூச்செரிவது உணர முடிந்தது.

“சகோதரா, நான் வாயு குமாரன். என் பெயர் ஹனுமான் என்று சொல்வார்கள். என் தந்தைக்கு இன்னொரு மகன் நீ. என் சகோதரன். உன்னை சந்தித்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

உங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களுக்கு நேர்ந்த அவமானங்களும் இந்த கந்தமாதன பர்வதம் வரை வந்து விட்டது. நான் ராமாயண காலத்திலிருந்து ராமருடைய ஆட்சி முடியும் வரை காத்திருந்து பிறகு இங்கு வந்து அமர்ந்திருக்கிறேன். இங்குள்ள கின்னரர்களும், கந்தர்வர்களும் ராமாயணத்தை என் காது குளிர பாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்ஸர ஸ்திரீகள் ராமாயணத்தை நடித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். எந்த நேரமும் ராமரைப் பற்றிய சிந்தனையில் மூழ்கியிருக்கிறேன்.

உனக்கு ராமரைப் பற்றித் தெரியுமா? அயோத்தியின் அரசரான தசரதர். அவருக்கு நான்கு புத்திரர்கள். மூத்தவர் ராமன். அடுத்தது பரதன். பிறகு, லட்சுமணன். பிறகு சத்ருக்னன். ராமரும் லட்சுமணனும் இணைபிரியாதவர்கள். பரதனும், சத்ருக்னனும் ஒன்றானவர்கள்.

பரதனுடைய தாய் கைகேயி, தன் மகனுக்கு பட்டம் கட்ட வேண்டுமென்று தசரதரிடம் முன்பு கூறிய வரத்தை மறுபடியும் நினைவுபடுத்தி ராமன் வனத்திற்குப் போகவேண்டும், தன் மகன் நாடாள வேண்டும் என்று கேட்க, தாயின் விருப்பப்படி

அது தந்தையின் கட்டளை என்று ஏற்று எங்கள் ஐயன் ராமன் வனவாசம் மேற்கொண்டார். அவரோடு சீதையும், லட்சுமணனும் கிளம்பினார்கள். பரதன் நாடாள மறுத்து விட்டான். ராமருடைய பாதுகைகளை வாங்கி தன் சிரசில் வைத்து அதை சிங்காசனத்தில் ஏற்றி அதுவே நாடாளும் என்று சொல்லிவிட்டான். தாயை கடிந்து கொண்டான்.

பீமா, அயோத்தியிலிருந்து தெற்கே பல இடங்கள் போய் பல முனிவர்களை தரசித்து அவர்களை தொல்லைப்படுத்திக் கொண்டிருந்த பல அரக்கர்களை கொன்று, சபரி என்கிற வேடுவச்சிக்கு உயர்நிலை கொடுத்து, சூர்பணகை என்பவள் இடர்பட லட்சுமணன் அவள் மூக்கை அறுக்க, ராவணனின் தங்கையான அவள் சீதையின் வடிவை துராங்காரத்தோடு ஏறி சீதை இருக்கும் இடம் தேடினான். தன்னுடைய மாமனான மாரீசனை மான் வடிவம் கொண்டு ராமரையும், லட்சுமணனையும் வேறு இடத்திற்கு அப்புறப் படுத்த நினைத்தான்.

சீதை விருப்பத்தின்படி ராமர் மானை பின் தொடர்ந்து ஓட, மாரீசன் மீது அம்பு அடிக்க, மாரீசன், ஹே... லட்சுமணா, ஹே... சீதை.... என்று குரல் கொடுக்க, ராமனுக்குத்தான் ஆபத்து என்று சீதை லட்சுமணனை துரத்த, அவர் மறுக்க, கடிந்து கொள்ள, லட்சுமணன் ராமரைத் தேடி ஓடிய நேரத்தில் ராவணன் சீதையை தன் விமானத்தில் பலவந்தமாக ஏற்றி, தனது இலங்கை நோக்கி புறப்பட, வழியில் ஜடாயு என்ற கழுகு அரசன் அவனைத் தாக்கி சண்டையிட, ஜடாயுவை கொன்றுவிட்டு இலங்கை நகரத்திற்குப் போய் சீதையை அசோகவனத்தில் சிறை வைத்தான். தன்னை மணக்கும்படி வற்புறுத்தினான். சீதை துல்லியமாக மறுத்தார்.

ராவணன் எங்கு இருக்கிறான் என்று தேடி ராமர் வரும்போது அங்கே வாலியின் சகோதரனான சுக்ரீவனின் தோழமை ஏற்பட்டு, என் மூலம் அது பலப்பட்டு சுக்ரீவனும் வாலியும் மறுபடியும் சண்டையிடச் சொல்லி, அதில் வாலியை கொன்று, வாலியின் மைந்தன் அங்கதனை அரசனாக்கி, சுக்ரீவனோடு, வானரப் படைகளோடு இலங்கையை நோக்கி சீதையைத் தேடி அலைந்தார்.

நான் தெற்குப் பக்கம்போய் இலங்கையில் சீதை இருப்பார் என்று நினைத்து அந்த இடத்தை பெரிய உருவம் எடுத்து கடலை தாண்டினேன். இலங்கைக்குப்போய் இறங்கினேன். இலங்கையில் ராவணன் என்னை கைது செய்தான். தீயிட்டு அழித்தேன். ஜானகிக்கு என்னுடைய வருகையை தெரிவித்தேன். ராமர் கொடுத்த கணையாழியை காட்டினேன். ராமதூதுவன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டேன். ராமர் வருவார் என்று உற்சாகப்படுத்தினேன்.

ராமர் இலங்கையைத்தாண்ட, வானரங்கள் உதவியால் அணை கட்டினார். வானரப்படை தாண்டியது. ராவணனை பலநாள் தோற்கடித்த பிறகு ஹதம் செய்தார். சீதையை மீட்டார். சீதையின் பத்தினித் தன்மையை நிரூபிக்க அவரை தீயில் குளிக்கச் சொன்னார். அக்னி பகவான் சீதையை குற்றமற்றவள் என்று கொண்டுதர, சீதையோடு அயோத்திக்குப் போய் பதினோறாயிரம் வருடங்கள் ஆட்சி செய்தார். அவருக்குப் பிறகு நான் இந்த இடத்தில் அமர்ந்து அவர் நாமத்தையே சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதுதான் ராமருடைய கதை" என்று கண்களில் நீர் தழும்பச் சொல்ல, பீமன் கண் கலங்கினான். கை கூப்பினான். மறுபடியும் அவர்தாள் பணிந்தான்.

"ஒரே ஒரு விண்ணப்பம்" என்றான்.

"என்ன?"

"நீங்கள் சொன்ன கதையில் எனக்கு பிடித்த இடம் நீங்கள் பெரிய ரூபம் எடுத்து இலங்கையை தாண்டியது. மறுபடியும் நீங்கள் அப்படி பெரிய ரூபம் எடுத்து எனக்கு காட்ட வேண்டும்".

ஹனுமார் வாய்விட்டு சிரித்தார்.

"ராமருடைய கதையில் வேறு எதுவும் பிடிக்காது என் ரூபம்தான் பிடித்ததா, அதைத்தான் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறாயா. எல்லா சமயங்களிலும் அது எனக்கு இருக்கக் கூடியது அல்ல. அப்படி எடுக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. எனவே, நீ அதைப்பற்றி கவலைப்படாது இந்த இடத்திலிருந்து போ.

நீ விரும்பிய மலர்கள் அதோ, அந்தப் பக்கமுள்ள தோப்பிலே இருக்கின்றன. இந்த ஏரியை ஒட்டி சிறிது தூரம் நடந்தால் அந்த மரங்கள் தெரியும். வேண்டுமென்ற மலர்களை எடுத்துக் கொண்டு உன் மனைவிக்கு கொடு. ஆனால் இந்தப் பாதையை தேர்ந்தெடுக்காதே. இது சொர்க்கத்திற்கு போகும் இடம். மனிதர்கள் இதற்கு மேல் வரக் கூடாது. வந்தால் சாபத்திற்குள்ளாவார்கள். நீ யாராலும் சபிக்கப்படக் கூடாது என்று அஞ்சிதான் நான் உன்னை தடுக்கிறேன். தயவு செய்து புரிந்து கொள்..."

"எனக்கு புரிகிறது. உங்கள் கட்டளையை மீற மாட்டேன். ஆனால், அந்த விஸ்வரூபம் நீங்கள் எனக்கு காட்ட வேண்டும்"

"இல்லையப்பா. அது இப்பொழுது வராது"

"இல்லையென்றால் நான் இந்த இடத்தை விட்டு நகரமாட்டேன்" என்று பீமன் கைகளைக் கட்டிக் கொள்ள, அவன் பிடிவாதம் பார்த்து அண்ணனான ஹனுமான் சிரித்தார்.

"சரி.. செய்கிறேன்" என்று மிகப்பெரிய ரூபத்தை வெகு விரைவில் எடுத்தார்.

கந்தமாதன பர்வதத்தின் எல்லா சிகரங்களையும் தாண்டி ஒரு சூரியனைப்போல ஒரு ஒளியோடு திகழ்ந்தார்.

"எதிரிகள் முன்பு என்னுடைய உருவம் இன்னும் பெரிதாக இருக்கும். நான் மனதில் எந்த அளவு உயர வேண்டும் என்று நினைக்கிறேனோ அந்த அளவை விட உயரமாகத்தான் நான் உயர்வேன். இது எனக்கு கிடைத்த வரம். பார்த்தாயிற்றா" என்று கேட்க, பீமன் கண்களை மூடிக் கொண்டான். நமஸ்கரித்தான். சுற்றி வந்தான். மீண்டும் மீண்டும் நமஸ்கரித்தான்.

"பழையபடி உருவம் எடுத்துக் கொள்ளுங்கள். என்னைத் தழுவிக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினான்.

ஹனுமார் பழைய உருவம் எடுத்தார். அவனை ஆரத்தழுவிக் கொண்டார். தன் சக்தியின் பெரும்பகுதியை அவனுக்குள் செலுத்தினார். பீமன் இதுவரை இல்லாத ஒரு புத்துணர்ச்சியை அடைந்தான்.

"அண்ணா, எனக்கு இன்னொரு சந்தேகம் இருக்கிறது. அதை நீங்கள் தெளிவிக்க வேண்டும்.

"என்ன?" "ராமருடைய காலம் ஏதோ ஒன்று. நாங்கள் இருக்கிற காலம் ஏதோ ஒன்று. இதற்குப் பிறகும் உலகம் இருக்கப் போகிறது. என்ன யுகம்? எத்தனை யுகம்? யுகம் என்றால் என்ன? ஒவ்வொரு யுகத்தின் தன்மை என்ன? என்று எனக்கு விளக்க வேண்டும்'' என்று கேட்க, ஹனுமார் பீமனை எதிரே உட்கார வைத்து யுகங்களைப் பற்றி விளக்கினார்.

"பூமி தோன்றிய போது முதலில் ஏற்பட்டது த்ருதயுகம். த்ருதயுகத்தில் தேவர்கள், கந்தர்வர்கள், யட்சர்கள், மனிதர்கள் என்ற பேதங்களெல்லாம் இல்லை. எல்லோரும் எல்லா இடத்துக்கும் போக முடிந்தது. அவரவர் காரியங்களை செவ்வனே செய்து கொண்டிருந்தார்கள். அங்கே கொடுக்கல் வாங்கல் கிடையாது. எந்த தொழிலும் இல்லை. விவசாயம் என்று ஒன்று நடைபெறவில்லை. பூமி என்ன வழங்கிற்றோ அது அப்பொழுது இருந்த மக்களுக்கு போதுமானதாக இருந்தது. செய்யக் கூடிய கர்மங்கள் எதுவும் இல்லாததால் போட்டியோ, உயர்வு, தாழ்வோ எதுவும் இல்லை. எல்லோரும் அமைதியாக வாழ்ந்தார்கள். ஆனால், காலகிரமத்தில் இதில் குறைபாடு வர, சத்திய யுகம் தோன்றியது.

> ''நீங்கள் சொன்ன கதையில் எனக்கு பிடித்த இடம் நீங்கள் பெரிய ரூபம் எடுத்து இலங்கையை தாண்டியது. மறுபடியும் நீங்கள் அப்படி பெரிய ரூபம் எடுத்து எனக்கு காட்ட வேண்டும்''. ஹனுமார் வாய் விட்டு சிரித்தார்.

சத்திய யுகத்தில் ஒரே ஒரு தர்மம் மிஞ்சியது. சுயநல தியாகத்தை மனிதர்கள் எளிதில் செய்தார்கள். நெல்முனையளவும் சுயநலம் இல்லாது யார் எது கேட்டாலும் கொடுத்தார்கள். வாரி வழங்குவதில் கண்ணாக இருந்தார்கள். கொடுப்பதில் சந்தோஷமடைந்தார்கள். அதனால் எவரிடமும் சண்டை இல்லை. சச்சரவு இல்லை. சோம்பேறித்தனம் இல்லை. கோள் சொல்லுதல், பொறாமை, பயம், அசூயை எதுவும் இல்லை. வர்ணங்கள் நான்கு பேர் இருந்தாலும் அனைவரும் சமம் என்ற நிலையில் இருந்தார்கள். பரமாத்மாவை அடைவதே சகலருடைய லட்சியமாக இருந்தது. இதற்கான நன்னடத்தை கடைபிடிக்கப்பட்டது.

சத்திய யுகத்தில் சனாதன தர்மமானது நான்கு கால்கள் கொண்ட உருவத்தோடு இருந்தது.

ஆனால், த்ராதாயுகத்தில் யஞ்ஞங்கள், வேள்விகள், ஹோமங்கள், ஜபங்கள் ஆரம்பித்துவிட்டன. அதாவது தொழில் என்று ஒன்று துவங்கிவிட்டது. இதனால் தர்மத்தின் கால் ஒன்று குறைந்து த்ராதாயுகத்தில் மூன்று கால் கொண்ட விஷயமாக சனாதன தர்மம் இருந்தது. ஆனால், இவைகளை கடைபிடிப்பதில் அந்த மக்கள் முழு முயற்சியோடு இருந்தார்கள். உண்மையாக இருந்தார்கள். அம்மாதிரியான செயல்களை செய்து தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள். அம்மாதிரி செய்யும் வேள்விகளுக்கு பலன் இருந்தது. பலன் இருந்ததால் ஜனங்கள் அதில் ஆர்வமாக இருந்தார்கள்.

தானங்கள் ஒரு சிறந்த விஷயமாக இருந்தது. அரசர்கள் அந்தணர்களுக்கு அள்ளிக் கொடுப்பதும், அந்தணர்கள் அதை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பதுமாக போட்டி, பொறாமை இன்றி வாழ்ந்தார்கள்.

இதற்கு அடுத்த வந்த துவாபர யுகத்தில் தர்மத்திற்கு இரண்டே கால்கள் இருந்தன. வேதங்கள் நான்காக பகுக்கப்பட்டன. நான்கு வேதங்கள் அறிந்தவர்கள் குறைவாகவும், மூன்று வேதங்கள் அறிந்தவர்களும், இரண்டு வேதம் அறிந்தவர்களும் ஒரே ஒரு வேதம் மட்டும் தெரிந்தவர்களுமாய் ஜனங்கள் பிரிந்து இருந்தார்கள். ஆனால், இவர்கள் செய்த கர்மங்களில் அதாவது, செயல்களில் பேதங்கள் ஏற்பட்டன. தாங்கள் செய்வது சரி, அவர் செய்வது தவறு என்ற எண்ணங்கள் ஏற்பட்டன. செயல்களில் பேதங்கள் ஏற்பட்டதால் உயர்வு, தாழ்வும் ஏற்பட்டது. தவம் செய்தவர் சிலர், தவம் செய்யாதவர் சிலர் என்று மக்கள் பிரிந்து இருந்தார்கள். ஒருவரை ஒருவர் குறை சொன்னார்கள்.

ஆனால் கலியுகத்தில் தர்மம் ஒரே காலில் இருக்கிறது. மக்கள் மனோவியாதியால் பீடிக்கப்பட்டார்கள். தானங்கள் செய்யக் கூடியவர்கள் இல்லாது போனார்கள். இதனால் வியாதி, சோம்பல், கோபம் முதலிய குற்றங்கள் பெருகின. மக்கள் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குறை சொல்வதிலேயே வாழ்க்கையை கடத்தினார்கள்.

ஏ. பீமா, கலியுகம் வரப்போகிறது. மிக மோசமான அந்தக் காலம் இந்த பூமியில் நிகழப் போகிறது. ஜனங்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாவார்கள்" என்று சொல்ல, பீமன் அவர் பேச்சில் திருப்தியுற்றவனாய் மறுபடியும் அவரை நமஸ்கரித்தான்.

"இன்னொரு கேள்வி இருக்கிறது"

''கேள் தம்பி'' ஹனுமார் பிரியத்தோடு சொன்னார்.

(தொடரும்)



அர்ஜுனன் என்ற அசகாய சூரன்!

“உங்களுடைய இந்த விஸ்வரூபம் பார்க்கும்போது உங்களுடைய பலத்தை என்னால் உணர முடிகிறது. ராவணன் என்கிற அரக்கனை நீங்கள் ஒருவரே அடித்து வீழ்த்தியிருக்க முடியும். அப்படி இருக்க, நீங்கள் ராமருக்குத் துணையாக ஏன் போனீர்கள்? அவர் படையில் ஒருவராக ஏன் ஆனீர்கள்? நீங்கள் ஏன் ராவணனை வதம் செய்யவில்லை?” என்று பீமன் ஹனுமாரைப் பார்த்துக் கேட்டான்.

“உண்மை. என்னால் ராவணனை வதம் செய்திருக்க முடியும். ஆனால், அது என் வேலை அல்ல. அந்த யுகத்தில் அது பரந்தாமனின் வேலை என்று தெளிவாக உணர முடிந்தது. எனவே, அவர் வருகைக்காக காத்திருந்து, அவர் வந்ததும் அவரைச் சந்தித்து அவரை நான்தான் சுக்ரீவனிடம் அழைத்துப் போனேன். ஒரு அவதார புருஷனை சந்திக்கிறேன் என்பதை உணர்ந்து செய்தேன். ராவணனை அழிப்பதற்காகவே, அவர் பிறந்திருக்கிறார் என்பதை புரிந்து செய்தேன். ராமருடைய புகழுக்கு எந்த பங்கமும் வரக்கூடாது என்று நான் அமைதியாக இருந்தேன்” என்று சொன்னார் ஹனுமார்.

“சகோதரா, பீமசேனா, உன்னை சந்தித்ததிலிருந்து என் மனம் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை அதிகம் தேடுகிறது. உன்னைத் தழுவிக் கொள்கிறபோது ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை தழுவிக் கொள்வது போலவே இருக்கிறது. நான் இங்கிருப்பதை எவரிடமும் சொல்லாதே. இந்த இடம் ரகசியமாகவே இருக்கட்டும். கந்தர்வர்களுடைய அப்ஸர ஸ்திரீகளும், தேவ பெண்மணிகளும் இங்கே வருகின்ற நேரமாகிவிட்டது. எனவே திரும்பிச் செல். உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று தெரிவி. இப்பொழுதே போய் துரியோதனனை அடித்து நொறுக்கி விடவா, கற்பாறைகளால் அவனுடைய தேசத்தை நாசம் செய்துவிடவா? என்னால் முடியும். சொல், உனக்கு என்ன வேண்டும்?”

பீமன் அவரை இறுக்க தழுவிக் கொண்டான். “உங்கள் அன்பு என் கண்ணில் கண்ணீரை வரவழைக்கிறது. என் மனதை நெகிழச்

மகாபாரதம்

58

செய்கிறது. எப்பேர்ப்பட்ட அண்ணனை நான் பெற்றிருக்கிறேன் என்ற சந்தோஷமே என்னை குதூகலமடைய வைக்கிறது. நீங்கள் என்னை தழுவிக் கொண்டதும் என் உடல் வலியெல்லாம் போயிற்று. என் பலம் அதிகரித்ததுபோல் ஆயிற்று. எனக்கு நீங்கள் என்ன செய்தாலும் தகும். ஆனால், துரியோதனனை பஞ்ச பாண்டவர்களாகிய நாங்களே பழி வாங்க வேண்டுமென்று விரும்புகின்றோம். எனவே, அது தவிர்த்து வேறு ஏதும் செய்வீர்களாக” என்று பணிவுடன் கேட்டான்.

“பகைவருக்கு எதிரே நீ சிங்கநாதம் செய்கிறபோது அந்த கர்ஜனையில் நான் இருப்பேன். என் குரலும் சேர்ந்து ஒலிக்கும். அந்தக் குரலை கேட்டே அவர்கள் நடுங்கிப் போவார்கள். அர்ஜுனனுடைய கொடியில் நான் வீற்றிருப்பேன். அங்கிருந்து என் பலத்தை அர்ஜுனனுக்குத் தந்து எதிரிகளை பயப்பட வைத்து உங்களுக்கு வெற்றியைத் தேடித் தருவேன்” என்று உறுதியளித்தார் ஹனுமார்.

மறுபடியும் இரண்டு சகோதரர்களும் நெடு நேரம் ஆலிங்கனம் செய்து பிறகு மெல்ல விலகினார்கள். பீமன் வணங்கியபடி ஹனுமாரை விட்டுப் பிரிந்தான். பிறகு கந்தமான பர்வதத்தின் சரிவில் இறங்கி சௌகந்தி பூக்களோடு திரௌபதியை நோக்கி நடக்கத் துவங்கினான்.

அவர்கள் பரந்த புல்வெளியில் வட்டமாக அமர்ந்து ஸ்ரீகிருஷ்ணனை நினைத்துக் கொண்டு ஒருவரை ஒருவர் ஆதூரத்துடன் பார்த்துக் கொண்டு இன்னும் பேசத் தொடங்கினார்கள்.

தருமபுத்திரர் தன்னைப் பற்றி விசாரிக்கட்டும் என்று அடக்கமாக அர்ஜுனன் காத்திருந்தான். அவ்வப்போது நகுலனும், சகாதேவனும் அவனை இரண்டு பக்கத்திலிருந்து தொட்டுக் கொண்டு இருந்தார்கள். பீமன் மிகுந்த பாசத்துடன் தன் தம்பியை கவனித்தபடி இருந்தான்.

“கைலாசத்திலிருந்து கிளம்புவதற்கு முன்பு ஏதேனும் யுத்தம் நடந்ததா? யாருடனாவது போர் புரிய நேரிட்டதா? உன்னுடைய உடம்பில் பச்சைத் தழும்புகள் தெரிகின்றன. சில இடங்கள் கன்றி இருக்கின்றன. உன்னுடைய உள்ளங்கைகள் நாண் இழுத்ததால் தோல் உரிந்து காணப்படுகின்றன. கையுறைகளையும் மீறி இந்த காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றால் வெறுமே வேட்டையாடுவதால் மட்டும் ஏற்பட்டிருக்காது. இடையறாது அம்புகள் தொடுப்பதால்தான் ஏற்பட்டிருக்கும். என்ன நடந்தது என்பதை நடந்தவாறு கூறு. நான் அறிய ஆவலாக இருக்கிறேன்,” என்று குரலில் குதூகலம் சேர்த்து தருமபுத்திரர் வினவினார்.

தமையனார் கேட்டதும், அவரைப்போலவே சகோதரர்களும் அவனுடைய அனுபவத்தைக் கேட்கும் ஆசையுடன் காத்திருக்க, அதுவரை தானே தன் நடவடிக்கைகள் பற்றி சொல்லாது, தன் வெற்றிகளை பறையறிவிக்காது, அமைதி

காத்த அர்ஜுனன் கம்பீரமான குரலில் பேசத் துவங்கினான்.

“பரமசிவனை சந்தித்த பிறகு என்னை அங்கே அனுப்பிய ஒரு அந்தணன் மறுபடியும் தேவலோகத்திற்குப்போய் இந்திரனை சந்தித்து இன்னும் அஸ்திரங்களை பெற்று வரலாமே என்று சொல்ல, நான் தேவலோகம் நோக்கிப் போனேன். இந்திரன் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்றான். ‘மானுடன் எளிதாக இந்த இடங்களில் சஞ்சரிக்க முடியாது. அதற்குண்டான உடல் வலிமை அவர்களிடம் இல்லை. ஆனால், நீ மனிதர்களில் மேம்பட்டவன். மிக எளிதாக இங்கு வந்திருக்கிறாய். உனக்கு என்ன வேண்டும் சொல். ஸ்ரீகிருஷ்ணருடைய துணையைப் பெற்றிருக்கின்ற உங்களுக்கு உதவி செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன்’ என்று சொன்னான்.

நான் சந்தோஷமாக, ‘இன்னும் அஸ்திரங்கள் வேண்டும். மிகப்பெரிய போருக்கு நான் தயாராக வேண்டும். நீங்கள் வைத்திருக்கின்ற அத்தனை விதமான அஸ்திரங்களும் எனக்கு தேவைப்படுகின்றன’ என்று கைகூப்பி பணிவாகக் கேட்டேன்.

‘நிச்சயம் தருகிறேன். இவை யாவும் உனக்கே’ என்று அக்னியையும், வாயுவையும், வருணனையும் வரவழைத்து அவர்களிடமிருந்த அஸ்திரங்களை என்னருகே அனுப்பினான். ஒவ்வொன்றாக அந்த அஸ்திரங்கள் என்னிடம் வந்து என்னோடு கலந்து கொண்டன. சிறிதுகூட தயங்காமல் கேட்டதும் எல்லா அஸ்திரங்களையும் வாரி வழங்கிய இந்திரனை நோக்கி நான் கை கூப்பி வணங்கினேன். “எவ்வளவு அழகாக உதவி செய்கிறீர்கள். எத்தனை உண்மையாக நட்பு பாராட்டுகிறீர்கள். உங்களுக்கு பதிலுக்கு நான் என்ன செய்ய முடியும். என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். ஒரு குரு காணிக்கைபோல உங்களுக்கு நான் ஏதேனும் செய்ய விரும்புகின்றேன்” என்று பணிவாகப் பேசினேன்.

அதற்குக் காத்திருந்தவன்போல இந்திரன், ‘நல்லது. நான் ஜெயிக்க முடியாத அசுரர்கள் ஒரு இடத்திலே இருக்கிறார்கள். அறிவில் சிறந்தவர்கள். தேவர்களாலோ, கந்தர்வர்களாலோ, யட்சர்களாலோ தங்களுக்கு தீங்கு நேரக்கூடாது என்று வரம் வாங்கியவர்கள். மாயையில் வல்லவர்கள். மிகுந்த படை பலம் உடையவர்கள். ஆயிரக்கணக்கான பேர் மிக ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஒரே வேகத்தில் யுத்தத்தில் இறங்குகிறார்கள். நாலா பக்கமும் சூழ்ந்து கொண்டு எதிரியை திணறடிக்கிறார்கள். மனிதர்கள் மூலம் ஜெயிக்கக் கூடாது என்ற வரத்தை அவர்கள் வாங்கவில்லை. மனிதர்களை சிறு புழு, பூச்சிகளாகத்தான் அவர்கள் நினைக்கிறார்கள். எனவே மனிதர்களில் சிறந்தவனான நீ அந்த நிவாத கவசகர்களைக் கொன்றொழிக்க வேண்டும். தேவர்களுக்கு அது பெரும் நிம்மதி. எல்லா நேரமும் அவர்களைப் பற்றிய கலவரம் எங்களுக்கு உண்டு’ என்று பரிதாபமாகக் கூறினான்.

‘நிச்சயம் செய்வேன், போய் வலிய யுத்தத்திற்கு அழைத்து அவர்களை நிர்மூலம் செய்வேன். மனிதர்கள் அல்பமானவர்கள் அல்ல. அவர்கள் செயற்கரிய காரியத்தை செய்ய வல்லவர்கள். தேவர்களிலும் மேம்பட்டவர்கள் என்று நான் அவர்களுக்கு நினைவூட்டுவேன். எங்கிருக்கிறார்கள் அவர்கள்? அவர்கள் இருக்கும் தீவு எங்கே இருக்கிறது?’ என்று நான் வேகத்தோடு கேட்க, ‘என்னுடைய தேரை எடுத்துக் கொள். என் தேரோட்டி மாலியவான் உனக்குத் துணை வருவான். மாலியவானுக்கு அவர்கள் இருப்பிடம் தெரியும். அவர்களின் யுத்த முறையும் தெரியும். மாலியவான் மிகச்சிறந்த தேரோட்டி. அவன் இருப்பு உனக்கு மிகப்பெரிய துணை. தக்க சமயத்தில் தக்க விதமாக ஆலோசனை சொல்ல, அவன் பழக்கப்பட்டவன்’ என்று இந்திரன் மாலியவானை புகழ்ந்தான். ஆனால் நான் கொஞ்சம் சந்தேகத்தோடு பார்த்தேன்.

ஒரு தேரோட்டியை நம்பியா யுத்தத்தில் இறங்குகிறேன் என்கிற எண்ணம் எனக்கு வந்தது. ஆனால், மாலியவான் தேரில் ஏறி அந்த தேர் கிளம்பியதும் மாலியவானின் சாமர்த்தியம் எளிதில் விளங்கிவிட்டது. அவன் வெறும் தேரோட்டி அல்ல. தேவர்களில் மிகச் சிறந்தவன் என்பது புரிந்தது. மாலியவானை நான் மனதாரப் பாராட்டினேன். பதிலுக்கு மாலியவானும் என்னைப் புகழ்ந்தான்: ‘இந்திரன்கூட இந்த குதிரைகள் கிளம்பும்போது கொஞ்சம் ஆடியபடிதான் வருவார். ஆனால், எந்தவிதமாக இந்தத் தேரை செலுத்தினாலும் நீ ஆடாது, அசையாது இந்த தேரின் ஓட்டத்திற்கு ஏற்ப நீ அமர்ந்து கொள்கிறாய். இது மிகப் பெரிய சாமர்த்தியம். இந்த தந்திரம் தெரிந்தவனால் மற்ற வித்தைகளை எளிதில் அறிந்து கொள்ள முடியும். உன்னுடைய இருப்பு எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது. வெகு விரைவில் நாம் நிவாத கவசர்களை சந்திப்போம்’ என்று சொல்லி, வானத்திலிருந்து சற்று கீழ் இறங்கி அந்தத் தீவை சுட்டிக் காட்டினான்.

இன்னும் நெருங்கியபோது அந்தத் தீவில் நெருக்கமாக பல அசுரர்கள் வசிப்பதும், ஒரு ஒழுங்கு முறையில் அந்தத் தீவு இருப்பதும், தற்காப்பு ஏற்பாடுகள் பலமாக இருப்பதும் எனக்குப் புரிந்தது. மாலியவானின் தேரின் வருகை அவர்களால் வெகு எளிதில் கண்டுபிடிக்கப்பட்டது.

அவர்கள் கீழிருந்து யுத்த வாத்தியங்களை முழக்கினார்கள். இடைவிடாது சரங்களை மாலியவானின் தேர் நோக்கி

பாலகுமாரன்

செலுத்தினார்கள். அந்த அசுரர்களிடம் மிகச் சிறந்த ஒழுக்கம் இருந்தது. பகுதி பகுதியாக வராது ஒட்டு மொத்தமாக எதிரியை சூழ்ந்து கொள்கிறார்கள். எடுத்தவுடனேயே மிகக் கடுமையாக தாக்குகிறார்கள். எந்தவிதமான அஸ்திரங்களை பிரயோகம் செய்தாலும் அதைத் தடுத்து நிறுத்துகிறார்கள். அம்பு மழை பொழிகிறார்கள். மூன்று பக்கங்களிலும் சூழ்ந்து தாக்குவதால் திக்கு முக்காடிப் போகின்ற நிலைமை ஏற்படுகிறது. சற்று கவனக் குறைவானவர்கள் அதில் மாட்டிக் கொண்டு தவிப்பது உறுதி. ஆனால், நான் மிக நிதானமாக செயல்பட்டேன். மாலியவானின் தேரோட்டம் எனக்கு உதவியாக இருந்தது. நான் எந்தப் பக்கம் பார்க்கிறேனோ அந்தப் பக்கம் அவன் தேரைச் செலுத்துகிறான். குறிப்பறிந்து நடக்கிறான். நான் மிகுந்த வலிமையோடு அசுரர்களை எதிர்ப்பது கண்டு திகைத்துப் போனார்கள். அசராத ஒரு எதிரியை சந்தித்துவிட்டோம் என்று பேசிக் கொண்டார்கள். ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து இருளை உண்டாக்கினார்கள். பெரும் கற்பாறைகளை கொண்டு வந்து வழியை மறித்தார்கள். எந்த பக்கமும் நகர ஒட்டாது செய்தார்கள். மூச்சு திணறும்படியான வேகத்தில் தாக்கினார்கள்.



நான் வாயுவாஸ்திரத்தை பிரயோகம் செய்து அந்த கற்பாறைகளை தூக்கி அடித்தேன். அவர்கள் மாயத்தை நீக்கினேன். வெளிச்சத்தை உண்டு பண்ணினேன். அவர்கள் சிதறினார்கள். பலபேரை அடித்து வீழ்த்தினேன். குற்றுயிரும், குலையுயிருமாகச் செய்தேன். அந்தப் போரிலே துடிப்பாக இருப்பவர்களை இனம் கண்டு கடுமையாகத் தாக்கினேன். சிரத்தைக் கொய்து அகற்றினேன். அவர்கள் நடுங்கிப் போனார்கள். கலந்து ஆலோசித்து வான் வெளியில் நின்று மேலிருந்து தாக்கினார்கள்.

மாலியவான் மிக சாமர்த்தியமாக அந்தத் தேரை அந்த இடத்திலிருந்து விலக்கி அவர்களை பின் தொடரச் செய்தான். சமமான தூரத்தில் பின்தொடர்ந்ததால் அவர்களை எதிர்ப்பது எளிதாக இருந்தது. நான் புறம்கண்டு ஓடுவதாக அவர்கள் நினைத்து தொடர்ந்தபோது சட்டென்று நின்று அவர்களை கடுமையாகத் தாக்கினேன். மாலியவான் ஆச்சரியப்பட்டான்.

‘உன்னை வெல்ல தேவர்களாலும் முடியாது. மிக அற்புதமாக யுத்தம் செய்கிறாய். எப்படி எதிரியை நிலைகுலையவைக்க வேண்டும் என்பதை வெகு விரைவில் திட்டமிடுகிறாய்’ என்று பாராட்டினான். நிவாத கவசர்கள் அனைவரும் அழிந்தார்கள்.

இவர்களுக்கப்பால் பௌமர்களும், காலகேயர்களும் இவர்களுக்கு ஆதரவாக, தேவர்களுக்கு எதிராக யுத்தத்திற்கு வந்தார்கள். அவர்களுக்குள் அபிப்ராய பேதம் இருந்தாலும் என்னை பொது எதிரியாக கொண்டார்கள். அவர்களும் கடுமையாக தாக்கினார்கள். பாசுபதாஸ்திரத்தை நான் வளைத்து ஏவி சகலரையும் எரித்து சாம்பலாக்கினேன். அவர்கள் அடையாளம் காண முடியாதபடி அழிந்து போனார்கள்.

நான் செலுத்திய அனைத்து அஸ்திரங்களும் மறுபடியும் என்னிடம் வந்து வரிசையாக புகுந்து கொண்டன. எந்த அஸ்திரமும் என்னிடமிருந்து விலகவில்லை. நான் மறுபடியும் முழு பலத்தோடு தேவேந்திரனை சந்தித்தேன். தேவேந்திரன் ஆரத் தழுவிக் கொண்டான். இதோ எனக்கு ஏற்ற இந்தக் கவசமும், கிரீடமும், நைந்து போகாத இந்த நாணும் கொடுத்தான்.

‘இந்த அசுரர்களை வென்ற நீ தேவர்களை விடவும் பலசாலி. துரியோதனனோ, கர்ணனோ, துச்சாதனனோ, பீஷ்மரோ, துரோணரோ உனக்கு இணையானவர்கள் அல்ல. பாண்டவர்களுக்கு வெற்றி நிச்சயம்” என்று ஆசிர்வதித்தான். “உன்னுடைய பிராதாக்கள் உன்னை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உனக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னால் அதை உணர முடிகிறது. எனவே, அவர்கள் காத்திருப்பை நீ வீணாக்காதவாறு அவர்களிடம் போய் சேர்ந்து கொள்’ என்று வழியனுப்பி வைத்தான். நீங்கள் காத்திருக்கிறீர்கள் என்ற விஷயம் தெரிந்து நான் மிக வேகமாக இங்கு ஓடி வந்துவிட்டேன். உங்கள் அத்தனை பேரையும் சந்தித்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. அண்ணா, இனி யுத்தம் என்று ஒன்று வந்தால் துரியோதனனை நிச்சயம் ஜெயிப்போம். கதற அடிப்போம்,” என்று அர்ஜுனன் உரத்த குரலில் சொல்ல, சகோதரர்கள் மகிழ்ந்தார்கள். ஓடிவந்து அர்ஜுனனை அணைத்துக் கொண்டார்கள். கந்தமான பர்வதத்திலிருந்து மெல்ல கீழிறங்கி தைத்ய வனத்திற்கு நகர்ந்தார்கள்.

வனத்தில் தனியாகச் சுற்றிக் கொண்டிருந்த

பீமன் ஒருவித வாசனையை உணர்ந்து, நல்ல நறுமணமாக இருக்கிறதே என்று நகர, காலுக்குக் கீழே பூமி நகர்ந்து ஒரு பெரிய மலைப்பாம்பு வெளிப்பட்டு அவனை சுற்றிக் கொண்டது. இறுக்கத் துவங்கியது. மிகுந்த பலசாலியான பீமன் பல்வேறு விதங்களில் முயற்சி செய்து அந்த பாம்பிலிருந்து விடுபட முயன்றான். ஆனால், பாம்பு அவனை விடுவதாக இல்லை. வால் நுனியால் அவனை அடித்து பிணைத்த வண்ணம் இன்னும் இறுக்கிற்று. அவன் கைகளைத் தவிர, உடம்பு முழுவதும் இறுக்கிக் கொண்டு அவனை மூச்சுத் திணற வைத்தது. பீமன் கொஞ்சம் பயந்து போனான். தருமரை நினைத்தான்.

கிழக்கு திசையில் ஒரு நரி ஊளையிடுவது கண்டு தருமர் திடுக்கிட்டார். சகல திக்கும் பார்க்க, எல்லா திக்கிலும் துர் சகுனங்கள் தோன்றின. அர்ஜுனன் திரௌபதியோடு பேசிக் கொண்டிருக்க, நகுல, சகாதேவர்கள் வேறு வேலைகளில் ஈடுபட்டிருக்க பீமனை காணோம் என்பதை உணர்ந்தார்.

எங்கிருக்கிறான் பீமன் என்று தேடத் துவங்கினார். பீமன் போன வழியில் கிளைகள் உடைக்கப்பட்டும், மரங்கள் உலுக்கப்பட்டும் இருந்தன. அந்த தடயங்களை வைத்துக் கொண்டே போக, ஒரு மலைப் பாம்பு அவனைச் சுற்றி நெருக்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். பீமனை உண்பதற்காக மிகப் பெரியதாய் வாயைத் திறக்க, அந்த பாம்புக்கு அருகே போய் அதை தடவிக் கொடுத்தார்.

“சற்று நில். இவன் பீமசேனன். என்னுடைய தம்பி. நான் அவனுடைய அண்ணன் தருமன். நீ யார்? உனக்கு பசிதான் பிரதானம் என்றால் உனக்கு உண்ண நல்ல விஷயங்களைத் தருவோம். பீமனை விட்டுவிடு” என்று மிருதுவாகப் பேசினார்.

“எனக்கு வேட்டையாடி யானைகளையும், காண்டாமிருகங்களையும் பிடித்து உண்ணத் தெரியும். ஆனால், எந்த இரை என் பக்கம் வருகிறதோ அதை உண்பது என்பதுதான் என் விரதம். பீமன் என் மீது ஏறி நின்றான். அவனை உண்ணப் போவது உறுதி. அவனைவிடமாட்டேன்” என்று பாம்பு சொன்னது.

“உன்னுடைய மனதை தெளிவாகச் சொல்லிவிட்டாய். ஆனாலும் நான் கேட்பதை புரிந்து கொண்டு மேற்கொண்டு செயல்படு. என்ன செய்தால் பீமனை விடுவிப்பாய் என்று சொல். நான் அதைச் செய்கிறேன்.”

அந்த பாம்பு வாய்விட்டு சிரித்தது. “என் பெயர் நகுஷன். நான் உங்கள் குலத்தின் மூத்தோர்களில் ஒருவன். என் குலத்தில் உள்ள இளைஞனே கொழுப்புள்ளவனாக, தசையுள்ளவனாக, சுத்த ரத்தம் கொண்டவனாக இங்கு வந்திருக்கும் பொழுது அதை உண்ணுகின்ற பேரானந்தம் எனக்கு கிடைத்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை நான் விடுவதாக இல்லை. ஆனால், தருமனே நீ கேட்பதிலிருந்து உன் அறிவு கூர்மை புலப்படுகிறது. நீ வாதத்திற்கு தயாராக இருக்கிறாய் என்பது புரிகிறது.

மறுபடியும் சொல்கிறேன். நான் நகுஷன். ஒரு காலத்தில் அரசனாக இருந்தேன். மிகுந்த அறிவுடையவனாக இருந்தேன். கல்வி, கேள்விகளில் பலம் பொருந்தியவனாக இருந்தேன். என்னை பல பிரம்ம ரிஷிகள் பல்லக்கில் தூக்கினார்கள். அப்படி அவர்கள் தூக்கிக் கொண்டு போவதில் எனக்கும் பெருமை அதிகம். அவ்வாறு என்னைச் சுமக்க, அகத்தியர் வந்து என்னைத் தூக்கியபோது நான் குள்ள உருவமுடைய அவரை விரைவாகப் போகும்படி என் கால்களால் உதைத்தேன். ‘சர்ப சர்ப’ என்று திட்டினேன். விரைவாக விரைவாகப் போ என்று அதற்கு அர்த்தம். அகத்தியர் அதற்கு திரும்பி, என்னை நோக்கி ‘சர்ப சர்ப என்றாயே, நீ சர்பமாகக் போகக் கடவது’ என்று சாபமிட்டார்.

அந்த அந்தணர் சாபமிட்ட க்ஷணத்திலேயே என்னுடைய உடல்கூறு அழிந்து, உயிர் பிரிந்து நான் ஒரு பாம்பாக உருமாறி இந்த இடத்திலே வந்து விழுந்தேன். அகத்தியர் என்ற அந்த அந்தணருடைய மனோவலிமை தெரிந்தது. தருமனே, நான் அறிவார்த்தமான ஒரு அரசனாக இருந்தபோது எனக்குள் உள்ள கேள்விகளையே நான் இப்போது உன் முன் வைக்கப் போகிறேன். பாம்பாக உருமாறிய நான் அகத்தியரிடம் எனக்கு சாபவிமோசனமும் உண்டல்லவா என்று கேட்க, குந்தியின் மைந்தன் தருமபுத்திரனால் உனக்கு சாபவிமோசனம் என்று சொன்னார். நீ வந்துவிட்டாய். என் விமோசன காலமும் நெருங்கிவிட்டது என்பதை என்னால் உணர முடிகிறது. ஆனாலும், என் மனதிலுள்ள கேள்விகளுக்கு நீ பதில் சொல்லியாக வேண்டும். இல்லையெனில் உன் தம்பியை இரையாகக் கொள்வேன்.”

“சரி, எந்தக் கேள்வி வேண்டுமானாலும் கேள். நான் பதில் சொல்கிறேன். என் தம்பியை தளர விடு. அவன் ஆசுவாசப்படுத்திக் கொள்ளட்டும். அவன் போகமாட்டான். நான் உறுதி கூறுகிறேன்” என்று சொல்ல, பாம்பு பீமனை தளர்த்தியது. பீமன் பாம்பின் மீது சாய்ந்து கொண்டான்.

எல்லா அரக்கர்களையும் கொன்று போடுகிற வலிவு பீமனிடம் இருந்தாலும், பல அஸ்திரங்களை தாங்கிக் கொண்டிருக்கிற சிறப்பு அர்ஜுனனிடம் இருந்தாலும், இந்த நேரம் இந்த பாம்பிடமிருந்து தப்பிக்க தருமபுத்திரர் புத்தியால் மட்டுமே முடியும் என்பது பீமனுக்குப் புரிந்தது. தன் தமையனாரின் வலிவை, புத்திக் கூர்மையை மிகுந்த கவனத்தோடு அவன் பார்த்துக் கொண்டிருந்தான். பாம்பு முதல் கேள்வியை தருமபுத்திரர் முன்பு வைத்தது. “பிராமணன் என்பவன் யார்? அவன் தகுதிகள் என்ன?”

“எவனிடம் ஒழுக்கம், அன்பு, கொடை, நேர்மை, தியாகம் போன்ற குணங்கள் நிறைந்திருக்கிறதோ அவனே அந்தணன்.”

“குணமா அந்தணன்? “பாம்பு மறுபடியும் கேட்டது.

“ஆமாம், குணம்தான் அந்தணன். பிராமணனாகப் பிறந்தவன் இந்த குணங்கள் இல்லையெனில்

அவன் அந்தணனாக மாட்டான். சூத்திரனாக பிறந்த ஒருவன் இந்த குணங்களைக் கொண்டிருந்தால் அவன் அந்தணன் என்று அறியப்படுவான்."

"அப்படியென்றால் ஜாதி என்பது பயனற்றுப் போகிறதே"

"ஆமாம். ஜாதி என்பது பயனற்ற ஒரு விஷயம்தான். இந்த உலகத்தில் எல்லா ஆண்களும் எல்லாவித பெண்களோடும் கூடி குழந்தைகள் பெறுகிறார்கள். அப்படிக் குழந்தைகள் பெறுவதால் ஜாதி என்ற விஷயம் உடைந்து போயிற்று. இந்த யுகத்தில் எந்த ஜாதி என்று விசாரித்து அந்த குணங்களை கொண்டிருக்கிறானா என்று பரிட்சித்துப் பார்ப்பது தேவையற்றது. வீணானது. ஜாதியால் ஏற்படுகின்ற குணங்களும், அதனால் ஏற்படுகின்ற கௌரவங்களும் எப்பொழுதோ குலைந்து போய்விட்டன. அவற்றைத் தேடிக் கொண்டிருப்பதில் எந்த லாபமும் இல்லை."

உயர்ந்த க்ஷத்திரிய குலத்தில் பிறந்துவிட்டு ஜாதியால் எந்த லாபமும் இல்லை என்று சொல்கிற தருமபுத்திரரை அந்தப் பாம்பு ஆச்சரியத்துடன் பார்த்தது. "தெளிவாகப் பேசுகிறீர். உம்மோடு பேசுவது சந்தோஷமாக இருக்கிறது. தொடர்ந்து சில கேள்விகளை கேட்க விரும்புகின்றேன்" என்று சொல்லியது.

உயர்ந்த க்ஷத்திரிய குலத்தில் பிறந்துவிட்டு ஜாதியால் எந்த லாபமும் இல்லை என்று சொல்கிற தருமபுத்திரரை அந்தப் பாம்பு ஆச்சரியத்துடன் பார்த்தது. "தெளிவாகப் பேசுகிறீர். உம்மோடு பேசுவது சந்தோஷமாக இருக்கிறது. தொடர்ந்து சில கேள்விகளை கேட்க விரும்புகின்றேன்" என்று சொல்லியது.

(பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு மகாபாரதத்தில் எழுதப்பட்ட இந்தப் பகுதி மிகுந்த ஆச்சரியத்தை தருகிறது. இதைப்பற்றி அறிவு ஏதும் இல்லாமல் தன் ஜாதியைப் பற்றி உயர்வாகப் பேசுவதும் அல்லது தன் ஜாதி இழிவானது என்று நினைத்து புலம்புவதும் அபத்தமானது என்பது தெள்ளத் தெளிவாகப் புரிகிறது. குணம்தான் ஜாதி. ஒழுக்கம்தான் அடிப்படை என்பதை வெகுநாள் முன்பே வேத விஷயமாகச் சொல்லப்பட்டுவிட்டது.)

"வேத விஷயங்களில் ஈடுபட்டு அந்த கர்மாக்களை ஒழுங்காகச் செய்தவன் சொர்க்கம் அடைகிறான் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஏ. சர்பமே. இதைத் தவிர வேறு ஏதேனும் வழி உண்டா?" என்று யுதிஷ்ட்டர் கேட்க, அந்த மலைப்பாம்பு நெளிந்தது. திரும்ப கூர்மையாக தருமபுத்திரரை பார்த்தது. "தன்னிடம் இருப்பதை கூசாமல் வாரி, வழங்கியும், இனியவை கூறியும், உண்மையை பேசியும், அஹிம்சையில் பற்றுதலுமுள்ள மனிதன் வெகு எளிதாகச் சொர்க்கத்தை அடைகிறான். அவருக்கு ஒப்பானவர், அவரைவிட மிக்கானவர் எங்கும் இல்லை" என்று திடமாகச் சொல்லியது.

ஆனால், யுதிஷ்டிரர் விடவில்லை. "சர்பமே, வாரி வழங்குவது என்பதைச் சொன்னாய். தானத்தை காட்டிலும் சத்தியமா, சத்தியத்தை காட்டிலும் தானமா, எது பெரியது என்று நீ சொல்ல வேண்டும். அஹிம்சை, இன்சொல் இவை இரண்டில் எது பெரியது என்று நீ சொல்ல வேண்டும்."

"இது அந்தந்த நேரத்திற்கு ஒப்பானது. தானம், சத்தியம், அஹிம்சை, இன்சொல் இவையெல்லாம் சில சமயத்தில உயர்வாகவும், சிலசமயம் தாழ்வாகவும் போகும். சிலசமயம் தானத்தைவிட சத்தியமே முக்கியம். சிலசமயம் இன்சொல்லைவிட அஹிம்சை முக்கியம். அந்த நேரத்தைப் பொறுத்துதான் இந்த காரியங்கள் சிறந்து விளங்கும். ஆனால், இவை எதுவுமே தவறானவை அல்ல. உயர்வை தரக்கூடியதுதான்" என்று அந்த மலைப்பாம்பு பேசியது.

தருமபுத்திரர் வியந்து போனார். "ஹே சர்பமே, சரீரத்தை விட்டவனுக்கு சொர்க்கத்தில் உண்டான கதி என்ன என்பதை எனக்குச் சொல்?"

"உயிரை விடும்போது தேகம் பற்றிய நினைப்போடு இருந்தவன் மறுபடியும் மனிதனாகப் பிறக்கிறான். அதில் காம, குரூரங்கள் செய்தவன் பூமியில் விலங்காகப் பிறக்கிறான். அஹிம்சை, தர்மம், தானம் இவற்றை கைக் கொண்டவன் தன்னுடைய உயிரை பிரம்மத்தில் கலக்க அந்த நேரம் முயற்சி செய்கிறான்."

"சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் இவற்றை அறியப்படும் சமயத்தில் அறிகின்ற ஜீவனுக்கும் அறியப்படுகின்ற அந்த விஷயங்களுக்கும் இடையே உள்ள தொடர்பை எனக்கு தெரிவிப்பாயாக" என்று கேட்டார் தருமர்.

நகுஷன் என்ற அந்த அரசன் தத்துவத்தில் மிகச் சிறந்த ஆசைகொண்டு பல பிரம்ம ரிஷிகளை ஒன்று சேர்த்து விவாதிக்கின்றவனாகவும், அவர்களை வாதத்தில் ஜெயிக்கின்றவனாகவும் இருந்தான். அந்தப் பெருமையால் ஏற்பட்ட கர்வத்தால் பாம்பாக பிறந்தான். அவர்களை அவமரியாதை செய்ததால் ஊருகின்ற பிராணியாகப் பிறந்தான். அகத்தியரை எட்டி உதைத்ததால், சர்ப சர்ப என்று அவரை விரட்டியதால், வேகம் வேகம் என்று அவரைச் சொன்னதால் சர்பமாகப் பிறந்தான். ஆனாலும், தத்துவங்கள் கூர்மையான புத்தியுடையவரால் பேசப்படுகிறபோது அந்த நகுஷன் என்கிற பாம்பு பீமனை தளரவிட்டு தருமபுத்திரரை கவனிக்கத் தொடங்கியது.

(தொடரும்)



மகாபாரதம்

59

அனைத்திற்கும் அப்பாற்பட்ட ஆத்மா

நகுஷன் என்கிற அந்தப் பாம்பினுடைய பிடி தளர்ந்தாலும் பீமன் தப்பித்துப் போக வில்லை. தன்னுடைய தமையனாருக்கும், அந்த சர்ப்பத்திற்கும் உண்டான வாதத்தை நின்றபடி மிகக் கூர்மையாக கேட்டுக் கொண்டிருந்தான்.

“உடம்பினுடைய இந்திரியங்களில் மனம் பற்றிக் கொண்டிருக்கிறது. பற்றிக் கொண்டிருக்கிற மனம் அந்த இந்திரியங்களின் சுகத்தோடு உடம்பின் வெளியே வந்து அந்த சுகங்களுக்கான காரியங்களை, காரணங்களை தேடுகிறது. அப்படி வெளியே கிளம்புகின்ற மனம் புத்தியின் துணையோடு போகிறது. எல்லா நேரமும் புத்தியினுடைய முழு ஆதரவும் மனதிற்கு கிடைத்துவிடுவதில்லை. இந்திரியத்தின் சுகமே மனதில் மேலோங்கி புத்தியினுடைய எச்சரிக்கையோ அல்லது தந்திரமோ மனதிற்கு எட்டாமல் போகிறது.

வலிமையற்ற மனிதன் இந்த விஷயத்தை தடுத்து நிறுத்த முடியாமல் போகிறான். எவனுக்கு ஞானம் இருக்கிறதோ புத்தியைத் தவிர, இந்திரியத்தைத் தவிர, மனதைத் தவிர, வேறு ஒரு ஆத்ம ஞானம் இருக்கிறதோ அவன்தான் எளிதாக இதை தடுத்து நிறுத்தி எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறான்.”

“எனக்கு முற்றிலும் புரியவில்லை. மனம், புத்தி இந்த இரண்டினுடைய லட்சணத்தைச் சொல்” என்று மறுபடியும் சர்ப்பத்தை தருமபுத்திரர் கேட்டார்.

புத்தியினுடைய குணம் மனம்.
புத்தியினுடைய விகசிப்பு மனம்.
புத்தியினுடைய விரிவாக்கம் மனம்.

இந்த புத்தி மனம் என்ற விஷயத்தோடு சேர்ந்து அலையாமல் ஆத்மாவோடு சேர்ந்திருப்பின் ஆத்மாவை சுற்றிக் கொண்டிருப்பின் அதனுடைய இயல்பு வேறுவிதமாக மாறிப் போகிறது. அப்படி சுற்றிக் கொள்ள வேண்டும் என்றுதான் ஞானிகளும், பெரியோர்களும் கட்டளையிடு



கிறார்கள். மனதோடு லயித்திருக்காமல் ஆத்மாவோடு லயித்திருக்க வேண்டும். உள்ளே உன் உள் மனம் என்ன சொல்கிறது என்று இந்த புத்தி விசாரிக்க வேண்டும். ஆனால், பல நேரங்களில் புத்தி அதைச் செய்ய தவறிவிடுகிறது".

"அற்புதமாகப் பேசுகிறாய் நகுஷா. இந்த விஷயத்தை இதைவிட எளிதாகச் சொல்கிறவர் எவரும் இல்லை."

"எது புத்தி, எது மனம் என்பதை ஒருவன் அமைதியாக இருந்து ஆராயத் துவங்கினால் அவனுக்கு ஆத்ம தரிசனம் கிடைக்கும். ஆத்மாவானது எங்கு இருக்கிறது, என்ன செய்கிறது என்று அறிய முடியும். புத்தியிலும், மனதிலும் மனதை நிலைப்படுத்தியவனுக்கு ஆத்மா மறை பொருளாகத்தான் இருக்கும்."

"இவ்வளவு ஞானமுள்ளவனான நீ ஏன் சர்ப்பமாக பிறந்திருக்கிறாய். எந்த மோகத்தால் நீ இந்த இழிநிலையை அடைந்தாய்?" என்று கேட்டார்.

"உன்னுடைய அறிவுக்கும், நீ இப்பொழுது இருக்கின்ற இருப்புக்கும் எந்த சம்பந்தமும் இல்லையே. இது வருத்தமுடையதாக இருக்கிறதே" என்று குரல் நெகிழப் பேசினார்.

பாம்பின் குரல் அதைவிட நெகிழ்ச்சியாக இருந்தது.

"என்னுடைய சாபம் கலைவதற்கு என்று வந்திருக்கின்ற சாதுவே, தருமபுத்திரா, உன்னை வணங்குகின்றேன். முன்னொரு காலத்தில் நகுஷன் என்ற அரசனாக இருந்தேன். என் புத்தி மிகக் கூர்மையாக இருந்தது. எந்த விலங்கை பார்த்தாலும் அந்த விலங்கினுடைய சக்தி எனக்கு வந்து விடும். எந்த மனிதருடைய கூர்மையான அறிவும் எனக்கு புலப்பட்டு விடும். அவர்களுடைய பலத்திற்கு அதிகமான பலத்தை உடனடியாக நான் பெறுவேன். அப்படியிருந்த சௌகரியத்தினால் நான் மிகுந்த அகங்காரத்தோடு இருந்தேன். என்னிடம் தோற்றவர்களை நான் என்னுடைய அடிமைகளாக இருக்க வேண்டுமென்று சொன்னேன். என்னுடைய பல்லக்கை சுமக்க வேண்டுமென்று வற்புறுத்தினேன். நான் அநீதி செய்கிறேன் என்பதை என் புத்தி எனக்கு எடுத்துச் சொல்லவில்லை. என் மனம் மயங்கிவிட்டது. புத்தியினுடைய விகசிப்பாக மனம் இது சரிதானே என்று அதை ஆமோதித்தது. மனம் புத்தியை பாராட்டியது. புத்தி ஆத்மாவின் அருகே போய் இல்லாது தன் விகசிப்பான மனதையே கொண்டாடிக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட சமயத்தில் நாம் செய்கின்ற காரியங்கள் தவறாகத்தான் போகும். புத்தியும், மனதும் நடுநிலையில் இல்லாதபோது எல்லா செயல்களும் குழப்பமாகத்தான் போகும். என் பல்லக்கை சுமந்து கொண்டிருந்த அகத்தியர் குள்ளமாக இருந்ததால், தள்ளாடியதால், தோள் கொடுத்து தூக்க முடியாமல் அவஸ்தைப் பட்டதால் அவரை எச்சரிக்க என் காலால் அவரை எட்டி உதைத்தேன். சர்ப்ப சர்ப்ப என்றேன். அந்த

அந்தணர் திரும்பி, போ. சர்ப்பமாகப் போ என்று சினந்து கூறினார். அந்த க்ஷணமே என் உயிர் பிரிந்து கீழே பூமியில் சர்ப்பமாக விழுந்தேன். ஒரு பிராமணருடைய சாபம் மிகுந்த வலிமையுடையது. கற்றோருடைய ஞானம் மிகப் பெரிய வலிமையுடையது. அது எவரையும் கண்டிக்கின்ற தன்மையுடையது. அறிவிற்கும், மனதிற்கும் அப்பாற்பட்டது. ஆத்மாவிலேயே லயித்திருப்பவரை பகைத்துக் கொள்ளக் கூடாது.

எனக்கு இது புரியவில்லை. நான் சர்ப்பமாக கீழே விழும்போது, இதற்கு விமோசனமும் உண்டல்லவா என்று கேட்டபோது, அவர் உன்னுடைய பெயரைச் சொன்னார். இதோ நான் விமோசனம் பெற்றுவிட்டேன். உம்மோடு நான் பேசிக் கொண்டிருந்தது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. இந்த சந்தோஷம்தான் மறுபடியும் என்னுடைய வாழ்க்கையை எனக்கு நினைவுபடுத்தியது. ஆத்மாவில் லயிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உன்னுடைய பேச்சுதான் தூண்டியது.

பாலகுமாரன்

இதனால்தான் எப்போதும் கற்றவருடைய சந்நிதானத்தில் இருக்க வேண்டும் என்பது முக்கியம். விலங்குகளின் சந்நிதானத்தில்தான் நான் இவ்வளவு நாளும் வாழ்ந்தேன். வேட்டையாடிக் கொண்டும், மாமிசத்தை உண்டு கொண்டும், வஞ்சனைகள் செய்து கொண்டும் நான் உயிரோடு இருந்தேன். வெகு நாள் கழித்து இப்பொழுதுதான் சாதுவானவனும், ஞானமானவனுமான உன்னை சந்திக்கிறேன். உன்னைச் சந்தித்த இந்த க்ஷணமே எனக்குள் என் மனம், என் புத்தி என் ஆத்மாவோடு லயப்பட்டுவிட்டது. இந்த லயம் என் சாபத்தை விலக்கிவிட்டது. எனவே, தருமபுத்திரா, சகல நன்மைகளும் உனக்கு கிடைக்கட்டும். நீ நீடூழி வாழ்க” என்று ஆசிர்வதித்தது. பீமனும் கை கூப்பினான்.

மிகப் பெரிய விமானம் ஒன்று அருகே வந்து நிற்க, நகுஷன் கை கூப்பியபடி மனித ரூபத்தில் அதில் ஏறிப் போனான். பாம்பு துகளாக மறைந்து போயிற்று.

நகுல சகாதேவர்கள் பாஞ்சாலி இருக்கின்ற இடத்திற்கு வந்தார்கள். அவர்களைச் சுற்றி சில அந்தணர்கள் இருந்தார்கள். நடந்ததை நடந்தபடி பீமன் அவர்களுக்கு கூறினான். அந்த பிராமணர்களும், பாஞ்சாலியும், நகுல சகாதேவர்களும் வெட்கப்பட்டார்கள். கை கட்டி, தலை குனிந்து பீமன் தருமருக்கு முன் அடக்கமாக நின்றான். அவன் கண்களில் நீர் நிறைந்து கன்னம் வழிந்தது. மெல்ல தருமர் பேச ஆரம்பித்தார்.

“பீமா, அர்ஜுனா, உடம்பு வலிவோ, அஸ்திரங்கள் வலிவோ நம்மை மேலேற்றாது. அது இழந்து போன ராஜ்ஜியத்தை திரும்ப கொடுக்கும் அல்லது கூந்தலை முடியமாட்டேன் என்று சொன்ன உன் மனைவியினுடைய சபதத்தை நிறைவேற்றிக் கொடுக்கும். மீண்டும் ஒரு சுகமான வாழ்க்கைக்கு நாம் நகர்ந்து போவோம். இந்த வனத்திலிருந்து நம்முடைய அஸ்தினாபுரத்திற்குப் போய் ஆட்சி செய்வோம். ஆனால், அது முடிவு அன்று அர்ஜுனா. அது முடிவில்லை சகோதரர்களே. இது முடிவல்ல பாஞ்சாலி. வேறொரு விஷயம் இருக்கிறது அந்தணர்களே.

எவனொருவன் தன் புத்தியை, மனதை ஆத்மாவோடு இடையறாது சம்பந்தப்படுத்திக் கொண்டிருக்கிறானோ, எப்பொழுதும் ஆத்மாவின் நினைவில் இருக்கிறானோ அவனால் செயற்கரிய காரியங்களை செய்ய முடியும். அவனால் இப்பொழுது இருக்கின்ற நிலையை பக்குவமாக ஏற்றுக் கொள்ள முடியும். இனி வரப்போகின்ற நிலைமையையும் அழகாக எதிர்கொள்ள முடியும். செய்வது அனைத்தையும் மேலே ஒரு காரியம் செய்து கொண்டிருக்கிறது என்று ஆத்மா அறிவுறுத்தும். அந்த அறிவு இருக்கிறவரை அவனை எந்தத் துன்பமும் அசைக்காது. துன்பமில்லாத வாழ்வு என்பது இதுதான். மற்றபடி வனம் துன்பமா, நகரம் துன்பமா என்கிற பேதங்களெல்லாம் ஆத்மாவை அடைந்தவனுக்கு லட்சியமே இல்லை.”

பாசுபதாஸ்திரம் கொண்டு வந்த அர்ஜுனனும், விலங்குகளை அடித்து நொறுக்கி, அரக்கர்களை கொன்ற பீமனும், துச்சாதனனால் கலைக்கப்பட்டு கேசத்தை விரித்துப் போட்டு, துரியோதனன் ரத்தத்தை தலையில் துடைப்பேன் என்று பெரும் சபதமிட்ட திரௌபதியும் தருமருக்கு முன்னே நாணினார்கள். அவருக்கு முன்னே ஒரு சிறு பிராணியாய் தன்னை உணர்ந்தார்கள். தருமபுத்திரர் சகல ஐஸ்வர்யங்களையும் தன்னிலே கொண்ட ஒரு மகானாக அந்த சகோதரர்களுக்கு நடுவே ஜொலித்தார்.

எது உத்தமமான விஷயம்? அஸ்திரங்களின் வலிவா, உடம்பு பலமா அல்லது வேறு ஏதேனும் சபதமா, அகங்காரமா, எதுவும் இல்லை. எப்பொழுது புத்தியும், மனமும் ஆத்மாவை நெருங்கி நிற்கிறதோ, எப்பொழுது புத்தி ஆத்மாவை சுற்றி இருக்கிறதோ அதுதான் முக்கியம். புத்தியின் விகசிப்பும், விவரிப்பும் மனம். அந்த மனதை நிறுத்தி, அடக்கி புத்தியானது ஆத்மாவிற்கு அருகே இருக்க வேண்டும். இதைச் செய்யத் தகாதவன் மனிதன் இல்லை என்கிறது நீதி சாஸ்திரம்.

புத்தி ஏன் மனதை அடக்கி ஆத்மாவில் லயிக்க முடியாமல் போகிறது என்ற கேள்வி வரும். இது தவறானவர்களின் கூற்று. ஆங்காரர்களோடும், அறிவற்றவர்களோடும் அதிகம் உணர்ச்சிவசப்பட்டவர்களோடும் நெருக்கமாக இருக்கையில் புத்தியானது கிளர்ந்து மனமாகி அம்மாதிரி செய்ய

வர்களே சரி என்று சொல்லும். புத்தி மனதின் போக்கை கட்டுப்படுத்தி அம்மாதிரி அறிவற்ற கூக்குரலிடுபவர்களிடமும் அல்லது முஷ்டி பலம் காண்பிப்பவர்களிடம் விலகி நின்று தன்னை உணரத் தலைப்படுகிறபோது...

புத்தி என்ன என்று பார்க்கிறபோது புத்தி ஆத்மாவிற்கு அருகே போய்விடும். இதற்கு நல்லவர்களுடைய சகவாசம் மிகவும் தேவை. எவர் ஆத்ம தரிசனத்தை அடைந்தார்களோ அவர்களுடைய அண்மை வரும்போது புத்தியானது வெகு எளிதாக ஆத்மாவிற்கு அருகே வந்துவிடும். அது வெகு இயல்பாக நடக்கின்ற விஷயம்.

தானியங்கள் இறைக்கப்பட்ட இடத்தை பறவைகள் வந்து கொத்துவது போல அவைகளை வேறு எங்கும் தேடாது. இறைத்தவர் யார் என்றும் பார்க்காது. இறைத்த தானியத்தை வேகமாக கொத்துவது போல. அந்தப் பறவைகள் தானியத்தை உண்ணும். இறைத்தவர்கள் மிகக் கருணையோடு அந்தப் பறவைகளை பார்த்துக் கொண்டிருப்பார். பறவையினுடைய பசி தீர்ந்த பிறகு, யார் தானியத்தை தந்தது என்று சிலவை சிந்திக்கக் கூடும். இது ஒருவித தலையெழுத்து. ஒருவித வரம் என்பதும் உண்மை.

மழைக்காலம் அருமையாகத் துவங்கிவிட்டது. மிகச்சரியான நேரத்தில் கோடைக்காலம் முடிந்து கருமேகங்கள் மேகமாக தைத்யவனத்தை சூழ்ந்து கொண்டன. பூமிக்கு மிக அருகில் வந்து பெரிய கூடாரங்களைப் போல கவிழ்ந்து நின்றன. இடியும், மின்னலும் அதிகமாக இருந்தது. குளிர் காற்று வீசியது. மரங்களுக்கு உணவளிக்கப் போகிறோம் என்கிற எண்ணத்தை அந்த கருமேகங்கள் ஏற்படுத்தின. காற்றினால் ஆடப்பட்ட தாவரங்கள் இந்த மழையை எதிர்பார்த்து மிக ஆவலாக அலைந்தன. சட்டென்று ஒரு சிறு மேகம் கலைந்து மழைத்துளிகள் வீச, பூமி சிலிர்த்து உயிர்பெற்றது. விழித்துக் கொண்டதுபோல பூமியின் அடியிலுள்ள தாவர வேர்கள் நெளியத் துவங்கின. உள்ளே இறங்கிய நீரை வேகமாக உறிஞ்சின. அடித்தண்டிற்கு அனுப்பின. இன்னும் மேகங்கள் கீழ் இறங்க நல்ல இருட்டு ஏற்பட்டது. வெளிச்சமும், இருட்டும் கலந்த நிலை கண்ணுக்கு சுகமாக இருந்தது.

தோலாடைகளை போர்த்தியபடி மலைக்குகையின் விளிம்பில் அமர்ந்தபடி இந்த இயற்கையின் ஆட்டத்தை பாண்டவர்கள் கண் கொட்டாமல் பார்த்திருந்தார்கள். ஐந்து வருடங்கள் பிரிந்திருந்த அர்ஜுனன் வந்து சேர்ந்த சந்தோஷத்தில் எல்லோரும் இருந்தார்கள். திரௌபதி அடிக்கடி அவனுக்கு அருகே போய் உட்கார்ந்து கொண்டாள். குளிரும், காற்றும் அவளை சிலிர்க்க வைத்து அவளை மேலும் அழகுபடுத்தியது.

இப்போது மேகங்கள் மிக நிதானமாக தரை இறங்கின. கனத்த மழைத் துளிகள் தரையை தாக்கின. ஒன்று, இரண்டு, மூன்று என்று ஒன்றன்பின் ஒன்றாக தைத்ய வனத்தில் மேகங்கள் இறங்கிக் கொண்டிருந்தன. இரவும், பகலும் இடைவிடாது மழை பொழிந்து கொண்டிருந்தது.

பூமி நீரை உறிஞ்சி குடித்தது. நதிகளில் நீர் வேகமாக ஓடிற்று. குளங்கள் நிரம்பின. மீன்கள் துள்ளின. பறவைகள் மரங்களில் ஒடுங்கி மழை சற்று நிற்காதா என்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்தன. அடிக்கடி தலைநீட்டி வேடிக்கை பார்த்தன. முதலைகளும், ஆமைகளும் கரை ஏறி மழையை அனுபவித்தன. காட்டிலுள்ள சிங்கங்களும், யானைகளும், புலிகளும், நரிகளும் மழைக்கு பயந்து சுருண்டு ஒடுங்குகின்றன. பசிக்கு வேண்டுமென்ற மட்டும் அருகே ஓடுகின்றன. நீரை நாவால் நக்கி அனுபவித்தன. இந்த மான்களும், மானை தின்ற சிங்கங்களும் ஏங்கின. குறுமுயல்களுக்காக நரிகள் மழையில் அலைந்தன. பசி தாங்காது யானைகள் மலையில் நனைந்தபடி கிளைகளை ஒடித்தன. மிருகங்கள் அஞ்சுகின்ற செந்நிற ஓநாய்கள் பதுங்கிப் பதுங்கி கூட்டம் கூட்டமாக மழையில் நனைந்தபடி வேடிக்கை பார்த்தன. படீரென்று உள்ளங்கைகளை சேர்த்து அறைந்ததும் பீமனுடைய அந்த வேகம் பார்த்து அவை சிதறி ஓடின. அவை வந்த விதமும், சிதறி ஓடிய விதமும் திரௌபதிக்கு பெரும் சிரிப்பை உண்டாக்கியது.



எந்த கவலையுமின்றி, எந்த பொறுப்புமின்றி மழையை வேடிக்கை பார்ப்பதற்கு பிறந்தது போலவே இங்கு உட்கார்ந்திருக்கிறோம் என்று தருமருக்குத் தோன்றியது. நகரம் என்ற ஒரு இடத்தில் சுற்றி செங்கற்களால் சுவர்கள் கட்டிக் கொண்டு கூரை வைத்துக் கொண்டு பத்திரமாக

இருக்கிறோம் என்ற எண்ணம் ஏற்படுவதற்காக ஏதோ ஒரு விதத்தில் வாழ்கிறோமே, இந்த சுகம் அங்கு வருமா, இதுவல்லவா காட்சி. உலகத்தில் எந்த உயிரும் மழைக்கு அஞ்சி வீடு கட்டிக் கொள்ளவில்லையே. நாம் மட்டும் ஏன் என்று எண்ணம் தோன்றியது. மழை சற்று அடங்க நாலாவிதமான பறவைகளின் ஒலியும் கேட்டன. வெளியே கிளம்புகின்ற பூச்சிகளை, புழுக்களை தின்பதற்காக இடதும், வலதுமாக பறவைகள் அலைந்தன. மயில்கள் அகவின. கிளிகள் பேசும் சத்தம் வேத கோஷம்போல இருந்தது.

> குழந்தைகளைப் பற்றிய துக்கம் வர திரௌபதி சற்றுத் தனியே வந்து கிருஷ்ணர் வரும் திக்கை நோக்கி காத்திருந்தாள். ஒரு தாயின் தவிப்பை அந்தப் புருஷர்கள் புரிந்து கொண்டார்கள். அவளைத் தொந்தரவு செய்யாமல் அமைதியாக இருந்தார்கள்.

மழை நின்றதும் அவர்கள் வெளியே வந்து வேடிக்கை பார்த்தார்கள். நதியில் பிரப்பங் கொடிகள் அலைந்து ஆடின. வெள்ளியை உருக்கியதுபோல தெள்ளிய நீர் நதியில் ஓடியது. சிறு சிறு ஓடைகள்கூட காலை பலமாக இழுத்தன. சில நாட்கள் மழையிலேயே பூக்கள் திமிறித் தெரிந்தன. மான்களினுடைய ஓட்டமும், உணவு உண்பதும் பார்க்க சந்தோஷமாக இருந்தது. நீரின்றி உலகம் இல்லை என்பதை அவர்கள் கண்ணாரக் கண்டார்கள். ஒவ்வொரு உயிரும் நீருக்கு தவித்து அதை விதம் விதமாக அனுபவிப்பதை அதிசயத்தோடு பார்த்தார்கள். மழைக் காலம் மெல்ல பின் வாங்கியது. வெளிர்ந்தது.

சரஸ் ருது ஆரம்பமாகியது. வெயிலின் தாக்கத்தால் உலர்ந்து மரங்கள் நீர் உண்டு கிளர்ந்து இப்போது மெல்லிய வெயில் அடிக்க அதையும் உண்டு பச்சையம் ஏற்படுத்தி பூக்களை மலர்வித்தன. எல்லா திசையிலும் அழகு ததும்பி நின்றது.

பாண்டவர்கள் தைத்ய வனம் விட்டு காம்ய வனம் போனார்கள். காம்ய வனம் இதே மழையில் நனைந்தும், பின்னிப் பிணைந்த செடி கொடிகளோடும், எவரோ நடந்து போன பாதைகளோடு அமைதியாக இருந்தது. முன்னே பீமன் போக, பின்னே அர்ஜுனன் நடக்க, தருமபுத்திரர் அதற்குப் பின்னே வர, திரௌபதி அவர் பின்னே நடக்க, நகுல சகாதேவர்கள் பின்னே நாண் ஏற்றிய வில்லுடன் காவலுக்கு வர அவர்கள் எந்தக் கவலையும் இன்றி அங்கங்கே கிடைத்த கறிகளையும், காய்களையும் கைகளால் நசுக்கி வாயில் போட்டுக் கொண்டு சுத்தமான நீரைப் பருகி, முகம் துடைத்து அமைதியாக நடந்தார்கள்.

காம்ய வனத்தின் மத்தியப் பகுதியை அடைந்தபோதே அவர்கள் வருகையைத் தெரிந்து சுற்றும் முற்றும் தவத்தில் ஈடுபட்ட பிராமணர்கள் அவர்களை நோக்கி வந்தார்கள். சிறிய குடிசைகளில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களை உள்ளே வரச் சொன்னார்கள். ஆனால், வரிசையாக உள்ள குடிசைகளுக்கு எதிர்புறமுள்ள மேடையில் பாண்டவர்கள் அமர்ந்து கொள்ள, ஒரு அந்தணன் அருகே வந்து ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களைப் பார்க்க வரப் போவதாகச் சொன்னார். சில அந்தணர்களுக்கு இந்த மாதிரி குறிப்புகள் ஏற்படும். கிருஷ்ணர் கிளம்பிவிட்டார் என்றும், இன்ன தூரத்தில் இருக்கிறார் என்றும் அவர் தெளிவாகச் சொன்னார்.

அதுவரை புருஷர்களுடைய நெருக்கத்தில், உரையாடலில் அவர்களுக்கு அண்மையில் பயமின்றி அமர்ந்து இயற்கையை ரசித்த திரௌபதி சட்டென்று தன் குழந்தைகளைப் பற்றி எண்ண ஆரம்பித்தாள். அவளுக்குப் பிறந்த ஐந்து குழந்தைகளும் துவாரகாவில் கிருஷ்ணருடைய பராமரிப்பில், பலராமருடைய மேற்பார்வையில் வாழ்ந்து வந்தார்கள். அங்கிருந்த அபிமன்யு வில் வித்தையில் சிறந்த வீரன். அவன் பஞ்ச பாண்டவர்களின் குழந்தைகளுக்கு வில்வித்தை கற்பித்து வந்தான்.

குழந்தைகளைப் பற்றிய துக்கம் வர திரௌபதி சற்றுத் தனியே வந்து கிருஷ்ணர் வரும் திக்கை நோக்கி காத்திருந்தாள். ஒரு தாயின் தவிப்பை அந்தப் புருஷர்கள் புரிந்து கொண்டார்கள். அவளைத் தொந்தரவு செய்யாமல் அமைதியாக இருந்தார்கள்.

பரந்த புல்வெளிகளுக்கப்பால் தேரின் கொடி பறக்க குதிரைகள் விரட்டும் சத்தம் கேட்டது. கிருஷ்ணர் வருவது தெரிந்தது. சகலரும் எழுந்து அந்த திக்கை நோக்கி கை கூப்பி நின்றார்கள்.

தேரிலிருந்து தாவி இறங்கிய கிருஷ்ணர் வேகமாக நடந்து வந்து தருமரையும், பீமனையும் முறைப்படி நமஸ்கரித்தார். இரண்டு கைகளையும் விரித்து அர்ஜுனனை அருகே அழைத்தார். இறுக தழுவிக் கொண்டார். தலையை கோதிவிட்டார். கன்னங்களில் முத்தமிட்டார். தோள்களை பிடித்துவிட்டார். உள்ளங்கைகளில் சேர்த்துக் கொண்டார். மறுபடியும் இழுத்து அணைத்துக் கொண்டார். சிவனின் தரிசனம் பெற்றவனல்லவா. கடும் வைராக்கியத்தில் தவம் செய்து பல அஸ்திரங்களை பெற்றவனல்லவா. இவன் அஸ்திரம் வாங்கிய கதை உலகம் முழுவதும் தெரிந்துவிட்டதே. எப்பேர்பட்டவன் என் நண்பன் என்று பெருமிதத்தோடு அவன் முகத்தை கையில் ஏந்திப் பார்த்தார். அர்ஜுனன் அந்த அன்பு தாங்காமல் கண்ணில் நீர் பெருக்கி நாக்குழற நின்றான். எல்லா விதத்திலும் தன்னுடைய

சிறந்தவரான கிருஷ்ணர் தன்னை மௌனமாகப் பாராட்டுவதைப் பார்த்து வெட்கமடைந்தான். அவன் சகோதரர்கள் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். அவர்களுக்கு கிருஷ்ணர் என்பவருடைய பலம் தெரியும்.

அர்ஜுனனை விட்டுவிட்டு அவர் நகுல சகாதேவர்களை கட்டிக் கொண்டு கொஞ்சினார். அவர்கள் எல்லோரையும் மறுபடியும் தடவி ஆனந்தித்தார். திரௌபதியை அருகே அழைத்து அவள் தலையை கோதிவிட்டார். பெற்ற பெண்ணை கொண்டாடுவது போல கன்னம் தடவி, காது இழுத்து, தோள் அணைத்து உச்சி முகர்ந்து, உள்ளங்கையை பலமுறை அவள் தலையில் வைத்து ஆசிர்வதித்தார். கண்கள் நீர் கட்ட அவள் கை கூப்பி கிருஷ்ணரை பார்த்தாள். அவள் என்ன கேட்கப் போகிறாள் என்பது கிருஷ்ணருக்குத் தெரிந்தது.

“உன் குழந்தைகள் துவாரகாவில் சௌக்கியமாக இருக்கிறார்கள். எந்தக் குறையும் இல்லை. அவர்களுக்கு எல்லாவிதமான பயிற்சிகளையும் ருக்மிணியின் மேற்பார்வையில் அபிமன்யு செய்து கொண்டிருக்கிறான். குதிரை ஏற்றம், யானை ஏற்றம், ஈட்டி எறிதல், வாள் சண்டை, வில் பயிற்சி என்று சகலமும் மிக முறையாக நடந்து கொண்டிருக்கிறது. உன் குழந்தைகள் உற்சாகமாக இருக்கிறார்கள். அவர்களைச் சுற்றி என் குழந்தைகள் அவர்களுக்கு எந்தத் துக்கமும் நேராதவாறு பார்த்துக் கொள்கிறார்கள். உங்களைப்பற்றி பிரிவுத் துயரம் ஏற்படும்போது சமாதானம் செய்கிறார்கள். ருக்மிணி அவர்களுக்கு உங்களின் வைராக்கியத்தையும், வீரத்தையும் நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிற மிகப் பெரிய காரியத்தையும், நீங்கள் உலகப்புகழ் பெறப் போவதையும் அவர்களுக்குச் சொல்லி ஆறுதல் அளிக்கிறாள். உங்கள் குழந்தைகள் மட்டுமல்ல. ருக்மிணியின் இந்த உரையாடலை என் குழந்தைகளும் கேட்கின்றார்கள். ஏன், நன்கு வளர்ந்த அபிமன்யு கூட இது குறித்து அவளிடம் கேட்டு தெரிந்து கொள்கிறான்.

உன்னுடைய குழந்தைகளின் வருகையால், அவர்களின் இருப்பால் என் துவாரகா மிகுந்த மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும் இருக்கிறது. என் குழந்தைகளுக்கு கூடுதலான அறிவு கிடைக்கிறது. ருக்மிணி இது குறித்து மிகவும் சந்தோஷம் அடைந்திருக்கிறாள். ருக்மிணியின் பேச்சுக்கு அபிமன்யு அவர்களுக்கு கூர்மையாக பயிற்சிகள் செய்விக்கிறான். எனவே, உன்னுடைய குழந்தைகள் பற்றிய எல்லா கவலைகளையும் இப்போதே இந்த காம்ய வனத்தின் மழைநீரில் விட்டுவிடு” என்று சொல்ல, அவள் அழுகையும், சிரிப்புமாக கிருஷ்ணரை நோக்கி கரம் குவித்து வணங்கி அவர் பாதம் பணிந்தாள்.

“புத்தி என்ன என்று பார்க்கிறபோது புத்தி ஆத்மாவிற்கு அருகே போய் விடும். இதற்கு நல்லவர்களுடைய சகவாசம் மிகவும் தேவை. எவர் ஆத்ம தரிசனத்தை அடைந்தார்களோ அவர்களுடைய அண்மை வரும் போது புத்தியானது வெகு எளிதாக ஆத்மாவிற்கு அருகே வந்துவிடும். அது வெகு இயல்பாக நடக்கின்ற விஷயம்.”

பாண்டவர்கள் எல்லோர் முகத்திலும் திருப்தி இருந்தது. திரௌபதி என்கிற ஒரு தாய் கிருஷ்ணனே கதி என்று வணங்குவதைப் பார்த்து நெகிழ்ச்சி ஏற்பட்டது. இந்த கிருஷ்ணர் இல்லாவிட்டால் வாழ்வு என்ன ஆகும் என்ற எண்ணமும், அதைத் தொடர்ந்த மிகப் பெரிய நன்றியறிதலும் அவர்களுக்கு ஏற்பட்டன. அவர்களையும் அறியாமல் அடிக்கடி அவர்கள் கிருஷ்ணரை நோக்கி வணங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த வணக்கங்களை கிருஷ்ணர் புன்சிரிப்புடன் ஆமோதித்தார். நெகிழ்ந்து நிற்பவர்களைத்தான் கடவுளுக்கு பிடிக்கும். தன்னை மறந்த பணிவுதான் மனிதர்களுக்கு உன்னதம்.

அதே நேரம் பல்லாயிரக்கணக்கான வருடங்கள் பூமியில் வாழ்ந்த மார்க்கண்டேய மகரிஷி காம்ய வனத்திற்கு வந்தார். அத்தனை வயது வாழ்ந்தாலும் அவர் முப்பது வயது இளைஞனைப் போலவே அகலமான மார்பும், அடர்த்தியான தலைமுடியும், உறுதியான முகவாயும், அழுத்தமான நடையும், பலமான கைகளுமாய் இருந்தார். அந்த முனிவரைக் கண்டதும் ராஜ்ஜியத்தைப் பற்றியும், குழந்தைகளைப் பற்றியும் உண்டான விசாரிப்புகள் போய், முனிவரிடமிருந்து என்ன கற்றுக் கொள்ளலாம் என்று பாண்டவர்கள் மனம் பரபரத்தது.

யுதிஷ்டிரருக்கு எப்போதுமே இருக்கின்ற துக்க குணம் மார்க்கண்டேயரைப் பார்த்ததும் அதிகரித்தது. ஸ்ரீ கிருஷ்ணர் அண்மையில் இருந்ததால் மௌனமாக இருந்தார். அப்போது நாரதரும் அங்கு வந்து சேர்ந்தார்.

மிக நல்ல ஒரு சத்சங்கம் ஏற்படுகின்ற இடங்களிலெல்லாம் நாரதர் வந்துவிடுகிறார். தருமபுத்திரர் தன்னைப்பற்றி பேசுகிறபோது அதற்கு மார்க்கண்டேயர் கொடுக்கின்ற பதில், அதிலும் ஸ்ரீ கிருஷ்ணருக்கு முன்னால் கொடுக்கின்ற பதில் உலகத்தோருக்கு மிகச் சிறந்த பாடமாக இருக்கும் என்று எண்ணினார். எல்லோரும் தருமபுத்திரரை பார்த்திருக்க, தருமபுத்திரர் தயங்கிக் கேட்க ஆரம்பித்தார்.

(தொடரும்)

மகாபாரதம்

60

கர்மாவின் நியாயக் கணக்குகள்

“எந்த பாவமும் செய்யாத நான் வனவாசம் என்றதுக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்க, என்னுடைய சகோதரர்களையும், மனைவியையும் ஒரு வன்முறையில் அதில் நான் ஈடுபடுத்திக் கொண்டிருக்க, துரியோதனாதிகள் மாதா மாதம், வருடா வருடம் செய்கின்ற எல்லா கோலாகலங்களிலும் ஈடுபட்டு, ஜெயித்து விட்டோம் என்கிற குதூகலத்தோடு அஸ்தினாபுரத்தை ஆட்சி செய்து வருகிறார்கள். இது என்ன விஷயம். துரியோதனன் பாபி என்று ஊருக்கே தெரியும். பாபிக்கு வந்த வாழ்க்கை பார்த்தாயா



என்றுதான் அந்தணர்களும், பொதுமக்களும் கேட்கிறார்களாம். அப்படியானால் இந்த உலகில் பாபிகள் சுகமடைவதும், நல்லோர்கள் துக்கமடைவதும்தான் வாழ்க்கையா. அதற்குத்தான் நல்லவனாக இருக்க வேண்டுமா?'' என்று யுதிஷ்டிரர் மார்க்கண்டேயரை நோக்கி தழுதழுத்த குரலில் கேட்டார்.

அவர் கேட்ட நேரம் அந்த வனத்தினுடைய பறவைகள் கூட சப்தம் இல்லாமல் கனத்த அமைதியோடு இருந்தது. பாண்டவர்கள் கண்மூடி அவர் கேள்வியை மனதில் நிறுத்தி தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டார்கள். அதுவரையில் அவர்கள் மனதில் தோன்றாத அந்த விஷயம் தருமபுத்திரர் கேள்வியின் மூலம் மனதின் மேலே வந்தது. திரெளபதியும் அது உண்மைதானே என்பதுபோல யோசிக்க ஆரம்பித்தாள்.

இயற்கை கொண்டாடியதும், மழையை ரசித்ததும், நதியையும், புல்வெளியை அனுபவித்ததும், இந்த அனுபவங்கள் அஸ்தினாபுரத்தில் கிடைக்காது என்று எண்ணியது மறந்து போய் தாங்கள் துக்கத்தில் இருப்பதாகவே, புறக்கணிக்கப்பட்டதாகவே

அவளும் நினைத்துக் கொண்டாள். இது மனம் செய்யும் கூத்து. இடதும், வலதுமாக மனம் போடுகின்ற ஆட்டம்.

தர்மத்தில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆசை இருந்தாலும் மனித மனம் மேலும் கீழுமாகத்தான் அலைகிறது. சந்தோஷம் இருப்பதுபோல ஒரு நினைவும், இல்லாதது போல ஒரு நினைவும் மாறிமாறி ஏற்படுகின்றன.

மார்க்கண்டேயரைப் போன்ற தெளிவானவர்களை சந்திக்கும்போது இந்தக் கேள்வி முன் வைக்கப்படுகிறது. பல வருடங்கள் வாழ்ந்த அனுபவத்தில் உலகம் பற்றிய தெளிவான கணிப்பு இருக்கின்ற நிலையில் அவர்கள் இதற்குப் பதில் சொல்லத் துவங்கி விடுகிறார்கள்.

> இந்த மூலாதாரமே இப்போது தர்மத்தின் பொருட்டு உங்களுக்கு துணையாக இங்கே ஸ்ரீ கிருஷ்ணன் என்ற வடிவை தாங்கி வந்திருக்கிறது” என்ற ஒரு செய்தியை அவர் சொல்ல, தருமரும், மற்ற சகோதரர்களும் எழுந்து நின்று ஸ்ரீகிருஷ்ணரை வணங்கினார்கள். கேட்டதும் தருமருக்கு மிகவும் திகைப்பு உண்டாயிற்று.

“யுதிஷ்டிரா, மிக ஆரம்பத்திலிருந்தே இந்த உலகம் பற்றி உனக்கு விவரிக்கிறேன். ஆரம்பத்தில் பிரம்மா மட்டுமே இருந்தார். பிரம்மாவினுடைய அசைவினால், முயற்சியினால் மனிதர்கள் உருவாக்கப்பட்டார்கள். பிரம்மாவினால் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட அந்த மனிதர்கள் கந்தர்வர்கள்போல பறந்து போகவும், எல்லா இடங்களில் தங்கி வாழவும், எந்தவித தீய எண்ணங்கள் இல்லாமலும், காமகுரோத எண்ணங்களில் மாட்டிக் கொள்ளாமலும் ஆனந்தமாக வாழ்ந்தார்கள். உலகத்தில் சந்தோஷம் நிரம்பியிருந்தது.

பாலகுமாரன்

நாட்கள் செல்லச் செல்ல மனிதர்களுடைய மனதில் பற்று ஏற்பட்டது. இது என்னுடையது, அது என்னுடையது என்று அவர்கள் ஆவல் கொள்ளத் துவங்கினார்கள். யுதிஷ்டிரா, பற்றுதான் வேதனை. பற்றுதான் பொறாமையை உருவாக்குகிறது. பற்றுதான் பொய்கள், கோபம் ஆகியவையோடு கூடிய வாழ்க்கையை மனிதர்களுக்கு உருவாக்குகிறது. பேராசையும், மோகமும் மனிதர்களை அழித்துவிட்டன. இந்த குற்றங்கள் காரணமாக அவர்களுக்கு விருப்பம் இல்லாது இருந்தும் இந்த உடம்பை துறக்க வேண்டியதாயிற்று. போதும் என்கிறபோது உடலை உகுத்து உயிர் பிரியும் நிலைமை என்பதுபோல், கதறிக் கதறி சாக வேண்டிய அவஸ்தை மனிதர்களுக்கு உண்டாயிற்று.

இந்த வேதனையின் காரணமாக அவர்களின் நினைவுச் சக்தி குறைந்து போயிற்று. பரஸ்பரம் ஒருவருக்கொருவர் துன்பம் அளிப்பவர்களாக போய்விட்டார்கள். கலியுக மனிதர்களுடைய சரீரத்தில் அவர்கள் செய்த கர்மங்களின் சின்னங்கள் தோன்ற ஆரம்பித்தன. சப்பை மூக்கும், குறுகிய கண்ணும், மெல்லிய உதடும், அகன்ற வாயும் வந்துவிட்டன. அந்த அடையாளங்கள் அவர்கள் உடம்பில் இருந்தன. பிணிகள் ஏற்பட்டன. துஷ்ட குணம் வந்தது. நீண்ட நெடுங்காலம் வாழ்ந்த அந்த மனிதர்கள் மிகக் குறைவான காலத்திலேயே தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள். ஆசை என்று வந்ததனால் கெஞ்சி பிறரிடம் போய் யாசகம் கேட்கின்ற தன்மையும் ஏற்பட்டது.

மரணத்திற்குப் பிறகும் அந்த ஜீவனின் கதி அவற்றின் தத்தம் கர்மத்திற்கு ஏற்ப நடைபெறுகிறது. இறந்த பிறகு ஞானி, அஞ்ஞானி என்ற கர்மம் உண்டா என்ற கேள்வி உனக்கு எழலாம்.

மனிதன் பல்வேறு பிறவிகளால் சுப, அசுப கர்ம மூட்டையை பெரிதாகச் சேர்க்கிறான். ஆயுள் முடிந்து தளர்ச்சியுற்ற இந்த உடம்பிலிருந்து அவன் பிரிந்த கணமே ஒரு வினாடி கூட தாமதமில்லாமல் அவன் அடுத்த சரீரத்திற்குப்போய் சேர்ந்து விடுகிறான். ஒரு சரீரத்தை விடுவதற்கும், இன்னொன்றை ஏற்பதற்கும் நடுவில் மிக மெல்லிய வினாடிக்கும் குறைவான நேரமே இருக்கிறது. எவன் எந்நேரமும் சம்சாரியாக இருக்கிறானோ, சிறிது நேரம்கூட அவன் அசம்சாரியாவதில்லை. அவன் முன் ஜென்மத்தில் செய்த கர்மம் நிழலைப்போல மறுஜென்மத்திலும் தொடர்கிறது. சரியான சமயத்தில் அதனுடைய பலனை அளிக்கிறது. அதன் பொருட்டே ஜீவன் சுக, துக்கத்தை அனுபவிக்க நியமிக்கப்படுகிறான். அதை அவன் தீர்க்க முடியாதவனாகத் தவிக்கிறான். இது ஞானமற்ற மனிதனுடைய நிலைமை.

ஆனால், விவேகமுள்ளவன், தவம் செய்தவன், சாஸ்திரங்களில் நம்பிக்கை ஏற்படுத்தி புலன்களை அலையவிடாது விரதங்களில் ஈடுபட்டவன், சத்தியத்தோடு இருந்தவன், குரு சேவையில் ஈடுபட்டவன், நல்ல நடத்தைகள் உள்ளவன், சாத்வீகமாக உள்ளவன், பொறுமை உள்ளவன் தூய யோனியில் பிறக்கிறார்கள். சுப லட்சணங்களாக சோபிக்கிறார்கள். முற்பிறவியிலேயே புலனடக்கம் உடையவர் என்பதால் அவர்களுக்கு மறுபிறப்பில் பெரிய அலைச்சல் இல்லை. சாத்வீகத்தில் ஈடுபட்டவர்கள் பிடியின்றி இருக்கிறார்கள். துக்கமும், துயரமும் இல்லாது இருந்தவர்கள் வேறெந்த உபத்திரமும் இல்லாது இருக்கிறார்கள்.

இன்னும் உயர்நிலையில் இருக்கின்ற ஞானவான்கள் கர்ப்பத்தில் இருக்கும்போதே தனக்கும், பரமாத்மாவிற்கும் உள்ள தொடர்பை புரிந்து கொள்கிறார்கள். பிறந்த பிறகு அந்த தொடர்பு லட்சணத்தோடேயே இருக்கிறார்கள். ஒரு கர்மத்தின் விளைவாக சிறிது காலம் இந்த பூமியில் பிறந்துவிட்டு அந்த கர்மத்திற்குண்டான பலனை செலவழித்து விட்டு தேவலோகம் போய் விடுகிறார்கள்.

யோகிகளுக்கு இந்த லோகத்தில் நல்ல சுகம் கிடைக்கிறது. பரலோகத்தில் கிடைப்பதில்லை. இங்கே சுகம் இல்லாதவர்கள் பரலோகத்தில் சுகம் அடைகிறார்கள். செல்வத்தை அதிகரித்துக் கொண்டே தன்னுடைய உடல் சுகத்திலேயே பற்று கொண்ட மனிதர்களுக்கு இந்த லோகத்தில் மட்டுமே சுகம் கிடைக்கிறது. பரலோகத்தில் முற்றிலும் மறுக்கப்படுகிறது.

இந்த லோகத்தில் யோகசாதனை புரிகிறவர்கள், விரதமிருப்பவர்கள், ஆழ்ந்த அமைதியில் இருப்பவர்கள் இங்கே சுகமடையாவிட்டாலும் பரலோகத்தில் சுகமடைகிறார்கள். கடமைகளை அறிவோடு செய்து, தர்மப்படி வாழ்ந்து, தர்மப்படி சம்பாதித்து, உரிய நேரத்தில் பெண்ணோடு திருமணம் செய்து, அந்தப் பெண்ணோடு யஞ்ஞம், யாகம், கர்மம், ஈஸ்வர பக்தி ஆகியவற்றை கடைபிடித்தவர்களுக்கு இகலோகம், பரலோகம் இரண்டிலும் சுகம் கிடைக்கிறது.

ஆனால், அழிவற்றவர்கள் வித்தைக்காகவோ, தவத்திற்காகவோ, தானத்திற்காகவோ எந்த முயற்சியும் செய்யாமல் தர்மப்படி வாழாமல் மனம் போனபடி வாழ்கிறார்களோ அவர்களுக்கு இந்த லோகத்திலும் சுகம் அடைவதில்லை. பரலோகத்திலும் சுகம் அடைவதில்லை. ஆத்திரமும், அயோக்கியத்தனமும் இடையறாது வேதனைகளை கிளறிவிட்டு ஒரு பைத்தியக்கார நிலையில்தான் பல மனிதர்கள் வாழ்கிறார்கள்.

நீங்கள் அனைவரும் சூரர்கள், வீரர்கள், தவம், புலனடக்கம், தானம் போன்றவற்றை இந்த நிலையிலும் கைக்கொள்கிறீர்கள். எனவே, உன்னதமான சொர்க்க லோகத்திற்கு நீங்கள் போவீர்கள் என்பதை நான் உறுதி செய்கிறேன்" என்று சொன்னார்.

பஞ்ச பாண்டவர்கள் தங்கள் நிலைமையை யோசனை செய்து சந்தோஷமடைந்தார்கள். வாழ்க்கை என்பது என்ன என்பதை அவர் சொன்னதிலிருந்து விலகி நின்று யோசித்துப் புரிந்து கொண்டார்கள்.

ஆனால், தருமருக்கு தாபம் தீரவில்லை. தன்னைப் பற்றியதுமான கேள்விகளிலிருந்து விலகி இந்த உலகம் எப்படி



இயங்கும், என்ன நடக்கும் என்கிற பொது கேள்விகளுக்கு அவர் ஆசைப்பட்டார். தானே அறிவதற்கு முடியாத இந்த விஷயங்களை மார்க்கண்டேயர் வாக்கு மூலம், அவர் அனுபவத்தின் மூலம் பெற வேண்டும் என்று விரும்பினார். தருமரின் ஆவலை மற்ற சகோதரர்கள் புரிந்து கொண்டார்கள்.

மச்சாவதாரத்தின் மகிமையைச் சொல்லி அந்த மச்சாவதாரம் ஸ்ரீ கிருஷ்ணனே என்று சொல்லி, யுகங்களின் முடிவில் கடல் மீது படுத்துக் கொண்டிருக்கிற, மிதந்து கொண்டிருக்கிற ஒரு குழந்தைக்கு அருகே போய் வியப்புடன் பார்த்து அதனால் விழுங்கப்பட்டு அதற்குள்ளே எல்லா திக்குகளும், உலகமும், நகரங்களும், கிராமங்களும், அருவிகளும், மலைகளும், நதிகளும் இருப்பதை வியப்புடன் பார்த்ததைச் சொன்னார்.

‘‘நர என்றால் நீர் என்று அர்த்தம். அந்த நீர் மீது அயனித்துக் கொண்டிருக்கிற மன்னவனே நாராயணன். அவனே இந்த உலகத்தை, இந்த திக்குகளை, பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கிறவன். அவனே வளர்க்கிறவன். அவனே அழிக்கிறவன். அவனே மூலாதாரம்.

இந்த மூலாதாரமே இப்போது தர்மத்தின் பொருட்டு உங்களுக்கு துணையாக இங்கே ஸ்ரீ கிருஷ்ணன் என்ற வடிவை தாங்கி வந்திருக்கிறது’’ என்ற ஒரு செய்தியை அவர் சொல்ல, தருமரும் மற்ற சகோதரர்களும் எழுந்து நின்று ஸ்ரீகிருஷ்ணரை வணங்கினார்கள். கேட்டதும் தருமருக்கு மிகவும் திகைப்பு உண்டாயிற்று.

“சரி, கலியுகம் துவங்கிவிட்டது என்று சொல்கிறீர்கள். இந்த கலியுகத்தினுடைய நிலைமை என்ன, விளைவு யாது?’’ என்ற கேள்விகளை பவ்யமாக மார்க்கண்டேயர் முன்பு வைத்தார்.

“கலியுகத்தின் ஆரம்பத்திலேயே வித்தைகளில் சிரத்தை குறைந்துவிடும். வித்தைகளில் கூர்மை குறைந்தால் அங்கு ஏமாற்று

வேலைகள் அதிகரிக்கும். பொய்யான கர்வங்களும், செய்து முடித்து விட்டேன் என்ற பொய்களும், இவர் மிகப் பெரியவர். வீரர் என்ற புகழுரையும், அதற்கான கையூட்டும், நான் கீழ் இறங்கி வந்தால் என்ன ஆகும் தெரியுமா என்ற வாய்சவாடால்களும் வெற்றுப்பேச்சுகளும் படித்தவரிடையே அதிகம் இருக்கும். படிக்காத பாமரர்கள் இதைக் கண்டு மிரண்டு போவார்கள். அவர்கள், இவர் சிறந்தவர் அவர் சிறந்தவர் என்று எந்த அறிவும் இன்றி இரண்டாக பரிந்துரைப்பார்கள்.

ஒரு கிராமம், ஒரு நகரம், ஒரு தேசம் துண்டாடப்படும். அமைதியின்மை ஏற்படும். படித்தவர்களை இழிவு செய்யவும், பாமரர்களை துன்புறுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படும். நல்ல மனிதர்கள் அரிதாகிப் போவார்கள். ஒழுக்கம் குறையும். பெண்களுக்கு துக்கம் அதிகமாகும். அவர்களால் பல கலவரங்கள் நடக்கும். பொன் கொடுத்து மயக்குவதைப்போல, பெண் கொடுத்தும் மயக்குவார்கள். விருப்பமின்றி பெண்கள் அதற்குத்துணை போவார்கள். ஒரு அழியும் சமுதாயத்திற்கு இதைவிட பெரிய ஆரம்பம் எதுவும் தேவையில்லை.

தானம் கொடுப்பதில் ஏமாற்று வேலை இருக்கும். கையூட்டும், தானமும் ஒன்றையொன்று கலந்தபடி இருக்கும். கையூட்டா, தானமா என்று புரியாதபடி இருக்கும். அமைதியாக இருக்க வேண்டிய அந்தணர்கள் தங்கள் கடமைகளை மறந்து ஆரவாரமாக இருப்பார்கள். உறுதியாக இருக்க வேண்டிய க்ஷத்ரியர்கள் கோழையாக இருப்பார்கள். கடும் உழைப்பில் இருக்க வேண்டிய விவசாயிகள், தச்சர்கள், கருமார்கள் சுருண்டு சோம்பலாய் இருப்பார்கள். இதனால் பயிர், பச்சைகள் வாடும். அதையும் தவிர, இம்மாதிரியான ஏமாற்று வேலைகளால் பூஜை, புனஸ்காரங்கள், ஹோம யக்ஞாதிகள் குறைந்து போனதால் மழை வளம் குறையும். மழை வளம் குறைந்ததால் பூமியின் சூடு அதிகரிக்கும். பசுக்கள் மடிந்து ஆடுகளின் பால்தான் கிடைப்பதாக இருக்கும். பயிர்கள் என்பதுபோய் மரங்களின் பட்டைகளை வெவ்வேறு விதமான பக்குவத்தில் தயார் செய்ய வேண்டியிருக்கும். ஏதோ ஒரு உணவு என்று அலுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

> எல்லா ஜீவராசிகளும் அழிந்துபோன பிறகு அங்கங்கே அக்னி தோன்றிய பிறகு, அந்த அக்னியை தணிப்பதற்கு பெரும் மேகங்கள் ஒன்று சூழ்ந்து பன்னிரெண்டு நாட்கள் இடைவிடாது இரவு பகலாக மழை பொழியும். கடலும் பூமியும் ஒன்றாகி நீர் நிறைந்து காணப்படும். பூமி முழுவதும் நீரால் மூடப்படும்.

பூமியின் வெப்பம் அதிகமாகி நடுப்பகுதியிலிருந்து அக்னி சீறும். ஏழு சூரியன்கள் உதிக்கும். அதன் வெப்பத்தால் மக்கள் தவித்துப் போவார்கள். எப்படியாவது தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றும் பல்வேறு விதமான உபாயங்களை தேடுவார்கள். எதுவும் பயன் தராது.

எல்லா ஜீவராசிகளும் அழிந்துபோன பிறகு அங்கங்கே அக்னி தோன்றிய பிறகு, அந்த அக்னியை தணிப்பதற்கு பெரும் மேகங்கள் ஒன்று சூழ்ந்து பன்னிரெண்டு நாட்கள் இடைவிடாது இரவு பகலாக மழை பொழியும். கடலும் பூமியும் ஒன்றாகி நீர் நிறைந்து காணப்படும். பூமி முழுவதும் நீரால் மூடப்படும்.

பிறகு நெடுங்காலம் கழித்து மறுபடியும் சத்திய யுகம் பிறக்கும். அமைதியான காற்றும், இதமான மழையும், தகிக்காத சூரியனும் தோன்றுவார்கள். உயிரினம் மறுபடியும் கிளற ஆரம்பிக்கும். முதலிலிருந்து வாழ்க்கைத் துவங்கும்”

“அப்படியானால் இந்த கலியுகத்தில் மக்களுடைய ஒழுக்கம் எப்படி இருக்கும்?” என்று உபகேள்வியாக தருமபுத்திரர் கேட்க, மார்க்கண்டேயர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு பேசத்துவங்கினார். நாரதரும், கிருஷ்ணரும், தருமரின் சகோதரர்களும், திரௌபதியும் சுற்றியிருந்த பிராமணர்களும் கவலையோடு அவர் பேச்சை கேட்கத் துவங்கினார்கள்.

“கலியுகத்தின் முடிவில் க்ஷத்ரியர்கள் கோழைகளாக இருப்பார்கள். பிராமணர்கள் பொய்யில் இருப்பார்கள். பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவார்கள். வேறு வழியில்லை என்ற பதிலையே எல்லோரும் சொல்வார்கள். அப்போது ஆண்களும், பெண்களும் குட்டையாக இருப்பார்கள். அவர்களுடைய ஆயுள் மிகக் குறைவாக இருக்கும். ஐம்பது வருடங்களே மிகப் பெரிய ஆயுளாக இருக்கும். ஜனங்கள் பதட்டமானவர்களாகவும், கொடூரமான வார்த்தைகளை குறைவின்றி பேசுபவர்களாகவும், அடித்துக் கெடுப்பவர்களாகவும் இருப்பார்கள். அப்படி அடித்துக் கெடுப்பதை சாமர்த்தியம் என்று சொல்வார்கள். எவராலும் எதனாலும் எந்த பிரயோசனமும் இருக்காது. சத்தியம் தள்ளாடும்.

(தொடரும்)



அடைக்கலம் கொடுத்தவனை அடுத்துக் கெடுக்கலாமா?

“எட்டு வயது பெண்கள் பூப்படைவார்கள். ஒன்பது வயதில் கர்ப்பமடைவார்கள். பன்னிரெண்டு வயது சிறுவர்கள் ஒரு குழந்தைக்கு தகப்பனாவார்கள். படிக்கின்ற வயதிலேயே சம்சார பந்தத்தில் ஈடுபட்டதால் அந்த ஆண்கள் சிறு வயதிலேயே கிழவர்களாக காட்சியளிப்பார்கள். முடி உதிர்ந்துவிடும். நரை அதிகரிக்கும். வியாதிகள் விதம் விதமாகத் தோன்றும். உலகம் அதனுடைய இயல்பான சோபையிலிருந்து பின்வாங்கி கடும் வேதனையில் தத்தளிக்கும். சத்திய யுகத்தில் வாழ்ந்தவர்களால் கலியுகத்தின் வேதனைகளை கண்கொண்டு பார்க்க இயலாது. இப்படியெல்லாம் வாழ்ந்தார்களா சத்திய யுகத்தில் என்று கலியுகத்தினர் வியப்பார்கள். பொய் பொய் என்று கூச்சலிடுவார்கள். நம்ப மறுப்பார்கள். அப்படி இருந்தால் நன்றாக இருக்குமே என்று நல்லவர்கள் ஏக்கமடைவார்கள். இவை எல்லாவற்றுக்கும் ஆதாரம் வித்தையில் சிரத்தை குறைவது.

ஒருவன் தான் செய்த வேலையை திறம்படவும், முழு முனைப்பாகவும் செய்ய வேண்டும் என்பது இதனால் அறியப்படுகிறது. தர்மபுத்திரர் ஆழ்ந்து யோசிக்கலானார். கலியினுடைய தீமைகளையும், பிராமணர்களுடைய அறிவையும் அறிந்துகொண்ட அவர் சத்திய யுகத்தினர்களைப் பற்றி விசாரிக்கலானார். ஆனால், மிகக் கவனமாக, “நான் என்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள சத்தியர்களுடைய மேன்மையைச் சொல்லுங்கள்” என்று யுதிஷ்டிரர் மார்க்கண்டேயரிடம் கேட்டார். கிருஷ்ணர் புன்னகை செய்தார்.

மகாபாரதம்

61

ஒருவன் தான் என்ன வழியில் நடக்க வேண்டும் என்பதை தன்னைவிட தெளிவானவர்களிடம் கேட்டு அறிவது என்பது ஒரு நல்ல குணம். அவர்களின் குறை என்ன, இவர்களின் குறை என்ன, இவர்கள் எப்படி அழுவார்கள் என்பதை விட, தன்னுடைய இனத்து மக்கள் எவ்வளவு மேன்மையுடன் வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து கொள்கிறபோது அந்த மேன்மை அவருக்கும் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

“மார்க்கண்டேய மகரிஷியே, க்ஷத்திரியர்களுடைய மேன்மையைச் சொல்லும்” என்று அவர் மறுபடியும் கேட்க, சிபி என்ற சக்கரவர்த்தியின் கதையை மார்க்கண்டேயர் சொல்லத் துவங்கினார். “சிபியினுடைய குணத்தையும், நன்னடத்தையும், தர்மபரிபாலனத்தையும் தெளிவாகத் தெரிந்த இந்திரனும், அக்னியும் அவரை பரிட்சிக்க விரும்பினார்கள். உண்மையிலேயே எவ்வளவு உதார குணம் எவ்வளவு தயை என்பதை எடை போட்டு உலகத்திற்குத் தெரிவிக்க விரும்பினார்கள்.

சிபி அரச சபையில் உட்கார்ந்திருக்கும் பொழுது பெரிய புறா ஒன்று பொத்தென்று அவர் மடியில் விழுந்தது. சபையோர் திடுக்கிட்டார்கள். புறா சிறகுகளை விரித்து அவரை அணைத்துக் கொண்டதுபோல் இருந்து. அதன் நெஞ்சு படபடத்தது. சிபி அந்தப் புறாவை தடவிக் கொடுத்தார். எதனாலோ பயந்தது போலவும், எந்த விஷயத்தாலோ வேட்டையாடப்படுவது போலவும் இருந்தது. சிபி வாசலை கூர்மையுடன் நோக்கினார்.

“ஒரு புறா இப்படி மடியில் வந்து விழுவது நல்ல சகுனம் அல்ல. இந்தப் புறா எதற்கோ பயந்து வந்து உங்களை அடைந்திருக்கிறது. உங்களிடம் ஏதோ பேச விரும்புகிறது. இதுவும் நல்லதில்லை,'' என்றார்கள். சபையினரின் பேச்சை சிபி பெருட்படுத்தவில்லை. அந்தப் பறவையை தடவி, ‘என்ன வேண்டும்?’ என்று கேட்டார்.

“சிபிச் சக்கரவர்த்தியே, நான் உண்மையில் ஒரு புறா அல்ல. நான் ஒரு ரிஷி. என் விருப்பத்தின்படியே நான் வேறு ஒரு உரு எடுத்து இங்கே உலவி வரும்போது என்னை இறையாக்கிக்கொள்வதற்காக ஒரு பருந்து சுழன்று சுழன்று என்னைத் துரத்தி வருகிறது. நான் என்னச் செய்வதென்று தெரியாது உங்களிடம் சரணடைந்தேன். அதோ அந்தப் பருந்து உங்கள் அரண்மனை வாசலுக்கு வந்துவிட்டது. என்னை அதனிடம் கொடுத்துவிடாதீர்கள். உங்களிடம் அடைக்கலம் கேட்கிறேன். என்னைக் காப்பாற்றுங்கள்’ என்று இன்னும் இறுக அணைத்துக் கொண்டது.

சிபிச் சக்கரவர்த்தி அதை ஆதரவாகத் தடவி கொடுத்தார். பருந்து அருகே வந்து உட்கார்ந்தது.

“உலகத்தில் ஏதோ ஒன்றின் பொருட்டு ஒருவர் வெவ்வேறு விதமாக வடிவம் எடுக்கிறார், உடம்பு எடுக்கிறார். அது முக்கியமல்ல. இவர் மிகப்பெரிய ரிஷியாக இருந்தாலும் இப்போது புறா. நான் பருந்து. எனக்கு உணவுக்காக இந்தப் புறா தேவை. எனவே, என் உணவில் தலையிடாது தயவுசெய்து அந்தப் புறாவை கீழே போடுங்கள்” என்று எச்சரிக்கும் கீச்சுக் குரலில் பேசியது.

சிபிச் சக்கரவர்த்தி மறுத்துவிட்டார்.

“அடைக்கலம் என்று ஒருவர் வந்த பிறகு அவரை எதன் பொருட்டும் நான் காட்டிக் கொடுக்க மாட்டேன்... நான் உன்னிடம் ஒப்படைக்கமாட்டேன். நானும் புறாவிற்காகத்தான் இரக்கப்படுகிறேன்.”

“இது நியாயமில்லையே!'' பருந்து கூவியது.

“எந்த ஜென்மத்திலேயோ நீங்களும் புறாவாக இருந்து அதன் காரணமாக இந்தப் புறாவிற்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறீர். மற்றபடிக்கு உங்களுக்கும் புறாவிற்கும் சம்பந்தம் இல்லை. அது என் உணவு. உன்னிடம் அடைக்கலம் கேட்டு வந்ததை மட்டுமே நினைக்கிறாயே தவிர, அந்தப் புறா எனக்கு ஒரு உணவு என்பதை ஏன் மறுக்கிறாய்? இந்த உலகத்தில் ஒரு உயிர் இன்னொரு உயிருக்கு உணவாவது என்பது சாதாரணம்தானே! மன்னனான நீ இதை அறிந்து கொள்ளமாட்டாயா? புறாவினுடைய அண்மை வேண்டி என்னை பட்டினியிருக்க வைப்பாயா?”

பாலகுமாரன்

“இல்லை. ஒருபொழுதும் இல்லை. நல்ல எருதினுடைய ரிஷப கந்தத்தை அதாவது, மாமிசத்தை உனக்குத் தருகிறேன். சுவையான மூலிகைகள் நிறைந்த உணவைத் தருகிறேன்” என்றெல்லாம் சிபி சொல்ல, பருந்து மறுத்துவிட்டது.

“உங்களுக்கு ஏன் புரியவில்லை? நான் குறிவைத்து ஆசையோடு உமிழ்நீர் ஊற இந்த உணவைத் தேடி வந்தேன். இந்தப் புறா என் கையில் சிக்காமல் அலைக்கழித்து அவமானப்படுத்தி ஆட்டம் காட்டி இங்கு வந்துவிட்டது. என் வலிமைக்கு எதிராக இன்னும் உயிர் வாழத் துடிக்கிறது. தன்னால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை என்பதால் உங்களைச் சரணடைந்திருக்கிறது. இது என் வீரத்திற்கு கிடைத்த அவமானம். அதுவும் தவிர கடும் பசி. என் ரிஷப கந்தம் வரும் வரையில் நான் நிற்கமாட்டேன். இப்பொழுதே புறாவைக் கொடுங்கள்” என்று சிறகைப் பெரிதாக விரித்தது.

சிபிச் சக்கரவர்த்தி கைநீட்டி தடுத்தார். “வேறு ஏதேனும் உணவைக் கேள். ஒருபொழுதும் புறாவைத் தர முடியாது” என்று திட்டவட்டமாக மறுத்தார்.

“அப்படியானால் உன்னுடைய உடம்பின் ஒரு பகுதியினை எடுத்து என்னுடைய உணவாகக் கொடுங்கள்,” என்றது. “இந்தப் புறாவின் எடையாக அது இருக்க வேண்டும்.”

சிபிச் சக்கரவர்த்தி தன் தொடையை அறுத்தார். புறாவை தராசில் வைத்து எதிர் தட்டில் தன் தசையை வைத்தார். ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. வலி இருப்பினும் அதை அவர் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், புறாவின் தட்டு தாழ்ந்தேயிருந்தது. மறுபடியும் வேறு ஒரு அங்கத்தின் பகுதியை எடுத்து வைக்க அப்பொழுதும் புறாவின் தட்டு தாழ்ந்திருந்தது. விரல்களை, வலது கையை எல்லாம் வெட்டி வைக்க புறாவின் தட்டு உயரவில்லை. சிபிச் சக்கரவர்த்தி, “பருந்தே என்னை நன்றாக உண்டு கொள்,” என்று சொல்லி, புறாவின் எதிர் தட்டில் ஏறி அமர, தட்டு சரியாயிற்று. பருந்து உயரே பறந்தது.

‘சிபிச் சக்கரவர்த்தி மன்னர்களில் சிறந்தவன். க்ஷத்திரியர்களில் உயர்ந்தவன்,’ என்று இந்திரலோகம் ஆசிர்வதித்தது. புறா அக்னியாக மாறியது. “பருந்தாக வந்துபோனது இந்திரன். நான் அக்னி. எந்தத் தசையை அறுத்தாயோ அந்தத் தசையிலிருந்து உனக்கு ஒரு மகன் தோன்றுவான். உனக்கு தீர்காயுசும், திடமான அரசும் ஏற்படும். எனவே, நீ சந்தோஷமாக இந்த தேசத்தை ஆண்டுவா. உனக்கு எல்லா நலன்களும் கிட்டும். உன் மகனுக்கு புறாவின் ரோமங்களும், ரிஷபத்தின் வலிவும், பருந்தின் வீரியமும் நிச்சயம் கிடைக்கும். நீ ஆசிர்வதிக்கப்பட்டவன் ஆவாய்” என்று சொன்னது.

“தர்மா, தானத்தினுடைய மகிமையை தெரிந்து கொண்டாய். க்ஷத்திரியர்கள் வழங்கும் தானம், சத்தியம் தவறாத அவர்களின் போக்கு, அடைக்கலம் கொடுத்தவரை ஒரு பொழுதும் காட்டிக் கொடுக்காத தன்மை எல்லாம் மிகச் சிறந்த விஷயம். தர்மா, இதை எல்லா நேரத்திலும் கடைபிடிப்பாயாக” என்று விவரித்துச் சொன்னார். தருமர் கைகூப்பி, கண்மூடி மார்க்கண்டேயரை நமஸ்கரித்தார்.



“கிருஷ்ணா, கலியுகத்தின் முடிவில் க்ஷத்திரியர்கள் அடைக்கலம் கொடுத்தவனை சிறிதளவு காசிற்கும், அதிகாரத்திற்கும் தங்கள் சந்தோஷத்திற்கும், அது சத்தியம் என்ற பொய் போர்வையிலும் காட்டிக் கொடுப்பார்கள். இதனால் அவர்கள் குலம் நாசமடையும். அவர்களுடைய புத்திரர்கள் சிறு வயதிலேயே இறந்து போவார்கள். மத்திம வயதில் நோயுறுவார்கள். நல்ல க்ஷத்திரியனுக்கு வார்த்தை பிசகு இருக்கக்கூடாது. இருக்கிறவனுக்கு துக்கம் சேரும் என்பது எந்த சந்தேகமும் இல்லை.” என்று சொன்னார்.

“சிபிச் சக்கரவர்த்தியினுடைய புகழைக் கேட்டீர்கள். அவர்களைப் பற்றி மேலும் சொல்கிறேன். க்ஷத்திரிய குலத்தின் மேன்மையைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளுங்கள். சிபிச் சக்கரவர்த்தி இந்த பூவுலகை ஆண்டு கொண்டிருக்கும்போது வினாதா என்கிற தேவன் அவனை பரிட்சிக்க விரும்பினான். அந்தண வேடத்தில் அவன் முன்பு வந்து வணங்க, ‘என்ன வேண்டும்?’ என்று முந்திக் கொண்டு சிபி கேட்டார். பிராமணன் தயங்கினான். மன்னர் உற்சாகப்படுத்தினார்.

‘சரி, உன் மகனைக் கொன்று கறி சமைத்து எனக்கு வை. நான் வந்து உண்கிறேன்,’ என்று சொல்லிச் சென்றான் பிராமணன். சிபி அவ்விதமே தன் மகனைக் கொன்று உணவாக்கி பாத்திரத்தில் போட்டு மூடி தயாராக வைத்திருந்தார். அவருடைய காவலன் ஓடிவந்து, உங்களைச் சந்தித்த பிராமணன் குதிரைக் கொட்டகையை, மாட்டு கொட்டகையை, அந்தப்புரத்தை, மக்கள் வசித்துக் கொண்டிருக்கின்ற இடத்தை எரித்துக் கொண்டிருக்கிறான். நாலா பக்கமும் மக்கள் சிதறி ஓடுகிறார்கள் என்று சொல்ல, சிபி அங்கு போய் தீக்கு நடுவில் இருந்த அந்தணனைப் பார்த்து ‘உணவு தயாராக இருக்கிறது’ என்று சொன்னார். அவர் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. ‘அப்படியா வருகிறேன்’ என்று சொல்லி, உணவு இருக்கும் இடத்தில் உட்கார்ந்து கொண்டான். மூடி திறக்கப்பட்டது.

“இந்த உணவை நீ சாப்பிடு,” என்று அந்தணன் கட்டளையிட்டதும், ஒரு இலையில் அதை எடுத்துப் போட்டு அந்தணனை நோக்கி வணங்கி, ‘நல்ல உணவாக வேண்டும் என்று ஆசிர்வதிக்க வேண்டும்,’ என்று அந்தண பூஜை செய்தான்!

அந்தணனாக வந்த வினாதா ஆடிப் போனார். “கோபம் என்பதை ஜெயித்துவிட்டாய். க்ஷத்திரியனுடைய இயல்பு மீறி உயர்ந்து நிற்கிறாய். வலுவுள்ளவனும், தண்டிக்கக் கூடிய அதிகாரம் உடையவனும், எதிரிகளை துவம்சம் செய்யக் கூடிய ஆற்றல் உள்ளவனும் ஒரு அந்தணன் முன்பு அமைதியாக இருப்பது என்பது ஆச்சரியம். எங்கு, எவரிடம், எப்படி இருக்க வேண்டும் என்பதை தெரிந்து கொண்டவன் புகழ் ஒருநாளும் சரிவதில்லை,” என்று சொல்லி தன் சுயரூபம் காட்டி ஆசிர்வதித்துச் சென்றார்.

அவர் நகர்ந்த இடத்தில் பல விதமான அணிகலன்களோடு இறந்துபோன பிள்ளை இருந்தான். அவன் மீது அற்புதமான வாசனை வீசியது.

“தர்மபுத்திரா, சிபியினுடைய வாழ்க்கை பல மனிதர்கள் அறிந்து தெரிந்துகொள்ள வேண்டியது. தான் தானம் கொடுப்பதாகிய கர்வம் இல்லாது, புகழுக்காக தானம் கொடுக்காது இன்னின்னவருக்கு இன்னின்ன தானம் தரவேண்டும் என்ற நிலைமையை புரிந்து கொண்டு, வந்தவர்கள் மனம் கோணாது முழு மனதுடன் தானம் தருவது என்பது வெகு சிலரிடமே இருக்கிறது. சிபியை புரிந்துகொள், அது மிக முக்கியம்,” என்றார்.

கதைகள் வெறும் பொழுது போக்கிற்காக சொல்லப்படுவதில்லை; புரிந்து கொள்வதற்காக சொல்லப்படுவது. அந்தக் கதைகள் மனித விதிகளுக்கு மீறியதாக இருக்கலாம். அது முக்கியமல்லை. கதையினுடைய நீதி, நியாயம் நெஞ்சில் பதிய வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் மனம் அலையாது, ஆடாது இருக்க வேண்டும் என்பதை கதைகள் கொஞ்சம் உக்கிரமாகச் சொல்லும். அதில் குழம்பிவிடக் கூடாது” என்று சொல்லிக் கொடுத்தார்.

தத்துவப் பாடத்தில் தாகம் குறையாத யுதிஷ்டர் மார்க்கண்டேயரை நோக்கி, “தானம் செய்வதைப் பற்றி எனக்குச் சொல்லிக் கொடுங்கள். எந்த பெரியவரிடம் போனாலும் தானத்தின் மகிமைப் பற்றி பேசப்படுகிறது. எல்லா கதைகளிலும் அது உயர்வாகக் கூறப்படுகிறது. தானம் என்பது எப்படிச் சிறந்தது என்பதைச் சொல்லுங்கள்”

‘‘தர்மா, தானத்தினுடைய மகிமையை தெரிந்து கொண்டாய், க்ஷத்திரியர்கள் வழங்கும் தானம், சத்தியம் தவறாத அவர்களின் போக்கு, அடைக்கலம் கொடுத்தவரை ஒரு பொழுதும் காட்டிக் கொடுக்காத தன்மை எல்லாம் மிகச் சிறந்த விஷயம். தர்மா, இதை எல்லா நேரத்திலும் கடைபிடிப்பாயாக” என்று விவரித்துச் சொன்னார். தருமர் கைகூப்பி, கண்மூடி மார்க்கண்டேயரை நமஸ்கரித்தார்.



“கிருஷ்ணா, கலியுகத்தின் முடிவில் க்ஷத்திரியர்கள் அடைக்கலம் கொடுத்தவனை சிறிதளவு காசிற்கும், அதிகாரத்திற்கும் தங்கள் சந்தோஷத்திற்கும், அது சத்தியம் என்ற பொய் போர்வையிலும் காட்டிக் கொடுப்பார்கள். இதனால் அவர்கள் குலம் நாசமடையும். அவர்களுடைய புத்திரர்கள் சிறு வயதிலேயே இறந்து போவார்கள். மத்திம வயதில் நோயுறுவார்கள். நல்ல க்ஷத்திரியனுக்கு வார்த்தை பிசகு இருக்கக்கூடாது. இருக்கிறவனுக்கு துக்கம் சேரும் என்பது எந்த சந்தேகமும் இல்லை,” என்று சொன்னார்.

“சிபிச் சக்கரவர்த்தியினுடைய புகழைக் கேட்டீர்கள். அவர்களைப் பற்றி மேலும் சொல்கிறேன். க்ஷத்திரிய குலத்தின் மேன்மையைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளுங்கள். சிபிச் சக்கரவர்த்தி இந்த பூவுலகை ஆண்டு கொண்டிருக்கும்போது வினாதா என்கிற தேவன் அவனை பரிட்சிக்க விரும்பினான். அந்தண வேடத்தில் அவன் முன்பு வந்து வணங்க, ‘என்ன வேண்டும்?’ என்று முந்திக் கொண்டு சிபி கேட்டார். பிராமணன் தயங்கினான். மன்னர் உற்சாகப்படுத்தினார்.

‘சரி, உன் மகனைக் கொன்று கறி சமைத்து எனக்கு வை. நான் வந்து உண்கிறேன்,’ என்று சொல்லிச் சென்றான் பிராமணன். சிபி அவ்விதமே தன் மகனைக் கொன்று உணவாக்கி பாத்திரத்தில் போட்டு மூடி தயாராக வைத்திருந்தார். அவருடைய காவலன் ஓடிவந்து, உங்களைச் சந்தித்த பிராமணன் குதிரைக் கொட்டகையை, மாட்டு கொட்டகையை, அந்தப்புரத்தை, மக்கள் வசித்துக் கொண்டிருக்கின்ற இடத்தை எரித்துக் கொண்டிருக்கிறான். நாலா பக்கமும் மக்கள் சிதறி ஓடுகிறார்கள் என்று சொல்ல, சிபி அங்கு போய் தீக்கு நடுவில் இருந்த அந்தணனைப் பார்த்து ‘உணவு தயாராக இருக்கிறது’ என்று சொன்னார். அவர் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. ‘அப்படியா வருகிறேன்’ என்று சொல்லி, உணவு இருக்கும் இடத்தில் உட்கார்ந்து கொண்டான். மூடி திறக்கப்பட்டது.

“இந்த உணவை நீ சாப்பிடு,” என்று அந்தணன் கட்டளையிட்டதும், ஒரு இலையில் அதை எடுத்துப் போட்டு அந்தணனை நோக்கி வணங்கி, ‘நல்ல உணவாக வேண்டும் என்று ஆசிர்வதிக்க வேண்டும்,’ என்று அந்தண பூஜை செய்தான்!

அந்தணனாக வந்த வினாதா ஆடிப்போனார். “கோபம் என்பதை ஜெயித்துவிட்டாய். க்ஷத்திரியனுடைய இயல்பு மீறி உயர்ந்து நிற்கிறாய். வலுவுள்ளவனும், தண்டிக்கக் கூடிய அதிகாரம் உடையவனும், எதிரிகளை துவம்சம் செய்யக் கூடிய ஆற்றல் உள்ளவனும் ஒரு அந்தணன் முன்பு அமைதியாக இருப்பது என்பது ஆச்சரியம். எங்கு, எவரிடம், எப்படி இருக்க வேண்டும் என்பதை தெரிந்து கொண்டவன் புகழ் ஒருநாளும் சரிவதில்லை,” என்று சொல்லி தன் சுயரூபம் காட்டி ஆசிர்வதித்துச் சென்றார்.

அவர் நகர்ந்த இடத்தில் பல விதமான அணிகலன்களோடு இறந்துபோன பிள்ளை இருந்தான். அவன் மீது அற்புதமான வாசனை வீசியது.

“தர்மபுத்திரா, சிபியினுடைய வாழ்க்கை பல மனிதர்கள் அறிந்து தெரிந்துகொள்ள வேண்டியது. தான் தானம் கொடுப்பதாகிய கர்வம் இல்லாது, புகழுக்காக தானம் கொடுக்காது இன்னின்னவருக்கு இன்னின்ன தானம் தரவேண்டும் என்ற நிலைமையை புரிந்து கொண்டு, வந்தவர்கள் மனம் கோணாது முழு மனதுடன் தானம் தருவது என்பது வெகு சிலரிடமே இருக்கிறது. சிபியை புரிந்துகொள், அது மிக முக்கியம்,” என்றார்.

கதைகள் வெறும் பொழுது போக்கிற்காக சொல்லப்படுவதில்லை; புரிந்து கொள்வதற்காக சொல்லப்படுவது. அந்தக் கதைகள் மனித விதிகளுக்கு மீறியதாக இருக்கலாம். அது முக்கியமல்லை. கதையினுடைய நீதி, நியாயம் நெஞ்சில் பதிய வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் மனம் அலையாது, ஆடாது இருக்க வேண்டும் என்பதை கதைகள் கொஞ்சம் உக்கிரமாகச் சொல்லும். அதில் குழம்பிவிடக் கூடாது” என்று சொல்லிக் கொடுத்தார்.

தத்துவப் பாடத்தில் தாகம் குறையாத யுதிஷ்டர் மார்க்கண்டேயரை நோக்கி, “தானம் செய்வதைப் பற்றி எனக்குச் சொல்லிக் கொடுங்கள். எந்த பெரியவரிடம் போனாலும் தானத்தின் மகிமைப் பற்றி பேசப்படுகிறது. எல்லா கதைகளிலும் அது உயர்வாகக் கூறப்படுகிறது. தானம் என்பது எப்படிச் சிறந்தது என்பதைச் சொல்லுங்கள்”



என்று கேட்டார்.

"யுதிஷ்டிரா, நான்குவகை வாழ்க்கை வீணானதாகக் கருதப்படுகிறது. புதல்வர்கள் அற்றவர்கள், தர்மத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள், எப்பொழுதும் மற்றவரின் சமையலை உண்பவர்கள், தனக்காக மட்டுமே தனியாக சமைப்பவர்கள் இவர்கள் வாழ்க்கை வீணானது என்று சொல்லப்படுகிறது.

அதேபோல பதினாறு வகை தானங்கள் வீணானதாகும். சன்னியாசி வாழ்க்கையிலிருந்து குடும்ப வாழ்க்கைக்கு திரும்பி வந்தவர். அவருக்கு தானம் தரக் கூடாது. அநியாயமாக சம்பாதித்த செல்வத்தினால் தரப்படுகின்ற தானமும் வீணானது. பொய் சொல்பவன், பாபி, நன்றி இல்லாதவன், ஒருவர் வசிக்கின்ற கிராமத்தில் இருக்கின்ற புரோகிதன், வேதத்தை விற்பவன், தகுதியில்லாதவர் மூலம் யாகம் செய்பவன், பாம்பைப் பிடித்து தொழில் செய்பவன், பணியாட்கள், எதையோ உத்தேசித்துப் பெண்களுக்கு மட்டுமே செய்யப்படுகின்ற தானம் வீணானது.

பித்ருபூஜை செய்ததாலும், தேவபூஜை செய்ததாலும், பிராமணருக்கு நல்ல மரியாதை அளித்தால் நீ சொர்க்கத்திற்கு போகின்ற தகுதியை உடையவனாக இருக்கிறாய். சிராத்த காலத்தில் உத்தமமான பிராமணனுக்கு போஜனம் செய்விக்க வேண்டும். அருவெறுப்பான சரீரம் உடையவனையும், நோயுற்றவனையும், தந்தை உயிர் இருக்கும்போதே தாயின் தீயநடத்தையால் பிறந்தவனையும், முதுகில் அம்பறாத்தூணி கட்டிக் கொண்டு க்ஷத்திரியத் தொழில் செய்கின்ற பிராமணனையும் நீ சிராத்தத்தில் விலக்கிவிட வேண்டும். ஒருவனை கடையேற்றுகின்ற சக்தி யாருக்கு இருக்கின்றதோ அந்த பிராமணனுக்கே நீ தானம் தர வேண்டும். சாஸ்திரத்தில் வல்லமையுடையவருக்கு நீ தானம் செய்ய வேண்டும்.

யுதிஷ்டிரா, விருந்தினருக்கு போஜனம் செய்விக்கும்போது அக்னிதேவனுக்குண்டான திருப்தி அவர் மீது சந்தன புஷ்பங்களை செலுத்துவதிலும் வரவில்லை.

நல்ல அதிதிக்கு கால் கழுவ நீரும், கால்களில் தேய்த்துக் கொள்ள எண்ணெயும், அவனுக்கு அருகே ஒளி வீசும் தீபமும், போஜனம் செய்வதற்கு நல்ல அன்னமும், பிறகு சிரமபரிகாரம் செய்வதற்கு நல்ல இடமும் கொடுப்பவனே சிறந்த தானம் தருபவன். இவன் ஒருபொழுதும் எமனிடம் செல்வதில்லை. அதிதி உண்ட எச்சில் இடத்தை சுத்தம் செய்வதும், அவர்களை சந்தன மாலைகளால் அலங்கரிப்பதும், கால் முதலிய அங்கங்களை அழுத்தி ஆசுவாசப்படுத்துதலும் கோதானத்தைவிட மிகப் பெருமைமிக்கது.

இன்னும் பிராமணனுடைய அகங்காரத்தை சொல்கிறேன் கேள். நீ தானம் அளிக்கின்ற பிராமணன் வேதம் அறிந்தவராக இருக்க வேண்டும். ஏழையாக இருக்க வேண்டும். கிரகஸ்தனாக இருக்க வேண்டும். தினமும் அக்னி ஹோத்ரம் செய்பவனாக இருக்க வேண்டும். நீ அளித்த தானத்திற்கு எந்த பிரதி உபகாரமும் செய்யாதவனாக இருக்க வேண்டும். அவன் ஆசிர்வாதமே, அவன் சந்தோஷச் சிரிப்பே பெரிய உபகாரம். தவறானவர்க்கு தானம் செய்வதால் எந்தப் புண்ணியமும் வருவதில்லை. மாறாக பாபம் செய்கிறது.

சொர்ண தானம் மிகச் சிறந்தது. நீ ஒரே ஒரு சொர்ணத்தை உத்தமமான பிராமணனுக்கு கொடுத்தால் நூறு மடங்கு உனக்கு திரும்பி வருகிறது. உத்தமமான பிராமணனுக்கு தானம் செய்தால் தானம் செய்தவனுக்கு சகலவித யோகங்களும் தானாக வந்து சேரும். பசித்து, வெகுதூரம் நடந்து களைப்போடு உடம்பில் அழுக்கு சேற, இனி யாராவது போஜனம் செய்பவர்கள் இருக்கிறார்களா என்று எவர் கேட்டாலும் அவனை இந்த இடத்திற்குப் போ என்று வழி நடத்துகிறானே அவனுக்கே மிகப் பெரிய புண்ணியம் உண்டு. அவன் உணவு போட்ட புண்ணியத்தை அடைகிறான்.

யுதிஷ்டிரா, நீ எல்லா தானத்தையும் விட்டுவிட்டு அன்னதானத்தை மட்டுமே செய்து கொண்டிரு. இந்த உலகத்தில் அன்னதானத்தைப் போன்ற விசித்திரமானதும், புண்ணியம் அளிப்பதுமான தானம் வேறு எதுவும் கிடையாது. உன் சக்திக்கேற்ப நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட போஜனத்தை உத்தம அந்தணனுக்கு அளிப்பவன் அந்த புண்ணிய கர்மத்தின் பிரபாவத்தால் லோகத்தை அடைகிறான்.

அதாவது, பிரம்ம லோகத்தை சேர்கிறான். அன்னமே எல்லாவற்றையும்விட பெருமையானது. வேதம் அன்னத்தை பிரஜாபதி என்று சொல்கிறது. நீர் நிறைந்த குளங்களை, குட்டைகளை தோற்றுவிப்பவன், கிணறு தோண்டுபவன், தர்ம சாலைகள், தோட்டங்கள், அமைப்பவன் அவனுக்கு அன்னதானம் செய்வதற்கு இணையான புண்ணியம் கிடைக்கிறது. அவர்கள் நரகத்திற்குப் போவதில்லை. மிக மரியாதையுடன் அவர்கள் அழைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.”

“எமனுடைய உலகம் என்று நடுவே ஒரு வார்த்தை சொன்னீர்கள். அந்த எமப்பட்டிணம் பற்றிச் சொல்லுங்கள். அது இங்கிருந்து எவ்வளவு தொலைவில் இருக்கிறது?” என்று வியப்புடன் தருமபுத்திரர் கேட்டார்.

மற்ற சகோதரர்கள் அந்த பதிலுக்காக நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

“உலகில் எல்லா மனிதர்களும், எமனைப் பற்றியும், எமனுடைய தேசம் பற்றியும் தெரிந்து கொள்ள மிகுந்த ஆவலாக இருக்கிறார்கள். அதைத் தெரிந்து கொள்கின்றபோது பாவம் செய்யாது இருக்க வேண்டும் என்கிற எண்ணம் பலருக்கு வருகிறது. மனித லோகத்திற்கும், எமலோகத்திற்கும் உண்டான வழியில் எண்பத்தாராயிரம் யோஜனை வித்தியாசம் இருக்கிறது. நீர் இல்லாத, சூன்யமான இடமாக அந்தப் பாதை இருக்கிறது. எந்த இருப்பிடமும் கிடையாது. ஆனால், வெப்பம் மிகுந்த வழியாகவும், ஓய்வெடுக்க முடியாத இடமாகவும் இருக்கிறது. எம தூதர்கள் ஆண், பெண் ஜீவன்களை பலமாக பிடித்து இழுத்துக் கொண்டு போகிறார்கள். இங்கு எவர் நல்ல தானம் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு குடை, குதிரை முதலிய சௌகரியங்கள் கிடைக்கின்றன. அந்த வெய்யில் தடுத்து நிறுத்தப்படுகிறது. அன்னதானம் செய்பவருக்கு போஜனம் கிடைக்கிறது. எனவே அன்னதானம் செய்தவர்கள் பசி இல்லாது வழியில் உணவு உண்ட திருப்தியோடு நகர்ந்து போகிறார்கள். வஸ்திரம் கொடுத்த மக்களுக்கு நல்ல வஸ்திரம் கிடைக்கிறது. தங்கம் கொடுத்தவர்களுக்கு நல்ல ஆபரணம் கிடைக்கிறது. பூமிதானம் செய்தவர்களுக்கு விரும்பிய அவர்கள் எம பட்டிணம் நோக்கி தைரியமாக சந்தோஷமாக போகிறார்கள்.

> உலகில் எல்லா மனிதர்களும், எமனைப் பற்றியும், எமனுடைய தேசம் பற்றியும் தெரிந்து கொள்ள மிகுந்த ஆவலாக இருக்கிறார்கள். அதைத் தெரிந்து கொள்கின்றபோது பாவம் செய்யாது இருக்க வேண்டும் என்கிற எண்ணம் பலருக்கு வருகிறது.

தண்ணீர் தானமும், அன்னதானமும் செய்பவர்கள் மிகப் பெரிய மகிழ்ச்சியை அடைகிறார்கள். வெளிச்சத்தைக் காண்கிறார்கள். குதிரைகள் பூட்டிய தேரில் யாத்திரை போக உதவி செய்தவர்கள் மயில் பூட்டிய விமானங்களில் செல்கிறார்கள். நடைவழியில் தண்ணீர் தானம் செய்தவர்களுடைய சந்தோஷம் அற்புதமானது. அம்மாதிரி ஜலதானம் செய்தவர்களுடைய ஆத்மா போகும் வழியில் புஷ்ப யோஜனா என்கிற நதி காணப்படுகிறது. அங்கு அவர்கள் இறங்கி நீர் குடித்து இளைப்பாறி கவலையின்றி நடக்கிறார்கள். ஆகாரம் கிடைக்கும் என்று யார் வந்திருக்கிறாரோ அவருக்கு மனம் குளிர ஆகாரம் செய்ய வேண்டும். அதிதிக்கு கிடைத்த மரியாதையை தேவர்கள் தங்களுக்கு கிடைத்த மரியாதையாக நினைத்து சந்தோஷப்படுகிறார்கள். அதிதி அதாவது விருந்தினர் என்பவரை மனம் கோணாது உபசரிக்க கற்றுக் கொள். நீ நடத்துகின்ற பூஜைக்கு எந்த அழைப்பும் இல்லாது பூஜைக்கு பிறகு உணவு கிடைக்கும் என்று வந்து நிற்கிறான் அல்லவா, அவனை ஒருபொழுதும், அவன் தோற்றம் பிச்சைக்காரனைப்போல இருந்தால் அவன் பெரிய யோகியாக இருக்கக்கூடும். அல்லது கடவுள் பெயரை கேட்டுக் கொண்டு அதன்மூலம் சாப்பாடு கிடைக்கும் என்று நம்பிக்கை உடையவனாக இருக்கக்கூடும். உணவுக்காகவே கடவுள் பெயரை சொல்பவனாக இருக்கக்கூடும். அப்படிக் கடவுள் பெயரை சொல்லி ஆவலோடு தட்டின் முன் உட்காரும்போது அவனை நன்றாக கவனி. இன்னும் என்ன வேண்டும் என்று கேள். அதில் தவறே இல்லை.

யுதிஷ்டிரா, உங்களைப்போல க்ஷத்திரியர்கள் செய்யக்கூடிய தானத்தை சொல்கிறேன் கேள். தங்க மூக்கும், அழகான வெள்ளி உடம்பும் பொருட்களாலும் அலங்கரித்து எல்லா வகை ரத்தினங்களாலும் அலங்காரம் செய்து ஒரு கன்றையும் பசுவையும் தானம் செய்பவன் உத்தமான பலனை அடைகிறான். காடு, மலை, தோட்டங்களோடு, நீர் நிலைகளோடு கூடிய பூமியை தானம் செய்த புண்ணியம் இந்த ஒரு விஷயத்தில் கிடைக்கிறது.

மது அருந்தாதவனும், எந்த வித குற்றதோஷம் இல்லாதவனும், வேதங்களை முறைப்படி அறிந்தவனும் பிறர் சாபத்தை கரைத்து கறையேற்றுகிறான். சிறந்த வைதீகனுக்கு கொடுக்கப்பட்ட தானம் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பைப்போல பலனுடையதாகிறது. பிராமணனுடைய கோபமே அஸ்திர பிரயோகம். பிராமணர்கள் இரும்பு ஆயுதங்களோடு சண்டையிடுவதில்லை. பிராமணர்கள் குரோதத்தாலேயே குற்றவாளிகளை அழித்துவிடுகிறார்கள். யுதிஷ்டிரா, இதை நான் உனக்கு மட்டும் சொல்லவில்லை. உன்னைச் சுற்றியுள்ள உன்னுடைய சகோதரர்களுக்கும், அந்தணர்களுக்கும் சொல்கிறேன்.”

(தொடரும்)

மகாபாரதம்

62

“மகரிஷியே உலகத்தில் மிக கோரமான தவம் செய்கிறவர்கள் குடும்பப் பெண்கள்தான் என்பது என்னுடைய அபிப்ராயம். கணவனுக்கு சிஷ்ருஷை செய்துகொண்டு மாமியார், நாத்தனார், மைத்துனர் போன்றவர்களை அனுசரித்து, உதவி செய்துகொண்டு குழந்தைகள் பெற்று, அவர்களை சீராட்டி, பாராட்டி வளர்த்து அகாலத்தில் எழுந்து அழுகின்ற குழந்தையை சமாதானம் செய்து, நோயுற்றபோது அருகே இருந்து கண் கொட்டாமல் கவனித்து, தன்னைப் பற்றிய கவனம் சிறிதும் இல்லாது, எந்த ஒப்பனையும் இல்லாது தன் குழந்தையை ஒப்பனை செய்து, அழகு பார்த்து, அவன் எப்படி வருவானோ என்ற கவலையிலும் ஆழ்ந்து, ஒருவேளை அவன் தவறான நடவடிக்கையில் இருந்தால் அதை பொறுத்துக் கொண்டு, ஆயிரம் இருந்தாலும் என் பிள்ளை என்று சொல்லுகின்ற அந்த குல ஸ்திரீயைப் பற்றி நான் பெரிதும் வியப்படைகிறேன்.”

தருமபுத்திரரின் இந்த சிந்தனைக்கு மார்க்கண்டேய மகரிஷி மிகவும் சந்தோஷப்பட்டார். “தருமபுத்திரரே, உலகத்தில் மக்களைப் பற்றி இவ்விதம் அக்கறைப்படுபவன்தான் சிறந்த மன்னனாக இருக்க முடியும். தன் தளபதிகளையும், வீரர்களையும், குதிரைகளையும், யானைகளையும் மட்டுமே நோட்டம் இட்டுக் கொண்டிருக்கிறவன் சௌக்கியமாக வாழ இயலாது. இவர்களுக்கு பின்புலத்தில் ஒரு பெண் இருக்கிறாள் என்பதை ஒரு மன்னன் புரிந்துகொள்ள வேண்டும். அவளால்தான் குடும்பம் இயங்குகிறது. குடும்பத்தால்தான் உலகம் இயங்குகிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். நீ சொன்ன குல ஸ்திரி பற்றி மிக நல்ல விவரமான ஒரு கதையைச் சொல்கிறேன் கேள்.

வேத விஷயங்களில் சிறந்தவனான கௌசிகன் என்ற அந்தணன் ஊர் ஊராகப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு நடந்து வந்தான். களைப்புற்று ஒரு மரத்தடியில் தங்கினான். அவன் அரைத் தூக்கத்தில் இருக்கும்போது அவன் தலைமீது ஒரு கொக்கு எச்சமிட்டது. பதறி, பயந்து, அருவருப்படைந்து எழுந்து அவன் மேலே நிமிர்ந்து பார்த்தான். கொக்கு ஒன்று இதைச் செய்தது என்று புரிந்து தன் கோபம் முழுவதும் திரட்டி தன் கண் வழியே அந்தக் கொக்கை உற்று நோக்கினான். அவன் பார்வையின் தீட்சண்யம் தாங்காமல் கொக்கு கருகி, இறந்து கீழே விழுந்தது. ஆனால் அது இறந்த பிறகு அந்தணன் வருந்தினான். ஒரு கணநேரம் கோபத்தைப் பொறுத்துக்கொள்ளாமல் அதை இந்தக் கொக்கின்மீது காட்டிவிட்டேனே. இதற்கு என்ன தெரியும். என்னை இம்சிக்க வேண்டும் என்ற எண்ணம் இதற்கு இல்லை. ஆனாலும் ஏதோ நடந்து விட்டது என்று நான் பொறுமையாக போயிருந்திருக்க வேண்டும். ஏன் இப்படிச் செய்தேன் என்று வருத்தப்பட்டார்.

பிறகு உடம்பை சுத்தி செய்து கொண்டு மிகுந்த பசியோடு அருகிலுள்ள கிராமத்திற்குப் போய் ஒரு வீட்டின் முன்பு நின்று ‘பவதி பிட்சாம் தேஹி’ என்று உரக்க குரல் கொடுத்தார்.

வீட்டிலுள்ள பெண்மணி பாத்திரங்களை சுத்தம் செய்து கொண்டிருந்தாள். ‘கொஞ்சம் இரும், அந்தணரே, பாத்திரங்களை சுத்தம் செய்துவிட்டு வருகிறேன்,’ என்று சொன்னாள். அவன் திண்ணையில் அமர்ந்திருந்தான். பாத்திரங்கள் சுத்தி செய்து அடுக்கியபோது அவளுடைய புருஷன் பசியோடு மிக வேகமாக வீட்டிற்குள் நுழைந்தான். அவனைக் கண்டவள், அந்தணனை முற்றிலும் மறந்து புருஷனுக்கு கால் கழுவ ஜலமும், பிறகு குடிக்க நீரும் கொடுத்து உபசரித்தாள். பெரிய மணை போட்டு உட்காரவைத்தாள். எதிரே வாழை இலை விரித்து அப்பொழுது சமைத்திருந்த பண்டங்களை ஒவ்வொன்றாக வைத்தாள். புருஷன் ஆவலாக சாப்பிடத் துவங்கினான். அவனுக்கு வியர்த்தது. விசிறிவிட்டாள். பார்த்து பார்த்து அன்னமும், குழம்பும், ரசமும் மிக கவனமாக பரிமாறினாள். விக்கியபோது தலை தடவி, தண்ணீர் கொடுத்து ‘பொறுமையாக சாப்பிடும்’ என்று சொல்லி, முதுகு, கழுத்தெல்லாம் வியர்வை போக விசிறிவிட்டாள். முந்தானையால் துடைத்துவிட்டாள்.

வெளியேயிருந்தபடி உள்ளே நடப்பது அத்தனையும் அந்தணன் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு பசி அதிகமாகியது. என்ன அயோக்கி



“கடவுளே வந்தாலும் கணவரைத்தான் கவனிப்பேன்!”

யத்தனம் இது என்பதாக உள்ளுக்குள் சீறினான்.

புருஷன் படுத்ததும் அவனுக்கு கால் பிடித்து விட்டாள் அந்தப் பெண். தூங்கியதும் மேலே துணியை போர்த்தினாள். சிறிது நேரம் விசிறி விட்டு அவசரமாக உணவோடு வாசற்பக்கம் வந்தாள்.

“என்னம்மா என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ” அந்தணன் கோபத்தோடு கூவ ஆரம்பித்தான்.

“அமைதி. என் புருஷன் உள்ளே தூங்கிக் கொண்டிருக்கிறார். எது பேசுவதாக இருந்தாலும் அமைதியாகப் பேசுங்கள்” என்று கட்டளைபோல் பேசினாள்.

அந்தணன் அதற்குப் பணிந்து தாழ்ந்த குரலில் சண்டையிட ஆரம்பித்தான். “உண்ண உணவில்லை போ என்று சொல்லியிருந்தால் நான் அடுத்த வீடு போயிருப்பேன். அங்கே என்னுடைய போஜனம் இந்நேரம் முடிந்திருக்கும். என்னைத் திண்ணையில் உட்கார வைத்துவிட்டு உன்னுடைய இஷ்டம் போல் உன் கணவருக்கு சிஷ்ருஷை செய்து கொண்டிருக்கிறாயே. அந்தணர்கள் என்றால் தேவர்களும் நடுங்குகிறார்கள். அவர்களும் மரியாதை செய்கிறார்கள். உனக்கு என்ன அலட்சியம். அந்தணன் கோபப்பட்டால் நாலு திக்கும் எரிந்து பஸ்பமாகும். மலைகளும், காடுகளும் எரிந்து நாசமாகும். உனக்குத் தெரியாதா?” என்று சீறுகிற குரலில் பேசினான்.

“அந்தணரே. நான் கொக்கு அல்ல” என்று சொல்லி அந்தப் பெண்மணி நிறுத்தினாள். அந்தணன் வியப்போடு பார்த்தான்.

“எரித்து சாம்பலாக்குகின்ற சாதாரண பறவை அல்ல. என்னுடைய முக்கியமான கடமை என் புருஷனை பராமரிப்பது. அதைவிட முக்கியமான வேலை எதுவும் எனக்குத் தரப்படவில்லை. தேவர்கள் வந்தாலும், ஏன் கடவுளே வந்தாலும் கூட நான் கணவரைத்தான் கவனிப்பேனே தவிர, மற்ற

விஷயங்களில்ஈடுபட மாட்டேன். களைத்துபசியோடு வருகின்ற என்னுடைய கணவருக்கு பணிவிடை செய்வதுதான் என் வாழ்வின் லட்சியம். அவரை உட்கார சொல்லிவிட்டு உங்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டு நீங்கள் சாப்பிடும்வரை அவரை பசியாக வைக்கிற பாவத்தை ஒருநாளும் செய்யமாட்டேன். எனவே, இந்த கோபத்தை எல்லாம் வேறு எங்காவது வைத்துக் கொள்ளுங்கள்" என்று பணிவாகவும், திடமாகவும் பேசினாள்.

அந்தணன் திகைப்போடு எழுந்தான். எப்படித் தெரியும் கொக்கு எரிந்தது?" வியப்போடு கேட்டான்.

"பிராமணருக்கு மட்டும்தான் இந்த உயர் குணங்களா, தேவர்கள் மட்டும்தான் முக்காலமும் உணர்வார்களா? நல்ல பதிவிரதைகள் இவர்களுக்கு இணையானவர்கள். அவர்களாலும் பல விஷயங்களை ஸ்வீகரிக்க முடியும். உங்கள் பதட்டமே உங்கள் மனதை காட்டி கொடுத்தது. உங்கள் மனதிலிருந்து கொக்கு எரிந்த விஷயத்தை புரிந்து கொண்டேன். அதைப் பெரும் செயலாகக் கொண்டு என்னிடம் அதே கோபத்தைக் காட்டுகிறீர்கள். அது நடக்காது. அந்தணரே, என்னைப் பற்றி திகைக்க வேண்டாம். இப்படியெல்லாம் பெண்கள் உண்டா என்று ஆச்சரியப்பட வேண்டாம். நல்லவர்கள் எங்கும் உண்டு. தபஸ்விகள் எங்கும் உண்டு. இறைச்சி விற்பனை செய்கின்ற தர்மவியாதர் என்கிற ஒருவர் உத்தமமான குணங்களை கொண்டிருக்கிறார். தர்ம நியாயங்களை தெரிந்தவராக இருக்கிறார். அதைச் செவ்வனே கடைப்பிடிக்கிறார். இறைச்சி விற்பவரா என்று அதிசயிக்க வேண்டாம். போய் பார்த்து வாரும்" என்று சொல்லி அனுப்பினாள்.

அந்தணர் சிறிதளவு உணவு எடுத்துக் கொண்டு பசி அடங்கியவராய் அவள் சொன்ன தர்மவியாதரைப் பற்றி விசாரித்துக் கொண்டு போனார். தர்மவியாதர் வசிக்கும் இல்லம் இதுதான் என்று தோட்டம் சூழ்ந்த ஒரு வீட்டை காட்டினார்கள். அதன் உள்ளே போய் ஒரு ஓரமாக உட்கார்ந்து தர்மவியாதரை கவனித்துப் பார்த்தார்.

மாமிசத்தை துண்டு செய்து பல்வேறு வகையில் சுத்தம் செய்து நல்ல கொழுப்புள்ள சதைகளை இலையில் கட்டி வருவோருக்கு சரியான விலையில் விற்று, அவர்களிடம் இன்முகம் பேசி, அவர்களிடம் காசு குறைவாக இருந்தால் 'பரவாயில்லை, நாளை கொடுங்கள்,' என்று பேசி, நடுநடுவே தாய், தந்தையருக்குண்டான உதவிகளைச் செய்து, தன் குழந்தைகளுடன் சந்தோஷமாகப் பேசி, சுறுசுறுப்பாக, உற்சாகமாக முன்னும் பின்னும் அவர் அலைவதை கவனித்தார்.

பிறகு ஓர் அந்தணர் தொலைவிலிருந்து தன்னை கவனிப்பதை பார்த்த அவர், அருகே போய் வணக்கத்துடன்,

"வர வேண்டும். அந்தப் பத்தினிப் பெண்மணி அனுப்பினாளா? அவள் சொல்லித்தான் இங்கு வந்திருக்கிறீரா?" என்று கேட்டார்.

கௌசிகர் திகைப்பின் உச்சிக்குப் போனார். "ஆமாம். அவள் சொல்லித்தான் இங்கு வந்தேன். உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"மனதில் கள்ளமில்லாதவனுக்கு எல்லா விஷயங்களும் புலப்படும். நீங்கள் ஏன் இதை அதிசயமாகவும், கிடைக்க முடியாத விஷயமாகவும் பார்க்கிறீர்கள்? செய்கிற தொழிலுக்கும், தர்மத்திற்கும் சம்பந்தமில்லை. நான் இறைச்சியை விற்கிறேனே தவிர, இறைச்சிகளை நான் சாப்பிடுவதில்லை. இது என் குலத் தொழில். இது என் தந்தை செய்தது. என் தந்தைக்கு தந்தை செய்தது. எனவே, இதை கௌரவத்துடனும், சந்தோஷத்துடனும், நிம்மதியுடனும் செய்கிறேன். பிராமணோத்தமரே, நான் ஒன்றும் அதிசயமானவன் அல்ல. எனக்கு கல்வி கொடுத்து நன்கு வளர்த்த தாய், தந்தையரை நான் பெரிதும் மதிக்கிறேன். அவர்கள் மிக முக்கியமானவர்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்கு அடுத்து என் குழந்தைகளை கவனமாக வளர்க்கிறேன். பெரியோர்களுக்கு உணவிட்ட பிறகு என் குழந்தைகளை மடியில் இறுத்தி அவர்களுக்கு ஏற்ற உணவை கொடுக்கிறேன். பிறகு நானும், என் மனைவியும் எதிரும் புதிருமாக அமர்ந்து கொண்டு உணவு எடுத்துக் கொள்கிறோம். பிற்பகலில் என் வீடே அமைதியாக தூங்கும். இரவு நேரம் தர்மநெறி உள்ள கதைகளை என் குழந்தைகளுக்குச் சொல்கிறேன். என் மனைவியும் கேட்கிறாள்."

"எவ்வளவு அழகான வாழ்க்கை நடத்துகிறீர்களே தர்மவியாதரே. அப்படி இருந்தும் இந்த ஈனமான ஒரு தொழிலை செய்கிறீர்கள் என்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. உங்கள் ஞானத்திற்கு வேறு வேலை தேடிக் கொள்ளக் கூடாதா?"

பாலகுமாரன்

நான் ஏற்கனவே சொன்னது போல இது என் குலத் தொழில், என் தந்தையும், என் தாத்தாவும், அவருக்கு அப்பனும் செய்த தொழில். இதைச் செய்வதில் எனக்கு நெல்முனையளவும் வருத்தமில்லை."

"இது ஜீவ இம்சை அல்லவா" என்று மறுபடியும் கௌசிகர் கேட்க, தர்மவியாதர் வாய்விட்டு சிரித்தார். "உலகம் ஜீவ இம்சையில்தான் வாழ்கிறது. செடிகொடிகள் உயிருள்ளவை. அவை வளருகின்றன. ஒரு புல்லின் உயரத்திற்கு இருந்த செடியானது பெரிய மரமாக விழுதுகளோடு வாழ்கிறது. அப்படியெனில் அது ஒரு உயிரல்லவா? அந்த உயிரை நாம் கொன்று தின்னவில்லையா? புல்லை மான் தின்கிறது.

மானை புலி தின்கிறது. புலியை வேடன் கொல்கிறான் என்கிற நியதிக்கு என்ன சொல்கிறீர்கள்? இதில் எது தவறென்று சொல்வீர்கள்? நாம் நடக்கின்றபோது கோடிக்கணக்கான உயிர்களை மிதித்துதானே நடக்கிறோம். மிக நுண்ணிய ஜந்துக்கள் உயிர் வாழ்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்த ஜந்துக்களை படுக்கும்பொழுதும், படுத்துப் புரளும்போதும், உட்காரும் போதும், நடக்கும்போதும் நாம் இம்சை செய்யவில்லையா, கொன்றுவிடவில்லையா? அறிந்தும், அறியாதும் அவற்றை நாம் இம்சை செய்யவில்லையா? ஜீவ இம்சைதான் உலகத்தினுடைய அடிப்படையான விஷயம். தொடர்ந்து நடக்கிற விஷயம். எனவே, இந்தத் தொழில் மோசமானதாக ஒருகாலும் தெரியவில்லை. யாகத்தில் அந்தணர்கள் பசுக்களை பலி தரவில்லையா? அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்? பல்வேறு விதமான விலங்குளை உணவுக்காக மனிதன் எரித்துக் கொல்லவில்லையா. அரசர்கள் தங்கள் உடல்நலனை பெருக்க, விதம் விதமான கொழுப்புள்ள உணவுள்ள மிருகங்களை கொல்வதில்லையா. தசைக்காகவும், எலும்புக்காகவும், நரம்புக்காகவும், ஹோமத்துக்காகவும் என்று மிருகங்களும், பறவைகளும் பலியிடப்படவில்லையா. அவற்றைக் கொன்று தின்பதில்லையா? எனவே. என்னுடைய வாழ்க்கை ஜீவ இம்சை நிறைந்தது என்று ஏன் சொல்கிறீர்கள்? ஜீவ இம்சையற்று வாழவேண்டும் என்ற கருத்தே தவறானது என்பது என் எண்ணம். போர் என்று வந்துவிட்டால் நாம் எதிரிகளை அடித்தும், வெட்டியும் கொல்கிறோம். பலரை சித்ரவதை செய்கிறோம். பெண்களை துரத்தி அனுபவிக்கிறோம். ஏன் குழந்தைகளைக்கூட ஆத்திரத்தில் கொன்றுவிடுகிறோம். கிழவர்களை அடித்து நொறுக்குகிறோம். இவற்றையெல்லாம் வீரமென்றும். தர்மமென்றும் சொல்லிக் கொள்கிறோம். இது நியாயமென்று பேசிக் கொள்கிறோம்.

“அப்படியானால் வாழ்வின் நியமம்தான் என்ன என்று நீங்கள் கேட்கிறீர்களா? நான் அரசனுக்கு பயப்படுகிறேன்.

அரசன் ஒருவன்தான் ஒரு சேத்தின் தர்மத்தை காப்பாற்றுகிறான். அவன் அதர்மமாக இருந்தால் அந்த தேசத்தில் அதர்மம் தலை விரித்தாடும். அவன் தர்மவானாக, நீதி நெறி உள்ளவனாக இருந்தால் ஜனங்களும் அதற்கு கட்டுப்படுவார்கள். அம்மாதிரி இருப்பதற்கு பிரயத்தனப்படுவார்கள். அங்கும் இங்குமாய் ஏதேனும் அதர்மம் ஏற்பட்டால் அதை கடுமையாக தண்டிப்பதன் மூலம் அரசன் தர்மத்தை நிலைநாட்டுகிறான். பலர் இம்சைப்படாமல் இருப்பதற்காக ஒரு ஜீவ இம்சையை செய்து காட்ட வேண்டியிருக்கிறது.

“இம்மாதிரியான கருத்துகளை அந்தணர்கள் ஜனங்கள் மத்தியில் விதைக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல கதைகள் சொல்ல வேண்டும். கெட்டவன் அழிவான் என்று பேச வேண்டும். கெடுதல் செய்தால் கெடுதல் கிடைக்கும் என்று எடுத்துரைக்க வேண்டும். இப்படிச் சொல்வதின் மூலம் தர்மம் காக்கப்படுகிறது. ஜீவ இம்சை குறைக்கப்படுகிறது. மனிதர்களை மனிதர்கள் வெட்டி மாள்வது ஓரளவு நிறுத்தப்படுகிறது. பொருள் மீதுள்ள ஏக்கமும். ஆசையும்தான் பல யுத்தங்களுக்கு காரணமாக இருக்கிறது. செழிப்பான ஒரு தேசத்தை நோக்கித்தான் பஞ்சத்தில் அடிபட்ட ஒரு தேசம் படையெடுக்க முயல்கிறது. எனவே, செழிப்பான இடத்தில் இருக்கின்ற தானியங்களை பஞ்சத்தில் உள்ள இடங்களுக்கு வணிகர்கள் எடுத்துப் போக வேண்டும். எங்கு எது குறைவோ அங்கு அதை விற்க வேண்டும். இதனால் எல்லா இடத்திலும், எல்லா பொருட்களும் சமமாகக் கிடைக்கின்ற ஒரு உத்தமமான காரியத்தை வணிகர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இது இடையறாது நடைபெற வேண்டும். இப்படி நடைபெறுவதற்கு அரசனும், அந்தணர்களும் உதவி செய்ய வேண்டும். க்ஷத்திரியர்களின் துணையோடுதான் காடுகளை தாண்டி வண்டி சுமையை எடுத்துக் கொண்டு வணிகர்கள் போக வேண்டும்.

இம்மாதிரி அரசனும், அந்தணரும், வணிகரும் நலமே வாழ்வதற்கு பல்வேறு கருவிகளைக் கொண்டு பல்வேறு

விஷயங்களை செய்கின்ற நான்காவது வர்ணத்தினர் மிக முக்கியமானவர்கள். பயிர் தொழிலும், கத்தித் தொழிலும், உலோகத் தொழிலும், ஆடை நெய்தலும் மக்களை வாழப்படுத்துபவை. அமைதிப்படுத்துபவை. வெறும் காய், கனிகளை, கிழங்குகளை உண்டபடி மனிதன் இருப்பின், அவன் அடித்துப் பிடுங்குகின்ற கோரமான புத்திக்கு ஆளாவான். மற்றபடி பயிர்செய்து நல்ல பழமரங்களை விதைத்து செவ்வனே வளர்த்து வந்தால் அவை தலைமுறை தலைமுறையாக பாதுகாப்புத் தன்மையை அதிகரிக்கும். நல்ல உடைகளும் சரியான உறைவிடமும், விவசாயத்திற்குண்டான கருவிகளும் மக்களின் நாகரீகத்தைச் சொல்பவை. இந்த விஷயங்கள்தான் அமைதிக்கு அடிப்படையான காரணம்.

“இவை இல்லாமல் வெறுமே காடுகளில் சுற்றித் திரிந்தால் அடித்துப் பிடுங்குகின்ற எண்ணம் வராமல் என்ன செய்யும்? வளமாக வாழ வழியிருக்கிறது என்ற நம்பிக்கையை இந்த வர்ணத்தினர் ஏற்படுத்துகிறார்கள். தூண்களும், அலங்கார வாசல்களும், அழகிய திண்ணையும், கூடமும், பாதுகாப்பான சுவர்களும், மேற்கூரையும், வேலியும் மிகமிக பத்திரமான அமைப்பை ஏற்படுத்துகின்றன. இந்த பாதுகாப்பான எண்ணம்தான் அன்பை வளர்க்கிறது. அஹிம்சையை வளர்க்கிறது. இந்த சூழல் உள்ள தேசம்தான் செழிப்பாகவும், அமைதியாகவும் வளர்கிறது.

“ஆனால் இந்த நான்கு வர்ணத்தாரோடு உலகத்தின் விவகாரங்கள் முடிந்துவிடவில்லை. ஒவ்வொரு தனி மனிதனுடைய குணாதிசயங்களும் உலக அமைதிக்கு காரணமாக இருக்கின்றன. அடிப்படையில் தர்மம் என்பது சாதுக்களின் கைகளில் இருக்கிறது. சாதுக்களை அண்டி அந்தணர்கள் தர்மத்தைப் பற்றி இன்னும் அதிகம் அனுபவித்து தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றை மற்ற மக்களுக்கும் சொல்ல வேண்டும். தர்மம் என்பதை சீர்தூக்கி பார்க்க வேண்டும். இப்படி பார்ப்பதற்கு மன அடக்கம் வேண்டும். பொருட்கள் மீது ஆசை இல்லாது இருக்க வேண்டும். அமைதியான வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டும். பொருட்கள் மீது ஆசையிருப்பின் அந்த ஆசை ஆத்திரத்தையும், கோபத்தையும் தூண்டும். அடையமுடியவில்லையெனில் மிகுந்த மனத்துயரம் ஏற்படும். அந்த மனத்துயரத்தால் பல்வேறு விதமான தீவிர சிந்தனைகள் ஏற்படும். எனவே, பொருட்கள் மீது அதிகம் ஆசையில்லாது அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கு அந்தணர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

“இந்தப் பொருட்கள் மீதான ஆசை, இந்திரியங்களின் சுகத்தால் ஏற்படுகிறது. இந்திரிய சுகத்தை விலக்குவதற்கு அந்தணர்கள் முயற்சி செய்ய வேண்டும். இருப்பதைப் பற்றி உயர்வான விஷயம் என்று ஜனங்களுக்கு, அரசருக்கு எடுத்துரைக்க வேண்டும். சத் பிள்ளைகள் பெறுவதின் பொருட்டே ஆண், பெண் உறவு குறித்த சந்தோஷம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டால் அது அந்த அளவில் நிற்கும். உயிர் வாழ்தலின் பொருட்டே, உடல் வளர்ச்சியின் பொருட்டே உணவு இருக்கிறது என்று தெரிந்து கொண்டால் அதுவும் சரியான அளவில் உண்ணப்படும். அதீதமான காமமும், அகோரமான பசியும் அடுத்தவருக்கு தீங்கு செய்யும் இயல்புடையவை. அடித்துத் தின்னக்கூடிய ஆசையை தூண்டுபவை. இந்திரியங்களை அடக்கி வைப்பதால்தான் மனிதன் ஒழுங்கான வாழ்க்கை வாழ முடியும். ஆசையிலிருந்து விலக முடியும்.”

“தர்மவியாதரே, இந்திரியங்கள் என்று எதைச் சொல்கிறீர்கள்? அதை தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்,” பணிவோடு கௌசிகன் கேட்டான்.

“இந்த உலகம் பஞ்சபூதங்களால் ஆனது. ஆகாயம், காற்று, தீ, ஜலம், பூமி ஆகிய இந்த ஐந்தும் மகா பூதங்கள், சப்தம், ஸ்பரிஸம், ரூபம், ரசம், கந்தம் என்பவை அவற்றின் குணங்கள், ஒவ்வொரு ஜீவனிடமும் இந்த குணங்கள் ஒன்று அதிகமாகவும், ஒன்று குறைவாகவும் இருக்கும்.

மீன்கள் நீரால் ஆன குணம். தாவரங்கள் மண்ணினுடைய உப்பு. விலங்குகளில் நெருப்பை ஏற்படுத்தும் கொழுப்பு அதிகம் இருக்கும். மனிதன் தனக்கு வேண்டியவற்றை இந்த விஷயங்களிலிருந்து அடைகிறான். இந்த உணவுகளுக்கேற்ற புத்தியை பெறுகிறான். மனம் என்கிற விஷயம் ஆறாவதாக இருக்கிறது. மனங்களுக்கப்பால் புத்தி இருக்கிறது. இது நினைவுகளை தேக்கி வைத்துக் கொள்கிறது. ஞாபகசக்தி என்றும் அதற்குப் பெயர். மனதாலும், புத்தியாலும் அகங்காரம் ஏற்படுகிறது.

“இவற்றோடு ஐந்து இந்திரியங்கள். அதாவது பஞ்சபூதங்களால் இயக்கப்படுகின்ற சக்திகள் இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கின்ற ஜீவாத்மா என்கிற உயிர். இந்த தொகுப்பிலிருந்து வெளிப்படுகின்ற ரஜோ குணம், சத்வ குணம், தமோ குணம் என்று பதினேழு அவயவங்களோடு மனிதன் இருக்கிறான். இவை எதுவும் வெளிப்படையாகத் தெரியவில்லை. ரகசியமாக உள்ளுக்குள் இருக்கிறது. சொல்லும் சொல்லாக வெளியே இருப்பதில்லை. கண்ணுக்குத் தெரியாமல் உறைந்திருக்கிறது. சாதாரண மனிதன் இதை உணரமுடியாது.

“ஆனால் விஷயம் அறிந்தவன் தன் உடம்பையும், தன் மனதையும், தன் புத்தியில் உள்ள ஞாபகத்தையும், தன்னுடைய அகங்காரத்தையும் உற்று கவனித்து தன்னை தர்மத்தின் வழியில் நிலைநிறுத்திக் கொள்கிறான். இவற்றுக்கெல்லாம் சாட்சியாக அந்த ஜீவாத்மா மனிதனுடைய உடம்புக்குள்ளிருந்தபடி அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த ஞானம் வந்துவிட்டால் கோபம் வராது. எச்சமிட்ட கொக்கை எரிக்கத் தோன்றாது. எதையும் உயர்வென்றும், தாழ்வென்றும் பிரித்துப் பார்க்க இயலாது. பூமியின் பிரம்மாண்டத்தையும், அது இயங்கும் வகையையும், அதை சூழ்ந்திருக்கின்ற பூதங்களையும், அதனால் தூண்டப்பட்ட உயிர்களையும் நன்கு கவனித்தவன் காதலாக இருக்கிறான். இதுதான் வாழ்க்கை. இன்னவிதம்தான் வாழ்க்கை என்று புரிந்து கொண்டு செயல்படுகிறான். அவனையே தர்மாத்மா என்று இந்த உலகம் சொல்கிறது.”

விடைபெறுவதற்காக கௌசிகன் எழுந்ததும் கிராமத்தின் எல்லைவரை அவரை கொண்டுபோய் விடுகின்ற மரியாதைக்காக தர்மவியாசரும் பின் தொடர்ந்தார்.

“பூமியிலுள்ள வாழ்க்கைப் பற்றி எனக்குத் தெளிவாக எடுத்துரைத்தீர்கள். தர்மவியாதரே, ஜனன, மரணம் என்பது எதனால் உண்டாகிறது? அதன் தாத்பர்யம் என்ன?” என்று கௌசிகர் கேட்க, மெல்ல சிரித்துக் கொண்டே தர்மவியாதர் பதில் சொல்லத் துவங்கினார். “ஜனன, மரணத்திற்கும் இந்த பஞ்ச பூதங்களே காரணமாகின்றன.

“இறந்த பிறகும் பஞ்ச பூதங்கள் உண்டா?” என்று வியப்போடு கௌசிகர் கேட்க, “இல்லை இது வேறு விதம். ஜனன காலத்தில் இந்த பஞ்ச பூதங்களால் ஐந்து இந்திரியங்களும் தூண்டப்பட, அப்படித் தூண்டப்பட்டதால் மனம் அலைய, அடக்கமில்லாத மனதால் இந்திரியங்கள் அதிகமாக ஆசைப்பட, சீறி எழ, அவன் நல்லதோ, கெட்டதோ செய்கிறான். நல்லதுக்கு ஏற்ப, மேலுலகில் ஒரு வாழ்க்கையும், கெட்டதற்கு ஏற்ப நரகத்தில் ஒரு வாழ்க்கையும் அந்த உயிர் அடைகிறது.

அறிவுள்ளவன் மனதால் இந்திரியங்களை அடக்கி அமைதியான வாழ்க்கை வாழ்கிறான். அப்பொழுது அந்த மனம் ஆன்மாவை சார்ந்து இருக்கிறது. ஆன்மாவை சார்ந்திருப்பதால் இறந்தபிறகு அவன் பூமியிலுள்ள விஷயங்களை விட்டுவிட்டு தன் ஆன்மாவை பற்றிக் கொண்டே மேலே போகிறான்.

“அப்படி அல்லாது பூமியின் மீது ஆசை வைத்தவன், பூமியால் உருவாக்கப்பட்ட உடம்பின் மீது ஆசை வைத்தவன், அக்னியில் சமைத்த உணவின் மீது ஆசை வைத்தவன், உயிரின் மீது ஆசை வைத்தவன் அவ்விதமான இடங்களில் பிறந்து அதை மறுபடியும் தீவிரமாக அனுபவிக்கிறான். மறுபடியும் ஒரு உடம்பிற்குள் புகுந்து அந்த இந்திரிய சுகத்திற்கு ஆசைப்பட்டு அந்த உடம்பு தணித்துக்கொள்ளவும் செய்கிறது. ஒரு சுகம் போய் இன்னொரு சுகம் வருகிறது. இடையறாத பிறப்பும் ஏற்படுகிறது. எவனொருவன் வாழும் காலத்திலேயே இந்த மாதிரியான சுகங்கள் அற்பம் என்று எண்ணி எது உண்மையில் உடம்பின் இந்திரியங்களை அசைக்கிறதோ, எது காரணமோ, அந்த ஆன்மாவை சார்ந்து இருப்பானேயானால், அவனுக்கு மறுபடியும் பிறக்க வேண்டிய அவசியம் இருக்காது. எந்த ஆசையும் இருக்காது. பஞ்ச பூதங்களின் ஆட்டம் அவனிடம் செல்லுபடியாகாது. ஆன்மாவை பற்றியிருப்பதற்கு விகசித்த மனம் அடங்கியிருப்பதும், அந்த மனதிற்கு இதம் சொல்லி அமைதியாக்குகிறவனும் மறுபடி பிறப்பதில்லை. அவனால் இந்திரியங்களை ஒரு கட்டுக்குள் வைத்துவிட முடியும்.

இந்த உலகத்தில் இந்திரிய சுகங்களோடு வாழ்பவன் மறுபடி பிறந்துதான் ஆக வேண்டும். இங்கே இந்த உலகத்தில் இந்திரியங்களை அடக்கி, மனதை அலையவிடாமல் தவ வாழ்க்கை வாழ்பவன் வேறு உலகத்திற்கு போக முடியும். பூமி பஞ்ச பூதங்களால் ஆனது. இந்த பஞ்ச பூதங்கள்தான் மனிதனை மறுபடி மறுபடி பிறக்க வைக்கின்றன. இந்த பூதங்களின் ஆட்டங்களை கவனித்து நிறுத்தி வைப்பதற்கு நல்ல சத்சங்கம் வேண்டும். இதைப் பற்றி விளக்கி சொல்பவர் வேண்டும்.

எனக்குத் தெரிந்ததை உமக்கு சொல்லிக் கொடுத்தேன். நீரும் மற்றவரை வழிபடுத்தும்” என்று தர்மவியாதர் கை கூப்ப, கௌசிகர் கண்களில் நீருடன் அவரை மறுபடியும் வணங்கி விடை பெற்றார்.

(தொடரும்)

மகாபாரதம்

63

வியாசருக்கும், கௌசிகருக்கும் நடந்த சம்பாஷணைக்குப் பிறகு மகாபாரதத்தில் அக்னியின் சிறப்புப் பற்றி மிகப் பெரிய விளக்கம் ஒன்று வருகிறது. அதிகமான பெயர்களும், குறிப்பு நுணுக்கங்களும் கொண்ட அந்தப் பகுதியில் அக்னியில் பல்வேறு விதமான ரூபங்கள் பற்றி குறிப்பு இருக்கிறது. பூமியினுடைய இயக்கத்திற்குக் காரணம் அக்னியே என்று திடமாகச் சொல்லப்பட்டு இருக்கிறது.

குத்து விளக்கு ஒரு அக்னி என்றால், அடுப்பு வேறுவிதமான அக்னி. காடு எரிவது இன்னொரு விதமான அக்னி. ஹோமத்தில் வருவது வேறு விதமான அக்னி என்று விதவிதமான அக்னியினுடைய ரூபங்களும், பெயர்களும் கதைகளூடாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

அக்னி என்பது தகிக்கின்ற நெருப்பு மட்டும் அல்ல. பிராணியினுடைய உடம்பில் இருக்கின்ற வெப்பம் கூட சூரியனிடமிருந்து கிடைத்த அக்னியின் விளைவுதான். எல்லா உயிர்களிலும், எல்லா உயிர்களையும் சுமந்து கொண்டிருக்கின்ற உடல்களும், அக்னியைத்தான் ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. புழு, பூச்சியிலிருந்து மிகப்பெரிய யானை, புலி, சிங்கம்வரை அந்த அக்னியினுடைய வலிவினாலேயே விரைவும், பலமும், புத்திசாலித்தனமும் கொண்டிருக்கின்றன. மனிதனுடைய அக்னி சூட்சமமாகவும், மிக வேகமான வளர்ச்சியுடையதாகவும் அவனிடம் இருக்கிறது.

பாலகுமாரன்

இந்த விஷயங்களை அந்த அத்தியாயம் பூடகமாகச் சொல்கிறது. உதாரணத்திற்கு அக்னியினுடைய மனைவியை ஸ்வாஹா என்று சொல்கிறது. அக்னிக்கு ஆஜ்யம் என்று கூறப்படுகின்ற நெய்யை ஆகுதி செய்யும்போது அந்த அக்னி கொழுந்துவிட்டு எரிகிறது. சந்தோஷமடைகிறது. 'ஸ்வாஹா' என்று சொல்லித்தான் அந்த நெய்யை அந்தணர்கள் ஊற்றுகிறார்கள். 'அக்னியே ஸ்வாஹா' என்று இரண்டு வார்த்தைகளுடைய சேர்க்கையை கணவன் மனைவி சேர்க்கையாக உருவகப்படுத்துகிறார்கள். மனிதனை சத்தாக்குவதும் அக்னி. ரோகம் உண்டாக்குவதும் அக்னி. வெற்றியைத் தருவதும் அக்னி. தோல்வியைத் தருவதும் அக்னி என்று வாழ்க்கையின் பல்வேறு கோணங்களில் அக்னியினுடைய பலத்தை, பயன்பாடுகளை சொல்கிறார்கள்.

தரையில் வாழும் உயிர்களில் மட்டுமல்ல. நீரிலும் அக்னியின் சம்பந்தம் இருக்கிறது. மீன்களிலும் அக்னியினுடைய வேகம் இருக்கிறது என்றெல்லாம் விவரிக்கப்படுகிறது. விலங்குகளுடைய சினேகம், தாவரங்களுடைய சினேகம், பூமிக்கு அடியில் புரண்டு கொண்டிருக்கின்ற அக்னியினுடைய வலிமை என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. பூமியிலுள்ள அக்னியை போற்ற வேண்டிய கடமை அந்தணர்களுக்கு உண்டு என்றும், அந்த அக்னி மனித ஓலத்தாலோ, வேறு ஏதாவது அழுகையாலோ, சில பிராணிகளின் தீண்டுதல்களாலேயோ தோஷமடைந்தால் அப்பொழுது எட்டு மண் பானைகளில் அந்த அக்னிகளை மறுபடியும் ஏற்றி அவை ஹோமம் செய்யப்பட வேண்டும், புனிதப்படுத்த வேண்டும் என்றும் இதில் சொல்லப்படுகிறது.

அக்னி என்பது வெறும் தழல் மட்டும் இல்லை. அது வெப்பமாகவும் இருக்கிறது. அந்த வெப்பம் பூமியில் ஜனங்கள் செய்யும் யாகத்தின் பலனைக் கொண்டுபோய் மேலோகத்தில் உள்ள தேவர்களிடம் சேர்க்கிறது. அக்னியின் சம்பந்தத்தால் தான் பூமியிலுள்ள மண்ணில் பல தாதுகள் விளைகின்றன. வைரமும், வெள்ளியும், மாணிக்கமும், பச்சைக் கல்லும், வைடூரியமும், தங்கமும் வெவ்வேறு விதமான மண்களின் சம்பந்தம் கொண்டவை. இவை சிருஷ்டிக்கப்படுகின்றன. நதிகள் அத்தனையும் அக்னியின் உற்பத்தி ஸ்தானங்கள். அக்னி என்பது சாதாரண விஷயமல்ல. அது பெரிய வம்சம் என்றும் சொல்லப்படுகின்றது.

அந்த அக்னியின் வம்சம் விரிவாக சொல்லப்பட்ட பிறகு ஸ்கந்தன் என்று அழைக்கப்படுகின்ற முருகருடைய அலங்கார மகிமையும் மகாபாரதத்தில் தனியாக வருகிறது. ஸ்கந்தன் யார், அவருடைய சரித்திரம் என்ன என்று தருமர் கேட்க, மார்க்கண்டேய முனிவர் அதை விவரித்துச் சொல்வதாக வருகிறது.

சிவனுடைய ரூபம் அக்னி. அதாவது,

பதிபக்தியும், உண்மையான சேவையுமே புருஷனை வசீகரிக்கும்!





அக்னியினுடைய இன்னொரு விஷயம் சிவன். அந்த சிவனுடைய மகிழ்ச்சியின் விளைவாக ஒரு தாது ஏற்பட அதை வேறு எவரும் தாங்க முடியாமல் போக, அதை ஒரு குளத்தில் விட்டுவிட அது ஆறு குழந்தைகளாக பிறந்தது. கார்த்திகைப் பெண்கள் என்னும் நட்சத்திரங்கள் அவர்களை ஸ்வகரித்து வளர்த்து பிறகு ஒரு உருவமாக்கினார்கள்.

இந்திரனுடைய படை பலமற்று இருந்தது. சரியான தலைவனற்று இருந்தது. தேவர்களுடைய அந்தப் படைக்கு தலைமை வகிக்க சிவனுடைய மைந்தனான முருகன் தகுதியானவன் என்று பல்வேறு விதமான சோதனைகளுக்குப் பிறகு இந்திரன் புரிந்துகொண்டு அவரை தேவசேனாதிபதியாக நியமித்தான்.

ஸ்கந்தனுக்கு முன்பாகவே பிறந்த தேவசேனா அவருக்காக இளமையோடு காத்திருக்க, ஸ்கந்தன் என்ற முருகனுக்கு தேவசேனா திருமணம் செய்விக்கப்பட்டார்.

இவை அனைத்தும் குறியீடுகள் என்பது என் அபிப்ராயம். போர் என்ற விஷயம் இல்லாது பூமி இல்லை. போர் செய்கின்ற முனைப்பு, பிடிவாதம், முழு பலம், சோர்வில்லா தன்மை எல்லாமே முருகர் என்று சொல்லப்படுகிறது. சிவனிடமிருந்து நழுவி வந்ததால் ஸ்கந்தம் என்று அழைக்கப்பட்டது. ஸ்கந்தம் என்ற வார்த்தைக்கு நழுவுதல் என்று பெயர். நழுவிய ஒரு வலிவு ஸ்கந்தன். அசையாத விஷயத்திலிருந்து அசைந்த சக்தி ஸ்கந்தன்.

நல்லவர்களுக்கு போர் செய்யும் முனைப்பை இந்த ஸ்கந்தன் ஏற்படுத்துகிறான். அல்லது இந்த போர் செய்யும் முனைப்புக்கு ஸ்கந்தன் என்ற ரூபம் கொடுத்திருக்கிறார்கள். உலகத்தில் எல்லா காலங்களிலும் இடையறாது போர் நடந்து கொண்டு தான் இருக்கிறது. மனிதர்களின் படையெடுப்பும், கிருமிகளின் படையெடுப்பும், அலை கடல் நிலம் புகுதலும், எரிமலை வெடிப்பும்கூட போர் என்பதின் வேறுவேறு ரூபம்தான்.

அக்னியைப் பற்றியும், முருகப்பெருமானின் பிறப்பு பற்றியும் சூட்சுமமாகவும், விரிவாகவும் மகாபாரதம் பேசுகிறது. திரும்பத் திரும்ப படித்துப் பார்க்கையில் போராடுகின்ற குணமே, முனைப்பே, ஜெயிக்கின்ற ஆவலே, உத்வேகமே முருகன் என்று உவமையாக்கப்பட்டிருக்கிறது. கடவுள் சக்தியாக பார்க்கப்பட்டிருக்கிறது. மனித இயல்பில்லாத எதையும் இந்துமதம் கடவுளாக வர்ணித்து விடவில்லை.

மார்க்கண்டேயரோடு வனத்தின் ஒரு பக்கம் பஞ்சபாண்டவர்கள் பல்வேறு விதமான கேள்விகள் கேட்டு தர்மத்தை பற்றிய விளக்கங்களை பெற்றுவரும் அதே சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணரும் உடனிருந்து அவர்களை கேள்விகள் கேட்க உற்சாகப்படுத்தியும், தன் இருப்பால் அந்தச் சபையை சந்தோஷப்படுத்தியும் வந்த நேரத்தில் கிருஷ்ணருடைய மனைவியான சத்யபாமை, பஞ்ச பாண்டவர்களின் மனைவியான திரௌபதியோடு புருஷர்கள் இருந்த இடத்திற்கு அருகிலேயே ஒரு ஆற்றங்கரையோரம் வசதியாக அமர்ந்து ஒருவருக்கொருவர் முகமன் கூறி மெல்லிய நகைச்சுவையை பரிமாறிக் கொண்டார்கள். அப்படிப் பேசுவதின் மூலம் தங்களை இயல்பாக்கிக் கொண்டு, பரஸ்பரம் இருவரும் இரண்டு உயர்குலத்திலிருந்து வந்தவர்கள் என்றாலும், அந்த கம்பீரங்களை முன்னிருத்தாது அரசகுமாரி, பட்டமகிஷி என்றெல்லாம் தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்ளாமல் உளமார்ந்த சிநேகிதிகளாக பேசத் துவங்கினார்கள். தோழிகளாக தங்களை முழுதுமாய் பாவித்துக்கொண்டு ஒருவரை ஒருவர் கேலி செய்தார்கள். யது குலம் பற்றியும், குருகுலம் பற்றியும் உள்ள அதிசயங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டார்கள்.

“கிருஷ்ணை, உன்னிடம் நான் ஒரு கேள்வி கேட்க வேண்டியுள்ளது” என்று நெருங்கி வந்து முகம் முழுவதும் ஆவலாக சத்யபாமை பேச ஆரம்பித்தாள்.

துருபதனின் மகள் திரௌபதி என்றோ, பஞ்ச பாண்டவரின் மனைவி பாஞ்சாலி என்றோ அழைக்காது. திரௌபதியின் வசீகரமான அந்த கருப்பு வர்ணத்தை, அந்த அழகை சிலாகிக்கும் வண்ணம் கூடுதலான உரிமையை சத்யபாமா எடுத்துக் கொண்டு கிருஷ்ணை என்று விளித்து பேச ஆரம்பித்தாள்.

“கட்டுமஸ்தான உடம்பு உடையவர்களும், அபாரமான வீரம் உடையவர்களும், மிகுந்த தன்னம்பிக்கை உடையவர்களும், தங்களைப் பற்றிய சிறப்புகள் முற்றிலும் அறிந்தவர்களுமான உன்னுடைய ஐந்து புருஷர்களை நீ எவ்விதம் கவர்ந்து வைத்திருக்கிறாய்? அவர்கள் உன்மீது இத்தனை பிரியமாக இருப்பதற்கு என்ன காரணம்? உன்னை முன்னிறுத்தாது அவர்கள் பேசுவதே இல்லையே! ஐந்து பேரும் சகலத்திற்கும் உன்னுடைய சம்மதமல்லவா கேட்கிறார்கள். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! இந்த ஐந்து மகாபாரதர்களும் உன்னிடம் இத்தனை தாஸமாக இருப்பதற்கு என்ன காரணம்? இதை எனக்குச் சொல்லித் தருவாயா? இது ஹோமமா, யக்ஞமா, மூலிகையா, வேரா, மந்திரமா அல்லது விரதமா, பூஜையா, எந்த தெய்வம் குறித்த பூஜை. அதைச் சொன்னால் நானும் அந்த விஷயங்களைக் கற்றுக் கொண்டு, என்னுடைய ஸ்ரீகிருஷ்ணரை என்னிடமே இன்னும் நெருக்கமாக இருப்பதற்கு நான் முயற்சி செய்வேன். எனக்கு இந்த உதவியை செய்யக் கூடாதா?” என்று பிரியத்துடனும், ஆவலுடனும் கேட்பாள் சத்யபாமா.

ஸ்ரீகிருஷ்ணருடைய மனைவியா இப்படி கேட்பது, அவருடைய அன்புக்குப் பாத்திரமான சத்யபாமையா இப்படி கேட்பது என்று திகைப்போடு திரௌபதி சத்யபாமாவை ஊடுருவிப் பார்த்தாள்.

“ஒரு நல்ல பத்தினிப் பெண் இப்படி ஒரு கேள்வியை கேட்கக் கூடாது. இது மிகப்பெரிய தவறு. மூலிகையோ, வேரோ, மந்திரமோ, தந்திரமோ, விரதமோ, பூஜையோ, ஹோமமோ, யக்ஞமோ வைத்து ஒரு புருஷனை வசியப்படுத்துவதை நல்ல குலத்தில் பிறந்த எந்தப் பெண்ணும் சிந்திக்க மாட்டாள். அப்படி சிந்திப்பவளாயின்,

ஒரு கடும் விஷம் உள்ள பாம்பு வீட்டிற்குள் வந்ததான ஒரு பயம்தான் ஒரு புருஷனுக்கு அந்த மனைவி மீது ஏற்படும். இவள் மேற்கொண்டு என்ன மந்திரம் செய்வாளோ, எந்த மூலிகை தருவாளோ, எதை தொடச் சொல்வாளோ, எதை விடச் சொல்வாளோ, இன்னும் வேறு என்ன ஹோமங்கள் செய்து என்னை கட்டிப் போடுவாளோ என்ற பயம் இருக்கும். பயம் இருக்கும் இடத்தில் அன்பு வருமா, சத்யபாமை? பயமும், அன்பும் எதிர் எதிர் விஷயங்கள் அல்லவா. இந்த கேள்வியை எப்படி நீ என்னிடம் கேட்கலாம். இருந்தாலும் அன்போடும், ஆவலோடும் நீ கேட்டதால் உனக்கு நான் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்." திரௌபதி திரும்பி அவளைப் பார்த்து உட்கார்ந்து கொண்டாள். அவள் முகம் சுடர் விட்டது.

சத்யபாமைக்கு தன் கேள்வி குறித்து ஒரு கலவரம் ஏற்பட்டாலும் திரௌபதி கோபித்துக் கொள்ளாமல் தனக்கு பதில் சொல்ல முற்பட்டதால் மகிழ்ந்து, தன் முழு பலத்தையும் மனதிலே தேக்கி கேட்கத் துவங்கினாள்.

கேள்வியே தவறு என்று சொல்லிவிட்டால் எப்படி கேட்க வேண்டும் என்று சொல்லித் தருவார்கள் அல்லவா. எது தவறு, எது தவறு அல்லாதது என்றும் சொல்வார்கள், அல்லவா? எனவே ஐந்து புருஷர்களின் மனைவியாக இருக்கின்ற திரௌபதி சொல்வது மிக நிச்சயமாய் உயர்ந்த விஷயமாய் இருக்கக்கூடும். முற்றிலுமாய் கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற அடக்கம் இயல்பாக சத்யபாமைக்குள் வந்தது.

"வேரையும், மூலிகையையும் பயன்படுத்துவதில் பெரிய ஆபத்து இருக்கிறது. உன் புருஷனுக்கு வேண்டாதவன் கபடமாய் வேடம் தரித்து உன்னிடம் இது புருஷனை வசீகரிக்கின்ற வேர். அதற்குண்டான மூலிகை, இப்படி பூஜை செய்து அவன் இரவு தூங்கும் போது இந்த இடத்தில் வைத்துவிடு என்று சொல்ல, நீயும் செய்தாய் என்றால் அந்த வேர் பட்டு அந்த மூலிகை பட்டு அவன் பிராணன் போய் விட்டது என்றால் என்ன செய்வாய்? அப்படியும் இந்த உலகத்தில் கொலைகள் நடந்திருக்கின்றன. இம்மாதிரி மருந்துகள் மூலம் புருஷனை வசப்படுத்துவது என்கிற விஷயத்தை ஒரு குடும்ப ஸ்த்ரீ அறவே தவிர்க்க வேண்டும்.

சத்யபாமா, நான் உத்தமமான பாண்டவர்களிடம் எப்படி நடந்து கொள்கிறேன் என்பதைச் சொல்கிறேன். நான் என்னுடைய அகங்காரத்தையும், காம குரோதத்தையும் அறவே விட்டு விட்டு எப்பொழுதும் முழு கவனத்தோடு பாண்டவர்கள் அனைவருக்கும் ஏன் அவர்களுடைய மற்ற மனைவியருக்கும் சேவை செய்கிறேன். என்னுடைய விருப்பங்கள் என்று எதையும் கொள்ளாது என் மனதை எனக்குள்ளேயே சுருட்டி வைத்துக் கொண்டு சேவையின் விருப்பத்தால் மட்டுமே என் மனதை பதிகளிடம் வைக்கிறேன். அகங்காரத்தை நெல் முனையளவும் நான் என்றும் நெருங்க விடுவதில்லை. என் வாய்மூலம் ஒருகாலும் எந்த தீய விஷயமும் வராது. வரக்கூடாது என்ற பயத்தோடே நான் இருக்கிறேன். அநாவசியமாக, அநாகரீகமாக நான் எங்கும் நிற்பதில்லை. அதீத ஆர்வமுள்ளவளைப்போல நான் எல்லாவற்றையும் பார்ப்பதில்லை. தேவையில்லா இடத்தில் உட்காருவதில்லை. நிற்பதிலும், நடப்பதிலும் கூட அநாகரீகம் ஏற்படக்கூடாது என்ற முழு கவனத்தோடு இருக்கிறேன்.

என்னுடைய புருஷர்கள் அக்னிக்கு நிகரான தேஜஸ்விகள். சந்திரனைப் போல சந்தோஷம் தருபவர்கள். தூய்மையான வார்த்தைகள் உடையவர்கள். இவற்றால் பகைவர்களை அழிக்கும் குணம் இருப்பவர்கள். பராக்கிரமும், பிரபல்யமும் உடையவர்கள். என் மனதை அவர்களுடைய சேவையிலேயே நான் ஈடுபடுத்தியிருக்கிறேன். தேவ, மனித, கந்தர்வ, யட்ச, புருஷர்கள் எவராக இருந்தாலும் எவ்வளவு செல்வந்தர்களாக இருந்தாலும் என் மனம் இந்த பாண்டவர்களைத் தவிர வேறு எங்கும் செல்வதில்லை.

அவர்களை நீராட்டாமல் நான் நீராடுவதில்லை. அவர்கள் படுக்கையில் அயரும் வரை நானும் படுப்பதில்லை. வயலிலிருந்தோ, காட்டிலிருந்தோ, கிராமத்திலிருந்தோ, அரண்மனையிலிருந்தோ என் கணவர்கள் அந்தப்புரம் வரும்போது நான் நின்று கொண்டு அவர்களை வணங்குகிறேன். ஆசனமும், நீரும் கொடுத்து அவர்களை உபசரிக்கிறேன். ருசியான சமையலை என்னுடைய மேற்பார்வையில் தயார் செய்து அவர்களுக்கு பரிமாறுகிறேன். சரியான சமயத்தில் போஜனம் செய்விக்கிறேன்.

அவர்கள் வீட்டில் இல்லாத சமயத்தில் வேலையாட்களை அனுப்பி தானியங்களை சேகரிக்கிறேன். அவற்றின் தரத்தைப் பார்க்கிறேன். வீட்டை துடைத்து, பெருக்கி, மெழுகி, தோரணங்கள் செய்து தொங்க விட்டு எப்பொழுதும் சுத்தமாக அலங்காரமாக வைத்துக் கொள்கிறேன். நான் சோம்பலாக இருப்பதேயில்லை, கணவன் எதிரே அவர் செய்யும் பரிகாசத்திற்கு சிரிப்பதல்லாது, வேறு எப்போதும் எவர் முன்பும் சிரிப்பதில்லை. பெண்களின் தொடர்பிலிருந்து விலகியிருக்கிறேன். நான் அடிக்கடி நின்று வாசலை பார்ப்பதில்லை. எனக்கு வீட்டிற்குள் வேலை பலதும் இருக்கின்றன. வீட்டு தோட்டத்திலும் நான் தனியாக இருப்பதில்லை. ஒன்று புருஷர்களுக்கு நடுவே இருக்கிறேன் அல்லது பணிப் பெண்களுக்கு நடுவே இருந்து வீட்டை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கிறேன். நான் அதிகம் சிரிப்பதில்லை. அதிகம் கோபப்படுவதில்லை. கோபம் வரும் விஷயத்தையே நான் தள்ளி விடுகிறேன்.

புருஷர்கள் இல்லாது தனியாக இருப்பது என்பது எனக்கு பிடிக்காத விஷயமாகும்.

குடும்ப காரியங்களுக்காக நான் வீட்டை விட்டு வெளியேறுகிறபோது மலர்களை அணிந்து கொள்வதில்லை. மாலைகள் சூடுவதில்லை. வாசனை திரவியங்கள் உபயோகப்படுத்துவதில்லை. எவர் கவனத்தையும் அதிகமாக கவராது மெளனமாகவே இருக்க விரும்புகிறேன். கணவனுக்கு பிடிக்காத பொருட்களை நானும் உடனடியாக துறந்து விடுகிறேன். என் மாமியாருடைய சொற்களை நான் மிக முக்கியமாக கருதுகிறேன். அவருக்கு பிரியமாக இருப்பதின் மூலம் என் கணவர்களின் அன்பை சம்பாதிக்கிறேன். நான் இரவும், பகலும் சோம்பலைத் துறந்து பிக்ஷாதானம், பித்ரு சிரார்த்தம், பாக யக்ஞம், மதிப்பிற்குரிய ஆண்களை உபசரித்தல், வினயம், நியமம் போன்ற எனக்குத் தெரிந்த அத்தனை தர்மங்களையும் முனைப்போடு கடைபிடிக்கிறேன்.

சத்யபாமா, என்னுடைய கணவர்கள் மிகவும் நல்லவர்கள். மென்மையான இயல்புடையவர்கள். சத்தியவாதிகள். சத்திய தர்மத்தையே எப்பொழுதும் கடைபிடிப்பவர்கள். ஆனாலும், கோபம் கொண்ட விஷப் பாம்பிடம் மக்கள் பயப்படுவதைப் போல நான் என் கணவர்களிடம் பயந்தபடிதான் அவர்களுக்கு சேவை செய்கிறேன். நல்ல பெண்ணுக்கு கணவனே தெய்வம். கணவனே அவளுக்கு கதி. கணவனைத் தவிர ஒரு பெண்ணுக்கு வேறு எந்த உதவியும் இல்லை என்பதை நான் அறிவேன். இப்படிப்பட்ட நல்லவர்களுக்கு விருப்பமில்லாததை ஒரு பெண் எப்படி செய்ய முடியும்?

நான் காலையிலேயே எழுந்து என் சேவைகள் அத்தனைக்கும் தயாராகி விடுகிறேன். மாமியாருக்கு உண்டான அத்தனை உதவிகளையும் நானே முன்னின்று செய்கிறேன். குந்திதேவியின் போஜனம், வஸ்திரம், ஜலம் முதலிய எல்லாவற்றையும் நானே பார்த்துப் பார்த்து எடுத்து வைக்கிறேன். என் மாமியாரை விட சிறந்தவர் என்று நான் வேறு பெண்களைக் கருதுவதே இல்லை.

முன்பு யுதிஷ்டிரர் அரண்மனையில் இருந்த காலத்தில் ஒரு நாளைக்கு எட்டாயிரம் அதிதிகள் தங்கத் தட்டில் உணவு அருந்திக் கொண்டிருந்தார்கள். ஆயிரக்கணக்கான பணிப்பெண்கள் உணவு தயாரித்தும், பரிமாறியும் அதற்குண்டான வேலைகளை முனைப்போடும் செய்துகொண்டிருந்தார்கள். அதிதிகளை ஆடியும், பாடியும் பல பெண்கள் வரவேற்று உபசரித்திருந்தார்கள். அவர்கள் அத்தனை பேரையும் பெயர் முதற்கொண்டு நான் அறிவேன். அவர்கள் வேலைகளில் சுறுசுறுப்பாக இருக்கிறார்களா, இல்லையா என்பதும் எனக்குத் தெரிந்து விடும். இரண்டு கைகளை தட்டி நான் உத்தரவு இட்டால் அவர்கள் நாலா பக்கமும் சிட்டென பறப்பார்கள். எந்த வேலை முடிந்திருக்கிறது, எந்த வேலை முடியாமல் இருக்கிறது என்பதையும் நான் மனதில் குறித்து வைத்துக் கொள்வேன்.

அது மட்டுமல்ல, அரண்மனையில் வரவும் செலவும் என்னுடைய மேற்பார்வையில்தான் இருந்தது. இன்று என்ன வரவு வந்தது. இன்று என்ன செலவாயிற்று. எந்த பண்டாரத்தில் என்ன பொன், பொருட்கள் மீதம் இருக்கின்றன. மறுபடியும் எப்போது பண்டாரம் நிரப்பப்பட வேண்டும் என்பதெல்லாமும் எனக்குத் தெரியும். குடும்பம் என்கிற விஷயத்தை நான் குறைவர சுமப்பதாலேயே என் புருஷர்கள் ஐந்து பேரும் என்மீது அளவற்ற பிரியத்தோடு இருக்கிறார்கள். வேறு எந்த தந்திரமும் இல்லாமல் நான் உண்மையாகவும், முழு உழைப்போடும் இருப்பதைப் பார்த்து அவர்கள் என்னை இடையறாது போற்றுகிறார்கள்.

பணிப் பெண்ணை ஏவிக் குடிப்பதற்கு நீரைக் கொண்டு வர தருமர் உத்தரவிட்டால் நான் என் பணிப்பெண்ணிற்கு முன்னால் ஓடிப்போய் நீரை எடுத்து வந்து அவரிடம் நீட்டுவேன். 'பணிப் பெண்ணிடம் தானே கேட்டேன், நீயே கொண்டு வந்து விட்டாயா, கொடு' என்று சந்தோஷமாக வாங்கி குடிப்பார். இந்த அன்பை, இந்த சுறுசுறுப்பை அவர் மறக்க மாட்டார். நல்ல புருஷர்கள் இதைக் கொண்டாடுவார்கள். இது தந்திரமல்ல, சத்யபாமா. அந்த வேலையை, அந்த வேலைக்காரியை விட அவருக்கு பத்தினியாக இருக்கின்ற நான் சிறப்பாகச் செய்ய முடியும். ஒரு சிறப்பான சேவை செய்வதற்கு, நான் எப்பொழுதும் தயாராக இருக்கிறேன். அவ்வளவே. பதிபக்தியும், உண்மையான சேவையுமே புருஷனை வசீகரிக்கின்ற அற்புதமான மந்திரம் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. கெட்ட நடத்தை உள்ள பெண்கள் வேறு எந்த உபாயங்களை கடைபிடித்தாலும் அதை நான் காதிலே வாங்கிக் கொள்வதில்லை. அதை செய்ய விரும்புவதில்லை."

சத்யபாமாவிற்கு உடம்பு உதறியது. கை கூப்பினாள். மிகப் பெரிய சக்தியின் முன்பு தான் ஒரு தூசாக உட்கார்ந்திருக்கிறோம் என்பதைப் போல் உணர்ந்தாள்.

"கிருஷ்ணா, நான் உன்னை சரணடைகிறேன். மிகத் தவறான என்னுடைய வினாவிற்காக என்னை மன்னித்து விடு. என் மீது கோபம் கொள்ளாது இருப்பதற்காக நான் உனக்கு நன்றி சொல்கிறேன். உன்னை தோழி என்று அழைக்க விரும்பியதால் அந்த உரிமை எடுத்துக் கொண்டதால் இந்தக் கேள்வியை உன்னிடம் கேட்கத் தோன்றியது. மறுபடியும் கேட்கிறேன். தயவுசெய்து மன்னித்து விடு" என்று சொல்லி, சத்யபாமை திரௌபதியின் முழங்காலை தழுவிக் கொண்டாள்.

அந்த செய்கையிலும் மன்னிப்பு கோறல் இருந்தது.

(தொடரும்)

மகாபாரதம்

63

கோபங்களெல்லாம் சும்மா போகாது!

திரௌபதி, சத்யபாமாவை நோக்கிப் பேசத் துவங்கினாள். "கபடமே இல்லாத ஒரு சத்தியமான வழியை நான் உனக்கு உபதேசித்தேன். தந்திரமுள்ள மனது நிச்சயம் தவறு செய்யும். என்னுடைய சுகங்களைவிட இவருக்குச் சேவை செய்வதே என் வாழ்க்கை என்ற ஒரு உறுதி உனக்கு வந்த விடுமாயின் உன்னை விட்டு உன் பிராணநாதர் ஒரு பொழுதும் பிரிய மாட்டார். ஒரு பார்வையில், ஒரு பேச்சில், ஒரு தொடலில், தன் அன்பு முழுவதையும் உனக்குக் காட்டிவிடுவார்.

மிக உத்தமமான புருஷர்களை நான் கொண்டிருப்பதாலேயே எனக்கு பொறுப்புகள் அதிகமாகியிருக்கின்றன. அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல என்று தெரிந்ததாலேயே மற்ற மனைவியரைப் பற்றி எந்தக் கவலையும்படாது நான் என்னுடைய சேவையின் மூலம் என் இடத்தை உறுதி செய்து கொள்கிறேன். 'துயரத்தின் மூலமே சுகத்தை அடைவது' என்று ஒரு வாக்கியம் உண்டு. 'தியாகத்தின் மூலமே மரியாதையும் கிடைக்கும்' என்ற வாக்கியமும் உண்டு. இதுதான் ஒரு குடும்பப் பெண்ணின் அடிப்படை வாழ்க்கை." திரௌபதி தீர்மானமாகச் சொல்லி முடித்தாள்.

பல நாட்கள் அருகே இருந்து பஞ்சபாண்டவர்களுக்கு தர்மத்தை விதவிதமான கதைகளால் உபதேசித்த மார்க்கண்டேயர் விடைபெற்று கிளம்பியவுடன், பஞ்சபாண்டவர்களின் ஆறுதலுக்காக அங்கு வந்த ஸ்ரீகிருஷ்ணரும் விடைபெற்றார். தேர் ஏறினார். தேரில் ஏறும் முன்பு சத்யபாமா திரௌபதியை அணைத்துக் கொண்டாள். "நீ பேசிய பேச்சுக்கள் அனைத்தும் என் மனதில் கல்வெட்டாக பதிந்து விட்டது. அரண்மனையில் உள்ளது போலவே இந்த இடத்திலும் அந்த கொள்கைகளை நீ கடைப்பிடிக்கிறாய் என்பதை பார்க்க ஆச்சரியத்தில் ஆழ்ந்து போகிறேன். உன்னை மிகப் பெரிய இடத்தில் என் மனதிற்குள் வைத்திருக்கிறேன். உனக்குப் போய் கெடுதல் செய்தார்களே, உன்னைப் போய் தூஷணையாகப் பேசினார்களே, உன்னை அவமரியாதையாக நடத்தினார்களே அவர்களுக்கெல்லாம் நிச்சயம் மரணம் உண்டு. உன் புருஷர்கள் ஜெயிப்பார்கள்.

"இங்கு உட்கார்ந்து அமைதியாக தர்ம நியாயங்கள் எது என்று அலசிக் கொண்டிருந்தாலும், அவர்கள் உள்ளுக்குள் உன்னை அவமதித்த காட்சிகள் ஓடிக்கொண்

பாலகுமாரன்



டுதான் இருக்கின்றன. அவர்கள் வெகு நிச்சயம் முழு ரௌத்திரத்தோடு எழுந்து திருதராஷ்டிரன் பிள்ளைகளை வதம் செய்வார்கள். மறுபடியும் உன்னுடைய அற்புதமான அரண்மனைக்குப் போய் உனது ஆட்சியை தொடரப் போகிறாய் என்பது சத்தியம். இதை பலர் சொல்ல கேட்டிருக்கிறேன். உன்னுடைய தவம் எனக்கு அவர்கள் பேச்சை இன்னும் ஆமோதிக்கத் தோன்றுகிறது.

“கிருஷ்ணர், தருமரின் குமாரன் ப்ரதிவிம்மன், பீமசேனனின் புதல்வனான சுதசோமன், அர்ஜுனனின் குமாரனான சுதகர்மா, நகுலனின் மகன் சதாநீகன், சகாதேவனின் புதல்வன் சுதசேனன் என்னும் உன் வீர புதல்வர்கள் சாஸ்திர வித்தையில் நிபுணராகி விட்டார்கள். துவாரகாபுரியில் சுகமாக வாழ்கின்றனர். அபிமன்யுவின் அரவணைப்பில் அபிமன்யுவைப்போல மிக மகிழ்ச்சியுடன் அங்கு வாழ்கிறார்கள். சுபத்ராதேவி அந்த குழந்தைகளுக்கு மிகப் பெரிய ஆறுதலாக இருக்கிறாள். பலராமர் முதலிய யாதவர்கள் அனைவரும் உன் குழந்தைகளுடைய சுகத்தையும், ரசனைகளையும் மிகுந்த கவனத்தோடு நகர்த்துகின்றார்கள். அவர்கள் கிருஷ்ணருடைய பாதுகாப்பில் மிகுந்த நலத்தோடு இருக்கிறார்கள் என்று உறுதியோடு சொல்லுகிறேன்,” என்று

சொல்லி விட்டு தேரில் ஏற நினைத்து, மறுபடியும் கீழ் இறங்கி திரௌபதியை வலம் வந்து நெற்றி நிலம்பட விழுந்து வணங்கி அவள் கால்களையும், கைகளையும் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டு தேர் ஏறினாள். ஸ்ரீகிருஷ்ணர் தேரில் அமர்ந்தபடி திரௌபதியை நோக்கி புன்னகை செய்தார். தேர் துவாரகாபுரிக்கு கிளம்பியது.

போர் வரக்கூடிய அந்த நன்நாளை எதிர் பார்த்தபடி ஐந்து குழந்தைகளுக்கு தாயான திரௌபதி பெருமூச்சு விட்டாள். தளர்ந்த நடையோடு கணவர்கள் இருக்கும் இடத்திற்கு போனாள். இப்படிப்பட்ட பத்தினிப் பெண்களின் பெருமூச்சுக்கு பலம் உண்டு.

அந்த காலத்தில் வழிப்போக்கர்களாக இருப்பவர்கள்தான் செய்தியை பரிமாறுவதற்கு உதவியாக இருந்தனர். எது எங்கே நடந்தது? யார் எங்கு இருக்கிறார்கள்? என்ற விவரங்களை மற்றவருக்கு பகிர்ந்து சொல்ல அவர்கள் விரும்புவார்கள். மற்றவர்களும் அவர்களை அணுகி அவர்களை சொல்லும்படிக் கேட்பார்கள். குறிப்பாக அந்தணர்களே இம்மாதிரியாக ஊர் ஊராக சுற்றுகின்ற தன்மையை உடையவர்களாக இருந்தார்கள்.

தைத்ய வனத்தில் உள்ள ஒரு குளக்கரையில் வனவாசி அந்தணர்களோடு அமர்ந்து தங்கள் தினசரி கடமைகளை செய்து வந்த பஞ்சபாண்டவர்களை இப்படி வழிப்போக்கனான ஒரு அந்தணன் சந்தித்தார். க்ஷேமநலம் விசாரித்தார். அவர்கள் வெய்யிலாலும், மழையினாலும் எந்த சௌகரியங்களும் இன்றி வசிப்பதாலும் மெலிந்தும், வெளுத்தும் இருப்பதைக் கண்டார். வருத்தப்பட்டார். வருத்தத்தை தெரிவித்துக் கொண்டார். ஆறுதல் கூறினார். அங்கிருந்து கிளம்பி பல இடங்களுக்கும் போய் பிறகு திருதராஷ்டிரன் மாளிகைக்கும் வந்தார். இம்மாதிரி ஊர் ஊராக பயணப்படும் அந்தணர்களுக்கு எல்லா இடங்களிலும் மிகப்பெரிய மரியாதை உண்டு. பல இடங்கள் சுற்றி வருகிறேன் என்று சொன்னதுமே, அரசர் ஏதேனும் விசாரிக்கக் கூடும் என்று மந்திரிகள் அவரை திருதராஷ்டிரனிடம் சேர்ப்பித்தார்கள்.

திருதராஷ்டிரன் எழுந்து நின்று கைகூப்பி வணக்கம் சொல்லி அவர் கைகளை தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு அவருக்கு வேண்டுவன செய்வேன் என்று உறுதியும் அளித்தார். எங்கிருந்து வருகிறீர்கள், என்னவெல்லாம் பார்த்தீர்கள் என்று திருதராஷ்டிரன் கேட்டதும், தான் தைத்யவனத்திற்கு போயிருந்ததையும், அங்கு பஞ்ச பாண்டவர்களை பார்த்ததையும் சொன்னார். திருதராஷ்டிரனுக்கு கலவரமும், சந்தோஷமும் உடனடியாக ஏற்பட்டன. சுத்தமாக அவர்களைப் பற்றி அஸ்தினாபுரம் மறந்து போயிருந்தது. துரியோதனாதிகள் மிகச் சந்தோஷமாக, வெற்றிபெற்ற வீரர்களாக வாழ்ந்து வந்தார்கள். தினந்தோறும் அவர்களின் ஆட்ட பாட்டங்கள் அதிகரித்து வந்தன. அவை திருதராஷ்டிரனுக்கு சொல்லப்பட்டன.

“எப்படி இருக்கிறார்கள் பாண்டவர்கள்? அவர்கள் நலமா?” என்று திருதராஷ்டிரன் விசாரித்தான்.

அவர்கள் மெலிந்திருப்பதையும், துயரமாக இருப்பதையும், அமைதியாக இருப்பதையும், ஆரவாரமின்றி அடக்கமாக இருப்பதையும், இயற்கையினுடைய தன்மையினால் வெளுத்திருப்பதையும், உள்ளுக்குள் எப்போதும் ஏதோ சிந்தனையோடு இருப்பதையும் கவலை பொங்க அந்த அந்தணர் சொல்ல, அந்தக் கவலை திருதராஷ்டிரனுக்கும் ஒட்டிக் கொண்டது.

“எல்லா தவறுக்கும் நானே மூலகாரணம். கண்டிக்க வேண்டிய நேரத்தில் நான் கண்டிக்காததே காரணம். இடதா, வலதா, உட்காருவதா, நிற்பதா என்று எந்நேரமும் சந்தேகத்தில் நான் மூழ்கியிருப்பது காரணம். என்ன விளைவுகள் என்னுடைய செய்கையினால் ஏற்படும் என்று தெரியாமல் அந்த நேரத்தில் என்ன தோன்றியதோ அதை செய்துகொண்டு தெளிவாக சிந்திக்காதவனாய் இருந்து விட்டேன். என் பொருட்டுதான் இத்தனை கஷ்டம் பாண்டவர்களுக்கு. மிகப்பெரிய அரச குடும்பத்தில் பிறந்து செல்வச் செழிப்போடு வாழ்ந்து பல்வேறுவிதமான பராக்கிரமங்களை காட்டி, மிகுந்த கம்பீரத்தோடு வாழ்ந்து வந்த அந்த இளைஞர்கள் எப்படி காட்டு வாசத்தை

ஏற்பார்கள், எவ்விதம் அவர்களால் சமாளிக்க முடியும்? பெரும்படைகளோடுபோய் பத்து நாள் வனபோஜனம் என்றாலே அது சிரமத்திற்குரிய விஷயமாகப் போய் விடும். அப்படியிருக்க, கையிலுள்ள ஆயுதங்களோடு மட்டுமே வனம் போயிருப்பவருக்கு என்ன சுகம் ஏற்படும், எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்?

தருமன் நல்லவன். அவனால் உறங்கக்கூட முடியாது. தன்னால் தானோ என்று பெரும் வேதனையில் என்னைப்போல தவித்துக் கொண்டிருப்பான். தர்ம நியாயத்தில் பற்றுள்ளவன். கோபமில்லை என்று அவன் வெளியே சொன்னாலும் உள்ளுக்குள் துரியோதனன் செய்த அவமானங்களெல்லாம் பொங்கிக்கொண்டுதானே இருக்கும்! அவனும் மனிதன்தானே. அமைதியாக இருக்கின்ற தருமனே கோப்படுகிறான் என்றால், ஆக்ரோஷமாக இருக்கின்ற பீமன் எப்படி இருப்பான். அவன் நெஞ்சுக்குள் நெருப்பு எரியாதா, உடம்பு முழுவதும் தகிக்காதா, எதைப் பார்த்தாலும் வெட்டி வீழ்த்த வேண்டும் என்ற ஆவேசம் இருக்காதா. ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு குத்துச் செடியும் கௌரவர்கள் என்கிற நினைப்பில் அவன் வனத்தையே ஹதம் செய்து கொண்டிருப்பான். எதைச் சொல்லியும் அவனை சமாதானப்படுத்த முடியாது. ஒரு மனிதனை இழிவுபடுத்துவதை விட அவன் மனைவியை இழிவுபடுத்தினால் அந்த மனிதனுக்கு வலி அதிகமாகும் என்று தெரிந்தே சகுனியால் தூண்டப்பட்டு, கர்ணனால் உற்சாகப்படுத்தப்பட்டு துரியோதனன் இதைச் செய்திருக்கிறான். துச்சாதனன் மூலம் இதை நிறைவேற்றியிருக்கிறான். இதை எவர் சகித்துக் கொள்வார். எந்த வீரனால் பொறுத்துக் கொள்ள முடியும்?

அஸ்திரங்களின் மிகப்பெரிய வித்தை செய்கின்றவன் அர்ஜுனன். அவனுக்கு நிகர் வேறு எவருமில்லை. இப்பொழுது தவம் செய்து இன்னும் கூடுதலான அஸ்திரங்கள் வாங்கி விட்டான் என்று கேள்விப்படுகிறேன். அவன் சும்மா விடுவானா. இவர்கள் தலை தரையில் உருளத்தான் போகிறது. யுத்தம் வரத்தான் போகிறது" என்று நொந்த குரலில் பேசினான்.

"நகுல-சகாதேவர் எவ்வளவு இனிமையான, அருமையான குழந்தைகள். அவர்கள் காட்டில் படுத்துக்கொண்டும், மரத்தடியில் உறங்கிக் கொண்டும், மழைக்கும், குளிருக்கும் எங்கேயாவது ஒடுங்கிக் கொண்டும், புழுதி பறக்கும் காட்டினூடே முகத்தை துணியால் பொத்தியபடி நடந்து கொண்டும், அனாதைகள்போல அவர்கள் இருவரும் அலைகின்ற காட்சியை என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. இனிய குரலுடைய அந்த இளைஞர்கள் என்னவெல்லாம் கஷ்டப்படுகிறார்களோ, எந்தவிதமான மனோபாவனையில் இருக்கிறார்களோ, தெரியவில்லை. அவர்களும் கோபமோடுதான் இருப்பார்கள்.

"இந்த கோபங்களெல்லாம் சும்மா போகுமா? அவை உருப்பெறாது போகுமா? ஒரு வடிவம் எடுக்காது போகுமா? யாருடைய பலத்தால் தடுக்க முடியும். துரியோதனன் கர்ணனை நம்பி இருக்கிறான். சகுனியின் தந்திரங்களை நம்பியிருக்கிறான். சூழ்ச்சிசெய்து அனுப்பி விட்டான். சூதாடுவது என்பதே சூழ்ச்சி. அதில் இவர்கள் செய்தது மிகப்பெரிய சூழ்ச்சி. சாதாரணமான ஒரு குடிகாரனை வாள் பயிற்சி செய்த வீரனோடு சண்டை போடுவதுபோல, தந்திரம் நிறைந்த சகுனி, தாயத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்ற சகுனி பெறும் ஆர்வமுள்ள தருமனை வென்று விட்டான். இது இணையான போட்டியே அல்ல, இந்த தேசத்தையும், செல்வத்தையும் சூதின் மூலமாக பறித்துக் கொள்வது! இது ஒரு ஆணுக்கு அழகா? துரியோதனன் செய்தது மிகக் கேவலமான காரியம்.

"அதையெல்லாம்விட மிக மோசமானது திரௌபதியை சபையில் நிறுத்தி வைத்து அவமானப்படுத்தியது. இது பொறுத்துக் கொள்ள முடியாத செயல். அத்தனையையும் பொறுத்துக்கொண்டு நான் முட்டாள்போல உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்ன நடக்கிறது என்று பிறர் சொல்ல, அதற்குப் பிறகு நான் புரிந்து கொள்ள தாமதமாகிறது. சம்பவங்கள் விறுவிறுவென்று நடந்து விடுகின்றன. நான் மூச்சுத் திணறி திண்டாடுகிறேன். நிறுத்து நிறுத்து என்று நான் அலறினேன். தரையில் கிடக்கிற பாஞ்சாலியை தூக்கி நிறுத்தச் சொல்கிறீர்களா என்று துரியோதனன் கபடமாக சிரிப்போடு கேட்கிறான். எனக்கு அவமானமாகி விட்டது. தந்தையே சொல்லி விட்டார் என்று என் கட்டளைபோல அவன் எது வேண்டுமானாலும் செய்வான். பொறாமை, கோபம், தப்பான சிநேகம் இவையெல்லாம் அவனை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றன. அவனுக்கு நல்லது சொல்பவர் எவருமில்லை. சொல்ல வேண்டியவர்கள் மௌனமாக இருக்கிறார்கள். "நீங்கள் கொடுத்த தகவல்களுக்கு நன்றி. எது வேண்டுமானாலும் கேட்டு வாங்கிக்கொண்டு போங்கள். நீங்கள் எது கேட்டாலும் கொடுப்பதற்கு என் அதிகாரிகளுக்கு உத்தரவிடுகிறேன்" என்று சொல்லி, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அன்றைய பகல் உணவு மட்டும் போதும் என்று சொல்லி, சம்பிரதாயமான உணவை சாப்பிட்டு முடித்து கைகழுவி, தாம்பூலம் மட்டும் வாங்கிக்கொண்டு அந்த அந்தணர் விடை பெற்றார். அவர் எங்கும் தங்குபவரல்லர். எல்லா இடத்திற்கும் மனம் போனபடி அலைபவர். அதையே வாழ்க்கையாக வாழ்பவர்.

அந்த அந்தணர் பேசிய பேச்சுகளை உளவாளிகள் மூலம் சகுனி தெரிந்து கொண்டான். அவர் எங்கிருந்து வருகிறார் என்று நேரிடையாக விசாரித்துப் புரிந்து கொண்டான். துரியோதனனின் அரண்மனைக்குப் போனான். துரியோதனனும், கர்ணனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில், இவர் அருகே போய் அமர்ந்துகொண்டு சுற்றியிருந்த வீரர்களை விலகச் சொல்லி, அவர்கள் காதுக்கு மட்டும் கேட்கும்படி ரகசியமாக,



திருதராஷ்டிரன் பேசியதை கொஞ்சம் கூடுதலாகவே துரியோதனனுக்குச் சொன்னான். கர்ணனும், துரியோதனனும் மிக கவனமாக கேட்டுக் கொண்டார்கள்.

“பஞ்ச பாண்டவர்களை வனத்திற்கு துரத்திவிட்டோம். தந்திரமோ, மந்திரமோ அனுப்பி விட்டோம். அவர்கள் அங்கே துன்பப்படுகிறார்கள். இப்போது என்ன செய்யச் சொல்கிறாய்?” துரியோதனன் ஒரு அலுப்போடு கேட்டான்.

“எவ்வளவு சந்தோஷமான செய்தியைச் சொல்கிறேன். ஒன்றும் புரியாமல் இருக்கிறாயே” என்று சகுனி கடிந்து கொண்டான்.

சகுனி எது குறித்துப் பேசுகிறான் என்று கர்ணனுக்கும் விளங்கவில்லை. இரண்டு பேரும் விழி விரித்து சகுனியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“உலகத்தில் மிக சந்தோஷமான விஷயம் எது? மது அருந்துதலா, மங்கையோடு சுகித்தலா, பொன் பொருள் சம்பாதித்தலா, ராஜ்ஜிய பரிபாலனமா? இல்லை, நம்முடைய எதிரி நம்மால் துன்பப்படுகிறான் என்பதை பார்ப்பதைவிட ஆனந்தமான விஷயம் வேறு ஏதேனும் உண்டா? உன் தந்தையினுடைய வஞ்சனையைப் பார். உன் எதிரே அமைதியாக இருந்துவிட்டு இப்பொழுது என்னால் ஏற்பட்டது, இவன் தவறு, அவன் தவறு என்று சகலரையும் குறை சொல்லிக்கொண்டிருக்கிறார். என்னையும்கூட விட்டு வைக்கவில்லை. நான்தான் சகலத்துக்கும் காரணம் என்று தூஷணை செய்கிறார். ஆக, அவர் உனக்கு அருகில் இருக்கும்வரை சந்தோஷம் என்று எதுவும் உனக்கு இல்லை. நீ சந்தோஷப்பட வேண்டுமென்றால்...”

“சந்தோஷப்பட வேண்டுமென்றால்...?” துரியோதனன் நிதானமாகக் கேட்டான்.

“இப்பொழுதே தைத்ய வனம் போய் அந்தக் குளக்கரையில் அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று கண் குளிர பார்த்துவிட்டு வரலாம் அல்லவா.”

கர்ணனுக்கு புரிந்தது. ஆரவாரமாய் கை கொட்டி சிரித்தான். துரியோதனன் இன்னும் திகைப்பில் ஆழ்ந்திருக்க, சகுனி,

“இன்னும் புரியவில்லையா? எத்தனை அழகிய பெண் என்று திரௌபதியை எல்லோரும் வியந்தார்கள் அல்லவா, ஐந்து பேருக்கு மனைவியா, ஐந்து மகாரதிகளுக்கு மனைவியாஎன்றெல்லாம் பொறாமைப்பட்டார்கள் அல்லவா? அந்த திரௌபதி உடம்பெல்லாம் தூசாகவும், தலை சிடுக்கு பிடித்தும், வெயிலில் காய்ந்தும், பனியில் உறைந்தும், எவ்வித அலங்காரமும் இல்லாமல் பிச்சைக்காரிபோல் இருப்பதை நாம் பார்க்க வேண்டாமா? உனக்கு அது சந்தோஷம் தராதா?

அர்ஜுனன் எவ்வளவு பயமுறுத்தினான். சபையில் ஏறி வித்தை காட்டும்போது எத்தனை கலவரம் அடைந்தாய், கர்ணனால் அல்லவா உன் மானம், மரியாதை தப்பியது! குச்சியால் தரையில் கிளறிக்கொண்டு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருக்கிற அர்ஜுனக் கோலத்தை நீ பார்க்க வேண்டாமா? நான்கு சகோதரர்கள் இருப்பதாலேயே மிக கம்பீரமாய், தான் சகலத்துக்கும் தகுதியானவன் என்று தருமர் இருக்கிறாரே, அவரின் கிழிந்த ஆடைகளை பார்க்க வேண்டாமா? இடையறாது உண்டு கொண்டிருக்கும் பீமன் ஒருவேளை சோறு மட்டுமே உண்டு, தன் கொழுப்பை குறைத்துக் கொண்டிருக்கிறானே அந்த ரூபத்தை காண வேண்டாமா? ஏற்கனவே நகுல சகாதேவர் விவரம் இல்லாதவர்கள். இந்த காட்டு வாசம் அவர்களை இன்னும் மனம் பேதலிக்கச் செய்யும். தனக்குத்தானே மூலைக்கு ஒருவராய் நின்று பேசிக்கொண்டிருப்பதை நாம் பார்த்து சிரிக்க வேண்டாமா? எதிரியினுடைய வேதனைதான் ஒரு மன்னனுக்கு ஆனந்தம். வேறு எதுவும் இல்லை. எப்படி துரத்தினோம் என்பதெல்லாம் பேச்சேயில்லை. துரத்தியபிறகு அவர்களுடைய நிலைமை என்ன என்பதுதான் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். எனவே...”

“எனவே...?” என்று கர்ணன் இடைமறிக்க, “நாமும் நம்முடைய பசுக்களை கணக்கிடுவதற்கு தைத்ய வனத்திற்கு போவோம்” என்றான் சகுனி.

“தைத்ய வனத்திலா நம் பசுக்கள் இருக்கின்றன?”

“அட, பசுக்களை அனுப்பிவிட்டு பின்னால் போவோம். பசுக்கள் எங்கே இருக்கிறது என்று கேட்டால், தைத்ய வனம் என்று சொல்வோம். நாம் தைத்ய வனம் நோக்கிப் போய் பசுக்களை எண்ணி வகை வகையாகப் பிரித்து கணக்கு எழுதிக்கொண்டு வருவோம். அரசனுடைய முக்கியமான வேலை பசுக்களை பாதுகாத்தல் அல்லவா?”

“ஆமாம். ஆமாம். மிக முக்கியமான வேலை.”

கர்ணனும், துரியோதனனும் சொல்லி சிரித்தார்கள். சகுனியின் சூட்சமம் புரிந்துகொண்டு சிரித்தார்கள். பசுக்களை எண்ணுவது அல்ல வேலை. பஞ்ச பாண்டவர்களை வேடிக்கை பார்ப்பதுதான் அதிமுக்கியம்.

“ஆனால் இது எளிதல்ல,” துரியோதனன் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். “தைத்ய வனத்திற்கு போக வேண்டும் என்று சொன்னால் என் தகப்பனார் விடவே மாட்டார். அங்குதான் பஞ்ச பாண்டவர்கள் இருக்கிறார்கள். நீ ஏன் போகிறாய் என்று சொல்வார். அந்த அந்தணர் நேராக நம்மிடம் வந்திருந்தால் தைத்ய வனம் என்கிற விஷயத்தை நாம் தந்தையிடம் பேசாமலேயே முடித்திருப்போம். அப்போது தைத்ய வனத்திற்கு போகிறோம் என்று சொன்னால் சரி என்றுதான் சொல்லியிருப்பார். இப்போது நிச்சயம் மறுப்பார். எனவே, இது வேலைக்கு ஆகாது.”

“துரியோதனா, அந்த விஷயத்தை என்னிடம் விடு.”

“ஏன், என்ன செய்யப் போகிறீர்கள் மாமா” என்று துரியோதனன் விசாரித்தான்.

“பசுக்கள் எண்ணுவதற்காக போகிறோம்.

பசுக்கூட்டத்தை நோக்கிப் போகிறோம். அவற்றை வகைவகையாகப் பிரித்து கணக்கு எழுதி வரப் போகிறோம். பிற்பாடு தானம் கொடுக்க வேண்டுமென்றால் எவ்வளவு இருக்கிறது. எவ்வளவு கொடுக்கலாம் என்றெல்லாம் நாம் யோசிக்க வேண்டுமல்லவா? நமக்கு நம் சொத்து மதிப்பு எவ்வளவு என்று தெரிய வேண்டுமல்லவா? எனவே, பசுக்களை எண்ணவும், இடையரை உற்சாகப்படுத்தவும் போவோம்."

"அதைத்தான் கூடாது என்பாரே, தைத்ய வனம் என்று சொல்லப் போகிறோமா?"

"இல்லையே. தைத்ய வனத்திற்கு பசுக்கள் போகும். பசுக்கள் எங்கு இருக்கிறதென்று தெரியாது. போய் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். பசுக்களை எண்ணுவதுதான் வேலை. இதுதான் சரியான பருவம் என்றெல்லாம் சொல்லி நான் கேட்கிறேன். கர்ணனும் கூடவே இருக்கட்டும். நீ வெறுமே வேடிக்கை பார்த்துக் கொண்டிரு. இதில் தலையிடாதே. உன் தகப்பனே உன்னை அங்கே போகச் சொல்லட்டும். பசுக்களை எண்ணி வா என்று கட்டளையிடட்டும். பிறகு தைத்ய வனம் நோக்கி போன பசுக்களை நாம் பின்தொடர்ந்து போய் பசுக்களை எண்ணிவிட்டு வேடிக்கையும் பார்த்துவிட்டு வரலாம்." சகுனி உரத்த குரலில் சொல்ல, துரியோதனன் எழுந்து நின்று அவரை தழுவிக் கொண்டான்.

"என் மூளை வேலை செய்யாதபோதெல்லாம் என் மூளையாக இருந்து நீங்கள் வேலை செய்கிறீர்கள் மாமா" என்று மறுபடியும் தழுவிக் கொண்டான்.

மருமகனை உசுப்பேற்றுவதைவிட வேறு ஒன்றும் தெரியாத அந்த மாமனுக்கு அந்தத் தழுவல் பெரிய பெருமிதத்தை கொடுத்தது.

தாங்களாக இந்தப் பேச்சை கிளறாது வேறு ஒருவர் மூலமாக இந்தப் பேச்சு கிளறப்படட்டும் என்று சகுனி திட்டமிட்டான். ஒரு இடையனை ஏற்பாடு செய்தான்.

"பசுக்கள் பல்கிப் பெருகி விட்டன. காளைக் கன்றுகளுக்கு மூக்கணாங்கயிறு போட வேண்டியிருக்கிறது. கொழுத்த கன்றுகள் அடங்க மறுக்கின்றன. அவற்றை மடக்கி மூக்கணாங்கயிறு போடவும், வகைவகையாகப் பிரித்து வைக்கவும் படை வீரர்களின் துணை வேண்டும். அரசாங்கத்தின் உதவி வேண்டும்," என்றான் இடையன்.

"சரி, கால்நடைகள் எங்கு இருக்கின்றன?" திருதராஷ்டிரன் கவனமாகக் கேட்டார்.

"அவை இஷ்டப்படி நகர்ந்துகொண்டிருக்கின்றன. எந்த அதட்டலுக்கும் அடங்குவதில்லை. மந்தைகளை பிரித்து, முரட்டுக் காளைகளை மூக்கணாங்கயிறு போட்டு அடக்கி முதுகிலே சூடு வைத்து, கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி பல்வேறு இடையர்களுக்கு பிரித்துக் கொடுக்கிறபோது மந்தை ஒருவாறு கட்டுப்படும். அவரவர் பங்கை அவரவரே அடக்கிக் கொள்வார்கள். தயவு செய்து அரசாங்கத்தின் உதவி வேண்டும்" என்று கைகூப்பி அந்த இடைய இளைஞன் சொல்லி வைத்ததுபோல நடித்தான்.



"சரி. இதை அரசாங்கம்தானே செய்ய வேண்டும். அரசகுமாரர்களின் வேலை அல்லவா? துரியோதனா, நீ புறப்படு. பசுக்கள் இருக்கின்ற இடம் விசாரித்துக் கொண்டு போ. அவற்றை மடக்கி நிறுத்தி பெரும் புல்வெளிக்கு கொண்டுவந்து வகைவகையாக பிரிக்கின்ற வேலையைச் செய். மந்தையை எண்ணி ஒரு வருடத்திற்கும் மேல் ஆயிற்று. பெருகித்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, இந்த இடையனுடன் உதவிக்குப் போ" என்று தானாகக் கட்டளையிட்டார்.

கண் பார்வை இல்லாத திருதராஷ்டிரன் முன்பு அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து கண் சிமிட்டி சிரித்துக் கொண்டார்கள்.

"உங்கள் உத்தரவாதலால் நான் போகிறேன்," என்று துரியோதனன் எழுந்தான்.

"ஆனால் தைத்ய வனம் பக்கம் போய்விடாதே. பஞ்ச பாண்டவர்கள் அங்கு இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வந்தது. அவர்களைப்போய் நாம் தொந்தரவு செய்ய வேண்டாம். ஏற்கனவே வருத்தத்தில் இருப்பவர்கள். உங்களைக் கண்டதும் கோபம் ஏற்படலாம். அங்கே சண்டை மூளலாம். எனவே, அவர்களைச் சீண்டாமல் தள்ளியே இரு. அந்தப் பக்கம் போக வேண்டாம்," என்று சொல்ல, "சரி சரி நான் நம் பசுக்களை நோக்கித்தான் போகிறேன்" என்று துரியோதனன் அவர் வார்த்தையை ஏற்றுக்கொண்டான்.

(தொடரும்)

வண்ண ஓவியம்: வெங்கி



மகாபாரதம்

64

அவமானம் பெரிதாகும்போது புத்தியால் எதிர்கொள்ள முடியாது!



"ஆனால் தைத்ய வனம் பக்கம் போய்விடாதே. பஞ்ச பாண்டவர்கள் அங்கு இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வந்தது. அவர்களைப்போய் நாம் தொந்தரவு செய்ய வேண்டாம். ஏற்கனவே வருத்தத்தில் இருப்பவர்கள் உங்களைக் கண்டதும் கோபம் ஏற்படலாம். அங்கே சண்டை மூளலாம். எனவே, அவர்களைச் சீண்டாமல் தள்ளியே இரு. அந்தப் பக்கம் போக வேண்டாம்" என்று திருதராஷ்டிரர் சொல்ல... "சரி.. சரி.. நான் நம் பசுக்களை நோக்கித்தான் போகிறேன்" என்று துரியோதனன் அவர் வார்த்தையை ஏற்றுக்கொண்டான்.

மூவரும் சபையை விட்டு வேகமாக கிளம்பினார்கள். படைகளை ஆயத்தப்படுத்தினார்கள். யானைகளையும், குதிரைகளையும், தேர்களையும் உடன்வரச் சொன்னார்கள். ஒருவேளை யுத்தம் வந்தால் அதனால் வில் ஆட்களையும் அழைத்து வந்தார்கள். பசுக்களை எண்ணுவதற்கு வில் வித்தைக்காரர்களும், போர் வீரர்களும் தேவையே இல்லை. ஆனால் சகுனியின் யோசனைப்படி கர்ணன் உத்தரவு கொடுக்க படை வீரர்கள் திரண்டார்கள்.

"இவர்கள் மட்டும் போதாது. உன்னுடைய அழகிய மனைவிகளையும் அழைத்துப் போக வேண்டும்."

"காட்டிற்கு அவர்கள் எதற்கு?"

"நன்றாக சிங்காரித்து வர வேண்டும்"

"என்ன சொல்கிறீர்கள்?"

"உன்னுடைய அழகான மனைவிகள் தரமாக சிங்காரித்துக் கொண்டு, நல்ல உடை உடுத்திக்கொண்டு பாஞ்சாலியின் முன்பு முன்னும் பின்னும் நடந்தார்களென்றால் அவளுக்கு மனவேதனை அதிகரிக்கும் அல்லவா? ஐயோ, நாம் இப்படி இருக்கிறோமே என்று வருத்தப்பட்டு துடிப்பாள் அல்லவா? ஒளிந்துகொள்ள முயல்வாள் அல்லவா? ஒளிந்துகொள்ள முடியாதபடிக்கு நாலாபுறமும் நாம் பார்த்துக் கொண்டிருந்தால் அவள் இன்னும் தலைகுனிந்து உட்கார்ந்து கொள்வாள் அல்லவா? விக்கிவிக்கி அழக்கூட செய்யலாம் அல்லவா? எனவே, திரௌபதியை அவ்விதம் செய்வதுதான் உனக்கும், எனக்கும் எல்லோருக்கும் சந்தோஷம். என்ன சொல்கிறாய்?"

"நல்ல யோசனை. எனக்குப் பிடித்திருக்கிறது. வெகு நிச்சயம் என் மனைவியரோடு வருகிறேன். அலங்காரம் செய்யக்கூடிய தோழிகளோடு வருகிறேன்."

மிகப்பெரிய படை யானைகளோடும், குதிரைகளோடும், தேர்களோடும், விற்படை வீரர்களோடும், கதாயுதம் ஏந்திய ஆட்களோடும், காலாட்களோடும் கிளம்பியது. பசுக்களை எண்ணுவதற்காக போகவில்லை. ஒரு யுத்தத்திற்காக

பாலகுமாரன்

போகிறார்கள் என்ற ஆவேசம் அந்தக் கூட்டத்தில் இருந்தது. யுத்தம் வந்துவிட்டதா, யுத்தம் வந்துவிட்டதா என்று ஜனங்கள் திகைத்தார்கள். ஆனால், பசுக்களை எண்ணப் போகிறோம் என்ற பதிலை கேட்டு சந்தேகத்துடன் பார்த்தார்கள். அவர்களுக்கு சரியான விடையை அளிக்கக்கூடிய ஆட்கள் அங்கு யாரும் இல்லை.

“வரச் சொல்லியிருக்கிறார்கள். உடன் போய்க் கொண்டிருக்கிறோம். எதற்கென்று எனக்கென்ன தெரியும்” என்று படை வீரர்கள் கை விரித்தார்கள்.

ஜனங்கள் திகைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் படை தைத்ய வனம் நோக்கி கம்பீரமாக நகர்ந்தது.

மாடுகள் எண்ணப்பட்டன. பிரிக்கப்பட்டன. முரட்டுக் கன்றுகள் மூக்கணாங்கயிறு போடப்பட்டன. சில மாடுகளின் கொம்பின் நீளத்தை குறைத்தார்கள். சிலவற்றின் கொம்புகளை சுத்தம் செய்தார்கள். இரும்பினைக் கொண்டு இலக்கம் அச்சிடச் செய்து அதை நெருப்பில் பழுக்க காய்ச்சி மாடுகளின் முதுகில் அழுத்தினார்கள். வலியில் மாடுகள் கத்த, அடித்து விரட்டினார்கள். சிலவற்றை நீரில் அழுத்தி குளிப்பாட்டினார்கள். சிலவற்றிற்கு மருந்து ஊட்டினார்கள். மிக முரடான காளைகளை மரத்தோடு நெருக்கமாக கட்டி வைத்தார்கள். பசுக்களை தடவிக் கொடுத்தார்கள். புல் மட்டும் அல்லாது பெரிய மரங்களில் ஏறி கிளைகளை வெட்டி உண்பதற்கு விதம் விதமான தழைகளைக் கொடுத்தார்கள். வனவாசிகளுக்கு நகரம் போவது எவ்வளவு சந்தோஷமோ அதே போல நகரத்து வாசிகளுக்கு வனம் போவது பெரிய சந்தோஷம்.

துரியோதனனின் மனைவிகள் கூச்சலும், கும்மாளமுமாய் பின்தொடர்ந்தார்கள். எதற்கு புருஷன் நன்கு உடுத்திக் கொள்ளச் சொல்கிறார் என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள். விஷயம் புரிந்தவர்கள் மெளனமாய் இருந்தார்கள். தைத்ய வனத்தில்தான் பஞ்ச பாண்டவர்கள் இருக்கிறார்கள் என்ற செய்தி மெல்ல கசிந்து, போன அனைவருக்கும் தெரிந்திருந்தது.

அது வளர்பிறை காலம். பெளர்ணமி நெருங்கிய நேரம். கந்தர்வர்கள் பூமிக்கு வந்து பூமியிலுள்ள நீர்நிலைகளில் ஜலக்கிரீடை செய்வது வழக்கம். மனிதர்கள் அதிகம் புழங்காத தைத்ய வனத்தில் அந்தக் குளக்கரையில் அவர்கள் இறங்கினார்கள். கந்தர்வர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்து வனவாசி அந்தணர்களும், பஞ்ச பாண்டவர்களும் குளத்திற்கு அருகே போகாமல் விலகி இருந்தார்கள். அந்த மரியாதை கந்தர்வர்களுக்கு பிடித்தது.

தைத்ய வனத்தின் வெளிப்புறத்தில் புல்வெளியில் மாடுகளை எண்ணிக் கொண்டிருந்த துரியோதனனின் மனம் முழுவதும் பஞ்ச பாண்டவர்கள் மீதே இருந்தது. அவன் இன்னும் உள்ளே அடர்த்தியான வனத்திற்குள் நுழைந்து அவர்கள் எங்கே என்று தேடினான். எதிர்படும் அந்தணர்களை விசாரித்தான். அவர்கள் மூலம் தெரிந்துகொண்டு குதிரை ஏறி அந்தக் குளக்கரை நோக்கி நகர்ந்தான்.

கந்தர்வர்கள் தங்கள் பெண்களுடன் கீழே இறங்கினார்கள். பாட்டு பாடினார்கள். நடனம் ஆடினார்கள். தெய்வங்களுக்கு பூஜை செய்தார்கள். நீரில் குதித்து நீந்தினார்கள். பெண்களை அள்ளிக்கொண்டு நீரில் இறங்கினார்கள். அவர்கள் கூச்சலைக் கேட்டு சந்தோஷித்தார்கள்.

நீருக்குக் கீழே அலைகள் திரும்புவதைப் பார்த்து ஏதேனும் பெரிய படை வருகிறது என்று கந்தர்வர்கள் கண்டு கொண்டார்கள். யானைகளும், குதிரைகளும் இறங்குகின்றன என்பதை உணர்ந்தார்கள். தங்கள் படை வீரர்களுக்குச் சொல்ல, அவர்கள் மரத்தின் மீது ஏறி சுற்று முற்றும் பார்த்து, துரியோதனன் தன் குதிரைகளோடு வருவதையும், அவனுடைய படை பின் தொடர்வதையும் கந்தர்வர்களுக்குச் சொன்னார்கள்.

சகுனி குளக்கரையை அடைந்தான். பாண்டவர்களுடைய பர்ணசாலை எதிர்பக்கம் இருந்தது. அது பெரிய குளம். கந்தர்வப் பெண்கள் எதிர்பக்கம் குளித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. கூச்சல் கேட்டது. சகுனி கை தட்டி ஒரு காவலாளியை அழைத்தான். “எங்கள் மன்னர் துரியோதனன் இங்கு வந்து கொண்டிருக்கிறார். இங்கு நீராட விரும்புகின்றார். எனவே, உடனடியாக இந்த இடத்தை விட்டு விலகிப் போங்கள்” என்று கட்டளையிட்டான்.

“இல்லை. இது பெளர்ணமி. எங்களுடைய நேரம். நாங்கள் இங்குதான் இருப்போம்” என்று அந்தக் காவலாளி சொல்ல, “பூமி மனிதர்களுக்குச் சொந்தமானது. கந்தர்வர்களுக்கு இங்கு இடம் இல்லை. எனவே, எதிர்த்துப் பேசி என் கோபத்தைக் கிளறாதே. உடனடியாக இங்கிருந்து விலகி விடு. இது துரியோதனன் பூமி. அவன் பாத்யபட்ட குளம். எனவே நகர்ந்து போ” என்றான் சகுனி.

“இல்லை. இது ஒன்றும் அஸ்தினாபுரத்து எல்லையில் இல்லை. அதைத் தாண்டி வெகு தூரத்திற்கு வந்துவிட்டீர்கள். வனம் எல்லோருக்கும் பொதுவான இடம். அரசனோ, அரசாங்கமோ வேண்டாம் என்று சொல்பவர்கள் இங்கு வந்து தங்கி விடுவார்கள். இது மனிதர்களுக்கான இடம்

என்று எழுதி வைக்கப்படவில்லை. எங்களுக்கும் இதில் பாத்யதை இருக்கிறது. எங்கள் கந்தர்வ தலைவனை தொந்தரவு செய்யாமல் மௌனமாக திரும்பிப் போங்கள்" என்று காவலாளி சொல்ல, அந்தக் காவலாளி அடித்து உதைக்கப்பட்டான்.

கந்தர்வர்கள் வேகமாக கரை ஏறி தங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். காவலாளியிடம் சகுனி பேசிக் கொண்டிருக்கும்போதே கந்தர்வர்களின் தலைவன் சித்ரசேனனுக்கு செய்தி போயிற்று. அவன் படைகளை ஒழுங்கு படுத்தினான். தொலைவிலிருந்து சகுனியைப் பார்த்தான். சகுனியின் கை, கால் அசைவும், நகர்வும் இந்த விஷயம் சாதாரணமாகப் போகாது என்பதை வெளிப்படுத்தின. குளத்தின் நீரைத் தாண்டி சகுனியை அடைந்தான்.



"நீங்கள் யார் என்று அறிவேன். தயவுசெய்து விலகிப் போங்கள். இந்தக் குளத்தின் மீது பாத்யதை எங்களுக்கு இருக்கிறது. இது நாங்கள் உபயோகப் படுத்துகின்ற நேரம். இங்குள்ள வனவாசி அந்தணர்களும் விலகி நகர்ந்து விட்டார்கள். எங்களுக்கு இடைஞ்சல் செய்யாமல் வேறு பக்கம் இருக்கிறார்கள். நீங்கள் வந்து தேவையற்ற தொந்தரவு செய்கிறீர்கள். உங்களுடைய படைபலம் எதுவும் எங்களிடம் செல்லுபடியாகாது. முரட்டுத்தனம் செய்தால் தண்டிக்கப்படுவீர்கள்" என்றான்.

"நீயா, தண்டிப்பதா, கந்தர்வன் என்றால் மனிதருக்கு மேம்பட்டவன் என்று அர்த்தமா, அப்படியென்றால் அதைச் சோதித்துப் பார்த்து விட வேண்டியதுதானே கர்ணா.." என்று குரல் கொடுத்தான் சகுனி.

சகுனியின் உத்தரவுக்கு காத்திருந்தவன் போல தன்னுடைய வில்லை வளைத்து சரமாரியாக அம்பை எதிர்பக்கம் இருக்கின்ற கந்தர்வர்கள் மீது அடித்தான் கர்ணன். திடீரென்று நடந்த தாக்குதலில் நிலை குலைந்து போனார்கள் கந்தர்வர்கள். பல கந்தர்வர்களின் உடம்பு பலமாக அடிப்பட்டது. சிலர் சிரம் தாக்கப்பட்டது. பெண்கள் அலறி அடித்துக்கொண்டு காட்டிற்குள் ஓடினார்கள். அவர்கள் கலவரப்படும்படியாக நெருப்புகளுடன் கூடிய சரங்களை தொடுக்க, அவை காட்டிற்கு அங்கங்கே தீவைத்தன. மேலும் பலத்த அலறல்கள் கேட்டன. துரியோதனாதிகள் சந்தோஷமடைந்தார்கள். கர்ணனுடைய போர்த் திறனை கண்டு வியந்தார்கள்.

கந்தர்வர்களை துரத்தித் துரத்தி அடித்தான் கர்ணன். அருகே வரமுடியாதபடி செய்தான். கர்ணனுடைய போர் திறனைப் பார்த்து துரியோதனனும், துச்சாதனனும், சகுனியும், விகர்ணனும் போரில் இறங்கினார்கள், துரியோதனன் தம்பிமார்கள் அத்தனை பேரும் ஆயுதங்கள் தாங்கி கந்தர்வர்களை துரத்தினார்கள். வெற்றி பெற்று விடுவோம் என்று நினைத்தார்கள்.

ஆனால், சித்ரசேனன் தன் படையை ஒழுங்கு படுத்தினான். திடீர் தாக்குதலால் நிலைகுலைந்து போன படைக்கு நடுவே, "அடித்து நொறுக்குங்கள். கவலைப்படாதீர்கள்" என்று வேகமாக உத்தரவிட்டான். கந்தர்வர்கள் சட்டென்று சுதாரித்துக் கொண்டார்கள். வேகமாகத் தாக்கினார்கள். கர்ணனுடைய தேரை நிறுத்தினார்கள். கொடியை அறுத்தார்கள். குதிரைகளை கொன்றார்கள். தேர்ப்பாகனை பலமாக அடித்துக் கீழே வீழ்த்தினார்கள். அச்சை முறித்தார்கள். மண்டபத்தை துளைத்தார்கள். அவன் கையிலுள்ள தனுசை உடைத்தார்கள். கர்ணன் பயந்துபோய் விகர்ணனின் தேரில் ஏறிக் கொண்டான்.

துரியோதனன் என்ன செய்வதென்று திகைத்து நிற்க, அவனுக்கும் பலமான அடிகள் விழுந்தன. அவனுடைய தேர் மெல்ல மெல்ல உருக்குலைந்தது. நிதானமாக ஒவ்வொரு பகுதியாக கந்தர்வர்கள் சிதைத்தார்கள். தன் மாயசக்தியைப் பிரயோகம் செய்து துரியோதனனை சித்ரசேனன் கட்டினான். அவனுடைய மனைவியர்களை அரச குல பெண்டிர்களை ஒன்றாக்கினான். பசுக்களை ஓட்டிப்போவது போல பெண்களை கந்தர்வர்கள் காட்டில் வேறு பகுதிக்கு விரட்டிக் கொண்டு போனார்கள்.

போரில் ஈடுபட்ட மந்திரிமார்கள் திகைத்தார்கள். எதிர்ப்பக்கம் ஓடிப்போய் பஞ்சபாண்டவர்களை தேடினார்கள். அவர்கள் தங்கள் பர்ணசாலையிலிருந்து விலகியிருந்தபோது அங்கு போய் தருமருடைய காலில் விழுந்தார்கள்.

"கந்தர்வர்கள் துரியோதனனை கட்டி இழுத்துக் கொண்டு போகிறார்கள். அவனுடைய மனைவிமார்களையும், அரசகுலத்து பெண்களையும் தனியாக கால்நடைகளைப்போல ஓட்டிக் கொண்டு போகிறார்கள். அவமானமாக இருக்கிறது. தேவையில்லாமல் சகுனியின் தூண்டுதலால், துரியோதனன் இந்தப் போரை துவங்கி விட்டான். கர்ணனின் பலத்தின் மீது நம்பிக்கை வைத்து விட்டான், கர்ணன் பின்வாங்கி விகர்ணன் தேரில் ஒளிந்து கொண்டிருக்கிறான். எனவே, தோல்வி நிச்சயம் என்று தெரிந்து விட்டது. தயவு செய்து சித்ரசேனனோடு போய் சமாதானம் பேசி துரியோதனனை விடுவித்து வாருங்கள்" என்று மன்றாடினார்கள்.

"ஐந்து பேரையும் அனாதைகளைப்போல அரண்மனையை விட்டு அனுப்பினீர்களே, அப்பொழுது எங்கே போயிற்று உங்கள்

பேச்சுக்களெல்லாம்? அரசகுமாரியை நடுசபையில் தலைமுடியை பிடித்து இழுத்து வந்து புடவையை அவிழ்க்க முயற்சித்தார்களே, அப்பொழுது எங்கே போயிற்று உங்களுடைய வசனங்களெல்லாம்? வாய்மூடி மௌனியாக இருந்த மந்திரிகளெல்லாம் இன்றைக்கு அரசகுமாரிகளை அழைத்துப் போகிறார்கள் என்று கதறுவதேன்? அப்படித்தான் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். பிறர் மனைவியை ஓட்டிப் போவது என்பது எவ்வளவு வேதனையாக இருக்கிறதென்று கர்ணனுக்கும், துரியோதனனுக்கும், சகுனிக்கும் தெரியட்டும் இங்கு எதுவும் செய்வதற்கில்லை. கந்தர்வர்கள் பாடு, உங்கள் பாடு” என்று பீமன் கை விரித்தான்.

தருமர் கடிந்து கொண்டார். “தவறு பீமா. நீ தவறாகப் பேசுகிறாய். ஜாதி, இனம், மொழி இவற்றால்தான் மனிதகுலம் ஒன்று கூடுகிறது. நமக்குள் சண்டையிட்டாலும் அந்த இனஉணர்வு, மொழிஉணர்வு நம்மை ஒன்று சேர வைக்கும். சகோதரர்களுக்குள் சண்டை வருவது இயல்பு. நமக்குள் சண்டை வந்தாலும் நம் குலத்திற்கு ஒரு கேடு என்று வருகிறபோது அதைப் பார்த்துக் கொண்டு வெறுமே இருக்க முடியாது. குருகுலத்து பெண்களை யாரோ அவமதிக்கிறார்கள் என்பதால் நாம் கைகட்டி இருக்க முடியாது. எனக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது. அந்தப் பெண்களுக்காக குருகுலத்தைச் சேர்ந்த நமது சகோதரனுக்காக நாம் சண்டையிடத்தான் வேண்டும். தவறு யார் மீது என்று விசாரிக்கின்ற நேரம் இதுவல்ல. துரியோதனன் அவஸ்தை படட்டும் என்றிருப்பது தருமமல்ல. அவன் நமது சகோதரன். அந்தப் பெண்கள் நம் குலத்துப் பெண்கள். அவர்கள் அவமானப்பட்டால், அது நமக்கு நேர்ந்த அவமானம். எனவே, இவைகளைப் பார்த்துக் கொண்டு பீமனும், அர்ஜுனனும் கைகட்டிக்கொண்டு சும்மா இருந்தார்கள் என்று சொன்னால் அது குருகுலத்திற்கு மறுபடியும் கிடைக்கின்ற ஒரு இழிபெயர். எனவே, சித்ரசேனனை அடக்கி அந்தப் பெண்களை மீட்டு வாருங்கள்” என்று உத்தரவிட்டார்.

தைத்ய வனத்தில் கந்தர்வர்கள் தங்கள் வெற்றியை எளிதாக நிலைநாட்டினார்கள் வெகு குறைவான எண்ணிக்கையிலேயே வந்திருந்த கந்தர்வர்கள். கூட்டத்தினர் தாக்கப்படுகிறார்கள் என்று கேள்விப்பட்டு பல்வேறு திக்கிலிருந்தும் ஆயிரக்கணக்கான கந்தர்வர்கள் வான்வழியே பறந்து வந்தார்கள். தரை இறங்கினார்கள். பெண்களை பயமுறுத்திய கர்ணனை கடுமையாகத் தாக்கினார்கள். மிரள வைத்தார்கள். பழிக்குப் பழி, பல்லுக்குப் பல், அடிக்கு அடி என்கிறதுபோல துரியோதனனின் மனைவிகளையும், மற்றோர் மனைவிகளையும் வளைத்து பசுக்களைப்போல ஓட்டிக் கொண்டு போனார்கள். கந்தர்வர்களால் சூழப்பட்டு நடந்துபோய்க் கொண்டிருந்த அந்த ராணிகளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. துரியோதனன், துச்சாதனன் போன்றோர் பின்கைகள் கட்டப்பட்டு, கழுத்தில் சுருக்கிடப்பட்டு ஆடு, மாடுகளைப்போல் இழுத்துக் கொண்டு போகப் பட்டார்கள். போகும் வழியில் பர்ணசாலைக்கு அருகே பாண்டவர்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து துரியோதனன் அலறினான்.

“தருமரே... தருமரே... காப்பாற்றுங்கள். குருகுலம் மானம் போய்க் கொண்டிருக்கிறது. என்னுடைய மனைவிகளையும், அரசகுமாரிகளையும் கந்தர்வர்கள் இழுத்துக் கொண்டு போகிறார்கள். தயவு செய்து என்னை காப்பாற்றுங்கள். சகோதரா பீமனே... உன்னுடைய பலத்தைக் காட்டி இவர்களிடமிருந்து என்னை விடுவித்துவிடு. அர்ஜுனா, குந்தியின் மைந்தனே என்னைக் காப்பாற்ற ஓடிவா. நகுல, சகாதேவர்களே தயவு செய்து ஆயுதங்கள் எடுத்துக் கொண்டு ஓடிவாருங்கள். என்னை காப்பாற்றுங்கள். நம்முடைய குலத்திற்கு இது இழுக்கு. இதை உங்களால்தான் சரி செய்ய முடியும். தயவு செய்து உதவி செய்யுங்கள் என்று அலறினான்.

பீமன் தடுக்கும் முன்பே தருமர் மிக விரைவாக மேட்டிலிருந்து பாதையில் இறங்கி கந்தர்வர்களை நோக்கி நடந்தார். யுதிஷ்டிரர் வருவதைப் பார்த்து கந்தர்வ காவலாளிகள் விலகிக் கொள்ள, அவர் சித்ரசேனனை நோக்கி நடந்தார். “சற்று நில். இவன் யார் என்று தெரியுமா? இவன் என் சகோதரன் துரியோதனன். இவனை அழைத்துக் கொண்டு எங்கே போகிறாய்? தயவு செய்து நில்” என்று மிருதுவாகப் பேசினார். சித்ரசேனன் நின்றான்.

“நீங்களா, வணக்கம். இங்குதான்

இருக்கிறீர்களா, கேள்விப்பட்டேன். ஆயினும் இதுவரை உங்களை நான் சந்தித்ததில்லை. மறுபடியும் வணக்கம். இவன் துரியோதனன். உங்கள் சகோதரன் என்று ஊருக்கே தெரியும். ஆனால், இவன் என்ன செய்தானென்று தெரியுமா? எங்கள் பெண்களை பயமுறுத்தினான். வளைத்து இழுத்துக் கொண்டு போக முயற்சித்தான். பெரிய சூராதி சூரன் கர்ணன் இருக்கின்ற தைரியத்தில் அட்டகாசமாக எங்கள் மீது தாக்குதல் நடத்தினான். பலபேரை காயப்படுத்தினான். பௌர்ணமியில் இந்த குளத்தில் நீராடுவது எங்களுடைய வழக்கம். நீங்கள் அனைவரும் விலகியிருந்த போது, வனவாசி அந்தணர்கள் அத்தனைபேரும் தள்ளியிருந்தபோது இவர்கள் மட்டும் ஏன் இப்படி அட்டகாசம் செய்தார்கள்? இவர்கள் நல்லவர்கள் இல்லை. உனக்குக் கெடுதல் செய்தவர்கள். இதுவும் எனக்குத் தெரியும். எதற்காக பரிந்து வருகிறீர்கள்?”

‘‘என்ன சொன்னாலும் இவன் என் சகோதரன், என் சகோதரனை ஒருவன் அடித்து இழுத்துப் போவதை நான் பொறுத்துக் கொண்டு பார்த்திருக்கமாட்டேன். தயவு செய்து விட்டுவிடு.”

“விடாவிட்டால்..?”

“போர் நடக்கும். எப்படியாவது நாங்கள் விடுதலை செய்து கொண்டு போவோம்” என்று தருமர் சொல்ல, “நான் அதற்கு சித்தமாக இருக்கிறேன்,” என்று சித்ரசேனன் கைகூப்பினான்.

துரியோதனனுக்கு அந்த நேரம், தான் பாண்டவர்களுக்குச் செய்த கெடுதல்களெல்லாம் சுத்தமாக மறந்து போயிற்று. குருகுலத்தின் மானமும், அதைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயமும் தருமருக்கு இருப்பதாக திடமாக நம்பினான். தருமர் செய்வார் என்றும் நம்பிக்கை வைத்தான். அந்த நேரம் கர்ணனின் மீது ஒரு கசப்பும், அர்ஜுனன் மீது ஒரு பிரியமும் அவனுக்கு ஏற்பட்டன.

தருமர் அந்த கூட்டத்திலிருந்து விலகினார். அர்ஜுனனையும், பீமனையும் சைகை செய்து துரியோதனனை மீட்கும்படி உத்தரவிட்டார். அர்ஜுனன் நாண் ஏற்றி ரீங்காரம் செய்தான். அது மிகப் பெரிய அதிர்ச்சியை கந்தர்வர்களுக்கு உண்டாக்கிற்று. பெரிதாய் ஒரு கொத்து அம்பு எடுத்து சரமழை பொழிந்தான். அழுத்தமாய் நின்றிருந்த கந்தர்வக் கூட்டம் குலைந்து நாலு பக்கமும் ஓடிற்று. கந்தர்வர்கள் ஒன்று சேருவதற்குள் மறுபடியும் இன்னொரு சரமழை அனுப்ப அவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார்கள். இந்த நேரம் பீமன் உள்ளிறங்கி முன் பக்கத்துப் படையை தாக்கத் துவங்க, அவர்கள் இடம் இரண்டாக பிளவுபட்டது. வெகுநேராக துரியோதனிடம் பீமன் போய் நிற்க முடிந்தது. கட்டப்பட்ட கைகளில் பெரிய உலக்கையை கொடுத்து அப்படியே தூக்கி அவனை வேறு பக்கம் பீமன் இறக்கினான். தொடக்கூடாத ஒரு விஷயத்தை குச்சியால் அப்புறப்படுத்துவது போல அது இருந்தது. ஆனால், துரியோதனன் கையெடுத்து பலமுறை பீமனை கும்பிட்டான். அவன் கட்டு அவிழ்க்கப்படாமலேயே இருந்தது.

மேலும், கந்தர்வர்கள் வந்து சேர்ந்தார்கள். வெகுவிரைவாக அணிவகுத்தார்கள். திறமையாக சண்டையிடுகின்ற அர்ஜுனனை வியப்போடு பார்த்தார்கள். ஒரு யுத்தத்திற்கு தேவையான கோபம் அவர்களிடையே இல்லை. துரியோதனின் மீதும், கர்ணனின் மீதும் இருந்த கடுப்பு அர்ஜுனனையும், பீமனையும் பார்க்கும் போது அவர்களுக்கு எழாமல் போயிற்று. கந்தர்வர்கள் அடி தாங்காமல் கோபமடைந்து தங்கள் வித்தைகளை காண்பிக்க ஆரம்பித்தார்கள். மறைந்திருந்து சரமழை பொழிந்தார்கள். அவர்களையெல்லாம் அர்ஜுனன் தடுத்து நிறுத்தினான். வானத்தில் ஏறி நின்ற கந்தர்வர்களை அம்பின் மூலம் இரும்பு வலை ஏற்படுத்தி அவர்களை அப்படியே தாக்கி கீழே விழச் செய்தான். கண்ணுக்குத் தெரியாத அந்த வளையத்தில் சிக்கி கந்தர்வர்கள் அவஸ்தைப்பட்டார்கள். சுற்றியுள்ளவர்களைஅடித்து வீழ்த்தினான். நல்ல உயரத்தில் இருந்து அவர்கள் வலையில் உள்ளவர்கள் மீது வேகமாக விழுந்தார்கள். அடிபட்டு அலறினார்கள். அர்ஜுனனை எதிர்க்க முடியாது என்று தெரிந்து பின்வாங்கினார்கள்.

ராணிகளையும், கௌரவர்களின் மனைவிகளையும் சுற்றியிருந்த காவல் படையை பீமன் அடித்து விரட்டினான். அந்தப் பெண்கள் ஓடோடி பஞ்சபாண்டவர்கள் பக்கம் வந்து நின்று கொண்டார்கள். கந்தர்வர்கள் படை வெகுவேகமாக பின்னடைந்தது. இனியும் எதிர்த்தால் பெரும் மரணம் ஏற்படும் என்று சித்ரசேனனுக்கு புரிந்து போயிற்று. அர்ஜுனன் மீது கோபம் இல்லாததும், அர்ஜுனன் மிக அற்புதமான ஒரு வில்லாளி என்பதும் அவன் புரிந்து கொண்டான். தருமரை நோக்கி யுத்தத்தை நிறுத்தும்படி சைகை செய்தான்.

(தொடரும்)

]



மகாபாரதம்

65

தெளிவான புத்தியுள்ளவன் அவமானப்பட்டால் ஆபத்து!

தருமர் கைகாட்டினார். அர்ஜுனனும், பீமனும் தாக்குதலை நிறுத்தினார்கள். இப்பொழுது சித்ரசேனன் தேரிலிருந்து கீழ் இறங்கி கை கூப்பியபடியே தருமரை நோக்கி வந்தான்.

“உங்கள் மீது கோபமில்லை. அதனால் எங்களால் ஜெயிக்க முடியவில்லை. கோபம் இருப்பினும் அர்ஜுனனை ஜெயிக்க யாராலும் முடியாது. எங்களுடைய பெண்களை பயமுறுத்தியதால், துன்புறுத்தியதால் நான் கௌரவர் பெண்களை பிடித்தேனே தவிர, எனக்கு அவர்கள் மீதும் எந்த வருத்தமும் இல்லை. கர்ணனை நம்பி துரியோதனன் என்ற முட்டாள் செய்த காரியத்திற்கு இத்தனை கலவரம் ஏற்பட்டுவிட்டது. உங்களோடு சண்டை செய்ய நேரிட்டது. நீங்கள் தலையிடாவிட்டால் துரியோதனனை எங்கள் இடத்திற்கு அழைத்துப் போய் சிதைத்து கொன்றிருப்பேன். உங்கள் பிரச்னைகள் தீர்ந்து போயிருக்கும். எனினும் இவன் உங்கள் கையால் கொல்ல வேண்டும் என்று விதி இருப்பதால் நான் விடுவிக்கறேன். எங்களோடு போர் புரிய வேண்டாம்” என்று சொல்ல, அர்ஜுனனும், பீமனும் அந்த கந்தர்வ அரசனை நோக்கி வணங்கினார்கள்.

அந்த கந்தர்வப் படை அர்ஜுனனுடைய சூரத்தனத்தை சொல்லிக் கொண்டே அவர்கள் பெண்டிருடன் வானத்தில் ஏறி வடக்கு நோக்கி போயிற்று.

தருமபுத்திரர். எப்படி ஜெயித்தேன் பார்த்தாயா என்று காண்பிக்கிற நியாயம். எங்களை உன்னால் ஜெயிக்க முடியுமா என்று எடுத்துகாட்ட வேண்டிய சமயம். ஆனால், எதுவும் தருமரால் சொல்லப்படவில்லை. கட்டுகளை விடுவித்து உனக்கு ஒன்றுமில்லை நீ போய் வா என்று ஒரு அந்நிய பாவத்தோடு அவனை அவன் இருப்பிடத்திற்கு அனுப்பினார்.

துரியோதனனும் அதற்கு மேல் நன்றி சொல்லத் தோன்றாதவனாய் வெகு விரைவாக தன் பக்கத்தில் கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டான். தேரில் ஏறி பலமுறை தலையில் அடித்துக் கொண்டான்.

‘எவ்வளவு கேவலமாயிற்று. கர்ணன் காப்பாற்றுவான் என்று நினைத்தேன். கர்ணன் புறமுதுகு இட்டல்லவா ஓடிப் போனான். கர்ணனால் ஜெயிக்க முடியவில்லை. நானல்லவா உதை வாங்கினேன். அத்தனை பேரையும் சங்கடத்தில் ஆழ்த்திவிட்டு கர்ணன் மட்டும் நகர்ந்து போனது எவ்வளவு அசிங்கமாக இருந்தது. கர்ணனுடைய சூரத்தனத்தை நம்பித்தான் நான்



யுத்தத்தில் இறங்கினேன். ஆனால் அர்ஜுனனுக்கு முன்னால் கர்ணன் எதுவும் இல்லை என்று தெரிந்து போயிற்று' என்று நொந்து கொண்டான். தனக்குள்ளேயே பேசிக் கொண்டான். அவன் முகபாவம் அவன் மனநிலையை எடுத்துக் காட்டியது.

கர்ணன் அருகே வந்து உட்கார்ந்தான். துரியோதனன் முகம் திருப்பிக் கொண்டான்.

"என் மீது கோபம் வேண்டாம். யுத்தம் வரும் என்று நான் இங்கு நினைக்கவில்லை. யுத்தத்திற்காக என்னை அழைத்துப் போகவில்லை. ஏதோ வேடிக்கை பார்த்துவிட்டு திரும்பிவிடுவோம் என்றுதான் சொன்னாய். நாம் ஒரு யுத்தத்திற்கு போக வேண்டுமென்றால் அதற்கான யுக்திகள் இருக்க வேண்டாமா. அதற்கான ஹோமங்களையும், யாகங்களையும், விரதங்களையும் கைகொள்ள வேண்டாமா. அதற்கான மந்திரங்களை நான் உச்சரிக்க வேண்டாமா. எந்தக் காப்பும் இன்றி என்னை திடீரென்று ஒரு யுத்தத்தில் ஈடுபடுத்திவிட்டு நான் காப்பாற்றவில்லை என்று கவலைப்பட்டால் என்ன செய்வது. என்னுடைய வீரத்தின் மீது உனக்கு எப்படி நம்பிக்கை இல்லாமல் போயிற்று. அர்ஜுனனும், பீமனும் எப்பொழுதும் யுத்தத்திற்கு தயாராக இருக்கிறார்கள். அதனால் அவர்கள் சூரத்தனத்தை வெகு எளிதாக காட்டினார்கள். எனக்கு அப்படி சொல்லப்படவில்லை. தவறு உன்னுடையது. யுத்தம் நடக்கும் என்று நீ சொல்லியிருந்தால் நான் காபந்தோடு வந்திருப்பேன். பல அஸ்திரங்களோடு வந்திருப்பேன். கோபத்தைவிடு. மிகவும் சோர்ந்திருக்கிறாய். கொஞ்சம் உணவு எடுத்துக் கொள்" என்று வற்புறுத்தினான்.

"இல்லை. நான் பட்டினி கிடந்து சாகப் போகிறேன். இந்தத் தோல்வி என்னை அவமானமடையச் செய்துவிட்டது. நான் உன்னால் காப்பாற்றப்படவில்லை. என் எதிரி அர்ஜுனனால் காப்பாற்றப்பட்டிருக்கிறேன். என் மிகப்பெரிய எதிரியான பீமனுடைய ஆதரவால் காப்பாற்றப்பட்டிருக்கிறேன். இது என்னை நோகடிக்கிறது. வேதனைச் செய்கிறது. நான் அரசனாக இருக்க லாயக்கில்லையோ என்று தோன்றுகிறது. நான் எதற்கு உயிர்வாழ்வது. நான் உணவு எதுவும் உண்ணமாட்டேன். பட்டினி இருந்து சாகப் போகிறேன்" என்று உரத்த குரலில் சொல்ல, கர்ணன் பல்வேறு விதமாக தன்னுடை இயலாமையைச் சொன்னான். பலரும் அதை ஆமோதித்தார்கள்.

துரியோதனன் ஒருவாறு மனம் தேறினான். சோர்வோடு அஸ்தினாபுரம் நோக்கி பயணப்பட்டான்.

ஆனால், அவனுடைய மனம் தோற்றுப்போன உளைச்சலிலேயே இருந்தது. அர்ஜுனனுடைய சாகசங்கள் அவன் கண்முன்னே இருந்தன. கர்ணனால் தன்னை காப்பாற்ற முடியவில்லை என்ற வேதனையும் அவனை அரித்துக் கொண்டிருந்தது. அலங்கரித்து வந்திருந்த தன்னுடைய மனைவியர் முன்பு வெகு தீனமாக பஞ்ச பாண்டவர்களை நோக்கி அலறியது ஞாபகம் வந்தது.

'இந்த துரியோதனன் என்கிற துராத்மா உனக்கு கெடுதல் செய்திருக்கிறானே அவனை விடுவிப்பதற்காக ஏன் வந்திருக்கிறாய் அர்ஜுனா என்று சித்ரசேனன் கேட்டதும், ஆயிரம் எங்களுக்குள் பகை இருந்தாலும் அவன் எங்கள் சகோதரன். அந்தப் பெண்கள் எங்கள் குலத்துப் பெண்கள். எங்கள் குலத்துப் பெண்களுக்கு இழுக்கு ஏற்படும்படியாகவும், எங்கள் சகோதரனுக்கு அவமானம் நேரும்படியாகவும் உள்ள ஒரு விஷயத்தை பார்த்துக் கொண்டு நான் பொறுமையாக இருக்கமாட்டேன். நீ என்ன செய்ய நினைத்துக் கொண்டிருக்கிறாய் துரியோதனனை' என்று பதிலுக்கு சிநேகமாய் கேட்க, சித்ரகுப்தன், 'இந்திரனிடம் கொண்டுபோய் இவனை சமர்ப்பிக்கப் போகிறேன்' என்று சொல்ல, அப்படி ஏதும் செய்ய வேண்டாம். அவனை விடுவித்துவிடு. உனக்கு நான் நண்பனாக இருக்கிறேன். நமது நட்பு தொடரட்டும். உனக்குத் தேவையான நேரத்தில் உதவி செய்கிறேன் என்று சமரசம் சொல்ல,



பாலகுமாரன்

அந்த கந்தர்வர்கள் அதற்கு சம்மதம் தெரிவிக்க, சித்ரசேனன் விடுவிக்க, அர்ஜுனனின் துணையோடு வெளியே வந்து தருமபுத்திரரை வணங்கி, அங்கிருந்து மனைவியரோடு தன் பக்கம் வந்து சேர்ந்ததை நினைக்க நினைக்க குமுறலாய் தான் இருந்தது.

உபவாசம் இருந்து உயிர்துறக்கப் போவதாக துரியோதனன் திரும்பவும் சொன்னான். சகுனியும், கர்ணனும், துச்சாதனனும் கவலைப்பட்டார்கள். அவனைப் பலவிதமாக தேற்ற முயற்சி செய்தார்கள்.

“ஒரு தேசத்தில் குடிமகனுக்கு அவனுடைய அரசனுக்கு ஊழியம் செய்வதற்கு எல்லாவிதமான உரிமையும் இருக்கிறது. அது அவனுடைய கடமையும்கூட. அப்படித்தான் இந்த தேசத்தில் ஒரு பகுதியான வனத்தில் வசிக்கின்ற பாண்டவர்கள் உனக்கு உதவி செய்தார்கள். அவர்கள் உனக்கு அடிமைப்பட்டவர்கள். அவர்களுடைய ரத்தினங்களையும், அவர்களுடைய ஆஸ்தியையும் நீ அனுபவிக்கிறாய். எனவே, உன்னுடைய ஊழியர்கள் உனக்குச் செய்த உதவிக்காக நீ எப்படி மனம் மறுகுவாய் என்று தெரியவில்லை” என்று கர்ணன் சொன்னான்.

“உங்களால் செய்ய முடியாததை அவன் செய்திருக்கிறானே என்பதை நினைக்கத்தான் எனக்கு ஆத்திரம் அதிகமாகிறது. துச்சாதனா, நீ இங்கே வா. நான் ராஜ்ஜியத்தை துறக்க நினைக்கிறேன். இந்த அரச பதவி எனக்கு வேண்டாம். இந்த அவமானத்தோடு என்னால் அரசனாக அஸ்தினாபுரத்தில் நுழைய முடியாது. நீ அரசாட்சியை ஏற்றுக் கொள். மன்னனாக மாறிவிடு. குருவையும், மற்றவர்களையும் மதித்துப் போற்று. அற்புதமான தானியங்கள் விளையும் அந்த தேசத்தை சுபிட்சமாக ஆண்டு வா. நான் இங்கு அமைதியாக உயிர் துறக்க விரும்புகின்றேன்” என்று மரவுரி தரித்து, தன்னை சுத்தப்படுத்திக் கொண்டு உபவாசத்தில் ஆழ்ந்தான்.

துச்சாதனனுக்கு அழுகை பொங்கி வந்தது. தன் அண்ணனுடைய முடிவை நினைத்து வாய்விட்டு அலறினான். அவன் பாதங்களை பிடித்துக் கொண்டான். “எனக்கு அரச பதவி வேண்டாம். இன்னும் நூறு வருடங்கள் ஆனாலும், நீங்கள் தான் அரசன். உங்களைத் தவிர வேறு யாரும் அஸ்தினாபுரத்தை ஆட்சி செய்ய முடியாது. ஒருபொழுதும் நான் அங்கு மன்னனாக இருக்க மாட்டேன். நீங்கள் இல்லாமல் நான் உயிர் வாழ மாட்டேன். நீங்கள் தயவு செய்து உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு அங்கே வந்து விடுங்கள்” என்று கெஞ்சினான்.

அண்ணனும், தம்பியும் கட்டிக்கொண்டு அழுதார்கள். தெளிவான புத்தியுள்ளவன் அவமானப்படுகிறபோது அந்த அவமானம் மிகப் பெரிதாகி அவனையே கபளீகரம் செய்யும். புத்தியால் அவனால் எதிர் கொள்ள முடியாது. அவமானத்தை பிரித்து ஆராய முடியாது. சரியான விடை தேட இயலாது. எனவே, ஒரு அவலமான சூழ்நிலைதான் அங்கு உருவாயிற்று.

சகுனியும், கர்ணனும் கவலையடைந்தார்கள். எப்படித் தேற்றுவது என்று நினைத்தார்கள். அப்போது பாதாளத்தில் இருக்கின்ற தைத்ய தானவர்கள் என்கிற பைசாசங்களைப் போன்றவர்கள் துரியோதனன் உபவாசம் இருந்து உயிர் துறந்தால் ஒருபொழுதும் சண்டை ஏற்படாது. போர் நடக்காது. போர் நடக்காவிட்டால் நமக்கு அதனால் பெரிய நஷ்டம் உண்டாகும். கூட்டம் கூட்டமாக மனிதர்கள் இறந்தால்தான் நமக்கு பலம் பெருகும். அந்தப் பலத்தை நாம் இழந்துவிடக் கூடாது. எனவே, போர் மூள்வதற்குண்டான யோசனையை நாம் செய்ய வேண்டும். துரியோதனனை உற்சாகப்படுத்த வேண்டும் என்று சொல்லி, அதர்வண வேதத்தில் சொல்லியிருக்கின்ற மந்திரத்தைப் பிரயோகம் செய்து ஒரு ஏவல் பிசாசை உண்டுபண்ணி அந்த ஏவல் பிசாசை துரியோதனனை அங்கிருந்து எடுத்து வரும்படி ஏற்பாடு செய்தார்கள்.

பாதாள லோகத்தில் ஒரு நல்ல சபையில் துரியோதனன் உட்கார வைக்கப்பட்டான்.

“எதற்காக பயப்படுகிறீர்கள். நாங்களெல்லாம் பஞ்ச பாண்டவர்களை எதிர்க்கிறவர்கள். பழி வாங்க துடிப்பவர்கள். இறப்புக்குப் பிறகும் இன்னும் உயிரோடு இருந்து அவர்களை வெற்றி கொள்ளும் வெஞ்சினத்தோடு அலைகிறவர்கள். கிருஷ்ணனால் கொல்லப்பட்டவர்கள் பலபேர் இங்கு இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் கிருஷ்ணன் மீதும், அர்ஜுனன் மீதும் கோபம் கொண்டிருக்கிறார்கள். எனவே, உன் பக்கம் இவ்வளவு பெரிய பலத்தை வைத்துக் கொண்டு எதற்காக நீ தோற்றுவிடுவோமோ என்று எண்ணுகிறாய். ஒரு சிறிய நஷ்டத்திற்காக ஏன் பெரிதாக புலம்புகிறாய்” என்று தேற்ற ஆரம்பித்தார்கள்.

“உன்னுடைய நாபிக்கு மேல் உடம்பு வஜ்ஜிரத்தால் ஆனது. கதையாலோ, அம்பாலோ, ஈட்டியாலோ அதைப் பிளக்க முடியாது. உன்னுடைய நாபிக்கு கீழே உள்ள உடம்பு மலர்களால் ஆனது. அது பெண்களை கவர்வதற்கான உண்டான அம்சம். ஒரு திவ்ய புருஷனாக நீ பிரம்மனால் உருவாக்கப்பட்டிருக்கிறாய். இந்தப் போரில் நீ ஜெயிப்பது உறுதி. எங்களால் என்ன உதவி செய்ய முடியும் என்று நினைக்கிறாயா. உன்னுடைய வீரர்கள் பலபேர் உடம்பில் நாங்கள் புகுந்து கொள்வோம். அவர்கள் சக்தியைவிட அதிகமான சக்தியை அவர்கள் போரின்போது பிரயோகம் செய்வார்கள்.

கிருஷ்ணனால் கொல்லப்பட்ட நரகாசுரனின் ஆன்மா கர்ணனுடைய உடம்பில் புகுந்து கொள்ளப் போகிறது. கர்ணன் மிக உக்கிரமாக போர் செய்யப் போகிறான். அர்ஜுனனை அழிக்கப் போகிறான். இதற்காகவெல்லாம் நாங்கள் சபதம் செய்திருக்கிறோம். நீ மட்டுமே போர் செய்வதாக நினைக்காதே. உங்கள் பக்கம் நாங்கள் இருக்கிறோம்" என்று பாதாளத்தில் வசிக்கின்ற அந்த தைத்யதானவர்கள் துரியோதனனுக்கு உற்சாகமூட்டினார்கள்.

அந்த ஏவல் பிசாசை மறுபடியும் கொண்டு போய் துரியோதனனை அவன் இடத்தில் விட்டு விடும்படியாகச் சொன்னார்கள். இவை அனைத்தும் கனவில் கண்டதாக துரியோதனன் எண்ணினான். மறுபடியும் யோசித்துப் பார்த்தான். எழுந்து நின்றான். உபவாசத்தை துறந்தான். நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். கர்ணன் தன்னுடைய அமானுஷ்ய சக்தியால் அர்ஜுனனை கொல்லுவான் என்ற நினைப்போடு அவன் தொடர்ந்து அஸ்தினாபுரம் நோக்கிப் பயணப்பட்டான். தோல்வியில் புலம்புகிறவனுக்கு மறுபடி வெற்றி பெறுவோம் என்று ஏதோ ஒரு நம்பிக்கை தேவைப்படுகிறது. சக மனிதர்களால் கிடைத்த நம்பிக்கை போதாது என்றால் சூட்சும ரூபமாகவும், ஆழ்மன சிந்தனையாகவும் இருக்கின்ற விஷயங்கள் அவனுக்கு உற்சாகம் கொடுப்பின் அதனால் அவன் மறுபடியும் போர் செய்ய, அவமானத்தை நீக்க இறங்கிவிடுவான் என்பது ஒரு உண்மை. அஸ்தினாபுரம் வந்ததும் துரியோதனனை பீஷ்மர் அழைத்தார். சகுனியுடனும், கர்ணனுடனும், துச்சாதனனுடனும் அவர் அரண்மனைக்கு துரியோதனன் போனான்.

“நடந்தது அனைத்தையும் கேள்விப்பட்டேன். பாண்டவர்களை உன்னை காப்பாற்றிக் கொடுக்கும்படி நேர்ந்துவிட்டதே. உனக்கு ஏதேனும் புரிகிறதா. கர்ணனால் ஜெயிக்க முடியாத கந்தர்வர்களை வெகு எளிதில் அர்ஜுனனும், பீமனும் ஜெயித்து கொடுத்திருக்கிறார்களென்றால் கர்ணனுக்கு போதவில்லை என்றல்லவா அர்த்தம்.

என்னுடைய அபிப்ராயப்படி அர்ஜுனனுக்கு முன்னால் பதினாறில் ஒரு பங்குகூட கர்ணன் வலிவுடையவன் அல்ல. அவனால், அர்ஜுனனை ஜெயிக்க முடியாது. இவனை நம்பிக்கொண்டா யுத்தத்தில் இறங்குகிறாய். வெறும் வாய் பேச்சு. வெறும் தொடை தட்டல். பாண்டவர்களுடைய பங்கை அவர்களுக்குக் கொடுத்துவிடு. சமாதானம் செய்து கொள். அவர்களை அழைத்து வந்து மரியாதையாக அவர்கள் செல்வத்தையும், ராஜ்ஜியத்தையும் கொடுத்துவிடு. உன்னை இழிவுபடுத்தி குருகுலத்தையும் அவமானப்படுத்தாதே. துர்புத்தி உள்ள சகுனியும், வெறும் திமிர் பேச்சு உடைய கர்ணனும் உன்னை தூண்டிவிடுகிறார்கள். நீ என்ன சொன்னாலும் தலையாட்டுவதற்கு உன் தம்பி துச்சாதனன் இருக்கிறான். இந்த மூன்று பேராலுமே நீ அழிந்து போகிறாய். உனக்கு எதிரிகள் எதிரே இல்லை. அவர்கள் பாண்டவர்கள் இல்லை. இவர்கள்தான் உன் எதிரிகள்" என்று சுட்டிக் காட்ட, அந்த இடத்திலிருந்து வெகுவேகமாக துரியோதனன் வெளியேறினான்.

தன்னை மதிக்காமல், தனக்கு பதில் சொல்லாமல் துரியோதனன் நகர்ந்து போனது பற்றி பீஷ்மர் வெட்கமடைந்தார். தவறான நபருக்கு, தவறான நேரத்தில் நல்ல உபதேசம் செய்தது மிகப் பெரிய தவறு என்பதை உணர்ந்தார்.

பீஷ்மருடைய பேச்சால் கர்ணன் அதிகம் பாதிக்கப்பட்டான். அவனுக்கு துரியோதனன் முன்பு தன்னை நிலைநாட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வேறு என்னவிதமான பதில் சொன்னாலும், சமாதானம் சொன்னாலும் துரியோதனன் ஏற்கமாட்டான். எனவே, செயல் திறனை மட்டும் காண்பித்து துரியோதனனை வசப்படுத்த வேண்டும் என்று பீஷ்மருடைய பேச்சால் அவன் தூண்டப்பட்டான். பீஷ்மருடைய பேச்சுக்கு எழுந்து வந்து சரி என்று நினைத்தாலும் அந்த இடத்தில் தன்னை ஆதரித்து பீஷ்மரிடம் துரியோதனன் பேசவில்லை என்பதும் வருத்தமாக இருந்தது. கர்ணன் அர்ஜுனனை கொல்லுவான் என்று அழுத்தம் திருத்தமாக பீஷ்மரிடம் சொல்லாதது வருத்தம் தந்தது.

"துரியோதனா, நான் திக் விஜயம் செய்யப் போகிறேன். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று எல்லா திசைகளிலும் என் படைகளோடு வலம் வரப் போகிறேன். அங்குள்ள மன்னர்களை எதிர்த்து உனக்கு வரி கட்டும்படி நிர்ப்பந்திக்கப் போகிறேன். அங்கு கிடைத்த வரிகளோடு இங்கு வந்து உன் பொக்கிஷத்தை நிரப்பப் போகிறேன். பீஷ்மருடைய பேச்சு என் மனதை கொதிக்க வைத்துவிட்டது. எந்த பக்குவமும் இல்லாத அந்தக் கிழவர் நம்மை ஏளனம் செய்வதையே முக்கியமாகக் கருதிக் கொண்டிருக்கிறார். பாண்டவர்கள் மட்டுமே, அவர்கள் நலம் மட்டுமே அவர் கண்ணுக்குத் தெரிகிறது. உன் சோறு தின்று கொண்டு உன் எதிரிக்கு துணையாகப் பேசுகின்ற அவரை நீ ஏன் இன்னும் எதிர்க்கவில்லை என்று புரியவில்லை.

இப்போது உன் எதிரே ஒரு சபதம் செய்கிறேன் கேள். அர்ஜுனனை என் கையால் கொல்லப்படாதவரை நான் மற்றவரால் கால் கழுவப்படமாட்டேன். நீரிலிருந்து தோன்றிய பொருட்களை சாப்பிடமாட்டேன். மிகப் பெரிய விரதங்களை தரிக்கமாட்டேன். யார் எது கேட்டாலும் இல்லை என்று கூறமாட்டேன்" என்று தன் வில்மீது அடித்து சத்தியம் செய்தான்.

திருதராஷ்டிரப் புதல்வர்கள் இந்த மிகப் பயங்கரமான சபதம் கேட்டு பெரிய ஹுங்காரம் செய்தார்கள். துரியோதனன் எழுந்துபோய் தன் நண்பனை தழுவிக் கொண்டான். “போ. நீ நினைத்ததை செய். வெற்றியோடு திரும்பி வா" என்று தலை தடவி உச்சி முகர்ந்தான்.

மிகப் பெரிய படைகளோடு கர்ணன் திக்விஜயம் மேற்கொண்டான். நல்லநாளில் கர்ணன்

தலைமையில் படைகள் நகர்ந்தன. துருபதனின் தேசத்தை சூழ்ந்து கொண்டு துருபதனை தன் வசப்படுத்தி தங்கம், வெள்ளி, பலவகை ரத்தினங்களை தனக்கு வரியாக அளிக்குமாறு செய்தான். வடதிசை சென்று பகதத்தனை வென்றான். பிறகு இமயத்தின் மீது ஏறினான். அங்கிருந்து எல்லா திசைகளுக்கும் சென்று எல்லா மன்னர்களையும் தன்வயப்படுத்திக் கொண்டான்.

நேபாள தேச மன்னனை வென்றான். பிறகு இமயத்தில் இறங்கி கிழக்கு திசை நோக்கி பயணப்பட்டான். அங்கதம், வங்கம், கலிங்கம், கண்டிகை, மிதிலா, மகதம், கர்ககண்டம் என்னும் தேசங்கள் அனைத்தையும் தன்னுடைய ராஜ்ஜியத்தோடு, வசுஷீர யோக்ய அதிசத்திர தேசத்தையும் வென்றான். பிறகு வத்சல பூமியில் கால் வைத்தான். கேவலா, ம்ருத்யாதிகாபதி, மோஹன், பக்தன், திரிபுரா, கோசலா என்னும் தேசங்களை தன் அதிகாரங்களுக்குட்படுத்தினான். சகலரிடமிருந்தும் வரிகளை வசூலித்தான். தென்திசையை அடைந்த கர்ணன் ருக்மியோடு போர் புரிந்தான். பிறகு பாண்டிய தேசத்திற்கும், ஸ்ரீசைலத்திற்கும் புறப்பட்டான். கேரள மன்னன், நீல மன்னன் மற்றும் வேணு தாரி புதல்வனை தோற்டித்தான். தென்திசையிலிருந்த முக்கிய மன்னர்கள் அனைவரையும் வென்று வரி வசூலித்தான். அவந்தி தேச மன்னர்களையும், வ்ருஷ்ணி வம்சத்து யாதவர்களிடமும் சண்டையிட்டு அவன் மேற்கு திசையை அடைந்தான். மேற்கு திசையில் யவனர்களையும், பர்பர மன்னர்களையும் தோற்கடித்தான். இவ்விதம் கிழக்கு, மேற்கு, வடக்கு என்று எல்லா திசைகளிலும் வெற்றிக் கொடி நாட்டி, மிலேச்சர் வானவாசி, வனவாசி, மலை ஜாதியினர், பத்ரா, ஆத்ரேயர், மாலவர் முதலிய ராஜ்ஜியங்களையும் தோற்கடித்தான். மிகப்பெரிய பெருமிதத்துடன் அஸ்தினாபுரம் திரும்பினான்.

"துரோணாச்சாரியாராலோ, பீஷ்மராலோ, க்ருபராலோ கிடைக்காத ஐஸ்வர்யம் உன் மூலம் எனக்கு கிடைத்துவிட்டது. இந்த ஐஸ்வர்யங்களை எனக்கு சினேகமாக இருக்கின்ற மன்னர்களுக்கும் பங்கு போடுவதின் மூலம் நான் மிகப் பெரிய கௌரவத்தை அடைவேன். அந்த கௌரவம் எனக்கு கர்வத்தை கொடுக்கும். எனக்கு சந்தோஷத்தையும், நிறைவையும், நிம்மதியான தூக்கத்தையும் கொடுக்கும். அபூர்வமான வஸ்திரங்களையும், தங்கக் குவியல்களையும் கொண்ட இந்த மன்னர்கள் எனக்கு வசப்பட்டு இருப்பார்கள். இதற்காக உனக்கு எப்படி நன்றி சொன்னாலும் தகும்'' என்று துரியோதனன் கர்ணனிடம் சொல்லி சந்தோஷமடைந்தான்.

செல்வத்தினால் தானமும், போகமும் கிடைக்கும். இவை இரண்டையும் கர்ணனுடைய உதவியால் துரியோதனன் குறைவர அனுபவித்தான். துரியோதனன் அந்தணர்களை வரவழைத்து தன் பங்குக்கு தன் கர்வத்தை உயர்த்திக்கொள்ள என்ன செய்வதென்று ஆலோசித்தான். ராஜசுய யாகம் செய்ய வேண்டுமென்ற விருப்பத்தை தெரிவித்தான்.

"உங்களுடைய தமையனார் தருமபுத்திரர் உயிரோடு இருக்கும்போது ராஜசுய யாகம் நீங்கள் செய்ய இயலாது. ஒரு தேசத்தின் ஒரு வம்சத்தின் தலைவன்தான் இதைச் செய்ய முடியும். தலைவன் வேறு பக்கம் இருக்க, அடுத்தவர் ராஜசுய யாகம் செய்வதற்கு உரிமை இல்லை. எனவே, ராஜசுய யாகத்திற்கு இணையான வைஷ்ணவ யாகத்தை செய்யுங்கள் என்று சொல்லி, தங்கத்தால் ஏர்கலப்பை செய்யச் செய்து அந்த ஏர்கலப்பையை துரியோதனனை விட்டு யாகசாலையை உழச்செய்து, அந்த யாகசாலையை சீர்செய்து இடையறாது அன்னமும், விதவிதமான பானங்களும், அனைவருக்கும் வழங்கி, படை பலத்தையும், வில் திறமையையும், தன் மனோ பலத்தையும் கர்ணன் வெளிப்படுத்த கடுமையான விரதங்கள் இருந்து, உயர்வான ஒரு யாகத்தை செய்வதின் மூலமும் அதற்குண்டான தான தர்மங்களை இடையறாது செய்வதின் மூலமும் கர்ணனும், துரியோதனனும் தன் புகழை நிலை நாட்டிக் கொண்டார்கள். பரஸ்பரம் பாராட்டிக் கொண்டார்கள். நடந்துபோன தோல்வியிலிருந்து மீட்க இந்த விஷயங்கள் அவர்களுக்கு பெரிதும் உதவின. கந்தர்வர்களிடம் தோற்றதை கெட்ட கனவென மறந்து போனார்கள்.

கர்ணன் செய்த சபதம் ஒற்றர்கள் மூலம் பாண்டவர்கள் காதுக்கு எட்டியது. யுதிஷ்டர் கவலையடைந்தார். மிகப் பெரிய வைஷ்ணவ யாகம் நடைபெற்றதையும், குறைவின்றி நடந்ததையும் கேள்வியுற்று மேலும் துயரடைந்தார். இரவில் கனவுகள் பலதும் வந்தன. ஒரு கனவில் மிருகங்கள் அவரை சூழ்ந்துகொண்டன. அவர் திடுக்கிட்டு விழித்திருக்க, எங்களை உங்கள் சகோதரர்கள் தொடர்ந்து கொல்கிறார்கள். எங்கள் வம்சம் அருகிக் கொண்டே வருகிறது. கடைசி நிலைக்கு வந்துவிட்டோம். தயவு செய்து இந்த இடத்தைவிட்டு போய்விடுங்கள். அப்பொழுதுதான் நாங்கள் பல்கி பெருக முடியும் என்று வேண்டி கேட்டுக் கொண்டனர்.

தைத்ய வனத்திலிருந்து தன் சகோதரர்களுடன் இந்த செய்தியை விவரித்துச் சொல்லி அவர் காம்ய வனத்திற்கு புறப்பட்டார்.

(தொடரும்)

மகாபாரதம்

66

“இப்படி அற்புதமாக தானம் செய்பவனை நான் கண்டதேயில்லை!”

காம்ய வனத்தில் பதினோராவது வருடத்தை மிகுந்த வேதனையோடு பஞ்சபாண்டவர்கள் கழித்து வந்தார்கள். ஆனால் அமைதியாக வாழ்ந்தார்கள். இத்தனை கஷ்டங்களுக்கும் காரணம் தானே என்று அவ்வப்போது யுதிஷ்டிரர் என்று அழைக்கப்படும் தருமர் அடிக்கடி புலம்பினாலும் தங்கள் தமையனைப் பற்றி எந்தக் குறையும் சொல்லாது, அவரை சமாதானப்படுத்தியவாறும், அவரை சந்தோஷப்படுத்தப் பேசியவாறும் அவரது சகோதரர்கள் உடன் வந்தார்கள்.

இன்னும் சில காலங்களே இருக்கின்றன. நாம் வெகு அற்புதமாக இந்த கடினமான நேரத்தை தாண்டிவிடுவோம். யுத்தம் நிச்சயமாக வரும். அதற்குண்டான பலத்தை பெறுவதிலேயே இந்த கடினமான காலத்தை கழிப்போம். அரண்மனை சுகத்தில் இருந்தால் இவ்விதமெல்லாம் யுத்தம் செய்ய வேண்டும் என்ற நினைப்பே வந்திருக்காது. உடம்பில் உரமே தோன்றியிருக்காது. இந்த காட்டு வாழ்க்கை கடுமையான ஒரு யுத்தத்திற்கு நம்மைத் தயார் செய்துவிட்டது. பசி, தாகம் என்று நாம் நிலைகுலைவதில்லை. தூக்கத்தை வேண்டும் என்றபோது வரவழைத்தும், வேண்டாதபோது விலக்கியும் நம்மால் தவசிகள்போல் இருக்கமுடிகிறது. இதெல்லாம் போருக்கு துணையான விஷயங்கள். வேறு யார் அறிகிறார்களோ இல்லையோ இதைப்பற்றிய தெளிவும், அறிவும் நமக்கு வந்துவிட்டது. இது மிகப்பெரிய விஷயம் என்று தங்களைத் தாங்களே பேசி உற்சாகப்படுத்திக் கொண்டார்கள்.

தருமரின் காதுபட இவ்வாறு பேச, தருமர் மெல்லியதாய் சிரித்துக் கொண்டார். அவர்கள் பேசுவது உண்மைதானெனினும் ஒரு க்ஷத்திரிய வம்சத்தில் உயர்ந்த குலத்தில், சகல சௌபாக்கியங்களோடு பிறந்துவிட்டு அதை நன்கு அனுபவித்துவிட்டு சட்டென்று அவற்றையெல்லாம் துறந்து வனவாசிகளைப் போல காட்டில் வாழும் நிலைமை வந்ததே என்னால்தானே என்ற ஏக்கத்தை, துக்கத்தை தருமரால் தவிர்க்கவே முடியவில்லை.

அப்படி அவர்கள் அலைந்து கொண்டிருந்தபோது சத்யவதியின் மகனான வியாசர் வந்தார். தன்னுடைய பேரப்பிள்ளைகள், சூழ்ச்சியின் காரணமாக வனத்திற்கு அனுப்பப்பட்டு அங்கே கடுமையான வாழ்க்கையை கடைப்பிடிப்பதை பார்த்து மனம் வருந்தினார். வியாசரை வரவேற்று கால் அலம்பி, குடிக்க ஜலம் கொடுத்து, முதுகை ஈரத்துணியால் துடைத்துவிட்டு, முகம் துடைத்து, பசியாற உணவு கொடுத்து, மறுபடியும் நீர் கொடுத்து கண்மூடி அமர்ந்திருப்பவரைப் பார்த்து விசிறினார் தருமர்.

இந்த மரியாதைகளை ஏற்றுக்கொண்ட வியாசர் மெல்ல கண்விழித்து, ‘தருமபுத்திரா, அருகே அமர்ந்து கொள்’ என்று இடம் காட்டினார். தருமபுத்திரர் அவர் காலடியில் அமர்ந்துகொள்ள, மற்ற சகோதரர்களும், திரௌபதியும் உடன் அமர்ந்து கொண்டார்கள்.

“மனிதனுக்கு உலகத்தில் துக்கமும், சந்தோஷமும் மாறிமாறி ஏற்படுகின்றன. சுகத்தை அமைதியாக அனுபவித்தலும், துக்கம் பற்றி குறைகூறாமல் இருத்தலும் சத்தியமானவர்களின் வாடிக்கை. பஞ்சணையைப் பற்றிய பெருத்த சந்தோஷமோ, வெறும் தரையில் படுக்கவேண்டிய நிர்பந்தம் பற்றிய புலம்பலோ அவர்களிடம் இருப்பதில்லை.



எல்லாம் தெய்வ சித்தமாகவே நடைபெறுகிறது. ஒரு உழவன் ஏர் உழுது நெல் விதைக்கிறான். அதனாலேயே பயிர் விளைந்து விடுவதில்லை. காற்றும், மழையும், வெய்யிலும், பூச்சிகள் வரா வண்ணம் பறவைகள் காப்பதும், எலிகளின் தொந்தரவு இல்லாது காட்டுப் பூனைகள் நடமாடுவதும் பயிர் வளர உதவி செய்கின்றன. அந்த தானியம் உழவன் விதைத்தாலும் ஒரு தெய்வத்தின் அனுக்கிரகம் போலத்தான் அவனுக்கு கிடைக்கிறது. நான் உழுது பயிரிட்டது என்று அந்த உழவன் நினைப்பதில்லை. இது கடவுள் கொடுத்தது. அவருக்கு இவ்வளவு பங்கு என்று நல்ல உழவன் நினைக்கிறான்.

“இதை ஆழ்ந்து யோசித்துப் பார்க்க



பாலகுமாரன்

வேண்டும். தன் முதுகை தானே தட்டிக்கொண்டு திரிவதில் புத்திசாலித்தனம் இல்லை. நெல் அவன் விதைக்காவிட்டால் முளைத்திருக்குமா என்பது தவறான தர்க்கம். ஒரு நியதியை பின்பற்றித்தான் ஆகவேண்டும். விளைவது என்பது கடவுள் அருள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இது மிகமிக சூட்சுமமான விஷயம். முட்டாள்களுக்கு இது புரியாது. உலகத்தில் இதுபோன்ற பல்வேறு சுக துக்க விஷயங்களை புரிந்து கொள்ள தவம் செய்ய வேண்டும். தவம் செய்வது எளிதானது. எல்லா மனிதரும் தவம் செய்ய வேண்டும். ஆன்மிகம் இன்னாருக்கு மட்டுமே உரித்தானது அல்ல.

"மகாராஜா தருமபுத்திரனே, சத்தியம், எளிமை, கோபமின்மை, தேவ அதிதிகளுக்கு அளித்து பிறகு அன்னம் ஏற்றல், புலனடக்கம், மனஅடக்கம், மற்றவர்களிடம் குறைபாராமை, இம்சை செய்யாமல் இருத்தல், உள்ளத்தை புனிதமாக வைத்தல், புலன்கள் அனைத்தையும் வசப்படுத்துதல் இந்த நல்ல குணங்கள் தவம் செய்ய உதவி செய்யும்.

அதர்மத்தில் ருசி உள்ளவர்கள் மூடர்கள். அவர்கள் பசி, பட்சி யோனியில் பிறக்கிறார்கள். மனிதனைக் காட்டிலும் கஷ்டம் அளிக்கின்ற வாழ்க்கையை வாழ்கிறார்கள். என்னைவிட சுதந்திரமாய் பறவை இருக்கிறதே என்பவன் பறவையை பார்த்திராதவன். என்னைவிட இந்த நாய் நன்றாக வாழ்கிறதே என்று நினைப்பவன் அந்த மிருகத்தோடு கவனம் இல்லாதவன். உலகத்தில் செய்யும் கர்மத்தின் பலன் பரலோகத்திலும் எதிரொலிக்கிறது. அதனால் உடலை தவத்தில். நியமங்களை கடைபிடிப்பதில் ஈடுபடுத்த வேண்டும்.

"ஒரு விருந்தாளி வந்தால் கோபம் இல்லாமல் அவரை வரவேற்று உங்களிடம் இருக்கின்ற உணவை அவருக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும். அவர் உண்டபிறகே உண்ண வேண்டும். கோபிக்காதவனும், மற்றவரிடம் தோஷம் பாராதவனும் எளிதாக சொர்க்கத்தை அடைகிறான். கோபத்தை அடைத்து வைப்பவன் ஒருபொழுதும் துயரத்தை எதிர்கொள்வதில் தவறுவதில்லை. மனதை தன் வசப்படுத்தியவன் மற்றவர் செல்வத்தைப் பற்றி தாபப்படுவதேயில்லை. புலன்களை வென்ற மனிதன் ஒருபொழுதும் தீய பழக்கங்களில் சிக்குவதேயில்லை. தீய பழக்கங்களில் சிக்காதவனுக்கு இகலோகத்திலும், பரலோகத்திலும் மிகுந்த சுகம் கிடைக்கிறது. சுகம் என்பது அமைதியாக இருத்தல்."

"தருமம், தானம் என்று இரண்டு விஷயங்களை சொல்கிறீர்கள். தருமத்துடன் வாழ்வது முக்கியமா, தானம் செய்வது முக்கியமா. இரண்டில் கடினமானது எது?" என்று யுதிஷ்டிரர் மிக மெல்லிய குரலில் வியாசரை நோக்கிக் கேட்டார்.

"மிகச் சிறந்த கேள்வி. அறிவிற்கேற்றபடி இதை புரிந்து கொண்டு பேசுகிறாய். விஷயங்களையும் மனதில் ஸ்வீகரித்து ஆவலுடன் கேட்கிறாய். சம்பாதித்தல் உலகத்தில் தர்மம் என்று சொல்லப்படுகிறது. அது எளிதல்ல. பசுக்களை மேய்த்தும், கடும் வெயிலில் நிலத்தை உழுது பண்படுத்தி, விதைத்து காத்திருந்தும், களிமண்ணில் செங்கல் செய்து வீடுகட்டி, கூரை வேய்ந்து அதில் சம்பாதித்தும், உயிரை துச்சமென மதித்து கடலுக்குள் மூழ்கி முத்துகளை கொண்டுவந்து கொடுத்தும், பெரும் மலை, பாலைவனங்களில் அலைந்தும், தங்கத்தை வெட்ட பூமியில் சுரங்கம் தோண்டியும் மனிதர்கள் பெரும் தவிப்பு தவிக்கிறார்கள். போராடுகிறார்கள். அப்படி போராடி சம்பாதித்த செல்வத்தை தானமாகத் தருவது என்பது எளிதான விஷயமே அல்ல. தானத்தைவிட கடினமான காரியம் இந்த உலகத்தில் எதுவுமே இல்லை. கடமையினால் தானம் செய்பவனை அந்த தானம் பெரும் பயத்திலிருந்து காப்பாற்றுவதில்லை. அவனை உலகம் கனிவாகப் பார்ப்பதில்லை. முன்னே சிரித்தும் பின்னே பழித்தும் பேசுகிறார்கள்.

"முத்கலரிஷி என்பவர் ஒரு த்ரோண நெல்லை தானம் செய்து மிகப் பெரிய பயன் பெற்றார். ஒரு த்ரோணம் என்பது பதினாலு சேர். யார்

முத்கலர்? அவர் செய்த தானம் என்ன? எப்படி ஒரு த்ரோண தானியம் மிகப்பெரிய செல்வத்தை கொண்டு வந்து கொடுத்தது? முத்கலர், க்ஷீல மற்றும் உஞ்ச என்னும் விரதத்தை கைக்கொண்டு அதன் மூலம் வாழ்பவர். க்ஷீல என்றால் அறுவடையான களத்தில் சிதறிய தானியங்களை எடுப்பது. உஞ்சல என்றால் கடைக்குப்போகும் சமயத்தில் விழுகின்ற தானியங்களை, வைக்கோலிலிருந்து பிரித்து எடுக்கும்போது சிதறும் தானியங்களைப் பொறுக்கி எடுப்பது. யாரிடமும் யாசகம் கேட்காமல் மற்றவர் கீழே போட்ட தானியங்களை எடுத்துக்கொண்டு அதில் சிறிதளவு தான் உண்டு பெருமளவு சேர்த்து வைத்துவிடுவார். நல்ல போஜனம் என்பது அவருக்கு பதினைந்து நாளைக்கு ஒருமுறைதான் கிடைத்தது. கைப்பிடி அரிசியை தினந்தோறும் உண்டுவிட்டு மற்றவற்றை சேர்த்துவைத்து அந்த அரிசியை பொங்கி மற்ற வெஞ்சனங்கள் வைத்து உண்ணுகின்ற வாய்ப்பு அவருக்கு பதினைந்து நாள்களுக்கு ஒருமுறைதான் கிடைத்தது. அவருடைய மனைவியும், மகனும் இதற்கு ஒத்துழைத்தார்கள். இவர் நோக்கத்தை புரிந்து கொண்டார்கள். இவ்விதம் வாழ்வது உன்னதம் என்பதை அறிந்து அவரை பின்தொடர்ந்தார்கள்.

``பதினைந்து நாளைக்கு ஒருமுறை பொங்கிய உணவை உண்பதற்கு முன்பு அதிதிகள் யாரேனும் வந்தால் அவர்களுக்கு கொடுப்பது என்பது அவர்களுடைய வழக்கமாக இருந்தது. ஒரு பானை சோறு பொங்கியதும் அதை வந்த அதிதிகளுக்கு பரிமாறுவார்கள். அவருடைய தான மகிமையை கேட்டு ஐந்து, பத்து, இருபது, நாற்பது என்று ஒவ்வொரு பதினைந்தாவது நாளிலும் அதிகம்பேர் வரத்துவங்கினார்கள். ஆனால் ஒரு பானையிலிருந்தே சகலருக்கும் அவருடைய தவ மகிமையால் உணவு கொடுக்க முடிந்தது. அந்த உணவு மிக ருசியாக இருந்தது. உண்டவர்கள் அவரை வணங்கியும், வாழ்த்தியும் கொண்டாடினார்கள்.

“இதைக் கேட்ட துர்வாசர் ஒருமுறை தானும் அங்குபோய் சாப்பிட வேண்டும் என்று தீர்மானம் செய்து உருமாறி, பித்து பிடித்தவர் போல, மூளை பிழன்றவர் போல நடந்துகொண்டு உங்கள் வீட்டில் உணவுக்காக வந்திருக்கிறேன் என்று உரத்த குரலில் சொல்ல, அவரை வரவேற்று அமரச் செய்யும்போது, அங்கு போடப்பட்ட அத்தனை உணவையும் போடு போடு போடு என்று கேட்டு உண்டுவிட்டார். சிறிதுகூட மிச்சம் இல்லாமல் நகர்ந்துவிட்டார். முத்கலர் கோபமடையவேயில்லை. மறுபடியும் வரச்சொல்லி கைகூப்பினார்.

“அடுத்த பதினைந்து நாள் பொறுத்து மறுபடியும் துர்வாசர் வந்து முத்கலருக்கும் அவர் குடும்பத்துக்கும் உணவு மீதம் வைக்காமல், சகலமும் உண்டு தீர்த்தார். அப்பொழுதும் முத்கலர் ஒன்றும் சொல்லவில்லை. மறுபடியும் வரச்சொல்லி கைகூப்பி வேண்டினார். ஆறுமுறை இவ்விதம் வந்தும் முத்கலரோ, அவர் மனைவியோ, அவர் குழந்தையோ எந்த முகச்சுளிப்பும் காட்டவில்லை. இப்படிக் கொடுக்க முடிந்ததே என்ற சந்தோஷம் தான் அவரிடம் இருந்தது. துர்வாசர் திகைத்துப் போனார். ‘இதைவிட அற்புதமான தானம் செய்தவனை நான் இந்த உலகத்தில் கண்டதேயில்லை. என் தவ வலிமையால் நீர் உடலோடு சொர்க்கம் போகின்ற யோக்கியதையை உமக்கு அளிக்கின்றேன். போய் வாரும்’ என்று சொல்ல, அந்த க்ஷணமே அழகிய விமானமும், அதில் ஒரு தேவ தூதனும் வந்தார்கள். தேவதூதன் விமானத்தில் ஏறச் சொல்லி வேண்டினான்.

முத்கலர் விமானத்தை வியப்போடு பார்த்தார். சுற்றி வந்தார். “அப்பா, இது என்ன? இது எங்கே போகிறது?” என்று கேட்டார்.

“இது தேவலோகத்து விமானம். உங்களை தேவலோகத்திற்கு அழைத்துப் போக நான் வந்திருக்கிறேன்” என்று அவன் பணிவோடு சொன்னான்.

“தேவலோகத்தில் உண்டான நிறை என்ன, குறை என்ன, எனக்கு அதை சொல்லப்பா?” என்று முத்கலர் எந்த சந்தோஷமும் இல்லாமல், வெறுப்பும் இல்லாமல் அமைதியாக எதிரொலித்தார்.

“இந்த அமைதியைக் கண்டு துர்வாசர் திகைத்தார். பாராட்டப்பட்டபோதும், பரிசினை வழங்கிய போதும் மௌனமாக அதற்கு எதிரொலித்தல் என்பது மிக பக்குவப்பட்டவர்களுக்கே வரும். ஆசையை முற்றிலும் கடந்தவராதலால் அவருக்கு இந்த மனோநிலை இருந்தது. ஆசை முற்றிலும் கடக்க தவ வாழ்க்கை அவருக்கு உதவியது.

சஞ்சலமான மனதை தடுப்பது மிகவும் கடினமாகும். மனமும், இந்திரியமும் ஒருமுகப்படுவதே தவம் என்று சொல்லப்படுகிறது.

முத்கலர் அந்த விமானத்தைச் சுற்றி வரும்போது அவருக்கு அருகிலேயே இணையாக அந்த தேவதூதனும் நடந்து வந்தான்.

''நண்பனே, நான் உன்னிடம் விளையாடவில்லை. சத்புருஷர்கள் ஏழடி ஒன்றாக செல்லும்போதே அவர்களிடையே நட்பு உண்டாகிறது என்பது சான்றோர்களின் வாக்கு. அந்த நட்பை முன்வைத்து உன்னிடம் இந்த வினாவை கேட்கிறேன். எனக்கு சத்தியமானதும், நன்மை தருவதுமான இந்த விடையை தயக்கமின்றி கூறு. உன்னுடைய பேச்சை கேட்டு அதற்குப் பிறகு நான் என்ன செய்வது என்று தீர்மானிக்கிறேன்'' என்று அமைதியாக பேசினார்.

துர்வாசருக்கு இந்த அமைதி இன்னும் திகைப்பை கொடுத்தது. அந்த பேச்சு வியப்பை ஏற்படுத்தியது. ''சொர்க்கத்திற்கு போகும் வழி உத்தமமானது. புலனடக்கமும், மன அடக்கமும் உள்ளவர்கள் பொறாமையற்றவர், தான தர்ம பாராயணர், போர்க்களத்தில் பிரசித்தமான சூர வீரமனிதர் ஆகிய புண்ணியவான்கள் அந்த லோகத்திற்கு வருகிறார்கள். யாருக்கும் பசி, தாகம் உண்டாவதில்லை. மனதில் துயரம் ஏற்படுவதில்லை. வெப்பம், குளிர்ச்சி என்ற கஷ்டங்கள் அங்கு இல்லை. எந்த பயமும் அங்கில்லை. அங்கு அருவருக்கத்தக்கதோ, அசுபமானதோ எந்த பொருளும் கிடையாது. சொர்க்கத்தில் உள்ள சரீரம் விந்தினால் உருவானதல்ல. அதற்கு ரத்தம், எலும்பு, தசைகள் இல்லை. அந்த சரீரிகள் மல, மூத்ர தாரிகள் இல்லை. அவர்கள் உடம்பிலிருந்து துர்கந்தங்கள் வராது. அவர்கள் அணிந்திருக்கும் மாலைகள் வாடாது. இடையறாத இன்னிசையைக் கேட்டுக்கொண்டு ஒரு ஏகாந்த சுபாவத்தில் இருப்பது சொர்க்கவாசிகளின் குணம். இவைதான் சொர்க்கத்தின் நல்ல விஷயங்கள்.

சொர்க்கத்தின் குற்றங்கள் என்று நான் கருதுவது இதைத்தான். இங்கு செய்கின்ற கர்மத்தினுடைய பலன்கள் சொர்க்கத்தில் அனுபவிக்கப்படுகின்றன. முப்பத்துமூன்று விதமானசொர்க்கங்கள் இருக்கின்றன. இடைவிடாது தானம் செய்தவருக்கும், இடையறாது நீர் வார்த்தவருக்கும், இடையறாது பிராணிகளிடத்தில் அன்பு செய்தவருக்கும், இடையறாது வைத்தியம் செய்தவர்களுக்கும் என்று பல்வேறு சொர்க்கங்கள் இருக்கின்றன. தானத்திலேயே குறியாய் வாழ்ந்தவர்களுக்கு இம்மாதிரியான இடங்கள் மிகப்பெரிய சுகத்தைத் தருகின்றன.

ஆனால், இந்த கர்மப் பலன்கள் குறைந்துபோக ஒருநாள் சட்டென்று இந்த சொர்க்கத்திலிருந்து நேரே கீழே வரவேண்டியிருக்கிறது. அப்படி வருகையிலும் ஒரு லாபம் இருக்கிறது. அவர்கள் மறுபடியும் சொர்க்கத்திலிருந்து மனித யோனியில் பிறக்கிறார்கள். மனித யோனியில் பிறக்கிறபொழுது மறுபடியும் நல்ல கர்மாக்களை செய்து மீண்டும் சொர்க்கம் வருவதற்குண்டான வாய்ப்பு அவர்களுக்கு தரப்படுகிறது.

பலன்கள் மெல்ல மெல்ல கரைந்து போவதுதான் சொர்க்கத்தினுடைய கஷ்டமான விஷயம். அந்த சொர்க்கத்திலிருந்து கீழே விழும்பொழுது ஏற்படுகின்ற பயமும், பரிதவிப்பும் விவரிக்க முடியாதவை. இதுவே சொர்க்கத்தின் குறை''

''இந்த சொர்க்கத்தை காட்டிலும் அற்புதமான தேவ விஷயங்கள் உண்டா?''

''உண்டு. வைகுண்டம் என்றும், பரமபதம் என்றும் சொல்லுகின்ற விஷ்ணுவினுடைய கட்டளைக்கு உட்பட்ட அந்த இடத்தில் ஞானவான்கள் மட்டுமே உள்ளே நுழைய முடியும் கர்மாக்களைப் பற்றி சிந்திக்காதவர்களே அந்த இடம் போகமுடியும். நல்லது செய்தல், கெட்டது செய்யாது இருத்தல் என்ற இரண்டு பிரிவுகளையும் உணராது வேறு ஒரு மனோ லயத்தில் வாழ்கிறவர்கள்தான் இந்த இடத்திற்கு வரமுடியும். ஞானத்தின் உச்சியில் இருப்பவர்கள் இங்குவந்து அவரிடம் ஐக்கியமாகிவிடுகிறார்கள். அவர்களுக்கு மறுபடியும் பிறப்பென்பது இல்லை. அது விஷ்ணுவின் இடம்'' என்று சொல்லி நிறுத்தினார்.

''தேவமைந்தனே, நீ போய் வா. எனக்கு அந்த

> ஒரு விருந்தாளி வந்தால் கோபம் இல்லாமல் அவரை வரவேற்று உங்களிடம் இருக்கின்ற உணவை அவருக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும். அவர் உண்டபிறகே உண்ண வேண்டும். கோபிக்காதவனும், மற்றவரிடம் தோஷம் பாராதவனும் எளிதாக சொர்க்கத்தை அடைகிறான். கோபத்தை அடைத்து வைப்பவன் ஒருபொழுதும் துயரத்தை எதிர்கொள்வதில் தவறுவதில்லை. மனதை தன் வசப்படுத்தியவன் மற்றவர் செல்வத்தைப் பற்றி தாபப்படுவதேயில்லை. புலன்களை வென்ற மனிதன் ஒருபொழுதும் தீய பழக்கங்களில் சிக்குவதேயில்லை. தீய பழக்கங்களில் சிக்காதவனுக்கு இகலோகத்திலும், பரலோகத்திலும் மிகுந்த சுகம் கிடைக்கிறது. சுகம் என்பது அமைதியாக இருத்தல்.

சொர்க்கத்தில் எந்த ஈடுபாடும் இல்லை. இந்த பூமி எனக்கு சொர்க்கம் போலவே இருக்கிறது. நீ சொன்ன எல்லா விஷயங்களும் இங்கும் நடை பெறுகின்றன. எவனுக்கு ஆசையில்லையோ, எவனுக்கு கோபமில்லையோ, எவனுக்கு அடுத்தவனைப் பற்றி பொறாமையில்லையோ, எவனுக்கு தனக்கு இன்னது வேண்டும் என்ற நோக்கம் இல்லையோ, அவன் நீ சொன்னதுபோல அமைதியாகத்தான் பூமியிலும் வாழ்கிறான். அந்த வாழ்க்கைதான் என்னுடையது. விஷ்ணுவின் பதத்திற்குப் போவதற்கு என் ஞானம் எனக்கு தகுந்த நேரத்தில் உதவி செய்யட்டும். இப்போதைக்கு நீ உன் வாகனத்தை எடுத்துக் கொண்டு போய்வா" என்று அவனுக்கு விடை கொடுத்தார்.

"துர்வாசர் திகைத்தார். இது ஒரு ஞானியினுடைய செய்கை. தருமபுத்திரா, எப்பேர்பட்ட மனிதர்களெல்லாம் இந்த பூமியில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள். எதற்கு இப்படி வாழ வேண்டும், எதற்கு இப்படி வருத்திக் கொள்ளவேண்டும் என்றெல்லாம் கேட்பவர்கள் இம்மை, மறுமை பற்றிய ஞானம் இல்லாதவர்கள். தான் இருக்கிற நிமிடமே மிக உயர்ந்தது. அதுவே தொடர்ந்து வருவது என்று நினைத்துக் கொண்டிருக்கும் மூடர்கள். ஏதாவது ஒருநாள் அது முடிவுக்கு வரும். வேறொரு இடத்திற்கு அந்த ஆத்மா போய்த்தான் தீரவேண்டும். வேறொரு சரீரம் எடுக்கத்தான் வேண்டும். இதை மறுப்பதால் இல்லாது போய்விடாது. இதை இல்லை என்று சொல்வது அறியாமையில்தான்.

"தர்மம் செய்வது மட்டும் பிரமாதமான விஷயம் அல்ல. தர்மம் செய்வது பற்றிய அக்கறையும், சிந்தனையும் இல்லாது தன்னுடைய வாழ்வினுடைய விளைவே அப்படித்தான் என்று இருப்பதுதான் வெகு உயர்ந்த விஷயம். அப்படியும் மனிதர்கள் இருந்திருக்கிறார்கள் என்கிறபோது, நீ இப்பொழுது படுகின்ற துயரமும், இழந்ததும், பெற்றதும் எதுவும் இல்லை என்பதை அறிவாய்" என்று சொல்லி நிறுத்தினார்.

"உழவன் நிலத்தை உழுதான். விதை நட்டான். பயிர்கள் வளர்ந்து தானியங்களை ஏகமாய் விளைவித்தன. அது தெய்வத்தின் செயல். அதேபோல நீ செய்த காரியங்கள், உன்னுடைய கர்மாக்கள் உன்னுடைய அரசை உனக்கு கொண்டு வந்து தரும். எந்த கவலையும் அற்று அமைதியாக இரு" என்று சொல்லி விடைபெற்றுப் போனார்.

வியாசர் சொன்னதை ஒட்டுமொத்தமாக யோசிக்கும்போது தருமபுத்திரருக்கு நல்லபடியான சத்விஷயங்களைப் பின்பற்றி வாழ்வது மட்டுமல்லாது, அப்படி வாழவும், அதன் பலன்களை பெறவும் தெய்வத்தின் அனுக்கிரஹம் தேவைப்படுகிறது. எனவே நல்லவனாக இருப்பது மட்டும் அல்லாது தெய்வத்தை அண்டியும் மனிதன் இருக்கவேண்டிய அவசியத்தை புரிந்து கொண்டார். அதை நிருபிப்பதுபோல ஒரு சம்பவம் ஏற்பட்டது.

துர்வாச முனிவர் தன் பத்தாயிரம் சீடர்களோடு துரியோதனன் சபைக்கு வந்தார். துரியோதனன் பயந்து அவரை மிக மரியாதையாக வரவேற்றான். துர்வாசர் கோபமானவர். சிறிய பிசகு கண்டால்கூட கடுமையாக கண்டிப்பார், சாபமிட்டுவிடுவார். அவர் வாக்கு வன்மையானது. அவர் சொற்கள் கூர்மையானவை. உடனடியாக பலிதம் தருபவை. எனவே துர்வாசரைக் கண்டால் மற்ற முனிவர்கள்கூட அமைதியாக இருப்பது வழக்கம்.

ஆனால், துரியோதனன் தன் புலன்களை அடக்கி துர்வாசரை மிக மரியாதையாக வரவேற்று விருந்துக்கு அழைத்தான். அங்கு பல நாட்கள் தங்கியிருந்த துர்வாசர் அவனை பல்வேறுவிதமாக அலைக்கழித்தார். விருந்துக்கு ஏற்பாடு செய் என்று சொல்லிவிட்டு வராது போய்விடுவார் நடுஇரவில் எழுப்பி உடனடியாக உணவிற்கு ஏற்பாடு செய் என்று சொல்வார். இன்னவிதமான விருந்து வேண்டும் என்று ஆணையிடுவார். இலையில் உட்கார்ந்த பிறகு எதற்கு இது வேண்டாம் என்று எழுந்து போய்விடுவார். அவர் என்ன செய்தாலும் பொறுத்துக் கொண்டு துரியோதனன் அமைதியாய் அவருக்கு கைங்கர்யம் செய்துவந்தான். அதனால் அவர் மிகவும் மகிழ்ந்தார். "ஒரு மன்னனுடைய அடக்கம் எனக்கு ஆச்சரியம் அளிக்கிறது. உனக்கு என்ன வேண்டும் கேள், நான் தருகிறேன்" என்று துரியோதனனிடம் அன்பு பொழிந்தார்.

துரியோதனன் கபட புத்திக்காரன். "என்னை வந்து நீங்கள் ஆதரித்ததுபோல, என்னுடன் தங்கி நான் கொடுத்த விருந்தை உண்டு சந்தோஷமாகி என்னையும், என் குடும்பத்தையும் ஆசிர்வதித்தது போல, இப்பொழுது வனத்தில் சஞ்சரிக்கின்ற என் தமையனாரின் இடத்திற்கும் போய் அங்கும் விருந்துண்டு, அவரை ஆசிர்வதிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

துர்வாசருக்கு அந்த கபடம் தெரியவில்லை. "அதனால் என்ன, செய்தால் போயிற்று. உன் தமையனையும் ஆசிர்வதிக்கிறேன்" என்று சொல்லி காம்யவனத்திற்கு நேரே வந்தார்.

துர்வாசர் வருகிறார் என்ற செய்தியைக் கேட்டு தருமபுத்திரர் கவலையானார். கையில் அக்ஷயப் பாத்திரம் இருக்கிறதே என்று சொல்ல, திரௌபதி இல்லை என்று மறுத்தாள். 'அதிலிருந்து நான் உணவு உண்டுவிட்டேன். உணவை நான் உண்டுவிட்டால் அந்த பாத்திரம் அன்றைக்கு மறுபடியும் வேலைசெய்யாது. எனவே, இப்பொழுது உச்சிப்பொழுதில் வந்திருக்கின்ற துர்வாசருக்கு நம்மால் உணவளிக்க முடியாது' என்றாள். ஆனால், துர்வாசர் குளித்துவிட்டு விரைவில் வருவதாகச் சொல்லி, தன்னுடைய பத்தாயிரம் சீடர்களோடு நதிக்கரைக்குப் போனார். ஆழ்ந்து குளித்து, அர்க்யம் இட்டு ஜபதபங்களில் அவர்கள் ஈடுபடலானார்கள்.

(தொடரும்)



இன்றைய அதர்மம் அன்று தர்மமாக இருந்தது!

என்ன செய்வதென்று தெரியாமல் தரும புத்திரர் இடிந்து உட்கார்ந்திருக்க, மற்ற சகோதரர்களும் கவலைப்பட, அவசரப்பட்டு சீக்கிரம் சாப்பிட்டு விட்டோமே என்று திரௌபதி வருத்தப்பட, பாண்டவர்கள் திகைத்தார்கள். மிக மோசமான காலம். இன்றையநாள் நன்றாகப் போகப்போவதில்லை என்று வருத்தப்பட்டார்கள்.

திரௌபதி கைகூப்பினாள். கிருஷ்ணனை நினைத்தாள். 'என்னுடைய புடவையை பிடித்து இழுத்து துச்சாதனன் அவமானப்படுத்தியபோது நீர் புடவையாக என்னை காப்பாற்றியதுபோல இந்த சங்கடத்திலிருந்தும் எங்களை காப்பாற்றும்,' என்று மனமுறுக வேண்டினாள். 'கிருஷ்ணா கிருஷ்ணா கிருஷ்ணா' என்று அலறினாள்.

ருக்மணியின் அருகே பகல்பொழுதில் படுத்துக்கொண்டிருந்த கிருஷ்ணர் சட்டென்று அங்கிருந்து நீங்கி திரௌபதியிடம் வந்தார். "என்ன வைத்திருக்கிறாய் திரௌபதி? இவ்வளவு தொலைவிலிருந்து வந்தது பசிக்கிறது. ஏதேனும் கொடு" என்று சொல்ல, திரௌபதி வெட்கப்பட்டாள்.

"உண்டுவிட்டேன். துர்வாசருக்கே இல்லையென்ற நிலைமை. உங்களுக்கு எப்படித் தருவேன்" என்று சொல்ல, "ஏதேனும் இருக்கும், எடுத்து வா" என்று கிருஷ்ணன் கேட்க, திரௌபதி கொண்டுவந்த அட்சயப் பாத்திரத்தை வாங்கி அதன் ஓரம் சிக்கியிருந்த கீரையை மெல்ல வழித்து வாயில் இட்டுக்கொண்டார்.

நன்கு உண்பவரான வாசுதேவருடைய மனம் குளிரும்படி இந்த கீரை அமையட்டும் என்று திரௌபதி வேண்டினாள்.

பரமபதத்தில் இருக்கின்ற விஷ்ணுவினுடைய மனமும், பூலோகத்திலுள்ள பல உயிர்களுடைய வயிறும் அவர் உண்ட ஒருதுளி கீரையினால் நிறைந்தன.



மகாபாரதம்

67

கரை ஏறிய துர்வாச சீடர்களுக்கு கழுத்து வரைக்கும் உணவு உண்டதுபோல இருந்தது. வாயிலிருந்து சுகமான சாப்பாட்டு வாசனை வீசிற்று. அன்னங்களில் பருப்பும், மிளகும் சிக்கியிருந்தன. நல்ல உணவு உண்டதுபோல நாக்கு புரண்டு தவித்தது. சிறிய ஏப்பங்கள் வெளிவந்தன.

“என்ன இது, உணவு உண்ண வேண்டும் என்று பசியோடு இங்கு வந்தோம். ஆனால் இப்படி வயிறு நிறைந்திருக்கிறதே! தருமர் உணவு ஏற்பாடு செய்திருப்பாரே, என்ன செய்வது? தருமர் நியாயவான். சத்தியவான். ஏதோ ஒரு விஷயம் அவரை காப்பாற்றுகிறது. அவரை சோதிக்கலாகாது. நாம் விரைவாக இந்த இடத்தைவிட்டு போய் விடுவோம்” என்று சொல்லி துர்வாசர் தன்னுடைய சீடர்களுடன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தார்.

திரௌபதிக்கும், பாண்டவர்களுக்கும் வந்த துன்பத்தை கிருஷ்ணர் தீர்த்தார். போய் வருகிறேன் என்று விடைபெற்று அவர்களை ஆசிர்வதித்து மறைந்தார்.

சூரியனால் கொடுக்கப்பட்ட வரம் இருந்தாலும் அது தக்கநேரத்தில் உதவி செய்யாமல் இருந்தது. உதவி செய்ய, துன்பம் நீக்க, சோதனையில் வெற்றிபெற தெய்வம்தான் துணை என்பது தருமபுத்திரருக்கு தெளிவாகத் தெரிந்தது.

அந்தணர்களையும், முனிவர்களையும், ரிஷிகளையும் தினந்தோறும் சந்தித்தபடி காம்யவனத்தில் பல பகுதிகளிலும் பாண்டவர்கள் சந்தோஷமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள். மழை, குளிருக்கு தாங்கும்படியாக அழுத்தமான மிகப் பெரிய பர்ணசாலை அமைத்து, சுற்றிலும் முள்வேலி பரப்பி, பாம்புகள், பூச்சிகள் உள்ளே வராதபடிக்கு முள்வேலிக்கு அப்பால் ஆழமான குழியைத் தோண்டி அதன்மீது நகரக்கூடிய மரப்பாலம் அமைத்து அங்கே திரௌபதியை பாதுகாப்பாக குடிவைத்தார்கள்.

காடுகளை அழித்து நாடாக்குவது என்பது அன்றைய காலகட்ட தர்மமாக இருந்தது. கிராமங்கள் ஐந்து சதவீதமும், நகரங்கள் மூன்று சதவீதமும்தான் இருந்தன. மற்ற இடங்களெல்லாம் புல்வெளியாகவும், மணற்பாங்காகவும், அடர்ந்த காட்டுப் பகுதியாகவும் இருந்தன. காடுகளில் துஷ்ட மிருகங்கள் வசித்து

பல்கிப் பெருகின. ஜனத்தொகை பெருகிக் கொண்டே வந்ததால் விவசாயம் செய்வதற்குக் காடுகளை அழிக்கவேண்டிய கட்டாயம் வந்தது. அதைத்தவிர வனங்களிலே இருக்கின்ற மிருகங்கள் கிராமங்களின் பக்கமோ, நகரத்தின் பக்கமோ வந்துவிடும் என்பதால், அவற்றை வேட்டையாட வேண்டிய கட்டாயமும் மனிதர்களுக்கு இருந்தது. அதை தங்களுடைய கடமையாக க்ஷத்ரியர்கள் கருதினார்கள்.

காடுகள் அழிப்பதின் ஆரம்பகட்டமாக துஷ்ட மிருகங்களை வேட்டையாடுவது முக்கியமாக இருந்தது. பசுக்களை புலியும், சிறுத்தையும், சிங்கமும் கொன்று விடுவதால், நிலங்களை யானைகள் பாழாக்குவதால் அவற்றை அழித்தொழிக்க வேண்டிய அவசியம் பரதகண்டத்து மனிதர்களுக்கு இருந்தது.

விவசாயிகளுக்காகவும், காடுகளுடே போகின்ற வியாபாரிகளுக்காகவும், வனத்திலே அமைதியாக ஜபதபங்களும், தியானமும் செய்ய வேண்டியிருந்த அந்தணர்களை காப்பாற்றக் கருதியும், க்ஷத்திரியர்கள் வனமிருகங்களை ஒடுக்கி காடுகளில் உள்ள மரங்களை வெட்டி விளைநிலங்களை உருவாக்கினார்கள். கிராமங்களை உருவாக்கினார்கள். காடுகள் மிதமிஞ்சி இருந்தன என்பதுதான் அன்றைய பரத கண்டத்தின் நிலைமை.

மழை பெறுவதற்கு காடுகள் உதவி செய்தாலும், அந்த அடைமழையின் காரணமாக தாவரங்கள் செழித்து நெருக்கமாக வளர்ந்தன. இன்றைய நகரங்களின் வீடுகள்போல அன்றைய காடுகள் காற்று புகாத வண்ணம், நீர் வடியாதவண்ணம் இருட்டுப் பாகமாவும், புதைச் சேறாகவும், மூங்கிலால் சுவர்போல எழுப்பப்பட்டதாகவும், பெரிய மரங்களின் இலைகள் உதிர்ந்து, அவை உரமாகி இன்னும் உச்சாணி கிளைவரை செழித்து வளர்வதற்கு வகைசெய்பவையாகவும் இருந்தன. மரங்களை வெட்டி எடுத்தல் என்பது மனித எத்தனத்திற்கு அதிகமான காரியம். எனவே, அதை தீயிட்டு கொளுத்துதலையும் அவர்களே செய்து வந்தார்கள்.

அன்றைய தர்மம் இன்றைக்கு அதர்மமாக இருக்கிறது. இன்றைய தர்மம் அன்று அதர்மமாக இருந்தது. ஆண்களோடு பேசுவதுகூட கூடாது என்பது திருமணமான பெண்களின் விதியாக இருந்தது. ஆனால், இன்று பேசுவது உரிமை என்று வந்துவிட்டது!

பிந்து மகரிஷியின் ஆணைப்படி திரௌபதியை தனியாக ஆசிரமத்தில் விட்டுவிட்டு அந்தணர்களை காப்பாற்றுவதற்காகவும், கொடிய விலங்குகளை கொல்வதற்காகவும் திசைக்கு ஒருவராக பாண்டவர்கள் பிரிந்து வேட்டையாடச் சென்றுவிட்டனர்.

பாலகுமாரன்

அந்தநேரம் சிந்துதேச மன்னனான ஜெயத்ரதன் திருமண விருப்பத்தோடு சால்வ தேசத்தை நோக்கி சென்று கொண்டிருந்தான். தன்னை ஆடம்பரமாக அலங்கரித்துக் கொண்டிருந்தான். பல மன்னர்கள் சூழ பேச்சும், சிரிப்புமாக காம்யவனத்திற்கு வந்து சேர்ந்தான்.

திரௌபதி வந்து நிற்பதையும், திண்ணையையும், வாசற்படியையும் சுத்தம் செய்வதையும், குனிந்து கோலமிடுவதையும், கூரைமீது இருந்த கொடிகளை இழுத்து, வேறு திக்கில் படர விடுவதையும் பார்த்தான். எல்லா அசைவுகளிலும் திரௌபதி மிகவேகமாக அவன் மனதைக் கவர்ந்தாள். மானிடப் பெண்ணா... இவ்வளவு அழகா... இந்த வனத்தில் இவளுக்கு என்ன வேலை? எந்த மகரிஷியின் மனைவி? இவ்வளவு அழகானப் பெண்ணை இந்த வனத்தில் பார்த்துவிட்டு நான் எந்த ஊருக்குப் போய் எவளை திருமணம் செய்வது? எதற்கு திருமணம் செய்வது? இவள் கிடைத்தால் போதுமே. இதோடு என் பெண் ஆசை ஒழிந்து விடுமே என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

“இவள் யாருடைய மனைவி என்று கேட்டு வா. இவ்வளவு அழகிய பெண்ணை நான் பார்த்ததே இல்லை. எவ்வளவு அழகிய புருவங்கள். மனதை கவரும் இடுப்பு. எவ்வளவு பெரிய கண்கள். இந்தப் பற்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. உடலின் மத்திய பாகம் எத்தனை சிறியதாக இருக்கிறது. இவள் திருமணமான பெண் போலத்தான் தோன்றுகிறாள். யாரிவள் கணவன் என்று உடனே விசாரித்து வா. இவள் கிடைத்தால் போதும், இவள் கிடைத்தால் போதும்” என்று உடன் வந்திருந்த கோடிகாவிடம் சொல்லிப் பரவசப்பட்டான்.

குண்டலங்கள் அணிந்த கோடிகா அந்த புல்மேட்டில் ஏறி திரௌதியை நெருங்கினான். “நான் கோடிகா. கோடிகாசிய மன்னன். நீ யார்? இந்த அடர்ந்த வனத்தில் உன்னைப் பார்ப்பதற்கு வியப்பாக இருக்கிறது. இவ்வளவு அழகிய பெண்ணான நீ முட்களும், புதர்களும் நிறைந்த இந்த வனத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இந்தக் காடு உனக்கு பயம் தரவில்லையா. முள்ளையும், பாம்புகளுக்கான பள்ளங்களையும் வைத்துக் கொண்டா நீ தைரியத்துடன் இருக்கிறாய்? நீ தேவகுமாரியா? இந்திரனின் மாளிகையிலிருந்து வந்திருக்கிறாயா? உன்மீது எனக்கு மரியாதை அதிகரித்திருக்கிறது. அதோ. அந்தத் தங்கத்தேரில் அமர்ந்து உன்னையே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பவர் சௌஜல தேசத்து மன்னனான ஜெயத்ரதன். அவனுடைய நண்பர்களோடும், அவனுடைய படைகளோடும் நாங்கள் பயணப்பட்டிருக்கிறோம். காம்யவனத்தின் அழகுகண்டு சற்று இளைப்பாறினோம். இங்கு உன்னைக்



கண்டதும் இந்த காம்யவனமே தனித்த சோபை பெற்றுவிட்டது. அழகிய கேசம் உடையவளே, எங்களைப் பற்றி உனக்கு அறிமுகம் செய்து விட்டோம். சௌஜல தேசத்து அற்புதமான மன்னனான ஜெயத்ரதன் படைகளின் வலிமையைப் பார். அவனுடைய வலிமைமிக்க சகோதரர்கள் இந்திரனைச்சுற்றி தேவதைகள் நிற்பதைப்போல அவனுக்குப் பாதுகாப்பாக இருக்கிறார்கள். நீ யாருடைய மனைவி? யாருடைய மகள்? கதம்ப மரத்தின் கிளையை வளைத்து நீ நிற்கின்ற இந்த கோலமே உன்னை பேரழகியாக காட்டுகிறது. அங்கு அத்தனைப் பேரும் திகைத்து நிற்பதைப் பார்" என்று புகழ்ந்து சொன்னான்.

திரௌபதி கதம்ப மரத்தின் கிளையை விட்டுவிட்டு தன்னை போர்த்திக்கொண்டாள். "புருஷன் இல்லாத நேரத்தில் நான் பரபுருஷனோடு பேசக் கூடாது. ஆனால், உனக்கு பதிலளிக்க இங்கு வேறு ஆணோ, பெண்ணோ, ரிஷிகளோ, அந்தணர்களோ இல்லை. அதனால் வேறு வகையற்று உன்னோடு நான் பேசவேண்டிய அவசியம் ஏற்படுகிறது." அந்த அரசன் பேசிய மரியாதைக்கு மகிழ்ந்து திரௌபதி தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டாள்.

"நான் துருபதராஜனின் மகள். கிருஷ்ணை என்று என்னை எல்லோரும் அறிவார்கள். நான் பஞ்சபாண்டவர்களான தருமர், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவரின் மனைவி. அவர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாட நாலாதிசைக்கும் போயிருக்கிறார்கள். யுதிஷ்டிரர் கிழக்கு பக்கமாகவும், பீமன் தெற்கு பக்கமாகவும், அர்ஜுனன் வடக்கு பக்கமாகவும், நகுல-சகாதேவர் மேற்குப் பக்கமாகவும் போயிருக்கிறார்கள். நீங்கள் குதிரைகளை அவிழ்த்துவிட்டு இளைப்பாறிக் கொள்ளுங்கள். நான் உணவு தயாரித்து உங்கள் சேவகர்கள் மூலம் உங்கள் இடத்திற்கு அனுப்புகிறேன்" என்று அவசரமாக பர்ணசாலைக்குள் புகுந்தாள்.

அவளைப் பற்றிய செய்தியை சுமந்துகொண்டு நண்பன் ஜெயத்ருதனிடம் போய் திரௌபதியின் சிறப்புகளை விவரித்தான். மற்றவர்களும் அருகே நெருங்கிவந்து காதுகொடுத்துக் கேட்டார்கள்.

"என்ன நண்பனடா நீ. அவ்வளவு அற்புதமான ஒரு அழகியை நான் மோகிக்கிறேன் என்று தெரிந்த பிறகும், அவளை இழுத்து வந்து என் மடியில் அமர வைக்காமல் வெறுமே ஜாதகத்தை கேட்டு வந்து நிற்கிறாயே. துடிப்பாக ஒரு நண்பன் கிடைப்பதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். நீ துடிப்பானவன் அல்ல. போய் அவளை அழைத்து வா." என்று சீறினான் ஜெயத்ருதன்.

"இல்லை. அவள் பதிவிரதாதேவி. பஞ்சபாண்டவர்களின் மனைவி. பஞ்சபாண்டவர்களின் வீரதீரம்பற்றித் தெரியாதா? யாரைப் பகைத்துக் கொள்வது என்பதில் ஒருவன் கவனம் செலுத்த வேண்டும். நீ தவறானபடி ஆசையை வளர்ப்பதை விட்டுவிட்டு போய் அந்தப் பெண்ணிடம் பேசிப் பார். உனக்கு தானாக அவள்மீது மரியாதை எழும். உன் ஆசைகள் அறும்." என்று புத்திமதி சொன்னான்.

புத்திமதிகள், கெட்டவர்களுக்குப் பிடிக்காது. மோக வயப்பட்டவர்களுக்கு தன் மோகம் மட்டுமே செயலாக இருக்கும். மற்றவை சிறிதளவுகூட முக்கியத்துவம் பெறாது நகர்ந்து விடும்.

"நான் போய்ப் பேசிவருகிறேன். நான் போய் அழைத்து வருகிறேன். நீ விலகி நில்" என்று சொல்லி, மற்ற நண்பர்களைப் பார்த்து ஏளனச் சிரிப்பு சிரித்தவாறு அவன் புல்மேடு ஏறினான்.

"அடிக் கிருஷ்ணை, பஞ்சபாண்டவர்களின் மனைவியா நீ? செல்வமெல்லாம் இழந்து நகரத்தைவிட்டு காட்டிற்கு வந்து பேரவஸ்தைப் படுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இன்னுமா நீ அவர்களைச் சுற்றிக் கொண்டிருக்கிறாய்? அறிவுள்ளப் பெண்கள் செல்வம் இழந்த கணவனை உபாசிக்க மாட்டார்கள். அக்கறை செலுத்த மாட்டார்கள். இவ்வளவு பெரிய அழகியாக இருந்து உனக்கு அறிவில்லையே. எதற்கு அவர்கள் பின்னே சுற்றுகிறாய்? வா, வந்து என் தேரில் ஏறிக்கொள். என் திரண்ட செல்வத்தை மனமாற அனுபவி. என் அரண்மனை அற்புதமானது. ஆயிரக்கணக்கான தாதிகள் உண்டு. இந்தக் காட்டில், இந்த குடிசையில் எப்படித்தான் வசிக்கிறாயோ! மழைக்கும் ஆகாது. வெய்யிலையும் காக்காது. பிடிவாதம் பிடிக்காதே. தேவையற்று கோபம் கொள்ளாதே. வீரதீர சொற்களைச் சிதறடிக்காதே. அறிவோடு யோசி. உனக்கு நான் வேண்டுமா அல்லது அந்த அனாதைகளா?" என்று அகம்பாவத்துடன் கேட்டான்.

"சீ! எவ்வளவு வெட்கம் கெட்ட பேச்சு," திரௌபதி படம் எடுத்த பாம்புபோல சீறினாள். "புருஷர்கள் இல்லாத இடத்தில் உள்ளே நுழைந்து வாய்க்கு வந்ததை உளறுகிறாயே, நீ மன்னனா? உன்னால் மக்களுக்கு எப்படி நன்மை செய்ய முடியும்? தீமையே உருவாகி நிற்கிறாயே. உனக்கு அன்னியமான பெண்ணிடமே இப்படி ஆசை வைக்கிறாயே, உனக்கு அடங்கிய பெண்கள் மீது நீ எத்தனை ஆளுமை செய்திருப்பாய்! எத்தனை இம்சை செய்திருப்பாய்! கேவலமான மன்னன் என்று எப்படி பெயரெடுத்திருப்பாய்! பாண்டவர்களின் பலம்பற்றி உனக்கு அறவே



தெரியாதா? நல்ல மனிதர்களின் சகவாசம் உனக்கு ஏற்பட்டதே இல்லையா? அதோ நிற்கிறதே அவ்வளவு பெரிய கும்பல், அதில் ஒருவன்கூடவா நல்லவன் இல்லை, ஒருவன் கூடவா உன்னை தடுக்கவில்லை?”

“தர்மம் பற்றியா பேசுகிறாய் கிருஷ்ணை?” அவன் கொஞ்சலாக பேச்சை ஆரம்பித்தான். “மன்னர்களுடைய தர்மம் பற்றி உனக்குத் தெரியாதா? உலகத்தில் உள்ள பெண்களும், ரத்தினங்களும் வலிமையுள்ள மன்னருக்குச் சொந்தமானவை.”

“கேட்பாரற்று வாழும் பெண்களின் கதியை எனக்கு சட்டமாகக் கொள்கிறாயா? என்னுடைய கணவர்கள் மிகப்பெரிய வீரர்கள். யட்ச, கந்தர்வ, ராட்சஸர்களோடு போர்புரியும் திறன் உடையவர்கள். அதர்மர்கள் மீது மிகுந்த கோபமுடையவர்கள். நாகப்பாம்பின் விஷம்போல வீர்யம்மிக்க கோபம் அவர்களுடையது. தபஸ்விகள், வித்வான்கள், பத்தினிப் பெண்கள் ஆகியோர் வனவாசிகளாக இருந்தாலும், கீழ்த்தரமாக பேசுவது கூடாது என்பது உனக்குத் தெரியாதா? மனிதர்களில் உன்னைப்போல நாய்கள்தான் இவ்விதம் குரைக்கும். பாதாளச் சாக்கடையில் விழுவதற்கே நீ முயற்சி செய்துகொண்டிருக்கிறாய். உன்னைக் காப்பாற்ற யாரும் இல்லை. உன் வீரத்தை பெரிதாக நினைக்கிறாயா? மதயானை எதிரே வரும்போது, அதை ஒரு சிறிய கொம்பினால் எதிர்ப்பதுபோல இருக்கிறது உன் செய்கை. தூங்குகின்ற சிங்கத்தின் பிடரியை பிடித்து இழுத்து அதை வெறியேற்றுவதுபோல் இருக்கிறது உன் காரியம். கோபம் கொண்ட பீமசேனனின் கர்ஜனையை கேட்கும்போது உன்னால் நிற்கக்கூட முடியாது. சுருண்டு விழுந்து விடுவாய். உனக்கு கர்வம் வந்திருப்பதும் நீ அழிவதற்குத்தான்.”

“இன்னும் என்ன பேசிக் கொண்டிருக்கிறாய்?” நண்பன் ஒருவன் சீறினான். ஜெயத்ரதன் அவனை வியப்போடு பார்த்தான். ஒரு சிறிய தேசத்தின் இளவரசனான அவனுடைய நண்பன் அவளுடைய போர்வையைப் பற்றி அப்படியே இழுக்க நினைத்தான். அவளைத் தூக்க முயற்சித்தான்.

“தொடாதே, விலகி நில்” அவள் தன் போர்வையை வேகமாக உதற, அவன் சுவரில் அடிபட்டு கீழேவிழுந்தான். அவனை தூக்கிக் கொண்டு போனார்கள்.

“இன்னொரு முறை இந்த முயற்சி நடந்தால் நான் பிராணஹத்தி செய்து கொள்வேன்,” என்று அவள் உரக்கக் கத்தினாள்.

ஆனால், திரௌபதியின் பர்ணசாலைக்குள் ஆறேழு அரசர்களும், இளவரசர்களுமாக ஜெயத்ரதனின் நண்பர்கள் அடைத்துக்கொண்டு நின்றார்கள். அவளுக்கு வேறுவழியே இல்லை என்று தெளிவாகத் தெரிந்தது. “என் புருஷர்கள் மீது நான் வைத்திருக்கின்ற பிரேமை உண்மை என்றால், நான் கற்புக்கரசி என்றால் அவர்களால் நீங்கள் அத்தனைபேரும் வதைபடுவீர்கள் என்பது நிச்சயம்.”

திரௌபதி அவர்களை நோக்கி நடக்க அவர்கள் வழிவிட்டார்கள். அவள் புல் சரிவில் இறங்கி நடந்து பாதையில் ஏறி ஜெயத்ரதனின் தேரில் ஏறி உட்கார்ந்தாள். ஜெயத்ரதன் சந்தோஷமாய் வெற்றி கூச்சலிட்டான். மற்றவர்கள் எதிரொலித்தார்கள்.

உற்று கவனித்தால் திரௌபதி என்கிற பெண்ணுக்கு ஏற்படுகின்ற இந்த இரண்டாம் முறை அவமானம் அன்றைய வாழ்வின் நிலையை நமக்குச் சொல்கிறது. வலிமைமிக்க க்ஷத்ரியர்கள் தாங்கள் வைத்ததே சட்டம் என்ற நினைப்போடு பொதுமக்களின்மீது தங்கள் ஆட்சி அதிகாரத்தை செலுத்திக்கொண்டிருந்தார்கள். உலகம் முழுவதும் தங்கள் காலின் கீழ் இருக்கிறது. அத்தனை மக்களும் தங்களின் அடிமை என்ற நினைப்பிலேயே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். தர்மத்தின் பக்கம் நிற்பது என்பது அவர்களுக்கு வெறும் மனப்பாடப் பகுதியாக இருந்தது. வாழ்வின் ஒரு பகுதியாக மாற அவர்களுக்குச் சொல்லித் தரப்படவில்லை. அவர்கள் அதை ஏற்கவும் இல்லை.

ஒரு பர்ணசாலையில் அழகிய ஒரு பெண் இருப்பின் அவள் தனக்குத்தான். க்ஷத்ரியனிடம் எந்த தர்மத்தைக் குறித்து பேசமுடியும்? சொத்து குறித்தோ, செல்வம் குறித்தோ, நதிநீர் பங்கீடு குறித்தோ அல்லது பசுக்கள் குறித்தோ அவனோடு பேச முடியுமா? அந்தநேரம் என்ன தோன்றுகிறதோ அதைத்தான் கட்டளையாகச் சொல்லுவான். அவனுக்கு என்ன விருப்பமோ அதைத்தான் தர்மமாகப் பேசுவான். இதுதான் பூபாரம். இதுதான் பூமியின் அவஸ்தை. பெண்களின் அழுகுரல் எங்கு அதிகமாக ஒலிக்கிறதோ, அங்கு காற்றில் விஷம் கலந்தது போன்ற உத்பாதங்கள் ஏற்பட்டு விடுகின்றன. கடல் ஊருக்குள் வருகிறது.

ஆனால், பூமியின் இந்த எதிர்ப்புகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு தொடர்ந்து வன்முறையே தன் தர்மம் என க்ஷத்ரியர்கள் கொள்கிறபோது அவதாரம் ஏற்படுகிறது. கிருஷ்ணனுடைய காரியம் இந்த க்ஷத்ரியர்களின் முதுகெலும்பை முறித்தல். இதற்கு மகாபாரதத்தில் பல்வேறு விதமான சாட்சியங்கள் இருக்கின்றன. சாதுக்களை ரட்சித்தல் என்பது க்ஷத்ரியர்களை அவர்கள் இடத்தில் நிலை நிறுத்துதல் என்றுதான் அர்த்தம்.

தேர் நகர்ந்தது. திரௌபதியை எங்கே அழைத்துப் போவது என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)



வரம்பு மீறிப் போனான் வரம் பெற்ற ராவணன்!

காம்யவனத்தில் வேட்டையாடிக் கொண்டிருந்த பஞ்சபாண்டவர்கள் ஒன்று கூடினார்கள். தருமர் தனக்கு மனம் பாரமாக இருப்பதாகவும், உற்சாகமின்றி இருப்பதாகவும், எங்கோ, ஏதோ தவறு தோன்றுவதாகவும் சொன்னார். வலப்புறத்திலிருந்து இடப்புறம் நோக்கி ஒரு நரி ஊளையிட்டுக்கொண்டு போயிற்று. அது துர்சகுனம் என்று சொன்னார். காற்று சுழன்று அடித்து தூசு கிளம்பியது. அதுவும் சரியில்லை என்று அவர்கள் கண்டு கொண்டார்கள். திரௌபதிக்கு ஏதோ கேடு வந்திருக்க வேண்டும். வாருங்கள் விரைவாகப் போகலாம் என்று தருமர் கட்டளையிட, பஞ்சபாண்டவர்கள் பர்ணசாலை நோக்கி தங்கள் குதிரைகளை மிகவேகமாகச் செலுத்தினார்கள்.

பர்ணசாலையை விட்டு திரௌபதியைக் கடத்திக் கொண்டுபோன குதிரைப்படையை நோக்கி தன்னுடைய அம்புகளை வேகமாகச் செலுத்தினான் அர்ஜுனன். குதிரைப்படையை சிதறடித்தான். வீரர்களின் தலைகள் உருண்டன. குதிரைகளுக்கு காயம் பட்டன. மீண்டும் எதிர்த்து வந்தவர்களை பீமன் அடித்து நொறுக்கினான். தருமர் தன் குதிரையில் ஏறி நின்றபடி இடையறாது பாணங்களை செலுத்திக்கொண்டிருந்தார். நகுல, சகாதேவர் கத்தியை எடுத்துக் கொண்டு அரச குமாரர்களின் தேர்களை உடைத்தார்கள். குதிரைகளை கட்டவிழ்த்து விட்டார்கள். சக்கரத்தில் அடித்து வெளியே அனுப்பினார்கள்.

அர்ஜுனன் ஜெயத்ரதன் எங்கே என்று தேடினான். அவனுடைய தேரில் ஒடுங்கிக்கொண்டு திரௌபதி இருப்பதை பார்த்து விட்டு கோபமடைந்தான். அவன் தேரின் கொடியை அறுத்தான். மண்டபத்தை உடைத்தான். அர்ஜுனனின் வேகத்தைக் கண்டு பயந்துபோன ஜெயத்ரதன்

மகாபாரதம்

68

தன்னுடைய தேரை வேகமாகச் செலுத்தினான். தேர் காட்டுப் பாதையில் குலுங்கிக் கொண்டு போயிற்று. ஆனால், வெகுசமீபமாக அர்ஜுனன் அவனை 'நில் நில்' என்று கோபமாகச் சொல்லியபடி வந்துகொண்டிருந்தான். தொடர்ந்தால் அர்ஜுனன் கொன்று போடுவான் என்று ஜெயத்ரதனுக்குத் தெரிந்தது. தேரை ஒரு ஓரமாகச் செலுத்தி திரெளபதியை கீழே குதிக்கச் சொல்லி தேரை மறுபடியும் பாதைக்கு ஏற்றி அவன் விரட்டிக் கொண்டு ஓடினான்.

திரெளபதி நடந்து வருவதைக் கண்ட அர்ஜுனன் அவளுக்கு கைகொடுத்து தன் குதிரையில் ஏற்றிக் கொண்டான். குதிரையை திருப்பி தருமரிடம் வந்து, "நீங்கள் நகுல சகாதேவர் மூவரும் திரெளபதியை அழைத்துக் கொண்டு பர்ணசாலைக்குப் போங்கள். நாங்கள் ஜெயத்ரதனை கொல்லாமல் வரமாட்டோம் என்று சொல்லிவிட்டு தருமரிடம் திரெளபதியை ஒப்படைத்தான். தருமர் தன் குதிரையில் திரெளபதியை ஏற்றிக் கொண்டார். குதிரைகள் திரும்பி பர்ணசாலை நோக்கிப் போயின.

பீமனும், அர்ஜுனனும் எல்லா அரச குமாரர்களையும் அடித்து நசுக்கினார்கள். சிரம் கொய்தார்கள். நெஞ்சுக்குள் அம்பை ஊடுருவச் செய்தார்கள். வாயை தைத்தார்கள். கடுமையாக சித்ரவதை செய்யும் வண்ணம் ஊசி போன்ற பலநூறு அம்புகளை ஒருவனின் உடம்பில் செலுத்தினான் அர்ஜுனன். அவனுடைய வேகம்கண்டு அவர்கள் பயந்தார்கள். ஜெயத்ரதன் எப்படியாவது தப்பித்து ஓடவேண்டும் என்ற நினைப்பிலேயே தன் குதிரையை செலுத்திக் கொண்டிருக்க, அர்ஜுனன் மற்றவர்களை விட்டுவிட்டு ஜெயத்ரதனை பின்தொடர்ந்தான். தேரின் அச்சை நிறுத்தினான். அர்ஜுனனைப் பார்த்து அவன் கைதூக்கி அலற, அவனை அர்ஜுனன் ஏதும் செய்யாது இருந்தான்.

ஆனால், சகலரையும் அடித்து உதைத்த பீமன் அருகே வந்து ஜெயத்ரதனின் தலையை கொத்தாகப் பிடித்தான். ஓங்கி தலையில் அடித்தான். பாறையில் தேய்த்தான். பளீர் பளீர்

என்று கன்னங்களில் அறைந்தான். கைகளை முறுக்கினான். காதில் கால் ஊன்றி அழுத்தினான். கனம் தாங்காமல் வலி தாங்காமல் ஜெயத்ரதன் விம்மி அழ, வேண்டாம் 'இவனை விட்டு விடுங்கள். அதிகம் அழுகிறான். பெண் பிள்ளை போல கெஞ்சுகிறான்' என்று அர்ஜுனன் சொன்னான். பீமன் அவன் தலைமுடியை பிடித்து நிறுத்தினான்.

"உனக்கு உயிர் பிச்சை தருகிறேன். நான் சொல்வதைச் சொல். பல மன்னர்கள் இருக்கின்ற சபைபோல் பாவித்து, நான் பஞ்சபாண்டவர்களுக்கு அடிமை என்று உரக்கச் சொல்ல வேண்டும். எங்கே சொல் பார்க்கலாம்" என்று அதட்ட, அவன் எழுந்து நின்று தன்னைச் சரி செய்து கொண்டு, உரத்த குரலில் 'நான் பஞ்சபாண்டவர்களுக்கு அடிமை' என்று கைகூப்பிச் சொன்னான். பீமன் திருப்தியானான். அவனை கயிற்றால் கட்டி அங்கிருந்த தேரில் தூக்கிப் போட்டான். அந்தத் தேரில் ஏறிக்கொண்டு தருமரை நோக்கி வேகமாக அர்ஜுனனோடு போனான். ஆடைகள் கிழிந்து தலைமுடி கலைந்து அழுத கண்களோடு இருக்கின்ற ஜெயத்ரதனைப் பார்த்து தருமர் பரிதாபப்பட்டார்.

"உனக்கு எதற்கு இந்த வேலை? ஏன் மாற்றான் மனைவியை விரும்புகின்றாய்? அது தவறு என்று தெரிந்து நீ எப்படி காமவசப்பட்டாய்? பெண்கள் பலவீனர்கள் என்று தெரிந்தும் துன்புறுத்துவது எந்த ஆணுக்கு அழகு? அவன் எப்படி ஆண்மகனாவான். உன்னை நான் விடுதலை செய்ய முடியாது. உன்னால் துன்பமுற்ற என் மனைவி திரௌபதிதான் உன் தலையெழுத்தை தீர்மானிக்க வேண்டும். எனவே, அவள் முன்பு மண்டியிடு" என்று சொல்ல, ஜெயத்ரதன் திரௌபதியின் முன்பு மண்டியிட்டான். முகம் பொத்திக் கொண்டு அழுதான்.

"இவன் தலையை சிரைத்து ஐந்து குடுமிகள் வைத்து பஞ்ச பாண்டவர்களுக்கு அடிமை என்று சொல்ல வைத்து விட்டீர்கள். இவனுக்கு இந்த அவமானம் போதும். இது அவன் ஆயுசுக்கும் மறக்காது. எனவே, இவனை விட்டுவிடலாம்," என்று திரௌபதி தெளிவாகச் சொன்னாள். அவர்கள் எல்லோரும் மௌனமாக இருக்க, ஜெயத்ரதன் மெல்ல எழுந்து பின்னடைந்து சகலரையும் வணங்கி, பர்ணசாலையிலிருந்து முதுகு காட்டாமலேயே பின்பக்கமாகவே நடந்து தடுமாறி தரையில் இறங்கி நடந்தபடியே தன் சிந்து தேசம் நோக்கிப் போனான்.

நடந்த மொத்தமும் யோசனை செய்தபோது ஜெயத்ரதனின் மனம் கொதித்துக் கொண்டிருந்தது. அவன் கங்கா துவாரத்திற்குப் போய் அங்கு நீரில் மூழ்கி எழுந்து தன் மனதையும் தன்னையும் சுத்தப்படுத்திக் கொண்டு கடுமையான தவத்தில் ஆழ்ந்தான். வெகுகாலம் அசையாது சிவநாமாவையே சொல்லிக் கொண்டிருந்தான். அவன் தவத்திற்கு சிவன் மெச்சி அவன் முன்பு தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். தேரிலேறி ஐந்து பஞ்ச பாண்டவர்களையும் அழிக்க வேண்டும் என்கிற வரம் கேட்டான். சிவன் சிரித்தார்.

"இல்லை. பஞ்சபாண்டவர்களை உன்னால் அழிக்க முடியாது. உனக்கு யார் என்ன விவரம் என்று தெரியவில்லை. அந்த விஷ்ணுவே இந்த பூவுலகத்தை, பிரபஞ்சத்தை காப்பாற்றுகிறார். ஒரு சமயம் நீரில் மூழ்கியிருந்தபோது, எங்கும் நீராக நிரம்பி இருந்தபோது வராக அவதாரம் எடுத்து தன் கொம்புகளுக்கிடையில் உலகத்தை வைத்து நீரிலிருந்து மீட்டு அதை மண்ணாகவும், நீராகவும் மாற்றினார். சரியான பாதையில் சுழல விட்டார். அதேபோல இந்த பூமியை துன்புறுத்திக் கொண்டிருந்த ஹிரண்யகசிபுவை பல வரங்கள் வாங்கியவனை வாசற்படியின் நடுவில் போட்டு அந்தி வேளையில் அவன் வயிற்றைக் கிழித்து குடலை உறுவி அவனைக் கொன்று அவன் மகனுக்கு உயர் பதவி அளித்தார். வேறொரு க்ஷத்ரியனான மகாபலியை அவன் ஒரு உயரம் போவதற்கு உதவி செய்யக் கருதி பிராமணனாக வந்து உன் ஜபதபங்களையெல்லாம் விட நான் பெரியவன் என்று காட்டுவதற்காக மூன்று அடி நிலதானம் கேட்டு முதல் அடியை ஆகாயத்திலும், இரண்டாம் அடியை பூமியிலும், மூன்றாம் அடியை எங்கே வைப்பது என்று கேட்க, மகாபலி தன் தலையைக் காட்ட, அவன் தலையில் தன் காலை வைத்து அவனை பூமிக்குள் அழுத்தினார். அப்போது பலராமராக, கிருஷ்ணராக தோன்றியிருக்கிறார். அந்த கிருஷ்ணரே பஞ்சபாண்டவர்கள் பக்கம் இருக்கிறார். அர்ஜுனனுக்கு சினேகமாக இருக்கிறார். பாண்டவர்கள் மூலம் க்ஷத்ரிய உலகத்தை வரைமுறைப்படுத்த மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார். எனவே, ஜெயத்ரதா, இதேபோல நூறு மடங்கு தவம் செய்தாலும் உன்னால் அர்ஜுனனையோ, பீமனையோ, தருமனையோ கொல்ல முடியாது. எனினும் உன் தவத்தை மெச்சி அர்ஜுனன் தவிர மற்ற நான்கு பேரை ஒரே ஒருநாள் யுத்தத்தில் தடுத்து நிறுத்துகின்ற வலிமையை உனக்குத் தருகிறேன். ஒருநாள் மட்டும் உன் கை மேலோங்கி நிற்கும். அர்ஜுனன் அப்பொழுதும் உன்னைவிட உயரமாகத்தான் இருப்பான்'' என்று சொன்னார்.

சிவனாலும் கைவிடப்பட்ட நிலையை புரிந்து கொண்டு தன்னை நொந்துகொண்டு ஜெயத்ரதன் தன் தேசத்திற்குப் போனான். காம்யவனத்தில் இன்னும் சிறிது காலம் வாழ வேண்டுமே, நல்லபடி நாட்கள் நகர வேண்டுமே என்ற கவலையில் பஞ்சபாண்டவர்கள் திரௌபதியை பாதுகாத்து வாழ்ந்து


பாலகுமாரன்

வந்தார்கள்.

திரௌபதி கடத்தப்பட்ட செய்தி கேட்டு மார்க்கண்டேய முனிவர் பஞ்சபாண்டவர்களுக்கு ஆறுதல் சொல்வதற்காக, மீட்டு வந்த அவர்கள் வீரத்தை பாராட்டுவதற்காக காம்யவனத்திற்கு வந்து சேர்ந்தார்.

“இப்படிப்பட்ட இம்சை பஞ்சபாண்டவர்களான எங்களுக்கு ஏன் நடக்கிறது? திரௌபதி சாதாரணமானவளா, அவள் ஒரு வேதிகையிலிருந்து பிறந்த கன்னிகையல்லவா? துருபதன் என்கிற வலிமை மிக்க அரசனுக்கு பிறந்தவள் அல்லவா? வலிமை மிக்க சகோதரனை உடையவள் அல்லவா? பஞ்சபாண்டவர்களாகிய எங்களுக்கு மனைவியாக வாய்த்தவள் அல்லவா? இத்தனை இருந்தும் இவளைப்போய் தொந்தரவு செய்கிறார்களே. எத்தனை பதறியிருப்பாள். எத்தனை அழுதிருப்பாள். எத்தனை கூக்குரலிட்டிருப்பாள். இத்தனை அவமானம் இவளுக்கு ஏன். எங்களைவிட கஷ்டப்பட்டவர்கள் இந்த உலகத்தில் யாராவது இருக்கிறார்களா. இத்தனை வலிவு இருந்தும் மோசமான ஜனங்களால் மறுபடி மறுபடி பாதிக்கப்பட்டவர்கள் எவரேனும் உண்டா. எங்கள் கண்முன்தான் பாஞ்சாலி அவமானப்படுத்தப்பட்டாள்” என்று மறுகினார் யுதிஷ்டிரர்.

“அவளைக் கவர்ந்துபோன சில மணித்துளிகளில் நீ அவளை மீட்டு கொண்டு வந்துவிட்டாய். யுதிஷ்ட்ரா, ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் மனைவியான சீதையை ராவணன் என்னும் அரக்கன் கள்ளத்தனமாக கவர்ந்துபோய் பல மாதங்கள் தன் நந்தவனத்தில் சிறை வைக்க, அவனை ஆஞ்சனேயர் துணையுடன், வானரப்படையுடன், கடலில் பாலம் கட்டி கடந்துபோய் இலங்கையில் இறங்கி, ராவணனை போருக்கு அழைத்து அவனை வெற்றி கொண்டு சீதையை மீட்டு வந்து, சீதையின் கற்பை அக்னி மூலம் மறுபடியும் பிரகடனப்படுத்தி அவளை அயோத்தி நகருக்கு அழைத்துவந்து பட்டாபிஷேகம் செய்து கொண்டார். சீதாதேவி அலறியபடி தேடிய தேடல், கணவனை காண முடியுமோ முடியாதோ என்று குமுறிக் குமுறி சீதாதேவி அழுத அழுகை, இந்த உலகத்தில் எவருக்கும் வரலாகாது. எனவே, உன் துக்கத்தை மட்டும் பெரிது என்று எண்ணி புலம்பாதே” என்று ஆறுதல்படுத்தினார்.

“ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியின் கதை என்ன?”

“இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த அஜன் என்ற அரசன் அயோத்தியை ஆண்டு வந்தான். அவனுக்கு தசரதன் என்ற ஒரு புதல்வன் இருந்தான். வெகுநாட்களாக தசரதனுக்கு மக்கட்பேறு இல்லாது போகவே மிகப்பெரிய யாகம் ஒன்று செய்து அந்த யாகத்தின் மூலம் தசரதருக்கு நான்கு குமாரர்கள் பிறந்தார்கள் - தசரதருடைய மூன்று மனைவிக்கு நான்கு குமாரர்களாக, கோசலைக்கு ராமரும், கைகேயிக்கு பரதனும், சுமித்ரைக்கு லட்சுமணனும், சத்ருக்னனும் மகன்களாக பிறந்தார்கள். இவர்களில் ராமரும், லட்சுமணனும் இணைபிரியாது இருக்க, பரதனும், சத்ருக்னனும் மிகுந்த பாசத்தோடு இருந்தார்கள்.

கூனியாய் பிறந்த மந்தரையின் துர்போதனையினால் கைகேயி தசரதரிடம் பரதனே அரசாள வேண்டும் என்றும், ஸ்ரீராமர் காட்டுக்குப் போகவேண்டும் என்றும் வரம் கேட்டாள். நன்கு வளர்ந்த அந்தக் குழந்தைகள் தனக்கு உதவியாக இருப்பார்கள் என்ற தசரதருடைய ஆசையில் மண் விழுந்தது. தசரதர் மிகுந்த துக்கத்தோடு ஸ்ரீராமரை வனத்திற்கு அனுப்ப முடிவு செய்தார். ராமருக்குத் துணையாக லட்சுமணனும், ராமனோடு நிச்சயம் வருவேன் என்று பிடிவாதமாக சீதையும் சேர்ந்துகொள்ள, மூவரும் வனம் நோக்கிப் பயணப்பட்டார்கள். அந்த நேரம் பரதன், சத்ருக்னன் இருவரும் தங்களுடைய மாமன் வீட்டிற்கு போயிருந்தார்கள். தமையனார் வனம் போனதைப் கேள்விப்பட்ட பரதன், ராமரைப் பின் தொடர்ந்து வந்து தந்தை இறந்த செய்தியைச் சொல்லி, வந்து அரசாளுமாறு வேண்டிக்கொள்ள, தந்தை இருந்தபோது உண்டான கட்டளை இறந்தபோது இல்லை என்று ஆகுமா? எனவே, அவர் இட்ட கட்டளையை முடித்து விட்டு வருகிறேன். கவலை கொள்ளாதே என்று சொல்ல, ராமருடைய பாதுகையை வாங்கிக்கொண்டுபோய் தான் அரசாங்கம் செய்யாமல் அந்த பாதுகையை சிம்மாசனத்தில் வைத்து அதை ராமராஜ்யமாகவே பரதன் ஆண்டுவந்தான்.

தெற்குப் பக்கம் வனங்களை நோக்கி ராமரும், லட்சுமணரும் சீதையோடு சென்றனர். அரக்கர்களுடைய தொல்லை முனிவர்களையும், ரிஷிகளையும், அந்தணர்களையும் அதிகம் கொடுமைப்படுத்துகிறது என்பதை உணர்ந்து அவர்களை அழிப்பதற்காக இன்னும் தென் திசை நோக்கி நடக்கத் துவங்கினர். நதியைக் கடக்கும்போது உதவி செய்த படகோட்டி குகனை நட்பாக்கிக்கொண்டு அயோத்தியின் எல்லையில் அவரை காவல் இருக்கும்படி பணித்தார் ராமர்.

இப்பொழுது நான் ராவணனுடைய கதையைச் சொல்கிறேன், கேள். ஸ்ரீராமர் வனவாசம் போகும்போது ராவணன் இலங்கைக்கு அரசனாகி விட்டான். ஆனால், இலங்கையினுடைய அரசன் வைஷ்ணவன் என்கிற குபேரன். அவன் பிரம்மாவின் மகனான புலஸ்தியருடைய மகன்.

தந்தையைக் காட்டிலும் தன் பிதாமகனான தாத்தாவை மிகவும் நேசித்த வைஷ்ரவன் அவன். அவருக்கு சிஸ்ருஷை செய்தான். அதனால் தந்தை கோபமடைந்தார். விஸ்ரவா என்ற இன்னொரு மகனை உற்பத்தி செய்தார். விஸ்ரவா, வைஷ்ரவன் மீது கோபமுள்ளவனாக இருந்தான். புஷ்போத்கடை, ராகை, மாலினி என்ற அந்த மூன்று கன்னிகைகளும் புலஸ்தியருக்கு உதவியாக இருந்து சந்தோஷமளித்தார்கள். அவர்களுடைய உபசரிப்பில் மனம் குளிர்ந்து அவர்கள் விரும்பியபடியே மக்கள் பேற்றை புலஸ்தியர் அளித்தார். புஷ்போத்கடைக்கு ராவணன், கும்பகர்ணன் என்ற இரண்டு மகன்களும், ராதாவிற்கு கரண், சூர்பணகை என்ற மகனும், மகளும், மாலினிக்கு விபீஷ்ணன் என்ற மகனும் பிறந்தார்கள். அதில் விபீஷ்ணன் அழகுள்ளவனாகவும், அமைதியுள்ளவனாகவும் இருந்தான். மற்றவர்கள் அரக்கர் குணத்தை அதிகம் வளர்த்துக்கொண்டார்கள். தங்களுடைய சகோதரனான குபேரனை பார்க்கப் போனார்கள். பிரம்மா குபேரனுக்கு இலங்கையை பரிசளித்து அதில் அற்புதமான கோட்டைகளையும், கொத்தளங்களையும் நிறுவி திரண்ட செல்வத்தைக் கொடுத்து, உலகம் முழுவதும் சுற்றும் வண்ணம் ஒரு புஷ்பக விமானத்தையும் கொடுத்து அவனுக்கு ராஜராஜன் என்ற பட்டத்தையும் கொடுத்து குபேரன் என்று அவனை அழைக்கும்படியாகவும் கட்டளையிட்டான்.

வைஷ்ரவன் என்கிற குபேரன் மிக அற்புதமாக இலங்கையை ஆண்டுவர, அவன் ஆட்சியைப் பார்த்து ராவணன் பொறாமைப்பட்டான். இமயமலைக்குச் சென்று கடும் தவம் செய்தான். மகாதேவனை இடையறாது ஸ்மரணை செய்து அவர் எதிரேவர வேண்டினான். மகாதேவன் தோன்றாதது குறித்து, தன்னுடைய சிரசை கிள்ளி அக்னியில் எரிந்து தன் தவத்தை உக்கரமாக்கினான். மகாதேவன் மனம் இறங்கி அவன் முன்பு தோன்றினார். உன்னால் சிதைக்கப்பட்ட உன் தலை மறுபடியும் உன்னிடம் வந்து சேரும். எவர் உன் தலையை சிதைத்தாலும் மறுபடியும் அந்தத் தலை முளைக்கும். உன் உடம்பில் எந்தக் குரூரமும் ஏற்படாது. நினைத்தபடி உருவம் தரிக்க முடியும். உன்னால் பகைவர்களை வெல்ல முடியும் என்று ஆசிர்வதித்தார்.

மகாதேவனே, கந்தர்வ, தேவ, அசுர, யட்ச, ராட்ஸச, சர்ப்ப, கின்னர, மற்ற பூதங்களால் எனக்கு தோல்வியே உண்டாகக்கூடாது என்று ராவணன் கைகூப்பி வேண்ட, அவ்விதமே உனக்கு எவரிடமும் தோல்வி உண்டாகாது. மனிதரைத் தவிர மற்ற எவரிடமும் நீ பயமில்லாமல் இருக்கலாம். மனிதரிடம் பயந்துதான் இருக்க வேண்டும் என்று சொல்ல, ராவணன் அலட்சியமாக அந்த வரத்தை ஏற்றுக் கொண்டான்.

கும்பகர்ணன் தாமஸ குணமுடையவன். நன்கு தூங்குகின்ற வரம் கேட்க, அவ்விதமே வரம் தரப்பட்டது. விபீஷணன் இமயத்திற்கு அருகிலிருந்து தவம் செய்தான். அப்போது அவனிடமும் என்ன வரம் வேண்டும் என்று கேட்க, மிகப் பெரிய ஆபத்து வந்தாலும் என் மனதில் பாவக்கருத்து தோன்றக் கூடாது. கற்றுக் கொள்ளாமலேயே பிரம்மாஸ்திர பிரயோகமும், தர்ம நெறிகளும் எனக்குள் வரவேண்டும் என்று வேண்டினான். அவனுக்கு அவ்விதம் ஆசிர்வாதம் தரப்பட்டது.

ராவணன் தன்னை இலங்கை மன்னனாக மாற்றிக் கொண்டான். மிகச்சிறந்த மன்னனாக வாழ்ந்தான். அவன் குடிமக்கள் எந்தக் குறையும் இல்லாமல் அங்கு வசித்தார்கள். அவனுடைய பராக்கிரமத்தால் நவகோள்களை தன்னுடைய படியாக்கினான். எப்பொழுதும் சந்திர ஒளி வீசும்படியாகவும், தென்றல் காற்று சுழல்படியாகவும், அவ்வப்போது மழை பெய்யும்படியாகவும், அமைதியாக சூரியன் மிளிரும்படியாகவும், நட்சத்திரங்கள் அருகே வந்து பிரகாசிக்குமாறும் கட்டளையிட்டான். இயற்கையை தன் பக்கம் வளைத்தான். இது தவறு என்று சொன்னபோதும் அவன் கேட்கவில்லை. இயல்பான இயற்கையே இல்லாத போது வருணனும், சூரியனும், சந்திரனும் அடிமைப்பட்டு கிடந்தபோது அவன் சாதாரண ரிஷிகளையும், முனிவர்களையும், அந்தணர்களையும் துன்புறுத்தத் துவங்கினான். அதில் சந்தோஷம் கண்டான்.



தேவர்கள் ஒன்றுகூடி நாராயணனை வேண்டினார்கள். நாராயணன் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ராமராகப் பிறந்தார். அவருடைய பஞ்சணை பாம்பானது லட்சுமணனாக அவதரித்தது. ராவணனின் வதத்திற்கென்றே அவர் பிறந்திருப்பதால் அவரை தென்திசை நோக்கிச் செலுத்த துந்துபி என்ற கந்தர்வி ஸ்ரீமந் நாராயணன் ஆணைப்படி கூனி என்கிற வேலைக்காரியாக கோபமுடையவளாகப் பிறந்தாள். சரியான நேரத்தில் கைகேயியை உசுப்பி ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை மனைவியோடும், தம்பியோடும் கானகத்திற்குப் போக ஏற்பாடு செய்தாள். தேவர்களின் பெரும்பகுதியினர்

குரங்குகளாக தென்திசையில் ராம காரியத்திற்காக பிறந்தார்கள். அவர்கள் மிகுந்த பலமுடையதாக தங்கள் சாம்ராஜ்யத்தை கிஷ்கிந்தையில் நிறுவினார்கள்.

முனிவரின் ஆசிரமத்திற்கு வந்து தங்கினார்கள். அந்த இடத்தில் சூர்பணகை வந்து சீதையை பயமுறுத்தியதால் லட்சுமணன் சூர்பணகையின் மூக்கையும், மேலுதட்டையும் அறுத்து எறிந்து விட்டான். மிகுந்த கோரமான முகத்தோடு தன்னுடைய சகோதரர்களான கரன், விதூஷணர்களிடம் இதைச் சொல்ல, சூர்பணகைக்கு தீங்கிழைத்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை கொல்வதற்காக கரதூஷணர்கள் பெரிய அரக்கர் பட்டாளத்தோடு வந்தார்கள். சகலரும் ராமரால் கொல்லப்பட்டார்கள். சூர்பணகை தப்பி வான் வழியே பறந்து இலங்கையில் இறங்கினாள். ராவணன் அரசவையில் அலறி அவன் காலடியில் விழுந்தாள். மூக்கும், உதடும் அறுபட்டு ரத்தம் உறைந்த நிலையில் இருக்கின்ற சூர்பணகையைக் கண்டு ராவணன் கோபப்பட்டான். யார் இதைச் செய்தது என்றான்.

ராம, லட்சுமணரின் பெயரைச் சொல்லி, ராமரைக் கொன்றே ஆகவேண்டும் என்ற காரணத்தினால் சீதையினுடைய அழகையும், சீதை உனக்கே உரியவள் அவளை உனக்காகக் கொண்டு வரலாம் என்று போன நேரத்தில் இப்படி என்னை அங்கஹீனம் செய்து விட்டார்கள் என்று மாற்றிச் சொன்னாள். சீதையின் அழகை விவரித்தாள்.

உடனே புஷ்பக விமானம் ஏறி விதியின் வசத்தால் இழுபட்டவன்போல ராவணன் கோதாவரி கரைக்குப் போனான். அங்கு தன் மாமன் மாரீசன் இடத்திற்கு வந்து இறங்கினான். மாரீசன் புத்திசாலி. ஏற்கனவே ராமனால் அடிபட்டு இங்கு வந்து ஒளிந்து கொண்டிருப்பவன். அவனிடம் சூர்பணகை பற்றியும், கர, தூஷணர்கள் மரணம் பற்றியும் சொல்ல, நீ ராமனை பகைத்துக் கொள்ளாதே. அவர் வில் உறுதியானது. அவர் சரங்கள் பிழை செய்யாதவை. அவரை எதிர்த்து ஒருவரும் இங்கு நிற்க முடியாது என்று சமாதானம் சொல்ல, வெட்டிச் சாய்த்து விடுவேன் என்று கோபத்தோடு ராவணன் எழுந்தான். இவன் கையால் சாவதை விட ஸ்ரீராமர் கையால் மரணமடையலாம் என்று மாரீசன் தன்னை அழகிய மானாக, பொன்னிற மேனி உடையவனாக மாற்றிக் கொண்டான்.

பர்ணசாலைக்கு அருகேபோய் சீதை பார்க்கும்படி முன்னும் பின்னும் அலைந்தான். சீதை அந்த மான் வேண்டும் என்று ஆசையோடு ராமனைக் கேட்டாள். இது அரக்கர்கள் வசிக்கும் காடு. இம்மாதிரியான மிருகங்களெல்லாம் அரக்கர்கள் எடுத்த வடிவங்களாக இருக்கும். இயற்கைக்கு விரோதமாக உடம்பெல்லாம் பொன்னிறமாக மான் இருப்பதில்லையே என்று ஸ்ரீராமர் பதில் சொல்ல, நிச்சயம் அந்த மானோடு நான் விளையாட வேண்டும். இதுகூட எனக்குச் செய்யக் கூடாதா என்று ஆதங்கப்பட, வேறு வழியின்றி லட்சுமணனை காவலுக்கு வைத்துவிட்டு ராமர் மானைத் தொடர்ந்தார். மான் போக்குகாட்டி ஓடியது.

தழைகளை தின்பதற்காக அருகே வரும். வினாடி நேரத்தில் தொலைதூரம் ஓடிப் போய் விடும். அது அருகே வருகின்ற அழகும், தொலைதூரம் ஓடிப் போகின்ற வேகமும் பார்த்து ஸ்ரீராமருக்கு சந்தேகம் வந்தது. திடீர் என்று மான் காணாமல் போயிற்று. மான் போன தடங்களே இல்லை. ஆனால், தொலைதூரத்தில் மான் நின்று கொண்டிருந்தது. எப்படி போயிருக்க முடியும். இரண்டு பக்கங்களும் அடர்த்தியான புதர்கள். இதுதான் பாதை. ஆனால், பாதையில் மானின் குளம்புகளே இல்லை. புதர்கள் எதுவும் சேதமடையவில்லை. அப்படியானால் இது உண்மையான மான் அல்ல. அவர் மறுபடியும் அருகே போக, மான் அமைதியாக இருந்துவிட்டு அவர் நெருங்கியதும் மான் வேகமாக ஓடத் துவங்கியது. ஸ்ரீராமர் வில்லை வளைத்து நாண் ஏற்றி மானைக் குறி பார்த்து எய்தார். மான் இப்பொழுது அந்த சரத்தை தாங்குவதற்காக தயாராய் நின்றது. உடம்பில் வாங்கிக் கொண்டது.

'ஹே லட்சுமணா, ஹே சீதே' என்று தீனமாக குரல் எழுப்பியது. மாரீசன் ராவணன் சொல்படி இந்த வார்த்தைகளை சொல்லிவிட்டு ராமருடைய அம்பை உள்வாங்கி மரணமடைந்தான்.

ராமர் இந்த வார்த்தை கேட்டு திடுக்கிட்டார். மான் உருக்குலைந்து ராட்சஸனாக மல்லாந்து கிடந்தது. அப்படியானால் இது அரக்கர்களுடைய சூழ்ச்சிதான். இவ்வளவு தூரம் தன்னை இழுத்து வந்ததற்கு ஏதோ ஒரு நோக்கம் இருந்தாக வேண்டும். என்ன அது? எதுவாக இருந்தாலும் லட்சுமணன் அங்கு இருக்கிறான் கவலை இல்லை என்று வேகமாக பர்ணசாலை நோக்கி நடந்தார்.

தெள்ளத் தெளிவாக சீதைக்கும், லட்சுமணனுக்கும் கேட்டது. லட்சுமணன் எழுந்து நின்று சப்தம் வந்த திசையையே உற்று நோக்கினான் சீதை திடுக்கிட்டாள்.

'உன் தமையனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது. அதனால்தான் இப்படி தீனமாக குரல் கொடுக்கிறார். தயவுசெய்து ஓடு. அவர் எங்கிருக்கிறார் என்று பார். அவருக்கு உதவி செய்.' என்று உத்தரவிட்டாள். லட்சுமணன் நகர மறுத்தான். 'இல்லை இது அண்ணனுடைய குரல் இல்லை. மேலும், அண்ணன் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இவ்வளவு தீனமாக குரல் எழுப்பவே மாட்டார். அண்ணனை ஜெயிப்பதற்கு இந்த உலகத்தில் யாரும் பிறக்கவில்லை. எனவே, அவரைப்பற்றி கவலைப்படாதீர்கள். இரண்டு நாழிகையில் வெகு நிச்சயம் அவர் இங்கு இருப்பார்.' என்று ஆறுதல் சொன்னான். ஆனால், சீதை கேட்கவில்லை. இப்பொழுது போகிறாயா இல்லையா என்று கேட்டாள். லட்சுமணன் அந்த வார்த்தையை காதில் வாங்காதுபோல் இருந்தான். 'மூடனே, உன்னுடைய கபட எண்ணம் புரிகிறது. அப்படிப்பட்ட எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.' என்று கடுமையாகப் பேசினாள்.

(தொடரும்)

லட்சுமணன் சீதையின் இடத்தை விட்டு நகர்ந்த நேரம், ராவணன் பர்ணசாலைப் பகுதியில் பிரவேசித்தான். வாசலில் நின்று 'பவதி பிட்சாம் தேஹி...' என்று குரல் கொடுத்தான். சீதை வெளியே வந்து பழங்களையும், கிழங்குகளையும் தட்டில் எடுத்து வந்து அவனுக்குக் கொடுப்பதற்கு தயாரானாள். ஒரு சந்நியாசியைப்போல மாறுவேடத்தில் வந்திருந்த ராவணன், சீதையின் அழகைப் பார்த்து திகைத்தான். சட்டென்று, தன் வேடத்தை உதறி சுய ரூபத்தோடு காட்சியளித்தான்.

"என் பெயர் ராவணன். நான் லங்கா நகரத்தின் மன்னன். அரக்க குலத்தோன். உன் அழகு என்னை மயக்குகிறது. எனக்கு மனைவியாகி விடு. இந்தக் காட்டில் எதற்கு அனாதைபோல இருக்கிறாய்? நான் உன்னை மிகச்சிறந்த மகாராணியாக, என் பட்டமகிஷியாக ஆக்குகிறேன்." என்று ஆசை வார்த்தைகள் சொல்ல, அவள் 'ச்சீ... தூ...' என்று சொல்லிவிட்டு அவன் பார்வையிலிருந்து தப்பிப்பதற்காக பர்ணசாலைக்குள் ஓடினாள். ராவணன் பர்ணசாலைக்குள் புகுந்து அவளுடைய கைகளை நீட்டி மறித்தான். சீதை மூர்ச்சையானாள். அவள் கூந்தலைப்பற்றி இழுத்துக் கொண்டு தன்னுடைய விமானத்தில் வைத்து விமானத்தில் ஏறி வானத்தில் ராவணன் பறந்தான்.

ராமச்சந்திரமூர்த்தியின் பத்தினியான சீதா, ராவணனுடைய விமானத்தில் மூர்ச்சையடைந்து கிடப்பதை, அப்போது வானில் பறந்துகொண்டிருந்த ஜடாயு பார்த்து, அவளை ராவணன் அபகரித்துப் போகிறான் என்பதை உணர்ந்து ராவணனைத் தடுத்தார். "இதென்ன நீச காரியம்! ஒரு மன்னன் செய்ய வேண்டியதா இது? புருஷன் இல்லாமல் தனியாக இருக்கின்ற பெண்மணியின் முன்பு வேடமிட்டுக் கொண்டு வந்து, பிறகு வளைத்து எடுத்துக் கொண்டு போகிறாயே, என்ன நியாயம் இது?" என்று சொல்லி, அவன் விமானத்தை பறக்க விடாமல் தடுத்தார். விமானம் தாழப் பறந்தது. தன் அலகாலும், நகங்களாலும் அவனுடைய உடம்புகளில் பலத்த காயங்களை ஏற்படுத்தினார். ராவணனுடைய உடம்பு முழுவதும் ரத்தம் வடிந்தது. அவன் வலி தாங்காமல், கடும் கோபத்துடன், இடுப்பிலிருந்த கத்தியை உருவி ஜடாயுவின் சிறகுகளை வெட்டி வீழ்த்தினான். ஜடாயு கீழேவிழ, விமானம் தொடர்ந்து பறந்தது. கடல் கடந்து இலங்கையில் இறங்கிற்று.

ஸ்ரீராமர் வேகமாக திரும்பிக் கொண்டிருக்கிறபோது எதிரே லட்சுமணன் வருவதைப் பார்த்து கோபமானார். 'என்ன முட்டாள்தனம் இது! ஏன் சீதையை விட்டுவிட்டு வந்தாய்? இது அரக்கர்களின் காடல்லவா, இது தெரிந்தும் இப்படி செய்திருக்கிறாயே! என்று சற்றே கடுமையாகச் சொல்ல, சீதை தன்னை நோக்கி வீசிய கடும் சொற்களை லட்சுமணன் விவரித்தான். ஸ்ரீராமர் துக்கமானார். வழியிலே பெரிய பறவை படுத்திருப்பதைப் பார்த்து அது ராட்சஸனோ என்று வில்லை வளைத்தார்.





மகாபாரதம்

69

‘உன் புருஷன் ஜெயிப்பான், என் கனவு பலிக்கும்!’

‘ஹே ராமா’ என்று அந்தப் பறவை குரல் கொடுப்பதைப் பார்த்து அருகே போனார். “என் பெயர் ஜடாயு. நான் உன் தகப்பன் தசரதனுடைய சிறந்த நண்பன். உன்னுடைய மனைவியை ராவணன் தன்னுடைய புஷ்பக விமானத்தில் தூக்கிப் போனான். நான் அவனை தடுத்து நிறுத்தி அவனுக்கு காயங்கள் ஏற்படுத்தினேன். அவன் தன்னுடைய அற்புதமான வாளால் என் சிறகை வெட்டி எறிந்தான். நான் இங்கு விழுந்து கிடக்கிறேன்,” என்று சொல்ல, ராவணனுடைய இடம் எங்கிருக்கிறது என்று லட்சுமணன் வினவ, தென்திசை நோக்கி தன் முகத்தை வைத்து சூசகமாக அந்த திசையை காட்டி ஜடாயு உயிர் விட்டார். தந்தைக்கு நிகரான ஜடாயுவிற்கு ஈமச் சடங்குகள் செய்துவிட்டு அவர்கள் இருவரும் பர்ணசாலையை நோக்கி ஓடினார்கள்.

பர்ணசாலை கலைந்து கிடந்தது. பண்டங்கள், பழங்கள், கிழங்குகள் எல்லாம் சிதறிக் கிடந்தன. ஒரு சிறிய போராட்டம் அங்கு நடந்திருப்பது தெரிந்திருந்தது. சீதையை காணோம். சீதையை நாலாபக்கமும் ராமரும், லட்சுமணரும் தேடினார்கள்.

மார்க்கண்டேயர் சற்று நிறுத்தினார். “தர்மா ராமருடைய நிலையைப் பார்த்தாயா? முதல்நாள் பட்டாபிஷேகம் என்று சொல்லி, மறுநாள் வனவாசம் என்றும் சொல்லி அவரை வனத்திற்கு மனைவியோடும், தம்பியோடும் போகச்செய்து, பரதன் பின்தொடர்ந்தது போல மற்றவரும் பின் தொடர்வார்கள் என்று பயத்தால் அவர்கள் இன்னும் தென்திசை நோக்கி தண்டகாரண்யத்தில் நுழைய, அரக்கர்களை வதம் செய்து கோதாவரிக் கரையில் அமைதியாக இருக்க, அந்த இடத்தில் சூர்பணகையின் நடவடிக்கையும், அதனால் ராவணனுடைய வருகையும், மாரீசனுடைய வதமும் நிகழ்ந்து ராவணனால் சீதை சிறைப்பிடிக்கப்பட்டுப்போன நேரத்தில் ராமருடைய மனம் எத்தனை பாடுபட்டு இருக்கும்! தென்திசை நோக்கி என்று சொன்னால் எந்த திசை, எவ்வளவு தூரம், எப்படிப் போகவேண்டும் என்று எதுவும் தெரியாமல் பித்துப்பிடித்த நிலையில் ராமர் மரங்களையும், செடிகொடிகளையும் பார்த்து, ‘மரமே சீதையை பார்த்தாயா, செடிகொடிகளே, காலையில் பூ பறித்தாளே அவளை கவனித்தீர்களா? யார் அவளை தூக்கிப்போனார்கள் என்று நீ பார்க்கவில்லையா...?” என்று தன் நிலை மறந்து அழுததாக செய்தி உண்டு.

ராமன் அவதார புருஷன். ஆனாலும், தான் மானுடன் என்பதாகவே நினைப்பில் ஒரு மானுடனைப் போல கழிவிரக்கத்தில் மனைவியை இழந்த துக்கத்தில் புலம்பியிருக்கிறார். இதைக் கேட்கும்போது உன்னுடைய துக்கம் ஞாபகம் வருகிறதா? ராமனுடையதை ஒப்பிடும்போது உன் துக்கத்திற்கு ஏதேனும் அர்த்தம் உண்டா?” என்று கேட்க, தருமர் வாய்புதைத்துக் கொண்டார். பீமனும், அர்ஜுனனும், நகுல சகாதேவனும், திரௌபதியும் கண்ணீர் உகுத்தார்கள். கைகூப்பி ஸ்ரீராமரைத் துதித்தார்கள்.

மார்க்கண்டேயர் ராமாயணத்தை தொடர்ந்தார்... “ராம, லட்சுமணர் சீதையைத் தேடி வனம் வனமாகப்போக, ஒருசமயம் உருவமில்லா உருவம் அவர்களை மறித்து நின்றது. விழுங்க வாய் திறந்தது. லட்சுமணன் அந்த அரக்கன் பிரபந்தனின் உடம்பில் ஏறிக் கொண்டான். அதன் கைகள் லட்சுமணனை பற்றிக் கொண்டன. ராமர் தானும் முன்னேறி தன் வலது கையைக் கொடுத்தார். அது ராமரையும் கோத்துக் கொண்டது.

“நல்லது. இப்பொழுது அவன் கைகளை விட்டு விடுவோம்” என்று ராமர் சொல்ல, இருவரும் பிரபந்தனின் கைகளை வெட்டினார்கள். ராமர் தன் வில்லால் அம்பு தொடுத்து அவனுடைய விலா எலும்புகளை அடித்து நொறுக்கினார். அவ்விதமே லட்சுமணனும் செய்தார். அந்த மாமிச பிண்டம் இரண்டாகப் பிளந்தது. உள்ளிருந்து தேஜஸ்மிக்க ஒரு கந்தர்வன் தோன்றினான்.

“என் பெயர் முத்கலர். ஒரு அந்தணனுடைய சாபத்தினால் இப்படி அரக்க உருவம் பெற்றேன். உன்னுடைய மனைவியை ராவணன் தென்திசை நோக்கி அழைத்துப் போகிறான். விமானத்தில் கவர்ந்து போகிறான். அவனைக் கொல்லவேண்டுமென்றால் அவன் இடத்திற்குப் போகவேண்டுமென்றால் ரிஷ்யமுக பர்வதத்தில் இருக்கின்ற சுக்ரீவனை நாடிப்போ. சுக்ரீவன் நிச்சயம் உனக்கு உதவி செய்வான். சுக்ரீவன் வானரப்படைகளின் தலைவன். அங்கு ஒரு பிணக்கு இருக்கிறது. அந்த பிணக்கு தீர்ந்து சுக்ரீவன் உனக்கு உதவி செய்வான்,” என்று சொல்லி ராமரை நமஸ்கரித்து விண்ணுலகம் போனான்.

ராமர் ஆச்சரியத்தோடு இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ என்ற எண்ணத்தில் மிகவேகமாக பம்பா நதிக்கரையை அடைந்தார். கரையின்மேலே ரிஷ்யசிருங்க பர்வதத்தில் ஏற, அங்கு ஒரு அந்தணர் ராமர் முன் கைகூப்பினார். மண்டியிட்டார். அந்தணர் மண்டியிடுவதாவது என்று ராமர் திகைத்தபோது, அனுமன் சுயரூபம் பெற்று ராமரை வணங்கி எழுந்தார். “உங்கள் வருகை நல்வரவு. நான் உங்களை எங்கள் மன்னனாகிய சுக்ரீவனிடம் அழைத்துப் போகிறேன். அவருக்கும் அவருடைய சகோதரன் வாலிக்கும் ஒரு பிணக்கு இருக்கிறது. அதனால் இடைவிடாது சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ரிஷ்யமுக பர்வதத்தில் அவருடைய சகோதரரான வாலி இங்கு வர முடியாது. வந்தால் தலை வெடித்து

பாலகுமாரன்

விடும் என்ற சாபம் உண்டு. அதனால் சுக்ரீவன் இந்த இடத்தில் தஞ்சம் அடைந்திருக்கிறார். செய்யாத தவறுக்கு தண்டிக்கப்பட்டு விட்டோமே என்று வருத்தப்படுகிறார். அவரைக் கொல்வதற்காக வாலி கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். அந்த துக்கத்தில் சுக்ரீவன் இருக்கிறார்," என்று சொல்ல, ராமர் பயந்து ஒடுங்கியிருந்த சுக்ரீவனைச் சந்தித்தார்.

தன்னுடைய மனைவியை வாலி அபகரித்துக் கொண்டார் என்றும், தான் வாலி இறந்து விட்டான் என்று நினைத்து குகையை மூட, உள்ளுக்குள்ளே ராட்சஸனோடு சண்டை போட்டு பிறகு குகையை உடைத்துக் கொண்டு வெளியே வந்து தான் குகையை மூடியது பிசகு என்று சொல்லி தன்னை கொல்வதற்கு தமையனான வாலி முயற்சி செய்வதாய் துக்கத்தோடு சொல்ல, 'கவலைப்படாதே நான் இருக்கிறேன்' என்று ராமர் அவனுக்கு ஆறுதல் அளித்தார்.

சுக்ரீவன் என்ன செய்வதென்று கேட்க, மறுபடியும் போய் வாலியை போருக்கு அழை. நான் அப்போது மறைந்திருந்து வாலியை கொன்று விடுகிறேன் என்று வாக்கு கொடுத்தார். சுக்ரீவன் வாலியை சண்டைக்கு அழைத்தான். சண்டை துவங்கியது. ஆனால், யார் வாலி, யார் சுக்ரீவன் என்று ராமருக்கு அடையாளம் தெரியவில்லை. அடிபட்டு தோற்ற நிலையில் தப்பித்து சுக்ரீவன் ஓடிவர, மிகுந்த துக்கப்பட ராமர் அவனைத் தேற்றினார். "உன் மனைவியை அபகரித்த வாலியை நான் கொல்வேன். ஆள் மாறாதிருக்க ஏதேனும் அடையாளம் தேவை," என்று சொல்லி, லட்சுமணனால் தயார் செய்யப்பட்ட ஒரு மாலையை சுக்ரீவன் கழுத்தில் போட்டார். அந்த மாலையோடு போய் மறுபடியும் அவன் குரல் கொடுக்க, மிகுந்த கோபத்தோடு வாலி தன் குகையை விட்டு வெளியே வந்து அவனோடு சண்டையிட, தன்னுடைய வில்லை வளைத்து வாலியின் நெஞ்சு பார்த்து ஒரு சரத்தை ராமர் தொடுக்க அது வாலியை குத்திக் கீழே சாய்த்தது.



"உன் மனைவியைத் தேட என்னை அணுகியிருக்கலாமே! ஏன், சுக்ரீவனிடம் உதவிகேட்டு என்னை சண்டையிட அழைக்கச் சொல்லி என்னைக் கொன்றாய்? என்னைக் கொல்வதால் உனக்கு என்ன லாபம்? நீ உத்தமன். நல்ல பண்புடையவன். மானிடரில் சிறந்தவன். மன்னவரில் உயர்ந்தவன் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி மறைந்திருந்து கொல்கிறாயே. இது நியாயமா?" என்று கேட்க, "உன்னுடைய எதிரியின் வலிவை வாங்கிக் கொள்ளும் வரத்தை நீ வைத்திருக்கிறாய். அதனால் உன்னுடன் நேரில் நின்று போரிடுவது தர்மயுத்தம் ஆகாது. உன்னுடைய வீரத்தை மறைந்துதான் சந்திக்க வேண்டியுள்ளது. உன்னுடைய வரத்தின் தவறு அது. மறுபடியும் சொல்கிறேன் நீ ஒரு வானரம். ஒரு மிருகம். அதை நான் மறைந்திருந்து கொல்லலாம். அது தவறில்லை" என்று சொல்ல, அவருடைய பேச்சைக் கேட்டு வாலி அமைதியானான்.

"ஸ்ரீராமா, ஆயினும் தோன்றுகிறது. இந்த உதவியை நான் செய்திருப்பேனே," என்று சொல்ல, "நான் எப்படி உன்னை நம்புவது? சுக்ரீவனுடைய மனைவியை நீ வைத்துக் கொண்டிருக்கிறாய். நான் என் மனைவி சீதையை தேடிக்கொடு என்று உன்னிடம் சொன்னால் வேறு ஏதேனும் விபரீதம் நடந்தால் நான் எப்படி நம்புவேன்? நீ நம்பிக்கைக்கு உரியவனாக எனக்குத் தென்படவில்லை. மாற்றான் மனைவியை வரிப்பவன் நல்லவனாக நான் நினைக்கவில்லை" என்று சொன்னார் ராமர்.

"இது எங்கள் மிருக விதி. அதனுடைய நியமம். ஆயினும் உன் கையால் நான் மரணமடைவது எனக்கு சந்தோஷம்" என்று சொல்லி வாலி உயிரை விட்டான்.

"ஸ்ரீராமர், வாலியின் மகனான அங்கதனுக்கு இளவரசு பட்டம் கட்டி சுக்ரீவனை மன்னனாக்கி விலகினார். மழைக்காலம் என்பதால் அவர்கள் தங்கள் குகையில் அடங்கினார்கள். மழைக்காலம் முடிந்ததும் நிச்சயம் வருகிறேன் என்று சுக்ரீவன் உத்தரவாதம் கொடுத்திருந்தான். சீதையின் நினைப்பாகவே மனம் உருகி மழைக்காலம் முடியும்வரை தென்திசை நோக்கியே ஸ்ரீராமர் அமர்ந்திருந்தார்" என்று மகரிஷி சொல்ல, நீண்ட நெடிய பெருமூச்சோடு அவர்கள் ராமருடைய துக்கத்தை தம்முடைய நெஞ்சில் ஏற்றி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவதாரப் புருஷரான ஸ்ரீராமர் அடைந்த துக்கத்திற்கு இணையான துக்கம் இல்லவே இல்லை என்பது போலத்தான் தருமரும், மற்றவர்களும் உணர்ந்தார்கள்.

மழைக்காலம் முடிந்தும் வராத சுக்ரீவனை நோக்கி லட்சுமணன் போய் அதட்டி அழைத்து வர, சுக்ரீவன் மன்னிப்பு கேட்டான். தன் படைகளைத் தயார் செய்தான். நாலாபுறமும் வீரர்களை ஏவினான். தென்திசை நோக்கி ஜாம்பவானும், ஹனுமனும் போனார்கள். தாங்கள் செய்வது ராமகாரியம் என்ற நினைப்போடே மிகுந்த கவனத்தோடு நடந்து கொண்டார்கள்.

இலங்கையை அடைந்த ராவணன் சீதையை ஒரு அசோகவனத்தில் தங்க வைத்தான். அவளைச் சுற்றி அரக்கிகளை காவல் வைத்தான். விகாரமான உருவமுடைய அந்த அரக்கிகள் சீதையை பல்வேறு விதமாக ராவணனோடு சேர்ந்திருக்கும்படி மோசமான வார்த்தைகளால் வற்புறுத்தினார்கள். துன்புறுத்தினார்கள். இல்லையெனில் தின்று விடுவோம் என்று பயமுறுத்தினார்கள். அப்பொழுது திரிஜடை என்கிற ஒரு அரக்கி மட்டும் சீதைக்கு ஆதரவாக இருந்தாள். "ராவணனுக்குக் கேடுகாலம் வந்து விட்டது. அவன் மடியப் போகிறான். உன் புருஷன் இலங்கைக்கு வந்து வெகு நிச்சயம் ராவணனை கொல்லப் போகிறான். நான் ராவணனைப் பற்றி மோசமான கனவுகள் கண்டேன். உன்னுடைய புருஷன் ஜெயிப்பதாக கனவு கண்டேன். அது பலிக்கும்," என்று ஆறுதல்படுத்தினாள். திரிசடையினுடைய நம்பிக்கையான வார்த்தைகள் சீதாதேவிக்கு உறுதுணையாக இருந்தன.

ராவணன் வந்து சீதையை தன் ஆசைக்கு இணங்கும்படியாக உரத்த குரலில் கர்ஜிக்க, மண்டோதரிக்கு இணையான இடத்தைத் தருவேன் என்று உத்தரவாதம் சொல்ல, ராவணனுக்கும் தனக்கும் நடுவே சீதை ஒரு புல்லைப் போட்டு அந்த புல்லை நோக்கி பேசலானாள். "ராட்சஸ ராஜா, இப்படி உயர்குலத்தில் பிறந்தும் அதர்மமான வாக்கியங்களை ஏன் பேசிக் கொண்டிருக்கிறாய்? நீ என்ன செய்தாலும் என் மனதை என் புருஷனான ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியினின்று மாற்ற இயலாது. அவருடைய பராக்கிரமம் தெரியாமல் நீ இந்த தவறான காரியம் செய்து விட்டாய். என்னைக் கொண்டுபோய் அங்கு விடு என்றும் நான் கேட்க மாட்டேன். அவர் வருவார். உன்னை வதம் செய்வார். பிறகு, என்னை அழைத்துக் கொண்டு போவார். அதுவரையில் நான் காத்திருப்பேன். மறந்து போயும் இனி என்னிடம் இப்படி பேச வேண்டாம்," என்று நிஷ்டூரமாக சீதை சொல்ல, "உன்னுடைய சம்மதம் இல்லாமல் உன்னைத் தொடமாட்டேன்," என்று ராவணன் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

அப்பொழுது திரிசடை, ஒரு பெண்ணின் சம்மதம் இல்லாமல் அவன் அவளை வற்புறுத்தினால் துன்புறுத்தினால் அவனுக்கு உடனடியாக இறப்பு ஏற்படும் என்று ஒரு சாபம் இருக்கிறது. எனவே, உன்னை ஒருபோதும் அவன் வற்புறுத்த மாட்டான் என்று சமாதானம் சொன்னாள்.

வடக்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் போனவர்கள் திரும்பி வர, தென்திசை போனவர்கள் மட்டும் திரும்பவில்லை. ஸ்ரீராமர் அந்த திசையிலிருந்து நல்ல செய்தி வரும் என்று ஆவலுடன் காத்திருந்தார். சில மாதங்கள் கழிந்ததும், சில வானரங்கள் வந்து மதுவனத்தை அழித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் அனைவரும் தென்திசை நோக்கி பயணப்பட்டவர்கள் என்று தெரிவித்தார்கள். மதுவனத்தை சீரழித்துக் கொண்டிருப்பதாகவும் விவரங்கள் கிடைத்தன. அப்படியானால் தென்திசை சென்றவர்கள் வெற்றிகரமாக காரியத்தை முடித்துவிட்டார்கள் என்று சுக்ரீவன் உணர்ந்து கொண்டான். ராமரிடமும் அந்த விஷயத்தைச் சொன்னான்.

மது வனத்தில் ஓய்வு எடுத்த பிறகு ஹனுமான் ராமரிடம் வந்து வணங்கி நின்றான்.

“சொல் ஹனுமான், நீ ஜானகியைப் பார்த்தாயா? நான் பகைவர்களை வென்று ஜானகியை என்னுடைய தேசத்திற்கு அழைத்துப் போக முடியுமா? அந்தப் போரில் வெற்றியடைய முடியுமா? என் மனைவியை மீட்டு வராமல் நான் உயிர் வாழ மாட்டேன்,” என்று கோபம் கலந்த வார்த்தைகளைச் சொன்னார்.

அதற்கு வாயுபுத்ரன், “உங்களுக்கு பிரியமான செய்தியைச் சொல்கிறேன். நான் ஜானகியை சந்தித்தேன். பல இடங்களில் சீதையை தேடி களைத்து பிறகு ஒரு மிகப் பெரிய குகையை கண்டோம். அதனுள் அகன்ற காடுகள் இருந்தன. வெகுதூரம் அந்தப் பாதையில் நகர்ந்து போனோம். அங்கே ஒரு திவ்ய வனம் இருந்தது. அது கைகராஜன் மயனுடைய வாழ்விடமாக கருதப்படுகிறது. அதில் பிராபாவதி என்னும் தபஸ்வி தவம் செய்து கொண்டிருந்தார். எங்களுக்கு பல்வகையான பதார்த்தங்களையும், ரசங்களையும் அளித்தார். அவற்றை உண்டு எனக்கு பலம் கிடைத்தது. நாங்கள் கடல் பக்கம் போய் கந்தமான மலையில் ஏறி நின்று அகன்ற அந்தக் கடலை பார்க்கத் துவங்கினோம். எங்களுக்கு அந்தக் கடலைத் தாண்டுவோம் என்ற நம்பிக்கை வரவில்லை. மிகவும் தளர்ந்து போனோம். நிற்க முடியாமல் அமர்ந்து கொண்டோம். அப்பொழுது உங்களைப் பற்றியும், லட்சுமணன் பற்றியும், ஜடாயு பற்றியும் பேச்சு வந்தது. அப்பொழுது அருகிலே ஒரு உருவம் தள்ளாடி வந்தது. பெரிய கழுகைப் போன்று அருகே வந்து நின்றது.

‘என்னுடைய சகோதரன் ஜடாயு பற்றி பேசுகிறீர்களா? என் பெயர் சம்பாகு. நாங்கள் சூரியனை பிடிக்க முயற்சித்து, என்னால் முடியாமல்போய் என் சிறகுகள் கருகி உதிர கீழே விழுந்தேன். ஆனால், ஜடாயு காயப்படாமல் தப்பினான். நீங்கள் எதற்காக ஜடாயு பற்றி பேசுகிறீர்கள்? யார் ஸ்ரீராமர், சீதை யார்?’ என்று கேட்க, வானரங்கள் அதற்கு சரியான பதிலைச் சொல்லின.

‘ராவணன் சீதையை அபகரித்துப் போனானா? அவனுடைய இலங்கையை நான் பார்த்திருக்கிறேன். அது பெரிய மலைக்கு நடுவே ஒரு பெரிய குகைக்கு அருகே உயர்ந்த ஒரு மலையில் அமைக்கப்பட்ட நகரம். மிக ஒளிபொருந்திய நகரம். நீங்கள் அங்குபோக இந்தக் கடலை தாண்டித்தான் ஆகவேண்டும்,’ என்று சொல்லி நிறுத்தியது. ஜடாயு இறந்த கதையை நாங்கள் சொல்ல, சம்பாகு துக்கப்பட்டார்.

நான் இலங்கையில் இறங்கி அசோக வனத்திற்கு நடுவே உங்கள் சீதையைக் கண்டேன். அவரைச் சுற்றி கோரமான அரக்கிகள் காவல் இருந்தார்கள். அவருடைய கேசம் ஜடையாக மாறியிருந்தது. அவர் உடம்பு முழுவதும் புழுதியாக மாறியிருந்தது. அவர் உடைகள் கிழிந்திருந்தன. மிகுந்த சோகத்தோடு அவர் இருந்தார். அரக்கிகள் தூங்கிய பிறகு நான் அவருக்கு என்னை வெளிப்படுத்திக் கொண்டேன். உங்கள் தூதுவனாக வந்திருப்பதாகச் சொன்னேன். என்னை முழுவதுமாக நம்பி தன்னை சந்தித்ததற்கு அடையாளமாக ஒரு சூளாமணியை கொடுத்தார். இதோ அந்தச் சூளாமணி.

இது தவிர, வேறொரு விஷயத்தையும் சொன்னார். சித்ரகூடத்தில் நீங்கள் இருக்கும்போது ஒரு காக்கை மீது ஒரு புல்லை அஸ்திரமாக செலுத்தி அந்தக் காக்கையினுடைய கண்களை பறித்தீர்கள். அந்தக் காக்கை சீதையை துன்புறுத்த முயற்சித்தது என்பதையும் விளக்கிச் சொன்னார். இது வேறு எவருக்கும் தெரியாது. எனக்கும் ஸ்ரீராமருக்கும் மட்டுமே தெரிந்தது. இப்போது உனக்கும் தெரிந்தது என்றும் சொன்னார்.”

ராமர் உதடு நடுங்க, மனம் நடுங்க அந்தச் சூளாமணியை பெற்றுக் கொண்டார். முத்தமிட்டார். நெஞ்சில் வைத்துக் கொண்டார். ‘சீதே சீதே சீதே...’ என்று புலம்பினார். கண்ணில் நீர் வழிய நின்றார். ஹனுமான் பார்த்தது சீதையைத் தான் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. நல்ல செய்தியை கொண்டு வந்த ஹனுமானை ராமச்சந்திர மூர்த்தி ஆரத்தழுவிக் கொண்டார். இலங்கையை எரித்து கடல் தாண்டி மறுபடி வந்ததையும் ஹனுமான் விவரித்தார்.

லட்சுமணனோடும், பெரிய வானர சேனையோடும் ராமச்சந்திர மூர்த்தி சமுத்திரக்கரையை அடைந்தார். “ஹனுமானைப்போல இந்தக் கடல் பகுதியை எல்லா வானரங்களாலும் தாண்ட முடியாது. ஆனால், இந்தக் கடல் வழியாகத்தான் வானரங்கள் போயாக வேண்டும். எனவே, நான் தர்ப்பையை விரித்து சமுத்திரராஜனை வேண்டுவேன். வழிவிடச் சொல்வேன். அப்படி வழிவிடவில்லையெனில் என் வில்லை வளைத்து நாண் ஏற்றி அஸ்திரங்களை பிரயோகம் செய்து இந்தப் பகுதியிலுள்ள அத்தனை நீரையும் எரித்து விடுவேன்,” என்று உரக்கச் சொன்னார்.

சமுத்திரராஜன் உடனே வந்து கைகூப்பினார். “ஸ்ரீராமா நீ அக்னி அஸ்திரங்களை ஏவினால் என் நிலைமை என்னாவது? அதை ஒருபோதும் செய்ய வேண்டாம். இந்த வானர கூட்டத்தில் விஸ்வகர்மாவின் மகன் நளன் இருக்கிறார். அவர் கையால் கட்டையோ, துரும்போ, கல்லோ எடுத்துப் போட்டால் அவற்றை நான் நீரின் மேல் மிதக்கச் செய்வேன். அதுவே உங்களுக்கு பாலமாகிவிடும்’ என்று சொல்லி மறைந்தான். பிறகு ராமரின் உத்தரவுப்படி கடலின்மேல் ஒரு பாலத்தை தயார் செய்தார்.

இந்தப் பூமியில் இன்றும் நளசேது என்று அந்தப் பாலம் பிரபலமாய் இருக்கிறது.

சமுத்திர கரையை அடைந்தபோது விபீஷணன் தன்னுடைய நண்பர்களோடு தன் தமையனை விட்டு ராமரை சரணடைய, ராமர் அவனை தன் நண்பனாக ஏற்றுக் கொண்டார். அவர் படையில் அவனும் ஓர் அங்கம் வகித்தான். வானரப் படை விபீஷணனின் வழிகாட்டலோடு, பாலத்தின் வழியே போய் இலங்கையில் இறங்கியது.

(தொடரும்)

மகாபாரதம்

70

வீழ்ந்தான் வீணன்!

வானர வீரர்கள் இலங்கைக்குள் இறங்கி தோப்புகளுக்குள் மெல்ல நுழைந்து, நகரைச் சுற்றியுள்ள காடுகளுக்குள் ஊடுருவதை, அங்கு காவல் காத்திருந்த இரண்டு அரக்கர்கள் பார்த்து விட்டனர். சைன்யம் பெரிதாக இருக்கிறது எதிர்க்க முடியாது, போய் தகவல் சொல்லி விட்டு வரவும் நேரம் இல்லை என்பதால், என்ன, ஏது என்று தெரிந்து கொள்வதற்காக சட்டென்று தங்களை வானரங்களாக உருமாற்றிக் கொண்டு அவர்களோடு கலந்து, இப்போது எங்கே போகிறோம், என்ன செய்யப் போகிறோம் என்றெல்லாம் தங்களுக்குள் பேச, மற்ற வானரங்கள் பதில் சொல்ல முயற்சிக்க, ஒரு தவறான வாசனை வருகிறது என்பதை விபீஷணன் உணர்ந்து கொண்டு, அந்த இடம் நோக்கிப் போய், உருமாறிய அந்த அரக்கர்களை சட்டென்று தாவி பிடித்தார். வானர வீரர்கள் பயந்தார்கள். அடித்து நொறுக்கினார்கள். விபீஷணன் தடுத்து ராமரிடம் கொண்டு போனார்.

“அட, ஒற்றர்களா, நீங்களாகவே இந்த வேலைகளை செய்வீர்களா? அரசருக்கு இன்னும் தெரிவிக்கவில்லையா? நிச்சயம் தெரிவிக்க வேண்டும். அது ஒற்றர்களுடைய கடமை. நீங்கள் செய்த வேலை சரி. உருமாறி வந்ததும் சரி. தவறேதும் இல்லை. என்னுடைய சைன்னியங்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும், அதுதானே? என்னுடைய மகத்தான தளபதிகளை நான் அறிமுகப்படுத்துகிறன்” என்ற ராமர், அங்கதனையும், நீலனையும், கரனையும், ஜாம்பவானையும் அறிமுகப்படுத்தினார். ஹனுமாரை சுட்டிக் காட்டினார். தன் இளவலையும் தன்னையும் அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர்கள் பயந்து நடுங்கினார்கள். வெட்கப்பட்டார்கள்.

“எந்த பயமும் கொள்ள வேண்டாம். நல்ல உயரத்திற்கு வந்து வானர சேனையைப் பாருங்கள்” என்று உயரமான இடத்திற்கு அனுப்பி, அங்கிருந்து வானர சேனையைப் பார்க்கச் சொன்னார். வானர சேனையை முழுவதும் பார்த்து விட்டு அவர்கள் ராமருக்கு அருகே வந்தார்கள்.

“இப்பொழுது நீங்கள் போகலாம். உங்களுக்கு

விடுதலை கொடுத்து விட்டேன். எந்த பயமும் இல்லை. யாரும் தாக்க மாட்டார்கள். இவர்கள் தாக்கியதற்கும் நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வேகத்தில் நடந்து விட்டது. நீங்கள் போய் உங்களுடைய அரசனிடம் இந்த சைன்யம் பற்றிச் சொல்லுங்கள்" என்று சொல்லிய ராமரைப் பார்த்து அவர்கள் வியந்தார்கள்.

மெல்ல வானரங்களூடே அரக்கர்கள் நகர, ஒரு வானரம் வேண்டுமென்றே பெரிதாய் பயமுறுத்த, அவர்கள் துள்ளி எகிறி தரையில் விழுந்து அலறினார்கள். மற்ற வானரங்கள் தூக்கி நிறுத்தி வாய்விட்டு சிரித்தன. 'இத்தனை பயமா?' என்று கேட்டன. தொலைவிலிருந்து இதை பார்த்த ராமரும் மெல்லியதாய் சிரித்தார். கோபமாக இருக்கின்ற வானர வீரர்களைப் பார்த்து சந்தோஷப்பட்டார். அந்த அரக்கர்கள் வெகுவேகமாக ரகசிய வழியின் மூலம் இலங்கைக்குள் ஓடினார்கள். சைன்யங்கள் அந்த காடுகளையும், தோட்டங்களையும் பாழ்படுத்த ஆரம்பித்தன. காடுகளை அழித்து பாதைகளை உண்டாக்கின. இலங்கைக்குள் போவதற்கு நாலாபக்கமும் பாதைகள் போடப்பட்டன. அவற்றில் சைன்யம் மிகப் பெரிய முழக்கத்தோடு உள்ளே நுழைந்தது.

ஒற்றர் மூலமும், மற்றவர் மூலமும் அந்த ராட்சஸ மன்னன் ராவணன், ராமரின் வருகையை உணர்ந்து கொண்டான். தன்னுடைய சைன்யத்தை திரட்டினான். ஆயுதங்களை தயார் செய்யச் சொன்னான். கோட்டைக்கு அருகே வானர வீரர்கள் நெருங்கினார்கள். கோட்டைக்கு அப்பால் பெரிய அகழி இருந்தது. அதில் சுறா மீன்களும், முதலைகளும் இருந்தன. இரும்புக் கம்பிகள் நடப்பட்டிருந்தன. கோட்டையிலிருந்து எறிகுண்டுகளும், கவண் கற்களும், பாறைகளும் எறியப்பட தயாராக இருந்தன. எகிறி குதித்து கோட்டையினுடைய உயரம், அந்தப் பக்கம் இருக்கின்ற விஷயங்கள் இவற்றையெல்லாம் வானர வீரர்கள் கண்டுகொண்டார்கள். தங்களுக்குள் பரிமாறிக் கொண்டார்கள்.

வானர வீரர்களின் துடிப்பு ராமருக்கு சந்தோஷத்தை கொடுத்தது. போர் தொடுக்கும் யாரையேனும் தூதாக அனுப்ப ராமர் தீர்மானித்தார். வானரப் படையின் தலைவனான அங்கதனை அழைத்து 'தைரியமாகப் போய் ராவணனை சந்தித்து விட்டு வா' என்று சொன்னார்.

கோட்டை வழியினூடே செல்லாமல் மாளிகை சுவர் மீது ஏறி மறுபக்கம் குதித்து, 'உங்கள் அரசனை பார்க்க வேண்டும்' என்ற கோஷத்தோடு அங்கதன் இலங்கைக்குள் நுழைந்தான். அவனை கருத்த மேனியுள்ள ராட்சஸர்கள் சூழ்ந்து கொண்டார்கள். மேகங்களுக்கு நடுவே நடக்கின்ற சூரியனைப் போல அங்கதன் காட்சியளித்தான். அமைச்சர்களுக்கு நடுவே அரியாசனத்தில் அட்டகாசமாய் அமர்ந்திருந்த ராவணேஸ்வரனைப் பார்த்து கர்ஜிக்கும் குரலில் 'புலஸ்தியா' என்று அங்கதன் அவனை விளித்தான். ராவணன் தன்னை ஈஸ்வரன் என்று சொல்லிக் கொள்வதில் விருப்பமுள்ளவன். அங்கதன் சொல்ல விரும்பவில்லை. அவனுடைய இயற்பெயரை அழைத்தான்.

"கோசல நாட்டு மன்னர் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் தூதுவனாக நான் இங்கு வந்திருக்கிறேன். அவர் உனக்கு ஒரு எச்சரிக்கை விடுவித்திருக்கிறார். அவருடைய மனைவியை அபகரித்து இருக்கிறாய். அடாது செய்திருக்கிறாய். சிறை வைத்திருக்கிறாய். அவர் இல்லாதபோது போர் செய்யாது, ஒரு கோழையைப் போல ஒளிந்திருந்து கவர்ந்து போயிருக்கிறாய். உன்னுடைய இழிவான செயல் அரச குலத்திற்கே இழிவு. அது மட்டுமல்லாமல் வனவாசிகளான ரிஷிகளை, அந்தணர்களை கொன்றிருக்கிறாய். பல பெண்களை பலவந்தமாக கவர்ந்து வந்திருக்கிறாய். தேவர்களோடு சண்டையிட்டிருக்கிறாய். பல்வேறு உயிரினங்களுக்கும் துன்பம் இழைத்திருக்கிறாய். அவர்கள் அழுது தொழுதும், மறுத்து கொன்றிருக்கிறாய். உன்னைப் போல உன் சேனைகளும் அட்டகாசம் செய்திருக்கின்றன. என்னை மனிதன் என்று நினைத்துக் கொண்டு கொக்கரிக்காதே. என்னுடைய வில்லின் வலிமை மிகப் பெரியது. புலஸ்தியா, உன்னை உன் கூட்டத்தோடு அடித்து ஜெயிக்க என்னால் முடியும். ஒரு அரக்கர்கூட உலகத்தில் இல்லாது, சகல ராட்சஸர்களும் அழியும்படியான ஒரு யுத்தத்தை என்னால் செய்ய முடியும். மன்னிப்பு கேட்டு சீதையை விடுவித்து, செய்த குற்றத்திற்கு பரிகாரம் தேடு. இல்லை, ஆண் மகனாக யுத்தத்திற்கு வா. மறுபடியும் ஓடி ஒளியாதே. தந்திரங்கள் செய்யாதே என்று அவர் சொல்லச் சொன்னார்" என உரத்தக் குரலில் பேச, ராவணன் பல் கடித்தான். ஓங்கி காலால் தரையை மிதித்தான். 'அடேய்...' என்று கூவினான்.

தலைவனுடைய கோபத்தை உணர்ந்து கொண்ட ராட்சஸர்கள் அங்கதன் மீது பாய்ந்தார்கள். அங்கதன் தன் இடத்திலிருந்து எகிறி அவர்களுக்கு போக்கு காட்டினான். தன்னை பிடித்தவர்களை அடித்து வீழ்த்தினான். தொடர்ந்து வந்த ராட்சஸர்களை கடுமையாக அடித்து துன்புறுத்தினான். ஒரு மாளிகையின் உச்சிக்குப் போய், அங்கிருந்து கோட்டைக்குத் தாவி பிறகு வெளியே வந்து கோசலேந்திரரான ஸ்ரீராமச்சந்திரரை வணங்கி நடந்த விஷயங்களைச் சொன்னான்.

அங்கதனுடைய வீரம் ராமருக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. மனமுவந்து பாராட்டினார். தன்னுடைய மன்னர் செயற்கரிய செய்கை செய்து, ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியால் பாராட்டப்படுகிறார் என்பது தெரிந்து வானர வீரர்கள் உத்வேகம் கொண்டார்கள். உற்சாகம் கொண்டார்கள். மன்னனால் முடிந்தபோது நம்மால் முடியாதா என்று நெஞ்சு தட்டிக் கொண்டார்கள். 'கொல்லுவோம், அரக்கனை கொல்லுவோம்' என்று வீர வசனம் எழுப்பினார்கள். இதன் பொருட்டுதான் ராமர் அங்கதனை தேர்ந்தெடுத்து அனுப்பினார். அங்கதனின் தூதால், சாமர்த்தியத்தால் அந்தப் படை உக்கிரமாகியது. போருக்கு பரபரத்தது.

பல்லாயிரக் கோடிக்கணக்கான வானர வீரர்களும், தன்னுடைய வில்லின் துணையோடும் ராமச்சந்திர மூர்த்தி இலங்கையினுடைய கோட்டையின் மீது படையெடுத்தார். கோட்டை சுவரை இடித்து மண்ணோடு மண்ணாக்கினார். கோட்டையிலுள்ள அலங்கார வளைவுகளை வானர வீரர்கள் தகர்த்து எறிந்தார்கள். அபாய மணிகளை பிடுங்கி அகழியில் போட்டார்கள். கொடிகளை உடைத்து ஊருக்குள் வீசினார்கள். பாறைகளை எறியும், குண்டுகளை பொழியும் கவண் கல்லை உடைத்து அகழியில் போட்டார்கள். தங்கள் மீது ஈட்டியும், கத்தியும் வீசியவர்களை, சட்டென்று தரையில் இறங்கி கம்புகளால் ஆண் பெண் பாராது சகலரையும் அடித்து துவைத்தார்கள். ஓட ஓட விரட்டினார்கள்.

மறுபக்கம் இருந்தபடியே சரமாரியாக அம்புகளை ராமர் விட, அவை அங்குள்ள வீரர்களை தாக்கின. அங்கதனும், நீலனும், மற்றவர்களும் எந்த இடத்திற்கு அம்பு போக வேண்டும் என்று சைகை செய்ய, அந்த இடத்திற்கு ராமரும், லட்சுமணனும் இடையறாது அம்பு மாரி பொழிந்தார்கள். எங்கிருந்து அம்பு வருகிறது என்றுத் தெரியாமல் பல அரக்கர்கள் குத்துப்பட்டு இறந்தார்கள்.

'சரியான அழிவு' என்று அங்கதன் கொக்கரித்த பிறகு அதில் சந்தோஷமடைந்த ராமர் பின்னடைந்தார். வானர வீரர்கள் அழிக்காத ஒரு தோப்புக்குள் வந்து தங்கினார். மாலைநேரம். வானர வீரர்கள் மதில் சுவரிலிருந்து இறங்கி பின்னடைந்தார்கள். ஆனால், எப்பொழுது வேண்டுமானாலும் யுத்தம் நடக்கும் என்று தயாராக இருந்தார்கள். தோப்புக்குள் வந்ததும் மாலை நேரத்து பேய், பிசாசங்கள் வேகமாக வந்து கற்களையும், மண்ணையும் வானர வீரர்கள் மீது வாரி இறைத்தன. கண்ணுக்குத் தெரியாதபடி இருந்து மேலே விழுந்து தொந்தரவு கொடுத்தன. வானர வீரர்கள் அலை மோதினார்கள். விபீஷ்ணனுக்கு அந்த அந்தர்ஜால வித்தை தெரியும். அதற்கு பதிலடி கொடுக்க, அந்த பூதங்களும், பிசாசங்களும் வானர வீரர்கள் கண்ணுக்குத் தெரிந்தன. வானர வீரர்கள் அந்த மங்கிய ஒளியில் அவர்களை கடுமையாகத் தாக்கினார்கள். அவர்கள் பிய்த்து எறியப்பட்டார்கள்.

பாலகுமாரன்

மறுநாள் ராவணன் மிகுந்த கோபத்தோடு யுத்த சாஸ்திரத்தின் முறையை அறிந்து சரியான வியூகம் அமைத்து மாளிகையிலிருந்து வெளிப்பட்டு, ராமச்சந்திர மூர்த்தி தங்கியிருந்த தோப்புக்குள் வர, அங்கதன் துணையோடு ராமர் வேறுவிதமான வியூகம் அமைத்து எதிரியை எதிர்கொண்டார். ராவணனை நோக்கி அம்புகள் செலுத்தினார். அவன் வேகத்தை தடுத்து நிறுத்தினார். லட்சுமணன் இந்திரஜித்தோடு போர் புரிந்தான். சுக்ரீவன் விருபாட்சனோடு யுத்தம் செய்தான். தாருணன் என்னும் வானரம் விகர்ணன் என்ற அரக்கனோடு போர் செய்தான். நளன் என்ற வாரணன் கும்பன் என்பவனை எதிர்த்தான். போர், விடியும் நேரத்தில் கடுமையாக நடந்தது. ராமரை நோக்கி சூலங்களும், கத்திகளும், சக்கரங்களும் வேகமாக வந்தன. இடையறாது அம்புகளால் அவற்றைத் தடுத்துக் கொண்டிருந்தார். ராவணனை நோக்கி இரும்பு அம்புகளை செலுத்தினார். அவை அவனைத் தாக்கின. விபீஷணன் தன்னை தாக்க வந்த பிரகஸ்தனை தடுத்து நிறுத்தி, தன் சக்தி ஆயுதத்தால் அவன் தலையில் ஓங்கி அடிக்க, அவன் தலை உடம்பிலிருந்து துண்டாகி விழ, அவன் இறந்து தரையில் சாய்ந்தான். அவன் இறந்ததைப் பார்த்து துர்ராட்சஸன் என்ற அரக்கன், வானர வீரர்களை நோக்கி வெறி கொண்டு ஓடிவந்தான். அவன் வேகத்தைப் பார்த்து வானர வீரர்கள் பதுங்கிக் கொண்டார்கள். பின்னடைந்தார்கள்.

அந்த ராட்சஸனைத் தடுப்பதற்கு ஹனுமார் முன் வந்தார். தடுத்து தரையில் தள்ளினார். எட்டி உதைத்தார். அவர் வருவதைக் கண்டு மற்ற வானர வீரர்கள் வேகமாக தாக்கத் துவங்கினார்கள். பெரிய மரக்கிளையை உடைத்து, துர்ராட்சஸனின் தேரை உடைத்து குதிரையை நாசம் செய்தார். அவன் மீது அடிமரத்தால் ஓங்கி அடித்து நசுக்கினார். துர்ராட்சஸன் இறந்தான்.

வானரங்களும், கரடிகளும் உற்சாகமானார்கள். இன்னும் வேகத்தோடு அரக்கர்களை கொல்லலானார்கள். அடிதாங்காமல் இலங்கைக்குள் ஓடிப்போய் ராவணனிடம் முறையிட்டார்கள். அயர்ந்து தூங்கும் கும்பகர்ணனை எழுப்பும்படி ராவணன் கட்டளையிட்டான். மிகப் பெரிய பேரிகைகளும், முரசுகளும், எக்காளங்களும் வைத்து உறங்குகின்ற கும்பகர்ணனை அவர்கள் தட்டி எழுப்பினார்கள். அரைதூக்கத்தில், மயக்கத்தில் இருந்த கும்பகர்ணனைப் பார்த்து, "என் அருமைத் தம்பியே, உன்னைப் போல வீரன் இந்த உலகத்தில் எவரும் இல்லை. போ. நம்மை துன்புறுத்துகின்ற ராமனையும், லட்சுமணனையும் தாக்கு. அடித்து துவம்சம் செய். வானர வீரர்களை இங்கிருந்து பலத்த காயங்களோடு வெளியேற்று. இது என் கட்டளை. நீ முன்னே போக, என் தம்பி வஜ்ரனும், பிராகாதியும் பெரும் சேனையோடு உன்னைத் தொடர்வார்கள். வானர வீரர்களை அடித்து நொறுக்குவார்கள்," என்று உற்சாகமூட்ட, கும்பகர்ணன் சிரிப்போடு எல்லாம் தெரிந்த ஒரு முகபாவத்தோடு யுத்த களத்தில் பிரவேசித்தான்.

எங்கே வானர வீரர்கள் என்று ஆவலோடு தேடினான். அவர்கள் கும்பகர்ணனை சூழ்ந்து கொண்டார்கள். எகிறி எகிறி தாக்கத்

துவங்கினார்கள். பிரமாண்டமான உருவம் கொண்ட கும்பகர்ணன், தன் புறங்கைகளால் அவர்களை ஒட்டுமொத்தமாக விலக்கினான். அவர்கள், அந்த வேகம் தாங்காமல் சுருண்டு விழுந்தார்கள். கடுமையாக அடிபட்டார்கள். வானர வீரர்களை கொத்தாகப் பிடித்து தரையில் அடித்தும், இன்னொரு கொத்தாக பிடித்து வாயில் கடித்து துப்பியும் மிகுந்த இம்சை கொடுத்தான். இம்மாதிரியான யுத்தத்தை பார்த்திராத வானர வீரர்கள் பயந்து பின்வாங்கினார்கள். உயரே தூக்கி தரையில் அடிபடுகிறபோது ஏற்பட்ட வலி தாங்காமல் அலறினார்கள்.

வானர வீரர்களின் அலறலை பார்த்து சுக்ரீவன் ஓடினான். பெரிய ஆல மரத்தை பிய்த்து எடுத்து கும்பகர்ணன் தலையில் அடித்தான். ஆலமரம் துண்டாகியது. கும்பகர்ணனுக்கு எதுவும் நேரவில்லை. சுக்ரீவனை அள்ளி எடுத்துக் கொண்டான். உச்சியில் தூக்கினான். ஓங்கி தரையில் போடுவதற்காக பிடித்துக் கொண்டான். சுக்ரீவனை கும்பகர்ணன் பிடித்துக் கொண்டதைப் பார்த்து லட்சுமணர் அங்கே ஓடினார். வில் வளைத்து தூக்கிய கைகளில் இடையறாது கூரிய அம்புகளை செலுத்தினார். புறங்கையில் அம்புகள் நுழைந்ததால் கும்பகர்ணன் சுக்ரீவனை நழுவ விட்டான். தனது கையால் பெரிய பாறையை எடுத்துக் கொண்டு லட்சுமணர் மீது போடுவதற்காக முயற்சித்தான். லட்சுமணர் அந்தப் பாறையையும் தன்னுடைய அம்புகளால் துளைத்துத் தூள்தூளாக்கினார். அந்தப் பக்கத்து கையையும் அம்புகளால் துளைத்தார். இரண்டு கைகளும் செயலற்று கும்பகர்ணன் வெறுமே நின்றான். அவனுக்கு மேலும் நான்கு கைகள் உண்டாயின. அந்தக் கைகளையும் லட்சுமணர் தகர்க்கத் துவங்கினார். அவனைக் கொல்லக் கருதி, பிரம்மாஸ்திரத்தை மனதில் நினைத்து கையில் வரவழைத்து, நெற்றியில் வைத்து கும்பகர்ணன் நெஞ்சு நோக்கி பிரம்மாஸ்திரத்தை செலுத்தினார். பெரும் ஓசையோடு வந்த அந்த பிரம்மாஸ்திரம் கும்பகர்ணன் நெஞ்சை தாக்கி இரண்டாக கிழித்தது. கும்பகர்ணன் மிகப் பெரிய சத்தத்தோடு தரையில் விழுந்தான்.

கும்பகர்ணனை தொடர்ந்து வந்த பிரம்மாதி, நீலனால் அழிக்கப்பட்டான். வஜ்ரவேகனை மலைச் சிகரத்தால் எடுத்து அடித்து நசுக்கி கொன்றான். அரக்கர்கள் ராமருடைய சைன்யத்தால் கொல்லப்பட்டார்கள். கும்பகர்ணன் இறந்ததைக் கேட்டு ராவணன் தன் மகனை அழைத்தான். இறுக அணைத்துக் கொண்டான். 'பகைவரை அழிப்பவனே, ராம லட்சுமணரை வதம் செய். சுக்ரீவனை கொன்று போடு. நீ இந்திரனை வென்று புகழ் பெற்றவன். இவர்கள் உனக்கு இணையேயில்லை. போ. வெறியோடு போர் செய்' என்று உசுப்பி அனுப்பினான்.

இந்திரஜித் மாயையில் வல்லவன். அவன் தேரில் ஏறி லட்சுமணனை நோக்கி உள்ளே நுழைந்தான். லட்சுமணர் அவன் தேரை உடைத்தார். பாணங்களால் அவனை அடித்தார். இந்திரஜித் மாயமானான். மாயமான முறையில் நின்று வேகமாக அவர்கள் மீது பாணம் செலுத்தினான். எங்கிருந்து பாணம் எப்படி வருகிறது, எப்படி எதிர்ப்பது என்று தெரியாமல் திகைத்துப் போன ராம, லட்சுமணர் மயங்கி விழுந்தார்கள். அவர்களை மேலும் பாணத்தால் கட்டினான். சுஷேசணன், மைந்தன், த்விதன், ஹனுமான், குமுதன், அங்கதன், நீலன், தாரன் மற்றும் நளனோடு சுக்ரீவன் அவ்விருவரையும் பத்திரமாக பாதுகாத்தான். விபீஷணன் அங்கு ஓடி வந்து மந்திரத்தின் மூலம் அவ்விருவரையும் நினைவுக்கு கொண்டு வந்தான். உடம்பு முழுவதும் அம்புகளால் துளைக்கப்பட்ட ராம, லட்சுமணர் வேதனைப்பட்டார்கள். சுக்ரீவன் விஷயா என்ற மந்திரத்தின் மூலம் அவர்கள் அங்கங்களில் இருந்த அம்புகளை எடுத்து ஒரு நொடியில் குணப்படுத்தி விட்டான். விஷம் நீங்க அவர்கள் துள்ளி எழுந்தார்கள்.

அப்பொழுது குபேரன் கட்டளையால், ஒரு தேவன் ஒரு பாத்திரத்தில் நீரை எடுத்துக் கொண்டு ராமரிடம் வந்தான். 'குபேரன் இந்த நீரை எடுத்து உங்கள் கண்களை கழுவச் சொன்னார். உங்களைச் சுற்றி இருக்கின்ற மாயை நீங்க இந்த நீரை உபயோகப்படுத்தினால் மாயையால் மறைந்தவர்களை உங்களால் பார்க்க முடியும் என்று சொல்லி இதை கொடுத்து அனுப்பினார்' என்று சொல்ல, ராமர் அந்த மந்திர நீரை எடுத்துக் கொண்டு முகம் கழுவி, லட்சுமணன், சுக்ரீவன், நீலன், ஹனுமான் எல்லோருக்கும் கொடுக்க, வானர வீரர்களும் கழுவிக் கொண்டார்கள். எல்லோருக்கும் அந்தரத்திலிருந்து போர் புரிகின்ற மாயையான வீரர்கள் கண்ணுக்குத் தெரிந்தார்கள்.

வெற்றி பெற்ற இந்திரஜித் ராவணனிடம் போய் அலட்டிக் கொண்டான். மறுபடியும் போருக்கு வந்தான். துவம்சம் செய்வேன் என்று கொக்கரித்தான். லட்சுமணர் அவனை எதிர்கொண்டார். வேகமாக அவனை நோக்கி பாணங்களை

செலுத்தினார். லட்சுமணனுக்கு கட்டுங்கடங்காத கோபம் இருந்தது. பெருத்த அகங்காரம் இந்திரஜித்திடம் இருந்தது. அவர்கள் இருவரும் மிக உக்கிரத்தோடு போரிட்டார்கள். மூன்று பாணங்களால் இந்திரஜித்தின் நெஞ்சை நோக்கி செலுத்தி லட்சுமணர் அவன் உயிரை எடுத்தார். அவன் தலையை உடம்பிலிருந்து துண்டித்தார். இந்திரஜித்தினுடைய சாரதியையும் லட்சுமணர் ஒரு பாணத்தால் கொல்ல, குதிரைகள் திரும்பி அரண்மனைக்கு இந்திரஜித் இல்லாமல் ஓடின.

மகன் இல்லாது தேர் வருவதைப் பார்த்து ராவணன் பயத்தால் நடுங்கினான். பித்துப் பிடித்தவன்போல் ஆனான். எல்லாவற்றுக்கும் காரணம் அந்த சீதைதானே? அவளை வெட்டிக் கொன்று போடுகிறேன். அதுதான் ராமனுக்கு நான் தரும் தண்டனை என்று வாளை உருவிக் கொண்டு சீதையை நோக்கி ஓடினான். அப்பொழுது அபிங்ஞன் என்கிற மந்திரி ராவணனைத் தடுத்தான். "பல எதிரிகளைக் கொன்ற இந்த வாள் ஒரு அபலையை கொல்வதா? நீங்கள் போரிட வேண்டியது ராமரை நோக்கியே தவிர, கொல்ல வேண்டியது சீதையை அல்ல. உங்களிடம் கைதியாக இருப்பவரை வெட்டிப் போடுவது எந்த விதத்திலும் வீரமல்ல. உங்களுக்கு கொல்ல வேண்டுமென்றால் இவள் கணவனைக் கொல்லுங்கள். இவள் கணவனைக் கொன்றால் இவள் தானாக இறந்து விடுவாள். இந்திரனை புறமுதுகு காட்டி ஓடச் செய்த நீங்கள் இப்படி வாளோடு ஒரு பெண்ணை நோக்கிப் போவது பரிதாபமாக இருக்கிறது." என்று அவன் வாளை பிடுங்கி உறையில் சொருகினான்.

மகன் இறந்த துக்கத்தில் தன் தேரில் ஏறி மிக கம்பீரமாக ராவணன் கோட்டையை விட்டு வெளியே வந்தான். அவனைச் சுற்றி பல்வேறு விதமான ராட்சஸர்கள் துணையாக வந்தார்கள். அவர்கள் கோட்டையை விட்டு வெளியே வந்ததும் வானர வீரர்கள் சூழ்ந்துகொண்டு கற்களாலும், கம்பு கட்டைகளாலும் அடித்து அந்த கூட்டத்தை ஓடச் செய்தார்கள். இடையறாது பாறைகளை எறிந்தார்கள். அப்பொழுது ராவணன் ஒரு மாயா விவகாரம் செய்தான். ராம, லட்சுமணரைப் போலவே ஆயிரக்கணக்கானவர்களை உண்டாக்கி அவர்களை வானரங்களை நோக்கி பாணங்களை விடச்செய்தான். வானர வீரர்கள் திகைத்தார்கள். ஆனால், லட்சுமணர் திகைக்கவில்லை. இது அரக்கனுடைய கூத்து என்பதை புரிந்து கொண்டு கடுமையாக அந்த உருவங்களை தாக்கினார்.

அப்பொழுது இந்திரனுடைய சாரதியான மாதலி பச்சை வர்ணமுள்ள குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி ராமனுக்கு அருகே வந்தான். இந்தத் தேரிலே ஏறி ராவணனை கொல்லுங்கள். இது இந்திரனுடைய தேர் என்று அழைக்க, ராமர் முதலில் இது அரக்கனுடைய சூட்சியோ என்று சந்தேகித்து பின் விபீஷணனிடம் விசாரித்து இது உண்மை என்றுத் தெரிந்து அந்தத் தேரில் ஏறிக் கொண்டார்.

ராமர் மீது ராவணன் பாணங்களைச் செலுத்த தன்னுடைய கூரிய அம்புகளால் ராமர் அதை துண்டு துண்டாக்கினார். தங்கத்தால் ஆன ஒரு பாணத்தை எடுத்து அதை அட்சரம் உச்சரித்து ராவணனுடைய நெஞ்சு நோக்கி அனுப்பினார். அந்த அம்பு ராவணனுடைய தேரை எரித்தது. குதிரையை எரித்தது. தேர் பாகனை கொன்றது. ராவணனுடைய நெஞ்சு அறுத்து கீழே சாய்த்தது. ராமருடைய பிரம்மாஸ்திரத்தால் ராவணனுடைய எலும்புகளும், நரம்புகளும், தோலும் பஸ்மமாகி விட்டன. அதன் சாம்பல்கூட எஞ்சவில்லை. ராவணன் இறந்த அந்த கணமே விபீஷ்ணனுக்கு ராமர் பட்டம் கட்டினார்.

கோட்டைக்குள் போன விபீஷ்ணன் முக்கிய மந்திரியான அபிங்ஞனோடு சீதையை நோக்கி நடந்துபோய் கைகூப்பி அவளை வெளியே அழைத்து வந்தான். அழுக்கு படிந்த உடையும், கலைந்த தலையும், அழுத கண்களும், துவண்ட உடம்புமாக இருந்த சீதை பல்லக்கில் ஏறி ஸ்ரீராமரை வந்து அடைந்தாள்.

'இனிய என் மனைவியே, உன்னை ராவணனுடைய சிறையிலிருந்து வெளியே கொண்டு வந்து விட்டேன். உன்னை கடத்திய ராவணனை கொன்று விட்டேன். கடைசிவரை, முதுமைவரை நீ அவனுடைய சிறையில் இருக்கக்கூடாது என்ற எண்ணத்தினாலேயே இந்த அரக்கனை நான் வதம் புரிந்தேன். ஆனால், வேறொரு புருஷனுடைய கையில் அகப்பட்டு, ஒரு நாழிகை நேரத்திற்கு மேலே இருந்த பெண்ணை மறுபடியும் ஏற்றுக் கொள்வது என்பது எங்ஙனம்? நீ தூய்மை உள்ளவளா, தூய்மையற்றவளா என்பது எனக்கு முக்கியமல்ல. ஆனால், நான் உன்னை ஏற்க முடியாது. நாய் நக்கிய அவிசை யாரும் ஏற்பதில்லை' என்று சொல்ல, சீதை கவலையடைந்தாள். துவண்டு சரிந்தாள்.

(தொடரும்)

நினைப்பதும் செயல்படுவதும்

ஒன்றாயிருத்தல் வேண்டும்!

சீதை சுருண்டு மனம் கலங்கி விழுந்ததைக் கண்டு சுற்றியுள்ள வானரங்கள் முகத்தை மூடிக் கொண்டார்கள். ராமருடைய சீற்றத்துக்கு என்ன காரணம் என்று யோசித்தார்கள். அந்த சமயம் பிரம்மா அங்கு வந்து ராமருக்கு தரிசனம் தந்தார். அக்னி, வாயு, எமன், வருணன் போன்ற தேவர்களும் வந்தார்கள். பிரகாசமான ரூபத்தோடு தசரத மன்னர் அங்கு வந்தார். கின்னரர்களும், கந்தர்வர்களும் அந்த சபையை நிறைத்தார்கள்.

அப்பொழுது சீதை ராமரை நோக்கிப் பேசினாள்: "உங்களைத் தொட்டுக் கொண்டிருந்த காற்று இலங்கையில் உள்ள என்னையும் தொட்டுக் கொண்டிருந்தது. நான் தவறு செய்தவளாக இருந்தால், நான் பாவியாக இருந்தால் அக்னி, நீர், ஆகாயம், பூமி, வாயு அனைவரும் சேர்ந்து என் உயிரை எடுக்கட்டும். நான் உங்களைத் தவிர வேறு எவரையும் மனதாலும் நினைக்கவில்லை. இதற்கு தேவர்கள் சாட்சி சொல்லட்டும்."

அப்பொழுது வாயு, சீதை பாபமற்றவள் என்று சொன்னார். அக்னிதேவன் ஒரு சிறிய குற்றமும் சீதையிடம் உண்டாகவில்லை. மைதிலி பாபமற்றவள் என்று சொன்னார்.

'ராவணனுக்கு ஒரு சாபம் இருக்கிறது ராமா' என்று பிரம்மா அருகே வந்து பேசினார். "மாற்றரசர் மனைவியை ராவணன் தொடுவானானால் அவன் தலை சுக்கு நூறாகி விடும் என்ற ஒரு விதி இருக்கிறது. எனவே, ஒரு காலும் ராவணன் அத்து மீறி இருக்க முடியாது. ராவணன் உன்னால் கொல்லப்பட்டான். தலை வெடித்து சாகவில்லை. எனவே, சீதை தூய்மையானவள் என்பதை புரிந்து கொள்" என்று சொன்னார்.

தசரதர் முன் வந்தார். "உனக்கு நன்மை உண்டாகட்டும் ராமா. நீ அயோத்தி சென்று அரசாள வேண்டும். சீதையோடு போய் பட்டாபிஷேகம் ஏற்க வேண்டும். சீதை தூய்மையானவள்" என்று மிகப் பிரியத்தோடு பேசினார். "ராமா, உன்னுடைய வனவாசத்தின் பதினான்கு ஆண்டுகள் முடிந்து விட்டன. நீ அயோத்திக்கு புறப்படும் நேரம் வந்து விட்டது. நீ சீதையை சேர்த்துக் கொள்." என்று சொல்ல, ராமர் கைநீட்ட, சீதை அவருக்கு அருகே வந்து நாணத்தோடு நின்றாள்.

சீதை சொல்ல, திரிசடைக்கு தனமும், மரியாதையும் ராமச்சந்திர மூர்த்தி செய்வித்தார். அபிஞ்சனுக்கு அவன் விரும்பிய வரங்கள் கொடுத்தார்.

மகாபாரதம்

71



“உனக்கு என்ன வரங்கள் வேண்டும் ராமா?” என்று பிரம்மா கேட்க, “அடிபட்டு இறந்த வானரங்கள் மறுபடியும் உயிர் பெறட்டும். என் மனம் எப்பொழுதுமே தர்மத்தில் நிலைக்கட்டும். நீங்கள் ஆசிர்வதியுங்கள்,” என்று ராமன் சொல்ல, அவ்வாறே ஆகட்டும் என்று பிரம்மா வரம் கொடுத்தார். இறந்து போன வானரங்கள் அனைத்தும் உயிர் பெற்றன.

பாலகுமாரன்

ராமருக்கு அருகே வந்த சீதையைப் பார்த்து ஹனுமார் புளகாங்கிதம் அடைந்தார். கண்ணில் நீர் பெருக்க கை கூப்பினார். சீதைக்கு மனம் நெகிழ்ந்தது.

“ஹனுமான் என்னுடைய அருளால் உனக்கு எப்பொழுதுமே திவ்விய போகங்கள் கிடைத்துக் கொண்டிருக்கும். ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி கீர்த்தி இருக்கும்வரை நீ நீடித்து வாழ்வாய், சிரஞ்சீவியாக இருப்பாய்,” என்று ஆசிர்வதித்தாள்.

வானர வீரர்கள் பார்க்கும் பொழுதே தேவர்களும், பிரம்மாவும், தசரதரும் மெல்ல மறைந்தார்கள். தேவர்களின் குதிரைகள் பூட்டிய தேரை எடுத்து வந்த மாதலி ராமரை “ராமா, பூமியிலுள்ள மனிதர்கள் மட்டுமல்ல, தேவர்களும், அசுரர்களும், கந்தர்வர்களும், யட்சர்களும், ராட்சஸர்களும், நாகர்களும் உங்கள் புகழ் பாடிக் கொண்டேயிருப்பார்கள். உங்கள் பெயர் ஒலிக்காத இடமே இந்த பிரபஞ்சத்தில் இருக்காது,” என்று வாழ்த்தி ஆசிர்வதித்து விடை பெற்றான். இந்திரலோகத்துக்கு போனான்.

ஸ்ரீராமர் புஷ்பக விமானத்தில் ஏறி கிஷ்கிந்தாவை அடைந்து அங்கு அங்கதனுக்கு அரச பட்டம் கொடுத்தார். போகும் வழி முழுவதையும் சீதைக்குக் காட்டிக் கொண்டு, அவளும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அயோத்திக்கு வந்து இறங்கினார்கள். ஹனுமனை தன் தூதுவனாய் முன்கூட்டியே அயோத்திக்கு அனுப்பி தன் வருகையை தெரிவித்தார் ராமர். பரதன் மரவுரி தரித்து துயரத்தோடும், அழுக்கோடும் எந்த அரச அலங்காரமும் இல்லாது இருப்பதைப் பார்த்து கண்ணில் நீர் வடித்தார். அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவி சந்தோஷமடைந்தார்கள். ஸ்ரீராமருக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்தார்கள்.

சுக்ரீவனையும், விபீஷ்ணனையும் தத்தம் வீடு திரும்ப கட்டளை இட்டு அயோத்தியை மிகச் சிறப்பாக ஆண்டு வந்தார் ராமர். புஷ்பக விமானத்தை குபேரனுக்கே திருப்பிக் கொடுத்தார். கோமதி நதிக்கரையில் ஸ்ரீராமர் பல்வேறு அஸ்வமேத யாகங்களை செய்தார். அயோத்தி நகரம் இடையறாது அவர் புகழை பாடிக் கொண்டே இருந்தது. ஸ்ரீராமருடைய புகழ் பிரபஞ்சத்தில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

“இனிமையான தருமா, ராமரை விடவா உன்னுடைய துக்கம் அதிகம்? எந்தத் தவறும் செய்யாத ராமர் பதினான்கு வருடம் வனவாசம் அனுபவித்தார். நீ வனவாசம் அனுபவித்தது உன்னுடைய தவறால். உன் சூது விருப்பத்தால். உன்னைச் சுற்றி பலமாக நான்கு சகோதரர்கள் இருக்கிறார்கள். இந்த கேடு கெட்ட ராஜன் உன் மனைவியை அபகரித்தபோது, அவர்களை அடித்து துவம்சம் செய்து மீட்டு வந்தார்கள். ராவணன் சீதையை தூக்கிப் போன போது அங்கு எவரும் ராமருக்கு உதவி செய்யவில்லை. உனக்கு சகோதரர்கள் இருக்கிறார்கள். ஸ்ரீராமருக்கு குரங்குகளும், கரடிகளும்தான் துணையாக இருந்தன. அவைகளை வைத்துக் கொண்டே எதிரியை வதம் செய்தார். ராவணனை ஒழித்தார். என்னைப் போல் கஷ்டம் அனுபவித்தவர்கள் உண்டோ என்று தயவு செய்து பேசாதே. ஸ்ரீராமருக்கு முன்னால் உன் கஷ்டம் தூசு. ஒரு காரணத்திற்காகத்தான் நீ வனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறாய். இந்த கோபத்தை நீ துரியோதனன்மீது செலுத்து. அவனை சார்ந்தோரை அழித்து ஒழிக்க வேண்டும் என்ற வேகத்தைக் கொள். அது முக்கியம். அதுதான் உன் வனவாசத்திற்கு பிரதானமான காரியம். இங்கு வேறொரு விஷயம் நடக்கப்போகிறது. அதற்கு நீ காரணம். உன் கோபத்தை வளர்த்துக் கொள். பலவீனமடையாதே” என்று சொன்னார்.

ஸ்ரீராமருடைய கதையைக் கேட்ட தருமர் முகம் பொத்திக் கொண்டு அழுதார். மற்றவர்களும் அழுதார்கள். நிதானமாகி முகம் துடைத்துக் கொண்டு முனிவரை நமஸ்காரம் செய்து, “நான் தவறு செய்தேன். எனக்கு வனவாசம் கிடைத்தது. ஆனால் திரௌபதி என்ன தவறு செய்தாள்? அவளை இந்த ராஜன்வரையிலும் இம்சைபடுத்துகிறார்களே! துச்சாதனன் தரையில் இழுத்து வந்தானே. ஒரே ஒரு உடை உடுத்திய, மாதவிலக்கில் இருந்த பெண்மணியை அசிங்கப்படுத்தினானே. இப்பொழுது என் கேள்வி வேறு. என்னை விட்டு விடுங்கள். திரௌபதி செய்த பாவம் என்ன? இவளைவிட கஷ்டப்பட்டவர்கள் இங்கு உண்டோ?” என்று உரத்த குரலில் கத்தினார்.

முனிவர் வாய்விட்டு சிரித்தார். “சரி, உனக்கு இன்னொரு கதை சொல்கிறேன்” என்றார்.

“மத்தள தேசத்து மன்னன் அஸ்வபதி. அவன் தர்மவான். வேதசாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவன். மன்னனாக இருந்தாலும் புலனடக்கத்தோடு ஹோமங்களில், மந்திர ஜபங்களில் ஈடுபட்டு மிகுந்த நெறியுடைய வாழ்க்கையை வாழ்ந்து வந்தவன். எவருக்கும் தீங்கு எண்ணாதவன். அவனுடைய தேசத்தில் எல்லா நேரமும் சுபிட்சம் இருந்தது. வெறுமே குழந்தைகள் பெறுவது என்று இல்லாமல் நன்மக்கள் பேறு என்பதை

விரும்பி அஸ்வபதி இடையறாது காயத்ரி ஜபம் செய்து வந்தான். மந்திர ஜபமாக மட்டுமல்லாது தினந்தோறும் ஹோமங்களாகவும் நடத்தினான். பல அந்தணர்களை வைத்து பல திரவியங்களைச் சொரிந்து மிகப்பெரிய யாகமாகவும் அதைச் செய்தான். அவனுடைய பக்திக்கு உருகிய காயத்ரி தேவி அவன் முன்பு தோன்றினாள். ‘மிக மகிழ்ந்தோம் அஸ்வபதி. உனக்கு என்ன வரம் வேண்டும் சொல்’ என்று கேட்டாள்.

“உங்களுடைய தரிசனமே எனக்கு மிகப்பெரிய வரமாக இருக்கிறது. ஆயினும் நன்மக்கட் பேறு விரும்பித்தான் அப்படி ஒரு சங்கல்பம் செய்துதான் நான் இந்த ஜபத்தை, ஹோமத்தை, யஞ்ஞத்தை இடையறாது செய்து வந்தேன். எனக்கு நல்ல குழந்தைகள் வேண்டும்.”

அப்படியா? இதைப் பற்றி நீ ஹோமங்கள் செய்யும் போதே நான் பிரம்மாவிடம் பேசியிருக்கிறேன். உனக்கு என் அம்சம் உள்ள ஒரு கன்னிகை மகளாகப் பிறப்பாள்... அஸ்வபதி குறுக்கே பேச வேண்டாம். நன்மக்கட் பேறு என்பது ஆணாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. வம்சவிருத்திக்கு பெண்ணும் உதவக் கூடும். மறுப்பேதும் சொல்லாமல் நான் கொடுக்கின்ற வரத்தை ஏற்பாயாக,” என்று கட்டளையிட, அவன் சரி என்று தலையசைத்தான்.

தன்னைவிட தான் வணங்குகின்ற தெய்வத்திற்கு தன்னைப் பற்றி தெரியும் என்று முழுவதுமாக நம்பினான்.

அவன் மனைவிக்கு மிக அழகாக ஒரு பெண் குழந்தையாக சாவித்திரி பிறந்தாள். அற்புதமாக வளர்ந்தாள். அவளுடைய அழகு எல்லோரையும் கை கூப்ப வைத்தது. மத்தள தேசத்தில் அற்புதமான அரசகுமாரி வளர்ந்து வருகிறாள் என்பதை கேள்விப்பட்டு மற்ற அரசர்கள் தூதுவர்களை அனுப்பி அவளை பார்த்துவரச் சொன்னார்கள். பிரமிப்பான அவளுடைய அழகும், அவளுடைய நடவடிக்கைகளும், பூஜைகளும், அவளிடமிருந்து வெளிப்படுகின்ற சாந்நித்தியத்தையும் பார்த்துவிட்டு வந்தவர்கள் இவள் வெறும் அரசகுமாரி அல்ல என்று தீர்மானித்து, இவளுக்கு வேறு எவனாவது காத்திருப்பான். நம்முடைய இளவரசனுக்கு இவள் வேண்டாம் என்று விலகிப் போனார்கள். யாரும் வரவேயில்லை. ஒரு பெண்ணை திருமணம் செய்து கொடுக்கிறாயா என்று தகப்பனை நோக்கி வரவேண்டும். அதுதான் அழகு. அல்லாது ஒரு தகப்பன் தன் பெண்ணை கொண்டு போய் இவளை திருமணம் செய்து கொள்கிறீர்களா என்று கேட்பது உயர்ந்தது அல்ல. அது கொஞ்சம் தாழ்மையான விஷயம்.

மத்தள தேசத்து அரசன் காத்திருந்தான். யாரும் வரவில்லை. எனவே, “வயது முதிர்ந்த அனுபவசாலிகளான நம் மந்திரிகளுடன் நீ பல தேசங்களுக்குப் போய் அங்கே உனக்குப் பிடித்த கணவனை தேர்ந்தெடுப்பாயாக. உன் விருப்பத்தைச் சொல்லி அவன் விருப்பத்தை கேட்டு வருவாயாக. இங்கு வந்த பிறகு திருமண ஏற்பாடுகளை நான் பார்த்துக் கொள்கிறேன்,” என்று மகளிடம் சொல்ல, அவள் மந்திரிகளுடன், தீர்த்த யாத்திரை போவது போல கிளம்பினாள். கோயில்களை தரிசித்தாள். பல பட்டினங்களைப் பார்த்தாள். குளங்களில், நதிகளில் மூழ்கி எழுந்து பூஜை செய்தாள். தனக்கு பிடித்த ஒருவனை தேர்ந்தெடுத்து அவள் அரண்மனைக்குத் திரும்பினாள்.

அவள் அரண்மனை திரும்பும் நேரம், தகப்பன் அஸ்வபதியோடு

நாரத மகரிஷி அமர்ந்திருந்தார். அவள் உள்ளே நுழைந்து தந்தையையும், நாரதரையும் நமஸ்கரித்து தான் கொண்டு வந்த பிரசாதங்களை ஒரு தட்டில் வைத்து நீட்டினாள். நாரதர் தொட்டுக் கொண்டார். அஸ்வபதி இட்டுக் கொண்டார்.

"இவள் உன் மகள் அல்லவா. பேரழகியாக இருக்கிறாளே. முகத்தில் அற்புதமான காந்தி வீசுகிறதே. இவளுக்கு திருமணம் செய்ய வேண்டாமா? அதற்கான நேரம் வந்து விட்டதாகத் தெரிகிறதே. என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?" என்று அஸ்வபதியை கேட்க, "அது குறித்த கவலையோடுதான் நான் இருக்கிறேன். இவளை பெண் கேட்டு எவரும் வரவில்லை. ஏதேதோ காரணம் சொல்கிறார்கள். எனவே, இவளையே அனுப்பி தேர்ந்தெடுத்து வா என்று சொன்னேன். இவள் என் மந்திரிகளோடு தீர்த்த யாத்திரை போய் திரும்பி இருக்கிறாள். இவள் முகத்தைப் பார்த்தால் யாரோ ஒருவனை தேர்ந்தெடுத்திருப்பாள் என்று தெரிகிறது. அந்த நாணம் முகத்தில் தெரிகிறது. இனிமேல்தான் விசாரிக்க வேண்டும்." என்று சொல்ல, சத்தியவான் என்ற இளவரசனை தேர்ந்தெடுத்ததாக மகள் மெல்லிய குரலில் கூறினாள்.

யார் சத்தியவான்?

மகத தேசத்து மன்னன் த்யுத்மசேனனின் மகன் சத்தியவான். அவன் சத்தியமே பேசுவதால் அவனுக்கு அந்தப் பெயர். அவன் குதிரைகள் மீது விருப்பமுடையவன். குதிரைகளை பொம்மையாகவும், ஓவியமாகவும், கற்சிற்பமாகவும் உருவாக்குபவன். அதற்காக அவனுக்கு சித்ரசேனன் என்ற பெயரும் உண்டு. த்யுத்மசேனனுக்கு எதிரிகள் அதிகம். அவர்கள் ஒன்று சேர்ந்து அவனை ராஜ்யத்திலிருந்து விரட்டிவிட, இளம் வயது மகனோடு வனத்திற்கு வந்து விட்டான். அங்கு தன் மனைவியோடும், மகனோடும் அமைதியான வாழ்க்கையை மேற்கொண்டான். பேரரசனாக இருந்தாலும் வனவாசியாக சத்யவான் வாழ்ந்து வந்தான். அவனுடைய பேச்சு, நடவடிக்கை, முகபாவம் இவற்றில் மனம் பறிகொடுத்து தேசம் இல்லாது போனாலும் சத்திரியன் சத்திரியனே என்று அவனை மனதால் வரித்து, அதை அவனிடமும் சொல்லி அரண்மனைக்கு அழைத்து வந்திருந்தாள் சாவித்திரி.

நாரதர் இது சரிவராதே என்று சொல்லி கண் மூடிக் கொண்டார். அஸ்வபதி கலவரமானார். "எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்? இவள் தேர்ந்தெடுத்தது நல்லவனைத் தானே?" என்று பயத்தோடு கேட்டார்.

"மிகமிக நல்லவன், சத்தியசந்தன். அமைதியானவன். பொறுப்பானவன். தாய்க்கும், தந்தைக்கும் மிகப்பெரிய மரியாதை செய்பவன். உயர்ந்த குணங்களுடையவன். தர்மாத்மா. அதில் எந்த சந்தேகமும் இல்லை. எந்தப் பெண் அவனை புருஷனாக அடைந்தாலும் அவள் மிகப் பெரிய அதிர்ஷ்சாலி என்பதிலும் எந்த ஐயமும் இல்லை. ஆனால் இந்த எல்லா குணங்களையும் தாண்டி ஒரு குறை இருக்கிறது."

"என்ன குறை?" அஸ்வபதி மெல்லிய குரலில் கேட்டார்.

"இன்றைய தினத்தோடு இன்னும் ஒரு வருடம் கழித்து அவன் ஆயுள் முடியப்போகிறது. இன்னும் ஒரு வருடம்தான் அவன் ஜீவிப்பான். எனவே, ஆயுள் குறைவான ஒரு ஆணை உன் மகள் தேர்ந்தெடுத்து விட்டாள் என்பது தான் குறை."

எப்படி திருமணம் செய்வது? மகள் விதவை யாவாள் என்று தெரிந்து திருமணத்தை ஒரு தந்தையால் செய்ய முடியுமா? மனம் ஏற்குமா? "சாவித்திரி, நீ மறுபடியும் தீர்த்த யாத்திரை மேற்கொள். வேறொரு கணவனை தேர்ந்தெடுத்துக் கொள். சத்தியவான் வேண்டாம்" என்று அஸ்வபதி பேசினார்.

"இல்லை தந்தையே. நான் மனதால் அவரை வரித்துவிட்டேன். என் எண்ணத்தைச் சொல்லி விட்டேன். ஒருமுறை மனதால் வரித்த பிறகு அதை மாற்ற என்னால் இயலாது. மனம் என்ன சொல்கிறதோ அதுதான் சொல். சொல் என்ன சொல்கிறதோ அதுதான் செயல். அதனால் செயலுக்கு காரணமான மனதை புறக்கணித்து விட்டு இஷ்டப்படி செய்ய முடியாது. நானும் என் செயல்களும் இணையாகவே பயணப்பட வேண்டும். மனம் ஒன்று நினைத்திருக்க, செயல் ஒன்று செய்திருப்பது கேவலமான வாழ்க்கை. அது தூய்மையானது அல்ல. எனவே, எனக்கு திருமணம் என்று ஒன்று இருந்தால் அது சத்தியவானோடுதான். எனவே, நீங்கள் திருமணம் பேசி முடியுங்கள்" என்று சொல்லி, அவரிடம் விடை பெற்று நகர்ந்தாள்.

அஸ்வபதி கவலையோடு உட்கார, நாரதர் அவரை தேற்றினார். "இவ்வளவு ஜொலிப்பான, ஒளிமிகுந்த கன்னிகையை மகளாகப் பெற்றிருக்கிறாய். இது தவறாகப் போகுமா? மனம் மாற முடியாது என்ற பெண்ணை மனம்மாறச் சொல்வது தர்மமாகுமா? எனவே, அவள் விருப்பப்படி திருமணம் செய்து கொடு. அவளுடைய மன உறுதி, அவளுடைய தபஸ் அவளுக்கு நல்லதையே கொடுக்கும்," என்று சொல்லி நாரதர் விடைபெற்றார்.

ஒருவாறு மனம் தேறி அஸ்வபதி அந்த வனம் நோக்கிப் போய் சாளுவ தேசத்து அரசன் த்ருத்யும்னிடம் தன் விருப்பத்தை தெரிவித்தார்.

"ஐயா, எங்களுக்கு பார்வை மங்கி வருகிறது.

வயதான காரணத்தினால் தள்ளாமை இருக்கிறது. அரசகுலத்தில் வாழ்ந்தாலும் எவரையும் துன்புறுத்தாத ஒரு அமைதியான வாழ்க்கையை நானும், என் மனைவியும் வாழ்ந்து வருகிறோம். என் மகன் எங்களுக்கு முழு துணையாக இருக்கிறான். இளவரசனாக இருந்து சகல போகங்களையும் அனுபவிக்க வேண்டியவன், எங்களுக்காக இந்த வனத்தில் ஒரு சாதாரண வேடனைப் போல திரிகிறான். அவனுக்கு கொண்டுபோய் பெண் கொடுத்தால் அந்தப் பெண்ணுக்கு எந்த சுக சௌகரியங்களும் இருக்காது. இந்த வீட்டை பாருங்கள்.

எந்த வசதியும் இல்லாத ஒரு குடில் இது. இதை அரண்மனையாக கருதி உங்கள் பெண் வாழ வேண்டும். என்ன தலையெழுத்து. இது வேண்டாம் என்று நினைக்கிறேன். உங்கள் மகளுக்கு எடுத்துச் சொல்லுங்கள்" என்று பொறுமையுடன் பேசினார் த்ருத்யும்னன்.

தன் மகள் தீர்மானித்து விட்டதையும், சத்தியவானைத் தவிர வேறு ஆணை மனதாலும் நினையேன் என்று சொல்ல, சாளுவ தேசத்து அரசனும், அவன் மனைவியும் வியப்படைந்தார்கள். "அப்படியானால் அவளை முழு மனதோடு நான் வரவேற்கிறேன். உன் மகளை நீ எப்படி வளர்த்தாயோ அதேபோல மிகுந்த பிரியத்தோடு நானும் என் மருமகளை வளர்க்கிறேன். அவளுக்கு எல்லா உதவிகளும் செய்ய முயற்சிக்கிறேன். அவளை அழைத்து வா. திருமணம் நடக்கட்டும்" என்று சொல்ல, படைவீரர்கள் போய் நன்கு அலங்கரிக்கப்பட்ட சாவித்திரியை தோழிமாரோடு கூட்டி வந்தார்கள்.

அந்தணர்களை முன்னிறுத்தி, அக்னி வளர்த்து அந்த வனத்தை ஒளிமயமாக்கி மிகச் சிறப்பாக திருமணம் நடந்தது. பல தேவதைகளை வணங்கி அக்னி சாட்சியாக சத்தியவானின் கரத்தை சாவித்திரி பற்றினாள். அந்த குடிலில் என்னவிதமான உபகரணங்களையெல்லாம் உதவியாக வைக்க வேண்டுமோ, எதையெல்லாம் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னார்களோ, அவற்றை சீதனமாக கனத்த மனத்தோடு அஸ்வபதி கொடுத்து விட்டு ஊர் திரும்பினார்.

தன்னுடைய ஆடை, ஆபரணங்களை பெட்டியில் வைத்து விட்டு சாதாரண மரவுரியை சாவித்திரி தரித்துக் கொண்டாள். மாமனாருக்கும், மாமியாருக்கும் மிகுந்த உதவி செய்தாள். கணவனுக்கு துணையாக இருந்தாள். சந்தோஷப்படுத்தினாள். அந்த வீட்டை ஒளிமயமாக மாற்றினாள். சிரிப்பான முகத்தோடு வளைய வந்தாள். ஆனால் மனதுக்குள் தனது தாம்பத்யம் ஒரு வருடம்தான் என்பது அவளுக்கு இடையறாது நினைவில் மோதிக்கொண்டிருந்தது.

(தொடரும்)

வடதிருவானைக்கா என வழங்கும் செம்பாக்கம்

ஸ்ரீபீடம் ஸ்ரீபாலா சமஸ்தானம் ஆலயம்

ஸ்ரீமத் ஔஷத லலிதா மஹாதிரிபுரசுந்தரி ஸ்ரீசக்ரராஜசபை

ஸ்ரீஅம்பிகையின் அருளாலும், சாதுநாதர் ஆணையால் 1981-ல் பிரதிஷ்டை செய்யப்பட்டது
அம்பிகை மூன்று திருமேனியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீவித்யா ஸ்ரீபீடம்

ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி (குழந்தையாக)
[illegible]
[illegible]
ஸ்ரீ தருணீ மஹா திரிபுரசுந்தரி (குமரியாக)
[illegible] அலங்காரத்தில் செம்பொன் திருமேனியாக கருவறையில்
சர்வலோக மகாராணி ஸ்ரீமத் ஔஷத லலிதா மஹா திரிபுரசுந்தரி (தாயாக)
6 திதி நித்யா படிகளின் மேல்தான் கருவறையில் உலகின் முதல் விஸ்வரூப மூலிகைத்திருமேனி
64க்கு மேற்பட்ட மூலிகைகள், பாஷாணங்கள், ஸாலிக்ராமத்தால் செய்யப்பட்ட சிவ-விஷ்ணு ரூபிணி
ஸ்ரீ லலிதையின் ராஜசபையில் மந்திரிணி ஸ்ரீஇராஜமாதங்கியுடன், சேனாதிபதி ஸ்ரீவாராகியும்
ஸ்ரீவித்யா குருமண்டல அசாத்ய ஸ்ரீசக்ரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சந்நிதி

வருடத்திற்கு நான்கு நவராத்திரிகள் நடைபெறும் ஸ்ரீலலிதா ஸ்ரீசக்ரராஜசபா

ஆடி: ஸ்ரீ மஹா வாராகி நவராத்திரி,
புரட்டாசி: ஸ்ரீ சாரதா நவராத்திரி.
தை: ஸ்ரீ இராஜமாதங்கி நவராத்திரி,
பங்குனி: ஸ்ரீ லலிதா மஹா நவராத்திரி பெருவிழா
நவாவரணபூஜை, திருக்கல்யாணம், பட்டாபிஷேகம்,
[illegible]
மாசி: மஹா சிவராத்திரி–நான்கு கால சிவலிங்க சிவபூஜை
மாத பௌர்ணமி தோறும் ஸ்ரீபாலா ஊஞ்சல்சேவை, நவாவரண பூஜை
27 நட்சத்திர தீபம், [illegible]

குழந்தைகளின் கல்வி, கலை ஞானம், வெற்றி, ஆரோக்யம் ஐஸ்வர்யம்
திருமணம், குழந்தை அருளும் குழந்தையாய் ஸ்ரீபாலா, லலிதாம்பிகை அருள்பெறுக!

அமைவிடம்:
திருப்போரூர்(OMR) - செங்கற்பட்டு சாலை, ஸ்ரீஜம்புகேஸ்வரர் கோவில் அருகில்
செம்பாக்கம்–603108, காஞ்சிபுரம் மாவட்டம்.
திருப்போரூர் முருகன் கோவிலிலிருந்து செங்கற்பட்டு சாலையில்
8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது

தரிசனநேரம்: காலை: 8.00am–12.30am மாலை: 4.30pm – 8.30pm.

ஆலய தொடர்புக்கு 97899 21151

மகாபாரதம்

72

காலங்கள் நகர்ந்தன. பருவங்கள் மாறின. இன்னும் சில நாட்களே சத்தியவான் உயிரோடு இருப்பான் என்று தெரிந்து அவள் இடையறாது இறை வணக்கத்தில் ஈடுபட்டாள். அவள் கவலையை த்ருத்யும்னன் உணர்ந்து கொண்டான். விவரம் கேட்டான். அவள் இம்மாதிரி என்று சொன்னதும் அவன் வருத்தப்பட்டான்.

“இதற்காகத்தான் இவனை திருமணம் செய்து கொள்ள வேண்டாம் என்று சொன்னேன். நீயாக வந்து இந்த வனத்தில் வாழ்ந்து கடைசியில் இந்த வாழ்க்கையும் நிலைபெறாது தவிக்கப் போகிறாய். எந்தக் கடவுள் உன்னை காப்பாற்றும் என்று தெரியவில்லை” என்று அழுதான்.

“இன்று முதல் நான் உணவு உண்ண மாட்டேன். இன்று முதல் நான் உட்கார மாட்டேன். படுக்க மாட்டேன். நான் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். நான் தூங்கும் நேரத்தில் என் கணவன் இறந்து விடக்கூடாது என்பதால் உண்ணாமல், உறங்காமல் இருக்கப் போகிறேன். எப்பொழுதும் நின்று கொண்டே இருக்கப் போகிறேன்” என்று சொல்ல, அவளுடைய மாமனாரான த்ருத்யும்னன் மிகுந்த வேதனை அடைந்தான்.

சாவித்திரி ஒரு ஸ்தம்பம் போல குடிசை வாசலில் நின்றிருந்தாள். எல்லா தெய்வங்களையும் வேண்டியபடி இருந்தாள். புருஷனை எப்படி காப்பாற்றுவது என்ற சிந்தனையில் இருந்தாள். புருஷனுக்கு இதைச் சொல்லக் கூடாது என்ற திடத்திலும் இருந்தாள். அந்த குறிப்பிட்ட நாள் வந்தது.

சத்தியவான் மிக உற்சாகமாக கிளம்பினான். “பழங்கள் தீர்ந்து விட்டன. விறகும்

“இன்னும் ஒரு வரம் தருகிறேன், கேள்!”

தேவைப்படுகிறது. எனவே காய்களும், பழங்களும் பறித்து வர நான் வனத்தின் பக்கம் போகிறேன். நீ தாய், தந்தையரை பார்த்துக் கொள்” என்று அவன் சொல்ல, “இல்லை நானும் வருகிறேன். இங்கு வந்து நான் வனங்களை பார்த்ததேயில்லை. சுற்றியதேயில்லை. உங்களோடு செல்ல விரும்புகின்றேன். என் மாமனார் அதற்கு அனுமதி தர வேண்டும்” என்று சால்வ தேசத்து அரசனிடம் கை கூப்பினாள் சாவித்திரி.

பாலகுமாரன்

“இந்த வீட்டிற்கு வந்து நீ என்னிடம் எதுவுமே கேட்டதில்லை மருமகளே. இப்பொழுதுதான் முதன் முதலாக கேட்கிறாய். தாராளமாக போய் வா. உன் புருஷன் கூடவே இரு” என்று ஆசிர்வதித்தார் மாமனார்.

சாவித்திரியும், சத்தியவானும் கைகோத்துக் கொண்டு மலர்கள் நிறைந்த அந்த வனப்பகுதியில் நடந்தார்கள். பழங்களும், காய்களும் சேகரித்தார்கள். கூடைகளில் நிரப்பிக் கொண்டார்கள். அவன் காய்ந்த மரத்தை வெட்டி சாய்த்து விறகுகளாக கோடாலியால் துண்டு செய்தான். வெட்டுகிறபோது அவனுக்கு அதிகம் வியர்த்தது. சட்டென்று நின்று தரையை பார்த்தான். தலை வலிக்கிறது என்றான். ஏதோ சிரமமாக இருக்கிறதே என்று தள்ளாடினான். சாவித்திரி அவனை அருகே படுக்க வைத்து அவன் தலையை தன் மடியில் வைத்துக் கொண்டாள். மெல்ல பிடித்து விட்டாள்.

எதிரே ஒரு உருவம் தோன்றியது. மிகுந்த தேஜஸுடன் அந்த கருத்த நிற உருவம் அரசரைப் போல அலங்கரித்து அவள் எதிரே எருமைகடாவில் வந்தது. எமதர்மராஜா என்பதை புரிந்து கொண்டாள். கை கூப்பினாள். “நீங்கள் யார்? எதற்கு இங்கு வந்திருக்கிறீர்கள். மிகுந்த தேஜஸ்வியோடு ஒரு தேவனைப் போல இருக்கிறீர்களே. உங்கள் வருகைக்கு என்ன காரணம்?” என்று கேட்டாள்.

“அடடே, உன் கண்ணுக்கு நான் தெரிகிறேனா? அப்படியானால் நீ பெண்களில் சிறந்தவள். உயர்ந்த பத்தினி. பூஜா விதிகளில் தேர்ந்தவள். நல்லது. படுத்துக் கொண்டிருப்பது உன் புருஷன்தானே. சத்தியவான் தானே. அவன் உயிரை எடுத்துப் போவதற்கு எமதர்மன் நான் வந்திருக்கிறேன்.”

“மனித உயிர்களை எடுத்துப் போக நீங்கள் தூதுவர்களை அனுப்புவீர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்களே வந்திருக்கிறீர்களே. ஆச்சரியமாக இருக்கிறது” சாவித்திரி கூப்பிய கைகளை பிரிக்காமல் பணிவோடு பேசினாள்.

“பெண்ணே, தொடர்ந்து நீ பேசுவது ஆச்சர்யமாக இருக்கிறது. அது உன்னுடைய பலத்தை காட்டுகிறது. சத்தியவான் தருமவான். குணவான். ஒழுக்க சீலமுடையவன். உயர்ந்த ஆத்மாக்களை நானே நேரே கவர்ந்து வருவது வழக்கம். இதோ, அவனுடைய ஆயுள் முடிந்தது” என்று தன் கை பாசத்தை வீச, அது அவன் உயிரை உடலிலிருந்து பிரித்தது. வெளியே இழுத்தது. கட்டை விரல் உயரமே உள்ள அவன் ஆவி பிரிந்தது. அந்த பாசத்தில் சிக்கி எமதர்மனுக்கு அருகே போயிற்று.

சாவித்திரி புருஷன் தலையை கீழே வைத்தாள். அவன் முககாந்தி குறைவதும், மூச்சு நிற்பதும், இருதய துடிப்பு அமைதியாவதும் அவள் உணர்ந்து கொண்டாள். எமதர்ம ராஜன் முன்னே செல்ல, பாசகயிற்றால் கட்டப்பட்ட சத்தியவானின் ஜீவன் பின்னே போயிற்று. சாவித்திரி பின் தொடர்ந்தாள். விரத நியமங்களால், பூஜா விதிகளால் தன்னை உயர்நிலைக்கு கொண்டு போயிருந்த சாவித்திரியால் அவ்விதம் செய்ய முடிந்தது.

“சாவித்திரி, இதென்ன ஆச்சரியம். என்னை எப்படி உன்னால் பின் தொடர முடிந்தது. ஆனாலும் இவ்விதம் செய்யலாகாது. நீ உன் கணவருக்குண்டான கடைசி கடன்களை செய்து பூமியில் கடன் இல்லாதவளாக மாறு. எங்களுக்கு பின்னே வருவதை நிறுத்து. நீ பூமியில் இன்னும் இருக்க வேண்டியவள். எனவே, பின் தொடராதே” என்று சொன்னார்.

“தருமராஜனே, என் கணவர் எங்கு அழைத்துச் செல்லப்படுகிறாரோ அல்லது அவர் எங்கு செல்கிறாரோ அங்கே நானும் செல்ல வேண்டும். இதுதான் தர்மம். தவம், குருபக்தி, பதிபிரேமை போன்றவைகள் என்னுள் நிரம்பியிருக்கின்றன. மேலும் என் மீது நீங்கள் பிரியமாக பேசுவதை உணர்கிறேன். எனவே, என் பின் தொடரல் தடைபடாது. உங்களிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகின்றேன்.

புலன்களை வசப்படுத்தியவர்கள்தான் காட்டில் வாழ முடியும். தர்மத்தோடு இருக்க முடியும். தர்மத்தோடு இருக்க முடிந்தவர்கள்தான் உயர்ந்த உண்மையான வாழ்க்கை வாழ முடியும். புலன்கள் என் வசம் இருக்கின்றன. அதற்குக் காரணம் நான் வளர்க்கப்பட்டது. இயல்பிலேயே என்னுள் நிரம்பியது. எனவே, உங்களை பின்தொடர்வது என்பதை நிறுத்த இயலாது. என் புருஷனோடு இருப்பதுதான் என்னுடைய தர்மம். அதை எவ்வாறு நான் விட்டுக் கொடுக்க முடியும். பிறகு என் விரதங்களுக்கும், புலனடக்கத்திற்கும், தர்மத்திற்கும் என்ன அர்த்தம்” என்று கவித்துவமாக பேசினாள்.

“மிகச் சீரோடும், சிறப்போடும், அருமையான இலக்கணத்தோடும் நல்ல வாக்கியங்களை சொல்கிறாய். இம்மாதிரியான வாக்கியங்களை கேட்டு நாளாயிற்று. அழுகையும், கூக்குரலும், சபித்தலும்தான் ஒரு உயிர் பிரியும்போது என் காதுகளில் வந்து விழும். ஆனால் சாவித்திரி,

இவை எதுவும் செய்யாது மிக திடமாக தொடர்ந்து வருவது மட்டுமல்லாமல், எதனால் தொடர்ந்து வர முடிகிறது என்பதையும் கவிதையைப் போல பேசுகிறாய். உனக்கு என்ன வேண்டும் கேள். ஆனால் சத்தியவான் உயிரை மட்டும் கேட்காதே."

"என் மாமனார் ராஜ்ஜியத்திலிருந்து விரட்டப்பட்டு இருக்கிறார். அவர் கண்கள் ஒளியிழந்து இருக்கின்றன. முதுமையால் வேதனைப்படுகிறார். என் மாமனாரும், மாமியாரும் மறுபடியும் பலம் பெற வேண்டும். கண் பார்வை தெரிய வேண்டும்."

"சாவித்திரி, உனக்கு அந்த வரத்தை தந்தேன். உன்னுடைய மாமனார் நலமாவார். தொடர்ந்து என்னோடு வருவதை நிறுத்து. உனக்கு அதிகம் சிரமம் வேண்டாம்."

"என் புருஷன் எனக்கு அருகில் இருக்கிற போது எனக்கு என்ன சிரமம். புருஷன் அருகில் இல்லாததுதான் சிரமமாக இருக்கும். இன்னொரு விஷயம் சொல்கிறேன் கேளுங்கள். சத்புருஷர்களின் ஒருமுறை சேர்க்கை கூட மிகவும் நல்லது. அவர்களோடு நட்பு உண்டாவது மிகச் சிறந்தது. சாதுவான புருஷர்களின் சங்கமம் ஒருபோதும் பயனின்றி போவதில்லை. ஒரு மனிதன் எப்போதும் சத்புருஷனுக்கு அருகிலேயே நிற்க வேண்டும். என் புருஷன் உத்தமமானவன். நல்லவன். அவனுக்கு அருகே இருப்பது ஒரு மனைவிக்கு சொல்ல முடியாத இன்பத்தை நிச்சயம் கொடுக்கிறது."

"புருஷனுக்கு அருகே இருப்பதே சத்சங்கம் என்பதை மிக அழகாக சொல்லியிருக்கிறாய். இன்னும் ஏதேனும் வரம் கேள்."

"என் மாமனாருடைய ராஜ்யம் மறுபடியும் அவருக்கு கிடைக்க வேண்டும். என்னை மருமகளாக நடத்தாது, மாமனாராக அதிகாரம் பண்ணாது ஒரு குருவாக நடந்து கொண்டார். அவர் தன் தர்மத்தை கைவிடலாகாது என்கிற வரத்தை தர வேண்டும்."

"தந்தேன். அவர் ராஜ்ஜியம் அவருக்கு கிடைக்கும். அவர் இன்னும் தர்மவானாக விளங்குவார். இது சீடனால் குருவிற்கு கொடுக்கப்பட்ட வரம்."

"இன்னும் ஒரு விஷயம் சொல்கிறேன் எமதர்மரே, மனம் வாக்கு, செயல்களால் எந்த பிராணிக்கும் துரோகம் செய்யாது இருத்தல். அனைவரிடமும் படுதல். தானம் செய்தல் என்பவை சாதுக்களின் தர்மம். இவ்வுலக வாழ்க்கையினுடைய பக்கம் அற்ப ஆயுளுடையது. ஆனால் அறவழி நிற்கின்ற மனிதர்களை தங்களைப் போன்ற மகாத்மாக்கள், தேவர்கள் மிகுந்த இரக்கம் காட்டுவீர்கள் இல்லையா. அப்படி இரக்கம் மற்றவருக்கு காட்டுகின்ற நீங்கள் எனக்கு காட்ட மாட்டீர்களா?"

"தூய்மையானவளே, தந்திரமாகவும், சாதுர்யமாகவும். அதே சமயத்தில் உண்மையும் மிக அழகாக எடுத்துச் சொல்கிறாய். நீ பேசுவது காதுக்கு குளுமையாக இருக்கிறது. இன்னும் ஒரு வரம் தருகிறேன் கேள்."



“தருமதேவனே, என் தந்தை அஸ்வபதி ஆண் சந்ததி இல்லாதவர். ஒரு குலத்தின் சந்தான நடத்த நூறு புதல்வர்கள் அவருக்கு வேண்டும். இது நான் உங்களிடம் கேட்கும் மூன்றாவது வரம். தருமதேவரே, மேலும் ஒரு விஷயம் உங்களோடு பேச விரும்புகின்றேன். மனிதர்களுக்கு தங்கள் மீது நம்பிக்கை இல்லை. அதனால் சாதுக்கள் மீது நம்பிக்கை வைக்கிறார்கள். சாதுக்களின் நட்பை நாடுகிறார்கள். சாதுக்களின் நல்ல எண்ணம் அவரிடம் சேர்ந்த மனிதர்களுக்கு இதம் அளிக்கிறது. சுகம் அளிக்கிறது. கஷ்டத்திலிருந்து விடுதலை அளிக்கிறது. இந்த உலகமே சாதுக்களின் சங்கத்திற்காகத்தான் ஏங்கி இருக்கிறது. சாதாரண மனிதருக்கு மிகப் பெரிய உதவி சாதுக்களின் நட்பே. அவர்கட்கு இதுதான் உலகம். நல்லவர்களின் நட்பை பெறும்போது நல்ல குணம் உண்டாகிறது அல்லது நல்ல குணம் உண்டானவர்களுக்குத்தான் நல்லவர்களின் நட்பு வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. இது அதிகரிக்க அதிகரிக்க உலகத்தில் க்ஷேமம் இருக்கும். எது குறித்தும் கவலையில்லாமல் இருக்கும். சாதுக்களால்தான் இந்த உலகத்தின் தவிப்பை, வெம்மையை, அலையலை கட்டுப்படுத்த முடியும்.”

“மிக அழகாக பேசுகிறாய். உன்னோடு பேசுவது எனக்கு மிக சந்தோஷமாக இருக்கிறது. உத்தமியே, இன்னொரு வரம் கேள். இதற்கு மேல் என்னை தொடர வேண்டாம்.”

“தருமராஜரே, எனக்கு பலமும், பராக்கிரமும் மிக்க நூறு புதல்வர்கள் வேண்டும். என்னுடைய கற்பின் உதவியால் அவர்களை நான் பெற வேண்டும். இந்த வரத்தை உங்களிடம் கேட்கிறேன்.”

“நிச்சயம் தருகிறேன். உனக்கு நூறு புதல்வர்கள் கிடைப்பார்கள். உன் கற்பின் வலிமையால் அவர்கள் ஜொலிப்பார்கள்.”

“நல்லவர்களின் பிரசாதத்தை ஏற்றுக்கொண்டு விட்டால் அங்கு பரோபகாரம் வந்து விடும். சுயநலத்தின் சாயல் கூட இருக்காது. பிரசாதம் ஏற்றவர்களுடைய கௌரவம் ஒரு பொழுதும் அழிவதில்லை. நல்லவர்களின் சேர்க்கைதான் மிகுந்த பலத்தை தரக்கூடியது.”

“அழகியே, அற்புதமான வார்த்தையை சொல்லுகின்றாய். பிரசாதம் தான் பலம். அது பரோபகாரத்தை தரும். பரோபகாரம்தான் கௌரவம். உன்னுடைய பேச்சு கவிதையைப் போல இருக்கிறது. இலக்கண சுத்தமாக இருக்கிறது. உன்னோடு பேசுவது ஆனந்தமாக இருக்கிறது. இன்னொரு வரம் கேள்.”

“நீங்கள் எனக்கு கொடுத்த நான்காவது வரத்தில் எனக்கு நூறு புதல்வர்கள் பிறப்பார்கள் என்ற வரத்தை கொடுத்தீர்கள். சத்தியவான் அல்லாது வேறு எவரையும் நான் மனதாலும் நினையேன். அவருடைய உயிரை மறுபடியும் நீங்கள் தரவேண்டும். அவரை உடலோடு கண்டு அவரோடு கூடி நான் நல்ல குழந்தைகளை பெறவேண்டும். இதற்கு உங்கள் ஆசிர்வாதம் வேண்டும். சொல் தவறாத தர்மதேவரே உங்களை பணிகிறேன். இவை அனைத்தும் இந்த உலகத்தின் நன்மையின் பொருட்டே நடக்கட்டும். எனக்காகவோ, சத்தியவானுக்காகவோ, வேறு எவருக்காகவோ இல்லாது தர்மத்தின் விளைவாக, தர்மத்தின் எதிரொலியாக என்னுடைய கூடலும், பிள்ளை பிறப்பும் நடக்கட்டும்” என்று கை கூப்பினாள்.

எமதர்மன் நெகிழ்ந்து போனான். “இப்படி கேட்க எவருக்காவது தெரியுமா. தான் சந்தோஷப்படுவதும், தனக்கு குழந்தைகள் பிறக்கின்ற கர்வமும் உலகத்தின் நன்மைக்காக என்று சொல்பவர் உண்டா. கூடலின் போதும், பிள்ளை பெறுதலின் போதும் இந்த நினைப்போடே ஒரு பெண்மணி இருந்தால் இந்த உலகத்தினுடைய மேன்மையை எவர் தடுக்க முடியும். நீ கூடலுக்கு முன்பே உன் கணவன் உன்னிடம் இல்லாது ஆவியாக போய்க் கொண்டிருக்கும் போதே இப்படி இதற்காகத்தான் கேட்கிறேன் என்கிறாயே உன்னைவிட சிறந்தவள் உண்டா. தந்தேன். நான் சத்தியவானை விடுவித்தேன். போய் வா மகளே. போய் அவனோடு சந்தோஷமாக இரு. திருப்தியுறும் வண்ணம் வாழ்க்கை நடத்து. நீ சொல்வது போல இந்த உலகத்தின் க்ஷேமத்திற்காக இடையறாது இருந்து, பிறகு வேறு உலகம் வந்து சேரு. நிச்சயம் நீ நூறு குழந்தைகள் பெற்றெடுப்பாய். உன் தந்தைக்கும் நூறு குழந்தைகள் பிறப்பார்கள். உன் தாய் மாளவியால் அவர்கள் தோன்றுவதால் மாயவான் என்ற பெயரில் அவர்கள் பிரபலமாவார்கள். உன் சத்திரிய குலம் புத்திர பௌத்ரர்களால் நிரம்பி மிகப் பெரிய கீர்த்தி பெறும்.

“சாவித்திரி. இதற்கு நீ காரணம். விரத மகிமையோடும், பூஜா விதிகளோடும், தர்மத்தோடும், புலனடக்கத்தோடும் ஒரே ஒரு பெண்மணி இருந்தாலும் போதும். அந்தக் குலம் உயர்வடையும். உன்னால் உன் தந்தை குலமும், உன் குலமும் உயர்வடைந்தது. வாழ்க நீ. இதோ, சத்தியவான் எழுந்திருப்பான்” என்று சொல்ல, சத்தியவான் கண் விழித்தான். அமைதியாக படுத்திருந்தான். மனதால் எமனை பின் தொடர்ந்த சாவித்திரி திடுக்கிட்டு எழுந்தாள். தன் கணவனை இழுத்து வாரி அணைத்துக் கொண்டாள்.

“சாவித்திரி, நான் என்ன

தூங்கி விட்டேனா. என்னை ஏன் எழுப்பவில்லை. என்னோடு நடந்த அந்த சியாமளா வர்ண தேவன் எங்கே?” என்று வியப்போடு கேட்டான்.

“அந்த சியாமள வர்ண தேவன் சாட்சாத் எமதர்மன். இப்போது அவர் சென்று விட்டார். இப்போது இரவாகி விட்டது.



“என்ன நடந்தது என்று சொல். உன்னோடு வந்ததும், கை கோர்த்து திரிந்ததும், கனிகள் எடுத்ததும், தலை வலித்ததும், உன் மடியில் படுத்ததும் ஞாபகம் வருகிறது. பிறகு அந்த தேஜஸ்வியான மனிதன் தோன்றினான். இப்பொழுது இருட்டாகி விட்டது. என்ன நடந்தது?”

“எல்லாம் நாளை காலை சொல்கிறேன். நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நெருப்பு உண்டாக்கி விறகுகளை எரித்து இங்கு வெளிச்சம் உண்டாக்குகிறேன். நீங்கள் அமைதியாக மறுபடியும் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்.”

“ஆமாம். எனக்கு தலை வலி கொஞ்சம் இருக்கிறது. ஆனால் பெற்றோரை காண விரும்புகின்றேன். இருட்டில் போக முடியாதோ” என்று கொஞ்சம் பதட்டமானான்.

“நீங்கள் அனுமதித்தால் நாளை காலை போகலாம். சேகரித்த பொருட்களை கொண்டு போக வேண்டுமல்லவா. அந்த சுமையை தூக்கிக் கொண்டு இருளில் நடப்பது கடினம்.”

“இல்லை சாவித்திரி. என்னுடைய தாயும், தந்தையும் கவலைப்படுவார்கள். நான் தாமதமாக வந்ததற்கு கோபிப்பார்கள். இவ்வளவு தாமதமானதற்கு பதட்டமாக இருப்பார்கள். அவர்கள் பதட்டமாக இருப்பார்கள் என்பதே எனக்கு வேதனையாக இருக்கிறது. அவர்களுக்கு உதவியாக இல்லாமல் உபத்திரமாக இருக்கிறேனே என்று அவஸ்தை வருகிறது. என்னுடைய தூக்கத்தை நான் குறை சோம்பலாகி விட்டேன். என்னால் இங்கு இருக்க முடியவில்லை” என்று தவித்தான்.

“சரி. பழக்கூடைகளை மரத்தில் மாட்டி விடலாம். உங்கள் உடல் பலவீனமாக இருக்கிறது. உங்கள் கோடாளியை நான் எடுத்துக் கொள்கிறேன். என் மீது சாய்ந்து கொண்டு நீங்கள் வாருங்கள். இருட்டில் இடம் தேடி கண்டுபிடித்து நாம் போவோம்” என்று சொல்ல, அவர்கள் நில ஒளியில் தாங்கள் வந்த ஒவ்வொரு இடமாகப் பார்த்து நடந்தார்கள். கணவனை அருகே அழைத்து இடுப்பு சுற்றி கை போட்டு அவள் கோடாளி சுமந்து மிகுந்த கவனத்தோடு அவனை ஆசிரமத்திற்கு அழைத்துப் போனாள்.

அந்த ஆசிரமத்திற்கு அருகே உள்ள அந்தணர்கள் இவர்கள் வராதது கண்டு வேதனைப்பட்டிருந்தார்கள். இவர்கள் வருகையை கண்டதும் முன்னேறி வரவேற்றார்கள். அந்த நேரம் த்ருயுத்மனுக்கு பார்வை தெரிந்தது. அவன் மனைவி பலம் பெற்றாள். அவளுக்கு உடம்பில் சக்தி கூடியிருந்தது. அவள் தனக்கு ஏற்பட்ட மாற்றத்தை அந்தணர்களிடம் சொன்னாள். அந்தணர்கள் வியப்படைந்தார்கள். என்ன நடந்தது என்று அங்கு தீமூட்டி பெரிதாக்கி சுற்றி அமர்ந்து கொண்டு சத்தியவான், சாவித்திரியிடம் விசாரித்தார்கள். நடந்ததை சாவித்திரி சொல்ல, அவளை நோக்கி கை கூப்பினார்கள்.

த்ருயுத்மனை காட்டிற்கு விரட்டியவன் அகாலமாய் இறந்து போக, அந்த தேசத்து மந்திரிகள் மறுபடியும் ஒன்று கூடி த்ருத்யும்னனை நோக்கி வந்து அவனை குதிரையில் ஏற்றி சத்தியவானோடு ஊருக்கு அழைத்துப் போனார்கள். பட்டாபிஷேகம் நடத்தினார்கள். அந்த சத்திரிய குலத்தின் அஸ்வபதி மூலமாகவும், இங்கே சாவித்திரி மூலமாகவும் பலம் மிகுந்த கம்பீரமான நூறு குழந்தைகள் பிறந்தார்கள். வாழ்க்கை மிக ரம்மியமாகவும் இருந்தது. மனைவியின் தயவுதான் தன் பிறப்பு என்பதை சத்தியவான் உணர்ந்திருந்தான். மருமகளின் அன்பினால்தான் தனக்கு ராஜ்ஜியம் கிடைத்தது என்பதை மாமனார் தெரிந்திருந்தார். மாமியார் கொண்டாடினாள். என்னுடைய மகள் எனக்கு புத்திர சந்தானம் ஏற்படுத்த வரம் வாங்கி கொடுத்திருக்கிறாள் என்ற நெகிழ்ச்சியில் அவளை குல தெய்வம் போல அஸ்வபதி நடத்தினான்.

அந்த ஒரு பெண்மணியின் தவம் பல லட்சக்கணக்கான பேரை சந்தோஷப்படுத்தியது. இரண்டு ஊர்களையும் பெரும் சிறப்பில் ஆழ்த்தியது. தருமபுத்திரரே. இது ஒரு கணவன் மனைவி விஷயம் அல்ல. கணவன் மட்டும் வேண்டும் என்பதாக இல்லாது தனக்கு நூறு புத்திரர்களும், தன் தந்தைக்கு நூறு புத்திரர்கள் வேண்டும் என்று கேட்டதும் மிக கெட்டிக்காரத்தனம். தபஸ்விகளுக்கே இப்படி யோசிக்க முடியும்.

தபஸ் என்பது சோம்பிக் கிடப்பதல்ல. முழு தெளிவோடு துடிப்பாய் இருப்பது. சாவித்திரி அழவேயில்லை. மாறாய் செயலில் ஈடுபட்டாள். யுதிஷ்ட்ரா, தைரியம் கொள். மற்றவர்களையும் தைரியப்படுத்து” என்றார்.

காலம் தொடர்ந்து சுழன்றது.

(தொடரும்)

மகாபாரதம்

73

தானம் என் உயிரை விடவும் மேலானது!

சாவித்திரி-சத்யவானின் கதையை கேட்டு தருமபுத்திரர் மிகப் பெரிய சமாதானம் அடைந்தார். திரௌபதி தனக்கு நேர்ந்தது எதுவும் பெரிய கஷ்டமில்லை என்று நினைத்தாள். பஞ்சபாண்டவர்கள் இடையறாது மனதுக்குள் அந்த உத்தம பத்தினியை துதித்துக் கொண்டே இருந்தார்கள். தெய்வத்துக்கு நிகரான பெண்மணி என்று பாராட்டிக் கொண்டிருந்தார்கள்.

சாவித்திரி சத்யவானின் கதையை படிப்பவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இக வாழ்க்கையில் இன்பங்கள் மட்டுமே வரும். துன்பங்கள் எதுவும் நேராது. இன்பங்களினால் அமைதியும், அமைதியினால் கடவுள் ஈடுபாடும், அதனால் உயர்ந்தநிலை சித்திக்கப் பெற்றும், மற்றவர்களுக்கு உதவியும், ஆரோக்யமாக வாழ்வார்கள்.



பாலகுமாரன்

சாவித்திரியின் கற்பு, பதி விசுவாசம் அவளுக்கு தன் கணவனை மட்டும் மீட்டுத் தரவில்லை. அவளைச் சுற்றியுள்ள பலருக்கு பல்வேறு நல்ல விஷயங்களை கொண்டு வந்து கொடுத்தது. அவள் தன்னை மட்டும் கருத்தில் கொண்டு வாழவில்லை. தன்னுடைய சுற்றத்தார் அனைவரையும் மனதில் நினைத்தாள். மாமனார், மாமியாருக்குண்டான நல்ல விஷயங்களையும், தன் தந்தைக்கு தாய்க்கு தேவையான விஷயங்களையும், அவள் தன் கற்பின் மூலம் எளிதாகப் பெற்றாள்.

சத்தியவான் அவளுக்கு புருஷனாக மட்டும் இல்லாது அவளுக்கு விசுவாசம் உள்ளவனாக பிரியமுள்ள தோழனாகவும் இருந்தான். இல்வாழ்வில் ஒரு நல்ல படிப்பினை தரக்கூடியது சாவித்திரி சத்யவானின் கதை.

வனவாசம் பற்றிய அச்சம் நீங்கப் பெற்றாலும் மறுபடியும் போர் வரும். அதில் நிச்சயம் ஜெயிப்போம் என்ற நம்பிக்கை தருமருக்கு இருந்தாலும் அவருக்கு கர்ணனைப் பற்றிய பயம் இருந்தது. அதைப்பற்றி வெளியே எவரிடமும் பேசுவதற்குக் கூட அவர் முயற்சி செய்யவில்லை. தனக்குள்ளேயே மருகிக் கொண்டிருந்தார். எப்பேர்பட்ட வீரன். கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவன். அவனை அர்ஜுனன் எப்படி ஜெயிப்பான். வேறு எவரைப் பற்றியும் பயம் இல்லாத எனக்கு கர்ணன் என்று சொன்னாலே மனம் இருண்டு போகிறது. கர்ணனை வெற்றி பெற முடியுமா. இந்தப் போர் எங்கள் பக்கம் ஜெயத்தை கொண்டு வந்து தருமா என்று தனியே அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார்.

ஆனால், கர்ணனின் விதி வேறுவிதமாக இருந்தது.

கர்ணன் தன் அற்புதமான மாளிகையில், அழகான படுக்கையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவன் கனவில் ஒரு அந்தணன் வந்து நின்றான். உயரம், கூர்மையான மூக்கு, ஒளிமிகுந்த கண்கள், கோதுமை நிறம், தேஜஸ்ஸான முகம். கனவுக்குள் வந்த அந்தணரை இவர் சாதாரணமானவர் இல்லை என்பதை கர்ணன் கண்டு கொண்டான்.

“நீங்கள் யார்? எதற்கு அந்தணன் வேடத்தில் வந்திருக்கிறீர்கள். உங்களை எங்கோ பார்த்தது போல் இருக்கிறது. எங்கோ பரிச்சயமானதுபோல் இருக்கிறது. நான் உங்களை கைகூப்பித் தொழுகிறேன். உங்களை

வணங்குகிறேன். என்னை ஆசிர்வதிக்க வேண்டும்" என்று பணிவுடன் கூறினான். விழி விரிய அன்போடு அவரைப் பார்த்தான். பல முறை பாதம் தொட்டான். வந்த அந்தணர், முகம் மலர்ந்தார்.

"கர்ணா, நீ சுத்தமான மனதுடையவன். அதனால் என்னை ஊடுருவி பார்க்கிறாய். நான் சூரியன். என் மீது நீ கொண்ட பிரேமையை நான் அறிவேன். என்னை பூஜிக்கும் உன் முறையில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். எனக்கு நீ பிரியமானவன். என் அம்சத்தை உன்னுள் நீ கொண்டிருக்கிறாய்.

கர்ணா, ராதேயா உன்னிடம் ஒரு எச்சரிக்கை செய்வதற்காக வந்தேன். மிகப் பெரிய போர் வரப் போகிறது. அந்தப் போரில் நீ துரியோதனன் பக்கம் இருக்கிறேன் என்று முடிவு செய்து விட்டாய். அந்தப் போரில் நீ தோற்க வேண்டும் என்பதற்காக இந்திரன் மாறுவேடம் அணிந்து ஒரு அந்தணனைப் போல் நுழைந்து உன்னிடம் யாசகம் கேட்பான். வீடோ, பசுவோ, செல்வமோ அல்லாது, உன் காது குண்டலங்களையும், கவசத்தையும் கொடு என்று கேட்பான். காது குண்டலங்களும், கவசமும் நீ பிறக்கும்போதே உன்னோடு பிறந்தவை. என்னால் உனக்கு ஒரு பாதுகாப்புக்காக தரப்பட்டவை. அந்த பாதுகாப்பை எடுக்க வேண்டும் என்ற ஆசையோடு தீய எண்ணத்தோடு இந்திரன் வருகிறான். இதை நான் கேள்விப்பட்டேன். அந்த தந்திரத்திலிருந்து உன்னை காப்பாற்ற இங்கு வந்திருக்கிறேன்.

ராதேயா எனக்குப் பிரியமானவனே, அப்படி வந்து கேட்கின்ற அந்தணனிடம் உனக்கு இது தருகிறேன், அது தருகிறேன், அப்படித் தருகிறேன். இப்படித் தருகிறேன் என்று விதம்விதமாகப் பேசி அவன் கேட்பதை சாமர்த்தியமாக விலக்கி விடு. தரமாட்டேன் தருவதற்கு இல்லை என்று சொல்ல மாட்டாய். ஆனால், எதைக் கேட்கிறானோ அதைத் தவிர மற்றதெல்லாம் தருவதற்கு முயற்சி செய். அவன் நொந்துபோய் நகர்ந்து விடட்டும். எதுவும் வேண்டாம் என்று போய் வரட்டும். அந்த கவசமும், குண்டலங்களும் அமிர்தத்திலிருந்து வெளிவந்தவை. அமிர்தத்தில் ஊறியவை. அவை உன் உடம்பில் இருக்கும்வரை உன்னைக் கொல்ல எவராலும் முடியாது. உன்னைக் கொன்றால்தான் துரியோதனன் தோற்றவனாவான். துரியோதனனை தோற்கடிக்க தேவர்கள் சிலர் திட்டமிட்டிருக்கிறார்கள். நீ துரியோதனன் பக்கம் சேர்ந்ததற்காக பல தேவர்கள் வருத்தப்படுகிறார்கள். இனி, அதைப்பற்றி பேசுவதற்கில்லை. அதனால் சொல்கிறேன். இந்திரன் அந்தணன் வேடத்தில் வரும்போது உனக்கு அது தெரிந்து விடும். நான் உணர்த்துவேன். இந்திரனை தவிர்த்து விடு" என்று பிரியத்தோடு சூரியன் பேசினார்.

"அந்தணனாய் வந்த சூரியதேவா, பலகோடி நமஸ்காரம். உங்களை வெளிப்படுத்தியதற்கு என் நன்றிகள். என் தெய்வமே, உன்னைத்தவிர வேறு எவரையும் நான் வணங்கியதே இல்லை. இந்த உலகத்தினுடைய ஆதாரசக்தி நீ. வேறு எவரை நான் வணங்குவது. உன்னுடைய அற்புதமான இருப்புதான் பூமியை வளர்க்கிறது. உன்னால்தான் உயிர்கள் வாழ்கின்றன. வளர்கின்றன. சூரியதேவா என் பொருட்டு என்னை எச்சரிக்க என் கனவில் அந்தண ரூபம் எடுத்து வந்தது நான் செய்த பாக்கியம். இதற்கு என்ன நன்றி சொல்ல முடியும்.

ஆனால், யார் எது கேட்டாலும் கொடுத்து விடுவது என்ற விரதத்தை நான் மேற்கொண்டிருக்கிறேன். என்னுடையது என்று இங்கு எதுவும் இல்லை என்கிறபோது. இதில் தரமாட்டேன் என்று எப்படிச் சொல்வது. என்னுடைய உயிர் பற்றியும், என் ஜெயித்தல் பற்றியும் பேசுகிறீர்கள். இதெல்லாம் எப்போதோ முடிந்த காரியம்தானே. பிறகு இதில் நான் புதிதாக ஒரு விதியை ஏற்படுத்த முடியுமா. கடைசிவரை கர்ணன் தானம் தந்து கொண்டே இருந்தான். உயிர் பிரியும் நேரத்திலும் தானம் தந்தான் என்ற புகழ் மிக உயர்வானது. என் உயிரை விடவும் மேலானது. இந்த உலகத்தில் விரதத்தை ஒதுக்கி வைத்து விட்டு நான் உயிர் இழந்தால் சரித்திரத்தில் இடம்பெறாத ஒரு சாதாரண மன்னனாக, வில்லாளியாக இருப்பேன். இந்த விரதம்தான் எனக்கு புகழ் சேர்க்கும். எனக்கு மரணம் நேர்ந்தாலும் என் புகழ் மறையாது."

சூரியன் மெல்ல கூர்மையானார்.

"தவறு ராதேயா. நீ இறந்த பிறகு உன் புகழ் இருந்து என்ன, இல்லாது போனால் என்ன, பிணத்தின் மீது மாலை போட்ட பிறகு அதன் வாசனைபற்றி பிணத்திற்கு ஏதேனும் அக்கறை உண்டோ. நீ நெடுநாள் உயிர் வாழ வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அதை தந்திரத்தால் ஜெயிக்க முயல்கிறார்கள். நேரிடையாக நின்று உன் கவசத்தையும், குண்டலத்தையும், யுத்தத்தில் அறுக்க முடியாது. தானம் கேட்பதற்காக வருகிறார்கள். இது கயமைத்தனம். இந்திரனுடைய மோசமான குணம். அவன் அர்ஜுனனுக்கு ஆதரவானவன். அர்ஜுனன் உன்னைக் கொல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறவன். எனவே, தயவுசெய்து என் பேச்சைக் கேள். அந்தணனாக வரும் இந்திரனை ஏதேனும் சொல்லி மனம் மாற்றி விடு. இல்லை என்று சொல்லாது, இது தருகிறேன் அது தருகிறேன், அப்படித் தருகிறேன் இப்படித் தருகிறேன் என்று தொடர்ந்து பேசி அவனை வெறுத்துப் போகச் செய். அவன் கேட்பனவற்றை


ம. செ



மட்டும் கொடுத்து விடாதே. உன் குண்டலங்களும், கவசமும்தான் உன்னை பாதுகாக்கின்றன. அது இருக்கும் வரை உனக்கு மரணம் இல்லை” என்று மறுபடியும் வற்புறுத்த,

“என்மீது கோபம் கொள்ளக்கூடாது சூரிய தேவா. நான் உன்னால் ஆசிர்வதிக்கப்பட்டவன். உன்னையே நினைத்துக் கொண்டிருப்பவன். தெய்வமே ஆனாலும் கொடுத்த வாக்குறுதியை மீறுவது ஆண்மையல்ல. நான் வாக்கு தத்தம் செய்திருக்கிறேன். யார் என்ன எப்போது கேட்டாலும் தருவேன் என்று சொல்லியிருக்கிறேன். அதை மீற ஒருநாளும் முடியாது. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் அதிகப்பிரசங்கித்தனமாகச் சொல்லவில்லை. என் விரதத்தை என்னால் குலைக்க முடியாது என்று உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன்.”

“சரி. இதுதான் விதி என்றால் உன்னோடு பேசி என்ன பயன். சரி. இப்படிச் செய். வருபவன் இந்திரன் என்று புரிந்து கொண்டதும் அவனிடம் சக்தி ஆயுதத்தை கேள். அந்த சக்தி ஆயுதம் அர்ஜுனனை ஒழிக்கும். வேறு எதனாலும் சாவு இல்லாத அர்ஜுனனை சக்தி ஆயுதம் கொல்லும்.”

“சூரியதேவா, உங்கள் பேச்சை கேட்கிறேன். கவச குண்டலங்கள் கேட்டால் கொடுத்து விட்டு அதற்கு பதில் சக்தி ஆயுதம் வாங்குகிறேன். அந்த சக்தி ஆயுதத்தால் அர்ஜுனனை ஒழித்துக் கட்டுகிறேன். அர்ஜுனன் ஒழிந்தால் பஞ்ச பாண்டவர்கள் ஒழிந்தார்கள். பஞ்ச பாண்டவர்களை அழிப்பதே துரியோதனனின் எண்ணம். எனக்கு ஆதரவு அளித்து மன்னனுக்கு நான் தரும் பரிசு இது. ஒரு தேரோட்டியின் மைந்தனுக்கு அரச பதவி கொடுத்து அவனுக்கு நண்பனாக வைத்து எங்கும் எனக்கு மரியாதை செய்கின்ற துரியோதனனுக்கு நான் செய்யும் நன்றிக் கடன் இது.”

பலவீனமாக அந்த அந்தணர் சிரித்தார்.

“தேரோட்டி மகனா, கர்ணா நீ யாரென்று இப்போதைக்குச் சொல்ல முடியாது. உனக்கு தெரிய வேண்டிய நேரத்தில் தெரிய வரும். ராதேயா என்று ஊர் உன்னை அழைத்தாலும் நீ யார் என்பதை ஒருநாள் அறிந்து கொள்வாய். அன்று உன் மனம் என்ன பாடுபடுமோ தெரியவில்லை. என் ஆசிகள். உன் விரத மகிமை வளரட்டும். நீ சொல்வதுபோல மரணம் என்பது உடலுக்கு உண்டு. ஒருவன் புகழுக்கு மரணமே இல்லை. இந்த உலகம் பிரளயத்தால் மூடப்படும் வரை உன் சரித்திரமும், உன் பெயரும், உன் தானமும் நிலைத்து நிற்கும். வாழ்க கர்ணா” என்று சொன்னார்.

கனவு கலைந்தது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கண்ட கனவை கர்ணன் நினைத்துக் கொண்டான். எழுந்து மெல்ல மாளிகையின் சுற்றுப்புறங்களில் நடந்தான். விடியலில் குளித்து விட்டு, தன்னுடைய பூஜை அறைக்குப்போய் விளக்குகளுக்கு நடுவே அமர்ந்து சூரிய காயத்ரி சொன்னான். பல நிமிடங்கள் கழித்து கண் விழித்து சூரியனை நோக்கி, கைகூப்பி ‘இரவு ஒரு கனவு வந்தது. தேவரீர் அழகிய அந்தணனாக வந்தீர். எப்படியெல்லாம் பேசினோம். நான் விரதத்தை குலைக்க மாட்டேன் என்று சொன்னேன். என்னை மன்னித்து ரட்சிக்க வேண்டும்.’

சூரியதேவர் அவனுக்கு மட்டும் கேட்கும் அசரீரியாக, ‘ஆமாம் வந்தது நானே. இந்திரன் உன்னை நோக்கி வருவான். கவனமாக இரு. மறுபடி சொல்கிறேன். உன் பிறப்பின் ரகசியம் ஒருநாள் உனக்குத் தெரிய வரும். நீ ராதையின்

மகன் அல்ல. தேரோட்டியின் மகன் அல்ல' என்று சொல்லி அமைதியானார்.

எது பற்றியும் கவலைப்படாது தான் வணங்கும் தெய்வத்திடமும், தன்னுடைய விரத மகிமையைச் சொல்லி அந்த உறுதியை காட்டியதற்கு நிறைவு பெற்று கர்ணன் பூஜை அறையிலிருந்து திரும்பினான்.

என்ன கர்ணனின் ரகசியம். மகாபாரதக் கதை தொடர்ந்து சொல்லப்படுகிறது.

குந்தி போஜன் என்ற அரசனுடைய அரசவைக்கு துர்வாசர் என்கிற அந்தணர் வந்தார். உயரமாகவும், அழகாகவும், கருமையான தாடியுடனும், உச்சியில் முடித்த குடுமியுடனும், அகன்ற மார்புடனும், உறுதியான கால்களுடனும் கமண்டலமும், தண்டமும் ஏந்தி வந்தார்.

"அரசனே, உன்னுடைய அரண்மனையில் சில காலம் தங்கி இருக்க விரும்புகின்றேன். என்னை மிக கவனமாக நீ சிஷ்ருஷை செய்ய வேண்டும். பணிவிடை செய்ய வேண்டும். நான் அமர்ந்த ஆசனத்தில், படுத்த படுக்கையில் வேறு யாரும் படுக்கக் கூடாது. உணவு தாமதமாகக் கூடாது. என் போக்குவரத்து பற்றி கேள்வி கேட்கக் கூடாது. நான் நியமங்களோடும் இருப்பேன். இல்லாதும் இருப்பேன். எனக்குத் தேவையான பொருட்கள் தயாராக இருக்க வேண்டும். மிகக் கவனத்தோடு எனக்கு பணிவிடை செய்ய வேண்டும். அப்படி செய்வாயாகின் உனக்கு அது நன்மை பயக்கும். இல்லையெனில் தீமை சேரும்."

குந்தி போஜன் கை கூப்பினான்.

"உங்களை நான் அறிவேன். உத்தமமான உங்களைப்போன்ற ஆத்மாக்களை தரிசிப்பதே பெரும் பாக்கியம். நீங்கள் தங்குவதே என் பாக்கியம். உங்களை கவனித்து பணிவிடை செய்ய என்னிடம் ஆட்கள் உண்டு. ஆயினும் என்னுடைய மகள் ப்ருதா என்பவளை அதற்காக நியமிக்கிறேன். அவள் ஒழுக்கமுடையவள். விரதங்கள் பல இருந்து பண்பட்டவள். அவள் சிறுமியாயினும் தெளிவானவள். நன்கு வளர்க்கப்பட்டவள். அவளிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறேன். கவலைப்படாமல் என் அரண்மனையில் தங்கி இருங்கள்."

குந்தி போஜன் அரண்மனையில் துர்வாசர் என்கிற அந்த அந்தணர் தங்கினார். குந்திபோஜன் தன் மகளை அழைத்தான்.

"ப்ருதா, மிக முக்கியமான பணி ஒன்றை உனக்குத் தர விரும்புகின்றேன். உத்தமமான மனிதர்களை நாம் கொண்டாடுவது நம் குல வழக்கம். ஒரு அரசனுடைய முக்கியமான காரியமும் அது. அந்த மாதிரி ஞானவான்களை தொலைவிலிருந்து பார்த்தாலே நல்லது. அவர் வர அவருக்கு அருகே இருந்து அவருக்கு வேண்டுவன செய்வது நமக்குக் கிடைத்த பாக்கியம். இது உனக்கு நன்மை தரும் என்பது மட்டுமல்லாது, நம்முடைய குலத்திற்கே உதவிகளைச் செய்யும். இதில் குறை ஏற்பட்டால் உனக்கு மட்டுமே தொந்தரவு இல்லை, நம் குலமே பாதிக்கப்படும். எனவே, ப்ருதா அவருக்கு கவனத்துடன் பணிவிடை செய்து நன்மைகளை அடைவாயாக." என்று வேண்டினான்.

அவனுடைய மகள் ப்ருதா அதை ஏற்றுக் கொண்டாள்.

"என்னுடைய வேலைகளை நான் கவனமாகச் செய்வது வழக்கம். மற்றவர்களை எதிர்பார்க்காது, நானே என் காரியங்களை செவ்வனே செய்வேன். பல விரதங்களை நான் திறம்பட கடைபிடித்திருக்கிறேன். விடியலில் துயில் எழுவதும், அதிகம் தூக்கத்திற்கு ஆட்படாது இருத்தலும், பசித்தபோது சிறிதளவு உண்ணுதலும் எனக்கு இயல்பானவை. நான் சுறுசுறுப்பாக இருக்கக்கூடிய ஆசனங்களையும், மூச்சுப்பயிற்சியும் பெற்றிருக்கிறேன். உங்களால் நன்கு வளர்க்கப்பட்டிருக்கிறேன். பண்டிதர்களால் பலதும் போதிக்கப்பட்டிருக்கிறேன். எனவே, என்னிடம் நீங்கள் கொடுத்த பொறுப்புகளை செவ்வனே செய்வேன்" என்று வணங்கினாள்.

அரண்மனைக்கு ஒட்டி ஒரு பெரிய யாக மண்டபத்தில் துர்வாசரை தங்க வைத்து, அவருக்குண்டான படுக்கைகளையும், ஆசனங்களையும், உண்பதற்கான இடங்களையும், அவர் விரும்பி உண்ணுகின்ற பொருட்களை சேகரித்தும் சோர்வின்றி சுறுசுறுப்பாக இயங்கினாள்.

துர்வாசர், இதோ வருகிறேன், உணவு தயாராக வை. என்று சொல்லி வெளியே போவார். மாலை தான் திரும்புவார். உணவு தயாராக இருக்கிறதா, எனக்கு பசியில்லை. உறக்கம் வருகிறது என்பார். அவருக்கு அந்த சிறுமி கால் பிடித்து விடுவாள். அவர் உண்ட பிறகு தான் உண்ண வேண்டும் என்ற நியதியை பின்பற்றி இருப்பதால் உண்ணாமலேயே இருப்பாள். உண்பதற்குக் கூட நேரம் இருக்காது. அவர் உறங்கிய பிறகு மெல்ல அடுக்களைக்குப் போய் ஆறிய உணவை உண்டு அமைதியாக படுத்துக் கொள்வாள். அவர் அசைகின்ற சப்தம் கேட்டதும் எழுந்து உட்கார்ந்து கொள்வாள். அவர் எழுந்ததும் கட்டளைக்கு தயாராக இருக்கிறேன் என்று எழுந்திருப்பாள். நல்ல உணவை தயார் செய்துவிட்டு, அடாடா இதையா சொன்னேன். எனக்கு எளிய உணவு போதுமே என்பார். அதற்கும் அவள் தயாராக இருந்தாள்.



(தொடரும்)

மகாபாரதம்

74

கடவுள் கொடுத்த பரிசு!

மாதங்கள் கடந்தன. எந்தக் குறையும் இன்றி துர்வாசரை அவள் கண்ணின் மணியென பாதுகாத்து வந்தாள். துர்வாசர் அரசனிடம், “நான் நாளையோடு உன் அரண்மனையிலிருந்து விடை பெறுகிறேன். எந்தக் குறையும் இல்லை. உன் மகள் குந்தி ப்ருதா மிக அழகாக கவனித்துக் கொண்டாள். அவளுக்கு என் ஆசிகள். நீயும், உன் தேசமும் சுபீட்சமாக இருப்பீர்கள்” என்று பல்வேறு விதமாக ஆசிர்வதித்தார்.

அரசன் மனம் மகிழ்ந்தான். தன் மகளைப் பற்றி மனம் நெகிழ்ந்தான். விடைபெறும் நேரம் குந்தி நமஸ்கரிக்க, “குழந்தாய், அதர்வண வேதத்திலிருந்து சில தேவதைகளின் மந்திரங்களை நான் உனக்குச் சொல்லித் தருகிறேன். கேட்டுக் கொள். இவை உனக்கு மிகப் பெரிய பலத்தைத் தரும். இந்த மந்திரம் சொல்லி அழைக்க, அந்த தேவதைகள் உன் முன் தோன்றுவார்கள். உன்னை ஆசிர்வதிப்பார்கள். உன் மூலம் இந்த பரத கண்டத்திற்கு மிகப்பெரிய உயர்வு வரப் போகிறது. என்ன என்பதை காலம் சொல்லும். இதோ மந்திரங்களை கேட்டுக் கொள்” என்று பல்வேறு தேவதைகளின் மந்திரங்களைச் சொல்ல, அவள் மனதில் குறித்துக் கொண்டாள். விழுந்து வணங்கினாள்.

துர்வாசர் என்கிற அந்த முனிவர் விடை பெற்று அந்த ஊரிலிருந்து அகன்றார்.

தான் ஒரு செயலை மிக நன்றாக செய்து முடித்தோம் என்ற சந்தோஷத்தில் ப்ருதா அரண்மனையை வலம் வந்தாள். அயர்ந்து தூங்கினாள். ஒரு நாள் காலையில் விழிக்கும் போது கட்டிலிலிருந்து சூரியன் உதிப்பது தெரிந்தது. மிக அழகாக இருந்தது.

அடடே சூரியன். இவர் ஒரு தேவதை அல்லவா. மிருந்த அழகன் அல்லவா. இவர் மனிதருடைய தேஜஸ்க்கு காரணமல்லவா. தேஜஸ்க்கு காரணமான தேஜஸ்வி எப்படி இருப்பார் என்று எண்ணுகிறபோதே, பட்டாடைகளுடனும், அழகிய மணிமாலைகளுடனும், சிவந்த நிறத்தில் பெரிய கண்களோடு சூரியன் மனித ரூபத்தில் அவள் கண்ணுக்கு தென்பட்டார்.

அடே, இத்தனை அழகாக இருக்கிறாரே. இவரை அழைத்து பேசினால் என்ன என்ற எண்ணம் உண்டாயிற்று. அந்த அந்தணர் சொன்ன மந்திரம் சொன்னால் நெருங்கி வந்து பேசுவாரோ. எனக்கு பிரசன்னம் ஆவாரோ. இப்பொழுது தொலைவில் அவர் இருப்பது தெரிகிறது. எனக்கு எதிரே வந்து நிற்க வேண்டுமென்றால், அந்த மந்திரத்தை சொல்லிப் பார்ப்போமா என்று சோதனையாக சூரியனுடைய

பாலகுமாரன்


ம.செ

மந்திரத்தைச் சொல்லி அவரை அழைக்க, சூரியன் எதிரே வந்து நின்றார்.

தொலைவில் சித்திரம் போல பார்த்த உருவம் எதிரே முழு வடிவாய் வாசனையோடும், வெப்பத்தோடும் இருப்பதைப் பார்த்து அவள் நடுங்கிப் போனாள்.

“தயவு செய்து திரும்பிப் போய் விடுங்கள். நான் ஒரு வேடிக்கைக்காக உங்களை அழைத்தேன். என்னுடைய மந்திரம் பலிக்குமா என்று பார்ப்பதற்காக உங்களை அழைத்தேன். அது பலித்து விட்டது. உங்கள் வருகைக்கு நன்றி. தயவு செய்து திரும்பி சென்று விடுங்கள். எனக்கு ஒரு காரியமும் இல்லை" என்று சொல்ல, “அது எப்படி, நீ அழைத்தாய் நான் வந்திருக்கிறேன். நீ அழைத்ததும் நான் இங்கு வந்திருப்பதும் எல்லா தேவர்களுக்கும் தெரியும். நான் வெறுமே திரும்பிப் போனால் அவர்கள் சிரிப்பார்கள். குந்தி உன்னுடைய உடலை எனக்கு சமர்ப்பணம் செய். உன்னுடைய கருவிற்குள் நான் புக விரும்புகின்றேன். என் மூலம் உனக்கு குழந்தை பிறக்கும். என்னோடு சம்போகத்தில் ஈடுபடு. மனமுவந்து ஈடுபடு. ஆதலால் இந்த பூவுலகில் மகாவீரன் ஒருவன் பிறப்பான்."

“சூரியதேவா, தாய், தந்தையின் அனுமதி இல்லாமல் நான் இதை எப்படிச் செய்வேன். எனக்கும், என் குலத்திற்கும், என் தாய் தகப்பனுக்கும் மிகப் பெரிய அவமானம் அல்லவா. அறியாமல் செய்து விட்டேன். தயவு செய்து பிழை பொறுத்தறுருளுங்கள்."

“உன் கண்களுக்கு ஒளி தருகிறேன் குந்தி. நிமிர்ந்து பார். தேவர்கள் அத்தனை பேரும் சிரிக்கிறார்கள். என்னை இகழ்ச்சியாக பார்க்கிறார்கள். வரவழைத்து விட்டு திருப்பி அனுப்பினால் என்னிடம் ஏதோ குறை இருக்கிறது என்று சொல்வார்கள். அதனால் எனக்கு ஏற்படும் மனவருத்தம் உன் தேசத்தை பாதிக்கும். வெப்பம் இல்லாமலும், வெப்பம் அதிகமாகவும் உன் தேசத்தின் மீது என் கோபத்தை காட்டினால் மக்கள் வேதனைப்படுவார்கள். எல்லாவற்றையும் யோசித்து விட்டு உன் முடிவைச் சொல்."

குந்தி திகைத்தாள். தன்னால் தேசம் தவிக்கப்படும் என்பதால் சரி என்று ஒத்துக் கொண்டாள்.

“நான் இதை ரகசியமாகச் செய்வதால் என்னுடைய கன்னித்தன்மை நீங்காது இருக்க வேண்டும். அந்த உத்திரவாதத்தை கொடுங்கள்" என்று சொன்னாள்.

சூரியனை வரவேற்க தயாராக கட்டிலில் படுத்துக் கொண்டாள். சூரியன் அவள் நாபியைத் தொட்டான். அவள் உடம்பு சிலிர்த்தன. அவளுக்குள் கதிர்கள் ஊடுருவின. அவள் கருப்பை நிறைந்து கரு தோன்றியது. சூரியன் அவளை ஆசிர்வதித்தார்.

“மிகச் சிறந்த வீரன் ஒருவன் உன் மூலம் தோன்றுவான். அவன் மறைவில்லாத புகழ் பெறுவான்" என்று சொன்னார். மறைந்தார்.

குந்தி அரண்மனை விட்டு அகலாத மிக கவனமாக தன் கருவை வளர்த்தாள். கன்னித்தன்மை உள்ளது போலவே நடித்தாள். அவள் தந்திரசாலி. ஒரே ஒரு செவிலித்தாய்க்கு மட்டும் அவள் கருவுற்று இருப்பதை சொன்னாள். அந்த செவிலித்தாய் அவளை கவனமாக பார்த்துக் கொண்டாள். செவிலித்தாய் ரகசியமாக குழந்தை பிறப்புக்கு ஏற்பாடு செய்தாள்.

பிறந்த குழந்தையை எடுத்து குளிப்பாட்டி குந்தி தேவியையும் சுத்தம் செய்து, ஒரு கருங்காலி மரப்பெட்டியில் பட்டுப்புடவை விரித்து அதில் குழந்தையை வைத்து பெட்டிக்குள் நீர் புகாத வண்ணம் மெழுகால் தடவி அதைக் கொண்டு போய் அரண்மனைக்கு அருகே இருக்கின்ற ஹஸ்ல நதியில் விட்டாள். குழந்தை கவசத்தோடும், கர்ண குண்டலங்களோடும் இருந்தது. மிக அழகாக இருந்தது. கன்னித்தன்மையோடு இருக்க வேண்டும் என்ற கவலை இருந்தாலும், பெற்ற குழந்தையை பிரிகிறோமே என்ற கவலை குந்திக்கு இருந்தது. அவள் அழுதாள். நீரில் விட மனமில்லாமல் இறுக்கப் பிடித்துக் கொண்டு குழந்தையையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

“மகனே, உன் தந்தை சூரியன் அன்புமயமானவர். அவருடைய திவ்ய திருஷ்டியால் உன்னைப் பார்ப்பார். உன்னை யார் எடுத்து வளர்க்கப் போகிறாரோ அவர் பெரிய புண்யவதி. மிகச்சிறந்த வாழ்க்கை அவளுக்கு கிடைக்கப் போகிறது. சுருள் கேசமும், அழகிய நெற்றியும், நீண்ட கைகளும் உடைய உன்னை யார் வளர்க்கப் போகிறாளோ அவள் பாக்கியசாலி. குழந்தாய் நீ தவழ்ந்தும், கால்படாது நடந்தும், ஓடியும், மண்ணில் உள்ள தூசில் புரண்டும், சிரிப்பும், ஆட்டமுமாய் இருக்கின்ற உன்னை எடுத்து வளர்க்கப் போகிறவள் மகா பாக்கியசாலி. இமயத்தின் காடுகளில் வசிக்கும் சிங்கத்தைப் போன்ற வாலிபனாய் நீ சுற்றி வருவதை பார்க்கிறவர்கள் பாக்கியசாலி. ஆனால் எங்கு பார்த்தாலும் உன்னை நான் புரிந்து கொள்வேன்" என்று புலம்பி ஹஸ்ல நதியில் பெட்டியை விட்டாள்.

அந்த ஹஸ்ல நதி வேறு பல ஆறுகளோடு சேர்ந்து நகர்ந்து கங்கையில் கலந்தது. அந்தப் பெட்டியும் கங்கையில் மிதந்தது.

திருதராஷ்டிரனின் நண்பன் அதிரதன் என்கிற தேரோட்டி கங்கைக்கரையில் வசித்து வந்தான். அவன் மனைவி ராதை மிக அழகி. அவளுக்கு குழந்தை இல்லை. ராதை கங்கைக்கரையில்



குளித்துக் கொண்டிருந்தபோது பெட்டி வருவதைப் பார்த்து பணியாளர்களை அழைத்து, அதை கரைக்கு இழுத்து வரச் சொன்னாள். பெட்டியை திறந்து பார்த்தாள். குழந்தை இருப்பதை பார்த்து அதிரதனுக்கு சொல்லி அனுப்பினாள். அதிரதன் வந்து இறங்கினான்.

“இது கடவுள் நமக்கு கொடுத்த பரிசு. இது இறைவன் கொடுத்த வரம். அரச களையோடு இருக்கின்ற இவன் நமது வீட்டில் செளக்கியங்களோடு வளர்வான்” என்று குழந்தையை பெட்டியிலிருந்து எடுத்து ஆரத் தழுவிக் கொண்டான்.

தங்கமயமான கவச குண்டலங்களை தரித்த அந்த குழந்தையை கண்ட அவன் ஊர் அந்தணர்கள் அவனுக்கு வசுஷேனன் என்று பெயரிட்டார்கள். பெரியவர்களுடைய ஆசிர்வாதத்தால் அழகும் பராக்கிரமும், தந்தையினுடைய கீர்த்தியால் சூரிய புத்தியும், தேஜஸ்சும் கொண்ட வசுஷேனன் தேரோட்டியின் மகனாக வளர்ந்தான். அவனுக்கு வ்ருஷின் என்ற பெயரும் உண்டாயிற்று.

அதிரதன் புதல்வனாக அங்க தேசத்தில் அவன் வளர்ந்து வாலிபனானான். குந்தி ஒற்றர்களை அனுப்பி தன் தெய்வீகப் புதல்வன் அதிரதன் மகன் பற்றி அறிந்து கொண்டாள். அதிரதன் தன் மகன் பெரியவனானதும் அவனை அஸ்தினாபுரத்திற்கு அனுப்பினான். அங்கே துரோணாச்சாரியாரின் சீடனானான். தனுர்வித்தை பயின்றான். அங்கே கர்ணனுக்கும், துரியோதனனுக்கும் நட்பு உண்டாயிற்று. துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார், பரசுராமரிடமிருந்து பல்வேறு வகையான அஸ்திரங்களைக் கற்று மிகச்சிறந்த வில்லாளியாகத் திகழ்ந்தான். துரியோதனன் மீது உள்ள நன்றியின் பாற்பட்டு குந்தியின் புதல்வர்களான பாண்டவர்களுக்கு எதிராக இருந்தான்.

இவன் சூரியன் புதல்வன், போரில்

வெல்ல முடியாதவன், கவச குண்டலங்களோடு பிறந்தவன் என்பதை அறிந்துதான் யுதிர்ஷ்டன் என்கிற தருமர் மிகக் கவலையோடு இருந்தார். இந்த யுத்தத்தில் எப்படி ஜெயிக்கப் போகிறோம் கர்ணன் இருக்கும் வரை அது நடக்குமா என்று கவலைப்பட்டார்.

அந்தக் கர்ணன் நடுப்பகல் நேரத்தில் நீரில் நின்று சூரியனை நோக்கி தியானம் செய்து கொண்டிருந்தபோது அவனிடம் தானம் வாங்குவதற்காக பல பிராமணர்கள் கரையில் இருந்தார்கள். அந்த பிராமண கூட்டத்தில் இந்திரனும் சேர்ந்து கொண்டான். மற்ற எல்லா பிராமணர்களுக்கும் அவர்கள் கேட்டது கொடுக்கும் போது இந்திரனும் அருகே வந்து, ‘பிட்சை இடு, பிட்சை இடு’ என்று கர்ணனைப் பார்த்து கேட்டான். உங்கள் வரவு நல்வரவாகட்டும் என்று கர்ணன் அவரை வரவேற்றான்.

“அந்தணரே, உங்களுக்கு என்ன வேண்டும்? பசுக்கள் நிறைந்த கிராமமா, நகரத்தில் நல்ல மாட மாளிகையா அல்லது யாகம் செய்வதற்குண்டான பொருளுதவியா, எதுவாயினும் தருகிறேன். என்ன வேண்டும்?”

“எனக்கு உன் கவசமும், குண்டலமும் வேண்டும்.”

கர்ணன் மெல்ல சிரித்தான்.

“அப்படியானால் என் தெய்வம் சொன்னது போல நீங்கள் அந்தணர் அல்ல. அந்தணர் வேடத்தில் வந்திருக்கின்ற இந்திரன். உங்கள் வரவு நல்வரவாகுக. உங்களுக்கு என் வணக்கம். நீங்கள் அந்தணராக வந்திருப்பதால், அந்தணருக்குத் தேவையான பசுக்களையும், ஹோமம் செய்வதற்குண்டான பொருட்களையும், சுகமாக வசிப்பதற்குண்டான மாட மாளிகைகளையும் தருகிறேன். ஆனால், கர்ண குண்டலங்களை கேட்காதீர்.”

“எனக்கு அதுதான் வேண்டும்.”

“என்னை பலவீனப்படுத்துவதில் உங்களுக்கென்ன அவ்வளவு ஆசை. இந்தக் கவச குண்டலம் அமிர்தத்தால் ஆனவை. இவற்றை எடுத்துவிட்டால் நான் எதிரியால் தாக்கப்பட்டு இறந்து போவேன். பலவீனமாவேன். இது இருக்கும்வரை என்னை யாரும் கொல்ல முடியாது. எந்த உயிரும் என்னை அழிக்க முடியாது. அதனால் இதைத் தருவது பற்றி யோசிக்கிறேன்.”

“அதுதான் பிரச்னை. நீ பலவீனமடைய வேண்டுமென்பதுதான் என்னுடைய குறிக்கோள். உன்னைக் குறித்து பலர் பயந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பயத்தை நீக்க வேண்டியது என் கடமை.”

“எனக்கும் பயம் இருக்கிறது. என்னைக் கொல்ல துடித்துக் கொண்டிருக்கிற அர்ஜுனனை நான் கொல்ல வேண்டும். அந்த அர்ஜுனனை வதம் செய்ய வேண்டும். ஒன்று செய்யுங்கள். உங்கள் சக்தி ஆயுதத்தை எனக்குக் கொடுங்கள். அதைக்கொண்டு நான் அர்ஜுனனை கொன்று போடுகிறேன். இந்த கவச குண்டலங்களை எடுத்துக் கொள்ளுங்கள். என் பலவீனம் முக்கியம் அல்ல. அர்ஜுனன் அழிவு முக்கியம்.”

“அர்ஜுனனை உன்னால் அழிக்க முடியாது. அர்ஜுனன் இந்த பிரபஞ்சத்திற்கு காரணகர்த்தாவாக இருந்த பரமாத்மாவால் காப்பாற்றப்படுகிறான். அவர் ஸ்ரீகிருஷ்ணர் என்ற உருவம் எடுத்து அவனை காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் இந்த யுத்தத்தை திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார். எனவே, உன்னுடைய எந்த ஆயுதமும் அவனை அழிக்காது. ஆயினும் நீ கேட்டது போல சக்தி ஆயுதத்தை தருகிறேன். கவச குண்டலங்களை உடனே எடு.”

விவாதம் முடிந்து போயிற்று. பேச்சு நின்று போயிற்று. சக்தி ஆயுதத்திற்காக அந்த அந்தணர் கையை நீட்டினார். அந்த அந்தணர் கையில் ஒரு அம்பு வந்தது. அந்த அம்பு கர்ணன் கைக்கு மாறியது. கர்ணன் இடுப்பு வாளை எடுத்து கவசத்தை அறுத்தான். காது குண்டலத்தை அறுத்தான். ரத்தம் பீறிட்டு அடித்தது. தேவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். கந்தர்வர்களும், யட்சர்களும் வியந்து பார்த்தார்கள். மலர் மாரி பொழிந்தார்கள். சிரித்தபடி தன் நெஞ்சை அறுத்து தானம் செய்கின்ற கர்ணனைப் பார்த்து ‘கர்ணன் கர்ணன்’ என்றார்கள். கர்ணன் கவச குண்டலங்களை இந்திரனிடம் நீட்டினான். சக்தியாயுதத்தை பத்திரப்படுத்திக் கொண்டான். இந்திரன் கவச குண்டலங்களை எடுத்துக் கொண்டு மறைந்தார். கர்ணனின் கவச குண்டலங்கள் அவனிடமிருந்து பறிக்கப்பட்டது என்று தெரிந்த கௌரவர்கள் வாய்விட்டு அழுதார்கள். பஞ்சபாண்டவர்கள் குதூகலித்தார்கள். எது நடக்க வேண்டுமோ அது நடந்தது. எது நடக்க வேண்டுமோ அது நடக்கப் போகிறது. எனவே, மிகப் பெரிய விளையாட்டில் தான் ஒரு பகடைக்காய் என்பதை கர்ணன் நன்கு அறிந்திருந்தான். திருப்தியான மனதுடன் வருத்தப்படுகின்ற துரியோதனாதிகளை தேற்றுவதற்குப் போனான். கையில் சக்தியாயுதம் இருக்கிறது. அர்ஜுனனைக் கொல்ல இது போதும். அர்ஜுனன் இறந்தால் பஞ்சபாண்டவர்கள் இறப்பார்கள். நமக்கு எதிரிகள் என்று எவருமே இருக்க மாட்டார்கள் என்று சொல்ல, துரியோதனன் ஒருவாறு சமாதானமடைந்தான்.

மிகச்சிறந்த ஒரு வீரன் தேவர்களின் தலையீட்டினால் பலவீனமடைந்தான். எது கேட்டாலும் கொடுக்கிறவன் கர்ணன், வள்ளல் என்கிற புகழ் இன்றும் உலகத்தில் இருக்கிறது. தானம் தருவது என்றால் அது கர்ணன்தான் என்கிறப் பெயர் வேறு எந்த அரசனுக்கும் இந்தப் புவியில் இல்லை.

(தொடரும்)

மகாபாரதம்

75

புதிய தோற்றம் கொள்ளும் பாண்டவர்கள்!

வனப்பர்வம் முடிந்து விராடபர்வம் துவங்குகிறது. இந்த வனப்பர்வத்தை ஆழ்ந்து படிப்பவர்கள் வாழ்வின் போக்கை புரிந்து கொண்டு, அதில் ஜெயிப்பதற்கு வல்லமை உடையவர்களாக இருப்பார்கள். கோபம் குறைந்து, பொறாமை அற்று, உலகத்தின் இயல்புகளை தெளிவாகப் புரிந்துகொண்டு எந்நேரமும் நிதானமாகவும், சமாதானமாகவும் இருக்கின்ற வல்லமையை பெற்றிருப்பார்கள். வனப்பர்வத்தை மறுபடி, மறுபடி படிக்க உலக வாழ்க்கையின் சூட்சுமங்கள் அத்தனையும் ஒருவருக்குப் புரிந்துவிடும். துன்பங்கள் என்பது பிராரப்த கர்மா. முன்வினை பயன். எனவே, மறுத்தல் தேவையில்லை. அதனால் அந்த முன்வினைப்பயன் இன்னும் அதிகமாகுமே தவிர, குறையப்போவதில்லை என்பது புரிந்துவிடும். எப்போது அந்த கர்மாவை அதாவது வினைப்பயனை ஏற்கிறோமோ, அப்போது அது துன்புறுத்தலாக, கனமாகத் தெரியாது.

அமைதியாக, அடக்கமாக இருப்பதின் தாத்பர்யத்தை விராடபர்வம் சொல்கிறது. மிகச்சிறந்த வீரர்கள், அற்புதமான புருஷர்கள், செயலில் சோர்வில்லாதவர்கள், சரியான கோபத்தை கொண்டவர்கள், அதேநேரம் அதில் எந்தக் குறைபாடும் இல்லாதவர்கள், அதை வெளிப்படுத்த நிதானம் உடையவர்கள், ஒரு க்ஷத்திரியரின் சகல நல்ல குணங்களையும் கொண்டவர்கள், யாரெல்லாம் ஜெயிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்களோ அவர்களெல்லாம் க்ஷத்திரியர்கள்தான் - அந்த க்ஷத்திரிய குணத்தை மிகத் தெளிவாக விராடபர்வம் தெரிவிக்கும்.

திரௌபதி அருகே இருக்க பஞ்ச பாண்டவர்கள் கைகூப்பினார்கள். அதுவரை தங்களோடு வந்து போய்க்கொண்டிருந்த பிராமணர்களை ஒன்று கூட்டினார்கள். அவர்களை விழுந்து வணங்கினார்கள். அவர்களுக்கு அர்க்யம், பாத்யம் என்ற மரியாதைகளை செய்தார்கள். எதற்கு திடீரென்று, என்ன வேண்டும் என்பதாக பிராமணர்கள் பார்க்க, “எங்கள் வனவாசம் முடிந்தது. நாங்கள் ஒளிந்து மறைந்து வாழ்கின்ற ஒரு வருடம் நாளையிலிருந்து துவங்க இருக்கிறது. நாங்கள் இந்த சோதனையிலும் வெற்றி பெற வேண்டும். எங்கள் எதிரிகளிடம் சிக்காமல் எங்கள் ராஜ்ஜியத்தை நாங்கள் போரிட்டு மீட்க வேண்டும். சூதில் தோற்றதுபோல இந்த அஞ்ஞான வாசத்தில் நாங்கள் காட்டிக் கொடுக்கப்பட்டோ அல்லது எதிரிகளால் கண்காணிக்கப்பட்டோ, எங்களுடைய வனவாசம் உடைந்து விடக்கூடாது. அப்படி இந்த அஞ்ஞான வாசத்தில் துரியோதனாதிகள் எங்களை கண்டுபிடித்தால் மறுபடியும் பன்னிரண்டு வருடங்கள் வனவாசமும், ஒரு வருடம் அஞ்ஞாத வாசமும் செய்யவேண்டும். அதற்கு பதில் நாங்கள் இறந்து போகலாம். எனவே அந்தணர்களே, தயவுசெய்து உங்கள் மனதை ஒருமுகப்படுத்தி எங்களை ஆசிர்வதிக்க வேண்டும். நாங்கள் வெற்றி பெறுவோமா, எங்கள் ராஜ்ஜியத்தை மீட்போமா, எங்கள் கௌரவத்தை நிலைநாட்டுவோமா என்பது குறித்து எங்களிடம் சொல்ல வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்கள்.

“தனக்காகத் தன் புருஷன் வருத்தப்படுகிறான் என்பது எந்தப் பெண்ணுக்கும் மிகப் பெரிய ஆறுதல். அது பரிசுபோல ஒரு ஆனந்தம். அந்த ஆதரவு அவள் மனதை விட்டு நீங்காது இருக்கும். அவன் புருஷன்பால் மிகுந்த ஈடுபாடு ஏற்படும்.”



பேசிக் கொண்டிருக்கும் போதே தருமபுத்திரர் மனம் கலங்கி மயங்கி விழுந்தார். அவரை பீமன் அள்ளி எடுத்து முகத்தில் நீர் தெளித்து, நெஞ்சு தடவி, நல்ல வார்த்தைகள் சொல்லி சமாதானப்படுத்தினான். அர்ஜுனன் அவருக்கு தன் காண்டீபத்தை காட்டி ஹூங்காரம் செய்தான். வெற்றி பெறுவோம் என்று அந்த குரல் அவருக்குத் தெரிவித்தது. அது நம்பிக்கையையும், சந்தோஷத்தையும் தந்தது.

அந்தணர்கள் வேதகோஷங்களை எழுப்பினார்கள். பரமாத்மாவை துதித்தார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்ட தருமபுத்திரர் கைகூப்பினார். அந்தணர்களில் தலைமையாக இருந்தவர் எழுந்து நின்று, “வெகு நிச்சயம் நீங்கள் ஜெயிப்பீர்கள். நீங்கள் ஜெயிப்பதற்காகவே பிறந்திருக்கிறீர்கள். உண்மையில் அதற்காகவே இப்படிப்பட்ட வேதனைகளை தாங்கியிருக்கிறீர்கள். நீங்கள் வித்வான்கள். சாமார்த்தியம் உள்ளவர்கள். எங்கே, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று உங்களுக்குத் தெரியும். எனவே, இந்த அஞ்ஞான வாசத்தை வெகு அழகாகத் தாண்டுவீர்கள். நல்ல இடமாகத் தேர்ந்தெடுத்து, அமைதியான ஊராக தேர்ந்தெடுத்து அங்கே அருகருகே வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள். அதிகம் விலகிவிட வேண்டாம்” என்று பேசினார்.

அந்தணர்களை வலம் வந்து பஞ்சபாண்டவர்கள் நமஸ்கரித்தார்கள்.

தூய்மையான மனதும், புத்திக்கூர்மையும், செயல்திறமையும் உடைய அந்த ராஜகுமாரர்கள், பலம் வாய்ந்த அந்த க்ஷத்திரியர்கள் தங்கள் இயல்பான குணங்களை மறைத்துக்கொண்டு பொதுமக்களில் ஒருவராக, எதுவும் அறியாதவராக, வீரம் என்பதற்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லும் வண்ணமாக விராட தேசத்தில் பிரவேசிக்க திட்டமிட்டார்கள். சுற்றி அமர்ந்து யார் யார் என்ன வேடம் என்று விவரம் சொன்னார்கள்.

“தந்தத்தாலும், தங்கத்தாலும், இரும்பினாலும் செய்யப்பட்ட பாய்ச்சிகளை கையில் வைத்துக் கொண்டு நான் விராட மன்னனுக்கு சூதாடுகின்ற தோழனாக இருப்பேன். சூதாடுகின்ற நமைச்சல் எனக்கு இன்னமும் தீரவில்லை. இந்த ஒரு வருடமும் இடையறாது மன்னனோடு காலையும், மாலையும் சூதாடிக்கொண்டு, அப்படி அவன் வராவிட்டால் தனியே உட்கார்ந்து சூதாடிக்கொண்டு என் பொழுதை கழித்துக்கொண்டிருப்பேன். எவனோ கிழவன் இடையறாது பாய்ச்சிகளோடு உட்கார்ந்து கொண்டிருக்கிறான் என்று என்னை ஏறிட்டும் பார்க்காமல், அனைவரும் சென்றுவிடுவார்கள். யுதிஷ்டிரன் என்கிற பஞ்சபாண்டவர்களுடைய தலைவன் இப்படியா இருப்பான் என்று கண்டுபிடிக்க முடியாதபடி நான் ஒளிந்துறை வாழ்வு செய்வேன்” என்று தருமபுத்திரர் சொன்னார்.

பாலகுமாரன்

“இந்த வனவாசத்தில் நான் ஒழுங்காக சாப்பிடவில்லை. எனக்கு விரும்பிய உணவு கிடைக்கவேயில்லை. ஏதோ பசியாறினேனே தவிர, விரும்பிய உணவை நான் உண்டதேயில்லை. என்னுடைய ருசி எனக்கு மறந்தே போயிற்று. இந்த ஒரு வருடம் நான் ருசித்து உண்ணவேண்டும். ஆசைதீர உண்ணவேண்டும். அடிக்கடி உண்ணவேண்டும். ராஜபோகமான உணவு உண்ணவேண்டும். நான் அரசனுக்கு உணவு சமைப்பவனாக இருந்து அவ்வப்போது எனக்காகவும் சமைத்துக் கொள்வேன். இன்னொருவர் சமைத்து உண்பதைவிட நல்ல ருசியாக சாப்பிடுபவன் தனக்குத்தானே சமைத்துக் கொண்டு உண்ணுவதுதான் சிறந்ததாக இருக்கும். நான் அப்படிப்பட்ட சமையற்காரனாக விராட தேசத்து அரண்மனையில் அரசனுக்குத் தகுந்த சமையல்காரனாக இருப்பேன். போய் கை கட்டி கூனிக் குறுகி நின்று, நான் நல்லதொரு சமையற்காரன் என்று அறிமுகப்படுத்திக் கொள்வேன். எங்கே சமைத்துக் கொண்டு வா என்று சொன்னால் அரை நாழிகையில் சமைத்துப் போடுவேன். சமையல் பண்டத்தின் வாசனையாலும், மொடமொடப்பாலும், அது நெய்யில் ஊறி மிதப்பது பார்த்தும் அவர்கள் ஆவலாக கைவைப்பார்கள். உண்ட பிறகு வாய்விட்டு பாராட்டுவார்கள். பிறகு என்னை விடவே மாட்டார்கள்,” என்று சொல்லி பீமன் உரக்கச் சிரித்தான். எல்லோரும் அவன் சிரிப்பில் கலந்து கொண்டார்கள்.

“எனக்கு ஒரு சாபம் இருக்கிறது. நான் இஷ்டப்பட்ட நேரத்தில் அந்த சாபத்தை ஏற்றுக் கொள்ளலாம். ஒரு கந்தர்வியை நான் புறக்கணித்தேன். உன்னில் மோகவசப்பட்ட பெண்ணை புறக்கணிப்பது பாவம் என்று உனக்குத் தெரியவில்லையா, கூடலுக்கு வா என்று கெஞ்சிக் கேட்கிற பெண்ணை புறக்கணிப்பது அதர்மம் அல்லவா. அது துரோகம் அல்லவா. வெட்கத்தை விட்டு ஒரு பெண் தன்னை வெளிப்படுத்துகிற போது அதைப் பூர்த்தி செய்யாமல் அந்தப் பெண்ணை அவமானப்படுத்துவது கேவலமல்லவா. அவள் எவ்வளவு துடித்துப் போவாள். உன் பௌருஷத்தின் மீது கர்வம் கொண்டுதானே என்னை புறக்கணிக்கிறாய். உன் அழகுக்கு நான் ஈடில்லை என்றுதானே என்னை புறக்கணிக்கிறாய். அர்ஜுனா, நீ என்னை புறக்கணித்ததால் அவமானப்படுத்தியதால் அலியாகப் போவாய் என்று சாபமிட்டாள். நான் தவித்துப் போனேன். மனம் கலங்கினேன். என்மீது காதல்கொண்ட அவள் இரக்கப்பட்டாள். சரி, இது உடனடியாக நிகழ வேண்டாம். எப்பொழுது விரும்புகிறாயோ, அப்பொழுது



ஒரு வருட காலம் மட்டும் நீ அவ்விதம் ஆணும் அற்ற, பெண்ணும் அற்ற ஒரு நிலையில் இருப்பாய். உன் உடம்பு ஆணாக இருந்தாலும் உன் அசைவுகள் பெண்ணாக இருக்கும். உன் குரல் பெண்ணாக மாறும். உன்னுடைய நடையும், உடையும், விருப்பங்களும் பெண்ணுடைய விருப்பங்களாக இருக்கும். ஒரு வருடம் கழித்து நீ மறுபடியும் உன்னுடைய பழைய நிலைக்கு வருவாய். விருப்பம் தெரிவித்த பெண்ணை ஒரு பொழுதும் விலக்காதே என்று சொல்லி மறைந்தாள். இதோ விராடதேசத்தில் நான் என்னை முற்றிலும் மறைத்துக் கொள்ள அதுதான் நல்ல சந்தர்ப்பம். இல்லையெனில் என்னுடைய பௌருஷத்தில் ஈடுபட்டு வேறு யாராவது என்மீது நாட்டம் கொள்வார் என்றால், நான் யார் என்பது தெரிந்துபோகும். அல்லது நானே என்னுடைய புத்தியின் தடுமாற்றத்தால் அழகிய பெண்ணைப் பார்த்து மயங்கினால் அப்போதும் என் இருப்பு தெரிந்து போகும். அர்ஜுனனா பெண் வேடம் இட்டு இருப்பது என்று எவரும் நினைக்க மாட்டார்கள். சந்தேகம் வராது. இதைவிட நான் ஒளிந்து கொள்ள மிகச் சிறந்த வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை," என்றான் அர்ஜுனன்.

திரௌபதி முகம் பொத்திக்கொண்டு அழுதாள். மிகுந்த அழகானவனும், திறமையானவனும், புத்திக் கூர்மையுள்ளவனும், விவேகமுள்ளவனும், வீரமுள்ளவனுமான அந்த இளைஞன் தன்னை அதற்கு நேர்பதமான ஒரு பெண்ணைப் போல முழுவதும் பெண்மை இல்லாத பெண் சாயல் உள்ள ஆணைப்போல இருக்கப் போகிறான் என்பது அவளுக்கு துக்கத்தை கொடுத்தது.

"சௌந்தரி, அழாதே. இதை சாபமாகவே நான் நினைக்கவில்லை. இந்த நேரத்தில் இது எனக்கு வரம். அந்த தேவதையை நான் மனதார வணங்குகின்றேன். அவளை வாழ்த்துகின்றேன். இவையெல்லாமே திட்டமிடப்பட்டு நடந்ததோ என்று சந்தேகிக்கின்றேன். வேறு எந்தவிதமாக என்னை மறைத்துக் கொண்டாலும் அது வெளியே தெரிய வாய்ப்பிருக்கிறது. ஆனால் ஆணும், பெண்ணுமற்ற இந்த அலித்தன்மையை நான் ஏற்று நடந்து கொண்டால் அது எவருக்கும் நெல் முனையளவும் சந்தேகம் வராது.

"எங்கள் ஐவரில் துரியோதனனின் ஒற்றர்கள் என்னைத்தான் தேடுவார்கள். எவனாவது வில் வீரன் இருக்கிறானா என்று தேடுவார்கள். நான் எங்கேனும் ஒரு மரத்தின் உச்சியில் நம்முடைய ஆயுதங்களை நான் கட்டிவிட்டு பெண்களுக்குரிய ஆடைகளை அணிந்துகொண்டு லேசாக ரோமங்கள் முளைத்த முகத்துடன், கனத்த பெண் குரலுடன், பெண் உடை உடுத்தி, ஒயிலாக நடந்து செல்வேன். எத்தனை பெண்களை நான் நேசித்திருக்கிறேன். இந்த சமயத்தில் என்னுடைய நடவடிக்கைகள் மூலம் அவர்களை நினைத்துக் கொள்வேன். இந்தப்பெண் இப்படி உட்கார்ந்தாள். அந்தப் பெண் அப்படி ஆடினாள். இவள் இப்படி பாடினாள். இவள் இப்படி உடுத்திக் கொண்டாள் என்றெல்லாம் ஒவ்வொரு செய்கையின் போதும் அந்தப் பெண்களை நான் மனதுக்குள் ஸ்வீகரிப்பேன். வாழ்த்துவேன். சௌந்தரி, இது எனக்கு அவமானம் என்று கருதாதே. எனக்கு கிடைத்த மிகப்பெறும் பேறு என்று தான் நான் கருதுகிறேன்," அர்ஜுனன் அவளை அமைதிப்படுத்தினான்.

அர்ஜுனன் சந்தோஷமாகச் சொல்ல, நான்கு சகோதரர்களும் நீண்ட நெடிய பெருமூச்சு விட்டார்கள். தங்களின் கதாநாயகனான அர்ஜுனன் கற்பனைக்கு எட்டாத ஒரு அலித்தன்மை வாய்ந்த ஆணாக நடக்கப் போகிறான் என்பதை யோசித்து அவர்களுக்கு வேதனையாக இருந்தது.

"நான் குதிரைகளை கவனித்துக் கொள்வேன். இந்த வனத்தில் குதிரைகளோடு பழக்கமில்லை. நடந்தே பல தூரங்கள் போக வேண்டியிருந்தது. குதிரைகளை கண்டவுடனே என் மனம் உற்சாகத்தில் ஆழ்ந்துவிடும். உடனே தாவி அமரவும், அவற்றை விரட்டிக்கொண்டு போகவும் மனம் துடிதுடிக்கும். ஜெயத்ரதன் மூலமாக

தேரும், குதிரைகளும் கிடைத்தன. அவை போதவில்லை, ஆயிரம் ஆயிரம் குதிரைகள் இருக்கின்ற பண்ணைக்குள் அந்த குதிரைகளின் வாசனையை முகர்ந்துகொண்டே, அவற்றை தடவிக் கொண்டே, நான் போகவேண்டும். அந்த எண்ணம் ஒரு வெறியாக என் உடம்பில் இருக்கிறது. ஒரு குதிரைக்காரனை நகுலன் என்று யார் சந்தேகப்படுவார்கள்? யார் வந்து குதிரைக் கொட்டகையில் பஞ்சபாண்டவர்களை தேடுவார்கள். எனவே, நான் ஒளிவதற்கு அதுவே சரியான இடம்." என்றான் நகுலன்.



"ஞானத்தில் சிறந்தவனே, ஜோதிடத்தில் வல்லவனே, நாள் கணக்கும், நட்சத்திர கணக்கும் துல்லியமாக நெஞ்சில் தரித்துக் கொண்டிருப்பவனே, உன் ஞானத்திற்கு முன்பு என்ன வேடம் பூண்டாலும் தெரியுமடா. என்ன செய்யப் போகிறாய்?" சகாதேவனைப் பார்த்துக் கேட்டார் தருமர்.

"பசுக்கொட்டில். அதுதான் என் இடம். பசுவை பார்க்க வருபவர்கள் ஒருபொழுதும் பசுவை விட்டுப் பராமரிக்கிறவனை பார்க்கமாட்டார்கள். பசு லக்ஷ்மிகரமான விஷயம். அது பார்க்கிறவரை கவர்ந்துவிடும். பசுவின் மேலிருந்து கண்ணை எடுக்க முடியாது. பசுவை பராமரிக்கிறவன் முக்கியமாகப்படாது. இந்த பசுவிலிருந்து அந்த பசுவிற்கு. அந்த பசுவிலிருந்து இன்னொரு பசுவிற்கு என்று கண்கள் தாவுமே தவிர, பசுவிற்கு கீரை நறுக்கிப் போடுகிறவனை மக்கள் கவனிக்கமாட்டார்கள். எனவே, நான் பசுக் கொட்டிலில் ஒரு மேய்ப்பவனாக, பராமரிப்பவனாக, பெருக்கி சுத்தம் செய்பவனாக, அவற்றைக் குளிப்பாட்டி குதூகலப்படுத்துபவனாக இருக்கிறேன்," என்றான் சகாதேவன்.

"ஞானமுள்ளவனே, நீ ராஜகுமாரனடா" தரும புத்திரர் கண்ணில் நீர் வழிய பேசினார்.

"யாராக இருந்தாலும் பசு செல்வமல்லவா. க்ஷத்திரியனோ, வைசியனோ, பிராமணனோ அவன் வாழ்வின் ஆதாரம் பசுக்கள்தானே. அந்தப் பசுக்களை நான் நேசிக்கிறேன். அவற்றுக்கு நடுவே வாழப்போகிறேன் என்பதே எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. என்னைப் பற்றிய கவலையை விடுங்கள். நீங்களே அந்தப் பக்கம் வந்தால்கூட என்னை கண்டுகொள்ள முடியாது" என்று சொல்லி கண் சிமிட்டினான்.

அவன் குதூகலத்தை எண்ணி அவர்கள் மனம் மகிழ்ந்தார்கள். ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டார்கள்.

"சௌந்தரி, அற்புதமானவளே, மிக வலிவான ஐந்து புருஷர்களுக்கு மனைவியாக இருந்தும் உன்னை காப்பாற்றிக்கொள்ள நீ என்ன செய்யப் போகிறாய்? நீ இருக்கும் இடத்தில்தான் நாங்கள் இருப்போம் என்று தெரிந்து கொண்டு உன்னை எளிதாக துரியோதனன் கண்டுகொள்வான். அர்ஜுனனுக்கு வலைவீசு. அப்படி இல்லையென்றால் திரௌபதி எங்கே என்று பார் என்று உங்கள் இருவரையும்தான் மையமாக வைத்து

ஒற்றர்களை தேடச் சொல்வான். நீ என்னவாக இருப்பாய் ராஜகுமாரி?" என்று தருமர் பிரியத்தோடு கேட்டார்.

"இந்த ராஜகுமாரி ஒரு வேலைக்காரியாக இருப்பாள்," என்று திரௌபதி சொன்னதும் அவர்கள் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டார்கள். மலை முகட்டையும், வானத்தையும், மரத்தின் உச்சியையும் கவனித்தார்கள். பொங்கி வரும் அழுகையை மூக்கு உறிஞ்சியும், தொண்டையை செருமியும் குறைத்துக்கொண்டார்கள். ஆயினும் அழுதார்கள்.

புருஷர்கள் கவலைப்படுவதைப் பார்த்து திரௌபதி குதூகலமடைந்தாள். அவர்கள் ஐந்து பேரும் மகாவீரர்கள். மகாரதிகள். அவர்கள் ஐந்து பேரும் தன்னை எத்துணை வேகமாக நேசிக்கிறார்கள். தன்னைப்பற்றி எப்படி கவலைப்படுகிறார்கள் என்பதில் பெரும் நெகிழ்ச்சியடைந்தாள். நிறைவடைந்தாள்.

தனக்காகத் தன் புருஷன் வருத்தப்படுகிறான் என்பது எந்தப் பெண்ணுக்கும் மிகப் பெரிய ஆறுதல். அது பரிசுபோல ஒரு ஆனந்தம். அந்த ஆதரவு அவள் மனதை விட்டு நீங்காது இருக்கும். அவன் புருஷன்பால் மிகுந்த ஈடுபாடு ஏற்படும். ஒன்றுக்கு ஐந்து புருஷர்கள் உள்ள திரௌபதி தன்னுடைய கணவர்கள் அத்தனை பேரும் முகம் திருப்பிக் கொண்டு அமர்ந்திருப்பதைப் பார்த்து கைகொட்டி கலகலவெனச் சிரித்தாள்.

"இது என்ன, எதற்கு எல்லோரும் முகத்தை தூக்கிக் கொண்டு இருக்கிறீர்கள்? நான் வேலை செய்வது உங்களுக்குத் தெரியாதா. உங்களுக்கு சிஷ்ருஷை செய்யவில்லையா. உங்களுக்கு பாலும் பழமும் எடுத்து வரவில்லையா. உங்களுக்கு கால் பிடித்து விடவில்லையா. உங்களுக்கு குளிப்பதற்கு நீர் எடுத்து வைக்கவில்லையா. உங்களுக்கு முதுகு தேய்த்து விடவில்லையா. உங்களுக்குச் செய்வதுபோன்ற அதே சிஷ்ருஷையை விராடதேசத்து மன்னனின் மனைவிக்கோ, மகளுக்கோ செய்யப் போகிறேன். விராட தேசத்து மன்னனின் மனைவி மிக நல்லவள். மிக அமைதியானவள். வேலைக்காரர்களை மதிப்பவள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த அரசனும், அரசியும் உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் மரியாதை செய்கின்ற குணம் உடையவர்கள். என்னை எப்படி நிந்திப்பார்கள். எவ்விதம் வேதனைப்படுத்துவார்கள். அம்மாதிரியான மனோநிலையில் நான் இருக்க மாட்டேன்.

"எத்தனை பேர் எனக்கு வேலை செய்திருக்கிறார்கள். எத்தனை தாதிகள் நான் சிறப்பாக வாழ உதவி செய்திருக்கிறார்கள். அவர்கள் நினைப்பெல்லாம் என் நெஞ்சுள் இருக்கிறது. அவர்களில் சிறந்தவர்களெல்லாம் எனக்கு நல்ல சிநேகிதர்கள். அவர்களை நினைத்துக் கொண்டு அவர்கள் எப்படி எனக்கு உதவி செய்தார்களோ, அதேபோல நானும் விராட தேசத்து மன்னனின் மனைவிக்கு என்னுடைய பராமரிப்பைச் செய்வேன். திரௌபதியா, அவள் அரசகுமாரி அல்லவா. இடதிலே இருக்கும் பொருளை வலதிலே வைக்கக்கூட அவள் ஆளைத் தேடுவாளே என்று மக்கள் நினைத்திருக்க, நம் எதிரிகள் யோசித்திருக்க, நான் சாதாரண உடையில் விராட தேசத்து மன்னனின் மனைவியின் அறையை பெருக்கிக் கொண்டும், ஆசனங்களை துடைத்துக் கொண்டும், அவளுக்கு கையில் சித்திரம் எழுதியும், கண்ணுக்கு மை இட்டும், தலைவாரி பின்னியும் இருப்பதை கவனிப்பார்களா என்ன?

"இல்லை. நான் அப்படி இருப்பதுதான் சிறந்தது. என் மூலம் உங்களுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக்கூடாது. நாம் இருப்பது தெரிந்து விடக்கூடாது. உங்களை எல்லாம்விட நான் கவனமாக பாதுகாப்பாக இருப்பேன். வேறு எந்த இடத்தையும்விட விராட தேசத்தின் ராணி இடம்தான் பாதுகாப்பானது. அது மிக சௌகரியமான சுதந்திரமான இடம். அங்கே நான் எனக்கென்று ஒதுக்கப்பட்ட பஞ்சணையில் சுகமாக உறங்குவேன். மண்தரையிலும், புல்தரையிலும், மரக்கட்டை மீதும் தூங்கி பழக்கமான எனக்கு அந்த பஞ்சணை மிகப்பெரிய சுகமாக இருக்கும். நல்ல உணவு என்னை மறுபடியும் கம்பீரமாக்கும். உடம்புக்கு தடவும் எண்ணெய் போன்ற பொருட்களும், அலங்கரித்துக் கொள்ள வேண்டிய விஷயங்களும் அங்கு நிரம்பக் கிடைக்கும். நல்ல வேலைக்காரிக்கு அரசியர்கள் அதை அள்ளிக் கொடுப்பார்கள். நான் ராஜகுமாரி என்றாலும் அந்த கர்வத்தை எல்லாம் தூக்கியெறிந்து விட்டு ஒரு வேலைக்காரியைப்போல விராடதேசத்தில் இருப்பேன். என்னை நீங்கள் வாழ்த்த வேண்டும். நீங்கள் எல்லோரும் அருகில் இருக்கிறீர்கள் என்ற எண்ணமே எனக்கு நிம்மதியான தூக்கத்தையும், நல்ல பசியையும் கொடுக்கும். பசித்து உண்டு, அயர்ந்து தூங்கி நான் முன்னிலும் எழில் பெற்றவளாவேன். ஆனால், அதிகம் சிங்காரித்துக் கொள்ளாமல், உரத்துப் பேசாமல், அலட்டிக் நடக்காமல் ஒரு வேலைக்காரியைப் போலவே அமைதியாக இருப்பேன்" என்று சொன்னாள்.

அவர்கள் திரௌபதியை நோக்கி கை கூப்பினார்கள்.

அந்தக் குடும்பத்திற்கு ஏற்பட்ட சோதனைக் காலம். அவர்கள் மிகுந்த ஒற்றுமையோடும், ஒருவர் மீது ஒருவர் பற்றுதலோடும், பாசத்தோடும் அந்த காலத்தை கடக்க முடிவு செய்தார்கள்.

"அரசன் இருக்கும் இடத்தில்தானே அரசி இருக்க முடியும். அரசி இருக்கும் இடத்தில்தானே நீயும் இருப்பாய்" என்று தருமபுத்திரர் சமாதானமானார்.

"யாராக இருந்தாலும் சமையலறை பக்கம் வரவேண்டும் அல்லவா. சமையல்காரன் சாப்பாடு கூட்டத்திற்கு போக வேண்டுமல்லவா. சமையற்கூடத்திற்கு அரசனும் அரசியும் வரும்போது நீயும் வருவாயல்லவா. அப்பொழுது உன்னை தரிசிப்பேனே" என்று பீமன் சமாதானப்படுத்திக் கொண்டான்.

(தொடரும்)

மகாபாரதம்

76

பொய் சொல்பவரை மன்னர் விரும்பமாட்டார்!

தொலைதூரத்து கிராமங்களிலிருந்து பெண்கள் திரௌபதிக்கு உதவியாக வந்தார்கள். அந்தணர்கள் பாண்டவர்களின் மனமகிழ்ச்சிக்காக வந்தார்கள். பேசி தெளிவு பெறுவதற்காக உதவி செய்தார்கள். வனத்தில் சிறிய தேர்களோடு தேரோட்டிகளும் குழுமியிருந்தார்கள்.

ஆனால் இப்போது விராட தேசத்திற்கு போகவேண்டியிருப்பதால் திரௌபதியின் பாஞ்சால தேசத்திற்கு போய்விட வேண்டும். தேரோட்டிகள் அஸ்தினாபுரம் போகட்டும். அந்தணர்கள் தங்கள் உசிதம் போல தங்கள் இடத்திற்கோ வேறு இடத்திற்கோ போக வேண்டும். பாண்டவர்கள் எங்கே என்று கேட்டால் தைத்ய வனத்தில் அவர்களைப் பார்த்தோம். பிறகு எங்கோ சென்று விட்டார்கள் தெரியவில்லை என்று கூறவேண்டும்.

எனவே, நாங்கள் அரண்மனை நோக்கி புறப்படுகிறோம் என்று யுதிஷ்டர் சொன்னபோது தௌம்யர் என்கிற அந்தணர் அரை நாழிகை கழித்துப் போகலாம் என்று கோள்களை கணித்துச் சொன்னார். பஞ்சபாண்டவர்கள் திரௌபதியோடு அவருக்கு எதிரே அமர்ந்தார்கள்.

“உலக விவகாரங்கள், ஒரு மனிதன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் இவையெல்லாம் உங்களுக்கு நன்கு தெரியும். ஆயினும் அன்பு காரணமாக நான் அதை மறுபடி உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். ஒரு நண்பனாய் என்னுடைய கடமை இது. இதுவே தர்மம். உங்களுக்குத் தெரியும் என்று நினைத்தேன் என்று நான் அசட்டையாக இருப்பதும், நமக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தில் நீங்கள் வேறு சிந்தனையில் இருப்பதும் நல்லதல்ல. தெரிந்த விஷயத்தை எப்பொழுதும் மறுபடியும் தீர யோசிப்பது நல்லது செய்யும்.

ஒரு அரசனின் அரண்மனையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நான் இப்போது சொல்லப் போகிறேன். விவேகம் உள்ளவன்கூட ஒரு அரண்மனையில் வேலை செய்வது கடினம். அந்த இடத்தில் உங்களுக்கு அவமானம் நேரலாம் அல்லது உயர்ந்த கௌரவம் கிடைக்கலாம். இவை இரண்டையும் சமமாக எடுத்துக் கொண்டு அமைதியாக வாழ வேண்டும். இந்த இடத்தில் உங்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தால் பதினான்காவது வருடம் நீங்கள் சுகமாக வாழலாம்.

ஒரு அரசனை சந்திக்க வாயிற்காப்போனின் அனுமதி பெற வேண்டும். வாயிற்காப்போனை பகைத்துக் கொள்ளக் கூடாது. அவனை அலட்சியம் செய்யக் கூடாது. நீங்கள் உள்ளே நுழையும் வேகம் பற்றியும், நடவடிக்கை பற்றியும் வாயிற்காப்போன் அரசனிடம் சொன்னால் அது எடுபடும். எனவே, வாயிற்காப்போனை மரியாதையாக அணுகிப் போவது கெடுதல் விளைவிக்காது.

எந்த இடத்தில் உட்கார்ந்தால் அபராதம் நேராதோ அந்த இடத்தில் உட்கார வேண்டும். பெண்கள் பார்வைபடும் இடத்திலோ, பெண்கள் புழங்கும் இடத்திலோ உட்காரக் கூடாது. அரண்மனை ஒரு மோசமான இடம் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.


ம.செ

அரசன் கேட்காமல், அவனுக்கு அரசனின் கடமை என்ன என்பதை சொல்லவே கூடாது. அது அவனுக்குக் கோபத்தைக் கொடுக்கும். தகுந்த சமயங்களில் அரசனை புகழ வேண்டும். பொய் சொல்பவர்களை மன்னர்கள் விரும்ப மாட்டார்கள். மந்திரியானாலும் பொய் சொல்வானானால் அவமானப்படுத்துவார்கள். அரசனுடைய மனைவிகளை சந்திக்காமல் இருப்பதே அழகு. அந்தப்புரத்திற்குச் செல்பவர்கள், மன்னனுக்கு தீங்கு விளைப்பவர்கள் ஆகியோரோடு பேசவே கூடாது. ஒரு சிறிய காரியத்தையும் அரசனுக்கு தெரிவித்துவிட்டுச் செய்ய வேண்டும். உங்களுக்கு தெரியும் என்று நினைத்தேன் என்பது அபத்தமான பாடம். உட்கார உயர்ந்த ஆசனம் கிடைத்தாலும் மன்னன் அனுமதியின்றி உட்காரக்கூடாது. உட்காரும் முன் மன்னனைப் பார்த்து சைகையினாலோ, வார்த்தையினாலோ உட்கார அனுமதி கேட்க வேண்டும். நின்றபடியே மன்னனின் கட்டளையை எதிர்பார்க்க வேண்டும். மன்னன் சொன்னாலொழிய அமரக்கூடாது. சுகசௌகரியம் தேடக்கூடாது. தன்னிடம் மரியாதை மீறுகின்ற மனிதர்களை மகனாக இருந்தாலும், சகோதரனாக இருந்தாலும் அரசன் மதிப்பதில்லை. கோபமடைகிறான்.

அரசன் ஒரு அக்னி என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். நெருங்கியும் இல்லாமல், விலகியும் இல்லாமல் சரியான தூரத்திலிருந்து நட்பை வெளிப்படுத்த வேண்டும். உங்கள் உபசாரத்தை மன்னன் கண்டுகொண்டால் நீங்கள் என்ன செய்தாலும் தப்பாகாது. மன்னன் என்ன சொல்கிறானோ அந்த காரியத்தைத்தான் நிறைவேற்ற வேண்டும். அவன் கட்டளை அல்லாது எதுவும் செய்யக் கூடாது. கவனமின்மை, கர்வம் மற்றும் கோபத்தை அறவே துறக்க வேண்டும். எது கடமை, எது கடமையல்லாதது என்பதைத் தெளிவாக யோசித்து புரிந்து கொள்ள வேண்டும். அரசனுக்கு பிரியமான சொற்களையே சொல்ல வேண்டும். ஒரு கதையை சொல்லும்போது கூட அது அரசனுக்கு சுவாரசியம் இல்லையென்றால், பிடிக்கவில்லையென்றால் நிறுத்திவிட வேண்டும்.



பாலகுமாரன்

நீ அறிவுடையவன்தான், ஆனால் அரசனுக்கு பிரியமானவன் அல்ல. உன் அறிவிற்கும் அரசனுடைய பிரியத்திற்கும் சம்பந்தமேயில்லை. அரசனுக்கு பிரியமாக இருக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதுதான் அரசவையில் இருப்பதற்கு தகுதியானவை. அவனுடைய பகைவரோடு பேசக் கூடாது. அந்தப் பகைவரை புகழக்கூடாது. அரசனுக்கு எதிரே உட்காரக்கூடாது. வலது அல்லது இடதுபுறத்தில்தான் உட்கார வேண்டும். ஏனெனில் அரசனுக்கு எதிரே பார்வைபடும்படி உட்கார உங்களுடைய சிறிய முகச்சுளிப்புகளோ அல்லது சிரிப்போ அரசனுக்கு கோபத்தை கொடுத்துவிடக்கூடும். நேரிடையான திருஷ்டியை விலக்கி உங்களை கவனிக்க திரும்பும்படியான ஒரு இடத்தில் இருக்க வேண்டும்:

அதுவும் தவிர, அரசனுக்கு எதிரே பரிசளிப்பவர், ஞானிகள் போன்றவர் வந்து கொண்டிருப்பார். நீங்கள் விலகியிருப்பதுதான் சம்பந்தபட்டவருக்கு நல்லது. அரசனும், நீங்கள் தள்ளியிருப்பதைத்தான் விரும்புவான். மற்றவருக்கு பரிசளிக்கும் போது ஆவல் காட்டக்கூடாது. எனக்கு என்ற முகக்குறிப்பு வந்துவிடக்கூடாது. அது உங்களை ஆத்திரக்காரனாக, அசூயைமிக்கவனாகக் காட்டும். தவறு செய்தவர்களை, மற்றவர் முன்னால் அம்பலப்படுத்தக்கூடாது. குடிகாரனாக இருக்கிற மனிதனை மன்னர்கள் விரும்புவதில்லை. மிகப் பெரிய வீரன் என்பவனையும் மன்னன் திரஸ்கிரக்கிறான். ஒருவன் மன்னனுக்கு பிரியமான சகல சுகங்களையும் மன்னனிடமிருந்து கிடைக்கப் பெறுகிறான். ஆனால் இது மிகப் பெரிய சங்கடம். அரசனுடைய பிரியம் நல்ல ஐஸ்வர்யம். இதை ஞாபகம் வைத்துக் கொள்.

மன்னனுக்கு முன்னால் இருக்கும்போது கைகளையும், கால்களையும் அதிகம் அசைக்கக்கூடாது. உதடு பிதுக்குதலோ, கோணலோ செய்யக்கூடாது. சலனமற்ற முகத்தினனாய், சந்தோஷமான நேரத்தில் மெல்லிய புன்னகை செய்கிறவனாய் நீங்கள் காணப்பட வேண்டும். தன்னைவிட வேகமாக கைகளை அசைக்கிறானே என்கிற சிறிய விஷயம்கூட மன்னனை எரிச்சலுறச் செய்யும். இவன் அலட்டுகிறான் என்ற எண்ணத்தை ஏற்படுத்தக் கூடும். தண்டனையை தந்துவிடக் கூடும். ஐயோ பாவம் என்கிற நிலையை மன்னன் உங்களைக் குறித்து அடைவது நல்லது. மற்றவரோடு சர்ச்சை செய்யக் கூடாது. மன்னன் புகழை எப்போதும் உரக்கச் சொல்லுதல் வேண்டும்.

மன்னனை தனக்கு சௌகரியமான ஆளாக வளைப்பவன் ஆபத்தில் முடிவான். அதிககாலம் அந்தப் பதவியில் இருக்க முடியாது. எப்போதும் மன்னனை பின்தொடர்பவன்தான் அரசவையில் அதிககாலம் இருக்க முடியும். ஒருவரை ஒரு காரியத்திற்கு மன்னன் அனுப்பும்போது எனக்கு ஏதேனும் கட்டளை உண்டா, நான் ஏதேனும் உங்களுக்கு செய்ய வேண்டுமா என்று கேட்பவன் மன்னுக்கு பிரியமானவனாய் இருக்க மாட்டான். தன்னைப்பற்றி அதிக அக்கறையில் உள்ளவன் அரசவையில் நீடித்திருக்க முடியாது. சரி உன் வீடு முக்கியமா போய்விடு என்று சொல்லி விடுவான். மன்னன் வெறுத்து ஒதுக்கி விட்டால் அது ஆபத்தில் முடியும்.

மன்னன் தன்னிடம் செய்த ரகசிய ஆலோசனை

களை ஒருபொழுதும் மற்றவரிடம் சொல்லி விடக் கூடாது. எனக்கு மன்னன் மிக நெருக்கமானவன் என்று காட்டிக் கொள்ளக் கூடாது. மன்னன் எனக்கு அடங்கியிருக்கிறான் என்கிற அலட்டல் நிச்சயம் ஆபத்தைத் தரும். மன்னன் ஒரு காரியத்தில் நியமித்தால் அதில் லஞ்சமாக சிறிதளவுகூட இருக்கக் கூடாது. அது தெரிந்து விட்டால் நீ பெரிய கொள்ளை அடித்து விட்டாய் என்று மன்னன் உன்மீது காழ்ப்பு அடைவான். உன் மோசமான காலத்தில் உன்னை கடுமையாக தண்டிப்பான். மன்னன் சால்வை, நகைகள் போன்ற விஷயங்களை பரிசளித்தால் அதை எப்பொழுதும் அணிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக மன்னன் முன்பு அந்த சால்வையும், நகையும் அணிந்திருக்கவேண்டும்.

பாண்டவர்களே, இம்மாதிரியான விஷயங்களை ஞாபகம் வைத்துக் கொண்டு பதிமூன்றாவது வருடமான மறைந்து வாழ்தலை அனுபவியுங்கள். பதினான்காவது வருடம் நீங்கள் விடுதலை அடைவீர்கள். நீங்கள் நிச்சயம் ஜெயிப்பீர்கள்" என்று ஆசிர்வதித்தார்.

"தௌம்யரே, மிகச் சிறப்பான ஒரு விஷயத்தை மிக அழகாக, தெளிவாக எடுத்துரைத்தீர். எங்களுக்குத் தெரியும் என்ற கர்வத்தில் நாங்கள் திளைக்காது, மறுபடியும் உங்கள் வாய் மூலம் கேட்கும் போது அவை புதிதாக அறிந்து கொண்டது

போல எங்களிடம் வந்து சேருகின்றன. எங்கள் புத்தி இதனால் கூர்மையடைகிறது. எங்கள் நடவடிக்கை இதனால் சௌகரியமடையும். உங்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி எங்களுக்கு உதவுவதற்கு உங்களைத் தவிர வேறு யாருமில்லை. நீங்கள் மறுபடி உதவி செய்திருக்கிறீர்கள். உங்களுக்கு என் நமஸ்காரங்கள்," என்று நெகிழ்ந்தார் தர்மர்.

கடைசி நேரத்தில் யாத்திரைக்கு செய்ய வேண்டிய ஸ்லோகங்களையும், நீர் குடித்தலையும், எழுந்து அமைதியாக நிற்றலையும், பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தொட்டுக் கொண்டு முகமன் சொல்வதையும் செய்யச் சொன்னார். சொன்னார்கள். பாண்டவர்கள் தௌம்யரை வலம் வந்து நமஸ்கரித்தார்கள்.

அவர்கள் ஆறுபேரும் அகன்றதும் பாண்டவர்கள் காப்பாற்றி வந்த அக்னியை ஒரு பானையில் வைத்து பாஞ்சாலதேசத்திற்கு எடுத்துப் போய்விட்டார் தௌம்யர். அவர்கள் வரும்வரை அவர்களால் போற்றி பாதுகாக்கப்பட்ட அக்னி அவரால் வளர்க்கப்பட்டிருக்கும்.

தைம்ய வனத்திலிருந்து நடந்து ஒரேநாளில் மத்ய தேசம் போக அவர்கள் விரும்பினார்கள். திரௌபதி நடக்க சிரமப்பட்டாள். அர்ஜுனன் அவளை தோளில் தூக்கிக் கொண்டான். மச்சல தேசம் வந்ததும் இறக்கினான். இடுப்பில் கத்தியும், முதுகில் அம்பறாத்தூணியும், கையில் வில்லும், முன்பக்க வயிற்றுக்கு அருகில் குறுவாளுமாய் அவர்கள் ஆயுதபாணிகளாக விளங்கினார்கள். அவ்விதமே மத்ய நகரத்தின் எல்லைக்குள் பிரவேசித்தார்கள்.

இனி இப்படிப் போவது நல்லதல்ல. போனால் வெகுவிரைவில் அடையாளம் காணப்படுவோம். எனவே நம் ஆயுதங்களை நாம் எங்கேனும் மறைவாக வைத்துவிட்டு போக வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

அற்புதமான காண்டீபத்தை நெஞ்சோடுத் தழுவி அர்ஜுனன் முத்தமிட்டான். பீமன் வளைந்து உறுதியாக இருந்த தன் வாளை உறையிலிட்டான். தன் வில்லின் நாணை அவிழ்த்து அதை நேராக்கினான். தருமரும், நகுலனும், சகாதேவனும் தங்கள் வில்லின் நாணை அவிழ்த்து அதை வில்லோடு சுற்றினார்கள். உறையிலிருந்து கத்தியை எடுக்காத வண்ணம் அழுத்தி பூட்டினார்கள்.

ஒரு பெரிய மயானத்தில் மேடான இடத்தில் ஷமி என்கிற விருட்சம் இருந்தது. அந்த மரத்தின் கிளைகள் மிக நீண்டவை. இலைகள் அடர்த்தியானவை. நெட்டுக் குத்தாக இருக்கின்ற அந்த மரத்தின் மீது ஏறுவது மிகக் கடினம். அவர்கள் அந்த மரத்தை சுற்றி வந்து பார்த்தார்கள். நகுலன் எல்லோருடைய ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு அந்த மரத்தில் ஏறினான். பெரிய பொந்துகளில் அம்பறாத்தூணிகளையும், ஆயுதங்களையும் வைத்தான்.

விற்களை மரத்தின் கிளைகளில் வைத்து கட்டினான். காற்றாலோ, புயலாலோ, மழையாலோ எதனாலும் அவை நகராது. மேலும் கீழிருந்து பார்க்கும்பொழுது அந்த மரத்தில் எதுவும் இருப்பதற்கான அடையாளமும் தெரியாது!

அவர்கள் மயான பூமியில் இறங்கி அங்கிருந்து ஒரு சவத்தை எடுத்து மரத்தின் ஆரம்ப கிளையில் அந்த சவத்தை தொங்க விட்டார்கள். துர்நாற்றமும், தொற்று நோயும் கலந்த, யாரும் மூக்கை பொத்திக் கொண்டு ஓடிப்போகின்ற இடமாகச் செய்தார்கள். மாடு மேய்க்கின்ற இடையர்களை கூப்பிட்டு, எங்களுடைய தாயாருக்கு நூற்றைம்பது வயதாகி விட்டது. எங்கள் குல வழக்கப்படி இப்படித்தான் பிரேதத்தை பட்சிகளுக்காகவும், புழுக்களுக்காகவும் கொடுப்போம் என்றார்கள்.

அவர்கள் இறங்கி மத்ய தேசத்தில் இருக்கின்ற விராட நகரத்தை நோக்கி நகர்ந்தார்கள். அந்த நகரத்திற்குள் பிரவேசித்தார்கள்.

திரௌபதி துர்க்கா தேவியை துதித்தாள். கூடவே தருமரும் வாய்விட்டு துதி செய்தார்.

“ஹே, துர்கா, யசோதையின் கர்ப்பத்தில் தோன்றியவளும், நாராயணனுக்கு மிகப் பிரியமானவளும், நந்தகோபன் குலத்தில் அவதரித்தவளும், அனைவருக்கும் மங்களம் அருளுபவளும், குலத்தை பெருக்குபவளும், கம்சனை பயமுறுத்தியவளும், அசுரர்களை சம்ஹாரம் செய்பவளும், கம்சன் மூலம் பாறை மீது அறையப்பட்டாலும் சட்டென்று ஆகாயத்திற்கு பறந்து விட்டவளும், திவ்ய நறுமண மாலைகள் அணிந்தவளும், கையில் கேடயமும் கத்தியும் தரிப்பவளும், அழகான வஸ்திரம் அணிந்தவளும், வசுதேவரின் மகன் ஸ்ரீ கிருஷ்ணனின் சகோதரியுமான துர்கா தேவி, உன்னை நான் வணங்குகின்றேன்.

நீ நான்கு புஜங்களுடன், அழகிய முகம் கொண்ட விஷ்ணுரூபமுமானவள். கருமை வர்ணமானவள். அதனால் நீ கிருஷ்ணா என்று அழைக்கப்படுகிறாய். இரண்டு விசாலமான கைகளில் இந்திரக் கொடியை தரிக்கிறாய். மூன்றாவது கையில் பரசும், நான்காவது கையில் தாமரையும் உன்னுடைய பெரிய சக்கரமும் அழகாக விளங்குகின்றது. இதுவே உன்னுடைய திவ்ய சொரூபம். உன் மயிலிறகு கொடி உன் பக்கத்திலே பறக்கிறது. மகிஷாசுரமர்த்தினி நீயே, நீயே புகழ், வெற்றியைத் தருபவள். எனக்கு வெற்றியை கொடு. நான் கோரும் வரம் தருவாயாக.

காளி, மகாகாளி, நீ கத்தியும், கதையும் தரிப்பவள். உன்னை பின்பற்றும் பிராணிக்கு நீ அபயமளித்து விரும்பும் வரம் அளிக்கிறாய். எல்லா இடத்திலும் சஞ்சரிக்கும் தேவி எனக்கு வந்த சங்கடத்தின் பாரத்தை நீக்கி என்னை ஆசிர்வதிப்பாயாக.

சகல செல்வங்களையும் கொடுப்பாய். சகிக்க முடியாத துக்கத்திலிருந்து மீட்பவள் நீ அதனால் துர்கா என்று அழைக்கப்படுகிறாய். செல்ல முடியாத காடுகளில் சொல்ல முடியா கஷ்டங்களை அனுபவிக்கிறவர்கள், பெரும் கடலில் மூழ்கிக் கொண்டிருப்பவர்கள், தீயதின் வசப்பட்டவர்கள் ஆகியோருக்கு நீயே சிறந்த கதியாவாய். நீயே அவர்களை சங்கடத்திலிருந்து விடுவிப்பாய். நீரில் நீந்தும்போதும், செல்ல முடியாத வழியில் செல்லும்போதும், காடுகளில் திரியும்போதும் மகா காளி உன்னை சரணம் செய்பவர்கள் துன்பம் அடைவதில்லை.

காளி, நீயே வித்தை, நீயே அறிவு, நீயே சந்தியா, இரவு, நித்திரை, நீயே நிலவு, பொறுமை மற்றும் தயை ஆவாய். உன்னைத் துதிப்பவர்கள் மோகம், பந்தனம், புத்திரநாசம், தனநாசம் என்னும் சங்கடங்களிலிருந்தும் பிணி, மரணம் முதலிய பயங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். நான் ராஜ்யத்திலிருந்து விலக்கப்பட்டவன் விரட்டப்பட்டவன், அதனால் உன்னை சரணடைகிறேன். தாமரை போன்ற விசாலமான கண்களை உடைய தேவி, நான் உன் திருவடிகளில் என் தலை வைக்கிறேன். என்னைக் காப்பாற்று.

காளி, எங்களுக்கு உண்மையிலேயே நீ சத்ய சொரூபமாவாய். உன் மகிமையை சத்தியமாகக் காட்டு. சரணடைந்தவர்களை காக்கும் பக்த வத்சலானான துர்க்கே எனக்கு சரணளி” என்று கண்ணில் நீர் வழிய கெஞ்சினார்.

துர்கா தேவி யுதிஷ்டருக்கு பிரத்யட்சமாய் காட்சியளித்தாள். “யுதிஷ்ட மன்னா, கருணை உடையவனே, விரைவில் உனக்கு வெற்றி கிடைக்கும். என்னுடைய அருளால் கௌரவ சேனையை நீ வென்று, அழித்து, தடையின்றி அரசாள்வாய். மறுபடியும் பூவுலகம் ஆளும் சுகத்தை அடைவாய். நீ ஸ்மரணை செய்வது போல வேறு எவர் என்னை வணங்கி புகழ்ந்தாலும் அவர்களுக்கு நான் உதவி செய்வேன். இந்த ஸ்தோத்திரத்தை எவன் பக்தியோடு கேட்கிறானோ

அல்லது படிக்கிறானோ அவனுடைய காரியம் யாவும் சித்தியாகும். என்னுடைய அருளால் விராட நாட்டில் இருக்கும்போது உங்களை கௌரவர்களோ அல்லது நகரவாசிகளோ தெரிந்து கொள்ள மாட்டார்கள். என் ஆசிகள்'' என்று சொல்லி பாண்டவர்களை காக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அங்கிருந்து மறைந்தாள்.

துர்க்கையை துதித்த பிறகு மனம் ஒருமைப்பட்டு தருமர் தன்னுடைய தெய்வமானயமன் என்று சொல்லப்படும் தருமராஜரை அழைத்தார்.

“என்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமை. என் தந்தையே, உங்களை நான் பலமுறை நமஸ்கரிக்கிறேன். எவ்விதம் நான் இயங்குவது, எப்படி இருப்பது என்பதை நீங்கள் எனக்கு உள்ளுக்குள் இருந்து உணர்த்த வேண்டும். என் கண்ணும், உடல்மொழியும், பேச்சும் என்னை வெளிப்படுத்தாது இருக்க வேண்டும். எந்த சந்தேகமும் இன்றி எந்த வேடம் நான் போட்டேனோ அந்த வேடத்தோடு நான் இருக்க வேண்டும்” என்று உள்ளும் வெளியும் கை கூப்பினார்.

தருமராஜன் அவர் மனதுக்குள் தோன்றினார். ‘‘நான் இருக்கிறேன் கவலை எதற்கு? உன் உருவம் உனக்கே ஆச்சரியமாக இருக்கும்'' என்று சொல்லி மறைந்தார்.

தருமபுத்திரருடைய முகமும், உடம்பும் மாறிற்று. உச்சியில் சிகையும், மேலே சால்வையும், இடுப்பிலே அங்கவஸ்திரமும், பஞ்சகச்சமும், மரச்செருப்பும், தடித்த பூணூலும், ருத்ராட்சமும், துளசி மாலையும், கையிலே கங்கணமும் கொண்டு அவர் முற்றிலும் மாறிப் போனார். சகோதரர்கள் வியந்தார்கள்.

“இதுதான் நீங்களா, இது என்ன வேடப் பொருத்தம். உங்களை எங்களாலேயே அடையாளம் கண்டுபிடிக்க முடியாது போலிருக்கிறதே” என்று சொன்னார்கள்.

“சட்டென்று நீங்களும் மாறுங்கள்'' என்று தருமர் துரிதப்படுத்தினார். அவர்கள் அங்கங்கே ஓடி, விதம் விதமான துணிகளையும், கருவிகளையும் வாங்கிக் கொண்டார்கள். ஒரே நாழிகையில் பீமன் தலைமை சமையல்காரனாக வந்தான். அர்ஜுனன் நடனம் சொல்லிக் கொடுக்கின்ற ஒயில் மிக்க அலியைப் போல மாறினான். நகுலன் கையில் சவுக்கோடும், தோளில் குதிரை சேணத்தோடும், தலைப்பாகையோடும், முழங்கால்வரை ஏறிய வேட்டியோடும், இடுப்புத் துண்டோடும், அகலமான மார்போடும், நெஞ்சில் வெள்ளி சங்கிலியோடும் குதிரைக்காரன் போலவே தோற்றமளித்தான். மூக்கணாங்கயிறு, பசுவை கொம்பில் கட்டி இழுக்கும் சிறிய கயிறு, காலில் கட்டி இழுக்கும் கயிறு, பால் கறக்கின்றபோது உபயோகப்படுத்தும் கயிறு என்றும், உடம்பு தேய்த்து விடுகின்ற நார்களைக் கொண்ட மாலை ஒன்றும், பெரிய சொம்பு ஒன்றுமாய் தலைப்பாகையோடும், வர்ணமாலைகளோடும் சகாதேவன் வந்தான்.

(தொடரும்)

மாதம் இருமுறை
ஆன்மிகம்
பலன்
உங்கள் அபிமான தினகரன் குழுமத்திலிருந்து
வெளியாகும் தெய்வீக இதழ்

உங்கள் ஆன்மிகம்
ஜனவரி 1-15, 2018 இதழுடன்,

‘ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்’
துறையூர், திருச்சி

வழங்கும்

2018 ஆண்டு
காலண்டர் இணைப்பு

உங்கள்
பிரதிக்கு சொல்லி
வைத்துவிடுங்கள்



மகாபாரதம்

77

உருமாறிய உத்தமர்கள்!

அந்தணர் வேடம் தரித்து அரசவையில் உட்கார்ந்த யுதிஷ்டிரரை விராட மன்னன் வியப்பாக பார்த்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்த கண்கள் வேறு எதையும் பார்க்க முடியவில்லை. வேறு பக்கம் திரும்பினாலும் மறுபடியும் அவர் முகத்தையே பார்த்தார். இத்தனை தெளிவான முகமா, இத்தனை சீரான அமைப்பா, ஒரு அந்தணருக்கு இத்தனை கம்பீரம் உண்டா. இது க்ஷத்திரிய குணம் அல்லவோ. உட்காருவதும், நடப்பதும், நிற்பதும், உடல் அசைவுகளெல்லாம் சாதாரண ஆசனத்தில் உட்கார்ந்தாலும், சிங்காசனத்தில் உட்காருவதுபோல் இருக்கிறதே. இவர் பார்ப்பதும், மற்றவர் பார்க்கும் போது தலையசைப்பதும் மன்னர்கள் செய்யக் கூடியதல்லவா. அந்தணருக்குண்டான பயம் இவர் உடம்பில் இல்லையே. இவர் கண்களில் வெளிப்படவில்லையே. விசாரிக்க வேண்டுமா. என்ன வேண்டுமானாலும் விசாரித்துக்கொள் மன்னா என்ற துடிப்புடன் அல்லவா இருக்கிறார்.

விராட மன்னனாகிய நான் மட்டும் அல்ல. வேறு எந்த மன்னனும் எனக்கு ஒப்புமையானவன் அல்ல. நான் எல்லோருக்கும் மேல் என்பது போல் அல்லவா அவர் பார்வையும், சிரிப்பும் உள்ளது. அந்தணர்கள், நல்ல வேதம் படித்தவர்களும், நல்ல தபஸ் உள்ளவர்களும், ரிஷி என்ற இடத்திற்கு நகர்வதற்கு தயாரானவர்களும் இப்படி இருப்பார்கள்.

“அந்தணரே எங்கிருந்து வருகிறீர்கள். உங்கள் பெயர் என்ன? எந்தக் கலையில் நீங்கள் வல்லவர்கள், எனக்குச் சொல்லுங்கள்.



உங்களைப் பார்த்த மாத்திரத்தில் உங்களோடு நட்பாக இருக்க வேண்டும் என்கிற விழைவு என் மனதில் ஏற்படுகிறது. நட்பாக இருப்பதற்கு தகுதியான யோக்கியதை என்று ஒரு எண்ணம் வருகிறது. எது குறித்தும் உங்களுடன் ஆலோசனை செய்து தெளிவு பெறலாம் என்ற நினைப்பு ஓடுகிறது. என்னுடைய எண்ணங்கள் சரியாகத்தான் இருக்கும். அந்தணரே சொல்லுங்கள்” என்று விராட மன்னன் கை கூப்பினான்.

“நான் அஸ்தினாபுரத்திலிருந்து வருகிறேன். அங்கே யுதிஷ்டிரரிடம் நான் நட்பாக இருந்தேன். அவருக்கு பேச்சுத் துணையாக, ஆலோசகனாக, விவாதம் செய்பவனாக, கலைகள் பற்றி விவாதிப்பவனாக, அனுபவம் பகிர்பவனாக இருந்தேன். அவர் எனக்கு எந்தக் குறைவும் வைக்கவில்லை. ஒரு அரசனைப் போல எல்லாவித சௌகரியங்களும் எனக்கு செய்து கொடுத்தார். என் பெயர் கங்கன். யுதிஷ்டிரர் என்னை கங்கன் என்றுதான் அழைப்பார். நான் சூதாடுவதில் வல்லவன். பாய்ச்சுகளை உருட்டிப் போட்டு காய்களை நகர்த்தி விளையாடுவதில் கெட்டிக்காரன். இதனாலேயே யுதிஷ்டிரருக்கு என் மீது பிரியம். நானும் அவரும் மணிக்கணக்கில் கட்டங்களில் காய்கள் நகர்த்தி விளையாடுவோம். என்னிடமிருந்து பல சூட்சுமங்களை அவர் கற்றுக் கொண்டார். நீங்கள் விருப்பப்பட்டால் உங்களோடு பேசவும், விவாதிக்கவும், ஆலோசனை சொல்லவும், ஏன் அவ்வப்போது சூதாடவும் நான் துணையாக இருப்பேன்.”

விராட மன்னன் எகிறி கை கொட்டினான்.

“இப்படிப்பட்ட ஆளை அல்லவா தேடிக் கொண்டிருந்தேன். ஒன்று இருந்தால் ஒன்று இருக்காது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆளை தேட வேண்டியிருக்கும். ஆலோசனை சொல்பவருக்கு விவாதிக்கின்ற திறமை இருக்காது. விவாதிப்பவர் சூதாட மாட்டார். இவையெல்லாம் கலந்து என் விருப்பத்திற்கேற்ப நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் இந்தக் கணமே என் அரசவையில் ஒரு முக்கியமான மனிதராக சேர்ந்து விடுங்கள். கங்கரே, உங்களுக்கு என்ன விதமான சௌகரியங்கள் வேண்டும்?”

“என் தகுதிக்கு கீழான மனிதர்களோடு நான் விவாதிக்கக் கூடாது. தோல்வி அடைந்த யாரும் தோற்ற செல்வத்தை திருப்பி கொடுக்க கேட்கலாகாது. இதில் என்னை ஏமாற்றுபவரை நீங்கள்தான் தண்டிக்க வேண்டும். ஒரு வேளை நீங்கள் தோற்றால் அவ்விதமே நடந்து கொள்ள வேண்டும்.”

“இது நிச்சயம். இது அடிப்படையான விஷயம். உம்மோடு அல்ல யாரோடு சூதாடினாலும் இது தானே விதி. இதை நான் எப்படி மீறுவேன். உமக்கு கீழான மனிதரோடு நீர் பேச வேண்டிய அவசியமே இல்லை. நீர் தாராளமாக என்னுடைய அரசவையில் இருக்கலாம்” என்று சொல்ல, அவருக்கு தனக்கு அருகிலேயே புதியதாய் ஒரு ஆசனம் அமைக்கச் சொல்லி, அந்த அரசவையில் அவர் ஒரு முக்கியமான மனிதர் என்பதை உரக்க அறிவித்தான். மற்ற மந்திரிகளும், சேனாதிபதிகளும், நிர்வாகஸ்தர்களும் எழுந்து நின்று கங்கன் என்ற தருமருக்கு கை கூப்பினார்கள். அவரை யார் என்று அந்த

அரசவையோ, அந்த அரசனோ, மற்ற மந்திரிகளோ புரிந்து கொள்ளவில்லை.

தசைகளோடு தம் தம் என்ற கனமான நடையோடு உயரமும் அகலமுமாய் பீமன் அரசவைக்குள் நுழைந்து தொலைவிலிருந்து அரசனைப் பார்த்தான். குனிந்து கும்பிட்டான். மற்ற அத்தனைப் பேரை விட உயரமாய் இருந்த பீமனைப் பார்த்ததில் விராட மன்னனுக்கு சிரமம் ஏதும் இருக்கவில்லை.

அட, இவ்வளவு பயங்கரமான உருவத்தோடு ஒருவன் இருக்கிறான். ஆனால் குனிந்து வணங்கியது வேறுவிதமாய் இருக்கிறது. இது நிஜமான பணிவா, பொய்யா. இத்தனை பலம் உள்ளவன் எப்படி இவ்வளவு பணிவாக இருக்கிறான். முதுகில் பாதியல்லவா குனிந்தது.

''யாரப்பா அங்கே? அந்த உயரமான மனிதனை அழைத்து வா. நான் இன்னும் நெருக்கத்தில் அவனை பார்க்க விரும்புகின்றேன்."

பீமசேனன் கையில் மத்தும், கரண்டியும், கருப்பு நிற கத்தியும் இருந்தன. அவன் இடுப்பில் கருப்பு ஆடையும், தோளில் கருப்புத் துண்டும் போட்டுக் கொண்டிருந்தான்.

பீமன் மறுபடியும் பணிவாக வணக்கம் செய்தான். அது விராட மன்னனுக்கு சிரிப்பை வரவழைத்தது. ஒரு கந்தர்வனைப்போல, அரசிளம்குமரனைப் போல, இளவரசு பட்டம் கட்டி மன்னனாவதற்கு தயாராக இருப்பவன் போல இருக்கின்ற இந்த வாலிபன் ஏன் இப்படி வணக்கம் செய்கிறான் என்று சிரிப்பைக் கொடுத்தது.

"யாரப்பா நீ? என்ன வேண்டும்?"

"உங்களிடம் வேலை வேண்டும்."

"என்னிடம் வேலையா? என்ன வேலை?"

"நான் ஒரு சமையற்காரன். மகாராஜா யுதிஷ்டிரரிடம் நான் சமையல் வேலை செய்தேன். அவர் வனவாசம் போனபிறகு வேறு எங்கும் எவரோடும் இருக்க எனக்கு விருப்பம் இல்லை. உங்களைப் பற்றி கேள்விப்பட்டு நான் இங்கு வந்திருக்கிறேன். எனக்கு இங்கு வேலை கொடுங்கள். நான் அற்புதமாக சமைப்பேன். புதிய புதிய பதார்த்தங்களை செய்வதில் நான் வல்லவன். அப்படிப்பட்ட விஷயத்தை நீங்கள் ருசித்திருக்க மாட்டீர்கள். இந்தத் தேசத்தின் பல்வேறு மக்கள், பல்வேறு விதமான தானியங்களை, பல்வேறு விதமான பக்குவத்தில் சமைக்கிறார்கள். இவை அனைத்தும் எனக்கு கலதரப்பாடம். ஒருமுறை என் உணவை ருசித்தவர்கள் என்னை விட மாட்டார்கள்."

பாலகுமாரன்

"அப்படியா, எனக்கு உண்பதில் விருப்பம் உண்டு. என் குடும்பத்திற்கே அதில் ஆசை உண்டு. நல்லது. இவ்வளவு தேஜஸூம், கட்டுக்கோப்பான உடலும் உள்ள உன்னை வேலைக்காரனாக வைத்துக் கொள்வதில் எனக்கு சந்தோஷம்."

"சமையல் மட்டுமல்ல, அவ்வப்போது நான் மல்யுத்தமும் செய்வேன். உங்கள் மல்யுத்த வீரர்களை என்னால் அடக்கி உட்கார வைக்க முடியும். விலங்குகளோடும் நான் சண்டை புரிவது வழக்கம். என்னையும் ஒரு விலங்கையும் ஒரு கூண்டில் அடைத்து விட்டால் அதை கொன்று தூக்கிப் போட்டு விட்டு நிதானமாக வந்து உங்களிடம் பரிசுக்காக கை ஏந்துவேன்."

விராட மன்னன் வாய் விட்டுச் சிரித்தான். அந்தக் கொலைக் காட்சியை மனதிற்குள் நினைத்து சந்தோஷப்பட்டான்.

"நீ வேலைக்கு சேர்ந்தாகி விட்டது. சமையல் அறைக்குப் போ. அங்கு போய் என் கட்டளைகளை நீயே கூறு. அந்த சமையற்காரனுக்கு தலைவன் என்று உன்னை நிர்மாணித்துக் கொள். யாராவது மறுப்பார்கள் என்று நினைக்கிறாயா?" அடிக்குரலில் கேட்டார்.

''விராட தேசத்து மக்கள் நல்லவர்கள். மரியாதை தெரிந்தவர்கள். அவர்கள் என்னை மனமாற ஏற்பார்கள்."

"சாமர்த்தியமான பேச்சு. ஒரு பணியாளனுக்கு இந்தப் பேச்சு வராது. அவன் கர்வம்தான் காட்டுவான். நீ வேலைக்காரன் அல்ல என்பதே இந்த அடக்கத்தைச் சொல்கிறது. போய் சமையல் அறையில் உன் பொறுப்பை எடுத்துக் கொள். இன்றே சமைத்து உணவு வகைகளை அனுப்பு" என்று கட்டளையிட்டான்.

பல்லவன் என்ற பெயரில் பலவானான பீமசேனன் அங்கு சமையற்காரனாக வேலைக்கு சேர்ந்தான். பல்லவன் என்றுதான் அவனை புரிந்து கொண்டார்களே தவிர பஞ்சபாண்டவர்களில் ஒருவன் க்ஷத்திரியன், வீரன், பலசாலி, பீமன் என்பது யாருக்கும் தெரியவில்லை.

அந்தப் பெண்மணி வெகு அழகு. ஆனால் அழுக்கான உடைகளோடு இருந்தாள். கேசங்கள் சரியாக வாரப்படாமல் இருந்தது. பாதணிகள் இல்லாது வெறும் காலோடு கற்கள் உறுத்தாமல் இருக்க விலகி விலகி நடந்தாள். நீண்ட கைகள். சிவந்த சிறுவாய். கூர்ந்த மூக்கு. பெரிய கண்கள். கனம் பொருந்திய முலைகள். குவிந்த அடிவயிறு. நீண்ட தொடைகள். அவள் இருபுறமும் பார்ப்பதும், தயங்குவதும், மெல்ல நடப்பதும் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தன. கவனத்தை ஈர்க்க வேண்டுமென்றுதான் அப்படி நடந்தாளோ என்றுத் தோன்றியது. அந்த ஊரை முதன் முதலில் பார்ப்பது போல, ஏதேனும் உண்ணக் கிடைக்குமா என்று யாசிக்கும் பிச்சைக்காரியைப்போல அவள் ஒவ்வொரு வீடாக ஏறிட்டு பார்த்து வந்தாள். அப்படி அவள்



தேடுவதை பார்த்ததுமே அவளை அழைத்துப் பேச வேண்டும் என்று அங்குள்ள மக்களுக்குத் தோன்றியது. அதை திரௌபதியும் விரும்பினாள்.

“யாரம்மா நீ? களைப்பாக காணப்படுகிறாய். வீடு வீடாக நோட்டமிடுகிறாய். பசிக்கு உணவு தேடுகிறாயா அல்லது வேறு ஏதேனுமா? எந்த ஊர் நீ? யார் நீ?”

“நான் சைலேந்தரி”

“அட, தாதிப் பெண்ணா? என்ன தேடி வந்திருக்கிறாய்?”

“வேலை தேடி வந்திருக்கிறேன். யாரிடமாவது பணிப்பெண்ணாக இருக்க விரும்புகின்றேன்.”

“உன்னுடைய அழகு, நீ நிற்பது, நடப்பது, சிரிப்பது எல்லாம் பார்க்கும்போது அரசகுலத்தவளைப் போல தென்படுகிறாய். உன்னை சாதாரண மனிதர்கள் வேலைக்கு வைத்துக் கொள்வார்களா. இல்லை. அரசியிடம் போய் கேள்.”

ஒரு உயர்ந்த மாடத்திலிருந்து விராட மன்னனின் மனைவி மக்கள் அந்த அழகிய பெண்ணோடு பேசுவதைப் பார்த்தாள். தன் தாதிகளை அழைத்து அவளை அழைத்து வரச் சொன்னாள். சுதேஷ்ணை அழைக்கிறாள் என்றதும் மற்றவர்கள் பணிவாக விலகிக் கொண்டார்கள்.

“பெண்ணே கவனமாக இரு. விராட மன்னனின் மனைவியே உன்னை அழைக்கிறாள். நான் சொல்லி வாய் மூடவில்லை. உனக்கு அரசியினுடைய அழைப்பே வந்து விட்டது. போ. போய் நல்லபடியாக இரு.” என்று வாழ்த்தினார்கள்.

சைலேந்தரி அவர்களை வணங்கி நகர்ந்தாள்.

வணக்கம் சொல்வது கூட கம்பீரமாக இருக்கிறது. இவள் வேலைக்காரியா அல்லது நூறு வேலைக்காரியை வைத்துக் கொண்டிருக்கிற எஜமானியா, புரியவில்லை என்று மக்கள் வியப்போடு அவள் போவதைப் பார்த்தார்கள்.

“இதற்கு முன் எங்கு வேலை செய்தாய்?”

“நான் கிருஷ்ண பரமாத்மா மனைவி ருக்மிணியிடம் வேலை செய்திருந்தேன். பூமாலை தொடுப்பதும், நல்ல உடைகளை சரியானபடி மடித்து வைப்பதும் எனக்குத் தெரியும். மற்றபடிக்கு படுக்கை விரித்துப் போடுதலும், உடைகளை தோய்த்து உலர்த்துவதும், சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்து வைத்து அலம்புவதும் செய்ய முடியும்.”

“போதும் போதும். அவையெல்லாம் செய்ய வேண்டாம். என்னைப் போன்ற அரசிக்கு தோழியாக இருப்பவள், பாத்திரம் தேய்த்துப் போடுவதும், படுக்கை தட்டிப் போடுவதும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு வேறு பெண்கள் இருக்கிறார்கள். வேறு என்ன தெரியும்?”

“நல்ல மூலிகைகளை தேர்ந்தெடுத்து அரைத்து முகத்திற்கு பற்று போட்டு சரியான நேரத்தில் எடுத்து விடுவேன். முகம் கூடுதல் பொலிவு பெறும். கண்ணுக்கு மை தயாரிப்பேன். உதடு பூச்சு, நெற்றித் திலகம் போன்றவைகளை என்னால் தயார் செய்ய முடியும். சுமாரான அழகுடைய பெண்கள் என் கை பட்டதும் பேரழகியாக மாறுவார்கள்.”

“அது புரிகிறது. இவ்வளவு அழகான நீ ஒரு

இடத்தில் வேலை செய்கிறாய் என்பது நம்பவே முடியவில்லை. அரசியினுடைய முக லட்சணங்களும், தேவஜாதி பெண்களுடைய உடல் வாசனையும் உன்னிடம் இருக்கின்றன. உன்னை எப்படி வேலைக்கு வைத்துக் கொள்வது என்று பயமாகவும் இருக்கிறது. என் அந்தப்புரத்துக்கு வரும் அரசன் உன்னைப் பார்த்தால் உடனடியாக என்னை ஒதுக்கி விட்டு உன்னை அடைய முயற்சிப்பான். உன்னிடம் பேரம் பேசுவான். மனிதர்களை காமமுறும்படி செய்யும் வனப்பு உன்னிடம் இருக்கிறது. விலகி நிற்கின்ற உன்னை எனக்கே அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அப்போது ஆண்களுக்கு இருக்காதா, உன்னை முகர வேண்டும். முத்தமிட வேண்டும், இறுக்கிக் கட்டிக் கொண்டு இன்பமுற வேண்டும் என்று எவனுக்கும் தோன்றும். எனவே, உன்னை வேலைக்காரியாக வைத்துக் கொள்ளலாம் என்றாலும் வேண்டாம் விஷப்பரிட்சை என்று எண்ணம் வருகிறது. என் புருஷன் மோகத்தை ஜெயித்தவன் அல்ல.”

“அப்படி அல்ல தாயே. நான் திருமணமானவள். ஐந்து கந்தர்வர்கள் எனக்கு புருஷர்களாக இருக்கிறார்கள். அந்த கந்தர்வர்கள் யாரும் அறியாது ரகசியமான இடத்தில், ரகசியமான நேரத்தில் என்னை சந்திப்பார்கள். நான் அவர்கள் பாதுகாப்பில்தான் இருக்கிறேன். யாரையும் மயக்குகின்ற எண்ணம் எனக்கு இல்லை. என்னிடம் மயங்கி நெருங்கினால் என் புருஷர்கள் கடுமையாக தண்டிப்பார்கள். எனவே, உங்கள் புருஷனைப் பற்றி கவலைப்படாது அவரிடம் இந்த எச்சரிக்கையை மட்டும் சொல்லி விடுங்கள். உங்களிடம் பணி புரிய நான் விரும்புகின்றேன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்” என்று கைகூப்ப, சுதேஷணா எழுந்து சென்று அவளை அணைத்துக் கொண்டாள். நீ வேலையில் சேர்ந்து விட்டாய் என்றாள்.



குளித்து வேறு உடை உடுத்தி, மெல்லிய முகப் பூச்சும், உதட்டு சாயமும், கரும் மையும் தீட்டி, நீண்ட பின்னலில் பூ சொறுகி வந்து விழுந்து வணங்கிய திரௌபதியைப் பார்த்து சுதேஷணை மயங்கினாள்.

இவளை வேண்டுமென்று எடுத்துக் கொள்வதா, வேண்டாம் என்று விலக்குவதா, ஏதோ கந்தர்வர்கள் கணவர்கள். இவளைத் தொட்டால் அவர்கள் சூழ்ந்து கொண்டு அடித்து நொறுக்கி விடுவார்கள் என்று சொல்கிறாள். ஆனால், இவளாக நினைத்து என் புருஷனை மயக்கினால் என்ன செய்ய. ஆனால், இவள் முகத்தைப் பார்த்தால் அப்படிப்பட்டவள் அல்ல என்று தோன்றுகிறது.

“சைலேந்தரி, என்னிடம் பணிப்பெண்ணாக இரு. நான் உனக்கு வேண்டியதை செய்வேன். நீ என்ன விரும்புகின்றாயோ அதை உனக்கு அளிப்பேன்.”

“எனக்கு வேறு எதுவும் வேண்டாம் தாயே. பிறர் உண்ட எச்சிலை என்னை உண்ணச் சொல்லக் கூடாது. எவர் காலையும் கழுவச் சொல்லக் கூடாது. உங்களுக்கு அலங்காரம் செய்வதில் உங்களை நான் மகிழ்ச்சியுறச் செய்வேன். நெருக்கமாவேன்” என்று சொன்னாள்.

மாலினி என்கிற திரௌபதி, விராட ராஜன் அரண்மனையில் அவன் மனைவி சுதேஷணை அந்தப்புரத்தில் சைலேந்தரி எனச் சொல்லப்படுகின்ற அலங்காரம் செய்யும் தாதியாக வேலைக்குச் சென்றாள். அவள் திரௌபதியாக இருப்பாள், அவள் சொல்லும் கந்தர்வர்கள் பஞ்சபாண்டவர்கள் என்கிற சந்தேகம் எதனாலோ எவருக்கும் எழவே இல்லை.

அடேயப்பா, இந்த வாலிபன் என்ன உயரம். ஆனால் உதட்டில் சாயம் எழுதியிருக்கிறான். புருவங்களுக்கு மேல் அலங்காரம் செய்திருக்கிறான். நெற்றிக்கு திலகம் இட்டிருக்கிறான். காதில் பெண்கள் அணியும் தோடும், ஜிமிக்கியும் அணிந்திருக்கிறான். பெண்கள் அணியும் நகைகளும், வங்கியும், கங்கணமும் வைத்திருக்கிறான். வளையல் அணிந்திருக்கிறான். கெட்ட கேட்டுக்கு இடுப்பில் ஒட்டியாணம் வேறு. இவன் ஆணா பெண்ணா. இரண்டும் இல்லை. கடவுள் செய்த பிழை. அலி.

ஆனால், என்ன கோரமப்பா. இத்தகைய வாலிபன் பெண் வேடம் தரித்தவன் போல் காணப்படுகிறானே தவிர, இவன் அடித்தால் செத்துப் போவோம். கைகளில் உறுதி தெரிகிறது. இவ்வளவு அகலமான தோள் போர் செய்யத்தான் உதவும். ஆனால், அலிகளிலும் வீரன் உண்டே. இது கடவுள் பிழை என்று சொல்வதுகூட தவறு. போன ஜென்மத்து சாபம்.

“வாலிபனே. நீ பெண் போல எதற்காகவோ வேடம் தரித்திருக்கிறாயே தவிர, நீ உண்மையில் அலி அல்ல.”

“என் பெயர் பிருகன்நளை. நான் பூ வேலை செய்வேன். குண்டலங்கள் அமைப்பேன். நான் நாட்டியத்தில் வல்லவன். பெண்களுக்கு நாட்டியம் சொல்லித் தரவும், பாட்டுப் பாடவும், வாத்தியக் கருவிகள் வாசிக்கவும் என்னால் சொல்லித் தர முடியும். ஏன் இந்த அலி உருவம் என்று கேட்டீர்களானால் அது ஒரு துக்ககரமான விஷயம். அதை உங்களுக்குச் சொல்வதில் எந்தப் பலனும் இல்லை. மாறாக எனக்கு வேதனைதான்

அதிகரிக்கும். தயவு செய்து அந்தக் கேள்வியை தவிர்த்து விடுங்கள். என்னை என் உருவத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் அந்தப்புரத்து உள்ள பெண்கள் அனைவருக்கும் நான் அமைதியையும், சந்தோஷத்தையும் தருவேன். எந்த நேரமும் சிரிப்பும், பாட்டுமுமாக இருக்க வைப்பேன்."

"நம் அந்தப்புரத்து பெண்களை அழைத்து வா. இவன் அலிதானா என்று சோதனை செய்."

நாலைந்து முதிர் பெண்கள் வந்தார்கள். அர்ஜுனனை தனியே கூட்டிக் கொண்டு போனார்கள். அலி என்று உறுதி செய்தார்கள். வெட்கத்தோடு அர்ஜுனன் வந்து நின்றான்.

"சரி நீ என்ன சொல்லித் தரப் போகிறாய் என்பது முக்கியமல்ல. உன்னைத் தாண்டி வேறு எந்த ஆடவரும் என் அந்தப்புரத்திற்குள் நுழைந்து விட முடியாது. உன் அனுமதி இன்றி வேறு எவரும் நடமாட முடியாது. அப்படி மீறி எவரேனும் பகைவர் வந்தால் என் பெண்டிரை காப்பாற்றி வந்தவரை விரட்டி அடிக்கின்ற பாதுகாப்பாக நீ இருப்பாய். எனவே அதுவே முக்கியப் பணி. மற்றபடி ஆட்டமோ, பாட்டமோ நீ செய்து கொள். அவர்கள் சந்தோஷமாக இருப்பார்கள் என்று சொன்னாயே, அது முக்கியம்" என்று மன்னர் சொல்ல, பிருகன்நளை என்ற பெயரில் அர்ஜுனன் சிவந்த உடைகளோடும், பெண்களுக்கான பூச்சுகளோடும் அலங்காரத்தோடு அந்தப்புரத்திற்கு ஆடிப் பாடி குதித்துப் போனான். அவனைப் பார்க்கும் போது வியப்பாகவும், வேதனையாகவும் இருந்தது.

உலகமே வியக்கின்ற பேராண்மை மிக்க அந்த வீரன் காலத்தின் கோலமாக ஆண்மைக்கு நேர் எதிர்பதமாக இருக்கின்ற அலி உருவம் தரித்து இன்னும் ஒரு வருடம் கழிக்க வேண்டும் கவலையோடு அந்த அந்தப்புரத்திற்குள் நுழைந்தான்.

"யாரப்பா நீ? தேரைச் சுற்றி வருகிறாய். குதிரைகளை தடவுகிறாய். உன்னைக் கண்டதும் குதிரைகள் கால் மாற்றி கனைக்கின்றனவே. புதியவர்கள் வந்தால் குதிரைகள் பின்னடையும். எகிறும். முகம் திருப்பிக் கொள்ளும். கிட்டே வராதே என்று கனைக்கும். ஆனால், பல் தெரிய சிரித்து, உன்னோடு முகம் வைத்து உன்னை முகர்ந்து பார்த்து குதிரைகள் கொஞ்சுகிறது என்றால் நீ வேலை தெரிந்தவன். நீ யார்?"

"நான் யுதிஷ்டிரரிடம் குதிரைச் சேவகனாக இருந்தேன். குதிரைகளுக்கு பயிற்சி அளிப்பதில் நான் நிபுணன். பல மன்னர்களால் நான் கௌரவிக்கப்பட்டிருக்கிறேன். குதிரைகளை வளர்ப்பது மட்டுமல்ல, அவைகளை தேரில் பூட்டி ஓட்டுவதிலும் நான் வல்லவன். பல்வேறு குதிரைகளின் ஜாதி அறிவேன். பொல்லாத குதிரைகளை துஷ்டத்தனம் நீக்கி சாதுவாக்குவேன். அவைகளுக்கு நல்ல சிகிச்சை செய்யவும் எனக்குத் தெரியும். என்னை க்ரந்திக் என்று அழைப்பார்கள். குறிப்பாய் யுதிஷ்டிரர் என்னை மிகவும் நேசித்தார். இந்திரனுடைய தேரோட்டி மாதலியைப் போலவும், தசரத மன்னரின் தேரோட்டி சுமந்திரர் போலவும், ஜமதக்னி புதல்வர் பரசுராமன் தேரோட்டி சுமகன் போலவும் நான் உங்களுக்கு சாரதியாக இருப்பேன்."

"க்ரந்திகா, எனக்கு குதிரைகள் என்றால் விருப்பம். என் குதிரைகளை பாதுகாக்கும் வேலையை உடனே செய். பொறுப்பு ஏற்றுக் கொள். நல்ல குதிரைகள் கிடைத்து விடும். நல்ல பயிற்சியாளர் கிடைப்பது கடினம். உன் வரவு நல்வரவாகட்டும். இன்றே இப்பொழுதே வேலையில் சேர்ந்து கொள்" என்று விராட மன்னன் உத்தரவிட, அவன் வணங்கி குதிரை கொட்டகைக்குப் போனான்.

சகாதேவன் மகா கெட்டிக்காரன். மனித மனங்களை படிப்பவன். அடுத்தது என்ன நடக்கும் என்பதை சூட்சுமமாக அறிபவன். அவன் அரசனைப் பார்க்கவில்லை. மாறாக பசுக்களின் கொட்டகைக்குப் போனான். விதம் விதமான சப்தம் எழுப்பி பசுக்களின் கவனத்தை திருப்பி, தொடுதலின் மூலம் அவைகளோடு பேசி, கழுத்தை வருடிக் கொடுத்து. நெற்றியைத் தடவி முதுகில் அடித்து லேசாக அணைத்துக் கொண்டு முழங்காலால் வயிற்றில் அடித்து பல்வேறு விதமான தடவல்கள் மூலம் அவைகளை குதூகலிக்கச் செய்தான். பசுக்கள் ஆனந்த கிளர்ச்சியோடு மா... மா... என்று பல்வேறு விதமாக குரலை எழுப்பின.

பசுக்களின் சத்தம் அரசனை திசை திருப்பியது. மேல் மாடியிலிருந்து பசுக் கொட்டிலை நோக்க, அங்கே ஒருவன் தலையில் துண்டு கட்டி, கழுத்தில் கயிறு போட்டு பசுக்களோடு பேசுவதும், விதம் விதமாக சப்தம் எழுப்புவதும், அவைகளை தடவுவதும், அடிப்பதுவுமாக இருந்தான். அந்த பளீர் என்ற சப்தம் எழுப்பும்படி பசுக்களுக்கு உற்சாகமூட்டியது. கன்று குட்டிகள் ஓடிவந்து அவனை முட்டின. அவன் மிக கவனமாக நகர்ந்து கொண்டான் அல்லது கைகளால் தடுத்து நிறுத்தி விலக்கினான். இல்லையெனில் அந்த முட்டலுக்கு தரையில் விழுந்திருக்க வேண்டும். கொஞ்சம் எகிறிய கன்றை சட்டென்று கழுத்து கயிறை எடுத்து அதன் மீது வீசி இறுக்கிக் கொண்டு போய் வேறு கொட்டிலில் வைத்தான். கன்றுக்குட்டி கொட்டிலில் அடைபட்டு எகிறிக் கொண்டிருந்தது. 'சும்மா கிட' என்பது போல மொழியற்ற மொழியில் அவன் பசுக்களோடு பேசினான்.

(தொடரும்)



பணிப்பெண்ணாய்ப் பரிதவித்த பேரரசி!

பாலகுமாரன்

மகாபாரதம்

78

“யாரப்பா அது? நம்முடைய பசுக்கொட்டிலில் அந்நியன் நுழைந்திருக்கிறான். என்ன செய்கிறீர்கள்?”

பசுக்களின் அதிகார ஆட்கள் ஓடி வந்தார்கள். “பசுக்களைப் பார்வையிட வேண்டுமென்று வந்தார். யுதிஷ்டிரரிடம் பசுவின் பாதுகாவலராக இருந்தாராம். எண்பது லட்சம் பசுக்கள் இருக்குமாம். அத்தனையும் இவர் மேற்பார்வையில்தான் இருக்குமாம். நம்மிடம் எவ்வளவு பசுக்கள் இருக்கின்றன என்று கேட்டார். ஒரு லட்சம் என்று சொன்னேன். அவ்வளவுதானா என்பது போல பார்க்கிறார். எண்பது லட்சம் பசுக்கள் என்பதில் மயங்கி அவரை உள்ளே அனுமதித்தோம். பசுக்கள் அவரை கொஞ்சுகின்றன. ஆச்சரியமாக இருக்கிறது...”

“இங்கே அழைத்து வாருங்கள்.”

சகாதேவன் வந்து வணங்கினான். “மன்னா வணக்கம். நான் வைசியன். அரிஷ்டநேமி என்பது என் பெயர். பசுக்களை பாதுகாப்பதில் வல்லவன். யுதிஷ்டிரருடைய பசுக்களை நான்தான் கவனித்து வந்தேன். அந்த பசுக்களையெல்லாம் யார் யாரோ எடுத்துக் கொண்டு விட்டார்கள். உங்களைப் பற்றி கேள்விப்பட்டு பசுக்களை பாதுகாக்கும் ஆவலினாலும் வேறு எந்த வேலையும் தெரியாததாலும் உங்களை நோக்கி வந்திருக்கிறேன். எனக்கு இங்கு வேலை கொடுத்தால் சந்தோஷமாக இருக்கும். பசுக்கள் அற்புதமாக இருக்கின்றன. செந்நிற பசுக்கள் கூடுதலாக இருக்கின்றன. பல வண்ணங்களுடைய பசுக்கள் குறைவாக இருக்கின்றன. பல வண்ணங்களுடைய பசுக்களை அதிகரிக்கச் செய்வது ஒரு நல்ல விஷயம். அதை என்னால் செய்ய முடியும். பசுக்களைப் போலவே மூத்திரத்தை முகர்ந்து பார்த்தவுடனேயே மலடியும் கர்ப்பம் அடையும் அளவுக்கு வேகமுள்ள காளைகளையும் நான் வளர்ப்பேன். என் சொல்லுக்கு அவை கட்டுப்படும். இனப்பெருக்கம் செய்ய வைப்பதில் நான் வல்லவன். என்ன செய்தால் அவை கூடலுக்கு தயாராகும் என்பதை நான் நன்கு அறிவேன். எனக்கு இங்கு வேலை கொடுங்கள்” என்று பணிவாகக் கேட்டான்.

உன் முகம் க்ஷத்திரியனுடைய முகம் போல் இருக்கிறது. உன்னை வைசியன் என்று சொன்னால் நம்பமுடியவில்லை. ஆனால் மேலிருந்து பசுக்களை நீ தடவுவதும், கொஞ்சுவதும் பார்க்கையில் நீ பல வருடங்கள் பசுக்களோடு பழகியவன் என்பது தெரிகிறது. என்னிடம் பசுக்கள் குறைவாகத்தான் இருக்கின்றன. அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் ஆட்களை தேடிக்கொண்டிருக்கிறேன். நீ வந்தது சந்தோஷம். வா, வேலையில் சேர்ந்து கொள்.” என்று சொல்ல அரிஷ்டநேமி என்ற சகாதேவன் அந்த விராட மன்னனுடைய பணியாளனாக சேர்ந்து கொண்டான்.

அரிஷ்டநேமியின் வருகையைக் கண்டு பசுக்கள் குரல் எழுப்பின. மேல் மாடியிலிருந்து அரிஷ்டநேமி அவற்றை நோக்கி விரைவதும், பசுக்கள் சிலிர்ப்பதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. எதனாலேயோ மிகப் பெரிய திருப்தி விராட

மன்னனுக்கு ஏற்பட்டது.

பஞ்ச பாண்டவர்களும், திரௌபதியும் ஒரு வருடம் தலைமறைவு வாழ்வு வாழ்வதற்காக விராட தேசத்து மன்னனுடைய அரண்மனையில் சேர்ந்து கொண்டார்கள். அங்கு அவரவர் மேற்கொண்ட தொழிலை செய்து சுகமாக இருந்தார்கள். ஆனால் விதி அவர்களுடைய அமைதியை குலைக்கத் தயாராக இருந்தது.

திரௌபதியை மற்ற தாதிகள் பெருமையாகப் பார்த்தார்கள். அவளுக்கு தொண்டு புரிய ஆசைப்பட்டார்கள்.

"நீ ஏன் பெருக்குகிறாய். இது நீ செய்யக்கூடிய வேலை அல்ல" என்று பிடுங்கினார்கள். அவளுடைய படுக்கையைத் தட்டி, விரித்துப் போட்டு அமைதியாக தூங்கு என்று வற்புறுத்தினார்கள். வாயேன் சாப்பிடலாம் என்று அழைத்து அவளுக்கு வெஞ்சினங்கள் பரிமாறினார்கள். அவளை அதிகம் நெருங்காமலும், விலகியில்லாமலும், 'உன்னைப் பார்க்கும்போதே ஒரு பரவசம், சந்தோஷம் ஏற்படுகிறது. உன்னோடு இருப்பதற்கே சந்தோஷமாக இருக்கிறது. சத்தியத்தைச் சொல். நீ சைந்தரியா, அரசிக்குண்டான பணிமகளா, தாதியா? இருக்கவே முடியாது. நீ படிகளில் இறங்கி வரும்போது ஒரு அரசியின் தோரணை தெரிகிறது. விழுந்து வணங்க வேண்டும் என்று தோன்றுகிறது. இன்று காலையில் ஒரு ஜோதிடன் சொன்னான். உனக்கு மிகச் சிறந்த மனிதர்களின் நட்பு ஏற்படும். கெட்டியாக பிடித்துக் கொள். வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாக இருக்கலாம் என்றான்..... இப்படிக் கொஞ்சுகிறவர்களிடம் உண்மையைச் சொல்லலாம். ஆனால், மாலினி யார் தெரியுமா, மாலினி யார் தெரியுமா என்று தண்டோரா போட்டு விடுவார்கள்.

சைந்தரியான மாலினி என்கிற திரௌபதி மெல்ல சிரித்தாள். அந்தப் பணிப்பெண்ணைத் தடவிக் கொடுத்தாள். இரண்டு கன்னங்களையும் ஏந்தி உச்சி முகர்ந்தாள். எந்தப் பணிப்பெண்ணும், இன்னொரு எந்தப் பணிப்பெண்ணுக்கும் இப்படி ஒரு அன்பு காட்ட மாட்டார்கள். தாய்மைமிக்க ஒரு பெரிய பெண்மணிதான் இவ்விதம் செய்வார்கள். எவளுக்கு ஆசிர்வாதம் பண்ண யோக்கியதை இருக்கிறதோ அவள்தான் இப்படி ஆசிர்வாதம் செய்வாள். எவள் ஆசிர்வாதத்திற்கு பலம் இருக்கிறதோ அவளுக்குத்தான் அன்பை இப்படிச் சொல்ல முடியும். எவள் உள்ளத்தில் தெளிவும், திடமும் இருக்கிறதோ அவள்தான் இப்படி உச்சியில் கை வைப்பாள். அவளை முத்தமிட மனம் மயங்கியது. சுருண்டு அவள்மீது விழுந்து விடவேண்டும் என்று தோன்றியது. ஆனால், மரியாதையின் நிமித்தம் அவர்கள் கை கூப்பி விலகினார்கள்.

எல்லோரும் மாலினி என்கிற திரௌபதி மீது மிகுந்த பிரியத்தோடு இருந்தார்கள். அரசலட்சணங்கள் உள்ளவர்கள் அரசனாக இல்லாது போனாலும் அரசனுடைய போகத்தை அனுபவிப்பார்கள். மாலினி பணிப்பெண்ணாக இருந்தாலும் அரசியினுடைய போகத்தை அனுபவித்தாள். அந்த இடத்தில் சந்தோஷமாக வாழ்ந்தாள். அவள் அழகு அதிகமாயிற்று. நல்ல உணவாலும், நல்ல தூக்கத்தாலும், வெயிலற்ற, குளிரற்ற அரண்மனையினாலும், உடம்பு சோபையுற்றது. நல்ல உடுப்புகள் அவள் அழகை மேம்படுத்திக் காட்டின. ஏற்கெனவே அழகியான அவள், பேரழகியானாள். இளைப்பாறுதல் மேனியின் சோபையை அதிகரித்தது. கண் மையும், திலகமும், சாந்தும், உதட்டுச் சாயமும், வாசனைப் பொடிகளும், தலைக் குளித்து உதறி சிக்கு எடுத்து சீவிய அடர்ந்த கூந்தலும் அவளை கந்தர்வ கன்னியைப்போல் காட்டின. வாயிற் காவலர்களும், அரண்மனை சேககர்களும் தலைகுனிந்து வணக்கம் சொன்னார்கள். மிகுந்த மரியாதை காட்டினார்கள்.

அரசி சுதேஷணையா, மாலினியா என்பது போன்ற ஒரு மயக்கத் தோற்றம் அந்த அரண்மனையில் உருவானது.

சுதேஷணையின் தம்பி கீசகன் என்பான் விராட மன்னனிடம் தளபதியாக இருந்தான். மிகப் பெரிய கர்வி. அதிகம் அலட்டல் உள்ளவன். குரூரமான சுபாவம் கொண்டவன். விராட மன்னனுக்கு வேலை தெரியாது, இங்கு அத்தனையும் நான்தான் என்ற எண்ணத்தில் மிதக்கிறவன். தனக்கு என்ன வேண்டுமானாலும் உதவி செய்ய தன் தமக்கை சுதேஷணை இருக்கிறாள் என்ற திமிரில் இருப்பவன். ஏதேச்சையாக சுதேஷணையின் அந்தப்புரத்திற்கு வந்தவன் திரௌபதியைப் பார்த்து திடுக்கிட்டான்.

பணிப்பெண்ணா, நீர் குடத்தை தூக்கிக் கொண்டு வருகிறாள்! அதற்காகவா இருக்கிறாள் இங்கே! ஒரு பணிப்பெண்ணா இத்தனை அழகு! யாரோ புதிதாய் தலைவாரிப் பின்னுகின்ற சைந்தரி வந்திருக்கிறாள் என்று சொன்னார்கள். இவளா அது. இவ்வளவு பேரழகா. இதென்ன தலைமுடி. இதென்ன முகவாய். இப்படியென்ன ஒரு பொங்கும் மார்பகம். அசையும் இடுப்பு. நீண்ட தொடைகள். இவள் அரசியைப் போல் அல்லவா இருக்கிறாள். பணிப்பெண் என்பது

என்ன முட்டாள்தனம். எங்கேயோ அரசியாக இருக்க வேண்டியவள். இங்கு வந்து பணிப் பெண்ணாக இருப்பதா. இவள் இருந்தால் நன்றாக இருக்குமே. இவளோடு சம்போகம் சந்தோஷம் தருமே. பணிப்பெண் தானே. அழைத்தால் வர வேண்டும் அல்லவா. அல்லது விலைக்கு வாங்கலாம் அல்லவா. என்ன விலை கொடுத்தாலும் வாங்கலாம். உள்ளுக்குள்ளே எண்ணங்கள் புரண்டன.

கீசகன் மாலினியை அருகே அழைத்து உளறத் துவங்கினான். “யார் நீ? இத்தனை அழகியாக இருக்கிறாயே. எங்கிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? திருமணமாயிற்றா? ஆன உடம்பாக தெரிகிறது. ஆனால் இத்தனை யவனம் எப்படி சாத்தியம். திருமணமான பிறகும் கட்டுக் குலையாமல் இருப்பது என்ன வித்தை. நீ படுக்கையில் இருக்க வேண்டிய பெண் அல்லவா. உன்னை யார் நீர் குடத்தோடு அலையச் சொன்னது. என்னிடம் வந்து விடு. ஸ்தானத்தில் வைக்கிறேன்....”

அவன் கண்களை சந்திக்காமல் சைந்தரி பின்னடைந்தாள். தொலைவில் நின்று பேசினாள். “நான் பணிப்பெண். இதற்கு முன்பு கிருஷ்ணருடைய அரண்மனையில் ருக்மிணிக்கு சேவை செய்து வந்தேன். எனக்குத் திருமணமாகி ஐந்து கந்தர்வர்கள் திருமணம் செய்திருக்கிறார்கள். என்னை அவர்கள் பாதுகாக்கிறார்கள். என் கணவர்களைத் தவிர வேறு எவரையும் நான் மனதாலேயும் நினையேன். என் புருஷர்கள் கோபக்காரர்கள். என்மீது சிறிய தவறை எவர் செய்தாலும் கடுமையாக தண்டிக்கக் கூடியவர்கள். என்னிடம் நீங்கள் இவ்விதம் பேசியது தகாது. அரசி சுதேஷ்ணையின் சகோதரன் என்பதால் நான் இதை பெரிதுபடுத்தவில்லை. தயவு செய்து இவ்விதம் பேச வேண்டாம்.”

“அடி பைத்தியக்காரி” கீசகன் அலட்டத் துவங்கினான்.

“உன்னுடைய அழகு உனக்குத் தெரியவில்லை. உன்னைப் பார்த்த கண்கள் வேறு எவரையும் பார்க்க முடியாது. பெண்களே நேசிக்கின்ற அழகு உனக்கு இருக்கிறதென்றால் ஆண்கள் கிறுகிறுத்து மயக்கமாவதில் ஆச்சரியமில்லை. இந்த வார்த்தை நானா பேசினேன். என்னை மிஞ்சியல்லவா வந்திருக்கிறது. நீ விராட தேசத்து அரண்மனையில் விராட மன்னனின் மனைவிக்கு துணையாக இருக்கிறாய் என்பது ஒரு அபத்தமான விஷயம். இந்த விராட தேசம் அந்த அரசனுக்குச் சொந்தமானதல்ல. எனக்குச் சொந்தமானது. இங்கு முக்கியமாக இதன் தலைமை ஏற்று இங்கு முதல்வனாக இருப்பது நான். அவர் பெயருக்கு இருக்கிறார். அரசனே பெயருக்கு இருக்கிறார் என்றால், அரசிக்கு என்ன மரியாதை. அந்த அரசிக்கு நீ பணிப்பெண் என்றால் உனக்கு என்ன மரியாதை. நீ எங்கு இருக்க வேண்டியவள் தெரியுமா. விராட தேசத்தின் மகாராணியாக இருக்க வேண்டியவள். நீ இருக்கிறாய் என்றால் உடனடியாக நான் விராட தேசத்தின் அரசனாக முடிசூட்டிக் கொள்வேன். அவ்வளவு வேகம்

ஸ்ரீ ஜானகி டூர்ஸ்

எண் பி7, மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், சி.பி.ராமசாமி ரோடு,
ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018,
(காவேரி மருத்துவமனை அருகில்) போன்:24994450/
செல்: 9094279625/26. 9444465924.
Email: sreejanaki.tours@gmail.com

சிறப்பு ஆன்மீக சுற்றுலாக்கள்

20-24th April 2018 (5 நாட்கள்)	கேரளா திவ்யதேச சிறப்புச் சுற்றுலா (மலைநாட்டு 13 திவ்யதேசங்கள்) திருநாவாய் திருவித்வகோடு, திருகாட்கரா, திருமூழிக்களம் திருவல்லவாழ், திருக்கடிதானம், திருசெங்குன்னூர் திருப்புலியூர், திருவாரன்விளா, திருவண்வண்டூர் திருவனந்தபுரம், திருவட்டாறு திருவெண்டரிசாரம் மற்றும் குருவாயூர்	(ரூ.19,900 ஒரு வழி விமானம்/ஒரு வழி ரயில் பயணம்) (இரு வழி ரயில் பயணம் ரூ.14,900/-) உயர்தர தங்கும் ஹோட்டல் உணவு உட்பட
2018 மே 17 முதல் 22 2018 (6 நாட்கள்)	கோடை சிறப்பு சுற்றுலா (விமானம்) சிம்லா - குலுமணாலி - சண்டிகர் - அமிர்தசரஸ்	விமானக் கட்டணம், உயர்தர ஹோட்டல், உணவு, a/c பஸ் உட்பட ரூ. 36,900/- (5 இரவு - 6 பகல்) (சுலப மாத தவணை ரூ. 12,300 X 3 மாதங்கள்)

எமது இதர சுற்றுலாக்கள்

ராமேஸ்வரம் சுற்றுலா, நவகிரக சுற்றுலா, திவ்யதேச சுற்றுலா, கர்நாடக சுற்றுலா, கேரள சுற்றுலா, காஞ்சிபுரம் சிறப்பு சுற்றுலா, திருவண்ணாமலை சுற்றுலா, அஹோபில சுற்றுலா, ஊட்டி கொடைக்கானல் மூணார் கோடை சுற்றுலா மற்றும்
ஒரு நாள் சுற்றுலா விவரங்களுக்கு : வாட்ஸ் அப் 9094279625

எனக்கு இருக்கிறது. உன்னைக் கண்டதும் அப்படி ஒரு ஆசை பொங்குகிறது. ஒரு தளபதியின் மனைவியாக நீ இருக்கக் கூடாது என்று என் மனது தவிக்கிறது.

“அழகியே சொல். என்னை வந்து சேர்ந்து விடு. எனக்குத் துணையாக இரு. உன் கண்கள் கூர்மையாக இருக்கின்றன. நீ புத்திசாலி என்றுத் தெரிகிறது. அரசியல் ஆலோசனை சொல்வதற்குக் கூட உனக்கு வலிவு இருக்கிறது. அடியே, சைந்தரி வா. என்னிடம் வா.”

அவன் எழுந்து நின்றான். அவள் மறுத்தாள். அவன் முன்னடைந்தான். அவள் பின்னடைந்தாள். ஓடிப்போய் சுதேஷ்னையின் அறைக்குள் நின்றாள். பின்னால் துரத்தி வந்து கீசகன் சுதேஷ்ணையைப் பார்த்து அதட்டினான்.

“இவளை வரச் சொன்னால் வரமாட்டேன் என்கிறாள். பணிப்பெண்தானே. சொடுக்கினால் வர வேண்டியவள்தானே. இவள் என்ன இப்படி ஓடி வருவது. நான் துரத்திதான் பிடிக்க வேண்டுமா இவளை. சொல் பணியச் சொல், வந்து என் படுக்கையில் படுக்கச் சொல்” என்று உரக்கக் கத்த, சுதேஷ்னை தம்பியை எதிர்க்க முடியாமல், அதேசமயம் மாலினியை ஆதரிக்க முடியாமலும் தவித்தாள்.

“இல்லை அம்மா. உங்களுக்கு முன்னமே சொல்லியிருக்கிறேன். என் புருஷர்கள் கோபக்காரர்கள். அடித்து விடுவார்கள் என்று. தயவு செய்து இதை செய்ய வேண்டாம் என்று சொல்லுங்கள்.”

“அடியே. கொஞ்சம் அமைதியாக இரு நான் பேசுகிறேன்.” சுதேஷ்னை ஒரு தர்மத்தின்பால் கட்டுப்பட்டு ஆத்திரமாக நிற்கின்ற கீசகனிடம், “இவளை விட்டு விடு. இவள் வேறு ஏதோ சில விஷயங்கள் சொல்கிறாள். இவளைப் பார்த்தால் வெறும் பணிப்பெண்ணாக எனக்குத் தோன்றவில்லை. அவளாக பணிப்பெண்ணாக இருக்கிறேன் என்பதால் இவளை ஏற்றுக் கொண்டேன். இவள் வேறு யாரோ என்றுதான் என் மனம் சொல்கிறது. நீ அவசரப்படாதே. உன் ஆத்திரத்திற்கு இங்கு பெண்களா இல்லை. இவளை விட்டுவிடு.”

“இவளையா, விட்டுவிடுவதா. உன் அரண்மனையில் இருப்பதா. என் அரண்மனைக்கு அல்லவா தூக்கிப் போகப் போகிறேன். வரச் சொல்.”

அங்கிருந்து மிக வேகமாக திரௌபதி தப்பித்தாள். சுதேஷ்னை காப்பாற்ற மாட்டாள் என்றுத் தெரிந்து படிகளில் இறங்கினாள். அவனும் பின் தொடர்ந்தான். பெரிய அரண்மனை தெருக்களில் ஓடி அரசவைக்கு முன்னால் ஏறி, அரசர் எங்கிருக்கிறார் என்று கேட்டு கடைசி அடைக்கலமாக அரசரிடம் போய் நிற்கலாம் என்ற எண்ணத்தில் அங்கு நின்றாள். அரசருக்கு அருகே தன்னுடைய புருஷன் தருமனும் இருப்பான் என்பது அவளுக்குத் தெரியும். அரசர் மட்டுமல்லாது தருமருக்கு இந்தத் தொந்தரவை தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணமும் அவளுக்கு இருந்தது.

அரசனிடம் ஓடிப் போய் வணங்கி நின்றாள். அரசன் என்ன என்றான்.

“உங்கள் மைத்துனன் என்னை வற்புறுத்துகிறார். என்னை துன்புறுத்துகிறார். என்னை இழிவாகப் பேசுகிறார். நான் திருமணமானவள். என் கணவர்களுக்கு கட்டுப்பட்டவள். இவரை ஏறிட்டு பார்க்கவும் முடியாது. இவ்வளவு சொன்ன பிறகும் அவர் விடவில்லை. பல கந்தர்வர்களை நான் அடித்து வீழ்த்திருக்கிறேன் என்று சொல்லி என்னுடைய புருஷர்களையும் இழிவாகப் பேசுகிறார். தயவுசெய்து அவரை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள்.” என்று அரசனிடம் கை கூப்பி வேண்டினாள்.

மிகுந்த பலசாலியான ஐந்து வீரர்களின் மனைவி திரௌபதி. துருபதன் என்கிற மன்னனின் மகள், வலிமை வாய்ந்த சகோதரனை உடையவள், அக்னியிலிருந்து தோன்றியவள், கற்புக்கரசி, கடவுளின் அனுக்கிரகம் பெற்றவள், ஒரு நேரத்தில் ஒரு காலகட்டத்தில் கிரகசாரத்தால் பலமில்லாத மன்னன் முன்பு கை கூப்பியும் தன் பலத்தால் அதிகம் அட்டூழியம் செய்ய முடியும் என்ற ஆணவக்காரனுக்கு பயந்தும் அங்கு இருந்தாள்.

கங்கன் என்கிற தருமரோடு உரையாடிக் கொண்டிருந்த விராட மன்னன் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். கங்கனை ஏறிட்டு நோக்கினான். கங்கன் இதில் தான் சம்பந்தப்பட முடியாது என்பது போல தலைகுனிந்து கொண்டான். ஆனால் மாலினியின் பார்வை அவர் மீதே இருந்தது.

“ஐந்து கணவர்கள் இருந்தும் எனக்கு இப்படிப்பட்ட நிலைமை வந்திருக்கிறது, பார்த்தீர்களா. அவர்கள் வேறு சில விஷயங்களில் சிக்கிக் கொண்டு இருக்கிறார்கள். உடனடியாக இங்கு வர முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனக்கு உதவ முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கோபக்காரர்கள். நான் துன்பப்படுகிறேன் என்றுத் தெரிந்தால் பொங்கி எழுந்து அடித்து துவம்சம் செய்து விடுவார்கள். இதை யார் எடுத்துச் சொல்வது. சொல்ல வேண்டியவர்கள் சொல்லாமல் மௌனமாக இருக்கிறார்களே” என்று தருமரை மெல்லியதாய் இடித்துரைத்தாள்.

இன்னும் சில மாதங்கள் அஞ்ஞாதவாசம் முடியும்படி இருப்பதால் தருமர் அமைதி காத்தார். என்ன செய்வது மன்னர் இருக்கிறார், கவனித்துக் கொள்வார் என்று இருந்தார். ஆனால் விராட மன்னனோ தன் மைத்துனனுக்கு பயந்தான். தன் தேசத்தை தன்னால் காப்பாற்ற முடியாது. தன் மைத்துனன் இல்லாமல் தன் படைகள் சரிவர இயங்காது என்று. பணிப்பெண் தானே. இவள் எதற்காக இவ்வளவு பாசாங்கு பண்ணுகிறாள் என்ற எண்ணத்தில் இருந்தான். இவள்

திருமணமானவள். ஆனால் என்ன, வலிமையுள்ள கீசகன் கூப்பிடுகிறபோது என்ன செய்ய முடியும். யார் கீசகனை தடுக்க முடியும் என்று குழம்பினான்.

“கீசகா விட்டு விடேன்” என்று பெயருக்குச் சொன்னான். கீசகனுக்கு அது கோபத்தைத் தந்தது. ஓடிப்போய் அவள் தலைமுடியைப் பற்றி சுழற்றி தரையில் தள்ளினான். “எத்தனை திமிர் உனக்கு. என்னைப் பற்றியா குறை சொல்கிறாய். நான் அழைத்த பிறகு அரசனிடம் வந்து அபயம் கேட்கிறாயா. ஐந்து புருஷர்களா. இந்தா வாங்கிக் கொள்.” எட்டி உதைத்தான். அவள் வாயில் அடி விழுந்தது.

“இந்த வாய்தானே பேசியது.” மீண்டும் அடித்தான். புறங்கால் அவள் வாயை தாக்கியது. அவள் கடவாயிலிருந்து ரத்தம் வழிந்தது.

மகாபாரதத்தில் மூன்றாம் முறையாக திரௌபதி துன்புறுத்தப்பட்டாள். ஐந்து புருஷர்கள் இருந்தும் அபலையாகி அசிங்கப்பட்டு நின்றாள். அவள் அழகுக்கு குறி வைத்தும், அவளை அவமானப்படுத்த வேண்டும் என்றும் ஆண்கள் துடித்து நின்றார்கள். எதற்கு இது என்று யோசித்துப் பார்த்தால், அந்த கால கட்டத்தின் க்ஷத்திரிய வம்சத்தின் திமிரை இந்த சம்பவம் சொல்கிறது என்பது புரியும்.

மகாரதர்களின் மனைவியான திரௌபதிக்கே இந்த நிலை என்றால், சாதாரண பெண்கள் இந்த க்ஷத்திரியர்களிடம் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார்கள்! உடல் வலிவும், அதிகார பலமும் உள்ளவர்கள் முதலில் குறிவைப்பது அழகிய பெண்களைத்தான். எந்த தேசத்தில் பெண்கள் வற்புறுத்தப்படுகிறார்களோ, வதைக்கப்படுகிறார்களோ அந்த தேசத்தின் சுபிட்சம் கெட்டுப் போகிறது. சுபீட்சம் கெட்டுப் போவது என்பது அரசனுக்கு உடனடியாகத் தெரியாது. இந்த அயோக்கியத் தனத்தை முடிவு கட்ட இயற்கையின் உந்துதலால் பிறந்தவர்தான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர். அந்த அவதாரம் தானாக முன்னிருந்து நடத்தாது, தன் சக்கரத்தை பயன்படுத்தாது. ஒரு க்ஷத்திரிய குழுவிலிருந்தே ஐந்து அற்புதமான க்ஷத்திரியர்களை பொறுக்கி எடுத்து அந்த க்ஷத்திரிய குலத்தை நாசம் செய்ய வைக்கிறார்.

ஒரு இனம் மற்றொரு இனத்தால் அழிவது என்பதைவிட, அந்த இனமே இரண்டுபட்டு அந்த இனத்தை அழிக்கும். மகாபாரதத்தில் க்ஷத்திரியர்களுடைய வலிவை முற்றிலும் அழிக்க க்ஷத்திரியர்களே காரணமாக இருந்தார்கள். பசுக்களை பேணிப் பாதுகாக்கும் யாதவ குலத்தில் பிறந்த ஸ்ரீகிருஷ்ணர் பசுக்களை நேசிப்பது போல, பரத கண்டத்து பெண்களை நேசித்து அவர்களை துன்பத்திலிருந்து விடுவிக்க அங்கு அவதாரம் ஆனான். அந்த விஷயம் இன்னும் பலப்பட க்ஷத்திரியர்களின் வலிவு முற்றிலும் அழிய செய்வதற்காகவே இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடந்தன.

கீசகன் க்ஷத்திரியர்களின் ஒரு எடுத்துக்காட்டு. அவன் மரணமும் ஒரு எடுத்துக்காட்டாகவே இருந்தது.

(தொடரும்)

SRINIVASA TOUR OPERATORS
Chennai : Ayanavaram Opp. ESI Hopital, Cell : 97100 25326,
B/o. : Kalyan Nagar, West Tambaram, 98413 93686, 2645 2644

6 நாள் சாயி பாபா யாத்திரை ரூ. 6,800
11.2.18, 4.3.18, ஏப்ரல் – 1, 22, 29, மே – 6, 20, 27
மந்திராலயம், ஷீரடி, பண்டரிபுரம், சனி சிங்கனாப்பூர், குஸ்நேஸ்வர் ஜோதிர்லிங்கம், மினி தாஜ்மஹால், எல்லோரா

7 நாள் கேரளா இன்ப சுற்றுலா ரூ. 9,300
12.2.18, 26.3.18, ஏப்ரல் – 9, 23, 30, மே – 7, 14, 21,
மூணாறு, ஆலப்புழா (Boat House) – கொச்சி – எர்ணாகுளம்

5 நாள் வயநாடு கேரளா சுற்றுலா - 5.2.18 ரூ. 5,800

13 நாள் ராஜஸ்தான் - 20.2.18, 13.3.18 ரூ. 14,800
ஜெய்பூர், உதய்பூர், அஜ்மீர், புஷ்கர், மவுண்ட்அபு, ஜெய் சல்மார்

14 நாள் நவ (9) ஜோதிர்லிங்கம் - 11.2.18 ரூ. 15,800
சோம்நாத், கடல் கோவில், பீமா சங்கர், ஓம்காரேஸ்வரர், ராமேஸ்வரம்

8 நாள் கோவா-மும்பை - Yesvantpur ரூ. 9,800
7.4.18, 28.4.18, 5.5.18, 12.5.18, 19.5.18, 26.5.18

16 நாள் காசி - 2.3.18, 11.5.18 ரூ. 15,800
புவனேஸ்வர், பூரி, அவுரா, காசி, கயா, புத்தகயா, திருவேணி சங்கமம், ஹரித்துவார், அமிர்தசரஸ், வாகாபார்டர், பிருந்தாவனம், ஆக்ரா, டெல்லி

11 நாள் காசி - 20.2.18, 1.5.18, 28.5.18 ரூ. 9,900
அவுரா, காசி, கயா, திருவேணி சங்கமம், மதுரா, ஆக்ரா, டெல்லி

12 நாள் மத்திய பிரதேஷ் - 20.2.18 ரூ. 13,800
உஜ்ஜயின், ஜான்சி, ஓர்ச்சா, கஜுராஹோ, ஜபல்பூர், கன்கா, நாக்பூர்

14 நாள் பஞ்ச துவாரகா - 3.6.18 ரூ. 15,800

10 நாள் கர்நாடகா - 19.4.18 ரூ. 10,800

13 நாள் சிம்லா குலுமனாலி : A/C Bus, A/C Room ரூ. 14,800
29.4.18, 8.5.18, 23.5.18 – டெல்லி, அமிர்தசரஸ், குருஷேத்ரா

11 நாள் கேங்டாக், டார்ஜிலிங் ரூ. 12,800
18.4.18, 2.5.15, 16.5.18 – கல்கத்தா, சிக்கிம்

3 நாள் இராமேஸ்வரம் - 22.2.18, 12.4.18 ரூ. 1,800

15 நாள் நேபாள் : 17.3.18 ரூ. 16,800
காசி, அலகாபாத், அயோத்தி, முக்திநாத், பசுபதிநாத்

10 நாள் இலங்கை - 5.2.18, மே ரூ. 48,000
முனீஸ்வரம், திருகேடீஸ்வரம், யாழ்பாணம், முல்லைத் தீவு, மட்டக்களப்பு, தம்பூலா, கண்டி, நுவரெலியா, கதிர்காமம், கொழும்பு

9 நாள் அந்தமான் - கப்பல் - 20.3.18, 20.5.18 ரூ. 28,000

13 நாள் காஷ்மீர் சுற்றுலா ரூ. 14,800
29.4.18, 8.5.18, 23.5.18 – டெல்லி, ஸ்ரீநகர், வைஷ்ணவி தேவி

9 நாள் காஷ்மீர் விமானம் ரூ. 26,300
1.5.18 – அமிர்தசரஸ், டெல்லி, ஸ்ரீநகர், வைஷ்ணவி தேவி

16 நாள் பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி ரூ. 16,800
8.5.18, 23.5.18, 4.6.18 - யமுனோத்ரி, ஹரித்துவார்

விமானம், ரயில், பஸ் கட்டணம், தங்கும் வசதி, உணவு
10 நபருக்கு ஒருவர் இலவசமாக வரலாம்.



காமப் பேய்க்கு கந்தர்வனின் மரண அடி!

முகம் துடைத்து, மருந்து போட்டு, கை, கால் பிடித்துவிட்டு, மயிற்பீலியால் விசிறி ஆறுதலாகப் பேசி, பாடி ஒரு சிறுமியைப் போல மாலினி என்கிற திரௌபதியை தூங்க வைத்தார்கள். உடம்பு பதட்டத்தினால் களைப்படைந்திருந்த திரௌபதி அயர்ந்து தூங்கினாள். அங்கே சபை மேற்கொண்டு என்ன செய்வது என்றுத் தெரியாமல் துக்கித்து கலைந்தது. இது நல்லதற்கல்ல என்பதாய் அமைச்சர்கள் பேசிக்கொண்டு கலைந்தார்கள்.

தன்னால் கீசகனை அடக்க முடியவில்லை என்பது விராட மன்னனுக்கு அவமானமாக இருந்தது. அமைச்சர்கள் தன்னை ஏளனமாக பார்க்கிறார்கள் என்பதாய் தோன்றியது.

கொஞ்சம் அதிகமாக அலட்டிக் கொண்டுவிட்டோமோ என்று கீசகன் நினைத்தான். நைச்சியமாக பேச வேண்டிய பெண்ணிடம், விராட மன்னன் முன்பு அலட்டலாக நடந்து கொண்டுவிட்டோமோ என்று நினைத்தான். ஆனாலும், மாலினியை நினைக்க அந்த உருவம் அவன் மனதை மயக்கியது. உடையின்றி சம்போகம் செய்கின்ற ஆத்திரம் அதிகமாகியது. அவன் மறுபடியும் எழுந்து சுதேஷ்ணையின் அந்தப்புரத்திற்கு போனான். அவன் வருவதைப் பார்த்து அந்தப்புரத்தின் அறையிலிருந்து வேறு இடத்திற்கு மாலினியை அசையாது தூக்கிக் கொண்டுபோய் பணிமகளிர் மாற்றினார்கள். வந்தவன் மாலினியைத் தேடுவான் என்று பயந்தார்கள். தெரியாது என்று சொல்லவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். ஆனால், வந்தவன் சுதேஷ்ணையைத் தேடினான்.

“என்ன பணிப்பெண் வைத்திருக்கிறாய்? ஏறிட்டுப் பார்த்தால் சரி என்று சொல்ல வேண்டியவள் இத்தனை விரட்டியும் மறுக்கிறாளே. எனக்கு எப்படியும் அவள் வேண்டும். என்னால் என் காம வேகத்தை தாங்க முடியவில்லை. உன் புருஷனுக்கு காவலாக இருந்து என்ன புண்ணியம். எனக்கு என்ன உதவி செய்திருக்கிறீர்கள். ஒரு பெண்ணை எனக்கு அனுப்ப முடியாதா. அதுவும் பணிப்பெண்ணைத்தானே கேட்கிறேன். உன் பெண்ணையா கேட்கிறேன்” என்றெல்லாம் கூவத் துவங்கினான்.

சுதேஷ்ணை அவனை அதட்டி அடக்கினாள். “நீ வீட்டிற்குப் போ. நாளைக்கு ஏதாவது பண்டிகை, அல்லது பூஜை என்றுச் சொல்லி மதுவையும், மற்ற பட்சணங்களையும் தயார் செய். என் தம்பி வீட்டில் பூஜை. மது கொடுப்பான் போய் வாங்கி வா என்று பாத்திரம் கொடுத்து அனுப்புகிறேன். அப்பொழுது அவளை பயன்படுத்திக் கொள். மற்றபடிக்கு இந்த இடத்தில் வந்து ரகளை செய்யாதே” என்று கட்டளையிட்டாள்.



பாலகுமாரன்

மகாபாரதம்

79

தன்னுடைய அந்தப்புரத்தில் அலறலும், அழுகையும் வரக்கூடாது என்பது மட்டுமல்லாமல் ஒருவேளை அவளுடைய புருஷர்கள், கந்தர்வர்கள் வந்தால் என்னையும் சேர்த்தல்லவா அறைவார்கள் என்று பயந்தாள். கந்தர்வர்களின் மனைவி மாலினி என்பதை நம்பினாள்.

அவன் ஒப்புக் கொண்டான். "நாளை மாலை அவளை என்னிடம் அனுப்பு. நல்ல மதுவகையை தயார் செய்து வைக்கிறேன்" என்று சொல்லி, விலகிப் போனான்.

நடுநிசியில் உறக்கம் கலைந்து திரௌபதி எழுந்திருந்தாள். பீமனை நோக்கிப் போனாள். சமையல் அறையில் பீமன் படுக்கையில் கால் நீட்டிப் படுத்திருந்தான். தொலைவிலிருந்து திரௌபதி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். எப்பேர்பட்ட உருவம். எவ்வளவு தைரியம். எத்தனை அருமையான மல்யுத்த வித்தை. கீசகன் ஒரு பிடிக்கு காண்பானா.

இவன் இருக்க, நான் ஒருவனால் எட்டி உதைபட்டு வாயில் அடிபட்டேனே. இது என் தலையெழுத்தா, அல்லது இவனுக்குண்டான அகௌரவமா என்று வருந்தினாள். அகலமும், உயரமுமான தன் புருஷனையே திரௌபதி காதலுடன் நோக்கினாள். மெல்ல அருகே வந்தாள். அருகே உட்கார்ந்து கொண்டாள். பீமன் தூங்கத் துவங்கியிருந்தான். மெல்ல அவனைத் தழுவிக் கொண்டாள். கன்னத்தில் முத்தமிட்டாள். "என் புருஷனே எழுந்திரு," என்று கொஞ்சினாள்.

உறக்கத்தை உதறிவிட்டு பீமன் எழுந்தான். அவளை கண்ணோடு கண் பார்த்தான். வாய் தடவினான். எந்த இடத்தில் உதடு காயப்பட்டு தொந்தரவாக இருந்ததோ. அந்த இடத்தை வருடிக் கொடுத்தான். துக்கம் தாங்காமல் மெல்ல இறுக்கி அணைத்துக் கொண்டான். நெற்றியிலும், கன்னங்களிலும் முத்தமிட்டான். முதுகு தடவினான். அவள் புருஷனின் அணைப்புத் தாங்காமல் விசும்பத் துவங்கினாள்.

பீமனுக்கும் கண்கள் கலங்கின. வேதனைப் பட்ட புருஷனும் மனைவியும் ஒருவரை ஒருவர் இறுகப் பற்றியிருந்தார்கள். ஏன் காலம் இப்படி சித்ரவதை செய்கிறது. அடித்து கொல்ல முடியாதபடி ஏன் தர்மம் கையைப் பூட்டியிருக்கிறது. இப்பொழுது வீறுகொண்டு எழுந்தால் மறுபடியும் பன்னிரண்டு வருடம் வனவாசம். பிறகு ஒரு வருடம் அஞ்ஞாத வாசம். பிறகு ராஜய்பரிபாலனம் இல்லாது போனாலும் போகும். இந்த நேரம் தான் யார் என்று காட்டக் கூடாது. அமைதியாகத்தான் இருக்கவேண்டும். நான் யார் தெரியுமா, இவள் யார் மனைவி தெரியுமா, யார் மீது கை வைத்தாய் தெரியுமா என்று சொல்லிச் சொல்லி அடிக்க முடியாது. வேறு நேரமாக இருந்தால் சுவரோடு தேய்த்துச் சித்ரவதை செய்திருக்கலாம். இப்போது முடியாது. கூடாது. தருமர் கட்டை விரலால் அழுத்தி அமைதி என்று சொல்கிறார். இத்தனையும் நேரே பார்த்துக் கொண்டு எப்படித்தான் அந்த மனிதரால் அமைதியாக இருக்க முடியுமோ. அவருக்கு பத்தடி தொலைவில் தான் திரௌபதி படுத்துக் கிடந்தாள். அவள் முகத்தில்தான் அவன் புறங்காலால் அடித்தான். உலகத்தில் ஒரு புருஷனுக்கு இதைவிட கொடுமையான ஒருநேரம் இருக்க முடியுமோ. இருந்ததே. தருமர் அதை தாங்கினாரே. அவன் முகத்தை பொத்திக் கொண்டான். கண்களை துடைத்துக் கொண்டான். திரௌபதியை வாரி மடியில் போட்டுக் கொண்டு நெஞ்சோடு நெஞ்சாக சேர்த்து அவள் தலையை கோதி விட்டான்.

"என்ன தலையெழுத்து இது பீமா, நாம் ஏன் என்ன காரணத்தினால் இப்படி சித்ரவதைப் படுகிறோம். எனக்காக நீ தவிக்கிறாய் என்பதை நான் ஒரு பார்வையில் கண்டுகொண்டேன். அத்தனையும் மீறி அவர் அடக்கமாக இருக்கிறார் என்பதை அவர் பார்வையில் கண்டுகொண்டேன். ஆனால் ,பீமா இப்படித்தான் நாம் காலாகாலம் இருக்க வேண்டுமா. நாம் யார் என்று காட்டவே கூடாதா. மறுபடியும் பன்னிரண்டு வருடம் வனவாசம் வந்துவிடுமோ என்ற பயத்தால்தான் என்னை புறக்கணித்தீர்களா.ஒருவேளை அதே இடத்தில் கீசகன் என்மீது பாய்ந்து என்னை இம்சிக்கத் தொடங்கியிருந்தாலும் நீங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பீர்களா, விசிறச் சொன்னாலும் விசிறுவீர்களா. அடுத்த பன்னிரண்டு வருடம் வனவாசம் வேண்டாம் என்பதால் நான் செத்துத் தொலைய வேண்டுமா. என்ன பீமா, என்ன நடக்கிறது நம்மைச் சுற்றி. நாம் ஏன் இப்படி இருக்கிறோம். நம் வடிவுகள் எங்கே. நம் யுத்த மூர்க்கம் எங்கே.

உன்னுடைய ஒரு அடிக்கு தாங்குவானா கீசகன். உயிருக்கு உயிராய் என்னை நேசித்த ஐந்து புருஷர்கள் இருக்கும்போது இன்னொருவன் தலைமுடியைப் பற்றி இழுக்கும்படியாக நான் இருக்கிறேன். ஒரு அரசவையில் அவஸ்தைப்பட்டது போதாதா. ஜெயத்ரதனின் நண்பர்களால் சுற்றி வளைத்து இழுத்து வந்தது போதாதா. ஒருவன் தேரில் ஏறிக்கொண்டு அவனுடைய காம வார்த்தைகளை கேட்டுக் கொண்டு வந்த கேவலம் போதாதா. அந்த ஜெயப்ரதனை அடித்தீர்கள். அவமானப்படுத்தினீர்கள். ஆனால், கீசகனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

"இது மட்டுமல்ல பீமா. எனக்கு என்ன கொடுமைகளெல்லாம் நேருகிறது என்பது உனக்குத் தெரியாது. மல்யுத்த போட்டிற்கு அனுப்புகிறான். வெளிதேசத்து மல்யுத்த வீரர்களுடன் நீ சண்டையிடலாம், ஆனால், நான் பார்க்கக்கூடாது. தலைகுனிந்து உட்கார்ந்திருந்தேன். அடுத்ததாக விலங்குகளை ஏவுகிறார்கள். ஒரு சிங்கம் உன் மீது பாய்ந்தது. நான் ஐயோ என்று எழுந்திருந்தேன். அருகிலுள்ள சுதேஷ்ணை கேலி செய்கிறாள். சிங்கம் செத்துவிட்டது. இனி யானை வரப்போகிறது. பீமன் என்ன செய்யப் போகிறான் யானையால் சாகப் போகிறான். அல்லது முடமாகப் போகிறான் என்று சுதேஷ்ணை வாய்விட்டுச் சொல்ல, இல்லை அவரால் யானையை கொல்ல முடியும் என்று நான் சொல்ல, எல்லோரும் என்னை வியப்போடு பார்க்கிறார்கள். சுதேஷ்ணை இவள் ஏதோ ஒரு தவறான பெண்மணி என்று என்னைச் சொல்கிறாள்.

மற்றவர்கள் அப்படியா, என்பதாகப் பார்க்கிறார்கள். இதைவிட அவமானம் ஒரு பெண்ணுக்கு உண்டா. நான் யார் என்று என்னை வெளிப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையில் இருபத்திநாலு மணிநேரமும் கழிக்கிறேன். ஒரு அவஸ்தையில் இருக்கிறேன். வாழ்நாள் முழுவதும் உங்கள் முகத்தை பார்த்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது சுதேஷனை என்ற இரண்டுங்கெட்டான் பெண்மணியை பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவள் ஏவலுக்கு காத்துக் கொண்டிருக்கிறேன். அவள் அடுத்தது என்ன சொல்வாளோ என்று பயந்து பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

“இன்று மாலை கீசகன் மறுபடியும் அரண்மனைக்கு வந்திருந்தான். இவள் அவனிடம் அனுப்புவாளோ என்று பயந்திருந்தேன். நல்ல வேளை பணிமகளிர்கள் என்னை வேறு இடத்திற்கு கொண்டு போய் விட்டார்கள். அவள் வேறு ஏதோ சமாதானம் சொல்லி அவனை அனுப்பி விட்டாள். எனக்கு செத்துப் போகலாம் போல் இருக்கிறது. ஆனால், அதுவும் தவறு. ஏதேனும் ஒரு காலகட்டத்தில் நமக்கு விடிவு வராதா பீமா. இல்லை இனி இப்படித்தான் இருப்போமா” என்று சொல்ல, பீமன் அவளை இழுத்து எதிரே உட்கார வைத்தான்.

“பிரியமானவளே, நான் சொல்வதைக் கேள். பெரியவரும், மிகுந்த அறிவாளியும், நமக்கு நன்மை செய்யக்கூடியவருமான தருமர் என்னை அடக்கி வைத்திருக்கிறார். அந்தநேரத்தில் அவர் மீது கோபம் வந்தாலும் இங்குவந்து உட்கார்ந்த பிறகு அவர் செய்தது எவ்வளவு சரி என்று புரிகிறது. அத்தனை பெரிய வேதனையை அவர் கண்முன்னே பார்த்துக் கொண்டு அமைதியாக இருப்பது அவருடைய திட சித்தத்தை, விரத மேன்மையை காண்பிக்கிறது. பொறுமை என்பது மிகக் கடுமையான விரதம். அந்த விரதத்தை தருமர் மிக அற்புதமாக கையாண்டிருக்கிறார். நம்மையும் இருக்கச் செய்திருக்கிறார். பொறுமையாக இரு. நிச்சயம் விடிவு கிடைக்கும்.

“அவனை நாளை நடனச் சாலைக்கு வரச் சொல். சுதேஷணையின் இடத்திற்கும் வேண்டாம். கீசகனுடைய அரண்மனைக்கும் வேண்டாம். வேறு எவரும் பார்க்காத நடனச் சாலைக்கு வரச் சொல். அது நல்லது என்று சொல். மற்றவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன். அங்கு உனக்காக போய் நான் உட்கார்ந்து இருக்கிறேன். அவனை துவம்சம் செய்துவிட்டு வருகிறேன்” என்று பல்கடித்துக் கொண்டு கூறினான்.

கணவனின் கண்களில் தோன்றிய ரௌத்ரத்தையும், உடம்பு முறுக்கையும், பல் கடிப்பையும், ஆக்ரோஷத்தையும் பார்த்து அவள் அவன் கன்னங்களில் முத்தமிட்டாள். விழுந்து வணங்கினாள். “என் தெய்வமே, நீ இருக்கும் போது எனக்கென்ன பயம்” என்று சொல்லி அவனை வலம் வந்து வெளியேறினாள்.



உடம்பெல்லாம் கழுவி விட்டது. மனம் சுத்தமாயிற்று. விடியும் வேளையை ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தாள். பழிக்கு பழி, அடிக்கு அடி, உதைக்கு உதை, ரத்தத்திற்கு ரத்தம் என்ற சினம், சுருண்ட பாம்பாய் உள்ளே இருந்தது. பாம்பு சினத்தினுடைய குறியீடு. அந்த சினம் உள்ளுக்குள் சுருண்டு இருப்பது என்பது மனிதனின் முயற்சி. அவனின் வெற்றி.

மனைவி சமாதானமானாள் என்பதை உணர்ந்த பீமன் சந்தோஷமானான். சொல்லுக்கே அமைதியாகி நம்பிக்கையுடன் மனைவி திரும்பி விட்டாள். கீசகனை வதைக்கின்ற விதத்தில் வதைத்தால் இன்னும் மகிழ்ச்சியாவாள். அவள் முதுகு தடவியதும், அணைத்துக் கொண்டதும், கன்னத்தோடு கன்னம் வைத்ததும், முத்தமிட்டதும் எத்தனை அழகு. எவ்வளவு அற்புதம். அவள் உதடு காயம் நினைக்கும் போது கோபம் பொங்கியது.

ஊரான் மனைவியை உல்லாசத்திற்கு அழைப்பது உனக்கு பொழுதுபோக்கா, விருப்பமான ஒன்றா. வாழ்ந்தால்தானே இந்த விருப்பம். இருந்தால்தானே இந்த செய்கை. உன்னை இல்லாது செய்கிறேன் என்று உள்ளுக்குள் கருவிக் கொண்டான். உடனே கோபப்படாது அமைதியாய், இன்றல்ல நாளை இரவு நடுநிசியில் என்று அந்த விஷயத்தை ஒத்திப் போட்டது அவன் கோபத்தை ஒரு அழகான வடிவமாக்கியது. எப்படி வதைக்க வேண்டும் என்ற திட்டம் உள்ளுக்குள் வந்தது. கீசகன் பலசாலியாம். மல்யுத்த வீரனாம். வேலை தெரிந்தவனாம். என் ஒரு அடிக்கு காணுவானா. பீமன் கீசகனை மனதால் பலமுறை தாக்கினான். கீசகன் நிலைகுலைந்து விழுந்தது அவன் மனதில் தோன்றியது. தேவையற்று சிரித்தான். கண் சிமிட்டினான். ஓங்கி சுவரில் குத்தினான். உடம்பு பலத்தைவிட மனதின் ஆவேசம்தான் எதிரியை வீழ்த்த வல்லது என்பது உலகத்தார் அறிந்த பாடம்.

“அடியே, மாலினி நீ இங்கிருந்து கிளம்பி கீசகனுடைய அரண்மனைக்குப் போய் இன்றைய பூஜையில் நிவேதனம் செய்யப்பட்ட மதுவை வாங்கி வா,” துர்புத்தி கொண்ட சுதேஷனை மாலினி யார் என்று தெரியாமல் கட்டளையிட்டாள். தம்பியினுடைய ஆவேசம் தான் அவள் மனதில் இருந்தது. அவனுக்கு பயந்தாள். இவள் பணிப் பெண்தானே என்ற அலட்சியமும் இருந்தது. அவள் வேறு யாரோ என்ற நினைப்பு இருந்தாலும் தம்பி விரும்பிய பிறகு யாராக இருந்தாலும் அவனுக்கு அவளை அனுப்ப வேண்டும் என்ற அசட்டுத்தனம் இருந்தது. தெளிவாக முழுமையாக சிந்திப்பது என்பது எல்லோராலும் இயலாது. தெளிவு வரும்போதே குழப்பமும் வந்துவிடும். பாதி பாதியாக தெளிவு வருவது எந்த செயலுக்கும் பயன்படாது. ஒரு அறைகுறை தெளிவோடு, இவள் பெரிய இடத்து பெண் என்ற புரிதலோடு சுதேஷனை இருந்தாலும் என்ன செய்கிறோம் என்ற தெளிவில்லாது அவள் மாலினியை கீசகனிடம் அனுப்பினாள்.

“அம்மா, உங்களுக்கு அவர் யார் என்று தெரியும். அவர் என்ன விரும்புகிறார் என்று தெரியும். என்னைப் பற்றியும் நீங்கள் உயர்வாகத்தான் பேசியிருக்கிறீர்கள். நான் பேசியதை நீங்கள் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறீர்கள். எனக்கு ஐந்து கணவர்கள் உண்டு. அவர்கள் கந்தர்வர்கள். கோபம் மிக்கவர்கள். அவர்கள் பாதுகாப்பில் நான் இருக்கிறேன். என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்று சொன்னதை நீங்கள் நம்பினீர்கள். அவ்விதமே என்னை நடத்தினீர்கள். நான் கேட்ட இரண்டு கட்டளைகளையும் செவ்வனே நிறைவேற்றினீர்கள். பிறர் உண்ட உணவை என்னை உண்ணச் சொன்னதில்லை. எவர் காலையும் கழுவச் சொன்னதில்லை. என்னை கம்பீரமான ஒரு பணிப் பெண்ணாகத்தான் நீங்கள் நடத்தினீர்கள். ஆனால், இன்றைக்கு மோக முற்றி தவிக்கின்ற உங்கள் தம்பியிடம் என்னை அனுப்புகிறீர்களே. அது நல்லதா. அது எனக்கு கெடுதல் தராதா. எனக்கு கெடுதல் ஏற்படுவது உங்களுக்கு கெடுதல் ஏற்படுவது போல என்பது உங்களுக்குத் தெரியாதா?” மாலினி பவ்யமாகவே கேட்டாள்.

“இதென்ன அதிகப்பிரசங்கித்னமான பேச்சு. நீ பணிப்பெண்தானே. போய் வாங்கி வா என்றால் வாங்கி வரவேண்டும். அவ்வளவுதானே. இதற்கு மேல் என்ன உன்னைப் பற்றி அவ்வளவு உயர்வாகச் சொல்கிறாய். அப்பொழுது இங்கென்ன வேலை. நீ போகலாமே. உன்னை அரசி, மிகப் பெரிய பட்டமகிஷி என்று நினைத்தால் அந்த மாதிரி இடத்திற்குப் போ. இந்த இடத்தை விட்டு கீழே இறங்கி வெளியே போனால் உனக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. கீசகன் உன்னை வாரிக் கொண்டு போவான். தடுப்பாரில்லை. கேட்பாரில்லை. நான் ஒருத்திதான் உனக்கு பாதுகாப்பு. எனவே, என் சொல்படி கேள். போய் மதுவை வாங்கி வா. அது போதும்.”

“அங்கு போக நான் பிரியப்படவில்லை.”

“உன் பிரியம் பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லை.”

“அவர் என்னைத் தொந்தரவு செய்வார். அது உங்களுக்கு கெடுதலாக முடியும்.”

“இந்தக் கதையெல்லாம் வேறு எங்காவது போய் சொல். கீசகனைப் போய் கொண்டாடு என்றா சொன்னேன்? மது வாங்கி வா என்றுதான் சொன்னேன். மற்றபடி உன் தலையெழுத்துப்படி நடக்கட்டும். போ உடனே” என்று அதட்டினாள்.

உள்ளிருந்து கோபம் பொங்கியது. தன் பணிப்பெண்ணான சாதாரண முகத்திலிருந்து மாறுபட்டு கால் உதைத்து இடுப்பில் கை வைத்து விரல் நீட்டி ஜாக்கிரதை என்று சொல்ல, அவள் வேகமானாள். தருமரை நினைத்துக் கொண்டாள். மிகுந்த பலசாலியான பீமன் அமைதியாக இரு. பொறுமையாக இரு. தருமர் எனக்குச் சொன்னதை நான் உனக்குச் சொல்கிறேன் என்றது ஞாபகம் வந்தது. அமைதியானாள்.

“சரி அம்மா. இனி நடக்கப் போகும் விளைவுகளுக்கு நான் பொறுப்பல்ல. நீங்களே பொறுப்பு. நீங்களே உங்கள் இனத்திற்கு அவமானத்தையும், அசிங்கத்தையும் தேடிக் கொள்கிறீர்கள். பாத்திரத்தை எடுத்துக் கொண்டு போகிறேன்” என்று சொல்லிவிட்டு, சுதேஷனைக்கு அருகில் இருந்த, திருகு மூடியோடு கூடிய தங்கப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு தெருவில் இறங்கினாள். மெல்ல கீசகனுடைய இடம் நோக்கி நடந்தாள். அரண்மனை வாசலில் வந்து நின்றாள். அவள் வந்திருக்கிறாள் என்று தெரிந்ததும் கீசகன் பரபரப்படைந்தான். மற்றவர்களை விலக்கினான். உள்ளே வரச் சொன்னான். நடுக்கூடத்தில் நின்றாள்.

“உங்கள் தமக்கையார் மது வாங்கி வரச் சொன்னார்.”

“அதற்கென்ன தருகிறேன். நான் உன்னை கேட்டது...”

“ஞாபகம் இருக்கிறது. இந்த அரண்மனையில் படி ஏறி மது வாங்கத்தான் வந்திருக்கிறேன். மற்றபடி இங்கு தாமதம் செய்தால் என் பெயர் கெட்டுப் போய்விடும். பணிமகளிருக்கு நடுவே நான் கேவலமாக பேசப்படுவேன். எனவே, இப்படி பட்டப்பகலில் என்னை அழைத்து சந்தோஷிப்பதை விட ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு நீங்கள் வந்தால் அங்கு சந்தோஷமாக இருக்கலாம்.”

“ஆமாம், அது நன்றாகத்தான் இருக்கிறது. இப்படி வருவது உனக்கு இடைஞ்சல் என்றால் நான் அதற்கு வற்புறுத்தவே மாட்டேன். எங்கு வரலாம் என்கிறாய்?”

“நடனச் சாலைக்கு வந்து விடுங்கள். அங்கு மாலை நேரம் பெண்கள் நடனமாடிக் கொண்டிருப்பார்கள். இரவு வர விலகிவிடுவார்கள். அந்த இடம் ஆள் அரவமற்று இருக்கும்.”

“நல்லது. அங்கு மிகப்பெரிய கட்டில் ஒன்று உண்டு. அது நமக்கு சௌகரியமாக இருக்கும். நீ நடனசாலைக்கு வந்துவிடு. நானும் வந்து

"விடுகிறேன்." என்று சொல்லி, அவளை மதுவோடு அனுப்பி வைத்தான். மதுவை கொண்டு வந்து சுதேஷ்ணையிடம் கொடுத்து விட்டு, சுதேஷ்ணையை ஏறிட்டும் பார்க்காமல் நடந்து போனாள். என்ன நடந்தது என்று கேட்க சுதேஷ்ணைக்கு தைரியம் இல்லை. திரௌபதியும் எதுவும் சொல்லவில்லை.

அன்று மாலை நடனச் சாலையில் பெண்கள் ஆனந்தமாக நடனமாடிக் கொண்டிருந்தார்கள். அர்ஜுனன் அவர்களுக்கு நாட்டியத்தில் முக்கியமானப் பகுதியை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான். ஒட்டுமொத்தமாய் ஐம்பது பேரும் மிகச் சரியாக அசைந்து ஆடி அற்புதம் காட்டினார்கள். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கைதட்டி ரசித்தார்கள். 'ஆஹா ஆஹா' என்று குரல் எழுப்பினார்கள். அர்ஜுனனைப் பார்த்து அற்புதம் என்று சொன்னார்கள். பிருங்கன்னளை என்ற பெயரில் உள்ளன்ன அர்ஜுனன் அவர்கள் வார்த்தையை ஏற்றான். பெண்களை தலைதடவி முத்தமிட்டு அனுப்பி வைத்தான். அந்த நடனப் பெண்மணிகள் அர்ஜுனன் காலைத் தொட்டு வணங்கி, இப்படி ஒரு நடனம் நாங்கள் ஆடியதேயில்லை என்று முழு பூரிப்போடு விலகினார்கள். கடைசியாக பிருங்கன்னளை என்ற அர்ஜுனனும் வெளியேறினான்.

இரவு வந்தது. நடனசாலை இருட்டாயிற்று. மாலையிலிருந்தே குளித்து விதம் விதமான தைலங்களுடன் தன்னை அலங்கரித்துக் கொண்டு உடம்பு முழுவதும் வாசனை திரவியங்களை பூசிக் கொண்டு நன்கு உடுத்திக் கொண்டு . முத்துமாலைகளை போட்டுக் கொண்டு அவளுக்கு கொடுப்பதற்கு சிறிய தங்க மூட்டையை எடுத்துக் கொண்டு தலைவாரிக் கொண்டு நெற்றியில் திலகமிட்டு பூக்கூடையை கொண்டு வரச் சொல்லி, அதை தோளில் மாட்டிக்கொண்டு தேர் ஏறி நடனச் சாலையில் இறங்கினான். இருட்டு வேளையில் உள்ளே புகுந்தான். தேரை அனுப்பி விட்டான். உள்ளே புகுந்து கதவு திறந்து சிறிய பந்தத்தை ஏற்றி மெல்ல கட்டிலுக்கு அருகே வந்தான். பூக்களை கட்டிலில் இறைத்தான். வாசனை திரவியங்களை தெளித்தான். நறுமணம் கமழும் தூபப் புகையை ஏற்றி வைத்தான்.இரண்டு மூன்று பக்கங்களில் அகல் விளக்குகளையும், அங்கு அழகிய கண்ணாடிகளையும் நிற்க வைத்தான். ஒரு மயக்கமான சூழலை அந்த கட்டில் கொடுத்தது. ஒரு பெண்மணி ஆடை இன்றி அமர்ந்தால் நன்கு தெரிய வேண்டும் என்ற நினைப்போடு இன்னும் இரண்டு தீபங்களை ஏற்றினான். அந்த மாலினி வெட்கப்பட்டால்...? அந்த வெட்கமும் தெரிய வேண்டுமே என்று இன்னொரு தீபமும் ஏற்றினான். ஆறேழு தீபங்களுக்கு நடுவே அந்தக் கட்டில் ஜொலித்தது.

உள்ளும் புறமும் தவித்தான். இன்னும் யாரும் வரக்காணோமே என்றான்.

மெல்ல கதவு திறக்கும் சத்தம் கேட்டது. தூரத்தே கட்டிலில் வெளிச்சம் பரவி இருப்பது தெரிந்தது. புடவை அணிந்த ஒரு உருவம் தெரிந்தது. என்ன இத்தனை விளக்குகள். அணைத்து விடுங்கள், அணைத்து விடுங்கள் என்று கீச்சுக் குரல் கேட்டது. மாலினியின் உத்தரவு இது என்று புரிந்து கொண்டு கண்மூடித்தனமாக அவன் கட்டிலை நோக்கி ஓடினான். எல்லா விளக்குகளையும் அணைத்தான். அந்த தீப்பந்தத்தையும் அணையுங்கள். யாரேனும் பார்த்தால் என்ன ஆகும் என்று கடிந்து கொள்ள, அவன் தீப்பந்தத்தையும் அணைத்தான்.

கடும் இருட்டு சூழ்ந்தது. யார் எங்கே நிற்கிறார்கள் என்றுகூடத் தெரியவில்லை. முன்நெற்றியை பிடித்தால்கூட அந்த மயிர் கற்றை அந்த இருட்டில் தெரியாது. அவ்வளவு கடுமையான இருட்டு. அவன் யார் வரப் போகிறார்கள் என்றுப் பார்க்க, யாரோ பூனை போல் நகர்வது தெரிந்தது. கட்டில் அசைந்தது. யாரோ கட்டிலில் உட்கார்ந்தது தெரிந்தது. ஒரு உருவம் நாணி தலைகுனிந்து இருப்பது அந்த இருட்டில் வெறும் கோடாகத் தெரிந்தது.

கீசகன் அருகே வந்தான். தோளில் கை வைத்தான். உடம்பு சில்லென்று இருந்தது.

"வந்து விட்டாயா சைந்தரி. மிக்க சந்தோஷம். என்னுடைய விருப்பத்திற்கு நீ ஈடு கொடுக்கப் போகிறாய் என்பதை நினைக்க எனக்கு உடம்பு ஆவேசமடைகிறது. உனக்கு என்ன வேண்டும் சொல். நான் ஒரு தங்க மூட்டை கொண்டு வந்திருக்கிறேன் அது போதுமா அல்லது உன்னுடைய விருப்பம் என்ன, எது சொன்னாலும் நிறைவேற்றுவேன். என்னுடைய விருப்பத்தை ஏற்று இங்கு வந்தது சந்தோஷம். உன்னை அடித்தது தவறு. நீ வேண்டுமென்ற ஆவேசத்தில் அடித்து விட்டேன். தயவுசெய்து மன்னித்து விடு. என்னைத் தழுவிக் கொள். தயவு செய்து என்னைத் தழுவிக் கொள். உன்னுடைய தழுவலால் என் வேகத்தை மட்டுப்படுத்து. நான் பைத்தியம் பிடித்தவன் போல் ஆகிவிட்டேன்," என்று உளறத் துவங்கினான்.

(தொடரும்)

மகாபாரதம்

80

அதிகாரிகள் இல்லாது அரசியல் வாழ்க்கை இயங்காது!



திறமையான ஒற்றர்கள்தான். ஒன்று கேட்டால் நூறு சொல்கிறவர்கள்தான். ஆனால், இந்த பஞ்சபாண்டவர்கள் விஷயத்தில் இவர்கள் வித்தை ஒன்றும் பலிக்கவில்லையே. எங்கிருக்கிறார்கள் என்று தெரியவேயில்லையே. இந்த வழியில் போனார்கள் என்றாவது சொல்லப்படுமா என்று கேட்டால் அந்தத் தடயம் கூடத் தெரியவில்லை. பஞ்சபாண்டவர்கள் இருக்கிறார்களா அல்லது இறந்து போய் விட்டார்களா அல்லது ஏதேனும் மடுவில் விழுந்து விட்டார்களா, இல்லை மலைப்பாம்பு விழுங்கி விட்டதா?"

"அப்படித்தான் தோன்றுகிறது. இருந்திருந்தால் எங்கேனும் ஒரு சிறிய சலனம் இருந்திருக்கும், அல்லவா? அஞ்ஞான வாசத்தில் கண்டுபிடித்து விடலாம் என்றுதானே அப்படி ஒரு திட்டத்தை வைத்தது. பீமனாலும், அர்ஜுனனாலும் அமைதியாக இருக்க முடியாது என்றுத் தெரிந்துதானே அப்படி ஒரு திட்டம் வகுத்தது. ஆனால், அந்த திட்டத்திற்கு உட்பட்டு மூச்சு கூட விடாமல் எங்கோ பதுங்கியிருக்கிறார்கள் என்றால் அது மிகுந்த சாமர்த்தியம். எப்படியாவது துரியோதனனை அழிக்க வேண்டிய வைராக்கியம். கௌரவர்களை நிர்மூலம் செய்ய வேண்டும் என்ற கோபம். அதனால் என்ன அவமானம் நேர்ந்தாலும் பொறுத்துக் கொள்ளலாம் என்ற திட சித்தம்."

கர்ணன் ஒருவிதமாய் பஞ்சபாண்டவர்களை பாராட்டிதான் பேசினான்.

"துரியோதனா, இன்னும் அதிகமான ஒற்றர்களை, இன்னும் திறமையான ஒற்றர்களை, இன்னும் கண்டிப்பான கட்டளைகளை அவர்களுக்கு கொடுத்து அவர்கள் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கச் செய்ய வேண்டும். கண்டுபிடித்து வந்தால் பெரும் பரிசு என்று அறிவிக்க வேண்டும். இல்லையெனில் மூர்க்கமாக நடப்போம் என்று எச்சரிக்க வேண்டும். நாம் போய் அலைய முடியுமா. ஒற்றர்கள்தான் இப்பணியைச் செய்ய முடியும். அனுப்பு. அனுப்பு."



விராடதேசத்தில் அடைக்கலமாகி ஆறு மாதம் இருக்கும்போதே கர்ணன், துரியோதனனை துரிதப்படுத்தினான். துரியோதனனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. யாரை நம்புவது என்று தெரியவில்லை. ஒருவேளை இவர்களுக்குத் தெரிந்து, சொல்லாது இருக்கிறார்களோ என்று ஐயமும் வந்தது. தானாக இப்போது முரட்டுத்தனம் காட்டினால் ஒன்று எதுவும் வராது அல்லது பொய்தான் வரும். எனவே ஒற்றர்களை அப்படி அதட்டவோ, முரட்டுத்தனம் செய்யவோ முடியாது. துரியோதனன் துன்புறுத்துகிறான் என்றுச் சொல்லி ஒற்றர்கள் வேறு தேசத்திற்குப் போய் விடலாம். ஒற்றர்களுக்கு எந்த தேசத்திலும் மரியாதை உண்டு. எனவே, தன்னுடைய ரகசியத்தை மற்றவருக்கு அந்த ஒற்றன் விற்பதை விட அவனை அரவணைத்துக் கொண்டு போவது நல்ல தந்திரம் என்று சரியானபடி துரியோதனன் யோசித்தான். மறுபடி ஒற்றர்களை கூட்டினான்.

“புரிந்து கொண்டு மிகப் பெரிய உதவியை செய்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். உங்கள்

காரியம் எதுவும் பலிதம் இல்லாமலும், வேகம் இல்லாதும் கண்டு எனக்கு வருத்தமாக இருக்கிறது. வேண்டுமென்றே மௌனமாக இருக்கிறீர்களோ என்ற பயமும் வந்திருக்கிறது. உங்கள் திறமையை நான் அறிவேன். நீங்கள் என்னவெல்லாம் செய்திருக்கிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், இந்த விஷயத்தில் ஒரு சிறு துரும்பைக் கூட இங்குள்ள திறமையுள்ள ஒற்றர்கள் அசைக்கவில்லை. ஒருவேளை தெரிந்தாலும் சொல்லாதே என்று என்னைவிட வயதானவர்கள், உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் உங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார்களா. ஆம் என்றால் சொல்லி விடுங்கள். நானே பார்த்துக் கொள்கிறேன். ஒற்றறிவது என்பது துரியோதனனுக்கு பிடித்த வேலை."

அந்த அதிகாரிகள் பதறினார்கள். "இதற்கு நீங்கள் என்னை கொன்று போட்டிருக்கலாம்" என்று கதறினார்கள்.

பாலகுமாரன்

துரியோதனன் பேசியது ஒரு நடிப்பு என்றால் அதைவிட அதிகமாக அவர்கள் நடித்தார்கள். கண்ணீர் விட்டார்கள். மன்னன் திருடன் என்றால் அதிகாரிகளும் திருடனாகத்தான் இருப்பார்கள். அரசன் நயவஞ்சகன் என்றால் அதிகாரிகள் அவனைவிட பெரிய நயவஞ்சகத்தை கைக்கொண்டிருப்பார்கள். இது அரசாங்க இயல்பு. அந்த அதிகாரிகளுக்கென்று ஒரு நடுநிலை இருக்கிறது. பட்டும் படாமல் இருக்கின்ற புத்தி இருக்கிறது. நிச்சயம் செய்கிறேன், உடனே செய்கிறேன் என்று சொல்லி காலம் நீட்டிப்பது, ஏதேனும் சாக்கு சொல்வது என்பது அதிகாரிகளுக்கு கைவந்த கலை. அதிகாரிகள் இல்லாது அரசியல் வாழ்க்கை இயங்காது. அரசனுடைய கட்டளைகளை அதிகாரிகள்தான் நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றுவதில் துல்லியம் இல்லையெனில் அந்த அரசாங்கம் சோபை இழக்கும். குறை சொல்லப்படும். இழிவுபடுத்தப்படும். அது அரசனுக்கு அகௌரவம். அரசாங்கம் அதிகாரிகளை நம்பியிருக்கிறது. அதிகாரிகளை அரசன் நம்பியிருக்கிறான். இதமான மிரட்டல் தான் நல்ல வழியே தவிர, வாள் வீசி சொடுக்கி அதிகாரிகளை எந்த அரசனும் பணிய வைக்க முடியாது. அது குளறுபடிகளை அதிகமாக்கும்.

"நாங்கள் அலையாத காடுகள் இல்லை, ஏறாத மலைகள் இல்லை. காற்று புகாத குகைகளில்கூட நாங்கள் நுழைந்து பார்த்துவிட்டோம். கண்டுபிடித்து விடலாம் என்கிற எண்ணத்தோடு அலைந்தோம். சிறு தடயம்கூட கிடைக்கவில்லை. ஆனால், மிகச் சமீபத்தில் சில விஷயங்கள் எங்கள் காதுக்கு வந்தன. நாங்கள் அந்த குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்தோம். அது மத்ஸ்ய தேசத்தில் உள்ள விராட நகரம். விராட அரசனின் அரண்மனையில் சில விஷயங்கள் நடந்தன. அவை பணிப்பெண்களின் மூலமும், காவல்காரர்கள் மூலமும் பொதுமக்களுக்கு கசிந்தது. பொதுமக்களிடமிருந்து நாங்கள் திரட்டினோம். பிறகு பணிப்பெண்களிடமும், காவலர்களிடமும் பேச்சு கொடுத்தோம். ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை என்றாலும் இந்த விஷயத்தை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வரும்போது இது இன்னும் தெளிவாக உங்களுக்கு புரியும் என்று நினைக்கிறோம்.

"விராடதேசத்தின் அரசனின் மைத்துனன் கீசகன் மிகுந்த பலசாலி. போர் வெறி மிக்கவன். கோபம் உள்ளவன். அதிகம் அலட்டுகிறவன். பெண் பித்தன். தன்னை மிகப் பெரிய மல்யுத்த வீரன் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறவன். சுற்றியுள்ள தேசங்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த கீசகன் கந்தர்வர்களால் அடித்து நசுக்கி கொல்லப்பட்டான். ஒரு உருண்டை மாமிசமாக ஆக்கப்பட்டான் என்று சொல்லப்படுகிறது. அந்த மாமிச மூட்டையை பார்த்தவர்கள் பயந்து விவரித்தார்கள். தலை, கை, கால், விரல்கள் எதுவுமே இல்லை. வெறும் பந்தாக இருந்தது. உருட்டி கீழே அடித்தால் ஆமை உருவமாகத் ஒன்று தோன்றுமே அப்படி இருந்தது என்றும் சொன்னார்கள். ஒரு அரைக்கோளமாக இருந்தது என்றும் சொன்னார்கள். என்ன காரணம் என்று கேட்டதற்கு, அதற்கு சில தினங்கள் முன்பு அழகிய ஒரு பணிப்பெண்ணை தன்னுடைய படுக்கைக்கு கீசகன் அழைத்ததாகவும், அவள் ஓடி ஒளிந்ததாகவும், அரசவைக்கு வந்து விராடனிடம் அடைக்கலம் கேட்டதாகவும், விராடன் எதிரிலேயே கீசகன் அவள் தலைமயிரை பிடித்து கீழே தள்ளியதாகவும், எட்டி உதைத்ததாகவும், வாயில் மிதித்ததாகவும் ரத்தம் வந்ததாகவும், விராட மன்னன் சமாதானம் செய்து அனுப்பியதாகவும் தெரிகிறது.

விராட மன்னனின் மனைவி சுதேஷ்ணை அந்த பணிப் பெண்ணை 'நீ போனால் என்ன, பணிப்பெண்தானே உனக்கென்ன கற்பு?' என்று கடிந்து கொண்டதாகவும், ஒரு தாதி சொன்னாள். இது ஏதோ ஒரு செய்தியைச் சொல்கிறது. இது நடந்தது ஒரு நடனச்சாலை. அந்த நடனச்சாலையில் ராஜகுல பெண்களுக்கு, ஆணும் அல்லாத பெண்ணும் அல்லாத அலித்தன்மை உள்ள ஒரு அழகிய புருஷன் நடனம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். பெண்கள் அவனைச் சுற்றியும் இருக்கிறார்கள்.

குறிப்பாக அரசனின் மகள் உத்திரை அந்த அலித்தன்மை மிகுந்த வாலிபனோடே சுற்றிக் கொண்டிருக்கிறாள். கட்டிப்பிடித்து கொஞ்சிக் கொண்டிருக்கிறாள்.

விராடமன்னன் மனதளவிலும், உடலளவிலும் பலவீனன். அவனுக்கு யுத்தம் செய்யத் தெரியாது. பிரியமும் இல்லை. சூதாடி. சமீபத்தில் கங்கன் என்பான் அவனுக்கு நண்பனாக வர, அவனோடு இடையறாது சூதாடிக் கொண்டிருக்கிறான். அந்த சூதுக்கு கேடு வந்தால் கோபமடைகிறான். எதையும் காதில் வாங்கிக் கொள்ளமாட்டேன்

என்கிறான். அரசாங்கத்தை அதிகாரிகளும், கீசகனும்தான் நடத்தி வந்தார்கள். கீசகன் இறந்த பிறகு விராட தேசம் ஆண்மையற்று கிடக்கிறது.”

“நிறுத்து.”

துரியோதனனும், கர்ணனும் ஒருசேர கை தட்டினார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். தலையசைத்தார்கள்.

“கீசகன் மிகச்சிறந்த மல்யுத்த வீரன். இந்த மனித உலகில் நான்கு பேர்தான் பலசாலிகள். மல்யுத்த வீரர்கள். அவர்களில் ஒருவர் பலதேவர். இன்னொருவன் கர்யன். இன்னொருவன் பீமசேனன். நான்காவது கீசகன். நான்காவதாக கீசகன் இறந்துவிட்டான். ஐந்தாவதாக ஒருவன் இல்லவே இல்லை. எனவே, கீசகன் மரணம் இந்த மூன்று பேரில் ஒருவர் மூலம்தான் நடந்திருக்கிறது. பலதேவர் இங்குவர வாய்ப்பில்லை. மத்ஸ்ய ராஜன் சல்யன் கீசகனோடு சண்டையிட வேண்டிய அவசியமில்லை. பீமன்தான்.... அப்படியானால் அங்கு விராடதேசத்தில் பீமன் இருக்கிறான்.”

கர்ணன் சொல்ல, துரியோதனன் கரகோஷம் செய்தான்.

“இன்னும் இன்னும் இன்னும் யோசித்துப் பார். இடையறாது சூதாடிக் கொண்டிருக்கிறானாம் விராட மன்னன். சூதை விட்டு வெளியே வர மனமே இல்லையாம். கீசகனிடம் சகலமும் ஒப்படைத்துவிட்டு உண்பதும், உறங்குவதும், சூதாடுவதுமாக இருக்கிறான். அப்படி ஒரு ஈர்ப்பு அவனுக்கு. இப்படி சூதாடுவதற்கு யார் காரணம்? யாரோ புதிதாக சேர்ந்த கங்கன். ஏன் கங்கன் யுதிஷ்டனாக இருக்கக்கூடாது.”

மறுபடியும் சபை எழுந்து ஆரவாரித்தது. துரோணரும், பீஷ்மரும் ஆம் என்று தலையசைத்தார்கள். அப்படியானால் அந்த அழகியப் பெண், கீசகனே ஆசைப்படுகின்ற அழகியப் பெண் யாராக இருக்கும். கீசகனுக்கு கிடைக்காத பெண்ணா, அவன் போகிக்காத பெண்ணா. இதற்கு மேலும் ஒரு அழகியை தேடுகிறான் என்றால் அது திரௌபதியாகத்தான் இருக்க வேண்டும். அவள் ஏன் விராட மன்னனிடம் போனாள். விராட மன்னனிடத்திலா அடைக்கலம் கேட்டிருப்பாள். இல்லை அந்த இடத்தில் கங்கன் என்ற யுதிஷ்டரன் இருப்பதால் அவனுக்கு இந்த துன்பத்தை தெரிவிக்க ஓடியிருக்கிறாள்.”

“அற்புதம் கர்ணா. மிகத் தொடர்ச்சியாக அழகாக யோசிக்கிறாய்.” துரியோதனன் எழுந்து கர்ணனின் கைகளைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

“இரு. இன்னும் இருக்கிறது. இறந்து போனது எங்கே?”

“நடனச் சாலையில்.”

“நடனச் சாலையில் யார் இருக்கிறார்கள்?”

“அரசகுமாரிகள் நடனமாடுகிறார்கள்.”

“யார் கற்றுக் கொடுக்கிறார்கள்?”

“பிருங்களை என்கிற அலி. ஆணும் அற்ற பெண்ணும் அற்றவள்.”

“யாரது?”

“அர்ஜுனன். ஆம். ஒரு கந்தர்வியால் அவனுக்கு அந்த சாபம் உண்டல்லவா. இந்தக் கதை நமக்கும் தெரியுமே. அப்படியானால் ஒரு வருடம் அவன் தன்னை பெண்ணாக உடுத்திக் கொண்டு மறைந்து வாழ்ந்திருக்கிறான்.”

“நகுல, சகாதேவர்?”

“அவர்கள் அங்குதான் எங்கேனும் இருப்பார்கள். அது முக்கியமல்ல. இதோ இந்த நால்வரையும் கண்டுபிடித்து விட்டோம். கீசகனை கொன்றது பல்லவன் என்கிற பீமன். அரசனோடு சூதாடுவது கங்கன் என்ற தருமபுத்திரர், யுதிஷ்டர். கீசகனிடமிருந்து தப்பி ஓடிவந்து அரசனிடம் அடைக்கலம் கேட்டது சைந்தரி என்ற பணிப்பெண்ணான திரௌபதி. நடனசாலையில் அர்ஜுனன். பெண் வேடமிட்ட அர்ஜுனன்.”

“இனி எதற்கு இங்கு உட்கார்ந்திருக்கிறோம். பதிமூன்று வருடம் முடியவில்லையே. இன்னும் சில நாட்கள் பாக்கியிருக்கின்றனவே. அதற்குள் அவர்களை கண்டுபிடித்து விட முடியுமா. கண்டுபிடித்து விட்டால் மறுபடியும் பன்னிரெண்டு வருட வனவாசம். இன்னும் ஒரு வருடம் அஞ்ஞாத வாசம். அவர்கள் ஆட்சிக்கு வரவே முடியாது. இறுதிவரை நான்தான் அஸ்தினாபுரத்து அரசன். கௌரவர்களின் தலைவன். பஞ்ச பாண்டவர்கள் ஒழிந்தார்கள். கிளம்பு கர்ணா. உன்னை நம்பித்தான் ஆரம்பிக்கிறேன். துரோணாச்சாரியாரே என்ன சொல்கிறீர்கள்?”

“அர்ஜுனன் அப்படி இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. கர்ணன் போட்ட கணக்கு சரியாக இருக்கிறது.”

“இதை இத்தனை தாமதமாக ஏன் ஒற்றர்கள் சொன்னார்கள். இந்த கணக்கை ஏன் ஒற்றர்களுக்கு போடத் தெரியவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது.”

“போட்டிருப்பார்கள். போட்டு தவறாகி விட்டால் நீ துன்பம் கொடுப்பாய் என்று வெறுமே செய்தியை மட்டும் சொல்லியிருக்கலாம். நாம் கூட்டி கழித்து பார்த்து விட்டோம். நல்லது. இப்போது அது முக்கியமில்லை. விரைவாக படை எடுத்துப் போக வேண்டும். மத்ஸ்ய தேசத்திற்கு போக வேண்டும்.”

“பீஷ்மரே என்ன சொல்கிறீர்கள்?”

“கௌரவர்களுக்கு அதுதான் நல்லது. உனக்கு அதுதான் சரி. பஞ்சபாண்டவர்கள் உனக்கு எதிரிகள். அவர்களை அழிக்க வேண்டும் என்றால் இதுதான் தருணம். இந்த தருணத்தை நழுவ விட்டால் உனக்கு மரணம்தான் வரும். ஆனால், துரியோதனா, எப்படி ஜெயிக்கப் போகிறாய். யார் யார் உன்னுடன் வருகிறார்கள். என்னவிதமான வியூகம். யார் தலைமையேற்று நடத்தப்போகிறார்கள். யார் முதலில் போய் மத்ஸ்ய தேசத்தில் கலவரமூட்டுவார்கள். வம்புக்கு இழுப்பார்கள். இதுவரை விராடதேச அரசனோடு நமக்கு எந்தவித சண்டையும் இல்லை. ஏதேனும் கற்பிக்க வேண்டும். காரணமின்றியா யுத்தம் செய்ய முடியும். நம் வீரர்களுக்கு ஒரு கோபம் ஏற்பட வேண்டாமா. ஒரு குறிக்கோள் வேண்டாமா. நம்முடைய கோபத்தை குறிக்கோளில் சொல்ல முடியுமா.” என்று பீஷ்மர் சொல்ல, சபை அமைதியாக இருந்தது.

(தொடரும்)

நீதிநெறி உள்ள ஒருவருக்காக பூமி குளிர்ந்திருக்கும்!

அது அரச சபை. அங்கே முக்கியமானவர்கள் ஒரு விஷயத்தை முடிவு செய்யும் முன்பு அதைப் பற்றி தங்களுடைய அபிப்ராயத்தைச் சொல்லுவார்கள். விராட தேசத்தை நோக்கி படையெடுத்துப் போக வேண்டும் என்று துரியோதனன் விருப்பப்பட்டபோது அதைப் பற்றி அவர்களுடைய குருவான துரோணாச்சாரியார் பேசத் துவங்கினார்:

"பஞ்ச பாண்டவர்களுடைய பலமே அவர்கள் ஒற்றுமைதான். யுதிஷ்டருக்கு கட்டுப்பட்டு அந்த நான்கு மகாரதர்களும் அமைதியாக இருப்பதுதான். தமையனைக் காட்டிலும் பலமாக இருந்தாலும், வித்தைகள் தெரிந்திருந்தாலும் அவர் கண் அசைவில் ஒரு உத்தரவு இட்டப் பிறகு அதைத்தான் பிடித்துக் கொள்வார்களே தவிர தங்களை வெளிக்காட்ட மாட்டார்கள். அது பீமனாக இருக்கலாம் அல்லது அர்ஜுனனாக இருக்கலாம். ஆகவே, அவர்களுக்கு அனுகூலமான நேரம் வந்து விட்டது என்றுதான் அர்த்தம். நம்மை விட இந்த அஞ்ஞான வாசத்திலிருந்து விடுபட வேண்டும் என்று காத்திருக்கின்ற அவர்கள், அந்த நாளை மிகத் தெளிவாக அறிந்திருப்பார்கள். என்னுடைய அபிப்ராயத்தில் இன்னும் சில நாட்களில் அந்த அஞ்ஞான வாசம் முடிகிறது.

எனவே, விரைவாக முழு பலத்தோடு நாம் விராட தேசம் போக வேண்டும். அங்கு இருப்பார்களா என்றுத் தெரியவில்லை. இருப்பார்கள் என்று நினைத்துதான் அங்கு போகிறோம். ஒருவேளை

மகாபாரதம்

81



அவர்கள் அங்கு இருக்கலாம். ஆனால், அதை புரிந்து கொள்வது கடினம். அவர்கள் மனிதனை மயக்கி விடுவார்கள். வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்கள். எல்லா கோணங்களிலும் யோசித்து நாம் இந்தப் படையெடுப்பை நடத்த வேண்டும். எளிதான விஷயமாக துரியோதனன் இதை நினைத்து விடக் கூடாது.”

துரோணாச்சாரியார் பேசிய பிறகு பீஷ்மர் பேசினார்:

“பாண்டவர்கள் தோற்றுவிடுவார்கள் என்றா நினைக்கிறாய்? இல்லை துரியோதனா. அவர்கள் தர்மத்திலிருந்து சிறிதும் வழுவாதவர்கள். தர்மத்தோடு இருப்பவர்களுக்கு என்றைக்கும், எவராலும் தோல்வி ஏற்பட்டதேயில்லை. அவர்கள் வேதம் கூறும் நல்ல விஷயங்களைக் கடைபிடிக்கிறவர்கள். அமைதியாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தால் யார் அசைத்தாலும் பொங்காதவர்கள். எது அசைத்தாலும் தன்னை வெளியே காட்டிக் கொள்ளாதவர்கள். தருமரைப் பற்றி உனக்கு இன்னும் புரியவில்லை. எந்த தேசத்தில் தருமராஜர் இருக்கிறாரோ அந்த தேசத்தில் உள்ள அரசருக்கு எந்தத் தீமையும் நேராது. அவர் இருக்கின்ற ஊரில் மக்கள் மிக சௌக்கியமாக இருப்பார்கள். அங்கு எல்லா விஷயங்களும் மிக நேர்மையாக நடைபெறும். தன்னைச் சுற்றி ஒருபொழுதும் தவறு நடக்க தருமராஜர் அனுமதிப்பதில்லை. மக்களை நல்வழிப்படுத்துவதில் அவர் மிகவும் கெட்டிக்காரர். விராட தேசத்தில் மிகப் பெரிய பொக்கிஷத்தோடு ஹோமங்களும், யக்ஞங்களும் நடந்து கொண்டிருக்கும். தனித்தனி மனிதர்கள்கூட ஒழுக்கத்தோடு இருப்பதை விரும்புகின்றவர்களாகவே இருப்பார்கள். அப்படி போதிக்கப்படும்படியான நடவடிக்கைகளை தருமர் எடுத்திருப்பார்.

“விராட தேசத்தில் சரியான அளவில் மழை பொழிகிறது. நீர் நிலைகள் நிரம்பியிருக்கின்றன. பசுக்கள் மிக வளமையாக இருக்கின்றன. தானியங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. மத்ஸ்ய தேசம் மிக செழிப்பாக இருக்கிறது என்று நான் தூதுவர்கள் மூலம் அறிந்தேன். பாண்டவர்கள் இருக்கிறார்களா என்று தேடுவதைவிட அந்த தேசம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொண்டால் அங்கு பாண்டவர்கள் இருக்கிறார்கள் என்பதை கண்டுபிடித்து விடலாம். மத்ஸ்ய தேசத்தில் பெரும் அளவு வேத ஒலி கேட்கிறது. பெரும் தட்சிணை அளிக்கின்ற யாகங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ரசமுள்ள பழங்களும், நறுமணம் மிக்க மலர்களும் அங்கு



அதிகம் கிடைக்கின்றன. காற்று மிதமாக வீசுகிறது. இயற்கையின் உபாதை எதுவும் இல்லை என்றெல்லாம் ஒற்றர்கள் சொல்லுகிறபோது, இவ்வளவு செழிப்பாக ஒரு இடம் இருக்க வேண்டுமென்றால் அங்கு தருமபுத்திரர் இருக்கிறார் என்று அர்த்தம். இது உன்னை இழிவு செய்யக் குறித்துச் சொல்லவில்லை. தருமருடைய குணம் அப்படி. அதை நீ புரிந்து கொள்ள வேண்டும். யுதிஷ்டர் இருக்கின்ற இடத்தில் ரூப, ரச, ஸ்பரிச, கந்த, சப்த விஷயங்கள் அனைத்தும் நன்மையோடு தொடங்கும். மனதை மகிழ்ச்சியுறச் செய்யும் காட்சிகள் காணக் கிடைக்கும். அப்படிப்பட்ட இடத்தில் தருமபுத்திரர் நிச்சயம் இருப்பார். இந்த இடம் இவ்வளவு செழிப்பாக இருப்பதாலேயே பஞ்சபாண்டவர்கள் அங்கே இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

பாலகுமாரன்

பஞ்சபாண்டவர்களும் இருக்கக் கூடும் என்ற உன்னுடைய கூற்றை நான் இவ்விதமாக ஆமோதிக்கிறேன். என் பேச்சை சரியாக புரிந்து கொள். நீதிநெறி உள்ள ஒரு மனிதருக்காக பூமி குளிர்ந்திருக்கும் என்பதை புரிந்து கொள். உனக்கு பிடித்தமான மொழியில் நான் பேச இயலாது. உண்மையை நான் இப்படித்தான் சொல்வேன்."

துரியோதனனை ஆதரித்தும் ஆதரிக்காமலும் அதே சமயம் தருமபுத்திரரை வாயாற புகழ்ந்தும் பீஷ்மர் பேசியது துரியோதனனுக்கு உவப்பாக இல்லை. ஆனால், வயதில் மூத்தவர் என்பதாலும், சபையில் முக்கியமானவர் என்பதாலும் அவன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''துரியோதனா, அஞ்ஞாத வாசத்தின் தவணைக்காலம் முடிந்து விட்டது என்பதை முதலில் புரிந்து கொள். நீ எவ்வளவு விரைவாகப் போனாலும் அஞ்ஞாத வாசம் முடியவில்லை, நான் கண்டுபிடித்து விட்டேன் என்று குற்றம் சொல்ல இயலாது. நேற்றோடு அது முடிந்து விட்டது. இன்று இந்த விடியற்காலையில் அவர்கள் சுதந்திரப் புருஷர்களாக இருக்கிறார்கள். அது அவர்களுக்கு நன்கு தெரியும். ஏனெனில் இதிலிருந்து விடுதலையாக அவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சரி, படையெடுப்பு என்று பேசுகிறாய். பாண்டவர்களுடைய பலம் என்ன, உன்னுடைய பலம் என்ன? உன்னுடைய நண்பர்கள் யார், அவர்கள் பலம் என்ன, யாரை முன் வைத்து நீ அர்ஜூனனையும், பீமனையும் எதிர்க்கிறாய் என்பதை புரிந்து கொண்டு செயல்படு. விராட தேசத்தை தாக்கினால் பஞ்சபாண்டவர்கள் வேறு இடத்திற்கு நகர்ந்து விடுவார்களா? போகவே மாட்டார்கள். இதுவரை தங்களை காப்பாற்றிய விராடனுக்கு நன்றி சொல்லும் வண்ணம், வெகு நிச்சயம் இந்தப் போரிலே இறங்குவார்கள். தங்களை வெளிப்படுத்திக் கொள்வார்கள். காரணம் அஞ்ஞாதவாச நேரம் முடிந்து விட்டது. யுத்தத்திற்கு போவதற்கு முன்பு இந்த பலத்தை எடை போட்டு பார்த்து பகைவனுடைய பலம் அதிகம் என்றுத் தெரிந்தால் அவனோடு ராசியாகி விடுவது நல்லது. அவனுக்கு பொன், பொருள் கொடுத்து நட்பை விரும்புகிறேன் என்று சொல்லி யுத்தத்தை தவிர்ப்பது நல்லது. மாறாக மிகுந்த பலத்தோடு நீ இருக்கிறாய் என்று நினைத்தால், விராட தேசத்தின் பசுக்களை கவர்கின்ற வேலையை செய்யலாம். அப்பொழுது நாம் கடுமையாக எதிர்க்கப்படுவோம் என்பது நிச்சயம். பாண்டவர்களை எடை போடுவது மட்டும் செய்யாது, உன்னுடைய படையை உற்சாகப்படுத்து. உத்தம, மத்திய படைகளுக்கு சரியான சம்பளம் போயிருக்கிறதா என்று பார். ஒரு படையெடுப்புக்கு அவர்கள் தயாராக இருக்கிறார்களா என்று பார். பாண்டவர்களை நோக்கி போகிறோம் என்கிறபோது அவர்கள் பயமின்றி இருக்கிறார்களா என்று கண்டு கொள். உற்சாகப்படுத்து. வெறியேற்று. யாரை முன்னிறுத்தி போர் செய்யப் போகிறாய் என்பதை புரிந்து கொண்டு செயல்படு.

அந்த தேசம் சுபிட்சமாக இருக்கிறது, மக்களும் சுபிட்சமாக இருக்கிறார்கள். காரணம், தருமபுத்திரர் இருக்கின்ற இடம் சுபீட்சமாகத்தான் இருக்கும். இது ஒரு நல்ல அடையாளம்."

இது துரியோதனனுக்கு ஆதரவான பேச்சா அல்லது எதிரான பேச்சா, இது பாண்டவர்களை பாராட்டுகின்ற பேச்சா அல்லது துரியோதனனை சும்மா இரு என்று சொல்லாமல் சொல்கிறார்களா என்பது கண்டுபிடிப்பது கடினம். கிருபாச்சாரியார், பீஷ்மர், துரோணாச்சாரியார் மூவருமே துரியோதனனுடைய செய்கைகளில் பட்டும்படாமலும், ஒரு அரசன் கட்டளையிட்டால் ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இருந்தார்களே தவிர, சொந்த கோபம் என்று அவர்களுக்கு இல்லை. மாறாய் பாண்டவர்கள் மீது அவர்கள் மூவருக்கும் மிகப் பெரிய பாசம் இருந்தது. பீஷ்மர் சொன்னதைப் போல தருமபுத்திரருடைய இருப்பால்தான் மத்ஸ்ய தேசம் சுபிட்சம் பெருகியது என்று சொல்ல முடியாது. மத்ஸ்ய தேசம் எப்பொழுதுமே சுபிட்சமானதுதான். "அந்த மத்ஸ்ய மன்னன் எனக்கு எதிராக பேசியவன். தருமபுத்திரருக்கு உண்டானதை எப்படி துரியோதனன் எடுத்துக் கொள்ளலாம் என்று கேள்வி கேட்டவன். இது ஒன்று போதும், அங்கு படை எடுக்க. அதன் செழிப்புகள் எனக்கு முக்கியமில்லை. ஆயினும் மத்ஸ்ய தேசத்தில் படையெடுத்து பசுக்களை கவர்ந்து, தானியங்களை கொள்ளை எடுத்து அந்த தேசத்தை சின்னாபின்னப்படுத்துவேன். ஏனெனில் அங்கு தருமபுத்திரர் தன் சகோதரர்களோடு இருந்தார் அல்லவா.

அதற்கு தண்டனை செய்வேன். மத்ஸ்ய தேசத்தில் மிகச் சிறந்த பசுக்கள் இருக்குமென்றால், நாம் விராட தேசத்தை அடித்து குலைக்க வேண்டும். அந்த பசுக்கள் அஸ்தினாபுரம் வரவேண்டும். எப்பொழுது படையெடுக்கலாம். யார் தலைமை தாங்குவார்?" கேட்டு விட்டு கர்ணனைப் பார்த்தான் துரியோதனன்.

அப்பொழுது த்ரீகர்த்த நாட்டு மன்னனான சுதர்மா எழுந்து நின்றான். அவன் கர்ணனைப் பார்த்து வணங்கினான்.

"முன்பு மத்ஸ்ய சால்வ தேசத்து படைவீரர்கள் பலமுறை முற்றுகை இட்டு எனக்கு தொந்தரவு அளித்திருக்கிறார்கள். மத்ஸ்ய நாட்டு சேனாதிபதியான கீசகன் தன் சகோதரர்களோடு அடிக்கடி படையெடுத்து என்னை பலமாக துன்புறுத்தியிருக்கிறான். விராட மன்னரும் இதற்கு துணையாக வந்து அவரும் என் தேசத்தை களங்கப்படுத்தியிருக்கிறார். கீசகன் இருக்கின்ற தைரியத்தில் எந்தக் காரணமும் இன்றி யுத்தம் செய்திருக்கிறார். கீசகன் துஷ்டன். மிகுந்த கொடுமையாளன். கோபிஷ்டன். தன்னுடைய புஜ பலத்தால் மிகப் பெரிய புகழை பெற்றிருந்தான். அவன் கந்தர்வர்களால் கொல்லப்பட்டிருக்கிறான். அது பீமனாகவே இருக்கட்டும். அவன் ஒழிந்தது சந்தோஷம். கீசகன் இல்லாது அந்த விராட மன்னனை அடித்து நொறுக்குவதற்கு இதுதான் சமயம். நானே முன்னிருந்து படைகளை நிறுத்தி, என்னுடைய படைகளை கொண்டு போய் விராட தேசத்திற்கு உள்ளே நுழைந்து அந்த பசுக்களை கொள்ளையடிக்கிறேன். விராட மன்னனை துன்புறுத்துகிறேன். எனக்கு பக்கபலமாக கர்ணனும், கௌரவ வீரர்களும் இருந்தால் போதுமானது. தானியங்கள் மிகுந்த அந்த விராட தேசத்தில் படையெடுப்போம். நம்முடைய மக்களுக்கு வாரி வழங்குவோம். அவர்களுடைய பசுக்கள் அனைத்தையும் நம்முடையதாக்குவோம். இந்த போர் கொள்ளையால் நம்முடைய பலமும், சுபிட்சமும் பெருகும் என்பதற்கு எனக்கு எந்த சந்தேகமும் இல்லை."

கர்ணன் சுதர்மாவை கை வீசி ஆதரித்தான். வாழ்த்துச் சொன்னான். "இந்த சுதர்மா சரியாகச் சொல்கிறார். இவர் முன்னே போய் நாம் பின்னே போவதுதான் சரியான வழியாகும். நாம் இவருக்குத் துணையாகப் போகிறோம். என் நண்பனை போருக்கு அழைத்து தொந்தரவு செய்தாயே, என் நண்பன் வந்திருக்கிறான். அவனுக்கு துணையாக நானும் வந்திருக்கிறேன் என்று ஒரு காரணம் போதும். அஞ்ஞாத வாசம் முடிந்தால் என்ன, முடியாவிட்டால் என்ன. இன்னும் ஒளிந்துதானே இருக்கிறார்கள். தங்களை வெளியே காட்டிக் கொள்ளவில்லையே. நாம் விராடனை எதிர்க்கப் போகிறோம். என்ன விளைவு என்பதை நிதானமாக யோசித்துப் பார்ப்போம். பாண்டவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தேடவில்லை. புரிந்து

சிறுநீரகம் செயல் இழந்த ஆண்-பெண்
அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி

சிறுநீரகத்தில் கற்கள், சிறுநீர் வரும் குழாயில் சதை அடைப்பு, பிராஸ்டேட் கரப்பியில் வீக்கம், நீரிழிவு, ரத்தக் கொதிப்பு, ஆங்கில மருந்துகளின் பக்க விளைவு... இன்னும் பிற காரணங்களால் குறைந்த அளவிலோ அல்லது முழு அளவிலோ சிறுநீரகம் செயல் இழந்து விடுதல். இதன் காரணமாக ரத்தத்தில் யூரியா மற்றும் கிரியாட்டினின் உயர்ந்து ஹீமோகுளோபின் தாழ்ந்து விடுதல், இதனால் கழிவுநீர்கள் வெளியேற முடியாமல் முகம் – கை, கால் என உடல் முழுவதும் வீங்குதல், மூச்சு விட சிரமப்படுதல், சாப்பிட்ட உணவை வாந்தி எடுத்தல், இதனால் டயாலிசிஸையோ அல்லது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையையோ எதிர்கொள்ள நேர்தல்.

மேற்கண்ட பாதிப்புகளுக்கு அறுவை சிகிச்சை, டயாலிசிஸ், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை எதுவும் இல்லாமல் ஹோமியோபதியில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. டயாலிசிஸ் செய்து கொண்டிருப்பவர்களுக்கும் நிவாரணம் உண்டு. சிறுநீரகம் மாற்றிக்கொண்டபின்பு சில மாதங்களிலேயோ அல்லது சில வருடங்களிலேயோ மாற்றிய சிறுநீரகம் பயனற்றுப் போய் மறுபடியும் டயாலிசிஸை தொடரும் நிலையிலோ, அல்லது மறுபடியும் மேலும் ஒரு சிறுநீரகம் மாற்ற வேண்டிய நிலையிலோ உள்ளவர்களுக்கும் நிவாரணம் உண்டு. சிறுநீரகம் முழுவதும் செயலிழந்த பல நோயாளிகளை குணப்படுத்தி வெற்றி கண்ட 40 ஆண்டு கால அனுபவம் வாய்ந்த ஹோமியோபதி மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

விவரங்களுக்கு
டாக்டர் **எஸ்.மூர்த்தி**
ஹோமியோபதி கிளினிக்

எண்.10, பெருமாள் நந்தவனம் சந்து, (மதுரை கல்லூரி பஸ் நிறுத்தம் சமீபம்)
டி.பி.கே. மெயின் ரோடு, மதுரை – 625 011. போன் : கிளினிக் : 0452 – 267 3417, செல் : 94431 67341
வேலை நேரம் : காலை 10.00 முதல் 1.00 வரை; மாலை 7.00 முதல் 9.00 வரை. (ஞாயிறு விடுமுறை)

கொள்ளுங்கள். விராட மன்னனை தண்டிக்கப் போகிறோம்" என்று சொல்லி சிரித்தான். சபையும் சிரித்தது. துரியோதனன் சந்தோஷமாகி தன் தம்பி துச்சாதனனைப் பார்த்து, "இதை பெரியோர்களிடம் சொல்லி, அவர்கள் ஆசி பெற்று மிகப் பெரிய படையோடு மத்ஸ்ய தேசம் நோக்கி நாம் நகர வேண்டும். சுதர்மா முன்னே போகட்டும். ஒருநாள் கழித்து நாமும் பின் தொடர்ந்து போய் விராட தேசத்தை அழித்து, ஒழித்து விராட மன்னனை சிறை பிடிப்போம். அந்தப் பசுக்களை கொள்ளையடிப்போம்."

துரியோதனனுடைய படை போருக்கு தயாராகியது. அஞ்ஞாதவாசத்தின் நேரம் முடிந்து விட்டது. பதிமூன்று ஆண்டுகளும் நன்றாக கழிந்து விட்டன என்று பாண்டவர்களுக்குத் தெரியும். ஆயினும் ஒரு சுபநாளில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமைதியாக இருந்தார்கள். கீசகனுடைய வதத்திற்குப் பிறகு விராட மன்னர் விழித்துக் கொண்டார். தன்னைச் சுற்றி ஏதோ நடக்கிறது என்ற எண்ணத்தில் சகலரையும் உற்றுப் பார்த்து வந்தார். கங்கன் என்று பெயர் சொல்லிக் கொண்டு தனக்கு நல்லது சொல்லும், பொழுதுபோக சூதாடும் அந்தப் பெரியவரை மிக மரியாதையோடு பார்த்தார்.

பதிமூன்றாம் ஆண்டின் இறுதி நாள் சுதர்மா பெரும் படையோடு மத்ஸ்ய தேசத்தை நோக்கி வருகிறான் என்பது தூதர்கள் மூலமும், ஒற்றர்கள் மூலமும் கேள்விப்பட்டார்கள்.

மத்ஸ்ய தேசம் போருக்குத் தயாராகியது. கீசகன் இல்லாததால், மற்ற தளபதிகள், படை வீரர்களை உற்சாகப்படுத்தினார்கள். ஆயுதங்களை தயார் செய்தார்கள். விராட மன்னனும் சந்தோஷமாக கவசங்களை தரித்து பலமுறை பல்வேறு திக்கில் உள்ள தன் படைகளை நேரிடையாக பார்வையிட்டான்.

மத்ஸ்ய தேசத்தின் விளிம்பில், விராட நகருக்கு வெகு தொலைவில் பசுக்கள் கூட்டத்தை விராட மன்னனின் இடையர்கள் பாதுகாத்து வந்தார்கள். பெரும் புல்வெளிகளில் மேய்த்து வந்தார்கள். சுதர்மா தன் படையினால் அந்த பசுக்கூட்டத்தை வளைத்துக் கொண்டான். இடையர்கள் கம்புகளாலும், உலக்கைகளாலும், மணிக்கயிறுகளாலும் தங்களைச் சுற்றி வந்த அந்த வீரர்களை கடுமையாக எதிர்த்தார்கள். சுற்றி வளைத்த வீரர்கள், படைத்தளபதி ஆணைக்கிணங்க இடையர்கள் மீது கடுமையாக அம்பு மழை பொழிந்தார்கள். இடையர்கள் அடிபட்டார்கள்.

காவலனான கோபன் என்பவன் தேரின் மீது ஏறி விராட நகரத்திற்கு போனான். மன்னரைக் கண்டு கீழ் இறங்கி ஓடினான். மன்னர் மந்திரிகளோடு அரசவையில் அமர்ந்திருந்தார்.

"மகாராஜா திகர்த்த நாட்டு படைவீரர்கள் எங்களை போரில் வென்று அடித்து துவைத்து உங்களுடைய லட்சக்கணக்கான பசுக்களை ஓட்டிக் கொண்டு போகிறார்கள். அவற்றை நாம் எப்படியேனும் மீட்டு வரவேண்டும்." என்று பதறினான். பசுக்கள் கவரப்படுகின்றன என்றுத் தெரிந்து விராட மன்னர் கோபமடைந்தார். விராட மன்னனின் மூத்தப் புதல்வன் சங்கன் கவசம் அணிந்து தயாரானான். தேரில் விராட மன்னன் ஏறிக்கொள்ள, கங்கன் அருகே வந்தார்.

"ஒரு சிறந்த முனிவரிடம் நானும் அஸ்திரப் பயிற்சி பெற்றிருக்கிறேன். எனக்கு தனுர் வேதமும் தெரியும். ஆகவே நானும் கவசம் அணிந்து, தேரில் அமர்ந்து பசுக்களை மீட்பதற்கு வருகிறேன். நம்முடைய சமையல் அறையில் பல்லவன் என்கிற சமையற்காரன் இருக்கிறான். அவன் மகா வீரன். பல மல்யுத்த வீரர்களை, விலங்குகளை உங்கள் கண் எதிரே அடித்து நொறுக்கியவன். இந்தப் போரில் அவன் உதவி செய்வான். கோசாலையின் தந்திபாலனையும், குதிரைகளின் க்ரகந்திகளையும் ஒரு தேர் கொடுத்து அமர்த்துங்கள். பசுக்களுக்காக போராட இவர்கள் மிகவும் விரும்புவார்கள்," என்று ஆலோசனை சொன்னார்.

கங்கனுடைய வார்த்தைகளுக்கு எப்போதும் அதிகம் மதிப்பு கொடுக்கின்ற விராட மன்னன் சரி என்று தலையசைத்தான். தன் தம்பியிடம் "இவர் சொன்ன அந்த போர் வீரர்களுக்கு நல்ல தேரை கொடு. தனித் தனி கொடி கொடு," என்றான். அவர்களுக்கு தனித்தனி தேர் கொடுக்கப்பட்டது.

அர்ஜுனன் அல்லாத அந்த நால்வரும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். முன்னும் பின்னும் தேரை ஓட்டிப் பார்த்தார்கள். அரசர் கொடுத்த கவசங்களை வணங்கி வாங்கிக் கொண்டார்கள். அந்த அரண்மனையை விட்டு அரண்மனை சேவகர்களாகவே வெளியே வந்தார்கள். பசுக்கள் மறித்து கடத்தி போகப்பட்ட இடத்தை அவர்கள் அடைந்தார்கள். பசுக்களின் கால் தடங்கள் எங்கு போகின்றன என்பதை வெகு எளிதாக நகுலனும், சகாதேவனும் அடையாளம் காட்டினார்கள். விராடனின் படை சுதர்மாவின் படையை பின் தொடர்ந்தது. குறுகிய நேரத்தில் அவர்கள் த்ரிகந்தர்களை பிடித்து விட்டார்கள். சுதர்மாவின் படைகளைத் தாண்டி முன்னே போய் நின்று மடக்கி கடுமையாக அடிக்கத் துவங்கினார்கள். தூசு பறந்தது. விலங்குகளின் ஓட்டம் பயங்கரமாக இருந்தது. வீரர்களின் வெறி கூச்சலும், வெட்டுப்பட்ட காயத்தின் அலறலும் அதிகமாக இருந்தன. கடுமையாக அம்பு மழை பெய்தது. அந்தி சாயும் நேரத்தில் மின்மினிப் பூச்சிபோல மேலே அம்புகள் பறந்தன. பசுக்களை விட்டுப் பிரியாத இடையர்கள் அந்த பசுக்கூட்டத்தை யுத்த களத்திலிருந்து ஓரமாக ஓட்டிக் கொண்டு போய் மடக்கி நிறுத்த, கடும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. தருமராஜர் விதவிதமாக வியூகங்கள் அமைத்து சுதர்மாவின் படையை வளைத்து தாக்கத் துவங்கினார். எந்தப் பக்கமும் போக முடியாதபடி பல்லாயிரக்கணக்கான வீரர்களை மத்ஸ்ய வீரர்கள் அடித்தார்கள். மடமட வென்று தருமர் வியூகம் மாற்றுகின்ற கலையை கண்டு வியந்தார்கள். அவர் கட்டளைக்கு கீழ்ப்படிந்தார்கள்.

(தொடரும்)

நல்லவர்களைக் காப்பாற்ற கடவுள் துணை வரும்!



விராட மன்னர் தன் படை ஜெயித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து அவரும் உற்சாகமாகி தன் போர் திறமையைக் காட்டினார். சுதர்மாவின் படைகளை ஊடுருவிப் போனார். அவர் முன்னே போவதால் அவருடைய படை, பின்னே அடர்த்தியாக சுதர்மாவின் படையை கிழித்துக் கொண்டு போயிற்று. தருமருடைய தைரியம் அவர்களுக்கு உற்சாகத்தை கொடுத்தது. சுதர்மாவை நெருங்கி மிகக் கடுமையான பாணங்களால் அவனை தாக்கினார். அவன் அடிதாங்காமல் விராட மன்னனை கூரிய அம்புகளால் துளைத்தான். விராட மன்னர் ரத்தம் வழிய நின்றார். அப்போது இருட்டத் துவங்கியது. போரினால் ஏற்பட்ட தூசால் இன்னும் இருட்டு அதிகமாகியது. கலைந்து கிடந்த சேனையை மறுபடியும் தருமர் ஒழுங்குபடுத்தினார். எப்படி தாக்கவேண்டும் என்று போரை நிறுத்திவிட்டு அவர்களுக்கு உபதேசம் செய்தார். யார் யார் எந்தெந்த வகையில் நகர வேண்டும், என்னவிதமான சப்தத்திற்கு கட்டுப்பட வேண்டும் என்று எக்காளம் ஊதி காண்பித்தார்.

அப்போது சந்திரன் உதித்து போர்களத்தில் வெளிச்சம் பரவியது. விராட மன்னன் அல்லாது வேறு யாரோ கட்டளையிட விராட தேசத்து படைகள் ஒன்றாவதும், வியூகம் வகுப்பதையும் கண்டு சுதர்மா கோபமுற்றான். மன்னனை மடக்கி விட்டால் மொத்தமும் அடங்கும் என்று தன்னுடைய தளபதிகளை ஒன்று சேர்த்து மிக வேகமாக விராட மன்னனை நோக்கித் தாக்கினான். கதையால் அவர் தேரை அடித்து உடைத்தான். குதிரைகளை அவிழ்த்து துரத்தினான். சாரதியை கொன்றான். சுற்றியுள்ள படை வீரர்களை கடுமையாக தாக்கினான். விராட மன்னனின் தலைமுடியை தூக்கி தன்னுடைய தேரிலே வைத்துக் கொண்டு வெகு வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்றான். விராட மன்னன் கைது செய்யப்பட்டு சுதர்மா அபகரித்துக் கொண்டு போகிறான் என்பதை தருமபுத்திரருக்கு சொல்லப்பட்டது.

தருமபுத்திரர் பீமனை நோக்கி, "எப்படியாவது விராட மன்னனை காப்பாற்று அவரை விட்டு விடாதே. அவர் பகைவரிடம் சிக்கிக் கொண்டார் என்பது தெரிந்தால், நம் படை வீரர்கள் பலம் இழப்பார்கள். சுதர்மாவை அடித்து நொறுக்கு" என்றுஆவேசமாகக் கத்தினார்.

அவர் குரலில் தெரிந்த ஆவேசத்தைக் கண்டு பீமன் வியந்தான். மிக வேகமாக குதிரையில் ஏறி சுதர்மாவின் தேரை நெருங்கினான். தாவி ஏறி சுதர்மாவை எட்டி உதைத்தான். தேர் நொண்டத் துவங்கியது. அவன் தேரிலிருந்து இறங்கி, ஒரு பெரிய மரத்தை பிடுங்க எத்தனித்தபோது, 'வேண்டாம் நில்' என்று தருமபுத்திரர் கூச்சலிட்டார். 'அதை இப்போது செய்யாதே. உன்னை வெளிக் காட்டாதே, வேறு ஆயுதம் எடுத்துக் கொள்,' என்று சொல்ல, பீமன் நிதானமானான்.

நகுலனும், சகாதேவனும் தேர் கொண்டு வர, பீமன் அதில் ஏறிக் கொண்டான். நகுல, சகாதேவர் தேரின் பக்கவாட்டில் நின்றுகொள்ள, நடுவிலிருந்தபடி மிக வேகமாக அந்தத் தேரை சுதர்மாவை நோக்கி நகர்த்தினான். ஒரு வில்லை எடுத்துக் கொண்டு இடையறாது அம்பு மழை பொழிந்தான். எதிரிகள் தோற்றுவிட்டார்கள் என்று நினைத்த சுதர்மா மறுபடியும் கூச்சலிட்டு வீரர்களை ஒன்று சேர்த்தான். பீமனும், நகுலனும், சகாதேவனும் சுதர்மாவை நோக்கி போவதைப் பார்த்து மத்ஸ்ய வீரர்கள் எல்லா பக்கத்திலிருந்தும் அந்தத் தேரை தாக்கினார்கள். தங்கள்



மகாபாரதம்

82

அரசரை மீட்க போர் வீரர்கள் உற்சாகமடைவதைக் கண்டு அவர்களும் வேகமானார்கள். தெற்கத்தில் இருந்த படை மத்ஸ்ய வீரர்களால் கடுமையாக அடிபட்டது. நான்கு பக்கத்திலிருந்தும் சுதர்மா கடுமையாக தாக்கப்பட்டான். அவன் குதிரைகள் கொல்லப்பட்டன. சாரதியை எட்டி உதைத்து விரட்டினான். சுற்றி இருந்த படைவீரர்கள் சிதறி ஓடினார்கள். தேர் இன்றி சுதர்மா தரையில் நின்றான். சுதர்மா தரையில் நின்று தவிப்பதை கண்டு அவன் துணைக்கு சில தளபதிகள் வந்தார்கள். அவர்களும் அடிபட்டார்கள்.

விராட மன்னன் தேரிலிருந்து குதித்து பீமனுடைய தேரில் ஏறிக் கொண்டார். த்ரிக்காத் ராஜரான சுதர்மா போர் களத்தை விட்டு ஓடத் துவங்கினான். ஓடுகின்ற சுதர்மாவை பீமசேனன் துரத்திக் கொண்டு ஓடினான்.

“நில். எங்கே ஓடுகிறாய்? உன் வீரத்தைக் காட்டு. எதற்கு பயப்படுகிறாய்” என்றெல்லாம் கேலி செய்தவாறு பின்தொடர்ந்தான். மான்மீது சிங்கம் விழுவது போல எகிறி அவன்மீது பீமன் விழுந்தான். தரையோடு தரையாக நசுக்கினான். கேசத்தைப் பற்றி சுழற்றினான். தூக்கி பூமியில் அடித்தான். முழங்காலால் முகத்தில் இடித்து நசுக்கினான். மாறிமாறி முகத்தில் அடித்தான். நெஞ்சிலும், முதுகிலும் குத்தினான். நசுங்கி ரத்த விளாறாக இருக்கின்ற சுதர்மாவை தருமரிடம் இழுத்து வந்தான். பயமும், தள்ளாட்டமுமாக உடம்பு முழுவதும் ரத்தமுமாக சுதர்மா பீமன் கையில் சிக்கிக் கொண்டபோது பீமன் உரக்கச் சொன்னான்.

“முட்டாளே, நீ உயிர் பிழைக்க வேண்டுமென்றால் ஒரே ஒரு நிபந்தனை. நான் விராட மன்னனுக்கு அடிமை என்று சொல். விட்டு விடுகிறோம்” என்று உலுக்கினான். தருமபுத்திரர் எதிரே நிறுத்தினான்.

“பீமா, ஒன்றும் செய்யாதே. இவன் நமக்கு எதிரி அல்ல. வெறும் வீண் ஜம்பத்தில் இங்கு வந்து மாட்டிக் கொண்டு அடிபடுகிறான். நீ விராட மன்னனுக்கு அடிமைதான். ஆனாலும் நீ விடுவிக்கப்பட்டாய். போ. இனி போருக்கெல்லாம் வராதே” என்று சொல்ல, பீமன் அவன் கழுத்தை பிடித்து நெட்டித் தள்ளினான். அந்த யுத்த பூமியில் உடம்பெல்லாம் தேய்த்தவாறு சுதர்மா விழுந்து ஒரு தேர் சக்கரத்தில் முட்டிக் கொண்டு மயக்கமடைந்தான்.

தருமபுத்திரர் வெறியோடு கத்தினார். “போய் சொல்லுங்கள். விராட மன்னர் போரில் ஜெயித்து விட்டார் என்று சொல்லுங்கள். எதிர்த்து வந்த சுதர்மாவை அடித்து உதைத்து புறம் தள்ளி விட்டார் என்று சொல்லுங்கள். சுதர்மா தோற்று ஓடி மயக்கமடைந்து விட்டான் என்று சொல்லுங்கள். அரண்மனையை அலங்கரிக்கச் சொல்லுங்கள். தீபங்களை ஏற்றச் சொல்லுங்கள். மங்களப் பொருட்களோடு கன்னிகைகள் வரட்டும். வேதங்கள் முழங்கட்டும். ஆடல் பாடல்கள் நடக்கட்டும். மன்னருக்கு மகத்தான வரவேற்பு கிடைக்க வேண்டும்” என்று அதிகாரிகளைப் பார்த்து கூச்சலிட்டார்.

அதிகாரிகளும், தளபதிகளும் வெகு விரைவாக போர்களத்திலிருந்து குதிரையை திருப்பிக் கொண்டு விராட தேசம் நோக்கி ஓடினார்கள். மிகப்பெரிய சிரிப்புடன் தேரில் சாய்ந்தபடி யுதிஷ்டர் அருகே வீற்றிருக்க, விராட மன்னர் நிதானமாய் ஊருக்குத் திரும்பினார். வழிநெடுக இருக்கின்ற வீரர்களைப் பார்த்து கை அசைத்தான். அவர்களை தொட்டுத் தடவினான்.

“நீங்கள் இல்லாவிட்டால் இந்தப்



போரில் நான் ஜெயித்திருக்க முடியாது," என்று யுதிஷ்டரைப் பார்த்து குழையும் குரலில் பேசினார்.

"அற்புதமாக சண்டை போட்டீர்கள். உங்கள் ஆற்றல் அதிசயமாக இருக்கிறது. வெறும் சூது விளையாடுபவரா நீங்கள்? இல்லை, பரம்பரை போர் வீரர். யார் அந்த பல்லவன்?"

"சமையற்காரன்."

"அடேயப்பா... அவனால்தான் இந்த போர் ஜெயித்தது. அவன்தான் என்னை பல இடங்களில் காப்பாற்றினான். அவன்தான் சுதர்மாவை அடித்து நொறுக்கினான். அவன் அடியில் எத்தனை பேர் விழுந்தார்கள். எவ்வளவு பலம். எத்தனை ஆக்ரோஷம். அவன் தேரை மிதித்து உடைக்கிறான் என்றால் அந்த உடம்பில் என்ன பலம் இருக்கும். அவன் அறைந்தால் யானைகள் சுருண்டு விழுகின்றன. எங்கு அடிக்க வேண்டுமென்றும் அவனுக்குத் தெரிகிறது. நகுல, சகாதேவரும் எதிரிகளை வேகமாக துரத்தினார்கள். உங்களுக்கெல்லாம் நான் மிகுந்த நன்றி சொல்கிறேன்.

உங்களுக்கு என் அரண்மனையில் இனி வேலை இல்லை. நீங்கள் இஷ்டம்போல சஞ்சரிக்கலாம். உங்களுக்கு என்ன வேலை பிடித்திருக்கிறதோ அதை எடுத்துக் கொள்ளலாம். அல்லது எதுவும் செய்யாதும் இருக்கலாம். உங்களுக்கு வேண்டிய துணிமணிகளும், பொற்காசுகளும், நவரத்தினங்களும், சொகுசான மாளிகைகளும், வேலைக்காரர்களும், பசுக்களும், எருதுகளும், குதிரைகளும், யானைகளும் நான் பங்கிட்டுத் தருகிறேன். என் தேசத்தை நீங்கள் காவல் காத்து ரட்சிக்க வேண்டும்" என்று யுதிஷ்டரை நோக்கி கை கூப்பினார். ஜெயித்த அந்த நேரம் மனம் உறுத்தி. இந்த வெற்றி தன்னால் ஆனது அல்ல என்பது தெளிவாக புரிந்து அருகிலே இருக்கின்ற யுதிஷ்டருக்கு தன்னை மீறி நன்றி சொன்னார். மனிதர்களுக்கு சில சமயம் அவர்களையும் அறியாமல் நல்ல குணங்கள் வெளிவந்து விடுகின்றன.

பசுக்களை துரத்திக் கொண்டு வெகுதொலைவு போய் விட்ட சுதர்மாவைத் துரத்திக் கொண்டு போனபடியால் விராட தேசம், ஒரு நாள் தொலைவில் இருந்தது. போரில் படைகள் சோர்ந்து போயிருந்ததால் அதிகம் விரட்டாமல் நிதானமாக, அவர்கள் ஊர் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

சுதர்மா மீது கர்ணனுக்கு நம்பிக்கை இல்லை. "இவன் வாய்ச்சாடகன். முன்னே போகிறான் என்பதால் சரி என்று விட்டுவிட்டேன். நாம் விராட தேசத்தை தாக்க வேண்டும். இவன் தெற்கேயிருந்து தாக்கியிருக்கிறான். நாம் வடக்கே போவோம். சுசர்மனை நோக்கி விராட தேசத்து அரசன் தன் படைகளுடன் போயிருக்கிறான். விராட தேசத்து கோட்டையும், அரண்மனையும் படைகளற்று இருக்கின்றன. இந்த நேரம் வடக்கே போய் அவர்களுடைய பசுக்களை கவர்ந்து வருவோம்" என்று சொல்ல, துரியோதனன் சம்மதித்தான்.

துரோணர், கிருபர், பீஷ்மர், அஸ்வதாமன், சல்லியன், துச்சாதனன், துரியோதனனோடு பெரும் படை கிளம்பி விராட தேசத்தின் வடக்கேயிருந்து உள்ளே நுழைந்தது. ஊருக்கு வெளியே மேய்ந்து கொண்டிருந்த பசுக்களை அவர்களுடைய தேர்கள் வளைத்துக் கொண்டன. இன்னும் வடக்கே நகர்த்தின. இடையர்கள் கைகளால் போராடி பார்த்தார்கள். தடிகளும், கைகளும் வெட்டப்பட்டன. சவுக்கால் விளாறப்பட்டார்கள். தலையில் அடிக்கப்பட்டார்கள். கொத்தாக பிடித்து தூக்கிசேற்றில் போடப்பட்டார்கள். அல்லது தேரின் பின்புறம் கட்டி தரதரவென்று இழுத்து வரப்பட்டார்கள். மீதமுள்ள இடையர்கள் பயந்து ஓடவேண்டும் என்பது போல சித்ரவதை செய்தார்கள். அவர்கள் நினைத்தபடியே சில இடையர்களை துன்புறுத்த பல இடையர்கள் பின்வாங்கினார்கள். தலைதெறிக்க காட்டுக்குள் ஓடினார்கள்.

ஒருவன் தேர் ஏறி அரண்மனை நோக்கி ஓடினான். அரண்மனையில் மன்னர் இல்லையென்று தெரியும். ஆனால், யாரிடம் சொல்வது என்று அவஸ்தைப்பட்டுக் கொண்டே விராட தேசத்து அரண்மனையை நெருங்கினான். உள்ளே ஓடினான். யார் இருக்கிறார்கள் என்று கேட்டான். விராட மன்னனின் மகன் உத்தரன் என்று சொன்னார்கள். ஆள் இல்லாத அரண்மனையில் கவலையாக படியேறி உத்தரன் முன்பு நெடுக விழுந்தான். எழுந்தான். கை கூப்பினான்.

உத்தரனைச் சுற்றி கன்னிப்பெண்கள் அவனோடு சந்தோஷமாக பேசிக் கொண்டிருந்தார்கள். அவனைச் சீண்டியும், அவனால் சீண்டப்பட்டும் கிடந்தார்கள். ஒரு அரசனைப்போல ஆசனத்தில் உட்கார்ந்து இருந்தவன், எதிரே

யாதவன் வந்து விழுந்ததும் அவர்களெல்லாம் பயந்து எழுந்திருந்தார்கள். அவர்கள் பயம் உத்தரனுக்கு அதிக கம்பீரத்தை கொடுத்தது.

"எதற்கு பயம். என்ன ஆயிற்று உனக்கு. எழுந்திரு. எதுகுறித்தும் பதறாதே. நான் இருக்கிறேன். என்ன விஷயம் சொல்." என்று மிக ஆதாரமாக் கேட்டான். அவனைச் சுற்றியுள்ள பெண்கள் இந்தப் பேச்சுக்கு கண் சொருகினார்கள். எப்பேர்பட்ட புருஷன் என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். உத்தரனுக்கு அது புரிந்தது.

"உங்களுடைய பசுக்களையெல்லாம் கௌரவர்கள் எடுத்துக்கொண்டு போகிறார்கள். மொத்தமாக வளைத்து விட்டார்கள். எங்களை அடித்து துவைத்தார்கள். பலரை தேரில் கட்டி இழுத்தார்கள். சிலரை சேற்றில் தள்ளினார்கள். சவுக்கால் விளாறினார்கள். ஆனால் பசுக்கள் மொத்தமும் அவர்களிடையே போய்விட்டன. அவர்கள் வடக்கே நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். நமது பசுக்களை நாம் மீட்க வேண்டும். அரண்மனையில் அரசர் இருப்பார் என்று நினைத்து வந்தேன். நீங்கள்தான் இருக்கிறீர்கள். உங்களைப் பற்றி உங்கள் தந்தையார் பெரிதும் சொல்லியிருக்கிறார். எனக்குப் பிறகு ஆளப் போகிறவர் இளவரசன் உத்தரன்தான் என்று சொல்லியிருக்கிறார். பலரும் உங்களை நம்பியிருக்கிறார்கள். படை தளபதிகள் உங்களை வணங்குகிறார்கள். இது உங்கள் வீரத்தை காட்ட வேண்டிய சமயம். கௌரவர்களை அடித்து உதைத்து நம் பசுக்களை நீங்கள் மீட்டே ஆகவேண்டும். உடனே கிளம்புங்கள். நீங்கள் போருக்கு தயாராக வேண்டிய நேரம் இது" என்று அவசரப்படுத்தினான்.

பாலகுமாரன்

"கவலைப்படாதே. யாதவனே, நான் இருக்கிறேன். கௌரவர்களை அடித்து நொறுக்குவேன். நான் யுத்தம் புரிந்து நீ பார்த்ததில்லை அல்லவா. நிச்சயம் பார்ப்பாய். இதற்கு முன் யுத்தம் நடந்திருக்கிறது. எனக்கு நல்ல சாரதி ஒருவன் கிடைத்தான். அந்த யுத்தத்தில் அற்புதமாக நான் ஜெயித்தேன். இப்போது எனக்கு சாரதி இல்லை. ஒரு நல்ல சாரதி கிடைத்தால் கௌரவர்களை கதற கதற அடிப்பேன். பீஷ்மருக்கு நான் யார் என்று தெரிய வைப்பேன்" என்று உரத்த குரலில் சொல்ல, சுற்றியுள்ள பெண்களெல்லாம் வாய் பொத்திக் கொண்டு வியப்போடு பார்த்தார்கள். இது நடக்குமா, பீஷ்மரை எதிர்ப்பாரா இவர், என்றெல்லாம் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

"இப்போதே கிளம்புகிறேன். எங்கே, கவசம் எங்கே?" என்று சொல்ல, அந்தப் பெண்களுக்கு சற்றுத் தொலைவில் அமர்ந்திருந்த பிருங்களைக்கு உத்தரனுடைய வீராவேச வசனங்கள் காதில் விழுந்தன. அவனை நன்கு அறிந்து, தொலைவிலிருந்து அவனைப் பார்த்து திரௌபதியும் மெல்ல சிரித்தாள்.

"யாதவனே, ஒரு சாரதி மட்டும் இருந்தால், ஒரு சாரதி மட்டும் இருந்தால்என் வீரத்தை இந்த உலகம் பார்க்கும். சாரதி இல்லாது ஒருவன் யுத்த களத்தில் எதுவும் செய்ய முடியாது. ஒரு மோசமான சாரதி தவறான இடத்திற்கு அழைத்துப் போய்விடுவான். ஒரு நல்ல சாரதிதான் எப்பொழுது இடைவெளி விடவேண்டும் என்றோ, எப்பொழுது நெருங்க வேண்டுமென்றோ தெரிந்து கொள்வான். என் சாரதி செத்துப் போய்விட்டான். இல்லையெனில் நான் இந்நேரம் கோட்டை வாசலை தாண்டியிருப்பேன். சே... ஒரு சாரதி...." என்று அதிகப்படியாக நடிக்கத் துவங்கினான்.

பிருங்களை என்கிற அர்ஜுனன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். சேலையை சரிசெய்து கொண்டான். விரல்களால் யாரும் அறியாமல் சமிஞ்ஞை செய்து திரௌபதியை அருகே வரவழைத்தான். எல்லோருக்கும் குடிப்பதற்கு நீர் கொடுப்பது போல சைந்தரியான திரௌபதி மெல்ல அர்ஜுனனிடம் வந்தாள். 'பிருங்களை நல்ல சாரதி. அர்ஜுனனுக்கு தேர் ஓட்டியவள் என்று சொல். நம்பி போருக்கு இறங்கலாம், நான் பார்த்திருக்கிறேன் என்று சொல்' என்று மெல்லிய குரலில் சொல்ல, சைந்தரியான திரௌபதி உத்தரனுக்கு அருகே போனாள். அவள் மாலினி என்று அறியப்பட்டிருந்தாள்.

"என்ன வேண்டும் மாலினி?" மிக கம்பீரமாக உத்தரன் விசாரித்தான்.

"உங்களுக்கு நல்ல தேரோட்டி கிடைத்து விட்டார்."

"அப்படியா, யாரது?"

"பிருங்களை"

"பிருங்களையா, நடனம் அல்லவா சொல்லிகொடுக்கிறாள்"

"இல்லை. அவர் அர்ஜுனனின் தேரோட்டி. பல யுத்தங்களுக்கு அர்ஜுனனுக்கு தேரோட்டியிருக்கிறார். அர்ஜுனன் வனவாசம் போனதால் எங்கு போவது என்றுத் தெரியாமல் இங்கு வந்து பெண்களுக்கு நடனம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். தையல் வேலையும், பூவேலையும் செய்து கொண்டிருக்கிறார். உண்மையில் அவர் பல போர் களம் கண்டவர்"

"நான் நினைத்தேன்." உத்தரன் தொடை தட்டினான். எதுவும் கேட்டபிறகு நான் நினைத்தேன் என்று சொல்வது தந்திரசாலிகளின் வழக்கம். பேச்சை நீட்டி முழக்குகிறவர்கள் தங்களை புத்திசாலிகளாக காட்டிக் கொள்ள சொல்லுகின்ற வசனம் அது. 'இந்த உயரம், இந்த அகலம் ஒரு பெண்ணுக்கும் இருக்காதே. எப்படி பெண் தன்மை' என்று யோசித்தான்.

அது வலிந்து பெற்ற பெண்மையாகத்தான் இருக்கிறது. உண்மையில் அது ஆணின் உடம்பு. பிருங்களையை வரச்சொல் என்று கட்டளையிட்டான். பிருங்களை என்ற அர்ஜுனன்

நாணி கோணிக் கொண்டு ஒரு பெண்ணைப் போல உத்தரன் எதிரே வந்து நின்றான். பயந்தவன் போல் நடித்தான். கலவரமானவன்போல் கால் தடுமாறினான். பெண்கள் சிரித்தார்கள். இத்தனை உயரம், ஆனால், எத்தனை பயம் என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள்.

“அர்ஜுனனுக்கு தேர் ஓட்டியதாகக் கேள்விப்பட்டேன். உண்மையா? நீ சாரதியா” என்று கேட்ட உத்தரன், தொடர்ந்து,

“நான் யார் என்று உனக்குத் தெரியாது. என்னுடைய வீரம் சொற்களுக்கு அப்பால் உள்ளது. அர்ஜுனன் போர் செய்வதை பார்த்திருப்பாய். இந்த உத்தரன் அர்ஜுனனுக்கு இணையாக ஏன் அவனைவிட திறமையாக இந்த கௌரவர்களோடு போரிடுவதை நீ பார்க்கப் போகிறாய்,” என்றான்.

அர்ஜுனன் திகைத்தான். அங்கிருந்தபடி திரௌபதியைப் பார்த்தான். திரௌபதி வாயை பொத்திக் கொண்டு அடக்க முடியாத சிரிப்போடு முகம் திருப்பிக் கொண்டாள்.

“நீ தேர் ஓட்டிய அர்ஜுனன் ஒரு மகா வீரன். பஞ்ச பாண்டவர்களில் ஒருவன். அவன் வனவாசம் போனது எனக்கு துக்கம் அளிக்கிறது. அந்த துக்கம் உனக்கும் இருக்கும். ஆனால், கவலைப்படாதே. இதோ உனக்கு இன்னொரு அர்ஜுனன் கிடைத்து விட்டான்” என்று சொல்ல, அவன் கர்வத்தை விட அந்த இளவரசன் தன் மேல் கொண்டிருந்த அன்பையும், பஞ்சபாண்டவர்கள் மீது கொண்டிருந்த பிரேமையையும் பார்த்து அர்ஜுனன் உத்தரனை நோக்கி கை கூப்பினான். திரௌபதி கண் கலங்கினாள்.

“எப்பேர்பட்ட வீரன். எவ்வளவு பெரிய வீரர்களையெல்லாம் கதற அடித்தவன். இடையறாது போர் செய்ய வல்லவன். தேவர்களும் அஞ்சி நடுங்குகின்ற போர் வீரன். பல அஸ்திரங்களுக்கு சொந்தக்காரன். துரோணாச்சாரியாரின் தலைமைச் சீடன். கிருஷ்ணனின் மிக நெருங்கிய நண்பன். பல பெண்களை நேசித்தவன். பல பெண்கள் நேசிக்க காரணமாக இருந்தவன். அப்பேர்பட்ட வீரனை, ஆண் அழகனை, சௌந்தர்யமான சொருபனை ஒரு பெண் போல சபையில் நிற்க வைத்து “ஹே கிருஷ்ணா, இது என்ன விளையாட்டு. அவன் எதிரே இன்னொருவன் தன்னை அர்ஜுனன் என்று சொல்லிக் கொள்கிறானே, இதைக் கேட்டு அவர் என்னைப் பார்க்கிறாரே, எத்தனை மோசமான விளையாட்டு. கிருஷ்ணா, இன்னும் எத்தனை நாள், என்னவெல்லாம் இவர்கள் அனுபவிக்க வேண்டுமோ அத்தனை அவமானங்களையும், வேதனைகளையும் இவர்கள் அனுபவித்து விட்டார்கள். இதற்கு மேலும் தொந்தரவு செய்வாயா. கிருஷ்ணா காப்பாற்று. கிருஷ்ணா காப்பாற்று.” அவள் உள்ளுக்குள்ளே கை கூப்பி கெஞ்சினாள்.

நல்லவர்களுக்கு சோதனை வரும். காப்பாற்ற கடவுள் துணையும் வரும். இதுதான் அவர்கள் வாழ்க்கையின் முழு அர்த்தம். வேதனையும், சோதனையும் அற்று இருப்பவன் வெறும் உலர் மரம். தருமரின் வழிகாட்டலால், வளர்ப்பால் அர்ஜுனன் இந்த வேதனையை மிக அழகாக எடுத்துக் கொண்டான். அவ்வப்போது உள்ளே வருத்தம் தோன்றினாலும் பிற்பாடு மிக நல்ல நலன்கள் வருவதற்கு இது காரணம் என்று புரிந்து கொண்டான்.

இது தன்னுடைய வேலை அல்ல. கிருஷ்ணனுடைய லீலை. தான் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம். தன்னை கிருஷ்ணர் கோபமூட்டிக் கொண்டிருக்கிறார். தனக்கு ரௌத்ரம் வருவதற்காக சில வேதனைகளை சொல்லியிருக்கிறார். கௌரவர்களின் அழிவுதான் முக்கியம். அது மனித குலத்திற்கு உண்டான நிவாரணம். க்ஷத்திரியர்களை, க்ஷத்திரியர்களை வைத்தே வேரருக்கின்ற வித்தை. இதை பரம்பொருளின் அம்சமான கிருஷ்ணர் பூமிக்கு வந்து செய்யத் துவங்கி விட்டார். இதைத்தான் பலமுறை யுதிஷ்டர் மிக சூசகமாகச் சொல்கிறார். அந்த பரம்பொருளான கிருஷ்ணர் அருகில் இருக்கும்பொழுது மனம் வேறு நிலைக்குப் போய் விடுகிறது.

இன்னும் என்ன செய்ய வேண்டும் சொல். இன்னும் எவ்வளவு தாழ வேண்டும் சொல். அத்தனையும் செய்கிறேன். இதற்கெல்லாம் அர்த்தம் இருக்கிறதென்று நீ நினைக்கிறாய் அல்லவா, அது போதும். இப்படி இருப்பதற்கு நீ சாட்சியல்லவா, அது போதும். இப்படி இரேன் என்று நீ சொன்னாயல்லவா, அது போதும். நான் ஆண். பெண்களை காதலிக்கிறவன். மிகவும் விரும்புகிறவன். அங்கம் அங்கமாய் ரசிக்கிறவன். ஆனால், அந்தப் பெண்களை அறிவாயா. அந்தப் பெண் யாரென்று உனக்குத் தெரியுமா. அவள் நடப்பதும், நிற்பதும், பின்னலிடுவதும், நெற்றிக்கு இடுவதும், உதட்டுச் சாயமும், உறங்குவதும், விழிப்பதும் எப்படி என்பதை தெரிந்து கொள்ளேன். பெண்களோடு நெருங்கிப் பழகினால்தானே, பெண்களோடு பெண்களாய் இருந்தால்தானே உனக்கு பெண்களைப் பற்றி புரியும் என்று எனக்கு சொல்லாமல் சொல்லியிருக்கிறது. அப்பொழுது என்னுடைய பெண் மோகம் ஒரு விவேகத்திற்கு வருமல்லவா. ஒரு விவரம் இருக்குமல்லவா என்றும் அர்ஜுனனுக்குப் புரிந்தது. அவன் அமைதியாக நின்றிருந்தான்.

“எங்கே உன்னுடைய கைகளை காட்டு. அர்ஜுனனுக்கு தேர் ஓட்டியிருக்கிறாயே” என்று சொல்ல, பிருங்களை தன் கைகளை காண்பித்தாள்.

அலங்காரமாய் இட்டுக் கொண்ட சாயங்களுக்கு நடுவே தடித்து காய்ப்புகள் காய்த்த இடங்கள் தெரிந்தன. கட்டை விரலுக்கு நேர் பக்கம் கடிவாளத்தை இழுத்து இழுத்து பெருத்த தடிமன் உண்டாகியிருந்தது. விரல்கள் எல்லாவற்றிலும் தழும்பு இருந்தது. முன் கை வரையில் வெட்டுத் தழும்பும், அம்பு குத்திய தழும்பும், கவசம் அழுந்திய தழும்பும், கையால் கதையை தடுத்த தழும்பும் இருந்தன. இது போர் செய்த உடம்பு.

உத்தரனுக்கு புரிந்து போயிற்று. தன்னைவிட இரண்டு பிடி உயரமாக இருக்கின்ற அர்ஜுனன் தோள்மீது கைவைத்தான். ஆயினும் நான் அரச குமாரன் தானே என்ற அலட்டலில் பேசத் துவங்கினான். "அர்ஜுனனுக்கு தேரோட்டி என்பதால் நான் உன்னை என் தேரோட்டியாக வைத்துக் கொள்ள சம்மதிக்கிறேன். என் திறமையை நீ நேரில் காணப் போகிறாய். யாரங்கே? இவனுக்கு கவசம் கொடுங்கள்" என்றுச் சொல்ல. அவனுக்கு கவசம் கொடுக்கப்பட்டது.

தூரத்தில் இருந்த திரௌபதியை குறும்போடு அர்ஜுனன் பார்த்தான். திரௌபதி கண்ணால் என்ன என்று வினவினாள். கவசத்தை எப்படி போட்டுக் கொள்வது என்றுத் தெரியாமல் தலை கீழாகவும், நேராகவும், பிறகு முதுகு பக்கமும் மாட்டிக் கொண்டான். பெண்கள் வாய் விட்டு சிரித்தார்கள். உத்தரன் பெரிதாக நகைத்தான். அவனிடமிருந்து கவசத்தை பிடுங்கி மார்பில் வைத்து அவனே முதுகில் கட்டினான். தானும் கவசம் அணிந்து கொண்டான். "போ, போய் நல்ல தேராக எடுத்துக் கொண்டு வா. நல்ல குதிரைகளில் பூட்டு. அவற்றை உன் வசப்படுத்து" என்று சொல்லி பிருங்களையை அனுப்பி வைத்தான். பிருங்களை மெல்ல நடந்து பின்னடங்கி பிறகு துள்ளிக் கொண்டு நடக்க, பெண் என்கிற தன்மை மெல்ல மெல்ல உதிர்ந்து ஆண் என்ற ஓட்டம் வந்தது. அர்ஜுனன் குதிரை லாயம் நோக்கி ஓடுவதை கண்கொட்டாமல் திரௌபதி பார்த்துக் கொண்டிருந்தாள். பெண் தன்மை இழந்து ஆண் தன்மைக்குத் தாவிய அந்தப் புருஷனை காதலுடன் நோக்கினாள்.

'கிருஷ்ணா, இந்த பாட்டிலிருந்தும், நடனத்திலிருந்தும், தையல் வேலையிலிருந்தும், பூ தொடுப்பதிலிருந்தும் அவரை விடுவித்து போருக்கு அனுப்பியிருக்கிறாய். அவருடைய இயல்புக்கு திருப்பியிருக்கிறாய். உனக்கு வந்தனம். உனக்கு வந்தனம்' என்று கிருஷ்ணனின் காலை தழுவி கண்களில் ஒற்றிக் கொண்டாள். மானசீகமாய் நமஸ்கரித்தாள்.

கோட்டையை விட்டு தேர் வெளியே போயிற்று. அர்ஜுனன் வேகத்திற்கு உத்தரனால் நிற்க முடியவில்லை. கொஞ்சம் மெல்ல ஓட்டு என்று எரிச்சலில் கத்தினான். "போர்களம் நோக்கிப் போகிறோம். நம் பசுக்கள் களவாடப்படுகின்றன. எப்படி மெல்ல போக முடியும். நாம் வீதி உலா போகவில்லை" என்று சொல்லி, இன்னும் விரட்டினான். வேறு வழியில்லாமல் தேரின் தூணை உத்தரன் இறுக கட்டிக் கொண்டான். அவன் வில் அவன் ஆசனத்தில் சாய்க்கப்பட்டிருந்தது.

தொலைவில் பசுக்கூட்டம் தெரிந்தது. பசுக்கூட்டம் முன்னே கர்ணன் போக, பின்னே துரியோதனன் போக, இடதும், வலதும் பீஷ்மரும், துரோணரும் போக, அதற்குப் பின்னே துரியோதனனின் பெரும்படை வளைந்து அரைச் சந்திரன் ரூபத்தில் பசுக்களுக்கு காவலாக போயிற்று. முன்னேபோய் தடுத்து நிறுத்த வேண்டும். வேகமாக தேரை செலுத்தி அந்தக் கூட்டத்தை வேறு வழியில் தாண்டி முன்னே போய் நிறுத்தினான். பசுக்கூட்டம் நின்றது. கர்ணனும், துரியோதனனும் நின்றார்கள். தேரின் தூணைக் கட்டியிருந்த உத்தரன் அதை விடவேயில்லை.



"தவறு செய்து விட்டேன் பிருங்களை. அங்கே பெண்களுக்கு நடுவே வீராவேசமாக பேசி விட்டேன். உண்மையில் இந்தப் படையை என் ஒருவனால் எப்படி சமாளிக்க முடியும். போர் வீரர்கள் யாருமே இல்லை. மொத்த படையும் என் தகப்பனார் அழைத்துக் கொண்டு போய் விட்டார். கோட்டைக்கு காவல்கூட இல்லை. பெண்கள்தான் வாளை இடுப்பில் வைத்துக் கொண்டு வாசற்கதவை திறந்து மூடுகிறார்கள். என்னை அரியணையில் உட்கார வைத்துவிட்டு போய் விட்டார். நான் வெறும் அலங்காரத்திற்கு உட்கார்ந்திருக்கிறேனே தவிர, நான் ஒன்றும் பெரிய போர் வீரன் இல்லை. பீஷ்மரையும், துரோணரையும், கர்ணனையும் எதிர்க்கின்ற அளவுக்கு எனக்கு வலிவு இல்லவே இல்லை. தேரை திருப்பு. போகலாம். என்னால் இந்த யுத்தத்திற்கு வர முடியாது. பசுக்கள்தானே. அறுபத்திநாலாயிரம் தானே. போனால் போகட்டும். மற்றபடிக்கு ஏதேனும் செய்து கொள்ளலாம். துரியோதனாதிகளை எதிர்ப்பது கடினம். நான் போருக்கு போக மாட்டேன்" என்று சொல்லி, அழுந்த அமர்ந்து கொண்டான். வில் காலின் கீழ் இருந்தது.

(தொடரும்)

மகாபாரதம்

83

எவன் காரியம் செய்ய வல்லவனோ அவன்தான் தலைவன்!

“அரசகுமாரனாநீ. க்ஷத்திரியனா. என்ன இப்படி பயப்படுகிறாய். இறந்து போவதற்குத்தானே பிறந்திருக்கிறோம். எங்கு இறந்தால் என்ன, எப்படி இறந்தால் என்ன, போரிட்டு இறப்பது என்பது பெரிய விஷயம் அல்லவா. அது வீர சொர்க்கத்திற்கு அனுப்பும் அல்லவா. அதைச் சொல்லித் தரவேயில்லையா.ஏன் வலிக்கும், உயிரிழப்புக்கும் பயப்படுகிறாய். எழுந்திரு. எழுந்திரு. உத்தரா போர் செய்” என்று அவனை தூண்டினான்.

ஆனால், உத்தரன் கேட்கவில்லை. அர்ஜுனன் பளீர் என்று அடித்து உலுக்கினான். அப்பொழுதும் அசையவில்லை. மறுபடியும் கைஓங்கிய போது உத்தரன் வலி தாங்காது தேரை விட்டு கீழ் இறங்கி ஓடினான். அர்ஜுனன் அவனை துரத்திக் கொண்டு தன்னுடைய புடவை பறக்க அவன் பின்னே ஓடினான். ஓடிப்போய் அவன் தலைமுடியை கொத்தாக

பிடித்தான். தூரத்திலிருந்து பீஷ்மர் இந்தக் காட்சியை பார்த்தார். யாரோ ஒரு பெண் பிள்ளை புடவை பறக்க ஓடி, ஒரு இளவரசன்போல இருப்பவன் தலைமுடியை பிடித்து தேருக்கு இழுத்து வருவதைப் பார்த்து மெல்ல சிரித்தார். இன்னும் உற்றுப் பார்த்தார். அது பெண் பிள்ளை அல்ல. ஆண். அந்த நடை உடை, உயரம், அகலமெல்லாம் அர்ஜுனனை ஒத்திருக்கிறது. அது அர்ஜுனனுடைய நடை. அவன் தான் இப்படி சற்று கால் அகட்டி கம்பீரமாக பெரிய அடிகள் எடுத்துவைத்து நடப்பான். அவன் முழங்கால்கள் வலுவுள்ளவை. அவன் தேரில் ஏறுகிறபோது முழங்கால் கள்மடிப்பு மிக அழகாக இருக்கும். ஒரு கால் தேரில் ஊன்றிய பிறகு மறுகால் வீசும். அந்த வீச்சு அந்தக் காலில் இருந்தது. தூக்கி பந்து போல் அந்த இளவரசன் போடப்பட்டான். அது அர்ஜுனன். ஒவ்வொரு அசைவும் அர்ஜுனனை ஞாபகப்படுத்துகிறது. ஆனால், தோன்றக்கூடிய நேரமா இது என்று சிந்தித்தார்.

துரியோதனனும் பார்த்தான். கர்ணனிடம் பரபரத்தான். "நான் பார்த்துவிட்டேன். அது அர்ஜுனன். இன்னும் பதிமூன்றாம் வருடம் முடியவில்லை. அர்ஜுனன் வெளிப்பட்டுவிட்டான். அது அர்ஜுனன். அது அர்ஜுனன். பெண் பிள்ளையல்ல" என்று கூவினான். கர்ணனுக்குத் தெரியவில்லை. ஆமாம் என்றோ, இல்லை என்றோ சொல்ல முடியவில்லை. மற்றவர்களும் சந்தேகமாக பார்த்தார்களேதவிர, அது அர்ஜுனன்தான் என்று தெரியவில்லை. வெறுமே துரியோதனன் கத்திக் கொண்டிருந்தான். பீஷ்மர் ஆமாம் என்று புரிந்து அமைதியாக இருந்தார். இல்லை சரி என்று சொல்லாது நடுநிலை காத்தார். அஸ்வத்தாமன் துரியோதனனை கேலிசெய்தான்.

"உனக்கு நாட்கள் நெருங்க யாரைப் பார்த்தாலும் அர்ஜுனனாகத் தெரிகிறது. ஒரு பெண் பிள்ளை ஒரு இளவரசனை துரத்திக்கொண்டு மறுபடி தேரில் போடுகிறாள். அவளைப் போய் அர்ஜுனன் என்கிறாயே" என்று சொன்னான். மற்றவர்கள் சிரித்தார்கள். துரியோதனனுக்கு கோபம் வந்தது. வேறொரு சமயத்தில் அஸ்வத்தாமனை அடித்து நொறுக்க வேண்டும்என்று மனதில் நினைத்துக் கொண்டான். கூர்மையாக பார்த்தான். தேர் அந்த இடத்தை விட்டு நகர்ந்தது. பசுக் கூட்டம் மேற்கொண்டு தொடர்ந்து வடக்கே போயிற்று. தேரை வேகமாகத் திருப்பி காடுகளுடே போய் ஒருஷமி மரத்தடியில் அர்ஜுனன் நிறுத்தினான். உத்தரனை கீழ் இறங்கச் சொன்னான்.

“நீ ஒரு க்ஷத்திரியன். ஒரு இளவரசன். ஒரு தேசத்தை பாதுகாக்க வேண்டியவன். மிகச் சிறந்த அரசனுக்கு மைந்தனாக பிறந்தவன். மரணத்தை கண்டு பயப்படுகிறாய். எதற்கு என்று கேட்கிறாய். துன்பத்தைக்கண்டு பயப்படுகிறாய். சுகமாக பெண்களுக்கு நடுவே வர்ணத் துணிகளோடு உட்கார்ந்து கொண்டிருக்கிற ஆணாக இருக்கிறாய். நீ எது சொன்னாலும் சிரிப்பதற்கும், கை தட்டுவதற்கும் ஒரு கூட்டம் இருப்பதால் உன்னை தலைவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். உண்மையில் தலைவன் எவன்காரியம் செய்ய வல்லவனோ அவன்தான். உன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அழத்தான் முடிகிறது. அழுகையை நிறுத்து” என்று அதட்டினான். அந்த ஷமி மரத்தில் ஏறச் சொன்னான். “அது பிணம் தொங்கும் மரம்என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.” “ஆமாம் பிணம்தான் தொங்குகிறது.என்ன இப்பொழுது. ஏறு.”

“நான் ஒரு க்ஷத்திரியன். இம்மாதிரி செயல்கள் செய்ய முடியாது.”

“பிரம்பால் அடிப்பேன். ஏறு” என்று சவுக்கை சொடுக்க, அவன் தாவி மரத்தில் ஏறினான். வேகமாக ஏறினான்.

அங்கு இன்னொரு சவம் தொங்கிக் கொண்டிருந்தது. “ஐய்யோ, இன்னொருசவம் இருக்கிறது.”

“அதைஅவிழ்”

“அது சவம். எப்படித் தொடுவது?”

“அது சவமில்லையடா சவமே, இறக்கு.” என்று உரக்க கத்தினான். அந்த சுருக்கு அவிழ்க்கப் பட்டுகயிற்றில் தொங்கிய சவம் போன்ற அந்த மூட்டை கீழே இறக்கப்பட்டது. மிகுந்த அருவருப்புடன் அந்த மூட்டையின் மேலுள்ள இலைகள் பிரிக்கப்பட்டன. துணி அகற்றப்பட்டது. பை உருவப்பட்டது. உள்ளுக்குள்ளே அற்புதமான, தங்கமயமான விற்களும், அம்பறாத் துணிகளும், அஸ்திரங்களும், வாட்களும் இருந்தன.

“பிணம் என்றுநினைத்தேனே. ஆயுதங்களல்லவா இருக்கின்றன. இது யாருடைய ஆயுதம்.”

“இதோ இந்த பெரிய வில் இதற்கு காண்டீபம் என்று பெயர். இது அர்ஜுனனுக்குச் சொந்தம்.”

அர்ஜுனன் அந்த வில்லை தடவி நெற்றியில் வைத்துக் கொண்டு முதுகில் முத்தமிட்டான். வளைத்து நாண் ஏற்றி ரீங்காரம் செய்தான். காடு அதிர்ந்தது. தொலைதூரத்திலுள்ள பசுக்களுக்கு கேட்டது. பசுக்களின் சப்தத்தால் கௌரவர்களுக்கு கேட்கவில்லை.

“இது பீமனுடையவில். இது தருமபுத்திரர் வில். இந்த கத்தி நகுலனுடையது. அந்த வில்லும், கத்தியும் சகாதேவனுடையது. இந்த கத்திகள் அர்ஜுனனுடையவை என்றெல்லாம் பிரித்து காட்டினான். சுருட்டி வைத்திருந்த கவசங்களை விரித்தான். ஒன்றை எடுத்து உதறி நெஞ்சில் வைத்து இறுக்கி அணிந்து கொண்டான். தன்னுடைய வில்லையும், அம்பறாத் தூணியையும் எடுத்துக் கொண்டு மற்றவைகளை சுருட்டச் சொன்னான். இறுக்க கட்டினான். மறுபடியும் கயிறு மேலே போட்டு வேகமாக உயர்த்தி அந்த இடத்திலே நிற்க வைத்தான். சுருக்கிட்டு அந்த மூட்டைகீழே விழாது மரத்தோடே இறுக்கினான். கையுறைகளை அணிந்து கொண்டான். இடுப்பு உடையை உதறிமடித்து தலைப்பாகை கட்டிக் கொண்டான். வில்லை உயர்த்தி அம்பை எடுத்து வைத்து மறுபடியும் குறி பார்த்தான். அந்த அம்பைஅம்பறாத்தூணியில் வைத்தான். “அர்ஜுனனுடையது என்கிறாய். இவ்வளவு சாதாரணமாக எடுக்கிறாயே.”

பாலகுமாரன்

“நான் அவருடையசாரதி அல்லவா. எனக்குத் தெரியாதா. அவர் எங்கே என்ன செய்திருப்பார் என்று” என்று சொல்ல, உத்தரனுக்கு நம்புவதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வளவு பெரிய அதிசயத்தை அவன் அருகே பார்த்ததில்லை. அவன் வயதுக்கு இது அதிகம். அவன் புத்திக்கு இது பெரிய விஷயம். அதனால் அதிகமான திகைப்போடு பிருன்கநனையையும், அந்த மூட்டையையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த வில்லை தடவிக்கொடுத்தான். கண்களில் ஒற்றிக் கொண்டான்.

“அர்ஜுனனை தொட்டது போலவே இருக்கிறது. உனக்கு அப்படி இருக்கிறதா” என்று பிருன்கநனை மீது கை வைத்தான். “ஆமாம் எனக்கும்அப்படித்தான் தோன்றுகிறது. ஒரு உயிரை தொட்டது போலவே இருக்கிறது. இது ஒரு ஆயுதமாகவேஎனக்குப்படவில்லை.” என்று சொல்ல, எல்லாம் புரிந்தது போல உத்தரன் சிரித்தான்.

“இப்போது என்ன செய்யப் போகிறாய்?” “எனக்கு நீதேர் ஓட்டு”

“அடேய், நான் அரசகுமாரன். நீதான் தேரோட்ட வேண்டும். நீ பிருன்கநளை. ஆணும் இல்லாத பெண்ணும் இல்லாத பிறவி. உனக்கு நான் தேரோட்ட வேண்டுமா?”

“நீ ஜெயிக்க வேண்டும் என்றால்நீதான் தேரோட்ட வேண்டும். இல்லையெனில் நானே தேரோட்டி நானே யுத்தம் செய்வே.” “யுத்தம் செய்யப் போகிறாயா?”

“ஆமாம். பசுக்களை மீட்க வேண்டாமா”

“பசுக்களை மீட்கத்தான் வேண்டும். ஆனால், உன்னால் யுத்தம் செய்ய முடியுமா?”

“வந்து பாரேன். முடியுமா என்று. அர்ஜுனன் ஆயுதங்கள் இருக்கும் பொழுது யார் அதை எடுத்து சரம் தொடுத்தாலும் ஜெயிக்கத்தான் போகிறார்கள். வேண்டுமென்றால் நீ யுத்தம் செய்கிறாயா?”

“இல்லை இல்லை. நான் யுத்தம்

செய்வதற்கில்லை. நீயே செய்." என்று சொல்லி, அவன் தேரில் சாரதியின் இடத்தில் அமர்ந்து கொண்டான். அர்ஜுனன் கண் மூடி அஸ்திரங்களைஜெபித்தான். வில்லை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். கிருஷ்ணனை நினைத்துக் கொண்டான். தன்குல தெய்வத்தை மகா காளியை வணங்கினான். நான்கு திசை தேவதைகளுக்கும் வணக்கம் சொன்னான். இதுவரை காப்பாற்றிக் கொடுத்த அந்த ஷமி மரத்தை அன்போடு தடவிக் கொடுத்தான். இன்னும் சிலநாட்களில் நாங்கள் வெளிப்பட்டு விடுவோம். அதுவரை மற்ற ஆயுதங்களை காப்பாற்றி வைத்திருஎன்று அதை அணைத்துக் கொண்டு வேண்டினான். ஷமி மரம் இலைகளை பொழிந்தது. ஒரே தாவலில் அர்ஜுனன் தேரின்மீது ஏறிக் கொண்டான். தேருக்கும், குதிரைக்கும் அதிர்ச்சியே இல்லை. அவன் ஏறிய விதம்பல நாள், பல முறைகள் தேரில் ஏறிய வேகம் தெரிந்தது. மறுபடியும் வேகமாக துரியோதனன்படையை நோக்கி போயிற்று. வளைந்து காடுகள் தாண்டி பசு மந்தையை மறித்து நின்றது.

“மறுபடியும் வந்து விட்டான் அந்த புடவைக்காரன்." என்று துரியோதனன் கத்தினான். கர்ணன் கூர்மையாகப் பார்த்தான்.

“இந்தமுறை புடவைக்காரன் தேரில் நின்றிருக்கிறான். அவன்கையில் வில் இருக்கிறது. தேரை ஓட்டுபவன்தான் இளவரசன். இடம் மாறியிருக்கிறார்கள். என்ன கூத்து இது? எப்படி ஒரு தேர்பாகன் வில்லை வளைத்துக் கொண்டு நிற்பான். இவன் தேரோட்டியாகஅல்லவா வந்தான். துரத்தி அல்லவா பிடித்தான். இப்பொழுது துரத்தி பிடிக்கப்பட்டவன் தேரோட்டுகிறான். துரத்தியவன் தேரில் ஆயுதத்தோடு இருக்கிறான். யார் அது?”

“அர்ஜுனன்."தொண்டை கிழிய உரத்த குரலில் துரியோதனன் கத்தினான். ஆம் என்று யாரும் சொல்லவில்லை.

"ஒருவனை நெருங்கிஅதட்டி நீ அர்ஜுனன் தானே என்று சொல்லி, அதற்குப் பிறகு அவனை அர்ஜுனன் என்று நாலு பேர் பார்க்க கண்டுபிடித்தால்தான் கண்டுபிடித்தது. தொலைவில்நின்று பனை மரத்தையும், தென்னை மரத்தையும் அர்ஜுனன் அர்ஜுனன் என்று சொன்னால் அது வேலைக்காகாது."என்று அஸ்வத்தாமன் உரத்து சொல்ல, துரியோதனன் பல் கடித்தான். தன் குதிரையை வேகமாக செலுத்தினான். சாரதியை அந்த தேர் நோக்கி செலுத்தச் செய்தான். அர்ஜுனன் பின் தொடர்ந்தான். போகும்போதே அவர்கள் வில்லையும், அம்பையும் தயாராக வைத்துக் கொண்டார்கள்.

ஆனால், நெருங்குவதற்குமுன்பு பல சரங்கள் அவர்கள் மீது பாய்ந்து வந்தன. தேரில் அடிபட்டன. கொடியை அடித்து வீழ்த்தின. தேரின் தூண்களை பெயர்த்தன. ஒரு பக்க சக்கரத்தை அடித்தன. தேரோட்டியின் மீது அம்பு தைத்தது. துரோணரும்,பீஷ்மரும் பக்கவாட்டிலிருந்து தேரை வேகமாக விரட்டிக் கொண்டு முன் பக்கம் வந்தார்கள். அவர்கள் வருவதற்குள் துரியோதனனின் தேர் நாசமாயிற்று. கர்ணனை நகரவொட்டாது அர்ஜுனன் அடித்தான்.அவன் அம்பு விடும் வேகத்தைப் பார்த்து உத்தரன் திகைத்தான். யார் நீ யார் நீ என்று கதறினான். ஆனால் அந்த கேள்விக்கு அர்ஜுனன் என்ற பிருங்கநளை பதில் சொல்லவில்லை. அவன் துரியோதனனை துளைக்கும் நோக்கத்திலேயே இருந்தான். துரியோதனனுடைய தேர் முடமாயிற்று.



குதிரைகள் அறுந்துநாலாபுறங்களிலும் ஓடின.

தேரோட்டி உருண்டு விழுந்தான். துரியோதனன் தேரில் அமர்ந்தபடி என்ன செய்வது என்றுத் தெரியாமல் இருக்க, கர்ணன் வேகமாக போரிட்டான். கர்ணனுக்கும் அடி விழுந்தது. பீஷ்மர் எதிர்க்க ஆரம்பித்தார். பீஷ்மரை மிகுந்த கோபத்தோடு அர்ஜுனன் நன்கு பழி வாங்கினான். துரோணர் மீது மட்டுமே அமைதியாக அடிபடாத அம்புகளை விட்டான். அஸ்வத்தாமன்மீது அம்பு கொஞ்சியது. கிருபரை சுற்றி வந்து வணங்கியது. எல்லோருக்கும் தெரிந்து விட்டது. இது அர்ஜுனன்தான். இந்த வித்தை அர்ஜுனன் தான் செய்ய முடியும். பீஷ்மருக்கு மட்டும்அடி விழுந்து கொண்டிருக்கிறது. எதனால்? அவன் பீஷ்மர் மீது கோபமாக இருக்கிறான் என்றுதெரிந்தது. அவன் கோபம் கண்டு பீஷ்மர் சந்தோஷப்பட்டார். வா மகனே வா. என்னுடைய வீரத்தைப்பார் என்று சொல்லி, பல் கடித்து கோபமாகி அவனை வேகமாகத் தாக்கினார். அவர் அம்புகள் வீணாகிப் போயின. அவர் வில் மீது அடி விழுந்தது. அவர் தேர்ப் பாகன் மீது அம்பு தைத்தது. அவன் இறங்கி ஓடினான். குதிரைகள் தாறுமாறாகஓடின. அடித்து துன்புறுத்த திசைமாறின. வேறு பக்கம் அவரை இழுத்துக் கொண்டு ஓடின. அவன் ஓடுகின்ற தேரின் கொடியை அறுத்தான். பீஷ்மரைப் பார்த்து வணக்கம் சொல்லி ஒரு அம்பு விட்டான். பீஷ்மரின் கட்டை விரலுக்கு அருகே அம்பு குத்தி நின்றது. மிகப் பெரிய வீரன்தான் இப்படிவணக்கம் சொல்ல முடியும். அது அர்ஜுனன். அவருக்கு தெள்ளத் தெளிவாக தெரிந்து விட்டது. ஆனால் இந்த நாள் சரியா.துரியோதனன் நிர்கதியாக நிற்கின்றபோது உதவிக்கு கர்ணன் போக, கர்ணன் துரியோதனன் சுற்றி நகரவே முடியவில்லை. உள்ளே நகரும் போதெல்லாம் அவன் குதிரையும், தேரும் அடி வாங்கியது. அவன் மீது விழுகின்ற சரங்களை அவன்தடுக்க வேண்டியிருந்தது. அந்த சரங்கள் வானத்தை மூடிக் கொண்டு ஒன்றாக அவன் தேரில் இறங்கின.தேர் முழுவதும் பாணங்களால் நிரம்பின.

தேரை உலுக்கி பாணத்தை ஒதுக்கி விட்டு அவன் வெறி கொண்டபடி விலகி ஓட்டினான். பிறகு கர்ணன் வேகமாக வந்தான். விழுந்த அஸ்திரங்களை எடுத்தான். மந்திரங்கள் ஜெபித்தான். பிருன்கநளை நோக்கி விட அந்த அஸ்திரங்கள் சீறி எழ, உத்தரன் பயந்தான்.

ஆனால், குதிரைகளுக்கு உத்தரவுகொடுத்துக் கொண்டே பிருன்கநளை குதிரைகளை செலுத்தினான். வந்திருந்த அஸ்திரங்களை உடைத்து எரித்தாள். மறுபடியும் அஸ்திரத்தில் கர்ணன் கை வைக்க, அவன் வில்லைஉடைத்தாள். கடுமையாக காயப்படுத்தினாள்.பீஷ்மர் பதறினார். துரோணர் பின்னடைந்தார். அஸ்வத்தாமன் சண்டையிட மனமில்லாது அர்ஜுனன்தான் என்று தெரிந்த பிறகு, என்ன அற்புதம் என்ன அற்புதம் இவனுக்கு இணையான வில் வீரன் யாருமே இல்லையே என்று அவனை நெஞ்சில் கொண்டாடி யுத்தம் செய்ததால் அவன் யுத்தம் வீணாக இருந்தது. எவன் தனுசினால் ஜெயிக்கமுடியாதவனோ அவனுக்கு எதிராக யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம்என்று கிருபருக்குத் தெரிந்தது. தன்னுடைய வித்தையை அர்ஜுனனுக்கு காட்டத் துவங்கினார்.

அர்ஜுனனை திணற அடித்தார். அவன் தேரை பாணங்களால் மூடினார். அவனை விலக்க வைத்தார். ஓய்வெடுக்கவைத்தார். இன்னும் சற்று விலகி ஓடும்படி செய்தார். இப்பொழுது அர்ஜுனன் கோபமானான். கிருபரை நோக்கி தன் பாணங்களை செலுத்தினான். வணக்கம் செலுத்திய பாணங்கள் இப்பொழுது அவரைநோக்கி வந்தன.

உடம்பில் தைத்தன. தேரை உடைத்தன. குதிரைகளை கொன்றன. தேர் பாகன் தலை சீவிப் போயிற்று. கிருபர் இறங்கி வேறு ஒரு தேரில் ஏறிக் கொண்டார்.

முற்பகலில் ஆரம்பித்த யுத்தம்மூன்று நாளில் முடிவுக்கு வந்தது. துரியோதனன் படைகள் சிதறி ஓடின. வேறு பக்கம் போய்நின்று கொண்டன. பசுக்களை வளைத்து அவர்களிடமிருந்து அர்ஜுனன் மீட்டான். வேறு பக்கம் பசுக்களை அனுப்பினான். பசுக்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று வேறு பக்கம் போயின.

உத்தரன்குரலை அடையாளம் தெரிந்து கொண்டன. உத்தரனும் வாய் திறந்து கத்தி அவைகளை விரட்ட, அவைவிராட தேசம் நோக்கி ஓடின. அர்ஜுனன் கர்ணனை அடித்து விரட்டினான்.

கர்ணன்--- சாரதி கர்ணன் ரத்தம் ஒழுக நிற்பதைப் பார்த்துபோரிலிருந்து விலகி ஓட்டினான். வெளியேறினான் கர்ணன் வெளியேறுவதைகண்டு துரியோதனன் பின் தொடர்ந்தான். மற்றவர்களும் கலைந்தார்கள். துரியோதனன் படை கடுமையாக தண்டிக்கப்பட்டு பசுக்களை விட்டுவிட்டு வடக்கே அம்பு விடாத இடத்தில் போய் நகர்ந்து நின்று கொண்டது. மிகப் பெரிய இரைச்சலோடு அர்ஜுனன் சுற்றி சுற்றி வந்தான்.

அவன் அருகே வரும்போது அதுஅர்ஜுனன் என்று எல்லோருக்கும் தெரிந்து போயிற்று. அப்போது விராட தேசத்தில் விராடமன்னர்கீழ் இறங்கினார். கன்னிகையர்கள் அவரை வரவேற்றார்கள். நடன மாதர்கள் அவர் பாதம்பணிந்தார்கள். பூமாலை சாத்தினார்கள். மேலே பூ

பொழிந்தார்கள். நெற்றித் திலகமிட்டார்கள். அவருடைய அரசிகள்வந்து நின்று வணங்கி நின்றார்கள். கணவனுக்கு திலகமிட்டார்கள். நெற்றி முழுவதும் செந்நிறதிரவத்தால் தடவப்பட்டு யுத்தத்தில் மிகப் பெரிய வெற்றியை சம்பாதித்தவன் போல அலட்டலாக தேரிலிருந்து விராட மன்னன் கீழ் இறங்கினான்.

பெண்கள் கைவாகு கொடுத்து அவனை படியில்ஏற்றினார்கள். "கங்கரே, குளித்து விட்டு வாரும். என் மகன் தனி ஒருவனாக போர் செய்ய போயிருக்கிறான். வடக்கே பசுக்களைதுரியோதனன் கவர, என்னுடைய வீர மகன் அங்கு உடனடியாக கிளம்பி போயிருக்கிறான். யாரோ பிருன்கநளைதேர் ஓட்டுகிறாளாம். இவன் போதும் என்று சொல்லி விட்டான். அவன் மிகப் பெரிய வீரன் தெரியுமா."என்று சொல்ல,

"ஆமாம். உங்கள்பிள்ளை வேறு எப்படி இருப்பான். மிகப் பெரிய வீரன்தான். ஆனால், பிருன்கநளை இருக்கும்வரை- உங்கள் பிள்ளைக்கு எந்த ஆபத்தும் இல்லை.""அது சரி.உத்தரன் நன்றாக சண்டையிடுகிறவன்.""ஆமாம். உங்கள் பிள்ளையாயிற்றே.சொல்லிக் கொடுத்திருப்பீர்கள். ஆனால், பிருன்கநளை மிகுந்த பலசாலி. சாமார்த்தியமுள்ளவள். அவள் இருந்த யுத்தத்தில் தோற்றது என்ற சரித்திரமேஇல்லை."கங்கன் குளித்துவிட்டு வந்தார். அரசனும் வாசனையாக வந்து சேர்ந்தார்."நான் மிகசந்தோஷமாக இருக்கிறேன். யார் என்ன கேட்டாலும் கொடுக்கும்படியான இடத்தில் இருக்கிறேன்.என்னுடைய வலது கை சூதாடும், இடது கை ஏதேனும் வாரி வழங்கிக் கொண்டிருக்கும். அந்தணர்களை வரச் சொல். சூதாட்ட பலகை விரி. கங்கா, உட்கார். பாய்ச்சிகைஎடுத்துக் கொள். சொல். தாயம் என்று சொல்."அவர்கள் எதிரும் புதிருமாக உட்கார்ந்து கொண்டு பகடைக்காயை உருட்டினார்கள். காய்கள் நகர்ந்தன. வெற்றிக்கும், வெட்டுப்பட்டதற்கும் அவன் பெரிதாக சிரித்தான்."என் மகன் சென்றிருக்கிறான்ஐயா. யுத்தத்திற்கு என் பிள்ளை சென்றிருக்கிறான். எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேன் தெரியுமா.அவன் வெறுமே தண்டப்பிள்ளையாக வளருகிறானோ, பெண் போகத்தில் இருக்கிறானோ என்றெல்லாம் பயந்தேன். சற்றும் பயப்படாது தனி ஒருவனாக போயிருக்கிறான்.""அரசே, செய்தி வந்தது"

"என்ன?"

"துச்சாதனன் அடிபட்டு விட்டான்.அவன் குதிரைகள் விழுந்து விட்டன. உங்கள் பிள்ளை ஜெயித்து விட்டார்."

"அப்படி சொல் செய்தியை. இந்தாவாங்கிக் கொள்"பொற்கிழி தூக்கி போடப்பட்டது."கங்கா, ஒரு எண்ணிக்கைச் சொல்."

கங்கன் எண்ணிக்கையை சொன்னார்.அரசன் பாய்ச்சிகையை உருட்டினான். வெற்றி பெற்றான். எகிறி குதித்தான்."என் பிள்ளைஜெயித்தான். நானும் ஜெயித்து விட்டேன். நானும் படை எடுத்து திரிகர்த மன்னன் சுசர்மனை அடித்து வீழ்த்தினேன். இதோ என் பிள்ளை துச்சாதனனை துரத்தியிருக்கிறான். அடித்து வந்திருக்கிறான். அடுத்தது யார்? என்ன அங்கே?"

"அரசே, துரியோதனன் வீழ்ந்தான்.அவன் தேர் துண்டாயிற்று.""அப்படியா. துரியோதனன் தேர்துண்டாயிற்றா. என் மகனாலா, கங்கா, என்ன இது ஆச்சரியமாக இல்லை?"

"உடன் பிருன்கநளைபோயிருக்கிறாள் அல்லவா, அதனால் எந்தக் கவலையும் வேண்டாம்."

"இல்லை. உடைத்தது உத்தரன்"

"இருக்கும். உத்தரன் தான் உடைத்திருப்பான். ஆனால் தேரோட்டியது பிருன்கநளை அல்லவா, அதனால் அங்கு நல்லபடியாக போர் நடந்திருக்கும்."

""நீ சொல்வதும்சரி. அடுத்தது யார் வருகிறார்கள் குதிரையில். வரச் சொல். அதுவரை ஆடுவோம்"அரசன் ஆடினான். கங்கனும் காய் உருட்டினார். தொலைவிலே குதிரையிலிருந்து இறங்கி ஓடிவந்தவன் வந்து நின்றான்."கர்ணன் வதைபட்டான். போரிலிருந்து ஒதுங்கிக் கொண்டான்."

"" அடேங்கப்பா. கர்ணனையே வதைத்தவன்என் மகன் உதயகுமாரன். வாழ்க வாழ்க. எல்லோருக்கும் தானம் கொடுங்கள். அந்தணர்களை அழைத்துதானம் கொடுங்கள். அத்தனை மக்களுக்கும் தானம் கொடுங்கள். விராட தேசம் மிகப் பெரிய கொண்டாட்டத்தை நடத்தட்டும். என் மகன் ஜெயித்திருக்கிறான் கங்கா.""ஆமாம். பிருன்கநளை இருக்க ஜெயிக்க முடியாதவர் உண்டோ."

"ஐயா, பீஷ்மரும்,துரோணரும் பின்னடைந்தார்கள். கிருபரை உங்கள் மகன் ஒன்றும் செய்யவில்லை""அடடா, கிருபரைஒன்றும் செய்யக் கூடாது. துரோணரை என்ன செய்தான்""துரோணரைபயமுறுத்தினார். பீஷ்மரோடு கடும் சண்டை" போட வேண்டுமல்லவா.மேலும் என்னஆயிற்று?"

"பீஷ்மர்மெல்ல பின்னடைந்து கொண்டிருக்கிறார். அவர் கை தாழ்ந்து கொண்டிருக்கிறது. கோபமில்லாமல் உங்கள் மகன் யுத்தம் செய்து கொண்டிருக்கிறார்." "அப்படியா.அப்படியா. பீஷ்மருக்கு எதிராகவா. அவர் பெரிய மனிதராயிற்றே.--- பார்த்தாயா, எப்பேர்பட்ட மனிதரை நான் புதல்வனாக பெற்றிருக்கிறேன்."

"நீங்கள்மிகச் சிறந்த வீரனை புதல்வனாக பெற்றிருக்கிறீர்கள். ஆனால், உடன் பிருன்கநளை இருப்பதால் பீஷ்மரென்ன. இந்திரனே வந்தாலும் ஜெயிக்க முடியாது."

"நான் என்மகனைப் பற்றி சொல்கிறேன். நீ பிருன்கநளை பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாய். இது அடாதபேச்சு." "அப்படியல்ல.யார் சாரதியாக இருக்கிறார்களோ. அவர்கள் யுத்தத்தில் முக்கியமல்லவா."

"இல்லையென்று சொல்லவில்லை.ஆனால், ஜெயித்தது உத்தரன்."

(தொடரும்)

மகாபாரதம்

84

"உன் வாழ்க்கையில் நீ யாரை பார்க்க வேண்டும் என்று நினைக்கிறாய் உத்தரகுமாரா?" அர்ஜுனன் இதுகாறும் அடைக்கலம் கொடுத்த அந்த குடும்பத்தின் இளவலைப் பார்த்து அன்போடு கேட்டான்.

"அர்ஜுனன். அர்ஜுனனைத்தான் நான் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். அவன்தான் என் கனவுப் புருஷன். அந்த வீரத்தை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். என் தந்தையும் அதிகம் சொல்லியிருக்கிறார். என் வீட்டில் அடிக்கடி அர்ஜுனனைப் பற்றி பேசுவோம். அவருக்கு நேர்ந்த துன்பங்கள் கண்டு நாங்கள் வருத்தப்பட்டிருக்கிறோம். உண்ணாமல் இருந்திருக்கிறோம்."

அர்ஜுனன் மெல்லியதாய் சிரித்தான். "நீ பார்க்க நினைக்கின்ற அர்ஜுனன் நானே." என்று சொல்லி நிறுத்தினான்.

உத்தரகுமாரன் சட்டென்று தரையில் அமர்ந்தான். கொஞ்சம் அலங்கோலமாக பின் கைஊன்றி எப்படி அமர்வது என்றுத் தெரியாது ஒரு வியப்பில் சரிந்த வண்ணம் இருந்தான். "நீங்களா? அர்ஜுனனா?"

"ஆமாம். நான்தான் அர்ஜுனன். உத்தரகுமாரா, நானே பார்த்தனான அர்ஜுனன். பத்து பட்டத்தோடு என் பெயர் அனைத்தையும் கேள்: அர்ஜுனன், பால்குணன், ஜிஷ்ணு, க்ரீடி, ஸ்வேத வாஹனன், பிபத்சு, கிருஷ்ணன், சவ்யஸாசி, தனஞ்செயன் ....."

"உன்னை விஜயன் என்றும் அழைப்பார்கள் அல்லவா. விஜயன் என்ற பெயர் எப்படி உண்டாயிற்று? ஸ்வேத வாஹனன் என்றால் என்ன அர்த்தம்? க்ரீடி என்ற பெயர் உங்களுக்கு ஏன் வந்தது? சவ்யஸாசி என்ற பெயர் எதனால் பிரசித்தி அடைந்தது? பால்குணன், ஜிஷ்ணு, கிருஷ்ணன், பிபத்சு, தனஞ்செயன் என்னும் பெயர்கள் உண்டாக காரணம் என்ன?"

"நான் எல்லா தேசங்களையும் வென்று அதில் உள்ள தனங்களை எடுத்துக் கொள்வதால் எனக்கு தனஞ்செயன் என்ற பெயர் வந்தது. போர்வெறி பிடித்த வீரர்களை நான் வெல்லாமல் திரும்பியதில்லை. அதனாலேயே என்னை விஜயன் என்று மக்கள் அழைக்கிறார்கள். என்னுடைய தேரில் உள்ள குதிரைகள் வெண்மையானவை. வெள்ளை குதிரைகள் எனக்கு ராசியானவை. எனவே ஸ்வேத வாஹனன் என்ற பெயர் வந்தது. ஸ்வேதம் என்றால் வெள்ளை என்று அர்த்தம். இமயத்தின் சிகரத்தில் பால்குண நட்சத்திரத்தின் பிற்பகுதியில் பகல்நேரம் நான் பிறந்ததால் எனக்கு பால்குணன் என்று பெயர். தேவராஜனிடமிருந்து நான் ஒளிமிகுந்த ஒரு கிரீடத்தை வாங்கி அணிந்து கொண்டேன். அதனால் என்னை க்ரீடி என்று அழைக்கிறார்கள். யுத்தத்தின்போது அருவெறுக்கத்தக்க செயல்களைச் செய்வதில்லை. தருமத்திற்கு கட்டுப்பட்டே செய்கிறேன். தவறாக செய்யாததாலேயே பிபத்சு என்ற பெயர் பிரகாசித்தது. வலது கையில் வில் பிடித்து இடது கையால் அம்பை இழுத்து விட முடியும். அதேபோல இடது கையில் வில் பிடித்து வலது கையால் அம்பு விட முடியும். இதனால் என்னை

“துரியோதனன்,
அரசன் என்று சொல்லிக்கொள்ளும்
யோக்யதை
இல்லாதவன்!”



சவ்யஸாசி என்று மக்கள் அழைக்கிறார்கள். அர்ஜுனன் என்ற சொல்லுக்கு வண்ணம் அல்லது ஒளி. ஒளி சமத்தன்மை. தவளம். இதற்கு வெண்மை என்று பெயர். தூய்மை என்றும் வைத்துக் கொள்ளலாம். ஒளி எல்லா இடத்திலும் சமமாக பரவுகிறது. அதைப்போல நான் மனிதரிடத்தே சமபாவம் கொண்டிருக்கிறேன். ஒரு ஒளியைப் போல இயங்குகின்றேன். இதனால் என்னை அர்ஜுனன் என்றும் அழைக்கிறார்கள்."

"உனக்கு கிருஷ்ணன் என்ற பெயரும் உண்டா?"

''உண்டு. என்னுடைய நிறம் ஷாம கௌரம். ஒருமாதிரி கருப்பு கலந்த பழுப்பு. நான் மிக அழகனாக இருப்பதால் மற்றவர்களோடு ஒப்பிடும்போது சற்று கருப்பாக இருப்பதால் எனக்கு கிருஷ்ணன் என்ற பெயர் என் தந்தையால் கொடுக்கப்பட்டது. பாண்டு என்னை கிருஷ்ணா என்றுதான் அழைப்பார்."

உத்தரகுமாரன் மெல்ல எழுந்தான். கை கூப்பினான். சாஷ்டாங்கமாக அர்ஜுனன் காலில் விழுந்து எழுந்தான்.

''குந்தியின் மைந்தா, அர்ஜுனா, உன்னுடைய தரிசனம் எனக்கு கிடைத்தது, என்னுடைய முன்னோர் செய்த தவம். நான் செய்த புண்ணியம். தனஞ்செயா, மகாபாகோ மகாரதே, சிவந்த கண்களை உடைய, கருத்த புஜங்களை உடைய உங்களை பார்க்கும்போது நான் வெட்கமடைகிறேன். என்னை அறியாமல் நான் உங்களிடம் அதட்டலாகவும், அநாகரீகமாகவும் பேசியதை தயவுசெய்து மன்னித்து விடுங்கள். நீங்கள் செய்த அற்புதமான காரியங்களை நான் கேட்டிருக்கிறேன். உங்களுக்கு நிகராக எவரும் இல்லை என்று என்பது எனக்குத் தெரியும். நீங்கள் ஜெயிக்க முடியாதவர் என்பதை நான் அறிவேன். உங்களுடைய பாதுகாப்பு விராடதேசத்திற்கு கிடைத்திருக்கிறது என்பது நாங்கள் செய்த பாக்கியம். முன்பு கனவாக இருந்த அன்பு இப்பொழுது நனவாகி விட்டது. நான் நெஞ்சில் சுமந்த உங்களை, இதோ என் கைகளில் என் தோள்களில் சுமக்கப் போகிறேன். ஒருமுறை உங்களை தழுவிக் கொள்ளும் பாக்கியத்தை கொடுங்கள்" என்று சொல்லி நிமிர்ந்து நின்று இரண்டு கைகளை விரித்து உயரமும் அகலமும் அழகனுமாய் நின்ற அர்ஜுனனின் நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்டான்.

"எங்கள் தேசத்தின் மிகமோசமான ஒரு நேரத்தில் நீங்கள் துணைக்கு வந்திருக்கிறீர்கள். எங்களோடே வாழ்ந்திருக்கிறீர்கள். உங்களுக்கு தகுந்த மரியாதை கொடுக்க நாங்கள் தவறிவிட்டோம். பணி செய்யும் ஆளாக நினைத்து விட்டோம். அர்ஜுனரே என் குடும்பமும், நானும், என் தந்தையும் என்ன தவறு செய்திருந்தாலும் தயவு செய்து இரக்கத்தோடு எங்களை மன்னித்து விடுங்கள்.

''உத்தரகுமாரா, என்னை அர்ஜுனன் என்பதை தெரிந்து கொண்டாய். உன் தகப்பனாரோடு அவருக்கு அருகே இருந்து சூதாடுகின்ற அந்தணர் கங்கன் என்பவர் தருமபுத்திரர். உங்கள் அரண்மனையில் தலைமை சமையல்காரன் பல்லவன் பீமன். அதே போல் நகுலன் குதிரை லாயத்திலும், சகாதேவன் பசுக்களோடும் இருக்கிறான். திரௌபதி சைலேந்தரிணியாய் மாலினி என்ற பெயரில் உங்கள் அரண்மனையில் வசிக்கிறாள். இந்த அஞ்ஞாத வாசம் செய்ய நாங்கள் தேர்ந்தெடுத்த இடம் உங்களுடையது. இங்கு பத்திரமாக இருந்தோம். உங்களால் எந்தவித தீங்கும் எங்களுக்கு ஏற்படவில்லை. இதை நன்றியோடு சொல்லிக் கொள்கிறேன்" என்றான்.

பாலகுமாரன்

அர்ஜுனன் உத்தரனை அழைத்துப்போய் தருமருக்கு அறிமுகம் செய்வித்து, எப்பொழுது, எப்படி தோன்றுவது என்று ஆலோசனை செய்தான். உத்தரகுமாரன் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

வெள்ளை ஆடைகளை அணிந்து அரசருக்குரிய சின்னங்களை தரித்து தங்கள் ஆயுதங்களுடன் பஞ்சபாண்டவர்கள் அரசவைக்கு வந்தார்கள். ஒரு குண்டத்தில் ஐந்து தீ நாக்குகளைப் போல அரண்மனையில் தனியாக உத்தரனால் அமைக்கப்பட்டிருந்த அரியாசனங்களில் அமர்ந்தார்கள். சபை கூடியது. அவர்களை வியப்போடு பார்த்தது.

விராட மன்னன் வந்தான். கங்கன் அரியணையில் உட்கார்ந்ததைப் பார்த்து, நீ எனக்கு சூதாடுகின்ற பிராமணன். ஒரு அரியணையில் அரசரைப் போல அமர்ந்திருக்கிறாயே. யார் நீ. என்ன கோலம் இது?" என்று வேகமாகப் பேசினான்.

"விராட மன்னா நினைவிருக்கிறதா. உற்றுப் பாருங்கள். நான் பிருகன்னளை இல்லை அர்ஜுனன். இதோ உங்கள் முன் நிற்கிறாரே கங்கன் என்று, அவர் யுதிஷ்டர். பஞ்சபாண்டவர்களில் மூத்தவர். உங்கள் சமையல் அறையில் அமர்ந்து உங்களுக்கு

சமைத்து கொடுத்தானே, போரில் உங்களுக்கு நெருக்கமாக நின்று உங்கள் உயிரை காப்பாற்றினானே அந்த பல்லவன், பீமன், என் மூத்த சகோதரன். பிறகு நான். இதோ உங்கள் தொழுவத்தில் குதிரை லாயத்தில் வேலை செய்த நகுலனும், பசு தொழுவத்தில் இருந்த சகாதேவனும், நாங்கள் ஐவரும் பஞ்ச பாண்டவர்கள். இங்கு சைலேந்தரிணியாக வேலை செய்த மாலினி, திரௌபதி. எங்கள் பத்தினி. நாங்கள் அறுவரும் உங்கள் தேசத்தில் அருமையாக வசித்து வந்தோம். நீங்கள் எங்களை நன்கு கவனித்துக்கொண்டீர்கள். உங்கள் அதிகாரிகளும், மக்களும் மிகுந்த பிரியமாக இருந்தார்கள். எங்களை கௌரவமாக நடத்தினார்கள். விராட மன்னரே, இதற்கு நன்றி சொல்கிறோம்.'' என்று அவர்கள் அனைவரும் எழுந்து நின்று கை கூப்பினார்கள்.

விராட மன்னன் மிரண்டான். "உங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். மிக அற்புதமான மகாரதிகள் என்று பலரும் புகழ கேட்டிருக்கிறேன். நீங்கள் அறுவரும் என் அரண்மனையில் வந்து தங்கியிருந்தீர்கள் என்பது நான் செய்த பாக்கியம். இந்த இடத்தில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் அல்லது ஒருநாளில் ஒரு செயலில் உங்களை இழிவுபடுத்தியிருந்தால் தயவு செய்து அது அறியாமல் செய்த பிழை என்று நினைத்து மன்னிக்க வேண்டும்." என்று கை கூப்பினான்.

"என்னுடைய அரண்மனை, என் செல்வம், என் சேனை, என் அதிகாரிகள், என் மக்கள் அத்தனைபேரும் உங்கள் வசம். உங்கள் சொத்து. இது உங்கள் தேசம். நீங்கள் இங்கு எத்தனை காலம் வேண்டுமானாலும் இருக்கலாம். போதாது என்று எனக்குத் தோன்றுகிறது. உங்களோடு இன்னும் நெருங்கிய நிலைக்கு நான் வரவேண்டும் என்றுத் தோன்றுகிறது. எந்த ஒரு க்ஷணத்திலும் நீங்கள் என்னை கோபித்துக் கொள்ளக்கூடாது என்ற பயத்தோடு நான் இதை கேட்கிறேன், என் மகள் உத்தரையை அர்ஜுனனுக்கு மனைவியாகத் தருகிறேன். தயவுசெய்து என்னோடு நீங்கள் திருமண சம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டும்." என்று கேட்டான்.

தருமபுத்திரர் திரும்பி பார்த்தனை பார்த்தார்.

''இல்லை. உத்தரை சிறிய பெண். அவளை என் மகன் அபிமன்யுவிற்கு மனைவியாக ஏற்கிறேன். என் மருமகளாக வரிக்கிறேன். அபிமன்யுவிற்கு உத்தரை மிகவும் ஏற்றவள்." என்று அர்ஜுனன் சொல்ல தருமபுத்திரர் சரி என்று சொன்னார்.

"ஏன் என் மகளை ஏற்க மறுக்கிறீர்கள் என்று விராட மன்னன் பயந்து கேட்க, அவளிடம் நான் ஒரு குருவைப் போல பழகியிருக்கிறேன். குருவும் தந்தையும் ஒன்று. ஒரு தந்தை பாவத்தில் தான் நான் அவளுக்கு நடனம் சொல்லிக் கொடுத்தேன். அதுவும் தவிர, இந்த ஒரு வருடம் விரதமாக நாங்கள் இருந்தோம். அப்படித்தான் சபதம் எடுத்துக் கொண்டு உங்கள் தேசத்திற்குள் வந்தோம். எனவே, நான் ஒரு வருடம் முழுவதும் மிக நெருக்கமாக உத்தரையிடம் இருந்ததாக அதனால் இந்த திருமண பந்தம் ஏற்பட்டதாக ஊரோ, என் உறவுகளோ நினைத்து விடக்கூடாது. நான் குருவாக இருந்தேன் என்பதாலும், நான் உத்தரை மீது எந்த விருப்பமும் இல்லாது பிரம்மச்சரியத்தில் இருந்ததாலும் அவளை என்னுடைய மருமகளாக ஏற்கிறேன். இதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டும்."

''சரி. மாப்பிள்ளையாக இல்லாது போனால் என்ன, சம்பந்தியாக அர்ஜுனன் இருக்கிறார். அப்படி அர்ஜுனன் எனக்கு சம்பந்தியாக வந்து விட்டால் வேறு என்ன கஷ்டங்கள் எனக்கு வரும். வேறு எவர் என்னை எதிர்க்கக்கூடும். உங்கள் அன்பு எனக்கு கிடைத்தது போதும்" என்று உத்தரையை கொண்டு வந்து பஞ்ச பாண்டவர்கள் முன்பு நிறுத்தினான். உத்தரை ஓடிப் போய் திரௌபதியை தழுவிக் கொண்டாள்.

திருமண ஏற்பாடுகள் செய்யத்துவங்கினார்கள். ஸ்ரீகிருஷ்ணருக்கு செய்தி போயிற்று. ஸ்ரீகிருஷ்ணரும், பலராமரும் தங்கள் குடும்ப சகிதம் விராடதேசத்திற்கு பல்லாயிரக்கணக்கான யானைகள், குதிரைகளோடு வந்தார்கள். உத்தரைக்கு கொடுக்க வேண்டிய, பஞ்ச பாண்டவர்கள் மூலம் தரவேண்டிய சீர் அனைத்தையும் ஸ்ரீகிருஷ்ணரே கொண்டு வந்திருந்தார். அதுவும் தவிர அபிமன்யு அவர் வம்சத்து பெண்ணின் பிள்ளை அல்லவா. அந்த உரிமையோடும் சீர் செனத்தி எடுத்து வந்திருந்தார். பலராமர் முன்பும், ஸ்ரீகிருஷ்ணர் முன்பும், தருமபுத்திரர் முன்பும் மிகச் சிறப்பாக

திருமணம் நடந்தது. உத்தரையை அபிமன்யு மனைவியாக வரித்தான். அந்தணர்கள் வேதம் ஓதி அக்னி வளர்க்க, அக்னியை வலம்வந்து அக்னி சாட்சியாக உத்தரை கரம் பற்றினான். விராட மன்னனின் நண்பர்களான பல மன்னர்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணருடைய யாதவப் படை வந்திருந்தது. விராட பரத சம்பந்தம் ஏற்பட்டது. எல்லா வேதனைகளும் மறந்து அந்த திருமண வைபவத்தில் பஞ்ச பாண்டவர்கள் ஆனந்தமாக கலந்து கொண்டார்கள்.

தொடர்ந்து அற்புதமான விருந்துகள் நடைபெற்றன. வந்திருந்த எல்லா மன்னர்களும் உண்டு களித்து பேசி சிரித்து எந்தக் கவலையும் இல்லாமல் தங்கள் பொழுதுகளை கழித்தார்கள். அங்கு விசாலமான அரண்மனையும், தோட்டமும், வந்திருந்த மன்னர்களுக்கும், அவர்கள் குடிபடைகளுக்கும் நிறைவான தங்கும் இடத்தை கொடுத்தன. விராட தேசத்து மக்கள் போட்டி போட்டுக் கொண்டு விருந்தினரை உபசரித்தார்கள். அவர்கள் வீட்டு திருமணம் பற்றி மன்னர்கள் வெகுநாள் பேச வேண்டும் என்ற நினைப்பில் மிக அக்கறையோடு நடந்து கொண்டார்கள்.

விருந்து முடிந்ததும் பெரிய சபையிலே அரசர்கள் ஒன்று கூடினார்கள். அந்த சபை ஜன்னல்கள் தங்கத்தாலும், வெள்ளியாலும் இழைக்கப்பட்டிருந்தன. விநோதமான கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. மண்டபத்தின் உள்ளே காற்று புகுந்து அனைவரையும் தாலாட்டியது. அதைத் தவிர மயில் தோகையால் விசிற சேடிப் பெண்களும், ஏவலுக்கு பணியாட்களும் இருந்தார்கள். விருந்தினர்கள் சபைக்கு வர அவரவர் ஆசனத்திற்கு அருகே நின்றிருக்க விராட மன்னனும், துருபதனும் வந்த பிறகு அவர்கள் அவர்களுக்குண்டான ஆசனத்தில் அமர்ந்த பிறகு ஸ்ரீகிருஷ்ணரும், பலதேவரும், மற்றோரும் தங்கள் ஆசனத்தில் அமர்ந்தார்கள். வயது முதிர்ந்த அந்த இரண்டு பேரும் அமர வேண்டும் என்று காத்திருந்து அவர்களுக்கு மரியாதை செய்து பிறகு அமர்ந்தார்கள். எல்லாம் வல்லவராய் ஸ்ரீகிருஷ்ணர் இருந்தாலும் இந்த நியதிகளுக்கு அவர் கட்டுப்பட்டே இருந்தார்.

அந்த சபையினுடைய அர்த்தம் மன்னர்கள் பலருக்கு தெரிந்திருந்தது. இது வெறுமே கூடியிருக்கும் சபை அல்ல. ஒரு விவகாரத்தை தெளிவு பண்ணவேண்டிய சபை என்பதை மன்னர்கள் அறிந்திருந்தார்கள். அந்த அரசர்கள் யாரும் கேட்காமல் தங்களுடைய அபிப்ராயத்தை சொல்லவர, மற்றவர் எதிர்த்துவர கொஞ்சநேரம் வாதப் பிரதிவாதங்கள் அந்த சபையில் நடந்தன. ஸ்ரீகிருஷ்ணர் அமைதியாக பேசுகிறவரை கவனித்துக் கொண்டிருந்தார். மன்னர்கள் பேச்சை நிறுத்தி ஸ்ரீகிருஷ்ணர் பேசட்டும் என்பது போல காத்திருந்தார்கள். தன் பேச்சை இவர்கள் கேட்பார்கள், அடங்கி விட்டார்கள் என்று தெரிந்து ஸ்ரீ கிருஷ்ணர் எழுந்து நின்று தன்னுடைய சிம்மக் குரலில் பேச்சை துவக்கினார்.

“பாண்டவர்களுடைய கஷ்டங்கள் என்ன என்று இங்குள்ள அனைவரும் அறிவீர்கள். அவர்களுக்குண்டான தேசத்தை அவர்கள் இழந்திருக்கிறார்கள். அவர்கள் தேசத்தை யாரும் போரிட்டு ஜெயிக்கவில்லை. வலிவுகாட்டி வாங்கவில்லை. மாறாக வஞ்சனையான முறையில் சூதாடி தருமபுத்திரரை சபைக்கு இழுத்துவந்து ஒரு அரசன் சூதாடச் சொன்னால் ஆட வேண்டுமல்லவா என்ற விதிகளுக்குட்பட்டு சகுனியை முன்வைத்து துரியோதனன் ஆடினான். இது இன்று நேற்று நடந்த விஷயம் அல்ல. ஆரம்பகாலத்திலிருந்தே துரியோதனனுக்கு பாண்டவர்களுடைய சினேகம் பிடிக்கவில்லை. அவர்களுடைய வீரம் பிடிக்கவில்லை. தருமபுத்திரரின் தர்மம் பிடிக்கவில்லை. அவர்களுடைய ராஜ்யம் தன்னுடைய ராஜ்யம் என்பதாகவே அவனுக்கு ஒரு பேராசை இருந்தது. தந்தை வழியிலே இது சமபாகமாக பிரிக்கப்பட்டது என்பதை துரியோதனன் ஏற்க மறுத்ததினுடைய விளைவு இது. இது பேராசை. மிகப்பெரிய அயோக்கியத்தனம். இறந்துபோன பாண்டு மகாராஜாவிற்கு செய்த துரோகம். அவர் குழந்தைகளுக்கு கிடைக்கவேண்டிய அந்த அரியாசனத்தை தான் பறித்துக்கொள்ள வேண்டுமென்று

துரியோதனன் ஆசைப்பட்டான். அதன் விளைவே சூதாட்டம்.

தருமபுத்திரரும் சூதாட இறங்க, அவர் ஒவ்வொன்றாக இழந்தார். ஆனால், தரும புத்திரருடைய அச்சாணி தர்மம். அவர் அதை மீறியதேயில்லை. அதற்காக நான் அவரை தலைவணங்குகின்றேன். சூதினுடைய விதி என்ன. பன்னிரண்டு வருட வன வாசம். பதிமூன்றாவது வருடம் அஞ்ஞாத வாசம். இவை இரண்டையும் இவர்கள் சிறப்பாக நடத்தி முடித்தார்கள். அந்த பதிமூன்றாம் வருடம் அவர்கள் பட்ட கஷ்ட நஷ்டம் கொஞ்ச நஞ்சம் அல்ல. அவர்கள் பட்ட அவமானம் சாதாரணமானதல்ல. வேறு எந்த அரசனாக இருந்தாலும் கொதித்திருப்பான். ஆனால், தர்மத்தின்மீது பற்று வைத்து, தான் அரசனாக இருந்தபோதும், தன் மனைவிக்கு எந்த துன்பம் நேர்ந்தபோதும், தன்னுடைய சகோதரர்களுக்கு என்ன கஷ்டங்கள் நேர்ந்தபோதும் அந்த அஞ்ஞாத வாசத்தை தாங்கள் பொறுத்துக் கொண்டு வெற்றிகரமாக முடித்தார்கள். அந்த சகோதரர்களுக்கும், திரௌபதிக்கும் நான் மறுபடியும் தலைவணங்குகின்றேன். சூதாட்டத்திற்கு அழைத்தாய் ஜெயித்தாய் விதிமுறை சொன்னாய் அதை நடத்தி முடித்துவிட்ட தருமர், இப்பொழுது மறுபடியும் வந்து நிற்கிறார். அவர் ராஜ்யத்தை அவரிடம் தர வேண்டும். ஆனால், துரியோதனன் தருவானா என்பதுதான் மிகப் பெரிய கேள்விக்குறி. பாண்டவர்களை வாழ விடமாட்டேன் என்று சொல்கின்ற அவனா இதை கொடுக்கப் போகிறான். இல்லை. எனவே, அவனிடம் பக்குவமாகப் பேசி, அமைதியாகப் பேசி அவனுக்கு புரியவில்லை என்றாலும் திருதராஷ்டிரனுக்கு புரியவைத்து அதன் மூலம் துரியோதனனை அடக்கி வைப்பதுதான் சாமர்த்தியமே தவிர, வேறு எதுவும் சரி வராது.

ஆகவே, அதற்கேற்ப ஒரு தூதுவனை இங்கிருந்து அனுப்பி அதை நிறைவேற்ற வேண்டும். ஒருவேளை போர்தான் முடிவு என்றால், இதுவரை பட்ட கஷ்டங்கள் அத்தனையும் மனதிற்குள்ளே தேக்கி வைத்துள்ள பஞ்சபாண்டவர்கள் கௌரவர்களை கொன்று அழிப்பார்கள். அவர்கள் மரணம் நிச்சயம். துரியோதனனுக்கு கேடு காலம் இருந்தால் போருக்கு அழைக்கட்டும். அவன் போர் விரும்பட்டும். தருமபுத்திரர் அமைதியாக இருக்கிறார். இப்போதும் ஆவேசப்படாது இருக்கிறார். என் பங்கை கேட்டு வாங்கித் தாருங்கள் என்றுதான் சொல்கிறார். கேட்டு வாங்கித் தருவது நம் கடமை. அவருக்கு உதவி செய்வது நம் கடமை.”

ஸ்ரீகிருஷ்ணர் பேசிய பிறகு பலதேவர் எழுந்தார். அவர் பேச்சை சபை இன்னும் கூர்மையாகக் கேட்டது.

“ஸ்ரீகிருஷ்ணர் அவர் மனோதர்மப்படி பேசினார். அவருக்கு பாண்டவர்கள் மீது அலாதியான பிரேமை. ஆனால், நமக்கு இரண்டு பேரும் முக்கியமானவர்கள். நமக்கு உறவினர்கள். யார் சரி, யார் தவறு என்று விசாரிக்கப் போனால் அதில் பல வித பிரச்னைகள் எழும். துரியோதனனை தீயவன் என்று நினைத்தே பேசுவது நமக்கு அழகல்ல. அதர்மமாக துரியோதனாதிகள் ஜெயித்தார்கள் என்று எவரும் சொன்னால் அது ஆட்சேபணைக்குறியது. சூதாட அழைத்தும் விரைவிலே ஓடிப்போய் சூதாட ஆசைப்பட்டு நின்றது தருமபுத்திரர். சூதாடுகின்ற சபலம் அவருக்கு இருக்கிறதென்று உலகத்திற்கு தெரியும். எங்களில் யாரை தேர்ந்தெடுத்துக் கொள்கிறீர் சூதாட என்ற மிகப்பெரிய ஒரு விஷயத்தைதுரியோதனன் முன் வைத்தான். கர்ணனையோ, துரியோதனனையோ, துச்சாதனனையோ தேர்ந்தெடுக்காமல் அவன் சகுனியை தேர்ந்தெடுத்தான். சகுனி நிபுணன். இவர் கற்றுக்குட்டி. ஒருபொழுதும் அந்தத் தவறை அவர் செய்திருக்கக்கூடாது. அந்த தவறுக்கு ஏற்பட்ட பலன்தான் இவர்களுடைய வனவாசமும், அஞ்ஞாதவாசமும். அவன் கள்ளத்தனமாக ஜெயிக்கவேயில்லை. அவர் கையில் உள்ள பகடைகள் பேசின. இவருக்கு பேசவில்லை. எனவே சகுனி தவறு, சகுனியின் மீது குறை இருக்கிறது, குற்றம் இருக்கிறது என்று சொல்வது தவறான பேச்சு.”

சபை சலசலத்தது. ஸ்ரீகிருஷ்ணர் எதிரிலேயே கிருஷ்ணரை மறித்தும், பாண்டவர்களுக்கு சற்று எதிராகவும் பலதேவர் பேசியது பலருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்களுக்குள் வாதிப்பிரதிவாதங்கள் செய்து கொண்டார்கள்.

“ஒன்று சொல்ல விரும்புகின்றேன். நம்முடைய பேச்சுகளெல்லாம் யுத்தத்தை நோக்கி நகர்வதாக இருக்கக்கூடாது. சமாதானத்தை விரும்புவதாக இருக்கவேண்டும். இதைத்தான் தருமபுத்திரரும் விரும்புகிறார் என்பது என் எண்ணம். கௌரவர்களுடைய ராஜ்ஜியத்தில் சரிபாதியை எனக்கு வாங்கிக் கொடுங்கள். அவர்கள் விருப்பப்படி நான் வனவாசமும், அஞ்ஞாதவாசமும் முடித்து விட்டேன் என்ற நிலையில்தான் அவர் இருக்கிறாரே தவிர, போர் போர் என்று தருமபுத்திரரோ, பீமனோ, அர்ஜுனனோ முரசு அறிவிக்கவில்லை. அவர்கள் மௌனமாக இருக்கும்போது நாம் போருக்கு எத்தனப்படுவது அவ்வளவு சாதுர்யமான விஷயம் அல்ல.”

மறுபடியும் சபை சலசலத்தது.

(தொடரும்)

மகாபாரதம்

85



“வாசுதேவா, நீங்கள் எங்கள் பக்கம் இருக்கவேண்டும்!”

மறுபடியும் சபை சலசலத்தது. என்ன இது, ஸ்ரீகிருஷ்ணர் என்ன சொன்னாலும் தவறாக விமர்சிக்கப்படுகிறதே என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

“எனவே, இந்தப் பிரச்னையை எப்படி தீர்ப்பது என்று யோசிக்கிற பொழுது போர் குறித்து அல்லாது சமாதானம் குறித்து ஒரு தூதுவனை நாம் அனுப்பி திருதராஷ்டிரனிடம் பேசி, பீஷ்மரிடம் பேசி, விதுரரிடம் பேசி துரியோதனனுக்கு நல்ல புத்தி சொல்ல வேண்டும் என்று சொல்லி, ஒருவேளை துரியோதனன் கர்ணனாலோ, சகுனியாலோ தூண்டப்பட்டாலும் அவனை சமாதானப்படுத்தி இந்த விஷயத்தை சுமுகமாக முடிப்பதற்குத்தான் முயற்சி செய்ய வேண்டுமே தவிர, யுத்தம் குறித்த ஆவலாதிகளோடு யுத்தத்திற்கு சம்பந்தம் இல்லாத நாம் இருப்பது தவறு என்பது என்னுடைய அபிப்ராயம். மேற்கொண்டு இதுபற்றி சபை பேசலாம்.” என்று சொல்லி அமர்ந்து கொண்டார்.

சாத்யகி துள்ளி எழுந்தான். அவன் குரலில் கோபமும், நடுக்கமும் இருந்தது. “ஒரு செடியில் இரண்டு கனிகள். ஒன்று பழுத்து சுவையாக மணம் வீசிக் கொண்டிருக்கிறது. இன்னொன்று எதனாலோ காய்ந்து புழு பட்டுப் போகிறது. காரணம் என்னவென்று தெரியவில்லை. ஒரே குலத்தில் பிறந்த இரண்டு அரசகுமாரர்களில் ஒருவர் வீரனாகவும், ஒருவர் கோழையாகவும் இருக்கிறார்கள். பலதேவரே, நான் உங்களைச் சொல்லவில்லை. உங்களுடைய மனோதர்மப்படி நீங்கள் பேசினீர்கள். என்னுடைய குறையெல்லாம் நீங்கள் இப்படி பேசியதற்கு எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாது இந்தச் சபை அமைதியாக அமர்ந்ததே அது. அத்தனை பேரும் எழுந்து



உங்களை கண்டித்திருக்க வேண்டும். ஏன் மௌனமாக இருந்தார்கள் என்று தெரியவில்லை. சகுனியை உத்தமன் என்று சொல்கிறீர்கள். சிரிப்பாக இருக்கிறது. யுதிஷ்ட்ரன் சூதாட ஆவலுள்ளவன்தான். அவர் வீட்டில் உட்கார்ந்து கொண்டு சூதாடும்போது துரியோதனனும், சகுனியும் உள்ளே நுழைந்து, வா எதையெல்லாம் வைக்கிறாயோ பணயம்வை என்று சொல்லவில்லை. அரங்கம் ஏற்பாடு பண்ணியிருக்கிறோம். சூதாட வருகிறாயா என்று கேட்டார்கள். சபல புத்தியுடைய தருமபுத்திரர் எவரையும் கலந்து ஆலோசிக்காது சரி என்று சொல்லி விட்டார். இந்த சபையில் இருந்த இத்தனை பேரும் அவருக்கு ஞாபகம் வரவேயில்லை. இதை விதி என்றும் நாம் எடுத்துக் கொள்ளலாம். பாண்டவர்கள் தங்கள் வலிவினால் சேர்த்த ராஜ்ஜியத்தை, தங்கள் தந்தையின் மூலம் கிடைத்த ராஜ்ஜியத்தை அவன் அடையக் கருதி இந்த ஈனமான சூதாட்டத்தை நடத்தியிருக்கிறான். போருக்கு வா என்று தொடை தட்டியிருக்கலாம். பிய்த்து உதறியிருப்பார்கள். சண்டைக்கு வா என்று கர்ணனையும், பீஷ்மரையும், துரோணரையும் வைத்துக் கொண்டு அரைகூவல் விடுத்திருக்கலாம். அடியோடு ஒழித்திருப்பார்கள். இதையெல்லாம் செய்வதற்கு திராணியற்று பயத்தோடு சகுனியினுடைய சூதின் பேரில் சூதாட அழைத்து அந்த கூடாரத்தில் அவரை தோற்கடித்து அதை ஜெயித்ததாக சொல்லிக் கொள்வது பெரும் வெட்கக் கேடு.”

கூட்டம் ஆரவாரித்தது.

“ஒரு அரசனுக்குரிய மரியாதை இந்த இடத்தில் இல்லவே இல்லை. துரியோதனன் ஒரு சாதாரண சூதாடி என்று சொல்லலாமே தவிர, அரசன் என்று சொல்லிக் கொள்ளும் யோக்கியதை இல்லாதவன்.”

மறுபடியும் சபை ஆரவாரித்தது. ஸ்ரீகிருஷ்ணர் புன்னகையுடன் சாத்யகியை பார்த்துக் கொண்டிருந்தார். இந்த எதிர்ப்பு வரும் என்று தெரிந்தவர் போல பலதேவர் அமைதியாக இருந்தார்.

“எதற்கு தூது போக வேண்டும். ஏன் சமாதானம் பேச வேண்டும். இது ஒரு முறை, ஒரு நியதி என்றால் நான் ஒத்துக் கொள்வேன். ஆனால் அர்ஜுனனோ, பீமனோ, நகுல சகாதேவனோ பயந்துபோய் இந்த முறைக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்பதை நான் நன்கு அறிவேன். இந்த சபையும் அறியும். பேச்சு வார்த்தைக்கு அழைத்தேன் வரவில்லை அதனால் அடித்தேன் என்ற நியாயத்தை பின்பற்றக் கருதி அவர்கள் இதில் இறங்கியிருக்கிறார்கள். எனவே இங்கு சமாதானம் என்பது மேம்போக்கானது. வெறும் நாடகமானது. போர் என்பது நிச்சயமாகி விட்டது. இப்பேர்பட்ட அவமானங்களை சகித்துக் கொண்டிருந்த இந்த வீரர்கள் போரை நாடாது

சமாதானத்தை நாடுவார்கள் என்று யார் நினைத்தாலும் அது கேலிக்குரிய விஷயம். அல்லது உண்மைக்கு புறம்பான விஷயம். இவர்கள் பட்ட அவஸ்தையை உள்ளூர தன் மீது ஏற்றுக் கொண்டு தனக்கு அந்த நிலை வந்திருந்தால்... என்று யோசிக்கின்ற எவரும் பல்லைக் கடித்துக் கொண்டு யுத்தத்திற்குத் தான் தயாராவர். பலதேவர் என்னை மன்னிக்க வேண்டும். என் மனதில் பட்டதை பேசுகிறேன். அப்படிப்பட்ட சபைதானே இது" என்று சொல்லி சாத்யகி அமர்ந்தான்.

சபை கரகோஷம் செய்தது. ஆஹா என்று உரத்த குரலில் வியந்தது. இதிலிருந்தே சபையினுடைய நோக்கம் சமாதானம் அல்ல என்று ஸ்ரீகிருஷ்ணருக்கும், தருமருக்கும், அவர் சகோதரர்களுக்கும் தெரிந்து விட்டது.

பாலகுமாரன்

திரௌபதியின் தகப்பனாரான துருபதன் எழுந்தார். ''அஞ்ஞாத வாசம் முடித்து விட்டாயா, இந்தா உன் பங்கை எடுத்துக் கொள் என்று துரியோதனன் சொல்லியிருந்தால், அவன் மனம் எத்தகையது என்பது நம் எல்லோருக்கும் புரிந்திருக்கும். சிறு வயதிலிருந்தே பீமனையும், அர்ஜுனனையும் சகிக்க மாட்டாதவனாக துரியோதனன் இருந்திருக்கிறான். அஞ்ஞாத வாசம் முடிந்து விட்டது என்று தெரிந்து வெளியே வந்ததும், முடியவில்லை முடியவில்லை முடிவதற்கு முன்பே பார்த்து விட்டோம் என்று கொக்கரித்ததிலிருந்து துரியோதனன் அலட்டியதிலிருந்து துரியோதனனுக்கு சமாதானத்தில் விருப்பம் இல்லை என்பது தெரிந்து விட்டது. இன்னும் இரண்டு நாட்கள் பாக்கியிருக்கின்றன அதனாலென்ன என்று துரியோதனன் ஒருவேளை சொல்லியிருந்தால் அவன் தன்னுடைய பங்கை வாரி வழங்குகிறவனாக இருப்பான் என்று நினைத்துக் கொள்ளலாம். இந்த சபையைப் பாருங்கள். பீமனையும், அர்ஜுனனையும், நகுல சகாதேவர்களையும், அவர் குழந்தைகளையும், சுற்றியுள்ள மன்னர்களையும் எவனால் எதிர்க்க முடியும். அவமானத்தை ஏற்காது மறுத்து அவர்கள் போருக்கு துணிந்திருந்தால் கௌரவர்கள் என்றோ செத்துப் போயிருப்பார்கள். அந்த இடம் புல் முளைத்துப் போயிருக்கும். ஆனால் தர்மத்திற்கு கட்டுப்பட்டார்கள் என்பதுதான் இன்று நாம் எல்லோரும் அவர் பின்னே அணிவகுத்து நிற்பது. ஒருவேளை கோபாவேசப்பட்டு என்ன சூதாட்டம், என்ன இழப்பு இந்தா வாங்கிக் கொள் என்று தன்னுடைய கதையால் பீமன் தாக்கியிருப்பானேயென்றால் நாம் யார் பக்கம் சேர்வது என்று நமக்கு சந்தேகம் வந்திருக்கும். இப்பொழுது தெள்ளத் தெளிவாக இருக்கிறோம். சூதாட்டத்தில் தோற்றுப் போனார், வனவாசம் அனுபவித்தார், அஞ்ஞாத வாசத்தில் அவஸ்தைப்பட்டார், ஆனால் அதையெல்லாம் மீறி சொன்ன வாக்கை காப்பாற்றுகின்ற திடத்தோடு இத்தனையும் பொறுத்துக் கொண்டார் என்கிற பெருமைதான் தருமபுத்திரர் பக்கத்தில் நிற்க வைக்கிறது. தர்மத்தின் பக்கம் நிற்கிறோம் என்ற சந்தோஷம் இருக்கிறது. ஆக, யார் ஜெயிப்பார்கள் என்பது தெள்ளத் தெளிவாக நமக்குப் புரிகிறது.

அடித்து ஒடுக்கப்பட முடியாத காரணத்தினால்தான் சூதாட அழைக்கப்பட்டது என்று நான் தெளிவாகச் சொல்கிறேன். அர்ஜுனனை எதிர்க்க முடியாது என்று தெரிந்ததால் தான் அவன் சூதாட்டத்திற்கு அழைத்தான். இல்லையெனில் கர்ணன் சொல்லியிருக்க வேண்டும். எதற்கு சூதாட்டம், போருக்கு கூப்பிடு என்று. போருக்கு கூப்பிடவில்லை. இதிலிருந்தே இவர்கள் லட்சணம் தெரியவில்லையா. ஆக, போர் என்பது வந்து விட்டது. ஒரு பக்கம் தர்மத்தின் பொருட்டு, தருமபுத்திரரின் விருப்பத்தின் பொருட்டு அல்லது இந்த சபையின் ஆசையின் பொருட்டு. அமைதியான சூட்சமமான, தெள்ளத் தெளிவான ஒரு மனிதர் தூதுக்கு போகலாம். அப்படி தூதுக்கு போகும் நேரத்திலேயே படை திரட்டலையும் ஆரம்பிக்க வேண்டும். நாம் தூதுக்குப் போவது ஒரு மரியாதைக்காக. நாம் படை திரட்ட வேண்டியது யுத்தத்திற்காக. யுத்தம் நிச்சயம்." என்று சொல்லி துருபதர் கீழே அமர, மறுபடியும் சபை ஆரவாரித்தது.

இப்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் எழுந்தார். "பலதேவரின் மனம் எனக்குப் புரிகிறது. அவர் என்னை பொறுத்துக் கொள்ள வேண்டும். இந்த சபையில் பெரியவரோ, சிறியவரோ, உறவினரோ, அல்லாதவரோ அவரவர் தங்களுடைய அபிப்ராயங்களைச் சொல்லலாம் என்கிற நியமத்தோடு கூடிய சபை என்பதால் ஒரு மிகப்பெரிய விஷயத்தை தீர்மானம் செய்து நாம் எந்தப் பக்கம் நிற்கிறோம் என்று சொல்ல வேண்டிய அவசியத்தை உண்டாக்கிய சபை என்பதால் நான் என்னுடைய மனோதர்மத்தின்படி விருப்பத்தின்படி பேசினேன். எனக்கும் அவருக்கும் இதில் மாறுபாடு இருக்கலாம். அது முக்கியமல்ல. நீங்கள் எல்லோரும்

உங்கள் தர்மப்படி, உங்கள் விருப்பப்படி உங்களுக்குள் ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலைமையில் இருக்கிறீர்கள்.

நிச்சயமாய் சமாதானம் கருதி ஒரு தூதுவன் போகட்டும். சண்டை வேண்டாம் என்ற எண்ணத்தோடு ஒரு கெட்டிக்காரர் போகட்டும். ஒருவேளை துரியோதனன் மனம் மாறி தன்னுடைய ராஜ்ஜியத்தின் ஒரு பாதியை தருமபுத்திரருக்கு கொடுக்க மனம் வந்தால் அதைவிட சந்தோஷம் வேறு என்ன இருக்க முடியும். அதைவிட நிம்மதி வேறு என்ன இருக்க முடியும். எனவே திருதராஷ்டிரன் பெயரை தட்டாத துரியோதனன் மனம் என்ன என்பதை நாம் புரிந்துகொண்டு மேற்கொண்டு செயலாற்றலாம். நல்ல தூதுவரை தேர்ந்தெடுக்கின்ற ஒரு பொறுப்பு இந்த சபைக்கு இருக்கிறது" என்று சொல்லி அமர, துருபதன் எழுந்து 'என் அவையிலே ஒரு கெட்டிக்காரர் இருக்கிறார். அவரை நான் அனுப்புவேன்' என்று வேகமாகச் சொன்னார்.

சபை அதிகம் அக்கறை கொள்ளாது சரி என்று சொல்லியது. மெல்ல சபை கலைந்தது. பரஸ்பரம் மன்னர்கள் கட்டித் தழுவி விடை பெற்றார்கள். அடுத்து நடக்க வேண்டியது என்னவாக இருக்கும் என்பதை தாழ் குரலில் ரகசியமாக பேசிக் கொண்டார்கள். விராட மன்னரிடமும், பஞ்ச பாண்டவர்களிடமும், திரௌபதியிடமும் விடைபெற்று ஸ்ரீகிருஷ்ணர் துவாரகைக்குதிரும்ப தேர் ஏறினார். அவரை பஞ்ச பாண்டவர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.

துருபதன் தன்னுடைய அவையிலே வலிமையும், தெளிவும், பேச்சு சாதுர்யமும், மனிதருடைய மனங்களை பார்வையிலேயே அளக்கின்ற கெட்டிக்காரத்தனமும் உள்ள ஒரு அந்தணரை தூதுக்கு போகும்படி வேண்டுகோள் விடுத்தார். மிக அருகே அமர வைத்து, "இந்த தூதின் நோக்கம் என்னவென்று நான் சொல்லாமலேயே உங்களுக்கு புரிந்திருக்கும். நீங்கள் தூதுக்கு அந்தப் பக்கம் கிளம்பிய உடனே இங்கே படை திரட்டல் ஆரம்பித்து விடும். யுத்தம் நிச்சயம். ஆக, உங்களுடைய தூதின் நோக்கம் எவ்வளவுக்கு எவ்வளவு துரியோதனனுடைய இடத்திலே நீங்கள் தாமதம் செய்கிறீர்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அங்கே படை திரட்டுதல் தாமதமாகும். அது முக்கியம். எனவே, இன்று நாளை, நாளை மறுநாள் என்று பேச்சு இழுத்து அவர்களை படை திரட்டுகின்ற வேகம் இல்லாது குழப்பத்தில் ஆழ்த்துங்கள். அதே நேரம் திருதராஷ்டிரன் மனம் என்ன, பீஷ்மரும், விதுரரும் என்ன நினைக்கிறார்கள், அங்குள்ள மக்களுடைய மனோநிலை என்ன துரியோதனன் என்ன வேகத்தில் இருக்கிறான் என்பதையெல்லாமும் தெளிவாக தெரிந்து கொண்டு வாருங்கள். என்னுடைய அபிப்ராயத்தில் இந்த நேரம் விராட தேசத்தில் மன்னர்கள் குழுமியிருப்பதை ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்டு துரியோதனன் படைதிரட்ட ஆரம்பித்திருப்பான். நீங்கள் விரைவாக அஸ்தினாபுரம் போய் வாருங்கள்" என்று கை கூப்பினார்.

விராடதேசத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணர் துவாரகை நோக்கி பயணப்பட்டு விட்டார் என்பதை ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்ட துரியோதனன், ஒரு சிறிய படையோடு மிக வேகமாகப் போகும் குதிரைகளில் ஏறி துவாரகை நோக்கி பயணப்பட்டான். எங்கும் நிற்காமல் துவாரகையை அடைந்தான். தன் வருகையைச் சொன்னான். ஸ்ரீகிருஷ்ணர் உள்ளே சயனத்திருப்பதாகச் சொல்ல, அவன் அந்த அறைக்குள் நுழைந்து ஸ்ரீகிருஷ்ணர் கண்மூடி தூங்குவதைப் பார்த்து அவருக்கு தலைப்பக்கம் இருக்கின்ற அரியணையில் போய் அமர்ந்து கொண்டான். அர்ஜுனன் வரவில்லை என்று தெரிந்து நிம்மதியானான். இத்தனை விரைவில் வந்தது சந்தோஷம் என்று தன்னைத்தானே பாராட்டிக் கொண்டான்.

துரியோதனன் வந்த சில நாழிகைகளுக்குப் பிறகு அர்ஜுனன் வந்தான். ஸ்ரீகிருஷ்ணருடைய கால் பக்கம் நின்று கொண்டான். அவரையே கவனித்தவாறு இருந்தான்.

ஸ்ரீகிருஷ்ணர் எழுந்தார். "வா அர்ஜுனா. வா," என்று வரவேற்றார். துரியோதனன் துள்ளி எழுந்து நான்தான் முன்னே வந்தேன் என்று தன் வருகையைச் சொன்னான். அப்படியா என்று கேட்க, ஆமாம் என்று அர்ஜுனன் ஒப்புக் கொண்டான்.

"மிக நல்லது. இரண்டு பேரும் ஏதோ ஒரு உத்தேசத்தோடு வந்திருக்கிறீர்கள். என்ன என்பதை என்னால் யூகிக்க முடிகிறது. இருந்தாலும் வயதில் சிறியவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது என்பது ஒரு சாஸ்திர சம்பிரதாயம். அந்த நோக்கில் நான் அர்ஜுனனிடம் நீ வந்த நோக்கம் என்ன என்று கேட்கப் போகிறேன். அதுமட்டுமல்லாது நீ முன்கூட்டியே வந்தாலும் நான் முதன்முதலில் அர்ஜுனனைத்தான் பார்த்தேன். பிறகுதான் உன்னை சந்தித்தேன். எனவே முன்னுரிமை அர்ஜுனனுக்கே அளிக்கிறேன். எனவே, அர்ஜுனா எதன் பொருட்டு இவ்வளவு தொலைவு வந்திருக்கிறாய்" என்று பிரியத்துடன் கேட்டார்.

துரியோதனன் தவித்தான். எங்கே அவருடைய பெரும் படையை கேட்டு விடப் போகிறானோ என்று அவஸ்தைப்

பட்டான். ஆனால் அவர்கள் இரண்டு பேரும் பேச ஆரம்பித்த போது கிருஷ்ணர் கை உயர்த்தினார்.

“என்னிடம் பலகோடி வீரர்கள் உள்ள பெரிய யாதவ சேனை இருக்கிறது. அவர்கள் எல்லோருக்கும் நாராயணன் என்ற பெயர் உண்டு. எனக்கு இணையான பலம் உடைய வீரர்கள் அவர்கள். அந்த வீரர்கள் ஒரு பக்கம் இருப்பின், மறுபக்கம் நான் இருப்பேன். ஆனால் போரிட மாட்டேன். ஆயுதம் தாங்க மாட்டேன். இப்பொழுது சொல்லுங்கள். உங்களுக்கு என்ன வேண்டும்? இவை இரண்டும்தான் என்னிடம் இருக்கிறது. ஒன்று போரிடாத நான், இன்னொன்று என்னுடைய படை பலம். உங்களுக்கு என்ன வேண்டும்?”

மறுபடியும் துரியோதனன் பதறினான். அர்ஜுனன் படைகள் கேட்டு விடுவானோ என்ற பயத்தில் முகம் கறுத்து நெளிந்தான். அர்ஜுனன் நிதானமாக, எனக்கு நீங்கள் தான் வேண்டும் ஸ்ரீவாசுதேவா. போரிடாமல் இருந்தாலும் சரி, ஆயுதம் ஏந்தாமல் இருந்தாலும் சரி எங்கள் பக்கம் நீ இருக்க வேண்டும் என்று பணிவோடு கை கூப்பினான்.

துரியோதனன் வயிற்றில் பால் சுரந்தது. நெஞ்சு நிம்மதியாயிற்று. கண்கள் பிரகாசமாயின. அப்படியானால் அந்த பலகோடி வீரர்கள் இருக்கின்ற சேனையை எனக்கு கொடுத்து விடுங்கள் என்று ஆவலாக துரியோதனன் கேட்க, தந்தேன் என்று ஸ்ரீகிருஷ்ணர் உடனடியாக பதில் சொன்னார். ஸ்ரீகிருஷ்ணருடைய படைகள் துரியோதனனுக்கும், ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்குமாய் இரண்டாக பிரிந்தார்கள்.

மிக அற்புதமான விஷயத்தை மிக எளிதாக சம்பாதித்து விட்டதுபோல ஒரு கர்வத்தை துரியோதனன் அடைந்தான்.

இவ்வளவு பெரிய சேனையை விட்டு விட்டு, ஆயுதம் ஏந்தாத ஸ்ரீகிருஷ்ணரை கேட்டிருக்கிறானே அர்ஜுனன் என்ற இளக்காரமும் அவன் மனதில் ஓடியது. ஸ்ரீகிருஷ்ணருடைய வாக்கை எடுத்துக் கொண்டு பலராமரை நோக்கிப் போனான். வணங்கி நின்றான்.

“விராட சபையிலே என்ன நடந்திருந்தது என்று உனக்குத் தெரிந்திருக்கும் துரியோதனா. நான் உன் பக்கமாகத்தான், சமாதானம் வேண்டித்தான் பேசினேன். சண்டை கூடாது என்று சொன்னேன். ஆனால் ஸ்ரீகிருஷ்ணர் என்னுடைய பேச்சுக்கு செவி சாய்க்கவில்லை. என்னோடு ஒத்துப் போகவில்லை. நமக்கு இரண்டு பேரும் ஒன்றுதானே என்ற கூற்றை ஸ்ரீகிருஷ்ணன் ஆதரிக்கவேயில்லை. அவர் பஞ்சபாண்டவர் பக்கமே நின்றார். இதனால் எனக்கு மிகப் பெரிய மன உளைச்சல் ஏற்பட்டது. நான் அர்ஜுனன் பக்கமும் இல்லை, துரியோதனன் பக்கமும் இல்லை. விலகி நின்று இந்த யுத்தத்தை வேடிக்கைப் பார்க்கப் போகிறேன். வெகு நிச்சயமாக என்னால் அர்ஜுனனுக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. உனக்கு எதிராக இருக்க முடியாது. அதேநேரம் ஸ்ரீகிருஷ்ணர் என்னை கட்டிப் போட்டிருப்பதால் அவரை எதிர்க்க விரும்பாததால் உனக்கு ஆதரவாக போரிடவும் முடியாது. போய் வா. க்ஷத்திரிய தர்மப்படி போர் செய். கடுமையாக போர் செய்” என்று சொல்லி வாழ்த்தினார்.

மறுபடியும் பெரிய நிம்மதியோடு துரியோதனன் பலராமரை விட்டு நீங்கினான். பலராமர் எங்கே அர்ஜுனன் பக்கம் சேர்ந்து விடுவாரோ என்ற பயமும் அவன் நெஞ்சிலிருந்து முற்றிலும் நீங்கியது. ஆயுதமே இல்லாது ஸ்ரீகிருஷ்ணர், யுத்தத்திற்கு வரவே மாட்டேன் என்கிற பலராமர் என்ற இரண்டு பேராலும் அவன் நிம்மதியடைந்தான். தன்னுடைய தேசத்திற்கு மிக விரைவாக திரும்பிப் போனான்.

துரியோதனன் போனபிறகும் தன்னோடு சுற்றிக் கொண்டிருக்கிற அர்ஜுனனைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணர் கேட்டார். “ஆயுதம் ஏந்த மாட்டேன் என்று சொல்லியும், போரில் கலந்து கொள்ள மாட்டேன் என்று சொல்லியும் ஏன் என்னை தேர்ந்தெடுத்தாய் அர்ஜுனா?”

“நீங்கள் பெரிய புகழ் விரும்பி. புகழின் மீது உங்களுக்கு பெரும் ஆசை உண்டு. நீங்கள் புகழப்பட வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு உண்டு. புகழப்படுகின்ற காரியத்தைத்தான் நீங்கள் செய்வீர்கள். அப்படி புகழப்படுகின்ற, புகழ்மிக்க உங்களோடு இருக்கின்ற ஆசை எனக்கும் உண்டு. ஏனெனில் நானும் புகழ்மீது ஆசை உள்ளவன். உங்கள் புகழில் நானும் குளிர் காயலாமே என்று எந்த இடத்திலே புகழ் அதிகமாக இருக்குமோ, எவர்மீது புகழ் வந்துசேருமோ, எவரிடம் புகழ் குடியிருக்குமோ அவரிடம் நாமும் குடியிருப்போம் என்று உங்களை தேர்ந்தெடுத்தேன். புகழ்மீது ஆசை உள்ளவர்கள் தவறான முடிவு எடுக்க மாட்டார்கள். நீங்கள் புகழ் உடையவர். நானும் புகழ் மீது ஆசையுடையவன். எனவே உங்களுக்கு அண்மையில் இருக்கின்ற ஒரு விஷயத்தால் நானும் புகழ் பெறுவேன். இது எளிதான கணக்குத்தானே” என்றான் அர்ஜுனன்.

ஸ்ரீகிருஷ்ணர் வாய் விட்டு சிரித்தார். “மிக சூட்சமமாகப் பேசுகிறாய் அர்ஜுனா. நீ கெட்டிக்காரனாகிறாய். என்னோடு போட்டி போடுகிறாய். என்னை விட்டு என்னை ஜெயிப்பதற்கு எண்ணம்

கொண்டிருக்கிறாய். வாழ்க நீ. உனக்கு நான் தேரோட்டுவேன்'' என்றார். நெற்றியில் முத்தமிட்டார். இந்த யுத்தத்தின் முடிவு என்ன என்பது அங்கு தெரிந்து விட்டது.

எல்லாம் கடந்தது. எல்லாம் என்றால் என்ன? புகழ், பணம், வாழ்வு, ஈர்ப்பு எல்லாம் தாண்டியது. அப்படி இருக்கின்ற இந்த கடவுள் என்கிற விஷயம் ஒரு உருவம் கொள்கையில், ஒரு சிலாரூபம் கொள்கையில் ஒரு மனித வடிவம் தாங்குகையில் அது மனித தர்மத்திற்கேற்ப மிகச்சிறந்த புருஷனாக இருக்க முயல்கிறது. விளங்குகிறது. அப்படி மிகச்சிறந்த புருஷனாக இருப்பதாலேயே அது கொண்டாடப்படுகிறது. அப்படி கொண்டாடப்படுவதாலேயே அது மேலும் சிறப்படைகிறது. கடவுள் என்கிற விஷயம் அவதாரமாகி அது ஒரு வழிகாட்டியாக பூமியில் வாழ்கிறபோது புகழப்படுகின்ற ஜென்மமாக, புகழை விரும்புகின்ற ஜென்மமாக, புகழ்ந்துதான் ஆகவேண்டும் என்று மற்ற மனிதர்களை கட்டளையிடும் விதமாக வாழ்கிறது. அப்படி அந்த உருவத்தை, அந்த பிரதிமையை அல்லது அந்த வாழ்க்கையை எவன் புகழ் விரும்புகின்றானோ அவன் அதிகம் அதை புகழ்ந்து அப்படி புகழுவதாலேயே அதனோடு சேர்ந்து அப்படி சேர்வதாலேயே அவனும் புகழ் பெறுகிறான். கடவுள் என்ற விஷயத்தை பிரதிமை என்ற விஷயத்திற்கு அல்லது உருவம் என்ற விஷயத்திற்கு கொண்டு வந்தால் அதை போற்றுகின்ற, ஆடுகின்ற, பாடுகின்ற, வரைகின்ற, செதுக்குகின்ற வேறு எந்த விஷயங்களில் ஈடுபட்டும் அதற்குண்டான பெருமையை அந்த மனிதன் பெறுகிறான்.

என்ன அற்புதமான ஒரு சிலை செதுக்கியிருக்கிறான்: எவ்வளவு அழகாக ஓவியம் தீட்டியிருக்கிறான். எவ்வளவு அற்புதமாக கவிதை இயற்றியிருக்கிறான். எத்தனை கந்தர்வக் குரலில் பாட்டு பாடுகிறான், எப்படி அற்புதமாக நடனமாடுகிறான் என்றெல்லாம்

கடவுளை சார்ந்த வழிபட்ட மற்றவர் புகழ் பெறுகிறார். கொண்டாடப்படுகிறார். கடவுள் கொண்டாடப்படுவதோடு மட்டுமல்லாமல் கடவுளை கொண்டாடப்படுகிறவரும் அங்கு கொண்டாடப்படுகிறார்.

அர்ஜுனன் சொன்னது இந்த ஸூட்சமம்தான். இதை யோசிக்க யோசிக்க மிகப் பெரிதாக விரியும். வாழ்க்கையின் அர்த்தம் புரிபடும். மகாபாரதம் ஒரு சாதாரண கதை அல்ல. பல்வேறு ஸூட்சுமங்களை உள்ளே கொண்டது. சரியானபடி நெருப்பு பற்ற வைக்க, அது வெடித்து சிதறும். உள்ளுக்குள் மிகப் பெரிய ஜ்வாலை எழும். அது வாழ்க்கையின் தடத்தை மாற்றும். கடவுள் என்ன என்பதை புரிய வைக்கும்.

மத்ரதேசத்து அரசன் சல்யன் தருமபுத்திரருடைய வனவாசமும், அஞ்ஞாதவாசமும் முடிந்து விட்டதைக் கேள்விப்பட்டு அவரை சந்திக்கின்ற நோக்கத்தோடு அஸ்தினாபுரம் நோக்கி விரைய, அவர் வருகையை தெரிந்த துரியோதனன் வழிநெடுக மிகச் சிறந்த கூடாரங்கள் அமைத்து அவருக்கும் அவர் படைகளுக்கும் தேவையான உணவுகளும், பானங்களும் ஏற்பாடு செய்தான். வினோதமான கேளிக்கைகளையுடைய கூடாரங்களாக அவை இருந்தன. வெகுதூரம் நடந்து வந்த அந்தப் படைகள் நன்கு ஓய்வு எடுத்து, களைப்பு விலகி, மிகசந்தோஷமாக அந்த கேளிக்கைகளில், ஆடல் பாடல்களில் கவனம் செலுத்தினார்கள்.

தன் படைகள் மிக குதூகலமாக இருப்பதைக் கண்டு மிக அற்புதமாக வரவேற்கப்பட்டிருக்கிறோம் என்று பலரால் சல்யனுக்கு சொல்லப்பட, அவன் மிகுந்த சந்தோஷத்தோடு 'யுதிஷ்டிரரைக் கூப்பிடு, அவரை நேரே சந்தித்து அவருக்கு உதவி செய்த அதிகாரிகளுக்கும், வேலையாட்களுக்கும் நான் சன்மானம் அளிக்க விரும்புகின்றேன். தருமபுத்திரரை அருகே வைத்துக் கொண்டு இதை நான் செய்ய வேண்டும்,' என்று சொல்ல, அவர் மனம் மகிழ்ந்து குதூகலமாக இருக்கின்ற நேரம் பார்த்து, துரியோதனன் சல்யனுக்கு அருகே போனான்.

இத்தனை ஏற்பாடுகளும் செய்தது துரியோதனன்தான் என்பது தெரிய வர, சல்யன் மிகவும் மகிழ்ந்தான். "உனக்கு என்ன உதவி வேண்டும் சொல். எதன் பொருட்டு இத்தனை பிரியம் வைத்திருக்கிறாய்?

இதற்கு நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்று ஆவேசமாகக் கூறினார் சல்யன்.

ஒரு குதூகலத்தில் மனம் நெகிழ்ந்து ஆவேசமாக ஒருவர் வேண்டுகோள் வைப்பார் என்பதை புரிந்து கொண்ட துரியோதனன் தந்திரம் செய்தான். "வேறு என்ன வேண்டும், யுத்தம் என்று பேசிக் கொள்கிறார்கள். அப்படி யுத்தம் என்று வருமாயின் உங்களுடைய பலம் வாய்ந்த இந்தப் படைகள், அற்புதமான இந்த வீரர்கள் என் பக்கம் நின்று போரிட வேண்டும். என்னுடைய படைக்கு நீங்கள் தலைமை ஏற்க வேண்டும்" என்று கைக்கூப்பி வினயத்தோடு வேண்டிக் கொண்டான்.

சல்யன் மனம் நெகிழ்ந்தார். "அவ்வாறே ஆகுக. நான் உன் படைக்கு தலைமை தாங்குவேன். போரிடுவேன். கவலையை விடு. ஆனால் நான் இங்கு வந்தது தருமபுத்திரரை சந்திக்க. ஆயினும் நீ செய்த உபசாரங்களுக்கு நன்றி. தருமபுத்திரரை சந்திக்காமல் போகக்கூடாது. அவர் இருக்கும் இடம் தேடி நான் போய் அவரை சந்தித்து விட்டுத்தான் போவேன்" என்று கிளம்பினார்.

"ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் வாக்கு நீங்கள் என் சேனைக்கு தலைமை ஏற்கப் போகிறீர்கள். தருமபுத்திரரை சந்தித்த பிறகு உங்களுக்கு எந்த சஞ்சலமும் ஏற்படாது இருக்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை."

சல்யன் கை வீசி மறுத்தார். அப்படி ஏதும் ஏற்படாது என்று ஆறுதல் கூறினார்.

தருமபுத்திரரை போய் சந்தித்தான் சல்யன். வனவாசத்தின் கஷ்டமும், அஞ்ஞாத வாசத்தில் அவர் பட்ட கஷ்டமும் சல்யனுக்கு எடுத்துரைக்கப்பட்டது. சல்யன் மனம் நெகிழ்ந்தான். பிறகு சற்றே வருத்தத்துடன், "நான் வாக்கு கொடுத்து விட்டேன் தருமபுத்திரா. துரியோதனன் பக்கம் நின்று அவன் படைகளுக்கு தலைமை தாங்கி என் படைகளோடு உன்னை எதிர்த்து போரிடுவேன் என்று வாக்கு கொடுத்து விட்டேன். உனக்கு கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை. ஆயினும் நீ பட்ட கஷ்டங்களையெல்லாம் பார்க்கும்போது நான் உன் பக்கம் இல்லாது போனேனே என்ற வேதனை எனக்கு வருகிறது. இது விதி செய்த சதி. தருமபுத்திரா, இந்த நிலையில் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறாய்? ஏதேனும் இருப்பின் என்னால் ஆனதை செய்கிறேன்" என்று குழைந்த மனதோடு பேசினார்.

சல்யனின் வீரமும், கம்பீரமும் தருமபுத்திரருக்கு நன்கு தெரியும். "எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செய்யுங்கள்."

"சொல், என்ன வேண்டும்?"

"அந்த இடத்திலே நீங்கள் படைத் தலைவர் என்றாலும், கர்ணன் தலைமை ஏற்கிறபோது அவன் தேரை நீங்கள் ஓட்ட

வேண்டுமென்று விரும்புவான். நீங்கள் தேரோட்டுகின்ற விதம் பற்றி உலகத்திற்கே தெரியும். ஸ்ரீகிருஷ்ணனுக்கு இணையாக தேர் ஓட்டுபவர் நீங்கள். அப்படி கர்ணனுடைய தேரை ஓட்டும்படி நீங்கள் பணிக்கப்பட்டால் கர்ணனுடைய மனம் வேதனையுறும்படி நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். அவன் தர்மத்தை குலைக்கும்படியாக நீங்கள் பேச வேண்டும். அவனுடைய மனோபலத்தை தகர்க்கும்படியாய் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். வலிவுமிக்க கர்ணனுக்கு நல்ல சாரதி கிடைத்தால் அவனை ஜெயிப்பது அரிதாகப் போகலாம். உங்களை அவன் சாரதியாகக் கொள்வான் என்று எனக்குத் தோன்றகிறது. நீங்கள் அவனுக்கு சாரதியாக போக வேண்டுமெனில் அவன் சரியாக போரிடக்கூடாது என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொண்டு நீங்கள் தேரோட்டுங்கள். இந்த ஒரு உதவியை செய்யுங்கள்."

சல்யன் வலக்கையை உயர்த்தினார். "அவ்விதமே நடப்பேன். தர்மத்தின் பக்கம்தான் நான் நிற்க வேண்டும். ஆனால் வேறு பக்கம் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. ஆனால் தர்மத்திற்காக வேறு ஒரு உதவியை நான் செய்துதானே ஆக வேண்டும். கர்ணனுடைய பலத்தினால் தான் துரியோதனன் ஆடுகிறான். கர்ணனோ தன்னைவிட சிறந்த வீரன் இந்த உலகத்திலேயே இல்லை என்று கர்வம் கொண்டிருக்கிறான். தேரோட்டும்படி என்னை அவன் வெகு நிச்சயமாக பணிப்பான். எனக்கு தேரோட்டு என்று கர்வத்தோடு சொல்வான். அந்த கர்வத்தை நான் உடைப்பேன். அவன் தேஜஸை நான் குறைப்பேன்" என்று தருமபுத்திரர் பட்ட அவஸ்தையை, திரௌபதி பட்ட அவஸ்தையை மனதில் இறுத்திக் கொண்டு சல்யன் கோபமாகப் பேசினார்.

"நடு சபையில் கூந்தலை பிடித்து இழுத்து வந்து மாதவிலக்கான ஒரு பெண்ணை கணவர்கள் முன்பு அவமானப்படுத்தியது ஒரு மிகப்பெரிய தர்மம் எனில், நான் செய்வதும் தர்மம்தான்" என்று கோபமாகச் சொன்னார். தருமபுத்திரர் நிம்மதியானார்.

இன்னும் ஒரு சூட்சமமான விஷயம் இந்த மகாபாரதத்தில் சொல்லப்படுகிறது. படைபலம், ஆட்கள் பலம், சொத்து சுகத்தின் பலம் தன்னை துன்பத்திலிருந்து காப்பாற்றும் என்று துரியோதனன் போல எவர் நினைத்தாலும் அது மடத்தனமானது. இவையெல்லாம் விட, எல்லாம் வல்ல இறைவனுடைய நெருக்கம் இருப்பின், சத்தியத்தின் துணை இருப்பின், தர்மத்தின் துணை இருப்பின், அதற்கு ஈடு இணை ஏதும் இல்லை. எப்பேர்பட்ட சொத்து சுகங்களும், ஆள் பலமும் அந்த தர்மத்தின் முன்பு நிற்காது. படைகளெல்லாம் கேட்டு வாங்கி வந்ததுரியோதனன் ஒரு பக்கமும், ஸ்ரீகிருஷ்ணர் என்கிற ஒரு உன்னதம் இன்னொரு பக்கமும் என்று தனக்கு ஆதரவாக செயல்பட வைத்த சூழ்நிலை சூட்சமமும் இங்கு சொல்லப்படுகின்றன. பெரும் பொருள் பலமும், படை பலமும் கொண்டவர் ஏதோ ஒரு இடத்தில் பலவீனப்பட்டு யாருக்கு எதிராக இருக்க வேண்டுமோ அவருக்கு ஆதரவாகப் போய்விடுவார். இந்த ஒரு விஷயமும் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்க்க வேண்டியதாகும்.

சல்யன், நகுல-சகாதேவரின் தாய் மாமன். பாண்டுவின் இரண்டாவது மனைவி மாத்ரியின் உடன்பிறந்த சகோதரன். இந்த சம்பவத்திற்குப் பிறகு சல்யனும், தருமபுத்திரரும் நெருக்கமாகப் பேசிக் கொண்டார்கள். இந்திரன் பட்ட கஷ்டங்களைப் போல நீயும் பட்டிருக்கிறாய் என்று சல்யன் சொன்னதும், இந்திரன் என்ன கஷ்டங்கள் பட்டான் என்று யுதிஷ்டர் கேட்க, விருதாசுரன் உற்பத்தி செய்யப்பட்டது, இந்திரனுடன் போர் புரிந்தது, அவனுக்கு பயந்து இந்திரன் போய் ஒளிந்து கொண்டது, இந்திரன் இல்லாத இடத்தில் நகுஷன் என்கிற மன்னன் இந்திரனாக பட்டம் சூட்டிக் கொண்டது, அதன் காரணமாக இந்திரனுடைய மனைவி சசியை விரும்பியது, அவளை தன்னிடம் அனுப்பி வைக்குமாறு தேவர்களை கேட்டது, சசி பிரார்த்தனை செய்ய அவனுக்கு கேடு காலம் வந்து விட்டது, இதுவரை எவருமே உபயோகப்படுத்தப்படாத ஒரு வாகனத்தில் என்னிடம் வருவீர்களா என்று கேள் என்று ஒரு யோசனை சொல்லப்பட்டது, சப்த ரிஷிகளை வைத்து பல்லக்கு தூக்கும்படி செய்தது, நகுஷன் கர்வத்தின் காரணமாக அப்படியே ரிஷிகளை பல்லக்கு தூக்கும்படி உத்தரவிட்டது, அவ்வாறு தூக்கிய அகத்தியருடைய முதுகில் வேகமாகப் போ என்று எட்டி உதைத்தது, அதன் காரணமாக பலம் முழுவதும் இழந்து பாம்பாக சொர்க்கத்திலிருந்து கீழே விழுந்தது என்ற கதைகளை சல்யன் சொன்னார்.

இந்த பர்வத்தின் முடிவில் துரியோதனன் பக்கம் எத்தனை படைகள் வந்து சேர்ந்தன என்ற கணக்கும், துருபதனால் அனுப்பப்பட்ட அந்த அந்தணர் இந்தப் படைகளை பார்த்து விட்டு திரும்பியதாகவும் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஒரு முக்கியமான இடத்திற்கு மகாபாரதம் வந்து, மேற்கொண்டு முன்னிலும் அதிகமான சம்பவங்களோடு தொடர்கிறது.

(அடுத்து,
மூன்றாம் பர்வம் ஆரம்பம்)

மகாபாரதம்

86

கண்ணனிருக்க கவலை ஏன்?

“பேரன்புமிக்க பெரியோர்களே, தர்மம் என்றால் என்ன என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். நீங்கள் அதைப்பற்றி கூறுவதை, நான் பேசுவதை, ஆமோதிப்பதை பிற்பாடு நான் கேட்கத்தான் போகிறேன். ஆயினும் எது தர்மம் என்ற பேச்சை நான் ஆரம்பித்து வைக்கிறேன். நீங்கள் சுகமாக முடிப்பீர்கள் என்று நம்புகிறேன்.”

அந்த அந்தணர் உரத்த குரலில் தெளிவாக சபையில் உள்ள எல்லோருக்கும் கேட்கும் வண்ணம் மூன்று புறமும் சுற்றிப் பார்த்து தன் பேச்சைத் துவக்கினார். பேசுவதற்கு முன்பு திருதராஷ்டிரனிடமும், விதுரரிடமும், பீஷ்மரிடமும் நலம் விசாரித்தார். தன் வணக்கங்களை தெரிவித்துக் கொண்டார். அவரின் வருகையை அந்தச் சபை அங்கீகரித்தது. அவர் பேச்சை கேட்க தயாராக இருந்தது. இது முக்கியமான நிகழ்வு என்று எல்லோருக்கும் தோன்றியது.

“தந்தை வழியாக வந்த ஒரு சொத்தை இரண்டு சகோதரர்கள் பங்கு போட்டுக் கொள்ள வேண்டுமென்பதுதான் தர்மம். அதுதான் நியதி. காலம் காலமாக அப்படித்தான் நடந்து கொண்டு வருகிறது. திருதராஷ்டிரன், பாண்டு என்ற இரண்டு சகோதரர்களுக்கிடையே யுத்தமென்று ஏதும் வரவில்லையெனினும் திருதராஷ்டிரன் பாண்டுவிற்கு ஏனோ சொத்தை பிரித்துக் கொடுக்கவேயில்லை. பஞ்சபாண்டவர்களுக்கு இது உன்னுடைய பங்கு என்று அளிக்கவேயில்லை. இது எதனால் என்பது எனக்குப் புரியவேயில்லை. ஒருவேளை பிற்பாடு செய்து கொள்ளலாம், அதற்குண்டான நேரம் வரவில்லை என்று திருதராஷ்டிரன் நினைத்துக் கொண்டிருக்கலாம் என்று நான் ஆதரவாகவே பேசுகிறேன்.

ஆனால், ஆரம்பத்திலிருந்தே துரியோதனாதிகள் பாண்டவர்களை மரியாதையாக நடத்தவில்லை. மாறாக ஒழிக்க எண்ணம் கொண்டு பல்வேறு விதமான தொந்தரவுகளை அவர்கள் திரும்பத் திரும்ப செய்து கொண்டு வந்தார்கள். என்ன என்பதை நீங்களும் அறிவீர்கள். நானும் அறிவேன். மறுபடியும் அதைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். அப்படி தங்கள் சகோதரர்களை சிற்றப்பனுக்கு பிறந்த அந்த ஐந்து குழந்தைகளை மிகுந்த வெறுப்பு கொண்டு ஒதுக்கி வைத்தது மட்டுமல்லாது துரியோதனன் சூதாட அழைத்தான். தன்னுடைய பலத்தால் ஒரு சிறிய தேசத்தை ஆண்டு கொண்டிருந்த அவர்களை அழைத்து சூதாடச் சொல்லி வற்புறுத்தி, துரியோதனன் சூதாடாது சகுனியை வைத்து சூதாடி வஞ்சனையாக அவர்களுடைய உரிமைக்கு உண்டான தேசங்களை பெற்றுக் கொண்டார்கள். இது அநீதி என்பதைத் தெரிந்திருந்தும் இந்தச் சபை மௌனமாக இருந்திருக்கிறது.”

“இது நடந்து முடிந்த கதை நடக்க வேண்டியதைப் பற்றி பேசு.”

மிகவேகமாக கர்ணன் அந்த அந்தணரை மடக்கினான். அந்த அந்தணர் அவனை உறுத்துப் பார்த்தார்.

ஒருபேச்சு முடியும் முன்பு நான் முடித்து விட்டேன் நீங்கள் பேசலாம் என்று ஒருவர் சொல்லும் முன்பு குறுக்கே மறிப்பது, அதட்டிப் பேசுவது அநாகரீகம். சபை நாகரீகம் தெரியாதவன்தான் அப்படி நடந்து கொள்வான். இந்த ராதேயன் என்கிற தேரோட்டி மகனுக்கு இது தெரியவில்லை என்பதாக அவர் அவனையே உறுத்துப் பார்த்தார்.

“சூதுக்கு அழைத்ததும், அதில் தோற்றுப் போனதும், வனவாசம் மேற்கொண்டதும், அஞ்ஞாதவாசம் மேற்கொண்டதும் தெரியும் அல்லவா. அதைச் சொல்லிக் கொண்டிருப்பானேன். இப்போது எதற்காக வந்திருக்கிறீர் அதைச் சொல்லும்.”

“நீங்கள் விதித்தபடி அந்த இரண்டு விஷயங்களையும் தருமபுத்திரர் செவ்வனே முடித்து விட்டார். பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியும் இதை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து வனவாசமும், அஞ்ஞாத வாசமும் மிகத் திறமையாக செய்து முடித்து விட்டார். இப்பொழுது உங்களுடைய முறை. அவர் முடித்து விட்டார் என்று தெரிந்தும் அவரை அழைத்து அவருடைய ராஜ்ஜியத்தை நீங்கள் திருப்பிக் கொடுக்கவில்லை. இது அநீதி. உனக்கு என்ன வேண்டும் என்று நீங்கள் கேட்கவில்லை. இது அயோக்கியத்தனம். எனவே, இந்த இரண்டையும் விட்டுவிட்டு அவரை அழைத்து உடனடியாக அவருக்குண்டான பங்கை தரவேண்டும் என்று திருதராஷ்டிரன் முன்னால் கௌரவர்களை கேட்டுக் கொள்கிறேன்.”

“தராவிட்டால்...”

மறுபடியும் கர்ணன் உரத்தக் குரலில் பேசினான். பீஷ்மர் எழுந்தார்.

“வாயை மூடு கர்ணா. ஒரு சபையில் எதைப் பேச வேண்டும், எப்பொழுது பேச வேண்டும் என்று தெரியாதவர்களெல்லாம் ஏன் சபைக்கு வருகிறீர்கள். பேச்சு என்பது நாகரீகம் மிக்கது. ஒரு கிராமத்து சபையில்கூட அந்த ஒழுக்கம் கடைபிடித்து வருகிறது. மிக விரைவாக ஒரு விஷயத்தை முடித்து விடவேண்டும் என்று எண்ணாதே. உன் மனப்போக்கு எப்படி இருக்கிறதோ அப்படி இந்த விஷயம் முடிக்க வேண்டும் என்றும் நினைக்காதே. விஷயத்தை வளர விடு. அதன் போக்கில் விடு. அது என்ன செய்ய வேண்டுமோ செய்யட்டும். இன்னொரு முறை குறுக்கே பேசாதே” என்று அதட்டினார்.

பாலகுமாரன்

“அந்தணரே, அறிவில் சிறந்த ஸ்ரீகிருஷ்ணரும், வலிவுமிக்க அர்ஜுனனும் ஒரு பக்கத்தில் இருக்கிறபொழுது அவர்களை எதிர்கின்ற திறன், தைரியம் இந்த உலகத்தில் எவருக்கு வரும். அப்படி எதிர்ப்பானேயானால் அவனைவிட முட்டாள் யார் இருக்க முடியும்.” பீஷ்மர் தொடர்ந்து பேச, அது தன்னைக் குறித்துதான் வருகிறது என்று கர்ணன் புரிந்து கொண்டான். உற்றுஅவரை கவனித்தான். அந்த இடத்தில் உஷ்ண அலை வீசியது.

ஆரம்பம் சரியாக இல்லையே என்று திருதராஷ்டிரன் பதைபதைத்தான். மற்ற மன்னர்களும், சேனாதிபதிகளும் கவலைப் பட்டார்கள். ஒரு இயல்பாக நடக்க வேண்டிய விஷயத்தை கர்ணனுடைய பேச்சு குலைத்துப் போடுகிறது. அது வேறு ஒரு திசைக்கு அழைத்துப் போகிறது என்று சகலரும் புரிந்து கொண்டார்கள்.

“தன் தந்தையினுடைய சொத்து முழுவதையும் பெற யுதிஷ்டிரருக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது. கொடுத்தே ஆக வேண்டிய சொத்து அது. ஆனால், தருமபுத்திரர் அமைதியை விரும்பி ஒரு அந்தணரை இங்கு தூது அனுப்பியிருக்கிறார். ஒருவேளை இது ஸ்ரீகிருஷ்ணருடைய ஆலோசனையாகவும் இருக்கலாம். வந்த அந்தணர் மிகத் தெளிவாக தன்னுடைய கருத்தை எடுத்து வைத்து விட்டார். மறுத்தால் என்ற கேள்வி வரவேயில்லை. மறுக்கக்கூடாது என்பதுதான் இங்குள்ள நிபந்தனை. மறுப்பது அதர்மம் என்பதுதான் இங்கு அவருடைய பேச்சு.”

“யுதிஷ்டிரர் சமாதானத்தை விரும்புகின்றாரா. எங்கோ படை திரட்டிக் கொண்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். பாஞ்சால தேசத்து அரசனிடம் மண்டியிட்டு உதவி கேட்பதாக கேள்விப்படுகிறேன். சமாதானத்தை விரும்புகிறவர் செய்கிற செயலா இது. அப்படி சமாதானத்தை விரும்புகிறவர் நேரிடையாக வந்து துரியோதனனிடம் அடைக்கலம் கோர வேண்டியது தானே. துரியோதனன் அவரை பார்த்துக் கொள்ள மாட்டாரா வாழ்நாள் முழுவதும். தர்மம் தர்மம் என்று சொல்லிக் கொண்டே யுதிஷ்டிரர் வேறு ஏதோ செய்து கொண்டிருக்கிறாரே தவிர இந்தத் தூது அர்த்தமாகப்படவில்லை. எங்களை பேசி பயமுறுத்தினால் அர்ஜுனன் மகாவீரன் என்பதை நிரூபிக்க துடிதுடித்தால் எங்களோடு மோதிய பிறகு யுத்தம் என்பது என்ன என்பதை புரிந்து கொள்வார்கள்.”

கர்ணன் உரத்த குரலில் பேசினான். சபை குழம்பிற்று.

“கர்ணா போதும் நிறுத்து. உன் பேச்சுக்கு ஒன்றும் குறையில்லை. ஒரு சபை இருக்கிறது என்பது தெரிந்தும் துரியோதனன் பக்கம் நீ பேச வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதை எல்லோரும் கவனிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அதிகப்பிரசங்கித்தனமாக அளவுக்கு அதிகமாகப் பேசுகிறாய். விராட தேசத்தில் தனி ஒருவனாக அர்ஜுனன் உங்கள் அத்தனைப் பேரையும் அடித்து துரத்தினான். நான் உட்பட பின்னடையும் படியாக ஆயிற்று. பலமுறை அர்ஜுனனிடம் நீ தோற்றோடி திரும்பியிருக்கிறாய். அதை ஞாபகம் வைத்துக் கொண்டு பேசு. அதிகம் பேசாதே. வீணாகப் பேசினால் அர்ஜுனன் கையால் நீ அடிபட்டு சாக

வேண்டியிருக்கும்.”

இந்தப் பேச்சை முழுவதும் கேட்டுக் கொண்டிருந்த திருதராஷ்டிரன் கை உயர்த்தினார். சபை அமைதியாயிற்று.

“அந்த அந்தணர் பேசியதில் தவறில்லை. ஒருவேளை சமாதானத்திற்கு உட்படவில்லை என்றால் பாண்டவர்கள் போருக்கு அழைக்கிறார்கள் என்பதை மறைமுகமாகவும், தெளிவாகவும் சொல்லி விட்டார். முடிவு செய்ய வேண்டியது நம்முடைய கவலை. எனவே, உடனடியாக அந்த அந்தணர் தன் ஊருக்கு திரும்ப வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

அந்தணரே, நான் இங்குள்ள சபையினரோடு ஆலோசித்து சஞ்சயனை பாண்டவர்களிடம் அனுப்புகிறேன். என் செய்தியை தெளிவாக மேற்கொண்டு என்ன நடக்க வேண்டும் என்பதை உறுதியாக சஞ்சயன் உங்களுக்குச் சொல்வார். உங்களுக்கு விடை கொடுக்கிறேன்.” என்று கை கூப்பினார்.

சபை எழுந்தது. அந்த அந்தணரை வணங்கியது. அவர் மிக நிதானமாக நடந்து வாயிலைக் கடந்து தன் தேரில் ஏறிக் கொண்டார். அந்த அந்தணர் நகர்ந்ததும் சபையினர் என்ன செய்வது என்று திரும்பி திருதராஷ்டிரனை பார்க்க, ‘சஞ்சயா’ என்று அவர் உரக்க கூற, சபை முடியவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தது. அவரவர்கள் ஓசை எழ ஆசனத்தில் அமர்ந்தார்கள். துரியோதனனும், கர்ணனும் இல்லாத அந்த சபையில் சஞ்சயனிடம் திருதராஷ்டிரன் பேச ஆரம்பித்தார்.

“சஞ்சயா, பாண்டவர்களுக்கு என் ஆசிர்வாதத்தைச் சொல். அவர்களை நலம் விசாரி. நான் நலமாக இருக்கிறேன் என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்து விடு. துரியோதனன் முட்டாள். மோசமான ஒரு விஷயத்தை உத்தமம் என்றும், உத்தமமான ஒரு விஷயத்தை மோசம் என்றும் கருதுகின்ற அளவுக்கு முட்டாள். ஒரு அரசகுமாரனாக சுகத்திலேயே வளர்ந்தவன். அவனுக்கு வாழ்வின் வேதனை தெரியவில்லை. யுத்தத்தின் உக்கிரம் இன்னும் புரிபடவில்லை. வெகு எளிதாக அர்ஜுனனை ஜெயித்து விடலாம் என்று தனக்குத் தானே பேசி நம்பிக் கொண்டிருக்கிறான். தன்னுடைய பலத்தை தானே அதிகரித்து தன்னைப் பற்றி தானே புகழ்ந்து நினைக்கிறவனுடைய நிலைமை மூடத்தனமானது.

அர்ஜுனனை விட அற்புதமான வில்லாளி எவரும் இல்லை. வடக்கு பக்கம் போய் முழுவதும் ஜெயித்து விட்டு வந்திருக்கிறான். அவனுக்கு இணை அவனே. துரியோதனன் யாரை நம்பிக் கொண்டிருக்கிறானோ அவன் பேச்சில் வல்லவனே தவிர செய்கையில் அர்ஜுனனுக்கு குறைந்தவன்தான். பீமன் கதை எடுத்து சுழற்ற ஆரம்பித்தால் அந்த கோபாவேசத்திற்கு முன்பு எவரும் நிற்க முடியாது.

போர் போர் என்று ஆசைப்பட்டால் போதுமா. யாரோடு போர் செய்கிறோம், எதன் பொருட்டு போர் செய்கிறோம் என்று தெரிய வேண்டும். பன்னிரண்டு வருட வனவாசத்திலும், ஒரு வருட அஞ்ஞாத வாசத்திலும் உடம்பும், மனதும் கடும் வேதனைகள் ஏற்பட்டு அவற்றை சகித்துக் கொண்டு இதற்கெல்லாம் காரணம் துரியோதனன் என்பதை மனதிற்குள் மூடி வைத்துக் கொண்டு, சரி போனால் போகட்டும் அவனுக்கு ஒரு முறை நல்ல வாய்ப்பு தருவோம் என்று தூது அனுப்பியிருக்கிறார்கள். அதை புறக்கணித்துப் பேச கர்ணன் என்ற ஒரு முட்டாள் இங்கே இருக்கிறான். என்ன செய்வது. விதி வலியது. மோசமான நண்பர்கள் சூழலில் தான் விதி ஒருவனை கெடுக்கும் பொழுது ஏற்படும்.



பாண்டவர்களுடைய பக்கத்தில் திருஷ்டதுய்ம்னன் என்ற பெயரில் ஒரு பலசாலி வீரன் இருக்கிறான். அவன் தன்னுடைய சரீரத்தையையும், யுத்தத் திறமையையும் தன் மந்திரிகளோடு யுதிஷ்டிரனுக்கு அர்ப்பணித்து விட்டான். மத்ஸ்ய மன்னன் விராடன் தன் புதல்வர்களோடு பாண்டவர்களின் உதவிக்காக எப்பொழுதும் காத்திருக்கிறான். ஒரு வருடம் பாண்டவர்கள் அந்த மன்னனிடம் அமைதியாக வாழ்ந்து வந்தார்கள். அதற்கு அவர்கள் நன்றியோடு இருக்கிறார்கள். இவர்கள் யாரென்று அறியாமல் அடைக்கலம் கொடுத்து விட்டோமே, ஏதேனும் தவறு செய்திருப்போமோ என்ற பயத்தில் யுதிஷ்டிரர் என்ன சொன்னாலும் சரி என்று தலை அசைக்கின்ற விதத்தில் விராடன் இருக்கிறான். பீஷ்மரிடம் அஸ்திர வித்தை பயின்ற சாத்விகி பாண்டவர்களுக்கு உதவியாக இருக்கிறான். எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீகிருஷ்ணர் அவர்களோடு இருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணருடைய வேகத்தை எவரால் சகித்துக் கொள்ள முடியும். அடுத்தபடி என்ன நடக்கும் என்பதை அவரைப் போல் திறமையாக, தெளிவாக புரிந்து கொண்டு செயல்படுபவர்கள் வேறு எவராவது இருக்கிறார்களா, அப்படிப்பட்ட புத்திமான் அங்கு இருக்கிறபொழுது அந்த இடத்தை பகைத்துக் கொள்வது சரிதானா.

இன்னொன்று நடந்தது சஞ்சயா, சிசுபாலன் என்ற மிகச் சிறந்த வில்லாளி, அற்புதமான போர் வீரன், அவன் ஒருவேளை துரியோதனன் பக்கம் நின்று விடுவானோ, அப்படியெனில் அவனை ஜெயிப்பது கடினம் என்ற நினைப்பில் ஸ்ரீகிருஷ்ணர் தானே எதிரே நின்று தன் சக்கரத்தால் அவனைக் கொன்று போட்டார். யுத்தம் வரும் முன்பே மிகப்பெரிய வில் வீரன் ஒருவன் அவர் கையால் இறந்து போனான். ஆக, இங்கு அத்தனையும்ஸ்ரீகிருஷ்ணரின் திட்டப்படி நடைபெறுகிறதே அன்றி வேறு எப்படியும் அல்ல. இது எனக்குப் புரிகிறது. ஏன் துரியோதனனுக்கும், கர்ணனுக்கும் புரியவில்லை என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. சிசுபாலனை ஸ்ரீகிருஷ்ணர் தொடர்ந்து மன்னித்திருப்பார். ஆனால், பாண்டவர்களுக்காக அவனை சக்கரத்தால் கொன்றார். இப்படி ஒவ்வொரு செயலும் பாண்டவர்களுக்காக ஸ்ரீகிருஷ்ணர் செய்து வருகிறபோது அந்த பாண்டவர்களை எதிர்த்துப் போரிடுவது முட்டாள்தனம்.

அரக்கர் சேனையை இந்திரனும், விஷ்ணுவும் சேர்ந்து அழித்தது போல கௌரவர்கள் அழிக்கப்பட போகிறார்கள். அர்ஜுனன் இந்திரனாகவும், ஸ்ரீகிருஷ்ணர் சனாதன விஷ்ணுவாகவும் எனக்குத் தோன்றுகிறார்கள். யுதிஷ்டிரர் தர்ம நடத்தையில் பற்றுள்ளவர். அமைதியானவர். இதனாலேயே அவர் பக்கம் அதிகம் பேர் சேர்வார்கள். இந்த நல்லவருக்கு ஆபத்தா என்று பதறி போரில் ஈடுபடுவார்கள். துரியோதனன் வெறுமே எண்ணிக்கையில் படை திரட்டிப் போவதில் என்ன பிரயோஜனம். நம்மிடம் பதினோறு அக்ஷௌனி சேனை இருக்கிறது. பாண்டவர்களிடமோ ஏழுதான் இருக்கிறது. ஆனாலும் அந்த ஏழு அக்ஷௌனி சேனை தர்மத்தால் பலமானது. நீ தயவு செய்து பாண்டவர்களிடமேபோய் அவர்கள் கோபத்தை கிளராத வண்ணம் ஸ்ரீகிருஷ்ணனை முன்னிறுத்தி இந்தப் பேச்சை துவக்கு. ஸ்ரீகிருஷ்ணரின் எந்தப் பேச்சையும் யுதிஷ்டிரர் தட்ட மாட்டார். சமாதான வார்த்தைகளில் ஸ்ரீகிருஷ்ணருக்கு நிச்சயம் ஈடுபாடு இருக்கும். எனவே, இப்போதே உடனேயே நீ பாண்டவர்கள் இடம் நோக்கி தூதுவனாக போய் வா. சண்டையை தவிர்க்கின்ற பேச்சை மட்டும் பேசு. கோபத்தைக் கிளற வேண்டாம்'' என்று பலமுறை அறிவுரை சொன்னார்.

திருதராஷ்டிரனிடம் விடைபெற்றுக் கொண்டு சஞ்சயன் உபப்லவ்யம் என்ற இடத்திற்கு போனார். பாண்டுவின் புதல்வனான யுதிஷ்டிரரிடம் சேர்ந்து அவரை வணங்கினார்.

''இந்த அழகிய அரண்மனையில் தங்கள் சகோதரர்களோடு ஒரு இந்திரனைப் போல யுதிஷ்டிரரே நீங்கள் வீற்றிருக்கிறீர்கள். எல்லா கெடுதலும் முடிந்து நீங்கள் நன்மைக்கு திரும்பிய இந்த நேரம் எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. இத்தனை சோதனைகளுக்குப் பிறகும் உங்கள் முகம் தெளிவாகவும், அமைதியாகவும் இருப்பதைப் பார்த்து நான் வியந்து போகிறேன். யுதிஷ்டிரர் ஒரு தர்மவான் என்று மக்கள் சொல்வது இதனால்தான் என்று கருதுகிறேன். உங்கள் அமைதி பார்ப்பதற்கு சந்தோஷமாக இருக்கிறது. அதேசமயம் அது குறித்து ஒரு பயமும் வருகிறது. மனதில் இருப்பதை வெளியே தன் முகத்தில் காட்டாதவரை பார்க்கும் பொழுது பயம் வருவது இயல்புதானே.”

“வருக சஞ்சயா வருக. திருதராஷ்டிரன் நலமாக இருக்கிறாரா? அவரிடமிருந்து அவர் சொல்லி ஒரு தூதுவன் என்னை நோக்கி வந்திருப்பதில் நான் மட்டமற்ற மகிழ்ச்சியடைகிறேன். அவர் பெருந்தன்மைக்கு நான் தலைவணங்குகிறேன். அங்கே சகலரும் நலமா. பீஷ்மரும், விதுரரும் எப்படி இருக்கிறார்கள். துரோணரும் அவர் புதல்வரும் எப்படி இருக்கிறார்கள். கிருபர் நலமாக இருக்கிறாரா? அவர் மிகச்சிறந்த வில்லாளி. அவர் எவர் பக்கம் நின்றாலும் அவர் வெற்றி குறித்து அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. மூடனான துரியோதனன்

எப்படி இருக்கிறான். அவனுக்கு நெருக்கமான கர்ணனோடு இன்னும் சல்லாபித்துக் கொண்டிருக்கிறானா? கௌரவ வம்சத்து தாய்மார்களும், பெரிய சிறிய பெண்களும், சபையில் பணிபுரியும் பணிப்பெண்களும், மருமகள்களும், மகன்களும், சகோதரிகளும், மகன்களின் புதல்வர்களும் எல்லோரும் நலமாக இருக்கிறார்களா. நான் அங்கு பலருக்கு தானம் கொடுத்து வந்தேன். அவைகளையெல்லாம் துரியோதனன் கெடுக்காமல் இருக்கிறானா. இல்லையென்றால் கொடுத்தது நான் என்பதாலேயே துவேஷம் கொண்டு அதை தடுக்கிறானா. அரசவையில் உள்ள மந்திரிகள் சன்மானம் பெறுகிறார்களா? எந்தக் கவலையும் இல்லாமல் இருக்கிறார்களா? பகைவர் பக்கம் சேராமல் இருக்கிறார்களா? நாட்டு நடப்பை கூர்மையாக கவனிக்கிறார்களா? அரசருக்கும் மக்களுக்கும் பாடமாக திகழ்கிறார்களா என்பதை எனக்கு தயவுசெய்து சொல்லுங்கள். எனக்கு உடைமையாக இல்லாவிட்டாலும் அந்த தேசத்து மக்கள் மீது நான் மாறாத காதல் கொண்டிருக்கிறேன். அவர்கள் நலம் முக்கியம்.”

தருமபுத்திரனின் இந்தக் கருணை தாங்காது சஞ்சயன் கண் மூடி கைகளை குவித்துக் கொண்டான். எல்லா நேரத்திலும் எல்லோர் இடத்திலும் தர்மசிந்தனையாக இருக்க ஒரு சிலரால் மட்டும்தான் முடிகிறது என்று நினைத்துக் கொண்டான்.

“சஞ்சயா, அர்ஜுனனையும், பீமனையும் கண்டு அவர்கள் பயப்படுவது இருக்கட்டும். நகுல சகாதேவர்கள் சாதாரணமானவர்களா, சகாதேவன் அம்பு மழையைப்பற்றி அவர்களுக்கு மறந்து விட்டதா, இடது கையாலும், வலது கையாலும் அம்புகளை மழைபோல் பொழிய விட்டு கலிங்க நாட்டு வீரர்களை சகாதேவன் ஜெயித்து வந்தானே அது அவர்களுக்கு மறந்து விட்டதா. கண் முன்னாலேயே சிபி மற்றும் நாட்டு நகுலனை தனியே அனுப்பினோம். அவன் ஜெயித்து வந்து அவர்களை எனக்கு ஆதினப்படுத்தினான். அதுவும் மறந்து விட்டதா. இவர்களையே எதிர்க்க முடியாத கௌரவர்கள் அர்ஜுனனையும், பீமனையும் ஜெயித்து விடுவார்களா. தன் பலம் என்ன, தன் எதிரியின் பலம் என்ன என்பதை அவனுக்கு சொல்லித் தருவார் யாரும் இல்லையா, அல்லது அவன் யார் பேச்சையும் கேட்காமல் காதுகளை மூடிக்கொண்டிருக்கிறானா, கர்ணனை நம்பி போரில் இறங்குகிறானா. அந்தக் கர்ணனை நம்பித்தானே இவன் தைத்ய வனத்தில் யுத்தத்திற்கு வந்தான். அடிபட்டுத் திரும்பினான் அல்லவா. நான் ஆணையிட்டதின் பேரில் அர்ஜுனனும், பீமனும் உள்ளே இறங்கி துரியோதனனையும், கர்ணனையும் விடுவித்தது முற்றிலும் மறந்து போயிற்றா. எனக்கு அவனை நினைத்தால் வியப்பாக இருக்கிறது சஞ்சயா. இத்தனைக்குப் பிறகும் எனக்கு துரியோதனன் மீது கோபமே இல்லை. பரிதாபமே ஏற்படுகிறது.”

இந்தச் சொல்லுக்காக சஞ்சயன் யுதிஷ்டிரரை கைகூப்பி வணங்கினான்.

“யுதிஷ்டிரா, திருதராஷ்டிரர் ஒருபொழுதும் தன் பிள்ளைகளை போரிடும்படி வற்புறுத்தவில்லை. உங்களுக்கு எதிராக திசை திருப்பவில்லை. மாறாக உங்களோடு போர் புரிய வேண்டியிருக்குமே என்கிற கவலையை மனதில் கொண்டு அடிக்கடி புலம்புகின்றார். போர் செய்யும் எண்ணம் துரியோதனனுக்கும், அவனைச் சார்ந்தவர்களுக்கும் இருக்கிறது. நீங்கள் போருக்குத் தயங்குவதுபற்றி அங்குள்ளவர்கள் நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள். பீஷ்மரும், விதுரரும் உங்களைப்பற்றி கவலைப்படுகிறார்கள். இது சமாதானமாக முடிந்தால் நன்றாக இருக்குமே என்று துரோணரும், அஸ்வத்தாமனும் நினைக்கிறார்கள். விதுரருக்கும் அந்தக் கவலை உண்டு. முன்பு ஒரு அரசவையில் இருந்து விட்டு அங்கு முக்கியமான இடத்தை கௌரவமாக ஏற்றுக் கொண்டு விட்டு பிறகு ஏதோ ஒரு காரணம் சொல்லி வேறொரு பக்கம் போவது என்பது தங்களுக்கு இழுக்கானது. என்ன நடந்தாலும் எங்கு நின்றோமோ அங்கேயே நிலைத்து நிற்க வேண்டும் என்பது நல்ல வீரர்களுடைய கொள்கையாக இருக்கிறது. அவ்விதமே அவர்கள் இருக்கிறார்கள்.

(தொடரும்)

மகாபாரதம்

87

யுதிஷ்டரிடம் பேசி வந்த சஞ்சயன் நேரே அஸ்தினாபுரம் வந்தார். தன் வருகையை மன்னனுக்குத் தெரிவித்தார். தடையின்றி உள்ளே வர உத்தரவானதும் திருதராஷ்டிரனிடம் வந்து கை கூப்பினார். பாண்டவர்கள் நலம் விசாரித்ததை சுருங்கச் சொன்னார்.

"அவர்கள் யுத்தம் என்று தெளிவாக இருக்கிறார்கள். துரியோதனனும் அவர்களுக்குரிய பங்கை தர மாட்டான் என்பதை புரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் கோபமாக இல்லை. அமைதியாக இருக்கிறார்கள். ஆழ்ந்து யோசித்து பேசுகிறார்கள். அந்த அமைதிதான் எனக்கு பயமாக இருக்கிறது. போர் என்று வந்தால் நாங்கள் ஜெயிப்போம் என்ற உறுதி அவர்களிடம் தெரிகிறது. யுதிஷ்டர் முழுவதும் பேசவில்லை. கிருஷ்ணரை பேசச் சொல்கிறார். ஸ்ரீகிருஷ்ணரின் பேச்சு சமாதானத்தை விரும்புவது போல் தெரிந்தாலும், பாண்டவர்களுக்கு ராஜ்ஜியம் கிடைப்பதே அதற்கு வழி என்கிறார். இவற்றையெல்லாம் காணும்பொழுது உங்கள் பிள்ளையும் அவன் கூட்டத்தாரும் கொல்லப்படப் போவது உறுதி.

போரில் வெற்றி என்பது போர் வீரர்கள் எண்ணிக்கை மட்டுமல்ல. மகாரதிகளின் கூட்டம் மட்டுமல்ல. அதற்கு ஒரு வெஞ்சினம் வேண்டும். அவர்கள் மற்ற மன்னர்களோடு யுத்த ஆலோசனை செய்தபோது திரௌபதிக்கு ஏற்பட்ட அவமானத்தையே முதல் விஷயமாகப் பேசினார்கள். கர்ணனுடைய கேலியையே கவனம் கொண்டு பேசினார்கள். அவர்களுடைய அந்த மனவேதனையை யாராலும் மாற்ற முடியாது. போருக்கு இதுதான் வழிவகுக்கிறது. இதுதான் போரை உக்கரப்படுத்தும். இந்த கோபத்திற்கு எதிரே எவன் ஜெயிக்க முடியும். மிகுந்த பலசாலிகளான அவர்கள் வனவாசத்தாலும், அஞ்ஞாத வாசத்தாலும் அழுந்திக் கிடந்தார்கள். இப்போது பீறிடும் சமயம் வந்து விட்டது. திறமையும், கோபமும் போட்டி போட்டுக் கொண்டு கௌரவர்களை வதம் செய்யப் போகின்றன. கௌரவர்கள் ஜெயிப்பதற்குண்டான வாய்ப்பு எனக்குத் தெரியவில்லை.

நாளைக்கு சபையில் பலர் அறிய இந்த உண்மையைச் சொல்லுவேன். இது துரியோதனனை பலவீனப்படுத்தட்டும். கர்ணனை நிலைகுலையச் செய்யட்டும். அல்லது படுகுழியில் விழ அவர்கள் தயாராகட்டும். ஏனெனில் உங்கள் சபை சொல்லுவதை அவர்கள் கேட்கப் போவதில்லை. எனக்கு அயற்சியாக இருக்கிறது. நான் ஓய்வெடுக்கப் போகிறேன். விடை கொடுங்கள்." வணங்கி விட்டு சஞ்சயன் அரண்மனையை விட்டு வெளியேறினார்.

"விதுரா", திருதராஷ்டிரன் அலறினான். "உடனே விதுரரை கூப்பிடு. மனதும் வயிறும் கலங்கும்படியான வார்த்தைகளை சஞ்சயன் சொல்லி விட்டுப் போகிறான். என்னால் இனி உறங்க முடியாது. விதுரனை அழைத்து வந்து நான் என்ன செய்ய வேண்டும் என்பதை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். விதுரன் தர்மத்தின் பக்கம் நிற்பவன். அவனால் எனக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்ல முடியும். உடனே விதுரனை அழைத்து வா" என்று கட்டளையிட்டான்.

விதுரர் விரைவாக வந்து சேர்ந்தார். திருதராஷ்டிரனுக்கு அருகே போய், "நான் விதுரன் வந்திருக்கிறேன். என்னை அழைத்தீர்களாமே" என்று பணிவாகக் கேட்டார்.

"விதுரா, அருமை சகோதரனே, எனக்கு மனம் கலங்கியிருக்கிறது. தூங்க முடியவில்லை. என்ன முயற்சித்தாலும் உறக்கம் வரவில்லை. மாறாக இடையறாத ஒரு பதட்டத்தில் சிக்கித் தவிக்கிறேன். என் வம்சத்தினர் வாழ்வு என்ன ஆகும் என்று எனக்குத் தெரியவில்லை. ஏன் இப்படி நடக்கிறது என்ற காரணம் புரியவில்லை. இன்றைய சூழ்நிலையை ஆராய்ந்து தெளிவாகப் பேசு. இம்மாதிரி நேரத்தில் ஒரு அரசன் என்ன செய்ய வேண்டுமென்று சொல். யார் பக்கம் நிற்க வேண்டும் என்று தெரிவி. வந்த அந்தணரும் சண்டையைச் சொல்ல, போன சஞ்சயனும் யுத்தம் பற்றிய செய்தியோடு வர, என் மனதில் கலக்கம்

தெளிவுடையவன் பிறர் விமரிசனங்களைப்

பொருட்படுத்துவதில்லை!

அதிகமாகிறது. அழிவு வந்துவிட்டதோ என்றுத் தோன்றுகிறது. நான் இப்போது செய்ய வேண்டிய தர்மத்தைச் சொல். நீ அறிவுமிக்கவன். ஞானி. என் மீது அக்கறையுள்ளவன். துன்பத்தில் இருக்கின்ற என்னை வழிநடத்து.” திருதராஷ்டிரன் பணிவாகக் கை கூப்பினான்.

துன்பம் நெருங்கி வருகிறபோதுதான் சமாதானம் பற்றியும், சண்டையில்லா உலகம் பற்றியும் சிலருக்கு அக்கறை வரும். ஆனால் வந்த துன்பம் விலகி நின்றதும் மறுபடியும் கொக்கரிப்பு ஏற்படும். தர்மம் என்பது துன்பமே வரக்கூடாது என்று பேசப்படுவது அல்ல. துன்பம் வரும்போதும் துவளாது இருக்க தர்மம் உதவி செய்யும்.

விதுரன் யோசித்து பேச ஆரம்பித்தார்.

இந்தப் பகுதிக்கு விதுர நீதி என்று பெயர். சுருக்கமாகவும், தெளிவாகவும் வாழ்வின் தர்மத்தைப் பற்றி விதுர நீதி சொல்கிறது. அரசனுக்கு மட்டுமல்ல, சகலருக்கும் உரித்தானது. மகாபாரதத்தின் சிறப்பு பகவத்கீதை. பகவத்கீதை தங்கப் பதக்கம் என்றால் விதுர நீதி வெள்ளிப் பதக்கம். பலமுறை பலமுறை படிக்க வேண்டிய விஷயம்.

திருதராஷ்டிரனை நோக்கி பணிவாகவும், உறுதியாகவும் விதுரர் பேசத் துவங்கினார். இது பேச வேண்டிய நேரம் என்று புரிந்து கொண்டு பேசினார். இங்கு பேசினால் ஏதேனும் பலன் ஏற்பட்டாலும் ஏற்படும் என்று பலரின் நன்மை கருதி அவர் பேசத்துவங்கினார். தாம் அழைக்கப்பட்டிருக்கிறோம், பேசுவதற்காக பணிக்கப்பட்டிருக்கிறோம், இந்த வாய்ப்பை விடக்கூடாது நாமாக வந்து பேசுவதை விட அழைக்கும் போது நாம் பேசினால் ஆழ்ந்து கவனிக்க அழைத்தவருக்கு அக்கறை இருக்கும் என்று நினைத்துப் பேசினார்.

“திருதராஷ்டிர மன்னனே, பலவானை பகைத்துக்கொண்ட பலவீனன், காமுகன், திருடன், நோயாளி இவர்களுக்குத்தான் இரவில் தூக்கம் இருக்காது. இந்த நான்கில் நீங்கள் எந்த இடத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்று யோசித்து எனக்குச் சொல்லுங்கள்.

பாண்டவர்களுக்கு நீங்கள் தரவேண்டிய ராஜ்ஜியத்தை தராமல் போனது பிசகு. அவர்களை சூதாட அழைத்ததும், அந்த சபையில் அவர் மனைவியை உங்கள் பிள்ளைகள் அவமானப்படுத்தியதும், அதை நீங்கள் தட்டிக் கேட்காமல் இருந்ததும் மிகப்பெரிய தவறு. உண்மையில் அந்த விஷயங்கள்தான் இப்போது உங்களை வாட்டுகின்றன.

யாரிடம் எந்த பொறுப்பை விட வேண்டுமோ அவர்களிடம் ஒரு மன்னன் பொறுப்பை விடவேண்டும். துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாதனன் போன்ற தகுதியற்ற மனிதர்களிடம் ராஜ்ய பரிபாலனத்தை விட்டு விட்டு நீங்கள் எப்படி நிம்மதியாக இருக்க முடியும். அடுத்த வேளை, அடுத்த பொழுதில் இவர்கள் என்ன கூத்து செய்வார்களோ என்ற பயத்தோடுதானே இருப்பீர்கள். எப்படி தூங்க முடியும்.

எவன் உண்மையிலேயே தனக்கு என்ன தெரியும் என்கிற ஞானம், முயற்சி, துயரத்தை சகிக்கும் சக்தி, தர்மத்தில் உறுதி போன்ற குணங்கள் இருப்பின் அவன் பண்டிதன் என்று அழைக்கப்படுகிறான். பண்டிதனால்தான் உலகுக்கு நன்மைகள் செய்ய முடியும். உலக காரியங்களை உண்மையாய் செய்கிறவனும், தீய காரியங்களிலிருந்து விலகுபவனும், ஆஸ்திகனும், எல்லா காரியத்தையும் சிரத்தையோடு செய்வதும் பண்டிதனுக்குறிய லட்சணங்கள்.

அதர்மம், வெட்கம், பிடிவாதம், அதீத சந்தோஷம், தன்னையே பூஜைக்குரியவனாக கருதுதல் போன்ற பாவங்கள் ஒரு மனிதருடைய கம்பீரத்தை குலைக்கின்றன. அவன் மனிதர்களால் கேலிக்கான பொருளாக மாறுகிறான். மற்றவர் தன்னை கேலியாக பார்க்கிறார்களோ என்று துயரப்படும் மனிதனுக்கு தூக்கம் வருவதில்லை.

தர்மத்தோடு இருக்கிறோம் என்ற தெளிவுடையவன் மற்றவர்களுடைய விமர்சனங்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. அவன் பொழுதுகள் மகிழ்ச்சியாக இருக்கின்றன. வெட்கம், பயம், அன்பு, செல்வம், ஏழ்மை இவை யாருடைய காரியத்தில் தலையிடுவதில்லையோ அவனே பண்டிதன் என்று அழைக்கப்படுகிறான். எவன் போகத்தை விட்டு கம்பீரத்தை கடைபிடிக்கிறானோ அவனே பண்டிதன் என்று அழைக்கப்படுகிறான். தன்னுடைய சக்தி என்ன என்று புரிந்து கொண்டு அதற்கேற்றபடி பணி செய்கிறவனையே உலகம் மதிக்கிறது. நல்ல புத்தி தெரிந்தவன் மற்றவர்களை துச்சமாக மதிப்பதில்லை. ஒரு பண்டிதன் விஷயத்தை வெகுநேரம் கேட்கிறான். ஆனால் முற்றிலும் சீக்கிரம் புரிந்து கொண்டு விடுகிறான். தன்னுடைய கடமை என்ன என்று புரிந்து கொண்டு கம்பீரமாய் தன் தொழிலில் ஈடுபடுகிறான். அவன் விருப்பம் என்பது அங்கு குறுக்கிடுவதில்லை. எந்த ஒரு விஷயமும் வீணாகப் பேசுவதில்லை. இந்த மூன்று செயல்களும் பண்டிதனுடைய முக்கியமான இயல்புகளாகும்.

அமைதியான அறிவுள்ள மனிதன் கிடைத்தற்கு அரிய பொருளை விரும்புவதில்லை. உயர்ந்த பொருளின் விஷயத்தில் ஆசைப்பட்டு துயரப்பட விரும்புவதில்லை. யோசனை செய்து ஒரு விஷயத்தில் இறங்குகிறவன், மனதை தன் வசத்தில்

இதயபூர்வ அஞ்சலி

பாலகுமாரன்

அந்தந்த அவருடைய வயதிற்கேற்ப அவரது எழுத்துப் பயணம் அமைந்ததை, பாலகுமாரனுடைய ஆரம்பகாலம் முதல் இன்றுவரையிலான இவரது எழுத்துகளைப் படித்து வருபவர்களுக்குப் புரியும்.

கவிதை, சிறுகதை, நாவல், சினிமா என்ற வளர்ச்சியில், முதுமைகாலத்து முத்தாய்ப்பாக இவர் ஆன்மிகத்திலேயே நிலைத்து, ஒன்றிவிட்டதும் புரியும்.

தினகரன் நாளிதழின் சனிக்கிழமை இணைப்பான ஆன்மிக மலரில், 2010 ஆண்டுவாக்கில் ‘மண்ணில் தெரியுது வானம்’ என்ற தலைப்பில் ஆன்மிக-இலக்கிய-தன்னம்பிக்கைத் தொடரை எழுதி, லட்சக்கணக்கான வாசகர்களின் மனதைக் கவர்ந்தவர் பாலகுமாரன்.

தற்போது ஆன்மிகம் மாதமிருமுறை இதழில் ‘மகாபாரதம்’ தொடரை எழுதி பல்லாயிரக்கணக்கான வாசகர்களை அந்த புராண காலத்துக்கே அழைத்துச் சென்று மகிழ்வித்து வந்தவர்.

இந்நிலையில் திரு பாலகுமாரன் அமரராகிவிட்டது, இலக்கிய-ஆன்மிக உலகிற்குப் பேரிழப்பு என்பது ஒவ்வொருவரும் ஆழ்ந்த வருத்தத்துடன் உணரக்கூடியதாகும்.

ஆனாலும், தம் ஆன்மிகக் கடமையிலிருந்து பிறழ விரும்பாத பாலகுமாரன், தன் இறுதிநாள்வரை எழுதிக்கொண்டே இருந்தார் என்பதையும், அவ்வாறு கடைசியாக எழுதப்பட்டது, நம் ஆன்மிகம் இதழுக்கான மகாபாரத அத்தியாயங்கள்தான் என்பதையும் அறியும்போது மனம் நெகிழ்கிறது. இதயம் கசிந்து கண்ணீர் பெருகுகிறது.

அந்த சில அத்தியாயங்களை மேலும் தொடர்ந்து பிரசுரித்து அவருக்கு உரிய மரியாதையைச் செலுத்த விழைகிறோம்.

அவர் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கிறோம்.

வைத்திருப்பவன் பண்டிதன் என்று கருதப்படுகிறான்.

தர்மங்களில் மனிதனுக்கு ஒரு ருசி ஏற்பட வேண்டும். உன்னதமான காரியம் செய்வதற்கு ஒரு விழைவு ஏற்பட வேண்டும். அப்படி செய்பவர்களிடம் ஏதேனும் குறை இருப்பினும் அதை மற்றவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.

நல்லவர்கள் மேற்கொள்ள வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பற்றி கொஞ்சம் காது கொடுத்து கேட்பீராக.

எவன் செல்வத்தைக் கண்டால் சந்தோஷத்தால் மலர்ந்து விடுவதில்லையோ, எவன் அவமதிப்பால் கவலைப்படுவதில்லையோ, எவருடைய உள்ளத்திற்கு எது பொருட்டும் துயரம் உண்டாவதில்லையோ அவன் பண்டிதன் என்று அழைக்கப்படுகிறான். இப்படிப்பட்டவனுடைய வாக்கு தடைபடுவதில்லை. அவன் உளறுவதில்லை. அவன் மிக தீர்க்கமாகப் பேசுகிறான். அழகாக விவாதம் செய்கிறான். சிறந்த நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுகள் காட்டுகிறான். அவனை உலகம் பண்டிதன் என்று அழைக்கிறது.

ஒருவனுடைய அறிவு அவன் கற்றிருக்கும் வித்தையை பின்பற்ற வேண்டும். ஒருவருடைய வித்தை அவனை அறிவைச் சார்ந்து இருக்கிறதோ அவன் பண்டிதன் என்று அழைக்கப்படுகிறான்.

படிக்காமலேயே பெரிய படிப்பாளி போல நடந்து கொள்கிறவன், தகுதிக்குப் பொருந்தாத பதவி உடையவன், வேலை செய்யாமலேயே செல்வம் செய்ய விரும்புகின்றவன் ஆகியோரை பண்டிதர்கள் முட்டாள்கள் என்று கூறுகிறார்கள். எவன் தன் கடமையை விட்டுவிட்டு மற்றவருடைய கடமையை கடைபிடிக்கிறானோ, நண்பர்களோடு பொய்யாக நடந்து கொள்கிறானோ, அவன் முட்டாள் என்று அழைக்கப்படுகிறான். சேர்க்கத் தகாதவர்களை எவன் விரும்புகிறானோ அவனும் முட்டாள்தான். யாரிடமும், எது பற்றியும் ஐயம் கொள்கிறவன், விரைவில் நடக்க வேண்டிய காரியத்தை தாமதமாகச் செய்பவன் மூடன் என்று கருதப்படுகிறான். எவன் பித்ருக்களின் சிரார்த்தத்தையும், தேவர்களின் பூஜையையும் செய்யவில்லையோ, எவனுக்கு நல்ல எண்ணமுடைய நண்பர்கள் கிடைப்பதில்லையோ அவனையும் மூடன் என்றே சொல்லலாம். அத்தகைய மூடன் அம்மாதிரியான அதமன் யாரும் அழைக்காமலேயே உள்ளே வந்து விடுகிறான். பிறர் கேட்காமலேயே அதிகம் பேசுகிறான். அவன் நம்பத்தகாத மனிதரை அதிகம் நம்புகிறான். இம்மாதிரி மனிதர்களால் உலகில் குழப்பங்கள்தான் ஏற்படும்.

எவனொருவன் தான் குற்றமாக நடந்தபடி மற்றவர் மீது அந்த குற்றத்தைக் கூறி ஆட்சேபணை செய்கிறானோ, எவன் திறமை இருக்கிறவனை வீணாக கோபிக்கிறானோ அவன் மிகப் பெரிய முட்டாளாவான். அதிகாரம் இல்லாதவனுக்கு எவன் உபதேசிக்கிறானோ, அனர்தத்தை எவன் உபாசிக்கிறானோ, எவன் கடுமையைக் கொண்டாடுகிறானோ அவனை மூடன் என்று கூறுகிறார்கள்.

எவன் பெரும் செல்வம், வித்தை மற்றும் ஐஸ்வர்யத்தை பெற்றும் பிடிவாதக்காரனாக நடந்து கொள்வதில்லையோ அவன் பண்டிதன் என்று அழைக்கப்படுகிறான்.

தன்னால் காப்பாற்றப்பட வேண்டிய மக்களுக்கு உணவு தராமல், உடை தராமல், தானே நல்ல போஜனமும், நல்ல உடையும் அணிகிறவன் மிகப் பெரிய கொடுமைக்காரன்.

அதிகாரம் உள்ள மனிதன் தனியாக பாவம் செய்கிறான். அதை பலபேர் பயன்படுத்துகிறார்கள். ஆனால் பயன்படுத்தியவர்கள் குற்றத்திலிருந்து விடுபடுகிறார்கள். ஆனால் அதைச் செய்தவன் அந்த குற்றத்திற்கு முழு பொறுப்பாகிறான்.

ஒரு மூடனால் வெளியிடப்பட்ட குருட்டு அறிவு ஒரு ராஜ்ஜியத்தை அழித்து விடும். மது குடிப்பதால் குடிப்பவன் மட்டுமே இறந்து போகிறான். ஆயுதம் ஒருவனைத்தான் அழிக்கிறது. ஆனால் தவறான ஆலோசனைகள் மக்களை, மன்னனை அழிக்கின்றன.

உலகத்தில் பொறுமைதான் அழகிய குணம். வசீகரமான குணம். பொறுமையால் எதுதான் வெற்றியடையாது. தர்மம் என்பது கூரான வாள். துஷ்டர்கள் அவருக்கு அருகில் நெருங்க முடியாது.

வெற்று நிலத்தில் விழுந்த நெருப்பு தானாக அணைந்து விடும். பொறுமை இல்லாது செய்யப்படுகின்ற கோபதாபங்கள் எந்தப் பயனுமின்றி தானாக நீர்த்துப் போய் விடும்.

இரண்டு வகை அதர்ம புருஷர்கள் உலகத்தில் உண்டு. தன் கடமையைச் செய்யாத குடும்பஸ்தன், உலகத்திலுள்ள கர்மங்களை

செய்கின்ற சன்னியாசி. குடும்பம் என்பது ஒரு பொறுப்பு. அந்தப் பொறுப்பை ஏற்காத மனிதனை உலகம் மதிப்பதேயில்லை. துறவு என்பது எதன் மீதும் பற்றற்று இருத்தல். இடையறாது தன்னுள் ஒடுங்கிக்கிடத்தல். உள்ளுக்குள் ஒடுங்காது உலகத்தின் போகங்களில் புரள்கிறவனை எப்படி சன்னியாசி என்று அழைப்பது. இவர்கள் இரண்டு பேருமே கேலிக்குரியவர்களாக மாறிப் போகிறார்கள். பெரும் பாவம் இவர்களைச் சூழ்கிறது.

மனைவியால் நேசிக்கப்படுகிற புருஷனை விரும்புகின்ற பெண், புருஷனால் நேசிக்கப்படுகின்ற மனைவியை விரும்புகின்ற ஒரு ஆண் சுயமதிப்பீடு இல்லாமல் போகிறார்கள். சொந்த கௌரவம் பாழ்பட்டு இருக்கிறார்கள். யாரையும் சாராமல் இருப்பதே சிறப்பு.

இருவகையான மனிதர்கள் சொர்க்கத்தை அடைகிறார்கள். ஏன் சொர்கத்தை விட உயரமான இடத்தை அடைகிறார்கள். பலசாலியாக இருந்தும் பொறுமையாக இருப்பவன், ஏழையாக இருந்தும் தானம் அளிப்பவன் இரண்டு பேரும் உன்னத இடத்தை இறந்த பிறகு அடைகிறார்கள்.

எவன் செல்வனாக இருந்தும் தானம் அளிக்கவில்லையோ, எவன் தரித்தரனாக இருந்தும் கஷ்டத்தை சகிக்கவில்லையோ, அவன் வாழும்போதே நரகத்தில் உழல்கிறான். சுகபோகம் துறந்த சன்னியாசியும், போரில் பகைவர் எதிரே வீரமாக நின்று இறந்து போன போர்வீரனும் சூரிய மண்டலத்தை தாண்டியும் நிற்கிறார்கள்.

சிறிய அறிவுடையவன், துதி செய்பவன், அவசரப்படுபவன் ஆகியோரோடு ரகசிய ஆலோசனை செய்யக் கூடாது, மன்னர்கள் இவர்களை விலக்கி வைக்க வேண்டும். அறிவாளிகள் இத்தகைய மக்களை புரிந்து கொள்கிறார்கள்.

ஒரு செல்வந்தர் தன்னுடைய வீட்டில் நான்கு வகையான முக்கிய மனிதர்களை எப்பொழுதும் இருக்கச் செய்ய வேண்டும். குடும்பத்தில் முதியவர், உயர்குல மனிதன், செல்வமற்ற நண்பன், குழந்தையற்ற சகோதரி இவர்கள் நால்வரும் செல்வந்தருக்கு எப்போதும் உதவுவார்கள்.

எந்த யோக்கியதையும் இல்லாத, ஐஸ்வர்யத்தை விரும்பும் மனிதன், உறங்கும் மனிதன். தூக்க கலக்கம், கோபம், பயம், சோம்பல், தாமதம் என்ற ஆறு குணங்களும் நீக்கப்பட வேண்டும். உபதேசம் அளிக்காத ஆச்சாரியன், மந்திரத்தை உச்சரிக்காத சீடன், ஜனங்களை ரட்சிப்பதில் திறமையற்ற மன்னன், கடுமையான சொற்களை பேசுகின்ற பெண், காடுகளுக்குப் போகாது கிராமத்திலேயே இருக்க விரும்புகின்ற இடையன், காட்டிற்கு போகும் நாவிதன் என்று அறுவரையும் சமூகம் புறக்கணித்து விடும்.

ஒரு மனிதன் ஒரு பொழுதும் சத்தியம், தானம், தன் கடமையைச் செய்தல், அசூயை இன்மை, பொறுமை, தைரியம் என்ற ஆறு குணங்களையும் விடவே கூடாது.

மன்னா, நியாயமான முறையில் செல்வத்தை அடைதல், எப்பொழுதும் ஆரோக்கியமாக இருத்தல், அனுகூலமான மனைவியை அடைதல், தன் உறவுகளிடம் பிரியமாகப் பேசுதல், கட்டளைக்கு அடங்கியிருக்கின்ற மகன், செல்வத்தை உண்டாக்கும் வித்தை என்று ஆறு விஷயங்களும் மனிதனுக்கு சுகம் அளிப்பன. இவை ஏதும் இல்லாது ஒரு மனிதன் சிறந்துவிட முடியாது. ஏதேனும் ஒன்று குறைந்தாலும் அவன் வாழ்க்கை குறையுள்ளதாகத்தான் இருக்கும்.

இப்பொழுது சொல்லப் போகிற ஆறு வகையான மனிதர்கள் ஆறு வகையான மக்கள் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

வைத்தியன் பிணியாளனாலும், காமம் கொண்ட பெண்கள் காமிகளாலும், புரோகிதர்கள் எஜமானரிடமிருந்தும், மன்னன் போரிடுபவனிடமிருந்தும், வித்வான்கள் முட்டாள்கள் மூலமும் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

சரியான முகூர்த்த நேரம் பார்த்து பரிமாறாதது, பசு, சேவை, பயிர், பெண், வித்தை, கலைகள் தெரிந்தவர்களின் சேர்க்கை என்ற ஆறு விஷயங்களும் நஷ்டமாகின்றன. பெண்ணை திருமணத்திற்கு பார்க்கப் போகிறபோதும், பசுவை வாங்குகிறபோதும், பயிரை விதைக்கிறபோதும், அறுவடை செய்கிறபோதும், உடையவர்களை சந்திக்கும்போதும் நல்ல நேரம், நல்ல ஓரையில் தொடர்பு கொள்ள வேண்டும். நேரம் தவறாக இருந்தால் இந்த விஷயங்களெல்லாம் எதிர்மறையாகப் போகும்." என்றார் விதுரர்.

(தொடரும்)



பூரண சுகத்தை விரும்புகிறவன்

தர்மத்தின்படி நடக்க வேண்டும்!

விதுரர் தொடர்ந்து திருதராஷ்டிரனுக்கு வாழ்க்கையின் யதார்த்தத்தை விளக்கினார்:

"எவன் ஒருவன் தனக்கு சமமானவர்களோடு விவாகம், நட்பு, வியாபாரம் போன்ற விஷயங்களைப் பேசுகிறானோ அவனுக்கு பிரச்னைகள் ஏற்படுவதில்லை. எவன் சிறிதளவே போஜனம் செய்கிறானோ, எவன் அதிகம் வேலை செய்து விட்டு சிறிதளவே தூங்குகிறானோ, எவன் நண்பனாக இல்லாதபோதும் கேட்டவனுக்கு செல்வம் தருகிறானோ அவனை எந்த அனர்த்தமும் அண்டுவதில்லை. மாறாக எதிர்பாராத இடங்களிலிருந்து ஆதரவுகள் அவனுக்கு வந்து சேரும்.

"திருதராஷ்டிரரே, பாண்டுவின் புதல்வர்கள் ஐந்து பேரும் ஐந்து இந்திரர்களைப் போன்ற சக்தியுடையவர்கள். அவர்களை சிறுவயதிலிருந்து வளர்த்து நல்ல கல்வி கொடுத்தீர்கள். அவர்களும் உங்களுக்கு கட்டுப்பட்டு உங்கள் ஆணையை மீறாது இருக்கிறார்கள். அவர்களுக்குண்டான ராஜ்ய பாகத்தை அளித்து மற்ற புதல்வர்களோடு சந்தோஷமாக வாழ்க்கையை அனுபவியுங்கள். இவ்விதம் செய்தால் மக்களுடைய விமர்சனத்திற்கு நீங்கள் ஆட்படமாட்டீர்கள். மாறாக இருந்தால் வெகு வேகமாக மக்கள் உங்களுடைய யோக்கியதையைப் பற்றி விவாதிக்க ஆரம்பிப்பார்கள்."

"விதுரா, யுதிஷ்டர் என்ன நினைக்கிறார் என்பதை எனக்கு கூறு. இந்த விஷயத்தில் அவருடைய எண்ணம் என்ன என்பதை எனக்குத் தெரியப்படுத்து. மற்ற நீண்ட போதனைகள் எனக்குத் தேவையில்லை," கொஞ்சம் கடுகடுப்பாகவே திருதராஷ்டிரன் பேசினான்.

"மக்கள் தான் விரும்பிய பதில்களை எதிர்ப்பார்த்து அது கிடைக்காது போனால் பேசுபவரை நிந்திக்கத் துவங்கி விடுகிறார்கள். ஒருவருக்கு என்ன சொல்லை சொல்ல வேண்டுமோ, அந்த சொல்லைத்தான் அறிவாளி தேர்ந்தெடுக்கிறான். அது இனிமையானதோ, கடுமையானதோ அதைப் பற்றி கவலைப்படாது உனக்கு உபயோகமாக வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நான் பேசுகிறேன். ஒரு மன்னனை குதூகலப்படுத்த நான் இங்கு வரவில்லை.

"அசட்டு உபாயங்களைப் பயன்படுத்தி கபடமான காரியங்கள் வெற்றி அடைந்தால் அது நிச்சயம் கவலையைக் கொண்டு வந்து சேர்க்கும். சரியான காரியங்கள் அமைதியான முறையில் நடந்தால் அவை வெற்றியடையாவிட்டாலும் விமர்சிக்கப்படாது. ஒரு செயல் செய்யும்பொழுது அந்த செயலின் பிரயோஜனத்தை முதலில் அறிந்துகொள்ள வேண்டும். இதனால் என்ன லாபம் என்று யோசிக்க வேண்டும்.



மகாபாரதம்

88

நன்கு ஆலோசிக்க வேண்டும். என்ன விளைவு என்று தெரியாமல் ஒருபொழுதும் ஒரு செயலை செய்ய ஆரம்பிக்கக்கூடாது.

“எந்த அரசன் லாபம், நஷ்டம், கஜானா, தேசம், தண்டனை ஆகியவற்றின் அளவை அறியமாட்டானோ, அவன் ராஜ்யத்தில் அதிக நேரம் நிலைபெற முடியாது. கஜானாவின் இருப்பே தெரியாதவனும், கடுமையான தண்டனை வழங்குபவனும், தேசத்தின் நீள அகலம் தெரியாதவனும், செய்கின்ற காரியத்தில் லாபமும், நஷ்டமும் புரியாதவனும் எப்படி மன்னனாக இருக்க முடியும்? செல்வம் அதிகாரம் ஆகியவை கிடைத்து விட்டது என்பதற்காக மனம்போன போக்கில் நடந்து விடக்கூடாது. வீண் பிடிவாதம் செல்வத்தை, முதுமையை, அழகு உருவத்தை அழித்து விடுகிறது.

பாலகுமாரன்

“ஒழுக்கம் என்ன என்று சொன்னேன் அல்லவா, இதை உண்ணுகின்ற விஷயத்திலிருந்தே துவங்க வேண்டும். உண்ண முடிந்தவற்றை, உண்டபின் ஜீரணமாவதை, ஜீரணமானவுடன் தகுந்த சக்தி அளிப்பதை மட்டுமே உண்ண வேண்டும். ருசியாக இருக்கிறது என்று வெறும் ஆவலுக்குட்பட்டு உணவை உண்ணக் கூடாது. உணவிலேயே இவ்வளவு கவனம் இருக்க வேண்டுமென்றால் மற்ற விஷயங்களை, செயல்களை செய்யும்போது எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும்!

“பூவை கசக்காமல் தேனீ தேனை உண்பது போல மக்களை இம்சை படுத்தாமல் ஒரு அரசாங்கம் வரியை வசூலிக்க வேண்டும். தோட்டக்காரன் தோட்டத்திலுள்ள பூக்களை பறிக்கிறான், செடிகளை பிடுங்கிப் போடுவதில்லை. வரி கொடுக்கின்ற மக்களை இம்சித்தால் நாளை எவர் வரி தருவார். பிரியமாக பார்க்கின்ற மன்னனை அவர் மௌனமாக இருந்தாலும் ஜனங்கள் விருப்பத்தோடு ஏற்கிறார்கள்,” என்றார் விதுரர்.

“விதுரா,” தாழ்ந்த குரலில் ரகசியம் போல திருதராஷ்டிரன் தன் சகோதரனை அழைத்தான். “வெகுநாளாய் மனதில் இருந்த கேள்வி, இப்போது கேட்கிறேன். வேதங்களில் மனித வயது நூறு என்று சொல்லப்பட்டிருப்பினும் அவ்விதம் அவர்கள் வாழ்வதில்லையே ஏன்?”

மன்னனின் குரலில் அறிய வேண்டும் என்ற அக்கறையைக் கண்டு விதுரன் நெகிழ்ந்தான். “மன்னா, ஐந்து கூரிய வாள்கள் மனிதனின் ஆயுசை வெட்டுகின்றன. மிகுந்த கர்வம், அதிகம் பேசுதல், தியாகமின்மை, தன் வயிறு வளர்க்கும் கவலை, சினேக துரோகம் என்ற ஐந்து கூரிய வாள்கள் சரீரம் உடையவரின் ஆயுசை வெட்டுகின்றன. குருவின் மனைவியோடு சேருபவன், மது அருந்துபவன், சலனமடைந்தவனை இம்சிப்பவன் இவர்கள் பிரம்மஹத்தி தோஷம் அடைவதற்குச் சமானமானவர்கள். இவர்களுடைய நட்பு ஏற்படுமானால் அதற்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டும். பிராயச்சித்தம் என்பது மறுபடி இம்மாதிரி சங்கம் நேரக்கூடாது என்று எச்சரிக்கையாக இருப்பது. ஏற்பட்டதற்கு வருந்துவது. பெரியவர்களின் ஆணையை ஏற்பவன், நீதி அறிந்தவன், வள்ளல், பூஜை செய்து சமர்ப்பித்த உணவை உண்பவன், இம்சை செய்யாதவன், தவறான செயல்களிலிருந்து விலகியிருப்பவன், நன்றியுள்ளவன், சத்தியம் சொல்பவன், மென்மையான இயல்புடைய பண்டிதன் ஆகியோர் சொர்க்கத்திற்கு செல்கிறார்கள்.

“எப்பொழுதும் அன்பாக பேசுபவர் கிடைக்கலாம். ஆனால் பிரியமே இல்லாமல் அன்பாக பேசுகிறானா என்று ஆராய வேண்டும். நடிப்பவரிடமிருந்து உடனே விலகி விடவேண்டும். சூதாட்டம் தவறு என்று ஆரம்பத்திலேயே கூறினேன். யாருமே கேட்கவில்லை. வியாதிஸ்தனுக்கு மருந்தும், பத்தியமும் நல்லது என்று தோன்றாது. பாண்டவர்கள் என்ற சிங்கங்களை விட்டு கௌரவர்கள் என்ற நரிகளைக் காப்பாற்ற முயற்சி செய்கிறீர்கள். இதற்காக ஒருகாலம் நீங்கள் வருத்தப்பட நேரிடும். எஜமானனுடைய நன்மைக்காக பாடுபடும் பக்தியுள்ள பணியாளனை எஜமான் கோபிப்பதில்லை. கோபிக்கக் கூடாது. அந்தப் பணியாளன் எஜமானனை ஆபத்துக் காலத்திலும் விடுவதில்லை. ஒரு அரசனின் ராஜ்யமும், செல்வமும் பிடுங்கப்பட்டால், அவன் சுக போகங்கள் மறுக்கப்பட்டு அவனுடைய நண்பர்களும், மந்திரிகளும் அவனுக்கு எதிராக பேசுகின்றனர். அனுபவித்து வந்த ராஜ்யத்தையும், செல்வத்தையும் இழப்பது என்பது மிகப்பெரிய கொடுமை. பெற்றவளையும் நம்ப முடியாதத் தன்மை அப்போது உண்டாகும்.

“எந்த வேலையாள் அதிகம் தெரியும் என்று சொல்கிறானோ, எஜமானனை விட கெட்டிக்காரன் என்று கருதிக் கொள்கிறானோ, தன்னுடைய அறிவு மிகக்கூர்மையானது என்று கர்வம் கொள்கிறானோ

அவனை உடனே விலக்கி விட வேண்டும். உலகில் மிகப் பெரிய கோள்மூட்டி அவன்தான். வாழ்வில் அக்கறை உள்ள மனிதன் ஒருபொழுதும் அகாலத்தில் ஒருவன் வீட்டிற்கு செல்லக் கூடாது. இரவில் மறைந்து நிற்கக் கூடாது. எஜமானன் விரும்பும் பெண்ணை அடைய முயற்சி செய்யக் கூடாது. பணியாளன் முகத்திற்கு எதிரே நான் உன்னை நம்பவில்லை என்று சொல்லக் கூடாது. ஒரு பாசாங்கோடு அவனை ஆதரித்து வெளியேற்றிவிட வேண்டும். ஏனெனில் இவனும் பிறரிடம் போய் எஜமானனைப் பற்றி கோள் சொல்பவன்.

“வாரி வழங்குகின்ற மன்னன், விபச்சாரம் செய்யும் பெண், அரசாங்க சிப்பந்தி, புதல்வன், சகோதரன், சிறிய குழந்தையுடைய விதவை, படைவீரன், அதிகாரம் பிடுங்கப்பட்டவன் ஆகியவனோடு கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ளக்கூடாது. ஒரு மனிதன் தினந்தோறும் நீராட வேண்டும். பலம், ரூபம், இனிமையான குரல், பிரகாசமான வண்ணம், மென்மை, நறுமணம், புனிதம், அழகு, சுகுமாரத் தன்மை, அழகிய பெண்கள் என்று பத்து லாபங்கள் கிடைக்கின்றன. அதேபோல் ஒருவன் தினந்தோறும் சிறிதளவே உண்ண வேண்டும். ஆரோக்கியம், ஆயுள், பலம், சுகம், சத்தான உற்பத்தி, நல்ல தூக்கம் என்று உள்ளவனுக்கு சிறிய உணவு காரணமாகின்றன.

“கடமையைச் செய்யாதவன், அதிகம் உண்பவன், சகலரிடமும் பகை கொள்பவன், மாயாவி, குரூரமானவன், தேச கால அறிவற்றவன், நல்லவன் போல் வேடம் தரிப்பவன் ஆகியவனை ஒரு பொழுதும் வீட்டில் தங்க விடக்கூடாது. கவலையளிக்கும் தொழிலை செய்பவர்கள், அதிக குற்றம் செய்பவர்கள், எப்பொழுதும் பொய் பேசுபவர்கள், நிலையற்ற பக்தியுடையவர்கள், அன்பற்றவர்கள், தன்னை கெட்டிக்காரனாக கருதுபவர்கள் ஆகியோருக்கு உதவி செய்யக் கூடாது.

புதல்வர்களை தோற்றுவித்து அவர்களை கடன் பாரத்திலிருந்து விடுவித்து, ஏதேனும் ஒரு வாழ்க்கைக்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். கன்னிகைகளை தகுந்த இடத்தில் கம்பீரமாக திருமணம் செய்விக்க வேண்டும். பிறகு காட்டிற்குப் போய் முனிவர்கள் போல வாழ வேண்டும். எது பிராணிகள் அனைத்திற்கும் நன்மை செய்வதோ, எது தனக்கு சுகம் அளிப்பதோ அதை ஈஸ்வர அர்ப்பணமாக செய்ய வேண்டும்.

“புரியவில்லையா, உன் உணவு வெறுமே வாங்கியதாக இருக்கக்கூடாது. அது தயார் செய்யப்பட்டு, கடவுளுக்கு நிவேதனம் செய்யப்பட்டு, அது இப்பொழுது வலிமைமிக்கது என்ற எண்ணத்தோடு, உண்ண வேண்டும். மனிதனுடைய சித்திகள் அனைத்தும் உணவை ஈஸ்வர அர்ப்பணமாக செய்வதிலிருந்து துவங்கும். இந்திரனைப் போன்ற பலம் பொருந்திய மன்னா, வானத்தில் கோணலாக தோன்றும் வால் நட்சத்திரம் பூமியில் பல தீங்குகளை விளைவிப்பது போல பீஷ்மரும், துரோணரும் கோபத்தால் பல தீங்குகள் செய்வார்கள். பாண்டவர்கள் புலிகளைப் போன்றவர்கள். கௌரவர்களோ காடுகளைப் போன்றவர்கள். காடுகளன்றி புலிகள் வாழாது. புலிகள் இல்லையெனில் காட்டின் மீது பயம் இருக்காது. புலிகளையும், காட்டையும் பிரித்தே வைக்கின்ற சூழ்ச்சி என்ன? யோசியுங்கள்.

“எவன் செல்வத்தின் பூரண சுகத்தை விரும்புகின்றானோ அவன் தர்மத்தின் படி நடக்க வேண்டும். அமுதத்திலிருந்து சத்து விலகாதது போல தர்மத்திலிருந்து நல்லது விலகுவதே இல்லை. யாருடைய அறிவு பாவத்திலிருந்து விலகி நன்மையை நாடுகிறதோ அவனுக்கு தர்மம் புலப்படும். இன்னும் சூட்சமமாகச் சொல்லப்போனால் எவன் கோபத்திலும், மகிழ்ச்சியிலும் தன்னுடைய வேகத்தை மட்டுப்படுத்தி வைக்கிறானோ அவனுக்கு எல்லாமும் வசப்படும். அவன் எந்த ஆபத்திலும் மயக்கமடைவதில்லை. அவனிடம் ராஜ்ய லக்ஷ்மி அடைக்கலம் புகுகிறாள். மனிதனிடம் ஐந்து வகை பலம் உள்ளது. பாஹுபலம் என்பது தாழ்வான பலம். நல்ல மந்திரி கிடைப்பது இரண்டாவது பலம். செல்வம் இருப்பது மூன்றாவது பலம். தந்தை மற்றும் பாட்டன் இயல்பான பலம், அபிஜாதம் என்பது

நான்காவது பலமாகும். பாகுபலம் என்கிற படைபலத்திலிருந்து இந்த நான்கு பலங்களையும் தாண்டி ஐந்தாவதாக வாழ்வில் வெற்றி பெற புத்தி பலம் தேவைப்படுகிறது.

‘‘யாருக்கும் அபகாரம் செய்யாத வாழ்க்கை நல்லது. பெண், அரசன், படித்த பாடம், மனித சாமர்த்தியம், பகைவன், சுகபோகம், தன் ஆயுள் மீது முழுமையான நம்பிக்கை உடையவன் எல்லாம் அறிவுள்ளவன் அல்ல. அறிவுள்ளவனுக்கு வைத்தியம் ஏதுமில்லை. மந்திரமில்லை. மங்கள காரியம் இல்லை. அவன் இவையெல்லாம் தாண்டி நிற்கிறான். ஒரு மனிதன் பாம்பு, அக்னி, சிநேகம், தன் குலத்தில் தோன்றிய மனிதன் ஆகியோரை அவமதிக்கக்கூடாது. அக்னி ஒரு மரக்கட்டைக்குள் மறைந்திருக்கிறது. தூண்டப்படுமானால் அது ஒரு காட்டையே அழித்து விடும். பாண்டவர்கள் மரக்கடையில் மறைந்த தீயைப் போல இருக்கிறார்கள். நீங்கள் ஒரு கொடியைப் போன்றவர். பாண்டவர்கள் பெரிய சால மரத்திற்கு ஒப்பானவர்கள். அந்த மரத்தை சாராது கொடி வளராது. தர்ம, அர்த்த. கர்ம காரியங்களை, செய்வதற்கு முன்பு சொல்லக்கூடாது. செய்து விடவேண்டும். நாளைக்கு உணவு தானம் செய்கிறேன் என்று இன்று சொல்லக் கூடாது. செய்து விடவேண்டும். வீட்டு மனை வாங்கப் போகிறேன் என்று சொல்லக் கூடாது. செய்து விடவேண்டும். இந்த பூஜை இன்ன தேதியில் செய்யப் போகிறேன் என்று பறையறிவிக்கக் கூடாது. அமைதியாக ஆரம்பித்து விடவேண்டும். மன்னன் ரகசிய ஆலோசனையை மலை உச்சி அல்லது அரண்மனையின் மேல் மாடம், காட்டில் புல் இல்லாத இடம் ஆகிய இடங்களில் தான் செய்ய வேண்டும்.

“எவன் நண்பன் இல்லையோ, நண்பனாக இருந்தாலும் எவன் பண்டிதன் இல்லையோ, நண்பனும் பண்டிதனாக இருந்தாலும் எவன் மன்னனுடைய பேச்சை கேட்க மாட்டானோ அவனை ரகசிய ஆலோசனையிலிருந்து விலக்கி விடவேண்டும். ரகசியத்தை ரகசியமாக வைக்கின்ற மன்னனுக்கு வெற்றி கிடைக்கிறது. வேதங்களைப் படிக்காமல் ஒரு அந்தணனுக்கு சிரார்த்த காரியங்கள் செய்வதற்கு அதிகாரம் இல்லை. அதேபோல ஒரு மன்னன் தியானம், ஆசனம், சமாதானம் போன்ற குணங்களை அறியாமல் ரகசிய ஆலோசனை செய்ய தகுதியற்றவன். எந்த மன்னன் அவசியமான காரியங்களை நேரிடையாக கவனிக்கிறானோ, யார் பொக்கிஷத்தின் கணக்கு பற்றி அறிவு கொண்டிருக்கிறானோ அவனை வெற்றி பெற முடியாது. ஒரு அரசன் தன்னுடைய பணியாளர்களுக்கு திருப்தியான அளவுக்கு செல்வம் அளிக்க வேண்டும். எல்லாவற்றையும் தானே சுருட்டிக்கொள்ளக்கூடாது. அந்தணனை அந்தணன் அறிகிறான். மனைவியை கணவன் அறிகிறான். மந்திரியை மன்னன் அறிகிறான். ஆனால் மன்னனை இன்னொரு மன்னன்தான் அறிய முடியும்.

“மன்னனுடைய அசைவுகள் குறித்து, யோசிக்கும் முறை குறித்து இன்னொரு மன்னனுக்குத்தான் தெரிகிறது. வதத்திற்கு வந்த, வதத்திற்குரிய எதிரியை ஒருபொழுதும் விடக்கூடாது. எதிரி பலம் மிகுந்திருந்தால் அவனோடு பணிவாக நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் சமயம் பார்த்து கொன்று விடவேண்டும். பகைவனை குறித்த பயம் ஒரு அரசனை தூங்கவிடாது. ஒரு மன்னன் தன் கோபத்தை முதியோன், பகைவன், நோயாளி ஆகியோரிடம் காண்பிக்கக் கூடாது. முட்டாள்களால் ஏற்படுத்தப்படும் அறிவற்ற கலகத்தை ஒரு மன்னன் வெறுமே பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. யாருடைய மகிழ்ச்சியால் பயனில்லையோ, யாருடைய கோபம் வீணானதோ அவர்களை விலக்கிவிட வேண்டும். பெண் அலியான கணவனை விரும்பாதது போல நகர்த்திவிட வேண்டும். அறிவால் செல்வம் பெருகுகிறது. தரித்திரத்திற்கு காரணம் முட்டாள்தனம். முட்டாள் மனிதன் வித்தை, சீலம், வயது, அறிவு, செல்வம் மற்றும் குலத்தில் மதிக்கத்தகுந்த பெரியவர்களை அவமதிக்கிறான். அவனால் அவன் சமூகத்திற்கு கெடுதல் ஏற்படுகிறது.

“தைரியம், மன அடக்கம், புலனடக்கம், தூய்மை, இரக்கம், மென்மையான வாக்கு ஆகிய விஷயங்கள் லக்ஷ்மிகரத்தை அதிகப்படுத்துபவை. யார் மீது குற்றம் சுமத்துவதால் யோக க்ஷேமத்திற்கு இடையூறு நேருமோ அவர்களை தெய்வத்திற்கு சமமானவராக நினைக்க வேண்டும். பிறரை நிந்திப்பவர்கள், பொதுமக்களுக்கு துயரம் தருபவர்கள், கலகம் செய்வதில் ஆவல் உள்ளவர்கள், எவரோடு இருப்பது ஆபத்தானதோ அம்மாதிரி மனிதர்களிடமிருந்து செல்வம் பெறக்கூடாது, தரவும் கூடாது. தீமை தீமையைத்தான் விளைவிக்கும். காமுகன், கலகம் செய்பவன், போக்கிரி, வெட்கமற்றவன், ஊரறிந்த பாபியோடு சிநேகம் கொள்ளக் கூடாது. அவனால் ஏதும் லாபம் இருப்பினும் அதைத் தியாகம் செய்து விடவேண்டும்.

நீச்ச, கொடூர புலன்களை வெல்லாத மனிதரிடமிருந்து அறிவுள்ளவர்கள் விலகியே நிற்கிறார்கள்.

‘‘ஒருவன் தன் குடும்பத்தினரிடமும், ஏழையிடமும், தீனர்களிடமும்,

நோயாளிகளிடமும் அன்போடும் அருளோடும் இருக்க வேண்டும். அவனுடைய குடும்பமும், பசுக்களும் விருத்தியடைகின்றன. அவன் மங்களகரமான விஷயங்களை அடைகிறான். மேற்சொன்ன மனிதனுக்கு உதவும்போது அவர்களிடமிருந்து பெருகும் நன்றிப் பெருக்கு எந்தத் தடையும் இல்லாத ஆசிர்வாதமாக அன்பு செய்தவனை சூழ்ந்து கொள்கிறது. தன் குடும்ப ஜனங்களுக்கு மரியாதை செய்பவன் விருத்தியடைகிறான். அந்த குடும்ப அங்கத்தினர்கள் குணமற்றவர்களாக இருந்தாலும் அவர்களை காக்க வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு.



‘‘மன்னா, நான் பேசியவற்றை மனதில் வைத்து பாண்டவர்கள் மீது கருணை செய்யுங்கள். அவர்கள் வாழ்க்கை நடத்த சில கிராமங்களை கொடுங்கள். நீங்கள் இந்த குடும்பத்தில் பெரியவர். நீங்கள் எல்லோரிடமும் அன்பாக இருக்க வேண்டும்.

ஒரு இனத்தின் மக்களே துன்பத்தில் உதவிக்கு வருகிறார்கள். அவர்களே துன்பத்தில் மூழ்கடிக்கவும் செய்கிறார்கள். அவர்களில் நன்னடத்தை உள்ளவர்கள் நன்மை தருகிறார்கள். தீயவர்கள் ஒரு மன்னனை தூக்கம் இல்லாமல் செய்கிறார்கள். பாண்டவர்கள் நல்லவர்கள். அவர்களிடமிருந்து நன்மையே அடைவீர்கள். விஷமுள்ள அம்பை கையில் எடுத்த வேடனுக்கு அருகே போகும் மான் எப்படி அவனால் துன்பமுறுகிறதோ, ஒரு இன மக்களின் செல்வந்தனாக இருப்பவன் மூலம் அவன் இனம் துயரம் அடைய வாய்ப்பிருக்கிறது. இனமக்களின் குற்றங்களுக்கு தலையாட்டுகிறவன் அவர்களின் பாபங்களில் பங்கேற்கிறான். எதைச் செய்வதால் முடிவில் வருத்தப்பட நேருமோ அதை செய்யாதிருப்பது நல்லது. இதற்கு ஆழ்ந்த அறிவு தேவைப்படுகிறது. இந்த அறிவு செயல்பட அமைதி தேவைப்படுகிறது. இந்த அமைதி ஆசையற்ற குணத்தின் மூலம் ஏற்படும். ஆசையுள்ளவன், அதீத ஆசையுள்ளவன், யோக்கியதைக்கு அதிகமான ஆசையுள்ளவன் அதற்கேற்ற துன்பத்தை அடைகிறான்.

‘‘துரியோதனனால் ஒரு சபையில் குற்றம் செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் இந்த குலத்திற்கு முதியவர். உங்களால் அந்தக் குற்றம் கழுவப்பட வேண்டும். உங்கள் குலத்திற்கு ஏற்பட்ட களங்கம் நீக்கப்பட வேண்டும். அப்பொழுது நீங்கள் அறிவுடையவர்களால் மதிக்கப்படுவீர்கள். எவன் ஆழ்ந்து யோசித்து தன் யோசனையை காரிய ரூபமாக மாற்றுகிறானோ அவன் பெரும் புகழ் பெறுகிறான். வெறுமே யோசித்துக் கொண்டிருப்பவனும், அதைக் காரியமாக்க மனம் இல்லாதவனும் அவமானத்தை அடைகிறான். இது நல்லது பயக்கும் என்று தீர்மானித்து விட்டால் நாலு பேர் ஆலோசனை புரிந்துவிட்டால் அந்த யோசனை செயலாக்கப்பட வேண்டும். தட்டிலேயே இருக்கும் உணவு பசியை போக்காது. முன்பு செய்த பாவங்களை மறுபடி செய்தவனும், அதைப் பற்றி சிறிதும் யோசிக்காதவனும் நரகத்தில் வீழ்த்தப்படுகிறான். போதை வஸ்துக்களை பயன்படுத்துபவன், நல்ல உறக்கம் இல்லாதவன், அறிய வேண்டிய விஷயங்களை அறியாதவன், துஷ்ட மந்திரிகளை நம்புவன், திறமையில்லாத வேலையாளிடம் நம்பிக்கை வைத்தவன், தன்னுடைய கண், முகத்தில் மாறுதல் ஏற்படுவதை அறியாதவன் ஆகியோரை அழிவுக்கு அழைத்துக் கொண்டு போகும். கடலில் விழுந்த பொருள் அழிந்து விடுகிறது. காது கொடுத்து கேட்காதவனிடம் கூறப்பட்ட சாஸ்திர ஞானம் வீணாகப் போகிறது. வினயம் அபகீர்த்தியை அளிக்கிறது.

“பராக்கிரமம் அனர்த்தத்தை அழிக்கிறது. பொறுமை கோபத்தை அழிக்கிறது. நன்னடத்தை தீய லட்சணத்தை அழிக்கிறது. எவன் பண்டிதனின் சேவைகளில் இருக்கிறானோ, எவன் தார்மீகனோ, எவன் பார்ப்பதற்கு அழகாக இருக்கிறானோ, நண்பனிடம் எவன் இனிமையாகப் பேசுகிறானோ அவனை அருகே வைத்து ஆதரிக்க வேண்டும். இரண்டு நண்பர்களின் மனதோடு மனம் சேர்ந்தாலும், மறைக்க வேண்டிய ரகசியத்தை மறைக்க வேண்டும். ஆனால் அறிவோடு அறிவு சேரலாம். இத்தகைய நட்பு அழிவதில்லை.

(தொடரும்)

காணக்கிடைக்காத வேரின்றி மரமே இல்லை!

விதுரர், திருதராஷ்டிரனுக்கு மேலும் அறிவுரை பகன்றார்: "நண்பன் என்பவன் நன்றியுள்ளவனாக, தர்மம் உடையவனாக, சத்தியவானாக, உதார குணம் (இரக்கம்) உள்ளவனாக, உறுதியான அன்புடையவனாக, புலன்களை வென்றவனாக, மரியாதைக்குட்பட்டவனாக, நட்பை துறக்காதவனாக இருக்க வேண்டும்.

"புலன்களை எப்போதும் அடக்கி வைத்திருப்பது மரணத்தைவிட கடுமையானது. புலன்களை கட்டவிழ்த்து விடுவது, அந்த தேவர்களையும் அழிக்கக்கூடியது. மங்களப் பொருட்களில் ஸ்பரிசம் (உதாரணம் கையில் எலுமிச்சை பழம் வைத்திருத்தல்) உள்ளத்தை அடக்குதல், சாஸ்திர பயிற்சி, உழைப்பு, எளிமை, நல்லவர்களின் தரிசனம், எப்போதும் நன்மை தரும். ஒரு முயற்சியில் ஈடுபடுதல், அங்கே சலிப்பு கொள்ளாதிருந்தல், உயர்வு. முயற்சியை விடாத மனிதன் மகானாகிறான். முயற்சியோடு கூடிய பொறுமை மிகுந்த நன்மையை அளிக்கக் கூடியது. முயற்சிக்கும் பொறுமைக்கும் என்ன சம்பந்தம்? சிறிது யோசித்தாலும் தெரிந்து விடும்.

"துக்கத்தால் பீடிக்கப்பட்டவன், நாஸ்திகன், குற்றம் செய்தவன், சோம்பல் உள்ளவன், புலனடக்கம் அற்றவன் மற்றும் உற்சாகம் இல்லாதவனிடம் லக்ஷ்மி வாசம் செய்வதில்லை. அவனை சக்தியற்ற மனிதனாக் கருதி அவனிடமிருந்து விலகுகிறது. வேதங்களின் பலன் அக்னி ஹோத்ரம் செய்வது. சாஸ்திரங்களின் பலன் நன்னடத்தை, பெண்ணின் பலன் ரதிசுகமும், புதல்வனை பெறுதலும், செல்வத்தின் பலன் உபயோகமும், தானமும்.

"தீயவழியில் சம்பாதித்த பணம், என்ன விதமான தானத்தில் ஈடுபட்டாலும், அப்படி செய்தவனுக்கு தர்ம பலனைத் தருவதில்லை. ஏனெனில் அது தீயவழியில் வந்தது. கோபமின்மையால் கோபத்தை வெல்ல வேண்டும். சாதுவாக இல்லாதவனை நல்ல செயலால் வெல்ல வேண்டும். கருமியை தானத்தால் வெல்ல வேண்டும். பொய்யை சத்தியத்தால் வெல்ல வேண்டும்.

"பெண்ணாசையுடையவன், சோம்பலானவன், கோழை, கோபமுடையவன், கர்வமுடையவன், திருடன், நன்றியில்லாதவன், நாஸ்திகனை நம்பக்கூடாது.

"எவன் தினந்தோறும் பெரியவர்களை வணங்குகின்றானோ, முதியவர்களின் சேவையில் ஈடுபடுகின்றானோ அவனுடைய கீர்த்தி, புகழ், பலம், செல்வம் நான்கும் வளர்கின்றன.

"தலைகுனிவு காரியத்தால் கிடைக்கும் செல்வத்தை விரும்பக்கூடாது. வித்தை இல்லாத மனிதன், பிள்ளை பெறாத பெண், ஆகாரம் கிடைக்காத பிரஜை, மன்னன் இல்லாத ராஜ்ஜியம் இதற்காக துயரப்பட வேண்டும். அதிகமாக நடப்பது, தேகம் உள்ளவர்களுக்கு துக்கம்.



மகாபாரதம்

89

தொடர்ந்து நீர் விழுவது மலைகளுக்கு துக்கம். புருஷன் இருந்தும் சேர முடியாத பெண் பெரும் துக்கம். சொல்லால் ஏற்படும் காயம்தான் மிகப்பெரிய துக்கம். ஒரு பதிவிரதைப் பெண்ணுக்கு விளையாட்டும், பரிகாச பேச்சும் துயரம் தருபவை. கணவன் வேறு தேசத்தில் இருப்பது பெண்களுக்கு துயரம் தருபவை.

“தங்கத்தின் மாசு வெள்ளி. வெள்ளியின் மாசு ஈயம். ஈயத்தின் மாசு கண்ணாடி. கண்ணாடியின் மாசு தூசு. மாசற்று இருப்பது என்பது ஒவ்வொரு மனிதனும் கவனம் கொள்ள வேண்டியது. காமத்தை பயன்படுத்தி பெண்ணை வெல்ல முடியாது. விறகை போட்டு தீயை அணைக்க முடியாது. அதிகம் குடித்து விட்டு மது அருந்தும் பழக்கத்தை விடுவது பற்றி பேச முடியாது. மது அருந்தி நல்லது பேசுவது எவ்வளவு அபத்தமோ அத்தனை அபத்தம் பெண்ணிடம் காமத்தை கிளறி வசப்படுத்தலும்.

பாலகுமாரன்

“ஒரு லட்சம் ரூபாய் உடையவனும், ஒரு லட்சம் பொன் உடையவனும் உயிரோடு இருக்கிறான். நூறு லட்சம் பொன் உடையவனும் உயிரோடு இருக்கிறான். பத்து பொன் இருப்பவனும் உயிரோடு இருக்கிறான். பொன்னே இல்லாதவனும் உயிரோடு இருக்கிறான். எனவே வாழ்வதற்கும் செல்வத்திற்கும் சம்பந்தம் இல்லை. இதை புரிந்து கொண்டால் பேராசை வராது.

“எல்லோரிடமும் சமபாகமாகவே நீங்கள் நடப்பதற்காக இத்தகைய விஷயங்களை உங்களுக்கு கூறினேன். பொய் சொல்லி உன்னதம் அடைதல், அரசனிடம் கோள் சொல்லுதல், பெரியவர்களிடம் பொய்யான குற்றச்சாட்டு சொல்லுதல் போன்றவை பிரம்மஹத்தி தோஷத்திற்கு சமானம். செல்வம் அந்த இடத்தில் நிலைப்பதில்லை. அவசரம், தற்புகழ்ச்சி, சேவை செய்யாதிருத்தல் இவை வித்தைக்கு பகை. சோம்பல், தந்திரத்தன்மை, கோஷ்டியாக அலைதல், கர்வம், சுயநலம், அநாகரிகம், மத மோகம் ஏழும் மாணவர்களுக்கு குற்றமாகக் கருதப்படுகின்றன.

“வெள்ளாடுகள், வெள்ளி, தேன், வில், பறவை, வேதம் அறிந்த பிராமணனின் நட்பு, குடும்பத்து முதியவன், வெண்கல பாத்திரம் ஆகியவை எப்பொழுதும் உன் வீட்டில் இருக்கட்டும். வீட்டிற்கு வந்த விருந்தினரை பூஜிப்பதற்காக ஆடு, மாடு, சந்தனம், வீணை, கண்ணாடி, தேன், நெய், நீர், தாமிரப் பாத்திரம், சங்கு, சாளக்கிராமம், கோரோஜனம் ஆகிய பொருள்கள் வீட்டில் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பொருள்களையெல்லாம் கொண்டு வீடும், நாடும், நகரமும் வைத்து ஆண்ட மன்னர்களெல்லாம் யமலோகத்திற்கு போய்விட்டார்கள். அந்த மன்னருக்கு முன்னால் அவன் புதல்வன் இறந்தால் உடனே வீட்டை விட்டு வெளியே எடுத்துப் போய்விடுகிறார்கள். ஊரின் கோடியில் தகனம் செய்து விடுகிறார்கள். இவையெல்லாம் ஒட்டுமொத்தமாய் யோசிக்கும்போது ஆச்சரியமாய் இருக்கிறது. இந்த லோகம் மட்டுமல்ல, பரலோகத்திலும் அறியாமை என்னும் இருள் பரவியிருக்கிறது. எல்லா இடங்களிலும் அந்த இடத்திற்கேற்ப புலன்களும், மோகங்களும் உண்டாகின்றன. அறிவுடையவன்தான் இதை ஆராய்ந்து தப்பித்துக் கொள்கிறான்.

“மன்னா, இந்த ஜீவாத்மா, ஒரு நதி. இதில் புண்ணியம்தான் ஜலம். தைரியமே இதன் கரைகள். இரக்கம் இதன் அலைகள். புண்ணிய கர்மங்கள் செய்த மனிதன் இதில் நீராடி புனிதம் அடைகிறான். பேராசையற்ற மனம், எப்பொழுதும் பவித்ரமாக இருக்கிறது. எவன் தன் பந்துகளை மரியாதையால் மகிழ்விக்கிறானோ செய்யக்கூடியது, செய்யக்கூடாதது என்று அவர்களுடன் விவாதிக்கிறானோ அவன் மோகத்தில் சிக்குவதில்லை.

“பசியை பொறுத்துக் கொள்வதுபோல ஒரு மனிதன் காமத்தை பொறுத்துக் கொள்ள வேண்டும். காமம் பசியை காட்டிலும் உக்கரமானது. அறிவு அழிப்பது. பசியில் கெஞ்சத் தோன்றும். காமத்தில் அதிகாரமும், அத்துமீறலும் இருக்கும். கை, கால்களை கண்களாலும், கண் காதுகளை மனதாலும், மனம், வாக்கை தர்ம பேச்சுகளாலும் சுத்தம் செய்து கொள். காமம் என்பது பெண்ணிடம் மட்டுமல்ல, எத்தனையோ விதமாக வெளிப்படும். காமம் என்பதற்கு ஆசை என்றே பொருள் கொள்ள வேண்டும்.

“திருதராஷ்டிரா, இத்தனையும் நான் பேசியதற்குக் காரணம், பாண்டு நந்தனர் யுதிஷ்டிரர், க்ஷத்திரிய தர்மத்தின் படி போருக்குத் தயாராகிறார். இதனால் பாதிக்கப்படப்போவது இருவருக்கும் நடுவே இருக்கின்ற நீங்கள் மட்டுமே. உங்கள் உடம்பு இரண்டாக பிரிந்து ஒரு பக்கத்தை இன்னொரு பக்கம் எதிர்த்தால் உங்கள் நிலை என்ன ஆகும். எந்தப் பக்கம் ஜெயிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள்?

இதை யோசிக்க யோசிக்க நான் அதிர்ந்து போகிறேன். உங்களுக்கு என்ன உசிதம் என்றுத் தோன்றுகிறதோ அதைச் செய்யுங்கள்," என்று முடித்தார் விதுரர்.

"விதுரா, மிகப் பொறுமையாக எனக்கு நல்ல விஷயங்களை கூறினாய். பாண்டவர்களிடம் நான் பிரேமை வைத்திருக்கிறேன் என்றாலும் துரியோதனனை சந்தித்த பிறகு என் அறிவு மாறிவிடுகிறது. இது என் விதி, விதுரா. விதியை மாற்றும் வலிவு எவருக்கும் இல்லை. இன்னும் ஏதேனும் எனக்கு சொல்ல வேண்டியிருப்பின் சொல்,'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான் திருதராஷ்டிரன்.

"மன்னா, குமார சனத் சுஜாத என்கிற பெயரில் பிரசித்த பெற்ற ரிஷி இருந்தார். அவர் பிரம்மாவின் புதல்வர். அவருக்கு மரணமே இல்லை. அவர் அறிவுடையவர்களில் மிகச் சிறந்தவர். அவர் தங்கள் கேள்விகள் அனைத்திற்கும் பதில் சொல்வார்."

"அந்த ரிஷி சொன்னதையே விதுரா, நீ எனக்கு சொல்லலாகாதா? உன் அறிவு ஒத்துழைக்குமானால் எனக்கு அதைச் சொல்."

திருதராஷ்டிரருக்காக விதுரர் மனம் குவித்து சனத் சுஜாத என்கிற ரிஷியை அழைத்து உபசாரங்கள் செய்து உட்கார வைத்தார். ''எதைச் சொன்னால் இந்த மன்னர் தன் துயரத்திலிருந்து கடப்பாரோ, தெளிவு அடைவாரோ, அமைதி அடைவாரோ அந்த விஷயத்தை தயவு செய்து இவருக்குச் சொல்லுங்கள்'' என்று விதுரர் பணிவாக சனத் சுஜாதரிடம் வேண்டினார்.

விதுரர் திருதராஷ்டிர மன்னனின் கேள்விக்கு தானே நேரிடையாக பதில் சொல்லாது, தன்னைக் காட்டிலும் சனத் சுஜாத முனிவரிடம் கேள்வி கேட்கச் சொன்னார். திருதராஷ்டிரன் சனத் சுஜாவை அறிந்திருந்தார்.



"மரணம் என்று ஒன்று இல்லை என்று சொல்கிறீர்களாமே, கண்ணெதிரே நிகழ்கின்ற ஒரு சம்பவத்தை, உலகம் காலம் காலமாக அனுபவித்து வரும் துக்கத்தை எப்படி இல்லையென்று சொல்கிறீர்கள்? தேவர்களும், அசுரர்களும் பிரம்மச்சரியத்தை கடைபிடிப்பதின் மூலம் மரணத்தை வெல்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டேன். முனிவரே, மரணம் உண்டா? உண்டெனில் அதை வெல்வது எளிதா? என் நினைவு தெரிந்த நாளிலிருந்து என்னிடம் இருக்கும் கேள்வி என்னை தெளிவுபடுத்த வேண்டும்" என்று கை கூப்பினார் திருதராஷ்டிரன்.

அறிஞர்கள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்வார்கள். ஆனால் அதை புரிந்து கொள்ள தனியான ஒரு அறிவும், தகுதியும் தேவைப்படுகின்றன. அதை எவன் கேட்கிறானோ அவன்தான் அந்தத் தகுதியை அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். வெறும் பதில் விளக்கி விடாது.

"மன்னா, இந்த விஷயத்தை இரண்டு விதமாக அணுகலாம். மரணம் உண்டு. அது கர்மத்தால் விலகுகிறது என்பது ஒரு கொள்கை. மரணம் என்பதே இல்லை என்பது இரண்டாவது கொள்கை. இவை இரண்டுமே சத்தியங்கள். இன்னும் சூட்சமமாக சொல்கிறேன்.

"தவறே மரணம். தவறின்மையே அமிர்தம். மரணம் என்பதை ஒரு புலியைப் போல வர்ணித்து அது பசுவை அடித்து சாப்பிடுவதைப் போல நிகழ்கிறது என்று வித்வான்கள் சொல்கிறார்கள். மரணம் அப்படி நிகழவில்லை. இதற்கு அதிகாரியாக தென்திசை காவலன் எமனை வித்வான்கள் சொல்கிறார்கள். எமன் பித்ரு லோகத்திற்கு அதிகாரி.

தன்னை அறிந்து கொள்ளாததின் விளைவால் ஒரு மனிதன் மரணத்தை கற்பிதம் செய்து கொள்கிறான். தான் யார் என்ற கேள்விக்கு பெயரும், ஊரும், மதமும், ஜாதியும் சொல்கிறான். மனம் என்பது இலையும், பூவும், கனியும், காயுமா? அதுதான் காணக் கிடைக்கிறது. ஆனால் அதனாலா வாழ்கிறது? வேர் காணக் கிடைப்பதில்லை. ஆனால், வேரின்றி மரம் இல்லவே இல்லை. கனியும் காயும் இலையும் பாழே. மனிதனுடைய ஆத்மாவை தரிசனம் செய்யாது தனக்குத்தானே அடையாளங்கள் ஏற்படுத்திக் கொண்டு நான் இன்ன வம்சம் இன்னாருடைய பிள்ளை என்கிற போது மிகப்பெரிய தவறு நேருகிறது. தவறே மரணம். தவறின்மை அமிர்தம்.

"மனிதன் ஆசைவாய்ப்பட்டு மோகாவேசம் கொண்டு தனக்கு எதிர்படுகின்ற விஷயங்களோடு ஐக்கியமாகிதான் அதற்கு நட்போ, எதிரியோ, பிரிந்துபடுகிறான். உண்மையில் எவனும் எதற்கும் நட்புமில்லை எதிரியுமில்லை. அந்தராத்மாவில் லயிக்க தெரிந்து விட்டால் மனம்

காணாமல் போகிறது. மனமற்ற இடத்தில் ஆசை வருவதில்லை. ஆசை இல்லாததால் மோகாவேசம் கொள்வதில்லை. மோகாவேசம் இல்லாததால் ஆத்திரம், ஆசூயை, கோபதாபம், வஞ்சனை, தற்புகழ்ச்சி, கள்ளம், கபடம், கெடுமனம், மித்ர துரோகம் போன்ற கேவலமான எண்ணங்கள் உண்டாவதில்லை. இந்த விஷயங்களில் சிக்கிக் கொண்டவன் புயற் கடலில் துரும்பென அலைகழிக்கப்படுகிறான். தன்னை சரீர சம்பந்தம் உள்ளவனாகவும் நினைத்துக் கொள்கிறான். இது தவறு. இது தவறான கற்பிதம். இதுவே மரணம்.

"நீ சரீரமற்றவன் என்பதை உணர்ந்து விட்டால் இந்த உலக விஷயங்களில் எதிலும் எந்த நாட்டமும் இராது. இவற்றில் நீ செய்ததாகவோ செய்யாததாகவோ கருதமாட்டாய். இந்த நடுநிலையில் நல்லதும், கெட்டதும் வெளிவராது. வயலை விட்டு வீட்டிற்கு போவது போலவும், வீட்டை விட்டு வயலுக்கு போவது போலவும், அரண்மனைக்கு போவது போலவும் ஒருவன் செய்தால், அது மரணமா அல்லது மாற்றமா? மாற்றத்தை மரணம் என்று கொண்டிருக்கிறோமா. வயலை விட்டு வீட்டிற்கு வந்தவன் துக்கப்படுவதில்லையே. அரண்மனைக்கு வந்தவன் அழுவதில்லையே. ஆன்மாவின் இடம் மாற்றத்தை அறிந்து கொண்டால் மரணம் உண்டோ.

"எனவே, மரணம் என்பது கற்பிதம். மனிதன் உருவாக்கிய விஷயம். அதற்குக் காரணம் தன்னை சரீரம் என கொள்ளுதல். சரீரத்தால் கிளர்ந்த ஆசை. அந்த ஆசை கொடுத்த மோகாவேசம். மோகாவேசத்தால் தோன்றிய அற்ப குணங்கள். இவை அனைத்தும் தவறு. இந்த தவறே மரணம். ஆத்மாவில் லயித்திருப்போருக்கு தவறின்மை என்ற அமிர்தம் கிடைக்கிறது.

"கோமணத்தோடு வயலிலும், வேட்டியோடு வீட்டிலும், அலங்காரத்தோடு அரண்மனையிலும் இருப்பதுபோல ஒவ்வொரு லோகத்திலும் ஒரு நியதி உண்டு. எமனுடைய லோகம் பித்ருலோகம். அங்கே ஆன்மாவிற்கு வேறுவிதமான இருப்பு.

மன்னா, இன்னும் இந்த விஷயத்தை சூட்சுமமாக சொல்கிறேன், கேள். இறந்த பிறகு மனிதனுடைய மனமும் புலன்களும் உயிரோடு உடன் செல்கின்றன. கனவில் நீ உண்ணுவதில்லையா, சுவையான பானம் குடிப்பதில்லையா. ஆனால் அவை அங்கு இல்லை. மனம் அந்த நினைவை சுமந்து செல்கிறது. இந்த நிலைமையே ஒரு லோகத்தில் வாழ்க்கை ஆகிவிடுகிறது. சரீரமாய் இருக்கும்போது உணவிலும், மதுவிலும், பெண் போகத்திலும், செல்வத்திலும், ராஜஜியம் ஆளுவதிலும் ஆவல் கொண்ட மனிதனின் நினைவு, அவன் இறந்த பின்னும் அவனை ஆட்டிப் படைக்கிறது.

"சரீரத்தோடு இருக்கும்போது ஆன்ம தரிசனம் பெற்று விட்டால், சரீரம் தாண்டி உள்ளே இருப்பது யார் என்று புரிந்து விட்டால், மரணத்திற்குப் பிறகு மனம் ஆன்மாவை சுற்றி இருக்கிறது. புலன்கள் உதிர்ந்து விடுகின்றன. புலன்களை வெல்லாத மனம் இறந்த பிறகும் சுக போகத்திற்கு அலைகிறது. புலன்களில் வசப்படுகிறபோது ஆன்மாவை அறிகின்ற ஞான சக்தி அழிந்து விடுகிறது. மரணத்தை வெல்ல விரும்புபவன் தன் ஆன்மாவை அறிய வேண்டும். ஆன்மாவை அறிவதற்குண்டான எளிய வழி சரீரம் உள்ளபோதே பரமாத்மாவை சரணடைதல். பரமாத்மா தரிசனம் ஆன்மாவை இனம் காட்டுகிறது.

"பரமாத்மா தரிசனம் என்றால் என்ன? சிந்தனைகளை விஷயங்களில் சிதற விடாது தன்னையே அவதானிக்கும் பயிற்சி. ஆன்மாவை அறிந்தவன் மரணத்திற்கு பயப்படுவதில்லை. மரணம் என்று ஒன்று அங்கு நிகழ்வதும் இல்லை. இரு பிறப்பாளர்களுக்கு அதாவது அந்தணர்களுக்கு யக்ஞத்தின் மூலம் விடிமோட்சம் ஏற்படும் என்றும், வேதமே ஒருவனுக்கு ஞானம் என்ற பௌருஷத்தை கொடுக்கும் என்றும் சொல்லப்படுகிறது."

"இதைப் பற்றி சொல்லுங்கள்."

"வேதங்களில் பற்பல காரியங்களை செய்து ஏணிப்படிகளில் ஏறுவதுபோல வாழ்க்கை அமைத்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஞானமார்க்கம் வெகுவிரைவில் ஆன்ம தரிசனத்தை தரவல்லது. ஞான மார்க்கம் என்பது இடையறாது தன்னை எல்லாவிதமாகவும் கவனித்துக் கொள்வதாகும். வேதம் இதற்கு உதவி செய்யும். செய்யாமலும் போகலாம்."

திருதராஷ்டிரன் கேட்டார். "முனிவரே மாயையை உண்டாக்கியது யார்?"

"மனிதர்களை வசப்படுத்த இவ்விதம் ஆசையை உண்டாக்கியதால் அல்லவா

ஆசையிலிருந்து அகன்றிருப்பது என்பது புரிபடும்? உச்சி வெயிலில் தண்ணீர், தாகம் பற்றிய சிந்தனை அதிகம் எழுவது இல்லையா? அதுபோல சரீரம் எடுத்த பிறவிகளை ஆத்ம தரிசனம் அறியச் சொல்லி மாயையான உலகத்தில் ஆசைகளால் சூழப்பட்டு சரீரம், தான் என்ற அகங்காரத்தோடு அலைவதை அந்த பரமாத்மா என்ற அறிவு சொரூபம் காட்டுகிறது. பேத விஷயங்கள் ஒரு நெறிப்பட்ட வாழ்க்கையை காட்டுகின்றன. அந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டே அதனிலும் மேலான விஷயத்தை மனிதப்பிறவி எடுத்தவன் முயற்சி செய்ய வேண்டும். இதைத்தான் வேதமும் கூறுகிறது. வேதத்தை மட்டுமே கைக்கொள்வதில் மாயை அகலாது. வேதம் ஒரு வாழ்வு நெறி. அந்த வாழ்வில் மாயை பற்றிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.”

“எனக்குப் புரிகிறது. ஆனால் இது பற்றிய அக்கறையெல்லாம் இல்லாது வேத தர்மம் என்னவென்று புரியாது பலர் வாழ்கிறார்கள். இதில் நஷ்டம் மனிதருக்கா? வேதத்திற்கா?”

“மன்னா, மேலேறச் சொல்லி ஏணி சாத்தப்பட்டிருக்கிறது. முயன்று படிகளில் ஏறவேண்டும். பூமியின் சம்பந்தம் அறும்வரை மேலே போகவேண்டும். நான் சொல்வது ஒரு உபமானம். அப்பொழுது பிறந்த இடமும், வளர்ந்த இடமும் இதனால் இதனிலிருந்து விடுபட்ட சரீர தன்மையும் அகங்காரம் கொண்ட மனிதனுக்குத் (மனதுக்கு) தெரியும். அந்த மனது அகங்காரத்தையும் விடுகிறது. முட்டையிலிருந்து குஞ்சு வந்தபிறகு சிறகு மீதுதான் பறவைக்கு எண்ணமே தவிர, அதுவரை காத்து வந்த முட்டையை கொண்டாடாது.”

“இதுவும் புரிகிறது. ஆனாலும் சிக்கலின் அடி ஆழம் புரியவில்லையே,” மன்னன் கவலையோடு கேட்டான்.

சனத் சுஜாத முனிவர் ஸ்லோகங்கள் போல, கவிதைகள் போல பேசத் துவங்கினார். “இந்த பூமி ஐம்பெரும் பூதங்களால் ஆனது. இங்கு சரீரம் எடுத்த ஆன்மாவை ஐந்து புலன்களால் சூழ்ந்து கொள்கிறது. ஐந்து பூதங்களும் ஐந்து புலன்களாகின்றன. இந்தப் புலன்களின் கூட்டால் மனம் என்கிற விஷயம் தோன்றுகிறது. இந்த மனம் தன் இருப்பை பலப்படுத்திக் கொள்ள புலன்களை தூண்டுகிறது. புலன்களின் ஆவேசத்தால் அல்லது ஆற்றலால் மனதின் இருப்பு பெரிதாகிறது. சரீரம் மனதை தான் என்று கொள்கிறது. மனம் சரீரத்திற்குள் அடக்கமாகிறது. ஒன்றை ஒன்று தோள் பற்றிக் கொண்டு பிரமாண்டமாகின்றன. ஆன்மா முற்றிலும் மறைக்கப்படுகிறது. ஆன்மா சரீரம் விட்டு நகரும்வரை இந்தக் கூத்து நடைபெறுகிறது. சரீரத்திலிருந்து இந்த மாயா விஷயங்கள் நகராது இருக்க, ஆன்மாவின் நகர்தலுக்கு எதிராக அதாவது மரணத்திற்கு எதிராக பெரும் வலியை கலவரத்தை இவை ஏற்படுத்துகின்றன. வலிக்கும் தனிமைக்கும் பயந்து சரீரம் மன போஷாக்கு நடைபெறுகிறது. ஆனால் ஆன்மாவின் நகர்வை அதாவது மரணத்தை நிறுத்த முயலாது.

“ஆன்மா ஏன் நகர்கிறது, ஏன் பிறக்கிறது என்று சொல்ல, மனிதனுக்கு பக்குவம் இல்லை. அதற்கான வார்த்தை இல்லை. அந்த வித்தை மொழி வசப்படவில்லை. சொல்லித் தரப்படவில்லை. உலக மொழி அறியாதவன் வாழ்வு பற்றி எப்படி விவரிக்க முடியாதோ பிரம்ம ரகசியத்தை அறியாதவன் பிறப்பு-இறப்பு பற்றி, ஏன் நடக்கிறது என்பது பற்றி அறிய இயலாதவனாகிறான்.

“இந்தப் புவியில் ஆன்மாவின் இருப்பை உணர்வதே அதாவது மாயையிலிருந்து விடுபடுவதே அதாவது புலன்களும் புலன்களிலிருந்து உருவகிக்கப்படும் சரீரமும் என்ற உணர்வை தவிர்த்தலே, முக்கியம். வெளிப்பார்வைக்கு சிக்கலெனத் தோன்றும். ஆராயப் புகுந்தால் எளிதாகப் பிரித்து விடலாம்.

“ஆனால் மாயை தன் வலிமையை காட்டும். உணவாலும், மதுவாலும், பெண் போகத்தாலும், மற்றைய கர்வங்களாலும் ஆன்மாவை மறக்கும். மறைக்கப்பட்டாலும் வெளிச்சம் உள்ளே இருக்கிறது. அது மறையாத அகலாத வெளிச்சம். குறைபாடு வெளிச்சத்தில் இல்லை. மறைக்கப்பட்டது மறைக்கப்பட்ட வஸ்துக்களில் உள்ளது.

“இன்னொரு சூட்சுமம் சொல்கிறேன் கேள். இந்த பூமியில் பிறந்து சொர்க்கம், நரகம் என்பதை உணர்ந்து, அதாவது சுகம், துக்கம் என்ற உணர்வுகளை அறிந்து அதற்கேற்ற செயல்களில் மனிதன் ஈடுபடுகிறான். சுகத்தின் போது சந்தோஷமும், இது நீண்டு தங்க வேண்டுமே என்கிற பயமும், துக்கம் வரவே கூடாது என்கிற பதட்டமும் அவனை அலைக்கழிக்கின்றன. பற்றற்ற மனமே இதை ஆராய்ந்து பார்க்கத் துவங்குகிறது. மனம் பற்றற்று இருப்பதற்கு ஒரு தர்மம், நியதி இருக்கிறது. இந்த நியதி வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலேயே வேதம் உயர்வென்று கருதப்படுகிறது.

(தொடரும்)

மகாபாரதம்

90

தவத்தின் பலன் என்ன?

சனத் சுஜாத முனிவர் தொடர்ந்து விளக்கினார்: "இன்னாருக்கு இன்ன தர்மம் என்று வேதம் வகுத்திருக்கிறது. இந்தப் பிரிவினை பூமியின் தர்மத்தை காக்க பயன்படுகிறது. பூமியின் இயக்கத்தை நடத்துகிறது. பூமியின் இயக்கம் என்பது மனித வாழ்க்கை. ஆனால் இது மேம்போக்கான விஷயம். இவற்றைத் தாண்டி ஒரு இடத்திற்கு மனிதர்கள் போக முடியும். (சிந்திக்க முடியும்) என்று வேதமே கூறுகிறது.

வேதம் என்பது வாழ்வுக்கான வழிகாட்டி. வாழ்வுக்கப்பாலும் அதுவே வழிகாட்டி. எனவே, அது ஒருகாலும் புறக்கணிக்கக்கூடியது அல்ல.

ஒரேவிதமான சரீர மன அமைப்புகளுடைய மனிதருக்கு நடுவே போட்டி ஏற்பட்டிருக்கிறது. இந்த போட்டியால் எப்படியும் மேன்மையடைய வேண்டும் என்ற எண்ணத்தில் தர்ம காரியங்களில் அந்தணர்கள் அதிகம் ஈடுபடுகிறார்கள். இங்கேயே இந்த விஷயத்தை தெளிந்து ஆன்ம தரிசனம் பெற்று தெளிவு என்கிற உன்னத லோகத்தை அடைகிறார்கள். தர்மத்தை பஹிர்முகமாக பேசுபவன் உயர்ந்தவன் இல்லை. தர்மத்தை பேசியும், தான் இருப்பதாகச் சொல்லியும், வாழ்வதில் வெற்றி கிடைப்பதில்லை. மாறாக தர்மம் அந்தர்முகமாகி விடவேண்டும். அவனே தர்மமாகி விடவேண்டும். இது மிகப்பெரிய சாதனை. ஓரளவுக்கு மேல் இதைச் சொல்லித்தர முடியாது.

அப்படி தர்மத்தை அந்தர்முகமாக்கிக் கொண்டவனுக்கு, அதுவாகவே வாழ்கின்றவனுக்கு மரணம் பயம் தருவதில்லை. அவனைத் தீண்டுவதே இல்லை. தன்னைப் பற்றிய பெருமையை வெளியே சொல்லி தன்னை மிக உத்தமன் என்று சொல்லிக் கொள்கிறவன் அப்படி வாழ்வது உண்மையாயினும், நாய்க்கு ஒப்பாவான். நாய் கக்கியதை மறுபடி தின்பதுபோல தான் வாழ்வதைச் சொல்லி அதனால் மறுபடியும் பிராபல்யம் அடைய முயற்சிக்கிறான். இவன் எப்பொழுது வேண்டுமானாலும் வீழ்ச்சியடைவான். எவன் தன் குடும்பத்து மக்களாலும் தன் பிற பாவத்தை மறைத்துக் கொள்கிறானோ, தன்னை சாதாரணமாகக் காட்டி வலம் வருகிறானோ, உலக குணங்கள் பார்த்து உள்ளே நகைத்தபடி இருக்கிறானோ, அவனை மரணம் தீண்டுவதில்லை. அவனை காலம் நினைவில் கொள்கிறது. அவன் வாழ்பவனாக

ஆகிறான். சரீரம் உகுத்தப் பிறகும் கௌரவிக்கப்படுகிறான். இருப்பதாக உணரப்படுகிறான். இவனை ஞானி என்றும் அழைக்கிறார்கள். இந்த ஞானிக்கு மரணம் இல்லையென்றும் சொல்கிறார்கள்.

எவன் இந்த ஒரு விஷயத்தை அடைய களைப்படையவதில்லையோ, எவன் இந்த விஷயத்தை வழங்க தானம் பெறுவதில்லையோ, எவன் நல்லோர்களால் மதிக்கப்படுகிறானோ, எவனால் இந்த பூமிக்கு உபத்திரவம் இல்லையோ, எவன் இந்த விஷயத்திற்கு சீடனாக இருக்கிறானோ அவனே பிராமணனாவான். பெரிய வித்வான் ஆவான். பிரம்ம வேதாவும் அவனே.

எவன் உலகப்பார்வையில் ஏழையாக இருந்தும் இந்த வித தெய்வ சம்பந்தம் கொள்கிறானோ, எவன் பூஜை உபாசனை முறைகளில் முழுமையாக இருக்கிறானோ, இந்த தத்துவத்திலிருந்து எவன் அசைக்க முடியாதவனாக இருக்கிறானோ, எவனை இந்த உலகம் அடக்க முடியாதோ அவன் பிரம்மத்தின் சாட்சாத் உருவம். உலகம் மதிப்பதால் எவன் கர்வப்படவில்லையோ அல்லது மதிக்கப்படும் மனிதனைப் பார்த்து எரிச்சலடைவதில்லையோ, எவன் இந்த வித ஆராய்ச்சி செய்பவர்களால் மதிக்கப்படுகிறானோ அவன் கௌரவிக்கப்பட வேண்டியவன். கண்களைத் திறந்து மூடுவது போன்ற இயல்பான தன்மையோடு இந்த வித்வானை மதிக்க வேண்டும். கட்டளை இட்டா இமைகள் அசைகின்றன? தானாக நடைபெறவில்லையா? இத்தகைய வித்வானை கண்டதும் தானாக பணிவு வரவேண்டும். இதுவே பூமியில் நல்லது வளரும் விதம்.

பாலகுமாரன்

ஆனால் இந்த உலகத்தில் அதர்மத்தில் நிபுணனும், ஏமாற்றுவதில் கபடத்தில் நிபுணனும் கெட்டிக்காரனும், மதிக்கத்தக்க மனிதனை வலிந்து அவமதிப்பவனும் இருக்கிறார்கள். மானமும் மௌனமும் ஒருபொழுதும் ஒன்றாக இருப்பதில்லை. மானம் இந்த உலக சுகத்தோடு சம்பந்தப்பட்டது. மௌனம் பரலோக சுகத்தோடு சம்பந்தப்பட்டது. இப்பூவுலகில் ஐஸ்வர்ய ரூபமுடன் இருக்கும் லக்ஷ்மி சுகத்தின் இருப்பிடம். அவளே இடையூறுகளும் செய்வாள். ஆனால் பிரம்ம ஞானமயமான லக்ஷ்மி மனிதனுக்கு கிடைத்ததற்கு அரியவளாவாள். வித்வான்கள் பிரம்ம ஞானமயமான லக்ஷ்மியை அடைய பல வழிகளைக் கூறுகிறார்கள். இவற்றை பின்பற்ற கடினமானவை. அவற்றின் பெயர்கள் சத்தியம், எளிமை, வெட்கம், தவம், சௌசம், வித்தை என்பனவாகும்."

திருதராஷ்டிரன் கை உயர்த்தி தன் கேள்வியை சனத் சுஜாத முனிவர் முன்பு வைத்தார்: “மௌனம் என்பது என்ன, பேசாது இருத்தலா, பேச்சே தோன்றாது இருத்தலா?”

“மனதோடு வாக்கு பேதம் ஏற்படுத்தாது இருத்தலே மௌனமாகும். மனம் என்ன உணர்கிறதோ அதை சொல்லாக மாற்றுவதே வாக்காகும். அவை பலன் கருதி சொல்லப்பட மாட்டா. வெறும் வெளிப்பாடு, அவ்வளவே. சிலநேரத்தில் உன்னை மன்னா என்று அழைக்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. காரியம் கருதி அழைத்தால் அது மௌனம் இல்லை சப்தம். மனம் நினைப்பதை சொல்வது பரமாத்மாவின் அம்சமாகும். அங்கே ஒரு தந்திரமும் இல்லை."

“அப்படியானால் சனத் முனிவரே வேதங்கள் சொல்லப்படுகின்றனவே, அவை சப்தமா, மௌனமா?”

“மன்னா, உன்னிடம் நான் பொய் சொல்ல விரும்பவில்லை. ரிக், யஜூர், சாம வேதங்கள் அவற்றைச் சொல்லுகின்ற மனிதனை எந்த பாவ கர்மத்திலிருந்தும் ரட்சிப்பதில்லை. பொய்யாக நடப்பவனை வேதங்கள் காப்பாற்றாது. வேதங்களை சொல்வதோடு உண்மையைத் தேடுபவனாகவும் ஒருவன் இருக்க வேண்டும். சிறகு முளைத்ததும் பறவை தனது கூட்டை துறந்து விடுவது போல இறுதி காலத்தில் அந்த மனிதன் வேதங்களையும் துறந்து விடுகிறான்."

திருதராஷ்டிரன் கவலையோடு அவரைப் பார்த்தார். “வேதங்கள் ரட்சிப்பதில் திறமையற்றது என்றா சொல்கிறீர்கள்? காலம் காலமாக சொல்லப்படும் ஒரு கூற்றை எளிதாக மறுக்கிறீர்களே. வேதங்களும், வேத பிராமணர்களும் உயர்வில்லையா?”

“மகாராஜா அந்த பரப்பிரம்ம பரமாத்மாவின் பெயரும், செயலும் வேதத்தில் அறுதியிட்டு உறுதி செய்யப்படுகின்றன. ஆனால் உண்மையில் அவன் சொரூபம் இந்த உலகத்தின் நியதிகளிலிருந்து வேறானது. அலாதியானது. அவனை அடைவதற்கான வழி, வேதம். வழி இறுதியாகாது. வேதம் கடவுளாகாது. தொடர்ந்து பரமாத்மாவை விசாரிக்க வேதம் உதவி செய்கிறது. ஆனால் வேதம் கடவுளை அறிய உதவி செய்யும் என்கிற பற்றும் அற்று அமைதியானவன் மனம் ஞானத்தால் பிரகாசிக்கிறது.

இதை அடைய முடியாத வண்ணம் மனம் போகமென்னும் மார்கத்தையும் மினுமினுப்பு காட்டுகிறது. தர்மரீதியாக போகத்தை அனுபவித்தவனும் பரலோகம் வருகிறான். அங்கும் போகத்தை தொடர்கிறான். பிறகு மறுபடியும் பூமிக்கு வந்து ‘பற்றற்ற’ என்ற இடத்தை தேடுகிறான். அவன் தவம் தொடர்கிறது."

“சனத் முனிவரே, இந்த தவத்தைப் பற்றி மறுபடியும் விளக்கிச் சொல்லுங்கள். புரிந்தது போல் தோன்றுகிறது. இது எவ்வாறு உயர்ந்ததாக ஆகிறது என்று சொல்லுங்கள்."

“மன்னா, தவத்தில் போக வாசனை

சிறிதும் இல்லை. இந்த பூமியில் எல்லா உயிர்களோடும் அவன் வாழ்ந்தாலும் பார்வைக்கு சாதாரணமானவனாக இருந்தாலும் பூமியில் உள்ள விஷயங்கள் மீது, சக மனிதர்கள் தரும் மரியாதையின் மீது பற்றற்றவனாய் புலன்களை வெறுமே இருக்க விட்டு வளர்கிறான். அவனை மாயத்தில் அழுத்த முடியாத அந்தப் புலன்கள் வெளிறி நிற்கின்றன. வெளிறிய புலன்கள் கொண்டவனுக்கு வாழ்வின் ஸூட்சுமம் புரியும். தான் பிறந்ததும், இருப்பதும் முந்தைய பிறவியில் வளர்ந்ததும், இறந்ததும் நன்கு அறிவான். இவை எவரோடும் பேசப்பட தகுந்தவை அல்ல. இந்த தவமே புலன்கள் வெளிறி நிற்கும். பற்றற்ற மனோ நிலையான இந்த தவமே உலகத்தின் ஆணிவேர். இதுவே உலகின் குணம். மோகம் அதிகரிக்க உலகம் இயங்கும்.”

“சனத் சுஜாத முனிவரே, தவம் பற்றி மேலும் கூறுங்கள். தவம் என்ற வார்த்தை மிக பிரம்மாண்டமாக இருக்கிறது. ஆனால் அது செய்வது என்ன என்று அறியாமல் இருக்கிறேன்.”

“மன்னா தவத்திற்கு எதிராக பன்னிரண்டு குற்றங்கள் உள்ளன. முதல் குற்றம், கோபம். பிறகு காமம், குரோதம், லோபம், போகம், சிட்சை (தண்டிக்க விரும்புவது) இரக்கமின்மை, அசூயை, கர்வம், சோகம், ஆர்வம், பொறாமை, நிந்தை. இந்த குற்றங்களால் ஒருவன் தவம் பாதிக்கப்படும். மான்களைக் கொல்ல வேடன் காத்திருப்பது போல இந்தக் குற்றங்கள் மனிதனை அவன் எதிர்பாராத சமயத்தில் தாக்குகின்றன.

தன்னை பெருமைப்படுத்திக் கொள்பவன் பேராசைக்காரன். சிறிதளவு அவமானத்தையும் சகிக்காதவன் அறிவிலி. நிரந்தர கோபமுடையவன், நோயாளி. சஞ்சலமானவன், பைத்தியக்காரன். சலனடைந்தவர்களை தனக்கு அண்டியவர்களை காப்பாற்றாதவன், மிகப் பெரிய பாபி. இதில் சிக்கிக் கொண்டவர்கள் மீள்வது அரிது. தவம் பலிக்காது.

எப்பொழுதும் சம்போக நினைப்பிலேயே இருக்கிறவன், உயிர்களிடத்தில் சமமற்ற நிலைமையுடையவன், தன்னை மானஸ்தவனாகக் காட்டிக் கொள்கிறவன், தானம் கொடுத்து விட்டு நொந்து கொள்பவன், தானமே கொடுக்காத கருமி, காமத்தை புகழ்பவன், பெண்களை ஈனம் என்று வெறுப்பவன் இவர்கள் குரூரமானவர்கள்.”

“தவத்தின் பலன் என்ன? அல்லது யாரால் தவம் செய்ய முடியும்?”

“தர்மம், சத்தியம், புலனடக்கம், வெட்கம் கொள்ளல், பொறுமையோடு இருத்தல், துவேஷமின்மை, யாகம் செய்தல், தானமளித்தல், தைரியத்தோடு இருத்தல், சாஸ்திர ஞானம், தொடர்ந்து தவம் செய்யும் உறுதி என்கிற விஷயங்களை எவன் கொள்கிறானோ அவன் இங்குள்ள மனிதர் அனைவருக்கும் தலைமை ஏற்கிறான். மேற்சொன்னவற்றில் இரண்டு மூன்று குணங்கள் இருந்தாலும் அவனை உலகம் மரியாதையோடு பார்க்கும்.

“தவம் செய்ய முயற்சிக்கிறவன் பன்னிரண்டு விஷயங்களை அறவே தவிர்க்க வேண்டும். தன் கடமை தெரியாது இருத்தல், பொய் சொல்லுதல், பிறர் குணத்தில் குற்றம் பார்த்தல், பெண்ணாசை, எப்போதும் செல்வம் சம்பாதிப்பதில் ஈடுபடுதல், மது உணவு போன்ற சிற்றின்ப விருப்பம், கோபம், சோகம், ஆசை, லோபம், கோள் சொல்லும் வழக்கம், பொறாமை, இம்சை படுத்துவதில் ஆசை, எப்போதும் எதுவோ வேண்டுமென்ற தாபம், சாஸ்திரத்தை விரும்பாமை, கடமையை மறுத்தல், அதிகம் உளறுதல், தன்னை பெரியவனாகக் கருதுதல் போன்ற குற்றங்களிலிருந்து விடுபடுவது தவத்திற்கு அருகே அழைத்துப் போகும்.

தியாகத்தில் காம தியாகமே மிகக் கடுமையானது. காமத்தை தியாகம் செய்தால் எல்லாமே வெல்லப்பட்டதாகிறது. சிறந்த ஆறு தியாகங்களைச் சொல்கிறேன் கேள்.

“செல்வம் பெற்றும் மகிழ்ச்சி அடையாமை. யக்ஞம், ஹோமம் செய்தல், கிணறு குளம் தோட்டம் அமைக்க செல்வத்தை செலவிடுதல், வைராக்கியத்தோடு காமத்தை துறத்தல் ஆகியவை மிக முக்கியமானவை. காமத்தை துறப்பது, வாக்குக்கு எட்டாத மோட்சத்தை அடைவது என்று வித்வான்கள் கூறுகிறார்கள்.

அதிக செல்வம் சேர்ப்பதால் பற்றின்மை வராது. விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள செல்வத்தை பயன்படுத்துகிறபோது அவனுக்கு மனநிம்மதி கிடைக்காது. தவறோ என்ற உறுத்தல் தொடர்ந்து கொண்டிருக்கும். விரும்பத்தகாதது எது நடந்தாலும் கவலைப்படக்கூடாது. இது நான்காவது தியாகம். எனக்கு

மனைவியைக் கொடு. மகன், மகளைக் கொடு என்று யாசிக்காது இருத்தல் ஐந்தாவது தியாகம். தகுதியுள்ள யாசகன் வரும்போது அவனுக்கும் மனமுவந்து தானம் அளித்தல் ஆறாவது தியாகம். இந்த ஆறு தியாகங்களால் மனிதன் குற்றமற்றவனாகிறான்.

“குற்றமற்ற தன்மைக்கு எட்டு குணங்கள் உண்டு. சத்தியம், தியானம், விசாரம், சமாதானம், வைராக்கியம், திருடாமை, பிரம்மச்சரியம், பொருள் சேர்க்காமை இவைகள் ஆத்ம தரிசனம் தரும்.

“ஐந்து புலன்கள், ஆறாவதான மனம். இவற்றைப் பல்வேறு விவகாரங்களில் ஈடுபடுத்தும் போக உத்தி. இறந்தகால கவலையையும், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் கொண்டு வந்து கொடுக்கும். இந்த இரண்டுமே குற்றங்களாகும். கடந்த காலம் பற்றி கவலையற்று இருப்பதும், எதிர்காலம் பற்றி எதுவும் எண்ணாது இருப்பதும் மனிதனை சுகமுள்ளவனாக்குகின்றன. இதுதான் சத்தியத்தை நினைத்தல். இந்த சத்தியத்தோடு இருத்தலே மனிதன் செய்ய வேண்டிய விரதம்.”

“யார் சிறந்த பிராமணன் முனிவரே? நான்கு வேதத்தோடு ஐந்தாவதாக புராணத்தையும் அறிந்தவனா? அல்லது நான்கு வேதம் தெரிந்தவனா? என்ன படிப்பு படித்தவன் பிராமணன்?”

“சிருஷ்டியின் தொடக்கத்தில் வேதங்கள் ஒன்றாகவே இருந்தன. அதை அறிந்து கொள்வார் இல்லாததால் வேதங்கள் நான்காக பகுக்கப்பட்டன. வேதத்தின் சாரத்தை அறிவதற்குப் பதில் தானம், கல்விப்பயிற்சி, யக்ஞம் போன்றவற்றால் ஈடுபட்டு ஆசைப் அகப்பட்டனர். உண்மையில் பரமாத்மாவிடமிருந்து நழுவியவர்கள் இவற்றைச் செய்தனர்.

“சத்தியத்தில் நாட்டம் உடையவர்கள் இடையறாது சத்தியத்திலேயே இருக்க வேண்டும். யக்ஞம், பூஜை போன்ற கர்மங்களை மனதாலோ, வாக்காலோ, செயலாலோ செய்தபடி இருத்தல் வேண்டும். வெறும் பேச்சினால் ஒருவனை பிராமணன் என்று சொல்லிவிட முடியாது. சத்தியத்தில் நிலைப்பவனை அறிந்து கொள்ளுதல் எளிது. உண்மையில் வேதத்தின் ரகசியத்தை அறிந்தவர் யாரும் கிடையாது. அல்லது ஓரிருவர் இருக்கக்கூடும். வேத வாக்கியங்களை அறிந்தவன் வேதம் அறிந்தவன் அல்ல.



“வேதங்களின் மூலம் பரமாத்மாவை அறிய வேண்டும். பரமாத்மாவை அறிந்தவரே அறிஞர். உள்ளம் தூய்மையாக இருக்குமானால் சத்குரு அல்லது பிரபுவின் மூலம் சாதகன் இந்த ரகசியத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஆத்மாவைத் தேட வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று அலையவேண்டிய அவசியம் இல்லை. திசைகள் மனிதரால் பகுக்கப்பட்டவையே. ஆத்மாவை வேத வாக்கியங்களில் தேடக்கூடாது. தவத்தால் மட்டுமே அதை அறிய முடியும். வாக்கு முதலிய புலன்கள் அற்று, எழுத்துகள் அற்று, பேச்சுகள் அற்று பரமாத்மாவை தேடவேண்டும். மனதுக்குள் தேட வேண்டும். ஈஸ்வர தியானம் இதுவே.

மௌனமாக இருப்பதாலோ, காட்டில் வசிப்பதாலோ ஒருவன் முனிவனாகி விட முடியாது. உலகிலுள்ள பொருட்கள் அனைத்தும் பிரம்மத்திலிருந்தே வெளிப்படுகின்றன. மண், மரம், நீர், காற்று, உயிரினங்கள் பிரம்ம சொரூபம். இவை அனைத்தையும் ஒரே பார்வையில் பேதமற்று எவன் பார்க்கிறானோ, இதுவும், அதுவும், எதுவும் ஒன்றே என்றுத் தெள்ளத்தெளிவாகப் புரிந்து கொள்கிறானோ அவன் பார்வையாளன் என்று கூறப்படுகிறான். தான தர்மத்தின் மூலமும், வேதம் கற்பதின் மூலமும் இந்த நிலைக்கு அருகே ஒரு மனிதன் போகக்கூடும்.”

“சனத் சுஜாதரே ஒரு பிரம்ம வித்தையை மிக எளிதாக எனக்குச் சொல்லித் தருகிறீர்கள். தொடர்ந்து சொல்லுங்கள்.”

“இப்படி அடிக்கடி கேள்வி கேட்பதால் சந்தோஷப்படுகிறாய். இப்படி அவசரப்படுவது பிரம்ம ரகசியத்தை சொல்லித் தராது. சுத்த அறிவில் மனம் லயித்த பிறகு எல்லா வளர்ச்சியையும் (விருத்தி) எதிர்க்கும், அடக்கும் நிலைக்குப் பெயரே பிரம்ம வித்தை. இது பிரம்மச்சரியத்தை கடைப்பிடிப்பதால் கிடைக்கிறது.”

“சனத் சுஜாதரே பிரம்மச்சரியம் எப்படி கடைப்பிடிக்கப்பட வேண்டும்?”

“எவன் ஒருவன் ஆச்சாரியனின் ஆசிரமத்தில் பிரவேசித்து தன் விருப்பங்கள் அனைத்தையும் விலக்கி விடுகிறானோ, அவனே பிரம்மச்சாரி. அவனால் மௌஞ்சிப் புல்லிலிருந்து உதிர்வது போல இந்த சரீரத்திலிருந்து ஆத்மாவை தனியாக்கிக் கொள்ள

முடியும். தாயும் தந்தையுமே பிறப்பளிக்கிறார்கள். இப்படிப்பட்டவனுக்கு ஆச்சாரியனின் உபதேசம் பரம பவித்ரம் உடையதாகும்.

“சத்தியத்தை அறிய எவன் சொல்லிக் கொடுத்தானோ அந்த ஆச்சாரியனுக்கு ஒரு பொழுதும் துரோகம் செய்யக்கூடாது. கோபமும், கர்வமும் இல்லாதவனே பிரம்மச்சாரி. மனம் வாக்கு செயலால் ஆச்சாரியனுக்கு உதவுவது அவன் இரண்டாவது வேலை. இது பிரம்மச்சாரியின் கடமை. குருவிற்கு தரவேண்டிய மரியாதை. குருவின் மனைவிக்கும், மகனுக்கும் தரப்பட வேண்டும். தான் மிகுந்த உன்னத நிலையை அடைவதற்கு ஆச்சாரியனே காரணம் என்று ஒரு பிரம்மச்சாரி நினைப்பது அவன் மூன்றாவது வேலை. ஆச்சாரியனுடைய உபகாரத்திற்கு பதில் சொல்லாது, குரு தட்சிணை அளிக்காது, போகக்கூடாது. குருவிற்கு நான் உபசாரம் செய்கிறேன் என்று நினைப்பது கூட பாபம். இச்சொல் அறவே நீக்கப்பட வேண்டும். இது நான்காவது நிலை.

“பிரம்மத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் கிடைத்த செல்வத்தை பிரம்மச்சாரி ஆச்சாரியனனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். ஆச்சாரியன் பார்த்து தருவதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரம்மச்சரியத்தின் இந்த உயர்நிலையை அடைந்தவனுக்கு பெரும் திரளான மக்கள் பிரம்மச்சரியத்தை கடைப்பிடிப்பதற்காக வருகிறார்கள். இந்த பிரம்மச்சாரி நிலையே தேவர்களுக்கு ஈடானது.

“சிந்தாமணி என்கிற ரசக்குளிகை, கேட்பவர்களுக்கு அவர்கள் விரும்பும் பொருள் கிடைக்கச் செய்வதுபோல, பிரம்மச்சரியம், விரும்பும் பொருளைத் தரும். மேலும் அவனுக்கு தேவையானது என்று இந்த உலகில் ஒரு பொருளும் இல்லை. அவன் மோட்சத்திற்கு அருகே இருக்கிறான். உலகம் அவனை கொண்டாடுகிறது.”

“சனத் சுஜாதரே, பரமாத்மா, பரமாத்மா என்று பல தடவை சொன்னீர்கள். அதன் சொரூபம் எத்தகையது? சிகப்பா, வெளுப்பா, கருப்பா, தங்க மயமா?”

“நீ பார்த்த எதிலும் அந்த பிரம்மத்தின் சொரூபம் இல்லை. சந்திர சூரியரிடமோ, நட்சத்திரங்களிடமோ, மின்னலிடமோ அவை இல்லை. இதுவரை நீ பார்த்த ஒளியிலிருந்து அது முற்றிலும் வேறாக இருக்கிறது.

இதைச் சொல்வது எப்படி? ‘இது போல’ என்று பரமாத்மாவை சொல்வதற்கு இந்த பிரபஞ்சத்தில் எந்த விஷயமும் இல்லை. காலத்தை விழுங்கக்கூடியது அந்த சொரூபம். பிறகு நான், நீ என்ற விஷயம் எப்படி வரும்? கற்றுக் கொடுப்பது, கற்பது என்பது எப்படி ஏற்படும்? அவற்றையெல்லாம் தாண்டிய விஷயம் இது. ஆனால் அதுதான் பிரபஞ்சத்தின் ஆதாரம். எல்லா பூதங்களும் (சக்திகளும்) அதனிடமிருந்தே தோன்றின. அதிலேயே மீற முடியாமல் கிடக்கின்றன. இந்த விஷயத்தை அறிபவன் அமரராகிறான். மிகப்பெரிய விடுதலையடைகிறான். மரணம் என்கிற விஷயம் இங்கு இல்லவே இல்லை.

“மன்னா, குண தோஷங்களைப் பற்றி சொல்கிறேன் கேள். பேராசைக்காரன், குரூரமானவன், கடுமையாகப் பேசுபவன், கருமி, மனதிற்குள் கோபத்தை தக்க வைத்துக் கொள்பவன், அதிக தற்புகழ்ச்சி செய்பவன் போன்ற மனிதர்கள் எப்பொழுதும் குரூரமான செயல்களையே செய்கிறார்கள். தாங்கள் பெற்ற செல்வத்தை நல்வழியில் பயன்படுத்துவதில்லை. எந்நேரமும் சம்போகத்தில் மனதை வைத்திருப்பவன் சமநிலை அற்றவன். மிகுந்த கர்வி, தானம் அளித்து தன்னை புகழ்ந்து கொள்பவர், சாமான்ய மக்களிடம் ஏழை எளியன் என்று துவேஷம் கொள்பவர் பாவிகள் என்று கருதப்படுவார்கள்.

தர்மம், சத்தியம், தவம், புலனடக்கம், ஆசூயை இன்மை, வெட்கம், பொறுமை, குற்றம் பாராமை, தானம், சாஸ்திர ஞானம், தைரியம், மன்னித்தல் போன்றவை உயர்ந்தோரின் விரதங்களாகும். இவற்றைக் கைக்கொண்டவன் உலகத்தை ஆள முடியும்.

உலகத்திற்கு விரோதமான காரியங்களை செய்தல், சாஸ்திரத்திற்கு எதிராக நடத்தல், நல்லவர்கள் மீது குற்றம் சாட்டுதல், பொய் பேசுதல், காமம், குரோதம், பாராதீனம், மற்றவர் குறையை கூறுதல், கோள் சொல்லுதல், செல்வத்தை அழித்தல், பொறாமை, பிராணிகளுக்கு கஷ்டம் அளித்தல், அசூயை, அதீத மகிழ்ச்சி, அதிக உளறல், விவேக சூன்யம், பிறர் குணங்களில் குற்றம் கண்டுபிடிக்கும் சுபாவம் போன்றவை வாழ்க்கையை பாழடிக்கக் கூடியது.

(தொடரும்)

இது முற்பிறவியில் செய்த பாவத்தின் விளைவு!

சனத் சுஜாத முனிவர், திருதராஷ்டிரனிடம் தொடர்ந்து பேசினார்: “நட்பு என்பது மிகச்சிறந்த விஷயம், மன்னனே. நண்பன் கேட்டால் செல்வத்தைக் கொடுத்து விடலாம். நண்பன் கேட்காத பொருளையும் தரலாம். மன சுத்தத்தோடு தன்னுடைய அன்பு மகன், தன் வீட்டு விசேஷம், தன்னுடைய பத்தினியைக்கூட நண்பனுக்காக தியாகம் செய்யலாம். நண்பனுக்கு உதவிசெய்து மறு உபகாரம் பெறாமல் இருத்தல் சிறப்பு. நண்பனின் நன்மைக்காக தன்னுடைய நன்மையை பாராட்டக்கூடாது. ஒரு செல்வந்தன் இந்த தியாக குணமும், சாத்வீகமும் உடையவனாக இருந்தால் மிக உயர்ந்த மனோநிலைக்கு வந்து விடுகிறான்.

இத்தகைய குணங்கள் திவ்யலோகத்தை அடைவதற்கு உதவி செய்கின்றன. அதற்கு மேலும் உள்ள நல்ல நிலையை அடைய யாகங்களின் உதவி தேவையாக இருக்கிறது. யாகம் என்பது சிலரிடம் மனதாலும், சிலரிடம் வாக்காலும், சிலரிடம் செயலாலும் வெளிப்படுகின்றன. இவை யாவும் ஒரே யோக்கியதையைக் கொண்டவை.

“ஆனால் உனக்கு இன்னொரு விஷயமும் தெளிவாக கூறப்பட வேண்டும். இம்மாதிரியான நியமங்களால், குண விசேஷங்களால் பரமாத்மாவை அடைந்துவிட முடியாது. பூஜையும், யக்ஞமும் செய்யப்படுவதால் மட்டுமே உன்னத நிலையை அடைந்துவிட முடியாது. மரண காலத்தில் மரணம் பற்றிய மருட்சி நீங்காது. இறந்த பிறகு உன்னத லோகங்களுக்குப் போக இவை உதவி செய்யும்.

“ஆனால் எந்த முயற்சியும் இல்லாமல் மனதுள் பரப்பிரம்மத்தை உபாசிக்க வேண்டும். எந்த முயற்சியும் செய்யாமல் அமைதியாக இருத்தலின் மூலம் இந்த உபாசனை தானாக ஏற்பட வேண்டும். இந்த நிலையில்தான் இங்கேயே பிரம்மத்தை புரிந்து கொண்டு மனிதன் பூரணமாகிறான். இந்த பூமியில் பூரணமானவர் அனேகம் பேர் உண்டு. அவர்களுக்கு வரலாறு இல்லை. அவர்கள் தன்னை இழந்தவர்கள். பெயரையும் புறக்கணித்தவர்கள். இருப்பு இல்லாதவர்கள். அதனால் எடுத்துச் சொல்ல முடியாமல் போகிறது.

‘‘ஆனால் மன்னா, அகந்தைக்கு வரலாறு உண்டு. எல்லா வரலாறும் சீராட்டப்படும். துவேஷிக்கப்படும். வரலாற்றை ஆழ்ந்து யோசிப்பவன் அந்த யோசனையின் முடிவில் வரலாறு அற்று இருக்க வேண்டிய நிலைமையை உணர்கிறான். அவன் முயற்சிகள் நின்று விடுகின்றன. அவன் வரலாற்றிலிருந்து தன்னை அப்புறப்படுத்திக் கொள்கிறான். வரலாறும் அவனை மறந்து விடும். ஆனால் இருந்தது, இல்லாமல் ஆகாது. இப்போது இருப்பதையும், எப்போதும் இருப்பதையும் இந்த உலகம் நீக்கிவிட முடியாது. பரப்பிரம்மத்தில் ஆனந்தமாய் லயித்தவர்கள், கர்விகளுக்கும் எங்கேனும் காணக் கிடைப்பார்கள்.

‘‘மன்னா, நம் பேச்சிலேயே பரமாத்மா என்று சொல்லப்பட்ட விஷயத்தைப் பற்றி நீ எதுவும் விசாரிக்கவில்லை. அதன் ரூபம் பற்றி கேட்கவில்லை. ஆனாலும் சொல்கிறேன். சுத்த ரூபமானது ஜோதி மயமானது. விசாலமான புகழ் ரூபமானது. அதன் ஒளியாலேயே சூரியன் பிரகாசிக்கிறான். அதனுடைய சக்தியாலேயே உலகத்தின் உயிர்கள் தோன்றின. தேவர்கள் அனைவரும் இந்த ஒளியையே உபாசிக்கிறார்கள். நீரைப்போல ஒரே விதமான ருசியை உள்ள தன்மையுடையவனாய் பரமாத்மா இருக்கிறான். அந்த சக்தியிலிருந்து பஞ்ச பூதங்கள் தோன்றின. பஞ்ச பூதங்களின் வெவ்வேறு கலப்பு விகிதம் காரணமாக உயிர்கள் தோன்றின. அந்த உயிர்களின் உணர்வில் எங்கிருந்து வந்தோம் என்பது பதிந்திருக்கிறது. அந்த பதிவைத்தான் யோகிகள் பிடித்துக் கொள்கிறார்கள். அந்தப் பதிவின் மூலம் பரமாத்ம சொரூபத்தை நெருங்குகிறார்கள். கடலும், நதியும், மலையும், மண்ணும், காற்றும், திசையும் அந்த ஒளிச்சக்தியே. புலன்களின் விழிப்பு அதைச் சேர்த்து பிடித்திருக்கும் மனம் இப்படி பிடிக்கப்பட்டிருப்பதை உணருகின்ற அறிவு இவற்றையெல்லாம் தாங்கியிருக்கின்ற சரீரம். இது அழியக் கூடியது. இப்படி அழியக்கூடியதை புரிந்து கொள்கிறபோதுதான் அழியாதது எது என்று கேள்வி வருகிறது. இந்த கேள்வி என்ற குதிரைதான் பரமாத்மா



மகாபாரதம்

91

என்ற உணர்வை தூண்டிவிட்டு பரமாத்மாவிடம் அழைத்துப் போகிறது.

பாலகுமாரன்

“மன்னா, நன்றாகப் புரிந்துகொள்: பரமாத்மாவின் விளைவால் வந்த நீ, பரமாத்மாவின் பதிவை கொண்டிருக்கிறாய். இந்தப் பதிவு புலன்களாலும், அறிவாலும், மனதாலும் மறைக்கப்பட்டிருக்கிறது. இவையல்ல நான் என்ற புலன்கள், அறிவு, மனம், சரீரத்தை விலக்குகிறபோது எது நான் என்ற பெரும் திகைப்பு வரும். அன்னியத்தை தேடுவது போல ஒரு தேடல் துவங்கும். ஆனால் எது தேடுகிறதோ அது தன்னையே தேடிக்கொண்டிருக்கிறது. பரமாத்மாவின் பதிவே எது பரமாத்மா என்று அலைகிறது. சமுத்திரத்தின் ஒரு துளி மேலெழும்பி எது சமுத்திரம் என்று கேள்வி எழுப்புவது போன்ற விஷயம் இது. விலகியிருந்து அது என்று பரமாத்மா உணரப்பட்டாலும் விலகலின் மூலம் வேறு எங்கோ இருக்கிறது. என்று தேடல் வந்தாலும் சட்டென்று அந்த துளி நீரில் விழ நானே சமுத்திரம், சமுத்திரமே நான் என்ற நிலை புரிந்து போகிறது.

“இந்த விஷயத்தை என்னவிதமாய் வாக்கியமாக்கினாலும் புரிந்து கொள்ள முடியாது. இது உணரப்பட வேண்டியது. சொல்லற்று உணர்தல் என்ற நிலை எல்லோரிடமும் இருக்கிறது. இந்த பரமாத்மாவின் சொரூபத்தை ஊனக் கண்களால் காணமுடியாது. பாம்புகள் கரையான் கட்டிய புற்றுகளில் தங்களை மறைத்துக் கொள்வதுபோல மனிதர்கள் கல்வியிலும், வித்தைகளிலும், தங்களை மறைத்துக் கொள்கிறார்கள். தாங்கள் அறிந்து வைத்திருப்பதையே ஞானம் என்கிறார்கள். பரமாத்மாவை தேடுபவர்களை ஏமாற்றுக்கார குருக்கள் தவறான பாதையில் அழைத்துப் போவார்கள். கட்டுக் கதைகள் சொல்வார்கள். பரமாத்மா சொரூபத்தை எந்தக் கதையில் அடக்க முடியும், எந்த வார்த்தையில் விளக்க முடியும்? பரமாத்மவிலிருந்து தெறித்த ஒரு விஷயத்தைத்தான் கொண்டாடலாம். இங்கே நீயும் தெறித்தது. நானும் தெறித்தது. அவரும் தெறித்தது. எல்லா உயிரினங்களும் தெறித்தவையே. பரமாத்மாவை தேடுபவருக்கு இவையெல்லாம் ஒன்றே. ஒரே தகுதியான விஷயமே. ஒரேவிதமான தகுதியை உடையவர்களை வைத்து என்ன கதை சொல்ல முடியும்?

“மேலும் கீழுமாக இருப்பவர்களைப் பற்றி, இடதும் வலதுமாக இருக்கிறவர்களைப் பற்றி, நல்லவன் கெட்டவன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பிரிவினை போலும் நடக்கும். இந்தக் கதைகள் பரமாத்ம தத்துவத்தைக் காட்டாது. மாறாக எதிரானது. பரமாத்மாவை தேடி அலைந்தவனை சமய நெறிகளிளோ, சடங்குகளிளோ வேறு ஏதேனும் உயர்வு தாழ்வு சொல்லியோ அறிய முடியாது.

“நானே எல்லாம் என்று இருக்கிறவனை என்னவென்று அழைப்பாய்? அவனை பாம்பு என்று அழைக்கலாம். பருந்து என்று சொல்லலாம். புலியும், கழுதையும் அவனே. யானையும் முதலையும் அவனே. புல்லும் மரமும் அவனே. ஆணும் பெண்ணும் அவனே. அப்படிப்பட்டவனுக்கு பெயரே இல்லை. இந்த உலகின் விதிமுறைகள் இல்லை.

“திருதராஷ்டிரா, நானே உனக்குத் தாய். நானே உனக்குத் தந்தை. நானே உன் புதல்வன். நானே உன் சேவகன். நானே பிதாமகன். நானே உன் எதிரி. நீங்கள் அனைவரும் என் ஆத்மாவில் இருக்கிறீர்கள். ஆனாலும் நீ என்னுடையவன் அல்ல. நான் உன்னுடையவன் அல்ல. நான், நீ என்ற பேதமே இல்லாத ஒரு நிலையை புலன்களால், அவை மூலம் மேலெழும்பிய மனதால், அந்த மனதை அறிந்த அறிவால் புரிந்துகொள்வது கடினம். ஞானியினுடைய இருதய கமலத்திலே அந்த பரப்பிரம்மம் மிளிர்கிறது. அது பரமானந்தமாக இருக்கிறது.

“இந்த நிலையே மனிதன் அடைய வேண்டிய நிலை. இதற்கே பிறப்பு, இறப்பு என்கிற அவஸ்தை. மனிதன் நிலைமை இவ்வாறு இருக்க, என் சொத்து உன் சொத்து, என் தேசம் உன் தேசம் என்கிற கூச்சலில் அர்த்தம் என்ன? இந்த உபதேசத்தை காது கொடுத்து கேட்பதற்கு ஒரு தாபம் வேண்டும். வெறும் வாக்கியங்களால் இது பரிமாறப்பட மாட்டாது. இதுவரை நான் பேசியது போதும். நான் விடைபெறுகிறேன்.”

எழுந்து மன்னனை தடவிக் கொடுத்துவிட்டு அரச சபையை விட்டு விலகினார். திருதராஷ்டிரன் புரிந்தும் புரியாததுமாய் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தார்.

மறுநாள் விடியலில் தூது போய் வந்த சஞ்சயனைக் காணும் ஆவலில் திருதராஷ்டிரன் தலைமையில் கௌரவர்கள் அனைவரும் ஒன்று கூடினார்கள். வெள்ளை நிற சுண்ணம் அடிக்கப்பட்ட அகலமான சபையில் அவரவருக்குண்டான ஆசனங்களில் அமர்ந்தார்கள். தேர்களின் மணி ஒலிக்க, சஞ்சயன் சபையின் வாசலுக்கு வந்து

சேர்ந்தான். கீழ் இறங்கி உள்ளே வந்து சபையை நமஸ்கரித்தான்.

“கௌரவர்களே நான் பாண்டவர்களிடம் சென்று திரும்பியுள்ளேன். பாண்டவர்கள் வயதுக்கேற்ப கௌரவர்கள் அனைவரையும் வணங்கினார்கள். பாராட்டினார்கள். பெரியவர்கள் அனைவருக்கும் தங்கள் வணக்கத்தை கூறச் சொன்னார்கள். சமவயது உடையவர்களுக்கு நட்பை தெரிவிக்கச் சொன்னார்கள். திருதராஷ்டிரன் கூறச் சொன்ன விஷயத்தை பாண்டவர்களிடம் சொல்லி விட்டேன். இப்பொழுது ஸ்ரீகிருஷ்ணரும், அர்ஜுனனும் கூறியுள்ள தர்மத்திற்கு அனுகூலமான பதிலை உங்களிடம் தெரிவிக்கிறேன். கவனத்தோடு கேளுங்கள்.”

அந்த கௌரவ சபையில், யுத்த களகாட்சி பெரிதாய் விரிந்தது. “ஒரு யுத்தம் எவ்விதம் நடக்கும் என்ற குரூரத்தை அர்ஜுனன் ஒவ்வொரு சொல்லாலும் விவரித்தான். தன்னுடைய தீர பராக்கிரமத்தை மட்டும் விவரிக்காது, தன்னுடைய வெஞ்சினத்தை மட்டும் சொல்லாது, தன் கூட்டத்தாரின் தீர பராக்கிரமத்தை எடுத்துச் சொன்னான். குறிப்பாக தன்னைப் பின்னிறுத்தி பீமனை முன்னிறுத்தி பீமனுடைய கோபாவேசம் எப்படி தண்டிக்கும் என்று கூறினான். இது அவையடக்கம் மட்டும் அல்ல, ஒரு உண்மையும் கூட. ஏனெனில் அர்ஜுனனைக் காட்டிலும் திரௌபதி வஸ்திராபரணத்தில் அதிகம் மனம் நொந்தது பீமசேனனே. அவன் ஆத்திரம், ரௌத்திரம், சொல்லுக்கு அடங்காததாய் இருந்தது. அதை சொல்லாக்க அர்ஜுனன் முயற்சி செய்தான். பயமுறுத்தினான். எச்சரித்தான்.

“சபையினரே, ஸ்ரீகிருஷ்ணனின் பெயரை முன்மொழிந்து அவனை அருகிலே இருக்க வைத்து, அவன் அறியும் வண்ணமே இந்த சுடுசொற்களை குந்தியின் மைந்தன் அர்ஜுனன் இறைத்தான். அவனது சபை அவன் பேச்சை மௌனமாய் தலையசைத்து ஆமோதித்தது.

“சிறிதும் அறிவில்லாத, மூடனான, என்னை போரில் ஜெயிக்க முடியும் என்று கனவு கொண்டிருக்கிற கர்ணனின் தூண்டுதலால், என் சகோதரன் துரியோதனன் அடாது பேசிக்கொண்டும், செய்துகொண்டும் இருக்கிறான். எது நியாயம் என்று தெரிந்தும், தெரிந்ததை மறைத்துக்கொண்டு ஒரு அதர்மத்தை தன்னுடைய நியாயமாகக் கொண்டிருக்கிறான். இது அவன் முற்பிறவியில் செய்த பாவத்தின் விளைவு. அதன் பலன், அவன் முன்பு யுத்தமாக வந்து நின்று பயமுறுத்துகிறது. அவனுக்கு எதிர் பக்கத்தில் பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அஸ்திரங்கள் தரித்த சாத்யகி, த்ருஷ்டத்யும்னன், சிகண்டி இவர்களோடு தேஜஸ்வியான யுதிஷ்டிரர் இருக்க, இவர்களை எதிர்த்து நிற்பது எவ்வளவு பெரிய மூடத்தனம்!

ஆனால் சஞ்சயரே, துரியோதனன் யுத்தத்தில் இறங்கட்டும். தர்மாத்வான யுதிஷ்டர் காட்டில் வாசம்செய்து சரளைக் கல்லும், தூசும் நிரம்பிய படுக்கையில் எப்படி படுத்தாரோ அதைவிட மோசமான படுக்கையில் துரியோதனன் படுத்து தன் உயிரை விடவேண்டும். அவனிடம் சொல்லுங்கள். பாண்டவர்களை ஜெயிப்பது எளிது. வெட்கம், நாணம், தவம், புலனடக்கம், தர்மரட்சை, மேலும் செல்வத்தாலும் பாண்டவர்கள் மீது துரியோதனன் அதிகாரம் செலுத்த முடியும். அதாவது நல்ல குணங்களால் எங்கள் இதயத்தை வெல்ல முடியும். மற்ற சூளுரைகள் அவனுக்கு அழிவையே ஏற்படுத்தும்.

பன்னிரண்டு வருட வனவாசமும், ஒரு வருட அஞ்ஞாத வாசமும் எங்களை ஒரு நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றன. பல ஆண்டுகளாக நாங்கள் அடக்கி வைத்த கோபம், யுத்தத்தில் வெளிப்படும். துரியோதனா, உன்னால் அல்லவோ உன்னால் அல்லவோ என்கிற ரௌத்ரம் எங்களிடமிருந்து பீறிடும். எங்களைக் காட்டிலும் எங்கள் ரௌத்ரம் பெரிது. அப்போது ஏற்படும் பயங்கர யுத்தத்தை கண்டு நீ கழிவிரக்கம் கொள்வாய். தெரியாமல் தொட்டு விட்டேனே என்று அக்னியை அணைத்தவன் போல் பதறி மனம் விலகுவாய். கோடை காலத்தில் கொழுந்து விட்டு எரியும் நெருப்பு எல்லா பக்கங்களையும் தகித்து துரும்பு, புல், மரம், காடு அனைத்தையும் எரித்து சாம்பலாக்குவதுபோல துரியோதனன் பக்கத்து அத்தனை வீரர்களும் யுதிஷ்டருடைய கோபத்தால் நாசமடையப் போகிறார்கள்.

“தன் கதையை எடுத்துக் கொண்டு பீமசேனன் கௌரவ படைகளுக்கு நடுவே புகும்போது இவ்வளவு மோசமானதா யுத்தம் என்று துரியோதனன் கலங்க நேரிடும். கையுறையும், கவசமும் தரித்து தன் பக்கத்து படை வீரர்களும் தன்னை காணாத விதமாய் வெகு வேகத்தோடு பீமசேனன்

கௌரவப் படைகளுக்குள் புக, அவன் செய்வதறியாது திகைக்கப் போகிறான். செய்ததை நினைத்து வருந்தப் போகிறான். கௌரவப் படையிலுள்ள பெரிய யானைகளை, பீமசேனன் கதையால் அடித்துக் கொன்று பொங்குகின்ற ரத்தம் தரையை நனைக்கும் கோரக் காட்சியைக் கண்டு துரியோதனன் நடுங்கப் போகிறான். விவரம் தெரியாமல் நான் போரைத் துவங்கி பெரிய தவறு செய்தேன் என்று பேதலிக்கப் போகிறான். வைக்கோல் குடிசைகள் உள்ள கிராமம் தீயினால் நாசமடைவது போல, பழுத்த வயல் ஒற்றை மின்னலினால் எரிந்து சாம்பலாவதைப் போல, மிக விரைவில் துரியோதனன் படை நஷ்டம் அடைய தன் கூட்டம் எங்கே தன்னை அண்டியவர்கள் எங்கே என்று தேடித் தேடி துரியோதனன் தவிக்கப் போகிறான்.

“விசித்திர முறையில் போர் செய்யும் நகுலன், கௌரவப்படை வீரர்கள் தலையை வெட்டி குவியல் குவியலாகப் போடுவான். விஷ அம்புகளை தேர்ந்தெடுப்பதில் வல்லவனான சகாதேவன் அவன் வித்தையை செய்து காட்டும் போது தெரியாமல் போர் ஆரம்பித்தோமே என்று துரியோதனன் தவிப்பான். வயதில் சிறியவராக இருந்தாலும் திரௌபதியின் ஐந்து புதல்வர்களும் தங்கள் உயிரின் மீதுள்ள ஆசையை விட்டுவிட்டு மிக வேகமாக கௌரவப் படையை நாசம் செய்வார்கள். சத்தமே வராத தேர் சக்கரத்தை கொண்ட சகாதேவன், போர் நடக்கின்ற இடத்தில் எல்லா பக்கங்களிலும் காணப்படுவான். கௌரவப் படையை மிரளச் செய்வான். இப்பேர்பட்ட வீரனா சகாதேவன் இவர்களையா பகைத்துக் கொண்டோம் என்று துரியோதனனுக்கு துக்கம் எழும்.

“அபிமன்யு சாட்சாத் ஸ்ரீகிருஷ்ணனைப் போன்ற பராக்கிரமம் கொண்டவன். போர்க்கலையில் வல்லவன். அவனது அம்புகள் மேகத்தைப் போல அடர்த்தியாக வானத்தில் பறந்து தரையில் மிக வேகமாக இறங்கும். அதை தடுக்க எந்த கவசத்தாலும் இயலாது. சுபத்ராவின் குமாரன் அவனும் வயதில் சிறியவன். ஆனால் ஒரு காலனைப்போல பகைவரை தாக்குவான். இந்த சிறுவர்களிடமெல்லாம் நான் அடிபட வேண்டுமா, ஏனடா இந்தப் போரை துவங்கினேன் என்று துரியோதனன் வருத்தப்படப் போகிறான்.

‘‘விராட மன்னனான துருபதன் அஸ்திர வித்தையில் நிபுணன். அவன் மனம், படுகாயப்பட்டிருக்கிறது. கௌரவர்களின் செயலால் அவன் கோபமுற்று இருக்கிறான். அந்த கோபத்தோடு அவன் பகைவர்களை சுழட்டி அடிக்க துரியோதனனுக்கு உண்மையில் பயம் உண்டாகும்.

“கௌரவரின் பக்கம் மிகச்சிறந்த வில்லாளி யார்? மகாரதி யார்? பீஷ்மர். இவர் சிகண்டியால் கொல்லப்படப் போகிறார். இது கிட்டத்தட்ட நடந்து முடிந்த கதை. இந்த சாபத்தை பீஷ்மரும் அறிவார். அந்த சிகண்டி எங்கள் பக்கம் இருக்கும்போது வெற்றி யார் பக்கம் இருக்கும் என்று ஒருவருக்கு தெளிவாகத் தெரியும். இந்த யுத்தத்தில் பீஷ்மர் மரணமடைவார் என்றால் யார் ஜெயித்ததாக அர்த்தம்? வேறு எவருக்கும் சொல்லித் தரப்படாத அஸ்திர ரகசியங்களை துரோணாச்சாரியார் த்ருஷ்டத்யும்னனுக்குச் சொல்லிக் கொடுத்தார். அவன் துரோணரைப் பழிவாங்க காத்திருக்கிறான். பாண்டவர்களுக்கான போரில் அவன் கலந்துகொண்டு தன் பழைய வெஞ்சினத்தை, எடுத்த சபதத்தை தீர்த்துக் கொள்ளப் போகிறான். இதனால் துரியோதனனுக்கு நஷ்டம். துரோணர் கடுமையாக தாக்கப்பட்டு சோர்ந்து விழுவதை துரியோதனன் காணும்போது அவனுக்கு பச்சாதாபம் உண்டாகும். போரில் வெற்றிபெற தேவையான கோபம், மனவேதனை, அதனால் எழுந்த மும்முரம் யார் பக்கம் இருக்கிறது என்பதை துரியோதனன் யோசிக்க வேண்டும்.

“எங்கள் அணியின் பக்கம் சாத்விகி இருக்கிறார். அவர் யுத்தத்தில் நிபுணர். இடையறாது யுத்தத்தை வேண்டுபவர். இந்தப் போர் குறித்து அவர் மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறார். துரியோதனனின் படைத் தளபதிகளை கடுமையாக துன்புறுத்தப் போகிறார். எல்லாவிதமான அஸ்திரங்களும் யதுகுல திலகரான சாத்விகியிடம் நிரம்பியிருக்கிறது. விசித்திரமான அவரது அஸ்திரப் பிரயோகம் காணும்பொழுது துரியோதனன் துயரப்படப் போகிறான்.

“தங்க மணிகள் சூட்டப்பட்டதும், வெண்ணிற குதிரைகளில் பூட்டப்பட்டதும், ஹனுமன் கொடி பறப்பதுமான என் தேரை பார்க்கும் பொழுதே மந்த புத்திக்காரனான துரியோதனன் கவலையடைவான். சோர்வு கொள்வான். நான் காண்டீப வில்லை அதிரச் செய்வேன். அந்த அதிர்ச்சி துரியோதனன் வயிற்றைப்பிசையும். அவன் படை வீரர்கள் தன்னை மறந்து

பயந்து கலைந்து ஓடுவார்கள். அப்படி ஓடுகின்ற வீரர்களை தலையைக் கொய்வதும், மர்ம ஸ்தானத்தை பிளப்பதும், எலும்புகளை உடைத்து ஊனமாக்குவதுமான என் அஸ்திர பிரயோகங்களை துரியோதனன் இதுவரை பார்த்ததேயில்லை. போரில் அவன் பக்கமிருந்து வரும் அம்புகளை என் அம்புகள் இடித்துத் திருப்பும். மேற்கொண்டு இலக்கைத் தாக்கும். இது என்ன, எப்படி என்று இனிதான் துரியோதனன் யோசனை செய்வான். இதைவிட கீழ்த்தரமான நிலை ஒருபோதும் வீரனுக்கு ஏற்படாது. மற்ற நேரமெல்லாம் ஆளுரை பேசிவிட்டு போர் நிகழ்கின்ற காலத்தில் திகைத்துப் போய் நிற்கிறவனை க்ஷத்திரியனாக கருத முடியாது.

"எப்போதும் கோபத்தின் உச்சியில் இருக்கின்ற துரியோதனன் அதற்கு நேர்மாறான குணத்தோடு அதாவது காயம் பட்டு அலறுகின்ற மனத்தோடு இருக்கிற பொழுது எதற்கு இந்த வலி, ஏன் இதில் சிக்கிக் கொண்டோம் என்று வருத்தப்படுவான்.

சபையோர்களே, அர்ஜுனன் சொன்ன சிறிய நிகழ்ச்சி ஒன்றை கேளுங்கள்.

"மாலை நேரம். சந்தியாவந்தனம் செய்துவிட்டு அமரும்போது தெய்வீகமான தோற்றமுடைய ஒரு பிராமணன் அர்ஜுனனுக்கு அருகே வந்து, 'ஏ சன்யாஸி, நீ போருக்குத் துடிப்பது தெரியும். உனக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும். உச்சைச்ரவஸ் என்கிற என் குதிரையோடு உனக்கு முன்னே உனக்கு வழி ஏற்படுத்தி நான் போர்களத்தில் புகட்டுமா? அல்லது ஸ்ரீகிருஷ்ணர் தேர் ஓட்ட அதில் நீ காண்டீபத்தோடு போக, உனக்குப் பின்னே துணையாக வரட்டுமா?' என்று கேட்டான். வந்தவன் இந்திரன் என்று அர்ஜுனன் அறிந்து கொண்டான். வணங்கினான்.

சபையோர்களே, இதன் மூலம் அவன் பக்க போருக்கு தேவர்களின் ஆசி உண்டு என்று அர்ஜுனன் சொல்கிறான்.

சரி, எங்கள் பக்கம் இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணரை இந்த உலகில் யாரால் ஜெயிக்க முடியும்? கொழுந்துவிட்டு எரிகின்ற நெருப்பை கைகளால் அணைக்கும் மூடனும் உலகில் இருக்கிறானா? போஜ வம்சத்து மன்னர்களை தோற்கடித்து ருக்மிணியை தன் மனைவியாக அடைந்தான். பிருத்யும்னன் என்ற பெரும் வீரனை வீழ்த்தினார். காந்தார தேசத்து போர் வீரர்களை தன் பலத்தால் அழித்தார். பாண்டிய மன்னரை தராசு தட்டால் கொன்றார். கலிங்க நாட்டு வீரர்களை நசுக்கினார். உலகமே போற்றும் காசியை பல ஆண்டுகள் அனாதியாக இருக்கும்படி செய்தார். உக்ரசேனனுடைய புதல்வன் கம்சன் அவன் சபையில் வலியப் போய் யுத்தம் செய்து கம்சனைக் கொன்றார். கம்சனிரிங் தகப்பன் உக்ரசேனனுக்கு ராஜ்ஜியத்தை திரும்ப கொடுத்தார். பூமியின் புதல்வனான நரகாசுரனை கடினமான முறையில் ஜெயித்தார். முரன் என்கிற தைத்யனையும், ராட்சஸ சமூகத்தையும் அழித்து நிர்மோசன் என்ற நகரத்திற்குள் புகுந்தார். ஸ்ரீகிருஷ்ணரின் போரிடுகின்ற வல்லமையையும், அந்த தர்மத்தையும் அறிந்த தேவர்கள், பகைவர்களுடைய ஆயுதங்களால் அவருக்கு காயம் ஏற்படாத உடம்பையும், கலக்கமற்ற மனதையும் கொடுத்தார்கள். அந்த ஸ்ரீகிருஷ்ணர் எங்கள் பக்கம். ஆயுதம் எடுக்காது போனாலும் அழிக்க முடியாத அவரை வென்றுவிட்டு அல்லவா துரியோதனன் எங்களை நோக்கி வரமுடியும்? ஸ்ரீகிருஷ்ணர் இருக்கிறவரை எங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. ஆகவே எங்கள் கையால் துரியோதனன் மரணமடைவது திண்ணம்.

"மனிதனுடைய பாவ கர்மங்கள் பலனின்றிப் போகாது. புண்ணிய கர்மங்கள் நல்லதுப் செய்யாது போகாது. துரியோதனனுடைய பாவ கர்மங்கள் பழுத்து விட்டன. தன் சகோதர கூட்டத்துடன் அவன் கொல்லப்படப் போகிறான். போர் என்று ஒன்று வந்தால் கௌரவர்கள் ஒருவர் கூட உயிருடன் இருக்கமாட்டார். துரியோதனன் தன்னுடைய அன்பான மனைவியர்களுடன் கூடி சுகம் பெறட்டும். நல்ல உணவுகளை உண்டும், பஞ்சணையில் படுத்தும், சுனைகளில் நீராடியும் உலக போகத்தை விரைவில் அனுபவிக்கட்டும். ஏனெனில் அவனுக்கு முடிவு நெருங்கி விட்டது.

"தெய்வ சம்பந்தமுடைய நல்ல ஜோதிடர்கள் அஸ்தினாபுரத்து அரண்மனையில் இருக்கிறார்கள். அதைச் சுற்றியுள்ள நகரங்களில் வாழ்கிறார்கள். அவர்கள் காலக்கணக்கை மிகத்துல்லியமாக அறியக்கூடியவர்கள். அதை விவரித்துப்பேசி வியப்பில் ஆழ்த்துகிறவர்கள். அப்பேர்பட்ட கெட்டிக்காரர்களை அணுகி தன்னுடைய நிலை என்ன ஆகும் எப்போது, எங்கே, எவ்விதம் முடிவு என்று தெரிந்து கொள்ளட்டும். அந்த ஜோதிடர்கள் எந்த பயமும் இன்றி அவனுக்கு உண்மையைக் கூறுவார்கள். அதைப் புரிந்துகொண்டு இந்தப் போரிலிருந்து அவன் விலகியிருக்கட்டும். போர் என்று ஒன்று வந்தால் அதன் பாதிப்பு சகல இடங்களிலும் இருக்கும். துரியோதனனைச் சார்ந்த பொது மக்களுக்காக நான் துயர் கொள்கிறேன். ஒரு காட்டில் தீ பற்றும்போது அதில் சிறிய, பெரிய, நடுத்தர மரம் எதுவும் விடுவதில்லை.

(தொடரும்)

மகாபாரதம்

92

ஓடுகிற மானா, துரத்துகிற புலியா,
எது வேகம் அதிகம்?

ஸ்தூணாகர்ணம் பாசுபதாஸ்திரம், பிரம்மாஸ்திரம், இந்திராஸ்திரம் போன்ற பாணங்களை நான் கூச்சமின்றி கௌரவப் படையின் மீது பிரயோகிப்பேன். அத்தனை கோபம் என் நெஞ்சில் இருக்கிறது. இதைச் சொல்லுகிற போது மெல்லிய துக்கமும் என்னுள் வருகிறது. கௌரவர்கள் அனைவரும் நீண்ட ஆயுளோடு இருக்கட்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்.” என்று அர்ஜுனன் கூறினான்.

அர்ஜுனனுடைய இந்தச் செய்தி கௌரவ சபையை கலக்கமடையச் செய்தது.

“ஒரு சமயம் பிரம்மாவின் சபையில் நர நாராயணர்கள் வந்து இறங்கினார்கள். சபை அவர்களை வணங்கியது.” சஞ்சயன் தான் அறிந்த விஷயத்தை கௌரவர் முன்பு பேசத் துவங்கினார்.

“அந்த நர நாராயணர்கள் இந்திரனுக்கு துணையாக நின்று அவன் எதிரிகளை அழித்தார்கள். எவரையும் வணங்கத் தேவையில்லாத அளவுக்கு வலிவும், புகழும் அவர்கள் கொண்டிருந்தார்கள். தேவர்களுக்கு ஆதரவாக அவர்களை எதிர்த்த தைத்யவர்களை நரனும், நாராயணனும் பல்வேறு போர்களில் பழி தீர்த்தார்கள். அந்த நர நாராயணர்கள் மறுபடியும் ஒன்று சேர்ந்து விட்டார்கள். அவர்களே அர்ஜுனனும், கிருஷ்ணனுமாய் இங்கு பிறந்திருக்கிறார்கள். இதைப்



புரிந்தவர்கள் அவர்களோடு சண்டையிடத் துணிய மாட்டார்கள். வாழ்வின் சூட்சுமத்தை அறியாதவர்கள் ஒன்றின் தொடர்ச்சியாகத்தான் ஒன்று என்று புரியாதவர்கள் எதிரே இருக்கிற வியக்தி யார் என்ற கேள்வி இல்லாதவர்கள் வெறும் கோபத்தால் அசூயையோடு எதிரியை இழிவாக நினைப்பவர்கள் மிகுந்த சிக்கலுக்குள்ளாகிறார்கள். அந்த நரன் அர்ஜுனன். அந்த நாராயணன் ஸ்ரீகிருஷ்ணன்.

பாலகுமாரன்

“உலகம் எப்பொழுது நன்மை பெற வேண்டும் என்று நினைக்கிறார்களோ அப்பொழுது இவர்கள் அவதரிக்கிறார்கள். அயோக்கியத்தனமான வன்முறையால் இந்த உலகம் அல்லலுறும் போது சாதாரண மக்கள் கண்ணீர் விட்டு அழும் போது மாமிசத்தனமான வலுவுள்ளவர்களையும், ஆத்திரக்காரர்களையும் சிதறி சீரழிக்க அவதாரங்கள் ஏற்படுகின்றன. பூமியினுடைய சமநிலை ஆட்டங்காணுமே தவிர குலைவதில்லை. ஸ்ரீகிருஷ்ணரின் கையில் இருக்கின்ற ஸ்ரீசக்ரமும், அர்ஜுனனுடைய காண்டீபமும், அதன் வேகமும் நர நாராயணர்களின் பிறப்பை உறுதி செய்கின்றன. பரசுராமரால் சபிக்கப்பட்டவனும், கடுஞ்சொற்கள் உடையவனுமான கர்ணனையும், சூட்சிக்கார சகுனியையும் நீ ஒருவன் மட்டும்தான் முழு மனதாக நம்புகிறாய். போர் என்று துவங்கினால் கௌரவர்கள் அழிவு நிச்சயம். உலகத்தின் சோகமயமான நேரம் எது தெரியுமா துரியோதனா, தன்னுடைய தூண்டுதலின் பேரில் தன் காரியத்திற்காக தன் உறவுகள் இறந்து போவதைக் கேட்க நேருவதுதான் மிகப்பெரிய சோகம். உன் நெற்றியைப் பார்க்கும் பொழுது அது உனக்கு ஏற்படப் போகிறது என்றுதான் தோன்றுகிறது. ஆனாலும் முயற்சி செய்.

“காது என்ற அவயம் இருக்கிறது. அது நல்ல சொற்கள் சொல்லப்படும் பொழுது ஸ்பஷ்டமாகக் கேட்கிறது. அது பற்றிய விளக்கத்தை அறிவு பற்றிக் கொள்கிறது. ஆனால் மனம் அதை மறுதலிக்கிறது. அல்லது அலட்சியப்படுத்துகிறது. வீட்டு வாசலில் நின்று யாசிப்பவர் நல்ல சொற்களைக் கூறும்பொழுது அந்த வீட்டுத் தலைவன் அதைக் காது குளிரக் கேட்கிறான். அந்த வீட்டிலுள்ள பெரியவர்கள் அதை ஆமோதித்து வணங்குகிறார்கள். ஆனால் அந்த வீட்டு எஜமானியோ அதாவது எஜமானனோ யாசிப்பவனை புறக்கணிக்கிறார். கர்வத்தால் மறுதலிக்கிறார். ஒரு குடும்பம் பிரிந்து கிடக்கலாகாது. அதே போல புலன்கள், அறிவு, மனம் என்பவை ஒன்றுசேர்ந்து வாழும் வாழ்க்கையைப் பரிசோதிக்க வேண்டும்.

துரியோதனா, உனக்கு நல்லது நடக்கட்டும்.” என்று துக்கம் தோய்ந்த குரலில் சொல்லி விட்டு சஞ்சயன் தள்ளாடி அமர்ந்தான்.

ஆராயத் தகுந்த நல்ல சொற்கள், ஆராய்ச்சியை முடித்து வினை துவங்க ஆரம்பித்தவருக்கு விளங்காது. சஞ்சயனுடைய பேச்சால் கர்ணன் கோபமுற்றான். “நான் போர் வீரன், க்ஷத்ரியன், வில்லாளி, துரியோதனன் என்ன மன்னனின் படைத் தளபதி. என்னுடைய தர்மத்திலிருந்து நான் ஒருக்காலும் பின் வாங்கவில்லை. பிழறவில்லை. இவ்விதம் குறை கூற என்னிடம் என்ன தீய நடத்தை இருக்கிறது. நான் துரியோதனனுக்கு ஒருபொழுதும் தீமையை நினைத்ததில்லை. திருதராஷ்டிரன் இங்கு மன்னர். துரியோதனன் அவர் புதல்வர். இவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்களோ அதைச் செய்ய நான் சித்தமாக இருக்கிறேன். இங்கு அரசன் என்பவர் துரியோதனனே. தூது போய் வந்தவர்கள் அல்ல. துரியோதனனுக்கு ஆதரவாக நின்று விரோதிகள் என்று தீர்மானிக்கப்பட்ட பாண்டவர்களை நான் கொன்று போடுவேன். அவர்கள் படைகளை நான் கடுமையாக தண்டிப்பேன். வெறுமே உபதேசத்தைக் கேட்பதால் ஒருவன் புகழ் நிலைக்காது. மன்னனுக்கு உபதேசிக்கும் தகுதி எந்த தளபதிக்கும் இல்லை.”

கோபத்தோடு கர்ணன் பேசி முடித்ததும் பீஷ்மர் வாய்விட்டு சிரித்தார். கர்ணனோடு நேரிடையாக பேசுவதைத் தவிர்த்தார்.

“திருதராஷ்டிரா, பஞ்ச பாண்டவர்களைக் கொன்று போடுவேன் என்கிற இந்த கர்ணன் பேச்சு விசித்திரமானது. அர்ஜுனனுடைய வித்தைக்கு பதினாறில் ஒரு பங்கு கூட இந்த கர்ணன் சமானமாக மாட்டான். வெறும் வாய்ச் சொல் வீரனான, சபையின் மதிப்பு அறியாது பேசுகிற இந்த மூடனை நம்பி உன் பிள்ளை யுத்தத்தில் இறங்குகிறான். இதற்கு முன் எத்தனை முறை பாண்டவர்களை ஜெயித்திருக்கிறாய் என்று பலமுறை கேட்டும் இவன் பதில் சொல்லவில்லை. தோற்ற கதை சொன்னாலும் இவன் புரிந்து கொள்ளவில்லை. விராட நகரத்தில் நடந்த கூத்து ஏன் இவர்கள் அனைவருக்கும் மறந்து விட்டது. அர்ஜுனன் தனி ஒருவனாக இவர்கள்

அத்தனை பேரையும் அடித்து காயப்படுத்தி மூர்ச்சடைய வைத்து மேலாடைகளைப் பறித்து விராடதேசத்து அரசகுமாரியிடம் பரிசளித்தது எப்படி மறந்து போயிற்று. இதற்கு என்ன சமாதானம். இதுதான் கோஷ யாத்திரையிலும் நடந்தது. கந்தர்வர்கள் நீராடுகிற போது வம்பு செய்து அவர்கள் சுழற்றி அடித்து கட்டி இழுத்துப் போக, குலத்தின் பெருமைக்கு இழுக்கு என்று உதவிக்கு வந்த கந்தர்வர்களை அடித்து விரட்டியும், தர்மபுத்திரரால் சமாதானம் பேசியும் விடுவிக்கப்பட்டவனல்லவா துரியோதனன். எப்படி சௌகரியமாய் இந்த நிகழ்வுகளை மறந்து விடுகிறீர்கள். இந்தக் கர்ணன் வீணான பெருமை பேசுகிறான். இவனைப் புறக்கணிப்பது நல்லது."

பீஷ்மருடைய பேச்சுக்கு துரோணர் தொடை தட்டி கோஷம் செய்தார். "திருதராஷ்டிரா, பரதகுல திலகமான பீஷ்மர் சொல்வதைக் கேளுங்கள். யார் காமத்தின் லோபிகளோ, வெறும் ஆசையை மனதில் தேக்கி வைத்துக்கொண்டு பேசுகிறார்களோ அவர்கள் பேச்சை ஏற்க வேண்டாம். சஞ்சயன் மூலமாக அர்ஜுனனுடைய குமுறலை இந்த சபையில் கேட்டபோது அர்ஜுனன் தன் சபதத்தை செய்தே தீருவான். வெற்றி அடைவான் என்றே எனக்குத் தோன்றுகிறது."

ஆனால் துரதிஷ்டவசமாக பீஷ்மருடைய, துரோணருடைய பேச்சை திருதராஷ்டிரன் ஏற்கவில்லை. மாறாக அவர்கள் இருவரையும் புறக்கணித்து விட்டு சஞ்சயனோடு தன் சம்பாஷணையை துவக்கினார். அது யுத்தத்தைத் தொடக்கி வைப்பதான எண்ணமாகத்தான் இருந்தது. சபை கலக்கமடைந்தது. திருதராஷ்டிரன் பேச்சு முட்டாள்தனத்தின் உச்சியில் இருந்தது. தன் புதல்வனின் பக்கமே அவன் இருப்பதை தெளிவுபடுத்தியது.

நம் பக்கம் மன்னர்கள் பலர் வந்து சேர்ந்திருக்கிறார்கள். பெரிய படைகள் சேர்ந்து விட்டன. அவர்கள் போருக்கான துடிப்போடு இருக்கிறார்கள். அதை உணர்கிறபோது வெற்றி பெறுவோம் என்ற எண்ணமே ஏற்படுகிறது. தருமபுத்திரர் எத்தனை படைகளை சேர்த்துள்ளார் என்ற கணக்கை திருதராஷ்டிரன் கேட்கிறபோது அயர்ச்சியினாலும் துக்கத்தினாலும் சஞ்சயன் நீண்டதாய் மூச்சுகள் இழுத்து விட்டார். இனி இங்கு என்ன பேசப் போகிறோம் என்று மனம் குழம்ப மனதில் வேகம் தாங்காமல் மூர்ச்சித்து விழுந்தார். அருகில் உள்ளவர்கள் அவரை ஆசுவாசப்படுத்தினார்கள். தான் இதுவரை கூறியவற்றையே மறுபடியும் கூறலானார்.

"அங்குள்ள வீரர்களின் மேன்மையையும், அவர் படை பலத்தையும் நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். இங்கில்லாதது அங்கு என்ன என்ற கேள்வி உங்களுக்குள் மறைமுகமாய் இருக்குமாயின் ஸ்ரீகிருஷ்ணர் என்ற பெயரை உரக்கச் சொல்வேன். கௌரவர் படை பலம் அதிகம் இருப்பினும் பாண்டவர் பக்கம் மதியூகம் மிக்க ஸ்ரீகிருஷ்ணர் இருக்கிறார். அவர் பேச்சுக்கு எதிர் பேச்சு பேசாது அவரை ஆஸ்ரயத்து எது சொன்னாலும் ஏற்றுக் கொள்கிற மனப் பக்குவத்தோடு பஞ்ச பாண்டவர்கள் இருக்கிறார்கள். போருக்குத் தலைமை யுதிஷ்டிரர் என்றாலும் போரை நடத்துவது ஸ்ரீகிருஷ்ணர். அத்தகைய ஒரு பலம் கௌரவர்களிடையே நிலைபெறவில்லை. அப்படி ஒருவர் வேண்டுமென்றே இங்கு இருப்பவர்களுக்குத் தெரியவில்லை.

"அர்ஜுனனைக் கண்டு மட்டுமே பயப்படுகிறீர்கள். கர்ணனும் அர்ஜுனனையே மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறான். பீமசேனனைப் பற்றி யாரும் சிந்திப்பதேயில்லை. பீமன் கோபாவேசம் கொண்டு அலைகிறான். அவன் உடல் பலத்திற்கு நிகராக இங்கு நான் யாரையும் காணவில்லை. அவன் மனோபலம் அதைவிட பன்மடங்கு மேலானது. தன் மனைவிக்கு நடந்த கொடுமையை நினைத்து நினைத்து அவன் கோபம் கூர்மையாய் இருக்கிறது. பீமனை வெறும் பலசாலி என்று மட்டும் கருத வேண்டாம்.

"பாண்டவர்களுக்கு இருக்கும் கோபாவேசம் கௌரவர்களிடம் இல்லை. இதுவும் ஒரு பெரிய குறை. ஓடுகிற மானா, துரத்துகிற புலியா, எதில் வேகம் கூடுதலாக இருக்கும். யோசித்து தெளிய வேண்டும். எனக்கு அடாது செய்தாயே, உன் பங்காளியான எங்களை துன்பத்தில் ஆழ்த்தினாயே, என் வீட்டுப் பெண்மணியை அவமானப்படுத்தினாயே என்கிற கோபத்தின் வலிவு எவராலும் எதிர்க்கவொண்ணாதது. இந்தக் கோபம் பற்றிய எதுவும் துரியோதனாதிகளிடம் இல்லை.

மரத்தின் உச்சிக்கூட்டில் தேன் இருக்கிறது. அதை ஏறி எடுக்க கை நீட்டுபவனுக்கு விழுவோம் என்ற பயம் இல்லை. நழுவி விழும் வரை அது புரியப் போவதில்லை" என்று சஞ்சயன் சொன்னதை திருதராஷ்டிரன் கவலையோடு ஆமோதித்தான்.

"ஆமாம். என் புதல்வர்கள் உச்சிக் கிளையில் இருக்கும் தேனடைக்கு கை நீட்டுபவர்கள். தேனை மட்டுமே நினைத்துக் கொண்டிருப்பவர்கள். கிடைக்கும் சாதக பாதகம் பற்றி கணக்கு இல்லாதவர்கள். நீ சொன்ன பீமனுடைய கோபத்தை நான் அறிவேன். உடல் பலம் மட்டுமல்ல, கோபத்தால் ஏற்பட்ட மனோபலத்தை ஒருக்காலும் தவிர்க்க முடியாது. அதை

எதிர்க்க அதற்கு இணையான மனோபலம் கிடையாது. இரண்டு கட்சியில் ஏதோ ஒரு பக்கம் தான் இந்த மனோபலம் இருக்கும். மற்றது அந்த மனோபலத்தை பரிட்சிக்கும் விதமாய், எதிர்க்கும் விதமாய் அமையும். உன் வாக்கின் மூலம் பாண்டவர்களின் வெற்றியை நான் அறிகிறேன். என்னால் என் புதல்வர்களை தடுக்க முடியவில்லை. பீஷ்மரும்,துரோணரும் தங்கள் இன்னுயிரை ஒரு தர்மத்தின் பொருட்டு என் புதல்வனுக்காக இழக்கப் போகிறார்கள் என்பதை நான் தெளிவாகப் புரிந்து கொள்கிறேன்.

“விதுரர் முன்பு சொன்ன உபதேசங்களின் பயம் எனக்கு வந்து விட்டது. ஐஸ்வர்யத்தை விரும்பும் முட்டாளான துரியோதனன் பேராசையால் சூதாட்டம் என்னும் பாபத்தை செய்திருக்கிறான். என் நூறு புத்திரர்களும் கொல்லப்படப் போகிறார்கள். அனாதியான அவர்களுடைய மனைவிகளின் அழுகை சத்தம் இப்போதே என் காதுகளில் கேட்கத் துவங்குகிறது. காலத்தின் கையில் நான் பலஹீனனாக இருப்பதை உணர்கிறேன்.

“அர்ஜுனன் தேர் ஏறி விட்டான். அந்தத் தேரை அந்த யுத்தத்தை கிருஷ்ணர் வழி நடத்துகிறார். அர்ஜுனனுடைய காண்டீபம் நாண் ஏற்றி விட்டது. இந்த மூன்றும் ஒன்று சேர்ந்து விட்டது. அதாவது தெய்வ சங்கல்பமும், மனித உறுதியும் நடந்த மோசமான விஷயங்களின் கோபாவேசங்களும் ஒன்று சேர்ந்து விட்டது. காயப்பட்ட மனம் காண்டீபத்தை பல் கடித்து வளைத்து நாண் ஏற்றி விட்டது. இந்த மூன்று புயல்களின் வேகத்தை யார் எதிர்க்க முடியும். நம்மிடம் காண்டீபமும் இல்லை. அர்ஜுனனும் இல்லை. ஸ்ரீகிருஷ்ணனும் இல்லை. ஓ சஞ்சயா, பரத வம்சத்தின் அழிவு துவங்கி விட்டது.

“கௌரவர்களே, பாண்டவர்களோடு யுத்தம் நடக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். அப்படி போர் உண்டானால் குருகுலம் அழியும். யுதிஷ்டர் என்னைத்தான் குறை சொல்லுகிறார். தவறு நடந்ததை அனுமதித்தது என் குற்றம் என்று சொல்கிறார். நான் அதை ஏற்றுக் கொண்டு போர் வேண்டாம் அமைதி வேண்டும் என்று சொன்னால் அதை யுதிஷ்டர் ஏற்க மாட்டாரா. போர் வேண்டாம் போர் வேண்டாம் என்பதே என் விருப்பம். இதைப் புரிந்து கொள்ள எவர் ஆலோசனையும் தேவையில்லை."

இடித்துரைக்க தகுந்த நேரம் கிடைத்து விட்டது என்று சஞ்சயன் திருதராஷ்டிரனை நோக்கி தன் பேச்சைத்துவங்கினார்.

“போர் நெருங்கி வந்ததும் எதிரியின் பலம் சொன்னதும் கலவரமடைந்து கையை பிசைந்து சமாதானம் கோருகிறீர்கள். சூதாட வேண்டாம் என்று சொன்னபோது அதை புறக்கணித்து மௌனமாய் இருந்தீர்கள். சகுனி சூதாட்டத்தை துவங்கிய போது என்ன நடக்கிறது அங்கே யார் ஜெயித்தார்கள் என்று ஆவலானீர்கள். சகுனி இதை வென்றேன், அதை வென்றேன் என்று ஆரவாரித்தபோது நீங்களும் ஒரு சிறுவனைப் போல குதூகலித்தீர்கள். அப்பொழுது பாண்டவர்கள் மீது கடுமையான பேச்சுக்கள் பேசப்பட்டுக் கொண்டிருந்தன. அவைகளை கண்டும் காணாது இருந்தீர்கள். பாண்டவர்கள் சூதாட்டத்தில் ஏமாற்றப்பட்டு வனத்திற்கு போகும் போது நீங்கள் குழந்தையைப் போல அடிக்கடி சிரித்து உங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தீர்கள். இப்பொழுது அதிகமாக துயரப்படாதீர்கள். இதை விதுரரும்,நானும் முன் கூட்டியே சொன்னபோது காது கொடுத்துக் கேட்காது இப்போதுதான் பாண்டவர்களுடைய திறமையை புரிந்து கொள்வது போல வீணாக அழுதீர்கள்."

துரியோதனன் குறுக்கிட்டுப் பேசினான். “அழைப்பை ஏற்று சூதுக்கு வந்து சூதாட சகுனியை தேர்ந்தெடுத்து நியாயமாக நடந்த சூதாட்டத்தில் உடமைகளை இழந்து நிர்கதியானவர்களுக்கு ஆதரவாக பேசுகிறாய். நீ பாண்டவர்களைச் சந்தித்தாயா அல்லது இந்த பேச்சு முழுவதும் உன் பயமா என்பது எனக்குப் புரியவில்லை. அர்ஜுனன் தேரில் என்ன கொடி இருந்தது."

துரியோதனன் தன்னை சந்தேகப்படுவது கண்டு சஞ்சயன் வருத்தமுற்றான். “அர்ஜுனனுடைய தேரில் பல திவ்ய உருவங்கள் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கின்றன. அவன் தேரில் பவன குமாரனான ஹனுமனுடைய உருவம் நிலைபெறப் போகிறது. அற்புதமான வெண் குதிரைகள் அந்தத் தேரில் பூட்டப்பட்டு இருக்கின்றன. யுதிஷ்டிரருடைய தேரிலும் வெண் குதிரைகள் இருக்கின்றன. அவை மிக அழகியவை. பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டுபவை. பீமசேனனுடைய குதிரைகள் கரடி போல் கருப்பானது. சகாதேவனுடைய குதிரைகள் பல விசித்திர வண்ணங்கள் கொண்டது. நகுலனுடைய குதிரைகள் பச்சை வர்ணம் கொண்டவை. இவை ஓடுகின்ற ஓட்டமும் பரஸ்பரம் செய்கின்ற போட்டியும் பார்க்கப் பார்க்க பரவசமூட்டுபவை. என்னை நம்பாமல் என்னிடம் கேட்காதே. நீ கேட்டதற்கு மேலும் என்னால் விஷயங்கள் சொல்ல முடியும். சொல்கிறேன் கேள்." என்று பயமுறுத்தலான பேச்சை ஆரம்பித்தார்.

ஆனால் அந்தப் பேச்சுக்கு இடையில் திருதராஷ்டிரன் புகுந்து கொண்டான்.

இந்தப் போரில் யார் யார் என்ற கணக்கு கேட்க ஆரம்பித்தான். அவை அவனுக்கு விவரமாக சொல்லப்பட்டன.

பாண்டவர்களுடைய யுத்த முறையைச் சொல்ல, திருதராஷ்டிரனை பயம் கவ்வியது. என் பிள்ளைகள் எனக்கு இல்லையென்றே ஆகி விட்டார்கள் என்று புலம்பத்துவங்கினான். ஆனால் என் புதல்வன் துரியோதனன், யார் கத்திக் கூச்சலிட்டாலும் போரைத் தொடர்வேன் என்ற ஆத்திரத்தோடு நிற்கிறான். இதன் முடிவு என்னவென்று தெரியவில்லை என்று குழம்பினான்.

ஒரு நேரத்தில் திருதராஷ்டிரன் துரியோதனனுக்கு பக்கபலமாக இருந்தான். சூதாட்ட காலத்தில் அவன் சிரிப்பும், அங்கிகாரமும் கௌரவர்களை பெரிதாகத் தூண்டின. பாண்டவர்களுக்கு வேதனை அளித்தன. ஆனால் அதே திருதராஷ்டிரன் நிலைமை தடுமாறி துரியோதனனுக்கு எதிரான கருத்துக்களைச் சொல்லத் துவங்குகிறான். இது துரியோதனன் செய்த பாபம்.

துரியோதனன் கடுகடுப்பான குரலில் திருதராஷ்டிரனை நோக்கிப் பேசினான். “பாண்டவர்களும், கௌரவர்களும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள். இருவரும் பூமியிலே மானுடராய் இருப்பவர்கள். பிறகு பாண்டவர்கள் மட்டும்தான் வெற்றியடைவார்கள் என்று ஒரு கொள்கையை எப்படி அமைத்துக் கொள்கிறீர்கள்? பீஷ்மர், துரோணாச்சியார், கிருபாச்சாரியார், கர்ணன், ஜெய்த்ரதன், சோமதத்தன், அஸ்வத்தாமா, விவிம்சதி, சலன், விகர்ணன், குருமித்ரன் ஆகிய அத்தனை தேஜஸ்விகளும் பெரிய வில்லாளிகளாவர். எனக்காக பாண்டவர்களுக்கு துன்பம் செய்வதில் வல்லவர்கள். பாண்டவர்கள் பக்கத்து வீரர்கள் இவர்களை கண் உயர்த்தி பார்க்கும் யோக்கியதையை கூட அடையவில்லை. சூதாட்டமல்ல அதற்கு முன்பே எனக்கு இருந்த கோபம் இன்னும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த கோபத்துடன் நான் தனியாகவே பாண்டவர்களோடு போர் புரியும் வல்லமை கொண்டவன்.”

திருதராஷ்டிரன் இடைமறித்தான். “என் மகன் பைத்தியக்காரனைப் போல பேசகிறான். இவன் வல்லவன் என்று உயர்த்தி சொல்லுகின்ற பீஷ்மர் எவ்வளவு அமைதியாக அடக்கமாக இருக்கிறார். பீஷ்மருக்கு மகாத்மாக்களோடு செய்யப்படும் போர் பிடிக்கவில்லை. அது துரியோதனனுக்குப் புரியவில்லை. எனக்கு ஒரு கேள்வி. உண்மையில் இந்தப் போரை யார் தூண்டி விடுகிறார்கள். போர் செய்யும் உபதேசங்களை பாண்டவர்களுக்கு யார் சொல்லுகிறார்கள்?”

“த்ருஷ்டத்யும்னன் சொல்கிறான். அவன்தான் அர்ஜுனா நாம் ஜெயிப்போம் போர் துவங்கு என்கிறான். துரியோதனனையும், கர்ணனையும் அழிக்க வேண்டும் என்ற வெறி த்ருஷ்டத்யும்னனுக்கு அதிகம் இருக்கிறது. யுதிஷ்டரிடம் ராஜ்யத்தை ஒப்படைப்பது மட்டுமல்ல. அர்ஜுனனிடமும் பீமனிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும் என்கிறான். பஞ்ச பாண்டவர்களுக்கு த்ருஷ்டத்யும்னன் பேச்சால் சூடேறுகிறது.” என்று சஞ்சயன் கூற, மறுபடியும் திருதராஷ்டிரன் கை உயர்த்தினான்.

“நீ வாழ்வதற்கு பாதி ராஜ்யம் போதுமானது. மீதி பாகத்தை பாண்டவர்களுக்கு கொடுத்து விடு. த்ருஷ்டத்யும்னன் போர் வெறியை தூண்டுவதாக சொல்லப்படுகிறதே, நம் பக்கம் அப்படி இருப்பவர் யார்? பாண்டவர்கள் ஒருவருக்கொருவர் தூண்டிவிட்டுக்கொள்ளவில்லை. அவர்களைச் சுற்றி வெளிவட்டத்தில் இருந்த உறவுகளே இதை அடிக்கடி செய்கிறார்கள். ஆனால் நம் பக்கம் நானோ, பீஷ்மரோ, துரோணாச்சாரியரோ, கிருபாச்சாரியரோ, அஸ்வத்தாமனோ போர் செய்ய விரும்பவில்லை. போர் வந்தால் ஈடுபடுவதற்கும் போரை விரும்புவதற்கும் வித்தியாசம் உண்டு. உன் புத்தியோடு ஐக்கியமாகி இருக்கிற துச்சாதனன், கர்ணன், சகுனியே உன்னை போர் புரியத் தூண்டுகிறார்கள். மற்றவர் ஏன் தூண்டவில்லை என்று நீ யோசிக்கவில்லை. பெண் மீது கொண்ட மோகாவேசத்தை விட போர் மீது கொண்ட மோகாவேசம் மிகக்கொடியது.”

துரியோதனன் மனநிலை தெளிவாக இல்லை என்பதை அவனுடைய அடுத்த பேச்சு வர்ணிக்கிறது.

(தொடரும்)

மகாபாரதம்

93

“தந்தையே, பீஷ்மரையும், துரோணரையும், கிருபாச்சாரியரையும், அஸ்வத்தாமனையும், சஞ்சயனையும் நம்பி இந்தப் போரை துவங்கவில்லை. நானும் கர்ணனுமே இந்த ரண யக்ஞத்தை விஸ்தாரமாக செய்வோம். யுதிஷ்டிரரை பலி பசுவாகச் செய்வோம். இதில் என் தேரே அக்னி குண்டமாகும். வாளே நெய் ஊற்றும் கரண்டியாகும். கதை துணைக் கரண்டியாகும். இந்த யாகத்தின் மான் தோல்கள் என் கவசங்களாகும். தேரை இழுக்கும் நான்கு குதிரைகளும் நான்கு ஹோதாக்களாகும். பாணங்கள் அக்னியில் போடும் விறகுகளாகும். அதில் கிடைக்கும் என் புகழே ஹவிஸாகும்.”

துரியோதனன் தன் போரை ஒரு புனிதப் போராக, வேள்வியாக விவரிக்க சபை வாயடைத்துப் போயிற்று.

“நான் வெகு நிச்சயம் இந்தப் போரில் ஜெயித்து என் ராஜ்ஜியத்தின் அரசனாக முடிசூடுவேன். இல்லையெனில் வேறு என்ன நடந்து விடப் போகிறது. நான் இறந்து பாண்டவர்கள் முடிசூடுவார்கள். இரண்டில் ஒன்று நடக்கப்போகிறது. என் வாழ்க்கை, ராஜ்யம், செல்வம் அனைத்தையும் நான் என் இறப்பால் இழக்க முடியும். ஆனால் ஐந்து ஊசி முனை அளவு கூட நிலத்தை நான் பாண்டவர்களுக்கு தர முடியாது. இது உறுதி” என்று கர்ஜனை செய்தான்.

சபை துவண்டு ஆசனத்தில் சரிந்து அமர்ந்தது. திருதராஷ்டிரன் உடம்பு நடுங்கினான். “துரியோதனா, நான் உன்னை துறந்து விட்டேன்” என்று உரத்த குரலில் கூறினான்.

“உங்கள் அனைவருக்காகவும் துயரப்படுகிறேன். எனக்கு வேறு வழியில்லை. வேட்டையாடுவதில் வல்லமையான புலி ருரு என்ற மான் கூட்டத்தில் நுழைந்து பல மான்களைக் கொன்று போடுவது போல கௌரவப் படை, பாண்டவர்களால் கொல்லப்படப் போகிறது. மனிதர்கள் மட்டுமல்ல, யானைகளும், குதிரைகளும், பெரிய கோவேறு கழுதைகளும் கொல்லப்பட்டு தேர்களும், ஆயுதங்களும் குவியலாக கிடக்கின்ற காட்சியை காண்கிறேன். நான் இப்பொழுது சொல்வது நேரில் நடக்கும் பொழுதுதான் நீ அதை பார்க்கும் பொழுதுதான் பாண்டவர்களின் வீரம் உனக்குப் புலப்படும். சஞ்சயா, சஞ்சயா நீ எங்கே இருக்கிறாய்?” அந்த குருட்டு





அனைவரிடமும் நட்பு கொள்பவன்

கோபம் கொள்வதில்லை!

அரசன் தடுமாறினான். "நீ கிருஷ்ணனையும், அர்ஜுனனையும் எங்கு சந்தித்தாய்? ஸ்ரீகிருஷ்ணர் என்ன சொன்னார்? சொல்ல வேண்டியது எது என்று முன் கூட்டியே தீர்மானித்து எதையும் விடுபடாது சொல்."

திருதராஷ்டிரன் கேட்டதற்கிணங்க சஞ்சயன் பேசத் துவங்கினார். பேசிப் பேசித்தான் இவர்கள் பயத்தை அதிகரிக்க முடியும் என்பதால் சஞ்சயன் பேசத் துவங்கினார்.

"வீரம் மிக்க ஸ்ரீகிருஷ்ணரும், அர்ஜுனனும் ஒரு பெரிய அந்தப்புர மாடத்தில் இருந்தார்கள். அங்கே போவதற்கு நகுல- சகாதேவருக்கோ, பீமருக்கோ, யுதிஷ்டிரருக்கோ அனுமதியில்லை. ஆனால் நான் அனுமதிக்கப்பட்டேன். ஸ்ரீகிருஷ்ணர் நீண்ட ஒற்றை ஆசனத்தில் முதுகுக்கு மெத்தைகள் வைத்து சாய்ந்திருந்தார். அவர் கால்களை நாண் ஏற்றித் தழும்பான விரல்களால் அர்ஜுனன் தடவிக் கொண்டிருந்தான். ஆசனத்தில் இரண்டு பக்கங்களிலும் கால்கள் போட்டு அமர்ந்திருக்க ஒரு பக்கம் திரௌபதியும், மறு பக்கம் சத்யபாமாவும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் இனிமையான பானத்தை பருகியபடி இருந்தார்கள். நெற்றியிலும், முதுகிலும் சந்தனம் பூசியிருந்தார்கள். மலர் மாலைகள் தரித்து மிக உல்லாசமான சூழ்நிலையில் இருந்தார்கள். அர்ஜுனன் எனக்கு உட்கார ஆசனம் காட்டினான். நான் அதை கைகளால் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு கை கூப்பி வணங்கியபடியே நின்றிருந்தேன். என் பணிவை ஸ்ரீகிருஷ்ணருக்கு அர்ஜுனன் கண்களால் ஜாடை காட்டினான். ஸ்ரீகிருஷ்ணர் நிதானமாக இனிமையான குரலில் பேச ஆரம்பித்தார். நம் பக்கம் இருக்கின்ற பெரியவர்களையும் உங்களையும் விசாரித்தார். பேசப் பேச கிருஷ்ணருடைய குரல் பயங்கர ரூபத்தில் வெளி வந்தது. அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் முக்கியமான அர்த்தத்தோடு என் காதில் விழுந்தது.

பாலகுமாரன்

சஞ்சயா, கௌரவர்களை புண்ணிய காரியங்களில் ஈடுபடச் சொல். அந்தணர்களுக்கு தானம் தரச் சொல். வேத விஷயங்களை செவிமடுக்கச் சொல். நல்லவர்களுக்கு செல்வத்தை அள்ளித் தரச் சொல். அவர்களை நேசிக்கிறவர்களுக்கு நல்ல உபகாரம் செய்யச் சொல். பிள்ளைகளிடம் பாசத்தை வர்ஷிக்கச் சொல். ஏனெனில் பாண்டவர்கள் கௌரவர்களை வெல்லத் தயாராக இருக்கிறார்கள். உங்கள் வாழ்வின் முடிவு வந்து விட்டது. இவைகளாவது உங்களை காப்பாற்றப் படட்டும்.

இங்கே என் கோபம் என்ன என்று கேட்கிறாயா சஞ்சயா, திரௌபதியின் வஸ்திரத்தை துச்சாதனன் இழுத்தபோது நான் அஸ்தினாபுரத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தேன். அப்பொழுது திரௌபதி கோவிந்தா கோவிந்தா என்று என்னை துயரத்தோடு அழைத்தாள். அவள் அழைத்த அந்தக் குரல் என்னிடம் இன்னும் இருக்கிறது. அவளை அந்த இக்கட்டிலிருந்து சிறிதும் காயப்படாதவாறு தடுக்கப்படாத கடன் என் உள்ளத்தில் இருக்கிறது. இந்த வேதனை என் உள்ளத்திலிருந்து விலகாது. அர்ஜுனன் என் நண்பன். திரௌபதி அவன் மனைவி. இதற்குப் பிறகும் நான் எப்படி மௌனமாக இருப்பது. அர்ஜுனனுடையபகை என் பகை. ஆனால் இந்த அர்ஜுனனை ஜெயிக்க முடியுமா. அப்படி ஜெயிக்க முடிந்தவன் இந்த பூமியை கையால் தூக்க முடிந்தவனாக இருப்பான். ஆனால் அப்படிப்பட்ட வீரர்கள் யாரும் என் கண்ணுக்குத் தெரியவில்லை. விராட நகரத்து போரை கௌரவ வீரர்களே புகழ்ந்து புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். பகைவரே புகழும் வீரன் அர்ஜுனன். கவலையின்மை, சுறுசுறுப்பு, மனோ தைரியம் ஆகிய நல்குணங்கள் அர்ஜுனனிடம் அதிகமாக இருக்கின்றன. கருமேகம் மழை பெய்வது போல காண்டீபத்திலிருந்து கிளம்புகின்ற பாணங்களுக்கு கௌரவர்களில் பதில் சொல்வாரில்லை. கௌரவர்கள் தோற்பது உறுதி என்று சீற்றத்துடன் சொன்னார்."

ஸ்ரீகிருஷ்ணரே அவ்விதம் சொல்லி விட்டார் என்று திருதராஷ்டிரன் கலக்கமடைந்தார்.

"போர் வேண்டாம் சமாதானத்திற்குப் போ. நீ யாரை உன் பக்கம் இருக்கிறார்கள் என்று நம்புகிறாயோ அவர்கள் மனம் சுணங்கும் வண்ணம் நானும் கர்ணனுமே பாண்டவர்களை ஒழித்து விடுவோம் என்று பேசுகிறாய். தெளிவற்றவனாக இருக்கிறாய். எங்கு என்ன பேசக் கூடாதோ அதை பேசித் தொலைக்கிறாய்'' என்று சிடுசிடுப்பாக பேசினார்.

இந்தப் பேச்சால் துரியோதனனுக்கு கடுங் கோபம் ஏற்பட்டது. தன் படையினரையே பிரித்துப் போடுவதை உணர முடிந்தது.

"குந்தியின் புதல்வர்களை வெல்வது நிகழ முடியாததாய் கருதுகிறீர்கள். அவர்களுக்கு தேவர்கள் உதவி செய்கிறார்கள் என்று பேசுகிறீர்கள். தேவர்களுக்கு காம குரோத லோப துவேஷ குணங்கள் இல்லை. அவர்கள் சமநிலையில் இருப்பவர்கள். பாண்டவர்களுக்கு மட்டுமே உதவி செய்வேன் என்ற எந்த பிரதிஞ்ஞையும் செய்யவில்லை. தேவர்களால் மிகப் பெரிய தேஜஸ்ஸை பெற்றது பாண்டவர்கள் மட்டும்தானா. என்னையும் அவர்களில் ஒருவனாக சேர்த்துக் கொள்ளுங்கள். எனக்கும் மந்திர பலம் உண்டு. உடைந்து

விழும் மலைச் சிகரங்களையும் நான் என் மந்திர பலத்தால் தூக்கி நிறுத்துவேன். பெரும் கல் மழை புயல் ஏற்பட்டாலும் அதை மந்திர பலத்தால் தடுத்து நிறுத்த முடியும். என்னால் ஸ்தம்பிக்கப்பட செய்த நீரின் மேலே தேரும் காலாட்படையும் நடத்த முடியும். எனக்கும் தெய்வ அசுர சக்தி உண்டு. இதை நீங்கள் மனதில் கொள்ளவேயில்லை. என்னுடைய தேசத்தில் பாம்பு, தேள் போன்ற விஷ ஜந்துக்கள் இல்லை. அவை மந்திரங்களால் கட்டப்பட்டிருக்கின்றன. என் தேசத்தில் மழை நன்றாகப் பெய்கிறது. அக்னி அளவோடு எரிகிறது. பூமியில் பயிர்கள் செழிப்பாக வளர்கின்றன. என் மக்கள் அனைவரும் தர்மத்தில் மூழ்கியிருக்கிறார்கள்.

பாண்டவர்கள் பக்கம் தேவர்கள் இருக்கிறார்கள் என்கிற உங்கள் அலறல் உண்மையானால் பன்னிரெண்டு வருடம் ஏன் நாய்படாத பாடு பட்டார்கள். தேவர்கள் அவர்களுக்கு என்ன உதவி செய்தார்கள். நீங்கள் என்னை மகன் என்றுதான் பார்க்கிறீர்கள். நான் சத்தியசந்தனாக இருக்கிறேன். நான் ஒரு வார்த்தை வாயால் கூறி அது பொய்யானதில்லை. இதனால் மக்கள் என்னை சத்தியவான் என்று சொல்கிறார்கள். நான் பேசுவது தற்புகழ்ச்சியல்ல. என்னுடைய பெருமை உங்கள் கண்களுக்கு, இங்குள்ளோர் கண்களுக்கு முன்னால் இருக்கிறது. அதை இவர்கள் சொல்ல மறுக்கிறார்கள். நதிகள் பிரிந்து பிரிந்து கடலில் வந்து கலப்பது போல ஸ்ரீகிருஷ்ணரோடு இந்த பஞ்சபாண்டவர்கள் பல கிளைகளாய்ப் பிரிந்து என்னிடம் சரணடையப் போகிறார்கள். என் அறிவு உத்தமமானது. என் தேஜஸ் உன்னதமானது. என் வித்தை மிகப் பெரியது. என் முயற்சி மிகச்சிறந்தது.

என் சபையினரை எனக்கு எதிராகத் தூண்டிவிட வேண்டாம். இவர்களை நான் பெரிதும் மதிக்கிறேன். அதனாலேயே இந்த சபையில் தகுந்த முறையில் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். சஞ்சயன் சொல்வது மட்டுமே உண்மை என்று இங்குள்ளோர் நம்பவில்லை. கேள்வியோடுதான் இருக்கிறார்கள். கேள்வியோடு இருக்க வேண்டிய நீங்கள் அதை புறக்கணித்து விட்டு எனக்கு எதிராக திரும்புகிறீர்கள். எனவே இனி கவனமாகப் பேசுங்கள்.”

துரியோதனனுடைய இந்த கோபாவேசத்தால் கௌரவ சபை திடுக்கிட்டு நிமிர்ந்தது. உண்மையில் யார் வலிமையுள்ளவர்கள் என்று நல்லவர்களுக்கே அனுமானிப்பது கடினம்.

துரியோதனன் வீராவேசமாகப் பேசுவது கேட்டு சபை திகைப்பதை பார்த்த கர்ணன் தன் குரலை உயர்த்தினான்.

“நான் அந்தணனிடம் சொல்ல பரசுராமரிடம் வில் வித்தை கற்றது உண்மைதான். அதனால் சாபம் பெற்றது வாஸ்தவம்தான். ஆனால் கருணை மிகுந்த அந்த குருநாதரால் எனக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை. அந்த பிரம்மாஸ்திரம் என்னிடமே இருக்கிறது. நான் துரியோதனனிடம் இருக்கிறேன். பாண்டவர்களை ஓட ஓட விரட்டுகின்ற சக்தி என்னிடம் இருக்கிறது. பீஷ்மரையும், துரோணரையும், கிருபரையும் துரியோதனன் தன்னை சூழ நிற்க வைத்துக் கொள்ளட்டும். நான் தனி ஒருவனாகவே என் படைகளுடன் முன்னேறி பாண்டவர்களை வதம் செய்வேன். இந்த யுத்தத்தில் பாரம் முழுவதும் என் மீதே இருக்கட்டும்.

பீஷ்மர் காலை உதைத்து கர்ணனை அதட்டினார்.

“என்ன பேச்சு இது. யுத்தத்தின் பாரம் முழுவதும் நீ சுமக்கப் போகிறாயா, அப்படியானால் நீ தோற்றுப் போனால் கௌரவர்கள் தோற்றுப் போனது போல் வருமே, அதை யோசித்தாயா. வில்லாளிகள் நிறைந்த ஒரு பெரிய சபை முன்பு உன்னை மட்டுமே பேசி பெருமை அடித்துக் கொள்கிறாய். ஸ்ரீகிருஷ்ணருக்கு உதவியாக அர்ஜுனன் காண்டப வனத்தை எரித்தது மக்களிடையே இன்னும் பேசப்பட்டு வருகிறது. தேவேஸ்வரனான மகேஸ்வரன் உனக்கு சக்தி அளித்திருக்கிறார். அது விஷ்ணுவின் சக்கரத்தால் சின்னாபின்னமாக்கப்படும். பாணாசுரனையும் பௌமாஸுரனையும் வதைத்த ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனை காப்பாற்றுகிறார். வெறுமே தேர் ஓட்டுகிறார் என்று நீங்கள் நினைத்தால் அது பிசகு.”

கர்ணன் கை தட்டி எழுந்தான்.

“இந்த கிழவர் இவ்வளவு பேசிய பிறகு நான் இந்த சபையிலே இருப்பதில் அர்த்தமில்லை. இந்தக் கிழவர் உயிரோடு இருக்கும் வரை இவர் இருக்கின்ற சபைக்கு வரமாட்டேன். ஏ பீஷ்மரே, நீங்கள் அடங்கி அமைதியான பிறகு என் பிரபாவத்தை இந்த உலகம் காணும். துரியோதனா, உனக்கு வணக்கம்.”

அவன் விடைபெற்று வெளியே போனான். சபை சலசலத்தது.

“துரியோதனா, என்ன வேடிக்கை இது. இந்த நேரத்தில் என்னை எதிர்த்து சபையை விட்டு வெளியே போகிறவன், எப்படி யுத்தத்தின் பெரும் பாரத்தை சுமக்க முடியும். பரசுராமரிடம் பொய் சொல்லி பிரம்மாஸ்திரத்தை பெற்ற போதே இந்த கர்ணனின் கல்வியும், தவமும் அழிந்து விட்டது.”

கர்ணனின் வெளிநடப்பால் துரியோதனன் வருத்தமடைந்தான்.

அடக்கமே முதன்மைக்கு சாதனம். அடக்கம் தேஜஸை பெருக்குகிறது. மனிதர்களை இம்சிக்கக் கூடாது என்று க்ஷத்திரிய ஜாதியை பிரம்மா ஸ்ருஷ்டித்திருக்கிறார். க்ஷத்திரியர்களுடைய முதல் குணம் அடக்கம். அடங்கிய மனிதன் காமம், லோபம், கர்வம், கோபம் உறக்கம், தற்புகழ்ச்சி, மானம், அசூயை, லோபம் ஆகிய குணங்களை நெருங்க விடுவதில்லை. புலனடக்கம் உள்ளவன் கம்பீரமாக இருக்கிறான். அனைவரிடமும்

நட்புடன் இருக்க விரும்புபவனுக்கு கோபம் கிளறுவதில்லை. அவன் சமநிலையில் காரியங்களைப் பார்க்கிறான். முன்பு பெரியவர்கள் ஒரு கதை சொல்லுவார்கள்.

ஒரு சமயம் ஒரு காட்டில் பறவைகளைக் கொல்பவன் பெரிதாய் வலை விரித்திருந்தான். தானியங்களை வீசியிருந்தான். பறவைகள் ஒட்டுமொத்தமாய் வந்து தானியங்களை கொத்த முயன்று வலைகளில் சிக்கிக் கொண்டன. மடித்து எடுக்க பூமியிலிருந்து முனையைப் பிடுங்கியதும் அந்தப் பறவைகள் வானத்தில் உயரே பறந்தன. அந்தப் பறவைகள் எங்கெல்லாம் ஓடுகிறதோ அங்கெல்லாம் காலால் நடந்து வேடன் பின்தொடர்ந்தான். அதை ஒரு முனிவர் கண்டு வருத்தமுற்றார். சிறகடித்து மலையோடு பறக்கும் அந்தப் பறவைகளை நடந்து போய் எப்படி பிடிக்கப் போகிறாய். எத்தனை வேதனை உனக்கு. அதற்கு அந்த வேடன் பதில் சொன்னான்.

இந்தப் பறவைகள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டு பறக்க முடியாது என்று சபதம் எடுத்து தரையில் வந்து விழும். அப்பொழுது நான் பறந்ததை பறக்காததை பாதிப் பறந்ததை எல்லாம் ஒரே வலையில் சுருட்டி எடுத்து விடுவேன்.

அறிவற்ற அந்தப் பறவைகள் தங்களுக்குள் சண்டையிட்டு பூமியில் வந்து விழுந்தன. வேடன் அவைகளை கைப்பற்றி விட்டான். இந்தப் பறவைகளைப் போலத்தான் குடும்பத்து மக்கள் செல்வத்திற்காக தங்களுக்குள் சண்டையிடுகிறார்கள். ஒட்டுமொத்தமாய் சீரழிகிறார்கள். ஒருவனை அழிக்க பகைவர்கள் தேவையில்லை. அவன் குடும்பத்தில் பிணக்குற்றவனே போதும். ஒன்றாக அமர்ந்து உண்ணுதல், தங்களுக்குள் அன்போடு பேசுதல், ஒருவர் மற்றவரின் சுக துக்கத்தை கேட்டல், பரஸ்பர வேலைகளில் அக்கறை கொள்ளுதல் முதலியவை குடும்பத்து நட்பை வளர்க்கும்.

முன்பொரு சமயம் கந்தமான பர்வதத்தில் முனிவர்கள் மிகப்பெரிய யாகங்களை நடத்தினார்கள். அந்த மலை முழுவதும் ஔஷதங்களின் வாசனை மிகுந்தது. கடக்க முடியாத ஒரு குகையின் விளிம்பில் பெரிய பானை போல தேனடை காணப்பட்டது. அதிலிருந்து தேனை உண்டவர் எவராயினும் சாகாவரம் பெறுவர். வாலிப வரம் பெறுவர் என்று சொல்லப்பட்டது. அதை அடைய அந்த மலையின் வேடுவர்கள் முயற்சி செய்தார்கள். கடும் விஷமுள்ள பாம்புகள் அந்த தேனடையைக் காத்து வந்தன. வழிநடையில் படுத்துக் கிடந்தன. தாண்டி வந்த வேடுவர்களை அவைகள் கொத்திக் கொன்றன. வேடுவர் குலமே அழிந்து விட்டது. அவர்களைப் போல் துரியோதனன் அந்த தேனை மட்டுமே பார்க்கிறான். வழியில் ஏற்படும் துன்பங்களும் மரணம் சம்பவிக்கும் என்ற நிலையும் தேன் எடுப்பவனுக்கு புரிவதில்லை. துரியோதனன் தன்னை அரசகுமாரனாக வீரனாக பார்க்கிறான். ஆனால் அர்ஜுனன் யார் என்று ஒரு எடை அவனிடமில்லை. அர்ஜுனனை புறக்கணித்து விட்டு வெற்றி மட்டுமே தனக்கு கிடைக்கும் என்று நினைப்பவனிடம் என்ன பேசுவது."

உண்மை நிலையை விதுரர் பேச்சில் உணர்ந்து கொண்ட அந்த கௌரவ சபை திகைத்து பேசாது அமர்ந்திருந்தது.

அரசன் யுத்தம் வேண்டுமென்கிறான். அவன் தோழன் தூண்டி விடுகிறான். மந்திரி பிரதானிகள் அச்சமடைகிறார்கள். நல்லவர்கள் ஜெயிக்க இயலாது என்கிறார்கள். ஒரு தேசத்தின் இந்த நிலை எவ்வளவு பாபகரமானது. இது சாதாரண மக்களின் தலையிலும் அல்லவா விடியும்.

துரியோதனனை நோக்கி திருதராஷ்டிரன் பேசத் துவங்கினார்.

"பீஷ்மர் உன் பிதா மகன் உன் நன்மை விரும்புகிறவர். உன் பக்கம் உறுதியாக இருப்பவர். அவரை சகித்துக் கொள்ள கற்றுக் கொள். கர்ணனை அவர் எதிர்ப்பது உன்னை இழிவுபடுத்துவதற்கு அல்ல. கர்ணனின் யோக்கியதையை உனக்கு சொல்ல முயற்சிக்கிறார். இந்த சபையில் உள்ள அத்தனை பேரும் தர்மவான்கள். உன்னுடைய நன்மையை விரும்புகிறவர்கள். ஒவ்வொரு முறை ஒவ்வொருவர் பேசும்பொழுதும் விராட தேசத்தில் உங்களை எதிர்த்து தனி ஒருவனாக அர்ஜுனன் செய்த போரே பாராட்டப்படுகிறது. அர்ஜுனனுடைய வில் வித்தையை விட அவனுடைய பிரகாசமான கோபத்தை நான் காண்கிறேன். பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொள்வதில் உனக்கு வெட்கம் ஏதும் வேண்டாம். அவர்கள் உனக்கு சகோதரர்கள். அவர்கள் செல்வத்தை அவர்களுக்கு அளித்து

சமாதானம் செய்து கொள்."

திருதராஷ்டிரன் சமாதானம் சொல்ல, அதை கண்டு சபை மௌனமாக கேட்டுக் கொண்டிருப்பதா. அதைக் கேட்டு சஞ்சயன் எழுந்தார்.

"அர்ஜுனன் கடைசியாக சொன்ன வார்த்தைகளை உங்களுக்கு மறுபடியும் சொல்கிறேன்.

யுதிஷ்டிரருக்கு அவருக்குண்டான ராஜ்ஜியத்தை தராது போனால் என் கூரிய பாணங்களால் கௌரவர்கள் அத்தனை பேரையும் நான் கொன்று குவிப்பேன். அவர்களுடைய எல்லாவித படைகளோடும் அவர்களை அமங்களவமான திசைக்கு அனுப்பி விடுவேன். மன்னா, அர்ஜுனன் இதை மிகக் கோபமாகக் கூறினான். நான் மனதில் அச்சத்தோடு ஸ்ரீகிருஷ்ணரையும், அர்ஜுனனையும் வணங்கி வெளியே வந்து விட்டேன்."

வரப்போகும் போரின் குரூரத்தை உணர்ந்த அந்த சபை, இனி பேசுவதற்கு ஒன்றுமேயில்லை என்று உணர்ந்த அந்த சபை மௌனமாக அமர்ந்திருந்தது. மெல்ல மெல்ல பலர் சபையிலிருந்து வெளியேறினார்கள். முக்கியமான பதவியில் இருந்தவர்கள் இனி இங்கு பேசிப் பிரயோஜனமில்லை என்பது போல அமர்ந்திருந்தார்கள். ஆனால் திருதராஷ்டிரன் பேச்சைத் துவங்கினார்.

"இந்த இரண்டு பக்கத்து படைகளின் பலத்தைப் பற்றி எனக்கு கூறு. யார் பக்கம் துயரம் அதிகமாக இருக்கும், யார் தோற்கக் கூடும் என்று சொல்" என்று வினவினார். போர் வந்து விட்டது இனி அதை தவிர்க்க முடியாது என்று உணர்ந்த விதமாய் பேசினார்.

"இல்லை மன்னா நான் தொடர்ந்து உங்களிடம் பேச முடியாது. தனிமையில் இருக்கின்ற உங்களிடம் இம்மாதிரி விஷயங்களைச் சொன்னால் அந்த உண்மைகளை ஏற்றுக் கொள்ளாத மனநிலையில் என் பேச்சில் குற்றம் காணுவீர். உங்கள் தந்தையான வியாஸரையும், உங்கள் மகாராணியான காந்தாரியையும் இந்த சபைக்கு வரவழையுங்கள். அவர்கள் உங்கள் குற்றப்பார்வையை உங்களுக்கு எடுத்துக் கூறி தெளிவுபடுத்துவார்கள். அப்பொழுது இது தொடர்பான மேலும் சில விஷயங்களை நான் கூறுவேன்."

உறுதியாக சஞ்சயன் இதைச் சொன்னதும், வியாஸரும், காந்தாரியும் அந்த சபைக்கு வந்தார்கள். வியாஸர் வெகு எளிதில் நிலைமையை புரிந்து கொண்டார்.

"சஞ்சயா, இன்னும் அதிகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்பில் தான் திருதராஷ்டிரன் உன்னிடம் கேள்வி கேட்கிறான். ஸ்ரீ கிருஷ்ணர், அர்ஜுனன் விஷயத்தில் நீ பார்த்ததையும், கேட்டதையும் தாண்டி நீ சொல்ல விரும்புவது அனைத்தையும் சொல். திருதராஷ்டிரா, பாண்டவர்களைப் பற்றி கௌரவர்களுக்குத் தெரியவில்லை. பொறாமையின் காரணமாக குறைத்து மதிப்பிடுகிறார்கள். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரையும் இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சதுர்புஜரும், சக்ரதாரியுமான அவரை கௌரவர்கள் குறைத்து மதிப்பிடுகிறார்கள். அவர் போரில் யாரையெல்லாம் கொன்றார் என்பதை சௌகரியமாக மறந்து விட்டு யாதவ குல மன்னன் என்பதாய்ப் பேசுகிறார்கள். அவர் சக்கரத்தின் நடுப்பகுதி மட்டும் மூன்றரை அடி அளவு விஸ்தாரமுடையது. நரகாசுரன், சம்பகாசுரன், கம்சன், சிசுபாலன் போன்ற பலம் பொருந்தியவர்களை விளையாட்டாக அழித்தார். ஸ்ரீகிருஷ்ணருடைய பலம் மிகப் பெரியது. தன் மன சங்கல்பத்தாலேயே இந்த உலகம் முழுவதையும் அவரால் அழிக்க முடியும்.

எந்தப் பக்கம் சத்தியம், தர்மம், வெட்கம், எளிமை இருக்கிறதோ அந்தப் பக்கம் ஸ்ரீகிருஷ்ணர் இருக்கிறார். எங்கு ஸ்ரீகிருஷ்ணர் இருக்கிறாரோ அங்குதான் வெற்றி இருக்கிறது.

பாண்டவர்களை வைத்து அதர்ம சொரூபிகளான, முட்டாள்களான உங்கள் புதல்வர்களை, அழிக்க விரும்புகின்றார். உலகத்தின் தர்மத்தை நிலைநாட்டுபவர் அவரே. அவரே உலகத்தின் ஸ்வாமி. அவர் ஒருவரே இங்கு ஆள்பவர். தன்னுடைய மாயையின் பிரபாவத்தால் உலக மக்கள் அனைவரின் மோகத்தை விதம் விதமாக தூண்டுகிறார். எவர் அவரை சரணடைந்தார்களோ அவர்களை மோகிக்கச் செய்வதில்லை."

ஆனால் திருதராஷ்டிரன் கேள்விகளை நிறுத்தவில்லை. எத்தனை விதமாகச் சொன்னாலும் உண்மையை அறியும் அறிவு போதவில்லை. "எதை வைத்துக் கொண்டு நீ கிருஷ்ணனை ஸ்வாமி என்று சொல்கிறாய். உனக்குத் தெரிந்த விஷயம் ஏன் எனக்குத் தெரியவில்லை?" என்று சிறு பிள்ளையைப் போல் வினவினார்.

'கடவுள் இருக்கிறார் என்று சொல்கிறாயே, கடவுளைக் காட்டு, அப்பொழுது தான் நம்புவேன்' என்று உலகில் பேசுகிற மனிதர் போல அந்த மன்னன் பேசினான்.

"மன்னா, உங்களுக்கு தத்துவ ஞானம் கிடைக்கவில்லை. தத்துவ ஞானம் கிடைக்காத மனிதன் அறியாமை என்ற இருளில் நாசமடைந்தவன். நான் கிருஷ்ணருடைய உண்மையான சொரூபத்தை அறிந்து விட்டதாய் சொல்ல முடியாது. என் ஞான திருஷ்டியாலேயே அவரை அறிகிறேன்."

(தொடரும்)

லட்சியத்தை அடைய புலன்களை

அடக்க வேண்டும்!

திருதராஷ்டிரன் மிகுந்த ஆவலுடன் கேட்டார்: "என்ன அது? எதனால் ஸ்ரீகிருஷ்ண சொரூபத்தை நீ அறிய முடிகிறது?"

"மன்னா நான் மாயையில் வசப்படுவதில்லை. எல்லா விவகாரங்களிலும் உண்மையைத் தேடுகிறேன். ஸ்ரீகிருஷ்ணர் மீது உள்ள பக்தியாலேயே இந்த நிலை எனக்கு ஏற்பட்டது. சாஸ்திரங்கள் சொல்லுகின்ற வசனங்களால் ஸ்ரீகிருஷ்ணருடைய திவ்ய சொரூபத்தை காண்கிறேன்."

இந்தப் பேச்சு திருதராஷ்டிரனுக்கு வியப்பை ஏற்படுத்தியது. "துரியோதனா, நம்முடைய சஞ்சயன் நம்மிடம் பொய் சொல்வானா, நம்முடைய நம்பிக்கைக்கு பாத்திரமானவன் இல்லையா, சஞ்சயன் சொல்வது உண்மையென்றே தோன்றுகிறது. போர் புரிவது பாண்டவர்கள் அல்ல. ஸ்ரீகிருஷ்ணன். அவருக்கும் நமக்கும் என்ன பகை? நீ ஸ்ரீகிருஷ்ணரை சரணடைந்து விடு."

"சஞ்சயன் உண்மையானவர் என்பதை அறிவேன்" துரியோதனன் நிதானமாகப் பேசினான். "அவர் சொல்படி ஸ்ரீகிருஷ்ணர் சாட்சாத் பகவான் அவர் உலகம் முழுவதையும் அழித்து விடுவார் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவர் தன்னை அர்ஜுனனின் நண்பன் என்று சொல்கிறார். அர்ஜுனன் எனக்கு எதிரி. அதனால் ஸ்ரீகிருஷ்ணரை சரணடைய மாட்டேன்."

"காந்தாரி," திருதராஷ்டிரன் அலறினான். "உன் பிள்ளைக்கு புத்தி சொல். அவன் நரகத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறான். யார் தடுத்தாலும் அழிவை நோக்கி ஓடுகிறான்."

காந்தாரி மிருதுவாகவும் அமைதியாகவும் பேசத் துவங்கினாள். "ஐஸ்வர்யத்தை விரும்பி பெரியவர்களின் பேச்சை முட்டாள்தனமாக மறுதலிக்கிறாய் துரியோதனா. இதற்காக தந்தையையும் தாயையும் நீ தியாகம் செய்வாய். பீமசேனனுடைய கதையால் அடித்து கொல்லப்படும் பொழுது உனக்கு உன் தந்தையின் பேச்சு ஞாபகம் வரும்."

வியாஸர் தன் பேச்சை துவக்கினார்: "திருதராஷ்டிர மன்னா, நீயும் ஸ்ரீகிருஷ்ணருக்கு பிரியமானவனே, அதனால்தான் சஞ்சயன் போன்ற தூதுவன் கிடைத்திருக்கிறான். மனதை ஒருமுகப்படுத்தி இவ்வளவு யோசிக்க வைக்கின்ற தன்மையை சஞ்சயன் உனக்கு ஏற்படுத்தியிருக்கிறான். அவன் ஸ்ரீகிருஷ்ணனை அறிந்தவன். அவர் தத்துவத்தை புரிந்தவன். எந்த ஒரு மனிதன் தன் செல்வத்தால் திருப்தியடையவில்லையோ, அவன் காமத்திற்கும், கோபத்திற்கும் பந்தப்பட்டு குருடனின் தலைமையில் செயல்படும் குருடர்களைப்போல தன்னுடைய கர்மங்களால் தூண்டப்பட்டு, எமனிடம் மாட்டிக் கொள்கிறான். ஞானிகள் செல்லும் வழியைப் பார்த்து பிறப்பு இறப்பு என்ற சம்சாரத்தை கடப்பது அவ்வளவு எளிதல்ல. பற்றற்றவனாலேயே இது செய்ய முடியும்."

"சஞ்சயா" திருதராஷ்டிரன் கை கூப்பினார். "எந்த வழியில் நான் ஸ்ரீகிருஷ்ணனை அடைய முடியும் என்று கூறு" என்று வினயத்துடன் கேட்டார்.

''மன்னா, புலன்களை

மகாபாரதம்

94



வசப்படுத்தாது இந்த விஷயத்தை அடைய முடியாது. புலன்கள்தான் கர்மாக்களை (காரியங்களை) செய்ய வைக்கின்றன. அந்தச் செயல்களின் விளைவால் காம, குரோத, லோப, மார்ச்சரியங்கள் ஏற்படுகின்றன. குற்றங்கள் மேலும் அதிகரிக்கின்றன. சக உயிர்களை இம்சை செய்யும் வெறி உண்டாகிறது. புலன்களை வெல்ல முடியாததற்கு சோம்பல் ஒரு காரணம். அறிவால் சோம்பலை விரட்ட வேண்டும். லட்சியத்தை அடைய புலன்களை அடக்க வேண்டும். அந்தணர்கள் இதை ஞானம் என்று சொல்கிறார்கள். மன்னா, புலன்களை வெல்லாது ஸ்ரீகிருஷ்ணரை அடைய முடியாது. அவர் தத்துவத்தை புரிந்து கொள்ள முடியாது."

“சஞ்சயா பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு விதவிதமான செயல்களால் பெயர்கள் உள்ளதாக கேள்விப்பட்டிருக்கிறேன். என்ன அது? அந்த வர்ணனையை எனக்குச் சொல்ல முடியுமா?” ஆவலுடன் திருதராஷ்டிரன் கேட்டார்.

“கடவுள் பக்தி என்பது பிறர் தன் அனுபவத்தைச் சொல்ல, அதன் மூலம் மற்றவருக்கு ஏற்படுவது. திறந்த மனதோடு உள்ளவர்கள் இதை விரைவாக அடைகிறார்கள். பிரபஞ்ச ரகசியத்தைச் சொல்லும் கடவுள் தத்துவத்தைக் கேட்டு அதில் மூழ்கி ஒரு பரவச நிலையை அடைகிறார்கள். இந்தக் கடவுள் பக்தியிலிருந்தே சத்தியம், தர்மம் போன்ற சத் விஷயங்கள் துவங்குகின்றன.

பாலகுமாரன்

“மன்னா, வசுதேவ புதல்வரான ஸ்ரீகிருஷ்ணனின் பெயர்களை நான் பெரியவர்கள் மூலம் கேட்டிருக்கிறேன். அனுபவித்திருக்கிறேன். உலகத்திலுள்ள அத்தனை பிராணிகளிலும் அவர் வசிப்பதால் வசு ஆவார். தேவர்களிலும் அவர் வசிப்பதால் தேவன் என்றும் கூறப்படுகிறார். அதனால் அவர் வாசுதேவன் என்று அழைக்கப்படுகிறார்.

எங்கும் வியாபித்திருப்பதால், உயிர்கள் இல்லாத இடத்திலும் இருப்பதால், அவர் விஷ்ணு என்று அழைக்கப்படுகிறார். தியானம் என்கிற தவத்தால் அவருடைய சாட்சாத்காரம் கிடைக்கிறது. அவர் அண்மை புரிகிறது. அதனால் மாதவன் என்ற பெயர் பெறுகிறார். மது என்ற சப்தம் பூமியை, பூமியிலுள்ள சுகங்களைக் குறிக்கிறது. அதனால் அவர் மதுசூதனன் ஆகிறார். கிருஷ் என்பது சத்துள்ள ஒரு பொருளாகும். அதைச் சொல்லுகிற வாசகமாகும். ண என்பது ஆனந்தத்தை குறிக்கிறது. சத்துள்ள பொருளை அறியும் ஆனந்தத்தை தருவதால் கிருஷ்ணா என்று அழைக்கப்படுகிறார். மிகச்சிறந்த பகவத் தர்மத்தின் பெயர் புண்டரீகம். அசைக்க முடியாத பக்தியே பகவத் தர்மம். அந்த நம்பிக்கையில் அவர் வாழ்வதால் புண்டரீகாட்சன் என்று கூறப்படுகிறார். இப்படியும் சொல்லலாம் - புண்டரீகம் என்றால் கமலம். அட்சீ என்றால் நயனம். அதனால் புண்டரீகாட்சன் என்கிற விதமாகவும் கொள்ளலாம். எதிரிகளுக்கு ஆத்தன் அளிப்பதால், அதாவது துன்பம் அளிப்பதால் ஜனார்தனன் என்று அழைக்கப்படுகிறார். அவர் சத்தியத்திலிருந்து பிரிவதில்லை. சத்துவத்திலிருந்தும் பிரிவதில்லை. அதனால் சாத்வன் ஆகிறார். வ்ருஷ என்றால் வேதம். ஈஷன என்ற வார்த்தைக்கு கண்களைப் போன்று என்று அர்த்தம். வேதத்தை கண்களைப் போல கொண்டவன் என்பதால் வ்ருஷபேக்ஷன என்று அழைக்கப்படுகிறார். பிறருக்கு ஜென்மம் அளிப்பதால் அவருக்குப் பிறப்பு இல்லை. அதனால் அஜன் எனப்படுகிறார். தேவர்களைப் போல உன்னத ரூபத்தில் பிரகாசிப்பதால் உதர் என்பதான நிலை ஏற்படுகிறது. தமம் என்கிற குணம் இவரிடம் நிரம்பியதால் இவர் தாமம் ஆகிறார். தாமமும் உதரமும் கலந்து தாமோதரன் ஆகிறார். மகிழ்ச்சியும் சுபமும் உடையவர் என்பதால் க்ருஷீகன் என்று பெயர். சுகமான ஐஸ்வர்யம் நிரம்பியதால் ஈஷன் ஆகிறார். இவை இரண்டையும் சேர்த்து ரிஷிகேசன் என்ற பெயரை தரிக்கிறார். தன் இரு புஜங்களாக ஆகாயத்தை அளக்கிறார். இதனால் மகாபாகு என்று அழைக்கப்படுகிறார். ஒருபொழுதும் அவர் கீழே விழுவதில்லை. அதனால் அதோக்ஷஜன் என்று அழைக்கப்படுகிறார். அவர் நரங்களின் ஜயம் ஆவார். அதனால் அவரை நாராயணன் என்று அழைக்கிறார்கள். அவர் எங்கும் நிறைந்தவர். அதனால் அவர் உயிர்களுக்கு புருஷனாவார். அவர் உத்தமர். அதனால் புருஷோத்தமன் என்று அழைக்கப்படுகிறார். அவர் அனைத்தையும் அறிந்தவர். அதனால் சர்வ என்ற அடைமொழி கிடைக்கிறது. சத்தியத்தில் நிலைத்தவர். அதனால் அவர் பெயர் சத்ய என்பதும் ஆகும். வாமன அவதாரத்தில் மூவுலகையும் ஆக்ரமித்ததால் விஷ்ணு என்று பெயர் பெறுகிறார். எல்லோரையும் வென்றதால் ஜிஷ்ணு என்ற பெயர் பெறுகிறார். அவர் நித்யமாக இருப்பதால் அனந்தன் என்று பெயர் பெறுகிறார். இந்த ரூபத்திலேயே புலன்களை வென்றதால்

கோவிந்தன் என்று அழைக்கப்படுகிறார்...

''இப்பேர்பட்ட புகழை உடைய ஸ்ரீகிருஷ்ணர் இங்கு வரப்போகிறார். கௌரவர்களை நாடி கௌரவர்களுக்கு நல்லது செய்வதற்காக இங்கே எழுந்தருளப் போகிறார்."

இதைச் சொல்லி விட்டு சஞ்சயன் மனதில் ஸ்ரீகிருஷ்ணரை நிறுத்தி 'நல்லதே நடக்கட்டும்' என்று கைகளை கூப்பி வேண்டிக் கொண்டார்.

திருதராஷ்டிரன் குதூகலமாகப் பேசினார். "ஸ்ரீகிருஷ்ணர் இங்கு வரப்போகிறார் என்பது மகிழ்ச்சியான செய்தி. கண்களை உடையவர்கள் அவரை தரிசனம் செய்வார்கள். அவர்கள் பாக்கியவான்கள். அந்த மாதிரியான ஒரு பாக்கியத்தை நானும் பெற விரும்புகின்றேன். பகைவரின் புகழை பலமாக பிடுங்கி தன்னிடம் வைத்துக் கொள்கிறவர் இங்கு வரப்போகிறார். மென்மையான வார்த்தைகளை பேசப்போகிறார். மோகிக்கச் செய்யப் போகிறார். அவர் பேச்சால் இந்த சபை சரியான முடிவை எடுக்கும். நான் மனப்பூர்வமாக ஸ்ரீகிருஷ்ணரை சரணடைகிறேன். அவர் வரட்டும். அவர் வரவு நல்வரவாகட்டும்." திருதராஷ்டிரன் கை கூப்பினார்.

கௌரவ சபையில் திருதராஷ்டிரன் ஆவலாய் காத்துக் கொண்டிருந்தபோது யுதிஷ்டிரர் தனக்காக ஸ்ரீகிருஷ்ணர் தூது போக வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தார்.

அர்ஜுன, பீம, நகுல, சகாதேவரோடு, அவர் பக்கம் இருக்கிற மன்னர்களும், ஸ்ரீகிருஷ்ணரை சூழ்ந்து கொண்டார்கள்.

"யுத்தம் வேண்டும் என்பது இங்கு எவருடைய ஆசையும் அல்ல. யுத்தம் செய்து ஜெயிக்கின்ற புகழில் பெரிய நாட்டம் இல்லை. மாறாய் துன்பம் தரும் யுத்தத்தை தவிர்க்கவே விரும்புகின்றோம். கௌரவர் பக்கமும் நல்லவர்கள் இருக்கிறார்கள். அவர் பொருட்டாவது சமாதான நடவடிக்கையை மனமாற எடுத்துத்தான் ஆகவேண்டும். எங்களைக் கண்டால் ஆத்திரம் ஏற்படுகின்ற துரியோதனனுக்கும், கர்ணனுக்கும் உங்களைக் கண்டால் சமாதானம் உண்டாகலாம். உங்களைக் கண்டதால் அங்குள்ளோர் துரியோதனனை சமாதானப்படுத்தலாம்.

ஆனால் திருதராஷ்டிரன் நிலைமை பரிதாபமானது. அவர், மகன் என்ன சொன்னாலும் அதை ஆராயாது தலையாட்டுகிறார். துரியோதனை புறக்கணித்து விட்டுப் பார்த்தால் திருதராஷ்டிரனுக்கே ராஜ்யத்தின் மீது ஆசை இருக்கிறது. எங்களைப் பற்றிய பயமும் இருக்கிறது. அதனால்தான் எங்களுக்கு எங்கள் ராஜ்யத்தை அளிக்காமல் சமாதானம் பேச முயற்சிக்கிறார். திருதராஷ்டிரன் தான் சொன்ன சொல்லில் நிலைத்திருப்பார் என்று கருதியே பன்னிரண்டு வருட வனவாசமும், ஒரு வருட அஞ்ஞாத வாசமும் செய்தோம். ஆனால் தன் புதல்வன் சரி என்று நினைப்பவருக்கு எங்களைப் பற்றி சிந்திக்க முடியாது.

"நான் ஐந்து கிராமங்கள் கொடுங்கள் என்றுதான் கேட்டேன். என் ராஜ்யத்தைக் கூட கேட்கவில்லை. அவிஸ்தலம், பிருகஸ்தலம், மாகந்தி, வாரணவதம் மற்றும் ஒரு கிராமம் கொடுங்கள், போதும் என்றேன். இதில் நாங்கள் ஐவரும் ஒன்றாக இருக்க முடியும். இதனால் பரத வம்சத்திற்கு எந்த நஷ்டமும் வராது. ஆனால் அந்த ஐந்து கிராமங்களைக் கூட தருவதற்கு கௌரவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. மற்றவருடைய செல்வத்தை எடுத்துக் கொள்ள விரும்பினால் அது ஒருவனின் ஆராயும் சக்தியை அழித்து விடுகிறது. அவனுடைய வெட்கத்தை அழித்து விடுகிறது. வெட்கம் தர்மத்தை அழித்து விடுகிறது. தர்மம் செல்வத்தை அழித்து விடுகிறது. நஷ்டமுற்ற செல்வம் மனிதனையே அழிக்கிறது. செல்வம் இல்லாத நிலை, மனிதனின் மோசமான நிலை. அவனைக் கண்டு உற்றார் உறவினர்களும், நல்லவர்களும், மலரும், பழமும் இல்லாத மரத்தை விட்டு பட்சிகள் பறப்பதைப் போல நகர்ந்து விடுகிறார்கள். உலகில் செல்வந்தனே உயிர் வாழ முடியும். செல்வம் இல்லாதவன் இறந்தவனுக்கு சமானம். யார் ஒருவன் பலத்தின் மூலம் மற்றவர் செல்வத்தை அபகரிக்கிறானோ அவர்கள் நஷ்டமடைந்தவனையே அழிக்கிறார்கள். இதனால் ஏழ்மையான நிலையைப் பெற்ற மனிதர்கள் மரணத்தை தேர்ந்தெடுக்கிறார்கள். வேறு இடங்களுக்குப் போய் அனாதைகளாக திரிகிறார்கள். அல்லது பைத்தியமாகி விடுகிறார்கள். அல்லது அடிமையாகிறார்கள். செல்வம் அழிவது மிகப் பெரிய விபத்து. அது மரணத்தைக் காட்டிலும் கொடியது. பிறப்பிலேயே ஏழ்மை உள்ளவனுக்கு இந்த துக்கம் பெரிதாகத் தெரிவதில்லை. ஆனால் செல்வ சுகபோகத்தில் வாழ்ந்து அந்த செல்வம் பறிக்கப்பட்ட மனோ வேதனை மிகக் கொடியது. செல்வமற்ற நிலையில் மனிதனுக்கு கோபம் மட்டுமே வருகிறது. தான் சார்ந்த சமூகத்தை பழிவாங்கும் மனோநிலை ஏற்படுகிறது. அவன் இனக் கலப்பாலும், வேறு குரூரமான காரியங்களாலும் அந்த சமூகத்தை அழிக்கத் துவங்குகிறான். ஆனால் ஞானம் என்னும் கண்களைப் பெற்றவன் செல்லும் திசை அறிந்து, அதாவது என்ன செய்ய வேண்டும் என்றுத் தெரிந்து, தொடர்ந்து

சங்கடங்களை கடக்கிறான். தர்மத்தின்படி நடக்கிறான்.

“தர்மத்தின் அடிநாதம் லஜ்ஜை. அதாவது வெட்கம். வெட்கம் மேலிட்டு தர்மம் உள்ளவன் பாபங்களை செய்ய பயப்படுகிறான். சரியான வழியில் நடக்கிறான். இதனால் அவன் செல்வம் மெல்ல மெல்ல அதிகரிக்கிறது. செல்வம் வர, தர்ம காரியத்தில் ஈடுபடுகிறான். அதர்மத்தில் மனம் திரும்புவதில்லை. அவன் தேவர்களையும்; பித்ருக்களையும் பூஜித்து தன்னைக்காப்பாற்றிக் கொள்கிறான். அவன் செல்வம் மேலும் பெருகுகிறது.

“எங்களுக்கு வேண்டிய எங்கள் முன்னோர்கள் சொத்துகளை நாங்கள் கேட்பதில் எந்த தவறும் இல்லை. இதற்காக எல்லா முயற்சியும் செய்து அதனால் கொல்லப்பட்டாலும் அது நல்லதுதான். எங்களுடைய முதல் கொள்கை சமாதானம். அது நடக்கவில்லையெனில் போர் செய்து எங்கள் சொத்துகளை மீட்பதே உத்தமமாகும். இது பயங்கரமான கொடுமை மிகுந்த செயலாகும். எவ்வளவு பரிதாபமான நிலைமை எங்களுடையது என்று, யோசிக்க யோசிக்க புலப்படுகிறது. எங்கள் முன்னோர்களுடைய சொத்துக்ளை அடைவதற்கு நாங்கள் போரிட வேண்டியிருக்கிறது. இது தலையெழுத்து. நீசமானவர்களை, துரோகிகளை, பகைமை பாராட்டுபவர்களை கொள்வதே தவறு என்ற கொள்கை எங்களுக்கு இருக்க, எங்கள் உற்றார் உறவினர்களை, நண்பர்களை, மதித்து போற்றத் தகுந்தவர்களை, நாங்கள் செல்வத்தின் பொருட்டுக் கொல்ல வேண்டியிருப்பது மிகப்பெரிய பாபம். கொடுமையிலும் கொடுமை.

“நான் க்ஷத்திரியன். அதனால் போரிட்டுத்தான் ஆக வேண்டும். யாசிக்கின்ற தர்மத்தை நான் எடுத்துக் கொள்ளக்கூடாது. அது நிந்தைக்குரிய விஷயம். எந்த ஜாதியும் சுய ஜாதியைக் கொல்வதில்லை. சூத்திரனோ, வைசியனோ, பிராமணனோ இப்படி செய்வதில்லை. க்ஷத்திரியன் க்ஷத்திரியனை வதம் செய்கிறான். மீனை மீன் விழுங்குகிறது. நாயை நாய் கடித்து விடுகிறது. இது பரம்பரை பரம்பரையாக நடந்து வருகிறது. போரினால் கலகம்தான் உண்டாகும். எங்களுக்கு வெற்றியோ தோல்வியோ ஏற்படட்டும். மனிதர்களின் வாழ்க்கையில் மரணமும் அவர்கள் விருப்பப்ப்படி நடப்பதில்லை. ஒரு போரினால் இரு பக்கத்து செல்வமும் புகழும் பங்கப்படுகின்றன. ஒருவனைக் கொன்றவன் கொல்லப்படாதவனாக எப்படி ஆக முடியும்? அவன் கொல்லப்படாமல் இருக்க முடியுமா? கொலை கொலையைத்தான் கொண்டு வந்து கொடுக்கும். போரில் வெற்றி பெற்றவனும், செல்வத்தையும் நண்பர்களையும் இழக்க வேண்டியிருக்கிறது. புதல்வர்களையும், சகோதரர்களையும் பலி கொடுக்க நேரிடுகிறது.

போர் முடிந்து தன் உறவுகளை காணாத போது அவன் போர் பற்றிய விரக்தியை அடைகிறான். ஒரு செயலை செய்துவிட்டு அதனால் துக்கமடைவது என்பது எவ்வளவு பேதமை. இது அந்த செயலை செய்வதற்கு முன்பு ஏன் தோன்றுவதில்லை? நல்லவர்கள், வீர தீரம் உடையவர்கள் போரில் கொல்லப்பட்டு விடுகிறார்கள். அதர்மமான, வெறுக்கத்தக்க மனிதன் தப்பிப்பிழைத்து விடுகிறான். போரின் லட்சணம் இதுதான். இப்படிப்பட்ட விஷயத்தை மிக உயர்ந்தது என்று எப்படி கொள்வது? பகைவர்களை கொன்ற பிறகு ஐய்யோ இறந்தானே என்ற பச்சாதாபம் ஏற்படுகிறது. ஆனால் கொல்லப்படும் பகைவர்களில் எவரேனும் தப்பிவிட்டால் வெற்றி பெற்றவன் விடுவதில்லை. பின் தொடர்ந்து போய் அடிக்கிறான். வெற்றி நிரந்தரமான பகையை அளிக்கிறது. எதையும் முடித்து வைப்பதில்லை. யாரிடமும் பகைமை கொள்ளாமல் எவன் இருக்கிறானோ அவன் வெற்றி தோல்வி பற்றி கவலையில்லாமல் சுகமாக தூங்குகிறான். எவன் பகைவர் குலத்தில் மிகுந்த பயத்தால் குழந்தைகளிலிருந்து கிழவர்வரை தேடித் தேடிக் கொல்கிறானோ அவன் புகழ் நிந்திக்கப்படுகிறது. ஆனாலும் அந்த பகைமை என்ற தீ அணைவதில்லை. அந்த குலத்தில் ஒருவன் தப்பித்தாலும் வென்றவனுக்கு தூக்கமில்லை. நெய் விட்டதும் தீ அணைவதில்லை. மாறாய் கொழுந்து விட்டு எரிகிறது. பகைமையால் போர் செய்த பிறகு பகைமை அழிவதில்லை. மாறாய் அதிகரிக்கிறது. இதுதான் போரின் லட்சணம்.

“ஆனால் மதுசூதனா, எங்கள் ராஜ்யத்தைத் தியாகம் செய்யும் நிலைமை இந்தப் போரைக்காட்டிலும் கேவலமானது. என் பகைவன் என்னை ஒருகாலும் ஒரு விஷயத்திற்கும் நம்ப மாட்டான். செல்வத்தால் வஞ்சிக்கப்பட்ட மனிதன் ஏதேனும் ஒருநாளில் ஏதேனும் ஒரு வழியில் அந்த செல்வத்தை மீட்கப் போராடுவான் என்ற பயம் எதிரிக்கு நிச்சயம். இப்படி எல்லா கோணங்களிலும் பார்க்க எங்கள் ராஜ்யத்திற்காக நாங்கள் போர் செய்வதே உத்தமம் என்று தோன்றுகிறது.

“ஆனால் யுத்தத்தை விரும்பாமல் சாம, தான, பேத உபாயங்களால் என் செல்வத்தை அடைய பாடுபடுகிறேன். தண்டிப்பதுதான் எனக்கு விடப்பட்ட வழியென்றால் நான் எப்படி மெளனமாக இருக்க முடியும்?

போர் என்பதை நாய்களின் சண்டைக்கு உவமானமாகக் காட்டலாம். முதலில் அவை ஒன்று கூடுகின்றன. இரண்டாக பிரிந்து கொள்கின்றன. ஒன்றை ஒன்றைப் பார்த்து முறைக்கின்றன. பிறகு குரைக்கின்றன. பிறகு பல்லை காட்டி பயமுறுத்துகின்றன. ஒன்றின் மீது ஒன்று சீறி விழுகின்றன. கண் மண் தெரியாத வேகத்தில் துரத்துகின்றன. கடித்துக்குதறுகின்றன. வெற்றி பெற்றது சண்டைக்கு காரணமான மாமிசத்தை உண்ணுகின்றன. இந்த உண்ணலில் என்ன சிறப்பு இருக்கமுடியும்.'

"நாய்கள் முதலில் வாலாட்டுவது மன்னர்களின் கொடி அசைவதற்கு உவமையாகும். நாய்களின் முறைப்பு மன்னர்களின் சிம்மநாதம். இரண்டும் ஒன்றை ஒன்று பார்த்து குரைப்பது பரஸ்பர ஆட்சேபணைகள், வெறும் வசனங்கள். மன்னர்கள் பல்லைக்கடிப்பது நாய்கள் பல்லை காட்டுவதற்கு சமம். ஓடுவதும், துரத்துவதும், கடிப்பதும், யுத்தம். பிறகு கிடைக்கும் மாமிசம் ராஜ்யம். ஆக, போர் என்பது மனிதனுக்கு ஏற்பட்ட நாய் குணம். போருக்கு ஆவேசப்படுவது நாய்க் கூட்ட உறுமல்.

"இந்த மாதிரி நேரத்தில் இரண்டு பக்கமும் யோசித்து நிற்கையில் எல்லா விஷயங்களும் தீர்மானமான கொள்கையுடைய உங்களிடம் வருவதே மிகச் சிறந்தது அல்லவா."

இவ்வாறு சொன்ன யுதிஷ்டிரரை அமைதியாகப் பார்த்தார் கிருஷ்ணர். "கவலைப்படாதே யுதிஷ்டிரா. உங்கள் இருவருக்காகவும் சமாதானம் செய்ய நான் திருதராஷ்டிரனிடம் செல்வேன். கௌரவ சபையில் நிற்பேன். க்ஷத்திரியர்களை சாவிலிருந்து விடுவிப்பேன்," என்றார்.

"ஹே கிருஷ்ணா, எங்கள் பொருட்டு நீங்கள் கௌரவர்களிடம் போவது எங்கள் விருப்பம் அல்ல. என்ன செய்வது என்று கேட்க வந்தேனே தவிர, எங்களுக்காக தூது போகச் சொல்லவில்லை. நீங்கள் என்ன நல்ல வார்த்தை சொன்னாலும் துரியோதனன் ஏற்றுக் கொள்ள மாட்டான். பல மன்னர்கள் ஆவேசமாக இருக்கின்ற சபையில் நீங்கள் போய் நிற்பது உசிதமல்ல. அவர்கள் துரோகாவேசமாக, உசிதமற்று நடந்துக் கொள்ளக்கூடும். அதனால் கிடைக்கின்ற எந்த செல்வமும் எங்களை மகிழ்விக்காது."

"யுதிஷ்டிரா, புரிகிறது. துரியோதனன் பாவச் செயலுக்கு அடங்கியவன் அல்ல. ஆனால் நான் சமாதானத்திற்கு முயன்றால் அது பரத கண்ட க்ஷத்திரியர்களுக்கு நல்லது. போருக்கு அஞ்சும் க்ஷத்திரியர்களின் நிந்தனைக்கு நாம் ஆளாகக் கூடாது. கோபம் கொண்ட சிங்கத்திற்கு முன்பு எந்த விலங்கும் நிற்க முடியாது. அங்கே உசிதமற்ற செயல் ஒன்று நடைபெற்றால் நான் கோபம் கொண்டு அவர்கள் அனைவரையும் எரித்து சாம்பலாக்கி விடுவேன். நான் அங்கு போவது அர்த்தமில்லாமல் போகாது. இந்தப் போரிலிருந்து செல்வம் கிடைக்கிறதோ இல்லையோ சமாதானத்திற்கு உண்மையாக முயற்சி செய்யவில்லை என்ற பழியிலிருந்து நாம் தப்பிக்கலாம்."

"ஸ்ரீகிருஷ்ணா, நீங்கள் தீர்மானம் செய்து விட்டீர்கள். உங்கள் ருசிப்படியே செய்யுங்கள். எப்படி பேச வேண்டும் என்று உங்களுக்கு யாரும் சொல்லித் தர முடியாது. யாரிடம் என்ன பேச வேண்டும் என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். சமயத்தில் பேசாது இருக்கவும் உங்களுக்குத் தெரியும். எங்களுக்கு என்ன நன்மை உண்டாகுமோ அவை அனைத்தையும் துரியோதனனிடம் சொல்லுங்கள். அவனுக்குப் புரியும் வண்ணம் மென்மையாகவோ கடுமையாகவோ பேசுங்கள்."

பாண்டவர்கள் போர் செய்ய விரும்பி அந்த மிகப் பெரிய போருக்கு முன்பு ஸ்ரீகிருஷ்ணரிடம் முழுமையாக சரணடைந்தார்கள். அவரையே வழிகாட்டியாக கொண்டார்கள். நாம் என்ன செய்கிறோம், இனி என்ன செய்ய வேண்டும் என்று யோசித்துச் சொல்ல ஒரு குலத்திற்கு அருகே நல்லவரும் வல்லவருமான ஒருவர் இருப்பது பேரதிர்ஷ்டம். அது பெரிய சுமையை எளிதாகக் குறைக்கிறது. தன்னை நம்பிய பஞ்சபாண்டவர்களை பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஆதுரத்துடன் பார்த்தார். பிரபஞ்ச சக்தியின் அருகாமை மிகப் பெரிய வரம். அது ஒரு ரகசியம்.

(தொடரும்)

யுத்தமே இங்கு அறமாகும்!

“க்ஷத்திரியருக்கென்று ஒரு குணம் இருக்கிறது. கடமை இருக்கிறது. அவன் பலரை காப்பாற்ற முற்படுகிறவன். காப்பாற்று என்று அலறியபடியே பலர் அவனிடம் வருவார்கள். அபயம் அளித்து காப்பாற்ற வேண்டிய கடமையில் உள்ளவன். வேறு யாரும் யாசிக்கலாம். பிச்சையெடுக்கலாம். ஆனால் க்ஷத்திரியர் யாசிக்கக் கூடாது. தனக்கு வேண்டும் பொருளை யுத்தத்தால் அடையும் குணம் அவனுக்கு இருக்க வேண்டும். மற்றபடிக்கு அவன் யாசிப்பது அவன் புகழுக்கு களங்கம்.

உங்களுக்கும் கௌரவர்களுக்கும் நடுவே ஒற்றுமை உண்டாக்குகின்ற உபாயம் எதுவும் இல்லை. மேலும் பீஷ்மர், கிருபர், துரோணாச்சாரியார் போன்றவர்கள் அவர்கள் பக்கம் இருப்பதால் அவர்கள் தங்களை பெரும் பலசாலிகளாகக் கருதுகிறார்கள். இந்தப் பெரிய வட்டத்தால் அவர்களிடம் பல மன்னர்கள் நண்பர்களாக இருக்கிறார்கள். கௌரவர்களிடம் அன்பாக நடந்து கொள்வதால் உங்களுக்கு உங்கள் ராஜ்யம் கிடைக்க சூதாட்டம் நடத்தியதே உங்களை அவமானப்படுத்தத்தான். மேலாடையின்றி இடுப்புத்துண்டோடு உங்களை சபையில் நிற்க வைக்கத்தான். சாதுக்கள், பிராமணர்கள், நகர மக்கள் கூட்டம், திருதராஷ்டிரன், பீஷ்மர், துரோணர், விதுரர் இவர்கள் பார்க்க சூதாட்டத்தில் துரியோதனன் உங்களை கபடமாக ஏமாற்றினான். அதை நியாயம் என்று இதுவரை சொல்கிறான். அவனை வதம் செய்ய வேண்டும் என்பதற்கு தகுந்த காரணங்களை நான் சொல்ல வேண்டுமா, இது போதாதா. இருப்பினும் சொல்கிறேன் கேள்.

துரியோதனன் தன்னை பொய்யாக புகழ்ந்து கொண்டு தன் சகோதரர்களிடம், ‘பாண்டவர்களுக்கு ராஜ்யமும் இல்லை செல்வமும் இல்லை. எனக்கு இணையான பாண்டவர்களுக்கு இனிமேல் பெயர் கோத்திரம் கூட இருக்காது. இவர்களைப் பற்றிய எல்லா வீரதீர கதைகளும் குப்பைகளாகி விட்டன. இவர்களுக்கு மரணம் வருமானால் அதுவும் என்னால்தான் வரும்’ என்று கூறினான். சூதாட்டம் நடந்து கொண்டிருக்கும்போது அந்தப் பாவியான துச்சாதனன், வர மறுத்து அழுது புலம்பிய திரௌபதியின் கேசத்தைப் பற்றி வலுக்கட்டாயமாக அரசவைக்கு இழுத்து வந்தான். பீஷ்மர், துரோணர் மற்றும் சபையினர் முன்பு அவளை பசு பசு என்று பலமுறை அழைத்தான். அதே இடத்தில் அர்ஜுனனும் பீமனும் போர் துவக்கியிருப்பார்கள். ஆனால், அவர்களை நீங்கள் தடுத்து விட்டீர்கள். தர்மத்தின் பாற்பட்ட சகோதரர்கள் என்பதால் இவர்கள் உங்களை மீறவில்லை. திரௌபதி அடைந்த வேதனையின் போது சபை துரியோதனனை நிந்தித்தது. இது தவறு என்று பேசியது. ஆனால், துரியோதனன் அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஒரு அரசன் மக்கள் நிந்தையில் அகப்படக் கூடாது. அந்த நிந்தை மரணத்திற்கு ஒப்பாகும். துரியோதனனுக்கு அந்த வகை மரணம் ஏற்பட்டு விட்டது. அவனை கொல்லுவதே இப்போது நடக்கப்பட வேண்டியது.

உங்களின் தந்தைக்கு சமமான திருதராஷ்டிரன் மீது பற்று கொண்டு இரக்கத்தோடு இந்த விஷயத்தை பார்க்கிறீர்கள். துரியோதனன் நல்லவனா, கெட்டவனா

மகாபாரதம்

95


ம.செ

என்று அனுமானிக்க முடியாது. தடுமாறுபவர்களை நான் நேரே போய்ப் பேசி அந்தக் குழப்பத்தை நீக்கி விடுவேன். நீங்கள் கொண்டிருக்கின்ற தர்மத்தை பற்றிப் புகழ்ந்து சொல்வேன். துரியோதனின் நீசத்தனங்களை பட்டியலிடுவேன். நான் பேசப்பேச பொதுமக்கள் அனைவரும் துரியோதனனை நிந்திப்பார்கள். திருதராஷ்டிரனை குறை கூறுவார்கள். மக்களால் நிந்திக்கப்பட்ட அரசன் குறைகள் உள்ளவன். அவன் இருப்பதும் இல்லாததும் ஒன்றே. நான் அமைதியை நிலைநாட்ட எல்லாவித முயற்சிகளையும் செய்வேன். ஆனால், அவர்கள் செயலில் பார்வை வைத்திருப்பேன். வெகு நிச்சயமாக யுத்தம் நிகழும். எனக்கு முன்னால் அந்த விதமான குண லட்சணங்களே தோன்றுகின்றன.

பூமியிலுள்ள விலங்குகளும், பட்சிகளும் அகோரமாய் சப்தமிடுகின்றன. அகோரத்தன்மை அவைகளுக்கு தெரிந்து விட்டது. நெருப்பு எரியும் வேகம் அக்னியின் தீவிரம் பலரை எரிக்கின்ற தன்மையைக் கொண்டிருக்கிறது. மிக பயங்கரமாய் பெருங்கூட்டமாய் மக்கள் சாகப் போகிறார்கள் என்பதற்குண்டான விஷயங்கள் தோன்றுகின்றன. நான் சமாதானத்திற்காகத்தான் தூது போகிறேன். ஆனால், நீங்கள் போருக்குத் தயாராக இருங்கள். அஸ்திரம், எந்திரம், கவசம், ரதம், யானை, குதிரை இவை தயார் நிலையில் இருக்கட்டும். தேர்கள் தயார் நிலையில் இருக்கட்டும். இதைத்தவிர போருக்கு வேண்டிய அத்தனைப் பொருட்களையும் நீங்கள் சேகரிக்க வேண்டும். யுதிஷ்டிரரே, நீங்கள் சூதில் தோற்ற எதையும் உங்களுக்கு துரியோதனன் திருப்பித் தரமாட்டான் என்பதை உறுதியாக நம்புங்கள். போருக்கான சூழ்நிலையில் நீங்கள் ஏற்கனவே தள்ளப்பட்டு விட்டீர்கள்.”

பாலகுமாரன்

ஸ்ரீகிருஷ்ணர் உறுதியாகவும், கோபமாகவும் பேசுவதை பீமன் கண் கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தான்.

“ஸ்ரீகிருஷ்ணா, இவ்வாறு பேசுவதை விடுவித்து எங்களுக்கு சமாதானம் உண்டாகும் சொற்களையே பேசுங்கள். துரியோதனன் பொறுமையற்றவன். கோபம் நிறைந்தவன். மனதில் பெரும் அதிகாரங்களை வைத்திருக்கிறவன். அவனிடம் கடுமையாகப் பேசாதீர்கள். சாம நீதி மூலமாக அவனுக்கு எடுத்துரையுங்கள். அவன் இயல்பாகவே பாபாத்மா. கொள்ளையர்களைப் போல குணம் கொண்டவன். எங்களிடம் நிரந்தர பகைமை கொண்டிருக்கிறான். அவன் அதூரதர்ஷி. நிஷ்டூரமாக பேசுபவன். வேகமாக நிந்திப்பவன். கொடுமை மனமுள்ள பராக்கிரமசாலி. நீண்டகாலமாக கோபத்தை வைத்துக் கொண்டிருப்பவன். நல்ல வழிக்குக் கொண்டுவர தகுதியற்றவன்.

“ஸ்ரீகிருஷ்ணா, அவன் போரில் இறக்கலாம். ஆனால், வளைய மாட்டான். அப்போதும் தன் பிடிவாதத்தை விட மாட்டான். அத்தகைய வீண் பிடிவாதக்காரனோடு சமாதானம் பேசுவது கடினமான காரியம். துரியோதனன் எங்கள் நண்பனுக்கும் கூட எதிரியாக நடந்து கொள்கிறான். அவனுக்கு நல்லது சொல்ல விரும்புகிறவனின் நட்பைக் காயப்படுத்துகிறான். அவன் பேச்சில் இம்சையைக் கலக்கிறான். குப்பையில் மறைந்து போகும் பாம்பைப்போல கெட்ட குணங்களையுடைய அவன் தன்பக்க தர்மத்தை ஆவேசமாகப் பேசுவான்.

ஆனால், இந்த உலகிற்கு துரியோதனன் ஒன்றும் புதியவனல்ல. இம்மாதிரியான மனிதன் இதுவே முதல் முறை அல்ல. ஜனமேஜயன், பகுலன், வசு, அதவிந்து, ருஷத்யன் எனும் பல க்ஷத்திரியர்கள் பல்வேறு குலங்களில் தோன்றி உலகுக்கு தீமை விளைவித்தனர். இந்த துவாபர யுகத்தின் முடிவில் குருகுலத்தின் அழிவிற்காக துரியோதனன் தோன்றியிருக்கிறான். அவனிடம் மென்மையாகப் பேசுங்கள். ஒரு பெரிய வம்சம் எங்களின் பொருட்டு அழிய வேண்டாம். எங்கள் பராக்கிரமங்களை துறந்து விட்டு காலால் நடந்து துரியோதனனை பின்பற்றத் தயாராக இருக்கிறோம். எங்களால் உலகிற்கு அழிவு ஏற்பட வேண்டாம். எங்கள் தமையனார் யுதிஷ்டிரரும் சமாதானத்தை விரும்புகிறார். அர்ஜுனனும் போரை விரும்பவில்லை. போர் நடக்கும் போது ஏற்படும் வேதனையையும், அதன் முடிவில் ஏற்படும் துயரத்தையும் இப்போதே உணர்ந்து நாங்கள் சமாதானத்தைக் கூறுகிறோம். என்ன செய்வது? எங்களை நாங்கள் எப்படி புகழ்ந்து கொண்டாலும் அவன் துரியோதனன் என்ற மூடன். அவனிடம் சமாதானமாகப் போனால் என்ன தவறு. போகாவிட்டால் குருகுலமல்லவா அழியும். புகழ்மிக்க அந்தக் குலம் அழிவது எப்பேர்பட்ட துக்கம்.”

குரல் கம்ம, மனம் குழைய, கண்களில் நீர் கோர்த்தவாறு பீமசேனன் கவலையோடு பேசினான்.

வல்லவர்களாயிருப்பினும் நல்லவர்கள் சத்தியத்தின் பக்கமே நிற்கிறார்கள்.



உண்மையின் விளைவை மிகப் பெரியதாய் எல்லோருக்கும் சேர்த்து யோசிக்கிறார்கள். அவன் நல்ல குணத்தைப் பாராட்டுவதுபோல ஸ்ரீகிருஷ்ணர் மெல்ல சிரித்தார். மிகச் சிறந்த நண்பர்களிடையே இருக்கிறோம், உயர்ந்த சிந்தனையுள்ள மனிதர்களை பெற்றிருக்கிறோம் என்ற நினைவில் கருணையோடு பீமனை நோக்கினார்.

“சகோதரா, உன் வார்த்தைகள் என் காதுகளுக்குக் குளுமையாக இருக்கின்றன. ஆனால் என்றாவது நீ உன்னை மறந்து தூங்கியதுண்டா. அப்படி தூங்கினாலும் கவிழ்ந்து படுத்து அரை குறை நினைவில் கோபமான சொற்களைத்தானே சொல்லி வந்தாய். நீண்ட பெருமூச்சு விட்டு அமைதியின்மையோடு அலைந்தாய். உன் கோபத்தை அடக்குவதற்காக பூமியிலுள்ள மரங்களை அடித்து ஒடித்து நாற்புறங்களிலிலும் ஓடி களைப்புற்றாய். அப்போது மக்கள் உன்னை பித்தனென்றல்லவா என்று சொன்னார்கள். சில சமயம் சிரிப்பாய். சில சமயம் அழுவாய். தனிமையிலே முழங்காலை கட்டிக்கொண்டு நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பாய். எத்தனை முறை உன் கதாயுதத்தைத் தொட்டு சப்தமிட்டிருக்கிறாய். கிழக்கிலே ஸூரியன் உதிக்கிறான். மேற்கிலே மறைகிறான். இது ஒரு பொழுதும் மாறாது. அதேபோல துரியோதனைக் கொல்லும் என் வேகமும் மாறாது என்று கூறியிருக்கிறாய். இப்படிப்பட்ட நீ சமாதானம் பற்றி பேசுவது வியப்புக்குரியது. போருக்கான வாய்ப்பு கிடைத்ததும் போர் வேண்டாமே என்று யோசிப்பது இயல்பானது. ஆனால் இதில் லாபமென்ன. போரில் உள்ள பலி எண்ணிக்கையை யோசனை செய்து உன் இதயம் நடுங்குகிறது. நீ பேசும் பேச்சு உனக்குத் தகுந்ததல்ல. நீ க்ஷத்திரியன். போர் வேண்டாம் என்று சொன்னால் கப்பலில்லாமல் நடுக்கடலில் மூழ்கியவனுக்கு ஒப்பாவாய். ஆனால் இதுவா மரணம் என்று யோசனை செய். இப்படியா துக்கக் கடலில் மூழ்கி சாகப் போகிறாய். யோசனை செய். ஒரு க்ஷத்திரியன் தன்னை வீரத்தால்தான் நிலை நிறுத்திக் கொள்ள முடியும். வேறு எந்தப் பேச்சும் அவனை அசிங்கமாக்கி விடும். அவ்விதம் வாழ்வதில் லாபமென்ன. நிமிர்ந்து நில் பீமசேனா நிமிர்ந்து நில்” என்று ஸ்ரீகிருஷ்ணர் கூவினார்.

ஸ்ரீகிருஷ்ணர் வெறியேற்ற பீமசேனன் எழுந்து நின்றான். அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். ஓடினான். மிகுந்த வேகத்தில் ஓடி களைப்புற்றிருந்தான். பிறகு. மெல்ல நடந்தான். தன் சக்தியை தானே உணர்ந்த பிறகு தன் பற்களை நறநறவென்று கடித்தான். அந்தக் கோபம் துரியோதனாதிகளை கொல்கின்ற கோபம். எல்லோரும் தொலைவில் இருக்கின்ற அவனையே பார்த்தபோது அவன் வெட்கப்பட்டு சிறு நடையும், ஓட்டமுமாய் அந்த சபைக்கு அருகே வந்து கை கூப்பினான்.

“ஸ்ரீகிருஷ்ணா, நான் சமாதானம் பேசியதாலேயே என்னை நீங்கள் பலமற்றவனாகக் கருதுவது வேதனையாக இருக்கிறது. அதேசமயம் என் பலத்தைப் பற்றி நானே கூறிக் கொள்வதும் வெட்கக்கேடாக இருக்கிறது. ஆனால் இந்த நேரத்தில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

“பூமிக்கும் சொர்க்கத்திற்கும் இடையே மக்கள் வாசம் செய்கிறார்கள். இந்த இரண்டு லோகங்களும் ஒன்றையொன்று கோபித்து பாறை போல இடித்துக் கொள்ளுமானால் அவை இரண்டையும் என் புஜங்களால் தடுத்து நிறுத்தி மக்களைக் காப்பாற்ற என்னால் முடியும். போரில் குதித்து தேரைப் பிடுங்கி தரையில் அடித்து குதிரைகளைக் கொல்ல முடியும். ஸ்ரீகிருஷ்ணா, சாதாரண மக்கள் ஸூரிய ஒளியைக் காண்பதுபோல நீங்கள் என் கோபத்தை காணப் போகிறீர்கள். நல்லது



பேசினால் வலுவற்றவன் என்று நீங்களும் நினைக்கிறீர்களே அது வேதனையாக இருக்கிறது. யுத்தம் நல்லது என்று எப்போதும் சொல்ல முடியாது. நல்லதில்லை என்றும் சொல்லுவதற்கியலாது. உசிதமான நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல உங்களைப் போன்றவர்கள் இருக்கிறார்கள். என் தசை தளரவில்லை. என் இதயம் நடுங்கவில்லை. துரியோதனன் பக்கத்து முக்கியமான வீரர்களை கொல்லுவதற்காகவே நான் பிறந்திருக்கிறேன். என் மீது எந்த சந்தேகமும் பட வேண்டாம். யுதிஷ்டிரரையும், அர்ஜுனனையும் நான் ஒருபொழுதும் கை விடேன்." பீமசேனன் அடிக்குரலில் உறுதியோடு பேசினான்.

ஸ்ரீகிருஷ்ணர் வாய்விட்டுச் சிரித்தார். "உன் கோபத்தை அதிகரிக்கவே நான் அவ்விதம் இடித்துரைத்தேன். உன்னை நான் நன்கு அறிவேன். நீ கூறும் பலங்களைத் தாண்டி உன்னிடம் நல்ல குணங்களும் ஆயிரம் மடங்கு அதிகம் இருக்கின்றன. நீ புகழ்மிக்க குலத்தில் பிறந்திருக்கிறாய். பொது மக்கள் தெய்வத்தையும் புருஷார்த்தத்தையும் வியந்து நிற்கிறார்கள். தெய்வத்தினுடைய அனுக்கிரகம் கண்டு மகிழ்கிறார்கள். நல்ல புருஷர்களின் வீரத்தை மனமாற பாராட்டுகிறார்கள். ஆனால் இந்த புருஷார்த்தமே அழிவிற்குக் காரணமாகிறது. தெய்வத்தின் வரங்களும் தீது செய்திருக்கின்றன. புருஷார்த்தத்தின் மேன்மையும் இந்த உலகத்திற்கு தீங்கு செய்யும். தெய்வத்தின் அனுகூலத்தால் மட்டுமே வாழ்க்கை உண்டாகாது. தெய்வத்தின் கட்டளை நிறைவேற்றுகின்ற புருஷார்த்தம் வேண்டும். இந்தப் புவியின் போராட்டத்தை புரிந்து கொள்ளும் குளிர் அவசியம்தான். அது அதிகமாகிற போது ஆடையால் நிவாரணம் பெறுகிறது. வெயில் முக்கியம்தான். விசிறியால் நிவாரணம் பெறுகிறது. பசி தாகத்தின் நிவாரணம் அன்னம் ஜலம். ஏழையின் நிவாரணம் கொடை. இந்த இரட்டைகளின் தொந்தரவு பூமிக்கு நிரந்தரம் என்பதை புரிந்து கொள். இதுவே அவ்விதம் இருக்க, தெய்வத்தின் அனுகூலத்தால் நல்லது செய்கிறேன் கெடுதல் செய்கிறேன் என்று எவன் சொல்ல முடியும். ஒருவன் தன் அறிவால் தீர்மானித்து இந்தச் செயல்களை நெருங்கினாலும் அவன் தோல்வியுற்றாலும் துயர் அடைவதில்லை. வெற்றி பெற்றாலும் மகிழ்வதில்லை. இது பிராரப்த கர்மம். முன் வினை. இதை மனதில் கொண்டு இந்தப் போரைப் பார். இப்போதே ஏதேதோ யோசித்து தளர்கிறாயே இந்த பிராரப்த கர்மத்தால் அதாவது முன்வினையால் போரில் விபரீதமாக ஏதும் நடந்தால் என்ன செய்வாய். எதனை விடுவாய். எதனைக் கொள்வாய். இந்தப் போரின் முழுப் பொறுப்பும் உன் தோளிலேயே வைக்கப்பட்டிருக்கிறது. அர்ஜுனனும் உனக்கு சமமான எடையைத் தூக்குவான். மற்றவர்களுக்கான பாரத்தையும் நீங்கள் இருவருமே சமமாகத் தூக்க வேண்டும். இரு பக்கத்திற்கும் சமாதானத்திற்குண்டான ஏற்பாடுகளைத்தான் நான் செய்வேன். இங்கு சமாதானம் ஏற்பட்டால் பெரும் புகழ் கிடைக்கும். நீ இப்போது நல்லதை விரும்புகிறாய். ஆனால், கௌரவர்கள் போரை மட்டுமே விரும்பினால் நீ என்ன செய்வாய். அல்லது நான் என்ன செய்ய?. எப்படி சமாதானத்தை ஏற்படுத்த?. போர் நடப்பதும் நடக்காததும் உன் விருப்பத்தால் மட்டுமே அல்ல. கௌரவர்களின் ஆசையாலும் அல்ல. இது பிராரப்த கர்மா. நான் உன் புகழை சந்தேகிக்கவில்லை. மாறாக உன் தேஜஸைத் தூண்டி விடுகிறேன். ஒரு விஷயத்தை அருகிலிருந்தும் தொலைவிலிருந்தும் பார்க்க சொல்லித் தருகிறேன்.

இந்த விஷயத்தை அருகிலிருந்து பார்த்தால் திரௌபதிக்கு அவமானம் நேர்ந்த கணமே துரியோதனனும், துச்சாதனனும், கர்ணனும் உங்களால் கொல்லப்பட்டிருக்க வேண்டும். ஏன் இப்படி நடக்கிறது என்ற விஷயத்தை பார்த்தால் உங்கள் பலம் பெருகவும், ஆக்ரோஷம் அதிகரிக்கவும் நீங்கள் ஐவரும் ஒருமுகப்பட்டு குறி பிசகாது காரியத்தில் இறங்கவும் இந்த வேதனை தேவைப்பட்டிருக்கிறது. அடிமட்ட மக்களின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள இந்த அஞ்ஞாத வாசம் சொல்லித் தந்திருக்கிறது. இந்த யுத்தம் உன் பொருட்டும் துரியோதனன் பொருட்டுமா? இல்லை. இந்த அரசர்களுக்கு கீழேயுள்ள பொதுமக்களை எண்ணிப் பார். பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிற அந்த மக்களுக்காக போர். அட்டகாசம் செய்கின்ற க்ஷத்திரியர்களை அடக்குவதற்கான போர். உன்னை நீ உணரவே உன்னை நான் தூண்டி விட்டேன்."

அங்கு அமைதி நிலவ அர்ஜுனன் பேசத் துவங்கினான்.

(தொடரும்)

வனவாசத்தில் பக்குவமான மனங்கள்

மகாபாரதம்

96

“திருதராஷ்டிரனுடைய பேராசை கருதியும் எங்களுடைய ஏழ்மையான நிலைமையைக் கருதியும் நீங்கள் சமாதானத்திற்குப் போகாதீர்கள். சமாதானம் பேசுவது ஒரு புருஷார்த்தம், புருஷ லட்சணம் என்பதாக அதில் ஈடுபடலாம். ஆனால், நீங்கள் சொன்ன பிராரப்த கர்மா மிகவும் தெளிவானது. திரௌபதிக்கு அவர்கள் செய்த தீங்கே எங்களுக்கு ஏற்பட்ட பெரிய அவமானம். மனைவியின் மீது கை வைத்தும் பாண்டவர்கள் சும்மா இருக்கிறார்கள் என்ற ஏளனத்திற்கு ஆளாகி விட்டோம். இதை நினைக்க நினைக்க மனம் பொங்குகிறது. துரியோதனன் சாவு என் கையில் உறுதியாகி விட்டது. அவனை மனதில் பலமுறை கொன்று விட்டேன். கெட்டுப் போன ஒரு க்ஷத்திரியனை கொன்றுதான் ஆக வேண்டும். இதற்கு வேறு யார் முன் வருவார்கள். க்ஷத்திரியன்தான் வரவேண்டும். பணிவான சொற்களால் ஐந்து கிராமங்களையாவது கொடு என்று கேட்பது அவன் கொடுக்க மாட்டான் என்று தெரிந்து தானே. அவனோடு சமாதானத்தில் ஈடுபடுவது தரிசு நிலத்தில் விதை விதைத்தது போல. ஸ்ரீகிருஷ்ணா, இந்த நேரத்தில் எது உசிதமோ அதை செய்யத் துவங்குங்கள்.”

ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனன் பக்கம் திரும்பி அமர்ந்தார். அவன் பேச்சுக்கு பதில் சொல்லத் துவங்கினார். “நான் ஒன்றும் புதிதாக சமாதான முயற்சியைத் துவங்கி விடவில்லை. இது ஒன்றும் முதன் முறையாக நடைபெறவில்லை. விராடதேசத்து விளிம்பில் தனி ஒருவனாய் அவர்களை சிதறடித்த போது பீஷ்மர் உன்னை சுட்டிக் காட்டி இவனை உன்னால் தாங்க முடியாது. இவன் ராஜ்யத்தை திருப்பிக் கொடுத்து விடு, உன்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் என்று பேசினார். துரியோதனன் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு வினாடி கூட தன்னுடைய பிடிவாதத்தை விட்டு கீழிறங்கவில்லை. இங்கே யுதிஷ்டிரரின் விருப்பப்படி நான் சமாதானம் செய்ய தூது போகிறேன். இது வெற்றியடையாது. துரியோதனன் செய்த பாவங்களுக்கு அவனை எப்படித் தண்டிக்க வேண்டுமென்றுதான் நாம் சபை கூட்டி யோசிக்கவேண்டி வரும்.”

நகுலன் நடுவே கை கூப்பியது கண்டு ஸ்ரீகிருஷ்ணர் அவனைப் பேச அனுமதித்தார்.

“நாம் யோசனை செய்யும்படியாகத்தான் உலகில் எல்லா விஷயங்களும் நடக்கின்றன என்று சொல்வதற்கில்லை. மனித மனம் விசித்திரமானது. ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொரு வடிவை எடுக்கக்கூடியது. சூதாட்டத்தில் எல்லாம் இழந்து வனவாசம் போனபோது எங்களுக்கு ராஜ்யத்தின் மீது பற்றே இருக்கவில்லை. நல்லவேளை தப்பித்தோம் என்று மகிழ்வடைந்தோம். இந்த வனச் சுகம் வேறு எவருக்குக் கிடைக்கும் என்று இறுமாந்தோம். போரிட வேண்டும் என்ற எண்ணமே அப்பொழுது வரவில்லை. அஞ்ஞாத வாசத்தின்போது க்ஷத்திரியர்களின் அலட்டலும், அட்டகாசமும் யார் யாரை எப்படி பாதிக்கின்றன என்பதைப் புரிந்து கொண்டோம். மனிதகுலம் துண்டு துண்டாகக் கிடந்தது. இப்பொழுது ஒரு இடத்திலிருந்து நமது ராஜ்யத்தை



நாம் எப்பாடுபட்டாவது பெற வேண்டும் என்று யோசிக்கத் துவங்குகிறோம். கவசம் பூண்டு ஆயுதங்கள் தரித்து தேரில் ஏறும் போது இந்தக் கொலைவெறி அதிகமாகும். எப்பாடுபட்டாவது என்ற சமாதானம் என்ற எண்ணம்போய் அடித்து நொறுக்கு, கொன்று பிடுங்கு என்ற ரௌத்ரமும் வரும். இந்தப் போரின் பயத்தை துரியோதனனுக்குக் காட்டுங்கள். உடம்பில் மாமிசத்தையும், ரத்தத்தையும் அதிகரிக்கின்ற மனிதன் எங்களை ஜெயித்து விட முடியுமா. அங்கே விதுரர் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர் சரியான விஷயத்தை சரியானபடி கூறுவார். நீங்களும் அவரும் சேர்ந்து மனம் வைத்தால் கெட்டுவிட்ட காரியத்தையும் வெற்றிக்கு கொண்டு வர முடியும்."

ஸ்ரீகிருஷ்ணர் இப்போது சகாதேவனை பார்த்தார். அவன் கை கூப்பினான்.

"துரியோதனனை வதம் செய்ய வேண்டுமென்பதில் எனக்கு எந்தக் கருத்து மாறுபாடும் இல்லை. திரௌபதியை நடுச்சபையில் அவர்கள் அவமானப்படுத்தியதை என்னால் மறக்க முடியாது. மன்னிக்கவும் இயலாது. துரியோதனனின் மரணத்தை நான் கொக்கரிப்போடு கொண்டாடுவேன். போர் தான் முடிவு. ஒருவேளை யுதிஷ்டிரரும், பீமசேனனும், அர்ஜுனனும் போரற்ற தர்மத்தை பின்பற்றினாலும் நான் துரியோதனனை போர் செய்து கொல்லவே விரும்புகிறேன். இதில் எந்த ஊசலாட்டமும் இல்லை."

சாத்யகி கைகூப்பினார். "சகாதேவனின் கோபம் எவ்வளவு அழகாக இருக்கிறது. தோலும் மரவுரியும் தரித்து வனத்தில் அலைந்த பாண்டவர்களைக் கண்டு எவ்வளவு வருத்தப்பட்டீர்கள். எவ்வளவு கோபப்பட்டீர்கள். உங்களுக்கே அப்படிப்பட்ட மனோநிலை என்றால் போரில் கடுமையைக் காட்டும் சகாதேவன் கூறியது உத்தமமல்லவா. ஸ்ரீகிருஷ்ணா போர் நடக்கட்டும்" என்று சொல்ல, அங்கு கூடியுள்ள மன்னர்கள் சிம்மநாதம் செய்தார்கள்.

சாத்யகியின் பேச்சுக்குப் பிறகு சபை மௌனமாக இருந்தது.

திரௌபதி எழுந்து நமஸ்கரித்தாள். "இந்தச் சபையில் நான் சொல்ல வேண்டியவனவும் இருக்கின்றன. எனக்கு நேர்ந்தது போன்ற அவமானம் எந்தப் பெண்ணுக்கும் நிகழ்ந்திருக்காது. நிகழவும் கூடாது. நான் திரௌபதன் என்று புகழ்மிக்க மன்னனுக்கு மகளாக பிறந்தேன். அவர் வளர்த்த யாக குண்டத்தில் தோன்றினேன். வீரமிக்க திருஷ்டத்யும்னனின் சகோதரியாக வளர்ந்தேன். கௌரவம் மிகுந்த அஜமீட குலத்தில் திருமணமாகி பாண்டுவின் மருமகளாய் ஐந்து மாவீரர்களின் பட்டத்து ராணியாய் ஆனேன். அந்த ஐந்து வீரர்களும் எனக்கு ஐந்து மகாரதி புதல்வர்களை அளித்துள்ளார்கள். அபிமன்யு தங்களுக்கு மருமகன் என்பது போல என் புதல்வர்களும் உங்களுக்கு மருமகன்கள். இத்தனை கௌரவமும் சௌபாக்கியமும் இருக்கும்போதே நான் கேசம் பற்றி சபைக்கு துச்சாதனனால் இழுத்து வரப்பட்டேன். ஒற்றை ஆடையுடன் ரத்த மயமாக இருந்தேன் என்பதைப் புரிந்து கொண்டும் அங்கு எவரும் எதிர்த்துப் பேசவில்லை. எனக்கு ஆதரவாக இல்லை. பஞ்சபாண்டவர்கள் உயிரோடு இருக்கும் பொழுதே நான் கௌரவர்களுக்கு முன்பு தாசியானேன். நான் இவர்களை உற்றுப் பார்த்தேன். உடம்பு நடுங்க கவனித்தேன். இவர்கள் யாரும் காப்பாற்ற வரவில்லை. அப்பொழுதுதான் கோவிந்தா என்னை காப்பாற்று என்று உங்களை நோக்கிக் கதறினேன். உன் பெயரைச் சொல்லி நான் கதறியது கேட்டு திருதராஷ்டிரன் பயந்து போனார். நீ வேண்டும் வரம் என்ன கேள் திரௌபதி என்று கேட்டார். நான் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வேண்டும் என்றும், பாண்டவர்களின் ஆயுதங்களை திரும்பத் தரவேண்டும் என்றும் கோரினேன். ஒரு தர்மப்படி நான் பீஷ்மர், திருதராஷ்டிரன் இருவருக்குமே மருமகள். அவர்களுக்கு முன்னாலேயே நான் அசிங்கப் படுத்தப்பட்டேன். உண்மையில் அதற்குப் பிறகு ஒரு முகூர்த்தம் கூட துரியோதனன் உயிரோடு இருந்திருக்கக் கூடாது. இதுவரை இருக்கிறான். உண்மையிலேயே உங்களுக்கு என் மீது அன்பு இருக்குமானால் அக்கறை இருக்குமானால் கௌரவர் மீது கோபம் கொள்ளுங்கள். நீங்கள் சமாதானம் பேசும் போதெல்லாம் துச்சாதனன் கையில் சிக்கி ஆடை நிலைகுலைய சபை நடுவே இழுக்கப்பட்ட பெண்ணை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

யுதிஷ்டிரரும், பீமனும், அர்ஜுனனும் சமாதானம் பேசினால் வதைக்கப்படத் தகாதவன் வதைக்கப்படுவது எவ்வளவு பெரிய குற்றமோ, அவ்விதமே வதைக்கப் படத் தகுந்தவன் வதைக்கப்படாதது பூமிக்கு கேடு. ஒருவேளை பஞ்சபாண்டவர்கள் பழி தீர்க்காவிட்டால் என் தகப்பனையும், சகோதரனையும் வைத்தே நான்

பாலகுமாரன்



பழிதீர்ப்பேன். அமைதி வேண்டும் என்பது பீமன் பேசுவது என்னை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது. பதிமூன்று வருடங்கள் இந்தக் கோபத்தோடு நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தமேயில்லை.” அவள் கதறத் துவங்கினாள்.

ஸ்ரீகிருஷ்ணர் கருணையுடன் அவளைப் பார்த்தார். “ஹே கிருஷ்ணே, (கருப்பு நிறத்தவளே) கவலைப்படாதே. கண்ணுக்குத் தெரியாத சக்தி ஒன்றினால் யுதிஷ்டிர, பீம, அர்ஜுன, நகுல, சகாதேவர்கள் தூண்டப்படப் போகிறார்கள். அவர்கள் பக்கத்துப் பெண்கள் கதறி அழுவதை நீ காணப் போகிறாய். கெளரவர்களின் மரணத்தைக் காணப் போகிறாய். கெளரவர்கள் இறப்பது உறுதி. அவர்கள் நாசம் உறுதி. இமயம் தன்னிடத்திலிருந்து விலகலாம். நட்சத்திர மண்டலம் குலையலாம். ஆனால், என் வார்த்தைகள் பொய்யாகாது. கிருஷ்ணே, நீ அழுவதை நிறுத்து. உன் பகைவர்கள் வெகு விரைவாக கொல்லப்படப் போவதையும் உன் கணவர்கள் ராஜ்ய லக்ஷ்மியை தரிப்பதையும் நீ காணத்தான் போகிறாய். இது சத்தியம்” என்று சீறினார்.

சபை ஒருவிதமான பயத்தில் உறைந்தது.

*இரவு முடிந்து சூரியன் உதிக்கத் தொடங்கிய நேரத்தில் எல்லோரும் ஒன்று கூடினார்கள். பல்வேறு சிந்தனைகள் கூடிய தூக்கத்தில் இருந்ததால் அங்குள்ளோர் முகம் களைப்புற்று இருந்தது.

கார்த்திகை மாதம் ரேவதி நட்சத்திரத்தில் மைத்ர என்ற முகூர்த்தம் உண்டானதும் ஸ்ரீகிருஷ்ணர் தான் தங்கிய இடம் விட்டு வெளியே வந்து யாத்திரையைத் துவக்கினார். இந்த முகூர்த்தத்தில் கிளம்புகிறேன் என்று அறிவித்தார். சுற்றியுள்ள ரிஷிகளின் வாழ்த்துரைகளை கேட்டார். அந்தணர்களின் ஸ்லோகங்களை கேட்டபடி நீராடினார். புனிதமான ஆடையணிந்து சந்தியாவந்தனம், சூரிய வந்தனம், அக்னி ஹோத்ரம் போன்ற கடமைகளைச் செய்தார். காளையின் முதுகு தொட்டு வணங்கினார். அந்தணர்களை நமஸ்கரித்தார். அக்னியை வலம் வந்தார்.

சாத்விகிக்கு எதிரே போய் ‘யுயுதான், என் தேரில் சங்கு, சக்கர, கதா, அம்பரா தூணிகள் மற்றும் சக்தி முதலிய எல்லா வித ஆயுதங்களையும் எடுத்து வீசும் விதமாக வை. ஒருவன் பலமாக இருந்தாலும் பலவீனமான எதிரியை அவமதிக்கக் கூடாது. துரியோதனன், கர்ணன், சகுனி துஷ்டர்கள். அவர்களிடம் எச்சரிக்கையோடு இருப்பது அவசியம்’ என்றார்.

இதைக் கேட்டு அவருக்கு முன் செல்லும் போர் வீரர்கள் தேரை பூட்டுவதற்காக ஓடினார்கள். விரைவாகப் போகும் அந்த உறுதியானத் தேர் இரண்டு சக்கரங்களை கொண்டிருந்தது. அமர்ந்து கொள்ள புலித்தோல் இருந்தது. தேரின் கொடியில் கருடச் சின்னம் பதிக்கப்பட்டிருந்தது. தேர் நகரும் பொழுது

கம்பீர ஒலி வந்தது. வசிஷ்டர், வாமதேவர், பூரித்யும்னர் போன்ற தேவ ரிஷிகளை தேரில் ஏறி வலம் வந்து நமஸ்கரித்தார். அவர்கள் வாழ்த்துரை எழுப்பினார்கள். தேர் அஸ்தினாபுரம் நோக்கி கிளம்பியது. யுதிஷ்டிரரோடு அர்ஜுனனும், பீமனும் இன்னும் பல அரசர்களும் அவரவர் குதிரைகளில் ஏறி அவரை வழியனுப்புவதற்காக சிறிது தூரம் பின் தொடர்ந்தார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் போய் நின்று விரைவாகப் போவதற்கு விடை பெற்றார்கள். அப்பொழுது யுதிஷ்டிரர் பேசத் துவங்கினார்.

"ஒரு அபலையாய் யார் எங்களை வளர்த்து ஆளாக்கினாரோ எங்களுக்காக உபவாசத்திலும், தவத்திலும் ஈடுபட்டிருப்பதே அவர் வேலையாகி விட்டதோ, தேவ அதித பூஜையிலே நிரந்தர அக்கறை இருக்கிறதோ, எங்கள் ஐந்து பேரிடம் ஒரே விதமான அன்பு இருக்கிறதோ, யார் துரியோதனன் பயத்திலிருந்து எங்களை காப்பாறினோரோ, யார் எங்களுக்காக எப்போதும் துயரை அனுபவித்துக் கொண்டிருக்கிறாரோ அந்த துயரை அனுபவிக்க தகுதியற்ற எங்கள் தாய் குந்திதேவியை சந்தித்து அவர் நலம் விசாரியுங்கள். எங்கள் வணக்கத்தை கூறுங்கள். ஏராளமான ஆறுதலை அளியுங்கள். திருமணம் ஆகி மாமனார் வீட்டிற்கு வந்ததிலிருந்து அவர் துயரத்தையே அனுபவித்து வருகிறார். எங்கள் துயரங்கள் அனைத்தும் விலகி விடும். ஆனால் எங்களைப் பற்றி துயரத்தில் இருக்கும் அந்த தாய்க்கு எங்களால் நிம்மதி தர முடியுமா. அப்படி ஒரு காலம் உண்டா. நாங்கள் காட்டிற்கு போன போது அழுதபடியே எங்கள் பின்னால் அவர் வந்த காட்சி என் மனதில் இருக்கிறது. நாங்கள் அவரை எந்த சமாதானமும் செய்யாமல் அங்கேயே விட்டு விட்டு வந்து விட்டோம். புதல்வர்கள் பற்றிய கவலை மரணத்திற்கு ஒப்பான துயரம். நீங்கள் எங்கள் தாயை வணங்கிய பின்னர் பீஷ்மர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமா போன்றவர்களிடம் எங்கள் அன்பைச் சொல்லி ஆலிங்கனம் செய்யுங்கள். நீங்கள் போகும் காரியம் வெற்றி அடையட்டும்" என்று கிருஷ்ணரை பிரதட்சணமாக வலம் வந்து நகர்ந்தார்.

ஸ்ரீகிருஷ்ணர் நகர, அர்ஜுனன் தொடர்ந்தான். குதிரையை அவரிடம் நெருங்கிக் கொண்டு வந்தான். அவன் என்ன சொல்லப் போகிறான் என்று கிருஷ்ணர் ஆவலுற்றார்.

"எங்களிடையே ஒரு இரகசிய ஆலோசனை நடைபெற்றது. இந்த ராஜ்ஜியத்தில் பாதியை கொடுத்தால் கூட போதும். நாம் முழு மனதோடு அதை ஏற்றுக் கொண்டு அமைதியாகி விடுவோம் என்று உறுதி ஏற்றோம். ஆனால் துரியோதனன் இதற்கு மறுத்தால் அவன் என் கையால் மரணமடைவதைத் தவிர வேறு வழியில்லை."

அர்ஜுனன் பேசி விட்டு விலகிக் கொள்ள அந்தத் தேர் விரைவாகப் போயிற்று. வானத்தையே உறிஞ்சி விடுவதைப் போல ஒரு வேகத்தைக் கொண்டது.

வழியில் ஒரு மரத்தடியில் மகரிஷிகள் குழுமியிருந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணர் தேரின் வேகத்தை மட்டுப்படுத்தி நிறுத்தினார். அந்த மரத்தடியில் உள்ள மகரிஷிகள் அவருக்கு ஆசிர்வாதம் செய்தார்கள். கடுமையான விரதங்களை மேற்கொண்டிருக்கும் அந்த மகரிஷிகளை கை கூப்பி வணங்கியபடியே அவர் ஒவ்வொருவருக்கும் அருகில் நின்று உற்றுப் பார்த்தார். நாரதர், அதஹஷிரா சர்ப்பமாலி, தேவலர், அர்வாவசு, சுஜானு, மைத்ரேயர், சுனகர், பலி, பகன், ஸ்தூலசீரா, ஸ்ரீகிருஷ்ணதைவபாயனர், ஆயோததௌம்யர், அணிமாண்டவ்யர், கௌஸிகர், த்ரிஷவனர், பர்னாதர், கடாஜானுகர், மௌஞ்சாயன், வாயுபகூஷன், சாலிகன், சீலவான், அசனி, தாதா, சூன்யபால, அக்ருதவ்ருண, ஸ்வேத கேது, பரசுராமர் ஆகியோர் ஆவர்.

பரசுராமர் முன் வந்து ஸ்ரீகிருஷ்ணரை மார்போடு அணைத்துக் கொண்டார்.

"நீங்கள் அஸ்தினாபுரம் போவதை உணர்ந்து நாங்களும் அங்கு போவதற்கு ஒன்று திரண்டிருக்கிறோம். புராதானமான தேவ அசுர போரை நாங்கள் பார்த்திருக்கிறோம். அஸ்தினாபுரத்து பெரும்சபையில் பல மன்னர்கள் சூழ அமர்ந்து யுத்தம் பற்றிய உங்கள் கொள்கைகளை கேட்க ஆவலாக இருக்கிறோம். தர்ம, அதர்மங்களை அங்கு பேசுவீர்கள் அல்லவா. அதை கேட்பதற்காக நாங்களும் அங்கு வர இருக்கிறோம். உங்கள் யாத்திரை தடையற்றதாகட்டும். அந்த சபையில் நீங்கள் பிரகாசிக்கப் போவதை இப்போதே உணர்கிறோம்."

(தொடரும்)

தெரிவது பிம்பமல்ல, பரப்பிரம்மம்!

நைவ கிஞ்சித்கரோமீதி யுக்தோ மன்யேத தத்வவித்
பச்யஞ் ச்ருண்வன் ஸ்ப்ருசஞ் ஜிக்ரன்னச்னன் கச்சன்
ஸ்வபஞ் ச்வஸன் (5:8)
ப்ரலபன் விஸ்ருஜன் க்ருஹ்ணன்னுன்மிஷந் நிமிஷன்னபி
இந்தரியாணீந்த்ரியார்த்தேஷு வர்தந்த இதி தாரயன் (5:9)

''அர்ஜுனா, ஆன்ம தத்துவத்தைப் பரிபூரணமாக உணர்ந்த ஒரு யோகி, என்றுமே தன் புலன்களின் இச்சைகளுக்கு அடிமையானவன் இல்லை. ஆமாம், பார்ப்பது, கேட்பது, மேனியைத் தீண்டுவது, முகர்வது, அருந்துவது, நடப்பது, உறங்குவது, சுவாசிப்பது, பேசுவது, கழிவை வெளியேற்றுவது, கண்கள் திறப்பது-மூடுவது-சிமிட்டுவது ஆகிய இவை எல்லாமே எல்லா புலன்களும் தத்தமது பொருட்களில் சுழலுபவைதானே தவிர, மற்றபடி அவற்றில் எதையும் தான் செய்வதாக அவன் கருதுவதில்லை.''

தன் உடல் இயக்கங்களில் தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ளாதவனே ஞானி! அவன்தான் ஆன்ம தத்துவத்தை அறிந்தவன்.

விஞ்ஞானம் ஐம்பூதங்களைத் தான் அலசுவதாகச் சொல்லிக் கொள்கிறது. ஆகாயம், பூமி, நீர், நிலம், காற்று என்ற அந்த இயற்கைகளைத் தான் ஆராய்வதாகச் சொல்லிக் கொள்கிறது. இந்த மமதையின் உச்சம்தான், அந்த இயற்கையை அனுமானிக்க முயற்சிக்கும் அதன் கோமாளித்தனம்தான், அந்த இயற்கையை அறுதியிடுகிறது. ஆமாம், இன்ன தேதியில், இன்ன பகுதிகளில் கடும் புயல் வீசும், மழை பொழியும் என்றெல்லாம் சொல்லி 'ரெட் அலர்ட்' கூட அறிவிப்பார்கள். ஆனால் புயலும், மழையும் இவர்களை கேலி செய்வதுபோல இவர்கள் பக்கமே திரும்பாது போய்விடும்!

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே மிகச் சரியாக குறிக்கப்பட்ட அமாவாசையும், பௌர்ணமியும் அந்தந்த நாளில், நாழிகையில், மிகச் சரியாக நிகழ்வதைக் கண்டு, அந்த பஞ்சாங்கப் புலிகளை வியந்து தாமும் அவர்களைப் போலவே கோடிழுத்து சூடுபோட்டுக்கொள்வது தான் இன்றைய விஞ்ஞானப் பூனை!

நாழிகைத் தப்பாமல் திதிகளையும், நட்சத்திரங்களையும், நாளையும், கிழமையையும், வாரத்தையும், மாதத்தையும், வருடத்தையும்

பகவத் கீதை

75



பிரபுசங்கர்

அன்றே கணித்தவர்கள், தம் புலன்வழி போகாதவர்கள். அவ்வாறு கணித்ததும் தாம் அல்ல என்ற உண்மையையும் உணர்ந்தவர்கள்.

இன்றைய விஞ்ஞானிகள் சுய தம்பட்டம் அடித்துக்கொள்கிறவர்கள். தான் சொன்னது நடக்காது போனாலும், அதற்கு ஏதேனும் சாக்கு சொல்லத் தெரிந்தவர்கள். அவமானத்துக்கு அஞ்சாதவர்கள், பொதுநல அக்கறை இல்லாதவர்கள்.

தென்மேற்குப் பருவமழை, வடகிழக்குப் பருவமழை என்றெல்லாம் நம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மிகச் சரியாக, இறையருளால் அனுமானித்தவர்களை அவமதித்ததன் விளைவுதான் இந்த இயற்கை மாற்றம், சீற்றம், சீரழிவு எல்லாம். விஞ்ஞானத்தின் விளிம்பைத் தொட்டவர்கள் என்று புகழப்படும் ஜப்பானியர்களும் கருவிகளால் காலத்தை அனுமானிக்க முடியாது என்று உணர்ந்திருக்கிறார்கள். ஆமாம், அங்கே தொலைக்காட்சியில், “நேற்று இன்னப் பகுதியில் பெருமழை பெய்யும் என்று அறிவித்திருந்தோம். ஆனால் மழை பெய்யவில்லை அல்லவா? நிறைய பேர் குடை எடுத்துக்கொண்டு போயிருந்திருப்பீர்கள். சாரி...” என்று மன்னிப்பு கேட்கும் வழக்கம் இருக்கிறது. அங்கே!

புலனுணர்வுகள் எல்லாம் தான் சம்பந்தப்பட்டதல்ல என்ற ஞானம் ஏற்படுமானால், அனுமானிப்பதும், அந்த அனுமானத்திற்கு உடன்படாத இயற்கையின் பிறழ்வும், அவமானப் பின்விளைவுகளும் ஏற்படாதிருக்கும்.

புதிய கண்டுபிடிப்புகள் என்று விஞ்ஞானம் அறிமுகப்படுத்தப்படுபவை எல்லாம் ஏற்கெனவே உள்ளதன் இன்னொரு சாயல்தானே தவிர வேறில்லை. சிறு குழந்தை வளர்கிறது. அதற்கு வயது அதிகரிக்கிறது. உடலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. முதிய வயதில், இளமை முற்றிலுமாக உதிர்ந்துபோகிறது. இந்த கட்டத்தில் முதிய வயது என்பது ஒரு கண்டுபிடிப்பாக ஆக முடியுமா? சிறு குழந்தை உருவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட தோற்றம் கொண்ட ஓர் உருவமாய் ஆகிவிட்டதால், இது புதுசு என்று சொல்ல முடியுமா? அந்தக் குழந்தையின் பரிணாம வளர்ச்சிதானே? சிறு குழந்தைப் புகைப்படத்தையும், முதிய வயது புகைப்படத்தையும் அருகருகே வைத்து ஒப்பிட்டுப் பார்த்தாலும் இரு புகைப்படங்களிலும் இருப்பவர் ஒருவரே என்று அடையாளம் காண முடியாத பேதமை ஏற்பட்டு விடுகிறதே! ஆனால் மனிதர் ஒருத்தர்தானே? அதாவது, புகைப்படங்களை ஒப்பிட்டு அறிந்துகொள்ள முடியாத ஓர் உண்மை, வயதாகிவிட்ட இவர்தான், குழந்தையாக இருந்தவர் என்பதுதான்!

ஒரே தங்கம் பலவகை ஆபரணங்களாக ஒளிர்வதுபோலவே ஒரே சக்தி பல இடங்களில், பல ரூபங்களில் மிளிர்கிறது. கடற்கரைக்குச் செல்கிறோம். கடலின் கடைசி விளிம்பை எக்கிப் பார்க்கிறோம். அங்கே ஆகாயம் ஆரம்பிக்கிறது! முகத்தை மேலே மேலே தூக்கி, பின்னோக்கி வளைத்து அந்த ஆகாயத்தை கண்களால் அளக்கிறோம். அதன் எதிர் விளிம்பிலிருந்து பூமி ஆரம்பிக்கிறது. ஆக, ஆகாயமும், பூமியும் ஒரே சக்தியின் இரு அம்சங்கள் என்பது புரிகிறது. அதேபோல காற்று மழையையும் அழைத்து வருகிறது, தீயையும் ஜ்வாலை பொங்க வளர்க்கிறது. ஆக, காற்று, நீர், தீ எல்லாமே ஒரே சக்தியின் வெவ்வேறு அம்சங்கள்தான்!

கறுப்பான, கையில் அழுக்காக ஒட்டும் கரியை அருவெறுப்புடன் தூக்கி எறிகிறோம். அதே கரியின் பல்லாண்டு அழுத்தமான பரிமாணம், வைரமாக மினுமினுக்குகிறது. இந்தக் 'கரி'யை பெரும் பணம் கொடுத்து, நம் மேனியில் ஆபரணமாகப் புரள விடுகிறோம்.

ஆக அடிப்படைத் தத்துவம் ஒன்றுதான். அதன் அணுகுமுறைதான் வேறு வேறு. புலன்களால் நுகர்தலும், அவற்றைப் பொருட்படுத்தாததும் அத்தகையதே.

மிகவும் அயோக்கியனாக, கொடியவனாக வாழ்வை நடத்தியவன், ஏதோ ஒரு புள்ளியில் நல்லவனாக மாறிவிடுகிறான் - வால்மீகி மாதிரி. ஆனால் அந்தப் புள்ளி அவனுக்குள் ஏற்கெனவே இருந்திருக்க வேண்டும். அது இப்போது ஒளியாக வெளியே வருகிறது. இல்லாதது வராது. இதனால்தான் சிலர் ஒரு சமயம் மிகவும் நல்லவராகவும், ஒருசமயம் தீயவராகவும் நடந்துகொள்கிறார்கள். ஆகாயமும், பூமியும் போல நல்லதும், கெட்டதும் ஒருவருக்குள் சுழன்று, சுழன்று வந்துகொண்டிருப்பதன் விளைவுதான் இது.

“ஒருவனுக்கு எவ்வளவு காலம் திவ்விய சக்ஷுஸ் உண்டாகவில்லையோ, எவ்வளவு காலம் பொற்குளிகையால் பித்தளை பொன்னாக மாறவில்லையோ, அவ்வளவு காலம்வரை 'நான்தான் கர்த்தா' என்ற மதி மயக்கம் இருக்கும். அதுவரையில் 'அந்த நற்காரியத்தை நான் செய்தேன்; அந்த கெட்டக் காரியத்தை நான் செய்தேன்' என்ற வித்தியாச மனோபாவம் இருந்தே தீரும். இந்த வேறுபாடு உள்ள மனோபாவம்தான் சம்ஸாரம் நீடித்திருப்பதற்குக் காரணமாகிய மாயை. நல்வழியில் செலுத்துவதும், ஸத்வகுணம் மேலோங்கி நிற்பதுமாகிய வித்யாமாயையில் சரணம் புகுந்தால்தான் ஒருவன் ஈஸ்வரனை அடைவான். ஈஸ்வரனை நேரில் கண்டு அவனுடைய ஸ்வரூபத்தை அறிபவன்தான் உண்மையான முக்தன். அவன் மாயையாகிய

ஸமுத்திரத்தைத் தாண்டுபவன். 'ஈஸ்வரனே கர்த்தா, தான் கர்த்தா அல்லன்' என்று உணர்பவன் சரீரத்தோடு இருப்பினும் அவன் முக்தனே" என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

கண்ணாடி முன் நிற்கிறோம். நம் பிம்பம் தெரிகிறது. இப்போது கண்ணாடியை அகற்றிவிட்டால், நம் பிம்பம் தெரிவதில்லை. அதே கண்ணாடியை அகற்றாமல் நாம் நம் கண்களை மூடிக்கொண்டோமானால் இப்போதும் நம் பிம்பம் நமக்குத் தெரிவதில்லை. ஏன்? கண்ணாடி இருக்கிறது. அதன் முன்னால் நாமும் நிற்கிறோம். ஆனாலும் நம் பிம்பம் நமக்குத் தெரிவதில்லை. காரணம் கண்கள் மூடியிருப்பதுதான். கண் மூடியிருப்பதால், கண்ணாடி இல்லை என்றாகிவிடுமா, நாமும்தான் இல்லை என்றாகிவிடுமா? பிம்பமும் இல்லை என்றாகிவிடுமா? என்ன காரணம்? கண் என்பது ஒரு கருவி. அது பிம்பம் இருக்கிறது என்று நம் மூளைக்குத் தெரிவிக்கிறது. அதையே மூடிக்கொண்டுவிட்டால், எதிரே பிம்பம் இருந்தாலும், அதை மூளைக்கு அது சொல்வதில்லை; சொல்லத் தெரியவில்லை. ஏனென்றால் அது வெறும் கருவி.

இந்தத் தத்துவத்தை ஆண்டாள் வித்தியாசமாகக் கண்டாள். தன் தந்தையார் பெரியாழ்வார் கொய்துவரும் மலர்களை தன் தளிர் விரல்களால் தொடுத்து பூமாலையாக உருவாக்குவாள் ஆண்டாள். அந்த மாலையை பெரியாழ்வார் எடுத்துச் சென்று வடபத்ர சாயிக்கு சமர்ப்பிப்பார். பெருமாள் அந்த மாலையில் பேரழகுடன் திகழ்வதை அவர் ஒரு தந்தையின் பெருமையுடன் பார்ப்பார். தன் மகள் தொடுத்துத் தந்ததாயிற்றே!

ஆனால் அவர்தான் ஆண்டாளைத் தன் மகள் என்று நினைத்திருந்தாரே தவிர, ஆண்டாள் தன்னைக் கண்ணனுக்குரியவளாகவே நினைத்திருந்தாள். அவள் பார்க்குமிடமெல்லாம் அந்தப் பரந்தாமனே காணப்பட்டான். கேட்கும் உரையிலெல்லாம் அந்தப் பரம்பொருளே கேட்கப்பட்டான். நுகரும் வாசத்தில் எல்லாம் அவனே மணத்தான். அருந்தும் அனைத்திலும் அவனே சுவையாய் இருந்தான். தழுவிச் செல்லும் தென்றலிலும் அவன் ஸ்பரிசத்தால் அவள் குளிர்ந்தாள். எங்கும், எதிலும், எப்போதும் கண்ணனே என்ற அவளுடைய உணர்வு, அவளால் கண்ணன் அல்லாததாக எதையும் அறிய இயலவில்லை.

அதனால்தான் தன்னுடைய எல்லா செயல்களிலும் அவள் கண்ணனையே முன்னிருத்தினாள். அவனாலேயே அவள் செயல்பட்டாள். இது பெரியாழ்வாருக்குப் புரியவில்லை. ஒரு நாள், வழக்கம்போல வடபத்ர சாயிக்கு மாலை சாத்தப் போனவர், திடீரென்று கண்களில் வெறி கொண்டார். அந்த அழகிய மலர்ச்சரத்தினூடே மெல்லிய முடி ஒன்று படர்ந்திருந்தது. அவ்வளவு நீளமான முடி ஆண்டாளுடையதாகத்தான் இருக்கும். மலர்களைக் கொய்து குடலையில் இட்டு அவளிடம் கொண்டு சேர்ப்பதோடு அவருடைய அந்தப் பணி முடிந்துவிடுகிறது. அதற்குப் பிறகு அவற்றை வண்ணம் வாரியாகப் பிரித்து, மெல்லிய வாழை நாரினால், மலர்களின் காம்புகளுக்கு நோகாத மாதிரி, மென்மையாக முடிச்சிட்டு, தொடுத்து மாலையாக்கவேண்டியது ஆண்டாளின் பொறுப்பு. ஆனால் இந்தப் பொறுப்பில் அவள்தான் எத்தனை அலட்சியமாக இருந்திருக்கிறாள்! தன் தலையிலிருந்து முடி உதிர்வதையும், அது மலர்களோடு கலந்துவிடுவதையும், அதையும் மலர்களோடு சேர்த்துத் தொடுப்பதையும் அவள் உணரவில்லை என்றால், அவள் மனம் எங்கோ அலைபாய்கிறது. பரந்தாமனின் நினைவுத் தடத்திலிருந்து அவள் பிறழ்கிறாளோ என்று பெரியாழ்வாருக்குக் கோபமாகத்தான் வந்தது.

ஆனால் நடந்தது என்ன? மலர்ச்சரம் தொடுத்து முடித்த ஆண்டாள் தன் பூந்தளிர்க் கரங்களால் அதன் இரு முனைகளையும் பற்றியபடி பூக்குடலையை நோக்கி வந்தபோது ஒரு கண்ணாடி குறுக்கிட்டது. அந்தக் கண்ணாடியில் பிம்பிப்பது யார்? தன் உருவம் அல்லாமல் இன்னொரு உருவம்... 'கண்ணனேதான், என் கண்ணனேதான்,' என்று குதூகலித்தாள் கோதை. ஆமாம், அவனுடனேயே தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டுவிட்ட அவளால் தன் பிம்பத்தைக்கூட கண்ணனாகத்தான் காண முடிந்தது! 'அடேயப்பா, என்ன மோகனச் சிரிப்பு! இவனுக்குத் தந்தையார் கோயிலில் சூட்டுவதற்கு முன்னால் தானே சூட்டினால் என்ன?' என்று எண்ணம் கொண்ட அவள், அந்தக் கண்ணாடிக்கு அந்த மாலையை சாத்தினாள். ஆனால் அது அப்படியே நழுவி கீழே விழுந்தது. கண்ணாடி ஒரு ஜடம்தானே, அதற்கு அவளுடைய பக்தியை ஏற்றுக்கொள்ளத் தெரியவில்லை! இரண்டு, மூன்று முறை முயன்ற பிறகு ஒரு கணம் யோசித்தாள். பிம்பத்தைப் பார்த்தாள், பிறகு தன்னைப் பார்த்துக்கொண்டாள். இரண்டும் 'கண்ணனே'! உடனே அந்த மாலையைத் தான் சாத்திக்கொண்டாள். எதிரே கண்ணன் பிம்பமும் மாலை தரித்து அழகு தரிசனம் தந்தது!

ஆனால் அவளுடைய தலைமுடியோ அந்த மாலையுடன் தானும் இணைந்தால் நேரடியாக அந்தப் பெருமானை தரிசிக்கலாமே. அவன் மார்பை அலங்கரிக்கலாமே என்று கருதியிருக்க வேண்டும். அதனாலேயே அவளிடமிருந்து பிரிந்து அந்த மாலையுடன் சேர்ந்துகொண்டது. அதைப் பார்த்துதான் வெகுண்டார் பெரியாழ்வார். அவருடைய கனவில் ஸ்ரீகிருஷ்ணன் தோன்றி, 'ஆண்டாள் அணிந்த மாலையை அணிவதே தனக்கு உவப்பு' என்று கூறி, அவருடைய அறியாமையைப் போக்கி, ஆண்டாளின், பரந்தாம ஐக்கிய பாவத்தை விளக்கினார்.

புலன்களின் செயல்கள் எல்லாம் தன் செயல்கள் அல்ல, அந்தப் பரம்பொருளின் திருவிளையாடல்களே என்று ஆண்டாள் அனைவருக்கும் உணர்த்தினாள்!

(தொடரும்)

நன்னடத்தையாலே புகழ் பெறுகிறான்!

மகாபாரதம்

97

எப்படி இருந்தது ஸ்ரீ கிருஷ்ணருடைய யாத்திரை என்ற வர்ணனையும் மகாபாரதத்தில் சொல்லப்படுகிறது. பெரிய காற்று, மரங்களின் கிளைகளை உடைத்து முன்னே நகர்ந்தது. மேகமே இல்லாமல் மழை பொழியலாயிற்று. வாசனை மிகுந்த மலர்கள் அவர் தேர் மீது விழுந்தது. மழைத் துளிகள் வெப்பத்தை தணித்தன. வழி நெடுக அவரை மக்கள் வரவேற்றார்கள். பெண்கள் நறுமண மலர்களை தூவினார்கள். அந்தணர்கள் மது வர்க்கத்தை அர்பணித்து பூஜித்தார்கள். இரண்டு பக்கமும் செழுமையும், சம்பத்தும் நிறைந்த கோதுமை பயிர்களை பார்த்தவாறு பல கிராமங்களையும், நகரங்களையும் கவனித்தவாறு அவர் முன்னேறினார். உபப்லவ்ய நகரத்திலிருந்து வரும் ஸ்ரீகிருஷ்ணனை தரிசிக்க மக்கள் பெரும் ஆவல் காட்டினார்கள். வ்ருகஸ் என்ற இடத்தை அடையும்போது சூரியன் மறையத் துவங்கினான். இங்கே தங்கி அஸ்தினாபுரம் போவோம் என்றார்.

அந்த உத்தரவை கேட்ட அவருடைய வீரர்கள் உடனடியாக அங்கு கூடாரம் அமைத்தனர். ஸ்ரீகிருஷ்ணர் நீராடி வேறு உடை தரித்து மாலை நேர சந்தியை செய்து அமர, அவருடைய வீரர்கள் உணவும், பானமும் அவருக்கு தயாராக வைத்தார்கள். அந்த இடத்தில் வாழும் சான்றோர்கள் கிருஷ்ணனை தரிசிக்க வந்தார்கள். தங்கள் வீடுகளுக்கு வரும்படி வேண்டினார்கள். அங்குள்ளோர் பலரின் வீடுகளுக்கு ஸ்ரீகிருஷ்ணர் போய் வாழ்த்தி விட்டு திரும்பி வந்தார். தன் கூடாரத்திற்கு திரும்பி வந்தார். அந்த கிராமத்து மக்களுக்கு உணவு தரச்சொல்லி அவர்களோடு உலக விஷயம் பேசியபடியே இரவு உணவை முடித்தார். அனைவருக்கும் விடை கொடுத்து சுகமாக தூங்கத் துவங்கினார்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய வருகையைத் தெரிந்து திருதராஷ்டிரன் பரபரப்புற்றார்.

“ஸ்ரீகிருஷ்ணரை மரியாதையுடன் வரவேற்க வேண்டும். அவர் தர்மாத்மா. நமது நன்மைக்காகத் தான் இங்கு வருகிறார். அவரை மதிக்கப்படாதது நம்மை நாமே அவமானப்படுத்திக் கொள்வது போல. துரியோதனா, கிருஷ்ணர் வரும் வழியில் ஓய்விடங்களுக்கு ஏற்பாடு செய். அவரோடு வரும் வீரர்கள் எத்தனை என்று கணக்கிட்டு அத்தனை பேருக்கும் சுகமாக ஓய்வெடுக்கும் வசதியை செய்து கொடு.

பிருகஸ்தலம் என்கிற கிராமத்தில் கூடாரம் அமைத்து தங்கியிருக்கிறாரா. இது தகாது. உண்மையான அன்போடு மனப்பூர்வமாக அவரை வரவேற்பதற்குண்டான வசதிகளைச் செய். உன் மீது அன்பு தோன்றும்படியாக செயல்களைச் செய். பீஷ்மரே, என் உத்தரவு சரிதானா” என்று திருதராஷ்டிரன் கேட்க, பீஷ்மர் சந்தோஷம் அடைந்து சம்மதம் தெரிவித்தார்.

துரியோதனன் மறுபேச்சின்றி பிரகஸ்தல நகரத்திலிருந்து அஸ்தினாபுரம் வரை பல ஓய்விடங்களை அமைத்தான். விசித்திரமான ஆசனங்கள், நறுமணப் பொருட்கள், பலவகை போஜனங்கள், புதிய துணிகள், உபசரிப்பு பெண்கள் என்று ஏற்பாடு செய்திருந்தான்.

ஸ்ரீகிருஷ்ணர் அந்த ஓய்விடங்களில் தங்காமல் எந்த சுக சௌகரியமும் தேவைப்படாதவர் போல அஸ்தினாபுரியை நோக்கி



ம.செ

விரைவாகச் சென்றார். ஸ்ரீகிருஷ்ணர் அஸ்தினாபுரம் நோக்கி வருகிறார் என்பதை தெரிந்து கொண்டு திருதராஷ்டிரன் பரபரப்பானார்.

“என் இடத்திற்கு வந்த ஸ்ரீகிருஷ்ணரை பூஜிப்பேன். விதம் விதமான பரிசுகளை கொடுத்து என் பணிவை தெரிவிப்பேன். தங்கமயமான தேர்களை பரிசளிப்பேன். மலைஜாதி மக்கள் ஆட்டு ரோமத்தால் செய்த பெரிய கம்பளங்களை கிருஷ்ணருக்கு பரிசளிப்பேன். இரவும், பகலும் சுயமாய் ஒளிவிடும் நிர்மலமான மணி ஒன்று உள்ளது. அதை கிருஷ்ணருக்கு பரிசளிப்பேன். என் புத்ர பௌத்ரர்களை வரிசையாக நிற்க வைத்து அவரை வரவேற்கச் செய்வேன். ஸ்ரீகிருஷ்ணரை வரவேற்க அவர்கள் நடந்து செல்வார்கள். நமது மக்கள் சூரியனை தரிசிப்பது போல ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் மதுசூதனை தரிசிக்கட்டும். அவர் படை வருகையில் தூசு கிளம்பாமல் இருக்க அஸ்தினாபுரத்து தெருவெங்கும் நீர் தெளிக்கப்படட்டும். துச்சாதனன் மாளிகைதுரியோதனன் மாளிகையை விட சிறந்தது. எனவே ஸ்ரீகிருஷ்ணரை அங்கு தங்க வைக்கலாம்” என்று பரவசத்துடன் திருதராஷ்டிரன் பலதும் பேசினார்.

பாலகுமாரன்

‘‘துச்சாதனன் வீட்டில்தான் நமது பரம்பரை ரத்தினங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவைகளை ஸ்ரீகிருஷ்ணர் பார்வையிடட்டும். வேண்டுபவனவற்றை எடுத்துக் கொள்ளட்டும்” என்று வழங்கியது போல் சிரித்தார்.

துரியோதனன் முகம் சுருங்கியது. அவன் கோபத்தோடு திருதராஷ்டிரனை பார்த்தான்.

அந்த ரத்தினங்களை ஸ்ரீகிருஷ்ணருக்கு கொடுக்க நான் சம்மதிக்கவில்லை. பரிசளிப்பதற்கென்று தேச கால வர்த்தமானமுள்ளது. இந்த நேரத்தில் கிருஷ்ணருக்கு நம்முடைய செழுமையான ரத்தினங்களை தருவது பயன் தராது. நான் பயந்து போனதாய் அவர் நினைத்துக் கொள்வார். ஸ்ரீகிருஷ்ணர் ஒரு அவதாரம். மூவுலகிலும் அவர் மிகப்பெரியவர் என்று பலர் என்னிடம் சொல்லியிருந்தாலும் இந்த நேரம் அவருக்கு அந்த பரிசு அளிப்பதை நான் விரும்பவில்லை. இது கலகமான நேரம். அதிதிக்கு பிரேமை காட்டுவது கோழைத்தனமாகத் தோன்றும்.”

அப்பொழுது விதுரர் குறுக்கே பேசினார்.

“திருதராஷ்டிரா, என்ன உளறல் இது. நவரத்தினங்களை வாங்குவதற்காகவா ஸ்ரீகிருஷ்ணர் அஸ்தினாபுரம் வந்து கொண்டிருக்கிறார். அதன் மீதா நாட்டம் கொள்ளப் போகிறார். அவருக்காகவா வருகிறார், நீ பயந்து போய் வஞ்சனையாகத்தான் பேசுகிறாய். பஞ்ச பாண்டவர்களுக்கு தூதராய் அவர் வருகிறார். பஞ்ச பாண்டவர்கள் ஐந்து கிராமத்தை மட்டுமே உங்களிடம் கேட்கிறார்கள். செல்வத்தை கொடுத்தோ வேறு வகையாக புகழ்ந்தோ அர்ஜுனனிடமிருந்து ஸ்ரீகிருஷ்ணனை பிரிக்க முடியாது. ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ஜுனன் என்றால் உயிர். உன்னுடைய நவரத்தினங்களை திரும்பிக்கூட பார்க்க மாட்டார். ஒரு நீர் கலசம், அதில் கை, கால் கழுவுவதற்கான நீர் உங்களின் நலச் செய்தி. இதைத் தவிர வேறு எந்தப் பொருளையும் ஸ்ரீகிருஷ்ணர் ஏற்கப் போவதில்லை. நீங்கள் வயதானவர். பாண்டவர்களுக்கும் தந்தை. அந்த அன்போடு ஸ்ரீகிருஷ்ணரிடம் பேசுங்கள். அந்தப் பேச்சு பலன் அளிக்கும்.”

பீஷ்மர் எழுந்து நின்றார்.

“கிருஷ்ணருக்கு பரிசு கொடுங்கள். அல்லது கொடுக்காமல் இருங்கள். மரியாதை செய்யுங்கள். செய்யாமல் இருங்கள். எந்த மனோநிலைமையில் அவர் வருகிறார் என்று உங்களுக்கு புரிந்து கொள்ள முடியவில்லை. அவரை அவமானப்படுத்த முடியாது. புத்தி இருப்பின் ஸ்ரீகிருஷ்ணர் எதைச் சொன்னாலும் அதை உடனடியாக ஏற்க வேண்டும். ஸ்ரீகிருஷ்ணரை நடுவராக்கி கௌரவ பாண்டவர்களுக்கு நடுவே சமாதானம் ஏற்படுத்துங்கள். அதன் பொருட்டு பிரியமாக பேசுங்கள்.”

துரியோதனன் பலமாக தலையசைத்தான்.

‘‘பிரியமாகப் பேசுவதா, பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொள்வதா, அது ஒரு போதும் நடக்காது. நான் என்ன செய்யப் போகிறேன் என்பதைக் கேளுங்கள். நாளை கிருஷ்ணர் இந்த சபைக்கு வந்ததும் அவரை கைது செய்யப் போகிறேன். அப்படி கைது செய்தால் யாதவ குலமும், பாண்டவர்களும் என்னுடைய ஆணைக்கு கட்டுப்படுவார்கள். என்னிடம் பயப்படுவார்கள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணருக்கு இந்த விஷயம் முன் கூட்டி தெரியாமல் இருக்கின்ற உபாயத்தை எனக்குச் சொல்லுங்கள். எனக்கு உதவி செய்யுங்கள்.”

நிமிர்ந்து உட்கார்ந்திருந்த திருதராஷ்டிரன் துவண்டு சரிந்தார். என்ன சமாதானம் சொன்னாலும் தன் பிள்ளை இப்படி பேசுகிறானே என்று முகம் பொத்தி அழுதார்.

அவர் மந்திரிகளும், சேனாபதிகளும் தலை குனிந்து கலங்கினார்கள்.

"துரியோதனா, என்ன இப்படி பேசுகிறாய். ஸ்ரீகிருஷ்ணர் தூதனாக இங்கு வருகிறார். அவர் நமது அன்புக்கு உகந்தவர். நமது சம்பந்தி. அவர் கௌரவர்களுக்கு எந்த குற்றமும் செய்யவில்லை. என்னவென்று அவரை கைது செய்வாய். கைது செய்து என்ன காரணம் கூறுவாய். ஏன் இப்படி வெட்கமில்லாதவனாக இருக்கிறாய்."

"திருதாராஷ்டிரா", பீஷ்மர் எழுந்து உரக்க கத்தினார்.

"ஒரு வார்த்தையில் உன் பிள்ளையை அடக்காமல் ஏன் அழுது கொண்டிருக்கிறாய். மந்த அறிவுடைய உன் புதல்வன் யார் பேச்சையும் கேட்காது தான்தோன்றியாய் அலைந்து கொண்டிருக்கிறான். இவன் தன் கூட்டத்தாரோடு ஸ்ரீகிருஷ்ணர் கையால் ஒரு நொடியில் அழியப் போகிறான். மகாபாவியும், கொடியவனுமான இந்த துரியோதனன் பேச்சை நான் தொடர்ந்து கேட்க விரும்பவில்லை."

வயதானவராக இருந்தாலும் கம்பீரம் குறையாத பீஷ்மர் அந்தச் சபையை விட்டு புயல் போல வெளியேறினார்.

ஸ்ரீகிருஷ்ணர் தன் இரண்டு சக்கரத் தேரோடு, அவரை பாதுகாக்கும் வலுவான படையோடு அஸ்தினாபுரத்தை நெருங்கினார். அவர் வருகையை அறிந்த மக்கள் வீடுகளை விட்டு தெருவில் இறங்கி கை கூப்பி வணங்கினார்கள். மண் தரையில் விழுந்து நமஸ்கரித்தார்கள். எழுந்து ஆரவாரம் செய்தார்கள். அந்தத் தேருக்கு பின்னே ஓடினார்கள். அதன் வேகத்திற்கு தொடர முடியாமல் கை அசைத்து விடை கொடுத்தார்கள். அஸ்தினாபுரத்து வாசலைத் தாண்டி ஒரு அகலமான தெருவில் பீஷ்மர் முன் வந்து வரவேற்றார். பிறகு விதுரர், பிறகு துரோணர், பிறகு கிருபர் என்று மகாரதிகள் பலரும் மாளிகை விட்டு வெளியே வந்து வரவேற்றார்கள். தேரை பிடித்து நடந்தபடியே மாளிகை வாசலுக்குப் போனார்கள். மாளிகைக்கு உள்ளே போய் வாசற்புறத்தில் நிற்கின்ற திருதராஷ்டிரனை கை பிடித்து அழைத்து வந்தார்கள்.

"கேசவா, கேசவா, கேசவா" திருதராஷ்டிரன் திசை தெரியாது கை கூப்பினான். மந்திரிப் பிரதானிகள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். அரசவையின் உள்ளே மலர்ந்த முகத்தோடு கிருஷ்ணர் நுழைந்தார். யாரெல்லாம் குழுமியிருக்கிறார்கள் என்று கவனித்துக் கொண்டே வந்தார். அவருக்கு உட்கார தங்க சிம்மாசனம் போடப்பட்டது. கால் அலம்பப்பட்டது. நீர் தரப்பட்டது. எல்லா வித உபசாரங்களும் நிறைவேறின. கிருஷ்ணர் அவற்றை ஏற்றுக்கொண்டு மாளிகை விட்டு வெளியே வந்தார். துச்சாதனன் வீடு தங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னதும் மறுத்தார். விதுரருடைய வீட்டிற்குப் போனார். விதுரருக்கு நிலை கொள்ளாத சந்தோஷம்.



"நீங்கள் என் வீட்டிற்கு வந்ததாக நான் கருதவில்லை. நீங்கள் எல்லா உயிரிலும் அந்தர்யாமியாக இருக்கிறீர்கள். உங்களுக்கு வீடு என்பது ஏது. ஆயினும் வருக. உங்கள் வரவு நல்வரவாகுக."

"விதுரா, நீ அறிவில் சிறந்தவன். பாண்டவர்களைப்பற்றி உனக்குச் சொல்கிறேன் கேள்" என்று பாண்டவர்களின் மனோநிலைமையை விவரித்தார். விதுரர் மௌனமாக கேட்டுக் கொண்டதும் ஸ்ரீகிருஷ்ணர் குந்தியை சந்திக்கும் ஆவலைச் சொல்ல, விதுரர் அவரை குந்தி இருக்கும் அரண்மனைக்கு அழைத்துப் போனார்.

குந்தி அவரைப் பார்த்து இரண்டு கைகளையும் விரித்து 'ஹே கிருஷ்ணா' என்று வாய் விட்டு அலறினாள். ஸ்ரீகிருஷ்ணர் அவள் தோள்களை அணைத்து சமாதானம் செய்தார்.

"எதற்காக என் குழந்தைகளுக்கு இவ்வளவு துயரம். என்ன பாவம் செய்தோம். ஒன்றல்ல இரண்டல்ல. பதினான்கு வருடமா ஒரு குடும்பம் கொடுமையை அனுபவிக்கும். என் புருஷன் பாண்டு நல்லவன். மகாத்மா. ராஜ்ஜியத்தில் இருப்பதைவிட வனவாசத்தில் ஈடுபாடு கொண்டவன். அவர் குழந்தைகளை அருமையாக வளர்த்தார். அவர் இழப்புக்குப் பிறகு நான் அஸ்தினாபுரம் வந்தேன். அரண்மனையில் தங்கினேன். குழந்தைகள் பல்வேறு சுகங்களை அனுபவித்தார்கள். உயர்ந்த மாளிகையில் தோலாலான மிருதுவான படுக்கையில் அயர்ந்து தூங்கினார்கள். விரும்பியதும் பலதும் சாப்பிட்டார்கள். வேலையாட்களும், பணிப் பெண்களும் சூழ



வளர்ந்தார்கள். அந்தணர்களால் நல்ல விஷயங்களை கற்றுக் கொண்டார்கள். தர்மத்தில் பற்றுள்ள மனிதன் என் மகன் யுதிஷ்டிரன் சத்திய பிரதிக்ஞன், தர்ம சாஸ்திர ஞானம் அறிந்தவன், பார்ப்பதற்கே பிரியமானவன். எப்படி இருக்கிறான். மகாபலசாலியான பத்தாயிரம் யானைகளுக்கு சமமான புஜத்தை உடைய கீசகனை வதைத்த பீமசேனன் எப்படி இருக்கிறான். இயல்பாகவே கோபமானவன். ஆனால் சகோதரனின் பிரியத்திற்கு கட்டுப்பட்டவன். பார்ப்பதற்கு பயங்கரமானவன். ஆனால், அளவற்ற தேஜஸ்வி. அந்த பீமன் நலமாக இருக்கிறானா. வில் வித்தையில் கார்த்த வீர்யார்ஜுனனுக்கு இணையாக உள்ள புலனடக்கம் உள்ள இந்திரனுக்கு சமானமான அந்த அர்ஜுனன் எவ்விதம் இருக்கிறான். எவராலும் வெற்றி பெற முடியாத அந்த வீரன் எப்படி இருக்கிறான். எல்லா பிராணிகளிடமும், இரக்கமுடையவனும், வெட்கமுடையவ, அஸ்திர வித்தை தெரிந்தவனும், தார்மீகமானவனும், சுகுமாரனுமாக இருக்கிற சகாதேவன் எப்படி இருக்கிறான். அந்த மாத்ரி குமாரனைப் பற்றி எனக்குச் சொல். வாலிபனும், வீரனும், என்னால் அதிகம் கொண்டாடப்பட்டவனுமான நகுலன் எப்படி இருக்கிறான். விசித்திரமான கலைகள் தெரிந்தவனும், சிறந்த வில்லாளியுமான அவனைப் பார்க்காமல் என்னால் இருக்க முடிந்ததில்லை. ஆனால் பதினான்கு வருடம் பிரிந்திருக்கிறேன் பார், நான் எப்பேர்பட்ட தாய்.

ஸ்ரீகிருஷ்ணா, திரௌபதி எங்ஙனம் இருக்கிறாள். ஸ்ரீகிருஷ்ணைக்கு கிடைத்தது சாபமா, வரமா. புத்திர லோகத்தை விட பதி லோகம் தான் சிறந்தது என்றும் தெளிவாக யோசித்து குழந்தைகளை அரண்மனையில் விட்டுவிட்டு கடுமையான காட்டிற்கு நடுவே புருஷர்களோடு வாழ்ந்திருக்கிறாள். இது யாருக்கும் கிடைக்கக்கூடியது அல்ல. ஆனால், இது யாருக்கும் வரவும் வேண்டாம். நான் என் புதல்வர்களின் பிரிவால் எப்படி துயறுகிறேனோ அப்படித்தானே திரௌபதியும் தன் குழந்தைகளை நினைத்து ஏங்கியிருப்பாள். அவள் வயிறு கலங்குவது அவ்வப்போது நன்கு தெரிந்தது.

யுதிஷ்டிர பீம அர்ஜுன நகுல சகாதேவர்களைவிட இங்கு அதிக துயருற்றவள் திரௌபதிதான். நிறைந்த சபையில் ஒற்றை ஆடையுடன் மாமனார்களுக்கு எதிரே நிற்க வைக்கப்பட்டாள். இதற்கு என்ன நியாயம் கற்பிக்க முடியும். அவள் இழுத்து வரப்பட்டாள். இதை அந்தச்சபை தட்டிக் கேட்கவில்லை. விதுரரைத் தவிர.

ஒரு மனிதன் செல்வத்தாலும் வீரத்தாலும் புகழ் அடைவதில்லை. நன்னடத்தையாலே புகழ் அடைகிறான். விதுரரின் புகழ் அப்படிப்பட்டது. என் மனதிற்குள் பாண்டவ திருதராஷ்டிர புதல்வர்களில் பேத பாவம் இருந்ததில்லை. ஆனால் வரப்போகும் போரில் பாண்டவர்கள் நிச்சயம் ஜெயிப்பார்கள். நான் துரியோதனனை தவறு சொல்ல மாட்டேன். பதிலுக்கு என் தந்தையை நிந்திக்கிறேன். என்னை குந்தி போஜன் கையில் வழிப்போக்கருக்கு பெரும் செல்வத்தை கொடுப்பது போல கொடுத்து விட்டார். அப்பொழுது நான் சிறுமியாக இருந்தேன். பந்து விளையாடிக் கொண்டிருந்தேன். தங்களுடைய நட்பை உறுதிபடுத்திக் கொள்ள இவர்கள் என்னை பகடையாக்கினார்கள்.

அர்ஜுனன் பிறந்த போது நான் இருந்த அறைக்குள் ஒரு அசரீரி ஒலித்தது. உன்னுடைய இந்த மகன் வில் வித்தையினால் புவி அனைத்தையும் வெல்வான். பெரும் புகழ் பெறுவான். பிறகு கௌரவர்களை கொன்று அஸ்வமேத யாகம் செய்வான் என்று சொன்னது. அந்த அசரீரி உண்மையென்றால் இந்தப் பிரிவும், துயரமும் நடந்துதானே ஆக வேண்டும். ஒரு க்ஷத்திரியப் பெண் வீரம் மிக்க புதல்வர்களை எதற்கு பெறுகிறாளோ அந்த விஷயம் நடந்தாக வேண்டும். இல்லையெனில் அவர்களை நான் மனதால் துறந்து விடுவேன். போரின் அழிவு பற்றி நான் அறிவேன். ஆனால் அது நடந்துதான் ஆக வேண்டும். எந்தப் பக்கம் யார் இறந்தாலும் ஒரு பெண்ணின் அவமானம் தீர்க்கப்பட வேண்டும். இந்த அவமானம் நடக்கக்கூடாது என்றும், நடந்தால் நடத்தியவன் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் உலகம் அறிய வேண்டும்.

என் புதல்வர்கள் சூதில் தோற்றதில் எனக்கு வெட்கமில்லை. வனத்திற்கு அனுப்பப்பட்டனர், அதிலும் துயரம் இல்லை. ராஜ்ஜியம் பிடுங்கப்பட்டது. அதிலும் வேதனையில்லை. ஆனால் என்னுடைய சிறந்த அழகிய மருமகள் ஒற்றை ஆடையாய் சபைக்கு இழுத்து வரப்பட்டதும், துஷ்டர்களின் கடுமையான வார்த்தையை கேட்டதும் மறக்க முடியாத விஷயம். மன்னிக்க முடியாத குற்றம். கிருஷ்ணை--- ரஜஸ்வலையாக (மாத விலக்கு) இருந்தாள். அந்த நேரம் ஒரு பெண்ணை அவமானப்படுத்துவது காட்டுத்தனம். இது தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும். அதுதான் தர்மம். மிகப் பெரிய வீரர்கள் கணவர்களாக இருந்தும் அங்கு வாய் மூடி மௌனமாக இருந்தார்கள். என்ன காரணம் என்பது முக்கியமில்லை. இனிதான் அந்த பழி துடைக்கப்படும்.”

ஸ்ரீகிருஷ்ணர் ஆதுரத்துடன் பொங்கிப் பொங்கிப் பேசிய குந்திதேவியின் தலையை வருடினார்.

“அத்தை, நீ சௌபாக்கியசாலி. உயர்ந்த குலத்தில் பிறந்து உயர்ந்த குலத்தில் வாழ்க்கைப்பட்டாய். உன் கணவரால் அதிகம் மதிக்கப்பட்டாய். நீ வீர ஜனனி. வீர பத்தினி. வீர தாய். உன் சுக துக்கங்களைப் பற்றி உன்னைப் போன்றவர்கள் பேசாது இருக்க வேண்டும். உன் புதல்வர்கள் கிராம சுகத்தைதுறந்து வனங்களுக்குள் விருப்பத்துடன் புகுந்தார்கள். சாதாரண மனிதனுக்கு சிறிதளவு செல்வமும், போகமும் பெரும் திருப்தியைத் தரும். ஆனால் வீரனுக்கோ எந்த துக்கம் வந்தாலும் தன் கடமையைச் செய்வதே மிகப்பெரிய போகமாக இருக்கும். உன்னுடைய புதல்வர்கள் உங்களுக்கு தங்கள் குசலத்தைச் சொன்னார்கள். பிணியற்று திடகாத்திரமாய் உங்கள் முன் தோன்றப் போவதாக சொல்லியிருக்கிறார்கள்.”

“ஸ்ரீகிருஷ்ணா, நீ பாண்டவர்கள் பக்கம் இருக்கிறாய். அவர்களுக்கு எது உசிதமோ, அதை நீ செய்வாய். இந்த க்ஷத்திரிய குலத்திற்கு நீயே சத்தியம். நீயே தர்மம். நீயே ரட்சகன். நீயே பரப்பிரம்மா பரமாத்மா. உன்னிடமே அத்தனையும் நிலைபெற்றிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணா, உன்னை நான் அறிவேன்” என்று திடமாக கூறினாள்.

ஸ்ரீகிருஷ்ணர் குந்தியை வலம் வந்து துரியோதனன் மாளிகை நோக்கி--- தேர் செலுத்தினார்.

துரியோதனனுடைய மாளிகை இந்திரனுடைய சபை போல அழகு நிரம்பியதாய் இருந்தது. அவர் அந்த மாளிகைக்குள் பிரவேசித்தார். எவரும் கவனிக்கவில்லை. மூன்று வாயில்களை கடந்து உள்ளே நுழைய ஒரு பெரிய கூடத்தில் துரியோதனன் அரியணையில் அமர்ந்திருக்க, மற்றவர்கள் அவனுக்கு அருகே அமர்ந்திருப்பதைக் கண்டார். ஸ்ரீகிருஷ்ணரை துரியோதனன் நமஸ்கரித்து பசு, மதுவர்க்கம், வீடு போன்றவைகளை கொடுத்தான். கிருஷ்ணர் அவைகளை ஏற்றுக் கொண்டார். துரியோதனன் அவரை உணவுக்காக அழைத்தான். கிருஷ்ணர் அதை தலையசைத்து மறுத்தார்.

“ஸ்ரீகிருஷ்ணா, இருபக்கமும் நன்மை ஏற்படுவதற்குத்தான் இங்கு வந்திருக்கிறீர்கள். அப்பொழுது எங்கள் உணவை மறுத்து எங்களை அவமானப்படுத்துவதின் காரணம் என்ன? நீங்கள் என் தந்தையான திருதராஷ்டிரனுக்கும் தானே சம்பந்தி. எங்களுக்கும் தானே உறவு. பிறகு எதற்கு மறுக்கிறீர்கள்?” கண் அசைக்காமல் அவரை பார்த்தபடி கேட்டான்.

அதற்கு இரண்டே வாக்கியங்களில் ஸ்ரீகிருஷ்ணர் பதில் அளித்தார். அது உத்தமமான பதில்.

“ஒரு தூதன் அவன் வருகை சித்தியானதும்தான் அந்த இடத்தில் உணவு எடுத்துக் கொள்ள வேண்டும். என் மந்திரிகளுக்கும், படை வீரர்களுக்கும் அவ்விதமே உபசாரம் நடத்தப்பட வேண்டும்” என்று பதில் அளித்தார்.

“நீங்கள் இவ்வளவு பேதத்தோடு நடக்கக் கூடாது ஸ்ரீகிருஷ்ணா, உங்கள் உசிதம் நீங்கள் வந்த காரியம் வெல்லுமோ இல்லையோ நாங்கள் எங்கள் மரியாதைக்கு முயற்சி செய்கிறோம். நாங்கள் அன்போடு செய்யும் பூஜையை ஏற்காததற்கு என்ன காரணம் என்றுப் புரியவில்லை. உங்களோடு எங்களுக்கு எந்தப் பகையும் இல்லை. பிறகு ஏன் இந்த பேதமை?”

ஸ்ரீகிருஷ்ணர் அவன் ஆதங்கத்துக்கு நிதானமாக பதில் சொன்னார்.

“ஒரு வீட்டில் பிரேமையினால் அன்னம் வைக்கலாம். அல்லது ஆபத்து காலத்தில் அன்னம் வைக்கலாம். ஆனால் உனக்கு என் மீது நவலேசம் கூட பிரேமை இல்லை. நான் எந்த ஆபத்தில் சிக்கவும் இல்லை. பிறகு எதற்கு இங்கே அன்னத்தை ஏற்பது. பாண்டவர்கள் மீது ஏன் துவேஷத்தை வைக்கிறாய். எதன் பொருட்டு ராஜ்ஜியம் தர மறுக்கிறாய். பாண்டவர்கள் தர்மத்திற்குட்பட்டவர்கள். அதனால் பாண்டவர்களுக்கு எதிரி எனக்கும் எதிரி. எவன் துவேஷம் வைக்கிறானோ அவன் வீட்டில் அன்னம் எடுத்துக் கொள்ளக்கூடாது. உன்னுடைய உணவு கலங்கமுற்றது. இந்த அஸ்தினாபுரத்தில விதுரருடைய அன்னம் மட்டுமே உண்ணத் தகுந்தது. நான் அங்கே போய் உணவு எடுத்துக் கொள்கிறேன்.”

அவர் எழுந்து நின்று விடை பெறாமல் வெளியேறினார்.

(தொடரும்)

தர்மத்தின் பக்கம் நில்லுங்கள்

மகாபாரதம்

98

விதுரருடைய வீட்டில் போய் அமர்ந்து கொண்டார் கிருஷ்ணர். அங்கு அற்புதமான உணவு சமைத்து வைக்கப்பட்டிருந்தது. தன்னை பார்க்க வந்திருந்த அந்தணர்களை அழைத்து அவர்களுக்கு அன்னமும், செல்வமும் கொடுத்து அங்கு முழு திருப்தியுடன் நிதானமாக உணவு எடுத்துக் கொண்டார். பிறகு ஓய்வாக சௌகரியமான ஆசனத்தில் சாய்ந்தார். விதுரர் அவர் காலை வருடியபடி பேசத் தொடங்கினார்.

“புஜ பலம், படை பலத்தை நம்பி தன்னைச் சுற்றியுள்ள வில்லாளிகளையும், தளபதிகளையும் பார்த்து இந்திரனே இப்போது போருக்கு வந்தாலும் நான் ஜெயித்து விடுவேன் என்று துரியோதனன் சொல்கிறான். போர் பற்றிய வலியை, பயங்கரத்தை அறியாதவனாக இருக்கிறான். எடுத்துச் சொன்னாலும் காது கொடுத்துக் கேட்பதில்லை. அவனுக்கு தூபம் போட அவன் மோகாவேசத்தை தூண்டி விட அவன் பக்கம் ஆட்கள் இருக்கிறார்கள். அதை நம்பி அவன் இன்னும் அதிகம் கொக்கரிக்கிறான். திடமாக அழிவுக்கு போகிறவனை எப்படித் தடுப்பது. எல்லா வகையிலும் கபடமான எண்ணம்தான் அவனுக்குத் தோன்றுகிறது. அந்த கௌரவ சபையில் உங்களை எதிர்க்கின்ற உங்களுக்கு பிடிக்காத மன்னர்கள் பலர் உண்டு. அங்கு ஏதும் விபரீதம் நடக்கலாம்.

எனவே, அந்த சபைக்கு நீங்கள் போக வேண்டாம். உங்கள் பராக்கிரமத்திற்கு எதிரே அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது என்றாலும் உங்கள் மீது உள்ள பிரேமையால், மரியாதையால் நீங்கள் போக வேண்டாம் என்று வேண்டுகின்றேன். தேகதாரிகளின் அந்தர்யாமி நீர். நீங்கள் உள்ளிருப்பதை எல்லோராலும் கண்டுபிடிக்க முடியாது. அன்பின் காரணமாக என்ன சொல்ல வேண்டுமோ அறிவின் பாற்பட்டு என்ன சொல்ல வேண்டுமோ இங்குள்ள நிலைமையைக் கருதி என்ன சொல்ல வேண்டுமோ இதையெல்லாம் அறிந்து எங்களிடம் பேசினீர்கள். துரியோதனின் துஷ்டத் தன்மையையும், அங்குள்ள க்ஷத்ரியர்களின் கொடூரத்தையும் அறிந்தே இங்கு வந்திருக்கிறேன். இந்த பூமி யானை, குதிரை, போர் வீரர்கள் என்று மடிந்து கிடப்பதை விரும்புகிறது. கர்ணனால் தூண்டப்பட்ட துரியோதனனின் பின்னால் பெரிய க்ஷத்ரிய கூட்டம் கூடியிருக்கிறது. அவை அனைத்திற்கும் அழிவு ஏற்படப் போகிறது. இங்கு இயன்றவரை அவர்களிடம் பேசி நல்வழிப்படுத்துவேன். அப்படிச் செய்யாதவனை வித்வான்கள் குரூர மனம் படைத்தவர் என்று சொல்கிறார்கள். அழிவுக்கு ஆதரவாக இருப்பவன் என்று ஏசுகிறார்கள்.

நண்பருடைய தலைமுடியைப் பற்றி தீய காரியத்திலிருந்து விலக்கலாம் தவறில்லை. இரண்டு சகோதரர்களிடையே பரஸ்பரம் கலகம் உண்டானால் ஒரு நண்பன் நடுநிலையிலிருந்து அந்த கலகத்தை தீர்க்க முயற்சி செய்ய வேண்டும். என்னை அந்த சபை எதுவும் செய்து விட முடியாது. கோபம் கொண்ட சிங்கத்தின் முன்பு எந்த விலங்கும் நிற்காது. என் கோபத்திற்கு துரியோதனனை சுற்றியுள்ள மன்னர்கள் ஈடாக மாட்டார்கள்.”

அழகான மிருதுவான அந்தப் படுக்கையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த கிருஷ்ணர் பேச்சு சுகத்திலேயே கண் மூடி தூங்கி விட்டார்.

விடியல் நேரத்தில் குளிர்ந்த காற்றும், மங்கல வாத்தியங்களும் அவரை துயில் எழுப்பின. எழுந்து நீராடி ஸ்ரீகிருஷ்ணர் சந்தியாவந்தனமும், அக்னி ஹோத்ரமும் செய்கின்றபோது



துரியோதனன் தன் மாமன் சகுனியோடு விதுரரின் வீட்டிற்கு வந்தான். கிருஷ்ணரைப் பார்த்து கை கூப்பினான்.

“திருதராஷ்டிரர் சபைக்கு வந்து விட்டார். உங்களை சந்திக்க ஆவலாக இருக்கிறார். எல்லா மன்னர்களும் கூடிவிட்டார்கள். சபை உங்கள் வருகைக்கு காத்திருக்கிறது. வந்து எங்களை கௌரவிக்க வேண்டும்” என்று பணிவாகப் பேசினான்.

நேற்று பேசிய பேச்சின் நிஷ்டூரம் முற்றிலும் மறைந்திருந்தது. வருகிறேன் என்று கிருஷ்ணர் சொல்ல அவன் வாசலுக்குப் போய் காத்திருந்தான்.

ஸ்ரீகிருஷ்ணர் சூடான பானங்களையும், காலை உணவையும் முடித்துக் கொண்டு தேர் ஏறினார். அவர் படை அவரைச் சுற்றிக் கொண்டது. துரியோதனனும், சகுனியும் பின் தொடர்ந்தார்கள். மறுபடியும் வழி முழுவதும் மக்கள். தேர் முன்னேறாத வண்ணம் சூழ்ந்து கொண்டார்கள். மெல்ல விலக்கி வாசலுக்கு வந்த பல மன்னர்களை உற்றுப் பார்த்து சபைக்குள் பிரவேசித்தார். கர்ணனும், கிருத வர்ணனும் முன் வந்து வரவேற்றார்கள். துரோணாச்சாரியார் தன் ஆசனத்தை விட்டு முன் வந்து கிருஷ்ணரின் கையைப் பிடித்து வரவேற்றார். தங்கம் பதித்த ஒளி மிகுந்த சர்வதோபத்ர என்ற ஆசனம் அவருக்காக வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்து மெல்ல சிரித்தபடி ஸ்ரீகிருஷ்ணர் அதில் அமர்ந்து கொண்டார். அமர்ந்ததும் சாளரத்தின் வழியே மேகத்தைப் பார்த்து அங்கு தேவ ரிஷிகள் இருப்பதைக் கண்டார்.

பாலகுமாரன்

பீஷ்மரை நோக்கி, இந்த சபைக்கு சூட்சம சக்தி நிறைந்த ரிஷிகள் வர விரும்புகின்றனர். அவர்களுக்கு தகுதியான ஆசனம் போட வேண்டும். உடனே செய்யுங்கள் என்று உத்தரவிட்டார்.

ரிஷிகள் உட்கார நீண்ட நீண்ட ஆசனங்கள் போடப்பட்டன. சிறிது நேரத்தில் அங்கு ரிஷிகள் தோன்றினார்கள். அவர்களுக்கு முறைப்படி மரியாதை அளிக்கப்பட்டது. எல்லோரும் ஆச்சரியத்துடனும், பக்தியுடனும் அவரைப் பற்றி கேள்விப்பட்டதையெல்லாம் நினைவில் கொண்டு வந்து ஆனந்தமாய் அவரை பார்க்கத் துவங்கினார்கள். எல்லோர் மனமும் ஸ்ரீகிருஷ்ணரிடமே லயித்திருந்தது.

சிம்மம் போன்ற குரலில் சபையில் உள்ள அனைவருக்கும் கேட்கும் வண்ணம் ஸ்ரீ கிருஷ்ணர் பேசத் துவங்கினார்.

“பரத கண்டத்தின் மிகப் பெரிய குலம் குரு குலம். இது தனக்குள் சண்டையிட்டு அழிந்தால் பரத கண்டமே அழிந்ததாகத்தான் கருதப்படும். மற்ற ராஜ்ய வம்சங்களை காட்டிலும் குரு வம்சத்தில் கிருபை, கருணை, எளிமை, பொறுமை, சத்தியம் போன்றவை அதிகம் காணப்படுகின்றன.

உள்ளும் புறமும் வெவ்வேறாக கௌரவர்கள் நடந்து கொள்வாராயின் அதை திருதராஷ்டிரா நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டும். அவர்கள் கொடிய மனிதர்களைப் போல நடக்கிறார்கள். தயவுசெய்து உங்கள் பிள்ளைகளை ஒரு ஒழுங்கில் வையுங்கள். பாண்டவர்களை நான் கட்டுப்படுத்துகிறேன். உங்கள் ஆளுமையில் அவர்கள் இல்லையெனில் இந்த குரு வம்சம் நாசமடையும். பாண்டவர்களோடு பகை என்று வந்தால் முடிவு நன்றாக இருக்காது. ஆனால் அதே பாண்டவர்கள் உங்களுக்கு நண்பர்களாகி நின்றால் தேவாதி இந்திரர்களாலும் உங்களை ஜெயிக்க முடியாது. உங்களை எதிர்க்க மன்னர்களே இல்லாது மிகுந்த பாதுகாப்போடு சுகமாக வாழ முடியும். ஆனால் போர் தொடங்குமானால் பெரும் அழிவு ஏற்படும். பாண்டவர்கள் கொல்லப்பட்டாலோ, கௌரவர்கள் இறந்தாலோ உங்கள் துக்கம் ஒன்றுதான். இதில் எந்த அழிவு உங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்.

திருதராஷ்டிரா, வயது முதிர்ச்சியினால் உங்கள் உடம்பு க்ஷீணமாகி விட்டது. இந்த முதுமையில் முன் எப்போதையும் விட மற்றவருக்கு உதவியாக இருக்க வேண்டும். பாண்டவர்களை காப்பாற்ற வேண்டிய கடமை உங்களுக்கும் இருக்கிறது. சொன்ன சொல் தவறாது நீங்கள் ராஜ்ஜியத்தை மீட்டுத் தருவீர்கள் என்று பன்னிரெண்டு வருட வனவாசமும் ஒரு வருட அஞ்ஞாத வாசமும் பாண்டவர்கள் மேற்கொண்டார்கள். இப்போது அதை முற்றிலும் மறந்து விடுவது நல்லதல்ல. தயவுசெய்து பெற்றவனைப் போல நடந்து கொள்ளுங்கள். பாண்டவர்கள் உங்கள் மீது பெரிய மதிப்பு வைத்து கடைப்பிடித்திருக்கிறார்கள். ஒருவேளை பாண்டவர்கள் தவறு என்றால் உரக்கக் குரல் கொடுத்து சரி செய்யுங்கள். நீங்கள் தர்மத்தின்படி நில்லுங்கள். அவர்கள் தர்மம் உங்களுக்குப் புரியும்.

இந்த சபைக்கு ஒரு செய்தியை அவர்கள் சொல்லியனுப்பினார்கள். தர்மத்தால் தொலைக்கப்பட்ட அதர்மம் அதர்மத்தால் தொலைக்கப்பட்ட தர்மம் உங்கள் முன்னே நிற்கிறது. காதுக்குள் புகுந்து கொண்ட முள்ளைப் போல அது இருக்கிறது. அதைப் பிடுங்கி எடுக்காவிடில் பெரும் வேதனை நேரிடும். ராஜ்ஜியத்தை திருப்பித் தருமாறு கேட்பது தர்மமானது. நியாயமானது. எனக்கு ஒன்றும் தெரியாது என்று தயவுசெய்து சொல்லாதீர்கள். அந்த இடத்தில் நீங்கள் இல்லை. இருப்பின் இந்தச் சபையில் உங்களுக்கு இடம் இல்லை. பாண்டவர்களை அரக்கு மாளிகையில் அடைத்து தீ வைத்து எரியச் செய்தீர்கள். தேசத்தை விட்டு

துரத்தினீர்கள். ஆனால் மறுபடியும் அவர்கள் உங்களையே சரணடைந்தார்கள். சரணடைந்தவர்களை இந்திரப்பிரஸ்தத்தில் இருக்கச் சொன்னீர்கள். கபடமான சகுனியின் துணையோடு துரியோதனன் ராஜ்ஜியத்தையும், செல்வத்தையும் கவர்ந்ததோடு மட்டுமல்லாமல் திரௌபதியையும் சபைக்கு கொண்டு வரச் செய்தான். பொறுமையுள்ள யுதிர்ஷ்டிரர் க்ஷத்திரிய தர்மத்திலிருந்து விலகவில்லை. உங்கள் புதல்வர்கள் துரியோதனாதிகள் பெரும் பேராசைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். அவர்களை நல்ல வழிக்கு கொண்டு வருவது உங்கள் பொறுப்பு. நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது."

ஸ்ரீ கிருஷ்ணர் நீண்ட உரையை முடித்த பிறகு சபை மௌனமாக இருந்தது. அங்கிருந்த எந்த மன்னரும் பதில் பேசத் துணியவில்லை. என்ன பேசுவதென்றும் தெரியவில்லை. மௌனமாய் இருந்த சபையை ஜமதக்னியின் புதல்வர்; பரசுராமர் என்ற ரிஷி கலைத்தார். .

"நமது வாழ்க்கைக்கு முன்னால் யார் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு என்ன நிகழ்ந்தது. எதனால் எது ஏற்பட்டது. என்று விஷயங்களை ஒரு மன்னன் தெரிந்து கொள்ள வேண்டும். சரித்திரம் எல்லோருக்கும் முக்கியம் எனினும் ஆள்பவர் அவசியம் சரித்திரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஜம்போத்பவன் என்கிற சக்கரவர்த்தி இந்த பரதக் கண்டத்தை ஆண்டு வந்தார். மகா பராக்கிரமி. தினந்தோறும் சபை கூடியதும் என்னைவிட சிறந்தோ என்னை விட வலிவாகவோ இந்த பூமியில் இருக்கிறார்களா என்று கேட்பது உண்டு. அடிக்கடி தன்னை தற்புகழ்ச்சி செய்து கொள்ளும் சுபாவத்தை கொண்டிருந்ததை தாங்க முடியாத ஒரு அந்தணர் அந்த சக்கரவர்த்திக்கு புத்தி கூறும் வண்ணமாக, நிச்சயம் இருக்கிறார்கள். அவர்களுக்கு நர நாராயணர் என்று பெயர். அவர்களை வெல்ல உலகில் யாராலும் முடியாது. நீ அவர்கள் கால் தூசுக்கு ஈடாக மாட்டாய். இதனால் உன்னைப் பற்றி நீயே புகழ்ந்து கொள்வதை நிறுத்தி அமைதியாக உன் வேலையை செய்து கொண்டிரு என்றார். ஜம்போத்பவன் என்ற அந்த சக்கரவர்த்திக்கு தாங்கவில்லை. அந்த நர நாரயணரை தேடி உடனே கிளம்பினார்.

கந்தமாதான பர்வதத்தின் உச்சியில் அந்த நர நாராயணர்கள் தவம் செய்த நிலையில் இருந்தனர். பசி தாகத்தால் பலஹீனமாக இருந்தார்கள். குளிரையும், வெப்பத்தையும், காற்றையும் சகித்து மெலிந்திருந்தார்கள். அந்த சக்கரவர்த்தியை வரவேற்று உபசாரம் செய்தார்கள்.

"பெரியோர்களே, நமஸ்காரம். என் வீரத்தால் உலகனைத்தையும் வென்று விட்டேன். எனக்கு எதிராக யாருமே இல்லையென்று எண்ணிக் கொண்டிருந்தபோது உங்கள் இருவரின் பெயரையும் சொன்னார்கள். அதனால் உங்களைத் தேடி வந்தேன். உங்கள் உபசரிப்பு மிகுந்த திருப்தியை தந்தது. அதே உபசரிப்பாய் என்னோடு யுத்தம் செய்ய வரவேண்டும் " என்று பணிவாக கேட்டுக் கொண்டார்.

அங்கே பரஸ்பரம் கோபமில்லை. யுத்தத்திற்கான எந்த முகாந்திரமும் இல்லை. ஆனால் அதில் ஒருவர் தன்னை நிருபிக்க யுத்தம் தேவையாக இருந்தது. அந்த நிருபணம் கூட பூமியில் தேவைப்படவில்லை. யாரும் நிருபிக்கச் சொல்லவில்லை. ஆனால் யுத்தம் அங்கு அவசரம் காட்டிற்று. நரன் எனப்பட்டவர் அமைதியான முறையில் மெல்லியதாய் சிரித்தபடி ஜம்போத்பவன் என்ற சக்கரவர்த்தியிடம் பேசினார்.

"இது சமாதான பூமி. இந்த ஆசிரமத்தில் ஒருபொழுதும் போர் நிகழாது. கோணலான மன விருப்பங்கள் இங்கு நிகழாது. இந்த பூமியில் ஏராளமான க்ஷத்திரியர்கள் பல்வேறு பகுதியில் உள்ளனர். அவர்களிடம் போய் போர் செய்து உங்களது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்."

அந்த மகாத்மாக்கள் இருவரும் கை கூப்பி சக்கரவர்த்தியிடம் தங்கள் மன்னிப்பைக் கூறினார்கள். போர் செய்ய மாட்டோம் என்றார்கள். ஆனால் ஜம்போத்பவன் திரும்பத் திரும்ப அவர்களை போருக்கு அழைத்துக் கொண்டிருந்தான். போரை யாசித்துக் கொண்டிருந்தான். அதை பொறுக்காத நரன் ஒரு கொத்து துரும்பை கையில் எடுத்துக் கொண்டான்.

"சக்கரவர்த்தி உன் விருப்பப்படி ஆகுக. கவசங்களை அணிந்து கொள். அஸ்திர சாஸ்திரங்களை தயார்படுத்திக் கொள். தைரியத்தை மனதில் ஏற்றிக் கொள். மறுபடியும் சொல்கிறேன். எனக்கு போரில் விருப்பமில்லை. ஆயுதம் இல்லாத உங்களை எதிர்க்க நான் விரும்பவில்லை."

"ஆனால் தவசிகளே நரன் கையில் துரும்புகளை எடுத்து விட்டார். இந்த எதிர்ப்பு எனக்குப் போதும். உங்களை சின்னாபின்னப்படுத்துவேன்" என்று அஸ்திர மழை பொழியலானார்.

நரன் கையில் இருந்த அத்தனை துரும்புகளும் மேலெழுந்தன. ஜம்போத்பவன் கண் ,காது ,மூக்கு ,வாய், தலை, நெஞ்சு, கழுத்து ,மர்மஸ்தானம் எல்லாவற்றையும் அந்த துரும்புகள் கடுமையாக தாக்கி துளையிட்டன. மிகப் பெரிய வேதனையை கொடுத்தன. அலற வைத்தன. துரும்புகளே இப்படி அடிக்கும் என்றால் அஸ்திரங்கள் என்ன செய்யும். அந்த சக்கரவர்த்தி தடேர் என்று நர நாராயணர் காலில் விழுந்தார்.

"யுத்தம் என்பது பயிற்சியின்பால் வருவது. அஸ்திரங்கள் உண்டாக்கப்படுபவன. தந்திரங்கள்உடையன. யுத்தம் என்பது தேக பலம். வலி பொறுக்கும் தன்மை. என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்படி துரும்புகளால் சிதறடிக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் செய்த யுத்தத்திற்கு புத்தி பலமோ தேக பலமோ காரணமல்ல. மனோ பலமே யுத்தத்திற்கு காரணம். அந்த மனோ பலம் தர்மத்திலிருந்து உண்டாகிறது. அந்த தர்மம் அமைதியிலிருந்து பிறக்கிறது. அந்த அமைதி ஆசையை விலக்குவதிலிருந்து வருகிறது. என் அறிவீனத்தை மன்னித்து விடுங்கள். எல்லாம் தெரியும் என்ற மமதையே எல்லா தவறுக்கும் காரணம்."

இதற்குப் பிறகு நாரதருடைய பேச்சு துவங்குகிறது. இந்திரனுடைய தேரோட்டி மாதலி. அவன் மகளுக்கு வரன் தேடுவதற்காக நாரதர் உதவி செய்ய தீர்மானித்து வருணலோகம், பாதாள லோகம், கருட லோகம், ஹிரண்யபுரம், ரஸாதலம், நாகலோகம், போன்ற இடங்களையும் , அதைப் பற்றி வர்ணனைகளையும் மகாபாரதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்தில் இந்த சபையில் இதை சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று யோசிக்கும் பொழுது மனிதருடைய வாழ்க்கையை அல்பம் என்று சொல்வதற்கு இந்த விளக்கம் உதவுகிறது.

துரியோதனா, நீ உன் அஸ்தினாபுரம் மட்டுமே பரந்த சாம்ராஜ்யம் என்று நினைத்துக் கொள்ளாதே. இந்த பூமியைச் சுற்றி பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. பல்வேறு விதமானவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் புவியோடு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். உனக்கு அடங்கியது. இவ்வுலகம் என்று எண்ணுவது மூடத்தனம் என்பதைச் சொல்லவே இந்த விவரணைகள் முயல்கின்றன.



இந்த இடத்தின் வர்ணனைகளோடு தென் திசை வர்ணனை வட திசை வர்ணனை

கிழக்கு , மேற்கு திசை வர்ணனை என்று பூமியின் நீள அகலங்கள் சொல்லப்படுகின்றன. முன்னோர்களின் பிரச்னையான கதைகள் விளக்கப்படுகின்றன. உலகத்தின் பிரம்மாண்டமும், காலத்தின் பிரம்மாண்டமும் துரியோதனனுக்கு திணிக்கப்படுகின்றன.

இந்த விவரணைகளை யார் சொல்லுகிறார்கள், என்ன சொல்லுகிறார்கள் ஏன் சொல்லுகிறார்கள் என்று உணர்ந்து புரிந்து கொள்ள ஒரு நிதானம் வேண்டும். துரியோதனனிடம் அந்த நிதானம் இல்லை.பெரியோர்களை பேச வைத்த பிறகு அவர்கள் வாக்கியம் துரியோதனனிடம் எடுபடவில்லை என்பது புரிந்த பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் துரியோதனனிடம் கோபமாக , நேரிடையாக பேசத் துவங்கினார்.



“துரியோதனா, தயவுசெய்து இவர்கள் பேச்சைக் கேள். உனது நன்மைக்காகவே ஆலோசனைகள் அளிக்கிறேன். சிறந்த குலத்தில் பிறந்த நீ ஏன் அதர்மமான காரியத்தை செய்கிறாய். துஷ்ட புத்தி உள்ளவர்களும், வெட்கமற்றவர்களும் கொடுமைக்காரர்கள் மட்டுமே ஆத்திரப்படுவார்கள். இந்த உலகில் நல்லவர்களின் செயல்கள் கதை போல தலைமுறை தலைமுறையாக பேசப்பட்டு வருகிறது. அதுவே இன்றைய வாழ்வின் எடுத்துக்காட்டாக இருக்கிறது . பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொள். இது உன் தந்தைக்கு நல்லது. அவர் பித்து பிடித்தது போல எல்லா பக்கமும் அலைமோதுகிறார். அதைக் கண்டு உனக்கு இரக்கம் வந்திருக்க வேண்டும் .சாஸ்திர சம்பிரதாயமான உபதேசத்தைக் கேட்டும் எவனொருவன் அதை ஏற்றுக் கொள்வதில்லையோ அவன் மறுப்பு தீது தரும். காய்ந்த இந்திராயண பழம் ஜீரணித்த பிறகு எரிச்சலை தோன்றுவிப்பது போல தவறு செய்தவன் மனம் சோகத்தால் ஆகிறது. எவனொருவன் நல்லவர்களின் உயர்ந்த பேச்சைக் கேட்டு தன் கருத்தின் பிடிவாதத்தை விட்டு விடுகிறானோ அவன் உன்னதம் அடைகிறான். ஒருவன் தன் கருத்தை நல்ல நோக்கத்திற்காக மாற்றிக் கொள்வதில் வெட்கப்பட வேண்டியதில்லை.

உன்னுடைய புத்தி எனக்குப் புரியவில்லை. நீ எதற்காக பாண்டவர்களிடம் விரோதம் வைத்து திறமையற்றவர்களை ஆதரித்து அலட்டிக் கொள்கிறாய். ஆரம்பத்திலிருந்தே நீ பாண்டவர்களிடம் கோபமோடு இருந்திருக்கிறாய். இதற்காக அவர்கள் கோபமுறவில்லை. அவர்கள் தர்மாத்மாக்கள். பொறாமைப்பட்ட மனிதன் எந்த விஷயத்தையும் முழுமையாக புரிந்து கொள்வதில்லை. அசூயை உள்ளவர்கள் முன்னால் எல்லா எடுத்துக்காட்டுகளும் முழுமை பெறாதவையாகிவிடுகின்றன. பாண்டவர்களால் சம்பாதிக்கப்பட்ட ராஜ்ஜியத்தைத்தான் நீ அனுபவித்துக் கொண்டிருக்கிறாய்.அதை நீ உன் வலிவால் பெறவில்லை. கோபம் கொண்ட பீமனை எதிர்ப்பதற்கு ஒருவரும் இல்லை. பீஷ்மராலோ , துரோணராலோ, கிருபராலோ அர்ஜுனனை ஜெயித்து விட முடியாது. உன் பேராசையால் உன் குலத்தை அழித்து விடாதே. கௌரவ வம்சத்தை நாசம் செய்து விடாதே.உனக்காகவும் புரியவில்லை. சொன்னாலும் ஏற்பதில்லை. குலத்தின் அழிவிற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறாய். உன் குலத்தையும் தழைக்கவைத்து உன்னைச் சுற்றியுள்ள ஜனங்களையும் மகிழ்வித்து நீண்ட நாள் மகிழ்ச்சியோடு இருக்க பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொள். ”

ஸ்ரீ கிருஷ்ணர் பேசியதும் பீஷ்மர் துரியோதனன் பக்கம் திரும்பினார்.

"ஸ்ரீ கிருஷ்ணர் மிகச் சரியான வார்த்தைகளைப் பேசினார். அவர் பேசியதில் ஒரு வார்த்தை என்னைத் தாக்கியது. உன் துஷ்டத்தனத்தால் மக்களை பாழாக்காதே என்றார். இந்த வார்த்தை உன்னை நடுக்கமுறச் செய்யவில்லையா, இந்த அழிவை திருதராஷ்டிரன் உயிரோடு இருக்கும் போதே செய்வாயா, தாய் தந்தையரை துயரக் கடலில் மூழ்கடிக்கும்படி ஒரு பிள்ளை செய்யக் கூடாது. இது களங்கமானவன் செய்யும் காரியம். ”

ஆனால் இந்தப் பேச்சுக்களுக்கு காது கொடுத்தும் கொடுக்காதவன் போல துரியோதனன் கோபத்தால் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான். பீஷ்மரைத் தொடர்ந்து துரோணர் பேசினார்.

(தொடரும்)

வெற்றியை தரும் புலனடக்கம்

“ஸ்ரீ கிருஷ்ணரின் பேச்சை மறுதலிக்காதே. யார் உன்னை போருக்கு தூண்டுகிறார்களோ அவர் உனக்கு பயன்பட மாட்டார்கள். பகையின் சுமையை உன் தோளில் போட்டு நகர்ந்து விடுவார்கள். பிறகு பச்சாதப்படுவாய். இத்தனை பேர் இவ்வளவு பேசிய பிறகும் இன்னும் கோபம் குறையாது அமர்ந்திருக்கிறாய். பகவான் ஸ்ரீ கிருஷ்ணனும், அர்ஜுனனும் எந்தப் பக்கம் இருக்கிறார்களோ அந்தப் பக்கம் ஜெயிப்பது உறுதி. இது தெரிந்த பிறகும் ஒருவன் போருக்கு முற்படுவானா. போரில் வெல்ல முடியாதவர்களை வெல்ல ஆசைப்படுவானா. இதற்கு மேலும் உன்னிடம் பேசுவதற்கு எனக்கு மனமில்லை.”

இப்பொழுது விதுரர் பேசத் துவங்கினார்.

“நான் உனக்காகவோ உன் அழிவுக்காகவோ வருத்தப்படவில்லை. உன்னுடைய தாய் தந்தையருக்காக வருத்தப்படுகிறேன். ஒரு துஷ்டப் பிள்ளையை பெற்று அவன் மூலம் வேதனைப்படுகிறார்களே என்று கலவரப்படுகிறேன். உன் நண்பர்களும், மந்திரிகளும் கொல்லப்பட்ட பிறகு அவர்கள் அந்த பாதிப்பிலிருந்து மீளாமல் புலம்பித் தீர்ப்பார்கள். உன்னை புதல்வனாக பெற்ற காரணத்தால் அவர்களுக்கு கிடைத்த வெகுமதி இதுதான். நீ இறந்த பிறகு இந்த பூமியில் அனாதையாக அலையப் போகிறார்கள். உன்னாலான உதவி இதுதான். ஸ்ரீ கிருஷ்ணரை எதிர்க்காதே. அவரை விட்டு விலகாதே. ஸ்ரீ கிருஷ்ணரின் மூலம் பஞ்ச பாண்டவர்களோடு நெருக்கம் கொள். ஸ்ரீ கிருஷ்ணரை மறுதலிப்பாயானால் அவர் கட்டளையை ஏற்கவில்லையானால் நீ கடைத்தேற முடியாது.”

மறுபடியும் பீஷ்மர் பேசத் துவங்கினார்.

“பாண்டவர்களோடு போர் புரிய மாட்டேன் என்று சங்கல்பம் செய்து கொள். அடித்து நொறுக்குவேன் என்ற பீமனிடம் சமாதானம் பேசு. அர்ஜுனனுடைய அம்புகள் மழை போல் பொழிந்து உன் படையை நாசம் செய்வதற்கு முன்பு அமைதியடைந்து நட்பு பேசு. யுதிஷ்டிரர் தலைவணங்கி உன் எதிரே கை கூப்பும் போது அவரை நீ தடுத்து நிறுத்தவேண்டும். ஆலிங்கனம் செய்து கொள்ள வேண்டும். இந்தக் காட்சியை நாங்கள் பார்க்க வேண்டும். ஊர் முழுவதும் ஒரு தகிப்பில் இருக்கிறது. யுத்தம் குறித்த கலவரத்தில் இருக்கிறது. நகுலனும், சகாதேவனும் உன் இருபக்கமும் அணுகி உன்னை தழுவிக் கொள்கிறபோது இங்குள்ள மன்னர்கள் ஆனந்தக் கண்ணீர் வடிப்பார்கள். எல்லாம் நல்லபடியாக

மகாபாரதம்

99

முடிந்தது என்று அஸ்தினாபுரத்து மக்கள் தங்கள் தினசரி கடைமையில் ஈடுபட வேண்டும். இது நடைபெற வேண்டுமென்று விரும்புகின்றேன்."

பீஷ்மருடைய இந்தப் பேச்சு அற்புதமானது. போரின் கொதிநிலையில் அந்த ஊர் சபை இருக்கும் பொழுது மிக இனிமையானவற்றை கற்பனை செய்து சொல்வதின் மூலம் சமாதான எண்ணத்தை தோற்றுவிக்கிற சாதுர்யம் அது. சபையை தன் பக்கம் வளைக்கும் வித்தை அது.

ஆனால் இவை ஏதும் துரியோதனனை அசைத்துக் கூட பார்க்கவில்லை.எல்லோரும் அவன் பதிலுக்கு காத்திருந்தார்கள். அவன் நிமிர்ந்து அமர்ந்து நிதானமாக பேசத் துவங்கினான். முதல் வாக்கியத்திலேயே ஸ்ரீ கிருஷ்ணரை அவன் மறுதலித்தான்.

"ஸ்ரீ கிருஷ்ணா, எதனால் எப்பொழுதும் என்னையே குறை சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. உங்களுக்கு நான் ஏன் பிடிக்காமல் போனேன். இதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை. உங்களுக்கு நான் ஒன்றும் கொடுமை ஏதும் செய்து விடவில்லையே. உங்களுக்கு நாங்களும் உறவுதானே. அப்படியிருக்க பாண்டவர் பக்கம் பேசுவது என்பது நியாயமானதா. நீங்களாக ஒரு முடிவு எடுத்துக் கொண்டு அதை தர்மம் என்பதா. பல முறை யோசித்துப் பார்த்தும் நான் என்ன குற்றம் செய்தேன் என்றுத் தெரியவில்லை. என்னிடம் குற்றம் ஏதும் இல்லை. சூதாட்டத்திற்கு அழைத்ததும் மறுப்பேதும் இன்றி ஒப்புக் கொண்டார்கள். சூதாடினார்கள். இழந்தார்கள். ஜெயித்தது சகுனி. இதில் குற்றமேதும் உண்டா.

ஜெயித்தது அத்தனையும் என் தந்தையின் கட்டளைப்படி திருப்பி கொடுக்கப்பட்டன. அந்த சூதாட்டம் என்பதே அபத்தமாகப் போயிற்று. பிறகு ஒட்டுமொத்தமாக பணயம் வைத்து கடைசி முறை என்று சூதாடினார்கள். அது என் குற்றமல்ல. ஒருவேளை நான் தோற்றிருந்தால் நீங்கள் யார் பக்கம் இருந்திருப்பீர்கள். நான் சொல்கிறேன். அப்பொழுதும் நீங்கள் பாண்டவ்கள் பக்கம் இருப்பீர்கள். நாங்கள் அவர்களை என்ன கெடுத்தோம். எங்கள் பகைவர்களோடு பாண்டவர்கள் சேர்ந்து கொண்டு எங்களை பழிவாங்கத் துடிக்கிறார்கள். எங்களை எதிர்க்கிறார்கள். இங்குள்ளவர்களின் பயமுறுத்தலான சொற்களால் நடுங்கிப்போய் சத்திரிய தர்மத்திலிருந்து பின் வாங்க முடியாது. இந்திரனுக்கு முன்னாலும் தலைவணங்க முடியாது. கர்ணனை தேவர்களாலும் வெல்ல முடியாது. பாண்டவர்கள் ஜெயித்து விடுவார்களா,

பாலகுமாரன்

சரி, உங்கள் விருப்பப்படி ஆயுதத்தால் அடிபட்டு நான் மரணமடைந்து விட்டால் அது வீர சொர்க்கம். உன்னதமான விஷயம். ஒரு சத்திரியனுக்கு அம்புப் படுக்கை கிடைப்பது மிகப் பெரிய வரம். ஒரு பொழுதும் பகைவருக்கு முன்னால் ஒரு வீரன் தலைகுனிய மாட்டான். ஒரு சத்திரியன் பயந்து பின்வாங்க மாட்டான். என்னால் தர்மத்தையும், பிராமணனையும் மட்டுமே வணங்க முடியும். நான் சிறுவனாக இருந்தபோது பாண்டவர்களுக்கு ராஜ்ஜியம் பிரித்து தரப்பட்டது. அப்பொழுது நான் சிறுவன். இந்தப் பிரிவு பற்றி தெளிவில்லாதவன். இப்பொழுது என் வசம் வந்த இந்த ராஜ்ஜியத்தை ஒருபொழுதும் பாண்டவர்களுக்கு திருப்பித் தர முடியாது. இந்த துரியோதனன் உயிரோடு இருக்கும் வரை பாண்டவர்களுக்கு ஊசி முனையால் துளைக்கும் அளவு இடத்தைக் கூட தர முடியாது."

பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு கண்கள் சிவந்தன.

"என்ன துரியோதனா, பெரிய உத்தமனைப் போல பேசுகிறாய். எந்தவித குற்றமும் செய்தே அறியாதவன் போலும், செய்யத் தெரியாதவன் போலும் நடிக்கிறாய். சகுனியா சூதாட்டத்திற்கு அழைத்தான். சகுனியா சூதாடினான். அந்த விஷயம் தோன்றியது உன் புத்தியில் அல்லவா. சகுனியை முன்னிறுத்தி நீ செய்த சூழ்ச்சியல்லவா அது. ஒரு நல்ல சத்திரியன் அப்படி நடந்து கொள்வானா, அடுத்தவர் ராஜ்ஜியம் வேண்டுமென்று ஆசைப்படுகின்ற அரசன் போருக்குத்தான் அழைப்பான். சூதுக்கு அழைத்த முதல் அரசன் நீதான். அந்த பெருமை உனக்கே சேரும்."

சபை லேசாக சிரித்தது. அடக்கிக் கொண்டது. துரியோதனன் மேலும் ஆத்திரமடைந்தான்.

"செல்வமும், ராஜ்ஜியமும் அடைவது மட்டும் உன் நோக்கமல்ல. பாண்டவர்களை அவமானப்படுத்துவது உன் நோக்கம் . திரௌபதியின் மீது கவனத்தை திருப்பினாய். மாத விலக்கான அந்தப் பெண்ணை ஒற்றை ஆடையுடன் சபைக்கு வரவழைத்தாய். நியாய புத்தியுள்ள எந்த மனிதனாவது செய்யும் காரியமா இது. தகாத வார்த்தைகளை திரௌபதியின் முன்பு சொல்லிவிட்டு தர்மத்தின் பால் இருக்கின்ற உத்தமன் போல உன்னை வர்ணித்துக் கொள்கிறாயே. துச்சாதனனா ஆடை உரித்தான். தூண்டிவிட்டது நீ. மூடன் கர்ணனா இடித்துரைத்தான். தூண்டிவிட்டது நீ. அதட்டி கேட்ட விதுரரை எதிர்த்து நின்றவன் நீ. இன்னும் சற்று பொறுத்தால் பீஷ்மரையும், துரோணரையும் கலந்தாலோசித்து இதைச் செய்தேன் என்று சொல்வாய் போலும். இவ்விதம்

செய்யக் கூடியவன் தான் நீ.

சூதாட்டத்தில் விரிக்கப்பட்ட படு மோசமான தண்டனைகளை பாண்டவர்கள் மிகுந்த சிரமத்தின் பேரில் மேற்கொண்டார்கள். நிபந்தனையை நிகழ்த்தி விட்டார்கள்.

அந்த பாண்டவர்களை அரக்கு மாளிகையில் அவர்கள் தாயோடு எரிக்கின்ற முயற்சியை செய்யவில்லையா. பீமனை கை, கால் கட்டி ஆற்றில் போடவில்லையா. நச்சுப் பாம்புகள் நிறைந்த பொய்கையில் வீசவில்லையா. எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று நீ சொன்னால் இங்கு யார் கேட்டிருப்பார்கள். ஆரம்பத்திலிருந்தே பீஷ்மரும், துரோணரும், விதுரரும் சமாதானம் செய்து கொள் என்று இடையறாது சொல்லி வருகிறார்கள். ஆனால் நீ மறந்தும் சமாதானம் என்ற வார்த்தையை உச்சரிப்பதேயில்லை. உன்னைப் போல ஒரு அதமனை உலகம் கண்டதில்லை. எப்பொழுதும் அதர்மமும், இகழ்ச்சியுமான காரியத்தையே செய்து வருகிறாய். ”

ஸ்ரீ கிருஷ்ணர் இப்படி பேசிக் கொண்டிருக்கும் போது யாரும் எதிர்பாராத வண்ணம் துச்சாதனன் எழுந்தான்.

“மன்னா, இவர்கள் அனைவரும் ஒரு தீர்மானத்தோடு வந்திருக்கிறார்கள். உங்களை கைது செய்து பாண்டவர்களிடம் ஒப்படைத்து விடுவார்கள். பீஷ்மரையும், துரோணரையும், விதுரரையும்,

என்னையும் பாண்டவர்களுக்கு உரிமையாக்கி விடுவார்கள். இவர்கள் பேச்சிலிருந்து இவர்கள் எண்ணம் மிகத் தெளிவாகத் தெரிகிறது."

துச்சாதனன் பேச்சைக் கேட்டு துரியோதனன் கால் உதைத்து எழுந்திருந்தான். தனித்திருந்த அவனுக்கு அவன் பக்கம் பேசுகின்ற சகோதரனால் கோபம் அதிகரித்தது. மேலே உள்ள சால்வை பறக்க விதுரர், திருதராஷ்டிரன், பீஷ்மர், துரோணர் , கிருபர் , ஸ்ரீ கிருஷ்ணர் அனைவரையும் அவமரியாதை செய்து அங்கிருந்து வெளியேறி விட்டான்.

இது ஒரு தந்திரம். சபையை கலகலத்துச் செய்யும் முயற்சி. கிருஷ்ணருடைய பேச்சை நிறுத்துவதற்குண்டான திட்டம். இத்தனை பேச்சுக்குப் பிறகும் தன் பக்கம் யார் என்று தெரிந்து கொள்ளும் திட்டம். அவன் சபையை அவமரியாதை செய்து அங்கிருந்து நீங்க அவன் சகோதரர்களும், அவன் மந்திரிகளும் , அவனுக்கு உதவுவதற்காக வந்திருந்த மன்னர்களும் திரண்டு எழுந்து அவனோடு வெளியேறினார்கள். இப்பொழுது சபையினுடைய நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டிய நிலைக்கு வந்து விட்டது. இது குரு குலத்தின் தலையெழுத்து .

ஸ்ரீ கிருஷ்ணர் சீறினார்.

"இங்கு இந்த முட்டாள் துரியோதனனை கட்டுப்படுத்துவார் எவருமில்லை. மீதம் இருக்கின்ற உங்கள் மீது நம்பிக்கை வைத்து இன்னும் ஒரு விஷயம் சொல்கிறேன் கேளுங்கள்.

முதிய போஜராஜனுடைய மகன் கம்சன் தன் தந்தையை சிறைபடுத்தி அந்த ராஜ்ஜியத்தை தானே எடுத்துக் கொண்டான். கம்சனுடைய சகோதரர்கள் அனைவரும் அவனை விட்டு விலகி விட்டார்கள். நான் உள்ளே புகுந்து கம்சனை வலிய போருக்கு அழைத்து முஷ்டிகளால் அடித்துக் கொன்றேன். நாங்கள் அனைவரும் சேர்ந்து உக்கரசேனனை மறுபடியும் மன்னனாக்கினோம். ஒரு தேசத்தின் நன்மைக்காக கம்சன் ஒருவனை வ்ருஷினி குல யாதவர்கள் தியாகம் செய்தார்கள். இப்போது ஒன்று சேர்ந்து படிப்படியாக மேன்மை பெறுகிறார்கள்.

முன்பொரு சமயம் தேவாசுர போர் நடந்தது. அதனால் மிகப் பெரிய கலகம் உண்டாகும் என்றுத் தோன்றியது. இதை அறிந்த பிரம்மா அசுரர்களுக்கு தோல்வி உண்டாகும் என்று சொன்னார். பிரம்மா தர்மராஜரிடம் இந்த அசுரர்களை காட்டி வருணனிடம் ஒப்படைத்து விடு. அப்பொழுதுதான் கலகம் உண்டாகாது இருக்கும் என்று சொன்னார். மிகப் பெரிய அழிவை நிறுத்த இதுவே வழி என்று காட்டினார். வருணன் அவ்விதமே அவர்களை கட்டி கடலின் ஒரு எல்லைக்குள் வைத்து விட்டார்.

நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து துரியோதனன், கர்ணன், சகுனி மற்றும் துச்சாதனனை கைது செய்து பாண்டவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். ஒரு குலத்தின் நன்மைக்காக ஒரு புருஷனையும், ஒரு கிராமத்தின் நன்மைக்காக ஒரு குலத்தையும், ஒரு ஜனபதத்தின் நன்மைக்காக ஒரு கிராமத்தையும் உயிரினங்களின் நன்மைக்காக பூமண்டலம் முழுவதையும் தியாகம் செய்யலாம். இன்று இவ்வாறு செய்யவில்லையெனில் சத்திரிய வம்சமே பரதகண்டத்தில் அழிந்தொழிந்து விடும்."

அந்தகனம் திருதராஷ்டிரன் என்ன செய்வதென்று தெரியாமல் திணறினான்.



விதுரர் இருக்கும் திசை நோக்கித் திரும்பினான்.

“காந்தாரியை உடனடியாக இங்கு வரவழை. பெற்றதாயே பிள்ளையை சமாதானம் செய்யட்டும். அப்போதாவது அவன் தலையில் சமாதானம் ஏறுகிறதா என்று பார்ப்போம்.

காந்தாரி வந்த பிறகு விதுரர் துரியோதனனை சமாதானப்படுத்தி அழைத்து வந்தார். துரியோதனன் கோபத்தால் நிலைகொள்ளாமலேயே இருந்தான். காந்தாரி அவள் பங்குக்கு மகனிடம் பேசத் துவங்கினாள்.

“காமமும், கோபமும்தான் மனிதனை நிம்மதியிலிருந்து வெகு தூரம் அழைத்துப் போகிறது. இந்த இரண்டையும் வென்று விட்டால் அந்த மன்னன் பெரும் புகழோடு வாழ்கிறான். இப்படிப்பட்டவனின் அதிகாரமே இந்த உலகில் விரும்பத்தக்கது. பிடிவாதம் உள்ள குதிரை தன் மீது சவாரி செய்யும் எஜமானனை மண்ணில் சரித்து கால்களால் ஏற்றி கொன்று விடுகிறது. புலன்களால் வசப்படுத்தாத மனிதனுக்கு அழிவு புலன்களாலேயே ஏற்படுகிறது. ஒரு அரசன் மனதை வெல்லாமல் மந்திரிகளை வெல்ல முடியாது. மந்திரிகளை வெல்லாமல் பகைவர்களை வெல்ல முடியாது. உண்மையில் உனக்குப் பகை உன் மனதே. வேறு யாருமில்லை. மனதை வெல்ல கற்றுக் கொள்.

சாந்தனுவின் மகனான பீஷ்மரும், மகாரதியான துரோணரும் சொல்வது சத்தியம். அர்ஜுனனும், ஸ்ரீ கிருஷ்ணனும் வெல்ல முடியாதவர்கள். இவர்களோடு போர் செய்வதில் நன்மை வராது. நீ உன்னுடைய ராஜ்ஜியத்தை அனுபவிக்க விரும்பினால் பாண்டவர்களுக்குண்டான பாகத்தை கொடுத்து விடு. ஏற்கனவே தவறு செய்து விட்டாய். பதிமூன்று வருடங்கள் பெருத்த அபகாரம் செய்து விட்டாய். உன் சமாதானத்தின் மூலம் அதற்கு பிராயச்சித்தம் செய். பாண்டவர்களின் செல்வத்தை உன்னால் அபகரிக்க முடியாது. உன் சகோதரர்களோ, சூர்ய புத்திரன் கர்ணனோ அவ்விதம் செய்வதற்கு யோக்கியதையானவர்கள் அல்ல. பாண்டவர்களை பகைத்துக் கொண்டு நீ செய்யும் போரினால் இந்தப் புவி அழிந்து விடும்.

துரியோதனா, பேராசையால் வெற்றி கொள்ள முடியாது. நீ பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொள்” என்று சொன்னாள்.

“இவ்வளவுதானா, இதற்குத்தான் அழைத்தீர்களா” என்று துரியோதனன் கோபப்பட்டு மறுபடியும் மேல் துணி உதறி மறுபடியும் சபையிலிருந்து சகோதரர்கள், நண்பர்கள் சூழ வெளியேறினான்.

என்ன செய்வது இப்போது என்று சகுனியிடம் துரியோதனன் அவசரமாகக் கேட்டான். அவருக்கு நிலைமையின் முழு நிலைமையும் பிடிபடவில்லை. சகுனி சபையின் நிலையை நன்கு அறிந்தவர் போல பேசத் துவங்கினார்.

“நாம் இல்லாத போது இந்தச் சபையில் ஸ்ரீ கிருஷ்ணர் பேசியதை அறிந்தாயா. யாரும் அதை உனக்குச் சொல்லவில்லையா. நம் நால்வரையும் கைது செய்து பாண்டவர்களிடம் ஒப்படைக்குமாறு ஸ்ரீ கிருஷ்ணர் தூண்டுகிறார். ஸ்ரீ கிருஷ்ணர் பீஷ்மருடனும், திருதராஷ்டிரனுடனும் சேர்ந்து கொண்டு நம்மை கைது செய்வதற்கு முன்பு ரிஷிகேசனை கைது செய்து விட்டால் என்ன. ஸ்ரீ கிருஷ்ணன் கைது செய்யப்பட்டான் என்றுத் தெரிந்ததும் பாண்டவர்கள் பல் பிடுங்கப்பட்ட பாம்பாக ஆவார்கள். உற்சாகம் இழப்பார்கள் .”

மனிதர் மனதை எளிதில் படிக்கும் சாத்விகி ஸ்ரீ கிருஷ்ணனுக்கு பாதுகாப்பாக இருந்தான். கௌரவர்களை மிக உன்னிப்பாக பார்த்து வந்தான். அவர்கள் முகத்தை கண்களை அங்க சேஷ்டைகளை கூர்ந்து நோக்கினான். அவர்கள் மனதில் இருப்பதை படித்துக் கொண்டான். கிருஷ்ணரிடமிருந்து தள்ளி சபையின் விளிம்பிலிருந்து கௌரவர்கள் வெளியேறுவதை கவனித்த அவன் அசையாமல் அவர்கள் உள்ளத்தை ஊடுருவினான். அவர்கள் திட்டத்தை புரிந்து கொண்டான்.

ஸ்ரீ கிருஷ்ணருக்கு அருகே போய் மற்றவர்களுக்கு கேட்க துரியோதனாதிகளின் எண்ணத்தைச் சொன்னான். ஸ்ரீ கிருஷ்ணர் வாய் விட்டுச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் கோபம் இருந்தது.

“சிறு புத்தியுடைய இந்த துரியோதனன் எரியும் தீயை துணியால் கட்ட விரும்புவது போல ஸ்ரீ கிருஷ்ணரை கைது செய்ய விரும்புகின்றான். இது அவன் குலத்திற்கு வந்த கேடு. ஸ்ரீ கிருஷ்ணர் பாரிஜாத மலரை அபகரித்தபோது இந்திரன் அவரோடு சண்டையிட்டான். ஆனால் ஜெயிக்க முடியவில்லை. நிர்மோசன் என்ற இடத்தில் முரண் என்னும் தைத்யன் ஆறாயிரம் சக்தியுடைய பாசத்தை விரித்திருந்தான். இந்த வாசுதேவ கிருஷ்ணன் அதற்கு அருகே சென்று அவற்றை அறுத்து விட்டார்.பாபிகளுக்கு தண்டனை அளிக்கும் திறமை இருந்தும் மன்னிப்பு அளித்துக் கொண்டிருக்கிறார்” என்பதாய் விதுரருடைய குரல் அந்தச் சபையில் பெரிதாய் ஒலித்தது. விதுரர் ஆத்திரத்தால் நடுங்கிக் கொண்டிருந்தார்.

“திருதராஷ்டிரா. உன் பிள்ளைகளை மறுபடியும் கூப்பிடு. என்னை கைது செய்யச் சொல். இவர்கள் என்னை பிடிக்கிறார்களா, அல்லது நான் அவர்களை கைது செய்கிறேனா என்று சபைக்குத் தெரிந்துவிடும். என் கோபத்தால் அவர்களை இங்கேயே சாம்பலாக்கி விடுவேன். ஆனால் அது தர்மமல்ல. இவர்களை கட்டி இழுத்துப்போய் பாண்டவர்களிடம் ஒப்படைக்க எனக்கு எவ்வளவு நேரமாகும். அதுவும் தர்மமல்ல.”

திருதராஷ்டிரனுக்கு புரிந்து விட்டது. ஸ்ரீ கிருஷ்ணனுடைய கோபமும், தன் மகனுடைய பலவீனமும் விரைவாய் அவர் புத்திக்கு எட்டி விட்டது. கிருஷ்ணனுடைய கோபத்திலிருந்து தன் மகனை அப்போதும் அவர் காப்பாற்ற விரும்பினார். யாரும் தண்டித்து விடக்கூடாது என்று பதைபதைத்தார். விதுரா, மறுபடியும் துரியோதனனை இங்கு அழைத்து வா என்று கூவினார்.

(தொடரும்)



சதியை வென்றது மதி

ஷத்திரியர்களுடைய யுத்தம் செய்யும் மிகப் பெரிய வலிமையை அடியோடு அழிப்பதற்காகவே இந்த மகாபாரதப் போர் நடந்தது. இதற்கு ஆணிவேராக இருந்தது திரௌபதியை சபையில் அவமானப்படுத்தியது. அதைப் பொறுத்துக் கொண்டும் பாண்டவர்கள் வனவாசம் போனதும், அஞ்ஞாத வாசம் ஏற்றதும், மறுபடியும் தூது விட்டு என் ராஜ்ஜியத்தை எனக்குக் கொடு என்று கேட்பதும் தர்மத்தின் வெளிப்பாடு. ஆத்திரப்படாமல், ஆவேசப்படாமல், கூரிய சொற்களை பிரயோகிக்காமல் மிகத் தன்மையாய் நடந்து கொள்கின்ற கம்பீரம். போர் செய்ய காரணங்கள் இருந்தும், பலர் போருக்குத் தூண்டியும் யுதிஷ்டிரர் தன்நிலை பிழறாது இருந்தார். அடித்த பிறகு ஏன் அடித்தாய் வாய் விட்டு கேட்டிருக்கலாமே என்று அடிவாங்கியவனோ, நடுநிலையானனோ பேசுவதற்கு வாய்ப்பு உண்டு என்றுத் தெரிந்து நடந்து

மகாபாரதம்

கொண்டார். பாண்டவர்களை மற்றவர்கள் தூண்டி விடுவதை விட திரௌபதி கோபப்பட்டு அனத்தியதை விட பெற்ற தாய் துரியோதனனை கொல் என்று சொன்னது மிக உன்னதமான விஷயம். பெண்களால் தூண்டப்பட்ட ஆண்கள் தான் மிக வேகமாக செயலாற்றுகிறார்கள். துணிந்து இறங்குகிறார்கள்.

குந்தியை விட்டு அஸ்தினாபுரத்தில் விடை பெற்று கிளம்பிய போது ஸ்ரீ கிருஷ்ணர், கர்ணனுடைய வீட்டிற்குப் போய் அவனோடு பேசினார். பிறகு அவனிடமிருந்தும் விடை பெற்று உபப்லவ்யம் என்ற நகருக்கு வந்து சேர்ந்தார்.

குந்தி ஸ்ரீ கிருஷ்ணனிடம் பேசிய கோப

மான வசனங்கள் கௌரவரின் அரச சபைக்கு வந்தன. வேலையாட்கள் மூலமாக பரிமாறப்பட்டன. பீஷ்மரும், துரோணரும், விதுரரும் கவலையடைந்தார்கள்.

“குந்தியை யுதிஷ்டிரர் மறுக்க மாட்டார். அவன் வாதங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றன. போர் நிச்சயம் என்பது எங்களுக்குப் புரிகிறது. உன் ஊர் முழுவதும் காரிருளால் மூடப்பட்டுள்ளது போல் இருக்கிறது. மக்களும், போர் வீரர்களும் துக்கத்தோடும், கலவரத்தோடும் இருக்கிறார்கள். யார் முகத்திலும் சோபை இல்லை. யுத்தம் செய்கிற ஆர்வம் இல்லை. ஒரு தேசம் இப்படிப்பட்ட கலவரத்தில் சிக்கக்கூடாது ” என்று பீஷ்மர் துரியோதனனுக்கு அறிவுரைச் சொன்னார்.

துரோணர் துரியோதனன் பக்கம் திரும்பினார்.

“நானும், பீஷ்மரும் உயர்வான வாழ்க்கை வாழ்ந்தோம். உலகத்தில் பல நன்மைகள் செய்தோம். எங்கள் ஆயுள் முடிந்து விட்டது. எங்களை நம்பியா போரில் இறங்குகிறாய். கடும் விரதங்களைப் பின்பற்றும் கோபமுடைய திரௌபதி யாருடைய வெற்றியை விரும்புகிறாளோ அவர்கள் தான் ஜெயிக்கப் போகிறார்கள். அர்ஜுனனை சகோதரனாகக் கொண்ட யுதிஷ்டிரரை நீ எப்படி ஜெயிப்பாய். இந்தப் போரால் உனக்கு எந்த லாபமும் இல்லை. இப்போரில் இறங்கினால் குலம் அழிவது நிச்சயம்.

பாலகுமாரன்

இந்த மகாபாரதக் கதையில் திருதராஷ்டிரன் என்கிற பாத்திரம் தனி குணத்தோடு திகழ்கிறது. எல்லோரும் துரியோதனனை கோபம் குறைக்கச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட, திருதராஷ்டிரன், கர்ணனைப் பற்றி கவலைப்பட்டான். எதற்காக ஸ்ரீ கிருஷ்ணர் ராதையனை சந்தித்தார். “குந்தி தேவி கன்னிகையாக இருந்தபோது அவள் வயிற்றில் உதித்த குழந்தை நீ. பாண்டுவோடு குந்தி தேவி செய்த திருமணத்திற்கு முன்பே நீ தோன்றினாலும் உனக்குத் தந்தை பாண்டுதான். பஞ்ச பாண்டவர்களுக்கு மூத்தவன் நீ. என்னுடன் தேர் ஏறி வா. நீ யுதிஷ்டிரருக்கு அண்ணன் என்று பாண்டவர்கள் தெரிந்து கொள்ளட்டும். திரௌபதியின் ஐந்து புதல்வர்களும், சுபத்ராவின் மகன் அபிமன்யுவும் உன்னை நமஸ்கரிக்கட்டும். பாண்டவர்கள் உன்னை அரியணையில் அமர்த்துவார்கள். உன்னுடைய சிங்காதனத்தை சூழ்ந்து இருப்பார்கள். நீ மூத்த சகோதரன் என்று தெரிந்ததால் யுதிஷ்டிரர் உனக்கு சாமரம் வீசுவார். பீம, அர்ஜுன, நகுல, சகாதேவர்கள், பாஞ்சால தேசத்து க்ஷத்திரியர்கள், மகாரதியான சிகண்டி அனைவரும் உன் பின்னால் அணிவகுத்து நிற்பார்கள். நீ அவர்களின் துணை கொண்டு ராஜ்ஜியத்தை அனுபவி. எப்பேர்பட்ட சொர்க்கம் அது. எவ்வளவு கம்பீரம் அது. நட்சத்திரங்கள் சூழ்ந்த சந்திரனைப் போல நீ பிரகாசிப்பாய். குந்தி மிகுந்த ஆனந்தமடைவாள்.’

கர்ணா, இன்றிலிருந்து பாண்டவர்கள் உன்னுடைய சகோதரர்கள் என்பதை அறிந்து புரிந்து அவர்களிடம் இனிமையாக நடந்து கொள். இந்த உலகம் நிம்மதியாக இருக்கும்.”என்று ஸ்ரீ கிருஷ்ணர் கர்ணனிடம் கூறினார்.

கர்ணன் கை கட்டி தலை கவிழ்ந்து ஸ்ரீ கிருஷ்ணர் முன் அமைதியாக நின்றிருந்தான். நிமிர்ந்தான்.

“கேசவா, என் மீது மிகுந்த அன்போடு நீங்கள் கூறிய செய்திகளை நான் முன் கூட்டியே அறிந்தவன். நான் குந்தியின் மகன் என்று எனக்குத் தெரியும். கன்னி வயதில் குந்தி சூரியனுடைய சேர்க்கையால் என்னை கர்ப்பத்தில் தரித்தாள். சூரிய தேவன் ஆணையால் என்னை நீரில் விட்டு விட்டாள். என்னுடைய பிறப்பை நான் அறிவேன். தர்மப்படி நான் பாண்டுவின் புதல்வனாக இருந்தாலும் குழந்தையாய் இருந்த என்னை குந்தி தேவி நிராகரித்து விட்டாள்.

அதிரதன் என்னும் தேரோட்டி என்னை நீரில் கண்டதும் வீட்டிற்கு எடுத்து வந்து தன் மனைவியிடம் கொடுத்தார். அவர் மனைவி ராதைக்கு என்னை அணைத்ததுமே அவள் தனத்தில் பால் பொங்கியது. என் மல மூத்திரம் துடைத்து என்னை வளர்த்தது ராதை தான். அவளுடைய கவளத்தை யார் பிடுங்க முடியும். அதிரதனும் என்னை தன் புதல்வனாகவே கருதுகிறார். நானும் அவரை தந்தையாக கருதுகிறேன். அக்னியின் முன்னே அமர்ந்து அவர்தான் ஜாதக கர்மம் செய்தார். எனக்கு வசுசேனன் என்று பெயரிட்டார். நான் வாலிபனானதும் எங்கள் குலத்தில் இருந்த பல கன்னிகைகளை எனக்குத் திருமணம் செய்தார். அவர்கள் மூலம் பிள்ளைகளும், என் பேரர்களும் எனக்குப் பிறந்து விட்டார்கள். அந்தப் பெண்களிடம் என் மனம் முழு ஈடுபாடு கொண்டிருக்கிறது.



அடாடா, நான் குந்தியின் மைந்தனா என்ற மகிழ்ச்சியோடு அல்லது வேறு எந்த பயத்தோடோ இந்த உறவுகள் அனைத்தையும் நான் பொய்யாக்க விரும்பவில்லை.

நான் துரியோதனனின் உதவி பெற்று பதிமூன்று ஆண்டுகள் எந்தத் தடையும் இன்றி ராஜ்ய சுகம் அனுபவித்தேன். துரியோதனன் என்மீது வைத்த நம்பிக்கையாலேயே ஆயுதம் ஏந்தி பாண்டவர்களை, போரிடவும் துணிந்துள்ளான். நான் அர்ஜுனனுடன் தனித்து போர் செய்யாவிடின் அது எனக்கும் இழுக்கு. அர்ஜுனனுக்கும் இழுக்கு. என் நன்மைக்காகவே இதை நீங்கள் சொன்னாலும் இதற்கு நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நான்தான் குந்தியினுடைய மூத்த புதல்வன் என்பதை யுதிஷ்டிரர் அறிந்தால் அவர் ராஜ்ஜியத்தை ஏற்க மாட்டார். என்னிடம் கொடுத்து விடுவார். என்னிடம் கொடுத்த ராஜ்ஜியத்தை நான் துரியோதனனிடமே ஒப்படைத்து விடுவேன். இது யுத்தமல்ல. மிகப்பெரிய யாகம். ஷத்திரியர்களுடைய கொட்டத்தை அடக்க நீ போட்டிருக்கிற திட்டம்.

துரியோதனனுக்கு பிரியமானதை செய்வதற்காக நான் பாண்டவர்களை கடுமையாக பேசியிருக்கிறேன். அதையெல்லாம் திரும்பப் பெற முடியாது. அர்ஜுனனுடைய கையால் நான் கொல்லப்படப் போகிறேன். பலசாலியான பீமன் துரியோதனனை வதம் செய்யப் போகிறான். மிக மோசமான ஒரு போர் நடக்கும். ஷத்திரிய பெண்கள் தலைவிரி கோலமாக அலறியவாறு தங்கள் புருஷர்களுடைய உடலை தேடுவார்கள். என்னுடைய வேண்டுகோள் ஒன்றுதான். வித்தையில் முதியவர்களும், வயதில் முதியவர்களும் இந்தப் போரில் மரணமடையக் கூடாது. இந்த மகாபாரத யுத்தம் நடக்கும். இந்தப் போரில் ஈடுபட்டோர் புகழும், கதையும் காலம் காலமாய் சொல்லப்படும். பரத கண்டத்தின் பல இடங்களில் இந்த பாரத யுத்தத்தை வர்ணனை செய்வார்கள்.

இந்த நேரம் இதை நடக்கவொண்ணாது எதற்கு என்னை முன்னிலைப் படுத்தி மடை மாற்றுகிறீர்கள். இது ரகசியமாகவே இருக்கட்டும்.

அர்ஜுனனை நன்றாக தூண்டிவிட்டு போருக்கு அழைத்து வாருங்கள். இதுதான் நீங்கள் எனக்கு செய்யும் உதவி. "

ஸ்ரீ கிருஷ்ணர் கர்ணனுடைய பேச்சுக்கு வாய்விட்டு சிரித்தார். "நான் சொல்லுகின்ற இந்த ஆலோசனையை நீ ஏற்கவில்லை என்றுத் தெரிகிறது. உனக்கு உரிமையான இந்த ராஜ்ஜியத்தை நீ ஏற்க மறுக்கிறாய். இந்தப் போரின் தொடக்கத்திற்கு மிக சொற்ப காலமே இருக்கிறது. அதனால் தான் பதறுகிறேன். இதை தடுத்து நிறுத்துகின்ற எல்லா முயற்சியும் நான் செய்துதான் ஆக வேண்டும். தூது வந்ததும், சபையில் அமர்ந்ததும், என்னை வெளிப்படுத்தியதும் போல உன்னை வசப்படுத்தும் முயற்சியும் செய்கிறேன். நீ நினைப்பதை விட மிக மோசமான போராக இது இருக்கும். யாரெல்லாம் அதிவீரர்கள் என்று நினைக்கிறாயோ அவர்களெல்லாம் அடிபட்டு மரணமடையப் போகிறார்கள். இப்போது அழகிய சுகம் தரும் மாதம் நடக்கிறது. பசுக்களுக்கு புல்லும், எரிப்பதற்கு விறகும் நிறைய கிடைக்கின்றன. பழம், மலர், கீரை போன்றவைகளால் காட்டின் செழுமை பெருகியிருக்கிறது. தானியங்கள் வயலில் நன்றாக பக்குவப்பட்டிருக்கின்றன. ஈக்கள் குறைந்து விட்டன. பூமியில் சேறு சிறிதளவும் இல்லை. தண்ணீர் சுத்தமாகவும் ருசியுடனும் இருக்கிறது. அதிக குளிரும் இல்லை. அதிக வெயிலும் இல்லை. இன்றிலிருந்து ஏழு நாட்களுக்குப் பிறகு அமாவாசை வரப்போகிறது. அப்போதே போர் துவங்கப்படலாம். உன் பக்கத்து மன்னர்களிடம் போய் பாண்டவர்களை வெற்றி கொள்வேன் என்று உரத்துச்சொல். அவர்கள் உற்சாகமடையட்டும்."

"ஸ்ரீ கிருஷ்ணா, நான் மறுதலித்த பிறகு என்னை ஆசிர்வாதம் செய்கிறாய் . மறுதலிப்பேன் என்றுத் தெரிந்தும் பேசுவதற்கு முற்படுகிறீர்கள். இதற்கிடையே எனக்கு ஏன் ஆசை வார்த்தை காட்டுகிறீர்கள். அதில் மயங்கி நான் உங்களை பின் தொடர்வேன் என்று எப்படி நினைத்தீர்கள். நிச்சயம் பெரிய அழிவு ஏற்படும். மகா ரதிகள் கொல்லப்படுவார்கள். எனக்கு பயங்கரமான கனவுகள் ஏற்படுகின்றன. அபசகுணங்கள் தோன்றுகின்றன.



தீட்சண்யம் உள்ள சனி கிரகம் பிராஜபதி சம்பந்தமான ரோகிணி நட்சத்திரத்தை பிடித்து அதிகபட்ச துன்பத்தை தரப் போகிறார். செவ்வாய் வக்ர கதி ஆரம்பித்து அனுஷ நட்சத்திரத்திற்குள் நுழையப் போகிறார். இது மன்னர்களையும், அவர் நண்பர்களையும் அழிப்பதாகும். மகா பாதகம் என்னும் கிரகம் சித்திரை நட்சத்திரத்திற்கு துன்பம் அளித்துக் கொண்டிருக்கிறது. இது மன்னர்களின் அழிவைச் சொல்லும். ராகு சூரியனுக்கு அருகே செல்லுகிறது.

யானைகள் ஒன்றோடொன்று முட்டிக் கொள்கின்றன. குதிரைகள் கண்ணீர் பெருக்குகின்றன. நிலைகொள்ளாமல் தவிக்கின்றன. துரியோதனன் சேனை முழுவதும் இந்த அவஸ்தை காணப்படுகிறது. ஆனால் பாண்டவர்களுடைய பிராணிகள் நலமாக இருக்கின்றன. சூரியனைச் சுற்றி கருப்பு வட்டம் வந்துவிட்டது. உதயம், அஸ்தம் இரண்டு வேளைகளிலும் அழிகின்றன. துரியோதனனுக்கும் இந்த உபத்திரங்களெல்லாம் கண்ணுக்குத் தெரிகின்றன. யுதிஷ்டிரர் தங்கப் பாத்திரத்தில் நெய் கலந்த பாயசத்தை அருந்திக் கொண்டிருப்பதாக கனவு கண்டேன். இந்த ராஜ்ஜியத்தை அவரே அனுபவிக்கப் போகிறார் என்பது உறுதி. அர்ஜுனனுடைய காண்டீபத் தீயில் நாங்களெல்லாம் எரிந்து விடப் போகிறோம் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.”

ஸ்ரீகிருஷ்ணர் இமை கொட்டாமல் அவனையே பார்த்திருந்தார்.

“இதோ இந்தப் புவியின் அழிவு துவங்கி விட்டது என்பதை உன் உறுதியான குரல் மூலம் அறிகிறேன். அதனால்தான் என் வார்த்தை உனக்குப் புரியவில்லை. ஒரு அநியாயத்தை நியாயம் என்று சொல்லுகிறாய். உன்னுடைய கூட்டத்தின் அழிவை தர்மம் என்று சொல்லுகிறாய். நேரம் சரியில்லாத போது நியாயமும், அநியாயமும் ஒரே மாதிரி தெரியும். இதுவும் சரி, அதுவும் சரி என்று பேசப்படும்.”

“போதும் கிருஷ்ணா. இதுவே நீயும், நானும் சந்திக்கின்ற கடைசி சந்திப்பாக இருக்கட்டும். இதற்குப் பிறகு நீயும், நானும் சொர்க்கத்தில் சந்திப்போம். இன்று போலவே அமைதியாகவும், இன்னும் ஆனந்தமாகவும் பேசுவோம். பாபமற்ற ஸ்ரீ கிருஷ்ணா, போய் வா.”

கர்ணன் கை கூப்பி ஸ்ரீ கிருஷ்ணருக்கு விடை கொடுத்தான். ஸ்ரீ கிருஷ்ணர் வெளியேற கர்ணன் கை கட்டி வெகுநேரம் தனிமையில் நின்றிருந்தான். ஸ்ரீ கிருஷ்ணர் உபப்லவ்யம் நகரை அடைந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணர் கர்ணனோடு பேசிய பேச்சு தோல்வியடைந்ததை கௌரவர் பக்கம் அறிந்து கொண்டது. விதுரர் கவலைப்பட்டார்.

ஸ்ரீ கிருஷ்ணரே நேரிடையாக பேசியும் கர்ணன் கேட்கவில்லையா. இனி அந்த கௌரவர்களின் கதிதான் என்ன, ரத்தச் சேறாகாமல் இந்த பூமியை காப்பாற்ற முடியாதா. சரியாக உணவில்லாமல், தூக்கமில்லாமல் அல்லாடினார். சட்டென்று குந்தியின் நினைவு வந்தது. தெய்வத்திற்கு அசையாதவன் தாய் பேச்சுக்கு அசைவான். குந்தி கர்ணனிடம் போய் அவனை உன் மகன் என்று சொல்லி பாண்டவர்கள் பக்கம் சேரச் சொல். கர்ணன் தன் பக்கம் இல்லையென்ற பயத்திலேயே துரியோதனன் போரை தவிர்த்து விடுவான். குருகுலம் உயிர் பிழைக்கும் என்று எண்ணினார். குந்தியிடம் போய் பேசினார்.

போரை விரும்பும் குந்தி விதுரர் கேட்டுக் கொண்டதால் கர்ணனிடம் பேச சம்மதித்தாள். துரியோதனனையும், துச்சாதனனையும் கர்ணனை வைத்துக் கொண்டு தண்டிப்பது எளிது என்று எண்ணினாள். கர்ணன் எங்கே இருக்கிறான் என்று ஆட்களை விட்டு தேடச் செய்தாள்.

கங்கை நதிக் கரையில் சூரிய ஒளியில் குளித்தவாறே கர்ணன் ஜபம் செய்துகொண்டிருக்கிறான் என்றுத் தெரிந்து தேரேறி அங்குப் போனாள். காற்றில் அசையும் கர்ணனின் மேல் துண்டு நிழலில் அவன் ஜபம் முடிக்கட்டும் என்று அமைதியாக நின்றிருந்தாள். கர்ணன் ஜபம் முடித்தான். மேல் துண்டை தோளில் இழுத்து போர்த்திக் கொண்டான். திரும்பி நடக்க, மிக அருகே குந்தி இருப்பதைக் கண்டான்.

“குந்தி தேவி, நான் ராதா அதிரதன் தம்பதியினரின் புதல்வன் கர்ணன். தங்கள் பாதங்களை வணங்குகின்றேன் . இவ்வளவு தொலைவு என்னைத் தேடி வரும் கஷ்டத்தை ஏன் ஏற்றீர்கள். உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும?”; என்று வணக்கம் செலுத்தி பணிவாகக் கூறினான்.

“கர்ணா, நீ ராதாவின் மகனல்ல. இந்த குந்தி தேவியின் புதல்வன். நீ சூத குலத்தில் தோன்றியவன் அல்ல. உன் தந்தை அதிரதன் அல்ல. கன்னி வயதில் என் கர்ப்பத்தில் என் மூத்தப் புதல்வனாகத் தோன்றினாய். உலகத்திற்கு ஒளியும், வெப்பமும் வழங்கிய சூரிய பகவான் உன்னைப் போன்ற வீர மகனை என் கர்ப்பத்தில் தோற்றுவித்தார். பிறந்த போதே கவசமும், குண்டலமும் தரித்திருந்தாய். துரதிருஷ்ட வசத்தால் உன் சொந்த சகோதரர்களோடு அறிமுகமில்லாது திருதராஷ்டிரன் புதல்வர்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கிறாய். தர்ம சாஸ்திரத்தில் தாயும், தந்தையும் திருப்தியாக இருக்க வேண்டும். அது மகனுடைய கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் இந்த ராஜ்ஜியம் உனக்கு சொந்தமானது. நீ ஆட்சி செய்ய வேண்டியது. கர்ண அர்ஜுன சேர்க்கையை துரியோதனன் பார்க்கட்டும். நீங்கள் இருவரும் பலராமரும், கிருஷ்ணரும் போல ஒளி மிகுந்த பலசாலியாய் திகழுங்கள். தேரோட்டி மகன் என்று உன்னை யாரும் அழைக்கக் கூடாது.”

குந்தியின் பேச்சுக்கு கர்ணன் கை கொட்டி வாய் பொத்தி சிரித்தான். “பால் மணம் மாறா பருவத்திலிருந்த, என்னை நீரில் எறிந்துவிட்டு இப்போது நீங்கள் பேசும் நியாயம் சிரிப்பாக இருக்கிறது. எனக்கு வர வேண்டிய புகழையும், ராஜ்ஜியத்தையும் என் தாயே அழித்தாள். க்ஷத்திரிய குலத்தில் பிறந்தாலும் நான் தேரோட்டி என்றுதான் அழைக்கப்பட்டேன். என் பகைவன் கூட இவ்வளவு பெரிய துரோகத்தை எனக்கு செய்திருக்க முடியாது. இதை செய்துவிட்டு உன்னைப் பெற்ற தாய் என்று எப்படி கூறிக் கொள்கிறாய். இதுவரை எனக்காக ஏதாவது செய்திருக்கிறாயா, இன்று உன்னுடைய நன்மைக்காக எனக்கு தாயாய் நின்று உபதேசம் செய்கிறாய். ஸ்ரீகிருஷ்ணனோடு சேர்ந்த அர்ஜுனனிடம் எந்த வீரன் பயப்படவில்லை. நான் இப்போது பாண்டவர்களோடு சேர்ந்தால் நானும் பயந்தவனாகி விட மாட்டேனா.

திருதராஷ்டிரன் புதல்வர்கள் அடையாளமற்ற எனக்கு எல்லா விதத்திலும் உயர்வு கொடுத்திருக்கிறார்கள். தங்களுக்கு இணையாக நடத்தி கௌரவம் கொடுத்திருக்கிறார்கள். என்னை படகாக்கி போர் என்னும் சமுத்திரத்தை கடக்க நினைக்கிறார்கள். இந்த ஆபத்து நேரத்தில் அவர்களை நான் எப்படி கை விடுவேன். ஒரு மனிதன் செய்த உபகாரங்களை பார்க்காமல் அவனுக்கு துரோகம் செய்வது, கடவுளின் அன்னத்தை திருடுவனுக்கு நிகராவான். அவனுக்கு இந்த லோகத்திலும் சுகம் இல்லை. பரலோகத்திலும் சுகம் இல்லை. என் பலம் முழுவதும், சக்தி முழுவதும் திருதராஷ்டிரன் புதல்வர்களுக்காக ஏற்பட்டது. அந்த சக்தியை வைத்து உன் புதல்வர்களோடு போரிடுவேன். இதில் என்ன லாபம் வந்தாலும் இந்த இடத்தை விட்டு நீங்க மாட்டேன். உன் கட்டளையை ஏற்க மாட்டேன்.

ஆனால் நீயாக வந்து நீ என் புதல்வன் என்று சொல்கிறாய். ராஜ்ஜியத்தை எடுத்துக் கொள் என்கிறாய். உன்னுடைய இந்த கருணைக்காக உனக்கு ஒரு உதவி செய்கிறேன். இந்தப் போரில் அர்ஜுனனைத் தவிர மற்ற நால்வரை கொல்ல மாட்டேன். போரில் அர்ஜுனன் இறந்து போனால் என்னோடு சேர்த்து உனக்கு ஐந்து புதல்வர்கள். நான் இறந்து போனால் அர்ஜுனனோடு சேர்த்து ஐந்து புதல்வர்கள். இந்தப் போரால் உனக்கு எந்த நஷ்டமும் இல்லை” என்று சொல்லி கேலியாகச் சிரித்தான்.

குந்தி தேவி மனம் நடுங்கினாள். முன்னேறி கர்ணனை அணைத்துக் கொண்டாள். கர்ணனின் இறப்போ, அர்ஜுனன் இறப்போ அவளுக்கு தாங்க முடியாததாக இருந்தது.

“கர்ணா, நீ சொன்ன வாக்கை காப்பாற்று. அர்ஜுனன் தவிர மற்ற நால்வருக்கு எந்த ஆனியும் உண்டாக்காதே. மற்றவை விதிப்படி நடக்கட்டும்.”

கங்கைக் கரையிலிருந்து பிரிந்து அவர்கள் இருவரும் தத்தம் இடத்திற்கு போனார்கள்.

(போர் நடக்கின்ற நேரத்தில் குந்தி இந்த வரத்தை கேட்டதாக சில கதைகள் சொல்கின்றன. ஆனால் யுத்தம் ஆரம்பிக்கின்ற ஏழு நாட்கள் முன்பே கங்கைக் கரையில் பகல் முழுவதும் சூரிய ஜபம் செய்து ஜொலித்துக் கொண்டிருந்த கர்ணனிடம் இந்த யாசகத்தை குந்தி கேட்டாள். இது கௌரவர்களுக்கு பலவீனமாகத்தான் அமைந்தது.)

(தொடரும்)

மகாபாரதம்

101

விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை

“குந்தி தேவி கன்னிகையாக இருந்தபோது அவள் வயிற்றில் உதித்த குழந்தை நீ. பாண்டுவோடு திருமணத்திற்கு முன்பே நீ தோன்றினாலும் உனக்குத் தந்தை பாண்டுதான். பஞ்ச பாண்டவர்களுக்கு மூத்தவன் நீ. என்னுடன் தேர் ஏறி வா. நீ யுதிஷ்டிரருக்கு அண்ணன் என்று பாண்டவர்கள் தெரிந்து கொள்ளட்டும். திரௌபதியின் ஐந்து புதல்வர்களும், சுபத்ராவின் மகன் அபிமன்யுவும் உன்னை நமஸ்கரிக்கட்டும். பாண்டவர்கள் உன்னை அரியணையில் அமர்த்துவார்கள். உன்னுடைய சிங்காதனத்தை சூழ்ந்து இருப்பார்கள். நீ மூத்த சகோதரன் என்று தெரிந்ததால் யுதிஷ்டிரர் உனக்கு சாமரம் வீசுவார். பீம, அர்ஜுன, நகுல, சகாதேவன், பாஞ்சால தேசத்து க்ஷத்திரியர்கள், மகாரதியான சிகண்டி அனைவரும் உன் பின்னால் அணிவகுத்து நிற்பார்கள். நீ அவர்களின் துணை கொண்டு ராஜ்ஜியத்தை அனுபவி. எப்பேர்பட்ட சொர்க்கம் அது. எவ்வளவு கம்பீரம் அது. நட்சத்திரங்கள் சூழ்ந்த சந்திரனைப் போல நீ பிரகாசிப்பாய். குந்தி மிகுந்த ஆனந்தமடைவாள்.



கர்ணா, இன்றிலிருந்து பாண்டவர்கள் உன்னுடைய சகோதரர்கள் என்பதை அறிந்து புரிந்து அவர்களிடம் இனிமையாக நடந்து கொள். இந்த உலகம் நிம்மதியாக இருக்கும்."என்று ஸ்ரீகிருஷ்ணர் கர்ணனிடம் கூறினார்.

கர்ணன் கை கட்டி தலை கவிழ்ந்து ஸ்ரீகிருஷ்ணர் முன் அமைதியாக நின்றிருந்தான். நிமிர்ந்தான்.

"கேசவா, என் மீது மிகுந்த அன்போடு நீங்கள் கூறிய செய்திகளை நான் முன் கூட்டியே அறிந்தவன். நான் குந்தியின் மகன் என்று எனக்குத் தெரியும். கன்னி வயதில் குந்தி சூரியனுடைய சேர்க்கையால் என்னை கர்ப்பத்தில் தரித்தாள். சூரிய தேவன் ஆணையால் என்னை நீரில் விட்டு விட்டாள். என்னுடைய பிறப்பை நான் அறிவேன். தர்மப்படி நான் பாண்டுவின் புதல்வனாக இருந்தாலும் குழந்தையாய் இருந்த என்னை குந்தி தேவி நிராகரித்து விட்டாள்.

அதிரதன் என்னும் தேரோட்டி என்னை நீரில் கண்டதும் வீட்டிற்கு எடுத்து வந்து தன் மனைவியிடம் கொடுத்தார். அவர் மனைவி ராதைக்கு என்னை அணைத்ததுமே அவள் ஸ்தனத்தில் பால் பொங்கியது. என் மல மூத்திரம் துடைத்து என்னை வளர்த்தது ராதைதான். அவளுடைய கவளத்தையார் பிடுங்க முடியும். அதிரதனும் என்னை தன் புதல்வனாகவே கருதுகிறார். நானும் அவரை தந்தையாக கருதுகிறேன். அக்னியின் முன்னே அமர்ந்து அவர்தான் ஜாதக கர்மம் செய்தார். எனக்கு வசுசேனன் என்று பெயரிட்டார். நான் வாலிபனானதும் எங்கள் குலத்தில் இருந்த பல கன்னிகைகளை எனக்குத் திருமணம் செய்தார். அவர்கள் மூலம் பிள்ளைகளும், ஏன் பேரர்களும் எனக்குப் பிறந்து விட்டார்கள். அந்தப் பெண்களிடம் என் மனம் முழு ஈடுபாடு கொண்டிருக்கிறது. அடடா, நான் குந்தியின் மைந்தனா என்ற மகிழ்ச்சியோடு அல்லது வேறு எந்த பயத்தோடோ இந்த உறவுகள் அனைத்தையும் நான் பொய்யாக்க விரும்பவில்லை.

பாலகுமாரன்

நான் துரியோதனனின் உதவி பெற்று பதிமூன்று ஆண்டுகள் எந்தத் தடையும் இன்றி ராஜ்ய சுகம் அனுபவித்தேன். துரியோதனன் என்மீது வைத்த நம்பிக்கையாலேயே ஆயுதம் ஏந்தி பாண்டவர்களை போரிடவும் துணிந்துள்ளான். நான் அர்ஜுனனுடன் தனித்து போர் செய்யாவிடின் அது எனக்கும் இழுக்கு. அர்ஜுனனுக்கும் இழுக்கு. என் நன்மைக்காகவே இதை நீங்கள் சொன்னாலும் இதற்கு நான் ஒப்பமாட்டேன். நான்தான் குந்தியினுடைய மூத்த புதல்வன் என்பதை யுதிஷ்டிரர் அறிந்தால் அவர் ராஜ்ஜியத்தை ஏற்க மாட்டார். என்னிடம் கொடுத்து விடுவார். என்னிடம் கொடுத்த ராஜ்ஜியத்தை நான் துரியோதனிடமே ஒப்படைத்து விடுவேன். இது யுத்தமல்ல. மிகப் பெரிய யாகம். க்ஷத்திரியர்களுடைய கொட்டத்தை அடக்க நீ போட்டுள்ள திட்டம்.

துரியோதனனுக்கு பிரியமானதை செய்வதற்காக நான் பாண்டவர்களை கடுமையாக பேசியிருக்கிறேன். அதையெல்லாம் திரும்பப் பெற முடியாது. அர்ஜுனனுடைய கையால் நான் கொல்லப்படப் போகிறேன். பலசாலியான பீமன் துரியோதனனை வதம் செய்யப் போகிறான். மிக மோசமான ஒரு போர் நடக்கும். க்ஷத்திரிய பெண்கள் தலைவிரி கோலமாக அலறியவாறு தங்கள் புருஷர்களுடைய உடலை தேடுவார்கள். என்னுடைய வேண்டுகோள் ஒன்றுதான். வித்தையில் முதியவர்களும், வயதில் முதியவர்களும் இந்தப் போரில் மரணமடையக் கூடாது. இந்த மகாபாரத யுத்தம் நடக்கும். இந்தப் போரில் ஈடுபட்டோர் புகழும், கதையும் காலம் காலமாய் சொல்லப்படும். பரத கண்டத்தின் பல இடங்களில் இந்த பாரத யுத்தத்தை வர்ணனை செய்வார்கள்.

இந்த நேரம் இதை நடக்கவொண்ணாது எதற்கு என்னை முன்னிலைப்படுத்தி மடை மாற்றுகிறீர்கள். இது ரகசியமாகவே இருக்கட்டும்.

அர்ஜுனனை நன்றாக தூண்டிவிட்டு போருக்கு அழைத்து வாருங்கள். இதுதான் நீங்கள் எனக்கு செய்யும் உதவி."

ஸ்ரீ கிருஷ்ணர் கர்ணனுடைய பேச்சுக்கு வாய்விட்டு சிரித்தார்.

"நான் சொல்லுகின்ற இந்த ஆலோசனையை நீ ஏற்கவில்லை என்றுத் தெரிகிறது. உனக்கு உரிமையான இந்த ராஜ்ஜியத்தை நீ ஏற்க மறுக்கிறாய். இந்தப் போரின் தொடக்கத்திற்கு மிக சொற்ப காலமே இருக்கிறது. அதனால் தான் பதறுகிறேன். இதை தடுத்து நிறுத்துகின்ற எல்லா முயற்சியும் நான் செய்துதான் ஆக வேண்டும். தூது வந்ததும், சபையில் அமர்ந்ததும் , என்னை வெளிப்படுத்தியதும் போல உன்னை வசப்படுத்தும்



முயற்சியும் செய்கிறேன். நீ நினைப்பதை விட மிக மோசமான போராக இது இருக்கும். யாரெல்லாம் அதி வீரர்கள் என்று நினைக்கிறாயோ அவர்களெல்லாம் அடிபட்டு மரணமடையப் போகிறார்கள். இப்போது அழகிய சுகம் தரும் மாதம் நடக்கிறது. பசுக்களுக்கு புல்லும், எரிப்பதற்கு விறகும் நிறைய கிடைக்கின்றன. பழம், மலர், கீரை போன்றவைகளால் காட்டின் செழுமை பெருகியிருக்கிறது. தானியங்கள் வயலில் நன்றாக பக்குவப்பட்டிருக்கின்றன. ஈக்கள் குறைந்து விட்டன. பூமியில் சேறு சிறிதளவும் இல்லை. தண்ணீர் சுத்தமாகவும் ருசியுடனும் இருக்கிறது. அதிக குளிரும் இல்லை. அதிக வெயிலும் இல்லை. இன்றிலிருந்து ஏழு நாட்களுக்குப் பிறகு அமாவாசை வரப்போகிறது. அப்போதே போர் துவங்கப்படலாம். உன் பக்கத்து மன்னர்களிடம் போய் பாண்டவர்களை வெற்றி கொள்வேன் என்று உரத்துச் சொல். அவர்கள் உற்சாகமடையட்டும்."

" ஸ்ரீகிருஷ்ணா, நான் மறுதலித்த பிறகு என்னை ஆசிர்வாதம் செய்கிறாய் . மறுதலிப்பேன் என்றுத் தெரிந்தும் பேசுவதற்கு முற்படுகிறீர்கள். இதற்கிடையே எனக்கு ஏன் ஆசை வார்த்தை காட்டுகிறீர்கள். அதில் மயங்கி நான் உங்களை பின் தொடர்வேன் என்று எப்படி நினைத்தீர்கள். நிச்சயம் பெரிய அழிவு ஏற்படும் . மகா ரதிகள் கொல்லப்படுவார்கள். எனக்கு பயங்கரமான கனவுகள் ஏற்படுகின்றன. அபசகுனங்கள் தோன்றுகின்றன.

தீட்சண்யம் உள்ள சனி கிரகம் பிரஜாபதி சம்பந்தமான ரோகிணி நட்சத்திரத்தை பீடித்து அதிகபட்ச துன்பத்தைத் தரப் போகிறார். செவ்வாய் வக்கிர கதி ஆரம்பித்து அனுஷ நட்சத்திரத்திற்குள் நுழையப் போகிறார். இது மன்னர்களையும், அவர் நண்பர்களையும் அழிப்பதாகும். மகா பாதகம் என்னும் கிரகம் சித்திரை நட்சத்திரத்திற்கு துன்பம் அளித்துக் கொண்டிருக்கிறது. இது மன்னர்களின் அழிவைச் சொல்லும். ராகு சூரியனுக்கு அருகே செல்லுகிறது.

யானைகள் ஒன்றோடொன்று முட்டிக்



கொள்கின்றன. குதிரைகள் கண்ணீர் பெருக்குகின்றன. நிலைகொள்ளாமல் தவிக்கின்றன. துரியோதனனின் சேனை முழுவதும் இந்த அவஸ்தை காணப்படுகிறது. ஆனால் பாண்டவர்களுடைய பிராணிகள் நலமாக இருக்கின்றன. ஸூரியனைச் சுற்றி கருப்பு வட்டம் வந்துவிட்டது. உதயம், அஸ்தம் இரண்டு வேளைகளிலும் அழிகின்றன. துரியோதனனுக்கும் இந்த உபத்திரங்களெல்லாம் கண்ணுக்குத் தெரிகின்றன. யுதிஷ்டிரர் தங்கப் பாத்திரத்தில் நெய் கலந்த பாயஸத்தை அருந்திக் கொண்டிருப்பதாக கனவு கண்டேன். இந்த ராஜ்ஜியத்தை அவரே அனுபவிக்கப் போகிறார் என்பது உறுதி. அர்ஜுனனுடைய காண்டீபத் தீயில் நாங்களெல்லாம் எரிந்து விடப்போகிறோம் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. ”

ஸ்ரீகிருஷ்ணர் இமை கொட்டாமல் அவனையே பார்த்திருந்தார்.

“இதோ இந்தப் புவியின் அழிவு துவங்கி விட்டது என்பதை உன் உறுதியான குரல் மூலம் அறிகிறேன். அதனால்தான் என் வார்த்தை உனக்குப் புரியவில்லை. ஒரு அநியாயத்தை நியாயம் என்று சொல்லுகிறாய். உன்னுடைய கூட்டத்தின் அழிவை தர்மம் என்று சொல்லுகிறாய். நேரம் சரியில்லாத போது நியாயமும், அநியாயமும் ஒரே மாதிரி தெரியும். இதுவும் சரி , அதுவும் சரி என்று பேசப்படும்.”

“போதும் கிருஷ்ணா. இதுவே நீயும் நானும் சந்திக்கின்ற கடைசி சந்திப்பாக இருக்கட்டும். இதற்குப் பிறகு நீயும், நானும் சொர்க்கத்தில் சந்திப்போம். இன்று போலவே அமைதியாகவும், இன்னும் ஆனந்தமாகவும் பேசுவோம். பாபமற்ற ஸ்ரீகிருஷ்ணா, போய் வா. ”

கர்ணன் கை கூப்பி ஸ்ரீகிருஷ்ணருக்கு விடை கொடுத்தான். ஸ்ரீ கிருஷ்ணர் வெளியேற கர்ணன் கை கட்டி வெகுநேரம் தனிமையில் நின்றிருந்தான். ஸ்ரீ கிருஷ்ணர் உபப்லவ்யம் நகரை அடைந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணர் கர்ணனோடு பேசிய பேச்சு தோல்வியடைந்ததை கௌரவர் பக்கம் அறிந்து கொண்டது. விதுரர் கவலைப் பட்டார்.

ஸ்ரீ கிருஷ்ணரே நேரிடையாகப் பேசியும் கர்ணன் கேட்கவில்லையா. இனி அந்த கௌரவர்களின் கதிதான் என்ன, ரத்தச் சேறாகாமல் இந்த பூமியை காப்பாற்ற முடியாதா. சரியாக உணவில்லாமல், தூக்கமில்லாமல் அல்லாடினார். சட்டென்று குந்தியின் நினைவு வந்தது. தெய்வத்திற்கு அசையாதவன் தாய் பேச்சுக்கு அசைவான். குந்தி கர்ணனிடம் போய் அவனை உன் மகன் என்று சொல்லி பாண்டவர்கள் பக்கம் சேரச் சொல். கர்ணன் தன் பக்கம் இல்லையென்ற பயத்திலேயே துரியோதனன் போரை தவிர்த்து விடுவான். குருகுலம் உயிர் பிழைக்கும் என்று எண்ணினார். குந்தியிடம் போய்ப் பேசினார்.

போரை விரும்பும் குந்தி விதுரர் கேட்டுக் கொண்டதால் கர்ணனிடம் பேச சம்மதித்தாள். துரியோதனனையும், துச்சாதனனையும் கர்ணனை வைத்துக் கொண்டு தண்டிப்பது எளிது என்று எண்ணினாள். கர்ணன் எங்கே இருக்கிறான் என்று ஆட்களை விட்டு

தேடச் செய்தாள்.

கங்கை நதிக் கரையில் சூரிய ஒளியில் குளித்தவாறே கர்ணன் ஜபம் செய்துகொண்டிருக்கிறான் என்றுத் தெரிந்து தேரேறி அங்கு சென்றாள். காற்றில் அசையும் கர்ணனின் மேல் துண்டு நிழலில் அவன் ஜபம் முடிக்கட்டும் என்று அமைதியாக நின்றிருந்தாள். கர்ணன் ஜபம் முடித்தான். மேல் துண்டை தோளில் இழுத்து போர்த்திக் கொண்டான். திரும்பி நடக்க, மிக அருகே குந்தி இருப்பதைக் கண்டான்.

“குந்தி தேவி, நான் ராதா அதிரத தம்பதியினரின் புதல்வன் கர்ணன். தங்கள் பாதங்களை வணங்குகின்றேன். இவ்வளவு தொலைவு என்னைத் தேடி வரும் கஷ்டத்தை ஏன் ஏற்றீர்கள். உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும?”; என்று வணக்கம் செலுத்தி பணிவாகக் கூறினான்.

“கர்ணா, நீ ராதாவின் மகனல்ல. இந்த குந்தி தேவியின் புதல்வன். நீ சூத குலத்தில் தோன்றியவன் அல்ல. உன் தந்தை அதிரதன் அல்ல. கன்னி வயதில் என் கர்ப்பத்தில் என் மூத்த புதல்வனாகத் தோன்றினாய். உலகத்திற்கு ஒளியும், வெப்பமும் வழங்கிய சூரிய பகவான் உன்னைப் போன்ற வீர மகனை என் கர்ப்பத்தில் தோற்றுவித்தார். பிறந்த போதே கவசமும், குண்டலுமும் தரித்திருந்தாய். துரதிருஷ்ட வசத்தால் உன் சொந்த சகோதரர்களோடு அறிமுகமில்லாது திருதராஷ்டிரன் புதல்வர்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கிறாய். தர்ம சாஸ்திரத்தில் தாயும், தந்தையும் திருப்தியாக இருக்க வேண்டும். அது மகனுடைய கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் இந்த ராஜ்ஜியம் உனக்கு சொந்தமானது. நீ ஆட்சி செய்ய வேண்டியது. கர்ண அர்ஜுன சேர்க்கையை துரியோதனன் பார்க்கட்டும். நீங்கள் இருவரும் பலராமரும், கிருஷ்ணரும் போல ஒளி மிகுந்த பலசாலியாய் திகழுங்கள். தேரோட்டி மகன் என்று உன்னை யாரும் அழைக்கக் கூடாது.”

குந்தியின் பேச்சுக்கு கர்ணன் கை கொட்டி வாய் பொத்தி சிரித்தான்.

“பால் மணம் மாறா பருவத்திலிருந்த என்னை நீரில் எறிந்துவிட்டு இப்போது நீங்கள் பேசும் நியாயம் சிரிப்பாக இருக்கிறது. எனக்கு வரவேண்டிய புகழையும், ராஜ்ஜியத்தையும் என் தாயே அழித்தாள். க்ஷத்திரிய குலத்தில் பிறந்தாலும் நான் தேரோட்டி என்றுதான் அழைக்கப்பட்டேன். என் பகைவன் கூட இவ்வளவு பெரிய துரோகத்தை எனக்கு செய்திருக்க முடியாது. இதை செய்துவிட்டு உன்னைப் பெற்ற தாய் என்று எப்படி கூறிக் கொள்கிறாய். இதுவரை எனக்காக ஏதாவது செய்திருக்கிறாயா, இன்று உன்னுடைய நன்மைக்காக எனக்கு தாயாய் நின்று உபதேசம் செய்கிறாய். ஸ்ரீகிருஷ்ணனோடு சேர்ந்த அர்ஜுனனிடம் எந்த வீரன் பயப்படவில்லை. நான் இப்போது பாண்டவர்களோடு சேர்ந்தால் நானும் பயந்தவனாகி விட மாட்டேனா.

திருதராஷ்டிரனின் புதல்வர்கள் அடையாளமற்ற எனக்கு எல்லா விதத்திலும் உயர்வு கொடுத்திருக்கிறார்கள். தங்களுக்கு இணையாக நடத்தி கௌரவம் கொடுத்திருக்கிறார்கள். என்னை படகாக்கி போர் என்னும் சமுத்திரத்தை கடக்க நினைக்கிறார்கள். இந்த ஆபத்து நேரத்தில் அவர்களை நான் எப்படி கை விடுவேன். ஒரு மனிதன் செய்த உபகாரங்களைப் பார்க்காமல் அவனுக்கு துரோகம் செய்வது கடவுளின் அன்னத்தை திருடுவனுக்கு நிகராவான். அவனுக்கு இந்த லோகத்திலும் சுகம் இல்லை. பரலோகத்திலும் சுகம் இல்லை. என் பலம் முழுவதும், சக்தி முழுவதும் திருதராஷ்டிரன் புதல்வர்களுக்காக ஏற்பட்டது. அந்த சக்தியை வைத்து உன் புதல்வர்களோடு போரிடுவேன். இதில் என்ன லாபம் வந்தாலும் இந்த இடத்தை விட்டு நீங்க மாட்டேன். உன் கட்டளையை ஏற்க மாட்டேன்.

ஆனால் நீயாக வந்து நீ என் புதல்வன் என்று சொல்கிறாய். ராஜ்ஜியத்தை எடுத்துக் கொள் என்கிறாய். உன்னுடைய இந்த கருணைக்காக உனக்கு ஒரு உதவி செய்கிறேன். இந்தப் போரில் அர்ஜுனனைத் தவிர மற்ற நால்வரை கொல்ல மாட்டேன். போரில் அர்ஜுனன் இறந்து போனால் என்னோடு சேர்த்து உனக்கு ஐந்து புதல்வர்கள். நான் இறந்து போனால் அர்ஜுனனோடு சேர்த்து ஐந்து புதல்வர்கள். இந்தப் போரால் உனக்கு எந்த நஷ்டமும் இல்லை” என்று சொல்லி கேலியாகச் சிரித்தான்.

குந்தி தேவி மனம் நடுங்கினாள். முன்னேறி கர்ணனை அணைத்துக் கொண்டாள். கர்ணனின் இறப்போ, அர்ஜுனன் இறப்போ அவளுக்கு தாங்க முடியாததாக இருந்தது. “கர்ணா, நீ சொன்ன வாக்கை காப்பாற்று. அர்ஜுனன் தவிர மற்ற நால்வருக்கு எந்த ஹானியும் உண்டாக்காதே. மற்றவை விதிப்படி நடக்கட்டும்.”

கங்கைக் கரையிலிருந்து பிரிந்து அவர்கள் இருவரும் தத்தம் இடத்திற்கு போனார்கள்.

(போர் நடக்கின்ற நேரத்தில் குந்தி இந்த வரத்தை கேட்டதாக சில கதைகள் சொல்கின்றன. ஆனால் யுத்தம் ஆரம்பிக்கின்ற ஏழு நாட்கள் முன்பே கங்கைக் கரையில் பகல் முழுவதும் சூரிய ஜபம் செய்து ஜொலித்துக் கொண்டிருந்த கர்ணனிடம் இந்த யாசகத்தை குந்தி கேட்டாள். இது கௌரவர்களுக்கு பலவீனமாகத்தான் அமைந்தது.)

(முற்றும்)